
பண்டைய கிரீஸின் வரலாறு

(ANCIENT HISTORY OF GREECE)



கி. ரா. அநுமந்தன்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—376

பண்டைய கிரீஸின் வரலாறு

(பட்டப்படிப்பிற்குரியது)

ஆசிரியர்

கி. ர. அநுமந்தன், M.A., M.S. (Wis. U.S.A.),
தலைமைப் பேராசிரியர், வரலாற்றுத்துறை,
மாநிலக் கல்லூரி, சென்னை-5.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition - November, 1972
T.N.T.B.S. (C.P.) No. 376

© TAMIL NADU TEXT BOOK SOCIETY

Ancient History of Greece

K. R. HANUMANTHAN

Price Rs. 8-60

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by :
The Tranquebar Printing & Publishing House
9, Abirami Street,
Madras-84

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்

(தமிழகக் கல்வி – உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பன்னிரண்டாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன் வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'பண்டைய கிரேக்கின் வரலாறு' என்ற இந்நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 376ஆவது வெளியீடாகும். இதுவரை 411 நூல்கள் வெளிவந்துள்ளன. இந்நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப் படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனமகிழ்ந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

நூன்முகம்

'பழம்பெரும் கிரேக்கம்! ஒரு கவின்கலைக்கூடம் – காவிய மலர்ச்சோலை – தத்துவக் கலைப் பூங்கா – பேச்சுக் கலை மன்றம் – புகழ் தங்கிய இடம் – பொலிவு பெற்ற மாடம் – வீரர்களின் கோட்டம் – வெற்றியின் இருப்பிடம்!' என்ற நமது அன்புக்குரிய அமைச்சர் மாண்புமிகு நாவலர் திரு.இரா. நெடுஞ்செழியன் அவர்களால் பாராட்டப்படும் (தமது 'பண்டைக் கிரேக்கம்' என்ற நூலில்) பண்டைய கிரீஸின் வரலாறு, உண்மையிலேயே ஒவ்வொரு தமிழ் மாணவராலும், மாணவியராலும், மற்றும் தமிழ்ப் பெருமக்கள் அனைவராலும் ஊன்றிப் படித்தற்குரிய தொன்றுகும். ஏனெனில் அடிப்படை இன்றேல் கட்டடமில்லை; சுவரின்றேல் சித்திரமில்லை; கிரேக்க நாகரிகமின்றேல் இன்றைய ஐரோப்பிய நாகரிகமுமில்லை. இது வரலாற்று அறிஞர்கள் யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு பெரும் உண்மையாகும். 'இன்றைய ஐரோப்பிய நாகரிகத்திற்கும், பண்டைய கிரேக்க–ரோமானிய நாகரிகங்களுக்குமுள்ள தொடர்பு, பெற்றோர்க்கும் பிள்ளைக்கும் உள்ள தொடர்புக்கு ஒப்பாகும்' என டாயின்பி (Toynbee) எனும் வரலாற்றறிஞர் கூறுகின்றார். தாம் வாழ்ந்த ஐரோப்பியச் சமுதாயத்தைப்பற்றிக் கூறவந்த ஷெல்லி (Shelley) எனும் ஆங்கிலக் கவிஞர் 'நாமெல்லோரும் முழுக்க முழுக்கக் கிரேக்கர்களே! நமது சட்டங்கள், இலக்கியம், சமயம், கலைகள் யாவும் கிரீஸில் கால்கொண்டவையேயன்றி வேறல்ல' என்று அறைந்துள்ளார். அவரது கூற்று ஓரளவுக்கு மிகைப்படுத்தப்பட்ட தொன்றெனினும், அதில் பெருமளவு உண்மையுள்ளது என்பதை எவரும் மறுக்க இயலாது. ஐரோப்பியர்கள் சமயத்தால் கிறிஸ்துவர்கள்; ஆனால், உள்ளத்தால் கிரேக்கர்கள் என்பதையே நாம் காண்கின்றோம். 'உலகம் பொய், பரம்பொருள் ஒன்றே மெய்....உலகப் பற்றை எல்லாம் துறந்துவிட்டுச் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்று...ஒட்டகம் ஒன்று ஊசியின் காதிலே நுழைந்தாலும் நுழையலாம்; ஆனால், செல்வந்த னொருவன் பரலோகத்துள் நுழைவதென்பது முடியாத காரியம்' என்பன போன்ற தத்துவங்களைப் பேசியுள்ள இயேசு நாதரின் அறிவுரைகளை அப்படியே கடைப்பிடித்திருப்பின் ஐரோப்பியர்கள் இன்று உலகியல் துறையில் இவ்வளவு தொலைவு முன்னேறியிருக்க முடியாது. உண்மையில் கிறிஸ்துவ மதமானது மக்களது சமுதாயப் பொருளாதார வாழ்க்கையில் ஊடுருவிச் சென்று

பெரிதும் ஆதிக்கம் பெற்றிருந்த இடைக்காலத்தில் (Medieval age, 500 – 1500 கி. பி.) ஐரோப்பிய நாகரிக வாழ்க்கையில் ஒருவிதத் தேக்கநிலையே (Stagnation) காணப்பட்டது. பதினைரும் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்துதான் ஐரோப்பியர்கள் பல்வேறு வகையிலும் உலகியல் துறையில் பெரிதும் முன்னேறி வருகின்றார்கள். அதற்குக் காரணம் 'மறுமலர்ச்சி' (Renaissance) என்ற இயக்கமேயாகும். பண்டைய கிரேக்க–ரோமானிய நாகரிகமானது புதிய வடிவில் மீண்டும் உயிர்த்தெழுந்த நிகழ்ச்சியே 'மறுமலர்ச்சி' என்று வரலாற்றில் பேசப்படுகிறது. வெறும் 'நம்பிக்கை' (Faith) என்பதில் மட்டுமே ஊறிக் கிடந்த ஐரோப்பியர்கள் 'பகுத்தறிவு' (Rationalism), 'ஆய்வு மனப்பான்மை' (Spirit of Enquiry) போன்ற கிரேக்கப் பண்புகளை (Paganism) வளர்க்கத் தொடங்கியதிலிருந்துதான் அறிவியல் துறையில் (Scientfic field) வேகமாக முன்னேற ஆரம்பித்தனர். புதுமைப் படைப்புகள் (Inventions) பல, நாளுக்கு நாள் அவர்களிடையே பூத்துக்கொண்டே யிருக்கின்றன. நிலாவை முத்தமிடும் ஏவுகணைகளை (Rockets) வானவெளியில் அனுப்பு கின்ற அளவுக்கு அவர்கள் அறிவியல் துறையில் முன்னேறி யிருக்கிறார்கள். சமயத்தால் கிறிஸ்துவர்களாயிருப்பினும் உள்ளத் தால் கிரேக்கர்களாய் இருப்பதால்தான் இத்தகைய அரும்பெரும் சாதனைகளை அவர்கள் ஆற்ற முடிகிறது. அவர்களைப் பின்பற்றி மாபெருஞ் சாதனைகளைச் செய்ய விழையும் நாமும், அவர்களது முன்னேற்றத்துக்கு அடிப்படையான கிரேக்கர்களின் வரலாற் றையும், பண்பாட்டையும்பற்றி அறிந்துகொள்ள வேண்டுவது இன்றியமையாததென்பது சொல்லாமலே பெறப்படும்.

பண்டைய கிரீஸ் உண்மையிலேயே பகுத்தறிவுப் பாசறை யாகவும், நாகரிகத்தின் தொட்டிலாகவும் விளங்கியது. உலகோரும், சிறப்பாகக் கீழை நாட்டவரும் விரும்பிப் பின்பற்றத் தக்க ஆக்கச் சிந்தனையாளர்களையும் மேதைகளையும் அது படைத்தளித்துள்ளது. 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாட்டை'ப் போன்று சிந்தனைச் சிற்பி சாக்ரடீஸ் (Socrates), தத்துவ மேதை பிளேடோ (Plato), அறிவியல் மேதை அரிஸ்டாடில் (Aristotle), வரலாற்றின் தந்தை ஹெரோடோடஸ் (Herodotus) போன்ற பல்வேறு அறிவொளித் திலகங்களை உலகுக்களித்துப் புகழ்பெற்றது கிரீஸ் நாடாகும். அவர்கள் அன்று கூறிச் சென்றுள்ள கருத்துகள் இன்றைக்கும் படிப்போர்க்குப் பயனளிக்கும் வகையில் பசுமை குன்றாமல் விளங்குகின்றன. அத்தகைய அறிஞர்களின் நூல்களை எல்லாம் நமது மாணவர்களும் பொதுமக்களும் படித்து

அவற்றில் செறிந்துள்ள 'விடுதலை மனப்பான்மை', 'அறிவியல் மனப்பான்மை', 'துணிகர மனப்பான்மை', 'நாட்டுப் பற்று', 'மக்களாட்சியில் ஆர்வம்' போன்ற எண்ணற்ற நற்பண்புகளைப் பெறுமாறு தூண்டுவதே இந் நூலின் முக்கிய நோக்கமாகும். அதனோடு, இவ்வளவு பெருமை இருந்தும் தமக்குள் ஒற்றுமையின்மையாலும், சமுதாயச் சமத்துவமின்மையாலும், கிரேக்கர்கள் அந்நியர்களுக்கு அடிமையாக நேர்ந்தது என்பதிலிருந்து 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே' என்ற படிப்பினையை நம்மவர் அறிந்துகொள்ளவும் கிரேக்க வரலாறு பயன்படக்கூடும். எனவே, மயிர்க்கூச்செறியும் நிகழ்ச்சிகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டது என்பதற்காக மட்டுமன்றி, வாழ்வு வளம்பெறுவதற்கான படிப்பினைகள் பலவற்றைக் கொண்டுள்ளது என்பதற்காகவும் இவ் வரலாறு மக்கள் அனைவராலும் ஊன்றிப் படிக்கக்கூடியதொன்றாய் அமைகிறது.

பண்டைய கிரேக்க வரலாற்றைப் படிக்கும்போது, நாம் நமது பண்டைய தமிழ்நாட்டு வரலாற்றைப் படிக்கின்றபோது ஏற்படுகின்ற உடற்புல்லரிப்பையும் உற்சாகத்தையும் பெறுகின்றோம். பண்டைய தமிழர்களின் கடல் வாணிக முயற்சி, பிற நாடுகளில் சென்று குடியேறல், சென்றவிடமெல்லாம் தமது பண்பாட்டைப் பரப்பல், என்றும் நின்று நிலவுகின்ற இலக்கியங்களைப் படைத்தல், உள்ளத்தை மட்டுமன்றி உடலையும் பேணி வளர்த்தல், நுண்கலைகளில் ஆர்வம், முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்ணும் நனிநாகரிகம், தன்னம்பிக்கை, ஊழையும் உப்பக்கம் காணும் தாளாண்மை ஆகிய சிறப்புப் பண்புகளை நாம் கிரேக்கர்களிடமும் காண்கின்றோம். சேர, சோழ, பாண்டியர்கள் தம்முள் இடைவிடாது போரிட்டு வீழ்ச்சியடைந்ததைப் போன்று, ஸ்பார்ட்டா, ஆதென்ஸ் போன்ற கிரேக்க நகர அரசுகளும் தமக்குள் ஓயாது போரிட்டு வீழ்ச்சியடைந்ததையும் நாம் காண்கின்றோம். எனவே, தமிழர்கள் தங்களது பண்டைய மாண்பினை நினைவுகூர்ந்து பின்பற்றவும் குறைகளை உணர்ந்து அவற்றைக் களையவும் கிரேக்க வரலாறு ஓரளவு துணைபுரியக் கூடும். மறுமலர்ச்சிப் பாதையில் அடலேறெனப் பீடுநடை பயிலும் தமிழ்ச் சமுதாயம் மேலும் அப் பாதையில் விரைந்து முன்னேறுவதற்கான ஆக்கத்தையும் ஊக்கத்தையும் இவ் வரலாற்று நூல் பெரிதும் வழங்கும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

கி. ர. அனுமந்தன்

உள்ளடக்கம்

பக்கம்

1. நாடும் அதன் மக்களும் ... 1

(1) நாட்டின் புவியியலும் வரலாறும், (2) கிரேக்க நாட்டுப் பண்டைய மக்கள்

2. வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட நாகரிகங்கள் 18

(1) ஈஜிய நாகரிகம், (2) மைசீனிய நாகரிகம்

3. ஹோமரின் காலம் ... 39

(1) ஹோமரும் அவரது கவிதைகளும், (2) அக்கீயப் படையெடுப்பு, (3) ட்ரோஜன் போர்கள், (4) ஹோமர் காலத்து மக்கள் வாழ்க்கை

4. கிரேக்க நகர அரசுகளின் வளர்ச்சி ... 68

(1) நகர அரசுகளின் தோற்றம், (2) நகர அரசுகளும் தற்காலத் தேசிய அரசுகளும், (3) நகர அரசுகளின் படித்தர வளர்ச்சி

5. கிரேக்கக் குடியேற்ற நாட்டியக்கம் 90

(1) கிரேக்கக் குடியேற்றங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள், (2) கிரேக்கக் குடியேற்றங்களின் சிறப்பியல்புகள், (3) குடியேற்ற நாடுகளின் பரப்பு, (4) குடியேற்ற நாட்டியக்கத்தினால் ஏற்பட்ட விளைவுகள்

6. கிரேக்க ஒருமைப்பாடு ... 102

(1) இனஒற்றுமை, (2) மொழி ஒற்றுமை, (3) பொதுவழிபாட்டொருமைக் கழகங்கள், (4) இறைமொழி கூறும் மேடைகள், (5) தேசிய விளையாட்டுகள்

பக்கம்

7. ஸ்பார்ட்டாவின் ஆரம்பகால வரலாறு ... 111

(1) ஆர்காஸ் நகர அரசின் மேம்பாடு–ஃபைடன், (2) ஸ்பார்ட்டா நகர அரசு–புவியியல் அமைப்பு–சமுதாய அமைப்பு–அரசியல் அமைப்பு–லூக்கர்கஸ், (3) ஸ்பார்ட்டாவின் அரசியலமைப்பு, (4) லூக்கர்கஸ் வகுத்த வாழ்க்கை நெறி, (5) ஸ்பார்ட்டாவின் விரிவாக்கம் – மெஸேனியப் போர்கள் – பெலப்பொனீஷிய இணைக்கூட்டரசு

8. ஆதென்ஸ் நகர அரசின் ஆரம்பகால வரலாறு 142

(1) ஆதென்ஸ் நகரின் தோற்றம், (2) ஆதென்ஸில் வாழ்ந்த மக்களின் சமுதாய நிலை, (3) ஆதென்ஸின் அரசியல் வாழ்க்கை – பிரபுக்களாட்சி – செல்வந்தராட்சி, (4) சோலனின் சீர்திருத்தங்கள், (5) ஆதென்ஸில் சர்வாதிகார ஆட்சி–பைஸிஸ்ட்ராட்டஸின் எழுச்சி, (6) கிளீயஸ்தனீஸின் சீர்திருத்தங்கள்

9. பாரசீகப் போர்கள் ... 174

(1) பாரசீகப் போர்களுக்கான காரணங்கள், (2) பாரசீகரின் முதலாம் படையெடுப்பு, (3) இரு பாரசீகப் படையெடுப்புகளுக்கிடையே ஆதென்ஸ் நகரத்தின் நிலை, (4) இரண்டாம் பாரசீகப் போர் – தெர்மாபிலே போர்–சலாமிஸ் போர்

10. மேலைக் கிரேக்கர்களும் சிசிலியில் சர்வாதிகாரிகளும் ... 203

(1) மேலைக்குடியேற்றங்கள், (2) சிசிலியில் சர்வாதிகாரிகள், (3) ஜேலான் என்பாரின் சீர்திருத்தங்கள், (4) சிசிலிக்கும் கார்த்தேஜுக்கும் ஏற்பட்ட போர், (5) சர்வாதிகார ஆட்சியின் வீழ்ச்சி

11. பேரரசுப் பாதையில் ஸ்பார்ட்டாவும் ஆதென்ஸும் 213

(1) பேரரசை அமைக்க ஸ்பார்ட்டாவின் முயற்சி, (2) தெமிஸ்டாகிளிஸ் என்பாரின் வாழ்வும் சாதனைகளும், (3) டீலாஸ் இணைக் கூட்டரசு, (4) டீலிய இணைக்கூட்டரசானது, அத்தீனியப்

பக்கம்

பேரரசாக மாறியமைதல், (5) கைமன் என்பாரின் வாழ்வும் சாதனைகளும்

12. பெரிக்ளீஸின் காலம் ... 235

(1) வாழ்க்கை, (2) குணச்சிறப்பும் கொள்கைகளும், (3) பெரிக்ளீஸின் அயல்நாட்டுக் கொள்கை, (4) பெரிக்ளீஸ் காலத்திய ஜனநாயகம், (5) பெரிக்ளீஸ் காலத்திய சமுதாய நிலை, (6) பொருளாதார நிலை, (7) பெரிக்ளீஸின் கலைத்தொண்டு

13. பெலப்பொனீஷியப் போர் 255

(1) காரணங்கள், (2) இருதரப்பாரின் வலிமை, (3) போரின் இயல்பு, (4) போரின் போக்கு, (5) நிகியாஸின் சமாதானம், (6) அத்தீனியப் பேரரசு வீழ்ச்சியுறல் முதற் கட்டம் – சிராக்கியூஸ் படையெடுப்பு, (7) அத்தீனியப் பேரரசு வீழ்ச்சியின் இரண்டாம் கட்டம்–டாகிலியப் போர், (8) ஆல்கிபியாடிஸ் என்பாரின் ஆதிக்க வளர்ச்சி, (9) அத்தீனியப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணங்கள், (10) பெலப்பொனீஷியப் போரின் விளைவுகள், (11) ஆல்கிபியாடிஸ் என்பாரின் வாழ்வும் சாதனையும் – ஒரு மதிப்பீடு

14 ஸ்பார்ட்டாவின் மேலாண்மை ... 293

(1) பத்தாயிரம் வீரர்களின் படைச் செலவு, (2) ஸ்பார்ட்டாவின் ஆதிக்க வளர்ச்சி – கொரிந்தியப் போர், (3) ஸ்பார்ட்டா மேலாண்மையின் இரண்டாம் கட்டம், (4) லூசாண்டரின் வாழ்க்கைக் குறிப்பு

15. இரண்டாவது அத்தீனிய இணைக்கூட்டரசு ... 318

(1) இணைக்கூட்டரசின் நோக்கம், (2) இணைக்கூட்டரசின் அமைப்பு, (3) உறுப்பு நாடுகள், (4) முதலாம் அத்தீனிய இணைக்கூட்டரசோடு ஒப்பீடு, (5) இணைக்கூட்டரசின் சாதனைகள், (6) இணைக்கூட்டரசின் வீழ்ச்சி

16 சிராக்யூஸின் சர்வாதிகாரிகள் ... 325

(1) முதலாம் டயோனிஷியஸ், (2) டயோனிஷியஸின் வழித்தோன்றல்கள் – இரண்டாம் டயோனிஷியஸ் – டைமோலியன்

பக்கம்

17. தீப்ஸின் கூட்டுத் தலைமை ... 343

(1) பெரே நகர ஜோஸன், (2) தீப்ஸ் நகர எப்பமினண்டஸ் வாழ்வும் சாதனைகளும்

18. மாசிடோனியாவின் மேலாண்மை 361

(1) மாசிடோனிய மேலாண்மைக்கு முன் கிரீஸின் நிலைமை, (2) இரண்டாம் பிலிப் மாசிடோனியாவின் எழுச்சி

19. மாவீரர் அலெக்ஸாந்தர் ... 379

(1) வாழ்க்கை, (2) அலெக்ஸாந்தரது வெற்றிகள், (3) அலெக்ஸாந்தரது சாதனைகள் பற்றிய மதிப்பீடு, (4) பேச்சாளர் டெமாஸ்தனீஸ்

20. ரோமானியர் வருகை ... 406

(1) அலெக்ஸாந்தருக்குப்பின் கிரீஸின் நிலைமை, (2) ரோமானியர் வருகை

21. பண்டைய கிரேக்கரின் நாகரிகம் ... 424

22. ஹெல்லனீய நாகரிகம் ... 454

23. கிரேக்கர்கள் உலகுக்கீந்த உயர்தனிச் செல்வம் .. 471

மேற்கோள் நூற்பட்டியல் ... 480

கலைச்சொற்கள் ... 481

1. நாடும் அதன் மக்களும்

(LAND AND IT'S PEOPLE)

பெற்ற தாயையும் பிறந்த பொன்னாட்டையும் ஒன்றெனக் கருதி அன்பு பாராட்டுவதே மக்கள்தம் இயல்பாகும். தமிழ் நாட்டைத் தமிழன்னை என்றும், இந்தியாவைப் பாரதமாதா என்றும் நாம் அழைப்பதற்குக் காரணம் இத்தகைய பற்றே யன்றி வேறன்று. கிரேக்கர்களும் இவ்விதிக்கு விலக்கான வர்களல்லர். அவர்கள் தமது பிறந்த நாட்டைத் தாயினும் பெரிதாய்க் கருதிப் போற்றினர். ஹெல்லன் (Hellen) என்ற ஓர் மூதாதையின் வழிவந்தவர் எனக் கருதிய அவர்கள் தம்மை ஹெல்லனீயர்கள் (Hellenes) என்றும், தாம் வாழ்ந்த நாட்டை ஹெல்லாஸ் (Hellas) என்றும் அழைத்தனர். ஹெல்லாஸ் என்பது ஆதியில் தெஸலி (Thessaly) மாநிலத்திலுள்ள ஒரு மாவட்டத்தையே குறித்தது. நாளடைவில் அது ஹெல்லனீயர் கள் குடியேறிய எல்லா மாநிலங்களையும் குறிப்பிடும் பெயராய் மாறியது. பால்கன் தீபகற்பத்தின் தென்பகுதியை மட்டுமன்றி, ஈஜியக் கடலிலுள்ள தீவுகள், ஆசியாமைனரின் ஒரு பகுதி, கிரீட் தீவு, ஆப்பிரிக்காவின் வடக்குக் கடற்கரையை ஒட்டிய நிலப் பகுதிகள் ஆகிய யாவும் சேர்ந்தே ஹெல்லாஸ் எனப் பண்டைக் காலத்தே அழைக்கப் பட்டன. ஹெல்லாஸின் ஒரு மாநிலமான எபைரஸ் (Epirus) என்னுமிடத்தில் ஹெல்லனீயர் களில் ஒரு பிரிவினரான கிரேக்கர்கள் வாழ்ந்து வந்தனர். ரோமானியர்கள் கிரீஸுக்குள் புகுந்தபோது முதன்முதல் சந்தித்தது இக் கிரேக்கர்களையே யாகும். எனவேதான் இவர்கள் நாடு முழுமைக்கும் கிரீஸ் என்ற பெயரை வழங்கினர். இங்ஙனம் அந்நியரால் இடப்பெற்ற கிரீஸ் எனும் பெயர் இன்றைக்கு ஒலிம்பஸ் மலைக்குத் தெற்கே மத்தியத்தரைக் கடலில் அமைந் துள்ள ஒரு தீபகற்பத்தையும் அதன் அருகிலுள்ள சில தீவுகளை யும் மட்டுமே குறிப்பிடுகின்றது.

(1) நாட்டின் புவியியலும் வரலாறும்

ஒரு நாட்டின் புவியியலும் வரலாறும் நெருங்கிய தொடர் புடையனவாகும். உடலும் உயிரும் போல், சுவரும் ஓவியமும் போல் அவை என்றும் இணைபிரியாதன. ஒருவனது உயிர்ப் பண்புகள் பெரும்பாலும் அவனது உடற்பாங்கினை ஒட்டி அமைவன போன்றே, ஒரு நாட்டின் வரலாறும் அதன் புவியியற் றன்மைகளைப் பொறுத்தே பெரிதும் அமைந்து விடுகின்றது. நல்ல செழிப்பான சமவெளிகளில் பரந்த பேரரசுகள் தோன்றுவ தும், மலைகள் மலிந்த மேட்டு நிலங்களில் சிறுசிறு குடியரசுகள் ஏற்படுவதும் இயற்கையான நிகழ்ச்சிகளாகும். கடல் கடந்த பேரரசுகளை நிறுவிய பிரிட்டன் போன்ற நாடுகள் எல்லாம், கடலால் சூழப்பட்டிருப்பதையும், இயற்கையான துறைமுகங்கள் நிறைந்த கடற்கரைகளைக் கொண்டிருப்பதையும் நாம் கண் கூடாகக் காணலாம். கிரீஸ் நாட்டின் பண்டைய வரலாறும் இங்ஙனமே அதன் புவியியல் நிலையினால் பெரிதும் உருவாக்கப் பட்டுள்ள தென்பதில் சிறிதும் ஐயமில்லை.

இருப்பிடம் (**Position**)

ஐரோப்பாக் கண்டத்தின் தென்கிழக்குப் பகுதியில் அமைந் துள்ள தீபகற்பமே கிரீஸ் நாடாகும். மேற்கே அயோனியக் கடல் (Ionian Sea), கிழக்கே ஈஜியக்கடல் (Aegean Sea), தெற்கே மத்தியத்தரைக் கடல் (Mediterranean Sea) ஆகிய மூன்று கடல்க ளால் அது சூழப்பட்டுள்ளது. இங்ஙனம் முப்புறமும் கடலால் சூழப்பட்ட வேறு இரு தீபகற்பங்களும் மத்தியத்தரைக் கடலில் உள்ளன. இதாலி, ஸ்பெயின் என்ற அவ்விரு தீபகற்பங்களும் கிரீஸுக்கு மேற்கே அமைந்துள்ளன. ஆனால் அங்கெல்லாம் ஆதியில் நாகரிகமானது தோன்றவில்லை. கிரீஸில் மட்டுமே நாகரிக வாழ்க்கை முதன்முதல் அரும்பி மலர்ந்தது. அதற்குக் காரணம் அதன் இருப்பிடமே என்று துணிந்து கூறலாம். ஏனெனில் பண்டைக்காலத்தே சீரும் சிறப்பும் மிக்கவைகளாய்த் தனி நாகரிகத்துடன் விளங்கிய சுமேரியா, எகிப்து, ஆசியா மைனர் போன்ற நாடுகளெல்லாம் கிரீஸ் நாட்டுக்கு மிக அருகி லேயே அமைந்திருந்தன. அவைகளோடு எளிதில் தொடர்பு கொள்ளும் நிலையில் அமைந்திருந்த தீபகற்பம் கிரீஸ் ஒன்று மட்டுமே யாகும். எனவேதான் அங்கு முதலில் நாகரிகம் பரவியது. நாகரிகத்தின் உச்சியில் கிரீஸ் இயங்கிக் கொண்டி ருந்த அதே வேளையில் இதாலியும் ஸ்பெயினும் அறியாமை எனும் இருளில் ஆழ்ந்து கிடந்தன. மக்கள் மாக்களைப் போல் அங்கு வாழ்ந்தனர். நாகரிகமிக்க நாடுகளுக்கருகில் அவை அமையாததே அதற்குக் காரணமாகும்.

நிலப்பிரிவுகள்

கிரீஸ் உருவத்தில் சிறியது; இங்கிலாந்தின் வட பகுதியில் உள்ள ஸ்காட்லாந்தை ஒத்த நிலப்பரப்புடையது. இலங்கைத் தீவை விட இருமடங்கு பெரியது; அதை வட—தென்—மத்திய கிரீஸ் என மூன்று பெரும் நிலப்பகுதிகளாகப் பிரிக்கலாம். வட கிரீஸில் உள்ள தெஸலி என்பது (Thessaly) மலைகளால் சூழப் பட்ட ஒரு பெரும் பள்ளத்தாக்காகும். இது ஒரு காலத்தே ஓர் ஏரியாக இருந்ததென்றும், பூகம்பத்தின் விளைவால் மலைத்தொட ரின் இடையே ஏற்பட்ட ஒரு பிளவின் மூலமாக அதன் நீர் ஈஜியக் கடலுக்குள் சென்றுவிடவே அங்கு ஒரு சமவெளி ஏற்பட்டது என்றும் புவியியலார் கூறுவர். அப் பிளவின் பெயர் டெம்பி (Tempe) பள்ளத்தாக்கு என்பதாகும். அதன் இயற்கை வனப்பைப் பாராட்டாத கிரேக்கப் புலவர்களே இல்லை எனலாம். ஈஜியக் கடலிலிருந்து தெஸலிக்குள் இக் கணவாய் மூலமாகத் தான் இன்றும் மக்கள் புக முடிகிறது. தெசலி சமவெளியில் செழிப்பான புல்வெளிகள் இருப்பதால் குதிரைகள் இங்கு நன்கு வளர்கின்றன. இதனாற்றான் தெசலியின் படைகளுள் குதிரைப் படை நன்கு பலம் பெற்றதாய் அக் காலத்தே விளங்கிற்று. கதைகளும் காவியங்களும் நிறைந்த நாடு தெஸலி எனலாம். ஆர்கோனட்ஸ் (Argonatus) என்ற பெருவீரன் பொன்உரோமம் நிறைந்த தோலைத் (Golden Fleece) தேடிப் புறப்பட்டது இங்குள்ள அயோல்காஸ் (Iolcos) எனும் துறைமுகத்திலிருந்து தான் என்று பேசப்படுகிறது.

எபைரஸ் (Epirus) எனும் இன்னொரு மாநிலம் அயோனி யக் கடலோரமாக மேற்கே அமைந்துள்ள நிலப்பகுதியாகும். அங்கு ஓக் (Oak) மரங்கள் செறிந்த காடுகள் அதிகம். அக் காட்டுக்குள்தான் ஜீயஸ் (Zeus) என்ற கடவுளின் குறிமேடை (Oracle) இருந்தது. இங்கு வாழ்ந்த மக்கள் சற்று மந்தமான வர்கள். கிரேக்க வரலாற்றில் அவர்கள் அதிகம் பங்கெடுத்துக் கொள்ளவில்லை.

மத்திய கிரீஸில் உள்ள ஃபோஸிஸ் (Phocis) எனும் நிலப் பகுதி மிக முக்கியமானதாகும். அபோலோ (Apollo) என்ற கடவுள் தனது அருள்பெற்ற ஒரு பெண்துறவி மூலமாகப் பேசுவதாக நம்பப்பட்ட டெல்ஃபிக் குறிமேடை (Delphic oracle) இங்குதான் அமைந்துள்ளது. கிரேக்கர்களைச் சமயத்துறையில் ஒன்றுபடுத்திய ஒரு சாதனமாக விளங்கியது இக் குறிமேடையே யாகும். பியோஷியா என்னும் பகுதி சதுப்பு நிலங்கள் நிறைந்

தது. அங்கு மூடுபனி எப்போதும் வானவெளியில் படர்ந்திருக்கும். மக்கள் சுறுசுறுப்பற்றவர்கள்; மத்தபுத்தி உடையவர்கள். தீப்ஸ் (Thebes) என்பதுதான் அதன் முக்கிய நகரமாகும். அந்நகரை மையமாகக் கொண்டு பல கட்டுக்கதைகள் புலவர்களால் புனையப்பட்டன.

அட்டிகா என்ற இன்னொரு மத்தியப் பிரதேசம் சற்று வறண்ட பூமியை உடையது. வானவெளி என்றும் தெளிவாக இருக்கும். எனவே குன்றுகளும் கோயில்களும் பார்வைக்கு எடுப்பாகத் தென்படும். கிரேக்க வரலாற்றில் புகழ்பெற்ற ஆதென்ஸ் நகரம் இங்குதான் அமைந்துள்ளது.

தெற்கு கிரீஸில் உள்ள ஆர்கேடியா (Arcadia) பெலப் பொனீஷியாவின் ஸ்விட்ஸர்லாந்து எனப்படுவது; இயற்கை வனப்பு நிறைந்தது. ஆனால் மலைகளால் சூழப்பட்டு ஏனைய பகுதிகளோடு தொடர்பில்லாமல் இருந்ததால் இங்கு வாழ்ந்த மக்கள் நாகரிகமற்ற நாட்டுப்புற மக்களாகவே பலகாலம் இருந்தனர். நாகரிகமற்ற கிராமப்புறச் சூழ்நிலையை ஆர்கேடியா எனப் புலவர்கள் வருணிப்பது இதுபற்றியே யாகும்.

அக்கீயா (Achaea) என்பது கொரிந்திய வளைகுடாவின்மீது அமைந்துள்ள ஒரு நிலப்பகுதியாகும். கிரேக்க வரலாறு உச்ச கட்டத்திலிருந்தபோது ஏற்பட்ட கூட்டுறவு இங்குதான் அமைக்கப்பட்டது. அக்கீயக் கூட்டணி (Achaean League) என்பது அதன் பெயராகும்.

ஆர்காலிஸ் (Argolis) என்ற தென்பகுதியில்தான் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட நாகரிகச் சின்னங்கள் நிறைந்த மைஸினி (Mycenae) ட்ரின்ஸ் (Tiryns) என்ற நகரங்கள் இருக்கின்றன. ஆர்காஸ் என்ற அதன் தலைநகரம் வரலாற்றில் பெரும்புகழ் பெற்றதொன்றாகும்.

லெகோனியா (Leconia) என்ற தென்கோடிப் பகுதியில்தான் ஸ்பார்ட்டா (Sparta) என்ற வரலாற்றுப் புகழ்பெற்ற நகர் அமைந்துள்ளது. அதன் யூரோடாஸ் நதிப் பள்ளத்தாக்கு மிகவும் ஆழமானது. மெஸ்ஸேனியா (Messenia) என்ற பகுதி செல்வம் கொழிக்கும் நாடாகும். அதன்கண் வாழ்ந்த மக்கள் ஸ்பார்ட்டா மக்களோடு ஓயாது போரிட்டனர்; ஆனால் தோற்றனர். தென் கிரீஸின் மேற்குப் பகுதியில் உள்ள ஈலிஸ் (Elis) மாநிலத்தில் ஒலிம்பஸ் (Olympus) என்னும் உயர்ந்த மலை

உள்ளது. அங்குதான் ஒலிம்பிக் விளையாட்டுகள் என்னும் தேசிய விளையாட்டுகள் நடைபெறுவது வழக்கம்.

புவியியற் கூறுபாடுகள் (Geographical Features)

கிரேக்கவரலாற்றை உருவாக்கிய முக்கிய புவியியற்கூறுபாடுகள் அதன் மலைகளும் நதிகளும் சமவெளிகளும் கால நிலையும் மண்வளமும் கடலும் கடற்கரையும் சுற்றியுள்ள தீவுகளுமேயாகும்.

கிரீஸ் நாட்டின் இயற்கையமைப்பில் முதலிடம் பெறுபவை அதன் மலைகளே எனலாம். கண்ணுக்கெட்டிய இடமெல்லாம் அங்கு வானளாவிய மலைச் சிகரங்களே தென்படுகின்றன. அங்குள்ள எந்த ஓர் இடமும் மலைகளுக்குப் பதினைறு கிலோ மீட்டர் தொலைவுக்கு மேல் இல்லை. நம் நாட்டில் இமயமலை இருப்பதே போன்று கிரீஸின் வடக்கே ஒலிம்பிய (olympian) மலைகளும் கம்பூனிய மலைகளும் (cambunia) அமைந்துள்ளன. அவைகளுக்கு நேர்க்கோணத்தில் அமைந்துள்ளது பிண்டஸ் (pindus) மலைத்தொடராகும். அஃது தெஸலி, எபைரஸ் ஆகிய இரு பிரதேசங்களுக்குமிடையே அமைந்துள்ளது. பெலப் பொனீஷியா எனும் தென் பகுதியில் டைஜடஸ் (taygetus) என்ற மலைத்தொடர் உள்ளது. இவ்விரு மலைத்தொடர்களினின்றும் வரிசை வரிசையாக ஏதோ திட்டமிட்டுச் செய்தாற் போல் பல கிளைகள் கிளம்பி, நாட்டைப் பல சிறு சிறு பள்ளத்தாக்குகளாக அவை பிரித்துள்ளன. மலைகளால் இங்ஙனம் தனித்தனியே பிரிக்கப்பட்ட சிறு சிறு சமவெளிகள் ஒன்றுக் கொன்று தொடர்பும் ஒற்றுமையுமின்றித் தனி உணர்ச்சிமிக்க நகர அரசுகளாய் (city states) நாளடைவில் மலர்ந்தன. கிரீஸின் பண்டைய வரலாறு இத்தகைய சிறிய நகர அரசுகளின் வரலாறேயன்றி வேறன்று. மற்றும் கிரீஸின் பெரும்பாலான மலைகள் உச்சியில் தட்டையாகவும் பக்கவாட்டில் செங்குத்தாகவும் அமைந்துள்ளன. எனவே எதிரிகளிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ளக் கிரேக்கர்கள் மலையுச்சிகளில் சேம அரண்களை (citadels) ஆங்காங்கே கட்டிக் கொண்டனர். அக்கோட்டைகளுக்கு உள்ளேயும் வெளியேயும் சிறிய நகரங்களை அவர்கள் அமைத்துக்கொண்டனர். ஒவ்வொரு நகரமும் தனக்கே உரித்தான அரசியல் சமுதாயப் பொருளாதாரப் பண்பாடுகளுடன் வளர ஆரம்பித்தது. எனவே நாளடைவில் அவைகளுக்குள் பகைமையும் போட்டியும் ஏற்பட்டுப் பல போர்கள் விளைந்தன. இங்ஙனம் கிரீஸ் நாட்டு மலைகள் மக்களிடையே பிளவு மனப்பான்மையை வளர்த்தன;

ஒற்றுமையைச் சிதைத்தன; ஆனால் சுதந்திர மனப்பான்மை யையும் நாட்டுப்பற்றையும் பெருக்கின. ஒவ்வொரு நகரவாசியும் மலைமீதுள்ள நகரத்தின்மீது தனது உயிரையே வைத்திருந்தான். சமவெளிகளிலுள்ள கழனிகளில் உழைத்தபோதும், ஆழ்கடலின் மீது சென்று வாணிகத்தில் ஈடுபட்டபோதும் அவனது எண்ண மெல்லாம் தனது மலைப்பட்டினத்தைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருக்கும். குறுகிய மாநிலப்பற்று (Parochialism) ஒவ்வொரு குடிமகனையும் ஆட்கொண்டது. பரந்த நாட்டுப் பற்றும், தேசியமும் கிரேக்க மக்களிடை அவ்வளவாக வளர வழி இல்லாமல் போயின. மற்றும் குறுக்கும் நெடுக்குமான மலைகள் நாடெங்கும் சென்றதால் போக்குவரத்து வசதி குறைந்தது. உள்நாட்டுப் போக்குவரத்து தடைப்பட்டதால் மக்கள் கடல் வழியைக் கைக்கொண்டு வெளிநாடுகளுக்குச் செல்லலாயினர். மலைகளால் தடுக்கப்பட்ட கிரேக்க மக்கள் உண்மையில் கடல்களுக்குள் துரத்தப்பட்டார்கள் என்றே கூறலாம். உள்நாட்டு வாணிகத்தைவிட அயல்நாட்டு வாணிகத் தில்தான் கிரேக்கர்கள் சிறந்து விளங்கினர். உள்நாட்டில் பேரரசை அமைப்பதைவிட, அக்கரை நாடுகளில் பேரரசை நிறுவுவதிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாய் இருந்து வந்தனர்.

கிரேக்கர்களின் குறுகிய மாநிலப்பற்று நாட்டின் மலை அமைப்பினால் மட்டுமே ஏற்பட்டது என்று நாம் கூறிவிட முடியாது. ஏனெனில் தெஸலி, பியோஷியா போன்ற சம வெளிகளில் அமைந்த நகர அரசுகளிலும்கூட இத்தகைய சுய நலக் குறுகிய மனப்பான்மையே தலைதூக்கி நின்றது. கிரேக்க மக்களின் இயல்பான மனப்போக்கே இதற்கு முக்கிய காரண மாகும். புற இயற்கை ஓரளவுக்குத்தான் மனிதனை மாற்றி யமைக்கிறது. மற்ற வகையில் மனிதன் தன் மனப்போக்கிற் கேற்பவே பெரும்பாலும் நடந்துகொள்கிறான். இயற்கையை வெல்வதில் அவன் தனி இன்பம் காண்கிறான். இயற்கையை வெல்வதே மனிதனின் இயல்பு என்றால் அது மிகையாகாது.

கிரேக்கர்கள் விடுதலை வேட்கை மிக்கவர்கள். கட்டுப்பாடு (order) என்பது ரோமானியர்களின் சிறப்பியல்பு என்றால், விடுதலை உணர்ச்சி (sense of liberty) கிரேக்கர்களின் தனிப் பண்பாகும். இத்தகைய சுதந்திர மனப்பான்மை மலைசூழ்ந்த நாடுகளில் வாழ்வோர்க்கெல்லாம் இயல்பாக அமைந்துவிடுகிறது. ஸ்காட்லாந்தியர், சுவிட்ஜர்லாந்தியர், ஆப்கானியர், மராத்தியர் ஆகியோரை இதற்குச் சான்றாகக் கூறலாம். எனவே கிரீஸின்

மலைகள் கிரேக்கர்களுக்கு விடுதலை உணர்வை ஊட்டி வளர்த்த தாயெனத் திகழ்ந்தனவெனில் அது மிகையாகாது.

சமவெளிகள்

நாடெங்கும் மலைகள் மலிந்திருப்பதால் பரந்த சமவெளிகள் கிரீஸில் அரியவாகவே காணப்படுகின்றன. டெம்பி(Tempe)என்ற கணவாய் வழியாகத்தான் அச் சமவெளிக்குள் நுழையவேண்டும். இயற்கை எழில் நிரம்பிய அக் கணவாயைக் கிரீஸின் தலைவாசல் (First portal) என வரலாற்றாசிரியர் அழைப்பர். பியோஷியா என்பது இன்னொரு முக்கிய சமவெளியாகும். இங்ஙனம் சமவெளிகள் குறைவாக இருப்பதனால்தான் கிரீஸில் பெரும் பேரரசுகள் தோன்றவில்லை. மலைப்பாங்கான இடங்களில் முதலில் சிறிய நகர அரசுகள் தோன்றிவிடவே அவற்றை முன் மாதிரியாகக்கொண்டு சமவெளிவாழ் மக்களும் சிறு சிறு அரசுகளையே அமைக்கலாயினர்.

நீர்வளம்

மலைகள் நிறைந்து சமவெளிகள் குறைந்து காணப்படுவதால், கிரிஸில் நதிகள் நீண்ட தூரம் ஓட இடமின்றிக் குறுகி விடுகின்றன. செங்குத்தான மலைகளினின்று இழிவதாலும், ஓட வேண்டிய தூரம் குறைவாக இருப்பதாலும் நதிகள் வேகமிக்கவைகளாய் விளங்குகின்றன. மேலும் ஆண்டு முழுதும் நீர் ஓடிக் கொண்டிருக்கும் ஜீவநதிகளாயும் அவை அமையவில்லை. எனவே அவை போக்குவரத்துக்கு எள்ளளவும் பயன்படுவதில்லை. உள்நாட்டு வாணிகத்தை வளர்க்கக் கூடிய நீர்வழிகளாகவும் அவை பயன்படுவதில்லை. எனவே மலைகளைப் போன்றே கிரீஸின் நதிகளும் நாட்டின் ஒற்றுமைக்கு ஊறுவிளைவிக்கும் கருவிகளாகவே காட்சியளிக்கின்றன. தெஸலி சமவெளியில் ஓடும் பெனியஸ் (peneus),பியோஷியாவில் பாயும் செஃபிசஸ் (cephesus), ஆகிய நதிகளே முக்கியமானவை. யூரோடாஸ் (eurotas) எனும் ஆறு லேகோனியாவிலும், அல்ஃபியூஸ் (alpheus) எனும் நதி ஆர்க்கேடியாவிலும், அசோபஸ் நதி (asopus) அட்டிகாவிலும் ஓடும் முக்கிய நதிகளாகும். இவையாவற்றிலும் மழைக்காலங்களில் வெள்ளம் கரை புரண்டோடும். மற்ற காலங்களில் இவை வறண்டு கிடக்கும். வேகம் அதிகமாக இருப்பதால் இவற்றைத் தடுத்து நிறுத்தி நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொள்ளவும் வேளாண்மையைப் பெருக்கவும் கிரேக்கர்களால் முடியாமற் போயிற்று. எனவே கிரீஸுக்கு நீர்வளமென்பது அறவேகமாக இல்லை என்றே கூறலாம்.


நிலவளம்

கிரிஸின் மண்ணில் சத்துப் பொருள்கள் குறைவு. எனவே நிலவளமென்பதும் கிரீஸில் இல்லாததொன்றேயாகும். கோதுமை, பார்லி போன்ற உணவுப் பொருள்களைத் தங்களது சொந்த நிலங்களில் பயிரிட முடியாத கிரேக்கர்கள் அவை நிறைய விளையக் கூடிய ஆசியாமைனர், கருங்கடலை ஒட்டிய நிலப்பகுதிகள் ஆகிய இடங்களுக்குச் சென்று குடியேற்றங்களை ஏற்படுத்தினர். இயற்கை விடுத்த அறைகூவலைக் (challange) கிரேக்கர்கள் வெற்றிகரமாகச் சமாளித்து முன்னேறினர். கிரீஸ் மண்ணில் நன்கு விளையக்கூடிய திராட்சைப் பழங்களையும், ஒலிவக்கொட்டைகளையும் அவர்கள் நிறையப் பயிர் செய்தனர். அவற்றினின்றும் சாராயம், ஒலிவ எண்ணெய் ஆகியவற்றை இறக்கி அவற்றைப் பிறநாடுகளுக்கு அனுப்பிப் பெரும்பொருள் ஈட்டினர். அதைக்கொண்டு தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும், ஆடம்பரப் பொருள்களையும அவர்கள் பிற நாடுகளிலிருந்து தாராளமாக வாங்கிக் கொண்டனர்.

மண்வளமற்ற கிரீஸில் சலவைக் கற்கள் நிறையக் கிடைக்கின்றன. அவை கிரேக்கர்களின் கலையுணர்ச்சியைத் தூண்டிவிட்டன. அதன் விளைவால் சலவைக் கற்களாலான கைவண்ணமிக்க உருவச் சிலைகள், தூண்கள், மண்டபங்கள், மாடமாளிகைகள், கோயில்கள் முதலியன நாடெங்கும் தோன்றலாயின. கிரேக்கர்களின் கலைத்திறமைக்கும் அழகுணர்ச்சிக்கும் ஒரு எடுத்துக்காட்டாய் அவை இன்றும் விளங்குகின்றன. எழில் கொழிக்கும் தாஜ்மகாலைப்போன்று அவை நிலவொளியில் பூரணப் பொலிவுடன் காட்சியளிக்கின்றன.

கிரீஸில் கனிவளமும் மிகக் குறைவு. அட்டிகாவில் வெள்ளியும், யூபியா (Euboea) தீவில் செம்பும், டைஜடஸ் மலைகளில் இரும்பும் நிறையக் கிடைக்கின்றன. ஆனால் தங்கம் திரேஸ் (Thrace) என்னும் இடத்தில் மட்டுமே கிடைக்கிறது. எனவே தங்கத்தைத் தேடிக் கிரேக்கர்கள் பிற நாடுகளுக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

பியோஷியா போன்ற பகுதிகளில் சதுப்பு நிலங்கள் அதிகம். எனவே மருத்துவ வசதியற்ற பழங்காலத்தே கொசுக்கடியால் மக்கள் பெரிதும் துன்புற்றனர். மலேரியாக் காய்ச்சலினால் ஏராளமான மக்கள் ஆண்டுதோறும் மாண்டு வந்தனர். 'கி.மு. நான்காம் நூற்றாண்டில் ஏற்பட்ட மலேரியாக் காய்ச்சலால்,



கிரீஸ்
இயற்கை அமைப்பு

படம் 1

கிரீஸின் மக்கள் தொகையும் வீரியமும் பெரிதும் குறைந்தமையாலேயே அந்நாடு வீழ்ச்சியுற்றது' என ஒரு சில வரலாற்று சிரியர்கள் கருதுகின்றனர்.

நிலத்தோற்றம் (Landscape)

கிரீஸின் இயற்கைத் தோற்றம் கண் கவர் வனப்புடையது. எழில் அள்ளி வீசும் இயற்கைக் காட்சிகள் அங்கு எங்கும் காணலாம். இரத்தினக் கம்பளம் விரித்தாற்போன்று பச்சைப் பசேலென்று குன்றுகளின் சரிவுகள் காட்சியளிக்க அவற்றினருகே நீலத்திரை விரித்தாற்போன்று கடல் பரந்திருப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். குன்றுகளும் பள்ளத்தாக்குகளும் மாறி மாறி அமைந்திருப்பது நிலத் தோற்றத்தின் அழகை அதிகரிக்கிறது. அவற்றினிடையே வீசும் பூங்காற்று மக்களுக்குப் புத்துயிரூட்டத் தக்கதாயுள்ளது. வானவெளி எப்போதும் தெளிவாகவும் ஒளி நிறைவாகவும் விளங்குவதால் இயற்கையின் எழில் மக்கள் நன்கு மாந்தி மகிழ முடிகிறது. இங்ஙனம் நல்லதொரு சூழ்நிலை அமைந்த காரணத்தாற்றான் பண்டைய கிரேக்கர்கள் அறிவும் திருவும் ஒருங்கே கொண்டவர்களாய் விளங்கினர் எனலாம்.

கடலும் கடற்கரை அமைப்பும்

பண்டைய கிரேக்கர்கள் கடலார்வம் மிக்கவர்களாயிருந்தனர். கடல் கடந்து சென்று வாணிகம் செய்வதிலும் குடியேற்றங்கள் நிறுவுவதிலும் அவர்கள் வல்லுநர்களாய் விளங்கினர்கள். அவற்றிற்கெல்லாம் காரணம் கிரேக்க நாட்டின் பெரும் பகுதியினர் கடலுக்கு மிக அருகில் வாழ்ந்ததேயாகும். நாட்டின் முப்புறத்திலும் கடல்கள் சூழ்ந்திருப்பதாலும் கொரிந்திய வளைகுடாவானது நாட்டின் இடையே ஊடுருவிச் செல்வதாலும், கிரீஸின் எந்தப்பகுதியும் கடலிலிருந்து அறுபத்து நான்கு கிலோமீட்டருக்கு மேல் இல்லை. எனவே கிரேக்க மக்கள் கடலோடு நெருங்கிய தொடர்பு கொள்ளலாயினர். கடற்பயம் தெளியப் பெற்ற துணிகர மாலுமிகள் பலர் அவர்களிடையே தோன்றினர். கடற்படைகளும் நாளடைவில் வளர்ந்தன. அயல்நாட்டு வாணிகம் பெருகிற்று. ஈஜியக் கடல் மூலமாக ஆசியாமைனரோடும், கிரீட் கடல் மூலமாக எகிப்தோடும், அயோனியக் கடல் வழியாக ஆப்பிரிக்க, இத்தாலி, சிசிலி ஆகிய நாடுகளோடும், மத்தியத் தரைக்கடல் வழியாக ஆப்பிரிக்க நாடுகளோடும் அவர்கள் வாணிகம் செய்தனர். இக் கடல்களின் மூலமாகக் கிரீஸ் தன் அண்டை நாடுகளோடு கொண்ட தொடர்பு

களின் விளைவே அதன் அரசியல் வரலாறெனில் அது மிகை யாகாது. பிற நாடுகளிலிருந்து வாணிகப் பண்டங்களை மட்டு மன்றிக் கலைச்செல்வத்தையும் நாகரிகக் கூறுபாடுகளையும் கிரேக்கர்கள் தமது நாட்டிற்குக் கொணர்ந்து சேர்த்தனர்.

கிரீஸ் நாட்டின் ஒரு பகுதி இன்னொரு பகுதியொடு தொடர்பு கொள்வதற்கும் கடல்வழியே சிறந்த சாதனமா யமைந்தது. மலைகளின் செறிவும் நதிகளின் வேகமும் சேர்ந்து உள்நாட்டுப் போக்குவரத்தைப் பெரிதும் தடைசெய்ததால், கடல் வழியாகவே கிரேக்கர்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளலாயினர். மலைகள் அவர்களைப் பிரித்தன என்றால், கடல்கள் அவர்களை ஒன்று சேர்த்தன எனலாம். இங்ஙனம் விளைந்த ஒற்றுமையுணர்ச்சிக்கும், பிரிவுணர்ச்சிக்கும் இடையே ஏற்பட்ட போராட்டமே கிரீஸின் வரலாறாகும். கடல்வாழ்வில் வல்ல ஆதென்ஸ் நகர அரசு கிரீஸை ஒன்றுபடுத்த முயன்றது. ஆனால் அது வெற்றி பெறவில்லை. பிரிவினை உணர்ச்சி ஓங்கி வளர்ந்து ஒற்றுமை உணர்ச்சியை விழுங்கிவிட்டதாலேயே கிரேக்க நாகரிகம் வீழ்ச்சியுற்ற தெனலாம்.

கிரேக்க மக்களின் கடலார்வத்துக்கு அதன் கடற்கரை அமைப்பும் காரணமாகும். கடற்கரையானது ஆங்காங்கே பெரிதும் உடைபட்டுக் காண்பது கிரீஸ் இயற்கையமைப்பின் ஒரு சிறப்பியல்பாகும். இத்தகைய உடைபாடுகள் கிரீஸின் மேற்குப் பாகத்தை விடக் கிழக்குப் பாகத்தில்தான் அதிகம். எனவேதான் கிரீஸின் பெரிய துறைமுகங்கள் யாவும் அதன் கீழைக் கடற்கரைகளில் அமைந்துள்ளன. பண்டைய கிரீஸ், மேலைநாடுகளை விட்டுக் கீழை நாடுகளோடு பெரிதும் தொடர்பு கொள்ள நேர்ந்ததற்கும் கடற்கரை அமைப்பே பெரிதும் காரண மாகும். கிரீஸ் முதன்முதலில் போராட வேண்டி இருந்த நாடு கிழக்கே இருந்த பாரசீக நாடேயாகும். இங்ஙனம் அரசியல், பொருளாதாரம் ஆகிய இருதுறைகளிலும் கிரீஸ் கீழைநாடு களோடு தொடர்புகொள்வதற்கு வசதியாக இருந்தவை அதன் கீழைத் துறைமுகங்களேயாகும். நிலப்பேரரசையன்றி, கடற் பேரரசு ஒன்றையே கிரேக்கர்கள் கீழ்த்திசையில் அமைத்தார் களென்றால் அதற்குக் காரணம் மலைகள் கடல்கள் இவைகளின் அமைப்பேயாகும். தடைகள் நிறைந்த நிலமங்கையை வெறுத்துத் தங்களை வாவா என அழைத்த கடற்கன்னியின்மீது கிரேக்கர் களுக்கு ஏற்பட்ட ஆறாக் காதலே அவர்தம் கடற்பேரரசுக்கு வித்தாகு மென்பதில் ஐயமில்லை.

மற்றும் எங்கெல்லாம் கடற்கரை உடைபட்டுத் துறைமுக வசதிகள் நிறைந்து காணப்பட்டனவோ அங்கெல்லாம்தான் உண்மையான கிரேக்கப் பண்பாடு வளர்ந்துள்ள தென்பதையும் நாம் காண்கிறோம். சான்ரூகத் துறைமுகங்கள் குறைவாக வுள்ள தெஸலி, யூபியா (Euboea), லெகோனியா (Laconia) போன்ற மாநிலங்களில் வாழ்ந்த கிரேக்கர்களிடம் கிரேக்கப் பண்பாட்டின் முழுமலர்ச்சியை நம்மால் காண இயலவில்லை. அதே போல் மாசிடோனியாவிலும் கூட நகர அரசுகளின் வீழ்ச்சிக்குப் பின்னரே கிரேக்கப் பண்பாடு முழுவளர்ச்சி எய்தியது. ஆனால் கடலார்வம் உச்சநிலை எய்தி இருந்த பெலப்பொனீஷியா எனும் தென் கிரீஸிலோவெனின் கிரேக்கப் பண்புகள் முழுவளர்ச்சியும் முதுக்குறைவும் பெற்று விளங்கியதை நாம் காண்கிறோம்.

கொரிந்திய வளைகுடாவின் அமைப்பு கிரேக்கர்களின் கடலார்வத்துக்கொரு பெரும் தூண்டுதலாய் அமைந்துள்ளது. இதற்கு அருகில் வசித்த மக்கள் யாவரும் சிறந்த மாலுமிகளாய் மலர்வதற்கு இது பெரிதும் துணைபுரிந்ததெனலாம். வடகிரீஸும் தென்கிரீஸும் வெவ்வேறு முறையில் வளர்ச்சியுற்றதற்கும் இவ் வளைகுடாவே காரணம். சிறு பூசந்தி ஒன்று கீழ்த்திசையில் இல்லாமலிருந்திருந்தால் பெலப்பொனீஷியா ஒரு தனிப்பட்ட தீவாகவே அமைந்திருக்கும். மேற்கு கிழக்கு கிரீஸுகளிடையே அப்போது கடல்மூலமாக அதிகமான அளவுக்குப் போக்குவரத்து நிகழ்ந்திருக்கும். பெலப்பொனீஷியாவைச் சுற்றிக்கொண்டு போவதற்குப் பதிலாகக் கப்பல்கள் நேராக ஈஜியக் கடலிலிருந்து அயோனியக் கடலுக்குச் செல்ல வசதி ஏற்பட்டிருக்கும். மற்றும் அதே பூசந்தி கிரீஸின் கிழக்கிலிருப்பதற்குப் பதிலாக மேற்கே இருந்திருக்குமேயானால் கிரீஸின் வடமேற்குப் பாகம் இன்னும் விரைவிலேயே நாகரிகம் அடைந்திருக்கக்கூடும். பியோஷியாவும் அட்டிகாவும் வேறுவகையில் முன்னேறி இருக்கவும் கூடும். இங்ஙனம் கொரிந்திய வளைகுடாவும் அதன் கோடியிலுள்ள பூசந்தியும் கிரீஸின் வரலாற்றைப் பெரிதும் பாதித்துள்ளன என்பதை நாம் தெள்ளிதின் உணரலாம்.

தீவுகள்

கிரீஸைச் சுற்றி அமைந்துள்ள ஏராளமான தீவுகள் அதன் வெளியுலக வரலாற்றைப் பெருமளவுக்குப் பாதித்துள்ளன. ஈஜியக் கடலுள் அமைந்துள்ள தீவுகள், கிரீஸ் தீபகற்பத்தின் தொடர்ச்சியே போன்று அமைந்துள்ளன. கிரீஸிலிருந்து ஆசியாமைனருக்குச் செல்லுவதற்கான படிகள் போல் அவை காட்சியளிக்கின்றன. எனவேதான் கிரீஸ் ஆசியாமைனரோடு

நெருங்கிய வாணிகத் தொடர்பு கொள்ள நேர்ந்தது. மற்றும் 'கிரீஸ் கீழை நாடுகளை எதிர் நோக்கி நிற்கிறது' (Greece faces the east) என்ற சொல் ஏற்படுவதற்குக் காரணம் இத் தீவுகளே யாகும். கிரீஸின் எண்ணங்களும் செயல்களும் கீழைநாடுகளைச் சார்ந்தே அமைவதற்கு அடிப்படையாக இவைகள் விளங்கின எனலாம்.

கிரீஸுக்கருகிலுள்ள தீவுக் கூட்டங்கள் இரு வகையாகப் பேசப்படுகின்றன. டீலாஸ்(Delos)எனும் தீவைச்சுற்றிச் சுமாரான ஒரு வட்டமாகத் தீவுக்கூட்டம் ஒன்று அமைந்துள்ளது. அவை கிரீஸ் எனும் தாய் தன் பாதங்களில் அணிந்துள்ள சிலம்புபோல் காட்சியளிக்கின்றன. அவைகளுக்குத் தீவுவட்டம் எனும் பொருள்படும் சைக்லடீசுகள் (Cyelads) என்பது பெயர். அவை களுள் யூபியாநாட்டை ஒட்டியுள்ள ஆண்ரோஸ் (Andros), டெனோஸ் (Tenos), மிசானோஸ் (Mysonos) ஆகிய தீவுகளும், அட்டிகாவுக்கருகிலுள்ள கியோஸ் (Ceos), சைதோஸ் (Cythos), செரிபோஸ் என்ற தீவுகளும், இவற்றைச் சுற்றித் தொலைவி லுள்ள டீலாஸ், நாச்சாஸ் (Naxos), பாரோஸ் (Poros) என்ற தீவுகளும் அடங்கியுள்ளன. இவையன்றி அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக் கிடக்கும் தீவுகள் ஸ்பொரேடீசுகள் (Sporades) எனப்படுகின்றன. இவை யாவும் கிரீஸை ஆசியா மைனரோடு இணைக்கும் ஒரு பாலமெனத் திகழ்கின்றன. கிரீஸுக்கு மேற்கே அயோனியத் தீவுகளும், மத்தியத்தரைக் கடலில் கிரீட் எனும் பெருந்தீவும் அமைந்துள்ளன. மேற் கத்திய நாடுகளோடு தொடர்பு கொள்ள இத் தீவுகள் பெரிதும் துணைபுரிந்தன.

கிரீஸின் காலநிலை (Climate)

ஒரு நாட்டின் காலநிலை அந்நாட்டு மக்களின் குணநலன் களைப் பெரிதும் உருவாக்குகிறதென்பது அறிஞர் ஒப்ப முடிந்த ஒரு பெரும் உண்மையாகும். மிதமான வெப்பமுள்ள நாடு களில் மக்கள் சுறுசுறுப்பாயும், நன்கு நெடுநேரம் உழைக்கக் கூடியவர்களாயுமிருப்பதும், வெப்பமோ குளிரோ மிகுந்த நாடு களில் மக்கள் முயற்சி குன்றியவர்களாய்க் காணப்படுவதும் நாம் யாவரும் அறிந்ததொன்றேயாம். 'மிதமான தட்பவெப்ப நிலையில் வாழ்வோர் சுதந்திர இச்சை உடையவர்களாயும் வெப்ப மிக்க சூழ்நிலையில் வாழ்பவர்கள் அடிமை மனப்பான்மை யுடையவர்களாயுமிருப்பர்' என மாந்தஸ்கே (Montesquieu) எனும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். கிரீஸின் தட்பவெப்பம்

இருவிதமான அதீத நிலைகளுக்கும் இடைப்பட்டது. மத்தியத் தரைக்கடல் கால நிலை என அதைப் புவியியலார் கூறுவர். கோடைக்காலத்தில் வெப்பம் சற்று அதிகமா யிருப்பினும், கடலி லிருந்து வீசும் குளிர்மையான காற்றும், கிரீஸ் நாட்டின் மேட் டுப்பாங்கான புவியமைப்பும் வெப்பத்தைப் பெரிதும் தணித்து விடுகின்றன. கருங்கடற் பகுதியிலிருந்து வீசும் குளிர்காற்று மக்களுக்குப் புத்துயிரூட்டி அவர்தம் நரம்புகளை முறுக்கேறச் செய்துவிடுகிறது. சாதாரணமாக மந்தமாய் இருப்பவர்கள் கூட, அக்குளிர்காற்று உடலிற்பட்டவு ன் ஒருவிதத் தெம்பை யும் ஊக்கத்தையும் உடனே எய்திவிடுகின்றனர்.

இங்ஙனம் உடலுக்கொரு கிளுகிளுப்பையும் இன்பத்தையும் ஊட்டுகின்ற மெல்லிய பூங்காற்று கிரீஸில் எப்போதும் வீசிக் கொண்டிருப்பதால் மக்கள் திறந்தவெளி வாழ்க்கையையே பெரிதும் விரும்பா நிற்கின்றனர். கிரேக்கர்கள் வீடுகளில் தங்குகின்ற காலம் குறுகியதாகவும் வெளியே போக்கும்காலம் மிக்கதாகவும் அன்றும் இன்றும் இருந்து வருவதற்குக் காரணம் காலநிலையேயாகும் அவர்களது சட்ட மன்றகளும், நீதிமன்றங்களும், மற்போர்களும், குத்துச் சண்டைகளும், விளையாட்டுகளும், ஆடல்பாடல்களும் பெரும்பாலும் திறந்த வெளிகளிலேயே நடைபெற்றன. மற்போர்சளிலும், விளையாட்டு களிலும் கலந்துகொண்டபோது கிரேக்கர்கள் தங்கள் ஆடை களைக் களைந்தெறிந்துவிட்ட பின்னரே அவற்றில் ஈடுபட்டனர் என்ருல், அதற்கு முக்கிய காரணம் நாட்டின் தட்பவெட்ப நிலையே யாகும். வெப்பமும் குளிரும் மிதமாக இருந்ததால் அவர்கள் மணிக்கணக்கில் வெளியில் நின்றுகொண்டு ஒருவரோ டொருவர் பேசி மகிழ்வர். அங்காடி முனைகளிலும், நாற்சந்தி களிலும்அவர்கள் கூட்டங்கூட்டமாய் நின்று பேசிப் பேசியே பல மணிகளைக் கழிப்பர். வாக்கு வாதங்களும் சொற்போர்களும் அங்கு நடைபெறும். அரசியல் தலைவர்களும் தளபதிகளும் திறந்தவெளி மேடைகளில் நின்றுகொண்டுதான் மக்களிடம் பேசிப்பேசி அவர்தம் ஆதரவைப் பெறுவார்கள். இங்ஙனம் மக்களாட்சி நன்கு மலர்தற்கான ஒரு சூழ்நிலையைக் கிரீஸின் தட்பவெப்ப நிலை நன்கு அமைத்துக் கொடுத்திருந்தது.

மற்றும் கிரீஸின் வானவெளி என்றும் எவ்வித மப்பும் மந்தாரமுமின்றித் தெள்ளத்தெளிவாக இருக்கும். எனவே வெகு தொலைவிலுள்ள பொருள்களையும் அங்கு ஒருவர் எளிதில் பார்க்க முடியும். ஆதென்ஸ் நகரில் ஒரு மாளிகையில் உட்கார்ந்துகொண்டிருக்கும் ஒருவர், கொரிந்திய வளைகுடாவிற்கு

அக்கரையிலுள்ள கோயில்களையும் மாடமாளிகைகளையும் தெளிவாகக் கண்டு இன்புற இயலும். கடலில் பயணம் செய்து கொண்டே உள்நாட்டில் வானளாவ அமைந்துள்ள கட்டிடங்களின் கண்கவர் வனப்பினை ஒருவர் நுகர முடியும். இதை உள்ளத்திற் கொண்டுதான் கிரேக்கர்கள் தங்களது பொதுக் கட்டிடங்களில் பற்பல வண்ணங்களைப் பெய்து வைத்துள்ளனர் எனத்தெரிகிறது. பகலவன் வெளிச்சத்தில் அவ்வண்ணங்கள் வெவ்வேறு விதமாகக் காட்சியளித்துக் காண்போரின் கலையுணர்வைக் கவ்வுகின்றன. இங்ஙனம் நாட்டின் மிதமான காலநிலையும் இயற்கையமைப்பும், மற்றும் பல புவியியற் கூறுபாடுகளும் மக்களின் மனப்போக்கையும் அதன் மூலமாக நாட்டின் வரலாற்றையும் பெரிதும் மாற்றியமைத்துள்ளமையை நாம் கிரீஸில் நன்கு காணலாம்.

(2) கிரேக்க நாட்டுப் பண்டைய மக்கள்

ஒரு நாட்டின் வரலாற்றை உருவாக்குபவர்கள் அதன்கண் வாழும் மக்களேயாவர். அம் மக்களின் அரசியல் சாதனைகள், பொருளாதார முயற்சிகள், சமுதாய அமைப்பு, கலைகளின் மேம்பாடு ஆகிய அனைத்தும் சேர்ந்த தொகுப்பே அந்நாட்டின் வரலாறாக அமைகின்றது. நாடு எனும் நாடகத்தை நடிப்பவர்கள் அந்நாட்டு மக்களே என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. எனவே கிரேக்க நாகரிகம் என்ற உலகம் போற்றும் பழம் பெரும் நாகரிகம் ஒன்றைத் தோற்றுவித்த ஆதிமக்கள் யாவர் என்பதை ஓரளவு தெரிந்துகொள்ளுதல் நலம்.

பெலாஸ்ஜியர்கள் (Pelasgians)

கிரீஸில் ஆதியில் வாழ்ந்தவர்கள் கிரேக்கர்களல்லர்; பெலாஸ்ஜியர் எனும் வகுப்பாரே அதன் ஆதிக்குடிகளாவர். ஆரியர்கள் இந்தியாவுக்கு வரும்போது தாசர்கள் என்ற வகுப்பினர் இங்கு வாழ்ந்து வந்தது போன்றே, கிரேக்கர்களின் வருகைக்கு முன் கிரீஸில் பெலாஸ்ஜியர்கள் என்னும் மக்கள் கூட்டம் வாழ்ந்துவந்தது. அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பது இன்னும் திட்டவட்டமாகத் தெரியவில்லை. கிரேக்கர்களைப் போன்றே அவர்களும் ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஒரு சிலரும், கிரீஸ், கிரீட், இதாலி முதலிய நாடுகளில் நல்ல நாகரிகத்துடன் வாழ்ந்த ஆரியரல்லாத குடிமக்களே அவர்கள் என வேறு சிலரும் கருதுகின்றனர். அவர்கள் யாவரே எனினும் தம்மை வென்ற கிரேக்கர்களை விட ஒரு படி நாகரி

கத்தில் அவர்கள் சிறந்து விளங்கினர்கள் என்பது ஒருதலை. மதில்களால் சூழப்பட்ட நகரங்களில் அன்னர் வாழ்ந்தனர். நிலத்தை உழுது பயிரிட அவர்கள் அறிந்திருந்தனர். ஜ்யூஸ் (Zeus) என்ற கடவுளை அவர்கள் தொழுதனர். கிரேக்கர்கள், அவர்களைவிடப் போரில் வல்லவர்களாய் விளங்கியதால் எளிதில் அவர்களை வென்றனர். எனினும் அவர்களது உயர்ந்த நாகரிகம் கிரேக்கர்களைக் கவர்ந்தது. அரசியல், சமயம் ஆகிய பல துறைகளில் கிரேக்கர்கள் பெலாஸ்ஜியர்களையே பின்பற்றினர். சான்றாக ஜ்யூஸ் என்ற கடவுளைக் கிரக்கர்கள் ஏற்றுக்கொண்டனர். அவர்களது பெண்களை மணந்துகொண்டு நாளாடைவில் அவர்களோடு கிரேக்கர்கள் இரண்டறக் கலந்துவிட்டனர்.

ஹெல்லனீயர்கள் (Hellenes)

ஹெல்லனீயர்கள் யாவர், எந்த இனத்தைச் சார்ந்தவர், எங்கிருந்து வந்தார்கள் என்பவை எல்லாம் இன்னும் புதிராகவே இருந்துவருகின்றன. பொதுவாக அவர்கள் ஆரியரின் ஒரு பிரிவினர் என்பதும், காகஸஸ் மலைப்பகுதிகளிலிருந்து கிரீஸுக்குள் சிறிது சிறிதாக வந்து குடியேறியவர் என்பதும் நம்பப்படுகின்றன. அவர்கள் நல்ல உயரமும் உடற்கட்டும் அழகும் பொருந்தியவர்களாக இருந்தனர். எனவே தம்மைவிட அழகிலும் அறிவிலும் குறைந்த பெலாஸ்ஜியர்களை அன்னர் நாகரிகமற்ற பிற்போக்கினர் (Barbarsam) அல்லது காட்டுமிராண்டிகள் என்று அழைத்தனர். பார்பேரியன் என்ற சொல்லானது முதலில் 'புரியாத மொழியினர்' என்றே பொருள்பட்டது, நாளடைவில்'அது நாகரிகமற்ற காட்டுமிராண்டிகள்' என்ற பொருளில் வழங்கப் படலாயிற்று.

ஹெல்லனீயர்கள் நாற்பெருங் குலங்களாகப் (Tribes) பிரிந்து வாழ்ந்து வந்தனர். அவர்களுள் அக்கீயர்கள் (Achaeans) என்பாரே தலைசிறந்த குடியினராவர். அவர்கள் பெலப் பொனீஷியா என்னும் தென்கிரீஸில் வாழ்ந்து பல அரிய சாதனைகளைச் செய்து அதன் மூலம் ஏனைய கிரேக்கர்கள் யாவரையும் கதிரவன் முன் உடுக்கள் போல் புகழ் மங்கச் செய்தவர்கள். அக்கீயர் என்ற சொல்லானது கிரேக்கக் குடிகள் அனைவரையும் குறிக்குமளவுக்கு அவர்களது சிறப்பு ஓங்கியிருந்தது. அக்கீயர்களுக்கு அடுத்தாற் போல் புகழோடு விளங்கியவர்கள் அயோனியர்கள் (Ionians) எனும் கூட்டத்தாராவர். இவர்கள் கடலிலேயே பெரும்பாலும் தங்களது காலத்தைக் கழித்தவர்கள். கடல் வாணிகத்தில் ஈட்டிய பெரும் பொருளைக் கொண்டு இலக்கி

யம, கலை, தத்துவம் ஆகியவற்றைப் பெரிதும் பேணி வளர்த்தவர்கள். கிரேக்க வரலாற்றில் ஒப்பற்ற இடத்தைப் பெற்றுள்ள ஆதென்ஸ் நகர் அயோனியர்களால் கட்டப்பட்டதேயாகும். டோரியர்கள் (Dorians) என்ற பிரிவினைச் சேர்ந்தவர்கள், நல்ல போர் வீரர்கள்; உள்ளத்தைவிட உடலையே அதிகம் பேணி வளர்த்தவர்கள். ஆண்மையை வெளிப்படுத்தும் விளையாட்டுகளிலும் போர்ப் பயிற்சியிலுமே அவர்கள் காலம் முழுதையும் கழித்தவர்கள். ஸ்பார்ட்டா என்பது (Sparta) அவர்களின் தலைநகராகும். ஆதென்ஸுக்குப் போட்டியாக ஸ்பார்ட்டா விளங்கியது. இவ்விரு நகர அரசுகளுக்குள் ஏற்பட்ட பூசலே உள்நாட்டுப் போராக மாறிக் கிரேக்க நாகரிகத்தின் அழிவுக்கே பின்னர் காரணமாயிற்று. இயோலியர்கள் (Aeolians) என்பார் நான்காவது வகுப்பினைச் சேர்ந்தவர்களாவர். இன்னதென்று குறிப்பிட்டுச் சொல்ல இயலாத ஒரு கலப்பு இனத்தினராக அவர்கள் ஆதியில் இருந்தனர். நாளடைவில் அயோனியர் டோரியர் அல்லாத கிரேக்கர் யாவரும் இயோலியர்கள் என்று அழைக்கப்படுவது வழக்கமாயிற்று.

கிரேக்கர்கள் எவ்வினத்தவர், எத்தேயத்தவர் என்பவை எல்லாம் அறுதியிட்டுக் கூறவியலாதவையாயிருப்பினும், அவர்கள் தமக்கே உரித்தான சில தனிப் பண்புகளைக் கொண்டிருந்தனர் என்பதை மட்டும் யாரும் மறுக்க இயலாது. கீழை நாட்டு நாகரிகத்தின் சிறப்பியல்புகளை அவர்கள் அப்படியே உட்கொண்டனர் என்பது உண்மையே. எனினும் அவற்றை எல்லாம் செரிக்கச் செய்து சிறந்ததோர் தனிப் பண்பாக மாற்றிய பெருமை அவர்க்கே உரியதாகும். விடுதலை வேட்கை, எதையும் துருவித் துருவி ஆராயும் இயல்பு, பகுத்தறிவுக்கு ஒவ்வாததை நம்ப மறுத்தல், எதிலும் மிதமாயிருத்தல் ஆகிய பண்புகளே அவர்களது சிறப்புக்கு அடிப்படையா யமைந்தன. மனிதன் "தன்னைத்தான் அறிதல்" (Know thyself) வேண்டும் என்பது அவர்தம் குறிக்கோளாகும். தன்னையும் தன்னுற்றலையும் நன்கு உணர்ந்ததாலேயே அவர்கள் பல்வேறு துறைகளில் (கலைத் துறை யுட்பட) முழுமையான வளர்ச்சியைப் பெற முடிந்தது. படைப்பாற்றலை (Creativity) அவர்கள் எளிதில் அடைந்தனர். சோதனைகளை இடைவிடாது செய்துசெய்து பார்த்த பின்பே அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தனர். முடிவுகு வந்தபின் அதை அவர்கள் உடும்புபோல் பிடித்துக்கொண்டனர். வீரம், காதல், அறிவு மூன்றும் அவர்கள்பால் நன்கு குடிகொண்டிருந்தன. இவ்வளவு நற்பண்புகளிருந்தும் அவர்களிடையே ஒற்றுமை என்பது மருந்துக்குமில்லை. போட்டியும் பொறுமையும்

வன்னெஞ்சமும் வஞ்சகமும் அவர்களை அலைக்கழித்தன. நாணயமும் கொள்கையுறுதியும் கூட அவர்களிடம் சற்றுக் குறைவு என்றே கூறவேண்டும். அதனாற்றான் அறிவுத் துறையில் பெருவெற்றி பெற்ற கிரேக்கர்கள் அரசியல் துறையில் படுதோல்வி கண்டனர். அவர்களது எழுச்சியும் வீழ்ச்சியும் உலகத்தோர்க்கு ஓர் ஒப்பற்ற படிப்பினை என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

2. வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட நாகரிகங்கள்

(1) ஈஜிய நாகரிகம்

மேலை நாட்டு ஐரோப்பிய நாகரிகத்திற்குக் கிரேக்க நாகரிகம் எங்ஙனம் ஓர் அடிப்படையாய் அமைந்துள்ளதோ, அதே போன்று பழம் பெருமை வாய்ந்த கிரேக்க நாகரிகத்திற்கும் அடிப்படையாய் அமைந்துள்ள ஒரு நாகரிகத்தைத் தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் தங்கள் அரிய முயற்சியினால் கண்டு பிடித்துள்ளனர். அதுவே 'ஈஜிய நாகரிகம்' என்று சொல்லப் படுகிறது. ஈஜியத் தீவுகளிலும் சிறப்பாகக் கிரீட் தீவிலும் அது பரவியிருந்த காரணத்தால் அது ஈஜிய நாகரிகம் அல்லது கிரீட்டன் நாகரிகம் என அழைக்கப்படுகிறது. அதற்குச் சற்றே பிந்தியதும் கிரீஸ் நாட்டின் உட்பகுதியில் காணப்பட்டதுமான ஒரு நாகரிகத்தை மைசீனிய நாகரிகம் என்று வரலாற்று ஆசிரியர் கூறுவர். இவ்விரு நாகரிகங்களைப் பற்றிய உண்மைகள் புலப்படுமுன் கிரேக்க வரலாற்றைக் கி. மு. எட்டாவது நூற்றாண்டிலிருந்தே அதாவது நகர அரசுகளின் தோற்றத்திலிருந்தே வரலாற்றாசிரியர் தொடங்குவது வழக்க மாயிருந்தது. ஆனால் இப்பொழுதோவெனின் கி.மு. மூவாயிரம் ஆண்டிலிருந்தே கிரீஸின் வரலாற்றை வரைய முடிகின்றது. அஃது தொல்பொருள் ஆராய்ச்சியின் உதவியினாலேயே யன்றி வேறொன்றினாலன்று. தொல்பொருள் ஆய்வை 'வரலாற்றின் பணிப்பெண்' (Hand maid of history) என்று கூறுவது சாலவும் பொருந்தும்.

கிரீட்டன் நாகரிகச் சின்னங்களைப் பூமியினின்று அகழ்ந்தெடுத்து உலகுக்கு அளித்த பெருமை ஸ்லீமன் (Schlis mann) என்ற ஜெர்மன் அறிஞருக்கே உரியது. அவர் இளைஞராக இருந்த பொழுதே கிரேக்கரால் அழிக்கப்பட்ட 'ட்ராய்' (Troy)

என்னும் நகரத்தின் கதையை அவரது தந்தையின் வாயிலாக நன்கு கேள்வியுற்றிருந்தார். ட்ராய் நகரத்தை எப்படியாவது கண்டுபிடித்து விடவேண்டும் என்றஆர்வம் அவருக்கு இளமைக் காலந்தொட்டே இருந்து வந்தது. எனவே தக்க பொருள் வசதி ஏற்பட்டவுடன் அவர் ஆசியாமைனரை நோக்கிச் சென்று ஹோமர் என்னும் புலவரால் போற்றப்பட்ட ட்ராய் நகரத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் முழுமனத்துடன் ஈடுபட்டார். தன்னுடன் வரமறுத்த தனது ரஷிய மனைவியையும் அவர் கைவிட்டு விட்டுத் தன்னுடன் எப்போதும் இருந்து துணைபுரிய முன்வந்த ஒரு கிரேக்க இளமங்கையை மணந்துகொண்டு அவர் தம் பெரும் பணியைத் தொடங்கினர். 'டார்டன்லஸ்' (Dardenelles—strait) நீரிணைப்பிற்கு அருகிலிருந்த ஹிசார்லிக் (Hissarlic) என்ற மேட்டு நிலத்தைத் தேர்ந்தெடுத்து நூற்றுக்கணக்கான பணியாளர்களை வைத்துக்கொண்டு அவர் புதைபொருள்களைக் கண்டுபிடிக்கும முயற்சியில் இறங்கினர். அவரது முயற்சி வென்றது. ஒரு ட்ராய் நகரத்திற்குப் பதிலாக ஒன்பது நகரங்கள் ஒன்றன்மேல் ஒன்றுகக் கட்டப்பட்டிருப்பதை அவர் கண்டார். அவற்றுள் ஆறுவது, தீக்கிரையாகி அழிந்திருப்பதைக் கண்டார். ஹோமரால் விவரிக்கப்படுகிற ட்ராய் நகரம், அதுவாகத்தான் இருக்கவேண்டும் என்று அவர் ஒரு முடிவுக்கு வந்தார். (1872—74)

1876—ஆம் ஆண்டில் ஸ்லீமன், மைசினி (Mycenae), ட்ரின்ஸ் (Tiryns), ஆர்க்கோமினஸ் (Orchomenes) ஆகிய இடங்களுக்குச் சென்று அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டு அங்கேயும் ஒரு பழம் பெரும் நாகரிகம் ஒரு காலத்தே நிலவியிருக்க வேண்டுமென்பதைக் கண்டறிந்தார். டைட்டன்கள் — (Titans) என்ற பெரிய இராக்கதர்களால் கட்டப்பட்டதெனக்கிரேக்கர்களால்நம்பப் பட்ட மிகப் பெரிய கோட்டைகளையும், அங்கு வாழ்ந்த மக்கள் விட்டுச்சென்ற பல கல்லறைகளையும் அவர் கண்டுபிடித்தார். மைசீனியாவை மையமாகக் கொண்டு விளங்கிய அந் நாகரிகத்திற்கு மைசீனிய நாகரிகம் என்றும் அவர் பெயர் வைத்தார். கிரேக்கப் படையெடுப்பால்தான் அஃது அழிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர் ஒரு முடிவுக்கு வந்தார். 1899-1900-ஆம் ஆண்டுகளில் சர் ஆர்தர் ஈவான்ஸ் (Sir Arthur Evans) என்ற ஆங்கிலேய ஆராய்ச்சியாளரின் அரும்பெரும் முயற்சியால் கிரீட் தீவில் மேலும் பல பழைய வரலாற்றுச் சின்னங்கள் கிடைத்தன. அவைகளினின்றும் கிரீட்டை மையமாகக்கொண்டு ஈஜியத் தீவுகளிலும் சிசிலி (Sicily), சார்டினியா (Sardinia.) ஸ்பெயின் (Spain) ஆகிய பல மத்தியத் தரைக்கடல் பிரதேச நாடு

களிலும் பரவியிருந்ததோர் பழம் பெரும் நாகரிகம், கிரேக்கர் களின் வருகைக்கு முன் இருந்திருக்க வேண்டுமென்பதை அவர் ஊகித்தறிந்து வெளியிட்டார். கிரேக்கக் கதைகளின்படி 'மீனஸ்' (Minos) என்ற மாமன்னர் அத் தீவில் முதன்முதலில் ஆட்சி புரிந்தார் என்று கருதப்பட்டதால் அதனை 'மீனோவன்' நாகரிகம் என்றும் ஒரு சிலர் அழைப்பர். கிரேக்க நாகரிகத்திற்கு முன்னோடியாய் விளங்கிய இக் கிரீட்டன் நாகரிகத்தின் ஒரு கிளையென்றே மைசீனிய நாகரிகத்தைக் கருதலாம்.

ஈஜிய நாகரிகத்தின் சிறப்பியல்புகள்

கிரீட் தீவில் இருபெரும் புதைநகரங்கள் தோண்டி எடுக்கப் பட்டுள்ளன. நாஸஸ் (Knossus), ஃபீஸ்டஸ் (Phaestus) ஆகிய இவ்விரு நகரங்களில் கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப் பட்டதாகக் கருதப்படும் பெரிய அரண்மனைகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அவைகளைக் காணும்போது நாஸஸைத் தலைநகர மாகக்கொண்ட பேரரசு ஒன்று அங்கு நிலவியிருந்திருக்கவேண்டு மென்று ஈவான்ஸ் என்னும் அறிஞர் கருதினர். அவ் வரண் மனையின் சுவர்களில் கண்கவர் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. காளைச் சண்டை ஒன்றை மக்கள் கண்டு களிப்பதைப் போல் ஓர் ஓவியம் வரையப்பட்டுள்ளது. பொருள்களைச் சேகரித்து வைப்பதற்கான பெரும் பெரும் கிடங்குகள் ஆங்காங்கே காணப் படுகின்றன. அரண்மனை நடுவில் அத்தாணி மண்டபம் ஒன்று அழகுற அமைந்துள்ளது. அதன் நடுவில் கல்லாலான அரியணை ஒன்றும் அதற்கு இருமருங்கிலும் அமைச்சர்கள் அமர்ந்து அறிவுரை கூறுவதற்கான கல்லாலாய இருக்கைகளும் காணப்படுகின்றன. ஏறக்குறைய நானூறு பேர்கள் ஒரே சமயத்தில் அமர்ந்து நாடகத்தைக் கண்டு களிப்பதற்கேற்ற ஓர் நாடக அரங்கமும் அவ் வரண்மனையின்கண் அமைந்துள்ளது. நாடகங்களும், நடனங்களும், மற்போர்களும், குத்துச் சண்டை களும் அவ்வரங்கில் நடைபெற்றிருக்கக் கூடும். தந்தத்தாலான சொக்கட்டான் பலகை ஒன்றும் அங்குக் கிடைத்துள்ளது. ஓய்வு நேரங்களில் அரண்மனை வாசிகள் சொக்கட்டான் ஆடி மகிழ்ந் திருந்தனர் போலும்! சிந்து சமவெளியில் அகழ்ந்தெடுக்கப் பட்ட நகரங்களில் காண்பது போன்றே இங்கேயும் ஆங்காங்கே குளியலறைகளும், பெரும் பெரும் கழிவு நீர்க் குழாய்களும், நகரம் துப்புரவாய் இருப்பதற்கான சாதனங்களும் காணப்படு கின்றன. எனவே கிரீட் மக்கள் சுகாதார உணர்ச்சி மிக்கவர் களாகவும், துப்புரவு நிறைந்த நகர வாழ்க்கையை மேற் கொண்டவர்களாகவும் வாழ்ந்தனர் என்பது நன்கு தெரிகிறது.

சமுதாய வாழ்க்கை

மக்கள் இங்ஙனம் வாழ்ந்த நகரங்கள் நன்கு திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்தன. கட்டிடங்கள் யாவும் சுட்ட செங்கற்களால் நன்கு கட்டப்பட்டிருந்தன. சில கட்டிடங்களில் நான்கு அல்லது ஐந்து மாடிகள் கூட அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு வீட்டிற்கும் இரண்டு கதவுகளும், பல சாளரங்களும் தாழ்வாரங்களும், நிலாமுற்றங்களும் அமைக்கப்பட்டிருந்தன. தற்காலத்தே எகிப்தில் காணப்படும் வீடுகள்போன்றே அவைகள் அமைந்திருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் வெந்நீரிலும், தண்ணீரிலும் குளிப்பதற்கான வசதி பொருந்திய குளியலறைகள் காணப்பட்டன. சாக்கடை வசதிகளும் சுகாதார முறையில் அமைக்கப்பட்டிருந்தன. ஒருபெரிய வீட்டில் தச்சர்கள் பயன்படுத்தக் கூடிய ரம்பம், உளி, ஆணிகள் போன்ற பல்வேறு பொருள்களும் காணக் கிடைத்துள்ளன.

இந் நகரங்களில் வாழ்ந்த மக்கள் எந்த இனத்தவர் என்பது சரிவரத் தெரியவில்லை. அவர்கள் காகேசியன் வகுப்பினராய் இருக்கக்கூடுமென ஹால் (Hall) போன்ற ஆசிரியர்கள் கருதுகின்றனர். அவர்கள் உடை பெரும்பாலும் எகிப்தியர் உடையை ஒத்திருந்தது. ஆண்கள் ஆடையில் ஒரு கச்சையைக் கட்டியிருந்தனர். ஆனால் உடம்பின் மேற்பகுதியில் ஆடையொன்றும் அணியாமலேயே அவர்கள் உலாவினர். அரண்மனை ஓவியங்களிலிருந்து பெண்களின் உடையைப்பற்றி ஒருவாறு அறிகிறோம். ஏறக்குறைய 19-ஆம் நூற்றாண்டுப் பெண்களைப் போன்றே, மகளிர் உடையணிந்திருந்ததாகத் தெரிகிறது. தரையைத் தொடுகின்ற அளவிற்கு நீண்ட பாவாடைகளையும் இறுக்கமான இடைக் கச்சைகளையும் தோள்பட்டைகளுக்கருகில் புறத்தே பெரிதும் உப்பலாய்க் காணப்பட்ட சட்டைகளையும் அவர்கள் அணிந்திருந்தனர். அழகிய பல ஆபரணங்களை மகளிர் அணிந்திருந்தனர். பலவகையான தலை அலங்காரமும் அவர்களுக்குத் தெரியாததொன்றன்று. ஓய்வு நேரங்களில் ஆடவரும் மகளிரும் நாடகங்களையும் கேளிக்கைகளையும் கண்டு களித்தனர். நாடக அரங்குகள் நாற்சதுரமாக அமைந்திருந்தன. சில சமயங்களில் அவர்கள் காளைச் சண்டைகளையும் பார்த்து மகிழ்ந்தனர். ஒரு காளையின் கொம்புகளுக்கிடையில் மங்கை ஒருத்தி சிக்கித் தவிப்பதைப் போன்ற ஓர் ஓவியத்தினின்றும் மகளிரும் இத்தகைய கேளிக்கைகளில் கலந்துகொண்டனர் என்பது தெரிய வருகிறது. சொக்கட்டான் போன்ற ஒருவகை விளையாட்டிலும் அவர்கள் பொழுதுபோக்கினர் என்பதை அங்கு அகப்படும் எண்ணற்ற தந்தங்களாலான சொக்கட்டான் காய்களினின்றும் அறியலாம்.

சமய வாழ்க்கை

கிரீட் மக்கள் இறைவனை வழிபடுவதற்காகத் தனிப்பட்ட கோவில்களைக் கட்டிக் கொள்ளவில்லை. ஒவ்வொரு வீட்டிலும் இறைவழிபாட்டிற்கென ஓரிடம் ஒதுக்கப் பட்டிருந்தது. அங்கே அவர்கள் ரீயா (Rhea) என்னும் பெண்தெய்வத்தை வைத்து வணங்கினர். இந்தத் தெய்வத்தைச் சுற்றிலும் சிங்கங்களும் புருக்களும் இருப்பதுபோல் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. பெண்தெய்வமே உயர்ந்த தெய்வமெனக் கருதப்பட்டதாகத் தெரிய வருகிறது. ஏனெனில் ஆண்தெய்வம் தனியாக வணங்கப்படவில்லை. அஃது பெண்தெய்வத்துள் அடங்கி இருப்பதொன்றுகவே கருதப்பட்டது. இவ்விரு தெய்வங்களும் சேர்ந்து லாப்ரிஸ் (Labrys) என்ற இரட்டைக் கோடரியில் வசிப்பதாகவே நம்பப்பட்டது. இந்தக் கோடரிச் சின்னங்கள் நாஸஸ் அரண்மனைச் சுவர்களில் ஏராளமாகக் காணப்படு கின்றன. பொதுக் கோயில்கள் கட்டப்படாததிலிருந்து கிரீட் மக்கள் சமயத்திற்கும் மத குருமார்களுக்கும் கட்டுப்படாத உலகியல் வாழ்க்கையையே மேற்கொண்டு வந்தனர் என்பது தெரிகிறது.

பொருளாதார வாழ்க்கை

கிழக்குக் கிரீட்டில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பல்வேறு புதை நகரங்களில் இருந்து கிரீட் மக்கள் சீரும் சிறப்புமிக்க பொருளா தார வாழ்க்கையில் திளைத்திருந்தனர் என்பது நன்கு தெரிய வருகின்றது. வேளாண்மை, தொழில், வாணிகம் ஆகிய ஒவவொரு துறையிலும் அவர்கள் பெரிதும் சிறப்புற்று இருந்த னர். ஒலிவ எண்ணெய், திராட்சை ரசம் (Wine) ஆகியவை களை அவர்கள் பெருமளவிற்கு உற்பத்தி செய்து வெளிநாடு களுக்கும் ஏற்றுமதி செய்தனர். அவரது கலங்கள் மத்தியத் தரைக்கடல் முழுவதிலும் சென்று வாணிகம் செய்தன. கைவண்ணமிக்க மட்பாண்டங்களைச் செய்வதில் அவர்கள் வல்லுநர்களாகத் திகழ்ந்தனர். பற்பல உருவங்களில் செய்யப் பட்ட மட்பாண்டங்கள், மத்தியத்தரைக்கடல் நாடுகளில் போற்றப் பட்டு வாங்கப்பட்டன. உலோகப் பொருள்கள் செய்வதிலும் அவர்கள் வல்லுநர்களாகத் திகழ்ந்தனர். சைப்ரஸ் தீவினின் றும் செம்பையும், ஐரோப்பாவிலிருந்து தகரத்தையும் வாங்கிவந்து கலந்து அவற்றை வெண்கலமாக்கி அதைக் கொண்டு அழகிய வாளாயுதங்களையும், பிச்சுவாக்களையும், ஆபரணங்களையும் அவர்கள் செய்தனர். வெள்ளியாலும் வெண்கலத்தாலும் செய்யப்பட்ட பல பொருள்களை அவர்கள் வெளிநாடுகளுக்கு

ஏற்றுமதி செய்தனர்; நாணயங்களைச் செய்வதற்கும் அவர்கள் அவற்றைப் பயன்படுத்தினர். ஒலிவ எண்ணெயை வடிப்பதற்கான மட்பாண்டங்களும் நாஸஸ் அரண்மனையில காணப்படுவதால் எண்ணெய் ஏற்றுமதியில் அரசரும் ஈடுபட்டிருந்தனர் என்பது நன்கு தெரிகின்றது. சமையலுக்கும் விளக்கு எரிப்பதற்கும் அவ்வெண்ணெய் பெரிதும் பயன்பட்டது. சிசிலி, இதாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் கிடைத்துள்ள சின்னங்களிலிருந்து கிரீட் தீவினர் தங்களுடைய செய்பொருள்களை அங்கெல்லாம் அனுப்பி வாணிகம் புரிந்தனர் என்பதை அறியலாம். பல்வேறு வண்ணங்களையும் அவர்கள் உற்பத்தி செய்தனர். சிற்பிகளின் கூடம் ஒன்றும் நாசஸ் நகரில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஒரே மாதிரியான எடைக் கற்களையும் அளவைகளையும் கிரீட் மக்கள் பயன்படுத்தினர். பாபிலோனியர்களின் எடைகளையும், அளவைகளையும் அவைகள் ஒத்திருந்தன. பொன், வெள்ளி இவைகளாலான உலோகக் கட்டிகளை அவர்கள் வாணிகத்தில் பயன்படுத்தியதாகத் தெரிகிறது.

அரசியல் வாழ்க்கை

நாஸஸ் நகரத்தில் காணப்படும் அரண்மனையின் பரப்பைக் காணுமிடத்து அஃது ஒரு மன்னனது உறைவிடமாக மட்டுமன்றி அரசாங்கத்தை நடத்திவந்த பல செயலகங்கள் அடங்கியதோர் கூடமாகவும் விளங்கி இருக்கவேண்டுமென்பது தெரிய வருகிறது. கிரீட்டை ஆண்ட மன்னன் ஒரு கடலரசுக்குத் தலைவனாக இருந்திருத்தல் வேண்டும். நாட்டின் நிர்வாகம் மிக விழிப்புடனும் கட்டுப்பாட்டுடனும் நடைபெற்று வந்தது என்பதை அங்கு அகப்பட்டுள்ள பொருளாதாரக் குறிப்பேடுகளிலிருந்து நன்கு அறியலாம். பொதுமக்கள் செலுத்திய வரிகள் பெரும்பாலும் பண்டங்களாகவே இருந்தன. அவற்றைச் சேமித்து வைக்கத் தனிப்பட்ட அறைகள் அரண்மனையில் காணப்பட்டன. அரண்மனைக்குள்ளேயே பல தொழிலகங்கள் அமைந்து இருந்தன. மன்னனுக்கும் பிரபுக்களுக்கும் வேண்டிய ஆடம்பரப் பொருள்கள் அங்கேயே உற்பத்தி செய்யப்பட்டன. அரசன் தன் அமைச்சர்களுடன் பெரிய மண்டபமொன்றில் அமர்ந்து அரசாங்க வேலைகளைக் கவனித்து வந்ததாகத் தெரிகிறது. அவர்களது இருக்கைகள் எல்லாம் கல்லிலேயே செய்யப்பட்டன என்பதை நாம் முன்னரே கண்டோம். இங்ஙனம் மதில்களால் சூழப்பட்ட அரண்மனையில் வாழ்ந்து அரசோச்சி வந்த மன்னன், பிற நாடுகளோடு போர் புரிந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் போர் சம்பந்தப்பட்ட ஓவியங்கள் எதுவும் அரண்மனையில் காணப்படவில்லை. தமது நாட்டின்

சுதந்திரத்தைக் காப்பாற்ற மன்னர்கள் ஒரு பெருங் கப்பற் படையை வைத்திருந்தனர் என்று நம்பப்படுகிறது. நாஸஸ் நகரில் வாழ்ந்த மன்னர்கள் பிற நாடுகளோடு போர் புரிந்ததற்கான சான்றுகள் இல்லையெனினும், அவர்கள் மீஸ்டஸ் நகரத்தையும் பிற அண்டை நாடுகளையும் வென்று அடக்கித் தங்கள் ஆளுகையின் கீழ்க் கொண்டுவந்து பெரும் கடல் வல்லரசை நிறுவியதாக வரலாறு கூறுகிறது. தலஸோக்ரஸி (Thalassocracy) என்றழைக்கப்பட்ட அவ் வல்லரசு பல நூற்றாண்டுகள் நிலைத்துச் செழித்திருந்ததாகவும் தெரிகிறது. அவர்கள் தங்கள் வல்லரசின் தலைநகரைக் காக்கப் பெரும் சுற்றரண்களை எழுப்பாததற்குக் காரணம் அவர்கள் நாட்டின் பாதுகாப்பைத் தங்கள் கடற்படையிடம் ஒப்படைத்திருந்ததேயாகும். அக் கப்பற்படை தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட பணியைச் செவ்வனே செய்ததாகச் சான்றுகள் பகர்கின்றன.

கலை வாழ்க்கை

கிரீட் மக்கள் நன்கு எழுதவும் படிக்கவும் கற்றிருந்தனர். அவர்களது எழுத்துகளடங்கிய தந்தத்தாலாகிய முத்திரைகள் பல ஈஜியத் தீவுகளில் கிடைத்துள்ளன. முதலில் அவர்கள் ஓவிய எழுத்தைப் பயன்படுத்தினர். ஒவ்வொரு ஓவியமும் ஒரு பொருளைக் குறித்தது. கி. மு. இரண்டாயிரமாண்டிலேயே அவர்கள் இவ்வித ஓவிய எழுத்துகளைப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. கி.மு. 1600-ஆம் ஆண்டளவில் அவர்கள் கோடுகளாலாய எழுத்துகளைப் பயன்படுத்தினர். சொற்களும், சொற் பகுதிகளும் இக் கோடுகளால் குறிக்கப்பட்டன. இந்த எழுத்துகளை இன்னும் எந்த அறிஞரும் படித்துப் பொருள் சொல்ல முடியவில்லை. கிரீட் மக்களின் மொழி அழிந்துவிட்டது. கிரேக்க மொழி அவர்களது மொழியை வென்று ஆட்கொண்டது. அவர்கள் பயன்படுத்திய எண்ணிக்கை முறை தசாம்ச முறை என்று ஒருவாறு நமக்குப் புரிகிறது. ஏனைய கலைகளில் கிரீட் மக்கள் பெரிதும் முன்னேறி இருந்தனர். பல்வேறு நிறங்களைக் கலந்து புதிய வண்ணக் கலவைகளை உண்டாக்குவதில் அவர்கள் வல்லுநர்களாய்த் திகழ்ந்தனர். அவ் வண்ணங்களைக் கொண்டு கண்கவர் சுவரோவியங்களை அவர்கள் வரைந்து வைத்துள்ளனர். விருந்துகள், சமய ஊர்வலங்கள், விளையாட்டுப் போட்டிகள், மிருகங்கள், மீன்கள், அழகிய பூக்கள் இவைகளையே ஓவியர்கள் திறம்படத் தீட்டியுள்ளனர். மட்பாண்டங்களில் பல்வேறு உருவங்கள் வரையப்பட்டுள்ளன. அவைகளில் ஒரு தனித்தன்மையையும், கலையுணர்ச்சியையும். உள்ளதை உள்ள

படியே படம் பிடித்துக் காட்டும் திறமையையும் நாம் நன்கு காணலாம். ஓவியத்தோடு சிற்பக்கலைகளிலும் அவர்கள் திறமை மிக்கவர்களாகத் திகழ்ந்தனர். உலோகத்தாலான தட்டுகள், அழகிய பூக்கோப்பைகள், வாள்கள் முதலியன அவர்களுடைய கலைநுட்பத்திற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாய்க் காணப்படுகின்றன. எகிப்தியர்களைப் போலப் பெரும் பெரும் கோயில்களைக் கட்டவில்லையாயினும் அவர்களது பிரம்மாண்டமான கோட்டைச் சுவர்களும் அரண்மனைகளும் அவர்களது கட்டிடக் கலைச் சிறப்பிற்குத் தக்கதோர் சான்று பகர்கின்றன. கிரீட்டில் இருந்த நாஸஸ் அரண்மனையில் சிக்கலான பல சுரங்கப்பாதைகள் அமைந்திருந்தன. அவற்றுள் புகுந்தவர் வெளியே வர இயலாது என்று கிரேக்கர்கள் நம்பினர் அவற்றை லாபிரிந்த் (Labyrinth) எனக் கிரேக்கர்கள் கூறுவர். இந்தச் சுரங்கத்தில் பாதி மாடாகவும் பாதி மனிதனுகவும் இருந்த மினோட்டார் (Minotaur) என்ற இராக்கதன் இருந்ததாகவும், கிரேக்க யுவர்களையும், யுவதிகளையும் கிரீட் மன்னனை மினுஸ் (Minos) என்பான் கிரேக்கர்களிடம் இருந்து திறையாகப் பெற்று அந்த இராக்கதனுக்கு உணவாகப் படைத்து வந்ததாகவும், இறுதியில் தீஸியஸ், (Thesaus) என்ற கிரேக்க மன்னன், கிரீட் மன்னன் மகளான அரியாதினி (Ariadne) என்பாளின் துணை கொண்டு அந்த இராக்கதனைக் கொன்று வீழ்த்தியதாகவும் கிரேக்க இலக்கியங்கள் கூறுகின்றன. இதிலிருந்து மினுஸ் மன்னனின் அரண்மனைச் சிறப்பு மட்டுமன்றிக் கிரேக்கர் மீது அவன் செலுத்திவந்த ஆதிக்கமும் நன்கு புலனுகிறது. கிரேக்க இளைஞர்களையும், இளமங்கையர்களையும் அம் மன்னன் திருட்டுத்தனமாகத் தனது நாட்டிற்குக் கடத்திச் சென்றிருக்க வேண்டுமென்றும், இதைக் கண்டு பொருத கிரேக்க மக்கள் இறுதியில் ட்ராய், நாஸஸ் போன்ற நகரங்களைத் தாக்கி ஈஜிய நாகரிகத்தை அழித்திருக்கக் கூடுமென்றும் ஒருவாறு யூகிக்கலாம்.

ஈஜிய நாகரிகம் ஒருவகையில் ஏனைய பண்டைய நாகரிகங்களுக்குக் கடன் பட்டுள்ளதெனக் கருதலாம். அவர்கள் பயன்படுத்திய எடைகளும் அளவைகளும் பாபிலோனியரிடமிருந்து கற்றுக்கொண்டவையாகும். அவர்களது ஓவிய எழுத்து முறை எகிப்தியர்களிடமிருந்தே வந்திருக்க வேண்டும். அவர்கள் வீடுகள் பெரும்பாலும் எகிப்திய வீடுகளைப் போன்றே அமைந்து இருந்தன. உருவச் சிலைகள் கூட எகிப்தியச் சிலைகளைப் போலவே காணப்படுகின்றன. நாஸஸ் அரண்மனையில் காணப்படும் ஓவியங்கள் பல எகிப்திய இயற்கைக் காட்சிகளைச் சித்தரிப்பன போல் அமைந்துள்ளன. கிரீட் உண்மையில் ஆப்ரிக்காவிற்கும்

ஐரோப்பாவிற்கும் ஒரு பாலமென அமைந்திருந்தது. எகிப்திய நாகரிகம் கிரீட்தீவின் மூலமாகத்தான் கிரேக்கர்களுக்கு எட்டியது. கிரேக்கர்கள் மூலமாக ஐரோப்பியர்கள் அந்த நாகரிகத்தின் சிறப்பியல்புகளைப் பெற்றனர். இங்ஙனம் ஒரு நாகரிகம் இன்னொரு நாகரிகத்தோடு பண்டைய காலத்திலிருந்தே பெரிதும் பின்னிப் பிணைந்து கிடப்பதை நாம் காணுகின்றோம்.

ஈஜிய நாகரிகத்தின் வீழ்ச்சி

பல்லாற்றானும் பெருமையுடன் விளங்கிய ஈஜிய நாகரிகமானது கி. மு. 1400-ஆம் ஆண்டளவில் அழிந்தொழிந்து போயிற்று. கிரேக்கர்களின் படையெடுப்பே அவ்வழிவிற்குக் காரணமாக இருந்திருக்க வேண்டுமெனப் பொதுவாக நம்பப் படுகிறது. படையெடுப்பாளர்கள், நாஸஸ் நகரத்து அரண்மனையையும் வேறுபல நகரங்களையும் இடித்துத் தரைமட்டமாக்கி விட்டனர். இங்ஙனம் ஈஜிய மக்களை வென்ற கிரேக்கர்கள் நாள் செல்லச் செல்ல அவர்களது நாகரிகத்தையும் உட்கொண்டு புதியதோர் கலப்பு நாகரிகத்தையும் படைத்தனர். அதுவே பண்டைய கிரேக்க நாகரிகம் எனப்படுவதாகும்.

(2) மைசீனிய நாகரிகம்

ஈஜிய நாகரிகம் மறைந்த ஒரு சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர் கிரீஸ் நாட்டின் தென் பகுதியில் தோன்றிய பழம் பெரும் நாகரிகம் மைசீனிய நாகரிகம் என அழைக்கப்படுகிறது. ஆர்காஸ் (Argos) என்னும் நகரத்திற்குக் கிழக்கே சற்றுத் தொலைவில் அமைந்துள்ள ட்ரின்ஸ் (Tiryns), மைசினி (mycenae) ஆகிய இரு பெரும் புதைநகரங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருள்களைக் கொண்டே இந் நாகரிகத்தின் பெருமையை நாம் ஊகித்தறிய முடிகிறது. இங்கு நிலவிய நாகரிகம் வெண்கலக் கால நாகரிகம் (Bronze Age) என அழைக்கப்படுகிறது. செம்பாலும் வெண்கலத்தாலும் செய்யப்பட்ட பொருள்கள் ஏராளமாக இங்குக் கிடைப்பதே இதற்குக் காரணம் ஆகும். இந் நாகரிகக் காலத்தை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். கி. மு. 1600 முதல் 1400 வரை கிரீட் தீவில் இருந்து கிரீஸில் பரவியிருந்த நாகரிகம் முதற் பகுதியையும், கி. மு. 1400 முதல் 1200 வரை அங்கு நிலவிய நாகரிகம் இரண்டாம் பகுதியையும் சார்ந்தனவாகும். மைசினி நகரம் முதலாம் காலப் பகுதியிலும், ட்ரின்ஸ் நகரம் இரண்டாவது காலப்பகுதியிலும் கட்டப்பட்டனவாகத் தெரிகின்றன. கி. மு. 1210 - ஆம் ஆண்டளவில் அக்கீயர்களுடைய படையெடுப்பால் மைசீனிய நாகரிகம் குன்றத் தலைப்பட்டது. கி. மு. 1100-இல் டோரியர்கள் படையெடுப்பால் அந் நாகரிகம் அழிந்தது.

ட்ரின்ஸ் நகரத்தில் காணப்படும் அழிபாடுகள், திண்மை செறிந்த மதிற்சுவர் ஒன்று அதைச் சுற்றிலும் அமைந்திருந்தது என்பதைக் காட்டுகின்றன. அம் மதிற்சுவர் ஒன்றன்மேல் ஒன்ருய் அடுக்கப்பட்ட பிரம்மாண்டமான கற்களால் திறன்படக் கட்டப்பட்டுள்ளது. அக் கற்களில் பெரும்பாலானவை 2 மீட்டர் நீளமும் 1 மீட்டர் அகலமும் உயரமும் உடையவை. இரண்டு கோவேரிக் கழுதைகளால்கூட அசைக்க இயலாத அப் பெரும் பாறைகளை எங்ஙனம் அக்கால மக்கள் ஒன்றன் மீது ஒன்ருக அடுக்கிவைத்தனர் என்பது பெரிதும் வியப்பிற்குரியதொன் ருகவே இருக்கின்றது. சைக்ளோப்புகள் (cyclopes) என்ற ஒற்றைக்கண் இராக்கதர்கள் ஸிகியாவிலிருந்து (cycia) வந்து இச் சுவர்களை எழுப்பினர் எனக் கிரேக்கர்கள் கூறுவர். அங்ஙனம் அமைந்த மதிற்சுவர்களுக்குள் கற்றூண்கள் நிறைந்த அத்தாணி மண்டபம் ஒன்றும், அதைச் சுற்றிலும் ஏராளமான சிறு சிறு அறைகளும் அமைக்கப்பட்டுள்ளன. அத்தாணி மண்டபம் மட்டும் 120 சதுர மீட்டர் பரப்பளவுடையது. அதன் தளத்தின் மீது வண்ணங் கலந்த ஒருவகைச் சிமின்ட்டு பூசப்பட்டுள்ளது. அம் மண்டபத்திற்கு அருகே அரண்மனை வாசிகளின் குளிர் காயும் அடுப்பங்கரை (heanth) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கிரீட் தீவில் காணப்படும் அரண்மனைகளுக்கும், இங்கே காணப்படும் அரண்மனைகளுக்கும் ஒரு முக்கிய வேறுபாடு என்னவெனின் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியே அறைகள் அமைக்கப்பட்டிருப்பதேயாகும். அரசனுக்கும் அரசிக்கும் கூடத் தனித்தனி அறைகளே கட்டப்பட்டுள்ளன. ஒன்றிலிருந்து மற்றென்றிற்குப் போவதற்கு வழி எதுவும் வைக்கப்படவில்லை. மலைக்கோட்டைக்குக் கீழே செங்கற்களால் கட்டப்பெற்ற வீடு களும் பாலங்களும் காணப்படுகின்றன. வீடுகளில் ஏராளமான உடைந்த மட்பாண்டங்கள் அகப்பட்டுள்ளன.

ட்ரின்ஸ் நகருக்கு வடக்கே பதினைந்து கிலோமீட்டர் தொலை வில் மைசீனியநகரம் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந் நகரிலும் மலைமீது கட்டப்பெற்ற திண்மையான மதிற்சுவர் ஒன்று காணப் படுகிறது. அதற்கு அருகே பாழ்பட்ட ஒரு பெருநகரமும் பல சிறு கிராமங்களும் காணப்படுகின்றன. தங்கம் இங்குத் தண்ணீர் போல் ஏராளமாகக் கிடைத்ததாய்த் தெரிகிறது. கல்லறை களிலுள்ள சவங்களின் முகங்களை மூடுவதற்கும் பொன்னாலான முகமூடி ஒன்றை இவர்கள் பயன்படுத்தினர் என்ருல் அவ் விலையுயர்ந்த உலோகம் இங்கே எவ்வளவு மலிவாகக் கிடைத் திருக்கக்கூடுமென்பது சொல்லாமலே விளங்கும். மைசீனிய

மதிற்சுவரிலும், சாதாரண மனிதர்களால் தூக்க இயலாத பெரும் பாறைகள் காணப்பெறுகின்றன. அச் சுவரின் ஒரு மூலையில் புகழ்பெற்ற சிம்மவாசல் (Liongate) அமைந்துள்ளது. வாசற்படி உத்தரத்துக்கு மேல் முக்கோண வடிவில் அமைந்துள்ள ஒரு கற்சட்டத்தின் ஓரங்களில் இரண்டு சிம்மங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. மலையின்மீது அமைந்துள்ள நகரில், ட்ரின்ஸ் நகரில் காணப்படுவது போலவே வரவேற்பறைகள், குளியலறைகள், கிடங்குகள், வழிபாட்டறை, அரியணையறை முதலியன தனித்தனியே காணப்படுகின்றன. சிம்மவாயிலுக்கு அருகில் கல்லறையொன்றை ஸ்லீமன் கண்டுபிடித்தார். வட்டமாய் அமைந்த அக்கல்லறையுள் பத்தொன்பது நபர்களின் எலும்புக் கூடுகளை அவர் கண்டார். அவ்வெலும்புக் கூடுகளின் கழுத்தின் மீதும் உடம்பின் மீதும் ஏராளமான தங்க நகைகள் காணப்பட்டன. தங்க மயமான மைசீனிய நகரம் எனக் கவிஞர் ஹோமர் கூறியிருப்பது முற்றிலும் உண்மையென்பதை ஸ்லீமன் நேரிலேயே கண்டறிந்தார். அக் கல்லறையுள் வண்ணம் பூசப்பட்ட மட்பாண்டங்கள், வெண்கலப் பாத்திரங்கள், வெள்ளி ஆயுதங்கள், விலையுயர்ந்த கற்களாலாய மாலைகள், தந்தத்தாலாய கருவிகள், சொக்கட்டான் பலகைகள், வாள்கள், பிச்சுவாக்கள், முத்திரைகள், பற்பல விதமான ஆபரணங்கள், விலையுயர்ந்த உடைகள் முதலியனவும் கண்டெடுக்கப்பட்டன.

மலைக்கோட்டைக்கு நேர் எதிரில் ஸ்லீமன் மேலும் ஒன்பது கல்லறைகளைக் கண்டுபிடித்தார். அவை யாவும் ஒரு மலைச்சரிவில் ஒன்றன்மீதொன்றுகச் செங்குத்தாகக் குடையப் பெற்ற உருளை வடிவமான கல்லறைகளாகும் (Shaft graves) இக் கல்லறைக்கு உள்ளே புகின் உச்சியில் ஒரு பெரிய குவிமாடம் (Dome) இருப்பதை ஒவ்வொருவரும் காணலாம். ஒவ்வொருமாடமும் 15 மீட்டர் உயரமும் அதேயளவு அகலமும் உடையது கல்லறையின் சுவர்கள் நன்கு செதுக்கப்பட்ட கற்களால்அமைக்கப்பட்டுள்ளன. சுவர்களின் மீது வெண்கலத்தட்டுகள் அழகுற வேயப்பட்டுள்ளன. இக் கல்லறையை அட்ரியஸ் (Atreus) என்பாருடைய நிதியறை என்றும், அகமெம் னன் (Agamem non) என்ற கிரேக்க மன்னருடைய கல்லறை என்றும் தவருக ஸ்லீமன் கருதினர். இக் கல்லறைகளைத் தேன்கூட்டுக் கல்லறைகளெனவும் (beehive tombs) ஒருசிலர் அழைப்பர். ஏனெனில் அவைகள் அமைப்பில் தேன்கூட்டை ஒத்துள்ளன. இக் கல்லறைகளுள் புதைக்கப் பெற்றிருந்த விலையுயர்ந்த பொருள்களை எல்லாம் கள்ளர்கள் கவர்ந்து சென்றுவிட்டனர். எனவே அகழ்வாராய்ச்சியாளர்கள் காலி அறைகளையே இங்குக் காண முடிந்தது. உருளை

வடிவமான கல்லறைகள் கி.மு. 1500-ஆம் ஆண்டளவிலும் தேன்கூடு வடிவமான கல்லறைகள் கி. மு. 1450-ஆம் ஆண்டள விலும் கட்டப்பட்டிருக்க வேண்டுமெனத் தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

ட்ரின்ஸ், மைசீனி ஆகிய நகரங்களில் கண்டு பிடிக்கப்பட் டுள்ள அரண்மனைகள் பெரும்பாலும் ஈஜிய நாகரிகக் காலத்து அரண்மனைகளைப் போலவே அமைந்துள்ளன. பெண்களுக் கென்று தனி மாடங்கள் அமைக்கப்பட்டிருப்பதொன்றே இங்குக் காணப்படும் புதுமையாகும். கிரீட் தீவில் கண்டெடுக்கப்பட் டுள்ள மட்பாண்டங்கள் இங்கேயும் காணப்படுகின்றன. கிரீட் நாகரிகத்தின் கலைப்பண்பு இங்குள்ள கல்லறைகளில் காணப் படுகின்றன. மைசீனி நகரில் காணப்படும் சிம்மச் சிலைகளில் மெசபடோமியா நாகரிகத்தின் மணம் கமழ்வதைக் காண்கிறோம். இங்ஙனம் தன்னினும் முற்பட்ட நாகரிகங்களின் தொடர்பு களினாலேயே மைசீனிய நாகரிகம் தனது உச்ச நிலையை எய்தியிருக்கக் கூடுமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

அரசியல் வாழ்க்கை

அகழ்வாராய்ச்சியில் கிடைத்துள்ள பொருள்களைக் கொண்டு மைசீனிய நாகரிகத்தில் திளைத்தோர் எத்தகைய அரசியல் அமைப்பைக் கொண்டிருந்தனர் என்பதை ஒருவாறு ஊகித்தறிய லாம். ட்ரின்ஸ், மைசீனி போன்ற நகர்களில் காணப்படும் பெரும் மதிற்சுவர்களைக் காணும்போது, அங்கு வலிமை பெற்ற அரசர்கள் தங்கி அரசோச்சி வந்திருக்க வேண்டுமென்பது நன்கு புலனாகிறது. அவ்வரசர்கள் பெருஞ் செல்வர்களாயிருந்திருக்க வேண்டுமென்பது, அன்னாரது கல்லறைகளில் கண்டெடுக்கப் பட்ட தங்கம் போன்ற விலையுயர்ந்த பொருள்களினின்றும் நன்கு அறியக் கிடக்கின்றது. அரசனுக்கு உதவியாகப் பல பிரபுக்கள் இருந்தனர். அவர்களும் தமக்கெனத் தனியே கல்லறைகள் பலவற்றைக் கட்டிக்கொண்டனர். இரு குதிரைகள் பூட்டப் பட்ட இரதங்களில் அவர்கள் சவாரி செய்தனர். அரசனும் அரசியும் அவ்வப்போது பிரபுக்களுக்கும், இனைய பெருமக்க ளுக்கும் விருந்துகள் அளித்து மகிழ்ந்தனர். அத்தகைய விருந்து களின் போது உணவுப்பண்டங்களோடு செவிக்கின்பம் பயக்கக் கூடிய இன்னிசையும் வழங்கப்பட்டது.

இத்தகைய கோளுட்சிக்கு உட்பட்டிருந்த நாடுகள் அளவில் மிகச் சிறியனவாகவே இருந்ததாகத் தெரிகிறது. மலைமீது கட்டப்பட்ட ஓர் அரண், அதைச்சுற்றிலும் ஒருநகர், அதையொட்டி

மலையடிவாரத்திலே இன்னொரு நகர், அதைச் சுற்றியும் ஒரு சில கிராமங்கள் ஆகியஇவைகளே அக்கால அரசு ஒன்றுள் உட்பட்ட இடங்களாகும். இவைகளைப் பாதுகாக்கப் படையேந்திய போர் வீரர்கள் கோட்டைக்குள் எப்போதும் தயாராக வைக்கப்பட்டிருந்தனர்.

மைசீனி நகர் ஓவியங்களிலும் சிற்பங்களிலும் இராணுவம் பற்றிய பல்வேறு காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. கல்லறை ஒன்றில் கண்டெடுக்கப்பட்ட வெள்ளிப் பாத்திரத்தின் உடைந்த பகுதியில் செதுக்கப்பட்டுள்ள ஒரு சிற்பத்தில் போர்க்களம் ஒன்று விரிவாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. மலைக்கருகிலுள்ள கோட்டைச் சுவரைப் பலர் முற்றுகையிடுகின்றனர். வீரர்கள் பலர் உற்சாகத்துடன் அதில் கலந்துகொண்டு வில்லும் வாளும் ஏந்திப் போராடுகின்றனர். கோட்டைக் கொத்தளங்களில் காணப்படும் சாளரங்கள் மூலம் அக் காட்சியைக் காணும் இளமங்கையர்கள் தங்கள் கைகளை ஆட்டிப் படைவீரர்களுக்கு உற்சாகமூட்டுகின்றனர். நேரில் காண்பது போன்று இக் காட்சி அமைக்கப்பட்டுள்ளது. மைசீனியில் கண்டெடுக்கப்பட்டுள்ள பெரிய மண் ஜாடி ஒன்றின் மீது வரையப்பட்டுள்ள ஓவியத்தில், தலை முதற் பாதம் வரை கவசம் அணிந்த போர் வீரர் அறுவர், வட்டவடிவமான கேடயங்களைக் கைகளிலேந்திக்கொண்டு படைக்களம் நோக்கி அணிவகுத்துச் செல்லுகின்றனர். அதைப் பெண் ஒருத்தி நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறாள். போர் வீரர்கள் அணிவகுத்துச் செல்லும் காட்சி விலையுயர்ந்த மணிகளிலும் முத்திரைக் கற்களிலும்கூடப் பொறிக்கப்பட்டுள்ளன. கல்லறை மூடி ஒன்றில் ஐந்து போர்வீரர்கள் ஈட்டிகளை ஏந்திச் செல்வது போல் தீட்டப்பட்டுள்ள தலைசிறந்த ஓவியமானது மைசீனியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஓவியங்களில் ஒன்றுகக் கருதப்படுகிறது. இத்தகைய காட்சிகளிலிருந்து மைசீனியர்கள் பெரிதும் போர் ஆர்வம் நிறைந்தவர்கள் என்பதை நாம் தெள்ளிதின் உணர முடிகிறது.

போர்வீரர்கள் பொதுவாகப் பயன்படுத்திய போர்க்கருவிகள் வில், வேல், வாள், ஈட்டி முதலியனவேயாகும். அவர்கள் பயன்படுத்திய அம்புகளின் முனையில் தொடக்கத்தில் நன்கு கூராகச் செதுக்கப் பெற்ற ஒருவகைக் கருங்கற்களே (Obsidian) செருகப்பட்டிருந்தன. நாளடைவில் உலோகம் பழக்கத்துக்கு வந்த பின் அம்புகளின் முனைகளில் வெண்கலத் துண்டு ஒன்று செருகப் பெற்றது. அவர்கள் உச்சிமுதல் உள்ளங்கால் வரை நீண்ட கவசங்களை அணிந்திருந்தனர். அவர்களது கேடயங்கள்

எருதுகளின் தோலினுல் நன்கு வலிவுறச் செய்யப் பெற்றிருந்தன. தோலால் ஆக்கப் பெற்ற தலைச் சீராக்களையும் (Halmet) அன்னர் அணிந்து கொண்டனர். போர்த் தளபதிகள் பெரும்பாலும் பிரபுக்களாகவே இருந்தனர். அவர்கள் இரட்டைக் குதிரை பூட்டிய இரதங்களில் இவர்ந்துசென்றே எதிரிகளைச் சாடி வந்தனர். அத்தகைய இரதங்களில் அவர்கள் நின்று போரிடுதற் கென்று ஒரு மரப் பலகையும், அதற்கு எதிரே அம்புகளைத் தடுப்பதற்கெனப் பிரம்பினுல் பின்னப்பட்ட ஒரு தடுப்பும் அமைந்திருந்தன.

சமுதாய வாழ்க்கை

மைசீனியச் சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் நிறைந்திருந்தன. அரசர்கள், பிரபுக்கள், போர்வீரர்கள், சாதாரணக் குடிமக்கள், அடிமைகள் எனப் பல்வேறு பிரிவினர் சமுதாய மாடியின் பல்வேறு தளங்களில் காணப்பட்டனர். அதன் அடித்தளத்தில் மண்டிக்கிடந்த பல்லாயிரக்கணக்கான அடிமைகளின் உதவியின்றி அரசர்களும், பிரபுக்களும் காண்போர் வியக்கும் கம்பீரமான அரண்மனைகளையும், திண்மை செறிந்த மதிற் சுவர்களையும் எழுப்பியிருக்க ஒண்ணுதென்பது தேற்றம். சாதாரண மக்களும் அடிமைகளும் எளிய வாழ்க்கையே வாழ்ந்தனர். ஆனல் பிரபுக்களும், மேட்டுக் குடிமக்களும் செல்வத்தில் திளைத்தனர். மாண்பு மிக்க மாடமாளிகையில் வாழ்ந்தனர். ஓய்வு நேரங்களில் காளைச்சண்டை, குத்துச்சண்டை,வேட்டையாடுதல், தேரோட்டப் பந்தயம் போன்ற களியாட்டங்களைக் கண்டு களிப்புற்றனர். முரட்டுத்தனமிக்க காளைகளை அடக்குவதில் பண்டைய தமிழர்கள் போன்றே கிரேக்கர்களும் தனி இன்பம் கண்டனர். காட்டு மாடுகளைச் சில சமயம் அவர்கள் வலைபோட்டுப் பிடித்துப் பின் பழக்கினர். கோப்பை ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ள ஓவியத்தில் காளை ஒன்று வலையில் சிக்கித் தவிக்கின்ற காட்சி நன்கு சித்தரிக்கப் பெற்றுள்ளது. சிக்குண்ட காளையின் கண்களில் கோபக்கனல் பொறி பறக்கின்றது. மூக்கில் மூச்சு வாங்குகின்றது. வாயில் நுரை தள்ளுகின்றது. எப்படியாவது தப்பித்துக்கொள்ளவேண்டும் என்ற உணர்ச்சியால் உந்தப்பட்டு அது வலைக்குள் அலைமோதுகிறது. இத்தனையும் ஒரே ஓவியத்தில் ஒருங்கே காட்சியளிக்கின்றன. இன்னெரு ஓவியத்தில் சிறுவன் ஒருவன் காளையின் இரு கொம்புகளையும் பிடித்து அதை அடக்குவது போல் காட்டப்பட்டுள்ளது. மற்றுமோர் ஓவியத்தில் மனிதன் ஒருவன் காளை ஒன்றை நடத்திக்கொண்டு செல்வது போன்று வரையப்பெற்றுள்ளது. பின்னுமோர் ஓவியத்தில் ஒரு

காளையும் பசுவும் காதல் புரிவது போல் காட்சியளிக்கின்றன. காளையைக் கட்டுப்படுத்தும் விளையாட்டு மைசீனிய மக்களிடையே எவ்வளவு செல்வாக்குடன் விளங்கியதென்பதையே இத்தகைய ஓவியங்கள் பறைசாற்றுநிற்கின்றன.

உயர்குலப் பெண்டிர் சிங்காரமாக உடையணிந்திருந்தனர்; இறுக்கமான மார்புக் கச்சைகளையும் அகன்ற பாவாடைகளையும் அணிந்தனர். ஆனால் மார்புகளை மறைக்கத் தக்க மாராக்குச் சேலைகளை அவர்கள் அணியவில்லை. திறந்த மார்புடன் திரிவ தென்பது அக்காலப் பெண்களுக்கு ஒரு நாணத்தக்க செயலாகத் தெரியவில்லை போலும்! நெற்றியில் பட்டம் கட்டிக்கொள்வது பல பெண்களின் வழக்கமாயிருந்தது. அவர்கள் காதிலும் கழுத் திலும் அழகு செறிந்த தங்க ஆபரணங்கள் மின்னிக்கொண் டிருந்தன. கூந்தலை அன்னர் வளையங்களாகத் திரித்து உச்சியில் கொண்டையாக அமைத்துக் கொள்வர். இங்ஙனம் அமைந்தது போக எஞ்சியுள்ள முடிகீழே தொங்கிக்கொண்டிருக்கும். ஆண்கள் பொதுவாக நீண்ட முடியை வைத்திருந்தனர். அரையில் கச்சை மட்டுமே அவர்கள் பெரும்பாலும் அணிவது வழக்கம். ஆனால் ஒரு சிலர் இறுக்கமான மேலாடை ஒன்றையும், உட் சட்டை (Tunic) ஒன்றையும் அணிந்து வந்தனர். கிரீட் மக்களைப்போல் அல்லாது நீண்ட தாடியை வைத்துக்கொள்வதை மைசீனியர்கள் விரும்பினர். முகச் சவரம் செய்துகொள்ளும் பழக்கமும் அன்னரிடம் இருந்தது என்பதற்குக் கல்லறைகளில் கண்டெடுக்கப்பட்டுள்ள சவரக் கத்திகளே ஒரு பெருஞ் சான்று மென்க.

இறந்தவர்களை எரிக்கும் வழக்கம் அவர்கள் பால் காணப்பட வில்லை. எகிப்தியர்களைப் போல் அன்னர் இறந்தாரைப் பெரும் கல்லறைகளில் இட்டுப் புதைத்தனர். மாண்டோர் பயன் படுத்திய கருவிகளும் நகைகளும் கல்லறைகளில் காணப்படு கின்றன. இதிலிருந்து அவர்கள் மரணத்தின் பின்னும் மக்கள் ஆவியாக இருந்து வாழ்கின்றனர் என்ற நம்பிக்கை கொண் டிருந்ததாக ஊகிக்க முடிகிறது.

இங்ஙனம் இறந்துபோன முன்னோரை வழிபட்டதோடன்றி அன்னர் வேறு பல கடவுளர்களையும் வணங்கியதாகத் தெரி கிறது. கிரீட் மக்களைப் போன்று இவர்களும் இரட்டைக் கோடரியையும், புனிதத்தூணையும், தூயபுருவையும் வணங்கினர். ஆனால் சக்திவழிபாட்டில்தான் இவர்கள் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தனர். பெண்தெய்வத்தை வழிபடும் போது கூடவே

அதன் கணவர் அல்லது மகனையும் சேர்த்து அன்னுர் வணங்கினர். பெண்தெய்வத்தின் அங்கங்களைப் பாம்புகள் அணி செய்தன. தெய்வீகமானதெனக் கருதப்பட்ட ஒரு சில மரங்களையும் அவர்கள் வணங்கினர்.

பொருளாதார நிலை

மைசீனிய மக்கள் கிரீட்தீவு வாதிகளைவிடப் பொருளாதாரத் துறையில் ஒருபடி முன்னேறியிருந்தனர். மிருகங்களை வேட்டையாடும் கலையில் அவர்கள் கிரீட் வாசிகளைக் காட்டிலும் திறமை மிக்கவர்களாயிருந்தனர். கற்களாலாய கருவிகளில் துளை போட்டுக் கைப்பிடி அமைத்து அவற்றை நன்கு பயன்படுத்த அவர்கள் கற்றிருந்தனர். கற்கருவிகளையேயன்றி வெண்கலத்தாலாய கருவிகளையும் அவர்கள் பயன்படுத்தினர். அக் கருவிகளைக் கொண்டு அவர்கள் மான்கள், கரடிகள் போன்ற வனவிலங்குகளை வேட்டையாடினர். தங்கம், வெள்ளி ஆகிய விலையுயர்ந்த உலோகங்களை அவர்கள் தாராளமாகப் பயன்படுத்தினர். கோப்பைகள் வீட்டுப் பாத்திரங்கள் ஆகிய தட்டுமுட்டுச் சாமான்கள் யாவும் தங்கத்தாலும் வெள்ளியாலும் சர்வ சாதாரணமாகச் செய்யப்பட்டன. கல்லறைகளில் புதைக்கப்பட்ட சவங்களுக்கருகில் அத்தகைய பாத்திரங்கள் வைக்கப்பட்டன என்பது தெரிகிறது. ஏனெனில் பல கல்லறைகளில் எலும்புக் கூடுகளுடன் அவைகள் ஏராளமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சவங்களின் முகங்களிலும் தலைகளிலும் தங்கத்தாலான மூடிகள் போர்த்தப்பட்டனவாகவும் தெரிகின்றன. எலும்புக் கூடுகளுடன் அத்தகைய முகமூடிகளும் ஏராளமான தங்க நகைகளும் அகப்பட்டுள்ளன. எனவே, மைசீனிய உயர்குலப் பெண்டிர் இறந்த போது, அவர்களது சடலங்களோடு அன்னுர் அணிந்துவந்த பொன்னுபரணங்களும் சேர்த்துப் புதைக்கப்பட்டிருக்க வேண்டுமென்பது நன்கு புலனுகிறது. பல குழந்தைகளின் எலும்புக் கூடுகளின் மேல் பொன்னுலான தகடுகள் காணப்பட்டன. பொன் போன்ற மேனியை உடைய குழந்தை ஒன்று இறந்துவிட்டால் அதைப் பொன்தகட்டில் வைத்துச் சுருட்டிப் புதைக்கும் பழக்கம் மைசீனிய மக்கள் பால் காணப்பட்டதென்பது இதனுல் நன்கு போதருகின்றது. தங்கமும் வெள்ளியும் வெண்கலமும் கிடைத்த அளவுக்கு இரும்பு அங்குக் கிடைக்கவில்லை எனத் தெரிகிறது. சாதாரணப் பொருள்களை எல்லாம் தங்கத்தால் செய்ய முன்வந்த மைசீனியர்கள் இரும்பை மோதிரங்கள் போன்ற ஒரு சில இன்றியமையாத ஆபரணங்களைச் செய்வதற்கு மட்டுமே பயன்படுத்தினர்.

மைசீனியர்களிடத்தில் தொழில் வளர்ச்சி அதிகமாகக் காணப்படவில்லை. தொழில் துறையில் முன்னேற்றமடைந்த நகர்கள் மிக அதிகமாகவே அங்குக் காணப்படுகின்றன. அழகிய மட்பாண்டங்களை வனைவதில் அவர்கள் வல்லவர்களாயிருந்தனர். அவர்களால் வனையப்பெற்ற மட்பாண்டங்கள் கிரீட் தீவில் காணப்பட்ட பாண்டங்களைவிடப் பளபளப்பில் பன்மடங்கு விஞ்சியவைகளாய்க் காட்சியளிக்கின்றன. ஒலிவ எண்ணெய் உற்பத்தித்தொழிலிலும், அன்னர்கைதேர்ந்தவர்களாயிருத்தனர். மைசீனிய மட்பாண்டங்களும், ஒலிவ எண்ணெயும் வெளிநாடுகளுக்குப் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்டன. எகிப்து, சிசிலித் தீவு, ஸ்பெயின் போன்ற நாடுகளோடு மைசீனிய மக்கள் வாணிகம் புரிந்தனர். இங்ஙனம் அவர்கள் வியாபாரத்தில் இறங்கிய போது அவர்களைக் கடற் கொள்ளைக்காரர்களிடமிருந்து காப்பாற்றிக்கொள்ளத் துணையாயிருந்தது அவர்களது கப்பற்படையேயாகும். கடற்கொள்ளை அடித்தலென்பது அக்காலத்தே சர்வசாதாரணமாய் நிகழ்ந்து வந்ததாகத் தெரிகிறது. ஏனெனில் கடற்கொள்ளை பற்றிய காட்சிகள் பல, சாதாரணப் பாத்திரங்களிலும் மோதிரங்களிலும் சித்தரிக்கப்பட்டுள்ளன.

வாணிகத்தில் பெரும் பொருளீட்டிய மக்கள் நாளடைவில் ஆங்காங்கே பெரும் நகரங்களைக் கட்டிக்கொள்ளலாயினர். கடலின் மூலம் ஏற்படக் கூடிய திடீர்த் தாக்குதல்களினின்றும் காப்பாற்றிக்கொள்வதன் வேண்டி அவர்கள் தங்களது நகரங்களைக் கடற்கரைக்குச் சற்றுத் தொலைவினில் அமைந்தனர். அதே சமயத்தில் அவசியமான போது எளிதில் தங்களது கப்பல்களைச் சார்ந்து ஓடித் தப்பித்துக்கொள்வதற்கேற்றவாறு, நகரம் கடற்கரையிலிருந்து அதிக தொலைவில் அமைந்துவிடாதபடியும் அவர்கள் பார்த்துக் கொண்டனர். கி. மு. 1400–ஆம் ஆண்டளவில் மைசீனிக்கென்று ஒரு தனிப்பட்ட கப்பற்படை இருந்ததாகத் தெரிகிறது. அக் கப்பற்படை கிரீட் வாசிகளின் கப்பற்படையைவிட வலிமை மிக்கதாய் இருந்திருத்தல் வேண்டும். இல்லெனில் கிரீட்டின் நாகரிக நிலையங்களை அன்னர் அவ்வளவு எளிதில் அழித்திருத்தலென்பது முடியாத காரியம். இங்ஙனம் ஓரளவு பயிர்த்தொழிலிலும், பெருமளவுக்கு வாணிகத்திலும் சிறந்த மக்களைக் கொண்ட நகர அரசுகளை மைசீனிய நாகரிகத்தின் உறைவிடங்களாய்த் திகழ்ந்தன.

கலைகளின் நிலை

மைசீனிய மக்கள் பொருளாதாரத் துறையில் வளர்ச்சியடைந்திருந்த அளவுக்குக் கலைத்துறையில் முன்னேற்றமடைய

வில்லை. படிப்பு வாசனையும் எழுத்து வாசனையும் அவர்களுக்குச் சற்றுக் குறைவென்றே தெரிகிறது. ஏனெனில் ட்ரின்ஸ் நகரில் கண்டெடுக்கப்பட்டுள்ளனவும் கிறுக்கெழுத்துகள் நிறைந்தனவுமான ஓரிரு ஜாடிகளைத் தவிர, அன்னரின் எழுத்தறிவைப் புலப்படுத்தக்கூடிய வேறு சான்றுகள் எவையும் கிடைக்கவில்லை. எளிதில் அழிந்துபோகக் கூடிய பொருள்களின்மீது அன்னர் தம் எழுத்துகளை ஒருவேளை பொறித்திருக்கக் கூடும். ஆனால் திட்ட வட்டமாக அங்ஙனம் கடிவதற்கேற்ற ஆதாரங்கள் எதுவும் இல்லை.

மைசீனியரின் ஓவியங்கள் பெரும்பாலும் கிரீட்டின் சித்திரங்களையே ஒத்துள்ளன. வாழ்க்கையில் நடப்பவைகளை அப்படியே சித்தரிக்கக் கூடிய உயிரூட்டமுள்ள சுவரோவியங்கள் (frescoes) பல அங்குக் காணப்படுகின்றன. ட்ரின்ஸ் நகர அரண்மனைச் சுவர்களில் கரடி வேட்டை ஒன்று மிகவும் தத்ரூபமாக வரையப் பட்டுள்ளது. நாய்களால் துரத்தப்படுகிற கரடி ஒன்று தலை தெறிக்க ஓடுவதையும், அதைக் குத்திக் கொல்ல மனிதன் ஒருவன் கூரிய ஈட்டியுடன் நிற்பதையும் அவ்வோவியம் சித்தரிக்கின்றது.

மைசீனியர்களின் கலைத்திறன் உலோக வேலைப்பாடுகளில் தான் உச்ச நிலையை எய்தியுள்ளது. உருவிலும் திருவிலும் அவை கிரீட் தீவில் காணப்பட்ட கலைப் பொருள்களைப் பெரிதும் ஒத்துள்ளன. எனினும், தமக்கே உரிய தனிப் பண்புகளுடன் அவை மிளிர்கின்றன. தங்கத்தாலும் வெள்ளியாலும் செய்யப் பட்ட அணிகலன்களில் அழகு நடனம் புரிவதைக் காணலாம். வேட்டையாடுதல், கடற்கொள்ளையடித்தல், போர்புரிதல் ஆகிய நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கின்ற சிற்பங்கள் பல தங்கத் தாம்பாளங்களில் பொறிக்கப்பட்டுள்ளன. பளபளக்கும் வெள்ளித் தகடொன்றில் கொம்புகளையுடைய பசுவின் உருவம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. அதன் முகத்தில் தங்கத்தாலாய முகப் படமொன்று காணப்படுகிறது. வெண்கலத்தாலான குத்து வாட்கள் இரண்டில் காட்டுப் பூனைகள் வாத்துகளைத் துரத்துவது போன்றும், சிறுத்தைகளின்மீது சிங்கங்கள் பாய்வதுபோன்றும், மாந்தர் ஒருவரோடொருவர் மல்லுவது போன்றும் பல காட்சிகள் பொறிக்கப்பட்டுள்ளன. வேஃபியோ கல்லறையில் கண்டெடுக்கப்பட்டுள்ள தங்கக் கோப்பைகளின் மீது காளைகளைப் பிடித்துப் பழக்குகின்ற காட்சியானது நன்கு பொறிக்கப்பட்டுள்ளது. கிரீட் தீவிலும் இதை ஒத்த கோப்பைகள் பல காணப்படுகின்றன. இங்ஙனம் வளர்ச்சி பெற்றுள்ள மைசீனியக்

கலையில் ஒரு முழுமையை நம்மால் காண இயலவில்லை. ஏதோ ஒன்று அதில் இல்லாதது போன்றே காண்பார்க்குக் காட்சி அளிக்கின்றது.

நாகரிகத்தின் பரப்பு

மைசீனிய நாகரிகச் சின்னங்கள் கிரீஸ் நாட்டின் பல்வேறு பாகங்களில் அகப்பட்டுள்ளதைக் கொண்டு அஃது எவ்வளவு தூரம் அக்காலத்தே பரவி இருந்திருக்க வேண்டுமென்பதை ஒருவாறு ஊகிக்கலாம். ஸ்பார்ட்டா நகரக் கல்லறைகளிலும் லெக்கோனியாப் பள்ளத்தாக்கிலும், ஏதென்ஸ் நகரக் கோட்டைச் சுவர்களிலும் தீப்ஸ் (Thebes) நாட்டு அரண்மனைகளிலும் ரோட்ஸ் (Rhodes) தீவிலும், தெஸலி (Thessaly) நாட்டிலும் மைசீனிய நாகரிகத்தின் மணங் கமழும்படியான பல நினைவுச் சின்னங்கள் கிடைத்துள்ளன. எனவே கிரேக்க நாகரிகத்தின் அடிப்படையாக விளங்கிய மைசீனிய நாகரிகமானது ஒரு காலத்தே கிரீஸ் நாடு அனைத்திலும் பரவி இருந்ததோடு அதன் அருகிலிருக்கும் தீவுகளிலும் பரவி இருந்ததாகத் தெரிகிறது

ஏனைய நாகரிகங்களுடன் தொடர்பு

தனக்கே உரிய தனிப் பண்புகளுடன் மைசீனிய நாகரிகமானது விளங்கிய போதிலும் கிரீட், எகிப்துபோன்ற இடங்களில் பொலிவுடன் திகழ்ந்த பண்டைய நாகரிகங்களின் சாயை அதன்பால் பெரிதும் படர்ந்துள்ளதை நாம் எளிதில் கண்டுகொள்ளலாம். தீப்ஸ் நகரச் சுவரோவியங்களில் வரையப் பெற்றுள்ள ஜாடிகள் எகிப்தில் கி. மு. 16-ம் நூற்றாண்டில் புழக்கத்திலிருந்த ஜாடிகளைப் பெரிதும் ஒத்துள்ளன. மைசீனிய நகரத்துக் கல்லறைகளில் கிடைத்துள்ள பீங்கான் துண்டுகளில் எகிப்திய மன்னனை மூன்றாம் அமன்ஹோடெப் (Amen hotep III) என்பாரின் பெயரும், அவரது இராணியாரின் பெயரும், அவரது புனித அடையாளச்சின்னமான வண்டின் உருவமும்ரோண்ட்ஸ் தீவிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனவே இம் மன்னனது ஆட்சிக் காலத்தே எகிப்துக்கும் கிரீசுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்திருக்க வேண்டுமென்பது நன்கு விளங்குகின்றது. மைசீனியாவில் தொடக்கத்தில் எழுந்த கல்லறைகளில் எகிப்திய ஓவியமொன்றில் ஆற்றில் செம்படவர்கள் வாத்துகளைக் கண்ணிவைத்துப் பிடிப்பது போன்று வரையப்பட்டுள்ளது. அந்த ஆறு, நைல் நதியையே நமக்கு நினைவூட்டுகிறது. மைசீனியா, ட்ரின்ஸ் ஆகிய இரு பட்டணங்களிலும் அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ள இரு அரண்மனைகள் பண்டைய எகிப்திய அரண்மனை

களின் வடிவிலேயே கட்டப்பட்டுள்ளன. மைசீனிய அரண் மனையில் காணப்படும் சிம்ம வாசலில் சமைக்கப்பட்டுள்ள சிம்மங்கள் எகிப்தியச் சிம்மச்சிலைகளை ஒத்துள்ளன. எகிப்தியக் கல்லறைக் கூரைகளின் அமைப்பும் அவற்றில் வரையப்பட்டுள்ள ஓவியங்களும் மைசீனியா, ட்ரின்ஸ் நகர அரண்மனைகளில் அப்படியே எடுத்துக் கையாளப்பட்டுள்ளன.

எகிப்திய நாகரிகத்தை விட, கிரீட் தீவின் நாகரிகப் பண்புகளே மைசீனிய நாகரிகத்தில் பெரிதும் விரவியிருக்கக் காண்கிறோம். ட்ரின்ஸ் நகர அரண்மனையில் காணப்படும் சுவரோவியங்கள் கிரீட் தீவின் கல்லறைகளில் காணப்படும் ஓவியங்களைப் பெரிதும் ஒத்துள்ளன. அரண்மனையைச் சுற்றியுள்ள மதிற்சுவர்கள் கிரீட்டிலிருந்து வந்த சிற்பிகளாலேயே கட்டப்பட்டிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. மைசீனியக் கல்லறைகளின் அமைப்பும் கிரீட் தீவுக் கல்லறைகளின் அமைப்பும் ஏறக்குறைய ஒன்றுகவே இருக்கின்றன. உருளை வடிவமாகப் பாறைகளில் குடைந்தெடுக்கப்பட்டுள்ள கல்லறைகள் பளபளப்பில்லாத மட்பாண்டங்கள், குரூப் (gurab) நகரத்தில் காணப்படும் போலிக் கழுத்துடைய ஜாடிகள், காளைச் சண்டைகளைச் சித்தரிக்கும் சுவரோவியங்கள் ஆகியவை எல்லாம் கிரீட் தீவிலிருந்து வந்தவைகளேயன்றி வேறல்ல. கி. மு. 1600 முதல் 1400 வரை இங்ஙனம் கிரீட்டின் நாகரிகப் பண்புகள் கிரீஸில் விரைந்து பரவி வந்தன. கி. மு. 1400-இலிருந்து 1200-க்குள் மைசீனியா தனக்கே உரிய சில சிறப்பியல்புகளை ஏற்படுத்திக் கொண்டது. எனினும் கிரீட்டின் செல்வாக்கை நினைவு படுத்தும் பெயர்கள் பல கிரீஸில் இன்றும் காணப்படுகின்றன. மெகாராவுக்கு எதிரேயுள்ள மினோவா (Minova) தீவு, மினஸ் என்னும் ஈஜியத் தீவிலிருந்து வந்த வர்களின் குடியேற்ற நாடெனவே தோன்றுகிறது. கிரேக்கப் புராணப்படி, தீப்ஸ் நாட்டை உருவாக்கியவர்களாகக் கருதப்படுபவர்கள், கேட்மஸ் (Cadmus) என்பவரும், அவரது மனைவியான யூரோபா (Europa) என்பவருமாவர். யூரோபா என்பவர் மினஸ் (Minos) என்பவளின் தாய். மினஸ் என்பவள் ஃபோனிக்ஸ் (Phoenix) என்பவளின் மகள். கிரீட் மக்களுக்கு இன்னொரு பெயர் போனிக்ஸ் என்பதாகும். 'சிவந்த கேசத்தை உடையவர்' என்பது அதன் பொருள். எனவே ஃபோனிக்ஸ், யூரோபா போன்ற தேவதைகள் கிரீட் தீவு இளவரசிகளின் உருவகமென்றே தெரிகிறது. கேட்மஸ் என்பவரே தீப்ஸில் எழுத்துகளை உருவாக்கினர் என்ற கதையிலிருந்து கிரீட் மக்களே கிரீஸில் எழுத்துகளைப் புகுதினர் என அறியலாம். கிரீட் மன்னர்களின் ஆதர

விலேயே மைசீனிய நாகரிகத்தின் உறைவிடங்கள் பலவும் கிரீஸ் நாட்டில் தோன்றியிருக்கக் கூடும். ஆரம்பத்தில் அவை கிரீட் அரசருக்குக் கப்பம் கட்டிக்கொண்டு இருந்திருக்கலாம். நாளடைவில் அவை கிரீட்டைவிட வலிமை பெற்று, அதன் மேலாணையைப் புறக்கணித்துவிட்டுச் சுயேச்சையை அடைந்திருக்கக் கூடும். எனவே வெண்கலக் காலத்தைச் சேர்ந்த மைசீனிய நாகரிகமானது, கற்காலத்தைச் சேர்ந்த கிரீட்டன் நாகரிகத்திற்குப் பல்லாற்றானும் கடமைப்பட்டுள்ளதென்பதில் சிறிதும் ஐயமில்லை.

3. ஹோமரின் காலம்

(1) ஹோமரும் அவரது கவிதைகளும்

நம்முடைய நாட்டுக்கு இராமாயணம், மகாபாரதம் என்ற இரு இதிகாசங்கள் இருப்பது போலவே, கிரேக்கர்களுக்கும் ஈலியட் (Eliad), ஒடிஸி (Odyosey) என்னும் இரு பெருங் காவியங்கள் உள்ளன. அவை இரண்டும் ஹோமர் என்ற பெரும் புலவரால் பாடப்பெற்றவை எனக் கிரேக்கர்கள் நம்பு கின்றனர். நமது இதிகாசங்களிலிருந்து நாம் எங்ஙனம் அக்கால இந்தியாவின் சமூக—பொருளாதார—கலாசார நிலைமைகளை ஓரளவு அறிந்து கொள்ளுகின்றோமோ அதேபோன்று ஹோமரது காவியங்களிலிருந்து அவரது கால நாகரிகத்தை நாம் ஓரளவு புரிந்துகொள்ள முடிகிறது. இலக்கியங்களில் பொதுவாகக் காணப்படக்கூடிய நம்பத் தகாத நிகழ்ச்சிகள் பல இவைகளில் விரவிக் கிடந்த போதிலும், வரலாற்று உண்மைகள் பல இவை களில் பொதிந்து கிடப்பதைச் சற்றே நுணுகி ஆராய்ந்தால் தெள்ளிதின் உணர்ந்துகொள்ளலாம். எனவே எழுதப்பட்ட கிரேக்க வரலாறு என்பது ஹோமரின் காலத்திலிருந்துதான் தொடங்குகிறது என்பதே சாலப் பொருத்தமுடையதாகும். வரலாறு என்பது ஆரம்பத்தில் இலக்கிய வடிவத்திலேயே இருந்தது என்பதற்கும் இக் காவியங்கள் ஒரு பெருஞ்சான்றுகத் திகழ்கின்றன. எனினும் பொதுவாக ஹோமர் காலத்தை வரலாற்றுக்கு முற்பட்ட காலமென்றே வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஹோமர் எனும் புலவர் ஒருவர் இருந்தாரா, ஈலியட், ஒடிஸி ஆகிய வீரக்காவியங்களை அவர் உண்மையிலேயே இயற்றினாரா என்பது பற்றி அறிஞர்களிடையே பலத்த கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. தூசிடைடெஸ் (Thucydides) என்ற பிற்காலக் கிரேக்க வரலாற்றாசிரியர், 'ஹோமர் என்பவர் சியோஸ் (Chios) எனும் நகரில் வாழ்ந்த குருட்டுப் புலவர்' என்று வருணிக்கிறார். ஹெரோடோடஸ் (Herodotus) என்ற கிரேக்க

வரலாற்றுசிரியர், 'ஹோமர் கி. மு. 9-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த கவிஞராவர்' எனக் குறிப்பிடுகின்றார். வேறு சில அறிஞர்கள் ஹோமர் ஸ்மிர்ணு (Smyrna) எனும் நகரில் பிறந்ததாகக் கூறுவர். ஹோமர் எனும் சொல்லுக்கு அடிமை என்பது பொருள். ஒரு வேளை அவர் முதலில் அடிமையாயிருந்து பின்னர் உரிமை பெற்ற குடிமகனாக மாறி இருக்கக் கூடும். ஸ்மிர்ணு நகரில் பிறந்து வளர்ந்த இவர் சியோஸ் நகரில் நெடுங்காலம் வாழ்ந்திருந்ததாக அவரது நூல்களிலிருந்து நன்கு தெரிகிறது.

'இலியட், ஒடிஸி என்ற காவியங்கள் ஹோமர் என்ற ஒரு தனிப்பட்ட நபரால் இயற்றப்பட்டிருத்தல் கூடாத காரியம்' எனப் பலர் கருதுகின்றனர். முன்னுக்குப் பின் முரணாகப் பல நிகழ்ச்சிகள் இவற்றுள் காணப்படுவதாலும், காவிய நடை வெவ்வேறு அத்தியாயங்களில் வெவ்வேறாக இருப்பதாலும் இவை பல கவிஞர்களால் பாடப் பெற்றிருத்தல் வேண்டும் என்பது அத்தகையோர் வாதமாகும். நவீன எழுத்தாளர்கள், ஹோமர் என்ற புலவர் ஒருவர் வாழ்ந்தார் என்பதை ஒப்புக் கொள்கின்றனர். ஆனால் அவர் மட்டும் தனியே நின்று இரு பெருங் காவியங்களைப் புனைந்தார் என்பதை அவர்களும் ஒப்புக் கொள்வதில்லை. கி. மு. பதினென்றும் நூற்றுண்டில் உண்மையிலேயே நடைபெற்ற ட்ரோஜன் போரினைப் புகழ்ந்து பல புலவர்கள் சிறு சிறு கவிதைகளை இயற்றியிருத்தல் வேண்டும்; அவை எழுதப்படாமல் வாய் மூலமாகவே பல காலம் பலராலும் பாடப்பட்டு வந்திருத்தல் வேண்டும். அங்ஙனம் பாடப்பெற்று வந்த போது இயற்கைக்கு மாறான பல நிகழ்ச்சிகள் பல அந்நாடோடிப் பாடல்களில் கலந்திருக்க வேண்டும். அத்தகைய பாடல்களை எல்லாம் நன்கு வகைப்படுத்தி அயோனிய இலக்கிய முறையில் அவற்றை அமைத்தவரே ஹோமர் எனும் புலவராவர் என்பது அவர்தம் வாதமாகும். ஆனால் உண்மையில் ஹோமரின் கவிதைகளை எழுத்து வடிவில் உலகுக்கு வழங்கியவர் பைசிஸ்டிராடஸ் (Peisistratus) எனும் ஏதென்ஸ் நகரச் சர்வாதிகாரியாவார். வாய்மொழியாகப் பாடப்பெற்று வந்த நாடோடிப் பாடல்களை எல்லாம் ஒருங்கே திரட்டி ஒரு நூல் வடிவில் அவற்றை ஒழுதுவதற்காகத் தனிப்பட்ட குழு ஒன்றைக் கி. மு. ஆரும் நூற்றுண்டில் அமைத்தவர் அந்தச் சர்வாதிகாரியேயாவர். முதலில் அவை அயோனிய எழுத்திலேயே எழுதப்பட்டன. கி. மு. ஐந்து அல்லது நான்காம் நூற்றுண்டுகளில்தான் அவை புதிய கிரேக்க எழுத்துகளில் எழுதப் பெற்றன. எனவே ஹோமரின் கவிதைகள் திடீரென்று தோன்றியவை அல்ல என்பதும், படிப்படியாக நாளாவட்டத்தில்

வளர்ந்து செம்மையுற்ற ஒரு சிறப்புக் காவியம் என்பதும் நன்கு தெரியவருகின்றன.

ஹோமரது கவிதைகள் கிரேக்க வரலாற்றுக்கு உறுதுணையாய் நிற்பனவாகும். மைசீனிய நாகரிகத்தின் பிற்காலப் பகுதியையும் அக்கீய நாகரிகத்தையும் அவை நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றன. புதை பொருள் சான்றுகள் அவற்றை மேலும் மெய்ப்பிக்க உதவுகின்றன. கிரேக்கர்கள் அவற்றைப் பொன்னே போல் போற்றுகின்றனர். ஏனெனில் வரலாற்றுக் காலத்துக்கும் முற்பட்ட தங்களது நாகரிகத்தைப் பற்றி அறிந்துகொள்ளவும், பெருமையடையவும் அவை அவர்களுக்குத் துணைபுரிகின்றன. கிரேக்கர்களின் சமயத்தைப் பற்றிய விரிவான தகவல்கள் அக் கவிதைகளில் தான் கிடைக்கின்றன. சமய சம்பந்தமாக ஐயப் பாடுகள் ஏற்படும்போதெல்லாம் அவர்கள் ஹோமரது நூல் களையே நாடிச் செல்வது வழக்கம். ஆரம்பத்தில் அவர்கள் கல்வி யறிவைப் பெற்றதும் அக் கவிதைகள் மூலமாகவேயாகும். கிரேக்கர்களின் தேசிய இலக்கியம் என அவற்றைக் கருதுதல் சாலவும் பொருந்தும், பல்வேறிடங்களில் சிதறிக் கிடந்த கிரேக்கர் களை ஒன்றுபடுத்தும் ஒரு பெருஞ் சக்தியாக அவை விளங்கின என்றால் அது சிறிதும் மிகையாகாது.

(2) அக்கீயப் படையெடுப்பு

ஹோமரின் காலம் அக்கீயர்களின் காலம் (Achaeon age) என்றும் அழைக்கப்படுகிறது. ஏனெனில் அவர்காலத்தும், அதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பும் கிரேக்க வரலாற்றில் பேரிடம் பெற்றிருந்தவர்கள் அக்கீயர்கள் (Achaeons) என்ற இனத்தவரேயாவர். அன்னர் கிரேக்கர்களல்லர் என்றும், டான்யூப் நதிப் பள்ளத்தாக்கிலிருந்து வந்த ஒருவகை இந்தோ ஆரியரே என்றும் ஒரு சில ஆசிரியர்கள் கருதுகின்றனர். கி. மு. 15-ம் நூற்றாண்டில் அவர்கள் வட கிரீசை வென்று குடியேறினர் என்றும், நாளடைவில் தம்மால் வெல்லப் பட்ட மைசீனியர்களோடு இரண்டறக் கலந்துவிட்டனர் என்றும் அன்னர் கூறுகின்றனர். அக்கீயர்கள் தெசலி மாநிலத்தில் தொன்று தொட்டு வாழ்ந்துவந்த கிரேக்கர்களே என்றும், மக்கள் தொகைப் பெருக்கினால் அவர்கள் நாளடைவில் பெப்பொனீஷியா, கிரீட் போன்ற இடங்களில் பரவினர் என்றும் வேறு பலர் கருதுகின்றனர். அது எங்ஙனமாயினும் கி. மு. 13, 12-ஆம் நூற்றாண்டுகளில் கிரீஸில் பெரிதும் முக்கியத்துவம் பெற்று விளங்கியவர்கள் அக்கீயர்களே என்பது ஒருதலை. ஆர்காலிஸ்,

(Argolis) என்ற பகுதியில்தான் அவர்கள் பெரிதும் வலிமை யோடு ஆண்டனர். கி. மு. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர்கள் கிரேக்கர்கள் அனைவரையும் அக்கீயர்கள் என்றே அழைத்தனர். அக்கீயர்கள் ஆர்காலிஸ் (Argolis) பகுதியில் புகுந்து அங்கு வாழ்ந்த சுதேசிகளை வென்றனர். வென்றபின் வெல்லப்பட்டவர்களின் நாகரிகமான மைசீனிய நாக ரிகத்தின் சிறப்பியல்புகளை அப்படியே பின்பற்றலாயினர். அதே சமயத்தில் தமக்கே உரிய சில தனிப் பண்பு களையும் அவர்கள் கைவிடவில்லை. மைசீனியர்களைப் போலன்றி அவர்கள் இறந்தவர்களை எரித்தனர்; மேலுடையேயன்றி உட் சட்டை ஒன்றையும் அணிந்தனர்; அகன்ற பக்கவாட்டுகளை யுடைய வாளாயுதங்களையும், உருண்டை வடிவமான கேடயங் களையும் பயன்படுத்தினர். தங்களது கடவுளர்களை அவர்கள் கைவிடவில்லை. தங்களது மொழியின் ஆதிக்கத்தை அவர்கள் நன்கு நிலை நாட்டினர். கிரீஸின் ஆதி மொழிகள் யாவும் கதிரவன் முன் உடுக்கள் போல் மங்கி மறைந்துபோயின. இங்ஙனம் பண்டை மொழிகள் மறைந்தன என்றாலும் மக்கள் அழிக்கப்படவில்லை. தெசாலி, லக்கோனியா ஆகிய மாநிலங் களில் கிரேக்கர்கள் பரவிய போது அங்கு அவர்கள் சுதேசி களோடு கலக்கவில்லை. ஆனால் வெல்லப்பட்டவர்கள் அடிமை களாக்கப்பட்டனர். அட்டிகா போன்ற பகுதிகளில் சுதேசிகள் விவசாயிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டனர்.

அக்கீயர்கள் துணிகரமிக்கவர்கள்; அலைமோதும் கடலுக் குள் அஞ்சாது நுழைந்து வீரதிரச் செயல்களைச் செய்வதில் தனி இன்பம் காண்பவர்கள். எனவே அவர்கள் நாளடைவில் கிரீட் தீவு, ஆசியாமைனர் பகுதிகளுக்கும் சென்று குடியேறினர். அங்ஙனம் குடியேறிய போது அவர்களுக்கும் அவர்களது எதிரி களுக்கும் நடைபெற்ற போர்களே பிற்காலத்து வீரக்காவியங் களின் கருப்பொருள்களாய் அமைந்தன. ஹோமரால் விவரிக்கப் படுகின்ற ட்ராய் நகர முற்றுகை அக்கீயர்கள் ஆசியாமைனர் பகுதியில் பரவிய வரலாற்றையே இலக்கிய வடிவில் வடித்துக் காண்பிக்கிறது. அக்கீயர்களின் உறவினர்களான ஈடோலியர்கள் (Aetolians) என்ற பிரிவினர் ஆசியாமைனரில் சென்று குடியேறி னர். அங்ஙனம் குடியேறப் பெற்ற பகுதி, ஈடோலியா (Aetolia) அல்லது யோலியா (Aeolia) என அழைக்கப் பெற்றது. அட்டிகா என்ற மாநிலத்திலிருந்து சென்ற அக்கீயர்கள் தங்களை அயோனியர்கள் எனக் கூறிக்கொண்டு ஆசியாமைனர் கடற்கரையோரங்களின் மத்தியிலும் தெற்கிலும் பரவிக் குடியேற்றங்களை நிறுவினர். அக் குடியேற்றங்களுக்கு

அயோனியா என்ற பெயரையும் அவர்கள் வழங்கினர். ஒரு சில அக்கீயர்கள் கிரீட் தீவின்மீது படையெடுத்து அங்கு வாழ்ந்த மக்களை வென்றனர். கி.மு. 1400-ஆம் ஆண்டளவில் நாஸஸ் என்ற நகரத்தை அழித்தவர்கள் அக்கீயர்களாகத்தான் இருக்க முடியும் என்பது ஒருசில வரலாற்றாசிரியர்களின் கருத்தாகும். கி. மு. 1300-இல் கிரேக்கர்கள் கிரீட் தீவை ஆண்டார்கள் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் பல கிடைத்துள்ளன. அக்கீயர்கள் வேறு சில மக்களுடன் சேர்ந்து எகிப்தைக் கி.மு. 1223-இல் படையெடுத்து மெருப்டா (Meruptah) என்ற எகிப்திய மன்னரை வென்றார்கள் என எகிப்திய ஏடுகள் சில கூறுகின்றன. 'வேறு சில மக்கள்' என்பது அக்கீயர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட கிரீட் மக்களை ஒருவேளை குறிக்கக் கூடும். இங்ஙனம் அக்கீயர்கள் கி.மு. 13-ஆம் நூற்றாண்டுக்குள் ஆசியாமைனர் நாடு முதல் எகிப்திய நாடு வரையில் தமது ஆதிக்கத்தைப் பெருமளவுக்கு நிலைநாட்டி விட்டனர் எனத் தெரிகிறது.

(2) ட்ரோஜன் போர்கள்

முதலாம் ட்ரோஜன் போர்

அக்கீயர்களின் துணிகரச் செயல்களுக்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்தாற் போல் திகழ்ந்தது அவர்களது ஆசியாமைனர் படையெடுப்பாகும். அப் படையெடுப்பை மையமாகக் கொண்டு இரண்டு பெரும் கட்டுக் கதைகள் (Legends) எழுந்துள்ளன. அவற்றுள் ஒன்று "ஆர்கொனூட்டுகளின் கடற்செலவு" (Voyage of the Argonauts) எனப்படுவதாகும். முதலாம் ட்ரோஜன் போர் (First Trojan War) என்றும் அது அழைக்கப்படுகிறது. இஃது ஆர்கொனூட்டுகள் என்ற அக்கீய வீரர்களின் தலைவரான ஹெராக்லீஸ் (Heracles) என்பவருக்கும், ட்ராய் நகர மன்னரான லெளமென்டன் (Laomendon) என்பவருக்குமிடையே நடை பெற்ற ஒரு போராகும்.

ட்ராய் என்னும் நகரம் அக்காலத்தே மேற்கு ஆசியா மைனரிலேயே ஒப்பற்ற ஓர் பட்டணமாய் விளங்கியது. ட்ராய் நகர மன்னர், ஏனைய மன்னர்கள் எவரையும்விடச் செல்வத்திலும் வலிமையிலும் சிறப்புற்று விளங்கினர். அவரது பெருமைக்குக் காரணமாய் இருந்தது. ட்ராய் நகரின் நிலவளமோ, நீர்வளமோ அன்று. நல்ல வசதியான துறைமுகம் கூட அதற்கில்லை. ஆனால் கேந்திரமான அதன் இருப்பிடமே அதற்குரிய

சிறப்புக்கெல்லாம் ஒரு பெருங் காரணமாயிருந்தது. யூக்ஸைன் (Euxine) என்று அக்காலத்தே அழைக்கப் பெற்ற கருங்கடலையும், ஈஜியக் கடலையும் இணைக்கின்ற ஹெல்லஸ் பாண்ட் (Helles pont) என்ற (தற்போது டார்டெனெல்ஸ் எனப்படுவது) நீரிணைப்பின் நுழைவாயிலில் அமைந்திருந்ததே அதன் இருப்பிடத்தின் சிறப்பாகும். ஈஜியக் கடலிலிருந்து யூக்ஸைன் கடலை நோக்கிச் சென்ற கப்பல்கள் பல ஹெல்லஸ் பாண்டின் நுழைவாயிலில் பல நாட்கள் அல்லது பல வாரங்கள் கூடத் தங்க வேண்டியிருக்கும். ஏனெனில், கோடைக் காலத்தே வடக்கே இருந்தும், வடமேற்கு வடகிழக்குத் திசைகளிலிருந்தும் கடுமையான புயற் காற்றுகள் வீசியவண்ணம் இருக்கும். அவற்றை எதிர்த்துச் செல்லக்கூடிய வலிமை அக்கால மரக்கலங்களுக்கு இல்லை. எனவே காற்றின் வேகம் ஓய்கின்ற வரையில் கப்பல்கள் ஹெல்லஸ்பாண்டின் வாயிலில் காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை. அங்ஙனம் காத்திருக்க வேண்டுமாஞல் கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சித் தங்கியிருக்கத் தக்கதோர் இடமும், குடிப்பதற்கேற்ற நல்ல தண்ணீரும் தேவை. அத்தகைய வசதிகள் பெசிகா குடாவின் (Basika Bay) மேற்குக் கரையிலும், சீமேண்டர் (Seamender) சமவெளியிலும்தான் காணப்பட்டன. இப் பிரதேசமானது அக் காலத்தே ட்ராய் நகர மன்னர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. எனவே இங்கு வந்து தங்கிய கப்பல்கள் மீதும், வணிகர்கள் மீதும் ட்ராய் மன்னர் சுங்கவரி (Toll) ஒன்றை விதிப்பது வழக்கம். வேறு வழியின்றி, ஹெல்லஸ்பாண்டின் கடற்கரையில் வந்து தங்கிய வணிகர்கள் அனைவரும் ட்ராய் மன்னருக்கு அவர் விதித்த வரியைச் செலுத்தி வந்தனர். ஆனால் யூக்சைன் கடற்கரைப் பகுதிகளில் குடியேற விரும்பிய அக்கீயர்களுக்கு ட்ராய் மன்னரின் போக்கு பிடிக்கவில்லை. தங்களது முன்னேற்றப் பாதையில் முளைத்திருந்த ஒரு முட்டுக்கட்டையாக அவர்கள் ட்ராய் மன்னரை நினைத்தனர். அவரைப் போரில் புறமுதுகு காட்டச் செய்து தமது காரியத்தைச் சாதித்துக் கொள்ள அவர்கள் பெரிதும் விரும்பினர். அவ் விருப்பத்தின் விளைவாக எழுந்ததே ஆர்கொனூட்டுகளின் படையெடுப்பாகும்.

ஆர்காஸ் (Argos) என்ற கப்பலில் ஏறிக்கொண்டு அவர்கள் ஹெல்லஸ் பாண்டை நோக்கி விரைந்தனர். கடற்கரையில் கப்பலை நிறுத்திவிட்டு ட்ராய் நகரத்துக்குச் சென்று அதை முற்றுகையிட்டனர். ஹெராக்லிஸ் (Heracles) என்பாரின் தலைமையில் அவர்கள் ட்ராய் நகரைச் சூறையாடி, அதன் மன்னரான லெளமெண்டன் என்பாரையும் தோற்கடித்தனர்.

அதன்பின் ஹெல்லஸ் பாண்ட் நீரிணைப்பின் வழியாக யூக்சைன் கடலுக்குள் செல்ல அவர்களுக்கு அனுமதி கிடைத்தது. யூக்சைன் கடற்கரைப் பிரதேசங்களை ஆராய்ந்து வசதியான இடங்களில் ஆர்கொனுட்டுகள் குடியேறினர்.

இரண்டாவது ட்ரோஜன் போர்

அக்கீயர்களால் அழிக்கப்பட்ட ட்ராய் நகரம் விரைவி லேயே மீண்டும் கட்டப்பட்டுப் பழைய பெருமையை எய்தியது. எனவே, மீண்டும் அக்கீயர்கள் அதன் மீது பொருமை கொண்ட னர். கி.மு. 1193—1192-இல் கிரேக்கர்கள் ட்ராய் நகரத்தின்மீது இரண்டாம் முறையாகப் படையெடுத்தனர். இப் படையெடுப்பை மையமாகக் கொண்டே 'ஈலியட்' என்ற ஹோமரது வீரக் காவியம் எழுந்தது.

இப் படையெடுப்பு நிகழ்வதற்கு ஏதுவான காரணங்கள் பல. ஹோமரின் கூற்றுப்படி ஸ்பார்ட்டா நகரின் மன்னரான மெனிலாஸ் (Menelaus) என்பவருடைய மனைவியாகிய ஹெலன் (Helen) என்னும் அழகு செறிந்த மங்கையை, ட்ராய் நகர மன்னர் ப்ரையாம் (Priam) என்பாரின் புதல்வனை பாரிஸ் (Paris) என்னும் இளவரசன் பலவந்தமாகக் கடத்திச் சென்றதே உடனடியான காரணம் என்று தெரிகிறது. விருந்தினர்களை உபசரித்தல் கிரேக்கர்களின் ஒரு தனிப் பண்பாகும். அப் பண்பாட்டிற்கேற்ப மெனிலாஸ் என்னும் ஸ்பார்ட்டா மன்னர், தன்னுடைய அரண்மனைக்கு விருந்தாளியாக வந்த பாரிஸ் என்னும் இளவரசரை மிக அன்போடு உபசரித்தார். ஆனல் உண்ட வீட்டுக்கே இரண்டகம் நினைத்தார் பாரிஸ் என்னும் இளவல். இரவுக்கிரவாக ஹெலன் எனும் இராணியை அவர் கடத்திச் சென்றுவிட்டார். இதையறிந்த மெனிலாஸ் கொதித் தெழுந்தார். நாடெங்கும் உள்ள கிரேக்க அரசர்களுக்கு ஓலை அனுப்பித் தமது மானத்தைக் காப்பாற்ற ட்ராய் நகரத்தை முற்றுகையிடும்படி வேண்டிக் கொண்டார். மானத்தை உயிரி னும் பெரிதாய்க் கருதிவந்த கிரேக்க அரசர்கள் யாவரும் ஒன்று சேர்ந்தனர். மெனிலாஸ் என்ற அரசரின் உடன்பிறந்தாரான அகமெம்னன் (Agamemnon) என்ற பெருந்தலைவரின் கீழ் எல்லா அரசர்களும் ஒன்று திரண்டனர். அகமெம்னன் என்பவர் ஆர்காஸ் (Argos), மைஸினி (Mycenay) என்ற நகரங் களின் அரசர். அவர் தமது சகோதரரின் நற்பெயருக்கு ஏற்பட்ட மாசினைத் துடைக்க 1200 போர்க் கப்பல்கள் அடங்கிய ஒரு கப்பற்படையை நிறுவினர். அக் கப்பல்களில் ஏறிக்

கொண்டு பல்லாயிரக் கணக்கான கிரேக்க வீரர்கள் ட்ராய் நகரத்தை நோக்கிப் புறப்பட்டனர். ஈஜியன் கடல் வழியாகச் சென்று அப் படை ட்ராய் நகரத்தை அடைந்தது.

ட்ராய் நகர முற்றுகை 10 ஆண்டுகளுக்கு நீடித்தது. கிரேக்கர்களின் படையில் மிக வீர தீரமாகப் போர் புரிந்தவர் தெஸாலி மாநிலத்தைச் சேர்ந்த அக்கிலஸ் (Achilles) என்ற வாலிபர் ஆவார். ட்ரோஜன் படையில் பெரு வீரராய்த் திகழ்ந்தவர் ஹெக்டர் (Hector) என்ற இளவரசர் ஆவார். அக்கால வழக்கப்படி போரானது முதலில் இருதரப்பிலும் இருந்த முக்கிய தளபதிகளிடம் மட்டுமே நடைபெற்றது. அத் தளபதிகள் வெண்கலத்தால் செய்யப்பட்ட கவசங்களை மார்பிலும் தலையிலும் அணிந்திருந்தனர். அவர்களின் படைக்கலன்களில் பொன்னாலும் வெள்ளியாலும் செதுக்கப்பட்ட அழகிய சித்திர வேலைப்பாடுகள் காணப்பட்டன. அவர்களுடைய கேடயம் பல வண்ணச் சித்திரங்கள் அடங்கிய மாபெருந் தடுப்புக் கருவியாய் விளங்கியது. இரண்டு குதிரைகள் பூட்டப்பட்ட இரதங்களில் இவர்ந்து சென்றே அவர்கள் போரிட்டனர். வில்லும் அம்பும் ஈட்டியும் வாளுமே அவர்களின் முக்கியப்படைக்கருவிகளாகும். இரு தளபதிகளுள் ஒருவர் வீழ்ச்சியுற்றபின் போர் சிறிது நேரம் நிறுத்தப்படும். வீழ்ச்சியுற்ற தளபதியின் உடம்பில் காணப்பெற்ற பொன்னும் வெள்ளியும் படைக்கருவிகளும் இரதமும் குதிரைகளும் முதலில் அப்புறப்படுத்தப்படும். அதன் பின்னரே இரு தரப்பிலும் இருக்கும் வீரர்கள் கை கலப்பர். ஒரு தரப்பினர் சரண் அடைந்தவுடன் போர் நின்று போகும்.

9 ஆண்டுகள் போர் நடைபெற்ற பின்னர் ட்ராய் நகரம் முற்றிலும் அழிந்தது. ஹோமர் என்ற கவிஞரின் கூற்றுப்படி பல கடவுளர்கள் இப் போரில் கலந்து கொண்டனர். ஆதென்ஸ் நகரக் காவல் தேவதையான அதேனை என்ற தேவதை, பல்லாஸ் (Pallas), ஹீரோ (Hera), போஸிடன் (Poseidon) ஆகிய தெய்வங்கள் கிரேக்கர்கள் தரப்பிலும், அபாலோ (Apollo), ஏரிஸ் ஃதோல்ஸ் (Tholes), அஃப்ரோடிடி (Aphrodite) ஆகிய தெய்வங்கள் ட்ரோஜன்கள் தரப்பிலும் போரிட்டன. வெற்றிக் களிப்பில் தம்மை மறந்த அகமேம்னன் என்னும் தலைவர் அக்கிலஸ் என்ற வீரப் பெருமகனிடமிருந்து அவரால் கைப்பற்றப்பட்ட பிரைஸீஸ் (Briseis) என்ற அழகு நிரம்பிய கன்னியை அபகரித்துக் கொண்டார். அதைக் கண்ட அக்கிலஸ் மேலும் போர் புரிய மறுத்து விட்டார். அக்கிலஸ் என்பாருக்கு ஏற்பட்ட கோபத்தை ஹோமர் என்னும் புலவர் மிக நன்முகச்

சித்தரித்துள்ளார். திட்டிஸ் (Thetis) போன்ற தேவதைகளும் கூட அகமெம்னன் மேல் கோபமுற்று ட்ரோஜன்களுக்கு வெற்றியை வழங்குப்படி ஜ்யூஸ் (Zeus) என்ற தலைமைக் கடவுளை வேண்டலாயினர். எனவே ட்ரோஜன்களுக்கு வெற்றிக்கு மேல் வெற்றி கிட்டியது. அக்கிலஸ் என்ற வீரனின் தோழனை பெட்ராக்லஸ் (Patroclus) என்ற மாவீரன் ஹெக்டார் என்ற இளவரசனால் கொல்லப்பட்டான். இதைக் கண்ட அக்கிலஸ் கொதித்தெழுந்தான்; தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்புகளை அடக்கிக்கொண்டு ஹெக்டர் மீது புலி யெனப் பாய்ந்தான். இரு வீரரிடையே நடைபெற்ற தனிச் சண்டையில் ஹெக்டர் மாண்டான். ஹெக்டரின் மரண ஊர் வலத்தோடு ஈலியட் என்ற கதை முடிவுறுகிறது. ஆனால் அதன் பின்னும் பல நிகழ்ச்சிகள் பின்னர் வந்த கவிஞர்களால் சேர்க்கப்பட்டுள்ளன. இராமாயணம் முடிந்த பின்பும் உத்தர ராமாயணம் என்று நம்மவர் எப்படிக் கதையை வளர்த்துள் ளார்களோ அதே போன்றுதான் ஈலியட் என்ற இதிகாசமும் மேலும் வளர்க்கப்பட்டுள்ளது. அவற்றின்படி அபாலோ என்ற கடவுளின் ஆசியைப் பெற்றுப் பாரிஸ் என்னும் இளவரசன் அக்கிலஸ் என்ற கிரேக்க வீரனைக் கொன்று விடுகின்றான்.

அதன் பின்னர் கிரேக்கர்கள் போரில் மேலும் முன்னேற முடியாமல் தவிக்கின்றனர். நேரடியான போரில் ட்ரோஜன்களை வெல்ல முடியாது என்று கண்டுகொண்ட கிரேக்கர்கள் தந்திரத் தினால் ட்ராய் நகரைக் கைப்பற்ற எண்ணுகின்றனர். இத்தாக்கா (Ithaca) என்ற நாட்டின் இளவரசனை ஒடிசியஸ் (Odysseus) அல்லது யுலிசிஸ் (Ulyssis) என்ற வீரர் ஒரு விந்தையான திட்டத்தின்படி மிகப் பெரிய குதிரையொன்று மரத்தால் செய்யப்படுகிறது. அம் மரக்குதிரையின் வயிற் றுக்குள் ஒடிசியஸும் இன்னும் சில முக்கியமான வீரர்களும் ஒளிந்து கொள்ளுகின்றனர். அதன் பின்னர் அக் குதிரையை நகருக்கு அருகில் விட்டுவிட்டுத் தங்களுடைய நாட்டுக்குத் திரும்பிப் போவது போல ஏனைய கிரேக்க வீரர்கள் நடிக்கின் றனர். இதை ட்ரோஜன்கள் உண்மையென நம்பிவிடுகின்றனர். கிரேக்கர்களைக் கடலுக்குள் துரத்திவிட்டபின் எக்காளத்துடன் திரும்பி வந்த ட்ரோஜன் வீரர்கள், கிரேக்கர்களால் விட்டுச் செல் லப்பட்ட மரக்குதிரையைக் கேலியாக இழுத்துச் சென்று நகருக்குள் விட்டு விட்டுப் போய் விடுகின்றனர். இரவில் அதனுள் ஒளிந்திருந்த கிரேக்கர்கள் வெளிவந்து ட்ராய் நகரக் கோட்டைக் கதவுகளைத் திறந்து விடுகின்றனர். பயந்து ஓடுவது போல் பாசாங்கு செய்து மீண்டும் திரும்பிவந்து நகருக்கு

அருகில் காத்திருந்த ஏனைய கிரேக்க வீரர்கள், உடனே நகருக்குள் திமுதிமுவெனக் குவிகின்றனர். ட்ராய் நகரத்தைத் தீயிட்டுக் கொளுத்துகின்றனர். கிரேக்கர்களின் கண்களை உறுத்திக்கொண்டிருந்த மாபெரும் நகரம் அழிந்தொழிகின்றது. அவர்களின் உள்ளம் குளிர்கின்றது. வீரப் பாடல்களைப் பாடிக் கொண்டே அவர்கள் நாடு திரும்புகின்றனர்.

அகமெம்னன் என்ற வீர மன்னர் மைசினி என்ற தமது தலைநகரை வெற்றி முழக்கத்துடன் அடைந்தார். ஆனால் அங்கு அவருக்குத் தோல்வியே காத்திருந்தது. ஏனெனில் அவரது மனைவியும் அவளது கள்ளக் காதலனுமாகச் சேர்ந்து அவரை இரகசியமாகக் கொலை செய்து விட்டனர். மெனிலாஸ் என்ற மற்றொரு அரசர் 7 ஆண்டுகள் அங்குமிங்கும் அலைந்த பின்னரே தமது நாடு திரும்பினர். யுலிசிஸ் என்ற தலைவர் 10 ஆண்டுகள் பல இடங்களில் சுற்றித் திரிந்த பின்னரே தமது நாட்டை அடைந்தார். அங்ஙனம் அவர் சுற்றித் திரிந்த பொழுது அவருக்கு ஏற்பட்ட பல கடுமையான சோதனைகளையும், அவைகளை அவர் எவ்வாறு சமாளித்துத் தப்பினர் என்பதையும் விவரிக்கின்ற சுவையான நிகழ்ச்சிகள் அடங்கியதே ஒடிஸி என்ற ஹோமரின் இன்னொரு மாபெரும் காவியமாகும்.

இங்ஙனம் ஹெலன் என்ற அழகிய மங்கையின் காரணமாக இப் போர் நடைபெற்றது என்று காவியங்கள் கூறினாலும் உண்மையான காரணம் அது அன்று என்பதைச் சற்றே நுணுகி ஆராய்ந்தால் புரிந்து கொள்ளலாம். கிரேக்கர்கள் 'யூக்சைன்' கடற்கரையை ஒட்டிய நாடுகளில் பரவுவதற்கு ஒரு பெரும் தடையாக இருந்த ட்ராய் நகரத்தையும் அதன் மன்னர்களையும் ஒழித்துக் கட்ட வேண்டியே இப் போர்களில் இறங்கினர்கள் என்பதுவே அதன் உண்மையான காரணமாகும். ஹெலன் விவகாரம் அதற்கு ஒரு சாக்காக அமைந்தது எனலாம். ட்ராய் நகர வீழ்ச்சிக்குப்பின் கிரேக்கர்கள் டார்டனல்ஸ் என்று தற்போது அழைக்கப்படுகின்ற புரோபான்டிஸ் (Propontis) என்ற நீரிணைப் பின் மூலமாகத் தடையின்றி யூக்சைன் என்ற கருங் கடலுக்குள் சென்று அதன் கடற்கரையோரங்களில் பல குடியேற்றங்களை நிறுவினர். ஈஜியன் கடலில் உள்ள பல தீவுகளிலும் அவர்கள் குடியேற்றங்களை ஏற்படுத்தினர். எனவே ட்ரோஜன் போர்கள் என்பவை உண்மையில் ஈஜியன் கடலுக்கு மேற்கிலும் கிழக்கிலுமிருந்த இருபெரும் சக்திகளின் மோதல் என்று கருதுவதே சாலவும் பொருத்தமுடையதாகும்.

(4) ஹோமர் காலத்து மக்கள் வாழ்க்கை

வீர யுகம்

அக்கீயர்களின் படையெடுப்பிற்கும் டோரியர்களின் (Dorians) தாக்குதல்களுக்கும் இடையே உள்ள காலம் வீரயுகம் என அழைக்கப்படுதல் மரபாகும். இந்த இடைக் காலத்தில் வாழ்ந்த வீரர்களின் வரலாற்றை இலக்கிய முறையில் கூறுவன ஹோமர் என்ற கவிஞரின் கவிதைத் தொகுதிகளாகும். ஹோமர் கி. மு. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று பொதுவாகக் கருதப்படுகிறது. எனவே, அவர் தமது காலத்துக்கு ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகளையே நமக்குப் படம் பிடித்துக் காண்பித்துள்ளார். ஆனால் அந்த நிகழ்ச்சிகளையும் நாகரிகத்தையும் உள்ளது உள்ளபடியே அவர் கூறுகின்றார் என்று நாம் கருதிவிடக் கூடாது. இலக்கியங்களுக்கே உரித்தான மிகைபடக் கூறல் என்ற குற்றம் அவரது கவிதைகளில் காணப்படுவதில் வியப்பு ஒன்றுமில்லை. மிருகம் போன்றமுரடர்கள்வீரர்களாகவும், மனிதர்கள் தெய்வங்களாகவும் அவரது காவியங்களில் காட்சியளிப்பது கண்கூடு. உண்மையில் அக்கீயர்களின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களையும், அழிபாடுகளையும் வீரம் என்றும், அத்தகைய செயல்களிலீடுபட்டவர் வீரர்கள் என்றும், அச் செயல்கள் நிகழ்ந்த காலமானது வீரயுகம் என்றும் ஹோமரால் வருணிக்கப்பட்டவையெல்லாம் கவிமரபு எனக் கருதத் தக்கனவேயன்றி உண்மை எனக் கொள்ளத் தக்கன அல்ல.

அக்கீயர்கள், தமது படை எடுப்புக்கு முன்பிருந்த நாகரிகச் சின்னங்களை அழிப்பதில் திறமையுடையவர்களாகத் திகழ்ந்தனரே யன்றிப் புதிய நாகரிகத்தைப் படைப்பதில் ஆரம்பத்தில் அவர்கள் அக்கறை காட்டவில்லை. எனினும் நாளடைவில், தம்மால் வெல்லப்பட்டவர்களுடன் கலந்து அவர்களது பண்புகளை உட்கொண்டு ஒரு புதிய கலப்பு நாகரிகத்தை அவர்கள் உண்டாக்கினர். அதுவே கிரேக்க நாகரிகம் எனப் படுவது. இத்தகைய நிகழ்ச்சிகள் வரலாற்றில் மீண்டும் மீண்டும் நடைபெறுவதை நாம் எளிதில் காணலாம். ரோமானியப் பேரரசை நாகரிகமற்ற காட்டுமிராண்டிகள் தாக்கி அதைச் சிதைத்த போது அவர்கள் அக்கீயர்களைப் போன்றே ஆக்கத் திறன் அற்றவர்களாயிருந்தனர். ஆனால் நாளடைவில் வெலலப்பட்ட ரோமானியரின் பண்புகளை ஏற்றுக்கொண்ட அந்த அநாகரிகக் குடிகள் புதியதோர் கலப்பு நாகரிகத்தை உருவாக்கினர். அதுவே ஐரோப்பிய நாகரிகம் என்று இன்று அழைக்கப்

படுகிறது. இந்தியா மீது ஆரியர்கள் படை எடுத்த போதும் இதே போன்றுதான் இங்கு ஒரு நாகரிகமிக்க சமுதாயம் வாழ்ந்து கொண்டிருந்தது. அதை அவர்கள் வென்று தமது மொழியையும் அன்னர் மீது திணித்தனர். ஆனால் அவர்களது நாகரிக முறைகளை அவர்கள் நாளடைவில் ஏற்றுக்கொண்டு புதியதோர் இந்தியக் கலப்பு நாகரிகத்தைச் சமைத்தனர். எனவே நாகரிகம் வளரவளர ஒரு சமுதாயம் மென்மையும் தளர்வும் அடைவதையும், அதை அவ்வளவாக நாகரிகமடையாத முரட்டு மக்கள் எளிதில் தோற்கடிப்பதையும், தோற்கடித்த பின் தோற்றவர்களிடமே பல நல்ல பண்புகளைக் கண்டு அவற்றை அன்னர் கடைப்பிடித்துத் தமது பண்புகளோடுசேர்த்து ஒரு புதிய கலப்பு நாகரிகத்தை உருவாக்குவதையும் நாம் வரலாற்றில் அடிக்கடி காண்கிறோம். முரட்டு மக்களின் படை எடுப்புக்கும், புதிய நாகரிகச் சமுதாயத்தின் தோற்றத்துக்குமிடையிலுள்ள காலமே வீரர்களின் யுகம் எனப்படுகிறது நாகரிகமடைந்த சமுதாயத்தின் கவிஞர்கள், தமது காலத்துக்கு முன்பே நடந்த பல அடாத செயல்களை யெல்லாம் கற்பனைக் கண்களுடன் கண்டு அவற்றை வீரமிக்க செயல்களாக வருணிப்பதே வீரக்காவியம் எனப்படுவதாகும். ஈலியட், ஒடிஸி ஆகிய இரு காவியங்களிலிருந்தும் நாம் அக்கீயர்களின் கலப்பு நாகரிகத்தின் சிறப்பியல்புகளை நன்கு அறிய முடிகின்றது.

அரசியல் வாழ்க்கை

அக்கீயர்களின் அரசியல் சமுதாய நிலைமைகளை அறிய நமக்கு உறுதுணையாயுள்ள வரலாற்றுச் சான்றுகள் ஈலியட் என்ற காவியத்தில் இரண்டு இடங்களில் கிடைக்கின்றன. ட்ராய் நகரத்தை முற்றுகையிடுவதற்காகப் புறப்பட்டுச் சென்ற படைகள், கப்பல்கள் ஆகியவற்றை விரிவாகக் கூறுகின்ற பகுதி அவற்றில் முதலாவதாகும். ''கப்பல்களின் அட்டவணை'' (Catalogue of the ships) என்று அப்பகுதி அழைக்கப்படுவது வழக்கம். இன்னொரு பகுதி அக்கிலஸ் என்ற மாவீரனின் கேடயத்தில் காணப்படும் சித்திர வேலைப்பாடுகளை வருணிக்கும் இடமாகும். அக்கீயரது வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களும் அதில் நன்கு விவரிக்கப் படுகின்றன.

ஹோமரின் காலத்தும் அதற்குச் சற்று முன்பும் கிரீஸில் பல சிறிய இராஜ்யங்கள் இருந்தன என்பது தெரிகிறது. அத்தகைய இராஜ்யங்கள் ஒவ்வொன்றையும் ஓர் அரசன் ஆண்டு வந்தான். ஆர்காலிஸ் (Argolis) என்ற சிறு நாட்டை ஆண்ட அரசர்தான் அக்காலத்தே ஈடும் எடுப்பும் அற்றவராய்த் திகழ்ந்

தார். ஏனைய அரசர்கள் யாவரும் அவரது ஆணைக்குக் கட்டுப் பட்டு ஒரு சில பொதுக் காரியங்களிலிறங்கினர். ட்ராய் நகர முற்றுகை அத்தகைய பொது முயற்சியின் விளைவேயன்றி வேறன்று. ஆனால் உள்நாட்டு ஆட்சிமுறையைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு அரசரும் சுதந்திரமாகவே நடந்து கொண்டார்.

அக்கீயரின் அரசியல் சமுதாயம் மெல்ல மெல்ல வளர்ந்து முழுமை பெற்ற ஒன்றாகும். அச் சமுதாயத்தின் மூலக் கூறாக இருந்தது குடும்பமாகும். ஒவ்வொரு குடும்பமும் அதன் தகப்பனின் தலைமைக்குக் கட்டுப்பட்டு இயங்கிவந்தது. பல குடும்பங்கள் ஒன்றுசேர்ந்து ஒரு கூட்டமாக (Clan) அமைந்தன. ஒவ்வொரு கூட்டமும் பொதுவான மூதாதையர் ஒருவரின் வழி வந்தவர்கள் அடங்கிய ஒரு கட்டுக்கோப்பாகக் கருதப்பட்டது. பல கூட்டங்கள் சேர்ந்து ஒரு குலமாக (Tribe) வடிவெடுத்தன. ஒவ்வொரு குலமும் ஒரு தனிப்பட்ட பிரதேசத்தில் வசித்து வந்தது. அப் பிரதேசம் டீம் (Deme) என அழைக்கப்பட்டது. ஒவ்வொரு குடும்பக் கூட்டமும் ஒரு கிராமத்தில் வசித்தது. பல கிராமங்கள் சேர்ந்ததே டீம் எனப்பட்டது. குறிப்பிட்ட நாட்களில் கூடிப் பொதுவான முறையில் வழிபாடு நிகழ்த்துவ தற்காக ஒரு சில கிராமங்கள் ஒன்று சேர்வது வழக்கம். அத்தகைய ஒன்றியங்கள் ஃபிராட்ரா (Phratra) என அழைக்கப் பட்டன. அக்கீயர்களால் அமைக்கப்பட்ட முதல் அரசியல் சமுதாயம் இதுவேயாகும். ஒவ்வொரு டீமும் ஏனைய காரியங் களிலெல்லாம் தனித்து நின்றே செயல் புரிந்தது. ஒரு டீமின் மன்னர் வல்லவராக இருந்தால் அவர் அருகிலுள்ள வேறு சில டீம்களையும் வென்று அடிமைப்படுத்தி வைத்துக் கொள்வது வழக்கம். இங்ஙனம் நாளடைவில் பல குலங்கள் சேர்ந்த பெரிய அரசுகள் தோன்றலாயின. பெரிய அரசுகள் கூட ஒரு சங்கம் போன்றே தொழிற்பட்டன. அதன் உறுப்பினராக இருந்த நாடுகள் எல்லாவகையிலும் சுயேச்சையுள்ளவைகள் போலவே நடந்து கொண்டன. ஆனால் சமயம் வந்த போது அவை ஒன்றுசேர்ந்து தொழிற்பட்டன. ஃபிராட்ரா என்ற சோதரக் கூட்டுறவில் (Brother hood) சேராதவர்கள் சொந்தபந்தமற்ற நீசர்கள் (Out casts) எனக் கருதப்பட்டனர். இத்தகைய கூட்டுறவுகள் ஆரியச் சமுதாயங்கள் அனைத்திலும் ஆதியில் இருந்தனவென்று தெரிகிறது. ஜெர்மானியர், உரோமானியர் களிடையேயும் இது போன்ற கூட்டுறவுகள் பண்டைக் காலத்தே காணப்பட்டன.

ஒவ்வொரு அரசியல் சமுதாயத்துக்கும் தனித் தலைவராக விளங்கியவர் அதன் அரசராவர். அரசர் என்பவர் ஒரு சமுதாயத்தின் மிகப் பழமையான—முன்தோன்றி மூத்த குடியில் பிறந்தவராக இருப்பார். இவ்விதம் பிறப்பாலும் சில சமயங்களில் போரிலும், நீதித்தலங்களிலும் காட்டப்படுகின்ற திறமையினாலும் அரச பதவியை ஒருவர் பெறுவது வழக்கம். அவ்வரசர் தெய்வீக உரிமை பெற்றிருந்தார். ஜ்யூஸ் (Zeus) என்ற முழுமுதற் கடவுளின் வழிவந்தவர் என்று அவர் தம்மைப் பற்றிக் கூறிக்கொள்வது வழக்கம். ஒருசிலர் வேறு கடவுளரின் வழிவந்தவர்கள் என்று கூறிக் கொள்வதுமுண்டு. இங்ஙனம் முழுமுதல் தெய்வத்தின் வழிவந்தவர்கள் என்ற முறையில் மக்கள் அவ்வரசர்களை ஒரு குட்டித் தெய்வமாகவே எண்ணி வழிபட்டனர். பண்டைய தமிழர்களைப் போலவே பண்டைய கிரேக்கர்களும் தமது மன்னர்களை இறைவனெனவே கருதி வழிபட்டு வந்தனர். குடிமக்களை எல்லாவகையான இடையூறுகளினின்றும் காப்பாற்றிக் கரையேற்ற வல்ல கண்கண்ட தெய்வமாகவே அன்னர் அரசனைக் கருதினர்.

அரச பதவி என்பது பொதுவாகப் பரம்பரைச் சொத்தாகவே விளங்கியது. அரசன் இறந்த பின் அவனது மூத்த மகன் பட்டத்துக்கு வருவதே சாதாரணமாக நடைபெற்று வந்தது. ஆனால் சில சமயங்களில் ஆட்சி புரிவதற்குரிய தகுதி சிறிதேனுமில்லாத ஒருவர் பரம்பரை உரிமைப்படிப் பட்டத்தை அடைய நேரிடுவதும் உண்டு. அத்தகைய சமயங்களில் மக்கள் தங்களது விருப்பப்படி வேறு ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை பெற்றிருந்தனர்.

சீரிய முறையில் செங்கோல் செலுத்திய மன்னர்கள் பல சிறப்புரிமைகளை அனுபவித்தனர். பந்திகளில் எல்லாம் அவர்களுக்கு முதல் வரிசையிலேயே இடம் அளிக்கப்பட்டது. சமய சம்பந்தமான வேள்விகள் நடப்பின் அவற்றில் படைக்கப்படும் உணவு முதலிய பொருள்களில் சிறந்தவைகள் எல்லாம் அரசருக்கே சென்று சேர்ந்தன. போர் முடிந்த பின் கிடைக்கப் பெற்ற பொருள்களில் விலையுயர்ந்தவை அனைத்தும் அரசருக்கே உரிமையாக்கப்பட்டன. நகரிலுள்ள நிலங்களிலேயே மிகச் செழிப்பான நிலப்பகுதி ஒன்று மன்னருக்கென்று தனியாக வழங்கப்பட்டது.

இத்துணைச் சிறப்புரிமைகள் இருந்தபோதிலும்கூட அக்கீய மன்னர்கள் வரம்பற்ற சர்வாதிகாரிகளாக (absotute) விளங்க

வில்லை. நாட்டின் முக்கியமான பிரச்சனைகளை எல்லாம் அவர்கள் மேன்மக்களையும் பிரபுக்களையும் கலந்தாலோசித்த பின்னரே தீர்ப்பது வழக்கம். பிரபுக்களைக் கலந்துகொண்டு ஒரு முடிவுக்கு வந்தபின் அம் முடிவை அவர் மக்கள் அரங்கத்தின் முன் வைத்து அன்னரின் ஒப்புதலைப் பெற்ற பின்பே அதை நடைமுறைப் படுத்த முடியும். எனவே மன்னர் ஓரளவு கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவராகவே விளங்கினர். இடையர்கள் ஆடுகளை மேய்த்து அவற்றின் நலன்களைப் பேணுவது போல, அரசனும் குடி மக்களின் நன்மைகளை ஓம்புவதிலேயே கண்ணுங்கருத்துமாய் இருக்கவேண்டும் என்ற கருத்தை வற்புறுத்த வேண்டியே ஹோமர் எனும் புலவர் அரசரைக் "குடிமக்களின் மேய்ப்பன்" (Shepherd of the People) என்று அழைக்கின்றார்.

அரசன் மேற்கொள்ள வேண்டிய முக்கிய கடமைகள் மூன்றாகும். அறங்கூறவையத்துக்குத் தலைமை தாங்கி ஓர வஞ்சனையின்றி நீதி வழங்குவதும், போர்க்களத்தில் தலைமை தாங்கி நின்று போர்புரிந்து வெற்றி வாகை சூடுவதும், சமய சம்பந்தமான சடங்குகளுக்குத் தலைமை தாங்கி அவற்றைச் செவ்வனே முடித்து வைப்பதும் அவனது சீரிய கடமைகளாகும். தலைமை நீதிபதி, தலைமைத் தளபதி, தலைமை மதகுரு ஆகிய மூவரின் அதிகாரங்களும் அவனிடம் ஒருங்கே காணப்பட்டன. என்றாலும் மத சம்பந்தமான காரியங்களில்தான் அவனது அதிகாரங்கள் பெரிதும் மேலோங்கி நின்றன. ஒருசில அரசர்கள் அரச பதவியை ஒரோ வழி இழந்துவிட்டபோதிலும் சமயக் குரவராகக் கடைசிவரையில் நீடித்துப் பணிபுரிந்து வந்துள்ளதை நாம் அறிகிறோம். ஒரு குறிப்பிட்ட தெய்வத்துக்கு எம் முறையில் ஆராதனை செலுத்த வேண்டும், எவ்விதமான சடங்குகளைச் செய்ய வேண்டும் என்பது பற்றிய இரகசியங்கள் யாவும் அரசரின் தனியுரிமைகளாகத் திகழ்ந்தன. எனவேதான் தலைமை மத குருப் பதவி என்பது அவரிடமிருந்து பறிக்க முடியாததொன்றாய்ப் போயிற்று. ஜ்யூஸ் என்ற முழுமுதற் கடவுளின் ஆதேசத்தைப் பெற்றவர் என்ற முறையில் அவர் வழக்குகளில் தைரியமாகத் தீர்ப்புகளை வழங்கினர். ஆனால் மூத்தோர்சபையே பெரும்பான்மை யான வழக்குகளைத் தீர்த்து வைத்தது. அவர் சொன்னதே சொல்! வைத்ததே சட்டம்! ஏனெனில் முழுமையான சட்டம் என்ற ஒன்று அதுவரை நாட்டில் உருவாகவில்லை. இக்காலத்தே போன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டோர் கூடிய சட்ட மன்றங்களைக் கொண்டு சட்டங்களை ஆக்கும் முறை அக்காலத்தே இல்லை. போர்க்களத்திலும் அரசனே படைகளுக்குத் தலைமை தாங்கி நடத்தினன். அவன் ஆணைக்குட்பட்டே நிலப்படையும்

கடற்படையும் இயங்கின. இங்ஙனம் மன்னன் உண்மையிலேயே மக்களது புரவலனுகத் திகழ்ந்தான்.

பெசிலஸ் (Basileus) என்ற மன்னனுக்குப் பட்டப் பெயரால் அழைக்கப்பட்ட ஆலோசனை கூற, ப்யூல் (Bule) என்ற மூத்தோர் அவை (Council or Elders) ஒன்று இருந்தது சில சமயங்களில் அது பௌலி (Boule) என்றும் அழைக்கப்பட்டது. அதன் உறுப்பினர்கள் பெரும்பாலும் பிரபுக்களாகவே இருந்தனர். அவர்கள் அரசனது திட்டங்களை விவாதித்துப் பரிசீலனை செய்பவர்களாகவும், அறிவுரை வழங்குபவர்களாகவுமே விளங்கினர். இவர்களை மீறி அரசன் செயல்படுவானுனுல் நாட்டில் புரட்சி வினையும் என்ற பயம் அரசர்களிடை காணப்பட்டது. எனவே வல்லரசுக்கு ஒரு வரம்பு கட்டும் நல்லவையாக அது விளங்கிற்று. பிற்காலத்தே ஏற்பட்ட பிரபுக்களாட்சி (aristocracy) இம் மூத்தோர் சபையிலிருந்து உருப்பெற்றதேயன்றி வேறன்று. அகோரா (Agora) என்ற மக்கள் மன்றம், ப்யூலைவிட முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சுயேச்சையான நகர மக்கள் அனைவரும் அதன் உறுப்பினராவர். நகரச் சந்தைக்கருகேதான் அம் மன்றம் கூடுவது வழக்கம். முக்கியமான முடிவுகளை எல்லாம் மன்னர், இம் மக்கள் மன்றத்தின் முன் வைத்து அதன் ஒப்புதலைப் பெற்ற பின்பே அவற்றை நிறைவேற்றுவது மரபு. இம் மன்றம் தான் பிரியப்பட்டபோது கூடமுடியாது. மன்னரால் அழைக்கப்பட்ட போது மட்டுமே இது கூடலாம். மேலும் ப்யூல் சபையில் விவாதங்கள் நடைபெறுவது போன்று இங்கு நடைபெற முடியாது. வேண்டும் அல்லது வேண்டாம் என்று சொல்வதற்கு மட்டுமே இதற்கு உரிமை இருந்தது. நாட்டின் எல்லாப் போர் வீரர்களும், உரிமை பெற்ற குடிமக்களும் இதன் உறுப்பினர்களாயிருந்ததால் இவர்களது விருப்பத்துக்கு மாருக நடக்க எந்த அரசரும் துணியக் கூடாத நிலை காணப்பட்டது. பின்னர் ஏற்பட்ட மக்களாட்சி முறையின் (Democracy) வித்தினை அகோராவில் காணலாம். அக்கீய அரசியலமைப்பின் உறுப்புகளான மன்னர், மூத்தோர் அவை, மக்கள் அவை எனும் இம் மூவகை அமைப்பும்தான் பிற்கால ஐரோப்பிய அரசியலமைப்புகள் அனைத்துக்கும் அடிப்படையென்றுல் மிகையாகாது.

சமுதாய வாழ்க்கை

அக்கீயர்களது சமுதாயத்தின் அடிப்படையாக விளங்கியவை அவர்தம் குடும்பங்களாகும். ஒவ்வொரு குடும்பமும் அதன் தந்தையின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியே நடைபெற்றுவந்தது.

குடும்ப உறுப்பினர்கள் மீது அவர்தம் தந்தையார் அளவற்ற ஆதிக்கத்தைச் செலுத்தி வந்தார். குடும்பத்துக்கு ஒத்துவராத நபர்களை அறவே ஒழித்துக்கட்டும் அதிகாரம் அவரின் கைகளில் கொடுக்கப்பட்டிருந்தது. குடும்பச் சொத்துகள் அதன் உறுப்பினர்கள் அனைவருக்கும் பொதுவாகவே இருந்து வந்தன. எனவே, அவற்றில் எதையும் விற்கும் உரிமை எவருக்கும் கிடையாது.

ஏற்றத் தாழ்வு மிகுந்த ஒரு சமுதாயத்தையே ஹோமரது நூல்கள் சித்தரித்துள்ளன. பெரும்பாலும் அவை, சமுதாய மாடியின் மேல் தளத்தில் உலவிய அரச குடும்பத்தினரையும் பிரபுக்களையும் பற்றியே பேசுகின்றன என்றாலும் ஒரு சில சமயங்களில் சாமானிய மக்களைப் பற்றியும் பிரபுக்களைப் பற்றியும் நாம் அவற்றினின்றும் ஓரளவு அறிய முடிகின்றது. ஒடிஸி எனும் காவியத்தில் செல்வந்தர் தம் மாளிகைகளில் கையேந்தி நிற்கும் பிச்சைக்காரக் கும்பல்களையும், சாதாரணச் சில அணிகலன்களுக்கு ஆசைப்பட்டுலெவாண்ட் பிரதேசச் சில்லரைவியாபாரிஒருவனின் பின் ஓடிப்போன பினீஷியா அடிமைப் பெண்ணையும், பலவந்தமாகக் கடத்திச் செல்லப்படும் அடிமைகளையும் பற்றிப் படிக்கின்றோம். அடிமைகள் இன்றேல் வாழ்க்கையே நடைபெறாது எனக் கிரேக்கர்கள் எண்ணியதாகத் தெரிகிறது. போரில் தோற்றவர்கள் அனைவரும் அடிமைகளாக ஆக்கப்பட்டனர். கடற் கொள்ளையின் போது கைப்பற்றப்பட்டோரும் அடிமைகளாக விற்கப்பட்டனர். அங்ஙனம் வாங்கப்பட்ட அடிமைகள் விலங்கினும் கேவலமாக நடத்தப்பட்டனர். ஆண்டானுக்குக் குற்றவேல் புரிவதொன்றே அடிமையின் கடமை. அவனைச் சவுக்காலடிக்கவும் கொல்லவும் விற்கவுமான எல்லா உரிமையும் ஆண்டானுக்கு உண்டு. ஒண்டக் குடிசையும் உடுக்க ஒரு கந்தலும் கூட இன்றித் தவித்த அடிமைகள் பலர். ஆனால் ஒரு சில அடிமைகளுக்கும் அவர்தம் ஆண்டையர்களுக்கும் நல்ல உறவு முறை இருந்ததாகவும் தெரிகிறது. ஒடிசஸ் எனும் வீரன், பன்றி மேய்க்கும் ஓர் அடிமையிடம் அளவற்ற அன்பு வைத்திருந்தான் எனவும், அவ்வடிமையும் தனது ஆண்டையார் மீது அளவற்ற விசுவாசம் கொண்டிருந்தான் எனவும் நாம் அறிய வருகிறோம்.

சமுதாயத்தில் மிக உன்னதமான நிலையிலிருந்தவர்கள் பிரபு வர்க்கத்தினரேயாவர். நிலப் படை, கடற் படைகளிலும் அரண்மனையிலும் அவர்கள் உயரிய பதவிகளை வகித்து வந்தனர். வசதிகள் நிரம்பிய மாளிகைகளில் ஆடம்பரமாக அன்னார் வாழ்ந்தனர். வாழ்க்கையின் இன்பங்களை அவர்கள் வரையறையின்றி

நுகர்ந்தனர். வயிறு புடைக்க உண்பதில் அவர்கள் வல்லவர்கள். எனவே அவர்களின் இல்லங்களில் அடிக்கடி விருந்துகள் நடைபெற்றன. அவைகளில் மாட்டிறைச்சியும், பன்றி மாமிசமும், ரொட்டியும், மது வகைகளும் தாராளமாக வழங்கப்பட்டன. அறுசுவை உண்டியையும் அருந்தி முடிந்தபின் அவர்தம் செவிகளுக்கு உணவளிக்கப் பாடகர்கள் இருந்தனர். ஆல்ஸினஸ் (Alcinous) என்ற மன்னரது அரண்மனையில் நடைபெற்ற ஒரு விருந்துக்குப் பின் இசைப் புலவர் ஒருவர் எழுந்து கிரேக்க வீரர்களின் புகழைப் பாடி யாவரையும் மகிழ்வித்ததாக நாம் அறிகிறோம். அவ்விசை வாணர் யாழ் போன்ற ஓர் இசைக் கருவியை மீட்டிக்கொண்டே பாடினரென்றும் நாம் அறிகின்றோம். பாடலோடு ஆடலும் கிரேக்கர்கள் பெரிதும் ரசித்தனர் எனத் தெரிகிறது. விருந்துகள் முடிந்த பின் அழகிய வாலிபரும், வனிதையரும் கை கோத்துக் கொண்டு, இசைக்கேற்ப ஆடி அனைவரையும் மகிழ்விப்பர். நடனத்தில் வல்ல ஒரு சிலர் தாளத்திற்கேற்ப நடனம் ஆடிக் கொண்டே ஒருவகைப் பந்து விளையாட்டையும் ஆடினர். ஆண்மை மிக்க பல்வேறு விளையாட்டுகளிலும் அவர்கள் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தனர். ஆல்ஸினஸ் மன்னர் ஏற்பாடு செய்த விருந்துக்குப் பின் வாலிபர்கள் பலர் பலவிதமான போட்டிப் பந்தய விளையாட்டுகளில் ஈடுபட்டனர். ஓட்டப் பந்தயம், மற்போர், குத்துச் சண்டை, தாண்டுதல், குண்டு எறிதல் போன்ற விளையாட்டுகளில் அவர்கள் பங்கு கொண்டனர். நடுத்தர வயதை எட்டிவிட்ட ஒடிஸியஸும் அதில் கலந்துகொண்டார். பாரம் மிகுந்த குண்டு ஒன்றை இலாவகமாகக் கையிலேந்தி, மற்ற யாவரையும்விட அதிகமான தூரத்தில் எறிந்து விருந்துக்கு வந்திருந்த அனைவரையும் அவர் வியப்புக் கடலில் ஆழ்த்தினர்.

செல்வந்தர்கள் விலையுயர்ந்த ஆடைகளை அணிந்தனர். சாதாரணமாக ஒவ்வொருவரும் இடுப்பில் ஓர் உடையையும், அதன்மேல் நாற்கோண வடிவமான ஒரு மேலாடையையும் அணிந்தனர். மேலாடை தோற்பட்டையின் அருகே மடிக்கப் பட்டு ஊக்கு ஒன்றால் நன்கு பிணிக்கப்பட்டிருந்தது. வலக் கை, ஆடையால் முடப்படாமல் இருந்தது. முழங்கால் வரையில் ஆடை நீண்டிருந்தது. பெண்கள் இறுக்கமான உடைகளை அணிந்தனர். இடையில் ஒட்டியாணங்களை ஒரு சில பெண்கள் அணிந்திருந்தனர். முகத்தைத் திரைச் சீலையால் மறைத்துக் கொண்ட பெண்களும் உண்டு. வெளியே செல்லும் போது ஆண்களும் பெண்களும் மிதியடிகளை அணிந்திருந்தனர். ஆனால் வீடுகளுக்குள் அவர்கள் வெறுங்கால்களுடனேயே உலவினர்.

இரு பாலாரும் பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப்பட்ட அணிகலன்களை அணிவதில் பெரு மகிழ்ச்சியடைந்தனர். மகளிர் தம் உடல் மீது ஒரு வகையான நறுமணம் பொருந்திய எண்ணெயைப் பூசிக் கொண்டனர். பெண்கள் தலை மயிரை நன்கு வாரிக் கொண்டையாக முடித்துக் கொண்டனர். ஆண்கள் முடியை நீளமாகத் தொங்க விட்டனர். நீண்டு வளர்ந்திருந்த தமது முடியை வெட்டி இறந்துபோன நண்பரின் கல்லறையில் காணிக்கையாய்ப் படைப்பதை அவர்கள் பெரியதோர் தியாகம் எனக் கருதினர்கள். நீண்ட முடிகளையேயன்றி நீண்ட தாடி களையும் ஆண்கள் வைத்துக்கொண்டனர்.

கிரேக்கர்களின் உணவு மிக எளிமையானது பார்லி போன்ற தானியங்களை மாவாக்கி அதைக் கொண்டு சுடப் பெற்ற ரொட்டியே அவர் தம் முக்கிய உணவாகும். காய்கறிகள் ஒரோ வழி பயன்படுத்தப்பட்டன. அவற்றோடு அவர்கள் மச்சம், மாமிசம் ஆகியவற்றையும் சேர்த்துக் கொண்டனர். ஏழைகள் மீன்களையும், பணக்காரர்கள் மாட்டிறைச்சி, பன்றி மாமிசம் ஆகியவற்றையும் உண்டனர். மது அருந்துதல் செல்வருக்கே உரித்தானதோர் பழக்கமாயிருந்தது. சுவரோடு ஒட்டிப் போடப் பட்ட நாற்காலிகளில் அமர்ந்து கொண்டு குட்டையான மேஜை களின் மீது உணவுப் பொருள்களைப் பரப்பி வைத்து உண்பது அவர் தம் வழக்கமாகும். கை விரல்களைக் கொண்டே அவர்கள் உணவை உண்டனர். கத்தி, கரண்டி, முள் போன்றவைகளை அவர்கள் பயன்படுத்தியதாகக் தெரியவில்லை.

ஹோமர் காலப் பெண்டிர் ஆண்களுடன் சரிநிகர் சமான மாக நின்று பல காரியங்களில் ஈடுபட்டனர். பிற்காலச் சமுதாயத் திலேயே அவர்களது நிலை இழிந்தது. ஆரம்பத்தில் அவர்கள் பெரிதும் கட்டுப்பாடற்ற வாழ்க்கையையே மேற்கொண்டனர். பெண்களுக்கென்று தனிப்பட்ட அறைகள் ஒவ்வொரு வீட்டிலும் இருந்தன. விருந்துகளில் அவர்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை. எனினும் வேறு துறைகளில் அவர்கள் சுதந்திரத்தோடு பணிபுரிய முடிந்தது. உயர் குடிப் பெண்டிர் கண்ணியமாக வாழ்ந்தனர். பெனிலோப் (Penelope) என்ற பெண்மணி தன் கணவன் வரும்வரை இருபதாண்டுகள் காத்திருந்ததோடு, பிற ஆடவரை மனத்திலும் நினையாத கற்பெனும் திண்மையையும் பெற்றிருந்தாள் என்பதை நாம் அறிகிறோம். ஹெலன் என்ற அழகிய மங்கைக்காக நாடே ஒன்று திரண்டு போரிட்டது என்பதை நாம் ஈலியட் எனும் காவி யத்தின் வாயிலாகத் காண்கின்றோம். கடலுள் ஆழ்ந்து போன

கப்பலிலிருந்து தப்பிக் கரையேறிய யுலிசிஸ் எனும் வீரனை அன்போடு உபசரித்த நாஸிகா (Nausicca) எனும் இளம் பெண்ணும், ஹெக்டரின் மனைவி ஆன்ரோமாகி (Andromache) என்பவளும் மங்கையருள் மாணிக்கமெனக் கருதத் தக்கவர்கள். அகமெம்னன் என்ற மன்னரின் மனைவியைப் போன்று கணவரைக் கொன்ற காரிகைகள் ஒரு சிலர் இருந்தனர் என்றாலும் பொதுவாகப் பெண்டிர் கற்புக் கரசிகளாகவே விளங்கினர்.

ஹோமரது கவிதைகளிலிருந்து கிரேக்க மக்களின் ஒரு சில நல்ல பழக்கங்களையும், நடையுடை பாவனைகளையும் பற்றி நாம் அறிய முடிகிறது. வயதில் முதிர்ந்தோர், அறைக்குள் நுழையும் போது இளைஞர்கள் இருக்கையை விட்டு எழுந்து மரியாதை செய்வது வழக்கம். அந்நியர்களிடம் அன்பு காட்டுவதை அன்னர் ஒரு கடமையாகக் கருதினர் வீடு தேடி வரும் புதிய விருந்தினரை முகங் கோணுமல் உபசரிக்க வேண்டுமென்பதை அவர்கள் அறமெனக் கொண்டனர். செல்விருந்து நோக்கி வரு விருந்து பார்த்துக் காத்திருக்கும் பண்டைத் தமிழ்ப் பண்பு பண்டைய கிரேக்கர்களிடமும் காணப்பட்டது அறிந்து இன்புறற் பாலனவற்றுள் ஒன்றும். தமிழர்களைப் போன்றே கிரேக்கர் வீரம், காதல் இவ்விரண்டையும் சிறப்பாகப் போற்றினர்கள். காதலுக்காக அவர்கள் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராயிருந்தனர். வீர விளையாட்டுகளிலும், மற்போரிலும், விற்போரிலும் அவர்கள் தனி இன்பங் கண்டனர். தோல்வியுற்றவரிடம் அவர்கள் சற்றுக் கடுமையாகவே நடந்து கொண்டனர். அக்கிலஸ் என்ற வீரன் தனது எதிரியான ஹெக்டரைக் கொன்ற பின்னும் கோபம் தணியாது, அவனது பிரேதத்தைத் தனது தேர்க் கால்களில் கட்டிக் காண்டு வீதி வழி ஊர்வலம் வந்தான் என்பதை நாம் அறிகிறோம். வீரம் ஒன்றையே பெரிதெனக் கருதிய கிரேக்க வீரர்கள் தோல்வியுற்ற மக்களின் துன்பத்தைத் துச்சமாக மதித்தனர். எனவே கொல்வதையும், கொல்லப்படுவதையும் அவர்கள் பொருட்படுத்தவில்லை. வீரமுள்ளவர்கள் எதையும் செய்வதற்கு உரிமை பெற்றிருந்தனர். ஒருவனது வீரத்துக்கு முன் அவனது ஏனைய குற்றங்கள் சூரியன் முன் மின்மினி போல் மங்கிவிடுகின்றன என்பது அவர் தம் கருத்தாகும். எனவேதான் யுலிசிஸ் போன்ற வீரர்கள் கூசாமல் பொய் பேசுவதையும், ஏமாற்றுவதையும், அதே சமயம் அதேனை போன்ற தேவதைகளால் புகழப்படுவதையும் நாம் காண்கின்றோம். உற்றார் உறவினர் மீதும் நண்பர்கள் மீதும் கிரேக்கர் அளவற்ற பாசம் கொண்டிருந்தனர். யுலிசிஸ் பல்லாண்டுகள் கழித்துத்

தனது சொந்த நாட்டுக்குத் திரும்பி வந்த போது உற்றார் உறவினரையும் நண்பர்களையும் கட்டிக்கொண்டு, உச்சி மோந்து முத்தமிட்டுக் கண்ணீர் உகுப்பதை நாம் காண்கிறோம். ஹெலன் மெனிலாஸ், அகமெம்னன் போன்றவர்களும் உற்றருக்காகக் கண்ணீர் வடிக்கின்றனர். " அன்புக்கு முண்டோ அடைக்குந் தாழ்! ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும் " என்ற குறளுக்கு இலக்காக அன்னவர் விளங்காநின்றனர். ஆழ்ந்த நட்பு கொள்வதும், நண்பர்களுக்காக எதையும் செய்யத் தயாராயிருப்பதும் கிரேக்கரின் இயல்பான பண்பாகும்.

பொருளாதார வாழ்க்கை

பண்டைய கிரேக்கர்கள் விவசாயத்தை நன்கு அறிந்திருந்தனர். கோதுமை போன்ற தானியங்களையும், திராட்சைக் கொடி, ஒலிவ மரம் ஆகியவற்றையும் அவர்கள் பயிர் செய்தனர். திராட்சை ரசத்திலிருந்து இறக்கப்பட்ட சாராயத்தையும், ஒலிவ விதைகளிலிருந்து ஆட்டி எடுக்கப்பட்ட எண்ணெயையும் அவர்கள் பெரிதும் பயன்படுத்தியதோடு வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்தனர். நாட்டின் பெரும் பகுதி நிலமானது காடுகள், மலைகள், சதுப்புநிலங்கள் ஆகியவற்றால் நிறைந்திருந்ததாலும், எஞ்சியிருந்த நிலமும் வளமற்றதாயிருந்ததாலும் விவசாயம் அவ்வளவாக வளரவில்லை. உணவுப் பற்றாக்குறையைத் தீர்க்க அவர்கள் மிருகங்களை வேட்டையாடுவதிலும், மீன்பிடிப்பதிலும் ஈடுபட்டனர். சுரங்கங்களைத் தோண்டிச் செம்பு, தகரம், வெள்ளி, பொன் போன்ற உலோகங்களை எடுத்து அவற்றால் பல கருவிகளையும் பொருள்களையும் செய்து பிற நாடுகளில் விற்று, உணவுப் பொருள்களை அவற்றுக்கீடாக வாங்கி வந்தனர்.

கிராமத்திலுள்ள நிலங்களை அரசன் பெரும் பண்ணைகளாகப் பிரித்து அவற்றை ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்கினன். அங்ஙனம் வழங்கப்பட்டவை குடும்பச் சொத்தாகப் பாவிக்கப்பட்டனவேயன்றித் தனிப்பட்டவர்களின் உடைமைகளாகக் கருதப்படவில்லை. குடும்பத் தலைவர் நிலங்களை நிர்வகித்தார். ஆனால் அவற்றை இன்னொருவருக்கு மாற்றவோ விற்கவோ அவருக்கு உரிமையில்லை. குடும்பத் தலைவர் இறந்த பின் அவர் நிர்வகித்த நிலத்திலேயே புதைக்கப்படுவார். தமது முன்னோரின் கல்லறைகளைக் கண்ணுங் கருத்துமாகக் காக்க வேண்டுவது ஒவ்வொரு குடும்பத் தலைவரின் தலையாய கடமையாகும். இறந்தவர்களின் ஆவி அவர்களது குடும்ப நிலத்தைச் சுற்றி வட்டமிட்டுக்

கொண்டேயிருக்கும் எனக் கிரேக்கர்கள் நினைத்தனர். இங்ஙனம் நிலமானது ஒரு குடும்பத்தில் இருப்பவர், இறந்தவர் ஆகிய யாவருக்கும் சொந்தமான ஒரு பொது உடைமையாகக் கருதப் பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் ஆடு மாடுகள் மேய்ப்பதற் கென்று பொதுப் புல் வெளிகளும் இருந்தன. அரசனுக்கென்று தனி நில புலங்கள் ஒதுக்கப்பட்டன. பெரும் பிரபுக் குடும்பங் களிலிருந்து பரிசாக வழங்கப்பட்ட நிலங்களை அரசன் உவகை யுடன் ஏற்றுக் கொண்டான்.

ஆடு மாடுகளை வளர்ப்பது ஹோமர் கால மக்களின் இன்னெரு முக்கிய தொழிலாகும். பன்றி, ஆடு ஆகிய பிராணி களையும் கோழிகளையும் அவர்கள் வளர்த்த போதிலும் மாடுகளைத் தான் அவர்கள் பெரிதும் விரும்பிப் பாதுகாத்தனர். உழவுத் தொழிலுக்கு உறுதுணையாயிருந்த எருதுகளை அவர்கள் பண்டைய தமிழர்கள் போலவே போற்றி வளர்த்தனர். அவை களின் இறைச்சியை உணவாகவும் அவர்கள் உட்கொண்டனர். பணப் புழக்கம் ஏற்படாத அக்காலத்தே மாடுகள் தாம் வாணிகச் செலாவணியாகப் (Exchange) பயன்பட்டன. ஒரு பொருளின் மதிப்பு இத்தனை எருதுகளின் தலைகளுக்குச் சமம் என்றே அவர்கள் மதிப்பீடு செய்வது வழக்கம். திருமணத்தின்போது எருதுகளைத் தமது மகளுக்குச் சீதனமாக வழங்குவதை ஒவ்வொரு தந்தையும் தனது கடமையாகக் கொண்டிருந்தான். ஒரு பெண்ணின் பெயர், 'எருது பல பெற்று வந்த இளங்கன்னி" என்று பொருள்படும் அல்ஃபீஸிபோயா (Alphesiboea) எனக் கூறப்படுவதிலிருந்து மேற்கண்ட வழக்கம் அக் காலத்தே பெரிதும் கடைப் பிடிக்கப்பட்டதென்பதை நன்கு உணரலாம்.

அக்கீயர்களிற் பலர் கடல் வாழ்க்கையைப் பெரிதும் விரும்பி ஏற்றனர். கடல் வாணிகத்திலீடுபட்டு அன்னர் பெரும் பொரு ளீட்டினர். எகிப்தோடும், லெவாண்ட் பிரதேசத்தோடும் வியாபாரம் சுறுசுறுப்பாக நடைபெற்றது. பினீஷியர்கள் (Phoenicians) என்ற வகுப்பினர் கீழை நாடுகளிலிருந்து பல வுலையுயர்ந்த பண்டங்களைக் கொணர்ந்து கிரீஸ் நாட்டுக்குள் குவித்தனர். கடற்கொள்ளையிலீடுபட்டுக் குறுக்கு வழியில் பொருளீட்டிய மாலுமிகள் பலராவர். எகிப்துக்குச் சென்று கொள்ளையடித்த ஒரு கொள்ளைக்காரனது வீரத்தை ஹோமர் வானளாவப் புகழ்வதிலிருந்து கொள்ளையடிப்பதென்பது தவருக அக் காலத்தே கருதப்படவில்லை என்பது நன்கு போதரு கின்றது. கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த எலிஸபெத் எனும் இங்கிலாந்தின் அரசியாரே கடற்கொள்ளைக்காரர்களைத்

தட்டிக் கொடுததுப் புகழ்ந்தார் என்ருல் கி. மு. 9-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த ஒரு கவிஞர். அத்தகையோரைப் புகழ்வதில் வியப்பொன்றுமில்லே.

அக்கீயர்களில் பலர் போர்த்தொழிலே விரும்பி மேற்கொண்டனர். வில்லும் வேலுமே அவர்களது முக்கிய படைக் கருவிகள். வெண்கலத்தால் செய்யப்பட்ட கவசங்களே அவர்கள் மார்பிலும் தலேயிலும் அணிந்து கொண்டனர். வெண்கலத் தொப்பியின்மீது குதிரை மயிர்க் குஞ்சம் ஒன்று காற்றில் பறந்து கொண்டிருக்கும். வெண்கலத்தாலான காலுறைகளேயும் அவர்கள் அணிந்திருந்தனர். எருதின் தோலால் செய்யப்பட்ட பெரிய கேடயம் அவரது இடக் கைகளே அணிசெய்தது. இத்தனே பாரமான உடற்கவசத்தோடு வீரன் ஒருவன் போர்க் களத்துக்கு நடந்துசென்று போரிட முடியாது. எனவே இரதத்தில் ஏறிக்கொண்டு படைக்களம் வரை சென்று, பின்னர் கீழே இறங்கி மாற்ருனின் தளபதியோடு அவன் போரிட்டான் எனக் கருதலாம். இரு தரப்பிலுமுள்ள முக்கிய வீரர்களே முதலில் போரிட்டனர். ஒரு தரப்பில் வெற்றி பெற்ற வீரன், தனது வீரர்களேக் கொண்டு மறுதரப்பிலுள்ள படைகளே எளிதில் தோற்கடித்தான். சாதாரண வீரர்கள் மிக எளிய போர்க் கருவிகளேயே வைத்திருந்தனர். மாவீரன் ஒருவன் முன், அவர்கள் புயற்காற்றுக்கு முன் பஞ்சுபோல் பறந்தோடி விட்டனர். போரின் முடிவில் எதிரிகளின் நகரைத் தீக்கிரையாக்குதல் அக்கால வழக்கமாகும்.

நிலத்தின் வழியாக அக்கால மக்கள் அதிகமாக வியாபாரம் செய்யவில்லே. மலேகளும், சதுப்பு நிலங்களும், வேகம் நிறைந்த ஆறுகளும் போக்குவரத்துக்குப் பெரிதும் தடையாயிருந்தன. எனவே, ஓரிடத்திலிருந்து மற்ருெரு இடத்திற்குப் பண்டங்களே எடுத்துச் செல்லக் கோவேரிக் கழுதைகளே பயன்படுத்தப் பட்டன. பல சமயங்களில் அடிமைகளே பாரந் தூக்கிகளாக அமர்த்தப்பட்டனர். திருமணம், சாவு போன்ற முக்கிய நிகழ்ச்சிகளேப் பற்றிய செய்திகள் தூது ஆட்கள் மூலமாகவே ஓரிடத்திலிருந்து இன்ஞெரு இடத்திற்கு அனுப்பப்பட்டன.

கலேகளின் நிலே

ஓடியாடித் தொழில் புரிவதிலும், வாணிகத்திலும் வல்லவர்களாயிருந்த அக்கீயர்கள் கலேயுணர்ச்சியில் சற்றுக் குறைந்தவர்களாகவே காணப்பட்டனர். பெரும்பாலோருக்கு எழுத்துவாசனை

மருந்துக்குமில்லை. பெரும் வணிகர்கள் மட்டுமே ஒருசில கணக்கர்களை வேலைக்கு அமர்த்தியிருந்தனர். உலோகங்களைப் பல வடிவமுள்ள பொருள்களாக வடித்தெடுக்கும் கலையில் அவர்கள் பெரிதும் வல்லுநர்களாயிருந்தனர். அழகிய அணிகளையும் போர்க்கருவிகளையும் உலோகத்தால் அவர்கள் செய்யக் கற்றிருந்தனர். அழகிய மட்பாண்டங்களை வனையும் குயவர்கள் அக்காலத்தே பலர் இருந்தனர். திறமை மிக்க தச்சர்கள், கொல்லர்கள், கட்டிடக் கலைஞர்கள் ஆகியோர் பல அரிய பொருள்களைச் செய்து தந்தனர். உழைப்பின் உயர்வை உணர்ந்தவர்கள், அவர்கள். ஒடிசியஸ் போன்ற மன்னர்களும்கூடத் தமக்கு வேண்டிய படுக்கைகள், மிதியடிகள், குதிரைச் சேணங்கள் முதலியவற்றைத் தாமே செய்து கொண்டனர். பெண்கள் நூல் நூற்பதிலும், முக்கியமாக ஓவியத் திரைச்சீலைகளை (Japestry) நெய்வதிலும் வல்லவர்களாயிருந்தனர். அழகிய சித்திர வேலைப்பாடுகள் துணிகளில் காணப்பட்டன. பெனிலோப், ஹெலன் போன்ற உயர்குடிப் பெண்டிருங்கூட நெய்தற்றொழிலில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிகிறது. விவசாய உழைப்பாளிகள் போலல்லாது கலைத் தொழிலிலீடுபட்ட கைவினைஞர்கள் சுதந்திரக் குடிமக்களாயிருந்தனர்.

ஓவியம், சிற்பம் ஆகிய கலைகள் ஹோமர் காலத்தில் வளரவில்லை. ட்ராய்நகரத்தில் கிடைத்துள்ள அதேனை என்ற தேவதையின் சிற்பம் அவ்வளவு அழகாக இல்லை. தேவதை அமர்ந்துள்ள நாற்காலியில் காணப்படும் பொலிவு, அதன் உருவத்தில் காணப்படவில்லை. நெளிவு சுளிவு இன்றி விறைப்பாக அவ்வுருவம் அமைந்துள்ளது. இசையும் நாட்டியமுமட்டுமே ஓரளவுக்கு வளர்ச்சி பெற்றிருந்தன. யாழ் போன்ற ஒரு இசைக் கருவியை அவர்கள் பயன்படுத்தத் தெரிந்திருந்தனர். கட்டிடக் கலையும் அவ்வளவாக வளர்ச்சியடையவில்லை. மைசீனியர்களின் மாபெரும் அரண்மனைகளை இடிக்கத் தெரிந்த அக்கீயர்களுக்கு அவற்றைப் போன்ற அழகிய கட்டிடங்களைக் கட்டத் தெரியவில்லை. வெயிலில் உலர வைக்கப் பெற்ற செங்கற்களைக் கொண்டே வீடுகளும் அரண்மனைகளும் கட்டப்பட்டன. தரையின் மீது ஒன்றும் பாவப்படவில்லை. சாதாரண மண் தரையே நன்கு கெட்டிப்படுத்தப்பட்டிருந்தது. ஒரு வகை நாணற் புற்களைக் கொண்டே கூரைகள் வேயப்பட்டன. புற்கள் மீது களிமண் பரப்பப்பட்டது. தாழ்ப்பாள்களுடன் கூடிய கதவுகள், பூட்டுகள் இவற்றைக் கொண்டு அன்னர் வீடுகளைத் திருடர்களிடமிருந்து காப்பாற்றினர். சமையலறை, புகைபோக்கி, ஜன்னல்கள், குளியலறை முதலியன சாதாரணமானவர்களின் வீடுகளில் காணப்படவில்லை. பொது

வாகக் கிரேக்கர்கள் உடல் தூய்மையைப் பேணியவர்கள். நெடும் பயணம், விளையாட்டு இவைகளுக்குப் பின் அவர்கள் கண்டிப்பாகக் குளித்தே தீர்வர். அக்கீய அரண்மனைகள் சாதாரண நாட்டுப்புறப் பண்ணைவீடுகள் போன்றே இருந்தன. ஆல்சினஸ் என்ற மன்னரின் அரண்மனையை ஹோமர் விரிவாக வருணித்துள்ளார். வெண்கலத் தகடுகள் சுவர்களின் மீது பாவப்பட்டிருந்ததாயும், கதவுகள் மீது தங்கத் தகடுகள் பதிக்கப்பட்டிருந்ததாயும், தங்கத்தாலும் வெள்ளியாலும் ஆக்கப் பெற்ற நாய்கள், வாயில் காப்பாளர் போல் நின்று கொண்டிருந்ததாயும் உள்ளே வரிசை வரிசையாய் இருக்கைகள் அமைந்திருந்ததாயும், அவ் விருக்கைகளின் மீது மகளிர் நெய்த பூ வேலைப் பாடுகள் நிறைந்த உறைகள் போடப்பட்டிருந்ததாயும், தீவட்டி ஏந்திய காவலர்கள் வழி நெடுக நின்று கொண்டிருந்ததாயும் அவர் கூறுகின்றார். கவிஞரது கற்பனை இதில் ஓரளவுக்குக் காணப்படினும், அவரது கூற்று பெருமளவுக்கு உண்மை என்றே தெரிகிறது. அகமெம்னனின் அரண்மனையும், ஒடிசியஸின் அரண்மனையும் இவ்வாறே விவரிக்கப்பட்டுள்ளன. கற்களால் பாவப்பெற்ற தரையையுடைய பெரிய அத்தாணி மண்டபம் அரண்மனையின் முன்கட்டில் அமைந்திருந்தது. நடு மண்டபத்தில் குளிர் காயும் அடுப்பங்கரை அமைக்கப்பட்டிருந்தது. அங்குதான் அரசர் தமது சகாக்களுடன் அமர்ந்து உரையாடி மகிழ்வார் எனத் தெரிகிறது. அரண்மனையின் முகப்பில் தூண்கள் நிறைந்த ஒரு தாழ்வாரம் இருந்தது. அடிமைகள் அதில்தான் உறங்கினர். அரண்மனைக்குள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி அறைகள் இருந்தன. குளியலறையும், பண்டகசாலையும் தனித்தனியே அமைந்திருந்தன. மாட்டுத் தொழுவமும், குதிரைக் கொட்டிலும் அரண்மனைக்குள்ளேயே இருந்ததால் எங்கு பார்த்தாலும் குப்பையும் கூளமுமாய்க் கிடந்தன. தனிப்பட்ட அறைகள், பொது மண்டபம், அத்தாணி மண்டபம் ஆகியவைகளே அரண்மனையின் துப்புரவு நிறைந்த இடங்களாய் விளங்கின. இவற்றைச் சுற்றி ஒரு கோட்டை கட்டப்பட்டிருந்தது. கோட்டைகள் பெரும் பாலும் மலைகளின் உச்சி மீதே கட்டப்பட்டன. மலைநகருக்குக் கீழே பல கிராமங்கள் இருந்தன. கிராமங்களும், மலைநகரும் சேர்ந்ததே ஓர் அரசு எனப்பட்டது.

ஹோமரால் வருணிக்கப்பட்டுள்ள அக்கிலஸ் என்பாரின் கேடயம் வரலாற்று முக்கியம் நிறைந்த கலைப்பொருளாகும். அக்கீயரின் அன்றாட வாழ்க்கையும் அரசியல் வாழ்க்கையும் அதில் சித்தரிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறுகிறார். வெள்ளி,

தகரம், வெண்கலம் ஆகிய மூன்று உலோகங்களால் ஆக்கப் பெற்ற அக் கேடயம் வட்ட வடிவமா யமைந்திருந்தது. அதன் மையத்தில் இடைவெளியோடு கூடிய மோதிரம் போன்ற ஒரு வளையமும், அதைச் சுற்றிச் சம தூரத்தில் ஓடிய மூன்று வளையங்களும் இருந்தன. இவ் வளையங்களுக்கிடையே கிரேக் கரின் வாழக்கை சம்பந்தமான பல நிகழ்ச்சிகள் சித்தரிக்கப் பட்டிருந்தன. கேடயத்தின் நடுவில் பூமியும், கடலும், வானமும், வானவெளியில் இயங்கும் பகலவன், பூரண நிலவு, உடுக்கள் முதலியனவும் நன்கு செதுக்கப்பட்டுள்ளன. முதலாவது வட்டத் தில் நகர்ப்புறக் காட்சிகளும், போர்க்காலக் காட்சிகளும் சித்தரிக்கப் பட்டுள்ளன. விருந்து ஒன்று கோலாகலமாக நடைபெறுகிறது. மணமகளிர் சிலர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுகின்றனர். தீவட்டியேந்திய பலர் ஊர்வலத்தார்க்கு வழி காட்டிச் செல்கின் றனர். மூத்தோர் சபை, ஒரு வழக்கை ஒருபுறம் விசாரணை செய்கிறது. இன்னொரு நகரம் முற்றுகையிடப்படுகிறது. போர்க் கோலக் காட்சிகள் பல அங்கே சித்தரிக்கப்பட்டுள்ளன. இரண் டாம் வட்டத்துள் வெவ்வேறு பருவக் காலங்களில் நடைபெறும் நாட்டுப்புறக் காட்சிகள் பல காணப்படுகின்றன. உழவர்கள் வயலை உழுதுகொண்டு செல்கின்றனர். வயலின் ஓரத்தை அடைந்ததும் அவர்கள் மதுவினை ஒரு பெண்ணிடமிருந்து வாங்கி அருந்துகின்றனர். இன்னொரு வயலில் அறுவடை நடைபெறுகிறது. மன்னர் அதைப் பார்வையிடுகின்றார். அறுவடை விழாவைக் கொண்டாடப் பலரும் ஆயத்தம் செய்கின் றனர். இளைஞன் ஒருவன் யாழ் வாசிக்க, அதற்கேற்றபடி பல யுவர்களும் யுவதிகளும், பழக் கூடைகளைக் கையிலேந்திய வண்ணம் நடனமாடிக் களிக்கின்றனர். சிங்கமொன்று எருதை வாயில் கௌவிக்கொண்டு ஓட, எட்ட நின்று நாய்கள் குரைக்க இடையர்கள் செயலற்று நிற்கும் காட்சி ஓரிடத்தில் நன்கு காட்டப்பட்டுள்ளது. இங்ஙனம் நகர்ப்புறம், நாட்டுப்புறம் ஆகிய இரு பகுதிகளிலும் நடைபெறும் நிகழ்ச்சிகள் ஒரே சமயத்தில் விவரிக்கப்பட்டுள்ளமை அறிந்து இன்புறற் பாலனவாகுமென் பதில் ஐயமில்லை.

நெஸ்டர் (Nestor) நகரத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள தங்கக் கோப்பைகள் ஹோமர் காலக் கலைப் பொருள்களில் சிறந்தவை. அவற்றுள் ஒன்றின்மேல் மாடு வேட்டையும், இன்னொன்றின் மேல் பல அழகிய காளை மாடுகளும் செதுக்கப்பட்டுள்ளன. ஆதென்ஸ் நகரக் கல்லறையொன்றில் வரைபடச் சித்திரங்கள் நிறைந்த ஜாடி ஒன்று கிடைத்துள்ளது. யுலிஸிஸின் ஊக்கு, (brooch) இன்னொரு வேலைப்பாடு செறிந்த கலைப் பொருளாகும்.

சமய வாழ்க்கை

அக்கீயரின் சமய வாழ்க்கையைப் பற்றிய விரிவான தகவல்கள் ஹோமரது கவிதைகளில் கிடைக்கின்றன. அவர்களது வருகைக்கு முன்பு, கிரீஸில் வாழ்ந்த மக்கள் கொடூரம் வாய்ந்த பல துர்த்தேவதைகளை வணங்கி வந்தனர். அவைகளை மகிழ்விக்க அவர்கள் மிருக பலியும், சில சமயங்களில் நர பலியும் தந்தனர். இத்தகைய பழக்கங்களை அக்கீயரும் ஆரம்பத்தில் கைக்கொண்டனரெனத் தெரிகிறது. ட்ராய் நகர முற்றுகைக்காகப் புறப்பட்ட அகமெம்னன் எனும் தலைவர், தாம் எடுத்த காரியம் இனிது முடிவுற வேண்டுமென்பதற்காகத் தமது அருமை மகள் இஃபிஜீனியா (Iphigeneia)என்பவளைத் தெய்வங்களுக்குப் பலி கொடுத்தார் என அறிகிறோம். நாளடைவில் இக் கண்மூடி வழக்கங்களெல்லாம் மண்மூடிப் போயின. கிரேக்கர்களின் கடவுளர்கள் பண்டைய துர்த்தேவதைகளை நாட்டை விட்டே ஓட்டிவிட்டனர். எங்கோ பாதாள உலகத்தில் வாழ்ந்த விசித்திர வடிவமான பைசாசங்களை வணங்குவதற்குப் பதிலாக இப் பூவுலகிலேயே மனித உருவில், மனிதப் பண்புடன் வாழ்ந்த கடவுளர்களை அவர்கள் வணங்க ஆரம்பித்தனர். அத்தகைய கடவுளர்க்கெல்லாம் தலைவராகக் கருதப்பட்டவர் ஜ்யூஸ் (Zeus) என்பவராவார். அவர் தெசலி நாட்டின் வடக்கேயுள்ள ஒலிம்பஸ் மலையின் உச்சியில், ஏனைய கடவுளர்கள் புடைசூழ வாழ்வதாகக் கிரேக்கர்கள் நம்பினர். நம் நாட்டுச் சிவபெருமான் கயிலைமலையில் வசிப்பதாக இந்துக்கள் நம்புவது போன்றே கிரேக்கரும் தமது தலைமைக் கடவுள், ஒலிம்பஸ் மலையின் பனி படர்ந்த சிகரங்களில் வாழ்வதாக நம்பினர். மேக மண்டலத்துக்கும் அப்பால் வாழ்ந்த அத் தெய்வங்கள் மக்களுக்கு ஆசி வழங்கவேண்டி உள்நாட்டில் பல்வேறு இடங்களில் வந்து தங்குவதாகவும் நம்பப்பட்டது. ஒவ்வொரு கடவுளுக்கும் ஒவ்வொரு தனிப்பட்ட புண்ணியத் தலமுண்டு. முருகனுக்குப் பழநி மலை, வேங்கடேசருக்குத் திருப்பதி மலை என்று தலங்கள் நம் நாட்டில் இருப்பது போலவே, அங்கும் அதீனை என்ற தேவதைக்கு ஆதென்ஸ் நகரும், அபாலோ என்ற கடவுளுக்கு டெல்ஃபி (Delphi) என்ற நகரும், ஜ்யூஸ் எனும் இறைவர்க்கு ஒலிம்பியா என்ற நகரும் தலங்களாக விளங்கின. அத் தலங்களில் அக் கடவுளர்க்காகப் பெருங் கோயில்கள் கட்டப்பட்டன. அக் கோயில்களில் பக்தர்கள் சென்று வழிபாடு நிகழ்த்தினர். ஆடுமாடுகள் பலி கொடுக்கப்பட்டன. எருதுகளின் கொழுப்புடன் கூடிய தொடை எலும்பு முக்கியமாகப் படைக்கப்பட்டது.

ஒவ்வொரு தெய்வத்துக்கும் அதற்கே உரிய தனிச் செயல்கள் சில இருந்தன. ஜ்யூஸ் எனும் கடவுள் நம் நாட்டு இந்திரனைப் போன்று இடி மழையைக் கட்டுப்படுத்தி வந்தார். எமனைப் போன்று அவர் மக்களின் தலைவிதியை நிர்ணயித்து, நல்வினை, தீவினைகளைப் பொன்னுலாய தராசுகளில் எடை போட்டு எவை அதிகமாயிருக்கின்றனவோ அவற்றின்படி அவர்களுக்குப் பலன்களை அளித்து வந்தார். ஜ்யூஸின் சகோதரரான போஸிடன் (Poseidon) எனும் கடவுள், கடல்மீதும், அதன் மீது பயணம் செய்யும் மாலுமிகள் மீதும் ஆதிக்கம் செலுத்தினர். கைவேலைப்பாடுகள் எல்லாம் (Handicrafts) அத் தேவதையின் ஆசியைப் பெற்றன என்றும், அவற்றிலீடுபட்டோரும் அத் தேவதையின் ஆசியைப் பெற்றிருந்தனர் என்றும், அதீனு என்ற தேவதையின் ஆசியைப் பெற்றிருந்தன என்றும் நம்பப்பட்டன. நோய் தீர்க்கும் மருத்துவர்களின் தலைவராகவும் கதிரவக் கடவுளாகவும் அபாலோ என்பார் விளங்கினர். அஃப்ரடைப் எனும் தேவதை கிரேக்க நாட்டு இரதியாவாள். காதல் வாழ்க்கை அவளது கடைக்கண் நோக்கைப் பொறுத்தே அமையும் என நம்பப்பட்டது. தங்களது சமுதாய வாழ்க்கையில் ஒரு ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்திய கிரேக்கர்கள் தங்களது கடவுளர்களின் வாழ்க்கையிலும் அதே ஒழுங்கு முறையைக் (Order) கண்டனர். கடவுளர்கள் யாவரும் ஒரு குடும்பமாக வாழ்ந்து தத்தமக்குரிய கடமைகளில் ஒழுங்காக ஈடுபடுவதை நாம் காண்கிறோம். ஹெர்குலிஸ், அக்கிலஸ் போன்ற வீரர்களையும் கிரேக்கர்கள் தெய்வங்களாக எண்ணி வழிபட்டனர்.

மேலே காட்டப்பட்டுள்ள கிரேக்கரின் வாழ்க்கை முறையில், நாம் சிறப்பாகக் காண்பது, எதிலும் மிதமாயிருக்கும் சீரிய பண்பேயாகும். அபாலோ தெய்வத்தின் கோயிலில் காணப்படும் இரண்டு சொற்கள் அவர்களது குறிக்கோளை நமக்குத் தெள்ளிதின் புலப்படுத்துகின்றன. மேடன் அகான் (Meden A-gan) என்பவையே அச் சொற்களாகும். "அளவுக்கு மீறுதே" என்பதே அச் சொற்களின் பொருளாகும். "அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு" என்ற பழமொழியே அவர்தம் தாரக மந்திரமாயிருந்தது. பிற்காலத்துக் கிரேக்க நாகரிகத்தின் அடிப்படைக் கொள்கையானது இங்ஙனம் ஹோமர் காலத்திலேயே நன்கு நிலைநாட்டப்பட்டு விட்டது. அக் கொள்கையின் எல்லையைக் காண அவர்கள் இன்னும் நெடுந்தூரம் பயணம் செய்ய வேண்டியிருந்தது. கி.மு. 1100-ஆம் ஆண்டளவில் ஹோமரின் "வீர யுகம்" முடிந்தது. டோரியர்கள் என்ற இன்னொரு கிரேக்க வகுப்பினர் வந்து பெலப்பொனீஷியாவில் புகுந்தனர்.

முரட்டுத்தனத்திலும் காட்டுமிராண்டித்தனத்திலும் அவர்கள் அக்கீயர்களைப் பெரிதும் விஞ்சிவிட்டனர். ட்ரின்ஸ், மைசினி போன்ற நகர்களில் காணப்பட்ட கண்கவர் அரண்மனைகள் எல்லாம் தரைமட்டமாக்கப்பட்டன. பல நூற்றாண்டுகளாக மக்கள் எறும்புகளைப் போல் அரிதின் முயன்று ஆக்கிய கலைச் செல்வங்கள் யாவும் மறைந்து போயின. ஆனால் கிரேக்க மக்களின் எண்ணங்களையும், மேதையையும் அவர்களால் அழிக்க முடியவில்லை. இரண்டாம் உலகப் போரில் தோற்கடிக்கப்பட்ட ஜெர்மனியும் ஜப்பானும் எங்ஙனம் வெகு விரைவிலேயே மக்களின் முயற்சியால் பழைய நிலையை விட உயர்ந்த நிலையை அடைந்து விட்டனவோ அதே போன்று விரைவிலேயே கிரேக்கர்கள் முன்னிலும் பன்மடங்கு ஒளிபொருந்திய ஒரு நாகரிகத்தைத் தோற்றுவித்தனர். கிரீஸின் வரலாற்றுக் காலம் என அழைக்கப்படும் நகர அரசுகளின் காலம் விரைவிலேயே மலரத் தொடங்கியது.

4. கிரேக்க நகர அரசுகளின் வளர்ச்சி

வரலாற்றுக் காலக் கிரீஸின் முதற் கட்டத்தில் நமக்குக் காட்சி அளிப்பன அதன் நகர அரசுகளாகும். இந் நகர அரசுகளின் தோற்றமும் வளர்ச்சியும் உலக வரலாற்றிலேயே முற்றிலும் புதுமையானதோர் நிகழ்ச்சி எனலாம். பழம்பெரும் நாகரிகங்கள் என்று பேசப்படுகின்ற எகிப்திய—சுமேரிய—தமிழ் நாகரிகங்கள் கூட இத்தகைய நகர அரசுகளைத் தோற்றுவிக்க வில்லை. "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்ற கொள்கையே அக்காலத்தில் எங்கும் நடைமுறையில் இருந்தது. மன்னன் ஒருவன் மாண்புடன் மையத்தில் வீற்றிருந்து தனித் தலைமை செலுத்துவதும், மக்கள் யாவரும் அம் மன்னனைத் தம் இறைவனெனக் கருதி அவன் தன் ஆணைக்குக் கட்டுப்பட்டு வாழ்வதும்தான் பண்டைய வழக்கமாயிருந்தன. ஆனால் புத்துணர்ச்சி மிக்க கிரேக்கர்களோ இவ் வழக்கத்திற்கு முற்றிலும் மாறுக நடந்து கொண்டார்கள். கோனுட்சியில் அவர்கள் வெகு விரைவிலேயே சலிப்படைந்து விட்டார்கள். பல நகர அரசுகளில் முடியரசு ஒழிக்கப்பட்டது. தங்களைத் தாங்களே ஆண்டு கொள்வதில் அவர்கள் பெரிதும் பெருமை கொண்டனர். தனி மனிதச் சுயேச்சையின் அடிப்படையில் அமைந்த அந் நகர அரசுகளை அவர்கள் தம் தாயினும் பெரியதாய் எண்ணிப் போற்றினர். தனது அரசுக்காக ஒவ்வொரு கிரேக்கனும் தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தத்தம் செய்யத் தயாராகக் காத்திருந்தான். அளவுக்கு மீறிய பற்றின் காரணமாகப் பல போர்கள் இந் நகர அரசுகளிடையே தோன்றின. இவற்றால் பல தீமைகள் விளைந்தன வெனினும், கட்டுப்பாடற்ற சுயாட்சி எனும் கதிரவன் முன் அவை மின்மினி போல் மங்கிவிட்டன. மொத்தத்தில் இந் நகர அரசுகளால் கிரேக்கர்களுக்கு வியக்கத் தக்க பல நன்மைகள் ஏற்பட்டன எனலாம்.

(1) நகர அரசுகளின் தோற்றம்

ஆரம்பத்தில் கிரீஸில் மக்கள் தனித்தனிக் குலங்களாகப் (tribes) பிரிந்தே வாழ்ந்து வந்தனர். ஒவ்வொரு குலமும்

தன்னே ஒரு மூதாதையின் வழிவந்த ஒரு கூட்டமெனக் கருதிக் கொண்டது. ஒரு குலத்துக்கும் மற்றொரு குலத்துக்கும் இடையே கொள்வினை கொடுவினை போன்ற உறவு முறைகள் அக் காலத்தே இல்லை. கிரேக்கச் சமுதாயம் எனும் கடலில் அவை தனித்தனித் தீவுகள்போல் விளங்கி வந்தன. நடையுடை பாவனைகளில் குலத்துக்குக் குலம் பல வேறுபாடுகளுடன் காணப் பட்டன. நாளடைவில் ஒவ்வொரு குலமும் தனது கிளைக ளோடு ஒன்றுகச் சேர்ந்து ஒரு கிராமத்தை அமைத்துக் கொண்டது. கிராம மக்கள் யாவரும் இரத்த பாசத்தால் பிணைக்கப்பட்டு ஒன்றுக வாழ்ந்தனர். தெய்வீக வீரன் ஒருவனின் சந்ததியார் என்ற நினைப்பே அவர்களது ஒற்றுமைக்கு அடிப்படையாயிருந்தது. மற்றும் ஒரே விதமான வழிபாட்டு முறையும், சமய நம்பிக்கைகளும் அவர்களை ஒன்றுபடுத்தின. கிராம நிலம் அனைத்தும் அக் கிராமத்தில் வாழ்ந்த குடிமக்கள் அனைவருக்கும் பொதுவாகக் கருதப்பட்டன. அவற்றை ஒவ்வொரு குடும்பமும் தனக்குள் பிரித்துக்கொண்டு பயிரிட்டு வந்தது. ஆனால் எந்தக் குடும்பத்துக்கும் தனது நிலத்தைப் பிறருக்கு மாற்றவோ விற்கவோ உரிமை கிடையாது. குலத் தலைவர்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்த குடிமக்கள், கிராமத் தலைவர் அல்லது சிற்றரசர் ஒருவருக்கு அடங்கி நடக்கக் கற்றுக் கொண்டனர். ஆனால் அரசர் என்பவர் உண்மையிலேயே மூத்தோர் குலத் தலைவராகவே இருப்பது வழக்கம். ஆண்டி லும் அறிவிலும் முதிர்ந்தோர் அடங்கிய சபை ஒன்றின் ஆலோசனையின்படியே கிராமத் தலைவர் நடந்து கொண்டார். சில சமயங்களில் அவர் கிராம மக்கள் அனைவரும் அடங்கிய பேரவையைக் கூட்டி ஆலோசிப்பதும் உண்டு. இங்ஙனம் ஒரு வம்சத்தில் (Clan) வந்த அனைவரும் சேர்ந்து பொதுவான அரசியல்—சமுதாய—பொருளாதார முயற்சிகளில் ஈடுபட்ட இடம் ஆதியில் ஒரு கிராமமாகவே இருந்து வந்தது. இங்ஙனம் இரத்த பாசத்தின் அடிப்படையில் அமைந்த கிராமச் சமுதாயங் களே (Village Cammunities) நாளடைவில் நகர அரசுகளாக மாறியமைந்தன. ஒரு சில கிராமச் சமுதாயங்கள் தங்களது குல ஒற்றுமையை நாளடைவில் மறந்து, பல பொதுக் காரியங்களுக் காக ஏனைய கிராமங்களோடு ஒன்று சேர்ந்தன. நகர அரசுகள் வேறுபட்ட குலங்களைக் கொண்ட பல கிராமங்களின் கூட்டுறவில் பிறந்தவையே ஆகும். கிராமங்களில் பல இங்ஙனம் ஒன்றன்பால் ஒன்று கவரப்பட்டு, பொதுவான அரசியல் காரியங்களுக்காக ஒருங்கே இணைகின்ற முறையைக் கிரேக்கர்கள் சினேகிஸம் (Synoecism) என்று அழைத்தனர். சினேகிஸம் என்ற கிரேக்கச் சொல்லுக்கு ஒன்றியம் (Union) என்பதே நேர்ப் பொரு

ளாகும். ஆனால் உண்மையில் அது பல கிராமச் சமுதாயங்கள் ஒருங்கே இணையப் பெற்ற ஓர் அரசியல் கழகத்தை அல்லது நகர அரசையே குறித்தது. ஒரே மாதிரியான சட்டம், அரசாங்கம், வழிபாட்டு முறை ஆகியவையே அத்தகைய அரசியல் ஒன்றியங்களின் அடிப்படையான சிறப்பியல்புகளாகத் திகழ்ந்தன. சினேகிஸம் (Synoecism) என்ற முறையில் பன்னிரண்டு வேறுபட்ட கிராமங்கள் ஒருங்கே இணைந்த அரசியல் ஒன்றியமே ஆதென்ஸ் நகர அரசாக விளங்கியது. ஐந்து வேறுபட்ட கிராமங்களின் ஒன்றியமே ஸ்பார்ட்டா எனும் நகர அரசாக விளங்கியது.

சினேகிஸம் என்ற அரசியல் கூட்டுறவு முறையானது படிப்படியாக ஏற்பட்டதோர் நிகழ்ச்சியாகும். அதற்கான காரணங்கள் பல. சில சமயங்களில் அவை மத அடிப்படையில் தோன்றி வளர்ந்தன. பல கிராமத்தைச் சேர்ந்த மக்கள் ஒரு பொது இடத்திற்கு அடிக்கடி சென்று வழிபாடு செய்து வருவது வழக்கம். இங்ஙனம் வழிபாட்டிற்கே ஒன்றுசேர்ந்த மக்கள் நாளடைவில் அரசியல் காரியங்களுக்காக ஒருங்கு இணைந்து ஒரு நகர அரசைத் தோற்றுவித்துவிடுவர். வேறு சில கிராமங்கள், ஒன்றோடொன்று வாணிகம் செய்தற்குரிய முறையில் அமைந்திருக்கும். வாணிகத்திற்காக அடிக்கடி சந்தித்த கிராம மக்கள் நாளடைவில் ஒற்றுமையடைந்து ஓர் அரசியல் சமுதாயத்தைச் சமைத்து விடுவதுமுண்டு. தற்காப்பின் காரணமாகவும் பல கிராமங்கள் ஒன்றுசேர்வது வழக்கம். தனித்தனியாக இருப்பதை விட ஒன்றாக இருந்தால் எதிரிகளை எளிதில் விரட்டியடிக்கலாம் எனப் பல கிராமங்கள் எண்ணின. மேலும் எதிரிகள் படையெடுப்பின் போது பல சிறு கிராமங்களுக்குப் புகலிடம் அளிக்கத்தக்க நிலையில் ஒரு சில குன்றுகள் அமைந்திருந்தன. எனவே வலிமையற்ற அரசர்கள் அத்தகைய குன்றுகளில் கோட்டை ஒன்றைக் கட்டிக்கொண்டனர். ஆபத்துக் காலங்களில் அக் கோட்டையிலும் குன்றுகளிலும் அடைக்கலம் புக விரும்பிய அத்தனை கிராமங்களும் ஒன்று சேர்ந்த சில சமயங்களில் ஒரு நகர அரசாக அமைந்தன. இன்னும் சில சமயங்களில் தனிப்பட்ட அரசர்கள் தங்கள் வலிமையைப் பெருக்கிக் கொள்வதற்காக அண்டையிலுள்ள கிராமங்களை எல்லாம் தங்களது கிராமத்தோடு சேர்த்துக்கொள்ள விழைந்தார்கள். இவ் விழைவின் காரணமாகவும் ஒருசில நகர அரசுகள் தோன்றலாயின. மேலும் கிரீஸின் இயற்கை யமைப்பே சிறுசிறு நகர அரசுகள் தோன்றக் காரணமாயிருந்தது என்பதை நாம் ஏற்கெனவே கண்டோம். நாற்புறமும் மலைகளால்

சூழப்பட்ட பள்ளத்தாக்குகளில் ஏற்பட்ட கிராமங்கள் யாவும் தங்களைத் தனித்தனி நகர அரசுகளாக அமைத்துக் கொண்டன. பொதுவான வாழ்விடம் என்ற காரணத்தால் ஏற்பட்ட நாட்டுப் பற்றுனது பல நகர அரசுகளின் தோற்றத்திற்குக் காரணமா யிருந்தது. அநேகமாய் ஒன்றுக்கொன்று அருகருகே அமைந் திருந்த கிராமங்கள் யாவும் ஒன்றுசேர்ந்து நகர அரசுகளாய் மாறின. இங்ஙனம் பல்வேறு காரணங்களால் கிரீஸில், சினேகிசம் என்ற அரசியல் சேர்க்கையானது பண்டைக் காலத்தே ஏற்பட்டுப் பல சிறு நகர அரசுகள் நாடெங்கும் பூக்கலாயின.

(2) நகர அரசுகளும் தற்காலத் தேசிய அரசுகளும்

கிரீஸில் தோன்றிய நகர அரசுகளுக்கும் இக் காலத்திய தேசிய அரசுகளுக்கும் உள்ள வேறுபாடுகள் பல. உருவத்தில் நகர அரசுகள் மிகமிகச் சிறியவை. எனவே அதன்கண் வாழ்ந்த குடிமக்கள் அனைவரும் அதன் அரசாங்க அலுவல்களில் பங்கெடுத்துக் கொள்ள முடிந்தது. மன்னரும் அவரது ஆலோசனை மன்றமும் தங்களது தீர்மானங்களை வெளியிட்டு நிறைவேற்றுவது நகர அரசுகளில் எளிதில் முடியக்கூடிய செயலாயிருந்தது. ஆனால் இக்காலத்தில் தேசிய அரசோ வெனின், அளவில் நகர அரசை விடப் பன்மடங்கு பெரியது. குடிமக்கள் அனைவரும் ஓரிடத்தில் கூடுவதென்பதோ, அரசாங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதென்பதோ முடியாத காரியம். எனவேதான் குடிமக்கள் தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந் தெடுத்துச் சட்ட மன்றங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். இங்ஙனம் பிரதிநிதிகள் மூலமாகத் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளும் போது அது பிரதிநிதித்துவ ஜனநாயகம் (Representative Democracy) என அழைக்கப்படுகின்றது. கிரேக்க நகர அரசுகளில் நிலவிய ஆட்சிமுறை நேர்முக ஜனநாயகம் (Direct Democracy) எனப் பேசப்படுகிறது.

நகர அரசுகளில் வாழ்ந்த மக்கள் நாட்டுப்பற்று மிகுந்தவர் களாகக் காணப்பட்டார்கள். அவர்களது பேச்சும் மூச்சும் தாம் பிறந்து வளர்ந்த நாட்டைப் பற்றியே அமைந்திருந்தன. நாட்டின் பெருமைக்காக அவர்கள் எவ்விதத் தியாகத்தையும் செய்யக் காத்திருந்தார்கள். ஆனால் தற்காலத் தேசிய நாடுகளில் அவ்வளவு தீவிரமான நாட்டுப்பற்றை நாம் குடிமக்களிடம் காண்பது அரிது. கிரேக்க நாட்டுக் குடிமகன் ஒவ்வொருவனும் தனது நகர அரசை வெறும் அரசியல் நிறுவனமாக மட்டும்

கருதவில்லை. தனது முழு மனிதத் தன்மையையும் மலர்விக்க வந்த ஒரு நிலையமென்றே அரசினைக் கருதி யிருந்தான். எப்படியோ வாழ்க்கை வாழ்ந்து விடுவது என்பது ஒன்று; ஆனால் வாழ்வாங்கு நல்ல முறையில் வாழவேண்டுமென்பது இன்னொன்று. இவற்றுள் பின்னதையே கிரேக்கர்கள் கடைப் பிடிக்க விழைந்தனர். அத்தகைய குறிக்கோளை எய்த அரசினை அவர்கள் ஒரு நற்கருவியாகவே நினைந்தனர். நல்வாழ்வு என்பது வெறும் சுக போகங்களால் அமைவதொன்றன்று. நாட்டுப்பற்று, கலைகளிலும் கல்வியிலும் ஈடுபாடு, கட்டுப்பாடு இவைகளே நல்வாழ்வின் இலக்கணங்கள். 'நகர அரசு ஒன்றில் தான் இந்த நற்பண்புகள் ஒரு மனிதனிடம் மலர முடியும்', என்பதே கிரேக்கர்களின் நம்பிக்கையாகும். ஆனால் தற்கால அரசுகளில் குடிமக்களின் ஒழுக்கம், கட்டுப்பாடு, நல்வாழ்வு இவைகளைப் பற்றிக் கவலைப்படுவோர் மிகமிக அரிதாகக் காணப் படுகின்றனர். உடலின்பமே பெரிதாக இன்றைய அரசுகளில் காணப்படுகின்றது. உடல் வளர்ச்சி, ஆன்மீக மலர்ச்சி இவற்றில் அவ்வளவாக அவை அக்கறை கொள்வதில்லை. இவற்றைக் கவனித்துக் கொள்ளக் கல்விக் கூடங்கள் மத நிலையங்கள் போன்ற நிறுவனங்கள் தற்காலத்தே தனித்து இயங்குகின்றன. ஆனால் கிரேக்க நகர அரசுகள் என்பன மக்களின் கல்விக்கூடங்களாகவும், திருச்சபைகளாகவும் ஒரே சமயத்தில் விளங்கின.

நகர அரசுகளில் தலைநகர் என்ற அச்சினைச் சுற்றித்தான் அத்தனை அரசியலும் வாழ்வும் அக்காலத்தே சுழலும். தலைநகர் ஒன்றுதான் நாட்டில் முதலிடம் பெற்றுத் திகழும். மற்ற கிராமங்கள் யாவும் அதற்கடுத்த நிலையிலேயே வைத்து எண்ணப்படும். ஆனால் தற்காலத்தேசிய நாடுகளில் தலைநகர் என்பது அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததொன்றன்று. நாட்டிலுள்ள பல பெரிய நகரங்களில் அதுவும் ஒன்று. அவ் வளவுதான். எனவேதான், இக்காலத்தே பிற நாட்டார் வந்து ஒரு நாட்டின் தலைநகரைப் பிடித்துக் கொண்டால், அரசாங்கம் வேறொரு நகரத்துக்குத் தனது அரசாங்கத்தை மாற்றிக் கொள் வதென்பது எளிதாக முடிகின்றது. கிரேக்க நகர அரசுகளில் வாழ்ந்த குடிமக்கள் அனைவரும், சட்டங்கள் செய்யவும், பட்டங்கள் ஆளவும் தகுதி பெற்றிருந்ததால் அவர்கள் பொறுப்புணர்ச்சி மிகுந்தவர்களாயும், சட்டத்துக்குக் கட்டுப்பட்டவர்களாயும் விளங் கினர். ஆனால் தற்கால அரசுகளில் வாழும் மக்களிடம் அரசியல் விழிப்பும், சட்டம் ஒழுங்கு இவற்றை மதித்து நடக்கும் தன் மையும் அவ்வளவாக இல்லை என்றே கூறலாம்.

இங்ஙனம் பல வகைகளில் தற்கால அரசுகளைவிடச் சிறந்து விளங்கிய கிரேக்க நகர அரசுகளில் ஒரு சில குறைபாடுகளும் இல்லாமல் இல்லை. அளவில் சிறியனவாயிருந்ததால் அவைகள் எளிதில் எதிரிகளின் வசப்பட்டு விட்டன. மாசிடோனியா போன்ற பெரிய நாட்டுக்கு முன் நகர அரசுகள் தலை நிமிர்ந்து நிற்க இயலவில்லை. மேலும் குறுகிய நாட்டுப் பற்றின் விளைவாக நகர அரசுகள் இடைவிடாது சண்டையிட்ட வண்ணமிருந்தன. ஒற்றுமை என்பது அவைகளிடையே மருந்துக்குமில்லை. நகர அரசு அளவில் சிறியதாக இருந்ததாலும், அரசியலில் அனைத்துக் குடிமக்களும் பங்கெடுத்துக் கொண்டதாலும் கட்சிப் பூசலும் போட்டியும் பொறுமையும் ஒவ்வொரு நகரத்தும் தலைவிரித்தாட லாயின. இத்தகைய பூசல்கள் நகர அரசுகளின் திண்மையைப் பெருமளவிற்குக் குன்றச் செய்து விட்டன. மற்றும் கிரேக்க நகர அரசுகளின் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொண்ட குடிமக்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகும். மற்றபடி அன்னார்க்கு ஏவல் செய்த அடிமைகளின் கூட்டமே அங்கு மிக அதிகமாயிருந்தது. உரிமையற்ற அடிமைகள் மிகுந்திருந்த காரணத்தாலேயே கிரேக்கச் சமுதாயம் கட்டுக்கோப்பற்று நாளடைவில் குலைந்து போகலாயிற்று. வெளி நாட்டாரின் படையெடுப்பின் போது இவ் வடிமைகள் இயற்கையாகவே நாட்டை அவர்கட்குக் காட்டிக் கொடுத்து விட்டனர். எனவே கிரேக்கப் பண்பாடு என்ற தூய பாலில் ஒது துளி நஞ்செனவே, அவர் தம் அடிமை முறையானது காட்சியளித்ததெனலாம்.

(3) நகர அரசுகளின் படித்தர வளர்ச்சி

நகர அரசுகளின் வளர்ச்சியில் பல படித்தரங்கள் காணப் பட்டன. தொடக்கத்தில் அவைகளில் கோளாட்சியே எங்கும் காணப்பட்டது. ஒருங்கு சேர்ந்த பல கிராமங்களுள் மிகவும் சிறந்ததொரு கிராமத்தின் தலைவனே நகர அரசின் இறைவனாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டான். அவனுக்கு ஆலோசனை கூறப் பெருமக்களடங்கிய மூத்தோர் சபை ஒன்றும், குடிமக்கள் அனைவரும் கொண்ட பேரவை ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால், தனி ஒரு அரசனது ஆட்சி விரைவிலேயே கிரேக்கர்களுக்குச் சலிப்பை ஊட்டியது. "பழகப் பழகப் பாலும் புளிக்கும்" என்றபடி மன்னருடைய மதிப்பு மக்களிடையே தேய ஆரம்பித்தது. அவர் தம் குணங்களை விடக் குறைகளே மக்களுக்குப் பளிச்சென்று தெரிந்தன. எனவே மன்னனின் அதிகாரங்கள் கொஞ்சம் கொஞ்சமாக மூத்தோர் சபையினரின் கைகளுக்குச் சென்று விட்டன. பிரபுக்கள் அல்லது உயர்குடிப்

பெருமக்களாட்சியாக (Aristooracy) அஃது மலர்ந்தது. இப் பெருமக்கள் பெரும்பாலும் நல்ல செல்வந்தர்களாயும் பிறநலம் பேணும் பெற்றியாளர்களாயும் இருந்தனர். அதன்பின் சுயநலம் படைத்த ஒருசில பணக்காரர்கள் நாட்டின் அரசாங்கத்தைக் கைப் பற்றினர். உயர்குடிப் பெருமக்களாட்சி என்பது செல்வச் சிறு குழு ஆட்சியாக (Oligarchy) மாறியது. நாளடைவில் அவர் தம் சுரண்டலை மக்கள் எதிர்த்தனர். வல்லவன் ஒருவன் அவ்வெதிர்ப் பாளர்களுக்குத் தலைமை தாங்கினன். செல்வம் படைத்த சிறு குழுவினர் ஆட்சி ஒழிந்தபின் அவ் வல்லவர்களே (Tyrants) தனியரசு செலுத்தினர். அவ் வல்லரசர்கள் நாட்டிற்குப் பல நன்மைகளைச் செய்தனர். ஆனால், மக்களுக்குச் சுதந்திரத்தை வழங்க மறுத்து விட்டார்கள். எனவே, சரியான சமயத்தில் மக்கள் கிளர்ந்தெழுந்து வரம்பற்ற வல்லரசைக் (Tyrannis) கவிழ்த்து விட்டு வரம்புக்குட்பட்ட மக்களாட்சியை மீண்டும் கொணர்ந்தார்கள். இங்ஙனம் கிரீஸ் நாடு, ஒரு அரசியற் பரிசோதனைக் கூடமாக நாளடைவில் மாறலாயிற்று.

கோனுட்சி

நகர அரசுகள் பெரும்பாலும் தொடக்கத்தில் கோனுட்சி முறையைக் கொண்டிருந்தன. அத்தகைய ஆட்சி முறையின் இயல்புகளை ஹோமர் கால நாகரிகம் என்ற இயலில் நாம் ஏற்கெனவே கண்டோம். ஆனால் நகர அரசுகள் கோனுட்சி முறைக்கு அவ்வளவு ஏற்றதாக இல்லை. அளவில் சிறியதாக இருந்தமையால் குடிமக்கள் மன்னனை அடிக்கடி சந்திக்க நேர்ந்தது. எனவே நாளடைவில் அவர்கள் மன்னனைத் தங்களில் ஒருவனாக எண்ண முடிந்ததே தவிர அவனை ஓர் உயர்ந்த தெய்வீகப் பிறவி என எண்ணி வழிபட இயலாமல் போயிற்று. எனவே, மன்னனுடைய நிலை வெகுவிரைவிலேயே பலவீனம் அடைந்தது. ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு வரை மட்டுமே கோனுட்சி முறை கிரேக்க நகர அரசுகளில் நீடித்தது. கி. மு. எட்டாம் நூற்றாண்டின் இடைப் பகுதியிலேயே கிரேக்க நாட்டில் முடியரசு ஒழிந்தது எனலாம். ஸ்பார்ட்டா நகரம் ஒன்றில் மட்டுமே முடியரசு தொடர்ந்து நீடித்து வந்தது. ஏனைய நகர அரசுகளில் பல வகையான மாற்றங்கள் நிகழ்ந்தன. ஆதென்ஸ் போன்ற நகர அரசுகளில் அதிகாரங்கள் மன்னனிட மிருந்து பிரபுக்களின் கைக்கு மாறின. கொரிந்து (Corinth) போன்ற வேறு சில நகர அரசுகளில் அதிகாரமானது அரச வம்சத்திடமே தொடர்ந்து நீடித்தது. ஆனால் குறிப்பிட்ட ஒரு குடும்பத்தினரோ குடியினரோ மட்டும் அப் பதவியை வகிக்காமல்

அவ் வம்சத்தைச் சார்ந்த பல்வேறு குடும்பங்களும் ஒருங்கே சேர்ந்து கொண்டு அதிகாரங்களைச் செலுத்தின. வேறு சில நகர அரசுகளில் மன்னனை மக்கள் பெயரளவுக்கு வைத்துக் கொண்டார்கள். ஆனால் உண்மையான அதிகாரமானது வேறு சில நிறுவனங்களால் செலுத்தப்பட்டன.

முடியரசு கிரீஸில் வீழ்ச்சியுற்றதற்குப் பல காரணங்கள் பேசப்படுகின்றன. ஆரம்பக் காலத்தில் கிரேக்கர்கள் ஓரிடம் விட்டு வேறு இடங்களுக்குச் சென்று கொண்டே இருந்தார்கள். நிலையான வாழ்க்கையை அவர்கள் மேற்கொள்ளவில்லை. அத் தகைய நேரத்தில் அவர்கட்கு வலிமை வாய்ந்த தலைவன் அல்லது மன்னன் மிகவும் தேவைப்பட்டான். ஆனால் மக்கள் நிலையான வாழ்க்கையை மேற்கொண்ட பொழுது அத் தகைய தலைவர் அவர்கட்கு அவசியமில்லாமற் போயிற்று. போரும் பூசலும் ஓய்ந்த அமைதியான காலத்தே இராணுவ வீரன் ஒரு வனது சேவை அவ்வளவாகத் தேவைப்படவில்லை.

எனவே அந்நாட்டுமக்கள் பிரபுக்களின் ஆதிக்கத்தையோ மக்களாட்சியையோ விரும்பலாயினர். இவ் விருப்பத்திற்குத் தூபம் போடுவதைப் போல் ஒரு சில மன்னர்களின் நடத்தையும் அமைந்திருந்தது. பல மன்னர்கள் தான்தோன்றித் தனமாக நடந்து கொண்டு மக்களைப் பல வகையிலும் துன்புறுத்தினர். மன்னர்களது குடும்பங்களிலேயே போட்டியும் பொறுமையும், சண்டையும் சச்சரவும் தலைவிரித்தாட ஆரம்பித்தன. எனவே மன்னர்கள் மீது மக்கள் வைத்திருந்த கொஞ்ச நஞ்ச மதிப்பும் மரியாதையும் மறையலாயின. இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பிரபுக்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். ஆட்சிக் கலையில் அவர்கள் ஏற்கெனவே நன்கு பயிற்சி பெற்றிருந்தனர். நாட்டை நல்ல முறையில் ஆள முடியும் என்ற நம்பிக்கை அவர்களிடத்தில் மிகுந்து காணப்பட்டது. எனவே ஏற்கெனவேயே உளுத்துப் போயிருந்த முடியரசை ஒழித்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றி னர். வடக்கே மாசிடோனியாவிலும், தெற்கே ஸ்பார்ட்டா விலும் தவிர, கோனூட்சி முறை கிரீஸில் ஒழிந்தது. அதற்குப் பதிலாக உயர்குடிப் பெருமக்கள் ஆட்சி எங்கும் தழைக்க லாயிற்று.

பெருமக்களாட்சி

கோனூட்சி நிலவிய காலத்தில் மன்னர்களுக்கு வலக் கரம்போல் நின்று அரசின் நடவடிக்கைகளை எல்லாம்

கவனித்துக் கொண்டு வந்தவர்கள் உயர் குடியில் பிறந்த பெரு மக்களாவர். அரிஸ்டாகிரஸி என்று சொல்லப்படுகின்ற இந்த ஆட்சியை, நாட்டில் உள்ள தலைசிறந்தவர்களின் ஆட்சி என்றே கிரேக்கர்கள் கருதினர். அக்காலத்தே சமுதாயத்தின் தலை சிறந்தவர்களாக எண்ணப்பட்டவர்கள் மேட்டுக்குடியில் பிறந்த பிரபுக்களே ஆவர். இங்ஙனம் பிரபுக்களிடம் அரசியல் அதிகார மானது மாற்றப்பட்டபொழுது நாட்டில் உள்ள எல்லாப் பிரபுக் களும் அவற்றை அனுபவிக்க இயலவில்லை. ஒரு சில பிரபுக் குடும்பத்தினரே அரசியல் அதிகாரங்களை எல்லாம் தனியுரிமை யுடன் கையாண்டனர். ஒரு சில இடங்களில் அரச வம்சத்தைச் சார்ந்த பிரபுக்கள் மட்டுமே அரசியல் அதிகாரங்களைக் கைப்பற்ற முடிந்தது. கொரிந்து என்ற நகர அரசில் தொன்றுதொட்டு ஆண்டு வந்த அரச வம்சத்தைச் சார்ந்த பிரபுக்களே ஆட்சி யாளர்களாக அமர்ந்தனர். உயர்குடியில் 'பிறந்தவர்களுக்கு இயற்கையாகவே திறமையும் தகுதியும் அமைந்திருக்கும்' என்பது கிரேக்கர்களின் நம்பிக்கை. உடல் உறுதியும், உள்ளத் தெளிவும், வீரமும், பேராசையின்மையும், பொது நன்மைக்காகப் பாடுபடுவதில் ஆர்வமும் கொண்டவர்களே பெருமக்கள் எனக் கருதப்பட்டனர்.

இத்தகைய குணங்கள் யாவும் தங்களிடத்தில் இயல்பாகவே பொதிந்து கிடப்பதாகப் பிரபு வர்க்கத்தினர் கூறிக்கொண்டனர். எனவே தான் 'அரிஸ்டாகிரஸி என்ற ஆட்சி முறை, மற்ற எல்லா ஆட்சி முறைகளையும் விட மிகச்சிறந்தது' எனப் பிளேடோ போன்ற அறிஞர்கள் கூறுகிறார்கள்.

பெருமக்களாட்சியின் சிறப்பியல்புகள் எனப் பேசப்படுபவை இரண்டாகும். ஒன்று செல்வம், மற்றொன்று தெய்வீகப் பிறப்பு. கிரேக்கப் பிரபுக்கள் அனைவரும் ஏதேனும் ஒரு கடவுள் வழிவந்த வர்கள், அல்லது பண்டைய மாவீரன் ஒருவனது மரபைச் சார்ந்தவர்கள் என்றே கூறிக்கொண்டனர். ஒரு சிலர் பரம்பரை யாகவே சமயச் சடங்குகளைச் செய்து வந்தனர். அத்தகைய உரிமை அவர்களுக்குக் கடவுளால் அளிக்கப் பெற்ற ஒன்று என்று அவர்கள் கருதினர்கள். அத்தகையோரும் நாட்டில் பெருங்குடி மக்களாகக் கருதப்பட்டனர். இத்தகைய குடிப் பிறப்பைவிடச் செல்வம்தான்ஒருவனுடையசமுதாய உயர்விற்குப் பெரிதும் இன்றியமையாததாக இருந்தது. ஏனெனில் அக் காலத்தே பெருங்குடி மக்களாகக் கருதப்பட்டவர்கள் தமக்கென்று ஒரு சிறு சேனையை வைத்திருந்தார்கள். அத் தகைய சேனையை

வைத்துப் பராமரிக்க வேண்டுமானால் அதற்குப் பரம்பரையாகச் சொத்தானது பெரிதும் தேவையாகும்.

கிரேக்க வரலாற்றின் தொடக்கக் காலத்தில் ஒருவனது செல்வமானது அவன் வைத்திருக்கும் நிலம், ஆடு, மாடு இவை களுக்கு ஏற்பவே மதிப்பிடப்பட்டது. எனவே ஆரம்பக் காலக் கிரேக்கப் பெருங்குடி மக்கள் பெரிய நிலப்பிரபுக்களாகவே இருந் தனர். அவர்கள் இயற்கையிலேயே வள்ளல் தன்மை பொருந் தியவர்களாக விளங்கினர். தாராள மனப்பான்மையும், கொடை உள்ளமும், சமுதாயத்தின் நலன்களுக்காகப் பாடுபடுகின்ற தியாக மனப்பான்மையும் பெருங்குடிப் பிறந்தாரின் முக்கியப் பண்புகளாக மதிக்கப்பட்டன. எனவே இத்தகைய பிரபுக்கள் தான் நாட்டை ஆளத் தகுதி பெற்றவர்கள் என்ற கருத்து மக்களிடையே நன்கு வேரூன்றியிருந்தது. பரம்பரை பரம்பரை யாக இத்தகைய பிரபுக்கள் நாட்டின் பல்வேறு துறைகளில் தலைமை தாங்கி ஆட்சிப் பொறுப்பை மிகத் திறமையாக நிர்வ கித்து வந்தனர். பிரபுக்களின் ஆட்சி நிலவிய கிரேக்க நகர அரசுகளில் இரண்டு அல்லது மூன்று நிர்வாக அதிகாரிகளைப் பிரபுக்கள் மன்னனுக்குப் பதிலாக நியமித்து நாட்டை ஆளச் செய்தனர். ஆனால் மன்னன் அனுபவித்து வந்த தனி அதிகாரங்கள் எவையும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. பிரபுக் களின் விருப்பத்திற்குக் கட்டுப்பட்டே அவர்கள் நாட்டை ஆண்டு வந்தனர். இத்தகைய வெவ்வேறு அதிகாரிகளைத் தேர்ந் தெடுக்கவும், அவ்வப்போது அவர்களைக் கண்காணித்துக் கட்டுப்படுத்தவும் மூதறிஞர் மன்றம் ஒன்று இருந்தது.

அதில் உறுப்பினராயிருந்தவர்கள் அனைவரும் பிரபுக்கள் வம்சத்தில் வந்தவர்களாகவே இருந்தனர். மன்னனது ஆட்சிக் காலத்தில் ஓரளவு பெருமையுடன் இருந்த பொதுமக்கள் மன்றம் பிரபுக்களின் ஆட்சிக் காலத்தே தனது முக்கியத்துவத்தை இழந்து சீர் குலைந்தது. அதற்கிருந்த அதிகாரங்கள் முற்றிலும் நீக்கப்பட்டுவிட்டன. பிரபுக்கள் ஆட்சியின் ஒரு முக்கிய நற் பண்பு எதுவெனின் குறிப்பிட்ட ஒரு சில காரியங்களை மேற் கொள்ள அவ்வப்போது நியமிக்கப்பட்ட சிறப்பு வாரியங்களாகும். (Specal Commitees) இராணுவத்தைப் பற்றிய பணிகளையும், வீடு கட்டும் திட்டம், நகராண்மைத் திட்டம், குடிநீர்த் திட்டம்போன்ற திட்டங்களைத் தீட்டித் அவைகளை வெற்றிகரமாகச் செயல்படுத்த தனிப்பட்ட வாரியங்கள் அமைக்கப்பட்டன. இத்தகைய வாரியப் பெருமக்களின் ஆட்சிமுறையானது பிரபுக்களின் ஆட்சியில்தான் முதன் முதலில் கிரீஸில் கெண்டுவரப்பட்டது.

பிரபுக்களின் ஆட்சியினால் மக்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் பல. தீமைகளும் உள. இத்தகைய ஆட்சி நிலவிய காலத்தில் தான் மக்களுடைய அரசியல் விழிப்புணர்ச்சியும், பொறுப்பும், கடமையுணர்ச்சியும் நாட்டில் பெரிதும் வளர்ந்தன. ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் முதலில் தங்களைத் தாங்களே கட்டுப் படுத்திக் கொள்ளவேண்டும். அதன் பின்னர் நாட்டை ஆள முற்படவேண்டும் என்ற உணர்வானது மக்கள் மனத்திலே நன்றாகப் படிந்த காலம் இதுதான் எனலாம். ஆட்சிக் கலையில் நன்கு ஈடுபட விரும்பிய குடிமகன் ஒவ்வொருவனும் தனது உடலையும் உள்ளத்தையும் முதலில் நன்கு ஓம்பினான். அதன் பின் நாட்டு மக்களின் நலனுக்காகப் பாடுபடவேண்டும் என்ற குறிக்கோளைத் தன்னகத்தே நன்கு வளர்த்துக் கொண்டான். தனது உடல், பொருள், ஆவி மூன்றும் பொது நன்மைக்கே படைக்கப்பட வேண்டியவை எனும் கருத்தானது குடிமக்கள் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஆழமாகப் பதிந்திருந்தது. இரண்டாவதாக மக்களுடைய மனத்தில் அரசியல் சட்டங்களைப் பற்றிய தெளிவான கருத்துகள் இக்காலத்தில் தான் நன்கு மலர்ந்தன எனலாம். பண்டு தொட்டு நாட்டில் பழக்கத்தி லிருந்த மரபுகள் சட்டத்தின் வடிவத்தைப் பெறலாயின. நாட்டின் சட்டத்தை உருவாக்கக் கூடிய அறிஞர்கள் ஆங்காங்கே தோன்றலாயினர். அத்தகைய நிபுணர்களின் சேவைகளைப் பிரபுக்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள். வெறும் பேச்சளவில் இருந்த பற்பல பழக்க வழக்கங்களை எல்லாம் ஏட்டில் வடித்தெடுக்க அவர்களுக்குப் பல வகைகளிலும் ஊக்கத்தையும் ஆக்கத்தையும் அவர்கள் நல்கினர். மூன்றாவதாக மக்களின் வாழ்வு ஒரு நல்வாழ்வாக மலர்ந்த காலமும் இதுவே. எப்படி யாவது வாழ்ந்தால் போதும் என்ற நிலை மாறி, இப்படித்தான் வாழவேண்டும் என்ற திட்டம் மக்கள் மனத்தில் உருவாகியது. செம்மையான முறையில் வாழ்வதே மக்களின் குறிக்கோளாக இருந்துவந்தது. அத்தகைய வாழ்க்கையை மலரச் செய்வதற்கான கருவியாகவே அரசாங்கம் கருதப்பட்டது. ஒவ்வொருவருடைய உடலிலும் உள்ளத்திலும் பொதுந்து கிடக்கின்ற ஆற்றல்கள் அனைத்தையும் வெளிக்கொணர்ந்து, நன்கு வளரும்படிச் செய் வதுதான் அரசின் கடமை அல்லது குறிக்கோள் எனவும் கருதப் பட்டது. கட்டுப்பாடும் ஒழுங்கும், அகத்தும் புறத்தும் பெரிதும் வற்புறுத்தப்பட்டன. இத்தகைய குறிக்கோளின் விளைவாகக் கல்வியும் கலையும் இலக்கியமும் அறிவியலும் பெரிதும் வளர்ந் தன. ஏனெனில் மனிதனின் முழு வளர்ச்சிக்கு அவைகள் இன்றியமையாதன எனக் கிரேக்கர்கள் கருதினர். இப்படித் தனி மனிதன் முழுமையான வளர்ச்சியைப் பெற்றுல்தான்

அவன் உண்மையிலேயே தனது நாட்டின் நலனுக்காக முழுமையாகப் பாடுபட முடியும் என்ற நம்பிக்கையானது நாட்டில் பரவலாக நிலவியிருந்தது. தனி மனித வாழ்க்கை, பொது வாழ்க்கை இரண்டையும் இணைக்கின்ற பாலமாக நாட்டின் கல்வி முறையும், அரசியல் வாழ்க்கையும் அமைந்திருந்தன. நான்காவதாக இத்தகைய ஆட்சி முறையில்தான் நகர அரசுகளின் ஆட்சித்துறை அமைப்பானது (administrative systam) முழுமையான வளர்ச்சி பெற்றுப் பழைய ஆட்சித் துறை நிறுவனங்கள் முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டன. பரம்பரையாக ஆண்டு வந்த மன்னர்களுக்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு மட்டுமே ஆட்சி புரியக் கூடிய நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களது அதிகாரங்களும் சிறப்புரிமைகளும் வரையறுக்கப்பட்டுவிட்டதால் கொடுங்கோன்மை ஏற்படுவதற்கு வழியில்லாமல் போய்விட்டது. நாட்டின் பல்வேறு நிர்வாகக் காரியங்களை நன்கு திட்டமிட்டு நடத்தச் சிறு சிறு குழுக்கள் அல்லது வாரியங்கள் அமைக்கப்பட்டதால் நாட்டின் நிர்வாகம் செவ்வனே நடைபெற்றது. மேலும் கிரேக்க நகர அரசுகள் கிரீஸில் மட்டுமன்றி ஈஜியன் கடலிலிருந்த பற்பல தீவுகளிலும் நன்கு நிலைநாட்டப் பெற்றதும் இக் காலத்தில்தான். கடல் கடந்த நாடுகளில் நிலை நாட்டப்பெற்ற குடியேற்றங்களில் நன்கு நிர்வகிப்பதற்கான அரசியல் நிறுவனங்கள் இக்காலத்தே தான் நன்கு உருவாயின, நகரங்களைத் திட்டமிட்டு அமைப்பதிலும் அவற்றைத் திறமையாக ஆட்சி புரிவதிலும் பிரபுக்கள் கைதேர்ந்தவர்களாக விளங்கினர். ஐந்தாவதாக இத்தகைய பிரபுக்கள்தான் உண்மையில் கிரீஸில் மக்களாட்சி மலர்வதற்கு வித்திட்டவர்களாவர். மக்களாட்சிக் காலத்தில் ஏற்பட்ட நிர்வாக நிறுவனம், சட்ட மன்றம், ஆலோசனை மன்றம் ஆகிய முக்கிய அரசு உறுப்புகள் உருவானதும் இக்காலத்தில்தான். அவர்கள் கடைப்பிடித்த ஆட்சி முறையே பெரும்பாலும் மக்களாட்சியிலும் நடைமுறைக்கு வந்தன. தங்கள் சுயநலனை முன்னிட்டு அவர்கள் செய்த பல அரசியல் பரிசோதனைகள் இறுதியில் மக்களாட்சி நன்கு மலர்ச்சியுறுவதற்குத் துணை புரிந்தன எனலாம். இறுதியாகக் கிரீஸில் குடியரசு மலரும், (Republic) அக் குடியரசின் ஆதரவில் ஈஜியன் கடலைச் சுற்றிலும் குடியேற்ற நாடுகள் ஏற்படவும் பெரிதும் உதவியவர்கள் பணம் படைத்த பிரபுக்களேயன்றி மற்றையோரல்லர். அவர்களது முறையான ஆதரவின் கீழ்தான் கிரேக்கக் குடியேற்றங்கள் எங்கு பார்த்தாலும் ஏற்பட்டன.

இத்தகைய நன்மைகள் பலவற்றை நல்கிய உயர் குடிப் பெருமக்களாட்சி நாளடைவில் நலிவுற்று ஒரு சுயநலக் கும்பலின்

ஆட்சியாக மாறியது. பிறரது நலனுக்காகப் பாடுபட்டு வந்த பிரபுக்கள் தன்னலமே பெரிதெனக் கொண்ட சிறுமதியாளர் களாக மாறினர். இத்தகைய செல்வம் படைத்த சிறுமதியாளர் ஒரு சிலரது ஆட்சியைத்தான் ஆலிகார்க்கி (Oligarchy) என்று வரலாற்றுசிரியர்கள் கூறுவர். உயர்குடிப் பிறப்பின் இலக்கணங் களாகக் கருதப்பட்ட செல்வம், உயர்குடிப் பிறப்பு ஆகிய இவை இரண்டும் நாளடைவில் பிரபுக்களிடையே ஒருவித அகந்தையை ஏற்படுத்திவிட்டன. அவர்கள் பொது மக்களிடமிருந்து பிரிந்து தனித்து வாழ விரும்பினர்கள். சாதாரண மக்களை அவர்கள் ஒரு துரும்பென மதித்தனர். அவர்களது விருப்பு வெறுப்புகள் பொது மக்களின் நன்மைக்கு முற்றிலும் மாறுபட்டவைகளாக இருந்தன. சமுதாயத்தில் தங்களுக்கு ஏற்பட்டுவிட்ட சிறப் பிடத்தை எவ்வாறேனும் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்ற சுயநலம் அவர்களது உள்ளங்களைக் கவ்விக்கொண்டது. பரந்த மனப்பான்மைக்குப் பதிலாகக் குறுகிய மனப்பான்மை அவர்களை ஆட்கொண்டது. எனவே மன்னரை முதலில் பகைத்துக் கொண்ட அவர்கள் இறுதியில் மக்களையும் பகைத்துக்கொண் டனர். நாட்டின் அரசியல், மதம் ஆகிய இரு துறைகளிலும் உள்ள இரகசியங்கள் எல்லாம் அவர்களது தனி உரிமைகளாய் விளங்கின. அவற்றை அவர்கள் தங்கள் சுயநலத்திற்காகப் பயன்படுத்த ஆரம்பித்தனர். இதை நாளடைவில் புரிந்து கொண்ட மக்கள் அவர்களை அதிகாரத்தினின்றும் அகற்ற முன் வந்தனர். மேலும் இராவணுத் துறையில் ஏற்பட்ட பல புதிய மாற்றங்கள் பிரபுக்களின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தன. தனிப்பட்ட ஒரு வீரனின் போர்த் திறமையை அடிப்படையாகக் கொண்டு போர்கள் நடைபெற்ற காலத்தில் செல்வமும் வீரமும் ஒருங்கே பெற்ற பிரபுக்கள் படைகளில் தலைமை பெற்றிருந்தனர். அத்தகைய ஒரு வீரனது தோல்வியையும் வெற்றியையும் பொறுத்தே ஒரு போர்க்களத்தின் முடிவு தீர்மானிக்கப்பட்டது. ஆனால் நாளடைவில் பாலங்ஸ் (Phalanx) என்ற காலாட்படை அணி முக்கியத்துவம் பெற்ற போது பிரபுக்களின் ஆதிக்கம் ஒழிந்தது. நீண்ட ஈட்டிகளைக் கொண்ட காலாட்படைகள்தான் போர்க்களங்களின் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கலாயின. மேலும் பிரபுக்கள் ஒருவருக்கொருவர் அடிக்கடி போரிட்டுக் கொண்டதாலும் அவர்களது பெருமை குறைந்தது. அவர்களுக் குள்ளேயே போட்டியும் பொறுமையும் வளர்ந்து அவர்களைப் பலவீனப் படுத்தின. பொருளாதாரத் துறையிலும் நாளடை வில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டுப் பிரபுக்களின் செல்வாக்கைக் குறைத்தது. நிலம் வைத்திருப்பவன்தான் பிரபு என்ற நிலைமை மாறி வாணிகத்தால் பெரும் பொருள் ஈட்டியவர்களும் பெருங்குடி

மக்களே என்ற நிலைமை நாட்டில் ஏற்பட்டது. வெறும் குடிப் பிறப்பால் மட்டுமே பெருமையும் சிறப்புரிமையும் பெற முடியும் என்ற நிலைமை மாறியது. பணம் படைத்தவர்கள் அனைவரும் பிரபுக்கள் என மதிக்கத் தக்க காலம் வந்தது. எனவே பணமும் குணமும் ஒருங்கே படைத்தவர்களின் ஆட்சிக்குப் பதிலாக வெறும் பணம் படைத்த ஒருசிலரின் ஆட்சி மட்டுமே ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டன.

அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டிருந்த சாதாரண மக்கள் கல்வியாலும் பண பலத்தாலும் பழைய நிலப் பிரபுக்களோடு சமத்துவம் கொண்டாட ஆரம்பித்தனர். நாளடைவில் அரசியல் அதிகாரமும் அவர்களைச் சென்றடைந்தது. இங்ஙனம் உயர் குடிப் பெருமக்களாட்சி நாளடைவில் தேய்ந்து சுயநலம் படைத்த செல்வச் சிறு குழு ஆட்சியாக அல்லது தனிப்பட்ட மனிதனது வரம்பற்ற வல்லாட்சியாக மாறியது.

செல்வச் சிறு குழு ஆட்சி

கி. மு. எட்டாம் நூற்றாண்டில் எங்ஙனம் மன்னர்களுக்கும் பிரபுக்களுக்கும் போராட்டம் ஏற்பட்டதோ அதே போலக் கி. மு. ஏழாம் நூற்றாண்டில் பிரபுக்களுக்கும் சாதாரண மக்களுக்கும் இடையே சச்சரவு ஏற்பட்டது. நிலம் படைத்தோரிடம் மட்டுமே சிறப்புரிமைகள் குவிந்து கிடப்பதை ஏனையோர் கண்டித்தனர். முக்கியமாக வாணிகத்தில் ஈடுபட்டுத் திரைகடலோடிப் பெரும் பொருள் ஈட்டி வந்த ஒரு சில சாதாரண மக்கள், தங்களுக்கும் சமுதாயத்தில் ஓர் உயர் இடம் கொடுக்கப்படவேண்டும் என வற்புறுத்தினர். மேலும் ஒரு காலத்தில் பெரிதும் மதிப்பிற்குரிய வராக இருந்த உயர்குடிமக்கள் பிற்காலத்தே சுயநலம் படைத்த சிறுகுடிமக்களாக மாறிவிட்டதாலும் மக்கட்கு அவர்கள்பால் வெறுப்பு ஏற்பட்டது. எனவே, பணம் படைத்தோரெல்லாம் ஒன்று சேர்ந்துகொண்டு அதிகாரத்தைக் கைப்பற்றி நாட்டைத் தம் பிரியம் போல் ஆளலாயினர். அடக்குமுறை எங்கும் தாண்டவ மாடியது. மக்கள் பல வகையாலும் துன்புறுத்தப்பட்டனர். அவர்தம் செல்வமும் செல்வாக்கும் வளர்வதற்கேற்ற வகையிலேயே சட்டங்களும் திட்டங்களும் தீட்டப்பட்டன. அவர்களுக்கு எதிரிகளாக இருந்த நிலப் பிரபுக்களையும் அரசியலில் பங்கு கொள்ளாதவாறு அவர்கள் தடுத்தனர். அவர்களது அடக்குமுறையை எதிர்த்துக் கூச்சலிட்ட ஏழைமக்களை ஓரளவு திருப்திப் படுத்த வேண்டி ஒரு சில தாராளத் தன்மை வாய்ந்த

சட்டங்களை அவர்கள் ஏற்படுத்தினர். 'அசிம்நிடே' (Aesymnetae) என்ற சட்ட நிபுணர்களை அவர்கள் நியமித்தும் புதிய சட்டங்களை உருவாக்கினர். குறிப்பிட்ட காலம் வரை முழு அதிகாரத்துடன் அவர்கள் செயல்பட்டனர். ஆனால் அவர்களால் ஆக்கப்பட்ட சட்டங்கள் குறுகிய காலத்திற்கு மட்டுமே நன்மை பயப்பனவாக இருந்தனவேயல்லாது மக்களுக்கு நிலைத்த நீண்டகாலப் பலன்களை அளிப்பனவாக இல்லை. எனவே, அவர்களது கொடுங்கோன்மையினின்றும் தப்பித்துக் கொள்வதற்காக ஏராளமான மக்கள் கிரீஸை விட்டு வெளிநாடுகளுக்குச் செல்லலாயினர். கி. மு. 800 முதல் 650 வரை இத்தகைய வெளியேற்றம் நடைபெற்ற வண்ணம் இருந்தது. இதனால் நாட்டில் வாணிகம் அதிகரித்ததென்பது உண்மைதான். கப்பல் கட்டும் தொழிலும் நன்கு வளர்ச்சி அடைந்தது. குடியேற்ற நாட்டு இயக்கம் பன்மடங்கு வளர்ந்தது. இங்ஙனம் வெளி நாடுகளுக்குச் சென்ற ஒரு சிலர் தாய்நாட்டிற்கே மீண்டும் திரும்பி வந்து பொது மக்களைத் தூண்டி அடக்குமுறை ஆட்சியை எதிர்க்குமாறு செய்தனர். சுயநலமும் குறுகிய நோக்கமும் கொண்ட செல்வச் சிறு குழு மக்களின் ஆட்சிக்கு நாற்புறத்திலும் எதிர்ப்பு ஏற்பட்டது. அத்தகைய எதிர்ப்பினால் பல நகர அரசுகளில் குழப்பங்கள் ஏற்பட்டன. இத்தகைய குழப்பமான சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு சில தனி மனிதர்கள் அரசாங்கத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். ஒரு தனி மனிதனின் வல்லாட்சி பலவிடங்களில் ஏற்பட்டது.

வரம்பற்ற வல்லரசு அல்லது சர்வாதிகாரம்

செல்வம் மிக்க சிறுபான்மையோரின் ஆட்சியானது பெரும்பான்மையான மக்களாட்சியாக (Democracy) மாறி அமைவதற்கு முன், இடையில் தற்காலிகமாக ஏற்பட்ட ஆட்சி முறையையே டிரன்னிஸ் (Tyrannis)அல்லது வரம்பற்ற வல்லரசு என்று கிரேக்கர்கள் கூறுவர். கி. மு. ஏழாம் நூற்றாண்டில் இத்தகைய வல்லரசர்கள் அலலது சர்வாதிகாரிகள் நாடெங்கும் தோன்றினர்கள். செல்வந்தர்களால் சுரண்டப்பட்ட ஏழைகளின் தலைவர்களாக அவர்கள் தம்மை வரித்துக்கொண்டனர். கடல் கடந்த வாணிகத்தின் விளைவாக ஏற்பட்ட புதிய நடுத்தர வர்க்கத்தினரும், பழம் பிரபுக்களை ஒடுக்குவதற்காக அத்தகைய சர்வாதிகாரிகளின் தயவை நாடினர். நாட்டில் தொன்று தொட்டு வாழ்ந்துவந்த பழங்குடி மக்களும், இடையில் வந்து குடி புகுந்த கிரேக்கர்களிடம் இருந்து தங்களை விடுவித்துக்கொள்ள விரும்பி வல்லரசர்களின் உதவியை நாடினர். கடன்பட்டு வாழ்விழந்த

கடனாளிகள் பலர், மீண்டும் மறு வாழ்வு பெற ஒரு வலிமை மிக்க சர்வாதிகாரியை ஆதரித்தனர். நிலமற்ற ஏழைகள் நிலம் படைத்த பிரபுக்களின் பிடிகளினின்றும் விடுபட்டுத் தங்களுக் கென்று ஓரளவு நிலத்தைப் பெற விரும்ப ஒரு வல்லமை பெற்ற தலைவனை வரவேற்றனர். இங்ஙனம் சமுதாயத்தின் ஒடுக்கப் பட்ட பல்வேறு வகுப்பினரும் ஒருமுகமாகத் தனிப்பட்ட ஒரு கொடுங்கோலனின் ஆட்சியை வரவேற்றதனாலேயே அத்தகைய ஆட்சி முறை நாட்டில் பரவலாக ஏற்பட முடிந்தது. எங்கெங் கெல்லாம் கிளர்ச்சிகள் ஏற்பட்டனவோ அங்கங்கெல்லாம் அவர்கள் அக் கிளர்ச்சியாளர்களையே மெய்க்காப்பாளர்களாக நியமித்துக்கொண்டு நகர அரசுகளைத் தாக்கிப் பலாத்காரமாக அரசாங்கத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். சுயநலப் பிரபுக் களின் ஆட்சி இங்ஙனம் ஒழிக்கப்பட்டது. சில சமயங்களில் பிரபு வர்க்கத்தைச் சார்ந்த ஒருவரே இத்தையை சர்வாதிகாரி யாகத் தம்மை ஆக்கிக் கொண்டதும் உண்டு.

'டிரனி' என்ற சொல்லானது வழக்காற்றில் கையாளப்படு கின்ற 'கொடுங்கோன்மை' என்ற பொருளில் அக்காலத்தில் வழங்கப்படவில்லை. கொடுங்கோன்மை என்ருல் மக்களைத் துன்புறுத்தும் ஒரு தனி மனிதனது வரம்பற்ற அடக்கு முறை ஆட்சியையே நாம் சாதாரணமாகக் குறிப்பிடுகிறோம். ஆனல் கிரேக்க கொடுங்கோலர்கள் உண்மையில் மக்களைத் துன்புறுத்திய தீயர்கள் அல்லர். 'நாட்டில் வழக்கமாக நிலவி வரும் அரசியல் சட்ட மரபுகளுக்குப் புறம்பாக அதிகாரத்தைக் கைப்பற்றியவர்' என்ற பொருளிலேயே டிரனி என்ற சொல் அக்காலத்தே வழங்கப்பட்டது. சட்டப்படி அதிகாரத்தைக் கைப்பற்றவில்லை. எனினும் அத்தகைய சர்வாதிகாரி உண்மையில் மக்களின் நலன் களுக்காகவே பாடு பட்டான். சமுதாயத்தில் நசுக்கப்பட்ட ஏழை மக்களின் காவலனாக அவன் திகழ்ந்தான். பொதுமக்களின் நன்மைக்காகவே அவன் வாழ்ந்தான். தான் ஆண்ட நகர அரசின் பெருமையினையும் புகழையும் மேலோங்கச் செய்ய அவன் ஓயாமல் பாடுபட்டான். கலைஞர்களையும் புலவர்களையும் ஆதரித்துக் கிரேக்கப் பண்பாட்டை அவன் பல வகையிலும் வளர்த்தான். பெரியாண்டர் (Periander) என்ற வல்லரசர் மக்களுக்காகப் பல கட்டிடங்களையும், அரசாங்கத்தின் அலுவல்கள் நடைபெறுவதற் காகப் பல பொதுக் கட்டிடங்களையும் கட்டிவைத்தார்.

சர்வாதிகாரிகளின் ஆட்சிக் காலத்தே அரசியல் துறையில் பல நல்ல விளைவுகள் ஏற்பட்டன. விரிந்த மனப் போக்கும், பரந்த கண்ணோட்டமும் கொண்டவர்களாய் அவர்களில் பலர்

விளங்கினர். குறிப்பிட்ட ஒரு நகர அரசைப் பற்றியே சதா எண்ணிக்கொண்டிராமல் அண்டையிலுள்ள நகர அரசுகளோடும் சில சமயங்களில் அக்கரை நாடுகளிலுள்ள நகர அரசுகளோடும், இராஜீய உறவுகளை அன்னர் ஏற்படுத்திக்கொண்டனர். கிரீஸில் எங்கு பிறந்தவராலும் எந்த வமிசத்தவராலும் எல்லோரும் கிரேக்கர்களேயாவர் என்ற ஒருமை உணர்ச்சியின் பாற்பட்ட தேசியம், நாட்டில் வளர அவர்கள் ஒரு வகையில் உதவினர்கள். இந்த வகையில் அவர்கள் ஏனைய ஆட்சியாளர்களை விட ஒருபடி முற்போக்காகவே செயல்பட்டனர். அவர்களால் போற்றி வளர்க்கப்பட்ட இவ் வொருமை உணர்வே பல்வேறு வகைப் பட்ட கிரேக்க மக்களையும் ஒன்று திரட்ட உதவி செய்தது. இறுதியில் இச் சர்வாதிகாரிகளின் முயற்சியால்தான் பிரபுக்களின் கொட்டம் அடக்கப்பட்டு மக்களாட்சி மலர்தற்குரிய சூழ்நிலை உருவாகியது. அந்நிய நாட்டுப் படையெடுப்புகளினின்றும் கிரேக்க நாட்டைக் காப்பாற்ற அவர்களில் பலர் தக்க நடவடிக்கை களை எடுத்துக்கொண்டனர். சிராகியூஸை (Syracuse) ஆண்ட, ஜேலான் (Galan) என்னும் வல்லரசர் கார்த்தேஜ் நகரப் படை யெடுப்பிலிருந்து தனது நகரைப்பாதுகாக்கத்தான், திராசிபியூலஸ் (Thrasybulus) என்ற வல்லரசர், லிடியா நாட்டுப் படையெடுப்பி லிருந்து தனது நகர அரசான மைலிடஸைப் (Milites) பாது காத்தார். பல சர்வாதிகாரிகள் தங்களது நகர அரசுகளுக்குப் பெயரும் புகழும் ஏற்படும் வண்ணம் நல்ல வெளிநாட்டுக் கொள்கைகளைக் கடைப்பிடித்தனர். தங்களை ஒத்த தலைவர் களோடு கூட்டுறவுகளை ஏற்படுத்தினர்; அண்டையிலுள்ள நாடுகளோடு நட்புறவு கொண்டு வாணிகத்தையும் வளர்த்தனர். மெச்சத்தக்க கப்பற்படை ஒன்றையும் அவர்கள் உருவாக்கினர். தங்களது புகழ் ஓங்குதற்காக வேண்டிக் கிரேக்க மரபுகளைக் கைவிட்டுப் பதிய முயற்சிகளையும் மேற்கொண்டதால் தங்களை அறியாமலேயே அவர்கள் கிரேக்கர்களின் நலன்களை வளர்த் தனர். நகர அரசே எல்லாம் என்ற குறுகிய மனப்பான்மையில் கட்டுண்டு கிடந்த கிரேக்கர்களின் கண்களைத் திறந்து, வெளி உலகைக் காட்டி, அவர்தம் எண்ணங்களை விரிவடையச் செய்த பெருமை சர்வாதிகாரிகளையே சாரும்.

அவர்களது ஆட்சிக் காலத்தே கிரீஸின் வாணிகம் பெரிதும் வளர்ந்தது. குடியேற்ற நாடுகள் பல ஆங்காங்கே தோற்று விக்கப்பட்டன. கொரிந்து நகரை ஆண்ட சிப்ஸலஸ் (Cypseles) என்ற சர்வாதிகாரி பல குடியேற்றங்களைத் தமது நகர அரசின் சார்பில் நிறுவி வாணிகத்தையும் நன்கு ஊக்குவித்தார். மைலிடஸ் நகரை ஆண்ட திராசிபியூலஸ் என்பவர் கருங்கடலைச் சுற்றிப்

பல குடியேற்றங்களை நிறுவினர். பல புதிய கோயில்களும், பொதுக் கட்டிடங்களும் அவர்களால் எடுக்கப்பட்டதன் விளைவாக ஏழைமக்கள் பலருக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது. இங்ஙனம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குச் சர்வாதிகாரிகள் பலர் உதவி செய்தனர்.

சமயத் துறையில் இவர்கள் காலத்தே பெரியதோர் புரட்சியே ஏற்பட்ட தெனலாம். இவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு சமயத்தைப் பற்றிய உண்மைகள் யாவும் பிரபுக்களுக்கு மட்டுமே தெரிந்திருந்தன. சமயச் சடங்குகளை எவ்வாறு செய்ய வேண்டு மென்பதும் அவர்களுக்கு மட்டுமே தெரிந்திருந்தது. எனவே, சமயம் என்பது ஒரு சிலரின் தன்னுரிமையாய் இருந்தது. அத்தகைய தனி உரிமைகளை உடைத்தெறிந்தவர்கள் சர்வாதி காரிகளேயாவர். சாதாரண மக்கள் விரும்பிய பல வழிபாட்டு முறைகளையும், கடவுள் உணர்வுகளையும், விழாக்களையும் அவர்கள் பெரிதும் பேணி வளர்த்தனர். பிரபுக்களால் புறக்கணிக்கப்பட்ட பல கடவுளர்களுக்கும் இவர்கள் காலத்தே புதிய பெருமை ஏற் பட்டது. சான்றாக டயோனீஷியஸ் (Dionysius) என்ற மதுக் கடவுள் எங்கு பார்த்தாலும் வணங்கப்பட்டதற்குக் காரணமா யிருந்தவர்கள் சர்வாதிகாரிகளேயாவர்.

இலக்கியம், கலை ஆகிய துறைகளிலும் பல கொடுங் கோலர்கள் பெரிதும் ஆர்வம் காட்டினர். சிராக்கியூஸ் நகரத்தை ஆண்ட ஹீரோ (Hiero) என்பாரும், பிண்டர் (Pinder), அசிலஸ் (Aeschyles) போன்றவர்களும் பல கலைஞர்களுக்கு வாரி வாரி வழங்கினர். சிற்ப ஓவியக் கலைவண்ணங்கள் கொழிக்கும் மண்டபங்களையும், மாட மாளிகைகளையும், கூட கோபுரங்களையும் நினைவுச் சின்னங்களையும் அவர்கள் ஆங்காங்கு எழுப்பித் தங்கள் நகர்களை அழகின் இருப்பிடங்களாகச் செய்தனர். பல சர்வாதி காரிகள் டெல்ஃபி, ஒலிம்பியா போன்ற இடங்களில் அவர்கள் தேசிய விழாக்களையும், விளையாட்டுகளையும் ஏற்படுத்தி மக்க ளிடத்தே ஓர் ஒற்றுமையை வளர்த்தனர். கிரீஸில் பளிங்குக்கல்லை முதன்முதலில் கட்டிடத்திற்குப் பயன்படுத்தினவர்கள் இவர்களே. இவர்களின் ஆதரவின் கீழ் இசையும் நாட்டியமும் சிற்பமும் ஓவியமும் இன்னும் பல நுண் கலைகளும் நன்கு வளர்ந்தன.

சர்வாதிகாரிகளின் ஆட்சியினால் ஒருசில தீமைகளும் விளைந்தன. பொறுப்பற்ற முறையில் வரம்பற்ற அரசியல் அதிகாரத்தை அன்னார் செலுத்திய காரணத்தால் கிரேக்கர்கள் தங்களது அரசியல் விழிப்புணர்வை ஓரளவு இழந்தனர். சட்டத்

தின் ஆட்சி தளர்ந்தது. அடக்குமுறை பல இடங்களில் தாண்டவமாடியது. கிரேக்கர்களின் இயல்புக்கே பொருந்தாத அரசியல் மரபுகள் நாட்டில் தோன்றலாயின. வெறும் மிருக பலத்தால் மட்டுமே எதையும் சாதிக்க முடியும் என்ற மனப் பான்மை வளர்ந்தது. கொடுங்கோலர்களது கோபத்திற்குப் பயந்த பல மேதைகள் தங்களது அறிவுத் திறமையை வெளிக் காட்டப் பயந்து மறைந்து வாழ்ந்தனர். அதனால் நாட்டுக்குப் பேரிழப்பு ஏற்பட்டது எனலாம். கோழைத் தனத்தையும் அடிமை மனப்பான்மையையும் மக்கள் மனத்திலே வளர்க்கப் பல கொடுங்கோலர்கள் காரணமாக இருந்தனர். கிடைத்த அதிகாரம் எங்கு கை நழுவிப் போய்விடுமோ என்ற பயத்தால் இக் கொடுங் கோலர்களில் பலர் எல்லோரையும் ஐயுற ஆரம்பிம்பித்தனர். தமது ஐயத்திற்குப் பாத்திரமானவர்களே அவர்கள் மிகவும் கொடூரமாகத் தண்டித்தனர். இத்தகைய செயல்களால் அவர்கள் நாளடைவில் மக்களிடம் மதிப்பை இழந்தனர். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே அவர்கள் செல்வாக்குடன் விளங்க முடிந் தது. குழப்பமும் அமைதியின்மையும் ஓய்ந்த பின் மக்கள் அவர் களே வெறுக்க ஆரம்பித்தனர். அவர்களுக்கெதிராகப் பல சதிகள் உருவாயின. ஒரு நகரத்தில் வாழ்ந்த வெவ்வேறு வகுப் பினரும், வெவ்வேறு சர்வாதிகாரிகளே ஆதரிக்க முன்வந்தனர். ஆதன்ஸ் நகரில் இவ்வித நிலைமை ஏற்பட்டது. கிளியோமீனஸ் (Cleomenes) என்பார் இறுதியில் வெற்றி பெற்றார். ஆனால் மக்கள் கலகம் செய்து அவரையும் ஒதுக்கிவிட்டு மக்களாட்சியை ஏற்படுத்தினர். எனவே சர்வாதிகார ஆட்சியானது குழப்ப நிலைமை மிகுந்த ஒரு சூழ்நிலையில் மட்டுமே மக்களால் வரவேற்கப் பட்டது. அரசியல் மேனியில் ஏற்பட்டுவிட்ட கொப்புளத்தைக் குணமாக்க வந்த ஒரு மருந்தெனவே, சர்வாதிகாரத்தைக் கிரேக் கர்கள் நினைத்தனர். நோய் நீங்கிய உடன் நோயாளி மருந்தைத் தூக்கி எறிந்துவிடுவதைப் போல் கிரேக்கர்களும் அமைதியான சூழ்நிலை நாட்டில் ஏற்பட்ட உடன் சர்வாதிகாரிகளே ஒழித்து விட்டுத் தங்களைத் தாங்களே ஆள்கின்ற மக்களாட்சியை ஏற் படுத்தினர்.

ஒரு சில சர்வாதிகாரிகள்

கி. மு. ஏழாம் நூற்றாண்டில் சர்வாதிகார ஆட்சி முறை யானது நாடெங்கும் காணப்பட்டதென்றாலும் ஒரு சில இடங் களில் மட்டுமே அவை பெரும் சிறப்புடன் விளங்கின. ஆர்கோஸ் (Argos), கொரிந்து, மிகாரா (Megara), சிசியான் (Sicyon) ஆதன்ஸ், பியோஷியா (Bueutia), தெசலி ஆகிய முக்கியமான

நகரங்களில் வல்லரசு செழித்தோங்கியது. கொரிந்து நகரத்தை ஆண்டவர் உண்மையிலேயே பெருமை மிக்கவர் ஆவர். கி. மு. 657-இல் சிப்சலஸ் (Cypseles) என்ற தலைவர், செல்வச் சிறு குழுவினர் ஆட்சியை ஒழித்துத் தமது ஆட்சியை நிறுவினர். அவர் கார்சைரா (Corcyra) என்ற மாநிலத்தை வென்று தமது நாட்டிற்கு அடிபணியச் செய்தார். கொரிந்து நகரத்தைப் பெரிதும் அழகு படுத்தியதோடு மட்டுமன்றி, அதன் கலையையும் இலக்கியத்தையும் அவர் பெரிதும் பேணி வளர்த்தார். எல்லாவற்றிற்கும் மேலாக அவர் பல புதிய குடியேற்ற நாடுகளை ஏற்படுத்தி அவைகள் தாய்நாட்டைச் சார்ந்தே வாழவேண்டுமென்ற புதிய கொள்கையையும் உருவாக்கினர். மேலும் கொரிந்து நகரில் நாணயப் புழக்கத்தையும் அவர் கொண்டு வந்தார். அவரது குடியேற்ற நாட்டுக் கொள்கை பிற்காலத்தே எழுந்த பிரிட்டனின் பழைய குடியேற்ற நாட்டுக் கொள்கையை ஒத்திருந்தது. ஆனால், கிரீஸைப் பொறுத்த வரையில் குடியேற்ற நாடுகள் சுயேச்சையாக வாழ்வதே வழக்கமாக இருந்தது. இவ்வழக்கத்தை மாற்றிக் குடியேற்ற நாடுகளைத் தாய்நாடுகளுக்கு அடிப்படுத்தியவர் சிப்சலஸ் என்பவரே ஆவார்.

பெரியாண்டர்

கொரிந்து நகரை ஆண்ட கொடுங்கோலர்களில் மிகச் சிறந்தவராகக் கருதப்படுபவர் பெரியாண்டர் என்பவராவர். கொரிந்து நகர அரசிற்கு அவர் பல அரிய சேவைகளைச் செய்தவர். தமது தந்தையைப் போலவே அவரும் பல குடியேற்ற நாடுகளைத் தோற்றுவித்தார். கார்கீரா (Corcyra), எப்பிடாம்னஸ் (Epidamnes), அபேலோனியா (Apollonia), பாடிடியா (Potidae) என்ற பல குடியேற்ற நாடுகளை அவர் இணைத்தார்; அக் குடியேற்ற நாடுகள் கொரிந்து நகர அரசிற்குக் கட்டுப்பட்டு அதைச் சார்ந்தே வாழும்படி ஏற்பாடு செய்தார். தமது நாட்டின் வாணிகம் வளருவதற்காக அவர் அண்டை நாடுகளோடு பல நட்பு உடன்படிக்கைகளைச் செய்து கொண்டார். மிகாரா (Megara), சிசியான் (Sicyon), மைலிட்டஸ் (Miletus) போன்ற நகர அரசுகளோடும் எகிப்து போன்ற பெரிய நாடுகளோடும் அவர் வாணிக உடன்படிக்கைகளைச் செய்துகொண்டார். வாணிகப் பண்டங்களை விரைவாக ஓரிடம் விட்டு வேறிடத்திற்குக் கொண்டு செல்ல அவர் பல கால்வாய்களை வெட்டினர். அவரால் வெட்டப்பட்ட ஒரு கால்வாயின் உதவியாலேயே அகர்நானியா (Acarnania) என்ற தீபகற்பமானது லியோகாஸ் என்ற தீவாக மாறியது. கொரிந்து

என்னும் புவியியீணைப்புக்குக் குறுக்கே ஒரு கால்வாயை வெட்டும் ஒரு பெருந்திட்டத்தையும் அவர் உருவாக்கினர். ஆனல் அதை அவர் நிறைவேற்றவில்லை. கொரிந்து, ஈஜினு (Aeajina) என்ற இரு நகரங்களும் கிரீஸிலேயே மிக மிக முக்கியமான இரு வாணிகப் பட்டணங்களாய் விளங்கின. பெரியாண்டர் கட்டிடக் கலையில் பெரிதும் ஆர்வம் உடையவர். அபோலோ போன்ற தெய்வங்களுக்குப் பிரம்மாண்டமான கோவில்கள் பல ஆங்காங்கே எழுப்பப்பட்டன. கொரிந்து நகரில் அவற்றின் அழிபாட்டுச் சின்னங்களை இன்னும் காணலாம். கிரேக்கக் கட்டிடக் கலைஞர்களின் கைவண்ணமும் சிற்பிகளின் சிறப்பும் அங்கே தெள்ளிதின் புலப்படுகின்றன. கொரிந்தியத் தொழில் விற்பன்னர்களை வீடுகளின் கூரைகளுக்கு முதன்முதலாக ஓடுகளை வேய்கின்ற முறையைக் கையாண்டவர்கள். ஒரு காலத்தே கொரிந்து நகரில் பல புலவர்கள் ஆதரிக்கப்பட்டனர். சிறப்பாக ஆர்க்கன் (Arcon) என்ற இசைவாணரைக் குறிப்பிடலாம். அவர் யாழ் வாசிப்பதிலே நிபுணர். யோனிஷியஸ் என்ற மதுக்கடவுளைப் புகழ்ந்து அவர் புதிய பல பாடல்களை இசையுடன் பாடியுள்ளார். அவைகள் டித்திராம் (Dythirom) என்று அழைக்கப்படுகின்றன. துன்பியல் நாடகங்களில் பொதுவாகப் பாடப்படும் குழுப் பாடல்களை அமைத்துத் தந்தவரும் அவரே. மக்களிடையே ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் வளர்ப்பதற்காகப் பெரியாண்டர் பல சட்டங்களைத் தோற்றுவித்தார். குறிப்பிட்ட எண்ணிக்கைகளுக்கு அதிகமான அடிமைகளை வைத்துக்கொள்ளக் கூடாதென்றும், வருமானத்திற்கு மீறி ஆடம்பரமாக வாழக் கூடாதென்றும், சோம்பித் திரியக் கூடாது என்றும், கிராமத்திலிருந்து மக்கள் பட்டணங்களுக்கு வரக்கூடாதென்றும், நேரத்தை வீணே விரயப்படுத்தக் கூடாதென்றும் கூறுகின்ற பல சட்டங்களை அவர் இயற்றினர். இங்ஙனம் பலவகையிலும் மக்களின் நன்மையை ஓம்பும் ஒரு வல்லரசராகத் திகழ்ந்தார். அவருக்குப் பின்னர் வந்த வல்லரசர்கள் மிகவும் பலஹீனமானவர்கள். எனவே சர்வாதிகார ஆட்சி கொரிந்தில் விரைவிலேயே அழிவுற்றது.

சிசியான் நகரத்துக் கிளைஸ்தனிஸ்

கொடுங்கோலாட்சி ஏற்படுவதற்கு முன், சிசியான் எனும் நகரமானது டோரியர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. நகரில் தொன்றுதொட்டு வாழ்ந்து வந்த பழங்குடி மக்கள் டோரியர்களின் அடக்குமுறை ஆட்சியில் வாடி வதங்கினர். எனவே, சர்வாதிகாரிகள் டோரியர்களுக்கு விரோதமாக எழுந்த பொழுது

அவர்களுக்கு அப் பழங்குடி மக்கள் தங்கள் முழு ஆதரவையும் தந்தனர். மிகவும் சாதாரண இழிந்த குடும்பத்தில் பிறந்த ஆண்டிரியாஸ் (Andreos) என்பவர் கி.மு. 665-இல் சர்வாதிகார ஆட்சியை, சிசியானில் தோற்றுவித்தார். அவரது வழிவந்தோர்களில் மிகவும் முக்கியமானவர் கிளீஸ்தனிஸ் என்பவராவர். அவர் வீரம் செறிந்த ஒரு படைத் தலைவர். அவர் காலத்தே சிசியான் தனது புகழின் உச்சநிலையை அடைந்தது. ஆர்காஸ் என்ற நகர் அரசரோடு அவர் ஓயாது போரிட்டு வந்தார். ஆர்காஸ் நகர வீர வழிபாட்டை அவர் தமது நகரத்தில் முழுவதுமாக நிறுத்தி வைத்தார். அவரது பெருமைக்கு மிக முக்கியமான காரணம், டெல்ஃபி எனுமிடத்தில் தொன்றுதொட்டு இருந்துவந்த தெய்வீகக் குறிமேடையை ஆதரித்ததேயாகும். கிரிஷியர்கள் என்ற கூட்டத்தார், அக் குறிமேடையைக் கைப் பற்றிக் கொண்டு அங்கு வருபவர்கள்மீதெல்லாம் ஒரு வரியைத் திணித்து வசூல்செய்து வாழ்ந்து வந்தனர். கிளீஸ்தனிஸ் அத்தகைய கொள்ளைக்காரர்களை ஏதன்ஸ் நகரத்தோடு சேர்ந்து கொண்டு தோற்கடித்து, கிரிசா (Crisa) என்ற அவர்களது நகரத்தைக் கொள்ளையடித்தார். அக் கொள்ளைப் பொருள்களைக் கொண்டு டெல்ஃபியில் பல விளையாட்டுப் பந்தயங்களை அவர் தோற்றுவித்தார். முதன்முதலில் அங்கு நடைபெற்ற தேரோட்டப் பந்தயத்தில் அவர் பங்குகொண்டு வெற்றியும் பெற்றார். டையோனிஷியஸ் என்ற கடவுளுக்குப் பல விழாக்களை அவர் எடுப்பித்தார். அவருக்குப் பின் சிசியானில் டோரியர்கள் மீண்டும் ஆதிக்கம் பெற்றனர்.

மிகாரா நகரத்தைச் சார்ந்த தியாகனிஸ்

கொரிந்து நகருக்கு அருகே வாணிகத்தில் பெரிதும் சிறப்புற்று விளங்கிய நகரம் மிகாரா என்பதாகும். அதை ஆண்ட சர்வாதிகாரிகளுள் தியாகனிஸ் (Theogenes) என்பவர் மிகவும் முக்கியமானவர். அவர் ஏழைகளின் புரவலர்; அவர்களது உதவியைக் கொண்டு அரசாங்கத்தைக் கைப்பற்றியவர். அவர் தமது நகரத்தைப் பலவகையிலும் அழகு படுத்தினர். நகரின் மத்தியில் அமைந்திருந்த கழிவுநீர்க் குழாய்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. ஏதன்ஸ் நகரில் சர்வாதிகார ஆட்சி ஏற்படுவதற்கு அவர் தம்மாலான உதவியைச் செய்தார். ஆனால் அவர்தம் முயற்சி தோற்றது. எனவே மக்களுக்கு அவர் மீது இருந்த மதிப்பு குறைந்தது. விரைவிலேயே அவர் அதிகாரத்தினின்றும் அப்புறப்படுத்தப்பட்டார். அவருக்குப் பின் மெகராவில் சர்வாதிகார ஆட்சிமுறை ஒழிந்தது.

5. கிரேக்கக் குடியேற்ற நாட்டியக்கம்

கி.மு. 11-ஆம் நூற்றாண்டில் கிரேக்கர்கள் ஆசியாமைனரில் ஒரு சில குடியேற்றங்களை ஏற்படுத்தினர். அது மிகச் சிறிய அளவிலேயே நடைபெற்றது. மிகப் பெரிய அளவில் கிரேக்கர்கள் தம் தாய்நாட்டை விட்டு வேற்று நாடுகளில் சென்று தம் குடியேற்றங்களை நிறுவியது, கி.மு. 8-7-6-ஆம் நூற்றாண்டுகளில் தான். அச் சமயத்தே கருங்கடல், மத்தியத் தரைக் கடல் ஆகிய இரு கடல்களின் கரையோரங்களில் கிரேக்கர்கள் பல குடியேற்ற நாடுகளைத் தோற்றுவித்தனர். கிரேக்கர்களுக்கு முன்பு இத் தகைய குடியேற்ற நாட்டியக்கத்தில் ஈடுபட்டவர்கள் ஃபினிஷியர்கள் என்ற இனத்தவராவார். கி. மு. 10-ஆம் நூற்றாண்டிலேயே அவர்கள் மத்தியத் தரைக்கடலைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் பல குடியேற்றங்களை ஏற்படுத்தினர்கள். அவர்களது குடியேற்றங்கள் யாவும் வியாபாரத்தைப் பிற நாடுகளில் பெருக்குவதற்காக நிறுவப்பெற்ற வியாபாரக் கிடங்குகளே யன்றி வேறல்ல. ஆனால் கிரேக்கர்களோவெனின், சென்ற விடமெல்லாம் தங்களது தாய்நாட்டில் காணப்பெற்ற பல நகர அரசுகளைப் போலவே பல அழகிய நகரங்களைக் கட்டினர். வெறும் துணிகர உணர்ச்சியினால் உந்தப்பட்டவர்களாய்க் கிரேக்கர்களில் பலர் குடியேற்றங்களைக் கண்டனர். தங்களது பண்புகளை அவர்கள் சென்ற விடமெல்லாம் எடுத்துச் சென்றனர். குடியேற்றங்களை நிறுவுவதில் பொருளாதார லாபத்தை மட்டுமே கிரேக்கர்கள் கருதவில்லை. புவியியல், அரசியல் சம்பந்தமான பல காரணங்களை முன்னிட்டும் கிரேக்கர்கள் குடியேற்ற நாட்டியக்கத்தில் ஈடுபட்டனர்.

கிரேக்கக் குடியேற்றங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள்

மிகப் பழங்காலத்திலேயே கிரேக்கர்கள் தற்கால ஐரோபியர்களைப் போலப் பிற நாடுகளில் குடியேற்றங்களை அமைக்கும் முயற்சியில் ஈடுபடுவதற்குப் பற்பல காரணங்கள் உள. தாம்

ஏற்கெனவேயே கண்டுள்ளபடி கிரீஸின் இயற்கை அமைப்பும், நிலவளமும், நீர் வளமும் ஓரளவு இத்தகைய முயற்சிக்குக் காரணங்களாகும். நாளுக்கு நாள் பெருகி வந்த மக்கள் தொகைக்குத் தேவையான உணவுப் பண்டங்கள் உற்பத்தி செய்யும் அளவிற்குக் கிரேக்க நிலவளம் செழிப்பாய் இல்லை. அதோடு கிரேக்க மக்களின் இயல்பான துணிகர மனப் போக்கும் இதற்குப் பெரிதும் காரணமாகும். உள்ளதைக்கொண்டு திருப்தி அடைதல் என்ற உள்ளப் பாங்கைக் கொண்டவர்கள் அல்லர், கிரேக்கர்கள். மேலும் மேலும் முன்னேறவேண்டும், புதிய நாடுகளைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற ஆர்வமிக்கவர்களாய் அவர்கள் விளங்கினர். அவ்வார்வத்தைச் செயல்படுத்துவதற்கான வீரத் துணிவும், கடற்பயணத்தில் நல்ல பயிற்சியும் அவர்கள் பால் காணப்பட்டன. உணவுப் பற்றாக்குறையைத் தீர்க்க வேண்டியும் கிரேக்கர்கள் பலர் நிலவளமிக்க அண்டைநாடுகளுக்குச் சென்று குடியேறலாயினர்.

கிரேக்கர்களின் சமுதாய அமைப்பு, அவர்களது குடியேற்ற நாட்டு மனப்பான்மைக்கு ஓரளவு தூண்டு கோலாய் அமைந்தது. கிரீஸில் நிலங்கள் எல்லாம் ஒரு குடும்பத்தின் பொதுச் சொத்தாக இருந்தனவேயல்லாமல், தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமானவையாக இல்லை. தனிப்பட்ட முறையில் சொத்துகளை வைத்துக்கொண்டு அனுபவிக்க விரும்பிய பல கிரேக்கர்கள் அதற்கென்றே வேறு நாடுகளுக்குச் சென்றனர். தாய் நாட்டில் பெற முடியாத ஒரு செல்வாக்கை அவர்கள் குடியேற்ற நாடுகளில் கண்டனர். கிரேக்கர்களின் வாணிக வளர்ச்சியும் அவர்களின் குடியேற்ற நாட்டு முயற்சிக்கு ஒரு முக்கிய காரணமெனலாம் முதலில் அவர்கள் ஈஜியன் கடலைச் சுற்றி மட்டுமே வியாபாரம் செய்து வந்தனர். ஃபினிஷியர்களின் வாணிகம் நாளடைவில் நசிந்த போது கிரேக்கர்கள் அவர்களின் இடத்தைப் பிடித்துக்கொண்டனர். கொஞ்சம் கொஞ்சமாகக் கருங்கடல் வரை அவர்களது வாணிகம் விரிவடைந்தது. வாணிகத்திற்குத் தேவையான விலையுயர்ந்த பொருள்களையும், தானியங்களையும், ஆடு மாடுகளையும், இன்னும் பிற பண்டங்களையும் மேலும் மேலும் பெறுவதற்காக வேண்டி அவர்கள் பற்பல இடங்களிலும் குடியேற்றங்களை நிறுவ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கப்பல் கட்டும் கலையில் கிரேக்கர்கள் வெகு விரைவாக முன்னேறலாயினர். முதலில் சாதாரண ஒரு தொட்டியைப் போன்று பார்வைக்கு விகாரமாயிருந்த கப்பலானது நாளடைவில் 54 துடுப்புகளைக் கொண்ட நீண்ட கம்பீரமான கப்பல்களாய் மாறின. அவைகளில் இருபது

இருக்கைகள் இருமருங்கும் காணப்பட்டன. அவைகள் ஒவ்வொன்றிலும் இரண்டு பேர்கள் அமர்ந்துகொண்டு துடுப்புகளை வலித்துக் கப்பலை வெகு வேகமாகச் செலுத்தினர். வழியில் எதிரிகள் வந்தால் அவர்களைத் தாக்குவதற்கான சாதனங்களும் கப்பல்களில் அமைந்திருந்தன. எனவே, நெடுந்தூரம் பயணம் செய்து குடியேற்ற நாடுகளை நிறுவுகின்ற முயற்சியில் கிரேக்கர்கள் எளிதில் வெற்றிபெற முடிந்தது. மற்றும் ஹெல்லெஸ்பாண்ட் (Hellespont), புரோபாண்டிஸ் (Propontis), பாஸ்பரஸ் (Bhosporous), பாண்டஸ் (Pontus), யூக்சைன் (Euxine), தெற்கு இத்தாலி ஆகிய இடங்களில் நல்ல இயற்கையான துறை முகங்கள் அமைந்திருந்த காரணத்தாலும் கிரேக்கர்கள் அங்கு சென்று குடியேறலாயினர்.

மேற் கூறப்பட்டவையாவும் கிரேக்கக் குடியேற்ற நாட்டியக் கத்திற்கு அடிப்படையான காரணங்களாகும். ஆனால் இதற்கு உடனடியான காரணம் அரசியல் சம்பந்தப்பட்டதாகும். செல்வம் படைத்த சிறு குழுவினரின் ஆட்சியின் போது ஏற்பட்ட துன்பங்களைப் பொறுக்க மாட்டாமலேயே பலர் தம் தாய் நாட்டை விட்டு வெளியேறலாயினர். நாட்டில் அடிக்கடி ஏற்பட்ட பஞ்சங்களாலும், விலைவாசி உயர்வாலும், தாங்க முடியாத வரிச்சுமையாலும் ஏழை மக்கள் வருந்தினர். பிரபுக்களிலேயும் பலர் அவர்களின் ஆட்சியில் அதிருப்தியடைந்திருந்தனர். ஏனெனில் நாட்டை ஆண்டு வந்த புதிய பணக்கார வகுப்பினர், பழைய உயர்குடிப் பிரபுக்களை ஒதுக்கி வைத்துப் பல வகையிலும் துன்பப் படுத்தினர். அரசாங்க உத்தியோகங்கள் அவர்களுக்கு மறுக்கப் பட்டன. மற்றும் வாணிகத்தின் மூலமாகப் பெரும் பொருள் ஈட்டிய வியாபாரிகளையும் பணக்கார அதிகார வர்க்கமானது தனக்குச் சமமாக ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்தது. எனவே நாட்டிலுள்ள பல்வேறு வகுப்பினரும் பல்வேறு வகையில் செல்வச் சிறு குழு ஆட்சியில் அவதியுற்றனர். அவர்கள் யாவரும் பிற நாடுகள் சென்று புகலிடம் அடைந்ததில் வியப்பொன்றும் இல்லை. சான்றாக மிடிலினி (Mytilene) என்ற நகர அரசில் அதிகாரத்தைக் கைப்பற்றிய பணக்காரர்கள், தங்களுக்குப் பிடிக்காதவர்களை எல்லாம் வீதிகளிலேயே துரத்திச் சென்று கதாயுதங்களால் தாக்கினர். அதைப் பொறுக்க முடியாத சாதாரண மக்கள் நாட்டைவிட்டே வெளியேறினர்.

மேற் சொன்ன பொதுக் காரணங்களேயன்றி ஒரு சில தனிப்பட்ட காரணங்களும் கிரேக்கர்களின் குடியேற்ற நாட்டு முயற்சியைத் தூண்டின. கி. மு. 11-ஆம் நூற்றாண்டிலிருந்தே

கிரேக்கர்கள் ஆசியா மைனர் பகுதிகளில் தொடர்ந்து குடியேறி வந்ததால் மைலிடஸ் (Miletes), தெற்கு அயோனியா நகரங்கள் ஆகியவை தங்கள் நாட்டுக் கடற்கரையோரங்களில் மேலும் குடியேற வகையற்று வேறிடங்களுக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. சில சமயங்களில் நகர அரசுகளினின்றும் தற்காலிகமாக நாடுகடத்தப்பட்ட கலகக்காரர்களும் (Ostracism) தங்களைப் பின்பற்றிய ஒரு சிறு வீரப்படையுடன் சென்று பிற நாடுகளில் குடியேற்றங்களைத் தோற்றுவித்தனர். மற்றும், சில நகர அரசுகளை ஆண்டு வந்த தலைவர்கள் பாதுகாப்பு நிமித்தமும் எரு சில குடியேற்றங்களை ஏற்படுத்தினர். அங்கெல்லாம் இராணுவத் தளங்கள் நிறுவப்பட்டன. அத்தகைய தளங்கள் வெளி நாட்டவர்களின் படையெடுப்புகளைத் தடுப்பதற்கும், மேன்மேலும் ஒரு நாட்டின் அரசியல் செல்வாக்கை அண்டை நாடுகளில் வளர்ப்பதற்கும் அவை பெரிதும் பயன் பட்டன.

(2) கிரேக்கக் குடியேற்றங்களின் சிறப்பியல்புகள்

கிரேக்கக் குடியேற்ற நாடுகள், பிற்காலத்தே ஏற்பட்ட ரோமானியக் குடியேற்ற நாடுகள் அல்லது தற்காலக் குடியேற்ற நாடுகளிலும் பெரிதும் வேறுபட்டிருந்தன. நவீன காலத்தில் ஏற்பட்ட குடியேற்றங்கள் தாய் நாட்டைப் பெரிதும் சார்ந்தே வாழ்ந்து வந்தன. தாய் நாட்டின் நலன்களுக்காகவே குடியேற்றங்கள் என்ற கொள்கை பெரும்பாலும் கடைப் பிடிக்கப் பட்டு வந்தது. ரோமானியக் குடியேற்றங்கள் வெறும் இராணுவத் தளங்களாக மட்டுமே இருந்தன. வெல்லப்பட்ட நாடுகளில் வாழ்ந்த மக்களை என்றென்றும் அடிமைப்படுத்தி வைப்பதற்கே அத்தகைய குடியேற்றங்கள் பயன்பட்டன. ஆனால், கிரேக்கக் குடியேற்ற நாடுகளோ வெளின் தம்மைப் பெற்ற தாய்நாடுகளைச் சிறிதும் சாராமல் சுயேச்சையாகத் தனித்து நின்று சிறப்புற்று விளங்கின. சில சமயங்களில் தாய்நாடும் குடியேற்ற நாடும் ஒன்றோடொன்று போரிட்டுக்கொள்வதுமுண்டு. சான்றாக கொரிந்து நகர அரசும், அதன் குடியேற்ற நாடான கார்சிராவும் வாணிகத் துறையில் சதா போட்டி போட்டுக்கொண்டேயிருந்தன. ஸ்பார்ட்டாவின் குடியேற்ற நாடான டேரெண்டம் (Tarentum) என்ற நகரானது செல்வத்திலும் செல்வாக்கிலும் ஸ்பார்ட்டாவை விடப் பல மடங்கு சிறந்திருந்தது. மிகாரா, கொரிந்து ஆகிய நகரங்களின் குடியேற்றங்களாகிய பைசான்ஷியம் (Byzantium), சிராக்கியூஸ் (Syracuse) ஆகிய நகரங்கள் தாய் நகரங்களைவிட மிகப் பெருமையுடன் திகழ்ந்து வந்தன.

ஏனைய நாட்டுக் குடியேற்றங்களைப் போலன்றிக் கிரேக்கக் குடியேற்றங்கள் பெரிதும் சமயச் சார்புடையவை யாகவே விளங்கின. ஒரு நகர அரசினின்றும் பிரிந்து, வேற்று நாடுகளுக்குச் சென்ற மக்கள், கிரேக்கத் தெய்வங் களின் அனுமதியைப் பெற்ற பின்னரே அவ்விதம் செய்வது வழக்கம். பொதுவாக அத்தகையோர் டெல்ஃபி என்ற இடத் துக்குச் சென்று அபோலோ என்ற தெய்வத்தின் அருள் வாக்கைக் கேட்பது வழக்கம். தெய்வம் வரம் கொடுத்தால்தான் குடியேற்ற நாட்டு முயற்சி மேலும் தொடரப் பெறும். கடவுளின் அனுமதியைப் பெற்ற பின்னர்தான், அரசாங்கத்தின் அனுமதியை மக்கள் கோரினர். இறைவனின் அனுமதி கிடைத்து விட்டால் அரசாங்கத்தின் அனுமதி தானாகவே கொடுக்கப்பட்டுவிடும். தாய்நகரத்திற்கு எவ்வளவு வரி செலுத்தப்பட வேண்டும் என்பதை அரசாங்கம் தீர்மானிக்கும். குடியேற்றத்தைத் தொடங்க ஈகிஸ்ட் (Oecist) என்ற ஒரு தலைவரை அரசாங்கம் நியமிக்கும். ஓரளவு பொருளும் படைக் கலன்களும் அத் தலைவருக்கு வழங்கப்படும். அரசாங்கத்தாரால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு நன்னாளில் நாட்டை விட்டு வெளியேற விரும்பும் பல குடியேறிகளுடன் அத் தலைவர் புறப்படுவார். அப்போது தமது நகரக் காப்புத் தெய்வத்தின் ஆலயக் கருவறையின் எதிரில் எரிந்துகொண்டிருக்கும் வேள்வித் தீயிலிருந்து சிறிது நெருப்பை அவர்கள் தம்முடன் எடுத்துச் செல்வார்கள். போகின்ற புது இடத்தில் நெருப்பை மூட்ட அவர்கள் அக் கொள்ளியையே பயன்படுத்துவர். இவ் வேள்வித்தீ தாய்நாட்டையும் குடியேற்றத்தையும் பிணைக்கும் ஓர் புனிதப் பொருளாகக் கருதப்பட்டது. ஒரு குடியேற்ற நாட்டிலிருந்து இன்னொரு குடியேற்ற நாட்டிற்கு மக்கள் செல்ல விரும்புவார்களே யானால் அதற்குரிய ஈகிஸ்ட் என்ற தலைவரையும் தாய் நகரத்தி லிருந்தே தேர்ந்தெடுப்பது வழக்கம். புதிய நகருக்குத் தேவையான புனித நெருப்பும் தாய் நாட்டிலிருந்தே எடுத்துச் செல்லப்பட்டது. இங்ஙனம் குடியேற்ற நாட்டிற்கும் தாய் நாட் டிற்கும் உள்ள உறவு மிகவும் கவனத்துடன் வளர்க்கப்பட்டது. உண்மையில் ஒரு நகர அரசைச் சார்ந்த அரசனே தனது அடக்கு முறையால், குடியேற்ற நாடுகளுக்கு மக்களைத் துரத்து வதற்கு ஒரு காரணமாயிருப்பான். இருப்பினும் மேற்சொன்ன சடங்குகள் யாவும் ஒழுங்காக நடைபெறும். ஆனால் சமயத் துறையில்தான் தாய்நகரமும் குடியேற்ற நகரமும் பெரிதும் பிணைக்கப் பெற்று விளங்கினவே யல்லாது, அரசியல் துறையில் அவை பெரும்பாலும் தனித்தே இயங்கின. குடியேற்ற நாடுகள் தமது அரசாங்கத்தைத் தாமே வகுத்துக் கொண்டன. தமது

வெளிநாட்டுக் கொள்கைகளைத் தமது விருப்பம் போலவே அமைத்துக் கொண்டன. பெரிய சமயத் திருவிழாக்களின்போது மட்டுமே குடியேற்ற நாட்டு மக்களும், தாய்நகர மக்களும் ஒருங்கு சேர்ந்து திருவிழாவைக் கிரேக்க மரபுகளுக்கேற்பக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

(3) குடியேற்ற நாடுகளின் பரப்பு

ஆரம்பக் காலக் குடியேற்றம்

தொடக்கத்தில் கிரேக்கர்கள் ஆசியாமைனரில்தான் பல குடியேற்றங்களை நிறுவினர். கி.மு.12-ஆம் நூற்றாண்டின்முடிவில் அக்கீயர்கள் லெஸ்பாஸ் (Lesbos), மிடிலெனி (Mytilene), மெக்னீஷியா (Magnesia), கினி (Cyne) ஆகிய இடங்களிலும், அயோனியர்கள் கியாஸ் (Chios), போகியா (Phociea) எரித்ரி (Erythrae), கிளேசோமினி (Clazomenae), லெபடாஸ் (Labatas), எஃப்பிஸஸ் (Ephesus), சேமாஸ் (Samos), மைலிடஸ் (Miletus), ஆகிய இடங்களிலும் குடியேற்றங்களை நிறுவினர். இவைகளுள் மைலிடஸ் ஒன்று மட்டும்தான் மிகவும் பெயரும் புகழும் எய்தியது. டோரியர்கள் என்ற கிரேக்க வகுப்பினர் ஹாலி கார்னஸஸ் (Halicarnasus), நிட்டஸ் (Cnidus), ரோட்ஸ் (Rhodes) ஆகிய இடங்களில் குடியேற்றங்களை நிறுவினர். இங்ஙனம் ஆசியாமைனரின் மேற்குக் கடற்கரைப் பகுதியானது கிரேக்கக் குடியேற்றங்கள் நிறைந்ததாய் விளங்கியது. கிரீஸின் ஒரு பகுதி என்றே கிரேக்கர்கள் அதைக் கருதலாயினர். மீண்டும் இக் குடியேற்றங்களிலிருந்து மக்கள் புறப்பட்டுச் சென்று பல கிளைக் குடியேற்றங்களை ஏற்படுத்தினர். சான்றாக மைலிட்டஸ் என்ற நகரத்திலிருந்து புறப்பட்ட மக்கள் கி.மு. எட்டாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை பல குடியேற்றங்களை வேற்றிடங்களில் தோற்றுவித்தனர்.

பிற்காலக் குடியேற்ற நாடுகள்


கி. மு. 8-ஆம் நூற்றாண்டு முதல் 6-ஆம் நூற்றாண்டு வரைதான் கிரீஸின்குடியேற்ற நாட்டியக்கம் தனது உச்சநிலையை அடைந்தது. அதில் பங்கெடுத்துக்கொண்ட முக்கியத் தாய் நகரங்கள் வருமாறு: யூபியா (Euboea) பிரதேசத்தைச் சார்ந்த கால்கிஸ் (Chalcis), எரித்ரி (Eretria) என்பனவும், மைலிடஸ், போசியா, கொரிந்து, மிகாரா, ரோட்ஸ், கிரீட், அக்கியா ஆகிய நகரங்களும்தான் அத்தகைய தாய் நகரங்களுள் முக்கியமானவைகளாகும். அவற்றுள் கால்கிஸ், எரித்ரி, மைலிடஸ், போசியா ஆகிய

கிரீஸின் குடியேற்ற நாடுகள்
(ஆசியமைனர், வடகிரீஸ் பகுதிகளில்)
எபிடாம்னஸ்
மாசிடோனியா
திரேஸ்
பைசான்டியம்
கால்கிடன்
அபோலோனியா
மிதோன்
பிட்னே
அகேந்தஸ்
ஒலிந்தஸ்
பிரோபான்-டிஸ்
ஸிகிஜிகஸ்
அபைடாஸ்
ஸ்டியம்
பாமிடையா
தாஸோஸ்
தாஸ்
ஸ்பார்டா
கொரிந்த்
மிகாயா
ஏதென்ஸ்
ஸ்பார்டா
ஏஜியன் கடல்
கிளேஸோமினி
லெபிடஸ்
எ.: பிகஸ்
மைலிடஸ்
ஹாலிகார்னாசஸ்
ரோட்ஸ்
படம்-2

நகரங்கள் அயோனிய நகரங்கள். மிகாரா, ரோட்ஸ், கிரீட் ஆகியவை டோரிய நகரங்கள்.

அயோனியக் குடியேற்றங்கள்

கால்கிஸ், (Caalcis) எரிட்ரியா (Eretria) ஆகிய அயோனிய நகரங்கள் கால்கிடிஸ் (Chalcidice) எனும் நிலப்பகுதியில் பல குடியேற்றங்களை நிறுவின. அவற்றுள் முக்கியமானவை ஒலிந்தஸ் (Olinthus), அகாந்தஸ் (Acanthus), தோரோன் (Thorone), பிட்னா (Pydna), மிதோனி (Methone) ஆகிய நகரங்களாகும்.



படம் 3.

இத்தாலியின் மேற்குக் கடற்கரையில் க்யுமி (Cumae) என்ற இடத்திலும், தெற்கு இத்தாலியில் ரீஜியம் (Rhegium) என்ற இடத்திலும், சிசிலியில் நெக்ஸாஸ் (Nexos), எட்னா (Etna), லியோந்தினி (Leontini), மெசானா, ஹிமிரா (Himera) ஆகிய இடங்களிலும் பல குடியேற்றங்கள் அயோனியர்களால் நிறுவப் பட்டன. மைலிடஸ் என்ற அயோனிய நகரமானது கருங்கடலை ஒட்டிய பிரதேசங்களில் எண்பது சிறு குடியேற்றங்களை ஏற்படுத்தியது. பாண்டிசாபியம் (Panticapeum), ஃபாஸிஸ் (Phasis), டிராபீஸஸ் (Trapezus), சைனோப் (Sinope) கிஸிகஸ்

(Cyzicus), லாம்சகஸ் (Lampsacus), அபைடஸ் (Abydos) ஆகியவை அவற்றுள் முக்கியமானவை ஆகும். கிரீஸுக்குத் தேவையான உணவுத் தானியங்கள் இந்தக் குடியேற்ற நாடுகளிலிருந்தே கொண்டுவரப்பட்டன. எகிப்தில் நாக்ராடிஸ்(Naucrates) என்ற நகரத்தை மைலிடஸ் தோற்றுவித்தது. பிற்காலத்தே அலக்சாந்திரியா என்று அழைக்கப்பட்ட நகரம் அதுவேயாகும். போகியா நகர மக்கள், லாம்சகஸ் என்ற குடியேற்றத்தைக் கருங்கடல் பகுதியிலும், மெசாலியா (Messalia), மிகியா (Micaea) ஆகிய நகரங்களைப் பிரான்ஸிஸ் தெற்குக் கடற்கரையிலும் தோற்றுவித்தனர்.

டோரியர்களின் குடியேற்றங்கள்

நாம் ஏற்கெனவே கண்டபடி கார்கீரா (Corcyra) என்ற குடியேற்றத்தைக் கொரிந்து நகர மக்கள் முதன்முதலில் ஏற்படுத்தினர். வடக்குக் கிரீஸில் எபிடாம்னஸ் (Epidamnus), அபோலோனியா (Apollonia) ஆகிய குடியேற்றங்களை அன்னர் தோற்றுவித்தனர். கால்கிடைஸ் (Chalcidice) என்னுமிடத்தில் போடிடியா (Potidaea) என்ற நகரத்தையும், சிசிலியில், சிராகியூஸ் (Syracuse), கெமரீனு (Camarena) ஆகிய நகரங்களையும் அவர்கள் புதிதாகத் தோற்றுவித்தனர். மிகாரா நகரத்தினின்றும் புறப்பட்ட டோரியர்கள், பாஸ்பரஸ் நீரிணைப்பின் ஓரத்தில் பைசான்ஷியம் (Byzantiuem) (பிற்காலத்திய கான்ஸ்டாண்டி நோபிள்)என்றஒரு நகரத்தை நிறுவினர்; பிறகு கருங்கடல் ஓரத்தில் ஹெராக்கிளியா (Hereclea),கெர்சனீஸஸ் (Chersoneses)ஆகியஇடங்களிலும் சிசிலியில் செலினஸ் (Selinus) என்ற இடத்திலும் குடியேற்றங்களை நிறுவினர். ரோட்ஸ், கிரீட் ஆகிய தீவுகளினின்றும் புறப்பட்ட டோரியர்கள், சிசிலியில் ஜேலா (Gela) என்னும் இடத்திலும், ஆப்பிரிக்காவில் கிரீன் (Cyrene), பார்க்கன் ஆகிய இடங்களிலும் குடியேற்ற நகரங்களை அமைத்தனர். ஸ்பார்டாவினின்றும் வெளிப் போந்த டோரியர்கள் தெற்கு இத்தாலியில் டேரண்டம் (Tarentum) என்ற ஒரே குடியேற்ற நகரத்தை ஏற்படுத்தினர். சிராக்யூஸ் என்ற நகரத்திற்கு அடுத்தபடியாக அது சிறப்புற்று விளங்கியது.

அக்கீயர்களின் குடியேற்றம்

அக்கீய நகரத்தினின்றும் புறப்பட்ட கிரேக்கர்கள் தெற்கு இத்தாலியில் பல குடியேற்ற நகரங்களைத் தோற்றுவித்தனர். மெடபாண்டம் (Metapontum), சைபரீஸ் (Sybaris), க்ரோடோனு (Crotona), லாக்ரி (Locri) என்பவை அவற்றுள் தலைசிறந்தவை

ஆகும். செல்வத்திலும் ஆடம்பரத்திலும் அவை தமக்கு நிகரற்று விளங்கின. இவைகளில் கிரேக்கப் பண்பாடே முற்றிலும் நடைமுறையில் இருந்து வந்தது.

(4) குடியேற்ற நாட்டு இயக்கத்தினால் ஏற்பட்ட விளைவுகள்

கிரேக்கர்களின் குடியேற்ற நாட்டு முயற்சிகளால் கிரீஸின் பொருளாதார வளம் பன்மடங்கு பெருகியது. கடல் வாணிகம் என்றுமில்லாதபடி தழைத்து ஓங்கியது. நாட்டில் பெரும் செல்வர்கள் தோன்றலாயினர். கடல்வாணிகம் செய்வோரைக் கடல்கொள்ளைக்காரர்களிடமிருந்து காப்பாற்ற ஆங்காங்கே பல கப்பற்படைகள் அமைக்கப்பட்டன. கப்பல்கட்டும் தொழில் நன்கு வளர ஆரம்பித்தது. துடுப்புகளால் வலிக்கப்பட்டு மெதுவாக இடம்விட்டு இடம் சென்றுகொண்டிருந்த பழைய கப்பல் களுக்குப் பதிலாக வேகமாகச் செல்லக்கூடிய பாய்மரக் கப்பல்கள் பல தோன்றின. புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட குடியேற்ற நாடுகள் மேலும் பல குடியேற்றங்களைத் தோற்றுவித்ததால் கிரீஸின் செல்வாக்குப் பல்வேறு இடங்களில் பல்கிப் பெருகியது. கிரேக்கச் செய்பொருள்களுக்கான சந்தைகளாக அவைகள் விளங்கின. இவற்றால் எல்லாம் நாட்டின் செல்வம் வந்து குவிந்தது. எனவே, சாதாரணச் சிறுகடை வைத்திருந்தவர்க ளெல்லாம், பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தினர்கள். அவைகளில் பணி செய்வதற்காக ஏராளமான அடிமைகள் நியமிக்கப்பட்டனர். நாட்டில் உயர்வும் தாழ்வும், பணக்காரன் ஏழை என்ற வர்க்கபேதமும் தோன்றலாயின. சில சமயங் களில் இவ் வகுப்புகளுக்குள்ளே சண்டையும் சச்சரவும் நிகழ்ந்தன. இத்தகைய வகுப்புக் கலவரங்களின் விளைவாகத் தான் இறுதியில் மக்களாட்சி கிரீஸில் தோன்றியது. பொதுவாக விவசாயம் நாட்டில் குன்றியது. உழவுத் தொழிலில் ஈடுபட் டிருந்த பலர் நகரங்களுக்குச் சென்று குடியேறினர். இத்தகைய புதிய நகரவாசிகள் பழைய நகரவாசிகளைத் தூண்டிய தாலேயே மக்களாட்சி இயக்கம் பலவிடங்களில் தோன்றியது.

சமுதாய விளைவுகள்

குடியேற்ற நாட்டு இயக்கத்தால் கிரேக்க நாகரிகம் பெரிதும் முன்னேறியது. வெளிநாடுகளுக்குச் சென்ற கிரேக் கர்கள், எகிப்திய—சுமேரிய நாகரிகங்கள் போன்ற பழம்பெரும்

நாகரிகங்களோடு தொடர்பு கொண்டனர். அதன் விளைவாகக் கிரேக்க நாகரிகமானது புதிய தெம்பையும் தெளிவையும் பெற்றது. பல புதிய சிறப்பியல்புகள் அவர்கள் நாகரிகத்தில் தோன்றலாயின.பிற நாகரிகங்கள் கிரேக்க நாகரிகத்தை எவ்வாறு பாதித்தனவோ அவ்வாறே கிரேக்க நாகரிகமும் பிற நாடுகளில் பரவியது. கிரேக்கக் குடியேற்றங்கள் கிரேக்க நாகரிகத்தின் உறைவிடங்களாகத் திகழ்ந்தன. அங்கிருந்து சுற்றிலுமுள்ள இடங்களுக்குக் கிரேக்கப் பண்பாடும் நாகரிகமும் பரவலாயின. லிடியா, ஆசியாமைனர் போன்ற பகுதிகள், கிரேக்க நாகரிகத்தின் செல்வாக்கிற்குப் பெரிதும் உட்பட்டன.

வாணிகத் துறையில் ஏற்பட்ட பெருவாரியான முன்னேற்றத்தினால் ஒரு பெரும் தொழிற் புரட்சி ஏற்பட்டது. ஏராளமான தொழில்கள் பல ஆங்காங்கே தோன்றி வளரலாயின. தொழிலகங்கள் பல ஆங்காங்கே நிறுவப்பட்டன. எனவே, நகர அரசுகளின் தாயகத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. நகரக் குடிமக்களின் எண்ணிக்கையை விட அடிமைத் தொழிலாளிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நகர அரசிலும் அதிகமாகக் காணப்பட்டது. பழைய கூட்டுக் குடும்ப முறையும் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்வுற ஆரம்பித்தது. நிலமும் சொத்தும் குடும்பத்திற்கே பொதுவாக இருந்த நிலைமை மாறித் தனிப்பட்டவர்கள் தங்களுக்கென்று சொத்து வைத்துக் கொள்ளும் வழக்கம் நாளடைவில் ஏற்பட்டது. இத்தகைய வழக்கம் முதலில் ஏற்பட்டது, குடியேற்ற நாடுகளில்தான் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. குடியேற்ற நாட்டில் தோன்றிய வழக்கம் இறுதியில் தாய்நாட்டிற்கே திரும்பி வந்தது. இங்ஙனம் குடும்பத்தினுடைய முக்கியத்துவம் குறைந்தது. அரசின் முக்கியத்துவமும் அரசாங்கத்தின் பெருமையும் வளரலாயின. குடும்பத் தலைவனுக்கிருந்த பெருமையும் புகழும் அரசாங்கத் தலைவனிடம் சென்று அடைந்தன. ஒரு சில குடும்பங்களில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு சிறு நிலம் ஒதுக்குகின்ற வழக்கம் ஏற்பட்டது. அது குடும்பத்தின் பொதுச் சொத்தானதால் அதை அவன் விற்க முடியாது. ஆனால் அவன் இறந்த பொழுது அவனது மகன் ஒருவன் அந் நிலத்தைப் பெற்றுக் கொண்டான். நாளடைவில் அவன் அந் நிலத்திற்குச் சொந்தக்காரனாகவே மாறினான். தரிசாகக் கிடந்த நிலங்களை ஒரு சிலர் ஆக்கிரமித்துக் கொண்டு அதைச் சொந்தமாகப் பயிரிட ஆரம்பித்தனர். இங்ஙனம் பல வழிகளில் பழைய குடும்பச் சொத்துமுறை மாறித் தனிப்பட்ட சொத்து முறை கிரிஸில் உருவாயிற்று.

அரசியல் விளைவுகள்

குடியேற்ற நாட்டுப் பெருக்கத்தினால் நாட்டில் செல்வர்கள் பலர் தோன்றி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். ஆதென்ஸில் சிறந்த ஒரு சில மேன்மக்களின் ஆட்சிக்குப் பதிலாக வாணிகத்திலீட்டிய சொத்து படைத்த ஒருசில சுய நலமிகளின் ஆட்சி ஏற்பட்டது. அது டிமாக்கிரஸி (Timocracy) என அழைக்கப்பட்டது. பொருள்களுள்ளவர்களே நாட்டில் மதிக்கப்பட்டார்கள். அதிகாரமும் ஆட்சிப் பீடமும் செல்வத்தை அடிப்படையாகக் கொண்டே அமைந்தன. செல்வம் படைத்த நடுத்தர வகுப்பு அல்லது பிரபு வர்க்கம் நாட்டில் தோன்றியது. பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் மலிந்தன. ஒரு வகையில் அதுவும் நல்லதாய்ப் போயிற்று. ஏனெனில் பல வகையிலும் நசுக்கப்பட்ட ஏழைமக்கள் நாளடைவில் கிளர்ந்தெழுந்து பிரபுக்களை எதிர்க்கவும், அதன் விளைவாக மக்களாட்சி தோன்றவும் தக்கதொரு சூழ்நிலை நாட்டில் தோன்றியது. பிரபுக்களிடமிருந்து சாதாரண மக்களின் கைகளுக்கு அதிகாரம் மாறியது.

கலாச்சார விளைவுகள்

கிரேக்கர்கள் சென்ற இடமெல்லாம் தங்களுக்கே உரித்தான பல நல்ல பழக்க வழக்கங்களையும் பண்புகளையும் நாகரிக நடவடிக்கைகளையும் உடன் கொண்டு சென்றனர். ஹெல்லனிய நாகரிகமானது மத்தியத்தரைக்கடலைச் சுற்றியும் பரவியது. கிரேக்க மொழியை வெளிநாட்டவர்கள் விரும்பிப் படிக்க ஆரம்பித்தனர். கிரேக்க மதமும் குடியேற்ற நாடுகள் மூலமாகப் பிற நாடுகளுக்குப் பரவியது. ஹோமர் என்ற கவிஞரின் நூல்கள் பல்வேறு மக்களால் விரும்பிப் படிக்கப்பட்டன. சிறப்பாக ரோமானியர்கள் கிரேக்க நாகரிகத்தின் செல்வாக்கிற்குப் பெரிதும் உட்பட்டார்கள். ரோமானியர்களின் சட்டங்களும் இராணுவ அமைப்பும் மத நம்பிக்கையும் பெருமளவிற்குக் கிரேக்கர்களுக்குக் கடமைப்பட்டவையேயாகும்.

6. கிரேக்க ஒருமைப்பாடு

கிரேக்க வரலாற்றின் தொடக்கத்தில அதன் குடிமக்கள் இரு மாபெரும் சக்திகளால் அலைக்கழிக்கப்படுவதை நாம் காண்கிறோம். ஒரு சக்தி அவர்களிடையே வேற்றுமையையும் பிளவு மனப்பான்மையையும் வளர்த்தது. அதனால் உந்தப்பட்ட கிரேக்கர்கள் தாய்நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று குடியேறினர். இன்னொரு சக்தி அவர்களிடையே ஒருமைப்பாட்டுணர்ச்சியையும் ஒற்றுமையையும் வளர்த்தது. இத்தகைய ஒருமைப்பாட்டுணர்ச்சிக்கான சூழ்நிலைகள் பல.

(1) இன ஒற்றுமை

தாய்நாட்டினின்றும் பிரிந்த கிரேக்கர்களுக்கும், கிரீஸிலேயே தொன்றுதொட்டு வாழ்ந்துவந்த கிரேக்கர்களுக்கும் இடையே மாற்ற இயலாத ஒரு பாச உணர்ச்சி உண்டாகக் காரணமாயிருந்தது அவர்தம் இன ஒற்றுமை ஆகும். பிற நாடுகளுக்குச் சென்ற கிரேக்கர்கள் தங்களினும் முற்றிலும் வேறுபட்ட ஓர் இனத்தை அங்கே கண்டனர். சிசிலி, இத்தாலி போன்ற இடங்களில் வசித்த மக்களை அவர்கள் நாகரிகமற்ற காட்டுமிராண்டிகள் என்றே கருதினர். தாங்கள் தனிப்பட்ட ஓர் இனத்தவர்கள் என்ற எண்ணமானது அவர்களிடையே ஒற்றுமையுணர்வை மலரச் செய்தது. கிரேக்கப் புராணங்களின்படி டோரியர்கள், அக்கீயர்கள், அயோனியர்கள் என்ற பல்வேறு கிரேக்க வகுப்பினரும் ஹெல்லன் என்ற மூதாதையின் வழி வந்தவர்கள். எனவே, அவர்கள் யாவரும் ஒரு இனத்தவர் என்ற நம்பிக்கை பல்வேறு வகையான கிரேக்க மக்களிடமும் காணப்பட்டது. பிற நாடுகளுக்குச் சென்ற போது இந்த உணர்வானது மேலும் வலுப்பெற்றது. குடியேற்ற நாட்டு மக்கள் தாய்நாட்டைத் தமது தாயைப் போல நினைத்து அன்பு பாராட்டினர்.

(2) மொழி ஒருமை

பல்வேறு கிரேக்க வகுப்பினர்கள் பல்வேறு மொழிகளைப் பேசினர் என்பது உண்மைதான். ஆனால் அவை யாவும் அடிப்படையான ஒரு கிரேக்க மொழியினின்றும் பிறந்தனவாகும். எனவே அவை யாவும் சகோதர மொழிகளாகவே விளங்கின. ஒரு கிரேக்க மொழியைப் பேசுகின்றவன் இன்னொரு கிரேக்க மொழியை எளிதிலே புரிந்து கொள்ள முடிந்தது. எனவே அயோனியரும் அக்கீயரும் நன்கு கலந்து அளவளாவினர். முக்கியமாகப் பிற நாடுகளில் அவர்கள் சென்று குடியேறிய போதுதான் அவர்களின் மொழிஒருமை தெள்ளிதின் புலப்பட்டது. இயல்பாகவே அவர்கள் யாவருக்குமாகச் சேர்ந்து பல பொதுவான இலக்கியங்கள் இருந்தன. ஹோமரால் எழுதப்பெற்ற காவியங்கள் இத்தகைய இலக்கியத்தைச் சார்ந்தவையாகும். கிரேக்கக் கிளைமொழியில் எதைப் பேசுகிறவனுயிருந்த போதிலும் ஒருவன் ஹோமரது காவியங்களை நன்கு படித்திருந்தான்.

முக்கியமாக இலியட் என்ற காவியம், கிரேக்க மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்திய ஒரு பேரிலக்கியமாகத் திகழ்ந்தது. ட்ராய் நகர முற்றுகையைக் கிரேக்கர்கள் தங்களது தேசிய சாதனையாகக் கருதினர். ஆங்கிலேயர்களுக்கு ஷேக்ஸ்பியர் கவிதைகள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு சிறப்புப் பொருந்தியதாக ஹோமரின் கவிதைகள் கிரேக்கர்களுக்குத் தென்பட்டன. இந்துக்களுக்கு இராமாயண மகாபாரதம்போன்று கிரேக்கர்களுக்கு இலியட்டும் ஒடிஸியும் விளங்கின. வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாப் படிப்பினைகளும் பொது அறிவும் மகாபாரதத்தில் இருப்பதாக எங்ஙனம் இந்துக்கள் நம்புகிறார்களோ அதேபோன்று கிரேக்கர்கள் ஹோமரின் கவிதைகளில் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டியவைஅனைத்தும் அடங்கியிருப்பதாக எண்ணினர். ஹோமரது கவிதைகள் அவர்களுக்கு உண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளாகவே தோன்றின. தங்களது அன்றாட வாழ்க்கைக்கு வேண்டிய படிப்பினைகளின் கருவூலம் என்று அவர்கள் ஹோமரின் கவிதைகளை எண்ணினர். அவைகளை நாடெங்கும் பரப்புகின்ற புலவர்கள் பலர் இருந்தனர். நம் நாட்டில் கதாகாலாட்சேபம் செய்கிறவர்களைப் போல் அவர்கள் நாடெங்கும் சென்று ஹோமரின் கதைகளைப் பரப்பினர். தேசிய விழாக்களின் போது ஹோமரது கவிதைகளைக் கற்றவர்களிடையே கவிதைப் போட்டிகள் நிகழ்த்தப் பெற்றன. இங்ஙனம் ஹோமரது பாடல்கள் கிரேக்கர்களின் தேசிய

இலக்கியமாய் மலர்ந்தது. அதோடு கிரேக்கச் சமயத்தைப் பற்றியும், ஆதிக் கடவுளர்களைப் பற்றியும் முதன் முதலில் விரிவாக எழுதியவர் ஹோமர் ஒருவர்தான். அவரால் விவரிக்கப்பட்ட கடவுளர்களின் குணாதிசயங்களைக் கிரேக்கர்கள் அப்படியே நம்பினர். எனவே, ஒரு வகையில் ஹோமர் பண்டைய கிரேக்கச் சமயத்தை உருவாக்கிய ஒரு சமயத் தலைவர் என்றே கருதத் தக்கவர். கிரேக்கர்கள் அனைவரும் ஹோமரையும் அவரது கருத்துகளையும் போற்றியதனால் அவர்கள் அனைவருக்கும் ஒரே சமயக் கொள்கையில் நம்பிக்கை ஏற்பட்டது. கிரேக்கர்கள் எங்குச் சென்றாலும் தங்கள் கடவுளர்களையும் சமயக் கொள்கைகளையும் விடாது கடைப்பிடித்தனர். சமய சம்பந்தமான திருவிழாக்களில் அவர்கள் எல்லோரும் ஓரிடத்தில் கூடி அளவளாவினர். சான்றாக டீலாஸ் (Delos) என்னுமிடத்தில் அவர்கள் ஆண்டுக்கொருமுறை கூடுவது வழக்கம். மத்தியத் தரைக்கடலை ஒட்டிய நகரங்களிலிருந்தும், ஈஜியன் கடலிலுள்ள தீவுகளிலிருந்தும் கிரேக்கர்கள் இத்தகைய ஆண்டுவிழாக்களில் வந்து கலந்துகொள்வது வழக்கம். ஒவ்வொரு நகர அரசிற்கும் ஒவ்வொரு காவல்தெய்வம் உண்டென்பதென்னவோ உண்மைதான். ஆனால் எல்லாக் கிரேக்கர்களுக்கும் பொதுவான ஒரு சில கடவுளர்களும் இருந்தனர். சமயச் சார்பான மூன்று முக்கிய நிறுவனங்கள் கிரேக்கர்களிடம் ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்ச்சியை உண்டாக்குவதற்குக் காரணமாயிருந்தன. அவைகளாவன பொது வழிபாட்டு ஒருமைக் கழகங்கள் (Amphictionies), இறைமொழி கூறும் குறி மேடைகள் (Oracles), தேசிய விளையாட்டுகள் (Pan-hellenic games) என்பனவாகும்.

(3] பொது வழிபாட்டு ஒருமைக் கழகங்கள்

கிரேக்க வரலாற்றின் தொடக்கத்தில் வழிபாட்டு ஒருமையை அடிப்படையாகக் கொண்டு பல கழகங்கள் ஆங்காங்குத் தோன்றின. ஒரே வழிபாட்டு முறையைக் கொண்ட பல்வேறு நகர அரசுகளும் ஒன்றுசேர்ந்து ஒரு பொதுவான கழகத்தைத் தோற்றுவித்துக் கொண்டன. அவையே ஆம்பிக்ஷியானிகள் அல்லது பொதுவழிபாட்டு ஒருமைக் கழகங்கள் என அழைக்கப்பட்டன. எல்லோரும் ஒன்று சேர்ந்து பொதுவழிபாட்டில் ஈடுபடுவதற்காக, அத்தகைய கழகத்தார் அனைவரும் குறிப்பிட்ட காலங்களில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒன்றுகூடுவது வழக்கம். அங்ஙனம் அவர்கள் கூடிய பிறகு அந்த நிகழ்ச்சிக்கு முத்தாய்ப்பு வைத்தாற் போல் பலவகையான விழாக்கள் அங்கே சீரிய முறையில் நடத்தப் பெறுவது வழக்கம். அத்தகைய விழாக்கள்

பெரும்பாலும் சமயம் பற்றியவையாகவே இருக்கும். சில சமயங்களில் அவை போட்டிப் பந்தயங்களாகவும் அமைவதுண்டு. அவ்விழாக்கள் உண்மையில் ஒரு பொதுவான கோயிலைக் காப்பாற்றுவதற்காக ஏற்பட்டவைகளே அன்றி வேறு எவற்றிற்காகவும் அல்ல. அக் கோயிலைக் காப்பாற்றுவதன் மூலம் அதில் வீற்றிருந்த கடவுளையும், கோயிலைச் சுற்றியுள்ள பிரதேசத்தையும் பாதுகாப்பதற்காகவும் அவ் விழாக்கள் எடுக்கப் பெற்றன. ஆனால் பிற்காலத்தே இந் நோக்கம் மாறியது. ஆர்காஸ் போன்ற இடங்களில் அமைந்த கழகங்கள் அரசியல் நோக்கத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தன.

பொது வழிபாட்டு ஒருமைக் கழகங்கள் இருவகைப்பட்டனவாகும். ஒன்று குறுகிய நோக்கத்தையும், மற்றொன்று பரந்த நோக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்தன. குறுகிய நோக்கின் அடிப்படையில் அமைந்த கழகங்கள் குலத்திற்குக் குலம் வேறுபட்டுத் தனித்தனியே அமைந்திருந்தன. ஆனால் வேறுசில கழகங்கள் பல்வேறு குலங்களுக்கும் பொதுவானதோர் கூட்டுறவாக அமைந்திருந்தன. அத்தகைய கழகங்களில் அக்கீயர்கள், அயோனியர்கள், டோரியர்கள் ஆகிய பல்வேறு குலங்களைச் சேர்ந்த கிரேக்கர்களும் உறுப்பினராயிருந்தனர். ஒரு குலதெய்வத்தை வழிபட்டு ஒரு குலத்திற்கு மட்டுமே உரித்தாயிருந்த குல வழிபாட்டொருமைக் கழகத்திற்குத் தக்கதொரு எடுத்துக்காட்டாக டீலாஸ் நகரக் கழகத்தைக் குறிப்பிடலாம். அது அயோனியக் குலத்திற்கு வரித்தானதோர் கழகமாகும். அயோனியர்கள் வாழ்ந்த நகரங்களிலிருந்தும், தீவுகளிலிருந்தும் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் டீலாஸ் என்ற புனிதத் தீவில் ஆண்டுக்கொரு முறை கூடுவது வழக்கம்.

அங்குக் கூடி அவர்கள் அபோலோ என்ற தெய்வத்தை வழிபடுவார்கள். அத் தெய்வத்தை மகிழ்விக்கும் பொருட்டுப் பலவகையான ஆடல்பாடல்களை நிகழ்த்துவார்கள். குத்துச் சண்டை, மற்போர் போன்ற போட்டிப் பந்தயங்களும் அங்கு நடைபெறுவதுண்டு. மிகப் பழைமையான இத் திருவிழாவானது அயோனியர்கள் சற்றே நலிவுற்றபோது மக்களால் ஓரளவு கைவிடப்பட்டது. ஆனால் கி. மு. நான்காம் நூற்றாண்டில் ஆதென்ஸ் நகர மக்கள் இக் கழகத்தைப் புதுப்பித்தனர். அத்தகைய பேரரசில் இடம் பெற்றிருந்த பல்வேறு நகரங்களையும் சமயக் கயிற்றால் பிணைக்கக் கூடிய ஒரு நிறுவனமாக அஃது அமைந்தது. சமய ஒருமையின் அடிப்படையில் எங்ஙனம் ஒரு அரசியல் ஒருமைப்பாட்டை உண்டாக்க முடியும் என்பதற்கு

டிலாஸ் நகரப் பொது வழிபாட்டுரிமைக் கழகம் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். ஆசியாமைனரில் உள்ள மைகலி (Mycale) என்னுமிடத்தில் அயோனியர்களுக்குச் சொந்தமான இன்னொரு வழிபாட்டொருமைக் கழகம் இருந்தது. அக் கழகத்தின் குலதேவதை போசிடன் (Posiedon) என்னும் தெய்வமாகும். பானியோனியம் (Panionium) என்றழைக்கப்பட்ட கோவிலில் அத் தெய்வத்தை வைத்து அவர்கள் வணங்கினர்கள். ஆண்டுதோறும் அத் தெய்வத்திற்காக நடைபெற்ற திருவிழாவானது பானியோனிய உற்சவம் என அழைக்கப்பட்டது.

ஆசியாமைனரைச் சேர்ந்த பன்னிரண்டு நகரங்களில் வசித்த அயோனியக் குடும்பங்கள் அவ்வுற்சவத்தில் கலந்து கொண்டன. டோரியன் இனத்தைச் சேர்ந்த கிரேக்கர்கள் ஆசியாமைனரிலிருந்த நீடஸ் நகரத்திலும், ஆர்கோஸ் எனும் கிரேக்க நகரத்திலும் பொதுவழிபாட்டுரிமைக் கழகங்களை நிறுவியிருந்தனர். பல்வேறு நகரங்களைச் சார்ந்த டோரிய மக்கள் ஆங்காங்கே ஒன்று கூடி உற்சவங்களைக் கொண்டாடினர்கள். அக்கீய இனத்தைச் சார்ந்த கிரேக்கர்கள் ஈஜியன் என்ற நகரில் ஜ்யூஸ் என்ற கடவுள் வழிபாட்டிற்கான கழகம் ஒன்றைத் தோற்றுவித்தனர்.

பரந்த நோக்கத்தின் அடிப்படையில் அமைந்த வழிபாட்டு ஒருமைக் கழகத்திற்குத் தக்கதோர் எடுத்துக்காட்டாக டெல்ஃபி நகரில் அமைத்த வழிபாட்டுக் கழகமானது விளங்கியது. டெல்ஃபி எனும் நகர் கிரீஸ் நாட்டின் நடு இடத்தில் அமைந்த தோர் சிறிய நகரமாகும். அங்கு கிரீஸின் வடக்கிலிருந்தும் மத்தியிலிருந்தும் போந்த பன்னிரண்டு பல்வேறு கிரேக்கக் குலத்தவர்கள் ஒன்று கூடித் தேசியத் திருவிழாக்களைக் கொண்டாடினர். அங்கே அபோலோ என்ற கடவுளுக்குப் பெரிய தோர் கோயில் ஒன்று அமைந்திருந்தது. அதோடு வருங் காலத்தைப் பற்றி உரைக்கின்ற குறிமேடை ஒன்றும் அங்கு அமைந்திருந்தது. அக் குறிமேடையில் அமர்ந்து எதிர்காலம் பற்றி உரைத்துவந்த ஒரு பெண்ணின் மூலமாக அபோலோ என்ற தெய்வமே வந்து பேசுவதாக ஒவ்வொருவரும் நம்பினர். எனவே புதியமுயற்சியைத் தொடங்குவதற்கு முன் கிரேக்கர்களில் பெரும்பாலோர் டெல்ஃபிக்கு வந்து குறிகேட்ட பின்னரே அச் செயலில் துணிந்து இறங்குவது வழக்கமாக இருந்தது.

டெல்ஃபி நகரப் பொதுவழிபாட்டுரிமைக் கழகத்தில் உறுப்பினராயிருந்த ஒவ்வொரு இனத்தவரும் இரண்டு வாக்குகளைக்

கொண்டிருந்தனர். அதற்கென்று தனிப்பட்ட பொதுக்குழு ஒன்று அமைக்கப்பட்டமையால் ஆண்டுக்கு இரண்டு முறை அது கூடியது. அவ்வமயம் கழக உறுப்பினர் அனைவரும் அங்குக் கூடி டெல்ஃபிக்கோவிலைஎவ்வாருனுயினும்பாதுகாப்பதென வாக்குறுதி எடுத்துக்கொண்டனர். கோவிலைப் பராமரிப்பதற்காக ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு வரியைச் செலுத்த வேண்டும். எனவே கழகத்தின் உறுப்பினர்களுக்குள்ளே சமய உறவோடு அரசியல் உறவும் ஏற்பட்டு அவர்களுக்குள் ஒருவிதப் பாசமும் பந்தமும் ஏற்பட்டன. இக் கழகத்தின் விரோதிகள் டெல்ஃபியையே குறி வைத்துத் தாக்க ஆரம்பித்தனர். அச் சமயங்களில் பொது வழிபாட்டுரிமைக் கழகத்தின் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எதிரியை விரட்டுவதில் முனைந்தனர். இங்ஙனம் டெல்ஃபியானது கிரேக்கரின் வாழ்வோடு இரண்டறக் கலந் திருந்தது. கிரேக்க தேசிய உணர்ச்சிக்கு வித்திட்ட நிறுவனங் களில் இதுவே மிகவும் முக்கியமானதாகும். கிரேக்க நாட்டோடு தொடர்பு கொள்ள வேண்டிய அந்நியரும் கூட டெல்ஃபியில் வாழந்த மதகுருமார்களின் துணையையே நாடினர்.

கலாரியா (Calauria) என்ற தீவில் ஏழு நகர அரசுகள் சேர்ந்து அமைத்ததோர் பொதுவழிபாட்டுரிமைக் கழகம் இருந்தது. அங்கே போசிடன் என்ற தெய்வத்திற்கு வழிபாடு நடந்தது. இக் கழகமானது டெல்ஃபிக் கழகத்தைப் போன்று அவ்வளவு முக்கியமானதன்று. அரசியல் நோக்கத்தின் அடிப் படையில் அது அமையவில்லை. மற்றபடி அஃது வாணிக அடிப் படையில் அமைந்ததோர் கூட்டுறவாகவே விளங்கியது. பிற் காலத்தே எழுந்த வாணிகப் போட்டியின் காரணமாக இக் கழகத்தின் இரு உறுப்பினர்களான ஆதென்ஸ், ஈஜைனு (Aeginea) ஆகிய இரு நகரங்களும் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டன. இதனுடைய சிறப்பியல்பு யாதெனில் இங்குதான் கிரேக்கர்களால் முதன் முதல் கட்டப்பட்ட கற்கோவில்கள் காணப் பட்டன. அக் கோவில்களின் வாசற்படிகளில்தான் கிரேக்க நாட்டுப் பெரும் பெரும் பேச்சாளர்கள் சென்று மடிந்தனர்.

(4) இறைமொழி கூறும் மேடைகள்

கிரேக்கர்களின் இன்னொரு முக்கியமான சமய நிறுவன மானது தெய்வீகக் குறிமேடைகள் பற்றியதாகும். அத்தகைய குறிமேடைகள் மூலம், கிரேக்கர்கள் தங்களது எதிர்காலத்தைப் பற்றி அறிந்துகொள்ள முயன்றார்கள். அங்கே அமர்ந்துகொண்டு குறி சொல்லிய பெண்டிர்களின் மூலமாகக் கிரேக்கர்களின்

இஷ்ட தெய்வங்கள் ஆவேசித்துத் தங்கள் கருத்துகளை விளம்புகின்றன என்று கிரேக்கர்கள் நம்பினர். எனவே, நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் அங்கு வந்து குழுமினர்கள். பல்வேறு கிரேக்க வகுப்பினரிடையே ஒற்றுமை வளர இவைகள் பெரிதும் உதவின. கிரேக்க நாட்டில் பல பாகங்களிலும் இத்தகைய குறிமேடைகள் இருந்த போதிலும் டெல்ஃபி நகரில் அமைந்திருந்த குறி மேடைதான் மிகவும் சிறப்பாகக் கருதப்பட்டது. அங்குக் குடிகொண்டிருந்த அபோலோ என்ற தெய்வத்தின் வாக்கு, குறி சொல்லும் பெண்ணின் மூலமாக வெளிப்படுவதாக அனைவரும் நம்பினர். அபோலோவின் கோவிலானது பார்னசஸ்(Parnususs) என்ற செங்குத்தான சிகரங்களின் அடியில் அமைந்திருந்தது. அங்கிருந்த பாறைகளினிடையே ஒரு புனிதமான ஊற்று அமைந்திருந்தது. அவ்வூற்றில் நீராடிய பின்னரே பக்தர்கள் கோவிலுக்குள் செல்வார்கள். கோவிலின் கோடியில் அமைந்திருந்த ஒரு பாதாள அறையில் குறி சொல்லும் மங்கை ஒருத்தி ஒரு முக்காலியின் மீது அமர்ந்து கொண்டிருப்பாள். அவளைச் சுற்றியும் சதா புகைந்துகொண்டிருக்கும் நறுமணப் பொருள்களை உட்கொண்டு அந்த மயக்கத்தில் ஆவேசம் கொண்டவளைப் போன்று ஏதேதோ முணுமுணுத்துக் கொண்டேயிருப்பாள். அத்தகைய முணுமுணுப்புக்களில் இரு பொருள்கள் தொனிக்கும் வாசகங்கள் அடங்கியிருக்கும். குறி கேட்கின்றவர்கள் அவற்றைத் தங்களுக்குச் சாதகமான முறையில் எடுத்துக்கொள்வர். கோயிலுக்கு வந்தவர்கள் விடுக்கின்ற வினாக்கள் அனைத்திற்கும் பதில் சொல்ல வேண்டியது குறி சொல்லும் பெண்ணின் கடமையாகும். அவளுடைய தெய்வீக வாக்குக்கு விரோதமாக நடந்துகொள்ள எத்தகைய கிரேக்க வீரனும் முன் வரமாட்டான். அபோலோவைக் கலந்து ஆலோசிக்காமல் எதிலும் கிரேக்கர்கள் ஈடுபட மாட்டார்கள்.

டெல்ஃபி நகரக் குறிமேடையானது உலகின் மத்தியில் அமைந்திருந்ததாகக் கருதப்பட்டது. ஜ்யூஸ் என்னும் தெய்வத்தால் கிழக்கிலும் மேற்கிலுமாகப் பறக்கவிடப்பட்ட இரண்டு கழுகுகள் இறுதியாக வந்து ஒன்று சேர்ந்த இடம் அதுதான் என்பது கிரேக்கர்களின் உறுதியான நம்பிக்கையாகும். இந்தக் குறிமேடைக்குக் கிரேக்கர்களேயன்றிக் கிரேக்கர்களல்லாதாரும் வந்து ஆலோசனை கேட்டனர். எனவே அது ஹெல்லனியர்களின் சமயத் தலை நகரமாகமட்டுமின்றிக் கிரேக்கர்களும் கிரேக்கர் அல்லாத காட்டுமிராண்டிகளும் ஒருங்கே கூடிய பொது இடமாகத் திகழ்ந்தது. லிடியா தேசத்தைச் சேர்ந்த மன்னர்களும் வீடாஸ்

நகர மன்னனும் இங்கே வந்து குறி கேட்டுப் போனதாகக் கூறப்படுகிறது. மேலும் கிரேக்கக் குடியேற்ற நாடுகளிலிருந்தும் ஏராளமான மக்கள் இங்கு வந்து போய்க்கொண்டிருந்தனர். தாய்நகரங்களுக்கும் குடியேற்ற நகரங்களுக்குமிடையே நெருங்கியதோர் பிணைப்பு ஏற்படவும் இக் குறிமேடைகள் பெரிதும் உதவின எனலாம்.

தேசிய விளையாட்டுகள்

நாம் ஏற்கெனவே கண்டபடி பொதுவழிபாட்டிற்காகக் கூடிய கிரேக்கர்கள் அச் சமயத்தே பல போட்டிப் பந்தயங்களிலும் விளையாட்டுகளிலும் ஈடுபட்டனர். நான்கு வகையான தேசிய விளையாட்டுகளில் அவர்கள் கலந்துகொண்டதாகத் தெரிகிறது. அவை முறையே ஒலிம்பிய - இஸ்த்மிய - நிமிய - பிதிய விளையாட்டுகள் என அழைக்கப்பட்டன. அவற்றுள் மிகவும் புகழ் வாய்ந்தவை ஒலிம்பிய விளையாட்டுகளாகும். ஒலிம்பிய மலையின் அடிவாரத்தில் உள்ள புனிதமான இடங்களில் இவ் விளையாட்டுகள் தடத்தப் பெற்றன. நான்காண்டுக்கொருமுறை இவைகள் நடைபெற்றன. பொதுவாக நடுக் கோடைக்காலத்திற்குப் பின்னர் வருகின்ற இரண்டாவது பௌர்ணமி தினத்தன்று இத் திருவிழா நடைபெறுவது வழக்கம். முதன் முதலில் (கி. மு. 776-இல்) ஓட்டப்பந்தயம்தான் நடைபெற்றது. நாளடைவில் மற்போர், குத்துச் சண்டை, தேரோட்டப் பந்தயம், குதிரைப் பந்தயம் முதலிய பல்வேறு விளையாட்டுகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டன. ஐந்தாட்டம் (Pentathlum) எனும் ஒரு விளையாட்டில் ஐந்து வகையான பந்தயங்களும் அதாவது தாண்டல், ஓடல், ஈட்டி எறிதல், கேடயம் எறிதல்; மற்போர் செய்தல் ஆகிய ஐந்தும் கலந்திருந்தன. அலெக்சாந்தரின் தந்தை பிலிப் என்பார் இத்தகைய பத்தயத்தில் கலந்துகொண்டு வெற்றி கொண்டதாகவும், அதன் நினைவுச் சின்னமாகக் குதிரை உருவம் பொறித்த நாணயங்களை வெளியிட்டதாகவும் தெரிகிறது. இதே போன்று சிராகியூஸ் (Syracuse), அக்ரகாஸ் (Acrogas) ஆகிய நகர அரசுகள் தேரோட்டப் பந்தயத்தில் வெற்றிபெற்றதன் நினைவாக நான்கு குதிரைகள்பூட்டியஇரதங்களின் உருவங்களைத் தங்களது நாணயங்களில் பொறித்தனர். இத்தகைய தேசிய விளையாட்டுகள் முதலில் ஒரு நாளில் மட்டுமே நடந்தன. கொஞ்சம் கொஞ்சமாக அவை ஐந்து நாட்கள் முதல் பத்து நாட்கள் வரை நடைபெறலாயின. தூய கிரேக்க இனத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே இவ் விளையாட்டில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர். போட்டிப் பந்தயங்களில் வெற்றி பெற்றவர்

களுக்கு ஒலிவ இலைகளால் புனையப் பெற்ற தலைமுடி ஒன்று பரிசாக வழங்கப்பட்டது. அதோடு வெற்றியாளர்களுக்குப் பல வகையான சலுகைகள் தரப்பட்டன. தொடர்ந்து பல நாட்கள் வரையில் அவர்களுக்குப் பல வீடுகளில் விருந்து அளிக்கப் பட்டது. அரசனுக்கு அருகில் நின்று போர்க்களங்களில் போரிடு கின்ற உரிமையானது ஸ்பார்ட்டாவில் அத்தகைய வீரர்களுக்கு வழங்கப்பெற்றது.

ஒலிம்பிய விளையாட்டுகளை முதன் மாதிரியாகக் கொண்டு டெல்ஃபியில் நான்காண்டுக்கொருமுறை பிதிய (Pythian) விளையாட்டுகள் நடத்தப்பட்டன. அங்கே ஓட்டப் பந்தயங் களோடு யாழின்னிசைப் போட்டியும் நடைபெற்றது. ஆர்கோலிஸ் நகரத்தில் நிமிய (Nimian) விளையாட்டுகள் இரண்டாண்டுக்கொருமுறை நடத்தப்பட்டன. இஸ்த்மிய (Isthmian) விளையாட்டுகள், கருங்கடலை மத்தியத்தரைக்கட லோடு இணைத்த பூசந்தியின் மீது அடர்ந்து வளர்ந்திருந்த பைன்மரக் காடுகளில் இரண்டாண்டுக் கொருமுறை நடத்தப் பெற்றன. இங்கேயும் இசைப் போட்டிகள் நடைபெறுவது வழக்கம். ஒலிம்பிய விளையாட்டுகள் நடைபெற்ற பின்னர் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் விளையாட்டுகள் நடைபெறும் வகையில் மேற்கூறிய இடங்களில் தேசிய விளையாட்டுகள் நடத்தப் பெற்றன. இதில் பங்கெடுத்துக்கொண்ட கிரேக்கர்கள் தங்களது சில்லறை வேற்றுமைகளை மறந்து எல்லோரும் உடன் பிறந்தார் என்ற உணர்ச்சியோடு பழகி நல்லதொரு ஒற்றுமை உணர்ச்சியைத் தங்களுக்குள் வளர்த்துக் கொண்டார்கள்.

7. ஸ்பார்ட்டாவின் ஆரம்பகாலக் வரலாறு

(1) ஆர்காஸ் நகர அரசின் மேம்பாடு

பெலப்பொனீஷிய தீபகற்பத்தில் மிக்க புகழுடனும், பெயருடனும் முதன்முதலில் விளங்கிய நகர அரசு ஆர்காஸ் எனப்படுவதாகும். கொரிந்து நகர அரசிற்குத் தெற்கே அமைந்திருந்த இந் நகரம் வரலாற்றுக் காலத்திற்கு முன்பு இருந்தே சீரும் சிறப்பும் பெற்று இருந்தது. பண்டைய மைசீனிய நாகரிகத்தின் சின்னங்கள் பலவற்றை இது தன்னகத்தே கொண்டிருந்தது. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட கிரீஸிற்கும் வரலாற்றுக் காலக் கிரீஸிற்கும் ஒரு பாலமெனத் திகழ்வது, ஆர்காஸ் நகர அரசாகும். டோரிய இனத்தின் நகர அரசுகளுக்குள் இஃது சிறந்ததாகக் கருதப்பட்டது.

ஆர்காஸின் சிறப்பிற்கு மிக முக்கியமான காரணம் அதன் புவிஇயல் அமைப்பாகும். ஆர்காலிக் வளைகுடாவின் கரையில் மிகவும் கேந்திரமான ஒரு இடத்தில் இஃது அமைந்துள்ளது. ஆர்கைவ் சமவெளிக்குள் ஊடுருவிச் சென்ற உள்நாட்டுப் பாதைகள் பல இவ்விடத்தேதான் ஒன்று கூடியுள்ளன. ஈஜியன் கடலில் அமைந்துள்ள பல தீவுகள் டெலாஸ், ஈஜினா போன்ற பல முக்கியமான வாணிகச் சந்தைகளுக்கு மிக அருகில் அமைந்துள்ளமை அதன் மற்றொரு சிறப்பாகும். ஆர்காலிக் வளைகுடாவைச் சுற்றியுள்ள பல்வேறு இடங்களுக்கும் நடுநாயகமாக அது விளங்கியது. அதோடு அதற்குத் தெற்கிலும், கிழக்கிலும் வடக்கிலும் உள்ள பல இடங்களையும் அது நாளடைவில் வென்று தன்னுடன் இணைத்துக்கொண்டு சிறிய பேரரசாக விரிவடைந்தது. சிறப்பாக ஃபெய்டான் என்ற வேந்தரின் காலத்தில்தான் ஆர்காஸ், புகழின் உச்சநிலையை அடைந்தது.

ஃபைடன் (கி.மு. 670 - 630)

ஆர்காஸ் நகர அரசின் ஒப்பற்ற மன்னரான இவர் திட்டமாக எக்காலத்தே அரசு புரிந்து வந்தார் என்பது தெரியவில்லை.

கி. மு. 670 முதல் 630 வரை அவர் அரசோச்சி வந்தார் என நம்பப்படுகின்றது. பெலப்பொனீஷிய தீபகற்பத்தில் ஆர்காஸ் ஏனைய நகர அரசுகளை விடப் பல்லாற்றானும் சிறந்து விளங்கிய காலம் இதுவேயாகும். அதிகார பலத்திலும் செல்வாக்கிலும் அவர் கிரீஸில் ஆண்ட பல சர்வாதிகாரிகளை ஒத்து விளங்கினர். ஆனால் உண்மையில் அவர் ஒரு கொடுங்கோல் அரசர் அல்லர். சட்டப்படியே அவர் அதிகாரத்திற்கு வந்தார். தம் நகர அரசின் மேம்பாட்டிற்காக எல்லா வகையான முயற்சிகளையும் அவர் எடுத்துக் கொண்டார். ஆர்காஸை ஆண்ட மன்னர் எவரும் தீரத்திலும் வீரத்திலும் திறமையிலும் அவருக்கு ஈடாகக் கருதப்படத் தக்கவர் அல்லர்.

முதலில் அவர் ஆர்காஸ் நகர அரசின் ஆட்சியை நன்கு வலுப்படுத்துவதில் முனைந்தார். அதன்பின் அதன் எல்லையை விரிவாக்குவதில் தமது முழுக் கவனத்தையும் செலுத்தினர். ஆர்காஸின் சமவெளி முழுவதிலும் தமது அதிகாரத்தின் எல்லையைப் பரப்பினர். அதன்பின் கைனூரியாவிலும் (Cynuria) கிழக்கே உள்ள லக்கோனியாவிலும் (Laconia) கடற்கரைப் பிரதேசங்களையும், ஸ்பார்ட்டாவைச் சேர்ந்த சைதீரா (Cythera) என்ற தீவையும் அவர் கைப்பற்றித் தம் நாட்டோடு இணைத்துக் கொண்டார். அண்டையிலுள்ள கொரிந்து, சிசியான் (Sicyen), ஈஜினு (Aegena) ஆகிய நகர அரசுகளும் ஃபைடனின் தலைமையை ஏற்றுக் கொண்டன. இங்ஙனம் ஒரு ஃபெலப்பொனீஷிய இணைக்கூட்டரசிற்குத் (Confedency) தலைவராக அவர் விளங்கினர். ஸ்பார்ட்டா நகர அரசு ஒன்று மட்டுமே ஆர்காஸின் முக்கிய எதிரியாக விளங்கியது. ஸ்பார்ட்டா தன்னுடைய ஆதிக்கத்தைப் ஃபெலப்பொனீஷியாவில் வளர்த்துக் கொள்ளாதவாறு ஃபைடன் ஒருவர்தான் தடை செய்துவந்தார். கி.மு. 569-இல் இவ்விரு நாடுகளுக்கும்இடையே நடைபெற்ற ஐசியாப் (Hyciae) போக்களத்தில ஃபைடன் ஸ்பார்ட்டாவை வென்றார். ஒலிம்பிய மலையின் அடிவாரத்தில் இருந்த ஈலிஸ் (Elis), பைஸா (Pisa) ஆகிய இரு சிறு நகரங்கள், புனித நகரமானது தத்தமக்கே உரியதென வாதித்துத் தமக்குள்ளே போரிட்டுக் கொண்டன. ஈலிஸ் நகரத்தை ஸ்பார்ட்டாவும், பைசா நகரத்தை ஆர்காஸும் ஆதரித்தன. அதற்கு ஏற்பாடு செய்தவர் ஃபைடன் மன்னரே யாவர். ஸ்பார்ட்டாவை வென்ற ஆண்டே ஃபைடன் ஒலிம்பிய விளையாட்டிற்குத் தலைமை தாங்கினர். அவர் ஒலிம்பியாவில நடைபெற்றுவந்த 28-ஆவது விளையாட்டு விழாவிற்குத் தலைமை தாங்கினர் எனத் தற்கால வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். முதன்முதலில்

நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டின் காலம் கி. மு. 776 என்பதைக் கொண்டு ஃபைடன் மன்னரின் காலமும் ஒருவாறு கணிக்கப்படுகிறது. மேலும் கிரீஸில் நடைபெற்ற வாணிகப் போட்டியிலும் ஃபைடன் கலந்து கொண்டார். கால்கிஸ் (Caalcis), ஈரீட்ரியா (Eritria) ஆகிய இரு நகரங்களின் தலைமையில் இரு வாணிகக் கூட்டுறவுகள் ஏற்பட்டு அவை ஒன்றோடொன்று போட்டியிட்டுக் கொண்டிருந்தன. கொரிந்து நகர அரசு, கால்கிஸ் கூட்டுறவை ஆதரித்தது. ஃபைடன், ஈரீட்ரியக் கூட்டுறவோடு சேர்ந்து தமது செல்வாக்கை வளர்த்துக் கொண்டதோடு வாணிகத்தையும் கொரிந்து நகர அரசிற்கு இணையாக வளர்த்துக் கொண்டார். 'ஃபெலப்பொனீஷியாவில் முதன்முதலில் நாணயங்களையும், குறிப்பிட்ட நிறையுள்ள எடைகளையும் அளவுகளையும் கொண்டுவந்தவர் இம் மன்னரேயாவர்' என ஒரு சிலர் கூறுகின்றனர். ஆனால் லிடியாவில் ஏற்கெனவேயே நாணயப் புழக்கம் இருந்தது. ஈஜினு நகரம் லிடியாவைப் பின்பற்றித் தனது மக்களிடம் நாணயங்களைப் புகுத்தியது. ஈஜினுவைப் பின்பற்றியே ஃபைடன் தனது நகர அரசில் நாணயங்களைக் கொண்டு வந்திருக்கக் கூடும். ஒரே மாதிரியான நாணயங்களையும் எடைகளையும் ஏற்படுத்திய பெருமை அவரையே சேரும். அவை நாளடைவில் கிரீஸ் முழுவதிலும் பரவின. ஃபைடன் மன்னரின் உள்நாட்டுக் கொள்கை போற்றப்படுதற்குரிய ஒன்றாகும். அவர் பட்டத்திற்கு வந்த பொழுது ஆர்கைவ் வழிபாட்டுரிமைக் கழகமானது நலிவுற்று ஆதரவின்றிக் கிடந்தது. அதன் உறுப்பினர்கள் அவ்வப்போது ஒன்று கூடுகின்ற வழக்கத்தையும் கைவிட்டு விட்டனர். இதைக் கண்ட ஃபைடன், கழகத்தை மீண்டும் உயிர்ப்பித்தார். அது முக்கியமான பல அரசியல் விளைவுகளை ஏற்படுத்தியது. அதே போன்று அவர் ஒலிம்பிய விளையாட்டுகளுக்கும் புத்துயிர் ஊட்டினார்; புதிய விதிகள் பலவற்றை அவ் விளையாட்டில் கலந்துகொள்வோர் கடைப்பிடிக்குமாறு செய்தார்; நாட்டின் பொருளாதார வளர்த்திற்காகப் பலவகையிலும் முயன்றார்; அண்டையிலுள்ள நாடுகளிலெல்லாம் ஆர்காஸ் நகரப் பண்டங்கள் விற்கப்படுவதற்கு வகை செய்தார். அவரால் புகுத்தப்பட்ட நாணய வகைகளும் எடைகளும் ஆர்காஸின் வாணிகத்தை மேன்மேலும் ஓங்கச் செய்தன. ஆர்காஸின் நாணயங்கள் பொன்னாலும் வெள்ளியாலும் ஆகிய சிறு கட்டிகளாய் விளங்கின. அவைகள் ஸ்பிட் என அழைக்கப்பட்டன. ஈஜினுவில் ஃபைடனுக்குச் சொந்தமாயிருந்த வெள்ளிச் சுரங்கம் ஒன்றிலிருந்து கிடைத்த உலோகத்தினின்றும் நாணயங்கள்

செய்யப்பட்டன என்பது தெரிகிறது. ஃபைடனுடைய மரணத்திற்குப் பின்னர் ஆர்காஸின் சிறப்புக் குன்றியது. ஆர்காஸ் இணைக் கூட்டரசானது கலைந்தது. ஸ்பார்ட்டா நகர அரசு தனக்கு ஏற்கெனவே சொந்தமாயிருந்த கிமூரியா, சைதீரா ஆகிய இரு இடங்களையும் ஆர்காஸிடமிருந்து கைப்பற்றிக் கொண்டது. கொரிந்து, சிசியோன் ஆகிய நகர அரசுகள் கொடுங்கோலாட்சிக்கு உட்பட்டுப் பலவகையிலும் சிறப்புற்றன. ஈஜினு நகர அரசானது வாணிகத்தில் சிறந்த செல்வம் மிகுந்த ஒரு சுயேச்சை நகர அரசாக வளரலாயிற்று. இங்ஙனம் ஆதியில் ஈடும் எடுப்புமற்றுத் திகழ்ந்த ஆர்காஸ் நகர அரசானது ஃபைடன் மன்னனுக்குப் பின்னர் சிறப்பிலும் செல்வாக்கிலும் பெரிதும் குன்றிவிட்டது. ஸ்பார்ட்டா நகரப் பேரரசு அதன் சீரிய இடத்தைப் பிடித்துக்கொண்டது.

(2) ஸ்பார்ட்டா நகர அரசு

புவியியல் அமைப்பு

பண்டைய கிரீஸின் இரு கண்கள் என விளங்கிய நகர அரசுகள் ஸ்பார்ட்டாவும் ஆதென்ஸுமாகும். இவையிரண்டும் தமக்கே உரிய தனிப் பண்புகளை வளர்த்துக்கொண்டு கிரீஸ் அனைத்துக்கும் ஒரு முன்மாதிரியாய் விளங்கின. இவற்றுள் தொடக்கத்தில் பெரிதும் சிறப்புற்று விளங்கியது, ஸ்பார்ட்டா என்னும் நகர அரசேயாகும். லக்கோனியா என்ற பள்ளத்தாக்கின் கோடியில் அது அமைந்துள்ளது. லக்கோனியாவின் தலைநகரமென அதைக் கருதலாம். யூரோட்டஸ் என்ற நதி, லக்கோனியச் சமவெளியை வளம்பெறச் செய்கிறது. அதைச் சுற்றிலும் இரண்டு மலைத்தொடர்கள் அமைந்துள்ளன. அவை அச் சமவெளிக்கு ஓர் அரண்போல் அமைந்து நல்லதோர் பாதுகாப்பாய் விளங்குகின்றன. தெற்கிலுள்ள விரிகுடாவின் மூலமே லக்கோனிய மக்கள் கடலுக்குள் செல்ல முடியும். எனவேதான் ஸ்பார்ட்டா, ஆதென்ஸைப்போல் கடல்வன்மையில் சிறந்ததாக விளங்கமுடியாமல் போயிற்று. ஆனால் நிலப் போரில் ஸ்பார்ட்டாவுக்கு இணையாக வேறு எந்த நகர அரசும் அக் காலத்தே இல்லை என்றுதான் கூற வேண்டும்.

ஸ்பார்ட்டாவின் ஆதிக் குடிகள் கிரேக்க இனத்தவர்கள் அல்லர். அவர்களைத்தான் அங்கு முதன்முதலில் படையெடுத்து அக்கீயர்கள் வென்றார்கள். வென்ற பின் அவர்கள் சகோதரியோடு இரண்டறக் கலந்து விட்டனர். இத்தகைய கலப்பு இனம் லக்கோனியா முழுவதிலும் பரவியது. டோரியர்கள்

லக்கோனியா மீது படையெடுத்த பொழுது, அக்கீய இனத்தைச் சார்ந்த மன்னர்தான் அங்கு ஆட்சி புரிந்து வந்தார். எனவே டோரியர்கள் தமக்கென்று ஒரு சில கிராமங்களை அமைத்துக் கொண்டனர். அங்கே அவர்கள் தமக்கே உரிய பண்புகளை வளர்த்துக் கொண்டனர். இங்ஙனம் ஏற்பட்ட 5 கிராமங்கள் நாளடைவில் ஒன்றுகச் சேர்ந்தன. ஸ்பார்ட்டா நகரத்தை மையமாகக் கொண்ட இவ்வைந்து கிராமங்களும் ஒரு நகர அரசாக அமைந்தன. இவை அக்கீயர்களோடு எவ்விதமான தொடர்பையும் வைத்துக் கொள்ளாமல் தனித்தே இயங்கின. தங்களுடைய இனத் தூய்மையைக் காத்துக் கொள்வான் வேண்டியே அவர்கள் இங்ஙனம் ஏனைய மக்களிடமிருந்து ஒதுங்கி வாழ்ந்தனர். அதனால் அவர்களது நாகரிகமும், அரசியல் சமுதாய அமைப்புகளும் முற்றிலும் புதுமையானவை களாய்க் காட்சியளிக்கலாயின.

சமுதாய அமைப்பு

ஸ்பார்ட்டா நகர அரசின்கண் வாழ்ந்த மக்களிடையே மூன்று பெரும் பிரிவுகள் காணப்பட்டன. அவர்களுள் தலையாய வகுப்பினர் ஸ்பார்டியேட்டுகள் (Spartiates) அல்லது பிரபுக்கள் எனவும், இடைநிலை வகுப்பினர் பெரியீசி (Perioeci) அல்லது வணிகர்கள் எனவும், கடையாய வகுப்பினர் ஹெலட்டுகள் (Helots) அல்லது அடிமைகள் எனவும் அழைக்கப்பட்டனர்.

ஸ்பார்ட்டாவின் பண்டைய சமுதாய மாடியின் உச்சியில் உலவியவர்களே ஸ்பார்ட்டியேட்டுகள் என்ற வகுப்பினராவர். தூய டோரிய இனத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே அதன் உறுப்பினராக இருப்பதற்குத் தகுதி பெற்றவராவர். வெளியார்கள் எவரும் அவ் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவ தில்லை. சட்டங்கள் செய்வதும், பட்டங்கள் ஆள்வதும் இவ் வகுப்பினருக்கு மட்டுமே சொந்தமான தனியுரிமைகளாய்த் திகழ்ந்தன. நாட்டை ஆள்கின்ற பணியிலேயே இவர்கள் சதா ஈடுபட்டிருந்த காரணத்தால் வேறு எந்தத் தொழிலிலும் ஈடுபடு வதற்கு இவர்களுக்கு அனுமதியில்லை. நிலங்களை உழுது பயிரிடுதல், வாணிகத்தில் ஈடுபடுதல் ஆகிய தொழில்களில் இவர்கள் ஈடுபடுதல ஒரு குற்றமாகவே கருதப்பட்டது. அரசியல் அல்லாத பணிகளைச் செய்வதற்கு ஏராளமான பணியாட்கள் இருந்தனர். அவர்களே ஹெலட்டுகள் என்ற வகுப்பினராவர். ஸ்பார்டியேட்டுகளிடையே இரு வகுப்பினர்கள் உண்டு. அவர் களில் ஒரு வகையினர் பிரபுக்கள் (Peers) எனப்பட்டனர்

அனேகமாக அவர்கள் முப்பது வயதிற்கு மேற்பட்டவர்களாயிருப்பர். தூய டோரிய இனத்தைச் சார்ந்தவர்களாய்—இராணுவப் பயிற்சி பெற்றவர்களாய்—பொதுப் பந்திகளுக்குச் சந்தா செலுத்தக் கூடியவர்களாய் இருந்தவர்கள் மட்டுமே பிரபுக்களாக மதிக்கப்பட்டனர். இந்த மூன்று நிபந்தனைகளுக்கும் உட்படாதவர்கள் சாதாரண மக்களாகவே கருதப்பட்டனர். இத்தகைய உரிமைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டுமானால் ஒருவர்க்கு நிலவுடைமை இன்றியமையாதது. எனவே தான் பிரபுக்கள் ஒவ்வொருவருக்கும் அரசாங்கமானது ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தை வழங்கியது. ஒவ்வொருவருக்கும் எத்தகைய நிலமானது வழங்கப்பட வேண்டுமென்பது சீட்டுக் குலுக்கல் முறையில் தீர்மானிக்கப்பட்டது. ஹெலட்டுகளின் உதவியால் அந்நிலங்களை அவர்கள் பயிர்செய்து குறிப்பிட்ட அளவு தானியத்தைப் பொதுப் பந்திக்காக வழங்கி வந்தனர். நிலங்கள் யாவும் அரசாங்கத்திற்கே சொந்தமானவை. எனவே பிரபுக்கள் அவற்றைப் பிறருக்கு விற்கவோ கைம்மாற்றம் செய்யவோ அடைமானம் வைக்கவோ இயலாது. போர்ப் பயிற்சி அவர்களுக்கு மிக இன்றியமையாததாக இருந்தது. எண்ணிக்கையில் தங்களை விட மிக மிக அதிகமாக இருந்த ஏனைய இரண்டு வகுப்பினர்களையும் அடக்கி ஆள அவர்கள் எப்போதும் போருக்குத் தயாராக இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இங்ஙனம் பலவந்தமாக அடக்கப்பட்டுக் கிடந்த பெரும்பான்மை மக்கள் ஸ்பார்ட்டாவை அந்நியர்களுக்குக் காட்டிக் கொடுக்கக் காலம் பார்த்துக் காத்திருந்ததில் வியப்பொன்றுமில்லை. ஸ்பார்ட்டியேட்டுகளில் மேற்சொன்ன மூன்று நிபந்தனைகளுக்குக் கட்டுப்படாதவர்களும் பலர் இருந்தனர். இருப்பினும் சமுதாயத்தில் அவர்களுக்கு நல்ல மதிப்பிருந்தது. குறிப்பிட்ட அளவு நிலபுலன்களுக்கும் அவர்கள் சொந்தக்காரர்களாயிருந்தனர். எனினும் பொதுப் பந்திக்குச் சந்தா செலுத்த வேண்டிய கட்டாயம் அவர்களுக்கில்லை.

பெரியீசி என்ற இடைநிலை வகுப்பினர் டோரியர்களும், ஸ்பார்ட்டாவின் ஆதிக்குடிகளும் சேர்ந்த ஒரு கலப்பினத்தவராவர். தூய டோரிய இனத்தைச் சேராதவர்கள் என்பதனால் அவர்களுக்கு அரசாங்கத்தில் முழு உரிமையும் அளிக்கப்படவில்லை. இராணுவப் பயிற்சியை மேற்கொள்ளும்படி அரசாங்கம் அவர்களை வற்புறுத்தவில்லை. ஆனால் ஹாப்லீட்டுகள் (Hoplites) என்ற காலாட்படை வீரர்களாகப் பணியாற்ற அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். பொதுவாக அவர்கள் வாணிகத்தில் ஈடுபட்டுப் பெரும் பொருள் ஈட்டினர். எனவே அவர்கள் பெரும்பாலும்

நகரங்களிலேயே செறிந்திருந்தனர். பெரியீசி என்ற சொல்லுக்கு, "சுற்றிலும் வாழ்பவர்கள்" (Dwellers around) என்பதே பொருளாகும். உண்மையில் ஸ்பார்ட்டா நகரத்தைச் சுற்றியிருந்த பட்டணங்களிலும் ஆங்காங்கே வாழ்ந்தவர்கள் தான் பெரியீசிகள் என அழைக்கப்பட்டனர். ஸ்பார்ட்டாவின் குடிமக்கள் என்பதைவிட லக்கோனியாவின் குடிமக்கள் என்றே அவர்கள் கருதப்படத் தக்கவர்கள். ஸ்பார்ட்டா நகர அரசில் அவர்களுக்கு எவ்வித அரசியல் உரிமைகளும் அளிக்கப்பட வில்லை. எனவேதான் அவர்கள் வாணிக முயற்சியில் பெரிதும் ஈடுபட்டனர். தனிப்பட்ட நகரங்களை அமைத்துக்கொண்டு அவற்றைத் தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக அதிகாரி ஒருவரின் துணைகொண்டு அன்னர் ஆண்டு வந்தனர். ஆனால் அவ்வதிகாரிகளுக்கெல்லாம் தலையாய ஹார்மோஸ்டுகள் (Harmosts) எனும் ஆளுநர்கள் (Governor) மட்டும் ஸ்பார்ட்டாவில் நியமிக்கப்பட்டனர். ஸ்பார்ட்டாவின் மிகச் சிறப்பு வாய்ந்த துறைமுகங்களான ஜித்தியம் (Gythiem) சைதீரா (Cythiera) ஆகியவற்றை உருவாக்கியவர்கள் இவ் வகுப்பினரேயாவர். செல்வம் இவர்களைச் சென்று சேர்ந்தது.

ஹெலட்டுகள்:–ஸ்பார்ட்டா சமுதாயத்தின் அடித்தளத்தில் அண்டிக்கிடந்தவர்கள் ஹெலட்டுகள் என்ற வகுப்பினராவர்; டோரிய இனத்தவரால் வெல்லப்பட்டு அடிமைப்படுத்தப்பட்ட லக்கோனியப் பண்டையக் குடிமக்களாவர். அவர்கள் ஸ்பார்ட்டா நகர அரசின் பொதுச் சொத்தாகக் கருதப்பட்டனர். ஒவ்வொரு பிரபுவிற்கும் இத்தனை ஹெலட்டுகள் என்று அரசாங்கம் அவர்களைப் பகிர்ந்து வழங்கியது. இங்ஙனம் வழங்கப்பட்ட நில அடிமைகளைப் பிரபுக்கள் பார்த்து ஏனையோருக்கு விற்க முடியாது. அவர்கள் விருப்பப்படி ஹெலட்டுகளைத் துன்புறுத்தவும் காயப்படுத்தவும் அன்னர்க்கு உரிமையில்லை. பொதுவாக ஹெலட்டுகள் நிலத்தில் உழுது பயிர் செய்யும் தொழிலையே மேற்கொண்டிருந்தனர். பயிர் செய்து பெற்ற விளைச்சலில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேற்பட்ட தீர்வையை அவர்களிடமிருந்து வசூலிக்கும் உரிமை பிரபுக்களுக்கில்லை. எனவே ஹெலட்டுகளின் நிலைமை இடைக்கால ஐரோப்பிய அடிமைகளின் நிலைமையைப் போல் அவ்வளவு மோசமானதாயில்லை. தனிப்பட்ட நிலக்கிழார்களின் கொடுங்கோன்மையினின்றும் அவர்கள் அரசாங்கத்தால் காப்பாற்றப்பட்டனர். ஒரு சில ஹெலட்டுகள் மிக நல்ல முறையில் ஊதியம் செய்து பணம் சேர்த்து அதன் விளைவாக இறுதியில் விடுதலையையும் பெற்றனர். அங்ஙனம் விடுதலை பெற்ற ஹெலட்டுகள் புதிய மனிதர்கள் என்று பொருள்படும் நியோ

டெமோடுகள் (Neodamodes) என அழைக்கப்பட்டனர். ஸ்பார்ட்டா இனத்தைச் சார்ந்த ஆண்களுக்கும், ஹெலட் இனத்தைச் சார்ந்த பெண்களுக்கும்பிறந்தவர்கள், மோதோன்கள் (Mothons) என அழைக்கப்பட்டனர். அத்தகையோர் முழுமையான குடியுரிமையைப் பெறவில்லை எனினும் போர்ப் பயிற்சி பெறுகின்ற உரிமையைப் பெற்றிருந்தனர். அரசாங்கத்தில் பல உயரிய பதவிகளையும் அவர்தம் திறமையினால் பெற்றனர். லைசாண்டர் (Lysander), கிலிப்பஸ் (Gyllipus) ஆகியோர்களை இதற்குச் சான்றாக எடுத்துக்காட்டலாம். அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்ட காரணத்தினால் ஹெலட்டுகள் பெரிதும் அதிருப்தி அடைந்திருந்தனர். மெசேனிய நாடானது ஸ்பார்ட்டர்களால் வெல்லப்பட்ட பின், அங்கே வசித்த பண்டைய குடிமக்கள் யாவரும் ஹெலட் இனத்தில் சேர்க்கப்பட்டனர். எனவே, அவர்களின் எண்ணிக்கை பெரிதும் உயர்ந்தது. லக்கோனியாவில் 224000 ஹெலட்டுகளும், 12000 பெரியோசிகளும், 32000 ஸ்பார்ட்டியேட்டுகளும் இருந்தாகப் பொதுவாக நம்பப்படுகிறது. இவ்வளவு அதிகமான அடிமை மக்களை எப்போதும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க ஸ்பார்ட்டா பல வகையிலும் முன்னேற்பாடுகள் செய்தவண்ணமிருந்தது. கிரிப்டீயா (Crypteia) என்ற இரகசிய இளைஞர்உளவாளிகள் படை ஒன்றை அமைத்து இதற்காகவே நிறுவியது. ஸ்பார்ட்டா இளைஞர்கள் ஹெலட்டுகளின் மத்தியில் சென்று வசிக்கவும், ஐயப்பாட்டுக்குரியவர்களைச் சத்தமின்றி எமனுலகுக்கனுப்பவும் உரிமை பெற்றிருந்தனர். ஈஃபர்கள் (Ephors) என்ற அதிகாரிகள் தங்களுடைய பதவிகளை ஏற்கும் முன்னர், ஒவ்வோராண்டின் தொடக்கத்திலும் ஹெலட்டுகள் மீது போர் தொடுத்திருப்பதாக அறிவிப்பது வழக்கம். எனவே, அரசாங்கத்தின் அனுமதியின்றி ஸ்பார்ட்டா இளைஞர்கள் ஹெலட்டுகளைக் கொன்று குவிக்கும் உரிமையைப் பெற்றிருந்தனர்.

ஸ்பார்ட்டர்கள் முதன் முதல் பிடித்த நாட்டின் பெயர் ஹெலஸ் (Heles) என்றும், அதில் வாழ்ந்த பண்டையக் குடிமக்களே முதன் முதலில் அடிமைப் படுத்தப்பட்டனர் என்றும், அதனாலேயே ஏனைய அடிமைகள் அனைவரும் ஹெலட்டுகள் என அழைக்கப்பட்டனர் என்றும் ஸ்டிராபோ (Strabo) எனும் ஆசிரியர் கூறுவர். இவர்களைத் தவிர ஏனைய தூய டோரியர்களும், கலப்பு டோரியர்களும் லாசிடீமானியர்கள் (Lacedemons) என அழைக்கப்பட்டனர். படைக்கலத்தில் கூட ஹெலட்டுகள் வாளேந்திப் போர்புரியும் உரிமையைப் பெறவில்லை. லாசிடீமானியர் எனும் படைவீரர்களுக்குக் குற்றேவல் செய்வதற்

காகவே அவர்கள் போர்முகங்களுக்கு அனுப்பப்பட்டனர். இங்ஙனம் அரசியல் உரிமைகள் பலவும் அவர்களுக்கு மறுக்கப் பட்டாலும், பொருளாதார ரீதியில் பார்க்குமிடத்து, கிரீஸில் வாழ்ந்த ஏனைய சாதாரணக் குடியானவர்களையும், நகரத் தொழி லாளர்களையும் விட எவ்வாற்றானும் அவர்களது நிலை சற்றும் தாழ்ந்ததன்று என்பது வெள்ளிடைமலை.

அரசிரல் அமைப்பு

லைக்கர்கஸ் என்பாரைப் பற்றிய கட்டுக் கதைகள்

ஸ்பார்ட்டர்கள் தங்களது அரசியல் அமைப்பும், சமுதாயக் கட்டுக் கோப்பும் உலகத்திலேயே மிகவும் சிறந்தன என்றும், அவற்றை அமைத்துத் தந்தவர் லைக்கர்கஸ் என்னும் பெரியார் என்றும் நம்புகின்றனர். ஹெரோடோட்டஸ் (Herodotes), தூசிடைடிஸ் (Thucydides), அரிஸ்டாட்டில் (Aristotle), புளூ டார்க் (Plutarch) போன்ற பண்டைய ஆசிரியர்கள் அனைவரும் 'ஸ்பார்ட்டாவின் நிறுவனங்கள் அனைத்தையும் உருவாக்கியவர் லைக்கர்கஸ்' என்றே கூறியுள்ளனர். ஆனால் தற்கால வரலாற்று சிரியர்கள் இக் கூற்றினை ஒப்புக்கொள்ள மறுக்கின்றனர். அவை யாவும் ஒரு தனி மனிதனால் ஆக்கப்பட்டவையல்ல என்றும், நாளாவட்டத்தில் படித்தர வளர்ச்சி பெற்று உருவானவைகளே என்றும் அன்னர் கூறுகின்றனர். லைக்கர்கஸ் என்ற அறிஞர் ஒருவர் வாழ்ந்தார் என்பதைக் கர்டின்ஸ் (Curtins) போன்ற ஆசிரியர்கள் ஒப்புக்கொள்ளுகின்றனர். ஆனால் அவர் சொந்தமாக எதையும் உண்டாக்கவில்லை என்றும், தொன்று தொட்டு நாட்டில் உலவி வந்த மரபுகளையும் வழக்கங் களையும் தொகுத்து அவர் காலத்திய சூழ்நிலைக்கேற்றவாறு அவற்றைச் சட்டதிட்டங்களாக வகுத்த பெருமை ஒன்றே அவரைச் சாரும் என்றும் அன்னவர் கருதுகின்றனர்.

லைக்கர்கஸப் பற்றிய கதைகள் கிரேக்கர்களிடையே பற்பல உலவி வருகின்றன. ஹெரோடோட்டஸ் என்ற வரலாற்று ஆசிரியர் அவரை 'ஸ்பார்ட்டாவின் மன்னரான காரிலாஸ் (Charilaus) என்பவரின் மாமனும் பாதுகாப்பாளரும் ஆவர்' என்று குறிப்பிட்டுள்ளார். லைக்கர்கஸ் டெல்ஃபி என்னுமிடத் திலுள்ள குறிமேடைக்குச் சென்று அங்குள்ள தேவதையின் மூலமாக ஒரு சில ஆணைகளைப் பெற்றார் என்றும், அவை களையே பின்னர் சட்டங்களாகத் தொகுத்தார் என்றும் அவர் கூறுகின்றார். இன்னும் வேறு சில கதைகளில் லைக்கர்கஸ் என்பார் ஸ்பார்ட்டாவின் மன்னர் ஒருவர்க்கு அவர் சிறு வயதினராயிருந்த காலத்தில் பாதுகாப்பாளராய் அமைந்

திருந்தார் என்றும், அம் மன்னருக்கு வயது வந்தவுடன் மக்கள் தம்மீது ஐயப்படாமலிருப்பதற்காக [ஆட்சியைப் பலவந்தமாகத் தாமே கைப்பற்றிக்கொள்ள முயலுவார் என்று] நாட்டை விட்டே போய் விட்டார் என்றும், கிரீட், எகிப்து, இந்தியா, ஆசியாமைனர் போன்ற இடங்களுக்குச் சென்று பல ஆண்டுகள் கண்மறைவாக வாழ்ந்தார் என்றும் கூறப்பட்டுள்ளன. இங்ஙனம் அவர் அஞ்ஞாதவாசம் செய்த போது ஏராளமான அனுபவத்தைப் பெற்றார். அரசியல், சமுதாயம் இவைகளைப் பற்றிப் பல புதுமையான உண்மைகளை அவர் கண்டறிந்தார். இதற்கிடையில் ஸ்பார்ட்டாவில் குழப்பமும் போரும் பூசலும் கிளம்பியதால் மக்கள் அவதியுற்றனர். இதைக் கேள்வியுற்ற லைக்கர்கஸ் மீண்டும் தாய்நாடு திரும்பினார். நாடு நலம் பெற வேண்டுமானால் கிரீட் தீவில் காணப்பட்ட நிறுவனங்கள் ஸ்பார்ட்டாவில் அமைக்கப்பட வேண்டும் என்றும், அதையொட்டிப் பல சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்றும் மக்களுக்கு அவர் எடுத்துக் கூறினார். மக்களும் மன்னர்களும் அவற்றைக் கொஞ்சம் தயக்கத்துடனேயே ஏற்றுக்கொண்டனர். ஆனால் அல்சாண்டர் (Alcander) என்ற ஓர் இளவல் மட்டும் அவைகளை ஒப்புக்கொள்ள மறுத்ததோடல்லாமல் வெகுண்டெழுந்து அவரைத் தாக்கி அவரது கண்களில் ஒன்றைக் குத்தி விட்டார். புளூடார்க் என்னும் கிரேக்க வரலாற்றாசிரியரின் கூற்றுப்படி, லைக்கர்கஸ் தம் கண்களைக் குத்திப் பிடுங்கிவிட்ட அல்சாண்டர் மீது காழ்ப்போ சினமோ ஒரு சிறிதும் கொள்ளவில்லை. வெளியே தொங்கிக் கொண்டிருந்த கண்ணுடன் மக்கள் எதிரிலே அவர் தோன்றிப் பொறுமையோடு நின்றார். அதைக் கண்டு வெட்கமுற்ற மக்கள் அல்சாண்டரைப் பிடித்து அவரது கைகளில் ஒப்படைத்தார்கள். தண்டனை ஏது வேண்டுமானாலும் அல்சாண்டருக்கு வழங்கி வஞ்சந் தீர்த்துக் கொள்ளும்படி மக்கள் அவருக்கு உரிமை தந்தனர். லைக்கர்கஸ் அவர்களுக்கு நன்றி தெரிவித்துவிட்டு அல்சாண்டரைத் தம் வீட்டிற்கழைத்துச் சென்று அவருக்கு அறுசுவையுண்டியை அளித்தார். அல்சாண்டரை அவர் அணுவளவும் கண்டிக்கவில்லை. மற்றபடி தாம் செய்ய வேண்டிய கடமைகளை அவர் வழுவாது செய்துகொண்டு, அவற்றைக் காண்கின்ற வாய்ப்பினை மட்டுமே அவர் அல்சாண்டருக்கு அளித்தார். அவரது அமைதியான மனப்போக்கும், மிதமான பழக்க வழக்கங்களும், உழைப்பில் அவர் கொண்டிருந்த உறுதியும் அல்சாண்டரை அவருடைய சிறந்த மாணவருள் ஒருவராய்ச் செய்து விட்டது. அதன் பின் வெளியே சென்ற அல்சாண்டர் லைக்கர்கஸைப் பின்பற்றும்படி நாட்டு மக்கள் அனைவரையும் வேண்டிக்

கொண்டார். அங்ஙனமே அவரது சட்ட திட்டங்களை மக்கள் ஏற்றுக்கொண்டனர். அதன் பின், தாம் திரும்பி வருகின்ற வரையில் தமது சட்ட திட்டங்களை யாரும் மாற்றக் கூடாது என்ற வாக்குறுதியைக் குடிமக்களிடமிருந்து பெற்றுக்கொண்டு ஸ்பார்ட்டாவை விட்டு அவர் வெளியேறினர்; நேரே டெல்ஃபிக்குச் சென்று தனிமையில் அமர்ந்து தியானத்தில் மூழ்கினர். மீண்டும் திரும்பிச் சென்ருல், ஒருவேளை மக்கள் தமது சட்டங்களைக் கைவிட்டுவிடுவரோ என்று அஞ்சிய அவர் பட்டினி கிடந்து அங்கேயே உயிர் துறந்தார். மக்களின் நன்மையைக் கருதித் தம் உயிரையே தியாகம் செய்த மகாத்துமாவாக அவர் கிரேக்கர்களால் இன்றும் கொண்டாடப் படுகின்ருர். இந்தக் கட்டுக்கதைகளில் எவ்வளவு உண்மை இருக்கிறதென்பது அறுதியிட்டுக் கூறமுடியாத தொன்ருகும். கிரீட் தீவில் நிலவிய ஒரு சில நிறுவனங்களை அவர் ஸ்பார்ட்டாவிற்குக் கொண்டு வந்தார் என்பதில் ஓரளவு உண்மை இருக்கின்றது. ஸ்பார்ட்டா மக்களின் இராணுவப் பயிற்சி முறை, பொதுப்பந்தி முறை, ஜெருஷியா (Gerusia) என்ற முதுமக்கள்சபை, ஈஃபர் என்ற ஐவர்சபை முதலியவைகளை முதன்முதலில் ஸ்பார்ட்டாவில் கொண்டு வந்தவர் லைக்கர்கஸ் என்பவர்தான் என்று ஹெரோடோட்டஸ் கருதுகின்ருர். தங்கம், வெள்ளி நாணயங்களை ஒழித்துவிட்டு இரும்பு நாணயங்களைக் கொண்டு வந்தவர் லைக்கர்கஸ்தான் என்பது புளூடார்க் என்பாரின் கருத்தாகும். கிரிப்டியா என்ற உளவுப் படையைத் தோற்றுவித்தவர் அவரே என்பது அரிஸ்டாட்டிலின் வாதமாகும். ஆனல், உண்மையில் இவையெல்லாவற்றையும் லைக்கர்கஸ் கொண்டு வந்தார் என்பது ஒப்புக்கொள்ள முடியாத ஒன்ருகும். ஜெருஷியா என்ற முதியோர்சபையானது ஸ்பார்ட்டாவில் மட்டுமன்றி, கிரீஸ் முழுவதிலும் காணப்பட்ட தொன்ருகும். ஈஃபர்களின் சபை, மிகவும் பிந்திய காலத்தே மன்னர்கள் மக்களைக் கட்டியாளத் திணறிய போது தோற்றுவிக்கப்பட்ட ஒரு நிறுவனமென்பதில் ஐயமே இல்லை. மற்றபடி லைக்கர்கஸ் என்பவரால் புகுத்தப் பெற்ற நிறுவனங்கள் இராணுவம், கல்விமுறை இவற்றைப் பற்றியனவேயாகுமெனத் தோன்றுகின்றன. தனிப்பட்ட மக்களை அரசாங்கத்திற்கடிமைகளாக்கி உடலுரத்தையும், போர்ப் பயிற்சியையும் அவர்களின் குறிக்கோள்களாக மாற்றியபெருமை அவருக்குண்டு. இராணுவப் பயிற்சியில் ஸ்பார்ட்டர்களை ஒப்பாரும் மிக்காரும் இலராய்ச் செய்து, கிரேக்க நாடே கண்டு வியக்கும்படியான ஒரு கட்டுப்பாடு மிகுந்த சமுதாயத்தை உண்டாக்கியசிறப்பும் அவருக்குண்டு. வீரம், தியாகம், நாட்டுப்பற்று முதலிய சிறந்த பண்புகளை அவரது சட்ட திட்டங்கள் ஸ்பார்ட்டா மக்களி

டையே வளர்த்தன. கிரேக்க நாட்டிலேயே மிகச் சிறந்ததும், முன்மாதிரியாக அமைந்ததுமான ஒரு நகர அரசாக ஸ்பார்ட்டா விளங்கியதற்குக் காரணம், லூக்கர்கஸும் அவரது சட்டதிட்டங்களுமேயாகும். ஆனால் அவரது கட்டுப்பாட்டு விதிகள் ஸ்பார்ட்டா மக்களிடையே உண்மையான நாகரிகத்தையும் பண்பையும் வளர்க்காமல் போய்விட்டன. தனிப்பட்டவர்களின் உரிமை அரசாங்கத்தின் அடிகளில் காவு கொடுக்கப்பட்டது. சொத்துகளும் நிலங்களும் ஏன் குழந்தைகளும் கூட அரசாங்கத்திற்கே சொந்தமாய் இருந்ததால், மக்களிடையே குடும்பப் பாசமும், அன்பும் மலர வழியில்லாமல் போயின. விடுதலை என்ற மலரின் நறுமணத்தை அவர்களால் நுகர முடியவில்லை. ஏதோ எந்திரங்கள் போல் அவர்கள் உலவி வந்தனர். பெரியோசி என்ற வகுப்பினருக்கு அரசியல் உரிமைகள் சரிவர அளிக்கப்படாத காரணத்தால் அவர்கள் மனக் கசப்படைந்திருந்தனர். மக்களாய் இருந்தும் மாக்கள் போல் நடத்தப்பட்ட ஹெலட்டுகளின் அதிருப்தியைப் பற்றிச்சொல்லத்தேவையில்லை. நிலங்கள் யாவும் பிரபுக்களிடையே ஆரம்பக் காலத்திலேயே பிரிக்கப்பட்டுப் போய்விட்டமையால் புதியதாய்த் தோன்றிய பிரபுவர்க்கத்திற்கு நிலங்கள் கிடைக்கவில்லை. எனவே நிலமற்ற புதிய பிரபுவர்க்கம் ஒன்று நாட்டில் தோன்றியது. ஹெலட்டுகளோடு சேர்ந்துகொண்டு அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு அவர்கள் என்றும் தயாராகக் காத்திருந்தனர். இங்ஙனம் லூக்கர்கஸின் விதிகளிலும் கட்டுப்பாடுகளிலும் நன்மையுடன் தீமையும் ஒருங்கே விரவிக் கிடப்பதை நாம் காணுகின்றோம். அவற்றைச் சற்றே விரிவாக ஆராய்வோம்.

(3) ஸ்பார்ட்டாவின் அரசியலமைப்பு

லூக்கர்கஸால் கொண்டுவரப் பட்ட அரசியலமைப்புச் சீர் திருத்தங்கள் பற்றி மாறுபட்ட கருத்துகளை வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். லக்கோனியாவிலிருந்த நிலபுலன்களைச் சமமாகப் பிரித்து முப்பதினாயிரம் ஸ்பார்ட்டாக் குடும்பங்களுக்கு லூக்கர்கஸ் வழங்கினரெனப் புளூடார்க், போலிபியஸ் (Polybius) போன்ற ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால் தூசிடைடிஸ் எனும் வரலாற்றுச் சான்றோர் அதை ஒப்புக்கொள்ளவில்லை. இதனால் தெரிவது என்னவென்றால் பிரபுக்களின் பழைய சொத்துகள் பிரிக்கப்படாமல், புதிதாகக் கிடைத்த நிலங்கள் மட்டுமே அவர்களிடை சமமாகப் பிரிக்கப்பட்டன என்பதாகும். இதன் மூலமாகப் பழைய நிலப் பிரபுக்களின் முக்கியத்துவம் குறைந்து புதிய பிரபுக்களின் செல்வாக்கு அதிகரிக்க

வழி ஏற்பட்டது. பழைய நிலப் பிரபுக்கள் அழிந்துவிடாமல் இருப்பதற்கும் லைக்கர்கஸ் வழி செய்தார். அவர்கள் மட்டுமே அரசாங்கத்திலும், போரிலும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென ஒரு விதியை அவர் ஏற்படுத்தினர். வாணிகத்திலும் தொழில் முயற்சியிலும் அன்னர் ஈடுபடுவதைத் தடுத்தார். இங்ஙனம் அவர் பழம் பிரபுக்களையும், புதிய செல்வந்தர்களையும் ஒருங்கே மனநிறைவு பெறச் செய்தார்.

ஸ்பார்ட்டாவிற்கென லைக்கர்கஸ் வகுத்தளித்த அரசியலமைப்பானது நான்கு முக்கிய உறுப்புக்களைக் கொண்டிருந்தது. மன்னர்கள், முதுமக்கள்மன்றம், பொதுமக்கள்மன்றம், ஈஃபர் சபை ஆகிய இந்த அமைப்பே இதன் முக்கிய நிறுவனங்களாகும். இவற்றில் முதல் மூன்றும் ஏனைய கிரேக்க அரசுகளிலும் காணப்பட்டன. ஈஃபர் சபை ஒன்றுதான் ஸ்பார்ட்டாவிற்கே உரிய ஒரு தனி நிறுவனமாகும்.

ஸ்பார்ட்டாவை ஆண்ட மன்னர்கள் இருவர். எனவே ஸ்பார்ட்டா அரசியல் அமைப்பை இருமன்னராட்சி (Duarchy) என்று கூறலாம். ஏனைய நகரங்களில் ஒரே ஒரு மன்னன் மட்டுமே ஆட்சி புரிந்து வந்திருக்கையில் இங்கு மட்டும் ஏன் இரு மன்னர்கள் தோன்றினர்களென்பது உண்மையில் ஒரு புதிராகவே தோன்றுகிறது. ஸ்பார்ட்டா நகர அரசு உருவெடுத்த போது அதுவரை சுதந்திரமாக இயங்கி வந்த இரு பெரும் குலங்கள் இருந்திருக்க வேண்டுமென்றும், அவைகள் ஒன்றுக இணைந்த போது அவ்விரு குலங்களுக்கும் தலைவராக இருந்து வந்த அரசர்கள் இருவரும் குடிமன்னர்களாக ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கவேண்டுமென்றும் பியூரி (Bury) என்ற ஆசிரியர் கருதுகின்றார். இத்தகைய மன்னர்களில் ஒருவர் அகிடி (Agidae) என்ற குலத்தைச் சார்ந்தவர். இன்னொரு மன்னர் யூரிபாண்டிடி (Eurypontidae) என்னும் குலத்தைச் சார்ந்தவர். இவ்விரு குலங்களும் சேர்ந்தே ஸ்பார்ட்டா நகர அரசைத் தோற்றுவித்ததாகத் தெரிகிறது. இவற்றுள் அகிடி குலத்தவர்கள், ஸ்பார்ட்டாவின் குன்றுகளில் ஆதியிலிருந்தே வசித்து வந்தவர்கள். யூரிபாண்டிடி வம்சத்தவர்கள் லக்கோனியாவின் தென்கோடியிலிருந்து வந்து ஸ்பார்ட்டாவில் குடியேறியவர்கள். எனவே அகிடி வம்சத்திற்குத்தான் அதிகமான மதிப்பும் மரியாதையும் மக்களிடையே இருந்து வந்தன. ஆனல் அரசியலமைப்பைப் பொறுத்தவரையில் இரு குலத்தைச் சார்ந்த மன்னர்களுக்கும், சமமான அதிகாரங்களே வழங்கப் பட்டன. தொடக்கத்தில் அவர்களுக்கு ஏராளமான அதிகாரங்கள்

இருந்தன. ஆனால் நாளடைவில் அவை குறைந்துகொண்டே வந்தன. ஸ்பார்ட்டாவின் மன்னர்களில் ஒருவர் மற்றவரை மிஞ்சிவிடாதபடி ஒருவரையொருவர் கண்காணித்து வந்தனர். எனவே ஸ்பார்ட்டாவில் நிலவிய குடியரசு மிகவும் பலவீனமாயிருந்தது. அங்ஙனம் பலவீனமாயிருந்த காரணத்தால்தான் ஸ்பார்ட்டர்கள் அதை நெடு நாளைக்கு விட்டு வைத்தார்கள் என்றால் அது மிகையாகாது. பற்பல துறைகளில் மன்னருடைய அதிகாரங்கள் குறைவாக யிருந்தபோதிலும் அவர்களுக்கென்று ஒரு சில சிறப்பதிகாரங்கள் சமயத் துறையிலும், இராணுவத் துறையிலும் இருந்துவந்தன. கடவுளர்களுக்கு மிருகங்களைப் பலியிடும் போதும், சமய சம்பந்தமான விழாக்கள் நடத்தும் போதும் மன்னர்களே அவைகளுக்குத் தலைமை தாங்கினர். படைகளை நடத்திச் செல்லும் படைத் தலைவர்களாகவும் அவர்கள் திகழ்ந்தார்கள். ஒவ்வொரு போர்க்களத்திற்கும் அவ்விருவரும் சென்று தலைமை தாங்கிப் போர் புரிந்தார்கள். போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது போர் வீரர்களை எப்படி வேண்டுமானாலும் நடத்த அவர்களுக்கு உரிமையுண்டு. பொதுமக்கள் மன்றத்தின் அனுமதி பெற்று எந்த நாட்டின் மேலும் போர் தொடுக்கும் உரிமை மன்னர்களுக்குண்டு. அவர்களது போர் முயற்சிகளைத் தடுக்க எந்தக் குடிமகனுக்கும் உரிமையில்லை. அவர்களுக்கு உறுதுணையாக நூறு வீரர்கள் அடங்கிய மெய்க் காப்பாளர்படை ஒன்று அவர்களைச்சுற்றி எப்போதும் இருந்து கொண்டே யிருந்தது. பிற்காலத்தே அதாவது கி. மு. 510-க்குப் பின்னர், மன்னர்களின் படையதிகாரங்கள் பெரிதும் குறைந்து வந்தன. இருவரில் ஒருவர் மட்டுமே போருக்குத் தலைமை தாங்க வேண்டுமென்பது வழக்கமாகிவிட்டது. அதோடு ஈஃபர்கள் என்னும் நிர்வாக அதிகாரிகள் இருவர், மன்னரைத் தொடர்ந்து போர்க்களம் செல்வதும் அவ்வப்போது ஆலோசனை சொல்வதும் வழக்கமாகிவிட்டன. ஈஃபர்களின் ஆலோசனைகளை மன்னர்கள் அப்படியே வரப்பிரசாதமாய் ஏற்றுகொள்ள வேண்டுமென்ற கட்டாயம் ஒன்றுமில்லை. அவைகளை நிராகரிக்கவும் திருத்திக்கொள்ளவும் அவர்களுக்கு உரிமையுண்டு. எனினும் பொதுவாக மன்னர்கள் ஈஃபர்களின் உரையையே மதித்து நடந்தனர். ஏனெனில் ஊருக்குத் திரும்பியவுடன் மன்னரை ஓர் இராணுவ நீதிமன்றத்தின் முன் நிறுத்தி விசாரணை செய்யும் உரிமையை ஈஃபர்கள் பெற்றிருந்தார்கள். சமாதான உடன்படிக்கைகளின் ஷரத்துகளைத் தீர்மானிக்கின்ற முடிவான உரிமை பொதுமக்கள் மன்றத்தின் கைகளில் இருந்தது. அம் மன்றத்தை ஆட்டிப் படைத்தவர்கள் ஈஃபர்களே ஆவர். எனவே மன்னர்கள் தம்மோடு உடன்பாடு செய்து கொள்ள

வந்த அயல்நாட்டுத் தூதுவர்களை ஈஃபர்களிடம் அனுப்பிவிடுகின்ற வழக்கத்தை மேற்கொள்ளலாயினர். போர் முடிந்த பின், மன்னர்களுக்கிருந்த சிறப்பு அதிகாரங்கள் அனைத்தும் மறைந்து விடுவதும் வழக்கமாய்ப் போயின. அச் சமயங்களில் அவர்களை விட ஈஃபர்களே அதிகமான அதிகாரங்களை உடையவர்களாய் விளங்கினர்.

சமயத்துறையில் மன்னர்களே தலைமை மதகுருக்களாக விளங்கினர். அபோலோ என்ற இறைவனுக்கு மக்களின் சார்பில் மாதந்தோறும் பலியிடுதலும், காணிக்கை செலுத்துதலும் அவர்களுடைய முக்கியக் கடமைகளாகும். போர் தொடுப்பதற்கு முன்னரும் இம்மாதிரி பலி கொடுத்தல் அவர்களது வழக்கம். டெல்ஃபி என்னும் குறிமேடையையும் அவர்கள் காண்காணித்து வந்தனர். அக் குறிமேடையை நிர்வகித்துவந்த குழுவின் உறுப்பினர்களை அவர்களே நியமித்தார்கள். ஜ்யூஸ், யுரேனஸ் போன்ற தெய்வங்களின் மதகுருவாகவும் அவர்கள் விளங்கினர். நாட்டில் மன்னர்கள் மட்டுமேயன்றி வேறு பல குருமார்களும் இருந்தார்கள்.

அரசர்கள் நீதித்துறை பற்றிய அதிகாரங்கள், சமயத்துறை பற்றிய அவர்களின் அதிகாரங்களோடு நெருங்கிய தொடர் புடையவை. சமய சம்பந்தமான குற்றச்சாட்டுகளையும் வழக்குகளையும்தான் அவர்கள் அதிகமாக விசாரித்துத் தீர்ப்புக் கூறினர். அவர்களின் முக்கியமான நீதித்துறையதிகாரங்கள் மூன்றாகும். பெருஞ்சொத்திற்கு உரியவரான ஒரு தந்தையின் மரணத்திற்குப் பின்னர், அச் சொத்துக்கு வாரிசாக வந்த அவரது மகளை மணப் பதற்காக முன்வந்த வாலிபர்களிடையே ஏற்பட்ட போட்டியையும் பூசலையும் தீர்த்து வைத்து, அவளை யார் மணப்பதென்பதைத் தீர்மானிக்கும் உரிமைகளை அரசர்களே பெற்றிருந்தனர்.

அதைப் போலவே பெருஞ் செல்வத்துக்குரியவர் ஒருவர் தாம் இறப்பதற்கு முன், யாரைத் தத்துப் புத்திரனாக எடுத்துக் கொள்வது என்பதைப் பற்றி ஏற்பட்ட வழக்குகளையும் மன்னரே தீர்த்து வைத்தார். மற்றும் பொது நெடுஞ்சாலைகள் பற்றிய வழக்குகளையும், பொது நிலங்களைப் பொறுத்த எல்லைத் தகராறுகளையும் அவர்கள் தீர்த்து வைத்தனர். சொந்த விருந்தினர்களையும் பொது விருந்தினர்களையும் உபசரிப்பது அவர்களின் இன்றியமையாத கடமைகளில் ஒன்றாயிருந்தது. அதற்கென்றே தனிப்பட்ட ஓர் அதிகாரியை மன்னர்கள் நியமித்திருந்தனர்.

மன்னர்களுக்கே உரிய ஒரு சில சிறப்புரிமைகளும் அரசியல் அமைப்பால் அளிக்கப்பட்டிருந்தன. நாட்டின் சமயக்குரவர்

என்ற முறையில் சமயத் திருவிழாக்களின் போதும், பொது விருந்துகளின் போதும் அவர்களுக்கு முதல்வரிசையில் இடம் அளிக்கப்பட்டது. பொதுமக்கள் பலியிடும் போது செலுத்திய காணிக்கைகளில் ஒரு பகுதி அரசர்களுக்கென்று ஒதுக்கப் பட்டது. மன்னன் ஒருவன் இறந்த போது நகர அரசு முழு வதும் துக்கம் கொண்டாடியது. ஒவ்வொரு குடும்பத்திலும் குறைந்தது ஒரு ஆணும் பெண்ணுமாவது தனிப்பட்ட துயர ஆடைகளை அணிந்துகொண்டு துக்கம் கொண்டாடுவதும், மறைந்த மன்னனுக்கு அஞ்சலி செலுத்துவதும் வழக்கம் என்று ஹெரோடோட்டஸ் எனும் வரலாற்றுசிரியர் கூறுவர். இறந்த மன்னரின் சவ ஊர்வலத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள பெரியோசிகளும் கலந்து கொண்டனர். இங்ஙனம் நாடெங்கும் மன்னனது புகழை அவனது மரணத்திற்குப் பின்னர் முழுமன தோடு போற்றியதைக் கொண்டு வாழ்நாளில் மன்னர்கள் மக்க ளது இதயத்தில் எவ்வளவு தூரம் இடம் பெற்றிருந்தார்கள் என் பதை நன்கு புரிந்துகொள்ளலாம்.

ஜெரூஷியா என்ற முதுமக்கள்மன்றம்

ஹோமர் காலத்தே மன்னர்களுக்கு அவ்வப்போது ஆலோசனை கூறுவதற்காகவும், நீதி வழங்குவதற்காகவும் நிய மிக்கப்பட்டிருந்த ஜெராண்டியர்கள் (Gerantes) என்ற முதிய வர்கள் நாளடைவில் ஒரு மன்றமாக அமைத்தனர். அத்தகைய முதியோர் மன்றமே ஸ்பார்ட்டாவில் ஜெரூஷியா என்று அழைக்கப்பட்டது. அது 30 உறுப்பினர்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது. அவர்களில் இருவர் நாட்டை ஆண்டுவந்த மன்னர்களாவர். எஞ்சிய 28 பேரும் பொதுமக்கள் மன்றத்தின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரபுக்களாவர். அறுபதாண்டு நிறைவு பெற்றவர்கள் மட்டுமே இம் மன்றத்தின் உறுப்பினர் களாக இருக்கத் தகுதி பெற்றவர்கள். ஒரு முறை தேர்ந் தெடுக்கப்பட்டவர் தமது ஆயுட்காலம் முடியும்வரை அப் பதவியை வகிக்கத் தகுதி பெற்றவராவர். தூய உயர்குடியில் பிறந்த பெரு மக்களே இவ்வவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். உறுப்பினர் ஒருவர் இறந்த போது அவரது இடத்தை நிரப்ப மீண்டும் ஓர் இடைத்தேர்தல் நடைபெறும், அச்சமயம் பதவிக்குப் போட்டியிட விரும்புவோர் அனைவரும் அப்பெல்லா என்ற பொதுமக்கள் மன்றத்தின் முன், ஒருவர் பின் ஒருவராகச் செல்லல் வேண்டும். யாருக்கு அதிகமான ஆரவாரத்தோடு கூடிய வரவேற்பு அங்குக் கிடைக்கிறதோ அவரே உறுப்பினராக அறிவிக்கப் பட்டார். அச் சபையின் உறுப்பினர்கள் பொது

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் பிரபுக்களின் பிரதிநிதி களாகவே விளங்கினர்.

இம் மன்றத்தின் அலுவல்கள் இருவகையினவாகும். முதலா வதாக நாட்டின் ஆலோசனை மன்றமாகவும், நிர்வாகத் தலைமை நிறுவனமாகவும் அது விளங்கிற்று. இரண்டாவதாக நாட்டின் தலைமை நீதி மன்றமாகவும் அது விளங்கியது. ஆட்சித்துறை பற்றிய முக்கியமான தீர்மானங்கள் அனைத்தும் இம் மன்றத்தில் நன்கு விவாதிக்கப்பட்ட பின்னரே பொதுமக்கள்மன்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. நிர்வாக சம்பந்தமான ஆணைகளை இது பிறப்பித்தது. அவ்வாணைகளைச் சிரமேற்கொண்டு ஈஃபர்கள் என்னும் அதிகாரிகள் நடைமுறைப்படுத்தினர். இம் மன்ற உறுப்பினர்களே பொதுமக்கள்மன்றத்தில் பல மசோதாக்களைக் கொண்டு வந்தனர். தலைமை நீதி மன்றம் என்ற முறையில் கிரிமினல் அல்லது பெருங் குற்ற வழக்குகளை அது விசாரித் தது. தொன்று தொட்டு வருகின்ற மரபுகளின்படியே விசாரணைகள் நடைபெற்றன. மன்னர்களைக் கூட விசாரிக்கின்ற உரிமைகளையும், மிகக் கொடுமையான தண்டனைகளை அவர் களுக்கு அளிக்கின்ற அதிகாரத்தையும இம் மன்றம் பெற்று இருந்தது. இவ்வாருக ஜெரூஷியா என்னும் முதியோர் மன்றம் அரசியல் என்னும் தேரை இயக்கும் ஒரு சாரதி என விளங்கிற் றெனில் அது மிகையன்று எனலாம். ஆனால், இதைவிட அதிகமான அதிகாரங்களைக் கொண்டவர்கள் ஈஃபர்கள் என்ற அதிகாரிகளேயாவர். இம் மன்றத்தைக் கூட்டவும், கலைக்கவும், தலைமை தாங்கி நடத்தவும் அவர்களே அதிகாரம் பெற் றிருந்தனர். அரசியல் என்னும் தேரின் அச்சாணியாக அக் குழு உண்மையிலேயே திகழ்ந்தது எனலாம்.

அப்பெல்லா என்ற பொதுமக்கள்மன்றம்

முப்பது வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொரு ஸ்பார்ட்டனும் அப்பெல்லா என்ற பொதுமக்கள்சபையில் உறுப்பினனாக இருக்கத் தகுதி பெற்றவன். ஈஃபர்கள் என்ற அதிகாரிகள்தான் இதற்கும் தலைமை தாங்கினர். மாதமொரு முறை இப் பேரவை கூடியது. முதியோர் மன்றத்தின்பால் முன்மொழியப்பட்டு தங்கள் முன் வைக்கப்பட்ட தீர்மானங்களை விவாதம் எதுவு மின்றி ஆரவாரத்தின் மூலம் ஒப்புக்கொள்வதற்கோ தள்ளுவதற்கோ இம் மன்றம் உரிமை பெற்றிருந்தது. மேலும் போரைத் துவக்குவது, சமாதானம் செய்துகொள்வது முதலியன பற்றிய முக்கியமான தீர்மானங்களில் இதன்

கருத்தே முடிவானதாகும். வாரிசுரிமைத் தகராறுகளைத் தீர்த்து வைப்பதும் இம் மன்றத்தின் கடமைகளாகும். ஜெரூஷிய மன்றம், ஈஃபர் மன்றம் ஆகியவற்றின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதும் இம் மன்றமேயாகும். ஆனால் இதற்கென்றி ருந்த சொந்தமான அதிகாரங்கள் மிக மிகக் குறைவாகும். இவர்களால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இதன் தலைவர்களான ஈஃபர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்து, மன்றத்தை விட்டு வெளியேறி விடுவார்களேயானால் அத் தீர்மானங்கள் அதோடு மாண்டுவிடும். மன்றக் கூட்டங்களும் அத்துடன் கலைக்கப்பட்டுவிடும். எனவே ஈஃபர்களின் தயவிற்குட்பட்டே எந்தத் தீர்மானத்தையும் நிறைவேற்றுகின்ற உரிமை இப் பேரவைக்கு இருந்தது.

ஈஃபர்கள் சபை

அப்பெல்லா என்னும் மக்கள் மன்றத்தால் தேர்ந்தெடுக்கப் பட்ட 5 கண்காணிப்பாளர்கள் அடங்கிய சபையே ஈஃபர் சபை எனப்படுவதாகும். ஸ்பார்ட்டிய அரசியல் அமைப்பில் காணப் பட்ட நூதனமான இந் நிறுவனமானது எவ்வாறு முதலில் தோன்றியது என்பதை அறுதியிட்டுக் கூற இயலவில்லை.

ஆதியில் ஸ்பார்ட்டா நகர அரசில் ஒன்றுபிணைந்த 5 கிராமங்களின் பிரதிநிதிகளாக அல்லது ஏதோ ஒரு வகையில் அக் கிராமங்களோடு தொடர்புள்ளவர்களாக அவர்கள் இருக்கக் கூடுமென்று ஊகிக்கப்படுகிறது. கி. மு. எட்டாம் நூற்றாண்டின் முதற் பகுதியில் அது முதன்முதல் ஏற்பட்டதாக நம்பப்படுகிறது. ஸ்பார்ட்டா மன்னர்கள் தங்களுடைய பணி களைச் சரிவரச் செய்ய முடியாமல் தவித்த போது, மக்கள் ஒரு வேளை ஐந்து கிராமங்களுக்கும் கிராமத்திற்கொருவராகத் தேர்ந் தெடுத்து இச் சபையை ஆக்கியிருக்கக் கூடும். கி.மு. ஏழாம் நூற்றாண்டில் அவர்கள் அரசியல் துறையில் மிகவும் பலங் கொண்டவர்களாக விளங்கினர். மன்னர்கள், பிரபுக்கள் ஆகியோர்களின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துகின்ற பொது மக்களின் பிரதிநிதிகளாக அவர்கள் விளங்கினர். நாட்டின் சட்டங்களைக் கடைப்பிடிப்பதற்காக மன்னர்கள் ஒவ்வொரு மாதமும் வாக்குறுதி எடுத்துக் கொள்வர். அவ் வாக்குறுதி களைக் காப்பாற்றும் வரையில் மன்னர்களை ஆதரிப்பதாக அச் சமயத்தில் ஈஃபர்களும் ஓர் உறுதிமொழியினை எடுத்துக் கொள்வது வழக்கம்.

ஸ்பார்ட்டாவின் குடிமகன் எவனும் இச் சபையின் உறுப்பினனாகத் தேர்ந்தெடுக்கப்படலாம். ஆரவாரம், கைதட்டல், இவற்றின் மூலமாகவே அப்பெல்லாசபை இவர்களைத் தேர்ந்தெடுத்தது. ஆண்டுக்கொருமுறை உறுப்பினர்கள் தேர்வு நடைபெற்றது. ஈஃபர்கள் ஒரு சிறு நிர்வாகக் குழு போல் அமைந்து செயல்பட்டனர். சாதாரணப் பெரும்பான்மை வாக்குகள் மூலம் தீர்மானங்கள் அதில் நிறைவேற்றப்பட்டன. அரசியலமைப்பில் அவர்கள் பெற்றிருந்த அதிகாரங்கள் ஏராளமானவையாகும். அவர்களில் இருவர் மன்னனைத் தொடர்ந்து போர்க்களத்திற்குச் சென்று சமயத்திற்கேற்ற ஆலோசனைகளைக் கூறி வந்தனர். மன்னன் மீதே குற்றம் சாட்டி விசாரிக்கின்ற உரிமையையும் அவர்கள் பெற்றிருந்தனர். ஜெரூஷியா, அப்பெல்லா ஆகிய இரு சபைகளையும் கூட்டவும் கலைக்கவும் அவர்களுக்கே உரிமையுண்டு. அச் சபைகளின் தலைவர்களாகவும் இருந்து அவர்கள் பணியாற்றினர்கள். ஜெரூஷியா மன்றத்தின் தலைவர் என்ற முறையில் அவர்கள் பெருங் குற்றங்களுக்குத் தீர்ப்பு வழங்கும் அதிகாரங்களையும் பெற்றிருந்தனர். நாட்டின் பாதுகாப்பு அவர்கள் கைவசம்தான் இருந்தது. கிரிப்டியா என்ற உளவாளிக்குழு அவர்கள் சொன்னபடியே ஆடிற்று.

பெரியீசி என்ற கலப்பினத்தவரைப் பலவகையிலும் கட்டுப்படுத்திவந்தவர்களும் அவர்களே. பெரியீசிகளை வாழ்விப்பதற்கும் கொல்லுவதற்குமான அதிகாரங்கள் அவர்களது கைகளில் முடங்கிக் கிடந்தன. அதே போல் ஹெலட்டுகள் மீதும் அவர்கள் அளவற்ற அதிகாரங்களைச் செலுத்தி வந்தனர். நாட்டின் இராணுவ அமைப்பையும் கட்டுப்பாட்டையும் அவர்களே கண்காணித்து வந்தனர். இங்ஙனம் நாட்டின் பல அரசியல் நிறுவனங்களையும் கட்டுப்படுத்துகின்ற மேலதிகாரங்களை அவர்கள் பெற்று விளங்கினர். அதே சமயத்தில் அவர்களது அதிகாரங்களுக்கும் ஓரளவுவரம்பு கட்டப்பட்டிருந்ததையும் நாம் ஸ்பார்ட்டா அரசியலமைப்பில் காண்கின்றோம். ஆண்டுக்கொருமுறை தேர்தல் நடைபெற்றதால் அவர்கள் விழிப்போடு நடந்துகொண்டனர். பொறுப்பற்ற ஈஃபர்கள், அடுத்தாண்டிற்குத் தேர்ந்தெடுக்கப்படுதல் மிகவும் அரிதேயாகும். மேலும் அவர்கள் ஐவர்களாக இருந்த காரணத்தால் ஒருவரை ஒருவர் கட்டுப்படுத்திக் கொண்டார்கள். தனிப்பட்ட ஒருவர் வரம்பற்ற வல்லாட்சியைப் பெருவண்ணம் ஏனையோர் எப்பொழுதும் விழிப்போடு கவனித்து வந்தனர். மற்றும் தாங்கள் செய்த காரியங்களுக்காகத் தங்களுக்குப் பின் வருகின்ற அதிகாரிகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயமும் அவர்களுக்கு உண்டு.

எனவே, பொறுப்போடு நடந்துகொள்ள வேண்டிய கடமை உணர்ச்சியை அவர்கள் தாமாகவே பெற்று விளங்கினர்.

3. ஸ்பார்ட்டா அரசியலமைப்பின் மதிப்பீடு

ஸ்பார்ட்டா அரசியலமைப்பின் சிறப்பியல்பாகத் திகழ்பவை அதன்கண் அமைந்த கோணுட்சி, பிரபுக்களாட்சி, மக்களாட்சி ஆகிய மூவகையான ஆட்சித்துறையமைப்புகளின் இலக்கணங்கள் யாவும், ஒருங்கே காணப்படுகின்ற மாட்சிமையே யாகும். பிரிட்டனில் காணப்படுவது போன்றே ஸ்பார்ட்டாவிலும் இந்த மூவகை அரசியல் நிறுவனங்களும் ஒருங்கேயிருந்து, அமைதியாகவும் அதேவமயம் திறமையாகவும் செயல் பட்டமையை நாம் காண்கிறோம்.

ஸ்பார்ட்டா அரசியலமைப்பை நாம் ஒரு முடியாட்சி என்று அறுதியிட்டுக் கூற முடியாது. பொது விருந்துகளிலும் திருவிழாக்களிலும் ஸ்பார்ட்டா மன்னர்கள் பெருமைப்படுத்தப் படுவதைப் பார்த்த எவரும் அஃது ஒரு முடியரசு நாடென்றே முடிவு கட்டிவிடுவர். ஆனால் மன்னர்கள் எவ்வாறு ஈஃபர்கள் என்ற அதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டார்கள் என்பதையும், மக்கள் மன்றங்களுக்கு அவர்கள் எவ்வாறு கட்டுப்பட்டிருந்தார்கள் என்பதையும் நாம் மேலே பார்த்தோம். படைகளுக்குத் தலைமை தாங்கி நடத்திச் சென்ற மன்னர் அங்ஙனம் செய்தால்—ஏதாவது தவறுகளைச் செய்து விடுவார்களையானால் ஈஃபர் சபைக்கும் ஜெரூஷியா சபைக்கும் அவர் பதில் சொல்லியாக வேண்டும். ஜெரூஷியா சபைக்குத் தலைமை வகித்தவர்கள் ஈஃபர்களே அன்றி மன்னர்களல்லர். கிரிமினல், சிவில் வழக்குகளை ஜெரூஷியா மன்றம் விசாரித்த போதும், மன்னர்கள் அதற்குத் தலைமை தாங்கவில்லை. அதோடு, மன்னர்கள் இருவராயிருந்த காரணத்தால் ஒருவரை யொருவர் கண்காணித்துக் கொண்டு வந்தனர். எனவே, முடியரசென்ற பெயர் ஸ்பார்ட்டா அரசியலமைப்பிற்குச் சற்றும் பொருந்தாதென்பது தேற்றம்.

பிரபுக்களாட்சி அல்லது சுயநலச் செல்வச் சிறுகுழுவினரின் ஆட்சி என்று ஸ்பார்ட்டா அரசியலமைப்பை அழைப்பதும் பொருத்தமாகத் தோன்றவில்லை. ஜெரூஷியா மன்றத்தில், 28 உறுப்பினர்களும் பிரபுக்களால் தேர்ந்தெடுக்கப்படாமல், பொது மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டனர். பொதுமக்கள் பிரதிநிதிகளான ஈஃபர்களே அதற்குத் தலைவர்களாகவும் விளங்கினர். மற்றும் ஜெரூஷியாவின் தீர்மானங்கள், அப்பெல்லோ என்ற

மக்கள் மன்றத்தின் ஒப்புதலைப் பெற்றுலன்றி நடைமுறைக்குக் கொண்டுவரப்படா.

ஸ்பார்ட்டாவில் காணப்பட்ட அரசாங்கம் மக்களாட்சி என்று கூறுதலும் அவ்வளவாகப் பொறுத்தமற்றதேயாகும். ஏனெனில் சட்டங்களை ஆக்குகின்ற அதிகாரம் அதற்கில்லை. தனக்கு முன் வைக்கப்படுகின்ற மசோதாக்களை விவாதிக்கும் உரிமையும் அதற்கில்லை. ஜெரூஷியாவின் தீர்மானங்களை ஏற்றுக்கொள்வதும் மறுப்பதும் ஆகிய அதிகாரம் மட்டுமே அதற்குண்டு. மற்றும் அதன் தீர்மானத்தை நிறைவேற்றுமல் செய்வதற்குரிய அதிகாரத்தை ஈஃபர்கள் பெற்றிருந்தனர். அவர்கள் நினைத்தபோது கூட்டத்தைக் கலைக்கின்ற உரிமையைப் பெற்றிருந்ததால் அதன் அதிகாரம் உண்மையில் ஈஃபர்களின் தயவிற்குக் கட்டுப்பட்டே இயங்கிற்றென்று கூறவேண்டும்.

ஈஃபர்கள் என்ற அதிகாரத்தினரின் (Bureaueracy) ஆட்சியே ஸ்பார்ட்டாவில் நிலவியதென்று ஒரு சிலர் கூறுவர். ஆனால் அவர்களும் ஆண்டுக்கொருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டதாலும், ஒருவரையொருவர் கண்காணித்து வந்ததாலும், தங்களுக்குப் பின் வருபவர்களுக்குப் பதில் சொல்லவேண்டியவர்களாகவும் தங்களில் தேர்ந்தெடுத்த பொதுமக்கள் மன்றத்திற்கு ஓரளவு பொறுப்புடையவர்களாகவும் அவர்கள் விளங்கியதாலும் அவர்களது ஆட்சி தனியாட்சியாக வடிவெடுக்க வழியேதுமில்லை யென்றே கூறலாம்.

இங்ஙனம் ஸ்பார்ட்டா அரசியலமைப்பானது எந்த ஒரு தனிப்பட்ட அரசியலமைப்பையும் சாராமல், அதே சமயத்தில் கோனாட்சி, பிரபுக்களாட்சி, மக்களாட்சி ஆகிய மூவகை ஆட்சி வகைகளின் மாண்புகளையும் ஒருங்கே தன்னகத்தே கொண்டதாய் விளங்குகின்ற ஒரு விந்தையான காட்சியை நாம் காண்கிறோம். பரம்பரையாக வருகின்ற ஒரு சில செல்வந்தரின் மிதமான ஆட்சியாகவும், அதே சமயத்தில் வலிமைபெற்ற மக்களாட்சியின் மாண்புகளை உட்கொண்டதாயும் அது விளங்குவதாகக் கிரீனிட்ஜ் (Greenidge) என்ற ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இது பெரும் பாலும் உண்மை. ஏனெனில் இந்த அரசியலமைப்பில் உயர் குடியைச் சேர்ந்த செல்வந்தர்களான 30 உறுப்புனர்கள் மட்டுமே மிகவும் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தனர். அவர்களே உண்மையில் நாட்டை ஆண்டனர். ஆனால், அவர்கள் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதாலும் அவர்களது அதிகாரங்களை ஈஃபர்கள் கட்டுப்படுத்தியதாலும் அவர்

களது ஆட்சி மிதமானதாகவும், பொதுமக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டதாகவும் விளங்கிற்று. பழமையில் பெரிதும் பற்று மிகுந்த ஸ்பார்ட்டர்கள் ஆங்கிலேயர்களைப் போலவே தொன்று தொட்டு வந்த முடியாட்சி, பிரபுக்களாட்சி போன்ற நிறுவனங்களை ஒன்றும் மாற்றுமலேயே மக்களாட்சியின் குறிக் கோள்களை எய்துவதில் பெரிதும் வெற்றிபெற்றனர் எனலாம்.

(4) லிக்கர்கஸ் வகுத்த வாழ்க்கை நெறி

எண்ணிக்கையில் சிறுபான்மையோராயிருந்த ஸ்பார்ட்டர்கள் தம்மைவிடப் பன்மடங்கு எண்ணிக்கையில் பெருகியிருந்த ஹெலட்டுகள் என்னும் அடிமைக் கூட்டத்தினரையும், பெரியோசி என்ற கலப்பினத்தவரையும் எப்படிக் கட்டியாள்வது என்று தெரியாமல் திக்குமுக்காடிக்கொண்டிருந்த வேளையில், அவர்கள் வெற்றியுடன் வாழ்வதற்கோர் வழிவகையை வகுத்துத் தந்தவர் லிக்கர்கஸ் என்னும் பெரியார் என்பதை நாம் ஏற்கெனவே கண்டோம். அவர் பெயரால் பல நிறுவனங்கள் பிற்காலத்தே ஸ்பார்ட்டா அரசியல்–சமுதாய அமைப்பு ஆகியவற்றில் புகுத்தப் பட்டிருக்கவேண்டும் என்பதையும் ஓரளவு ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியுள்ளது. 'ஸ்பார்ட்டா மக்களின் வாழ்க்கை முறையில் மிகவும் கண்டிப்பான ஒழுக்க நெறிகளை லிக்கர்கஸ் புகுத்தினர்' எனப் பொதுவாக நம்பப்படுகிறது. உரம் பெற்ற உடலை ஒவ் வொரு ஆணும் பெண்ணும் பெற்றுலன்றி ஸ்பார்ட்டர்கள் வாழ முடியாதென்பதை நன்கு உணர்ந்த லிக்கர்கஸ் அதற்கேற்ற தோர் வாழ்க்கை முறையைத் தம் மக்களுக்கு வகுத்தளித்தார். அவரது முறைப்படி ஒவ்வொரு குடிமகனும் பிறப்பிலிருந்து இறப்பு வரை அரசாங்கத்தின் கண்காணிப்பிற்கு உட்பட்டிருந் தான். ஒரு குழந்தை பிறந்தவுடன் அரசாங்க அதிகாரிகள் சிலர் வந்து அதைச் சோதிப்பார்கள். வாழ்க்கையில் வாழ் வாங்கு வாழ முடியாத நிலையில் அக் குழந்தை ஏதேனும் குறை பாடுடையதாய் இருந்தால் அவைகளை எடுத்துச் சென்று டைஜடஸ் மலைச்சிகரத்தின் உச்சியிலிருந்து கீழே எறிந்து அவற்றை அவர்கள் கொன்றுவிடுவர். நன்கு பலம் பொருந்திய ஆரோக்கியமான குழந்தைகள் மட்டுமே நாட்டில் வளர அனு மதிக்கப்பட்டன. ஏழாண்டு நிரம்பும் வரை, குழந்தைகள் தங்கள் தாய்மார்களின் அரவணைப்பில் வளரலாம். அதன்பின் அவை களை அரசாங்கம் அழைத்துச் சென்றுவிடும். இராணுவக் கூடாரங்களில்தான் அவர்கள் அதன்பின் வாழவேண்டும். ஸ்பார்ட்டா தாய்மார்களும் பண்டைய தமிழன்னையரைப் போல், வீரம் மிக்க சேய்களையே பெறுதற்கு விரும்பினர். தனது மகன்

போரில் புறம் காட்டித் திரும்பி வருவதைவிட அங்கேயே மடிந்து வீழ்வது மேல் என அவர்களில் ஒவ்வொரு தாயும் கருதினாள். போருக்குச் செல்லும் காலை, "சென்றுவா மகனே, வென்று வா" என்றும், "கேடயத்துடனே திரும்பு. அல்லது அதன் மீது திரும்பி வா" என்றும் அவர்கள் கூறுவது வழக்கம். (Return with your shield or on it) இங்ஙனம் அவர்கள் கூறியதற்குக் காரணம் 'கேடயத்தைப் போர்க்களத்தில் எறிந்துவிட்டா லன்றியே ஒருவன் உயிரோடு திரும்பிவர முடியாது' என்ற உண்மையினாலேயேயாகும். ஒரு சில அன்னைமார்கள் கோழை யான தங்களது புதல்வர்களைக் கொன்றுவிடுவது வழக்கம். வலிவும் வனப்பும் உள்ள குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரு சில கணவன்மார்கள், தங்கள் மனைவிமாரை உடல் உரமிக்க வீரர்களுக்குத் தற்காலிகமாக வாழ்க்கைப் படுத்துவதும் வழக்கமாயிருந்தது. ஆண்மை மிக்க மக்களைப் பெறவேண்டுமென்ற குறிக்கோளிற்காக ஸ்பார்ட்டர்கள் கற்பையும் காற்றில் பறக்கவிட்டார்கள் எனத் தெரிகிறது.

அரசாங்க மனைகளை அடைந்த வாலிபர்கள் மிகவும் கடுமை யான போர்ப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டார்கள். ஒவ்வொரு மாணவக் குழுவிற்கும், பெயிடோனோமாஸ் (Paidonomos) என்னும் சட்டாம்பிள்ளைகள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் ஏனைய இளைஞர்களை விட, உடல் உறுதியிலும், உள்ளத்திண்மையிலும் சிறந்தவர்களாயிருப்பர். அவர்களுக்குக் கட்டுப்பட்டே அனைவரும் நடக்கவேண்டும். கட்டுப்படாத இளைஞர்களை நன்கு புடைத்து வழிப்படுத்தும் உரிமை அவர் களுக்குத் தரப்பட்டிருந்தது. பெரியோர்கள் அவர்களைப் பல விதமான விளையாட்டுகளிலும் அம்மணமாகக் கலந்துகொள்ளும் படி வற்புறுத்தினர். இளைஞர்களுக்கிடையே வீரத்தை உண் டாக்கும்படி அவர்களுக்கிடையே சச்சரவுகளை வேண்டுமென்றே ஊக்குவிக்கின்ற முதியோர்களும் பலர் இருந்தனர். 'கடுமை யான வாழ்க்கை முறையில் ஒவ்வொருவரும் பயிற்சி பெற வேண்டும்; எதையும் தாங்கும் இதயத்தைப் பெற வேண்டும்' என்பவையே ஸ்பார்ட்டன் தேய மக்களின் குறிக்கோளாகும். ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் ஆர்டிமிஸ் (Artimes) என்ற கடவுளின் கோவிலுக்கு முன் ஒருசில வாலிபர்களைக்கொணர்ந்து நிறுத்தி இரத்தம் வரும்வரை அவர்களைச் சவுக்கால் அடிப்பார்கள். அச் சமயம் சற்றும் முணுமுணுக்காமல், அத்தனை அடிகளுக்கும் பொறுத்துக் கொள்பவனே ஸ்பார்ட்டாவின் குடிமகன் எனக் கருதப்பட்டான். பயிற்சிக் காலத்தின் போது ஒரே ஒரு உடை மட்டுமே ஒருவருக்கு வழங்கப்படும். கோடைக் காலத்திலும்,

குளிர் காலத்திலும் நாணல் புற்களால் ஆன ஒரு படுக்கையின் மீது திறந்தவெளியில்தான் ஒவ்வொருவனும் உறங்கவேண்டும். சமயோசிதமாக நடந்துகொள்ளும் திறமையைச் சிறுவர்களிடம் வளர்ப்பதற்காக அவர்களுக்கு வேண்டுமென்றே உணவைக் குறைவாகக் கொடுத்து அண்டையிலுள்ள தோட்டங்களில் திருடுமாறு அவர்களை ஊக்குவித்தனர். இங்ஙனம் திருடுவதில் ஈடுபட்ட சிறுவன் ஒருவன் பிடிபட்டதாகவும், பிடிபட்டபின் அவன் தான் திருடிய பழக்கப்பட்ட நரியொன்றைத் தனது ஆடைக்குள் ஒளித்து வைத்துக்கொண்டு தான் திருடவே இல்லை என்று சாதித்ததாகவும், அதற்குள் அந்த நரியானது அவனது வயிற்றைக் குடைந்து குடல்களை வெளிப்படுத்திவிடவே அவன் பரிதாபமாக இறந்ததாகவும் கதையொன்று ஸ்பார்ட்டாவில் வழங்குகிறது. இதிலிருந்து ஸ்பார்ட்டர்களின் மன உறுதி எவ்வளவு தூரம் முறுக்கேறியிருந்ததென்பதைத் தெள்ளிதின் உணரலாம். வேகமான யூரேட்டஸ் நதியில் வீழ்ந்து நீந்துவதிலும், ஆண்மை மிகுந்த விளையாட்டுகளான குத்துச் சண்டை, கேடயம் எறிதல் போன்றவைகளில் அடிக்கடி ஈடுபடுவதிலும் இளைஞர்கள் மிகுந்த உற்சாகம் காட்டினர். அவர்கள் ஆடிய நடனங்கள் கூட இசைக்கேற்ப நடைபெற்ற இராணுவ நடைப்பயிற்சி போன்றே அமைந்திருந்தன.

நூற்படிப்பு அவர்களுக்கு அதிகமாக அளிக்கப்படவில்லை. லக்கர்களின் சட்டங்களை உருப்போடுதல் ஒன்றே போதும் என்று அவர்கள் கருதினர். ஹோமரது கவிதைகளை ஒரு சிலர் பயின்றனர். மக்களைக் கவரும் மேடைப் பேச்சை அவர்கள் பெரிதும் வெறுத்தனர். சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் என்பது அவர்களது குறிக்கோளாகும். ஆனால் இத்தகைய கல்வியானது அவர்களுடைய உடலை வளர்த்ததே தவிர உள்ளத்தை வளர்க்கவில்லை. அதனால்தான் ஸ்பார்ட்டாவில் கலைகளும் இலக்கியமும் வளரவில்லை. பரந்த மனப்பான்மையும் அவர்களிடம் தோன்றுதொழிந்தது. கல்விப் பயிற்சி முடிந்த பின் அதாவது 18 ஆண்டுகள் முடிந்த பின் ஒவ்வொரு இளைஞனும் கிரிட்டேயா (Cryteau) என்ற இரகசிய உளவாளிக் குழுவில் சேர்க்கப்பட்டான். இரண்டாண்டுகள் அங்கே அவர்கள் வேவு பார்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். ஹெலட்டுகளின் மத்தியில் வாழ்ந்து, அவர்களில் அரசாங்க விசுவாசமற்றவர்களைக் கண்டுபிடித்து ஒருவருமறியாமல், அவர்களை ஒழிக்க வேண்டுவது அவர்களது கடமையாகும். இதன்பின் வாலிபர்கள் காதல்வாழ்க்கையில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர். திருமணத்திற்கு முன்பு உடலுறவு கொள்வதை ஸ்பார்ட்டர்கள் மிகச்

சாதாரணமாக நினைத்தனர். பல வாலிபர்கள் இராணுவப் பயிற்சிக் காலத்திலேயே இரகசியமாகச் சென்று தங்களால் விரும்பப்பட்ட கன்னியர்களிடம் உடலுறவு கொண்டு இரவுக் கிரவே திரும்பி வந்துவிடுவர். திருமணம் உண்மையில் நடைபெறுகின்ற பொழுது ஒரு பெண்ணுக்கு ஏற்கெனவே பல குழந்தைகள் பிறந்திருப்பதென்பது ஸ்பார்ட்டாவில் சர்வ சாதாரணமாக நடைபெற்று வந்த நிகழ்ச்சியாகும். திருமணத் திற்கு முன் இத்தகைய சுயேச்சை இருந்ததால்—திருமணத் திற்குப் பின் ஒழுக்கம் கெடும் பெண்களும், ஆண்களும் ஸ்பார்ட் டாவில் மருந்துக்கும் இலராயினர். உண்மையான காதல் என்பதில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. அதனாற்றானே என்னவோ அவர்கள், அஃப்ரோடிடி (Aphrodite) என்ற காதல் கடவுளுக்கு ஒரே ஒரு கோயில் மட்டுமே கட்டியிருந்தனர். அதிலும் அங்கு வைக்கப்பட்டிருந்த சிலையின் முகத்தைத் துணியால் மறைத்தே வைத்திருந்தனர். ஸ்பார்ட்டர்களின் வாழ்க்கையில் வீரம் முதலிடத்தையும், காதல் இரண்டாம் இடத் தையும் பெற்றிருந்தன.

ஸ்பார்ட்டாவின் மகளிரும் மிகவும் கடுமையான பயிற்சி களுக்குட்பட்டிருந்தனர். ஓட்டப் பந்தயம், குத்துச் சண்டை போன்ற பந்தயங்களில் அவர்களும் கலந்து கொண்டனர். பெண்களுக்கு நாணம் தேவையில்லை என்பது ஸ்பார்ட்டர்களின் கருத்தாகும். பொதுவிழாக்களிலும், ஊர்வலங்களிலும் இளம் வாலிபர்கள் முன்னிலையிலும் அம்மணமாக நடனமாடிச் செல்லுமாறு அவர்கள் வற்புறுத்தப்பட்டனர். அவர்களது உடலமைப்பில் காணப்படும் குறைகளை மற்றவர்கள் எடுத்துக் கூறவும், அதைப் பின்னர் திருத்திக் கொள்ளவும் அதையொரு வாய்ப்பாக அவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதே அப் பழக்கத்தைப் புகுத்திய லைக்கர்கஸின் கருத்தாகும்.

ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே காதல் வளர்வ தற்குத் தடை போடப்பட்ட காரணத்தால் இளைஞர்கள் தங்களை விட முதியவனை ஓர் ஆண் மகனிடம், கட்டுக்கடங்காத பாசத் தையும், அன்பையும் வளர்த்துக் கொண்டனர். நட்பு என்ற முறையில் அவர்களது அன்பு முழுமையாக வளர்ச்சியுற்றது.

முப்பது வயதிற்கு மேல் ஆண்களும், இருபது வயதிற்கு மேல் பெண்களும் திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கப் பட்டனர். திருமணமாகாத பிரம்மச்சாரிகள் குற்றவாளிகளாகக் கருதப்பட்டனர். வாக்குரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டது.

பொது ஊர்வலங்களில் கலந்துகொள்ள அவர்கள் அனுமதிக்கப் படவில்லை. கடுங் குளிரில் ஆடையின்றி அம்மணமாகத் தெருவில் நடந்து செல்லவேண்டும் என்ற கடுமையான தண்டனை அவர்களுக்கு விதிக்கப்பட்டது. அதே போன்று திருமணமாகியும் மக்களைப் பெறுத ஆண்களையும் ஸ்பார்ட்டா சமுதாயம் பலவகையிலும் பழித்தது.

ஸ்பார்ட்டா சமுதாயத்தில் பொதுப்பந்தி (Common Mess) என்பது இன்னெரு முக்கியமான நிறுவனமாகும். குடியுரிமை பெற்ற பிரபுக்கள் அனைவரும் அதில் உறுப்பினராயிருந்தனர். ஒவ்வொரு பந்தியிலும் 15 உறுப்பினர்கள் இருந்தனர். ஒவ்வொரு உறுப்பினரும் குறிப்பிட்ட அளவு பார்லிமாவு, பழங்கள், சாராயம் இவற்றைத் தமது பங்காக வழங்கவேண்டும். இவர்கள் அனைவரும் ஒன்றுக உண்டு ஒன்றுகவே போர் செய்தனர். இவர்களைக் கண்காணிக்கத் தனிப்பட்ட அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

இங்ஙனம் லைக்கர்கஸால் ஏற்படுத்தப்பட்டு நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட்ட ஸ்பார்ட்டா வாழ்க்கைமுறையில் ஒரு வகை யான பொதுவுடமை (Communism) காணப்பட்டது. நிலங் களும் சொத்துகளும் அரசின் உடமையாகவே கருதப்பட்டன. ஆனால் அவை எல்லா மக்களுக்கும் சரியாகப் பிரித்துத் தரப்பட வில்லை. தூய டோரிய இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே நிலங்கள் வழங்கப்பட்டன. தற்காலத்திலும் பொதுவுடமை வாதிகள் செய்வதற்கு அஞ்சுகின்ற ஒரு சில காரியங்களை ஸ்பார்ட்டர்கள் செய்தனர். குழந்தைகளை நாட்டின் சொத்தாகக் கருதி ஏழு வயதிலிருந்தே அவர்களைப் பெற்றோரிடமிருந்து பிரிக்கின்ற வழக்கம் இன்றைய கம்யூனிஸ்டு நாடுகளில் கூடக் காணப்படவில்லை. மற்றும் ஸ்பார்ட்டர்கள் கருதியது போல், போர்ப் பயிற்சி ஒன்று மட்டுமே குடிமக்களின் குறிக்கோளாக இன்றைய பொதுவுடைமை நாடுகளில் கருதப்படுவதில்லை. ஸ்பார்ட்டர்கள் நிலத்திலும் நீரிலும் உழைப்பதைக் கேவலமாக நினைத்தனர். ஆனால் இன்றைய கம்யூனிஸ்டுகள் எல்லாவித உழைப்பையும் சிறந்ததாகப் போற்றுகின்றனர். திடகாத்திர மற்ற குழந்தைகளைக் கொன்றுவிட்டு வலிவுமிக்க மகவுகளைப் பெறுவதற்காக மகளிரின் கற்பையே விலைபேசும் அளவிற்கு நவீன கம்யூனிஸ்டுகள் இன்னும் முன் வரவில்லை. ஸ்பார்ட்டா சமுதாயத்தில் இருந்த ஏற்றத்தாழ்வுகள் இன்றைய பொது வுடைமை நாடுகளில் இல்லை. ஸ்பார்ட்டாவில் இருந்தது போன்ற அடிமைக் கூட்டம் இக் காலக் கம்யூனிஸ்டு நாடுகளில்

காணப்படாததொன்று. "தனி மனிதன் அரசுக்கு உட்பட்டவன்; அரசின் நலனே தனி மனிதனின் நலம், அரசின் நலன் என்ற குறிக்கோளை அடைய எத்தகைய உபாயத்தையும் அரசாங்கம் கடைப்பிடிக்கலாம்" என்ற கொள்கைகள் ஸ்பார்ட்டாவுக்கும் தற்காலப் பொதுவுடைமை நாடுகளுக்கும் பொதுவான வைகளாகும்.

(5) ஸ்பார்ட்டாவின் விரிவாக்கம்

ஆரம்பக் காலத்தில் கிரேக்கர்கள் மிகவும் அமைதியான முறையிலேயே நாடெங்கும் பரவி வந்தனர். ஸ்பார்ட்டா நகர அரசு மட்டுமே பலாத்காரமான முறைகளில் அண்டை நாடுகளில் பரவ முயன்றது. வடக்கிலும் தெற்கிலும் மேற்கிலும் கிழக்கிலும் பல நாடுகளை வென்று வாகை சூடிய முதல் கிரேக்க நகர அரசு ஸ்பார்ட்டா ஒன்றேயாகும். பெலப்பொனீஷிய தீபகற்பத்தின் பெரும் பகுதியை அது விரைவிலேயே கைப்பற்றிக் கொண்டது. நவீன காலத்தே ஜெர்மனிக்கு முன் ஏனைய ஐரோப்பிய நாடுகள் எளிதில் பணிந்தமை போல் ஸ்பார்ட்டாவிடம் பல சிறு நகர அரசுகள் பணிந்து அதன் தலைமையை ஒப்புக் கொண்டன. இத்தகைய வியத்தகு வெற்றிக்குக் காரணம் ஸ்பார்ட்டாவின் ஒப்பற்ற படை பலமேயன்றி வேறன்று.

ஸ்பார்ட்டாவின் போர்வீரர்கள் கிரீஸ் நாட்டிலேயே ஒப்பாரும் மிக்காரும் இலராய்த் திகழ்ந்தனர். ஹாப்லைட்டுகள் (Hoplites) என்னும் ஸ்பார்ட்டப் போர்வீரர்கள் பல புதிய முறைகளைப் போர்க்களங்களில் கையாண்டனர். ஆறடி நீளமுள்ள நீண்ட ஈட்டிகளை அவர்கள் பயன்படுத்தினர். உடல் அனைத்தையும் மறைக்கும்படியான நீண்ட முட்டை வடிவமான கேடயம் ஒன்றையும் அவர்கள் கைக்கொண்டிருந்தனர். அத்தகைய காலாட்படை வீரர்கள் அடங்கிய எட்டு வரிசைகள் சேர்ந்தது ஒரு போர் அணியாகும். ஒவ்வொருவரும் தனித்தனியாகவே நின்று போர் புரிந்தனர். ஒவ்வொரு வீரனையும் அவனுக்கு அருகிலுள்ள வீரனின் கேடயம் மறைக்கின்ற அளவில் நெருக்கமாக நின்று அவ்வணிகள் நிறுவப்பட்டன. எனவே, அவைகளை உடைத்து உட்செல்லுதல் என்பது மாற்றானது படைகளுக்கு மிகமிகக் கடினமாகவே இருந்தது. ஆனால் முதல் வரிசையில் நின்ற அணியைப் பிளந்து விட்டால் பின்னர் ஏனைய அணிகள் எல்லாம் எளிதிலேயே முறியடுக்கப்படும். சமவெளியில்தான் இத்தகைய போர்கள் நடைபெறும். ஸ்பார்ட்டர்களிடம்

குதிரைப் படைகள் இல்லை. கனமான கவசம் அணிந்த காலாட் படை வீரர்களையே அவர்கள் நம்பி இருந்தனர். இத்தகைய சிறந்த வீரர்களைக் கொண்டு ஸ்பார்ட்டா பல போர்க்களங்களில் வெற்றி பெற்றது.

முதலாம் மெசேனியப் போர் (கி.மு- 744-724)

ஸ்பார்ட்டாவின் மக்கள் தொகை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. ஆனால் அம் மக்கள் நலமுடன் வாழ்வதற்கான வசதிகள் ஸ்பார்ட்டாவில் இல்லை. உணவுத் தானியங்களை விளைவிக்கக்கூடிய செழிப்பான நிலங்கள் அங்கு மிகவும் குறைவாகவே இருந்தன. எனவே தங்கள் நாட்டிற்கு மேற்கே இருந்த செழிப்பு வாய்ந்த மெசனியா என்ற சமவெளியின்மீது அவர்கள் கவனம் செலுத்தினர். நாளடைவில் ஸ்பார்ட்டா வீரர்கள் அச் சமவெளிக்குள் புகுந்தனர். மெசனியாவின் மன்னனை அரிஸ்டோமீடஸ் (Aristomedes) என்பான் தன் முழு வலிமையோடும் ஸ்பார்ட்டர்களை எதிர்த்தான். 20 ஆண்டுகள் போர் தொடர்ந்து நடைபெற்றது. மெசனிய வீரர்கள் இதோமி (Ithome) என்ற குன்றின்மீது கட்டப் பட்டிருந்த கோட்டைக்குள் சென்று ஒளிந்து கொண்டனர். டெல்ஃபி (Delphi) என்ற இடத்தில் குறி சொல்லி வந்த தெய்வீகப் பெண்மணியிடம் சென்று அரிஸ்டோமீடஸ், தான் ஸ்பார்ட்டர்களை வெல்வதற்கு வழியாதென வினவினான். அரச வம்சத்தைச் சார்ந்த ஓர் இளமங்கையை இறைவனுக்குப் பலியிட்டால் வெற்றி கிட்டும் எனக் குறிமாது ஆருடம் புகன்றாள். அதைக் கேட்ட மன்னன் தனது சொந்த மகளையே தெய்வத்துக்குப் பலியிட்டான். விரைவில் வெற்றி கிட்ட வேண்டும் என்ற பேராசையே இதற்குக் காரணம். எனினும் போர்க்களத்தில் எந்தப் பக்கத்தில் படைபலம் அதிகமாய் இருக்கின்றதோ அப் பக்கத்தின் சார்பிலேயே கடவுளும் இருக்கின்றார் என்ற கூற்றே இறுதியில் உண்மையாயிற்று ஸ்பார்ட்டர்கள் இதோமிக் கோட்டையை வென்று கைப்பற்றினர். அரிஸ்டோமீடஸ் தமது மகளின் கல்லறையின்மீது விழுந்து தற்கொலை செய்து கொண்டான். மெசேனியா முழுவதையும் தங்களுடைய நாட்டோடு ஸ்பார்ட்டர்கள் இணைத்துக் கொண்டார்கள். அதன் மக்கள் யாவரும் அடிமைகளாக்கப் பட்டனர். அவர்கள் உழுது பயிரிட்ட நிலங்களில் விளைந்த வேளாண்மையில் பாதியை ஸ்பார்ட்டாவுக்குத் திறையாகச் செலுத்தும்படி கட்டாயப் படுத்தப்பட்டனர்.

இரண்டாவது மெசேனியப் போர் (கி.மு. 665-654)

முதலாம் மெசேனியப் போருக்குப் பின் ஆர்காஸ் (Argos) என்னும் நகர அரசு கிரீஸில் தலை எடுக்க ஆரம்பித்தது. அதன் மன்னரான ஃபைடன் (Pheidon) ஸ்பார்ட்டர்களைத் தோற்கடித்தார் (கி.மு. 669). இதைக் கண்ட மெஸனியர்கள் ஃபைடனுடன் சேர்ந்து கொண்டு ஸ்பார்ட்டாவுக்கு எதிராகக் கலகம் செய்தனர். அரிஸ்டோமீனஸ் (Aristomenes) என்பவரின் தலைமையில் மெசேனியர்கள் கடுமையாகப் போரிட்டு ஸ்பார்ட்டர்களை நாட்டை விட்டுத் துரத்தி விட்டனர். ஸ்பார்ட்டர்கள் ஆதென்ஸ் நகர உதவியை நாடினர். ஆதென்ஸ் நகரத்தார் டெல்ஃபி நகரின் குறிசொல்லும் தெய்வத்தின் ஆணைப்படி டிர்டாக்கஸ் (Tyrtacus) என்ற ஆசிரியப் புலவனை ஸ்பார்ட்டாவுக்கு அனுப்பி வைத்தனர். அப் புலவனுடைய வீரம் செறிந்த பாடல்களால் உந்தப்பட்ட ஸ்பார்ட்ட வீரர்கள் இறுதியில் எய்ரா (Eira) என்ற திண்மை வாய்ந்த கோட்டையைப் பதினெரு ஆண்டு முற்றுகைக்குப் பின் கைப்பற்றினர். அரிஸ்டோமீனஸும் அவரது ஆட்களும் சரணடைய மறுத்துத் தூர நாடுகளுக்கு ஓடிவிட்டனர். மெசேனியா மீண்டும் ஸ்பார்ட்டாவின் வசம் ஆயிற்று.

டீஜியாவைக் கைப்பற்றல் (கி மு. 550)

மெசேனியாவை வென்றதும் ஸ்பார்ட்டர்கள் அதற்கும் வடக்கே உள்ள ஆர்கேடியா என்னும் நாட்டின்மீது படை எடுத்தனர். டீஜியா என்ற வலிமை வாய்ந்த கோட்டையைக் கைப்பற்றினர். டீஜிய மக்கள் ஸ்பார்ட்டாவின் தலைமையை ஏற்றுக் கொண்டனர். ஆனால் டீஜியா ஸ்பார்ட்டாவோடு சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இரு நாடுகளும் நட்பு நாடுகளாக மாறின.

இதர வெற்றிகள்:

ஃபைடன் என்ற பல மிகுந்த மன்னனின் மரணத்துக்குப் பின்னர் அவரால் கைப்பற்றப்பட்ட கினூரியா (Cynuria) சைதீரா (Cythera) ஆகிய இரு இடங்களையும் ஸ்பார்ட்டர்கள் தாக்கி மீண்டும் பிடித்துக்கொள்ள முயன்றனர். இருதரப்பிலும் இருந்து முந்நூறு வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் போரிடும்படி ஆணையிட்டனர். போரின் முடிவில் ஆர்காஸ் வீரர்களும் ஒரு ஸ்பார்ட்ட வீரனும் மட்டுமே எஞ்சினர். வெற்றி பெற்ற வீரர்கள் தங்களது சாதனையை அறிவிக்க ஆர்காஸ்நகரத்துக்குச் சென்றனர். அச் சமயத்தில் போர்க்களத்தில இறந்து கிடந்த

வீரர்களின் உடமைகளை எல்லாம் கவர்ந்துகொண்டு ஸ்பார்ட்ட வீரன் தனது அரசாங்கத்திடம் சென்று தானே வெற்றி பெற்று விட்டதாக அறிவித்தான். யார் வெற்றி பெற்றார்கள் என்பது மீண்டும் ஐயப்பாட்டிற்கு உரியதாயிற்று. அதைத் தீர்க்க மீண்டும் போர் நடைபெற்றது. நல்ல வேளையாக அப் போரில் ஸ்பார்ட்டா வெற்றி பெற்றது.

பெலப்பொனீஷியா இணைக்கூட்டரசு

மேல் கூறப்பட்ட வெற்றிகளின் விளைவாக ஸ்பார்ட்டா வானது பெலப்பொனீஷியாவிலேயே தலைசிறந்த நகர அரசாக விளங்கிற்று. அத் தீபகற்பத்தில் இருந்தே பற்பல நகர அரசு களும் அதன் தலைமையை ஏற்றுக்கொண்டன. ஆர்காஸ், அக்கீயா (Achea) ஆகிய இரு நாடுகளைத் தவிர ஏனைய நாடுகள் யாவும் சேர்ந்து ஸ்பார்ட்டர்கள் தலைமையில் ஓர் இணைக் கூட்டரசை அமைத்தன. இக் கூட்டரசில் மீகாரா (Megara), ஈலிஸ் (Elis) ஆகிய நாடுகளும் சேர்ந்து ஸ்பார்ட்டாவுடன் நட்பு உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டன. ஸ்பார்ட்டாவும், அவைகளும் ஏறக் குறைய்ச் சமநிலையில் வைத்து எண்ணப் பட்டன. ஆனால் மெசேனியாவும், ஆர்கேடியாவும் ஸ்பார்ட் டர்கள் ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடுகளாகவே விளங்கின. ஆர்க்கேடியா நகரங்களுள் டீஜியா ஒன்று மட்டுமே கூட்டுறவில் சேர்ந்தது. ஆர்காஸ் நாடானது பழையபடி ஒரு வல்லரசாக ஆவதைத் தடுக்கவே இக் கூட்டுறவு அமைக்கப்பட்டது. ஒரு பொதுக் குறிக்கோளுக்காகக் கிரீஸில் முதன் முதல் அமைந்த அரசியல் கூட்டுறவு இதுவேயாகும்.

இக் கூட்டுறவின் தலைமை ஸ்பார்ட்டாவிடமே அமைந் திருந்தது. கூட்டுறவு நாடுகளின் பிரதிநிதிகள் ஸ்பார்ட்டா நகரத்திற்கே வந்து கூட்டம் கூடிப் போர்ச் சமாதானம் முதலியவை பற்றிப் பேசித் தமக்குள் ஒரு முடிவுக்கு வந்தனர். கொள்கை அளவில் இத்தகைய பிரதிநிதிகள் கூட்டமே போர்ச் சமாதானம் பற்றிய தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு உரிமை பெற்றிருந்தது. ஆனால் ஸ்பார்ட்டா நகர அரசின் அப்பெல்லா (Apella) என்ற பொது மக்கள் பெரு மன்றத்தின் முடிவே இறுதி யானது. எனவே, போரைத் தொடங்கவும் நிறுத்தவும் உண்மை யான அதிகாரத்தைப் பெற்றிருந்தது அப்பெல்லா என்ற மன்றமே தவிர வேறன்று. அயலாரின் படையெடுப்பு நேர்ந்த போதெல்லாம் இக் கூட்டுறவில் சேர்ந்த நாடுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பட்டாளத்தை அனுப்பி வைத்தல் மரபாகும். அப்

பட்டாளங்களுக்குத் தலைமை தாங்கி நடத்தும் பொறுப்பு ஸ்பார்ட்டாவுக்கே உரியதாகும். உறுப்பு நாடுகள் ஸ்பார்ட்டாவுக்கு வரி ஏதும் செலுத்தவேண்டியதில்லை. ஒவ்வொரு நாடும் ஸ்பார்ட்டாவுடன் தனிப்பட்ட முறையில் தனது விருப்பப்படியே தனி உடன்படிக்கைகளைச் செய்துகொண்டது.

இக் கூட்டுறவு அமைப்பினால் ஸ்பார்ட்டாவின் சிறப்பு ஓங்கியது. அதன் தலைமை பெலப்பொனீஷியா நாடுகள் அனைத்தாலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. பாரசீகர்கள் போன்ற வெளி நாட்டினர் கிரீஸின்மீது படையெடுத்த போது அதை முறியடிப்பதற்கு ஏற்ற பொதுப்படை ஒன்றை நிறுவுகின்ற பெரும் பொறுப்பை இக் கூட்டுறவே ஏற்றுக்கொண்டது. ஸ்பார்ட்டாவின் தலைமையில் கிரேக்க நாடுகள் அனைத்தும் சேர்ந்து கொண்டு பாரசீகர்களை எதிர்த்தன. ஆசியாமைனர் போன்ற பகுதிகளைப் பாரசீகர்கள் தாக்கியபோது அவர்களை விரட்டியடிக்க அங்கு வாழ்ந்த கிரேக்கர்கள் பெலப்பொனீஷிய இணைக் கூட்டரசின் உதவியையே நாடினர். ஸ்பார்ட்டாவின் தலைமையை ஏற்றுக்கொண்ட நாடுகள் அங்கு நிலவிய செல்வச் சிறு குழுவினரின் ஆட்சியையே (Oligerchy) பெரிதும் பேணி வளர்த்தனர். இதனால் அத்தகைய ஆட்சி முறையே நாடெங்கும் மலர்ந்தது. மக்களாட்சி என்னும் குறிக்கோளை நோக்கிக் கிரீஸ் முன்னேறுவதற்கு இத்தகைய கூட்டரசு ஒரு தடையாக இருந்தது எனலாம். எனவே, மக்களாட்சியைப் பெரிதும் போற்றி வளர்த்த ஆதென்ஸ் நகர அரசிற்கும் ஸ்பார்ட்டாவுக்கும் இடையே சச்சரவு ஏற்பட்டது. இச் சச்சரவு நாளடைவில் முற்றி ஓர் உள்நாட்டுப் போராக வடிவெடுத்து, நாட்டின் பலத்தையும் பெருமையையும் ஒருங்கே குலைத்தது.

8. ஆதென்ஸ் நகர அரசின் ஆரம்பக்கால வரலாறு

(1) ஆதென்ஸ் நகரின் தோற்றம்

அட்டிகா (Attica) என்ற நிலப்பகுதியில் ஆதென்ஸ் என்னும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரம் அமைந்துள்ளது. ஆரம்பத்தில் அட்டிகாவில் பல சிறு கிராமங்களே இருந்தன. அக் கிராமங்கள் நாளடைவில் ஒன்றுக இணைந்து ஆதென்ஸ் என்னும் நகர அரசாக அமைந்தன. இந்தக் கிராமங்களின் ஒன்றிப்பு மூன்று நிலைகளில் ஏற்பட்டன. முதன் முதலில் அவற்றுள் சில பொது வழிபாடு நிகழ்த்துவதற்காக ஒன்று சேர்ந்தன. அடுத்தாற் போல் அவை பாதுகாப்பின் நிமித்தமாகவும் ஒருங்கே இணைந்தன. அத்தகைய இணைப்பில் தோன்றியவையே ஆதென்ஸும், எலியூசிஸ் என்னும் (Eleusis) எனும் நகர அரசுமாகும். எலியூசிஸ் என்னும் நகரம் நாளடைவில் மறைந்து, ஆதென்ஸ் நகரம் ஒன்று மட்டுமே தலை தூக்க ஆரம்பித்தது. தீஸியஸ் (Theseus) என்னும் ஆதென்ஸ் நகர மன்னன், தனிப்பட்ட அரசாங்கங்களை ஒழித்து எல்லாக் கிராமங்களுக்கும் பொதுவான ஒரு அரசாங்கத்தை ஆதென்ஸ் நகரத்தில் அமைத்தான். கிராமங்களின் ஒன்றிப்பில் இது முன்றாவது கட்டமாகும். இந்தக் கட்டத்தைத் தேசிய விழாவாக அத்தீனியர்கள் இன்றும் கொண்டாடுகின்றனர். இதன் பின்னர் அட்டிகாவில் வாழ்ந்த மக்கள் அனைவரும் தங்களை அத்தீனியர்கள் என்றும், அத்தீனிய நகர அரசின் குடிமக்கள் என்றும் அழைத்துக் கொள்ளலாயினர். இங்ஙனம் அமைதியான முறையில் அட்டிகாவின் கிராமங்கள் ஆதென்ஸ் என்னும் ஓர் ஒன்றியத்தை (Synoceism) உண்டாக்கின. இதற்கு முற்றிலும் மாறுகஸ்பார்ட்டா நகர அரசு தனக்கு அண்டையிலுள்ள நிலப்பகுதி

என்பதையும், அங்ஙனம் இணைத்துக்கொள்ளப்பட்ட நாடுகளில் வசித்த மக்களுக்கு அரசியல் உரிமைகளைத்தர மறுத்தது என் பதையும் நாம் கடந்த அத்தியாயத்தில் கண்டோம். ஆனால் ஆதென்ஸோ எனின் அகிம்சை முறையில் தனது செல்வாக்கை பெருக்கிக்கொண்டு தன்னுடன் இணைந்த நிலப்பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கெல்லாம் முழுமையான அரசியல் உரிமைகளை அளித்தது. இங்ஙனம் அது மக்களாட்சிக் கொள்கைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக ஆரம்பத்தில் இருந்தே விளங்க லாயிற்று.

(2) ஆதென்ஸில் வாழ்ந்த மக்களின் சமுதாய நிலை

ஒன்றியம் தோன்றிய பொழுது அதில் நான்கு அயோனியக் குலங்கள் இருந்தன. அவைகள் ஒவ்வொன்றும் தமக்கே உரிய தெய்வங்களை வழிபட்டு வந்தன. ஒவ்வொரு குலமும் சிறு சிறு குடிகளாகவும், ஒவ்வொரு குடியும் பல சிறு குடும்பங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு குடும்பமும் ஒரு பொதுவான மூதாதையர் வம்சத்தில் வந்ததாக நம்பியது. ஒவ்வொரு குடிக்கும் ஆர்க்கன் (Archon) என்ற தலைவன் இருந்தான். அவன் சொற்படியே குடிமக்கள் அனைவரும் நடந்தனர். இத் தகைய குடிகள், பெரும்பாலும் நாட்டில் வாழ்ந்த பிரபுக்களை மட்டுமே உட்கொண்டிருந்தன. சாதாரணக் குடியானவர்களும், தொழிலாளிகளும் தாங்கள் வழிபடுகின்ற பொதுவான தெய்வத் தின் பேரில் ஒரு கூட்டமாக அமைந்தனர். மற்றும் அருகருகே நிலங்களைக் கொண்டு வாழ்ந்த குடும்பங்கள் பல தங்களுக்குள் ஃபிராட்ரா (Phratra)என்ற சகோதரக் கூட்டுறவை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. ஒவ்வொரு குழந்தையும் அது பிறந்தவுடன் கூட்டுறவில் ஓர் உறுப்பாகச் சேர்க்கப்பட்டது. அப்படிச் சேர்க்கப்படாத குழந்தைகள் பிற்காலத்தில் குடிமக்களாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. ஒவ்வொரு குலத்திலும் இத்தகைய சகோதரக் கூட்டுறவுகள் பல இருந்தன. பல குடிகளைச் சேர்ந்த மக்கள் ஒரே கூட்டுறவில் உறுப்பினராய் இருப்பதும் வழக்கம். அத்தீனியச் சமுதாயத்தில் தொழிலின் அடிப்படையிலும், செல்வத்தின் அடிப்படையிலும் நான்கு வகையான வகுப்புகள் தோன்றின. ஒவ்வொரு குலத்திலும் நிலம் படைத்த பிரபுக்கள் பலர் இருந்தனர் அவர்கள் யூஃபாட்ரிடீ (Euphatridae) என அழைக்கப்பட்டனர். அவர்களின் நிலங்களை உழுது பயிரிட்ட குடியானவர்கள் ஜியார்ஜி (Georgi) எனப்பட்டனர். பல சிறு தொழில்களைச் செய்து வந்த கைவினைஞர்கள் டெமியர்ஜி (Demiurgi) எனப்பட்டனர். சாதாரணக் கூலி வேலை செய்யும்

ஏழைகள் தீட்டிஸ் (Thetes) என அழைக்கப்பட்டனர். ஸ்பார்ட்டா விலிருந்ததைப் போல் அரசுக்குச் சொந்தமான அடிமைகள் ஆதென்ஸில் இல்லை ஏனினும் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான பல அடிமைகள் இருந்தனர். அவர்கள் கிரேக்க இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். வெளிநாட்டில் இருந்து விலைக்கு வாங்கப்பட்டவர்களும், போரில் சிறைபிடிக்கப்பட்டவர்களுமே அடிமைகளாக நடத்தப்பட்டனர். அவர்கள் கூலி எதுவுமின்றிப் பிரபுக்களின் நிலத்தை உழுது பயிரிட்டு வந்தனர். அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு பிரபுக்களையே சார்ந்ததாகும். வெளி நாட்டில் இருந்துவந்து வாணிகத்தின் பொருட்டாக ஆதென்ஸில் தங்கிவிட்டவர்கள் மெட்டிக்ஸ்கள் (Metics) எனப்பட்டனர். அவர்கள் அரசாங்கத்துக்கு வரி செலுத்தி வந்தனர். ஆனால் அரசியல் உரிமைகள் எதுவும் அவர்களுக்கு அளிக்கப்படவில்லை.

(3) ஆதென்ஸின் அரசியல் வாழ்க்கை

ஆதென்ஸ் நகரில் முதன் முதலில் கோனுட்சியே நிலவியிருந்தது. ஹோமர்காலத்து மன்னர்களைப் போல், அத்தீனிய மன்னர்களும் தம் பொதுமக்கள் மன்றம் முதலியவைகளைக் கலந்து ஆலோசித்து ஆட்சி புரிந்துவந்தனர். அங்ஙனம் ஆட்சிபுரிந்த மன்னர்களில் தீஸியஸ் (Theseus) என்பவர் தான் முதலில் பட்டம் எய்தியவர் எனப் புராணங்கள் கூறுகின்றன. அட்டிகாவிலுள்ள பல்வேறு சிறு நாடுகளையும் ஒருங்கிணைத்துத் தனிப்பட்ட அத்தீனிய நகர அரசை உருவாக்கியவர் அவரே என்று கூறப்படுகிறது. புராணங்களின்படி ஆதென்ஸை ஆண்ட கடைசி மன்னன், கோட்ரஸ் என்பவனாவான். ஆதென்சிற்கும் ஸ்பார்ட்டாவிற்கும் போர் நிகழ்ந்த போது கோட்ரஸ் தானே நேரில் சென்று போராடித் தன் உயிரைத் தியாகம் செய்து அந் நகருக்கு வெற்றியை வாங்கித் தந்தான். மீண்டும் அத்தகைய நற்குண நற்செய்கை நிரம்பிய மன்னன் ஒருவனை அவனது வாரிசாகப் பெறுவது முடியாத காரியம் என நம்பிய அத்தீனியர்கள், அவனோடு குடியாட்சி ஒழியட்டும் என்று கூறி அதற்குப் பதிலாகப் பிரபுக்களாட்சியை ஏற்படுத்தினர். ஆனால், இப் பிரபுக்களாட்சி முழுமையாக ஏற்படவில்லை. கொஞ்சங் கொஞ்சமாக மன்னரது அதிகாரங்கள் குறைக்கப்பட்டு, பிரபுக்களின் அதிகாரங்கள் பெருக்கப்பட்டன. ஆரம்பத்தில் அவனே நாட்டின் படைத்தலைவனுகவும், முக்கிய நீதிபதியாகவும், தலைமைமதக்குருவாகவும் இருந்தான். ஆனால் நாளடைவில் படைத்தலைவனைப் போலிமார்க் (Polemarch) எனும் அதிகாரி

ஒருவரைப் பிரபுக்கள் நியமித்தனர். அத்தகைய அதிகாரிகள் பிரபுக்கள் வகுப்பினின்றே தேர்ந்தெடுக்கப்பட்டனர். இங்ஙனம் படைகளின் மீது மன்னன் செலுத்திவந்த தனியதிகாரத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அடுத்தபடியாக அவனுடைய சிவில் அதிகாரங்கள் இப்பானிமஸ் (Eponymus) என்ற இன்னொரு அதிகாரியின் கையில் ஒப்படைக்கப்பட்டன. இத்தகைய அதிகாரிகளும் நாட்டில் பெரிதும் செல்வாக்குடன் வாழ்ந்த மெடாண்டிட் (Medontid) எனும் பிரபுக் குடும்பத்தில் இருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் தங்களது வாழ்நாள் முழுவதும் அப் பதவிகளை வகித்துவந்தனர். எனவே அவர்கள் ஏறக்குறைய அரசர்களுக்குச் சமமான நிலையிலேயே இருந்து வந்தனர். பெயரளவிற்கு மட்டுமே மன்னன் நாட்டின் தலைவனாக இருந்தான். ஆனால் அவன் சுயமாகச் செய்யக்கூடிய காரியங்கள் சமய சம்பந்தமானவைகளேயன்றி வேறல்ல. நாளடைவில் இப்பானிமஸ் என்ற சிவில் அதிகாரியின் அதிகாரங்கள் பெருகிக்கொண்டே சென்றன. நீதி வழங்கும் அதிகாரத்தையும் அவ்வதிகாரிகள் மன்னனிடமிருந்து பறித்துக் கொண்டனர். எனவே நாட்டின் அரசியல் அமைப்பில் இப்பானிமஸ் என்ற தலைமை நீதிபதி முதலிடத்தையும், போலிமார்க் என்ற படைத் தலைவர் இரண்டாவது இடத்தையும் பெற்றனர். எனினும் மேற்கூறிய மூவருமே 'ஆர்கன்' என்ற பொதுப் பெயரால் அழைக்கப்பட்டனர். நாட்கள் செல்லச் செல்ல 'ஆர்க்கன் பெசிலஸ் (Basileus) என்ற மன்னன் பத்தாண்டுகளுக்கு மட்டுமே நாட்டை ஆளலாம்' என்று பிரபுக்கள் வரையறுத்தனர். ஆனால் ஆர்க்கன், இப்பானிமஸ் என்ற அதிகாரிகள் ஆயுள்பரியந்தம் தமது பதவியையே வகித்து வந்தனர். கி. மு. 753-இல் பிரபுக் குடும்பத்தில் பிறந்த எவரும் மன்னர் பதவியை வகிக்கலாம் என்பது தீர்மானிக்கப்பட்டது. கி. பி. 683-இல் முடியாட்சியின் பெருமையைக் குலைக்கும் கடைசி நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆர்க்கன் பதவியை வகிப்போர் ஆண்டுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற நியதியைப் பிரபுக்கள் கொண்டுவந்தனர். இங்ஙனம் படிப்படியாகக் கோளாட்சியானது பிரபுக்களாட்சியாய் மாறலாயிற்று. மன்னனுக்குப் பதிலாகப் பிரபுக்கள் வம்சத்தைச் சேர்ந்த மூவர் (Archon Eponymus, Archon Basilens and Archon Polemarch) நாட்டை ஆள ஆரம்பித்தனர். நாளடைவில் வளர்ந்துவரும் அரசாங்க அலுவல்களை மேற்கொள்ள இன்னும் ஆறு புதிய ஆர்க்கன்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் தெஸ்மாதெடி (Thesmothetae) என்று அழைக்கப்பட்டனர். இந்த ஒன்பது ஆர்க்கன்களும்

யூபாட்ரிடீ (Eupatridae) என்ற பிரபு வர்க்கத்திடமிருந்தே ஆண்டுக்கொருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பிரபுக்கள் ஆட்சியின் சிறப்பியல்புகள்

இங்ஙனம் கோளாட்சியாய் இருந்து பிரபுக்களின் ஆட்சியாக மாறிய ஆதென்ஸின் அரசியல் அமைப்பில் ஆர்க்கன்கள் எனப் படும் நிர்வாக அதிகாரிகளே பெரிதும் செல்வாக்குடன் விளங் கினர். இப்பானிமஸ் என்ற அதிகாரி ஆரம்பத்தில் சிவில் அதி காரங்கள் அனைத்தையும் தாமே தனிப்பட்ட முறையில் செலுத்தி வந்தார். ஆனால், நாளாவட்டத்தில் அவரது நீதித்துறை யதிகாரங்கள் பெரிதும் குறைக்கப்பட்டன. குடும்பச் சொத்து களைப் பற்றிய வழக்குகள், வாரிசுரிமையைப் பற்றிய வழக்குகள், தத்தெடுத்தல் பற்றி எழுகின்ற விவகாரங்கள், பொதுத் திரு விழாக்கள் பற்றி எழுகின்ற சர்ச்சைகள், கிரிமினல் வழக்குகள் முதலியவைகளில் மட்டுமே தீர்ப்பு வழங்க அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டது. எனினும், அவர் நாட்டில் பெருமையோடு வாழ்ந்தார். அவருக்கு என்று தனிப்பட்ட மாளிகை ஒதுக்கப் பட்டிருந்தது. அரசாங்க அலுவலர்களின் பட்டியலில் அவரது பெயர்தான் முதலில் காணப்பட்டது. அவருக்கு அடுத்தபடியாக நாட்டில் செல்வாக்குடன் வாழ்ந்தவர் ஆர்க்கன் பெசிலஸ் என் பவர். அவர் பழைய மன்னர் வாழ்ந்த அரண்மனையிலேயே தொடர்ந்து வாழ்ந்துகொண்டிருந்தார். நாட்டின் சமயத் துறையில் ஏற்பட்ட வழக்குகளை விசாரிப்பதும், அச் சமயத்தை நாட்டில் நன்கு நிலைநாட்டுவதற்கான வினைகளை மேற்கொள் வதுமாகிய இவைகளே அவரது கடமைகளாகும். அவருக்கு அடுத்தபடியாகச் சிறப்புடன் வாழ்ந்தவர் ஆர்க்கன் போலிமார்க் என்பவர். இராணுவம் பற்றிய எல்லாப் பொறுப்புகளையும் அவரே மேற்கொண்டார். படைவீரர்களின் பயிற்சிகளை அவரே கண்காணித்தார். இராணுவத் துறையில் எழுந்த பல வழக்குகள், குடியுரிமை, வெளிநாட்டு மக்களின் குற்றங்கள் ஆகியவைகளையும் அவரே விசாரணை செய்து தீர்ப்பு வழங் கினர். மேற்கூறிய ஆர்க்கன்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை அரியோபகஸ் (Areopagus) என்ற முதுமக்கள் மன்றத்தின்கண் இருந்தது. யூபாட்ரிடீ என்ற உயர்குடியைச் சேர்ந்த வர்கள் மட்டுமே அதில் உறுப்பினராயிருக்கத் தகுதி பெற்ற வர்கள். கொலைகள் சம்பந்தமான வழக்குகளையும், அடிதடி பற்றிய வழக்குகளையும் விசாரிக்கின்ற தனியுரிமை இம் மன்றத்திற்குண்டு. யார் யார் ஆர்க்கன்களாகத் தேர்ந்தெடுக்கப் படவேண்டும் என்பது பற்றி நீண்ட பட்டியலொன்றை

ஆதென்ஸின் பொதுமக்கள் மன்றமான எக்லீஷியா (Ecclesia), இம் மன்றத்தின் முன் வைக்கும். அதில் இருந்து மூன்று நபர்கள் இறுதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். பிரபுக்களாட்சி ஆதென்ஸில் ஓங்கியிருந்த காலத்தில் நாட்டை உண்மையிலேயே ஆண்டுவந்த மன்றம் இதுவேயாகும். மேலும் நிர்வாக அதிகாரிகளை நேரடியாகக் கண்காணிக்கவும், குற்றம் செய்தவிடத்து அவர்களைத் திருத்தவும், திருந்தாதவர்களை அவர்களது குற்றத்திற்கேற்றபடி தண்டிக்கவும் இதற்கு உரிமை இருந்தது.

பிரபுக்களல்லாத ஏனைய மூன்று வகுப்பினர்களின் பிரதிநிதிகளடங்கிய எக்லீஷியா எனும் பொதுமக்கள்சபையானது, முதுமக்கள் சபைக்கு அடுத்தபடியாகச் சிறப்புடன் விளங்கியது. இதில் தீடிஸ் (Thetes) என்ற வகுப்பினர் இடம் பெறவில்லை. ஆர்க்கன்களின் பெயர்களைச் சிபாரிசு செய்யும் உரிமையோடு கூட, போர் அறிவிப்பு, சமாதான உடன்படிக்கை செய்தல் முதலியவற்றின் இறுதியான அதிகாரங்களை இது பெற்றிருந்தது.

இம் மன்றத்தின் உறுப்பினர் அனைவரும் நாட்டுப்படையின் உறுப்பினராய் இருந்த காரணத்தினாலேயே போர் பற்றிய தீர்மானங்களை உருவாக்கும் தனிப் பொறுப்பு இம் மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மற்றபடி எந்தக் கொள்கையையும் முன்மொழியவோ, வாதிக்கவோ இதற்கு அதிகாரம் கிடையாது. ஆர்க்கன்கள் கொண்டுவருகின்ற தீர்மானங்களுக்கு ஆதரவையோ, எதிர்ப்பையோ தெரிவிக்க மட்டுமே இதற்கு உரிமையுண்டு. எனவே உண்மையில் அரியோபகஸ் என்ற அவைதான் ஆதென்ஸில் தலைசிறந்த மன்றமாய் விளங்கி வந்ததெனலாம்.

வாணிகச் செல்வந்தராட்சி

கி. மு. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஆதென்ஸ் நகரமானது வாணிகத் துறையில் ஈடுபட்டுப் பல குடியேற்ற நாடுகளையும் ஆங்காங்கே தோற்றுவித்தது. அதன் விளைவாக நாட்டில் பல புதிய செல்வந்தர்கள் தோன்றினர். பிறப்பின் காரணமாகச் செல்வாக்குடன் விளங்கிய பழைய பிரபுக்களின் ஆதிக்கம் நாளுக்கு நாள் குறைய ஆரம்பித்தது. செல்வத்தின் அடிப்படையில் தோன்றிய பிரபுக்களின் செல்வாக்கு நாளுக்கு நாள் வளரலாயிற்று. அரசியல் அதிகாரம் இப் புதிய பணக்கார வம்சத்தின் கைகளுக்கு மாறியது. அட்டிகாவின் சமுதாயத்தில்

புதிய ஒரு சில வகுப்புகள் தோன்றின. ஒருவர் வைத்திருக்கும் நிலபுலன்களின் அளவைப் பொறுத்தே அவர்களின் சிறப்பும், மதிப்பும் கணிக்கப்பட்டன. தங்களுடைய நிலங்களில் இருந்து ஆண்டொன்றுக்கு 500 கிரேக்கப்படிகளுக்கு மேற்பட்ட தானியங்களையும், ஒலிவ எண்ணெயையும், சாராயத்தையும் பெற்ற செல்வந்தர்கள் மட்டுமே நாட்டில் முதல்வகைப் பிரபுக்களாகக் கருதப்பட்டனர். அவர்களின் பெயர் பென்டகோஷியோ மெடிம்னி (Pentacosio Medimni) என்பதாகும். 300-க்கும் 500-க்கும் உட்பட்ட படியளவு விளைச்சலை உடையவர்கள் இரண்டாவது வகைப் பிரபுக்களாக எண்ணப்பட்டனர். அவர்களின் பெயர் ஹிப்பெசுகள் (Hippeis) என்பதாகும். அவர்கள் ஒவ்வொருவரும், ஒரு குதிரையை வைத்துப் பராமரிக்கும் திறமையைப் பெற்றவர்கள். போர்க்காலத்தே அவர்கள் குதிரை வீரர்களாகப் பணியாற்றினர். 300-க்கும் 200-க்கும் உட்பட்ட படியளவு விளைச்சலைப் பெற்றவர்கள் மூன்றாம்வகைப் பிரபுக்களாவர். ஜயூஜிதி (Zeugitae) என்பது அவர்தம் பெயராகும். அவர்கள் ஒரு ஜதை எருதுகளை வைத்துப் பராமரிக்கும் தகுதிபெற்றவர்கள். நிலங்களை உழுது பயிர் செய்து வாழ்ந்தவர்கள் அவர்களே; 200 படிகளுக்கும் குறைவான வருமானமுடையவர்கள்; தீடிஸ் எனும் கடைப்பட்ட நான்காம் வகுப்பைச் சேர்ந்தவர்கள். மிகவும் ஏழைக் குடியானவர்களும், நிலமற்ற தொழிலாளிகளும், சிறு வியாபாரிகளும் இவ்வகுப்பின் உறுப்பினராவர். அவர்களுக்கு அரசியல் உரிமை எதுவும் கிடையாது. ஆனால் கடற்படையில் சேர்ந்து பணியாற்றும் உரிமையுண்டு. இத்தகைய சமுதாய அமைப்பில் செல்வம் ஒன்றே சிறப்பின் அடிப்படையாய்த் திகழ்ந்தது. மிகச் சாதாரண மனிதன்கூட வாணிகத்தின் மூலம் அளவுகடந்த செல்வத்தைப் பெற்றுவிடுவானேயானால், அவன் அக்கணமே ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவனாகிவிடுவான். எனவேதான் இது வாணிகச் செல்வந்தரின் ஆட்சி எனப் பேசப்படுகின்றது.

இவ்வாணிகச் செல்வந்தரின் ஆட்சிக்காலத்தே இயல்பாகவே கடல் வாணிகமும், அதற்குப் பாதுகாப்பாய் அமைந்த கடற்படையும் பெருகின. இத்தகையதோர் கடற்படையை உருவாக்குவதற்காகப் புதிய முறையொன்றை அத்தீனியர் கையாண்டனர். ஆதென்ஸ் நகர அரசைச் சேர்ந்த அட்டிகா என்ற நிலப்பகுதியை 12 மாநிலங்களாக அவர்கள் பிரித்தனர். ஒவ்வொரு மாநிலமும் ஒவ்வொரு கப்பலைக் கட்டித்தர வேண்டும். மாநிலங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு புதிய பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து, நாக்ரரிசிஸ் (Naucrarisis) என்ற புதிய மாநில அவைக்கு அனுப்பிவைத்தன. இம் மாநில அவையே ஒவ்வொரு

மாநிலத்தினின்றும் ஒவ்வொரு கப்பலை வசூலித்துத் தந்தது. இந்த முறையின் மூலமாக 48 கப்பல்களடங்கிய கப்பற்படை ஒன்றை ஆதென்ஸ் நகர அரசு விரைவிலேயே பெற்றது.

செல்வந்தராட்சியின் வீழ்ச்சி

ஆதென்ஸை ஆண்ட செல்வர்கள் நாளடைவில் சுயநலமும் சூதும் மிக்கவர்களாக மாறினர். மக்களைப் பல வகையிலும் சுரண்ட ஆரம்பித்தனர். மற்றும் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட பற்பல மாற்றங்கள் செல்வந்தராட்சியின் சீரழிவிற்குக் காரணமாயின. பண்டமாற்று முறையானது மாறி நாணயப் பழக்கம் நாட்டில் ஏற்பட்டதனால் பல வணிகர்கள் ஏராளமான செல்வத்தைச் சேர்த்துவைத்துக்கொள்ளத் தலைப்பட்டனர். இதனால் ஒரு சிலர் மிகச்செல்வந்தர்களாகவும், மிகப்பலர் வறியர் களாகவும் மாறினர். வறுமையால் வாடிய மக்கள் செல்வந்த ரிடம் ஓயாது கடன்வாங்கத் தலைப்பட்டனர். ஆனால் வாங்கிய கடன்களை அவர்களால் திருப்பிக் கட்ட இயலவில்லை. எனவே பல ஏழைகள் தங்கள் முதலாளிகளுக்கு அடிமைகளாயினர். இந்த அடிமைகளை வணிகர்கள் வேறு நாடுகளுக்கு விற்கவும் ஆரம்பித்தனர். பல நிலங்கள் முதலாளிகட்கு அடைமானமாக வைக்கப்பட்டிருந்தன. அங்ஙனம் வைக்கப்பட்டிருந்த நிலங்கள் நாளடைவில் கடன் கொடுத்த பிரபுக்களுக்கே சொந்தமாயின. சொந்தமாக நிலம் வைத்திருப்போரின் தொகை நாளுக்குநாள் குறைந்துகொண்டே போயிற்று. பெரும் பண்ணைகளின் சொந்தக்காரர்கள், விரல்விட்டு எண்ணத்தக்கவாறு ஒரு சிலரே இருந்தனர். ஏழை விவசாயிகளின் நிலை நாளுக்கு நாள் நலி வடைந்து கொண்டே வந்தது. நாணய நடமாட்டத்தின் காரணமாக வெளிநாட்டு உணவுப் பொருட்கள் கிரீஸிற்குள் புகுந்து தானியங்களின் விலையைப் பெரிதும் குறைத்துவிட்டன. ஆனால் செய் பொருட்களின் விலையோ முன் நிலையைவிடப் பன் மடங்கு உயர்ந்தது. தாங்கள் உற்பத்தி செய்த தானியத்தை விற்றுப் பெற்ற சிறிய தொகையைக் கொண்டு அவர்கள் தமக்குத் தேவையான பண்டங்களைக்கூட வாங்க முடியாமற்போயினர். அதோடு அடிக்கடி பஞ்சங்கள் தோன்றிக் குடியானவர்களை மேலும் அலைக்கழித்தன. இவ்வாருகப் பல வகையிலும் அவதிக் குள்ளான நாட்டுப்புற மக்கள் தங்கள் அல்லல்களைத் தீர்த்துக் கொள்வதற்காகவும், இழந்த நிலங்களை மீண்டும் பெறுவதற்காக வும் ஏதாவதொரு புரட்சி வந்தால் நலம் என்று விரும்பலாயினர். அதே போல் பட்டணங்களிலும் நடுத்தர மக்கள் பலர் ஏழைத் தொழிலாளர்களைப் பல வழிகளிலும் துன்புறுத்தினர். தொழி

லாளர்களுக்குப் பதிலாக அடிமைகளை அவர்கள் நியமித்துக் கொள்ள ஆரம்பித்தனர். கையினால் செய்யப்படும் வேலை ஒவ்வொன்றிற்கும் அடிமைகளைப் பயன்படுத்துவது வழக்கமாயிற்று. மேலும், புதிய வணிகப் பெருமக்களுக்கும், நிலப் பிரபுக்களுக்கும் போட்டி ஏற்பட்டது. அதன் விளைவாக நிலப்பிரபுக்கள் தங்கள் நிலங்களில் விளைந்த உணவுத் தானியங்களை வெளிநாடுகளில் விற்றுப் பணம் சேர்க்கலாயினர். இதனால் உணவுப் பற்றாக் குறை மேலும் அதிகமாயிற்று. எவ்வாறேனும் பொருள் சேர்க்க வேண்டும் என்னும் முயற்சியில் ஏவ்வொருவரும் ஈடுபட்டார்களே தவிர நாட்டின் நலனைப் பற்றி எவரும் கவலைப்படவில்லை. மேலும் நாட்டில் மக்கள் தொகை நாளுக்குநாள் பெருகிக் கொண்டே வந்தது. அத்தீனியர்கள் அக்காலத்தே குடியேற்ற நாடுகளை ஏற்படுத்தவில்லை. நாட்டின் சட்டங்கள் சரிவரத் தொகுக்கப்படாத காரணத்தால், செல்வந்தர்கள் தம் பிரியப்படி யெல்லாம் பொதுமக்களை ஆட்டிப் படைத்தனர். இத்தகைய பல காரணங்களால் செல்வந்தர்களாட்சிக்கு விரோதமாகச் சதிகள் பல உருவாயின. அண்டை நாடான மிகாராவை ஆண்ட தியாகினிஸ் (Theagenes) என்னும் கொடுங்கோல் அரசனது மருமானுகிய கைலான் எனும் அத்தீனியக் குடிமகன், தனது மாமனாரின் உதவி பெற்று, செல்வந்தர் ஆட்சியைக் கவிழ்ப் பதற்குச் சூழ்ச்சி செய்தான். அதிருப்தியுற்ற மக்களைத் தன் பக்கம் சேர்த்துக்கொண்டு அவன் ஆதென்ஸ் கோட்டையை முற்றுகையிட்டுக் கைப்பற்றிக்கொண்டான். ஆனால் அவனது முயற்சி முடிவில் தோற்றது. கைலானும், அவனது ஆதர வாளர்களும் நாடுகடத்தப்பட்டனர். இதனால் வெகுண்ட தியாகினிஸ் தனது கப்பற்படையை அனுப்பி அத்தீனியக் கடற் கரையை முற்றுகையிட்டான். அத்தீனியர்கள் ஒலிவ எண் ணெயை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியாதவாறு மிகாராவின் கப்பற்படை தடுத்தது. அதனால் அத்தீனியக் கிராமங்கள் பல பெரிதும் பாதிக்கப்பட்டன. இத்தகைய பொருளாதாரச் சீர்கேட்டைச் செம்மைப்படுத்த விரும்பிய செல்வந்தர்கள் ஒரு சில சீர்திருத்தங்களை மேற்கொள்ள முன் வந்தனர். அல்லலுற்ற பொதுமக்கள் மூன்று வகையான சீர் திருத்தங்களை ஏற்படுத்துமாறு அரசாங்கத்தைக் கோரினர். 'நாட்டின் சட்டங்கள் தொகுக்கப்பட வேண்டும். நாட்டிலுள்ள நிலங்கள் ஏழை எளியவர்களுக்குப் பங்கிடப்பட வேண்டும். கடன்பட்டாரை அடிமையாக்கும் சட்டம் திருத்தப்படவேண்டும்' என்றெல்லாம் அவர்கள் கிளர்ச்சி செய்யலாயினர். எனவே செல்வந்தர்கள் ஒருபடி கீழே இறங்கிவந்து, 'ட்ரேக்கன்' (Dracon) என்பவரை நியமித்துச் சட்டங்களைத் தொகுத்து வெளியிடுமாறு

பணித்தனர். சட்டங்களை ஆக்குவதற்குப் பூரண அதிகாரங்களைப் பெற்ற தெஸ்மாதெடிஸ் (Thesmothetes) என்னும் அதிகாரியாக அவர் நியமிக்கப்பட்டார். ட்ரேக்கன் புதிய சட்டங்களை ஆக்குவதற்குப் பதிலாக ஏற்கெனவே இருந்த பழைய சட்டங்களையே மீண்டும் திட்டவட்டமான முறையில் தொகுத்தார். 'புதிதாகச் செல்வம் எய்திய வணிகர்களும் ஆர்க்கன் பதவியைப் பெறலாம்' என அவரது சட்டம் அனுமதித்தது. வேண்டுமென்றே செய்த கொலைக்கும், தற்செயலாகச் செய்துவிட்ட கொலைக்குமுள்ள வேறுபாட்டை அவர் நன்கு வேறுபடுத்திக் காட்டியது. பகைவர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொல்லுகின்ற முறையை அவரது சட்டம் தடுத்தது. கொலை பற்றிய எல்லா வழக்குகளையும் 'அரியோபகஸ் எனும் முதியோர்மன்றமே விசாரணை செய்ய வேண்டும்' என அது திட்டம் செய்தது. அரியோபகஸ்மன்றத்தில் வராத கொலைக்குற்றங்களை விசாரிக்க 51 நீதிபதி பிரபுக்களைக் கொண்ட எபிட்டீ (Ephitae) என்ற ஒரு நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டது. சாதாரணக் கோசுக்கீரையைத் திருடியவனுக்குக்கூட மரணதண்டனை அளிக்கப்பட்டது. அதனால்தான் அவருக்குப் பின் வந்த ஒருபேச்சாளர் 'ட்ரேக்கன், சட்டங்களையும் பேனுமையினால் எழுதாமல் இரத்தத்தினால் எழுதினர்' என்று கூறினர். இவரது சட்டங்களால் ஏழைஎளியவர்கட்கு எவ்வித நன்மையும் ஏற்படவில்லை. கடன்பட்டாரது அவல நிலையைத் தீர்க்க அது முன்வரவில்லை. அடிமைகளின் நிலையை உயர்த்தவும் அது எண்ணவில்லை. பொருளுடையோர் பொருளில்லாதவரைச் சுரண்டுகின்ற நிலைமை தொடர்ந்து நீடித்தது. நிலம் படைத்தோரும், செல்வந்தர்களும் இன்னும் நல்ல பாதுகாப்புகளை இச் சட்டங்களால் பெற்றனர். நாளுக்கு நாள் ஏழை பணக்காரர்களிடையேயிருந்த இடைவெளியானது பெருகிக்கொண்டே போயிற்று. இவ்விரு வகுப்பாரிடையே ஒரு பெருங் கலவரம் தோன்றும் போல் இருந்தது. அத்தகைய நிலை ஏற்படுவதற்கு முன்பே அரசாங்கம், சோலன் என்ற சட்ட நிபுணர் ஒருவரை ஆட்சியாளராக நியமித்தது

(4) சோலனின் சீர்திருத்தங்கள்

சோலன் என்னும் அறிஞர் அரச பரம்பரையைச் சார்ந்த ஒரு பெருந்தகையாளர்; மெடான்டிட் எனும் வகுப்பைச் சார்ந்த எக்ஸிஸெஸ்டஸ் என்னும் பிரபுவின் புதல்வர். தம்முடைய தந்தை, செல்வத்தை எல்லாம் வீணே செலவழித்துவிட்ட காரணத்தால் சோலன் தன்கையே தனக்குதவி என்ற கொள்கையைக் கடைப்பிடித்துத் திரைகடலோடிப் பல நாடு

களுக்கும் சென்று திரவியம் மிகுதியாகத் திரட்டினர். அங்ஙனம் பல நாடுகளில் சுற்றிய போது ஆங்கே நிலவியிருந்த பல் வேறு பழக்க வழக்கங்களை அறிந்துகொண்டார். பரந்த நோக்கமும், விரிந்த மனப்பான்மையும் அவரிடத்தே தோன்ற லாயின. முக்கியமாக அயோனியா என்ற நாட்டில் இருந்து பல நல்ல கருத்துகளை அவர்தெரிந்துகொண்டார். அதன்பின்னர் தம் தாய்நாடு திரும்பி அரசியல் சம்பந்தமான பல பாடல்களை எழுதித் துண்டுப் பிரசுரங்களாக அவற்றை வெளியிட்டார். அதன் மூலம் அவர் புகழ் நாடெங்கும் பரவியது. கிரேக்கர்கள் முதுபெரும் அறிஞர்களாகக் கருதிய எழுவரில் ஒருவராகச் சோலன் மதிக்கப்பட்டார். எனவேதான் அவர் ஆதென்ஸில் உலவிவந்த பற்பல பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கவும், ஏழை பணக்காரர்களிடையே சுமுகமான உறவை ஏற்படுத்தவும் அத்தீனிய அரசாங்கத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டார். முழு மனத்துடன் இப் பணியை ஏற்றுக்கொண்ட சோலன் ஆதென்ஸின் அரசியல் பொருளாதாரத் துறைகளில் வியக்கத் தக்க பல சீர்திருத்தங்களை ஏற்படுத்தினர். அமைதியான முறையில் அவர் தோற்றுவித்த புரட்சியானது ஆதென்ஸின் வரலாற்றிலேயே பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படத் தக்கவை என்பதில் ஐயமில்லை.

பொருளாதாரச் சீர்திருத்தங்கள்

முதன்முதலில் சோலன் பல கடுமையான பொருளாதாரச் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். அவைகளை உட்கொண்ட சிஸேக்தியா (Seisachthiea) என்ற புகழ்பெற்ற ஓர் அறிவிப்பை அவர் வெளியிட்டார். சிஸேக்தியா என்னும் சொல்லுக்குச் சுமைகளின் நீக்கம் என்பது பொருள். உண்மையில் இவ்வறி விப்பினால் சோலன் நாட்டு மக்களின் கடன் சுமையை நீக்கினர். கடனுக்காக அடிமைப்பட்டவர்கள், சிறைப்பட்டவர்கள் யாவரும் விடுதலை பெற்றனர். கடனுக்காக வெளிநாடுகளில் விற்கப்பட்ட வர்கள்கூட விடுதலை பெற்று நாடு திரும்பினர். அடைமானத் திற்கு வைத்த நிலங்கள் யாவற்றையும் கடனாளிகள் மீண்டும் பெற்றனர். இத்தகைய சீர்திருத்தத்தைக் கொண்டுவரப் போகிறார் என்று முன்கூட்டியே ஊகித்துக்கொண்ட ஒரு சிலர் தங்களது நிலங்களை அடைமானங்களாக வைத்து நிறையக் கடன்கள் வாங்கியதாகவும், சட்டம் ஏற்பட்டதும் கடன்களைத் கொடுக்காமல் நிலங்களைத் தாங்களே திருப்பிக் கொண்டதாகவும் அரிஸ்டாட்டில் என்னும் அறிஞர் கூறுகின்றார். இச் சீர்திருத் தத்தால் பாதிக்கப்பட்ட செல்வந்தர்கள் பலர், சோலன் மீது

சீறி விழுந்தனர். ஆனால், மொத்தத்தில் அவை நன்மை பயப்பனவாய் இருப்பதைக் கண்டு அமைதியுற்றனர்.

அடுத்தபடியாகத் தனிப்பட்ட ஒவ்வொரு நிலக்கிழாரும் வைத்திருக்கக் கூடிய நிலங்கட்கு உச்சவரம்பு விதிக்கப்பட்டது. இதன் பயனாகப் பெரும் பெரும் பண்ணைகள் ஒரு சிலரிடம் மட்டுமே குவியாமல் இருப்பதற்கு வகை ஏற்பட்டது. இதன் மூலமாகக் கிடைத்த உபரிநிலங்கள், நிலமற்ற தீடிஸ் என்ற ஏழைகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டது.

மூன்றுவதாக நாட்டில் பஞ்சம் ஏற்படுவதைத் தடுப்பதற்காகவும், மக்களின் சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் நிலப்பிரபுக்கள் தானியங்களை வெளிநாடுகட்கு ஏற்றுமதி செய்யும் வழக்கத்தையும் அவர் நிறுத்தினர். ஒலிவ எண்ணெயைத் தவிர நிலங்களில் விளைந்த எல்லாப் பொருட்களுக்கும் இத் தடை விதிக்கப்பட்டது. இதனால், செல்வந்தர்கள் பலர் தானியங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பணம் திரட்டும் முறை நின்றது. மக்களுக்குத் தேவையான உணவுப் பண்டங்கள் கிடைத்தன. தானியங்களின் விலையும் மலிவாயிற்று. ஏழைகள் அதனால் பெரிதும் நன்மை அடைந்தனர். மற்றும் அவர் நாட்டில் ஒரு புதிய நாணய முறையைப் புகுத்தினர். யூபியா (Euboea) என்னும் நாட்டில் நிலவிவந்த நாணயங்களின் மதிப்பும், ஆதென்ஸின் நாணய மதிப்பும் சமமாக்கப்பட்டன. இதனால் யூபியா நாட்டோடும், அதன் குடியேற்ற நாடுகளோடும் ஆதென்ஸின் வாணிகம் வளர ஏதுவாயிற்று. இதையொட்டி யூபியா நாட்டின் எடைகளும், ஏனைய அளவைகளும் ஆதென்ஸில் புகுத்தப்பட்டன. நாணயங்களை அவர் வெளியிடுவதில் எளிமையைக் கையாண்டார். இவ் வகையில் அவர் கால்கிஸ் (Chalcis) நாட்டு முறையைப் பின்பற்றினர் என்பர். இதனால் மக்கள் நாணயப் புழக்கத்தின் நன்மையை நன்கு புரிந்து செயல்பட முடிந்தது. தொழில்வளம் பெருகியது. அதனால் மக்கள் வாழ்க்கை வளம் அதிகரித்தது. ஒருசில தொழில்களை ஊக்குவிக்க, அத் தொழிலில் வல்ல வெளிநாட்டவர்களையே அவர் வரவழைத்து, அவர்களுக்குக் குடியுரிமையும் வழங்கினர். எல்லாக் குடியேறிகளுக்கும் இவ்வித உரிமை வழங்கப்படவில்லை. நிரந்தரமாக ஆதென்ஸில் குடியேறிய ஒருசில வெளிநாட்டுக் கைவினைஞர்களுக்கு மட்டுமே இவ்வுரிமை வழங்கப்பட்டது. இதன் விளைவாகப் பல வெளிநாட்டு நிபுணர்கள் ஆதென்ஸில் குடியேறினர். சான்றாக கி. மு. 6-ஆம் நூற்றாண்டில் கொரிந்திய நாட்டுக் குயவர்கள் பலர் ஆதென்ஸில் வந்து குடியேறினர்.

கொஞ்ச காலத்திற்குள் பானேவனேயும் தொழிலில் ஆதென்ஸ் தனி உரிமையை அடைந்தது.

அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள்

சோலனின் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் இரண்டு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு விளங்கின. செல்வாக்குமிக்க பிரபுக்களின் அதிகாரங்களை எவ்வளவிற்குக் குறைக்க முடியுமோ அவ்வளவிற்குக் குறைக்க வேண்டுமென்பதும், சாதாரணப் பொதுமக்களுடைய அதிகார வரம்புகளை எவ்வளவிற்குப் பெருக்க முடியுமோ அவ்வளவிற்குப் பெருக்க வேண்டும் என்பதுமே அவரது குறிக்கோள்கள் ஆகும். எனவே தான் அவரைக் கிரேக்க ஜனநாயகத்தின் தந்தை என்று பியூரி போன்ற ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த நோக்கத்தின் அடிப்படையில் அவர் முதன் முதலில் அரியோபகஸ் என்ற பிரபுக்கள்சபையின் அதிகாரங்களைக் குறைத்தார். சட்டம் செய்கின்ற அதிகாரமும், நிர்வாக சம்பந்தமான அதிகாரமும், தீர்மானங்களைப் பரிசீலனை செய்கின்ற அதிகாரமும் அம் மன்றத்திடம் இருந்து பறிக்கப்பட்டன. சமயத்துறை, நீதித்துறை ஆகிய இரு துறைகளில் மட்டுமே அது தன் பழைய அதிகாரங்களைச் செலுத்த அதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. எனினும் நாட்டின் அரசியலமைப்பும், சட்டங்களும் சரியான முறையில் செயல்படுகின்றனவா என்று கண்காணிக்கின்ற அதிகாரத்தைச் சோலன் இம் மன்றத்திற்கு வழங்கியிருந்தார். தமது சீர்திருத்தங்களின் மூலம் புதிய அதிகாரங்கள் பெற்ற பொதுமக்கள் அவற்றை எல்லைமீறிப் பயன்படுத்திவிடாமலிருக்கும் பொருட்டே அவர் இம் மன்றத்திற்கு அத்தகைய கண்காணிப்பு அதிகாரத்தை வழங்கினர் என்று தெரிய வருகிறது.

அரியோபகஸ் மன்றத்திடமிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்கள், நானூறு உறுப்பினர்களைக் கொண்ட புதியமன்றம் ஒன்றுக்கு அளிக்கப்பட்டன. அம் மன்றத்தின் உறுப்பினர்கள், குலத்துக்கு நூற்றுவராக நான்கு அயோனியக் குலங்களினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சட்டங்களை ஆய்தல், நிறைவேற்றுதல், நடைமுறையில் கொண்டு செலுத்தல் ஆகிய முப்பணிகளை இம் மன்றம் செய்து வந்தது. எக்லீஷியா மன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்களைப் பரிசீலனை செய்து, தள்ளத்தக்கதைத் தள்ளி, கொள்ளத்தக்கதைக் கொள்ளும் பணியையும் இம் மன்றம் செய்து வந்தது.

நான்காவது வகுப்பினராகிய தீடிஸ்கள் இதில்இடம் பெற வில்லை. முதல் மூன்று வகுப்பினரைச் சேர்ந்தவர்கள் மட்டுமே சீட்டுக் குலுக்கல் முறையில் இதன் உறுப்பினர்களாகத் தேர்ந் தெடுக்கப்கட்டனர். பழைய அரசியல் அமைப்பில் சட்டங்களைச் செய்கின்ற உரிமை முதல் வகுப்பைச் சார்ந்த பிரபுக்கள் மட்டும் அடங்கிய அரியோபகஸ் மன்றத்தினிடம் இருந்தது. அவ் வதிகாரத்தை ஏனைய இரு வகுப்பினரும் அனுபவிக்குமாறு செய்த பெருமை சோலனுக்கே உரியதாகும். இதே போன்று நிர்வாகத் துறையிலும் அவர் அந்த மூன்று வகுப்பினர்களுக்கும் இடமளித்தார். ஆர்க்கன்கள் பதவியைத் தவிர ஏனைய எல்லா நிர்வாகப் பதவிகளுக்கும் ஹிப்பஸ் (Hippeis), ஜயூஜிதி (Zeugitae) ஆகிய இரு வகுப்பைச் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட, சோலன் வழிவகை செய்தார். கடைநிலையிலிருந்த தீடிஸ் என்னும் வகுப்பினரும் ஓரளவு அரசியல் உரிமையைப் பெற் றுர்கள். 'எக்லீஷியா' என்ற பொதுமக்கள்மன்றத்தில் அவர்கள் முதன் முதலாக இடம் பெற்றுர்கள். எனவே, நிர்வாக அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும் பணிகளில் அவர்களும் பங்கு பெற முடிந்தது. மற்றும் ஹெலியா (Heliaea) என்ற பொது மக்கள் நீதிமன்றத்தை முதன் முதலில் உருவாக்கிய பெருமை சோலனையே சாரும். இம் மன்றத்தில் தீடிஸ்கள் உட்பட 30 வயதுக்கு மேற்பட்ட எல்லாக் குடிமக்களும் இடம் பெற்றனர். இதற்குரிய தேர்தல், சீட்டுக்குலுக்கல் ஆகியவை ஆண்டுக்கொரு முறை நடைபெற்றமையால் சாதாரண ஏழை மக்களுங்கூட மன்றத்தில் உறுப்பினராகக் கூடிய பெருவாய்ப்புப் கிட்டியது. இதில் குடியுரிமை பெற்ற 6000 பேர்கள் உறுப்பினராயிருந் தனர்.

மாஜிஸ்ட்ரேட்டுகள் என்னும் நிர்வாக அதிகாரிகள், தங்கள் பதவிகளிலிருந்து ஓய்வு பெற்ற பின், அவர்கள் மீது குற்றம் சாட்டி விசாரணை செய்து தண்டனை வழங்கும் உரிமையை இந் நீதி மன்றம் பெற்றிருந்தது. எனவே அரசியலுலகில் கேட் பாரற்றுக் கிடந்த 'தீடிஸ்' போன்ற சாதாரண மக்கள் எக்லீஷியா மன்றத்தின் மூலம் நிர்வாக அதிகாரிகளைத் தேர்ந் தெடுக்கவும், ஹெலியா மன்றத்தின் மூலம் அத்தகைய அதிகாரி களைக் கண்காணித்து விசாரிக்கவும் இந்த அரசியலமைப்பில் உரிமை பெற்றுர்கள். எனவே, 'நாட்டின் இறைமை, கொள்கை அளவில் பொதுமக்களிடமே கொடுக்கப்பட்டது' எனப் பியூரி என்னும் ஆசிரியர் கூறுகின்றுர். இப் பொதுமக்கள் நீதிமன்ற மானது மூல வழக்குகளையே அன்றி, (Cases of Original Jurisdiction) மேல் முறையீட்டு வழக்குகளையும் (Cases of Appellate

Jurisdiction) விசாரிக்கும் உரிமை பெற்றிருந்தது. மேலும் தீடிஸ் குடிமக்கள் இராணுவத்திலும் இடம் பெறுவதற்குச் சோலன் வழிவகை செய்தார். சமுதாயத்தில் முதல் மூன்று வகுப்பினரும் குதிரை வீரர்களாகவும், ஈட்டி ஏந்திய காலாட் படை வீரர்களாகவும், சாதாரணப் படைவீரர்களாகவும் பணி புரியவும் நான்காம் வகுப்பினர் கப்பல் படையில் பணிபுரியவும் அனுமதிக்கப்பட்டனர். இங்ஙனம் பற்பல வகைகளிலும் பொது மக்களுக்கு அரசியலில் பங்கு தந்து, பிற்காலத்தில் ஜனநாயக இயக்கத்திற்குச் சோலன் வித்திட்டுச் சென்றார்.

சமுதாயச் சீர்திருத்தங்கள்

மகப்பேறில்லாத செல்வந்தர்கள், தாங்கள் அரிதின் முயன்று தேடி வைத்த செல்வத்தைத் தங்கட்குப் பிரியமான ஒருவருக்குக் கொடுத்து விட்டுச் செல்லும் உரிமையைச் சோலனின் அரசியல் அமைப்பு அளித்தது. மற்றும் மக்களின் ஒழுக்கத்தை நெறிப்படுத்தும் வகையில் பல சட்டங்கள் ஆக்கப் பட்டன. சான்றாக உழைப்பின் உயர்வை உறுதிப்படுத்த அவர் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார். ஒவ்வொருவரும் கண்டிப் பாக ஏதாவது ஒரு தொழிலைச் செய்ய வேண்டும் என்றும், ஒரு வேலையுமின்றிச் சோம்பித் திரிபவர்களுக்கு அரசியல் உரிமைகள் இல்லை என்றும் சோலன் அறிவித்தார். தன் மகனுக்கு ஏதாவ தொரு தொழிலைக் கற்றுத் தருவது தந்தையின் கடமை என்றும், அக் கடமையினின்றும் தவறிய தகப்பனை அந்திய காலத்தில் வைத்துப் பராமரிக்க வேண்டிய கட்டாயம் மகனுக் கில்லை என்றும் அவர் அறிவித்தார். பொதுமகளிர் திருட்டுத் தனமாக அன்றி வெளிப்படையாகத் தம் தொழிலை நடத்த அனுமதிக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் மீது கடுமையாக வரி விதிக்கப்பட்டது. அத்துடன் அரசாங்க அதிகாரிகள் அவர்களை நன்கு கண்காணித்து வந்தனர். குடும்பப் பெண்களைக் கற்பழித் தவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட்டது. சீதனம் வாங்கும் வழக்கத்தை நிறுத்த அவர் முயற்சி செய்தார். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் சீதனம் வாங்கக் கூடாது என்று அவர் தடைவிதித்தார். கோயில்கள், நீதி மன்றங்கள், அரசாங்க அலுவலகங்கள் போன்ற பொதுஇடங்களில் இறந்துபோன பெரியோர்களைப் பற்றிப் பழிப்புரை பகரக் கூடாது என அறிவித் தார். ஆனால் ஓயாது பேசுவதில் தனி இச்சை கொண்ட அத்தீனியர்கள் புறம் பேசுவதையும், அவதூறு கூறுவதையும் கைவிட்டதாகத் தெரியவில்லை. அரசாங்கத்துக்கு விரோதமாக அவதூறு சொல்கின்றவர்களை மட்டுமன்றி, அங்ஙனம் செய்

வதை வாளாநின்று கேட்டுக் கொண்டிருந்தவர்களையும் அவர் தண்டித்தார். ஆடம்பரமான சடங்குகள், திருவிழாக்கள், வேள்விகள், சவ ஊர்வலங்கள் இவற்றைத் தடை செய்தார். இறந்துபோன சடலங்களுடன் புதைக்கப்படும் பொருள்களின் எண்ணிக்கையைக் குறைத்தார். போரில் புறங்காட்டாது நின்று பொருது வீழ்ச்சியுற்ற வீரர்களின் புதல்வர்களுக்குக் கல்வியை ஊட்டும் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக் கொண்டது. தயங்காது நாட்டுக்கு உயிரைத் தத்தம் செய்கின்ற காளைகள் பலரை இச் சட்டம் தோற்றுவித்தது. அரசியல் சம்பந்தமான கிளர்ச்சிகள் நடைபெறும் போது எல்லாக் குடிமக்களும் அதில் கலந்து கொள்ள வேண்டும் என்பதை அவர் அறிவித்தார். சுயநலமிக்க ஒரு சிலர் மட்டும் கிளர்ச்சியில் ஈடுபட்டு அரசாங்கத்தைக் கைப்பற்றுவதைத் தடுக்கவே சோலன் இச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

இவ்வாருக ஊழல்கள் பல நிலவிக் கிடந்த சமுதாயத்தைச் சீர்திருத்த, சோலன் பல வகையிலும் முயன்ருர். எனினும் நாற்புறத்திலும் கண்டனக் குரல்களே கிளம்பின. ஏழை மக்களுக்குச் சிறப்புரிமை அளிக்கப்பட்டதைச் செல்வந்தர்கள் கண்டித்தனர். தங்களுக்கு அளிக்கப்பட்ட சிறப்புரிமைகள் போதா என ஏழைமக்கள் கூக்குரலிட்டனர். இதைக் கண்ட சோலன் மனம் நொந்தார். தாம் செய்த காரியங்களுக்கு உரிய காரணங்களையெல்லாம் தொகுத்து, ஒரு கவிதையாக வடித்தெடுத்து, அதை மக்கள் முன்னிலையில் வைத்தார். அப்போதும் கண்டனக் குரல்கள் ஓயவில்லை. எனவே அவர் ஆதென்ஸ் நகரைவிட்டு வெளியேறி மத்தியத்தரைக் கடல் பிரதேசங்கட்குச் சென்றுவிட்டார். அதன் பின் அவர் திரும்பி வந்தபோது அவரால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் அமைப்பு உருத் தெரியாமல் குலைந்து போயிருந்ததைக் கண்டார்; எந்த வகுப்புவாதத்தைக் குறைக்கத் தான் முயன்ருரோ அவ் வகுப்புவாதம் முன்னிலும் பல மடங்கு அதிகரித்திருப்பதைக் கண்டு, மனம் வெதும்பினர். இறுதியில் சோலனின் அரசியல் அமைப்பு செயல்பட முடியாமல் நின்று விட்டது. பைசிஸ்டிராடஸ் என்பவரின் வல்லாட்சி கி. மு. 560-இல் ஆதென்ஸில் ஏற்பட்டது.

சோலனின் சீர்திருத்தங்கள் பற்றிய மதிப்பீடு

லக்கர்கஸ், மினஸ், ஹரோபி போன்ற சட்ட நிபுணர்களைப் போன்று, இறைவனிடத்தில் இருந்துதான் சட்டங்களைப் பெற்றதாகச் சோலன் பெருமை அடித்துக் கொள்ளவில்லை.

காலத்திற்கேற்ற ஒரு நீதியைத் தமது சிந்தைக் கெட்டியவரை சிந்தித்து வெளியிட்டதாகவே அவர் எண்ணினர். ஆதென்ஸின் சர்வாதிகாரியாகும்படி ஒரு சிலர் அவரை வேண்டிய போது அதை மறுத்து விட்டார். அவர் கடைப்பிடித்த வழி இடைவழி எனக் கருதப்படத்தக்கது. அபோலோ என்ற கடவுளின் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள 'எதிலும் அளவுக்கு மீறுதே' என்ற வாசகமானது அவராலேயே தோற்றுவிக்கப்பட்டது என்று கிரேக்கர்கள் நம்புகின்றனர். அவரது சீர்திருத்தங்களில் பல காலத்தின் கோலத்தால் அழியாமல், ஆதென்ஸில் அவருக்கு பின்னும் நின்று நிலவி வந்தன. அவருக்கு 5 நூற்றாண்டு களுக்குப் பின்னர் வந்த சிசரோ (Cicero) என்னும் பேச்சாளர் ஆதென்ஸில் சோலனின் சட்டங்கள் நடைமுறையில் இருந்த தாகக் கூறியுள்ளார். நன்கு அமைந்த ஓர் அரசின் இலக்கணம் என்னவென்று நண்பர் ஒருவர் அவரை வினவியபோது, 'எங்கு மக்கள் ஆட்சியாளர்களை மதித்துக் கீழ்ப்படிந்து நடக்கின்றார் களோ, எங்கு ஆட்சியாளர்கள் சட்டங்களை மதித்து அவற்றிற் குக் கீழ்ப்படிந்து நடக்கின்றார்களோ அங்குதான் உன்னதமான அரசியல் அமைப்பு இருப்பதாகப் பொருள்' என்று விடை பகர்ந் தார்.

அவருடைய சீர்திருத்தச் சட்டங்களால்தான் அத்தீனிய உழவர்கள் பலர் அடிமைத்தளையினின்று மீண்டு சிறு நிலச் சொந்தக்காரர்களாக மாறினர். பல நூண்ராண்டுகள்வரை அத்தீனியச் சுதந்திரத்தைக் கட்டிக் காத்த பெரும் வீரர்கள் அனைவரும் அத்தகைய குடியானவர்களேயாவர். வேளாண்மை யேயன்றி வாணிகமும் தொழிலும் அரசாங்கத்தின் பிடிகளி னின்று விடுதலை பெற்று, நாளுக்கு நாள் முன்னேறின. மத்தியத் தரைக் கடல் பிரதேசத்திலேயே தகைசான்ற வாணிக நாடு என்ற தனிப்பெரும் புகழை வாங்கித் தந்த பெருமை சோலன் என்னும் இப் பெருமகனுரையே சாரும். இவரது சட்டங்களால் உந்தப்பட்ட மக்கள் அறிவுத்துறையிலும், கல்வித்துறையிலும் பல்லாற்றானும் முன்னேறி, பிற்காலத்தே நிகழ்ந்த ஆதென்ஸின் பொற்காலத்திற்கு வழி வகைகளைச் செய்தனர் என்றால் அது மிகையாகாது. கிளைஸ்தனிஸ் (Cleisthenis) காலத்தும் பெரிக் கிளீஸின் காலத்தும் மலர்ந்த மக்களாட்சிக் கொள்கைக்கு வித்திட் டவர், சோலனே எனலாம். ஆதென்ஸ் நகர அரசின் வரலாற் றில் மிகச் சிறந்ததொரு கட்டத்தை அவரது சீர்திருத்தங்கள் பெற்றுள்ளன. அவரது சட்டங்கள் மிதமானவைகளாகவும் அறிவுக்கு ஒத்தனவாகவும் இருந்த காரணத்தால், ஆதென்ஸ் நாட்டுச் சட்ட அறிஞர்களிடையே தலைசிறந்தவர் என்று அவர்

போற்றப்படுகின்றார். இத்தகைய சிறப்புகள் பலவற்றைக் கொண்டிருந்த அவரது சட்டத் தொகுதியானது ஒருசில குறைபாடுகளையும் கொண்டிருந்தது. அவைகளில் ஒரு முழுமை காணப்படவில்லை. பழமையின் மணம் அதில் முழுவதும் வீசுவதைக் காணலாம். அரியோபகஸ் என்ற பிரபுக்களின் சபை அதிகாரங்களை அவர் முழுமையாகக் குறைக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நானூற்றுவர் சபையில் தீடிஸ்களை என்னும் கடைநிலை வகுப்பினரை அவர் சேர்த்துக் கொள்ளவில்லை. எக்லீஷியா என்ற பொதுமக்கள்சபையில் அவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் என்றாலும், அச் சபையின் அதிகாரங்கள் மிகவும் குறைவாகவே இருந்தன.

கல்வியறிவில்லா மக்களுக்குக் கல்வியைப் புகட்ட அவர் நடவடிக்கை எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை. பணக்காரர்களின் நிலங்களுக்கு உச்சவரம்பு கட்டினாரே யொழிய, அவற்றைப் பிடுங்கி ஏழை மக்களுக்குப் பகிர்ந்தளிக்கவில்லை. அரசியல் நீதியில் அயோனியர்களைப் புறக்கணித்தது, அவர் செய்த மாபெரும் தவறுகளில் ஒன்றாகும். அயோனியக் குலத்தினர் இதனால் மனம் புழுங்கினர். அவர்களிடம் பிரிவு மனப்பான்மை வளர்ந்தது. அதனால் பல குழப்பங்களும், நெருக்கடிகளும் பிற்காலத்தே எழுந்தன. இவ்வாறு அவர் செய்த சமூகச் சீர்திருத்தங்களால் பல நன்மைகள் ஏற்பட்டிருந்தும், அவரது அரசியல் சீர்திருத்தங்கள் ஒரு சாராருக்கு மட்டும் நன்மை பயப்பனவாய் அமைந்து, நாட்டில் கட்சிப் பிரிவுகளை உண்டாக்கி விட்டிருந்தன. நிலப்பிரபுக்கள் கட்சி, உழைப்பாளிகள் கட்சி என இருவகையான கட்சிகள் தோன்றின. முன்னைய கட்சியானது செல்வந்தர்கள் நிறைந்ததாய், சோலனின் சீர்திருத்தங்களை எதிர்க்கும் கட்சியாய் அமைந்தது. பின்னையது ஏழைகளும் உழவர்களும் நிறைந்ததாய்— சோலனின் சீர்திருத்தங்களை வாழ்த்துகின்ற கட்சியாய் அமைந்தது. இவ்விரு கட்சிகளுக்கும் இடையே ஏற்பட்ட பூசல் நாளடைவில் ஆதென்ஸில் சர்வாதிகார ஆட்சி ஏற்பட வழி செய்தது.

இவ்வாறு ஒருசில குறைகள் இருப்பினும், பொதுவாக நோக்குமிடத்து அவரது சட்டங்கள் சமூகத்திலிருந்த ஏற்றத் தாழ்வுகளைப் போக்கவும், செல்வந்தராட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், இன ஒற்றுமையைப் பாதுகாக்கவும் பயன்பட்டன என்றே கருதலாம். ஹெலியா என்ற பொதுமக்களின் நீதி மன்றம், அவரது புதுமைப் படைப்பாகும். ஆட்சியாளர்களைத்

தேர்ந்தெடுக்கவும், வேண்டிய போது அவர்களைக் கண்டிக்கவும் தண்டிக்கவும், சாதாரண மக்களும் உரிமை பெற்றிருந்த நிலை. இவரது காலத்தில் அமைந்ததேயன்றி வேறெவர் காலத்தும் அமைந்ததன்று.

(5) ஆதென்ஸில் சர்வாதிகார ஆட்சி

ஆதென்ஸில் கட்சிப் பூசல்கள்

சோலனின் சீர்திருத்தங்கள் நாளடைவில் மூன்று கட்சிகளைத் தோற்றுவித்தன. நாம் ஏற்கெனவே கண்டபடி, அவற்றில் ஒரு கட்சியானது உயர்குடிப் பிரபுக்களையும், இன்னொன்று நடுத்தர மக்களையும் கொண்டிருந்தன. இவற்றைத் தவிர மூன்றுவது கட்சி ஒன்றும் உருவாகியது. குன்றுகளில் வாழ்ந்த ஏழைத் தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்த—தீடஸ்களே அதன் உறுப்பினர்களாயிருந்தனர். முதலாவது கட்சி பெடியாசி (Pediaci) அல்லது 'மருதநிலக் கட்சி' எனப் பெயர் பெற்றது. தொன்று தொட்டுச் செல்வந்தர்களாயிருந்து வந்த யுபாட்ரிடி (Euphatridae) குடும்பத்தைச் சேர்ந்த பிரபுக்கள் மட்டுமே அதன் உறுப்பினராயிருந்தனர். அவர்கள் மீண்டும், பிரபுக்கள் ஆட்சியே நாட்டில் வரவேண்டுமென்று விரும்பியவர்கள். இரண்டாவது கட்சியானது பரளி (Parali) அல்லது நெய்தல் நிலக் கட்சி (Men of the coast) எனப் பெயர் பெற்றது. அதில் ஒருசில உழவர்களும், இன்னும் சில வணிகர்களும், கைவினைஞர்களும் உறுப்பினர்களாயிருந்தனர். அவர்கள் சோலனின் சீர்திருத்தங்களைப் பெரிதும் ஆதரித்தனர். மெகாக்கிளிஸ் (Megacles) என்பவர் அவர்களின் தலைவராகத் திகழ்த்தார். மூன்றுவது கட்சியானது டயாக்ரி (Diacri) அல்லது குறிஞ்சிநிலக் கட்சி (Men of the hills) எனப் பெயர் பெற்றது. அதில் குன்றுகளில் வாழ்ந்து திரிந்த ஏழைமக்களே உறுப்பினர்களாயிருந்தனர். சோலனின் சீர்திருத்தங்களால் அவர்களுக்கு அவ்வளவு நன்மைகள் ஏற்படவில்லை. எனவே அவர்கள் சோலனின் அரசியல் அமைப்பை எதிர்த்தார்கள். பைசிஸ்ட்ராடஸ் (Peisistratus) என்பவர் அதன் தலைவராகத் திகழ்ந்தார். இம் மூன்று கட்சியினரிடையே அடிக்கடி சச்சரவுகள் நிகழ ஆரம்பித்தன. ஆர்க்கன்கள் என்ற நிர்வாக அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதில் பூசல் ஏற்பட்டது. அதன் விளைவாக கி. மு. 589-ஆம் ஆண்டிலிருந்து 584-ஆம் ஆண்டிற்குள் இரண்டு முறை ஆர்க்கன்களின் தேர்தல்கள் ஒத்திப் போடப்பட்டன. மற்றொரு சமயத்தில் ஆர்க்கன் பதவியிலிருந்த

ஒருவர் தமது பதவிக் காலமான ஓராண்டு முடிந்த பின்னும் பதவியில் இருந்து விலக மறுத்துத் தொடர்ந்து இரண்டாண்டு களுக்கு ஆட்சி புரிந்து வரலானர். அரசியலமைப்புக்கு முரணான இச் செய்கையை மக்கள் கண்டித்தனர். நடுத்தர மக்கள் கட்சியும், ஏழைமக்கள் கட்சியும் ஒன்று சேர்ந்து டமாஷியாஸ் (Damasias) என்ற அந்த அதிகாரியைப் பதவியினின்றும் நீக்கியது. ஆனல் கி. மு. 560-இல் பைசிஸ்டிராடஸ் என்பவர், அதிகாரத்தை மீண்டும் பலவந்தமாகக் கைப்பற்றி நாட்டின் சர்வாதிகாரியாக மாறினர். சோலனின் ஒன்றுவிட்ட சகோதர ரான இவர் நல்ல பிரபுக் குடும்பத்தில் பிறந்தவர். எனினும் ஏழைமக்களின் தலைவராகத் தம்மை வரித்துக் கொண்டு அதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவதில் வெற்றி அடைந்தார்.

பைசிஸ்டிராடஸின் எழுச்சி

பைசிஸ்டிராடஸ் என்பவர் ஹிப்போக்கிரேட்டஸ் (Hippocrates) என்ற பிரபு ஒருவரின் புதல்வராவார். அவர் அத்தீனியப் படையில் சேர்ந்து, விரைவிலேயே தளகர்த்தர் பதவியைப் பெற்றார். ஆதென்ஸின் வளர்ச்சிக்குச் சலாமிஸ் (Salamis) என்ற தீவைக் கைப்பற்றுதல் இன்றியமையாதது என்று சோலன் என்பவர் அடிக்கடி கூறியும் கவிதை எழுதியும் வந்ததற்கேற்ப ஆதென்ஸின் படைகள் டைசிஸ்டிராடஸின் தலைமையில், சலாமிஸ் தீவை முற்றுகையிட்டன. சோலனின் புத்துணர்ச்சிக் கவிதைகளால் உந்தப்பட வீரர்கள் எளிதில் அத் தீவை வென்றனர். அதன் பின்னர், நீஸியா (Nisaea) என்ற மிகாரா வைச் சேர்ந்த துறைமுகத்தையும் அவர் கைப்பற்றினர். அதன் முடிவில் நடைபெற்ற சமாதான உடன்படிக்கையின்படி நீஸியா, மிகாராவிற்குத் திருப்பித் தரப்பட்டது. ஆனல் ஹோமரின் கவிதைகளில் கூறப்பட்டுள்ளவைகளைச் சான்றாகக் காட்டி, சலாமிஸ்தீவை அத்தீனியர்களே வைத்துக் கொண்டனர். இங்ஙனம் ஹோமரது இலக்கியங்கள் அரசியல் துறையிலும் பயன்பட்டன என்பதை நாம் கிரேக்க வரலாற்றில் காண்கிறோம். சலாமிஸ் தீவைப் பெற்றதால், ஆதென்ஸின் செல்வாக்குப் பன்மடங்கு வளர்ந்தது.

அதே சமயத்தில் மெகாராவின் சிறப்பு சீர்குலைந்தது. இத்தகைய சிறப்பு வாய்ந்த வெற்றிகளுக்கெல்லாம் காரணமா யிருந்த பைசிஸ்டிராடஸின் புகழ் பன்மடங்கு ஓங்கியது. சந்தர்ப்ப வாதியாகிய அவர், அரசியலில் ஓரளவு புறக்கணிக்கப் பட்டிருந்த குன்றுவாழ் மக்களை ஒன்றுகத் திரட்டி ஒரு கட்சியாக அமைத்துக்

கொண்டு அரசியலில் தீவிரமாக இறங்கினர். ஆதென்ஸின் வல்லரசராக விளங்க வேண்டுமென்பதே அவரது குறிக்கோளாக இருந்தது. இதைப் புரிந்து கொண்ட சோலன் ஒரு கவிதையின்மூலம் மக்களை எச்சரித்தார். ஆனால் அதை மக்கள் புரிந்து கொள்ளவில்லை.

மக்களை நன்கு ஏமாற்றத் தெரிந்த பைசிஸ்ட்ராடஸ் ஒருநாள் இரத்தம் தோய்ந்த உடலுடன் மக்கள் மன்றத்தின் முன் தோன்றினர். தமது அரசியல் எதிரிகள் தம்மைக் கொலை செய்ய எத்தனித்ததின் விளைவாகவே, அந்த இரத்தக் கறை தம் மீது படிந்தது என அவர் அங்கலாய்த்தார். உடனே மக்கள் மன்றம் ஆயுதம் தரித்த 50 போர்வீரர்களைக் கொண்ட மெய்க் காப்பாளர் படை ஒன்றை வைத்துக்கொள்ளும்படி அவருக்கு அனுமதி அளித்தது. ஆனால் பைசிஸ்டிராடஸ் 50 வீரர்கட்குப் பதிலாக 400 பேர்களடங்கிய ஒரு சிறுபடையை அமைத்துக் கொண்டார். அப் படையின் உதவி கொண்டு ஆதென்ஸின் மலைக்கோட்டையையும், மலைப்பட்டணத்தையும் அவர் கைப் பற்றிக் கொண்டு, கி.மு. 560–இல் தம்மைச் சர்வாதிகாரி என்று அறிவித்தார். ஐந்தாண்டுகள் தம் இச்சைப்படி அவர் நாட்டை ஆண்டார். அதன்பின் லைக்கர்கரஸ் தலைமையில் இயங்கிய மருத நிலக் கட்சியும், மெகாக்கிளீஸ் என்பவரது தலைமையில் இயங்கிய நெய்தல் நிலக் கட்சியும் ஒன்றுசேர்ந்து அவரை ஆட்சிப் பீடத்தினின்று அகற்றின. ஆனால் விரைவிலேயே அவ்விரு தலைவர்களும் தம்முள்ளே சச்சரவுகளை வளர்த்தனர். இதன் காரணமாக மெகாக்கிளிஸ் என்பார் பைசிஸ்ட்ராடஸின் நட்பை நாடினர். தமது நட்புக் கிடைக்க வேண்டுமானால் தமது மகளை மணந்துகொள்ள வேண்டுமென, மெகாக்கிளிஸ் கூறியதைப் பைசிஸ்ட்ராடஸ் ஏற்றுக் கொண்டார். அதன் பின்னர் ஆதென்ஸ் மக்களை ஏமாற்ற மெகாக்கினிஸ் ஓர் உத்தியைக் கையாண்டார். வாட்டசாட்டமாய் வளர்ந்திருந்த, வனப்பு மிக்க மங்கை ஒருத்தியைத் தேர்ந்தெடுத்து, அவளை ஒரு தேவதையைப் போல் ஆடை அணிகலன்களால் அலங்கரித்து, பைசிஸ்ட்ராடஸுடன் தேரில் அமர்ந்து ஆதென்ஸில் வந்து இறங்குமாறு அவர் ஏற்பாடு செய்தார். அவ்வாறே அவ்விரு வரும் வந்திறங்கிய போது மெகாக்கிளிஸ் என்பார் அத்தீனை என்ற தேவதையே பைசிஸ்ட்டிராடஸை நகருக்குள் அழைத்து வந்திருக்கின்றது என்ற வதந்தியைக் கிளப்பிவிட்டார். காட்டுத் தீ போல் பரவிய அவ் வதந்தியைப் பாமர மக்கள் நம்பி, பைசிஸ்ட்ராடஸையும், அத்தீனை என வந்த அம் மங்கையையும் தொழுது வரவேற்றனர். மீண்டும் பைசிஸ்டிராடஸின்

வல்லாட்சி ஆதென்ஸில் ஏற்பட்டது (கி.மு. 511-550). ஆனால் பதவி ஏற்ற ஓராண்டுக்குள்ளாகவே மெகாக்கிளீஸும் பைசிஸ்டிராடஸும் தமக்குள்ளாகவேசச்சரவிட்டுக்கொள்ள ஆரம்பித்தனர். தமது மகளை மணந்துகொண்ட பைசிஸ்டிராடஸ், ஏற்கெனவே ஒரு பெண்ணை மணந்திருந்தார் என்பதையும், அப் பெண்ணுக்கு இரண்டு குழந்தைகள் உண்டு என்பதையும், தமது மரணத்திற்குப் பின் அக் குழந்தைகளில் ஒன்றே பட்டத்திற்கு வரவேண்டும் என்று பைசிஸ்டிராடஸ் விரும்புகிறார் என்பதையும் மெகாக்கிளிஸ் கேள்வியுற்றதே இப் பூசலுக்குக் காரணமாகும். மெகாக்கிளிஸும், லிக்கர்கஸும் மீண்டும் ஒன்றுபட்டுப் பைசிஸ்டிராடஸை கி.மு. 550-ஆம் ஆண்டு நாட்டை விட்டுத் துரத்தினர். சுமார் பத்து ஆண்டுகள் அயல் நாடுகளில் சஞ்சரித்தார், பைசிஸ்டிராடஸ். அவர், மாசிடோனிய நாட்டிற்குச் சென்று அங்குள்ள தங்கச் சுரங்கங்களில் பணியாற்றி ஏராளமாகப் பொருள் திரட்டினர். அப் பொருளைக் கொண்டு படையொன்றை அமைத்துக் கொண்டு, அண்டை நாடுகள் ஒருசிலவற்றின் ஆணையையும் பெற்றுக் கி.மு. 532-இல் அவர் மீண்டும் ஆதென்ஸைத் தாக்கிக் கைப்பற்றினர். அதன்பின் அவர் கி.மு. 527 வரை ஆதென்ஸில் தனியரசு செலுத்தினர்.

பைசிஸ்டிராடஸ் செலுத்திய சர்வாதிகாரத்தின் தன்மைகள்

பைசிஸ்டிராடஸ் என்பார் செலுத்திய ஆட்சியினை அரசியலமைப்புக்கு உட்பட்ட சர்வாதிகாரம் (Constitutional Tyranny) எனப் பியூரி என்னும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். ஏனெனில் அவர் பழைய சோலோனிய அரசியலமைப்பை ஒரு சிறிதும் மாற்றவில்லை. அவற்றை வைத்துக்கொண்டே தனியரசை அவர் செலுத்தி வந்தார். ஆர்க்கன்களின் தேர்தல்களும், எக்லீஷியா, ஹெலியா போன்ற நிறுவனங்களின் தேர்தல்களும் வழக்கம்போல நடைபெற்றுக் கொண்டு வந்தன. ஆனால் தேர்தல் நடைபெறுகின்ற சமயத்தில் மட்டும் பைசிஸ்டிராடஸ் சற்று விழிப்பாய் இருந்து தமக்குச் சாதகமான நபர்களே ஆர்க்கன்களாகத் தேர்ந்தெடுக்கப்படும் வகையில், பல முன்னேற்பாடுகளைச் செய்து வந்தார். அதோடு நிலையான படை ஒன்றை அவர் எப்போதும் தயாராக வைத்திருந்தார். தம்மை எதிர்த்த பிரபுக்களின் குழந்தைகளைப் பணயமாகப் பிடித்துச் சிறையில் அடைத்து வைத்துக்கொண்டு தம்மை அவர்கள் எதிர்த்தால் அவர்களின் குழந்தைகள் கொல்லப்படும் என்று எச்சரித்து வந்தார். இத்தகைய காரணங்களால் அவரை எதிர்க்க எவரும் துணிந்திலர்.

வெளிநாட்டுக் கொள்கை

பைசிஸ்டிராடஸின் ஆட்சிக் காலத்தில் ஆதென்ஸின் செல்வாக்குக் கருங்கடல் வரை பரவியது. ஹெல்லஸ்பாண்ட் என்னும் நீரிணைப்பின் கிழக்குப் பாகத்திலிருந்த சீஜியம் என்ற பட்டணத்தை அவர் கைப்பற்றினர். அவரது நண்பரான மில்டியாடிஸ் என்ற பிரபுவானவர் ஹெல்லஸ்பாண்ட் நீரிணைப்பின் மேற்குப் பாகத்தில் ஒரு குடியேற்றத்தை ஏற்படுத்தினர். இங்ஙனம் கருங்கடலுக்குள் சென்ற நீரிணைப்பின் மீது ஆதென்ஸின் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டது. இதன் பின் பைசிஸ்ட்ராடஸ், டீலாஸ் (Delos) நகரத்திலிருந்த அபோலோ என்னும் இறைவனின் கோயிலைத் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தார். அக் கோயிலுக்கருகே அமைந்திருந்த கல்லறைகளையெல்லாம் அகற்றிக் கோயிலின் அகத்தும் புறத்தும் துப்புரவை ஏற்படுத்தினர். டீலாஸ் நகரப் பொது வழிபாட்டுக் கழகத்தை (Delian Ampliectiony) அவர் மீண்டும் உயிர்ப்பித்து ஆதென்ஸை அதற்குத் தலைமை தாங்கும்படிச் செய்தார். ஈஜியக் கடல் பிரதேசத்தில் இங்ஙனம் ஆதென்ஸ் தலைசிறந்த நாடாக விளங்க அவர் வழி செய்தார்.

அவரது உள்நாட்டுச் சீர்திருத்தங்கள்

பைசிஸ்டிராடஸ், தான் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குத் தனக்குப் பெரிதும் உதவிசெய்த ஏழைமக்களை மறக்காமல் முதலில் அவர்களுக்கு நன்மை செய்வதில் முனைந்தார். அவருக்குப் பயந்து நாட்டைவிட்டு ஓடிப்போன பெரும் பிரபுக்களின் பண்ணைகளை நிலமற்ற ஏழை எளியோர்க்கு அவர் பகிர்ந்து வழங்கினர். முன்பு அடிமைகளாக இருந்து உழுது பயிரிட்டு வந்த அவர்கள் அதே நிலத்தை இப்போது நிலத்தின் உரிமையாளர்கள் என்ற முறையில் பயிரிட ஆரம்பித்தனர். இங்ஙனம் சிறு நிலச் சொந்தக்காரர்கள் பலர் தோன்றினர். அவர்கள் விளைவித்த விளைச்சலில் 1/10 பங்கை அரசாங்கத்துக்கு வரியாகச் செலுத்தினர். அன்றி வேறெந்த வரியும் அவர்கள் மீது திணிக்கப் பெறவில்லை. நாளடைவில் நிலவரியானது விளைச்சலில் 1/20 பங்காகக் குறைக்கப்பட்டது. நிலத்தைப்பயிரிடுவதற்குப் போதிய பண வசதி இல்லாத ஏழைகளுக்கு அவர் பண மானியம் வழங்கி, அவர்களைக் கடனாளியாக்கி விட்டார். விவசாய வளர்ச்சிக்காக அவர் அல்லும் பகலும் பாடுபட்டார். கண்ட கண்ட இடங்களில் எல்லாம் ஒலிவ மரங்களை நடுவதற்குப் பண உதவிகளைச் செய்தார். தாமே நேரில் சென்று, ஒலிவ மரங்களை நட்டுப் பயிரிடுவோர்க்கு ஊக்கத்தை ஊட்டினர்.

மற்றும், வேலையின்றி அலைந்து கொண்டிருந்த ஏழைத் தொழிலாளிகளுக்கு வேலை கொடுக்க வேண்டி, அவர் பல பொதுப் பணிகளில் ஈடுபட்டார். அவருடைய ஆதரவில் இரண்டு பெரும் கோயில்கள் கட்டப்பட்டன. ஆதென்ஸின் மலைக் கோட்டையில் 'அத்தீனு' என்ற தேவதைக்காகப் பிரம்மாண்டமான கோயில் ஒன்று எழுப்பப் பட்டது. டயோனிஷியஸ் (Dionysius) என்ற தெய்வத்திற்கு மற்றொரு பெருங் கோயில் எழுப்பப் பட்டது. இதனால் மரத் தச்சர்களும், கல் தச்சர்களும், இன்னும் பல சிற்பிகளும், கைவினைக் கலைஞர் களும் வேலையும் கூலியும் ஒருங்கே பெற்று மனநிறைவை எய்தினர்.

கலைத்துறையில் பைசிஸ்டிராடஸ் ஆற்றிய தொண்டு உண்மையிலேயே பெரிதும்:போற்றுவதற்குரியதாகும். தேவதை களுக்குக் கோவில்களைக் கட்டியதோடமையாது, நான்காண்டு களுக்கொருமுறை ஆங்கே திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறு வதற்கும் தக்க ஏற்பாடுகளைச் செய்தார். பனத்தினீயா (Panathenae) என்ற திருவிழாவின் போது ஹோமரின் கதா காலட்சேபங்கள் நடைபெற்றன. ஈலியட், ஒடிஸி ஆகிய காப்பியங்களைப் பற்றிய கச்சேரிகள் முறையாக அங்கு நடைபெற்றன. ரேப்சோடிஸ் (Rhapsodes) என்ற பாகவதர்கள் கச்சேரிகளை நிகழ்த்தினர்கள். அவருக்குத் துணையாக இருக்கும் பொருட்டு, ஹோமரின் கவிதைகளை யெல்லாம் ஒருங்கு திரட்டி நூலாக வெளியிடும் பொருட்டுக் குழு ஒன்றை அவர் அமைத்தார். அக் குழுவின் அரும்பணியின் விளைவாக ஹோமர் காலக் காப்பியங்கள் வெளிவரலாயின. அந் நூல்கள் நாடெங்கிலும் விற்பனையாக ஆரம்பித்தன. இன்று நம் கைகளுக்குக் கிடைக்கும் ஹோமரின் கவிதைகள் பைசிஸ்டி ராடஸின் அரிய முயற்சியின் விளைவுகளே என்று அறியும் போது நம்மை அறியாமலேயே நாம் அவரைப் பாராட்ட வேண்டியிருக்கின்றது.

அத்தேனுவுக்கடுத்தபடியாக டயோனிஷியஸ் என்ற தெய் வத்திற்கு அவர் விழா எடுத்துச் சிறப்புச் செய்தார். மலைப் பட்டணத்தின் அடிவாரத்தில் அக் கடவுளுக்காகக் கோயில் ஒன்று கட்டப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் அங்கே பெருவிழா ஒன்று கொண்டாடப் பட்டது. அவ் விழாவின் போது பல கவிஞர்கள் கவிதைப் போட்டி நடத்தினர். இத்தகைய கவிதைப் போட்டிகளிலிருந்து தோன்றியவைகள்தான் பிற்காலத்துத் துன்பியல் நாடகங்களாகும். துன்பியல் நாடகங்களைக் குறிக்கும்

டிராஜடி (Tragedy) என்ற சொல்லுக்கு 'ஆட்டுப் பாட்டு' (Goat song) என்பதே பொருளாகும். இங்ஙனம் பல வகையிலும் பைசிஸ்டிராடஸ் சமயத் தொண்டும், கலைத் தொண்டும் புரிந்தார். அவரால் கட்டப்பட்ட கட்டிடங்கள் ஆதென்ஸ் நகரின் அழகை விம்முறச் செய்தன. இலக்கியமும் நாடகமும் போட்டி போட்டுக்கொண்டு வளரலாயின.

தெய்வங்களுக்கு விழா எடுத்த பைசிஸ்டிராடஸ் மக்களையும் மறந்துவிடவில்லை. உண்மையில் அவர் கட்டிய கட்டிடங்களும், எடுத்த விழாக்களும் ஏழை எளியவர்க்கு வேலை கொடுத்து மகிழ்விப்பதற்காகவேயன்றி வேறெதற்குமன்று. மற்றும் அவர் ஆதென்ஸ் நாட்டிற்குக் குடிதண்ணீர் வசதியையும், மிகச் சீரிய முறையில அமைத்துத் தந்தார். மிகப் பெரியதோர் நீர்க் குழாயின் மூலம், நீரானது அருகிலுள்ள ஓடையிலிருந்து கொண்டு வரப்பட்டுப் பெரியதோர் தொட்டியில் நிரப்பப்பட்ட பின்னர், அதை மலைப் பட்டணத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிற விந்தையான முறைகள், தற்கால அகழ்வாராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்ஙனம் ஏழைப் பங்காளனாய்—உழவர்களின் புரவலனாய்—கலைகளின் காப்பாளனாய் விளங்கி ஆதென்ஸ் நகருக்குப் பல அரிய தொண்டுகளைச் செய்து சென்ற பைசிஸ்டிராடஸின் ஆட்சிக் காலமானது, பிற்காலத்தவர்களால் ஆதென்ஸின் பொற்காலம் என அழைக்கப்படுவதில் சிறிதும் தவறில்லையாம் என்க!

சர்வாதிகார அரசின் வீழ்ச்சி

பைசிஸ்டிராடஸின் மரணத்திற்குப் பின்னர் அவரது மூத்த மகனான ஹிப்பையாஸ் (Hiphias) என்பவர் நாட்டின் அதிபதியானார். அவரது உடன்பிறந்தவரான ஹிப்பார்க்கஸ் (Hipparcus) என்பவர் ஆட்சித்துறையில் அவர்க்குப் பல்லாற்றானும் உதவி செய்து வந்தார். தம் தந்தையின் அடிச்சுவடிகளைப் பின்பற்றி அவ்விருவரும் புலவர்களையும் கலைஞர்களையும் ஆதரித்தனர். எனினும் அவர்களுக்கு விரோதிகள் பலர் உருவாயினர். அதன் விளைவாக ஹிப்பார்க்கஸ் என்பவர் கொலை செய்யப்பட்டார். இதனால் எச்சரிக்கையுற்ற ஹிப்பியாஸ் மிகவும் விழிப்பாகவும், கண்டிப்பாகவும் ஆட்சி புரிந்தார். உண்மையிலேயே அவர் கொடுங்கோலராகக் காட்சி அளித்தார். இதனால் வெறுப்படைந்த மக்கள் நாட்டைவிட்டு வெளியேறிய பிரபுக்களின் உதவியை நாடினர். ஆதென்ஸ் மீது படையெடுக்கும்படி ஸ்பார்ட்டா நகர அரசை அவர்கள் கேட்டுக்

கொண்டனர். டெல்ஃபிக் குறிமேடையும் அங்ஙனமே ஸ்பார்ட்டா மன்னருக்கு ஆலோசனை கூறியது. பலரது வேண்டுகோளுக்கும் செவி சாய்த்த ஸ்பார்ட்டா மன்னர் கிளியோமீனஸ் (Cleomenes) என்பார் கி.மு. 510-இல் ஆதென்ஸ் மீது படையெடுத்து ஹிப்பையாஸை வென்றார். தோல்வியுற்ற ஹிப்பையாஸ் பாரசீக மன்னரின் அரண்மனையில் அடைக்கலம் புகுந்தார். பிற்காலத்தே அதாவது கி.மு. 490-ஆம் ஆண்டில் பாரசீகர்கள் கிரீஸின் மீது படையெடுத்த போது அவர்களுடன் ஹிப்பையாஸும் வந்து போரில் கலந்து கொண்டார். இங்ஙனம் சர்வாதிகார ஆட்சி ஆதென்ஸில் வீழ்ச்சி அடைந்தது. கிளியோமீனஸ் என்ற ஸ்பார்ட்டா அரசர் ஆதென்ஸை சர்வாதிகாரிகளிடமிருந்து விடுவித்துப் பெலப் பொனீஷிய இணைக் கூட்டுறவில் ஓர் உறுப்பாகச் சேர்த்தார். நாட்டைவிட்டு வெளியே சென்ற பல நிலப் பிரபுக்கள் திரும்பி வந்தனர். அவர்கள் மீண்டும் பிரபுக்கள் ஆட்சியை ஆதென்ஸில் நிறுவ விரும்பினர். ஐசகோரஸ் எனும் தலைவரின் கீழ் அவர்கள் தம் கோரிக்கைகளை நிறைவேற்ற முயன்றனர். கிளையஸ்தனிஸ் என்ற இன்னொரு பிரபு பொதுமக்களை ஆதரித்து மக்களாட்சியே நாட்டில் ஏற்படவேண்டும் என வலியுறுத்திக் கூறினர். இவ்விரு பிரபுக்களும் அப்போது நாட்டை ஆளும் ஆர்க்கன்களாக இருந்தனர். ஐசகோரஸ், ஸ்பார்ட்டா மன்னர், கிளியோமீனஸின் உதவியைப் பெற்று, ஜனநாயகவாதிகளான 700 குடும்பங்களை நாடு கடத்தினர். ஆனால் நகரில் எஞ்சியிருந்த மக்கள் கொதித்தெழுந்து புரட்சியில் இறங்கி ஸ்பார்ட்டா மன்னரையும், ஐசகோரஸையும் சிறைப்படுத்தித் தங்களிடம் சரணடையும்படிச் செய்தனர். அதன் பின்னர் கிளியோமீனஸ் ஸ்பார்ட்டாவிற்குத் திரும்பிப் போய்விட்டார். ஐசகோரஸும் நகரை விட்டுத் தப்பி ஓடிவிட்டார். கி.மு. 507-இல் கிளையஸ்தனிஸ், நாட்டின் அதிபரானார். புரட்சி நடைபெற்ற போதும், அதற்குப் பின்பும் அவர் நாட்டை விட்டு வெளியே சென்று வசித்து வந்தார். தக்க சூழ்நிலை ஏற்பட்டவுடன் அவர் மீண்டும் வந்து நாட்டின் ஜனநாயக அமைப்பைக் காப்பாற்றினர்.

(6) கிளையஸ்தனீஸின் சீர்திருத்தங்கள்

சமுதாயச் சீர்திருத்தம்

சோலன் என்பவரால் அமைக்கப் பெற்ற ஜனநாயகத்தில் இருந்த ஒருசில குறைபாடுகளைக் களைந்து நல்லதோர் தேசிய மணம் கமழும் மக்களாட்சியாக அதை மலரச் செய்த பெருமை கிளையஸ்தனிஸ் என்னும் ஆர்க்கனையே சாரும். சோலனின்

அரசியலமைப்பில் பழைய அயோனியக் குலங்கள் பெரிதும் பலம் பெற்று விளங்கின. அக் குலங்களின் பிரதிநிதிகள் வீற்றிருந்த முதுமக்கள் மன்றத்தின் தயவின்றிப் பொதுமக்கள் மன்றம் எவ்விதமான நடவடிக்கையையும் எடுக்க இயலாத நிலையில் இருந்தது. எனவே கிளீயஸ்தனிஸ் குறுகிய குலப் பற்றுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க விரும்பினர். பரந்த தேசியப் பற்று மக்கள் மனத்தில் மலர்வதற்கு வழிவகைகள் செய்தார். குறிப்பிட்ட நிலப்பகுதிகளில் மட்டும் செல்வாக்குடன் விளங்கிய அயோனியக் குலங்களுக்குப் பதிலாக நாடெங்கும் உறுப்பினர்களைக் கொண்ட புதிய குலங்களை அவர் தோற்றுவித்தார். இது உண்மையிலேயே வியக்கத் தக்கதோர் திட்டம் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. அத் திட்டத்தின்படி நாடு குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய மூன்று பெரும் நிலப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இத்தகைய ஒவ்வொரு நிலப் பகுதியும் டீம்கள் (Demes) என்னும் வட்டங்களைக் கொண்ட டிரிட்டிஸ் (Trittys) எனும் மாவட்டங்களாகப் பிரிக்கப் பட்டன. ஒவ்வொரு நிலப் பகுதிக்கும் 10 டிரிட்டிஸ்கள் வீதம் 30 டிரிட்டிஸ்கள் அமைக்கப்பட்டன. அதன் பின்னர் ஒவ்வொரு பெரிய நிலப் பகுதிக்கும் ஒன்று வீதம் மூன்று வெவ்வேறு டிரிட்டிஸ்களைச் சேர்த்து ஒரு குலம் அமைக்கப் பட்டது. இங்ஙனம் 10 புதிய குலங்கள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு குலத்திலும் குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய மூன்று நிலங்களிலும் அமைந்திருந்த டீம்களும் அவற்றின் குடிமக்களும் உறுப்பினராயிருக்கும் நிலை அமைந்தது. இவ்வாருக இன உணர்ச்சியினடிப்படையில் அமைந்திருந்த பழைய குலங்கள் மறைந்து தேசிய உணர்ச்சியின் அடிப்படையில் அமைந்த புதிய குலங்கள் தோற்றுவிக்கப்பட்டன. பழைய குலத்தின் வழி முகிழ்த்த பல கட்சிகள் மறைந்தன. ஒரு குறிப்பிட்ட குலத்தின் உறுப்பினராகப் பதிவு செய்து கொண்ட குடிமகன், அவன் வேறு ஒரு நிலப் பகுதியிலுள்ள மாவட்டத்திற்குச் சென்று குடியேறிய போதும் கூட, அதே குலத்தின் உறுப்பினனாகத்தான் வாழ்நாள் முழுதும் திகழ்ந்தான். இதுவரை தங்கள் பழைய குலப் பெயரைக் கூறிப் பெருமை பாராட்டி வந்த மக்கள், பிறகு தாங்கள் பிறந்த மாவட்டத்தின் பெயரைச் சொல்லிப் பெருமைப் பட ஆரம்பித்தனர். ஒவ்வொரு புதிய குலத்திற்கும் ஒரு பொதுத் தெய்வமும், வழிபாட்டு முறையும் ஏற்பட்டன. வீர வணக்கமும் ஒவ்வொரு குலத்திற்கும் பொதுவாக அமைந்தது. அவ் வீரர்கள் எப்போனிமி (Eponimi) என்றழைக்கப்பட்டனர். ஒவ்வொரு குலத்திற்குமுரிய வீரர்களின் சிலைகள் ஆதென்ஸில் வைக்கப்பெற் றிருந்தன. அவைகளுக்கு விழா நடத்த ஒவ்வொரு குலத்தைச்

சேர்ந்தவர்களும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வந்து கூடினர். இத்தகைய விழாக்கள் மக்களிடம் ஒரு தேசிய ஒற்றுமையை உண்டாக்கின.

அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள்

மேற்சொன்ன குலமுறைச் சீர்திருத்தங்களே கிளையஸ்தனீஸின் புதிய படைப்பாகும். இதனை அடிப்படையாகக் கொண்டே வேறு பல அரசியலமைப்புச் சீர்திருத்தங்களும் எழுந்தன. பழைய முதியோர் மன்றத்தில் அவர் ஒரு சில மாறுதலை ஏற்படுத்தினர். நானூற்றுவர் சபைக்குப் பதிலாக, ஐந்நூற்றுவர் சபை யொன்றை அவர் தோற்றுவித்தார். புதிதாக அமைக்கப் பட்ட பத்துக் குலங்களிலிருந்தும் குலத்திற்கு 50 பேராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அச் சபையில் இடம் பெற்றார்கள். ஒவ்வொரு குலத்திலும் வெவ்வேறு நிலப்பகுதியைச் சேர்ந்த டிரிட்டிஸுகளும், டீம்களும் இருந்ததால் ஐந்நூற்றுவர் சபையானது ஆதென்ஸ் நாட்டின் உண்மையான பிரதிநிதி யாகத் திகழ்ந்தது. நாட்டில் இருந்த எல்லா வகை வகுப்பினரும் அதில் இடம் பெற்றிருந்தனர். டீம்களில் வாழ்ந்த மக்கள் சீட்டுக் குலுக்கல் மூலமாகத் தங்களது பகராட்களை (Representatives) தேர்ந்தெடுத்தனர். ஒவ்வொரு டீமிலும் ஒரு வாக்காளர் பட்டியல் இருந்தது. 17 வயதிற்கு மேற்பட்ட யாவரும் அதில் தங்களைக் குடிமக்களாகப் பதிவு செய்து கொண்டனர். இத்தகையோரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே ஐந்நூற்றுவர் அவையின் உறுப்பினர்களாகச் சென்றனர். இங்ஙனம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பகராட்கள் நிரம்பிய ஒரு அவை நாட்டை ஆள்வதில் தலை சிறந்ததோர் இடத்தைப் பெற்றது, கிளையஸ்தனீஸ் காலத்திலேயாகும். இரண்டாம் முறையாக ஆதென்ஸில் மக்களாட்சி முறையை நிறுவியதில் வெற்றி கண்டவர் என்று பியூரி என்னும் ஆசிரியர் அவரைப் புகழ்வது முற்றிலும் தகும்.

ஐந்நூற்றுவர் அவையின் அதிகாரங்கள் உண்மை யானவை. மிகுதியானவையும் கூட. நாட்டின் சட்டங்களை முன் மொழிகின்ற அதிகாரம் அதன் கைக்குள்ளேயே இருந்தது. எக்லீஷியா மன்றத்தின் ஒப்புதலைப் பெற்ற உடன், அத்தகைய சட்டங்கள் நடைமுறைக்கு வரும். ஆர்க்கன்கள் போன்ற நிர்வாக அதிகாரிகளைக் கண்காணிக்கின்ற அதிகாரமும் அதற்கு இருந்தது. அனேகமாக இச் சபையின் ஆணைக்குக் கட்டுப்பட்டே எல்லா நிர்வாக அதிகாரிகளும் பணியாற்றினர். நாட்டின்

பொருளாதாரம் அதனுடைய கட்டுப்பாட்டின் கீழே இயங்கி வந்தது. பத்துப் புதிய பொருளாதார அதிகாரிகளை அது நியமித்தது. அவர்கள் அப்பொடெக்டாய் (Apodectai) என அழைக்கப்பட்டனர். அவர்கள் ஒவ்வொரு குலத்திற்கும் ஒருவராக, பத்துப் பொருளாதார அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். பொருளாதாரம் சம்பந்தபட்ட வழக்குகளை இம் மன்றமே விசாரித்தது. அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டிடங்களையும், கோயில்களை இம் மன்றமே நிர்வகித்து வந்தது. இவ் வகையில் இது இக் காலத்திய பொதுப்பணித்துறை அமைச்சு போல் காட்சியளித்தது. நாட்டின் பாதுகாப்பும் இச் சபையின் கைகளிலேயே அடங்கியிருந்தது. நாட்டின் கப்பற்படை, தரைப்படை ஆகியவை, இம் மன்றத்தின் ஆணைப்படியே செயலாற்றின. அவைகளைச் செவ்வனே நிர்வகிக்கும் பொறுப்பும் இம் மன்றத்திற்கே உரியதாக இருந்தது. அரசாங்கத்தின் அயல்நாட்டு விவகாரங்களை இம் மன்றமே கவனித்துக் கொண்டது. அயல் நாட்டில் இருந்து வருகின்ற தூதுவர்களை வரவேற்றுப் பேச்சுவார்த்தை நடத்துதல், இதன் முக்கிய கடன்களில் ஒன்றாகும். ஆனால் போர் ஒன்றைத் துவக்கவோ முடிக்கவோ இதற்கதிகாரமில்லை. எக்லீஷியா என்ற மன்றத்திற்கே அத்தகைய அதிகாரங்கள் இருந்தன. ஒருசில வழக்குகளில், தலையாய அதிகாரங்களை இம் மன்றம் பெற்றிருந்தது. நாட்டுத் துரோகம் செய்தவர்களை முதன்முதலில் விசாரிக்கும் உரிமை இம் மன்றத்திற்கே உண்டு. அங்ஙனம் விசாரிக்கப்பட்டவர்களுக்குத் தக்க தண்டனை வழங்கவோ வேறு நீதிமன்றங்களுக்கு அவ் வழக்குகளை அனுப்பவோ இச் சபைக்கு அதிகாரமுண்டு. இங்ஙனம் சட்டம், நிர்வாகம், நீதி ஆகிய மூன்று துறைகளிலும் முக்கியமான பல அதிகாரங்களைக் கொண்டதாய் இச்சபை இலங்கிற்று.

ஐந்நூறு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சபையானது ஆண்டு முழுவதிலும் ஓரிடத்தில் அமர்ந்து தனது கடமைகளைச் செய்வதென்பது முடியாத காரியம் என்று உணர்ந்தார் கிளையஸ்தனீஸ். எனவே அவர் குறிப்பிட்ட காலத்தில் 50 உறுப்பினர்கள் வந்து சபையின் அலுவல்களை மேற்கொண்டால் போதுமானது என அறிவித்தார். ஒவ்வொரு குலத்தைச் சார்ந்த 50 பகராட்களும், ஆண்டில் ஒவ்வொரு பருவத்தில் வந்து பணியாற்ற வேண்டும். இதற்காகக் கிளையஸ்தனீஸ் ஓராண்டினைப் பத்துப் பருவங்களாகப் பிரித்தார். ஓவ்வொரு பருவமும் பிரிடெனிஸ் (Prytenis) என அழைக்கப்பட்டது. பருவக்காலமன்றக் கூட்டங்களில் கலந்து கொண்ட உறுப்பினர்களும் பிரிடெனிஸ்

என்றே அழைக்கப்பட்டனர். மற்ற நடவடிக்கைகளின்போது உறுப்பினர்களுக்கு இலவசமாக உணவும் உறையுளும் வழங்கப் பட்டன.

மேலே சொல்லப்பட்ட ஒவ்வொரு குலமும் ஒவ்வொரு சிறு படையைத் தயாரித்து, நாட்டிற்கு வழங்க வேண்டியது கடமை யாகும். அத்தகைய படைகளில் காலாட்படைகளடங்கிய அணி யொன்றும், குதிரைப்படைகள் அடங்கிய அணியொன்றுமிருப் பது வழக்கம். இவ்விருபடைகளுக்கும் ஸ்டிரேடகாஸ் (Stratagos) என்ற படைத்தலைவர் நியமிக்கப்பட்டார். இவ்வாறு, ஒவ் வொரு குலத்திற்கும் ஒருவராகப் 10 படைத்தலைவர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டனர். அவர்கள் அனைவருக்கும் மேலாகப் போலி மார்க் (Polemarch) என்ற தானைத்தலைவர் நியமிக்கப்பட்டார். காலாட்படைக்கும், குதிரைப்படைக்கும் தனித்தனியே சிறு படைத்தலைவர்கள் இருந்தார்கள். நாட்டிற்கு வேண்டிய கடற் படைகளை அமைக்க ஒவ்வொரு குலமும் ஐந்து கப்பல்களைக் கட்டித்தர வேண்டுமென ஏற்பாடும் செய்தனர். அதற்காக ஒவ்வொரு குலமும் ஐந்து சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. கப்பல் வரிக்காக இங்ஙனம் அமைந்த சிறு குழுக்கள் நாக்ரெரி கள் (Naucraries) என அழைக்கப்பட்டனர். ட்ரிரீம் (Irireme) என்ற பெருங்கப்பலைக் கட்டித் தரும் பொறுப்பைச் செல்வந்தர் களிலேயே மிகச் சிறந்தவர்கள் சிலர் ஏற்றுக் கொண்டனர்.

பெரும் பதவிகளைச் சாதாரண மக்களுக்கும் வழங்க முன் வந்தார் கிளையஸ்தனீஸ். சோலன் காலத்தே பிரபுக்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்த ஒரு சில பதவிகள் - முக்கியமாக ஆர்க்கன்பதவிகள் ஹிப்பெஸ் (Hippeis) என்ற நடுத்தர மக்க ளுக்கும் இவர் காலத்தில் கிடைத்தன.

நாட்டின் அமைதிக்குப் பங்கம் விளைவிப்போரையும், பொது நலனுக்கு விரோதமான செயல்களில் ஈடுபடுகிறவர்களையும் தற் காலிகமாக நாடு கடத்தும் 'ஆஸ்ட்ரகிஸம்' (Ostracism) என்ற முறையானது இவர் காலத்தே நடைமுறைக்கு வந்தது நாட் டிற்கு அபாயம் விளைவித்தவர் என்று கருதப்பட்ட ஒரு நபரை நாடு கடத்துவதற்குக் குறைந்தது 6000 குடிமக்களாவது வாக் களிக்க வேண்டும். நாட்டின் நலனுக்கு ஒத்து வராதவர்களை யும் அரசியல் அமைப்பின் பகைவர்களையும் ஒழித்துக் கட்டவே இம் முறை கொண்டுவரப்பட்டது. வன்முறையில் அதிகாரத் தைக் கைப்பற்றக்கூடிய கொடுங்கோலர்களைத் தடுப்பதற்காகவும் இம்முறை கையாளப்பட்டது.

கிளையஸ்தனீஸ் சீர்திருத்தங்கள் பற்றிய திறனாய்வு

சோலனால் ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்பு என்னும் பொறியில் ஏற்பட்டுவிட்ட ஒரு சில சிக்கல்களை நீக்கி, அது மீண்டும் நல்ல முறையில் இயங்குவதற்கான வழிவகைகளை வகுத்தவர் கிளையஸ்தனீஸ் ஆவார். பழைய குல அமைப்பு முறையில் இருந்த குறையை நீக்கியதாலும், வேண்டாதவர்களை நாட்டை விட்டுக் கடத்தியதாலும் அவர் மேற்சொன்ன காரியங்களைச் சாதித்தார் எனலாம். கட்சிப் பூசல்களை ஒழித்த பெருமை அவரையே சாரும். அரசியல் ரீதியில் 10 புதிய குலங்களைத் தோற்றுவித்து அவற்றின் மூலம் நாட்டில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டிய ஒரு பெரும் சேவையைச் செய்ததற்காக அத்தீனியமக்கள் இன்றும் அவரை வாழ்த்துகின்றார்கள். இப் புதுக்குலமுறை அமைப்பானது நாட்டில் சுயநலச் செல்வர்களின் ஆட்சியை ஒழித்தது. நாட்டுமக்கள் அனைவரும் ஒன்றுபட்டனர். ஜனநாயகம் அவர்களது பேச்சாகவும் மூச்சாகவும் திகழ்ந்தது. பலம் பொருந்திய பாரசீகப் பேரரசைப் பிற்காலத்தே எதிர்த்து நின்று வாகை சூடும் அளவிற்கு அவர்களிடையே ஒற்றுமையும் நாட்டுப்பற்றும் ஏற்பட்டன என்றால் அதற்குக் கிளையஸ்தனீஸின் சீர்திருத்தங்களே முக்கிய காரணங்களாகும்.

அவரது சீர்திருத்தங்களின் விளைவாக ஆதென்ஸில் ஜனநாயகம் முழுமையான மலர்ச்சியைப் பெற்றது. இரண்டு வழிகளில் அவர் சோலனைவிட மேம்பட்ட ஒரு ஜனநாயகவாதியாகக் காட்சியளிக்கின்றார். சோலனின் அரசியல் அமைப்பில் ஆர்க்கன் பதவியை உயர்குடிப் பிரபுக்களே ஏற்றுவந்தனர். ஹிப்பேஸ் என்ற நடுத்தர மக்கள் இப் பதவியைப் பெறுவதற்குக் கிளையஸ்தனிஸ் காலத்தில் வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் ஜியூஜிதி என்ற கடை நிலைமக்கள் அத்தகைய வாய்ப்பினைப் பெற, பெரிக்கிளீனின் காலம் வரை காத்திருக்க வேண்டியதாயிருந்தது. இரண்டாவதாக தீடிஸ் என்ற ஏழைகளுக்கு ஐந்நூற்றுவர் சபையில் இடமளித்தார். கிளையஸ்தனீஸ மற்றும் வெளிநாட்டவர்களைத் தவிர ஏனையோர் அனைவருக்கும் குடியுரிமையை வழங்கினர். ஆனால் அரியோபஃஸ் என்ற பிரபுக்கள் சபை மட்டும், சோலன் காலத்தில் இருந்தபடியே இருக்க அனுமதிக்கப்பட்டது. இவ்வாறு தனது முன்னோர்கள் வகுத்த வழியில் சென்றதோடன்றிப் புதிய வழிகளிலும் கிளையஸ்தனிஸ் சென்று நாட்டின் நன்மையைப் பெருக்க முயன்றார். பொருளாதாரம், இராணுவம் இவற்றை நிர்வகிக்கவும், அவர் புதிய அதிகாரிகளை

நியமித்தது போற்றுதற்குரியதாகும். அதன் விளைவாகவே ஆதென்ஸின் நிலப்படையும், கடற்படையும் கிரீஸிலேயே ஒப்பற்றுத் திகழ ஆரம்பித்தன, சிறப்பாகக் கடற்படையில் அவர்கள் ஈடும் எடுப்புமற்றவர்களாய்த் திகழ்ந்தனர். ஆதென்ஸின் வாணிக முயற்சிகள் மேற்கிலும் கிழக்கிலும் வெகுதூரம் வரை பரவின. ஆதென்ஸ் மக்களிடம் திருமகள் குடிகொண்டாள். செல்வத்தில் திளைத்த அத்தீனியர்கள் இலக்கியத்தையும், கலை களையும் வளர்த்தனர். அடுத்த நூற்றாண்டில் கிரீஸ் தேசத்தில் புகழ் ஒளிமிக்க ஒரு நகர அரசாக ஆதென்ஸ் விளங்குவதற்கு வித்திட்டுச் சென்றவர் கிளையஸ்தனீஸே என்பதில் எட்டுணை யும் ஐயமில்லை எனலாம்!

9. பாரசீகப் போர்கள்

(1) பாரசீகப் போர்களுக்கான காரணங்கள்

'காண்போர் அஞ்சக்கூடிய பருத்த உடலும், பெருத்த உருவமும் பேராற்றலும் படைத்த கோலியாத் (Goliath) என்ற ஓர் அரசரை உருவத்திற் சிறியவரும், காண்போர் எள்ளி நகையாடும்படியான தோற்றத்தையுடையவருமான தாவீது (David) என்ற இடையர் தோற்கடித்தார்' என விவிலிய நூலில் ஒரு கதை உண்டு. அக் கதையை மெய்ப்பிப்பதே போன்று, கிரேக்க வரலாற்றிலும் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அளவில் சிறியதும் படைப்பலத்தில் குறைந்ததுமான ஆதென்ஸ் எனும் கிரேக்க அரசு, தன்னை விடப் பன்மடங்கு பரப்பிலும் படைப்பலத்திலும் பெரியதான பாரசீகப் பேரரசைக் கி.மு.490-இல் மாரதான் (Marathon) எனும் போர்க்களத்தில் வென்றது. அவ் வீரச் செயலைக் கண்டு ஐரோப்பாவே வியந்தது. இன்று உலகமே அதை வியந்து பாராட்டுகிறது. ஹெரடோடஸ் என்ற கிரேக்க வரலாற்றாசிரியரது நூல், பாரசீகப் போர்களைப் பற்றியே விதந்து ஓதுகின்றது. மாண்புமிக்க இப் போர்களை வினவித்த சூழ்நிலைகள் பல. அவற்றுள் முக்கியமானவை, ஆசியாமைனர் நிலப் பகுதியில் இருந்த கிரேக்க நாட்டுக் குடியேற்றங்களுக்கும், பாரசீகப் பேரரசுக்குமிடையே தோன்றிய போரும், அப் போரில் பாரசீகர்களுக்கு விரோதமாக அத்தீனியர்கள், கிரேக்க அயோனியர்களின் தரப்பில் கலந்துகொண்ட செயலுமே யாகும். அங்ஙனம் அவர்கள் கலந்து கொண்டதற்கான சூழ்நிலை எங்ஙனம் உருவாயிற்று என்பதை முதற்கண் ஆராய்வோம்.

யூப்ரடீஸ், டைகிரீஸ் என்ற இரு பெரும் நதிகளுக்கிடையே அமைந்துள்ள செழிப்பான சமவெளியில் பண்டைக் காலத்தே தோன்றி மறைந்த பேரரசுகள் பல. ஆண்டு மாண்ட மன்னர்கள் பலர். சுமேரிய பாபிலோனியப் - பேரரசுகள்

தோன்றிப் பெரு நாகரிகங்களைத் தோற்றுவித்த இடம் அதுவேயாகும். அங்ஙனம் தோன்றிய பண்டைப் பேரரசுகளில் கடைசியானது அஸிரியப் பேரரசாகும். அது தனது புகழின் உச்சியில் இயங்கிக் கொண்டிருந்த காலத்தில் எகிப்து, பாபிலோனியா, ஃபினீஷியா (Phoenicia), மீடியா (Media) ஆகிய நாடுகளும் அதன் தலைமையை ஒப்புக்கொண்டு கப்பம் கட்டிவந்தன. ஆனால், நாளடைவில் அப் பேரரசு நலியத் தொடங்கியது. அச்சமயம் பார்த்து மீடிய நாடு, டியோகஸ் (Deiocas) என்ற மன்னனது தலைமையில் சுயேச்சை யடைந்தது (கி.மு. 700). பாபிலோனியாவும் அஸிரியப் பேரரசிலிருந்து பிரிந்தது. இறுதியில் இவ்விரு நாடுகளும் அஸிரியப் பேரரசைத் தமக்குள் பங்கிட்டுக் கொண்டன. மீடியா ஒரு பேரரசாக மாறியது. நாடு பிடிக்கும் ஆசை மீடியாவின் மன்னர்களைப் பற்றிக் கொள்ளவே, அண்டையிலுள்ள லிடியா (Lydia) நாட்டை அவர்கள் தாக்கினர். ஆனால் சூரிய கிரஹணம் ஒன்று திடீரென ஏற்பட்டதன் விளைவாக மீடியா, லிடியாவோடு சமாதானத்தைச் செய்து கொண்டது. பின்னர் இவ்விரு நாடுகளுக்கும் திருமண உறவும் ஏற்படலாயிற்று.

லிடியர் கிரேக்கக் குடியேற்றங்களைக் கைப்பற்றுதல்

லிடிய நாடு நாளடைவில் செல்வத்திலும் செல்வாக்கிலும் வளரலாயிற்று. எனவே அதன் மன்னர்கள் அண்டையிலுள்ள கிரேக்கக் குடியேற்றங்களின் மீது ஆதிக்கம் செலுத்த அவாவினர். அப்போது ஆசியாமைனர் நிலப்பகுதியில் கிரேக்கர்கள் ஏராளமாகக் குடியேறி இருந்தனர். நாம் முன் அத்தியாயத்தில் கண்டபடி மூன்று பெருங் குடியேற்றங்கள் அங்கு நிறுவப்பட்டன. அவற்றுள் மிகவும் முக்கியமானது அயோனியர்களால் ஏற்படுத்தப்பட்ட குடியேற்ற நாடுகளின் தொகுதியேயாகும். அயோனியா என்றழைக்கப்பட்ட அத் தொகுதியில் பன்னிரண்டு நகர அரசுகள் இருந்தன. அவற்றில் கிரேக்கக் கலையும், இலக்கியமும், ஏனைய பண்பாடுகளும் நன்கு மலர்ச்சியடைந்திருந்தன. கலைத்துறையில் தாய்நாட்டினரையும் ஒருபடி விஞ்சியவர்களாய்ச் சேய் நாட்டினர் திகழ்ந்தனர். வாணிகத்தில் நன்கு ஈடுபட்டு அவர்கள் பெரும் பொருள் ஈட்டி வைத்திருந்தனர். அவர்களது செல்வமும் செல்வாக்கும் லிடியர்களின் கண்களை உறுத்தின எனின் வியப்பொன்றுமில்லை. கி. மு. 700 முதல் கி. மு. 546 வரையிலுள்ள இடைக்காலத்தில் லிடியர்கள் அயோனியக் குடியேற்றங்களைச் சிறிது சிறிதாக வென்று நம் நாட்டோடு சேர்த்துக்கொள்ளலாயினர். கிரீஸஸ் (Crosues)

என்ற ஐந்தாவது மன்னர் காலத்தில் (கி. மு. 560–46) லிடியாவின் புகழ் உச்ச நிலை எய்தியது. ஆசியாமைனரிலிருந்த கிரேக்கக் குடியேற்றங்கள் அனைத்தையும்வென்றுஅவர் தம் அடிப் படுத்தினர். மைலிடஸ் (Miletus) என்ற ஒரு நகரத்தைத் தவிர ஏனைய கிரேக்க நகரங்கள் யாவும் லிடிய மன்னருக்கு அடிபணிந் தன. ஆனால் விரைவிலேயே வென்ற நாட்டுக்கும், வெல்லப் பட்ட நாடுகளுக்குமிடையே நேசம் வளர ஆரம்பித்தது. கிரேக்கமும் லிடியமும் தமக்குள் பரஸ்பரம் நாகரிகத்தைப் பரிமாறிக்கொள்ளலாயின. கிரேக்க நாகரிகத்தில் உள்ளங்களைப் பறிகொடுத்த லிடியர்கள் கிரேக்க மொழியைப் பயின்று, கிரேக்கப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்கலாயினர். கிரீஸஸ் மன்னர் டெல்ஃபிக் குறிமேடைக்குச் சென்று அங்குள்ள அபோலோ தெய்வத்தின் அறிவுரைகளைக் கேட்டு வரலானர். டெல்ஃபியி லிருந்த மத குருமார்களின் ஆதரவைப் பெறவும் நாளடைவில் தம்மை ஒரு கிரேக்கராக மாற்றிக்கொள்ளவும் வேண்டியே அவர் டெல்ஃபியின் குறிசொல்லும் தெய்வத்தை நாடினரெனலாம். மற்றும் தமது ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த கிரேக்கக் குடி யேற்ற நாடுகள், தம்மை எதிர்க்காமலிருக்கும்படி அக் குறி சொல்லும் தெய்வம் அவைகளுக்கு அறிவுரை கூறக்கூடும் என்றும் அவர் நம்பினர். எனவே, டெல்ஃபிக் கோயிலுக்குப் பொன்னும் பொருளும் ஏராளமாகப் பரிசாக வழங்கினர்.

லிடியர்களிடமிருந்து ஆசியாமைனரைச் சேர்ந்த கிரேக்கர் களும் பல நன்மைகளைப் பெற்றனர். லிடியாவிடமிருந்தே அவர்கள் நாணயங்களின் பயனை அறிந்துகொண்டனர். அவர் களது வாணிகம் லிடியாவில் பெரிதும் பரவியது. லிடியர்களின் ஆடம்பர வாழ்க்கையையும், ஆட்சி முறையையும் கிரேக்கர்கள் கைக்கொண்டனர். லிடியாவின் சர்வாதிகாரிகளைமுன்மாதிரியாகக் கொண்டு பல சிறு சர்வாதிகாரிகள் கிரேக்க நகர அரசுகளில் தோன்றினர். மற்றும் ஏறக்குறையத் தங்களை ஒத்து விளங்கிய லிடியருக்கு உட்பட்டிருப்பதை ஒரு பெருமையாகவே கிரேக் கர்கள் எண்ணினர். பழக்கவழக்கங்களிலும் மொழியிலும் பெரிதும் வேறுபட்ட கீழைப் பேரரசுகளின் கைகளில் தாங்கள் விழாமலிருக்க லிடியா ஒருதடையாக இருப்பதை அவர்கள் வரவேற்றனர். அவர்கள் இவ்விதம் நினைக்க, தெய்வம் வேறொன்று நினைத்தது. எது நடக்கக்கூடாது என்று கிரேக் கர்கள் அஞ்சினர்களோ அது நடந்துவிட்டது. பாரசீகர்கள் முதலில் லிடியாவையும், பின்னர் கிரேக்க நகரங்களையும் கைப் பற்றிக்கொண்டனர்.

பாரசீகர் கிரேக்கக் குடியேற்றங்களைக் கைப்பற்றல்

கைரஸ் கி. மு. 558-529

கி. மு. ஆறும் நூற்றாண்டில் பாரசீகப் பேரரசைத் தோற்றுவித்த கைரஸ் (Cyrus) எனும் மாமன்னர் புதிய நாடுகளை வென்று பாரசீகத்தோடு இணைப்பதில் கண்ணுங்கருத்துமாயிருந்தார். கி. மு. 549-இல் அவர் மீடியா (Media) நாட்டைத் தாக்கிக் கைப்பற்றிக்கொண்டார். அதன் அரசரான அஸ்டியேஜஸ் (Astyages) என்பார், தம் நாட்டைவிட்டே ஓடிப்போனார். இதைக் கண்ட அவரது மாமனரும் லிடிய நாட்டு மன்னருமான கிரீஸஸுக்கு மனத்தில் கிலிபிடித்துக்கொண்டது. மீடிய நாட்டுக்கு நேர்ந்த கதி அதன் அண்டையிலிருந்த லிடிய நாட்டுக்கு நேர வெகுகாலம் பிடிக்காது என அவர் அஞ்சினார். தமது நாடு பிடிக்கும் ஆசையில் மண்ணைப் போட எத்தனித்த பாரசீகத்தை அவர் வெறுத்தார். தமது மருமகனின் நாட்டை மீட்கவும் தமது பேரரசை விரிவு படுத்தவும் அவர் விரும்பினார். எனினும் பாரசீகப்பேரரசை எதிர்க்க அவருக்குத் துணிவு ஏற்பட வில்லை. எனவே டெல்ஃபிக்குச் சென்று குறி கேட்டார். ஹாலிஸ் (Halys) நதியைக் கடந்துவிட்டால் அப்புறம் அவரை யாரும் வெல்ல முடியாது என அக்குறிபீடம் அருடம் கூறிற்று. அதை நம்பினார் கிரீஸஸ். அதனல் ஸ்பார்ட்டாவோடு ஒரு பயனற்ற நட்பு உடன்பாட்டையும் அவர் செய்துகொண்டார். அதன்பின் துணிந்து அவர் பாரசீகருக்கெதிராகப் போரிலிறங்கினர். விரைவிலே சென்று ஹாலிஸ் நதியைக் கடந்தார். டெல்ஃபி தெய்வத்தின் ஆருடப்படி வெற்றி தம்மை வந்தடையுமென்று நம்பி மேலும் முன்னேறினர். ஆனல் விரைவிலேயே கைரஸிடம் படுதோல்வி யெய்திக் கைது செய்யப்பட்டார். அவரது தலைநகரான ஸார்டிஸ், கைரஸ் வசப்பட்டது. இங்ஙனம் லிடியாவும் பாரசீகப் பேரரசுக்கு உட்பட்டது. பாரசீகர்கள் லிடியாவைப் பிடித்துத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்ததும், ஆசியா மைனரைச் சேர்ந்த கிரேக்கர்கள் தங்கட்கும் அதே கதி நேரும் என அஞ்சினர். அவர்களின் அச்சம் மெய்யாயிற்று. கைரஸ், லிடியாவிற்கெதிராய்ப் போர் தொடுக்கையில் கிரேக்கர்களை — குறிப்பாக அயோனியர்களைத் தம்முடன் சேர்ந்து கொள்ளும்படி வேண்டிக் கொண்டார். ஆனல் அவர்கள் மறுத்து விட்டார்கள். ஏனெனில் கிரீஸஸினுடைய பகையை அதன் மூலம் சம்பாதிக்க அவர்கள் விரும்பவில்லை. மேலும் கிரீஸஸை யாரும் வெல்ல முடியாது என்றும் அவர்கள் எண்ணினர். ஆனல் கைரஸ், லிடியாவைப் பிடித்ததும் கிரேக்கர்கள் அவருடன் இணைந்து அவர்தம் தயவைப் பெற எத்தனித்தனர். கைரஸ்

அதற்கு ஒப்பவில்லை. மேலும் மிலிட்டஸ் நகரத்தோடு மட்டும் கைரஸ் உடன்படிக்கை செய்துகொண்டார். இது கைரஸின் திட்டமான—கிரேக்கர்களை வீழ்த்தும் படலத்தின் ஆரம்பத்தைக் குறித்தது. அதன்படியே தமக்குள் ஒற்றுமையற்றும் பலவீன மாயிருந்த கிரேக்கர்கள் பாரசீகத்தின் ஆதிக்கத்திற்கு எளிதில் அடிபணிந்தனர். கிரேக்கர்கள் ஸ்பார்ட்டாவைத் தங்கள் உதவிக்கு அழைத்தனர். ஆனால் அதுவும் கிடைக்கவில்லை. எனவே ஆசியக்கிரேக்கம், கைரஸின் காலடியில் வீழ்ந்தது. கைரஸ், கி. மு. 529-இல் மாண்டார். அவருக்குப் பின்னால் வந்த அவரது வாரிசான கேம்பைஸஸ் (Cambyses) (கி. மு. 529-22) தம் ஆதிக் கத்தின் கீழ் எகிப்து, கைரீன் (Cyrene) ஆகிய நாடுகளைக் கொணர்ந்தார்.

தரியஸ் கி. மு. 521-485

கேம்பைஸஸின் மரணத்துக்குப் பின், போலி மன்னன் ஒருவன் பாரசீகச் சிம்மாசனத்தைப் பிடித்தான். ஆனால் உண்மையில் கேம்பைஸஸின் வாரிசு யாரெனில் ஹிஸ்டாஸ்பஸ் (Hystaspus) என்பவராவர். ஹிஸ்டாஸ்பஸ் திறன் அற்ற ஒரு கோழை. ஆனால் அவர் மகன் தரியஸ் என்பவன் மிகுந்த வீரனும்-தந்தையை விஞ்சும் தனயனுமாக் காணப்பட்டான். இவன் விரைவிலேயே ஆட்சிக்கு வந்து, போலி மன்னனைத் துரத்திவிட்டு அரியணையில் அமர்ந்தான். இவன் பாரசீக மன்னனுமான கைரஸின் மகளும், மாண்ட கேம்பைஸஸின் மனைவியுமான டோசா (Ptossa) எனும் பெண்ணை மணமுடித்தான். இவனது ஆட்சியின் கீழ், ஆசிய மைனரானது இரண்டு பெரும் பிரிவுகளாய்ப் பிரிக்கப்பட்டு ஆளப்பட்டது. அயோனியாவும் லிடியாவும் சார்டிஸைத் தலைநகராகக் கொண்டு ஒரு பகுதியாய்ப் பிரிக்கப்பட்டது. அதேவமயம் பிரிஜியாவும் (Phrygia) இன்ன பிற கிரேக்க நகரங்களும் டாஸிலியன் (Dasylion) என்னும் தலை நகரைக் கொண்டு ஆளப்பட்டு வந்தன. மேற்கூறிய இரண்டு பகுதிகளிலும் இரண்டு மண்டல ஆட்சியாளர்கள் ஆண்டு வந்தனர். அவர்கள் கிரேக்க நகரங்களின் உள் விவகாரங்களில் தலையிடாதவர்களாய் விளங்கினர். ஏனெனில் அவைகள் அந்நாளில் சர்வாதிகாரிகளால் ஆளப்பட்டன. அத்தகைய சர்வாதி காரிகளின் ஆட்சியை எந்தவிதத் தலையீடுமின்றி அவ்வண்ணமே பாரசீகர்கள் விட்டிருந்தனர். ஏனெனில் அவர்கள் பாரசீக மாநிலத் தலைவர்களுக்கு ஒழுங்காகக் கப்பம் செலுத்தி வந்தனர். ஆசியக் கிரேக்கர்கள் அரசியல் ரீதியில் தங்கள் சுதந் திரத்தை இழந்திருப்பினும் பொருளாதாரத் துறையில் பாரசீக ஆட்சியானது அவர்களுக்கு நல்ல முன்னேற்றத்தை அளித்தி

ருந்தது. தரியஸ் பலவிதச் சீர்திருத்தங்களை அங்குக் கொணர்ந்தார்; நாணயங்களைப் புதுப்பித்தார்; நீண்ட சாலைகளை அமைத்தார். அவைகளுள் முக்கியமானது சார்டிஸ் நகரத்திலிருந்து சூசாவிற்குச் சென்ற சாலையாகும். அதன் நீளம் சுமார் 2500 கிலோமீட்டர்கள் என்பர். இந்தச் சாலை, வாணிகம், போக்குவரத்து ஆகிய துறைகளை வளப்படுத்த உதவியது. இதன் பயனைக் கிரேக்க நாகரிகத்தைப் பாரசீகம் நன்கு அறிந்துகொள்ள ஏதுவாயிற்று.

தரியஸ் மன்னரின் முதலாம் ஐரோப்பியப் படையெடுப்பு (கி. மு. 512)

மேலை நாடுகளில் தம் நாட்டின் புகழையும் ஆதிக்கத்தையும் பரவச் செய்யத் துணிந்த தரியஸ் மன்னர், அதற்கான படையெடுப்புகளை விரைவிலேயே மேற்கொண்டார். கி. மு. 512-இல் அவரும் அவரது படைவீரர்களும், 600 கப்பல்களை ஒருங்கிணைத்து அமைக்கப்பட்ட ஒரு பாலத்தின் வழியாகப் பாஸ்போரஸைக் (Bosphrous) கடந்து திரேஸை (Thrace) அடைந்தனர். அஞ்சாநெஞ்சராகிய தரியஸ் அங்குப் பல வெற்றிகளைப் பெற்றார். தாம் பிடித்த நாடுகளைக் கொடிய ஸைத்தியர்கள் (Seythis) என்னும் வர்க்கத்தினிடமிருந்து காக்க எண்ணி டான்யூப் (Danub) பள்ளத்தாக்கைக் கடந்து சென்று அன்னவரின் நாட்டையடைந்தார். அவர்களை அடக்கிய பின்னர், தரியஸ் மீண்டும் திரேஸ் நாட்டையடைந்து, பின் ஹெல்லஸ்பாண்ட் வழியாகத் தம் நாட்டையடைந்தார். தாய்நாடு திரும்பும் வழியில் ஆசியா மைனரிலிருந்த கிரேக்க நகர அரசுகளான பெரின்தாஸ் (Perinthus), கால்கிடன் (Chalcedon), பைசான்டைன் (Bysantini) ஆகியவை, பாரசீகரை எதிர்த்துக் கலகத்திலிறங்கியுள்ளதாக அறிந்தார். பாரசீகப்போர் என்னும் நாடகத்தின் முதல் அங்கமான அயோனியர் கலகம் தொடங்கியது.

பாரசீகர்களுக்கு எதிராக அயோனியர் கலகம்

கி.மு. 499-494-இல் பாரசீகர்களின் ஆதிக்கத்தை அயோனியர்கள் (Ionians) எதிர்த்ததற்குப் பல காரணங்களை நாம் கூறலாம். அவைகளில் முக்கியமாகக் கருதப்படுபவைகள், இரு சாரருக்குமிடையே மதம், பண்பாடு, அரசியல், இனம் ஆகிய துறைகளில் காணப்பட்ட வேறுபாடுகளாகும். பாரசீகர்கள் கலையாலும், பண்பாலும், மொழியாலும், இனத்தாலும் இன்னபிற பண்புகளாலும் கீழைநாடுகளில் வாழ்பவர்களை ஒத்தவர்கள்; செமிடிக் இனத்தவர்கள். எனவே, அவர்கள் கிரேக்க மதத்தினையும், கிரேக்கக் கடவுளர்களையும் அவமதித்தனர். மேலும்

கிரேக்கர்கள் இயல்பாகவே சுயேச்சையை விரும்புபவர்களாயும், குடியரசை ஆதரிப்பவர்களாயும், சிறிய நகர அரசு அமைப்பில் வாழ விரும்புபவர்களாயும் காணப்பட்டனர். அதேவமயம் பாரசீகர்கள் முடியாட்சியையும், வரம்பற்ற வல்லரசையும் பரந்த பேரரசையும், அடக்கு முறையையும் ஆதரிப்பவர்களாகக் காணப் பட்டனர். பாரசீக அரண்மனைகளில் கடைப்பிடிக்கப்பட்ட மரியாதைமுறைகள்கூட அடிமைத்தனமானதாகக் கிரேக்கர் களுக்குத் தோன்றியது. மேலும் தங்களது நகரங்களில் சர்வாதிகாரிகளின் ஆட்சியைப் பாரசீகர் ஆதரித்ததை அவர்கள் வெறுத்தனர். பாரசீகப் பேரரசானது இருபது மாநிலங்களாகப் பகுக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஒவ்வொரு சாட்ரப் (Satrap) எனப் படும் ஆளுநரின் அதிகாரத்தின் கீழ் இயங்கி வந்தது. ஒவ்வொரு மாநில ஆளுநரும் பேரரசருக்கு நிரந்தரமான–திட்ட வட்டமான கப்பம் ஒன்றை ஆண்டுக்கொருமுறை செலுத்தி வந்தனர். இத்தகைய முறையானது லிடியா, பிரிஜியா (Phrygia) என்னும் இரண்டு கிரேக்க மாநிலங்களைப் பெரிதும் பாதித்தது. மேலும் பாரசீக மன்னாரன தரியஸ் (Darius) தமது சைத்தியப் படையெடுப்புக்காக (Seythian Expedition) 600 கப்பல்களைக் கட்டித்தரும்படிக் கிரேக்க நகரங்களைக் கட்டாயப்படுத்தினர். அந்நிய மன்னர் ஒருவரால் வலுக்கட்டாயமாகத் திணிக்கப் பட்ட இத்தகைய படைமானிய முறையைக் கிரேக்க நகரங்கள் எதிர்த்தன. கெர்சோனீஸ (Chersonese) நாட்டு மன்னனை மில்டியாடிஸ் (Miltiades) என்பவரின் தலைமையின் கீழ்ப் பல சர்வாதிகாரிகள் ஒருங்கிணைந்து டான்யூப் நதியின் குறுக்கே இருந்த ஒரு பாலத்தை உடைத்து, ஸைத்தியா மீது படை யெடுத்துச் சென்றவர்கள் மீண்டும் திரும்பிவரவொண்ணவாறு தடுக்க எத்தனித்தனர். ஆனால், இந்த முயற்சியானது மைலிடஸ்நகரச் சர்வாதிகாரியான ஹிஸ்டியாஸ் (Histiaeus) என்பவரின் குறுக்கீட்டால் தடைப்பட்டு விட்டது. இத்தகைய நிகழ்ச்சிகளிலிருந்து ஆசியக் கிரேக்கர்கள் பாரசீகர்களின் மீது எவ்வளவு வெறுப்படைந்திருந்தார்கள் என்பது வெள்ளிடைமலை போல் தெள்ளிதின் விளங்குகின்றது. அயோனியர்களின் எதிர்ப்புக்கு உடனடியான காரணமாய் அமைந்த நிகழ்ச்சி, அரிஸ்டாகோரஸ் (Aristagoras) என்பார் நெக்ஸாஸ் நகரைப் பிடிக்கத் தவறியதுதான். நெக்ஸாஸ் நகரில் செல்வச் சிறு குழு ஆட்சியாளர்க்கும், மக்களாட்சி வாதிகளுக்கும் மோதல் ஏற்பட்டுச் செல்வந்தர்களான சிலர் நகரத்தினின்று மக்களாட்சி வாதி களால் விரட்டப்பட்டனர். அவர்கள் நேரே சென்று மைலிடஸ் தேயச் சர்வாதிகாரியான அரிஸ்டாகோரஸிடம் தஞ்ச மடைந்தனர். அரிஸ்டாகோரஸ், சார்டிஸ் நகரம் சென்று பாரஸ

சீகரிடம் வேண்டிக் கடற்படை ஒன்றைப் பெற்றார். மெகாபடிஸ் (Megabetes) என்பவரின் தலைமையின் கீழ் அப்படை புறப்பட்டது. ஆனால், அரிஸ்டாகோரஸிற்கும் மெபடிஸிற்கும் இடையே ஏற்பட்ட ஓர் மனக்கசப்பு அந்த மாபெரும் படையெடுப்புத் திட்டத்தையே சீர்குலைத்து விட்டது. எப்படியெனில் மெகாபடிஸ் தமது வருங்காலப் படையெடுப்புப் பற்றிய இரகசியத்தை நாக்ஸாஸ் நகர மக்களுக்கு வெளியிட்டுவிட்டார். எனவே, நாக்ஸாஸியர்கள் எச்சரிச்கையடைந்துவிட்டனர். அரிஸ்டாகோரஸ், தோல்வியோடு திரும்ப வேண்டிய நிலையேற்பட்டது. இதன் விளைவால் அரிஸ்டாகோரஸின் நிலை சீர்குலைந்தது மட்டுமன்றிப் பாரசீகப் பேரரசின் பொன்னையும் பொருளையும் வீணாக்கியவர் என்ற இழிபெயரும் அவரை வந்தடைந்தது. மேலும், ஆர்ட்டாபர்னஸ் என்ற பாரசீக ஆளுநரின் ஆதரவையும் நம்பிக்கையையும் அவர் இழக்க நேரிட்டது. மெகாபடிஸின் நிரந்தரப் பகைமையையும் அவர் அடைந்தார். எனவே, அரிஸ்டாகோரஸ் தம் பழைய நிலையை மீண்டும் அடைய ஆசியக் கிரேக்கர்களைப் பாரசீகர்களுக்கு எதிராகத் தூண்டிவிடத் திட்டமிட்டார். இந்தத் திட்டத்தில் அரிஸ்டாகோரஸிற்கு உறுதுணை புரிந்தவர் அவர் மாமனான ஹிஸ்டியாஸ் (Histiaeus) என்பவர். அயோனியப் புரட்சியின் அடிப்படை நோக்கம் என்னவெனில் அயோனியாவிலிருந்த எல்லாச் சர்வாதிகாரிகளையும் வெளியேற்றுவதாகும். ஏனெனில் அவர்கள் கிரேக்கச் சுதந்திரத்திற்கு வித்திடாமல் பாரசீக ஆதிக்க வெறியரின் கையாட்களாகவே பணிபுரிந்து வந்தனர். முதன்முதலில் அரிஸ்டாகோரஸ், மைலிடஸ் நகரில் தமது சர்வாதிகாரப் பதவியைத் துறந்து ஜனநாயக அரசை நிர்மாணித்தார். இதன் நிமித்தமாய் அவர் கிரேக்க நாடுகளுக்குச் சென்று அங்குள்ள முக்கிய நாடுகளின் உதவியைப் பெற முயன்றார். ஸ்பார்ட்டாதேயம் அரிஸ்டாகோரஸிற்கு உதவ மறுத்து விட்டது. அதேவமயம் ஆதென்ஸும் எரித்ரியாவும் (Athens and Eritrea) சுமார் 25 கப்பல்களைக் கொடுத்து உதவின. இந்த உதவியைக் கொண்டு அரிஸ்டாகோரஸ், சார்டிஸ் நகர் மீது படையெடுத்து அதனைப் பிடித்தார். ஆனால் அதன் மலை அரணைப் பிடிக்க அவரால் முடியவில்லை. இச் சமயத்தே துரதிருஷ்ட வசமாகச் சார்டிஸ் நகரம் தீப்பற்றிக்கொண்டு எரிந்து அழிந்தது. இதனால் தரியஸின் மனத்தில் சினத்தீ மூண்டது. இதற்கு அரிஸ்டாகோரஸும் அவரின் தோழமை நாட்டினர்களுமே காரணம் என அவர் நினைத்தார். ஆனால் உண்மையில் அவர்கள் நகருக்குத் தீ வைக்கவில்லை. தற்செயலாக அது நிகழ்ந்தது. எனினும் அரசர் தரியஸ், கிரேக்கரைப் பழிவாங்க

எண்ணினர். இதன் பின்னர் எப்பிஸஸ் (Ephesus) அருகே நடைபெற்ற கடற்போரில் பாரசீகர்கள் பெரு வெற்றி பெற்றனர். இதன் விளைவால் எத்தீனியர்களும் எரிட்ரியர்களும் தாயகம் திரும்பினர். பாரசீக மன்னர் தரியஸ் (முதலாம் தரியஸ்) அத்தீனியர்களின் மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ளச் சூளுரை எடுத்துக்கொண்டார். அரிஸ்டாகோரஸ், திரேஸ் (Threce) நகருக்கு ஓடி விட்டதால் அவரது நாட்டில் கலகம் சிறிது அடங்கினும், மீண்டும் அது ஏனியோர்களால் கிளறப்பட்டுக் காட்டுத் தீ போல் பரவியது. ஆனால் ஆசியக்கிரேக்கர்களின் ஒற்றுமையின்மையால் அவர்களது எதிர்ப்பும் கிளர்ச்சியும் நிலைகுலைந்து அவை சரணகதியடைந்தன (494 கி. மு.). மேலும் பாரசீகர்கள் அவர்களை லேட் (Lade) என்னும் கடற்போரில் தோற்கடித்து மிலிடஸைப் பிடித்துக்கொண்டனர். அதோடு கிரேக்கக் குடியேற்ற நாடுகளின் கலகம் பூரணமாக ஓய்ந்தது.

அயோனியக் கிளர்ச்சி தோற்கக் காரணங்கள்

அயோனியர்கள் வர்த்தகத்திலும், பொருளாதார நடவடிக்கைகளிலும் வல்லவர்கள். ஆனால் போர் முறைகளில் அவர்கள் கற்றுக்குட்டிகள் என்றே சொல்லலாம். மேலும் ஐரோப்பியக் கிரேக்கர்களைப் போல் அவர்கள் ஒருங்கிணைந்து பகைவர்களை முறியடிப்பதில் வல்லவர்களாயில்லை. ஆசியக்கிரேக்கர்கள் படைத்தலைமையிலும், படையை நடத்தும் திறங்களிலும் சற்றுக் குறைபாடுடையவர்கள். இதற்கு மாறாக நைல் நதிப் பள்ளத்தாக்குகள், யூப்ரடிஸ் – டைகிரிஸ்பள்ளத்தாக்குகள், ஆசியாமைனர் போன்ற வர்த்தகத் தலங்களின் அதிபதியும் மன்னருள் மாணிக்கமுமாய் விளங்கிய தரியஸ், படை அணிவகுப்பிலும், இன்னும் பல இராணுவ முறைகளிலும் மாமேதையாகையால், அயோனியர்களை எறும்பென நசுக்கிவிட்டார்.

விளைவுகள்

அயோனியப் புரட்சியானது, பாரசீகர்களின் செல்வாக்கை ஐரோப்பாவில் மேலும் அதிகரிக்கச் செய்தது. கிரீஸ் மீது படையெடுக்கும்படி அது பாரசீகத்தைத் தூண்டியது. அயோனியப் புரட்சியானது ஆசியக்கிரேக்கர்களைப் பாரசீக அடிமைகளாக மாற்றியதோடல்லாமல் ஐரோப்பிய நாகரிகத்திற்கு அது ஒரு மாபெருந் தோல்வியாக அமைந்தது. மாமன்னன் டேரியஸிற்கு இப்போது மூன்று முக்கியக் குறிக்கோள்கள் மனத்தில் குடிகொண்டன. ஆசியா கிரேக்கர்களை அமைதியாக ஒருவழிப்படுத்துவது, திரேஸ் நாட்டைத் திரும்பப் பிடிப்பது, ஆதென்ஸ் மக்களை

யும், எரித்ரிய மக்களையும் வஞ்சம் தீர்ப்பது என்பவைகளே அக் குறிக்கோள்களாகும். அயோனியப் புரட்சியின் விளைவால் கிரேக்கர்கள் வல்லாட்சியை (Dpotism) வெறுக்கின்றனர் என்ற உண்மையை தரியஸ் அறிந்துகொண்டார். எனவே தாம் பிடித்த கிரேக்க நகர அரசுகளில் மக்களாட்சியை நிறுவ அவர் எத்தனித்தார். மேலும் ஒரு நகரம் இன்னென்றோடு சண்டையிடும் வழக்கத்தையும் அவர் தடுத்தார்.

மாமன்னர் தரியஸின் இரண்டாம் ஐரோப்பியப் போர் கி. மு. 492


ஏற்கெனவே திரேஸ் தேயம் பாரசீகர்களால் பிடிக்கப்பட்டு அவர்களது வல்லாட்சியின் கிழ் சுமார் 15 வருடங்கள் நிலைத்திருந்தது. பின்னர் அயோனியர்களின் புரட்சியின் போது அது அவர்கள் வசமிருந்து கை நழுவியது. கி. மு. 492-இல் தரியஸ், தம் மருமகனை மார்டோனியஸ் (Mardonius) என்பாரை மீண்டும் திரேஸைப் பிடிக்க ஏவினர். அவருடன் தரைப்படை ஒன்றும் கடற்படை ஒன்றும் சென்றன. அவற்றின் உதவி கொண்டு அவர் திரேஸைப் பிடித்தார். மேலும் மாஸிடோனியா நாட்டு மன்னரான பத்தாம் அலெக்ஸாந்தரை இவர் அடிபணிய வைத்துத் திரையையும் பெற்றார். ஆதென்ஸ் எரித்ரிய நகர அரசுகளைத் தண்டிக்க எண்ணி அவற்றை நோக்கிப் புறப்பட்டார். ஆனால் வழியில் ஆதாஸ் மலைக்கு (Mount Athos) அருகே அவனது கப்பற்படையின் ஒரு பகுதி புயற்காற்றினால் அழிந்தது. எனவே அவர் தம் படை எடுப்பைக் கைவிட்டு நாடு திரும்பினர்.

(2) பாரசீகர்களின் முதலாம் படையெடுப்பு (கி. மு. 490)

தரியஸ் மன்னன் இன்னும் திருப்தியடைந்தபாடில்லை. தம் உள்ளத்தின் குறிக்கோள்கள் இன்னும் சரிவர நிறைவேறவில்லை என்னும் எண்ணம் அவரை வாட்டியது. எனவே ஈஜியன் கடலைக் கடந்து கிரீஸ் நாட்டைத் தாக்கத் தம் படை ஒன்றை ஏவ அவர் எத்தனித்தார். ஆதென்ஸ் நகரிலிருந்து நாடு கடத்தப்பட்டுப் பாரசீக அரண்மனையில் தஞ்சம் புகுந்திருந்த ஹிப்பியாஸ் என்னும் சர்வாதிகாரி தரியஸின் திட்டத்துக்கு ஆதரவு தந்ததோடு உளவும் சொல்லிக்கொடுத்தார். எனவே பெரும் படை ஒன்றைத் திரட்டத் தரியஸ், கிரீஸ் நாட்டை நோக்கி அதை அனுப்பி வைத்தார். பாரசீகக் கப்பற் படையின் மரக்கலங்களும், ஏனைய உதவிநாடுகளின் கலங்களும் ஒருங்கிணைந்து ஈஜியன் கடலைக் கடக்க வீரர்களுக்கு உதவின. இவைகள்

ஸாமஸ் (Samos) துறைமுகத்தில் ஒன்று சேர்ந்து புறப்பட்டன. ஆதென்ஸ், எரித்ரியா நாடுகளைத் தவிர ஏனைய நாடுகளுக்குத் தரியஸ் தன் தூதர்களை அனுப்பி அவர்களைத் தமக்கு அடிபணிய வேண்டினர். அர்டாபர்னஸ் (Artaphernes) என்னும் பாரசீக ஆளுநர், படைகளுக்குத் தலைமை தாங்கி நடத்திச் சென்றார். டேடிஸ் (Datis) எனும் தளகர்த்தரும் உடன் சென்றார். அவருக்கு உறுதுணையாக, அத்தீனியர்களால் விரட்டப்பட்ட ஹிப்பியாஸ் என்னும் சர்வாதிகாரியும் சென்றார்.

சாமாஸ் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட படைகள் நாக்ஸாஸ் நகரை அடைந்து அதைப் பிடித்துக்கொண்டன. பின்னர் அந்தப் படைகள் வடமேற்குத் திசையில் பயணத்தைத் தொடங்கின. வழியில் சைக்லடீசுகள் என்ற தீவுக் கூட்டத்தை அவை கைப்பற்றின. பின்னர் அந்தப் படைகள் அத் தீவிற்கும், யூபியாவிற்கும் (Eubiea) இடையிலுள்ள நீரிணைப்பின் வழியாகச் சென்று எரித்ரியன் கடலை அடைந்தன. எரித்ரிய நாடானது ஏனைய கிரேக்க நாடுகளினின்றும் தனியே பிரிக்கப்பட்டு விட்டது. டோரியஸின் படைகள் எரித்திரியாவை நோக்கி வந்தவண்ணமிருக்கின்றன என்பதைக் கேள்விப்பட்டும் கூட ஒரு நகர அரசுகூட எரித்ரியாவுக்கு உதவிசெய்ய வரவில்லை. ஆறுநாளைய முற்றுகைக்குப் பின்னர் எரித்ரியப் பட்டணம் பிடிபட்டது. வஞ்சகர்கள் சிலர் காட்டிக்கொடுத்ததால், நகரத்தின் கோட்டைக் கதவுகளைத் திறந்துகொண்டு, பாரசீகர்கள் உள் நுழைந்து கொள்ளையடித்தனர். அங்கிருந்த மக்களைப் பாரசீகர்கள் அடிமைப்படுத்தினர். ஹிப்பியாஸின் ஆலோசனையின் பேரில் பாரசீகப் படையானது நீரிணைப்பைத் தாண்டி அட்டிகாவினுள் மாரதான் சம வெளியை அடைந்தது. இதற்கிடையில் அத்தினீய அரசியல்வாதியான மில்டியாடிஸ் (Miltiades) என்பவர் பகைவர்களான பாரசீகர்களை விரட்டியடிக்க வேண்டுமென்ற புதுத் தெம்பை மக்களிடை உண்டாக்கினார். பாரசீகர்கள் ஆதென்ஸுக்கு வரும்வரை காத்திராமல் நேரே மாரதான் சமவெளிக்குச் சென்று பாரசீகப் படைகளை வழிமறித்து முறியடிக்கவேண்டுமென்று அவர் யோசனை தெரிவித்தார். ஆதென்ஸ் நகர அரசு, ஸ்பார்ட்டா நகர அரசுக்குத் தூதுவர்களை அனுப்பி, முடியுமளவுக்கு உதவி அனுப்பிவைக்குமாறு வேண்டியது. ஆனால் ஸ்பார்ட்டா தேயமானது பௌர்ணமி தினம் கழியும் வரை எந்தவித உதவிகளையும் செய்ய முடியாது எனவும், அதன்பின் வேண்டுமானால் உதவிகள் புரிய முடியும் எனவும் கூறிவிட்டது. இதையறிந்த ஆதென்ஸ், பௌர்ணமி வரை காத்திருக்கத் தான் தயாராக இல்லை என அறிவித்துவிட்டுப்



படம் 4

படையெடுப்புப் பற்றிய வேஹிகளில் தீவிரமாக இறங்கியது. பிளேடாயாவிலிருந்து (Plataea) வந்த ஆயிரம் வீரர்களடங்கிய படையின் துணை கொண்டு ஆதென்ஸின் படைகள் பாரசீகர்களை எதிர்த்தன. இந்தப் போர், மாரதான் என்னுமிடத்தில் கி. மூ.

490-இல் நடைபெற்றது. ஆதென்ஸுக்கு 40 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்திருந்த நாற்கோண வடிவமுள்ள அச் சமவெளியில் வியக்கத்தக்க வீரத்துடன் போர் புரிந்த அத்தீனியர்கள் வெற்றி வாகை சூடினர். காலிமாகஸ் (Callimachus) என்னும் ஆத்தீனியத் தளகர்த்தரின் ஒப்பற்ற படை அணி வகுப்பே இப்பெரு வெற்றிக்குக் காரணம். நடுப்படை வலிவற்றதாயும், பக்கப் படைகள் (Wings) பலம் செறிந்தனவாயும் இருக்கும் வகையில் தமது படையை அவர் அமைத்தார். பாரசீகப் படைகள் முதலில் கிரேக்க நடுப்படையை முறியடித்தன. ஆனால் கிரேக்கர்களின் பக்கவாட்டுப் படைகள் எதிரிப் படை படைகளைச் சூழ்ந்துகொண்டு பொருது, முதலில் அவைகளின் பக்கப் படைகளையும், இறுதியில் நடுப் படையையும் தாக்கித் தோற்கடித்துவிட்டன. பாரசீகர் மனமொடிந்து போர்க்களம் விட்டோடினர். பாரசீகப் படையின் பெரும்பகுதி ஒன்று கடலில் காத்திருந்தது. எனினும் பாரசீகர் மேற்கொண்டு முயற்சி ஒன்றும் எடுக்கவில்லை. மாரதான் தோல்வியால் அவ் வளவு தூரம் அவர்கள் உற்சாகத்தை இழந்திருந்தனர். எனவே கி. மு. 490-இல் பாரசீகப் படையானது கிரீஸை விட்டு அகன்றது

எல்லாம் முடிந்த பின் ஸ்பார்ட்டப் படைவீரர்கள் மாரதான் சமவெளிக்கு வந்தனர். அத்தீனியர்களின் வெற்றியைக் கேட்டு அவர்களை வாயாரப் புகழ்ந்துவிட்டுத் திரும்பினர். அத்தீனியர்களின் பக்கம் காலிமாகஸ் எனும் தளகர்த்தருட்பட 192 வீரரே மாண்டனர். ஆனால் பாரசீகப்படையில் 6400 பேர் உயிரிழந்தனர்.

மாரதான் போரின் முக்கியத்துவம்

மாரதான் போரின் மூலம் பாரசீகர்களின் உண்மையான பலம் வெளிப்படுத்தப்பட்டது. ஆதென்ஸ் நகரத்தின் வீரமும் மக்களின் குடியாட்சிப் பற்றும் தழைத்தோங்க இந்தப் போர் உதவிற்று. ஆதென்ஸ் நகர வரலாற்றில் இப்போர் சிறந்த தோர் இடத்தைப் பெற்றது. இத்தகைய போர் ஒன்று ஏற்பட்டில்லாவிடில் ஆதென்ஸ் நகரப் பொற்காலம் (கி.மு. 5-ஆம் நூற்றாண்டு என்ற பெயரையே நாம் கேள்விப்பட்டிருக்க முடியாது என்பது தேற்றம். பெரிக்ளீஸின் கால மேம்பாட்டுக்குரிய அடிக்கல் மாரதானில்தான் நாட்டப்பட்டதெனலாம். பாரசீகர்களின் சார்டிஸ்போர் அவர்களின் செல்வாக்கை உயர்த்தியது என்னவோ உண்மைதான். அதை அவர்கள் தங்களது நிரந்தர பல

மாக எண்ணிக் கொண்டு இறுமாந்தனர். எனவேதான் அவர்கள் மாரதான் போரில் புறமுதுகு காட்டினர். இதனால் அத் தீனியர்கள் பெற்ற ஆக்கமும், ஊக்கமும் அவர்களின் வருங் கால அரசியல் வெற்றிகளுக்கு வழி கோலின எனலாம். மக்க ளாட்சிக் கொள்கைக்கும் இப் போர் ஒரு மகத்தான வெற்றி யாகும். ஹிப்பியாஸ் போன்றோரின் சர்வாதிகார ஆட்சி மீண் டும் ஏற்படாவண்ணம் இப்போர் தடைசெய்தது. போர்க்காலங் களில் குடியரசு பயனற்றது என்றும், வல்லரசே பயனுடையது என்றும் கூறிவந்தவர்களின் கூற்றுக்கு இவ் வெற்றி சாவு மணி யடித்தது. மேலும் அத்தீனியர்களின் வெற்றியால் ஆதென்ஸ் கிரீஸிலேயே தலைசிறந்த இடத்தைப் பெற்றது. புற உதவி அநேகமாக இல்லாமலேயே ஒரு சிறிய நகர அரசு ஒரு பெரிய பேரரசை வென்ற செய்தி கிரீஸ் முழுவதையும் வியப்பிலாழ்த் தியது. ஆதென்ஸ், மத்தியத்தரைக்கடல்நாடுகளிலேயே தலைமையானதாகவும் எல்லாஸிலும் (Hellas) அயோனியக் கிரேக்கத்திலும் ஒளிவிளக்காகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் எல்லா நாடுகளும் இணைந்து இனிவரும் பாரசீகப் படை யெடுப்பைத் தடுக்க வேண்டியதன் இன்றியமையாமையையும் இப் போர் வற்புறுத்திற்று. அந்நியரது ஆதிக்கத்திலிருந்து கிரேக்க நாடுகள் அனைத்தையும் காத்தபெருமை ஆதென் ஸையே சாரும்.

(3) இரு பாரசீகப் படையெடுப்புகளுக்கிடையே ஆதென்ஸ் நகரத்தின் நிலை ஈஜினவுடன் போர் (கி. மு. 488)

தெற்குக் கிரேக்கத்தில் ஈஜினத்தீவுதான் அதிகம் கடலாதிக் கம் கொண்ட நாடாகத் திகழ்ந்தது. ஆதென்ஸ் நாட்டிற்கும் ஈஜினத்தீவிற்கும் அடிக்கடி வர்த்தக ரீதியாகத் தகராறுகள் ஏற்பட்டு வந்தன. பாரசீகப்போரின்போது பாரசீகர்களுக்கு உதவியாகப் படையொன்றை அனுப்பவும் ஈஜினு தயாராயி ருந்த தென்பதை ஆதென்ஸ் அறியும். ஆகவே இனிவரவிருக் கும் பாரசீகப் படையெடுப்பிற்கு ஈஜினு வேண்டிய உதவிகளைச் செய்து ஆதென்ஸ் நகரத்திற்கு எதிராக அது செயல்படக் கூடும் என ஆதென்ஸ் அஞ்சியது. முதலாம் பாரசீகப்படை யெடுப்பிற்கு முன்னர் எச்சரிக்கையாக ஆதென்ஸ் நகரம், ஸ்பார்ட்டாவிடம் ஈஜினு நாட்டின் எண்ணங்களை எடுத்தியம் பியது. ஏனெனில் ஈஜினுவும் ஆதென்ஸும் பெலப்பொனீஷியா வின் கூட்டமைப்பில் உறுப்பினர்கள் இடத்தைப்பெற்றிருந்தன.

எனவேதான் தலைமைப் பீடமான ஸ்பார்ட்டாவிடம் ஆதென்ஸ் மேற்படிச் செய்தியை எடுத்தியம்பியது. இதன் நிமித்தமாய் ஸ்பார்ட்டாவானது ஈஜினு நாட்டினின்று பத்துக் குடிமக்களைப் பிணையமாகத் (Hostages) தேர்ந்தெடுத்து, ஆதென்ஸ் மக்களுடன் வாழ வழி செய்ததுடன் பல நன்னடத்தை உறுதிகளையும் ஈஜினுவின் சார்பில் ஆதென்ஸ் நகரத்திற்கு அளித்தது. இதனைச் செய்தவர், அன்று ஸ்பார்ட்டாவின் ஆட்சியாளராய் விளங்கிய கிளியோமீனஸ் என்பவர் (Cleamenes). கிளியோமீனஸ் இறந்த பின்னர் (கி. மு. 489) ஈஜினு மக்கள் தங்களது பிணையக் குடிகள் பத்துப் பேரையும் ஆதென்ஸினின்றும் திருப்பி அனுப்புமாறு கேட்டனர். இதனை ஆதென்ஸ் நாட்டினர் மறுத்தனர். இதன் விளைவால் இரண்டு நாட்டினரிடையும் போர் மூண்டது. கி. மு. 488-இல் நடைபெற்ற ஒரு கடல் போரில் ஆதென்ஸ் நாடானது தோல்வியுற்றது. ஏனெனில் ஈஜினு, ஒரு தீவாக இருந்தமையால் கப்பற்படைவன்மையில் அது சிறப்புற்றிருந்தது. மாறுக ஆதென்ஸ் தேயம் கடற்படை அமைப்புகளால் பலமற்றதாய் விளங்கிற்று. இது ஆதென்ஸ் நகரத்தின் பிற்காலக் கடற்படை வளர்ச்சிக்கு வித்திட்டது எனில் அது மிகையாகாது. ஏனெனில் தோல்வியே வெற்றிக்கு ஏணியாகும் என்பதை ஆதென்ஸ் மக்கள் உணர்ந்திருந்தனர்.

அத்தீனியக் கப்பற்படையின் வளர்ச்சி

ஈஜினு தீவினிடம் ஆதென்ஸ் அடைந்த தோல்வியின் காரணமாய் ஆதென்ஸ் நகரத்தில் சான்றோர்களிடையே வெறும் அரசியல் சலசலப்பு ஏற்பட்டது. இதனை நன்கு உணர்ந்து தெளிந்தவராயும் அரசியல் வாதிகளின் தலையாயவராயும் விளங்கிய தெமிஸ்டாகிளிஸ் (Themistocles) என்பவர் கடற்படை அமைப்பின் அத்தியாவசியத்தை உணர்த்தினர். இவ்விதம் எல்லாத் துறைகளிலும் முன்னேறினால்தான் ஆதென்ஸ் நகரம் உலக ரீதியில் வளர்ச்சியடையும் என்பதைத் தெளிவுபடுத்தினர். மேலும் அவர் ஆதென்ஸின் ஆர்க்கனக (Archen) விளங்கிய காலை, பைரியஸ் (Piraeus) துறைமுகத்தைச் சுற்றிக் கோட்டைகளைக் கட்டினர். பழைய துறைமுகமான பலேரான் (Phaleron) பாழடைந்ததால் அது அழிக்கப்பட்டது. லாரியட் மலையின் (M.T. Larian) வெள்ளிச் சுரங்கங்களிலிருந்து கிடைத்த வரும்படியைக் கொண்டு தெமிஸ்டாகிளிஸ் சுமார் 200 கப்பல்கள் அடங்கிய கப்பற்படை ஒன்றைக் கி. மு. 482-இல் கட்டி முடித்தார்.

ஆதென்ஸ் நாட்டில் அரசியல் முன்னேற்றங்கள்

தள்ளி வைப்பு: தள்ளிவைப்பு முறைமை, கிளீயஸ்தனீஸ் காலத்திலிருந்தே பண்டைய கிரேக்கத்தில் காணப்பட்டதொன்றாக இருந்தாலும் கி. மு. 487-இல் இருந்துதான் அது பெரிதும் நடைமுறைக்கு வந்தது. ஒவ்வொரு ஆண்டிலும் ஆறுவது அவைக்கூட்டத்தில் (சட்டசபை) தள்ளிவைப்பு முறைமை பற்றிய வாக்கெடுப்பு தேவையா தேவையற்றதா என்பதை அறிவிக்கும்படிப் பொதுமக்கள் அவையை அரசாங்கம் கேட்பது வழக்கம். தள்ளிவைப்பு முறைமைக்கு ஆதரவாக வாக்குகள் அளிக்கப்பட்டால் மக்கள் அந்தந்தக் குலத்துக்கேற்பக் கூடுவர். பின்னர் அவர்கள், யார் யாரை நாட்டிற்கு அபாயமானவர்களென்றும், துன்பம் விளைவிப்பவர்களென்றும் கருதுகிறார்களோ அவர்களின் பெயர்களை ஓர் ஓட்டுத்துண்டில் எழுதித் தரும்படிக் கேட்டுக் கொள்ளப்படுவார்கள். அவை, மக்கள்மன்றத்தின் முன்னர் வைக்கப்பெறும். இவ் வாக்கெடுப்பில் ஆறுயிரம் பேர்களோ அதற்கும் அதிகமான பேர்களோ வாக்களிக்காவிட்டால் வாக்களிப்பு செல்லுபடியாகாது. எந்த நபரின் பெயர் மிக அதிகமான ஓட்டுத்துண்டுகளில் காணப்படுகிறதோ அந்த நபர் நாட்டின் எல்லைகளினின்றும் 10 ஆண்டுகள் வெளியேறவேண்டும். ஆனால் அவரது சொத்துகளுக்கு எந்தவிதத் தீங்கும் அரசினரால் ஏற்படுத்தப்படமாட்டாது. நாடுகடத்தப்பட்ட அந்தப் பத்தாண்டுகளும் கழிந்த பின்னர், அந்த மனிதர் மீண்டும் வந்து அரசிடம் தம் நன்னடத்தையைப் பற்றிப் பரிசீலிக்குமாறும் தமக்கு மீண்டும் புனர்வாழ்வு தந்து குடியுரிமைகளை வழங்குமாறும் கோருவது வழக்கம். இவ்விதமாய் ஆதென்ஸ் நகர அரசில் பணக்கார வர்க்கத்தினர் அடங்கிய அரியோபகஸ் (Areopagus) என்ற அவை, அரசியல் அமைப்பைக் கண்காணித்தும், காத்தும் வந்த நிலைமாறி அதன் பொறுப்புகளை மக்கள் ஏற்கும் நிலை உருவானது. எனவே இந்த மாற்றமானது பணநாயகம் மாறி ஜனநாயகம் வளர வழிசெய்தது எனலாம்.

ஆர்க்கன்கள் பதவி (கி. மு. 487-486)

ஐந்நூற்றுவர் அவையிலிருந்து அதாவது குலத்துக்கு 50 பேர்கள் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்நூறு பேர்களிடமிருந்து ஆர்க்கன்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நாளடைவில் இத்தகைய ஆர்க்கன்களின் அதிகாரங்கள் குறைந்து, ஐந்நூற்றுவர் அவையினரின் அதிகாரங்கள் அதிகரித்தன. படைத்தளபதியாகத் தேர்ந்தெடுக்கப்படும் போலிமார்க் என்பவர் திறமையின் அடிப்படையிலன்றிச் சாதாரணச் சீட்டுக்குலுக்கல்

முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டதால் உண்மையான வீரனை மக்கள் தேர்ந்தெடுக்க முடியவில்லை. எனவே பத்துக் குலத் தவர்களும் தகுதியினடிப் படையில் படைத்தலைவர்களைத் தேர்ந் தெடுத்தனர். நெருக்கடிக் காலங்களிலும், போர்க்காலங்களிலும் பத்துப்படைத்தலைவர்களின் ஒற்றுமையை வளர்க்கவும், பிரிவு மனப்பான்மையைத் தவிர்க்கவும் பொதுவாக ஒரு உயர் படைத் தலைவரைப் பத்துப்பேர்களிலிருந்து தேர்ந்தெடுத்தனர்.

(4) இரண்டாம் பாரசீகப் போர்

முதலாம் பாரசீகப் போரில் பெற்ற பெருவெற்றியின் விளை வாக ஆதென்ஸின் பெருமை எட்டுத் திக்குகளிலும் பரவியது. பாரசீக மன்னர் தம் நாடு பெற்ற தோல்வியால் மனம் கவன்றார். மாண்ட தம் நாட்டின் பெருமையை மீண்டும் நிலைநாட்ட வஞ்சினம் பூண்டார். தரியஸ் கி. மு. 485-இல் மரித்தபிறகு அவர் தம் வழித்தோன்றலான ஸெர்க்ஸஸ் (xerxes) கிரேக்க நாட்டை வெல்ல மிகவும் ஆவல் கொண்டார். மார்டோனியஸ் (Mardonius) எனும் அவரது ஒன்றுவிட்ட சகோதரர் அவரது ஆவலை மேலும் தூண்டினர். அவரது மேற்பார்வையில், பார சீகப்படை பலப்படுத்தப்பட்டது. 'கப்பற்படையும் நிலப்படை யும் எப்பொழுதும் ஒருங்கிணைந்தே போர் புரிதல் வேண்டும்' என்று மன்னர் ஆணையிட்டார். ஹெல்லஸ்பாண்ட் (Helles-pont), ஸ்டிரைமான் நதி (Strymon) ஆகியவற்றில் குறுக்கே பாலங்கள் அமைக்கப்பட்டன. டோரிஸ்கஸ் (Doriscus), தெர்மா (Terma) போன்ற இடங்களில் படைவீரர்கட்குத் தேவையான பொருட்களை வழங்கும் அங்காடிகளும் அமைக்கப்பட்டன. ஆத்தோஸ்மலைப் பூசந்தி வழியாகக் கால்வாய் ஒன்றையும் ஸெர்க்ஸஸ் வெட்டினர். கிரேக்கர்களும், பாரசீகர்களும் இரண்டாம் படையெடுப்பை எதிர்நோக்கியிருந்தனர். குறிப்பாக ஆதென்ஸ் நகர மக்கள் பாரசீகரை மீண்டும் தோற்கடிக்க வேண்டிய ஆயத்தங்களைப் பத்து ஆண்டுகளாகச் செய்த வண்ணமிருந்தனர். அரிஸ்டைடஸ் (Aristides) தலைமையில் ஒரு சிலர் தரைப்படையை வலுப்படுத்தவேண்டும் என வலியுறுத்த, தெமிஸ்டாக்ளிஸ் (Themistocles) போன்றோர் கப்பற்படையைப் பலப்படுத்தவேண்டும் என முழங்கினர். பூசல் வளர்ந்தது; இறுதியில் அரிஸ்டைடஸ் நாடுகடத்தப்பட்ட பின் தெமிஸ்டாக்ளிஸின் வேண்டுகோள் நிறைவேற்றப் பட்டது. இக்காலை ஸெர்க்ஸஸ், தூதுவர்களைப் பற்பல கிரேக்க நகர அரசுகளிடம் அனுப்பிப் பாரசீக ஆட்சிக்கு அடிபணியும்படி ஆணையிட்டார். வெகுண்ட ஆதென்ஸும், ஸ்பார்ட்டாவும்

தெமிஸ்டாக்ளிஸின் தூண்டுதலின் பேரில் ஒன்றுகூடிப் பாரசீகப் படையெடுப்பை முறியடிக்கவென ஒரு மாநாட்டைக் கொரிந்து பூசந்தியில் (Ithmus of Corinth) கூட்டினர். 31 நகர அரசுகள் பிரதிநிதிகளை அம் மாநாட்டிற்கு அனுப்பின. ஆயினும் உட்பகை காரணமாகப் பல வடகிரீஸ் நகரங்கள் ஒன்று சேரவில்லை. ஆதென்ஸ், ஈஜினு நகரங்கள் அபாயத்தை உணர்ந்து பகை உணர்ச்சியை மறந்து ஒன்று சேர்ந்தன. தெசாலி, பியோஷியா ஃபோகிஸ், லாக்ரிஸ் போன்ற நாடுகள் ஒத்துழைக்க மறுத்தன. ஆர்காஸ் (Argos), கிரீட் (Crete), கார்கிரா (Corcyra) சிராக்யூஸ் (Syracuse) போன்ற நாடுகளுக்கு உதவி கோரி அனுப்பப்பட்ட கிரேக்கத் தூதுவர்கள் வறிதே திருப்பினர். நிலப்படைக்கு ஸ்பார்ட்டா மன்னர் தலைமை தாங்க வேண்டும் என்ற கோரிக்கை உடனடியாக நிறைவேற்றப்பட்டது. லியோனிடஸ் (Leonidas) என்னும் ஸ்பார்ட்டா மன்னர் தரைப்படையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். ஆதென்ஸ், கப்பற்படைக்கு எண்ணற்ற போர்க் கப்பல்களை வழங்கியதாயினும் ஏனைய நகர அரசுகள் அழுக்காறு காரணமாக ஆதென்ஸின் தலைமைக்கு ஒப்ப மறுத்தன. எனவே ஸ்பார்ட்டாவைச் சார்ந்த யூரிபியாடிஸ் (Eurybiades) கப்பற்படையின் தலைவராக நியமிக்கப்பட்டார். ஆதென்ஸில், அரிஸ்டைடிஸ், சாந்திபஸ் (Xanthipus) போன்றோர் மறுபடியும் அழைக்கப்பட்டு, தெமிஸ்டாக்ளிஸால் தளபதிகளாக நியமிக்கப் பட்டனர்.

படைகளின் போக்கு


மார்டோனியஸின் தலைமையில் பெரும் பாரசீகப் படை ஒன்று திரட்டப்பட்டது. அதில் 17 மிலியன் காலாட் படையினரும் 80,000 குதிரை வீரரும், 4,000 கப்பல்களும் இருந்திருக்கலாம் என ஹெராடோடஸ் கூறுவார். அது மிகையான கூற்றேயாகும். ஏறக்குறைய 3 இலட்சம் வீரர்களும் 500 கப்பல்களும் அப் படையில் இருந்திருக்கலாமெனத் தற்கால ஆசிரியர்கள் நினைக்கின்றனர். கி. மு. 480-இல் ஸெர்க்ஸஸின் படைகள் சார்டிஸ் நகரிலிருந்தும் புறப்பட்டு ஒரே மாதத்தில் அபைடாஸ் (Abydos) துறைமுகத்தை அடைந்தன. பின்னர் ஹெல்லஸ்பாண்ட் நீரிணைப்பைப் படகுப் பாலம் ஒன்றின் மூலம் அவை கடந்து அக்கரையிலுள்ள செஸ்டாஸ் (Sestos) நகரை அடைந்தன. முதன்முதல் கட்டப்பட்ட பாலம் புயலால் அழிந்ததெனவும், அதனால் வெகுண்ட ஸெர்க்ஸஸ் அதைக் கட்டிய பொறியியல் வல்லுநர்களைக் கொன்று வீழ்த்தியதோடு, கடல்நீர் மீது 300 கசையடி கொடுக்கும்படி ஆணையிட்டார் எனவும் கிரேக்கக் கதை ஒன்று கூறுகிறது. ஹெல்லஸ்

பாண்டைக் கடந்த பின் பாரசீகப் படைகள் திரேஸ் நாட்டை யடைந்தன. அங்கிருந்து அவை மாசிடோனிய நாட்டை யடைந்தன. அங்கே ஸ்டிரைமான் (Strymon) எனும் நதியின் மீது கட்டப்பட்ட பாலத்தின் மீது படைகள் நடந்துசென்றன. தரைப் படையைத் தொடர்ந்து கப்பற் படையும், திரேஸ், மாசி டோனியாவின் கடற்கரை யோரமாகச் சென்றது. ஆதோஸ் மலைக்கரூகே முன்பொரு முறை, பாரசீகக் கப்பற் படையானது புயலால் அழிக்கப்பட்ட காரணத்தால் அம் மலையை ஒட்டி அமைந்திருந்த தீபகற்பத்தின் குறுக்கே ஒரு கால் வாயை வெட்டி அதன் வழியாகக் கப்பல்படையை அனுப்பு தற்கு ஸெர்க்ஸஸ் ஏற்பாடு செய்தார். அதன்பின் அபிடா (Aphita) சென்று அங்கே அது காத்திருந்தது. தரைப் படை யானது மாசிடோனியாவைக் கடந்து மத்தியக் கிரீஸை நோக்கி விரைந்தது; வடக்கேயுள்ள லாமியா (Lamia) என்னுமிடத்தை அடைந்தது.

கிரேக்கர்களும் தம் கப்பற் படையையும் தரைப் படை யையும் போருக்கு ஆயத்தமாக்கினர். முதலில் வடக்கே பாரசீக ரைத் தடுத்துப் போர் செய்வதென அவர்கள் தீர்மானித்தனர். தெஸலியர்களின் வேண்டுகோள்படி 10,000 கிரேக்க வீரர்கள் ஒலிம்பஸ் மலைக்கும், ஓஸ்ஸா (Ossa) மலைக்கும் இடையேயுள்ள டெம்பி (Tempe) கணவாயைக் காக்க அனுப்பப்பட்டனர். ஆயினும் ஒலிம்பஸ் மலைக்கு, மேற்கே அமைந்த வோலஸ்டுவா (Volustva), பெட்ரா (Petra) என்னும் இரு கணவாய்களைக் காக்கப் போதிய வீரர்கள் இல்லை. அவற்றின் வழியாகப் பாரசீகர்கள் மத்தியக் கிரீஸுக்குள் வந்துவிடக்கூடும் எனக் கிரேக்கர்கள் அஞ்சினர். எனவே கடலுக்கும், மலைக்கும் இடையே அமைந்த தெர்மாபிலே கணவாயைக் காவல் புரிவது நல்லதென நினைத்து அங்கே அனைவரும் சென்று அடைந் தனர். மத்தியக் கிரீஸின் திறவுகோல் போன்று அமைந்துள்ள இக் கணவாய், பகைவர் வசமாகிவிடின், பியோஷியா, அட்டிகா, மற்றும் பூசந்தியின் வடக்கே அமைந்த நகரங்கள் அனைத்தும் வீழ்ந்துவிடும். எனவே, தெர்மாபிலே கணவாய் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதெலாவிற்கு (Athela) மேற் கேயும், அல்பெனி (Alpeni) அருகில் கிழக்கேயும் அமைந்த பாதை மிகவும் குறுகியது. கணவாய்க்குத் தெற்கே, மலைகளின் குறுக்கே செல்லும் கரடுமுரடான பாதை சரிவரக் காக்கப்படா விடின் கிரேக்கர்கள் தோல்வியுறுவது திண்ணம். எனவே, ஆயிரம் போகிஸ் வீரர்கள் இப் பாதையைக் காத்தனர்.

தெர்மாபிலே போர்

லியோனிடாஸ் தலைமையில் 6000 வீரர் கொண்ட கிரேக்கப் படை தெர்மாபிலே கணவாயைக் காப்பதற்கு முன்னேறியது. இக் காலை கணவாயின் வடக்கே பாரசீகப் படை அணுகியது. அங்கே ஏற்கெனவே கிரேக்கப் படை யொன்று இருப்பது கண்டு தயங்கியது. ஐந்து நாட்கள் தயங்கிய பிறகு பாரசீகர்கள் பகைவரைத் தாக்கினர். ஆயினும் பாரசீகப் படை முழுவதும் குறுகிய கணவாயினுள் புக இயல வில்லை. கிரேக்க வீரர்கள் கணவாயோரத்தில் நின்றுகொண்டு நூற்றுக்கணக்கான பாரசீகர்களை வெட்டி வீழ்த்தினர். ஸெர்க்ஸஸ் 10,000 பேர்கள் கொண்ட தமது பெரும் படையை



படம் 5

அனுப்பியும் பயனென்றுமில்லை. இறுதியில் எபியால்டிஸ் (Epialtes) என்னும் கிரேக்கர் தம் தாய்நாட்டைப் பகைவர்க்கு விற்க முன் வந்தான். இரகசியப் பாதை ஒன்றை அவன் பாரசீகர்களுக்குக் காட்டித் தந்தான். அப் பாதை வழியே சென்ற பாரசீகப் படை, போகியப் படைகளைத் தாக்கி முறியடித்

தது. இச் சமயத்தில் ஹிடேஸ்தஸ் (Hydasthes) தலைமையில் பாரசீகர் படை, கிரேக்கரைப் பின்னாலிருந்து தாக்க முயன்றது. ஆபத்தினை அறிந்து கிரேக்கர்கள் போர்ச் சபையைக் கூட்டினர். தெஸ்பியர்களும், தீபன் நகர வீரர்களும், ஸ்பார்ட்டா வீரர்களும் கணவாயைக் காப்பதென்றும், இதர வீரர்கள் தெற்கே சென்று பாரசீகரைத் தாக்குவதென்றும் முடிவு செய்தனர். லியோனிடாஸ் தலைமையில் 300 பேர் கணவாயைக் காத்தனர். தீரத்துடன் போர் புரிந்திடினும், லியோனிடாஸ் உட்பட அனைவரும் விழுப்புண்ணேற்று வீழ்ந்தனர். அதன் பின் 4,000 கிரேக்கர் தீரமாய்ப் போர் புரிந்து வீரமரணமெய்தினர். தெர்மாபிலே போரின் விளைவு மிக முக்கியமானதாகும். கிரேக்க நாட்டு வரலாற்றிலேயே இப் போர் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக எண்ணப்படுகிறது. ஸ்பார்ட்டா நகர மாந்தர்தம் வீரத்தை அனைவரும் போற்றினர். பாரசீகப் படையினரின் மனவுறுதி குலைந்தது. கிரேக்கரைக் கண்டு அவர்கள் பயப்பட ஆரம்பித்தனர். ஒவ்வொரு கிரேக்கனும் ஒரு லியோனிடாஸாகப் பாரசீகர்க்குக் காட்சியளித்தான். ஸெர்க்ஸஸின் சிறப்பியல்பான தன்னம்பிக்கை ஆட்டங் கொடுக்க ஆரம்பித்தது. எனினும் தற்காலிகமாகக் கிரேக்கர் படுதோல்வி யடைந்தனர் என்பது உண்மையே. ஸ்பார்ட்டா மன்னர் ஒருவர் மாண்டார். ஏராளமான கிரேக்க வீரர் உயிரிழந்தனர். கிரேக்கப் படை நிலைகுலைந்தது. எதிர்ப்பார் எவருமின்றிப் பாரசீகப் படைகள் முன்னேறின. பியோஷியா, அட்டிகா ஆகிய இரு நாடுகளும் காப்பாரின்றிக் கிடந்தன. அட்டிகாவிற்கு மேற்கேயிருந்த நாடுகளனைத்தும் ஸெர்க்ஸஸுக்கு அடிபணிந்தன. ஆதென்ஸின் மலைக்கோட்டையை 200 வீரர்களே காவல் புரிந்தனர். ஆதென்ஸ் நகர மக்கள் சலாமிஸ் தீவுக்கு ஓடிவிட்டனர். பாரசீகர்கள் இரண்டு வாரம் கடுமையாக மலைக்கோட்டையைக் காவல் புரிந்த அத்தீனிய வீரர்களோடு போர் புரிந்தனர். போர் புரிந்த பின் இறுதியில் அவர்கள் பணிந்தனர். பாரசீகப் படைகள் ஆதென்ஸ் நகரைச் சூறையாடின. கோயில்கள் இடிக்கப்பட்டு அவற்றின் செல்வமெல்லாம் கொள்ளையடிக்கப்பட்டன.


தரைப்படையோடு இணைந்து போர்புரியவும், மாலிய வளைகுடாவைக் (Malian Gulf) காக்கவும் வேண்டிக் கிரேக்கக் கப்பற்படை தெமிஸ்டாகிளிஸ் தலைமையில் யுபோயாவின் வட கடற்கரையருகே இருக்கும் ஆர்ட்டிமீஸியத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டது. ஆதென்ஸைச் சேர்ந்த ஐம்பத்து மூன்று போர்க் கப்பல்கள் யூரிப்பஸ் (Euripus) அருகே காத்திருந்தன.

எனவே பாரசீகக் கப்பற்படை ஆர்ட்டிமீஸியத்திற்கு எதிர் புறத்தில் உள்ள அபிடே (Aphetae) என்னும் இடத்தினை அடைந்தது. 200 போர்க் கப்பல்கள் யுபோயா கால்வாயின் தெற்கு முனையைச் சுற்றி வளைத்தன. ஆயினும் அக்காலை வீசிய புயலின் விளைவாய்ப் பாரசீகக் கப்பல்கள் அனைத்தும் அழிந்தன. யூரிப்பஸினின்று அத்தீனியக் கப்பல்கள் ஆர்ட்டிமீஸியத்திற்குச் சென்று ஏனைய கிரேக்கக் கப்பல்களோடு ஒன்று சேர்ந்தன. முதலில் மூன்று கிரேக்கக் கப்பல்களுக்கும், 10 பாரசீகக் கப்பல்களுக்குமிடையே போர் நடைபெற்றது. இதில் கிரேக்கக் கப்பற்படை தோற்றது. பின் பற்பல இடங்களில் கடற்போர் நிகழ்ந்ததாயினும், குறிப்பிடத்தக்க பலன்கள் இருதரப்பிலும் ஏற்படவில்லை.

சலாமிஸ் போர்

தெர்மாபிலேயில் அடைந்த தோல்வியின் விளைவாகக் கப்பற்படை சலாமிஸை நோக்கி விரைந்தது. ஸ்பார்ட்டர்கள் தமது நாட்டைக் காத்துக்கொண்டால் போதுமென நினைத்தனர். பூசந்தியின் குறுக்கே ஒரு மதில்சுவர் எழுப்பப்பட்டு அதன்புறத்தே ஸ்பார்ட்டர்களின் தரைப்படையானது லியோனிடாஸ் சகோதரரான கிளியம்ப்ரோடஸ் Cleombrotus) தலைமையில் ஒதுங்கியது. தங்களது கப்பற்படையையும் திருப்பி அழைத்துக்கொள்ள ஸ்பார்ட்டர்கள் விரும்பினர். பாரசீகக் கப்பற்படை ஃபலேரம் (Phalerum) துறைமுகத்தை அடையவே, கிரேக்கத் தரைப்படை – கப்பற்படைத் தலைவர்கள் கொண்ட ஒரு போர்ச்சபை விரைவாகக் கூட்டப்பட்டது. தெமிஸ்டாக்ளிஸ் எனும் தளகர்த்தர், குறுகிய சலாமிஸ் ஜலசந்தியில் மாபெரும் பாரசீகப் போர்க் கப்பல்கள் சரிவர இயங்க முடியாமல் எளிதில் தோற்கக்கூடும் என்றும், இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளாவிடில் ஈஜினு, சலாமிஸ், மிகாரா போன்ற பகுதிகள் பாரசீகர் வசமாகிவிடும் என்றும் முழங்கினர். ஆயின் இதரப் படைத் தலைவர்கள், இதனை எதிர்த்துப் பூசந்தியில் போரிடுகையில் பாரசீகர்கள் தரைப்படையின் ஒத்துழைப்பை எளிதில் பெற இயலும் என்றும், ஒருகால் தோல்வியைத் தழுவ நேர்ந்தாலும், பெல்ப்பொனீஷியாவுக்குள் புகுந்துவிடலாம் என்றும், எனவே பூசந்தியிலேயே போர்புரிய வேண்டும் என்றும் வற்புறுத்தினர். தெமிஸ்டாகிளிஸ், ஸ்பார்ட்டத் தளகர்த்தர் யூரிபியாடிஸைத் தனியே சந்தித்துத் தம் முடிவிற்கு இணங்கும்படி வேண்டினர். அவரும் அவரது முடிவினை ஏற்றார். ஆனால் மறுநாள் கூட்டப்பட்ட சபையில் யூரிபியாடிஸ் தம் புது முடிவைத் தெரிவிக்கையில் பலத்த எதிர்ப்புக் கிளம்

பியது. தெமிஸ்டாகிளிஸ், ஆதென்ஸின் போர்க் கப்பல்களோடு விலகிக்கொள்வதாகப் பயமுறுத்தவே ஏனையோர் இணங்கினர். பூசந்தியின் கிழக்கே ஆதென்ஸின் கப்பற்படை இருந்தது. பாரசீகக் கப்பற்படை அங்கு பலத்த காவல் போட்டிருந்தது.



படம் 6.

இக் காலை பாரசீகரும் ஒரு போர்ச்சபையைக் கூட்டினர். ஹெலிகர்னஸிஸ் (Halicurnasus) அரசியான ஆர்டிமிஸியா (Artemesia) கடல் போரில் ஈடுபடாமல், கிரேக்கக் கப்பற்படை திரும்பிச் செல்லும்வரை காக்கவேண்டும். அல்லது பெலப் பொனீஷியாவுக்குள் தரைப்படை முன்னேறிச் செல்ல வேண்டும் என்று வேண்டினாள். ஆயினும் ஸெர்க்ஸஸ், கிரேக்கப் படைகள் தப்பிச்செல்ல இயலாவண்ணம் சலாமிஸ் ஜலசந்தியை வளைக்க எண்ணினார்.

மூன்றும் முறையாகக் கிரேக்கப் போர்ச்சபை கூடுகையில் பல படைத்தலைவர்கள், 'கிரேக்கப் படைகள் பின்வாங்கி, சாரோனிக் வளைகுடா வழியாகப் பூசந்தியை அடையவேண்டும்' என வற்புறுத்தினர். இதை விரும்பாத தெமிஸ்டாக்ளிஸ் தம் மதி நுட்பத்தால் ஒரு தந்திரத்தைக் கையாண்டார். தம்

நம்பிக்கைக்கு உரிய ஓர் அடிமையைப் பாரசீக மன்னரிடம் அனுப்பிக் கிரேக்கர்களிடையே தோன்றிய பிளவு காரணமாக அவர்கள் சலாமிஸினின்று விலகிச்செல்ல எண்ணியுள்ளனர் என்றும், உடனே பாரசீகர் சாலமிஸ் குடாவை அடைந்து தம் படைவரைத் தாக்கிடில் வெற்றி உறுதி என்றும் உரைத்து நாட்டுத் துரோகி போல் நடிக்கச் செய்தார். இதை ஸெர்க்ஸஸும் நம்பினர். உடனே எகிப்தின் கப்பற்படையை அனுப்பி இரவி லேயே சலாமிஸ் ஜலசந்தியின் மேற்குமுனையை அடைக்குமாறு ஆணையிட்டார். கிழக்குமுனை ஏற்கெனவே முற்றுகையிடப்பட் டிருந்தது. பொழுது புலரும் வேளையில் எகிப்தியர் தென்மேற்கு நுழைவாயிலையும், அயோனியர்கள் மேற்குப் பகுதியையும் பினீ ஷியர் கிழக்குப் பகுதியையும் வளைத்துநின்றனர். ஆபத்தை உணர்ந்த கிரேக்கர்கள் வேறு வழியின்றிப் போர் செய்ய முன் வந்தனர். முதலில் அனுப்பப்பட்ட பினீஷியர்கள் ப்ஸைடேலியா விற்கும் (Psytaleia) அட்டிகாவிற்கும் இடையே புகுந்த உடனே கிரேக்கப் படையின் இடப் பிரிவிலுள்ள அத்தீனி யர்கள் பினீஷியர்களைத் தாக்கி, அவர்கள் பாரசீகப் படையுடன் கொண்ட தொடர்பையும் துண்டித்தனர். ஈஜினிடர்கள் (Aegenetars) இடையில் குடாவுக்கு வெளியே வந்து பாரசீகக் கப்பற்படையைப் பின்னலிருந்து தாக்கலாயினர். ஜலசந்தி மிகவும் குறுகியதாகையால் பெரிய பாரசீகக் கப்பல்கள் தப்ப இயலவில்லை. குழப்பம் எங்கும் பரவவே அயோனியர்கள் பினீ ஷியருக்கு உதவ விரைந்து கிரேக்கக் கப்பற்படையின் வலப் பிரிவின் தாக்குதலுக்கு இரையாயினர். பாரசீகரின் பெரும் போர்க் கப்பல்கள் மிகக் குறுகிய ஜலசந்தியின்கண் கூட்டமாகச் சிக்கிக்கொண்டு வெளியே போக முடியாமல் தத்தளித்தன. தக்க தலைவர்களும் அதற்கில்லை. எனவே இறுதியில் பாரசீகக் கப்பற் படை அழிந்தது. கிரேக்கக் கப்பற்படை பெரு வெற்றி பெற்றது. ஈஜினிடர்கள், அத்தீனியர்கள் ஆகிய இரு வகுப்பாரே வெற் றிக்கு முக்கிய காரணமாவர். ஸெர்க்ஸஸ் தம் 60,000 வீரர் களுடன் ஹெல்லஸ்பாண்டின் குறுக்கே கட்டப்பட்ட பாலங்கள் போரின் விளைவாய்ச் சிதிலமடைந்ததால், அபைடோஸ் வழியாகச் சார்டிஸை அவர் அடைந்தார். மார்டோனியஸ் தலைமையில் பாரசீக வீரர்கள் தெஸலியை அடைந்து பனிக்காலத்தை அங்கே கழித்தனர்.

கிரேக்கர்கள் சலாமிஸில் பெற்ற பெரும் வெற்றியைச் சரிவரப் பயன்படுத்திக்கொள்ளத் தவறினர். தெமிஸ்டாக்ளிஸ், பாரசீகரைத் துரத்தும்படி இட்ட கட்டளைக்குக் கீழ்ப்படியுங்காலை, சூரியகிரஹணம் ஏற்பட அதனை அழிவின் அறிகுறி என எண்ணி,

கிரேக்கர்கள் முன்னேற மறுத்தனர். கிரேக்கர்கள் புரிந்த பெரும் தவறு இது. குளிர்காலமாகையால் போர் நிறுத்தப்பட்டது. போரில் கிடைத்த பொருட்களைப் பகிர்ந்துகொள்ளவும், வென்ற வீரர்கட்குப் பரிசு வழங்கவும், வேள்விகள் புரியவும் வேண்டிப் பூசந்தியில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. முதற் பரிசு ஈஜினிடர் களுக்கும், இரண்டாம் பரிசு அத்தீனியர்களுக்கும் தரப்பட்டன. ஆலிவ் முடியணியையும் ஒரு தேரையும், 300 பாதுகாவலரையும் பரிசாகப் பெற்றுத் தெமிஸ்டாக்ளிஸ் பெரிது வந்தார். சலாமிஸ் வெற்றியைக் கிரேக்கப் புலவர்கள் தத்தம் கவிதைகளில் புகழ்ந் தேத்தினர். போரில் உண்மையிலேயே பங்கெடுத்துக்கொண்ட அஸிலஸ் (Aesehylus) என்ற புலவர் 'பாரசீகர்கள்' என்ற நாட கத்தை உருவாக்கி அழியாப் புகழ்பெற்றார்.

பிளெடியா

கி. மு. 479-இல் பிளெடியா என்னும் இடத்தில் நிகழ்ந்த போர் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. பாரசீகப் படையில் போர் வீரர்களின் எண்ணிக்கை 3,00,000 ஆக உயர்ந்தது. அயோனி யாவைக் கண்காணிப்பதற்கெனவும், தரைப்படையோடு ஒத் துழைப்பதற்கெனவும் 300 போர்க் கப்பல்கள் கொண்ட படை, சாமோஸ் அருகில் நிறுத்திவைக்கப்பட்டது. எனவே 40 போர்க் கப்பல்கள் கொண்ட கிரேக்கப் படை டீலாஸ் தீவை நோக்கி விரைந்தது. இக்காலை மீண்டும் கிரேக்கத் தரைப்படையில் பிளவு ஏற்பட்டது. ஸ்பார்ட்டா படையினர் பூசந்தியை மட்டும் காக்க விரும்பினர். ஆனால் அத்தீனியர்கள், அயோனியா அருகிலுள்ள பாரசீகக் கப்பற்படையை வென்று, ஆசியாமைனர் வாழ் கிரேக்கர்களை விடுவிக்கவும், பாரசீக நிலப்படையை வடக்குக் கிரீஸினின்று விரட்டவும் விழைந்தனர்.

இதனை அறிந்த பாரசீகத் தளகர்த்தரான மார்டோனியஸ், ஆதென்ஸ் நகர அரசோடு சமாதான உடன்படிக்கை செய்து கொள்ள விரும்பினர். ஆதென்ஸ் நகரைப் புதுப்பிக்க உதவி புரிவதாக வாக்களித்தார். ஆதென்ஸ் பாரசீகத்தோடு நட்புறவு பூண மறுத்தது. எனவே வசந்தகாலத் துவக்கத்தில் மார்டோ னியஸ், பியோஷியாவை நோக்கி விரைந்தார். பியோஷியா ஃபோகிஸ், லாக்ரிஸ் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றிய பின் ஆதென்ஸை முற்றுகையிட்டார். மதத் தொடர்புள்ள விழாக் காரணமாக ஸ்பார்ட்டா ஆதென்ஸுக்கு உதவி புரிய முன்வர வில்லை. பெண்டிர், குழந்தைகளுடன் ஆதென்ஸ் நகரைவிட்டுப் பாதுகாப்பிற்காக வெளியேறினர். ஆதென்ஸ் நகருக்குள்

இரண்டாம் முறையாகப் புகுந்த மார்டோனியஸ் மீண்டும் ஆதென்ஸ் அரசோடு நட்புக்கொள்ள முயன்றார். பயனில்லை. ஆதென்ஸ், பிளெட்டியா, மிகாரா போன்ற இடங்களிலிருந்து ஸ்பார்ட்டாவின் உதவியை நாடி அனுப்பப்பட்ட தூதுவர்கள், 10 நாட்கள் வரையில் காக்கவைக்கப்பட்டனர். ஆதென்ஸ்பாரசீகத் தோடு நட்புறவு கொள்ளப்போவதாக இறுதி எச்சரிக்கை விடுத்த பிறகே ஸ்பார்ட்டா, 10,000 வீரர்கள் கொண்ட படையை பௌசானியஸ்(Pausanias) தலைமையில் அனுப்பியது. ஆதென்ஸ் நகரை அழித்த பின் மார்டோனியஸ், அட்டிகாவினின்று தீப்ஸ் நோக்கிப் புறப்பட்டார். எனவே, கிரேக்கர்கள் தீப்ஸ் செல்லும் பாதையைக் காத்தனர். 8000 ஆதென்ஸ் படைவீரர்களும், 600 பிளெடியா வீரர்களும் ஒன்று கூடினர். இக்காலை கிரேக்கப் படையுள் ஏற்பட்ட குழப்பத்தை அறிந்த பாரசீகர் போரைத் துவக்கினர். அம்புகள் துளைக்க முடியாத கவசமணிந்த மாஸிஸ்டியஸ் (Masistius) என்ற குதிரைப் படை வீரரும் கண்ணில் அம்பு பட்டு மாய்ந்தார். பத்துத் தினங்களுக்குப் பின் வெற்றி பெற்ற கிரேக்கர்கள் பாரசீகரைப் பெருமளவில் கொன்று குவித்தனர். பல பாரசீகர் தீப்ஸ் நகரில் அடைக்கலம் புகுந்தனர். எனவே கிரேக்கப்படை இந் நகரை முற்றுகையிட்டு அடைக்கலம் புகுந்தோரை அடிபணிய வைத்தது. கொரிந்து நகருக்கு அழைத்துச் செல்லப்பட்ட கைதிகள் அனைவரும் கொல்லப்பட்டனர். தப்பிய 60,000 பார சீகர்கள் ஆர்டாபாஸஸ் (Artabazus) தலைமையில் திரேஸ், மாசி டோனியா வழியாக ஹெல்லஸ்பாண்டை நோக்கி ஓடிவிட் டனர்.

சலாமிஸ் போர் போன்றே பிளெடியாவில் நடைபெற்ற போரும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பிளெடியாவில் அடைந்த வெற்றி, பாரசீகப் போரின் முதல் பகுதியை முற்றுப் பெறச் செய்தது. பகையுணர்ச்சி கொண்ட எந்தப் பாரசீகனும் இப் போருக்குப் பிறகு கிரேக்க நாட்டில் அடியெடுத்து வைக்கத் துணிந்திலன். தன்னிகரில்லாக் கிரேக்கக் கலையும், சிந்தனை களும் மாரதான், பிளெடியா போர்களின் விளைவே எனலாம். பிளெடியாவின் நுழைவாயிலில், போரில் மடிந்து அழியாப் புகழெய்திய வீரர்களைக் கொண்டாட நினைவுச் சின்னம் ஒன்றும் எழுப்பப்பட்டு ஆண்டு தோறும் விழா கொண்டாடப்பட்டது. தீப்ஸ் நகரப்போரில் கிடைத்த பொருட்களைக் கொண்டு 40மீட்டர் உயரமுள்ள சிலையொன்று ஒலிம்பியாவிலும், 30மீட்டர் உயர முள்ள போசிடன் (Posiedon) சிலை ஒன்று பூசந்தியிலும் எழுப்பப் பட்டன.

மைக்கலி போர்

கிரீஸைக் கைப்பற்ற வேண்டுமென்ற பாரசீகரின் திட்டம் பிளெடியா போரோடு மாய்ந்தது. எனவே பாரசீகக்கப்பற்படை சாமோஸ் தீவின் அருகில் கொண்டுபோய் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. ஆசியாமைனரிலுள்ள கிரேக்கர்கள், மீண்டும் பாரசீக அரசுக்கு எதிராகப் புரட்சிக்கொடி உயர்த்த விரும்பினர். கிரேக்கர்களைத் தங்களது உதவிக்கு வரும்படி அவர்கள் வேண்டினர். எனவே ஸ்பார்ட்டா மன்னர் லியோடிகிடாஸ் (Leotychitas), அத்தீனியத்தளபதி ஸாந்திபஸ்(Xanthipus) ஆகியோர் தலைமையில் கப்பற்படை ஒன்று சமோஸ் நோக்கிப் புறப்பட்டது. இதனை அறிந்த பாரசீகக் கப்பற்படை,ஆசியாமைனரின் கரையிலுள்ள மைக்கலி நோக்கி விரைந்தது. கிரேக்கரும் பின் தொடர்ந்து மைக்கலியை அடைந்தனர். கி. மு. 479-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நிகழ்ந்த போரில் பாரசீகர் தோற்றனர். 300 பகைவர் கப்பல்கள் எரிக்கப்பட்டன. ஸெர்க்ஸஸ், சூசா (Susa) நோக்கி விரைந்தார். ஹெல்லஸ்பாண்ட் பாரசீகரின் ஆதிக்கத்தினின்று விடுபட்டது. அயோனியரும் விடுதலை பெற்றனர். சாந்திபஸ் எனும் கடல்தளகர்த்தர் மேலும் முன்னேறி செஸ்டோஸ் (Sestos) எனும் துறைமுகத்தைக் கைப்பற்றினர். பைஸிஸ்டிராடஸ், மில்டியாடிஸ் போன்றோர் அமைக்க முயன்ற அத்தீனியப் பேரரசின் அடிக்கல் நாட்டப்பட்டது.

பாரசீகர் தோல்விக்குக் காரணங்கள்

பாரசீகப் படையின் வலிமை காலப்போக்கில் குன்றியது. வீரம், தீரம், தாய்நாட்டுப் பற்று போன்ற அருங்குணங்கள் அற்றவராய்ப் படை வீரர் மாறினர். பணத்துக்காகப் போரிட்ட கூலிப் படையினரே அதில் ஏராளமாக இருந்தனர். பற்பல நாட்டவர் படையில் சேர்ந்ததால், கப்பற்படை, நிலப்படை ஆகிய இரண்டு படைகளிலும், ஒற்றுமையும் ஒத்துழைப்பும் குறைந்தன. பாரசீகர் தவிர ஏனையோர், வெற்றி தோல்வி பற்றி எண்ணவில்லை. ஆனால் கிரேக்கப் படையில் இன ஒற்றுமை இருந்தது. பாரசீகப் படையினர் வில்லையும் அம்பையுமே கைக்கொண்டிருந்தனர். ஆனால், கிரேக்க ஹாப்லைட்டுகள் முழுக்கவசமணிந்தும், நீண்ட ஈட்டியேந்தியும் போரிட்டனர். ஹிப்பியாஸ், ஆதென்ஸின் வலிமையைக் குறைவாக மதிப்பிட்டார். பாரசீகர் ஆதென்ஸை வெல்வது எளிதெனக் கூறி அவர்களைத் தப்புக் கணக்குப்போடும் படிச் செய்து விட்டனர். பாரசீகர்கள் நாட்டுப்பற்று மிக்க கிரேக்க வீரர்களுக்கு இணையானவர் அல்லர். கிரேக்கர்கள் அரசியல்

ஒற்றுமையில்லாதவர் ஆயினும் போர்க்காலங்களில் பகை யுணர்ச்சியை மறந்து கூடினர்.

பாரசீகக் கப்பற்படை எண்ணிக்கையில் அதிகமாக இருந் ததே ஒழிய வலிமையில் கிரேக்கக் கப்பற்படையை விடப் பெரிதும் குறைந்திருந்தது. பாரசீகக் கப்பற்படையில் வேலை பார்த்த வீரர்கள் பல்வேறு நாட்டிலிருந்து வந்தவர்கள். கடற் போரில் நல்ல பயிற்சி இல்லாதவர்கள். பாரசீகக் கப்பல்கள் அளவில் பெரியவை. சலாமிஸ் போன்ற குறுகிய நீரிணைப்பில் அவை வேகமாகச் செல்ல இயலவில்லை. மேலும் தெமிஸ்டாக்ளிஸ் போன்ற கடல்தளகர்த்தர்கள் பாரசீகத் தரப்பிலில்லை. ஆனால் கிரேக்கரோவெனில் கடற்போரில் நல்ல அனுபவமும் திறமையும் கொண்டவர்கள். நல்ல தளகர்த்தர்களும் அவர்கள் தரப்பிலிருந் தனர்.

பாரசீகரது படைகளை நன்கு வழிநடத்தத்தக்க தலைவர் மார்டோனியஸ், மசிஸ்டியஸ் போன்ற தலைவர்களும் போரில் மாண்டுபோய் விட்டனர். ஆனால் கிரேக்கரது தரப்பில் தலைவர் கட்குப் பஞ்சமில்லை. மில்டியாடிஸ் [மாரதான்], லியோனிடாஸ் [தெர்மாபிலே], தெமிஸ்டாக்ளிஸ் [சலாமிஸ்], பௌசானியஸ் [பிளெயா]டி, லியோடிகிடாஸ் [மைக்கலி] போன்ற பெரும் தளபதிகள் ஒவ்வொரு போர்க்களத்திலும் தலைமை தாங்கிக் கிரேக்க வீரர்களை வெற்றிப் பாதையில் நடைபோடச் செய்தனர்.

இறுதியாகப் பாரசீகரது படையெடுப்பின் நோக்கம் அவ்வளவு சரியானதாக இல்லை. தரியஸும், ஸெர்க்ஸஸும் கிரீஸைப் பழிவாங்கும் கெட்ட எண்ணத்துடனே போர் செய் தனர். நாடு பெருக்கும் ஆசையும் அதில் கலந்திருந்தது. ஆனால், கிரேக்கர்களேவெனில் தங்களது சுதந்திரத்தையும், ஜனநாயகக் குறிக்கோள்களையும் காப்பதற்காகப் போரிட்டனர். எனவே, அவர்களிடம் நாட்டுப்பற்றும், உத்வேகமும், உணர்ச்சியும் அதிக மாயிருந்தன. அவர்களது சுறுசுறுப்புக்கும், உற்சாகத்திற்கும் முன்னர், தளர்ச்சி மிக்க பாரசீகப் பேரரசு, சிங்க ஏறுவின் முன் யானையெனத் தோற்றதில் வியப்பொன்றுமில்லை என்க.

(5) பாரசீகப் போர்களின் விளைவுகள்

பாரசீகப் படைகளை வென்ற கிரேக்க வீரர்கள் மிகச் சாதாராணமான குடிமக்களே யாவர். அதிலும் ஆதென்ஸில் மக்களாட்சியின் கீழ் வாழ்ந்த மக்களே, பல பெரும் வெற்றிகளைப்

பெற்றனர். எனவே பாரசீகத்துக்கெதிராகக் கிரேக்கர்கள் பெற்ற வெற்றி ஜனநாயகத்தின் வெற்றி என்றே யாவரும் கருதினர். ஆதென்ஸ் மட்டிலுமன்றி ஏனைய அரசுகளிலும் ஜனநாயகம் விரைவாகப் பரவலாயிற்று. ஆதென்ஸின் நாட்டுப் பற்றும் விடுதலை மனப்பான்மையும், அரசியலமைப்பும் ஏனைய நகர அரசுகளுக்கு ஒரு முன் மாதிரியாக அமைந்தன.

நாளடைவில் ஆதென்ஸ், கிரேக்க நாட்டிலேயே வீரத்திலும், தீரத்திலும், விரிந்த நோக்கிலும், பரந்த மனப்பான்மையிலும் தலை சிறந்த நகர அரசாக மாறியது. கிரீஸ் மீதும், கிரேக்க நாட்டின் மீதும் அத்தீனியர்கள் கொண்டிருந்த அப்பழுக்கற்ற பற்றினை நன்கு உணர்ந்து கொண்ட கிரேக்க நாடுகள் அனைத்தும் ஆதென்ஸின் தலைமையை மனமுவந்து ஏற்றுக்கொண்டன.

ஆசியாமைனர்ப் பகுதியிலிருந்த கிரேக்கர்கள் பாரசீகரின் ஆதிக்கத்திலிருந்து முடிவாக விடுவிக்கப்பட்டனர். மத்தியத் தரைக்கடல் பிரதேசங்களில் கிரேக்கரின் செல்வாக்கும் வாணிகமும் வளர்ந்தன. அரசியல் துறையிலும் வியாபாரத்துறையிலும் மீண்டும் அதனுடைய தலைமையானது அங்கெல்லாம் நன்கு நிலை நாட்டப்பட்டது.

கிரீஸுக்கும் பாரசீகத்திற்கும் நடைபெற்ற போர், உண்மையில் மேற்றிசை நாகரிகத்திற்கும் கீழ்த்திசை நாகரிகத்திற்கும் விளைந்த ஒரு போராட்டமேயன்றி வேறன்று. இப் போராட்டத்தில் மேற்கு, கிழக்கை வென்றது. உலக வரலாற்றிலேயே ஒரு பெரிய திருப்பத்தை விளைத்தது. இப்போரில் கிரீஸ் தோற்றிருந்தால் கிரீஸ் மட்டுமன்றி ஏனைய ஐரோப்பிய நாடுகளும் கீழை நாட்டுப் பேரரசு ஒன்றுக்கு உட்பட்டிருக்கும். கீழை நாட்டு அரசியல் முறைகளும் பழக்க வழக்கங்களும் மேலை நாடுகளில் பரவியிருக்கும். கிரீஸ் வெற்றி பெற்றதால், அதனுடைய விடுதலையுணர்வும், சுயேச்சை மிக்க நிறுவனங்களும், மெருகிட்ட அதன் பண்பாடும் அறிவுச்செல்வமும் காக்கப்பட்டன. அவைகள் நாளடைவில் மேலை நாடெங்கும் பரவலாயின. எனவே பாரசீகப் போர்களின் விளைவாக மேலை நாடுகளின் நாகரிகமே காக்கப்பட்டதெனில் அக் கூற்று மிகையாகாது.

10. மேலைக் கிரேக்கர்களும் சிசிலியின் சர்வாதிகாரிகளும்

1. மேலைக் குடியேற்றங்கள்

"திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற கொள்கையினடிப்படையில், கிழக்கே ஆசியாமைனர்ப் பகுதிகளுக்குச் சென்று கிரேக்கர்கள் குடியேற்றங்களை நிறுவியது போன்றே, மேற்கேயும் சிசிலித்தீவு,சார்டீனியா (Sardinia), கார்சிகா(Corsica), ஸ்பெயின் (Spain), கால் (Gaul) போன்ற இடங்களுக்குச் சென்று குடியேற்றங்களை அமைத்தனர். கீழைக் குடியேற்றங்கள் லிடியா, பாரசீகம் போன்ற நாடுகளின் எதிர்ப்புகளுக்கு ஆளாகி அல்லறுற்றது போன்றே, மேலைக் குடியேற்றங்களும், சிறப்பாகச் சிசிலித் தீவின்கண் ஏற்பட்ட குடியேற்ற நாடுகள் ஃபினீஷியர்கள் (Phoenicians), எட்ரஸ்கர்கள் (Etruscars) ஆகியோரின் தாக்குதல்களையும், போட்டிகளையும் சமாளிக்கவேண்டிய நிலையை ஏற்றன. ஏனெனில் மத்தியத்தரைக்கடலிலேயே அன்று வாணிகத்தில் தனியுரிமை பெற்று விளங்கிய ஃபினீஷியர்களும், அவர்களது கூட்டாளிகளான எட்ரஸ்கர்களும் தங்களுக்கு ஒரு போட்டியாய் வந்து முளைத்த கிரேக்கர்களைக் கண்டு பொருமையும் வெறுப்பும் ஒருங்கே கொண்டனர். கிரேக்கர்கள் மத்தியத்தரைக்கடற் பிரதேசங்களில் பரவுவதை அவர்கள் தடுத்து நிறுத்த விரும்பினர். அதன் விளைவாகப் ஃபினீஷியருக்கும் கிரேக்கருக்கும் பல மோதல்கள் நிகழ்ந்தன. இறுதியில் கிரேக்கர்களே வெற்றி பெற்றனர்.

கிரேக்கர்களின் மேலைநாட்டுக் குடியேற்றங்களிலெல்லாம் தலைசிறந்து விளங்கியவை சிசிலித் தீவிலமைத்த குடியேற்றங்களேயாகும். இந்தியாவின் தென் கோடியில் இலங்கைத் தீவு இருப்பது போலவே இத்தாலியின் தென்கோடியில் முக்கோண

வடிவத்தில் சிசிலித் தீவு அமைந்துள்ளது. அதன் கடற்கரையை ஒட்டியுள்ள சமவெளிகள் மிகச் செழிப்பானவை. இத்தாலிக்கு ஏற்றுமதி செய்கின்ற அளவுக்கு அங்குத் தானியங்கள்



படம் 7

விளைந்தன. மற்றும் மத்தியத்தரைக்கடலின் சரி மையத்தில் அமைந்துள்ளதால் அத் தீவில் வாழ் மக்கள் எளிதில் மேற்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் வடக்கிலும் சென்று வாணிகம் செய்ய

முடிந்தது. அதனுற்ருன் கிரேக்கரும் ஃபினீஷியரும் பிற் காலத்தில் ரோமானியரும் அதைத் தமதாக்கிக் கொள்ள முயன்றனர். பல வல்லரசுகளின் போர்க்களமாக அது பண்டைய நாளிலிருந்தே விளங்கி வந்தது. கி. மு. 850 முதல் கி. மு. 650 வரை கிரேக்கர்கள் இத் தீவில் வந்து குடியேறிய வண்ணமிருந் தனர். தீவின் தெற்கிலும் கிழக்கிலும் கரையோரமாகப் பல குடியேற்றங்களை அன்னர் நிறுவினர். சிசிலியின் சுதேசமக்கள் விவசாயிகள். ஆதலால், வணிகராக வந்த கிரேக்கரை அன்னர் தடைசெய்யவில்லை. சிசிலியில் குடியேறிய கிரேக்கருள் டோரி யர்களே மிக முக்கியமானவர்கள். சிராச்யூஸ் (Syracuse), ஜெலா (Gela), அக்ரகாஸ் (Acrages) ஆகிய இடங்களில் டோரியரின் குடியேற்றம் சிறந்து விளங்கிற்று. மெசானு (Messana), ஹிமீரா (Himera) ஆகிய இடங்களில் அயோனியர்கள் குடியேற் றங்களை நிறுவினர்.

மிகப் பண்டைய காலந்தொட்டே மத்தியத்தரைக்கடலில் வாணிகம் செய்து வந்தவர்கள் ஃபினீஷியர்களாவர். ஆப்ரிக்கா வின் வடகரையில் யுடிகா (Utica) எனுமிடத்தில் அவர்கள் முதலில் ஒரு குடியேற்றத்தை ஏற்படுத்தினர். நாளடைவில் அவர்கள் கார்த்தேஜ் (Carthage) என்ற பெரிய துறைமுகப் பட்டினத்தைக் கட்டினர். செல்வாக்கு மிக்க ஒரு சில பணக்காரரின் ஆட்சியே (Plutacracy) அங்கு நிலவிற்று. வாணிகத்தில் வல்லவர்களா யிருந்த அவர்களுக்குப் போர் செய்வதில் ஆர்வமோ திறமையோ சிறிதுமில்லை. கூலிக்குப் போரிடுகின்ற வீரர்களைக் கொண்டே அவர்கள் தங்களது உரிமையைப் பாதுகாத்துக் கொண்டனர். போரிற் புறங்காட்டிய தளகர்த்தர்களைக்கொன்று விடுவது அவர்தம் வழக்கமாகும்.

கிரேக்கருக்கும் ஃபினீஷியருக்கும் இடையே இயல்பாகவே பல சச்சரவுகள் தோன்றின. கி. மு. 580-இல் டோரியர்கள் லிலிபீயம் (Lilybaeum) எனுமிடத்தில் குடியேற முயன்றபோது ஃபினீஷியர்கள் அதைத் தடுத்து நிறுத்திவிட்டனர். குடியேற்றத் தலைவரான பென்டாத்லஸ் (Pentathlus) என்பார் கொல்லப்பட் டார். சர்டினியா, கார்சிகா போன்ற இடங்களில் கிரேக்கர்கள் பரவ முயன்றபோதும், ஃபினீஷியர்கள் அவர்களை விரட்டி விட்டனர். கால் (Gaul) பிரதேசத்திலிருந்து சிசிலி வரை சங்கிலித்தொடர் போல் குடியேற்றங்களை நிறுவ அவர்கள் செய்த முயற்சி தோற்றது. எனவே சிசிலியில் மட்டுமே அவர்கள் தங்களது முழுக் கவனத்தையும் செலுத்தலாயினர்.

(2) சிசிலியில் சர்வாதிகாரிகள்

"தொடக்கத்திலிருந்து இறுதிவரை சிசிலியின் வரலாறென்பது அதனுடைய சர்வாதிகாரிகளின் வரலாறேயாகும்" என உட் ஹவுஸ் (Wood House) என்னும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இது முற்றிலும் உண்மை. ஏனெனில் சிசிலியிலிருந்த கிரேக்கக் குடியேற்றங்களில் சர்வாதிகாரிகளின் ஆட்சியைத் தவிர வேறு எந்த வகையான ஆட்சியும் நிலைக்கவில்லை. அதற்குக் காரணம் அவைகள் தாய்நாட்டிலிருந்து வெகு தூரத்தில் இருந்ததே யாகும். கிரீஸில் வளர்ந்து வந்த முன்னேற்றக் கொள்கைகளும், தாராளக் கொள்கைகளும் சிசிலியின் நகர அரசுகளுக்கு எட்டவேயில்லை. மற்றும் மக்களாட்சிக்குரிய மனப்பக்குவமும் சிசிலியக் கிரேக்கர்களுக்கில்லை. சர்வாதிகாரிகளை விட்டால், அடுத்து சுயநலப் பணக்காரர்களின் ஆட்சியே ஏற்படக்கூடிய சூழ்நிலை சிசிலியில் இருந்ததால், அவ்விரண்டில் முன்னதே நல்லது என்ற முடிவுக்கு மக்கள் வரலாயினர். மற்றும் சிசிலியக் கிரேக்கர்கள் வாணிகத்திலும் வேளாண்மையிலும் பெரிதும் ஈடுபட்டிருந்தார்களேயொழிய அரசியலைப் பற்றி அவர்கள் அதிகம் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. கிரேக்க நகரங்களில் அடிக்கடி ஒன்றுக் கொன்று சச்சரவுகள் நிகழ்ந்து வந்ததாலும், கார்த்தஜீனியர்களின் படையெடுப்புப் பற்றிய பலம் எப்போதும் இருந்து வந்ததாலும் அவற்றைச் சமாளிக்கக் கூடிய நல்ல பலம் வாய்ந்த ஒரு சர்வாதிகாரியையே மக்கள் வரவேற்றனர். மேலும் கார்த்தேஜ், ஆப்ரிக்கா, போன்ற நாடுகளுக்கு அருகில் சிசிலி இருந்தமையால் அங்கு வளர்ந்து வந்த வல்லாட்சிக் கொள்கை இத் தீவையும் தொற்றுநோய் போல் பற்றிக் கொண்டது.

கி. மு. ஆறும் நூற்றாண்டில் ஐந்து முக்கிய நகரங்களில் சர்வாதிகார ஆட்சி நடைபெற்று வந்தது. ஜேலா (Gela), சிராக்யூஸ் (Syracuse), அக்ரகஸ் (Agragus), மெசானு (Messana), ஹிமீரா (Himara) ஆகிய இந் நகரங்களில்தான் சர்வாதிகாரிகள் சிறப்புடன் ஆண்டு வந்தனர். கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் நாம் நான்கு முக்கிய சர்வாதிகாரிகளைப் பற்றி அறிகின்றோம். மெசானு நாட்டில் அனக்ஸிலாஸ் (Anaxilas) என்ற சர்வாதிகாரியும், ஹிமீரா நாட்டில் தெரில்லஸ் (Terrilles) என்பாரும், சிராக்யூஸில் ஜேலான் என்பாரும், அக்ரகாஸ் நகரில் தேரான் (Theran) என்பாரும் ஆட்சி புரிந்து வந்தார்கள். இவர்களுள் மிக முக்கியமானவர் ஜேலான் எனும் சர்வாதிகாரியேயாவர். அவர் ஹிப்போகிராட்டஸ் (Hippocratus) என்ற ஜேலா நாட்டுச்

சர்வாதிகாரியின் படைத்தலைவராக ஆரம்பத்தில் இருந்தார். அவருடைய ஆற்றலையும் வீரத்தையும் கண்ட ஹிப்போக்கிராட்டஸ் அவருக்குப் பல பரிசுகள் வழங்கினர். அவரது துணை கொண்டு ஹிப்போகிராட்டஸ், நெக்ஸாஸ் (Naxos), சாங்கிள் (Zangle), லியோன்டினி, சிராக்யூஸ் ஆகிய நகரங்களைக் கைப் பற்றினர். ஆனல் கொரிந்து (Corinth), கார்சைரா (Corcyra) ஆகிய நகரங்களில் வாழ்ந்த கிரேக்கர்கள் தலையிட்டு, சிராக் யூஸை அவரது நாட்டோடு இணைத்துக் கொள்ளாதவாறு தடுத்துவிட்டனர். அதற்குப் பதிலாகக் கெமரினு (Camarina) என்ற இடத்தை அவர்கள் ஹிப்போகிராட்டஸிற்கு அளித் தனர். அவர் கி. மு. 491-இல் இறந்தபோது ஜேலா நாட்டு மக்கள் அவரது மகனைப் பட்டத்திற்கு வராதவாறு தடுத்தனர். சர்வாதிகார ஆட்சி மீண்டும் ஏற்படுவதை அவர்கள் விரும்பா ததே அதற்குக் காரணம். ஜேலான் என்ற தளகர்த்தர் ஹிப்போகிராட்டஸின் புதல்வர்களை ஆதரித்து, ஒரு குதிரைப் படையுடன் சென்று கலகக்காரர்களை அடக்கினர். ஆனல் வெற்றி கிடைத்தவுடன் பட்டத்திற்குரியவர்களை விலக்கிவிட்டுத் தம்மையே சர்வாதிகாரியாக அவர் ஆக்கிக் கொண்டார். அவர் அரசியல் துறையில் பேராசை மிக்கவர். தமது நாட்டின் பரப்பைப் பெருக்க விரும்பியவர். எனவே சிராக்யூஸின் மீது படையெடுக்கத் திட்டமிட்டார். அதற்கேற்றதோர் சாக்கும் அவருக்குக் கிடைத்தது. சிராக்யூஸின் ஜனநாயகவாதிகளுக்கும், பணநாயக வாதிகளுக்கும் மோதல் ஏற்பட்டுப் பணநாயக வாதிகள் நாடு கடத்தப்பட்டனர். அங்ஙனம் கடத்தப்பட்ட பிரபுக்கள் ஜேலானின் ஆதரவை நாடினர். ஜேலான் உடனே ஒரு படையுடன் புறப்பட்டு, சிராக்யூஸை அடைந்து அங்குச் சச்சரவிட்டுக் கொண்டிருந்த இரு கட்சிகளையும் வென்று தம்மை அதன் சர்வாதிகாரியாகக் கி. மு. 485-இல் ஆக்கிக் கொண்டார். சின்னட்களுக்குப் பிறகு ஜேலான் தம்முடைய பழைய தலைநகரை விடுத்து, சிராக்யூஸையே தலைநகராகக் கொண்டார்.

(3) ஜேலான் என்பாரின் சீர்திருத்தங்கள்

ஜேலான் உண்மையிலேயே மக்களின் நலன் கருதிய வல்லரசராய்த் திகழ்ந்தார். முதலில் அவர் சிராக்யூஸை மாண்பு மிக்க பெரும் நகரமாக ஆக்கினர். ஏற்கெனவே ஒரு நல்ல துறைமுகமாக இருந்த அந் நகரை மேலும் விரிவுபடுத்தி அதன் சிறப்பை வளர்த்தார். அதன் பரப்பைப் பெருக்குவதற் காக ஆர்டீஜியா (Ortygia) என்ற தீவையும், அக்ராடினு

(Achradina) என்ற மலைக் கோட்டையையும் [சிராக்யூஸிற்கு வடக்கேயுள்ளது] ஒன்றுக இணைத்தார். இவ்விரண்டையும் கோட்டைச் சுவர் ஒன்றால் வளைத்து, நகரின் பாதுகாப்பை அதிகமாக்கினர். நகரின் துறைமுகப் பகுதியும், கோட்டைப் பகுதியும் ஒன்றோடொன்றிணைந்து ஒன்றுக்கொன்று துணையாய் விளங்கின. கப்பல்கள் வந்து தாராளமாகத் தங்குவதற்குப் புதிய தளங்களை அவர் துறைமுகத்தில் அமைத்தார். நன்கு பயிற்சியளிக்கப்பட்ட ஒரு தரைப்படையோடு வலிமைமிக்க ஒரு கடற்படையையும் அவர் நிறுவினர். அதன் விளைவாக மேலைக் கிரேக்க நாடுகளிலேயே சிராக்யூஸ் ஒப்பற்றதோர் கடற்படைத் தளமாகவும், துறைமுக நகரமாகவும் விளங்கலாயிற்று.

சிராக்யூஸின் சிறப்பை ஓங்கச் செய்ய வேறு நகரங்களிலிருந்து ஏராளமான மக்களைக் கொணர்ந்து அங்கு அவர் குடியேறச் செய்தார். தமது பழைய தலைநகரான ஜெலாவிலிருந்து ஏறக்குறையப் பாதியளவு மக்களைக் கொணர்ந்து சிராக்யூஸில் குடியேற்றினர். கெமெரினு என்ற நகரத்தை முற்றிலும் அழித்து விட்டு அதன் மக்கள் அனைவரையும் கொணர்ந்து சிராக்யூஸில் குடியேற்றுவித்தார். மிகாரா, யூபியா போன்ற கிரேக்க நாடுகளிலிருந்தும் அவர் அறிவு மிக்க கிரேக்கர்களைக் கொண்டு வந்து தமது தலைநகரில் குடியேற்றிக் குடியுரிமையையும் வழங்கினர். பத்தாயிரம் போர்வீரர்களுக்கு [கூலிப் படையினர்] அவர் குடியுரிமை தந்து தலைநகரிலேயே வசிக்கச் செய்தார். ஜெலான், பிரபுவம்சத்தைச் சேர்ந்தவராகையினால், சாதாரண மக்களுக்குக் குடியுரிமை வழங்க மறுத்தார். ஏழைகள் பலர் அடிமைகளாக இருந்து அவதியுற்றனர். அடக்கு முறையைக் கையாண்டு அவர் தமது பகைவர்களை வன்மையாக ஒடுக்கினர். அவரது மூன்று சகோதரர்களும் அவரது வல்லாட்சிக்குப் பெரிதும் துணையாக இருந்தார்கள். தெரான் என்ற அண்டை நாட்டுச் சர்வாதிகாரியோடு அவர் நட்பு பாராட்டினர். அவரது மகளை மணந்து திருமண உறவையும் ஏற்படுத்திக் கொண்டார். இங்ஙனம் பல வகையிலும் சிராக்யூஸும், அக்கிரகஸும் ஒற்றுமையுடன் வாழ்ந்த காரணத்தால்தான் பின்னால் ஏற்பட்ட ஃபினீஷியப் படையெடுப்பைச் சிசிலி சமாளிக்க முடிந்தது. கிரீஸ் நாட்டின் மீது பாரசீகர்கள் படையெடுத்த பொழுது தாய்நாட்டிற்குதவி செய்ய ஜெலான் விரும்பினர். சிசிலியிலேயே அங்ஙனம் உதவி செய்யக் கூடிய நிலையிலிருந்தவர் அவர் ஒருவரே. ஆனால் அவரால் உதவி செய்யமுடியாதபடி கார்த்தஜீனியர்கள் அவரது நாட்டின் மீது படையெடுத்தனர்.

(4) சிசிலிக்கும் கார்த்தேஜுக்கும் ஏற்பட்ட போர் [கி. மு. 480]

அக்ரகஸ் நாட்டுச் சர்வாதிகாரியும், ஜெலானின் மாமனுருமான தெரான் என்பாருக்கும், ஹிமீரா நாட்டுத் தலைவரான தெரில்லஸ் (Therilles) என்பாருக்கு மிடையே ஏற்பட்ட சிறு பூசல் ஒன்று முற்றி நாளடைவில் ஒரு போராக வடிவெடுத்தது. ஜெலான், தேரானுக்கு உதவி செய்ய முன்வந்தார். தெரில்லஸுக்கு அனக்ஸிலாஸ் என்ற மெசானுவின் சர்வாதிகாரி உதவி செய்ய முன்வந்தார் ஆனால் அனக்ஸிலாஸ், ஜெலானை ஒத்த வலிமையுடையவர் அல்லர். எனவே தெரில்லஸ் என்பார் கார்த்தேஜ் என்ற பொது எதிரி நாட்டின் உதவியை நாடினார். கார்த்தஜீனியர்களும் இத்தகையதோர் சூழ்நிலையை எதிர் நோக்கிக் காத்துக் கொண்டிருந்தனர். தங்களுடைய பெரும் போட்டியாளர்களான சிசிலியக் கிரேக்கர்களை ஒழித்துக் கட்ட, தக்க தருணம் வாய்த்ததென எண்ணி, அவர்கள் முழு மனத்துடன் போரில் குதித்தனர். ஹிப்பியாஸ் என்ற ஆதென்ஸ் நகரச் சர்வாதிகாரி எங்ஙனம் பாரசீகரைத் தூண்டிக் கிரீஸைத் தாக்கும்படி ஏவினனோ அதே போன்றுதான் தெரில்லஸ் என்ற கொடுங்கோலனும் சிசிலியைக் கார்த்தஜினியர்களுக்குக் காட்டிக் கொடுக்க முன்வந்தான். பாரசீகர்களும், கார்த்தஜீனியர்களும் ஒருவர்க்கொருவர் நண்பர்கள். எனவே பாரசீகர்கள் கிரீஸைத் தாக்கிய அதே சமயத்தில் கார்த்தஜீனியர்களும் சிசிலியைத் தாக்கினர். 'கிரீஸ் நாட்டிற்குச் சிராக்யூஸ் போன்ற சிசிலியக் குடியேற்ற நாடுகள் போர் உதவி செய்யாமல் தடுப்பதற்காகவே கார்த்தஜீனியர்களைப் படையெடுக்கும்படிப் பாரசீகர்கள் தூண்டி விட்டிருக்கக் கூடும்' எனப் பியூரி என்னும் ஆசிரியர் கருதுகின்றார்.

கார்த்தஜீனியர்கள் மூன்று இலட்சம் வீரர்களைக் கொண்ட தரைப்படையையும், இருநூறு கப்பல்களைக் கொண்ட கப்பற் படையையும் ஹாமில்கார் (Hamilcar) என்ற தளபதியின் கீழ் சிசிலிக்கு அனுப்பி வைத்தனர். ஹிமீரா என்ற நகரை வீடுவிக்க அவர்கள் விரைந்தனர். நகருக்கு அருகே சென்று கடற்கரையருகே ஒன்றும், அருகிலுள்ள தாழ்ந்த குன்றுகளில் ஒன்றுமாக இரண்டு கூடாரங்களை அடித்துக் கொண்டு ஹாமில்காரின் படைகள் காத்திருந்தன. தேரான், ஜெலான் என்பாரின் உதவியை நாடியதன் விளைவாக 50,000 காலாட் படையும், 5,000 குதிரைப் படையுங் கொண்ட ஒரு பெரும்படையுடன் ஹிமீராவிற்கருகே ஜெலான் வந்து சேர்ந்தார். ஜெலான் படைகளும், ஹாமில்காரின் படைகளும் ஒன்றுக்கொன்று எதிர்

நோக்கில் அமைந்திருந்தன. இச் சமயத்தில் ஹாமில்கார் ஒரு மூட நம்பிக்கைக்கு இரையாகி அதன் விளைவாகத் தோல்வியைத் தழுவினர். கிரேக்கர்களைப் போர்க்களத்தில் தோற்கடிக்கும் முகத்தான், கிரேக்கர்களின் போர்த் தெய்வமான போசிடன் என்ற கடவுளுக்கு ஒரு வேள்வியைச் செய்ய அவர் விரும்பினர். அத்தகைய வேள்விக்குரிய சடங்குகளைச் செய்ய அவருக்கு ஒன்றும் தெரியாதாகையினால், கார்த்தேஜுக்கு உட்பட்ட செலினஸ் (Selinus) என்ற ஒரு கிரேக்கத் தலைவருக்கு எழுதி மேற்கண்ட சடங்குகளை அறிந்த ஒருசில கிரேக்கக் குதிரை வீரர்களை அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக் கொண்டார். இந்தக் கடிதமானது ஜேலானின் கைகளுக்கு எப்படியோ கிடைத்துவிட்டது. அதைப் படித்துவிட்டு அவர் ஒரு தந்திரம் செய்தார். குறிப்பிட்ட நாளில் ஒருசில குதிரை வீரர்களுடன் அவரே ஹாமில்காரின் கூடாரத்திற்குப் புறப்பட்டுச் சென்று, செலினஸ் அனுப்பிய குதிரைவீரர்கள், தாமும் தம் கூட வந்தவர்களுமே எனக் கூசாது பொய்யுரைத்தார். கார்த்தஜீனியர்கள் அவர்களை நம்பி உள்ளே அனுமதித்தனர். போசிடன் என்ற தெய்வத்தின் பலிபீடத்திற்கு ஹாமில்காருடன் அவர்களும் சென்றனர். பலிபீடத்தை அடைந்ததும் திடீரெனத் திரும்பித் தாக்கி, ஹாமில்காரையும் மற்றும் பல முக்கிய வீரர்களையும் அவர்கள் வெட்டி வீழ்த்தினர். இவற்றையெல்லாம் குன்றுகளின் உச்சியிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த கிரேக்க வீரர்கள் ஓநாய்களெனப் பாய்ந்து நகரை வளைத்துக் கொண்டனர். போராட்டம் மிகக் கடுமையாக நடைபெற்றது ஜேலானின் படைகளும், ஹாமில்காரின் படைகளும் மிக நீண்ட நேரம் போரிட்டன. முடிவில் ஜேலானுக்கு முழு வெற்றி கிடைத்தது. ஹாமில்காரின் தரப்பில் 15,000 வீரர்கள் கொல்லப்பட்டனர். அவரது கப்பற் படை யாவும் சின்னபின்னமாயின. ஒரே ஒரு படகு மட்டும் தப்பித்து, கார்த்தேஜுக்குச் சென்று ஹாமில்காரின் தோல்வியைப் பற்றிய துயரச் செய்தியை அறிவித்தது.

ஹிமீராவில் நடைபெற்ற இப் போரானது மேலைக் கிரேக்கர்களின் வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கார்த்தஜீனியரின் படையெடுப்புப் பற்றிய பயம் கிரேக்கரை விட்டு அகன்றது. சலாமிஸ் வெற்றியானது எங்ஙனம் தாய் நாட்டுக் கிரீஸைப் பாரசீகர்களின் படையெடுப்பினின்றும் காப்பாற்றியதோ அதே போன்று ஹிமீரா வெற்றியும் சேய் நாட்டுக் கிரேக்கரைக் கார்த்தஜீனியர்களிடமிருந்து காப்பாற்றியது. போர்க்களத்திலிருந்து ஏராளமான செல்வம் கிரேக்கர்

களுக்குக் கிடைத்தது. பின்னர் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி கார்த்தஜீனியர்கள் இரண்டாயிரம் தாலந்துகள் (Talents) இழப்பீடாக ஜேலானுக்குக் கொடுத்தனர். இங்ஙனம் கிடைத்த செல்வத்தை வைத்துக் கொண்டு ஜேலான் மீண்டும் செல்வாக்குடன் விளங்கினர். தமது வெற்றியின் நினைவாக அவர் டெமாரிட்டன் (Demareten) என்ற பெரிய வெள்ளி நாணயங்களை வெளியிட்டார். நாணயத்தின் பெயர் ஜேலானுடைய மனையாளின் பெயர் என்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்கது. ஜேலான் ஒரு சர்வாதிகாரியாக மதிக்கப்படாமல் நாட்டைக் காக்க வந்த நல்லரசர் எனப் போற்றப்பட்டார். அவரது வெற்றியின் விளைவாக அக்ரகஸ் நகர் முன்னேற்றமடைந்தது. தெரான் எனும் அதன் கொடுங்கோலர், போரில் பிடிக்கப்பட்ட கைதிகளைக் கொண்டு நகரை அழகுபடுத்தினர். ஜேலானும் அக் கைதிகளைக் கொண்டு சிராக்யூஸை வனப்பு நிறைந்த நகரமாக மாற்றினர்.

(5) சர்வாதிகார ஆட்சியின் வீழ்ச்சி

கி. மு. 478-இல் ஜேலான் இறந்தார். அவருக்குப் பின் அவரது சகோதரர்கள் ஒருவர் பின் ஒருவராய் அரசாண்டனர். ஹீரான் (Hieron) எனும் அவரது மூத்த சகோதரர் தமது தம்பியான திராசிபியூலஸ் (Thracybulus) என்பாரை அடக்கிவிட்டுத் தாமே தனியரசு செலுத்தினர். எட்ரஸ்கர்கள் என்ற இத்தாலியரை அவர் கைமி (Cyme) எனும் போர்க்களத்தில் தோற்கடித்தார். அவ் வெற்றியின் நினைவுச் சின்னமாக அவர் ஒலிம்பஸ் கோயிலிறைக்குத் தலைக்கவசம் ஒன்றை அனுப்பிவைத்தார். பிண்டார் எனுங் கவிஞர் அவரது வெற்றியைப் புகழ்ந்து அழகிய கவிதை யொன்றை எழுதியுள்ளார். ஜேலானைப் போலன்றி ஹீரான், மக்களைக் கொடுமைப்படுத்தி மிகவும் கெட்ட பெயரை வாங்கிக் கொண்டார். அவர் எல்லோரையும் ஐயப்பட்டு அதற்காகப் பெரிய உளவாளிப் படையொன்றை உண்டாக்கினர். புலவர்களையும், கவிஞர்களையும் ஆதரித்தவர் என்றாலும் அவர் உண்மையில் ஒரு சர்வாதிகாரியாகக் காட்சியளித்தார். படாடோபத்திற்கும் சுயநலத்திற்கும் அவர் இரையானார். அவருக்குப் பின் வந்த அவரது தம்பியான திராசிபியூலஸ் மிகவும் பலவீனர். நிலப் பிரபுக்களைச் சந்தேகித்து அவர்களில் பலரை அவர் கொன்று குவித்தார். அவரது அடக்குமுறை ஆட்சியைக் கண்டு பொறுத சிராக்யூஸ்மக்கள் கொதித்தெழுந்து, அவரை நகரை விட்டே ஓட்டிவிட்டனர். இங்ஙனம் விடுதலை

பெற்ற நகரத்தைக் கிரேக்கர்கள் ஜ்யூஸ் (Zeus) என்ற தெய்வத் திற்கு விழா எடுத்துக் கொண்டாடினர். குடியரசு, இங்ஙனம் முடியரசை வென்றது. ஆனால் கி. மு. 406-ஆம் ஆண்டு முதலாம் டயோனிஷியஸ் (Dionysius) என்பவரால், கொடுங் கோலாட்சி மீண்டும் சிராக்யூஸில் ஏற்படுத்தப்பட்டது.

11. பேரரசுப் பாதையில் ஸ்பார்ட்டாவும் ஆதென்ஸும்

பாரசீகப் போர்களுக்குப் பின் கிரேக்க நாடுகளின் தலைமையைப் பெற இரண்டு பெரும் நகரங்கள் ஒன்றுக்கொன்று போட்டியிடுவதைக் காண்கிறோம். கிரேக்கப் பண்பாட்டைத் தழுவிய எல்லா நாடுகளையும் ஒருங்கிணைத்து அவற்றை ஒரு பேரரசாக அமைக்க இந்த இரு நகர அரசுகளும் முயற்சி செய்தன. அம் முயற்சியில் ஸ்பார்ட்டா தோல்வியுற்றது. ஏனெனில் தக்க வலிமையுள்ள அதற்கு ஒரு கடற்படையில்லை. அதனால் வன்மைமிக்க கடற்படையை வைத்திருந்த ஆதென்ஸ் இறுதியில் இம் முயற்சியில் வெற்றி பெற்றது. இந் நிகழ்ச்சிகளுக்குரிய காரணங்களை ஈண்டு ஆராய்வோம்.

(1) பேரரசை அமைக்க ஸ்பார்ட்டாவின் முயற்சி

மைக்கலி (Mycale) போர்க்களத்திற்குப் பின்னர் ஈஜியத் தீவுகளை வெல்ல வேண்டுவதன் அவசியத்தை ஸ்பார்ட்டா உணர்ந்தது. அப் பணியைச் செய்து முடிக்கப் பாசானியஸ் (Pausauius) என்னும் பெரு வீரரை அது ஒரு கப்பற் படையுடன் அனுப்பி வைத்தது. அவர் முதலில் சைப்ரஸ் தீவைப் பாரசீகரிடமிருந்து கைப்பற்றினர்; அதன் பின் பைசாண்டியம் (Byzantium) என்ற துறைமுகம் வரையில் சென்று அதையும் வென்றார். ஆனால் அதற்குப் பின்னர் அவருடைய நடத்தை முற்றிலும் மாறியது. கீழை நாட்டுப் போகப் பொருள்களும் செல்வமும் அவரை மயக்கிவிட்டன. நாட்டைக் காட்டிக் கொடுக்கும் ஒரு கயவனை அவர் மாறினர். பாரசீக மன்னர் ஸெர்க்ஸஸ் என்பாரோடு அவர் நட்பு பாராட்ட ஆரம்பித்த தோடல்லாமல் அவருடைய மகளை மணந்து கொள்ளவும் இசைந்தார். பாரசீக நடை உடைபாவனைகளை மேற்கொண்டு ஏறக்குறைய ஒரு பாரசீகராகவே அவர் மாறிவிட்டார்.

ஸெர்க்ஸஸ் அவருக்குப் பாரசீக வீரர்கள் அடங்கிய மெய்க் காப்பாளர் படையொன்றையும் வழங்கினர். பாரசீக மன்னரின் கீழ் ஒரு சேட்ரப் (Satrap) அல்லது ஆளுநராக இருக்கவே அவர் விரும்பினர். மேலும், அவர் ஒரு கொடுங்கோலனைப் போல நடந்து கொண்டார். இவற்றையெல்லாம் கண்ட ஸ்பார்ட்டர்கள் அவரை ஆசியாமைனரினின்றும் திரும்ப வரவழைத்தனர்; அவர் மீது குற்றம் சாட்டி விசாரித்தனர். ஒருசில குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதின் விளைவாக அவர் தளகர்த்தர் பதவியினின்றும் அகற்றப்பட்டார். டார்சிஸ் (Dorcis) என்ற ஸ்பார்ட்டத் தலைவர் போர்முனைக்கு அனுப்பப் பட்டார். ஆனால் கிரேக்கர்கள் ஆதென்ஸைச் சார்ந்த அரிஸ்டிடிஸ் (Aristeides) என்பவரைத் தலைவராக நியமிக்கும் படிக் கிளர்ச்சி செய்தனர். இச் சமயத்தில் பாசேனியஸ் இரகசிய மாகப் பைசான்ஷியத்திற்குச் சென்று பழைய பதவியைக் கைப் பற்ற முயன்றார். செஸ்டோஸ் என்ற நகரத்தையும் அவர் வென்றார். இதைக் கண்ட ஆதென்ஸ், மில்டியாடிஸ் (Miltiades) என்ற தலைவரின் புதல்வரான கைமன் (Cimon) என்பவரைப் பைசான்ஷியத்திற்கு அனுப்பி வைத்தது. கைமன், பைசான் ஷியத்தைப் பாசேனியஸிடமிருந்து மீண்டும் கைப்பற்றி அவரை அங்கிருந்து துரத்திவிட்டார். ஸ்பார்ட்டா நகரத் திற்குத் திரும்பிவந்து கையூட்டுகளை நிறைய வழங்கித் தமது பழைய நிலையைப் பெறப் பாசேனியஸ் பெரிதும் முயன்றார். ஆனால் ஸ்பார்ட்டர்கள் அவரை மன்னிக்கவில்லை. அவர் மீது நாட்டுத் துரோகக் குற்றம் சாட்டி ஈஃபர்கள் முன்னிலையில் விசாரணை செய்தனர். எனினும் அவர்மீது சுமத்தப்பட்ட குற்றங்களைத் திட்டவட்டமாக யாரும் நிரூபிக்க முடியவில்லை. எனவே பாசேனியஸ், ஹெலட்டுகள் என்ற அடிமைகளுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு விடுதலை வாங்கித் தருவதாகக் கூறி அவர்களின் ஆதரவைப் பெற முயன்றார். இந்தச் சதியானது கண்டுபிடிக்கப்பட்டது. பாசேனியஸ் பயந்து ஆதென்ஸ் நகரத்திலிருந்த அத்தீனு தேவதையின் கோவிலுக் குள் சென்று ஒளிந்துகொண்டார். தம்மை ஆதரித்து விடுவிக் கும்படிப் பாரசீக மன்னருக்கு அவர் எழுதிய கடிதம் ஒன்றை அவரது வேலையாள் ஒருவர் ஸ்பார்ட்டாவின் ஈஃபர்களிடம் கொடுத்து விட்டார். ஏனெனில் கடிதத்தைக் கொண்டு பார சீகம் சென்றால் உயிரோடு திரும்பி வரமுடியாதென்பது அவ் வேலையாளுக்குத் தெரியும். இவ்விதம், பாசேனியஸ் செய்த குற்றம் நிரூபணமாயிற்று. எனவே ஈஃபர்கள் பாசேனியஸ் தங்கியிருந்த கோயிலின் கதவுகளைச் சுவர் வைத்து அடைத்து விட்டனர். உண்ண ஆகாரமின்றிப் பாசேனியஸ், கோவிலுக்

குள்ளே கிடந்து பட்டினியால் மாண்டார் (கி. மு. 471). அதன் பின் அக் கோயிலை ஸ்பார்ட்டர்கள் தூய்மைப்படுத்தினர்கள். பாசேனியஸ் போன்ற தீயனின் கால் பட்டதால் கோயில் அசுத்த மடைந்து விட்டதாக அவர்கள் கருதியதே அதற்குக் காரணம். பாசேனியஸின் நடத்தையால் ஸ்பார்ட்டாவின் தலைமைக்குப் பெரியதோர் ஊறு விளைந்தது. அதன் நற்பெயருக்கு ஒரு மாசு கற்பிக்கப்பட்டது.

கிரேக்க நாடுகள் அனைத்தையும் வென்று நிலப்பேரரசை அமைக்க வேண்டுமென்று ஸ்பார்ட்டா கனவு கண்டது. அந்த நோக்கத்துடன் அது லியோதிகிடிஸ் (Leotychidis) என்ற தளகர்த்தரை வடக்கு நோக்கி அனுப்பியது. தெசலி என்ற நாட்டின் மீது அவர் படையெடுத்தார். ஆனால் அங்கு வாழ்ந்த குறுநில மன்னர்களிடமிருந்து நிறையப் பொன்னை யும், வெள்ளியையும் கையூட்டாகப் பெற்றுக்கொண்டு அவர் வாளா இருந்து விட்டார். எனவே ஸ்பார்ட்டா அவரையும் திரும்ப வரவழைத்து விசாரித்து, மரணதண்டனை வழங்கிற்று. ஆனால் அவர் எப்படியோ தப்பி, டீஜியா (Tegea) என்ற நாட் டிற்கு ஓடிவிட்டார்.

இங்ஙனம் ஒரு நிலப் பேரரசை அமைக்க ஸ்பார்ட்டா எடுத்த முயற்சிகள் அனைத்தும் வீணாயின. ஆரம்பத்தில் கிரீஸிலேயே ஒப்புயர்வற்று விளங்கிய நகர அரசு ஸ்பார்ட்டாவேயாகும். பெலப்பொனீஷியக் கூட்டுறவை அமைத்த நகரஅரசு அதுவே. ஏறக்குறைய 40 ஆண்டுக் காலமாக அக் கூட்டமைப்பிற்குத் தலைமை வகித்துவந்த ஸ்பார்ட்டா, கிரீஸின் தலைமையைப் பெற விரும்பியதில் வியப்பொன்றுமில்லை. அண்டை நாட்டு மன்னர் களும்கூட ஸ்பார்ட்டாவின் உதவியையே தேவையான காலங் களில் நாடினர். லிடியாவின் மன்னரான கிரீஸஸ் (Crosecas) என்பார் பாரசீகத்துக்கு எதிராக ஸ்பார்ட்டாவின் உதவியையே நாடினர். டெல்ஃபி நகரத்துக் குறிசொல்லும் (இறைமொழி கூறும்), மாதுகூட ஸ்பார்ட்டாவின் உதவியை நாடும்படியே தன்னிடம் ஆலோசனை கேட்டவர்களுக்குக் கூறிவந்தாள். தெர்மாபிலேபோருக்குப் பின்னர் ஸ்பார்ட்டாவின் புகழ் உச்ச நிலையையடைந்தது. பிளெடீயா (Plataea) போர்க்களத்தில் அஃது மாபெரும் வெற்றியைப் பெற்றது. இத்தகைய சிறப்புகள் பலவற்றைப் பெற்றிருந்தும் ஸ்பார்ட்டா ஒரு பேரரசை யமைக்க இயலவில்லை. இயல்பாகவே, அதனிடத்துக் காணப் பட்ட ஒரு சில குறைகளே அதற்குக் காரணமாகும்.

பேரரசு ஒன்றை அமைக்க விரும்பும் நாட்டிற்கு மிக இன்றி யமையாததான கப்பற்படையானது ஸ்பார்ட்டாவிடம் இல்லை. எனவே அது பிறநாடுகளோடு அரசியல் தொடர்பும் வாணிக உறவும் கொள்ளமுடியவில்லை. அதன் செல்வாக்கு கிரீஸ் நாட்டு எல்லைக்குள் மட்டுமே செல்லுபடியாயிற்று. கடல் கடந்த நாடுகளில் அதற்கு ஒருவிதச் செல்வாக்கும் இல்லை. மற்றும் அக்கரை நாடுகளில் தனது ஆதிக்கத்தைப் பெருக்கவேண்டு மென்ற ஆவலும் ஸ்பார்ட்டாவிடம் காணப்படவில்லை. ஸ்பார்ட் டர்கள் பிற்போக்கு உள்ளம் படைத்தவராய் - வெறும் கிணற்றுத் தவளைகளாகவேயிருந்தார்கள். பழமை எனும் சகதியில் அவர்கள் ஊறிக்கிடந்தனர். அச் சகதியிலிருந்து அவர்களைக் கைதூக்கிவிடக்கூடிய புரட்சி மனப்பான்மை கொண்ட தலைவர் களும் அங்குத் தோன்றுதொழிந்தனர்.

சுயநலமும், குறுகிய நாட்டுப்பற்றும் கொண்ட ஸ்பார்ட்டா, கிரேக்க நாடுகளின் தலைமையைப் பெற எட்டுணையும் தகுதி யற்றது என்பதை அவ்வப்போது காட்டிக் கொண்டது. ஒப்பந் தப்படி கிரீஸஸ் மன்னனுக்கு அது உதவி செய்யவில்லை. ஆசியக் கிரேக்கர்கள் அதன் உதவியைக் கோரிய பொழுது அதை அவர்கள் பொருட்படுத்தவில்லை. முதலாம் பாரசீகப் படையெடுப் பின் போது காலங் கடந்த பின்பே ஆதென்ஸுக்கு அது உத வியை அனுப்பிவைத்தது. மாரத்தான்போரில் ஆதென்ஸ் தனியே நின்றுதான் போராட வேண்டி நேர்ந்தது. அதன் பின்னர் ஏற்பட்ட சலாமிஸ் கடற்போரில் ஸ்பார்ட்டா இறுதி வரை தனது ஒத்துழைப்பை நல்கவில்லை. கொரிந்தியப் பூசந் திக்குத் திரும்பிப்போய் அங்கே நின்று தான் போரிடவேண்டு மென்று அது கடைசிவரை சாதித்தது. தெமிஸ்டாக்ளிஸ் என் பாரின் தந்திரத்தாலேயே இறுதியில் ஸ்பார்ட்டர்கள் பாரசீகர் களை எதிர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதன் பின்னர் மார்டோனியஸ் என்ற பாரசீகத் தலைவன் அட்டிகா மீது படை யெடுத்த போது ஸ்பார்ட்டாவானது ஆதென்ஸுக்கு உடனே படையுதவி புரிய முன் வரவில்லை. இதனால் அத்தீனியர்கள் ஆதென்ஸிலிருந்து வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆசியா மைனரில் வாழ்ந்த கிரேக்கர்களுக்கு உதவி செய்ய ஸ்பார்ட்டா தயங்கியபோது, அத்தீனியர்களே அவர்களுக்கு உதவி செய்ய ஓடினர். பாரசீகர்களை ஹெல்லஸ்பாண்ட் வரை துரத்திச் சென்றவர்கள் அத்தீனியர்களேயாவார்கள். எனவே கிரீஸுக்கு வெளியேயிருந்த குடியேற்ற நாடுகள் ஸ்பார்ட்டாவின் தலை மையை ஏற்றுக்கொள்ள மறுத்து ஆதென்ஸின் தலைமையை ஏற்றுக்கொள்ள முன் வந்ததில் வியப்பொன்றுமில்லை.

ஸ்பார்ட்டாவின் செல்வாக்குப் பெலப்பொனீஷியாவிலேயே கொஞ்சம் கொஞ்சமாகக் குன்ற ஆரம்பித்தது. ஆர்காஸ் (Argos) டீஜியா (Tegea) போன்ற நாடுகள் ஸ்பார்ட்டாவின் தலைமையை ஏற்க மறுத்தன. ஈலிஸ் நாட்டின் கிராமங்கள் தனிப்பட்ட முறையில் ஒருங்கிணைந்து ஜனநாயகத்தை ஏற்படுத்தியதன் மூலம் ஸ்பார்ட்டாவின் மீதிருந்த வெறுப்பை அவை வெளிப் படுத்தின.

அதே போல மாண்டினியா (Mantinea) என்ற நிலப்பகுதி யில் இருந்த கிராமங்களும் ஒருங்கேயிணைந்து தனிப்பட்ட அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொண்டன. இங்ஙனம் நாளுக்கு நாள் ஸ்பார்ட்டாவின் கனவு நனவாவதற்குரிய வாய்ப்பு குறைந்து கொண்டே வந்தது.

அதற்கு மாறுக ஆதென்ஸ் நகரத்தின் பெருமையும், செல் வாக்கும் நாளுக்கு நாள் கிரீஸ் நாட்டிலும் அதற்கண்டையி லிருந்த குடியேற்ற நாடுகளிலும் வளர்ந்து கொண்டே வந்தன. பாரசீகப் படையெடுப்புகளின் போது அஃது பெற்ற வெற்றி கிரேக்கரிடம் அதற்குப் பெருமதிப்பைத் தேடித் தந்தது. மிகவும் இக்கட்டான கட்டங்களில், தெமிஸ்டாக்ளிஸ் என்பார் வெளிப்படுத்திய திறமையானது கிரேக்கர்களைக் களிப்புக்கடலில் ஆழ்த்தியது. அவர் மட்டுமன்றிக் கைமன், அரிஸ்டிடிஸ், போன்றவர்கள் காட்டிய தீரத்தாலும் வீரத்தாலும் ஆதென்ஸ் கிரேக்கர்களின் அன்பையும் ஆதரவையும் ஒருங்கே பெற்றது. ஆசிய கிரேக்கர்களுக்காகப் பாடுபட்ட அவர்களது தாராள மனப் போக்கைக் கண்டு, அக்கரை நாடுகளிலிருந்த கிரேக்கர்கள் அவர்களை முழுமனத்தோடு தலைவர்களாக ஏற்றுக் கொண் டார்கள். மேலும் ஆசியாமைனரிலிருந்த அயோனியர்களும் அத்தீனியர்களும் ஒரே அயோனிய இனத்தைச் சேர்ந்தவர்கள். எனவே, ஸ்பார்ட்டாவைவிட ஆதென்ஸை அவர்கள் பெரிதும் போற்றினர்கள். அவர்கள் தலைமையையும் விரும்பி ஏற்றுக் கொண்டார்கள். ஆதென்ஸ் நாட்டின் பெருமைக்கும் தலைமைக் கும் பெரிதும் காரணமாயிருந்தவர் தெமிஸ்டாக்ளிஸ் என்னும், ஒரு பெரும் தலைவராவர்.

(2) தெமிஸ்டாக்ளிஸ் என்பாரின் வாழ்வும் சாதனைகளும்

பாரசீகப்போருக்குப் பின்னர் ஆதென்ஸின் புகழை உச்ச நிலைக்குக் கொண்டுவந்த தெமிஸ்டாக்ளிஸ், நியோக்ளிஸ் (Neocles) என்ற அத்தீனியக் கனவானின் மகனுவார். ஆனல்

அவரது தாயார் ஆதென்ஸ நகரத்தைச் சேர்ந்தவரல்லர். ஆகையால் அவருக்குப் பூரணக் குடியுரிமை ஆதென்ஸில் அளிக்கப்படவில்லை. எனினும் அவர் ஓர் அரசியல் மேதையாகவும் தீர்க்கதரிசியாகவும் திகழ்ந்தார். வருங்காலத்தே ஆதென்ஸ் ஒரு கடலரசியாக விளங்கப்போகிறுள் என்பதை அவர்தம் மனக்கண்முன் மிகத்தெளிவாகக் கண்டார். இக்கட்டான நிலைமைகளில் அவர் வெளிப்படுத்திய சமயோசித யுக்திகள் அனைவர்க்கும் அவரிடத்தில் பயத்தையும் பக்தியையும் ஏற்படுத்தின. இயல்பாகவே அவரிடத்தில் அரசியல் தந்திரங்கள் அமைந்து கிடந்தன. தமது தாய்நாட்டின் பெருமைக்காக நெருக்கடியான காலங்களில் அவர் செய்த ஒப்பந்த சாதனைகள் மூலம் கிரேக்க வரலாற்றில் என்றும் அழியாத ஓர் இடத்தை அவர் பிடித்துக் கொண்டார்.

கி. மு 493–இல் அவர் ஆதென்ஸின் ஆர்க்கன் என்ற நிர்வாக அதிகாரிகளில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கி. மு. 480-இல் சலாமிஸ் கடற்போரில் சாகஸங்கள் பல புரிந்து கிரேக்கர்களுக்குப் பெரும் வெற்றியைத் தேடித்தந்தார். அதன் பின்னர் அவர் தம் கவனத்தையெல்லாம் ஆதென்ஸ் நகரை வலுப்படுத்துவதில் செலுத்தினர். கிரீஸிலேயே தலைசிறந்த ஒரு கடலாதிக்க நாடாக ஆதென்ஸை அமைப்பதில் அவர் முனைந்தார். மற்றும் நிலத்திலும் ஸ்பார்ட்டாவுக்கு இணையான வலிமையைப் பெற அவர் ஆதென்ஸிற்குப் பலவகையிலும் உதவினர். பழைய துறைமுகமான ஃபலரான் (Phaleron) என்ற நகரமானது பாதுகாப்பற்றதாயும், மிகவும் அகன்றதாயும் இருந்த காரணத்தால் அவர் பைரியஸ் (Piraeus) என்ற புதிய துறைமுகம் ஒன்றை அமைக்க விரும்பினர் அந்த நகரத்தில் ஒரு பெரிய கோட்டையைக் கட்ட ஆரம்பித்தார். ஆனால் அதற்குள் பாரசீகப் படையெடுப்பு வந்துவிடவே கோட்டையானது முடிவு பெறவில்லை.

பாரசீகப் போரின் போது மாராத்தான் போர்க்களத்தில் தெமிஸ்டாக்ளிஸும் பங்கெடுத்துக்கொண்டார். முதலாம் பாரசீகப் போருக்கும் இரண்டாம் பாரசீகப் போருக்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் ஓர் ஒப்பந்த ஜனநாயகத்தலைவராகவிளங்கினர். ஏனைய தலைவர்களான ஸாந்திபஸ் (Xanthippus), அரிஸ்டிடிஸ் ஆகிய இருவரும், ஆதென்ஸின் தரைப்படையானது விரிவாக்கப்படவேண்டுமென்று கூறிய காலத்தில் தெமிஸ்டாக்ளிஸ் அதை எதிர்த்து அத்தீனியக் கடற்படையை வலுவாக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். அவர் கூறியது எவ்வளவு உண்மை

என்பது கி. மு. 487-இல் ஈஜினு (Aegena) என்ற கடலாதிக்கம் பெற்ற நாட்டிடம் அத்தீனியக் கடற்படையானது மிகக் கேவலமான முறையில் தோல்வியுற்றதிலிருந்து தெளிவாகத் தெரிந்தது. மக்கள் அவரது கொள்கைகளை ஆதரிக்க ஆரம்பித்தனர். ஸாந்திபஸ், அரிஸ்டிடிஸ் ஆகியோர் நாடுகடத்தப்பட்டார்கள். எதிர்ப்பார் யாருமின்றித் தெமிஸ்டாக்ளிஸ் ஆதென்ஸின் கடல் வன்மையைப் பெருக்குவதில் முனைந்தார். லாரியம் (Laurium) என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட வெள்ளிச் சுரங்கங்களிலிருந்து கிடைத்தவரும்படியைக்கொண்டு அவர் ஆதென்ஸிற்குத் திறமை மிக்க கடற்படை ஒன்றை அமைத்துத் தந்தார். கி. மு. 481-இல் அத்தீனியக் கடற்படையில் டிரீரீம்ஸ் (Trirems) என்ற 100 பெருங்கப்பல்கள் இருந்தன. ஆனால் கி. மு. 480-இல் அவற்றின் எண்ணிக்கை 200 பெரும் போர்க் கப்பல்களாக உயர்ந்தது. இக் கப்பல்களின் துணைகொண்டே அவர் சலாமிஸ் கடற் போரில் வியக்கத்தக்க வெற்றியினைப் பெற்றார். அவ் வெற்றியைப் பெறுவதற்கு அவர் கடைப்பிடித்த உபாயங்களைப் பற்றி நாம் ஏற்கெனவே கண்டோம். ஸ்பார்ட்டர்கள் கொரிந்திய பூசந்திக்குப் பின்வாங்குவதற்காக முயன்ற போது, அவர்களைத் தடுத்து நிறுத்திய பெருமை அவரையே சாரும். தெர்மாபிலே போருக்குப் பின்னர் அத்தீனியர்கள் சலாமிஸ்தீவை நோக்கிப் பின்வாங்கும்படி யோசனை கூறியவர் அவரே. சலாமிஸ் தீவில், பாரசீகப் படையானது போரிடும்படியான இக்கட்டான சூழ் நிலையை உருவாக்கியவரும் அவரே. எனவே பாரசீகப் போர் களுக்குப் பின்னர் ஸ்பார்ட்டர்களே அவரை அழைத்துச் சிறப்புச் செய்தனர். ஆலிவ் இலைகளாலான முடியையும் தேர் ஒன்றையும் பரிசாக அவருக்கு வழங்கினர். நகரை விட்டு வெளியேறிய போது 300 ஸ்பார்ட்டர்கள் அவரை வழி அனுபபக் கூடவே வந்தனர்.

சலாமிஸ் வெற்றிக்குப் பின்னர், ஆதென்ஸின் வெளி நாட்டுக் கொள்கையை வகுப்பதில், தெமிஸ்டாக்ளிஸ் ஒன்றும் பங்கெடுத்துக்கொள்ளவில்லை. நாட்டின் பெருங்குடி மக்களின் ஒத்துழைப்பு அவருக்குக் கிடைக்கவில்லை. எனினும் ஆதென்ஸின் நன்மைக்காக அவர் அல்லும் பகலும் பாடுபட்டார். மார்டோனியர் எனும் பாரசீகரால் அழிக்கப்பட்ட ஆதென்ஸ் நகரை மீண்டும் கட்டுவதில் அவர் முனைந்தார். மிகவும் பெரியதும் திண்மை வாய்ந்ததுமான கோட்டைச் சுவர் ஒன்றை நகரைச் சுற்றி அவர் கட்ட ஆரம்பித்தார். 10 கி. மீட்டர் சுற்றளவுள்ள அக் கோட்டைச் சுவரை ஆயிரக் கணக்கான மக்கள் கட்டத் தொடங்கினர். அதைக் கண்ட ஸ்பார்ட்டா பொறுமை கொண்டு

கோட்டைகளை உடனே உடைத்துவிட வேண்டுமென்று வேண்டி ஒரு வேண்டுகோள் விடுத்தது. தெமிஸ்டாக்ளிஸ் அவ் வேண்டு கோளைக் கொணர்ந்த தூதுவர்களிடம் தமது சக அதிகாரிகள் ஜூரிலில்லை என்றும், அவர்கள் வந்தவுடன் தாமே வந்து நேரில் எல்லாவற்றையும் ஸ்பார்ட்ட அதிபர்களிடம் பேசிக்கொள்வதாக வும் சொல்லி அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டார். பின்னர் ஸ்பார்ட்டாவுக்கு உடனே செல்லாமல் நாள் கடத்திக்கொண்டே சென்றார். அதே சமயத்தில் கட்டிட வேலையையும் துரிதப்படுத்தி இரவும் பகலுமாக மதிற்சுவர் கட்டப்பட்டு வந்தது. இதையறிந்த ஸ்பார்ட்ட ஈஃபர்கள் சொன்ன சொல்லைக் காப்பாற்றவில்லை என்று அவரைக் குறைகூறிய போது தூதுவர்களை அனுப்பி நிலைமையை நேரில் வந்து கண்டு சொல்லுப்படி அவர் கூறிவிட் டார். அங்ஙனம் பார்த்துச் சொல்லவந்த தூதுவர்களைத் தெமிஸ் டாக்ளிஸ் பிணையமாகப் பிடித்து ஆதென்ஸிலேயே வைத்துக் கொண்டார். கோட்டையெல்லாம் கட்டிமுடித்த பின்னரே அவர் ஸ்பார்ட்டாவிற்குச் சென்று ஈஃபர்களின் முன்னிலையில் சான்று பகர்ந்தார். கோட்டை கட்டியது உண்மைதானென்றும், அதை இடிக்கமுடியாதென்றும் உறுதியாகக் கூறிவிட்டனர். ஸ்பார்ட் டர்கள் அதற்கு மேல் ஒன்றும் செய்ய இயலவில்லை. ஆதென்ஸ் நகரக் கோட்டையைக் கட்டிமுடித்த பின், பாரசீகப் போர்கள் காரணமாக அரைகுறையாக விடப்பட்ட, பைரியஸ் துறைமுகத் தின் காவற் சுவரையும் அவர் கட்டி முடித்தார். இதனால் நாட் டின் வாணிகம் பன்மடங்கு பல்கிப் பெருகிற்று. வாணிகத்தில் சிறந்தவர்களான வெளிநாட்டவர்களில் 10,000 பேர்களைக் கொணர்ந்து ஆதென்ஸில் அவர் குடியேற்றுவித்தார். அவர்கள் ஆதென்ஸ் அரசாங்கத்திற்கு வரிசெலுத்தியதோடு கப்பற்படை யிலும் போர்க் காலத்தே பணிபுரிந்தனர். அமைதிக் காலங்களில் அத்தீனியர்கள் செலுத்திய வரிக்குச் சமமான தொகையையே அவர்கள் கட்டினர். போர்க் காலத்தில் மட்டும் அவர்கள் சற்று அதிகமாக வரி செலுத்தினர்.

ஆதென்ஸ் நகர அரசிலிருந்த கப்பல்களின் எண்ணிக்கை யைப் பெருக்க அவர் ஒரு புது முறையைக் கையாண்டார். ஆண்டுக்கு ஒரு புதிய கப்பலைக் கட்டிமுடிக்க அவர் திட்டமிட் டார். ஆனால் அது இயலவில்லை. எனவே கப்பலின் உடற் பகுதியை மட்டும் (Hull) அரசாங்கம் கட்டுமென்றும், ஏனைய பகுதிகளைக் கட்டவும், கப்பலோட்டிகளைப் பழக்கவும் ஆகின்ற செலவுகளை நகரத்தின் பெருந் தனவந்தர்கள் மேற்கொள்ள வேண்டுமென்றும் அறிவித்தார். ட்ரையார்க்கி (Triarchy) என்ற வரியை அவர் அச் செல்வர்கள் மீது விதித்தார். நாட்டுப்

படையில் கப்பற்படை பெரிதும் முக்கியத்துவம் அடைந்தது. அதற்கேற்ப அரசியலமைப்பிலும் மாற்றங்கள் செய்யப்பட்டன. ஸ்ட்ராடகி (Strategi) என்ற முக்கியப் படைத்தலைவர் தரைப் படை, கடற்படை இரண்டுக்கும் தலைவராக்கப்பட்டார். அவரது வேலைப் பளுவைக் குறைக்க, ஒவ்வொரு குலத்தின் படையிலும் தரைப்படைக்கொருவரும் குதிரைப்படைக்கொருவருமாக இரு தளபதிகள் புதிதாக நியமிக்கப்பட்டனர்.

தெமிஸ்டாக்ளிஸின் வீழ்ச்சி

இங்ஙனம் பல அரும்பெருஞ் சாதனைகளைச் செய்த தெமிஸ்டாக்ளிஸ் இறுதியில் பரிதாபகரமான முடிவை எய்தினர். பொருமைக் கண்கள் அவரை வட்டமிட்டன. அரிஸ்டிடிஸ், (Aristides), ஸாந்திபஸ் (Xanthipus), கைமன் (Cimion) ஆகிய பெருந் தலைவர்கள் சேர்ந்துகொண்டு அவரைக் குறைகூற ஆரம்பித்தனர். தங்களைவிட அறிவிலும் ஆற்றலிலும் அரசியல் தந்திரங்களிலும் சிறந்து விளங்கியதாலேயே அவர்கள் தெமிஸ்டாக்ளிஸ் மீது அழுக்காறு கொண்டனர். ஸ்பார்ட்டா நகர அரசும் அவர் மீது வஞ்சினங்கொண்டிருந்தது; தனது விருப்பத்தை மதியாது ஆதென்ஸைச் சுற்றி மதில் எழுப்பித் தனக்குப் போட்டியாக அதை வளரச்செய்த அவரை எவ்வாறேனும் ஒழிக்க வேண்டுமெனக் கருவிக்கொண்டேயிருத்தது. பாசேனியஸ் என்பாரோடு சேர்ந்துகொண்டு, கிரீஸுக்கு எதிராக அவர் சதித் திட்டங்களில் ஈடுபட்டதாக ஸ்பார்ட்டர்கள் அவர் மீது குற்றம் சாட்டினர். இன்னும் இல்லாததையும் பொல்லாததையும் கூறி அவரது நற்பெயருக்கு மாசு கற்பிப்பதிலேயே அவர்கள் குறியாயிருந்தனர். கைமன் என்பார் ஸ்பார்ட்டர்களிடம் அளாதியான மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தவர். எனவே ஸ்பார்ட்டர்கள் கூறியவற்றை எல்லாம் அவர் உண்மையென்றே நம்பினர். எனவே அவரும் அவரது சகாக்களும் தெமிஸ்டாக்ளிஸை ஆர்க்கன் பதவியினின்றும் நீக்க முயன்றனர். தெமிஸ்டாக்ளிஸின் பகட்டான வாழ்வும், பலரது கண்களை உறுத்திற்று. அவரது சூழ்ச்சிகளையும் வஞ்சகத்தையும் கையூட்டுப் பெறும் வழக்கத்தையும் இன்னும் சிலர் வெறுத்தனர். அவரது தீவிர ஜனநாயகக் கொள்கைகள் பலருக்குப் பிடிக்கவில்லை. எனவே அவரை நாட்டைவிட்டு அப்புறப்படுத்தவேண்டும் என்ற தீர்மானத்தைப் பொதுமக்கள் மன்றத்தில் அவரது எதிரிகள் கொண்டுவந்த போது அதற்குப் பெரும்பான்மையான ஆதரவு கிடைத்தது.

அவரை ஆதரிப்பார் ஒருவருமிலராயினர். 'அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்' அவரது நண்பர்கள் அனைவரும் அவரைக் கைவிட்டு விடவே அவர் கி. மு. 473-இல் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டார். (Ostracised) ஆதென்ஸை விட்டு நீங்கிய அவர் நேரே ஆர்காஸ் நாட்டுக்குச் சென்றார். ஆர்காஸ், ஸ்பார்ட்டா நாட்டுக்கு எதிரியானதால் ஸ்பார்ட்டர்கள் மேலும் பயந்தனர். பாசேனியஸின் நாட்டுத் துரோகச் செயல்களில் தெமிஸ்டாக்ளிஸ் பங்கு கொண்டதற்குப் புதிய துப்பு கிடைத்துள்ளதாகக் கூறி ஸ்பார்ட்டாவும் ஆதென்ஸும், அவரைக் கைது செய்யும்படி ஆட்களை அனுப்பின. இதையறிந்த அவர் கார்கிரா (Corcyra) எனும் நகருக்கு ஓடினார். அங்கிருந்த மக்கள் அவருக்குப் புகலிடமளிக்க அஞ்சினர். எனவே அங்கிருந்து தப்பி அவர் வழியில் பல இன்னல்களுக்காளாகிப் பல துணிகரச் செயல்களிலீடுபட்டு இறுதியில் ஆசியாமைனர் பகுதியைச் சேர்ந்த நெக்சாஸ் (Naxos) நகரைச் சென்றடைந்தார். ஸெர்க்ஸஸ் மன்னர் இறந்த பின் (கி. மு. 464) அவர் சூசா (Susa) நகரத்துக்குச் சென்றார். ஸெர்க்ஸஸுக்குப் பின் பேரரசராக வந்த அர்டாஸெர்க்ஸஸ் (Artaxesxes) அவரைக் கௌரவத்தோடு வரவேற்று மெக்னீஷியா (Magnesia) என்ற மாவட்டத்தின் ஆளுநராக நியமித்தார். இன்னும் மூன்று பட்டணங்களில் கிடைத்த வரும்படியும் அவருக்கு அளிக்கப் பட்டது. கி. மு. 458-இல் அவர் மரணமடைந்தார்.

தெமிஸ்டாக்ளிஸ் பற்றிய மதிப்பீடு

தெமிஸ்டாக்ளிஸ் உண்மையிலேயே ஆதென்ஸின் ஒப்புயர் வற்ற தலைவர்களில் ஒருவர் என்பதில் ஐயமில்லை. ஆதென்ஸின் வருங்காலப் பெருமைக்கு வித்திட்டவர் அவரே. கப்பற்படையை வலுப்படுத்துவதில் அவர் அவ்வளவு தீவிர கவனம் செலுத்தாமலிருந்திருந்தால் ஆதென்ஸ் கிரேக்க நாடுகளின் தலைமையைப் பின்னர் பெற்றிருக்க முடியுமா என்பது ஐயப்பாட்டிற்குரியதேயாகும். ஆதென்ஸின் வாணிகத்தை வளர்க்க அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பாராட்டப்படத் தக்கனவாகும். ஆதென்ஸின் மதிற்சுவரைத் திண்மையாக்கி அதை ஸ்பார்ட்டாவுக்கு இணையான நகரமாகச் செய்த பெருமையும் அவர்க்குரியதேயாகும். பைரியஸ் (Piraeus) என்ற புதிய துறைமுகப் பட்டிணத்தை உருவாக்கி அதைக் கோட்டை மூலம் ஆதென்ஸோடு இணைத்து அதன் மூலம் தமது நாட்டின் வியாபாரத்தை வளர்க்க அவர் பாடுபட்டதும் 10,000, வெளிநாட்டு வணிகர்களைக் கொண்டுவந்து குடியேற்றியதும் அவரது எதிர்கால நோக்கினை

நன்கு எடுத்துக் காட்டுகின்றன. தமது கொள்கைகளாலும் செயலாலும் எதிர் காலத்தே எத்தகைய பலன்கள் ஏற்படுமென்பதைத் தெளிவாக உணர்ந்த அரசியல் மேதை அவர். நல்ல திட்டங்களை வகுப்பதோடல்லாமல் அவற்றைத் தக்க முறையில் பிறருக்கு எடுத்துக் கூறி அனைவரது சம்மதத்தையும் பெறக் கூடிய ஆற்றல் அவரிடம் மிகுதியாய்க் காணப்பட்டதென்பதற்குச் சலாமிஸில் அவர் நடந்துகொண்ட விதமும் எடுத்துக் கொண்ட முயற்சிகளுமே ஒரு பெருஞ் சான்றுமென்க. தடைகளைச் சுலபமாகச் சமாளிக்கத் தக்க சமயோசித புத்தியில் அவர் ஒப்பாரும் மிக்காரும் இலராய்த் திகழ்ந்தார். எனினும் அவரிடம் ஒருசில குறைகள் இருந்தன. பண ஆசையும் பேராசையும், பகட்டில் விருப்பமும் அவரது பலவீனத்திற்குக் காரணங்கள் ஆகும். அவ்வாசைகளை நிறைவேற்ற அவர் சில சமயங்களில் கையூட்டுப் பெறுதல், ஏமாற்றுதல் போன்ற செயல்களில் ஈடுபட்டார் என்பது உண்மையே. எனினும் பொதுவாகப் பார்க்கும் போது அவரது குணச் சிறப்புகள், குறைகளைக் கதிரவன் முன் உடுக்களென மங்கச் செய்துவிடுகின்றன என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

(3) டலாஸ் இணைக் கூட்டரசு

தோற்றம்

நாம் முன்னரே கண்டபடி மைகலே வெற்றிக்குப் பின் (கி.மு.479) ஸ்பார்ட்டா, பாரசீகப் போர் நடவடிக்கைகளினின்றும் விலகிக்கொண்டது. அத்தீனியர்களும் ஆசியாமைனர்ப் பகுதிகளில் வாழ்ந்த அயோனியர்களும் பாரசீகப் படைகளைத் துரத்திச் செல்ல வேண்டுமென்றும், அவர்களை ஆசியக் கிரேக்கக் குடியேற்றங்களிலிருந்து விரட்டிவிடவேண்டுமென்றும் கூறிய போது ஸ்பார்ட்டா அதில் எள்ளளவும் அக்கறை காட்டவில்லை. ஆனல் ஸாந்திபஸ், அரிஸ்டிடிஸ் போன்ற அத்தீனியத் தளகர்த்தர்கள், அத்தகைய திட்டத்தை ஆதரித்ததோடல்லாமல் கடலோரமாகத் தமது கப்பற்படையை நடத்திச் சென்று செஸ்டாஸ் என்ற துறைமுகப் பட்டினத்தையும் கைப்பற்றினர் (கி. மு. 478). இதைக் கண்ட ஆசியாமைனர்ப் பகுதியில் வாழ்ந்துவந்த அயோனியக் கிரேக்கர்கள், ஸ்பார்ட்டாவின் தலைமையைக் கைவிட்டு ஆதென்ஸின் தலைமையை ஏற்றனர். அன்னரது வேண்டுகோளுக்கிணங்க ஆதென்ஸின் தலைமையில் ஓர் இணைக் கூட்டரசு அமைக்கப்பட்டது (கி. மு. 478). அரிஸ்டிடிஸ் என்ற அத்தீனிய அரசியல் வல்லுநரே இக் கூட்டரசு அமைவதற்குப் பெரிதும் காரணமாயிருந்தார்.

கூட்டரசமைப்பின் கருவூலத்தை அயோனியர்களின் புனிதத் தலமான டீலாஸ் (Delos) நகரில் வைத்துக் கொள்வதென அனைவரும் தீர்மானித்தனர். ஆகையாற்றான் அது டீலாஸ் இணைக் கூட்டரசு என அழைக்கப்பட்டது.

நோக்கம்

பரஸ்பரப் பாதுகாப்புக்காகவே இவ்வரசியல் கூட்டுறவு முக்கியமாகச் சமைக்கப்பட்டது. பாரசீகப் பேரரசின் ஆதிக்கத்தினின்றும் விடுவிக்கப்பட்ட கிரேக்கக் குடியேற்ற நாடுகள் மீண்டும் தங்களது மேலான சுதந்திரத்தை இழக்காமற் பாதுகாக்கவே இந்தக் கூட்டுறவை உண்டாக்கினர். மற்றும் பாரசீகப் படையெடுப்பில் விளைந்த பொருட் சேதங்களை எல்லாம் ஈடுகட்டும் வகையில் பேரரசுக்கு உட்பட்ட நாடுகளைப் படையெடுத்துக் கொள்ளையடிக்க வேண்டுமென்பதும், ஆசியா மைனர்ப் பகுதிகளில் கொஞ்சநஞ்சம் எஞ்சியிருந்த பாரசீகப் படைகளையும் விரட்டியடித்து அவர்களது ஆதிக்கத்தை முற்றிலும் அங்கிருந்து ஒழித்துவிடமென்பதும் அதன் நோக்கங்களாகும்.

உறுப்பு நாடுகள்

பெரும்பாலும் கடலாதிக்கத்திற் சிறந்த நாடுகளே இதில் உறுப்புகளாயிருந்தன. ஆசியாமைனர், ஈஜியக் கடல், ஹெல்லெஸ்பாண்ட் ஆகிய பிரதேசங்களிலிருந்த நகர அரசுகளே இதில் கலந்து கொண்டன. ஆசியாமைனர்ப் பகுதியில் அமைந்திருந்த அயோனிய - இயோலிய (Aeolian) நகரங்களும், லெஸ்பாஸ் (Lesbos) முதற்கொண்டு ரோட்ஸ் (Rhodes) வரையில் காணப்பட்ட தீவுகளும், புரோபாண்டிஸ் (Propontis) நிலப்பகுதியிலிருந்த பல நகரங்களும், திரேஸ் நாட்டு நகரங்கள் சிலவும், ஈஜியக் கடலின்கண் அமைந்த ஸைக்லடீஸ் (Cyclades) தீவுக் கூட்டங்களான யூபியா (Euboea) போன்ற பற்பல தீவுகளும், (காரிஸ்டஸ் Carystus-தீவைத் தவிர) இக் கூட்டரசின் உறுப்புகளாய்ச் சேர்ந்திருந்தன.

அரசியலமைப்பு

இந்த இணைக் கூட்டரசில் எது தலைமைநாடு என்பது அதிகாரபூர்வமாக வரையறுக்கப்படவில்லை. எனினும் ஆதென்ஸ்தான் தலைமைநாடு என்பதை எல்லோரும் ஏற்றுக் கொண்டனர். ஏனெனில் கடலாதிக்கம் அதன் கைகளிலேயே இருந்தது. கூட்டரசைக் காக்கக் கூடிய திறமைமிக்க தளகர்த்தர்கள்

அங்குதானிருந்தனர். இக் கூட்டரசின் அரசியலமைப்பு எந்த ஒரு பத்திரத்திலும் எழுதப்படவில்லை. பரஸ்பர உடன்படிக்கைகள் மூலமாகவே உறுப்புநாடுகள் ஒன்றையொன்று தொடர்பு கொண்டன. இதில் சேர்ந்திருந்த நாடுகளனைத்தும் கடலாதிக்க மிக்கவைகளாயிருந்தமையால், பொதுப் பாதுகாப்பினிமித்தம் பொதுக் கப்பற்படை ஒன்றை நிர்மாணிக்க வேண்டுமென்றும், அதற்காக ஒவ்வொரு உறுப்புநாடும் தன்னுலியன்ற அளவு கப்பல்களைக் கட்டித்தர வேண்டுமென்றும் தீர்மானித்தன. எனினும் பல நாடுகள் ஒரு கப்பலைக் கூடக் கட்டித்தர இயலாத அளவுக்கு வறுமையால் பீடிக்கப்பட்டிருந்தன. எனவே ஆதியிலிருந்தே உறுப்புநாடுகள் இரு வகையாகப் பிரிக்கப்பட்டன. ஒருவகையான நாடுகள் கப்பல்களைக் கட்டிக் கொடுத்தன. மற்றொரு வகையைச் சேர்ந்த நாடுகள் அக் கப்பல்களுக்கான செலவுகளைப் பணமாக அளித்தன. ஒரு கப்பலை வைத்துப் பராமரிக்க ஆன செலவில் $\frac{1}{2}$ அல்லது $\frac{1}{3}$ பகுதியை ஆண்டொன்றுக்குச் சந்தாவாக அவை கூட்டரசுக்குச் செலுத்தி வந்தன. ஒவ்வொரு உறுப்புநாடும் எவ்வளவு சந்தா வழங்கவேண்டுமென்பதை அரிஸ்டிடிஸ் என்பாரே தீர்மானித்தார். கொஞ்ச காலங் கழித்து ஒவ்வொரு உறுப்புநாட்டின் பொருளாதார வசதிக் கேற்பச் சந்தாவானது மீண்டும் வரையறுக்கப்பட்டது. நான்காண்டுகளுக்கொரு முறை சந்தாத் தொகை மீண்டும் மீண்டும் பரிசீலிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டரசின் பொதுச் சபை ஒன்று டீலாஸ் நகரில் அவ்வப்போது கூடும். அதில் கலந்துகொள்ள ஒவ்வொரு நாடும் தனது பகராட்களை அனுப்பி வைக்கும். தீர்மானங்களை நிறைவேற்றும்போது ஒவ்வொரு உறுப்பு நாடும் ஒரு வாக்கினை வழங்குகின்ற உரிமையைப் பெற்றிருந்தது. கூட்டரசமைப்பின் பொதுப் பிரச்சினைகளை விசாரித்து நீதி வழங்கும் உரிமை அச் சபைக்கு உண்டு. கொள்கையளவில் எல்லா உறுப்பு நாடுகளும் சமமான சலுகைகளும் உரிமைகளும் உடையவை. ஆனால் நடைமுறையில் ஆதென்ஸே தனித் தலைமை செலுத்தியது. தீர்மானங்கள் விவாதிக்கப்பட்ட போதும் முடிவெடுக்கப்பட்ட போதும் ஆதென்ஸின் கைகளே ஓங்கி நிற்கும். அதன் கூற்றுக்கு மாற்றம் சொல்ல வேறெந்த நாட்டுக்கும் துணிவிருக்காது. வாக்கெடுப்பின் போது ஆதென்ஸின் இச்சைக் கேற்பவே ஏனைய நாடுகள் நடந்து கொள்ளும். சபையில் நிறைவேறிய தீர்மானங்களை நடைமுறையில் நடத்த வேண்டிய நிர்வாகப் பொறுப்பு ஆதென்ஸிடமே ஒப்படைக்கப் பட்டிருந்தது.

கூட்டுறவு நாடுகளின் கப்பற் படையை நடத்தும் தளகர்த்தர்களை வழங்கவேண்டிய பொறுப்பும் ஆதென்ஸையே சார்ந்ததாகும். நிறுவனத்தின் பொருளாதாரம் ஆதென்ஸின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்தது. அதைச் சேர்ந்த அதிகாரிகளே பொருளாளர்களாக இருக்கத் தக்கவர்கள். டீலாஸ் நகரிலிருந்த அபோலோ தெய்வத்தின் கோயிலிலேயே கருவூலம் அமைந்திருந்தது. அதை ஹெல்லனோடாமிய (Hellonotamiae) என்றழைக்கப்பட்ட பத்து அத்தீனிய அதிகாரிகளே பாதுகாத்து வந்தனர். ஒவ்வொரு நாட்டுக்குமுரிய சந்தாத் தொகையை வசூலித்தவர்களும் அவர்களே. இங்ஙனம் கூட்டரசமைப்பின் நிர்வாகத் துறை, சட்டமியற்றும் துறை, நீதி வழங்கும் துறை பற்றிய அதிகாரங்களும் பொருளைப் பாதுகாத்தல், இராணுவத்தை அமைத்தல் போன்ற அதிகாரங்களும் ஆதென்ஸிடமே இருந்ததால்தான் இருபதே ஆண்டுகளில் அது அத்தீனியப் பேரரசாக மாறி அமையலாயிற்று.

(4) டீலிய இணைக் கூட்டரசானது அத்தீனியப் பேரரசாக மாறி அமைதல்

டீலிய இணைக் கூட்டரசை அமைத்த பெருமை அரிஸ்டிடிஸ் என்பாருக்குரியதே போன்று, அத்தீனியப் பேரரசை ஏற்படுத்திய சிறப்பு சைமன் என்பாருக்கு உரியதாகும். கி. மு. 476-இல் அரிஸ்டிடிஸ் இறந்தபின் டீலியக் கூட்டரசமைப்பில் அவரது பதவியில் சைமன் என்பாரே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் சமரின்கண் சளைக்காது போர் புரியும் ஒரு பெருவீரர்; ஸ்பார்ட்டாவின் ஆதரவாளர். ஸ்பார்ட்டா நிலத்திலும், ஆதென்ஸ் கடலிலும் தலைமை பெற்று விளங்க வேண்டுமென்பது அவரது அவா. எனவே அவர் இணைக் கூட்டரசின் தலைமையைப் பெற்றதும் பாரசீகக் குடியேற்ற நாடுகளைத் தாக்குவதில் இறங்கினர். பாசேனியஸ் எனும் தூரோகியைச் செஸ்டாஸ், பைசான்ஷியம் ஆகிய இடங்களிலிருந்து துரத்திய பின், மாஸிடோனியாவில் ஸ்ட்ரைமான் (Strymon) நதிக்கரையில் அமைந்திருந்த இயோன் (Eion) எனும் பாரசீகக் கோட்டையைக் கைப்பற்ற முயன்றார்; கோட்டைக்குள் உணவுப் பொருள் செல்வதைத் தடுத்தார். போஜஸ் (Boges) எனும் அதன் படைத்தலைவர், சரணுகதியை விடச் சாவே சிறந்ததென எண்ணி, உயிர் வாழ உணவில்லை என்று தெரிந்தவுடன் தமது மனைவி மக்களை எல்லாம் கொன்று தீயில் போட்ட பின் தானும் அந் நெருப்பில் வீழ்ந்து உயிரை மாய்த்துக்கொண்டார் (கி. மு. 476). இங்ஙனம் திண்மை செறிந்த

கோட்டையைக் கைமன் பெற்றார். அதற்கருகே இருந்த வீணை நிலங்களில் தானியங்களையும், நாடுகளில் காணப்பட்ட மரத்தையும் கண்டு மயங்கிய அத்தீனியர் அங்குக் குடியேற்றம் ஒன்றை நிறுவ முயன்றனர். ஆனால் அங்குக் குடியேறிய அத்தீனியரைத் திரேஸில் வாழ்ந்த சுதேசிகள் கொன்று அழித்துவிட்டனர். கைமன் அதன் பின் திரேஸ் நாட்டிலிருந்த டாரிஸ்கஸ் (Doriscus) எனும் நகரைக் கைப்பற்றினார். திரேஸில் பாரசீகருக்குச் சொந்தமாயிருந்த எல்லா நகரங்களையும் அவர் மீட்டார். அதன் பின் கி. மு. 474-இல் அவர் ஸ்கைராஸ் (Scyros) எனும் தீவைக் கைப்பற்றினார். அங்கேயிருந்த ஒரு கல்லறையில் மிகப் பெரியதோர் எலும்புக் கூட்டைக் கண்ட அவர், அது தீசியஸ் (Theseus) என்ற பழங்கால ஆதென்ஸ் மன்னருடையதாகத்தான் இருக்க வேண்டுமெனக் கூறிய தோடு டெல்ஃபிக் குறி சொல்லும் கடவுளின் இசைவினைப் பெற்று, அதை ஆதென்ஸ் நகருக்கு மிகுந்த ஆரவாரத்தோடு கூடிய ஊர்வலத்துடன் கொண்டுவந்து தம் புகழை வளர்த்துக் கொண்டார். அவ் வெலும்புக் கூட்டை ஒரு கோயிலில் வைத்து தீசியஸுக்காக ஆண்டுக்கொரு முறை ஒரு தேசீய விழாவையும் அவர் ஏற்படுத்தினர். ஸ்கைராஸ் தீவை அத்தீனிய அதிகாரிகளே ஆண்டனர். இணைக் கூட்டரசை அத்தீனியப் பேரரசாக மாற்றும் முயற்சியில் இதுவே முதல் நிகழ்ச்சியாகும். இதற்குப் பின் ஒருசில ஆண்டுகள் கழித்துக் கைமன் தமது வாழ்வினிலேயே மறக்கவொண்ணாத ஓர் ஒப்பற்ற சாதனையைப் புரிந்தார். கிரீஸை வெல்லப் பாரசீகர்கள் மீண்டும் படை திரட்டுகிறார்களென்று கேள்விப்பட்டு அவர் உடனே 200 கப்பல்களுடன் ஆசியா மைனரின் கரையோரமாகச் சென்று யூரிமீடன் (Eurymedon) நதிக்கரையில் பாசறை அமைத்துக் காத்திருந்த ஸெர்க்ஸஸ் பெரும்படை ஒன்றை நிலத்திலும் நீரிலும் ஒரே சமயத்தில் வென்றார். பாரசீகரின் கடற்படையும், தரைப்படையும் ஒருங்கே தோல்வியுற்றதைக் கண்ட கிரேக்கர்கள் கைமனை ஒப்புயர்வற்ற பெருவீரரென்று கூறிப் போற்றினர். லிகிய (Lycia) நாட்டு மக்களை டீலிய இணைக் கூட்டரசில் சேருமாறு கைமன் வற்புறுத்தியதற்கேற்ப அவர்களும் அதில் உறுப்பினராய்ச் சேர்ந்தனர்.

இங்ஙனம் பெற்ற பல வெற்றிகளின் காரணமாகப் பெரிதும் நம்பிக்கையையும் துணிவையும் பெற்ற கைமன் வெளிப்படையாக ஏகாதிபத்தியக் கொள்கையைக் கடைப்பிடிக்கத் தொடங்கினர். பலவந்தமாகப் பல சிறு நாடுகளை இணைக்கூட்டரசில் அவர் முதலில் சேர்த்தார்; அதன்பின் அதை மெல்ல மெல்லப் பேரரசாக மற்றினர். ஸ்கைராஸ் தீவை ஆதென்ஸ் நாட்டோடு

சேர்த்தது, ஆதென்ஸின் பேரரசுப் பாதையில் முதல் எல்லைக் கல்லாகும். அதன்பின் அவர் இணைக்கூட்டரசில் சேராமல் தனித்து நின்ற காரிஸ்டஸ் (Carystus) நாட்டின் மேல் படையெடுத்து, (கி. மு. 472) வற்புறுத்தி அதைக் கூட்டரசில் சேருமாறு செய்தார். கி. மு. 469-இல் கூட்டரசிலிருந்து விலகிய நாக்ஸாஸ் (Noxos) நகரை மறுபடியும் பலவந்தப்படுத்தி அதில் சேரும்படிச் செய்தார். இடையில் பிரிந்துபோனதற்குத் தண்டனையாக அந்நகருக்குக் கூட்டரசின் பொதுச் சபையில் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டது. மற்று இணைக்கூட்டரசில் சுயேச்சையான உறுப்பினராயிருந்த தாசாஸ் (Thasos) தீவைக் கைமன் வேண்டுமென்றே படையெடுத்து இரண்டு ஆண்டுகள் போருக்குப் பின் கைப்பற்றி ஆதென்ஸோடு சேர்த்துக்கொண்டார். ஈஜியக் கடலின் வடபுலத்து நாடுகளோடு வியாபாரம் செய்வதற்கும், திரேஸ் நாட்டுப் பொன் வெள்ளிச் சுரங்கங்களைக் கைப்பற்றிக் கொள்வதற்கும் தாசாஸ் தீவு பெரிதும் உதவியாயிருக்குமென்பதற்காகவே கைமன் அதைக் கைப்பற்றினார். (465–63 கி மு.) ஏகாதிபத்தியக் கொள்கையை அவர் இங்ஙனம் கடைப்பிடிக்க ஆரம்பித்தார்.

இணைக்கூட்டரசமைப்பில் நாளடைவில் மூன்று வகையான நாடுகள் காணப்பட்டன. கப்பல்களை முழுமையாகக் கட்டித் தந்து கப்பலோட்டிகளையும் அவற்றுடன் கொடுத்த நாடுகள், முதல் வகையைச் சேர்ந்தவையாகும். செல்வமிக்க லெஸ்பாஸ் (Lesbos), கியாஸ் (Chios), சாமாஸ் (Samos) போன்ற நாடுகள் மட்டுமே இத்தகைய நிலையிலிருந்தன. ஏனைய நாடுகள் சில கப்பல்களுக்குப் பதிலாக ஆண்டுதோறும் கப்பம் கட்டி வந்தன. அத்தகைய இரண்டாம் வகை நாடுகளில் ஆதென்ஸ் தன் படை வீரர்களை வைத்திருந்தது. எனவே, அவை ஆதென்ஸின் அரசியலாதிக்கத்துக்குட்பட்டவைகளாகவே இருந்தன. இன்னும் ஒரு சில நாடுகள் ஆதென்ஸுக்கு நேரடியாக உட்பட்ட நாடுகளாக இருத்தன. அத்தகைய நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களிலும் ஆதென்ஸின் கட்டுப்பாடும் செல்வாக்கும் காணப்பட்டன. பல இரண்டாம் வகை நாடுகள் மூன்றாம்வகையினவாக நாளடைவில் மாற்றப்பட்டன. புதிதாகச் சேர்க்கப்பட்ட நாடுகளும், வெல்லப்பட்ட நாடுகளும் ஆதென்ஸின் நேரடி ஆட்சிக்கே உட்பட்டிருந்தன. இங்ஙனம் ஆதென்ஸின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட நாடுகளின் எண்ணிக்கை அதிகமாயும், சுயேச்சையான நேச நாடுகளின் எண்ணிக்கை மிகக் குறைவாயும் இருக்கின்ற நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் இணைக்கூட்டரசு நாடுகளின் பிரதிநிதிகள் சபை

யானது டீலாஸ் நகரில் கூட்டப்படுவதை ஆதென்ஸ் நாளடைவில் நிறுத்தியும் விட்டது. ஏனெனில் ஆதென்ஸின் விருப்பத்துக்கு விரோதமாக வாக்களிக்கும் நாடு ஒன்றுகூட இல்லை என்ற நிலை வெகு விரைவிலேயே உருவாகிவிட்டது. தாஸாஸ் தீவு வெற்றிக்குப் பிறகு பத்து ஆண்டுகளில் ஆதென்ஸின் தனித் தலைமையில் பேரரசு அமைந்தது. இந்தப் பேரரசு இயக்கத்தின் கடைசி நிகழ்ச்சியாக அமைந்தது, டீலாஸ்நகரத்தில் இருந்த இணைக்கூட்டரசின் கருவூலத்தை ஆதென்ஸ்நகரத்து அத்தீனியத் தேவதையின் கோயிலுக்கு மாற்றியதேயாகும் (454 கி. மு.). இதன்பின் இணைக்கூட்டரசின் பொதுச்சபை கூடுகின்ற வழக்கம் நின்றது. அதில் சேர்ந்திருந்த நாடுகள் பல வற்றுள் அத்தீனியப் படைகள் நிறுத்திவைக்கப்பட்டன. ஆதென்ஸுக்குக் கப்பம் கட்டிக்கொண்டு அதன் சொற்படி நடக்கும் நாடுகளாக அவை அனைத்தும் மாறின.

பேரரசின் உறுப்பு நாடுகள்

ஆதென்ஸ், தனது பேரரசை ஐந்து பெரிய மாவட்டங்களாகப் பிரித்தது. முதல் மாவட்டத்தில் திரேஸ் நாட்டிலிருந்த நகரங்கள் பலவும், இரண்டாவதில் ஹெல்லஸ்பாண்டைச் சேர்ந்த நகரங்களும், மூன்றுவதில் ஆசியாமைனர்ப் பகுதியைச் சேர்ந்த நகரங்களும், நான்காவதில் ரோட்ஸ், லிகிய நகரங்கள் போன்ற தென்திசைப் பிரதேசமும், ஐந்தாவதில் சைக்லேடு தீவுகள், யூபியா போன்ற ஈஜியத் தீவுகளும் அடங்கியிருந்தன.

பேரரசின் தன்மை

அத்தீனியப் பேரரசு, 250-க்கு மேற்பட்ட நகரங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கியது. ஒவ்வொரு நகரமும் தனது ஆட்சியைத் தானே நடத்தி வந்தது. ஆனால் அந்நிய நாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையில் ஆதென்ஸின் சொற்படியே ஏனைய நாடுகள் அனைத்தும் கேட்டாகவேண்டும். அவை ஒவ்வொன்றும் ஆதென்ஸுக்கு வேண்டும்போது கப்பலையோ அல்லது கப்பப் பணத்தையோ அளிக்கவேண்டும். கொலைக்குற்றங்கள் போன்ற மிகப் பெரிய குற்றங்கள் யாவும் ஆதென்ஸில் உள்ள நீதிமன்றங்களிலேயே விசாரிக்கப்படவேண்டும். இங்ஙனம் நீதித்துறையிலும் உறுப்புநாடுகள் யாவும் ஆதென்ஸுக்குக் கட்டுப்பட்டே நடந்துவந்தன. ஒவ்வொரு நகரமும் ஆதென்ஸோடு ஒரு தனிப்பட்ட உடன்பாட்டைச் செய்துகொண்டு அதற்கேற்பத் தன் உறவு முறைகளை அதனோடு அமைத்துக்கொண்டது. ஆதென்ஸ் தனக்கு அளிக்கப்பட்டிருந்த அதிகாரங்களை வைத்துக்கொண்டு எவ்விதமான அத்துமீறிய செயலிலும் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. அமித வரி வாங்கியதாகவோ, முறை

யற்ற நீதி வழங்கியதாகவோ, அதன் மீது யாரும் குறை சொல்ல இயலாது. அவ்வளவு கண்ணியமான முறையிலேயே தலைமை நாட்டுக்கும், அதைச் சார்ந்திருந்த நாடுகளுக்கும் தொடர்புகள் இருந்து வந்தன என்று தெரிகிறது.

பேரரசின் பணிகள்

அத்தீனியப் பேரரசு ஏற்பட்டதன் விளைவாகப் படை யெடுப்பு எனும் பேராபத்தினின்றும் காப்பாற்றப்பட்டன. அதோடு வேறு எந்த வெளிநாட்டவரும் பேரரசைத் தாக்க அஞ்சின. உறுப்பு நாடுகளிடையே வாணிகம் நன்கு வளர்ந்தது. கடற் கொள்ளைக்காரரிடமிருந்து எவ்வித அபாயமும் ஏற் படாதவாறு ஆதென்ஸின் கப்பற்படை காவல் புரிந்து வந்தது. அதோடு ஆதென்ஸின் ஜனநாயகத் தத்துவங்களும், அறிவாற்ற லும், நாகரிக வாழ்க்கையும் உறுப்பு நாடுகளிலெல்லாம் பரவின. எங்கெல்லாம் ஜனநாயகத்துக்கும் பிரபுத்துவ நாயகத்துக்கும் மோதல் ஏற்பட்டதோ அங்கெல்லாம் ஆதென்ஸ் தலையிட்டு ஜனநாயகத் தின் வெற்றிக்கு வகை தேடியது கிரேக்கர்களிடையே ஒற்றுமை வளர்ந்தது. பெரிக்ளீஸ் போன்றவர்கள் ஆதென்ஸின் தலைமை யில் எல்லாக் கிரேக்கர்களும் ஒன்றுபட்டு வாழ்வதற்காக எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டனர்.

பேரரசின் வீழ்ச்சி

எவ்வளவுதான் நன்மை பயப்பதாயிருந்த போதிலும் பேரரசுக் கொள்கையானது கிரேக்கரின் இயல்பான விடுதலை வேட்கைக்கும் குடியரசு மனப்பான்மைக்கும் முற்றிலும் முரணான தாயிருந்தது. இறைமையையும் சுயேச்சையையும் வேண்டு மென்றே விட்டுக்கொடுப்பதைக்கூடத் தற்கொலைக்கு ஒப்பாகக் கிரேக்கர் எண்ணினர். பாரசீகப் பேரரசின் படையெடுப்புகள் ஓய்ந்தபின்னர் மீண்டும் அவர்கள் தங்களது பழைய சுயேச்சை நிலையை அடைய விரும்பினார்களேயன்றி, மற்றுமொரு பேரரசுக்கு உட்பட விழைந்தார்களல்லர். முழுமையான சுதந்திரம் நிலவாத நகர அரசியலில் ஒரு மனிதன் தனது முழுமையான வளர்ச்சி யைப்பெற இயலாது என்பது கிரேக்கர் ஒவ்வொருவரது அசைக்க முடியாத நம்பிக்கையாயிருந்தது. எனவே வெளிக்கு அத்தீனியப் பேரரசுக்குப் பணிந்தாலும் ஒவ்வொரு நகர அரசும், என்று நாம் இதிலிருந்து விடுபட்டுச் சுயேச்சையாக வாழ்வோம் என்றே உள்ளூற ஏங்கிக்கொண்டிருந்தது.

மற்றும் ஆதென்ஸுக்கும் ஒரு சில நகர அரசுகளுக்கும் கப்பப்பண சம்பந்தமாக மனக்கசப்பு ஏற்பட்டது. கி. மு. 437-இல்

460-இலிருந்து 600 தாலந்துகளாக உயர்த்தப்பட்டபோது அதைப் பல நகர அரசுகள் வரவேற்கவில்லை. வாங்குகிற கப்பத்தை எல்லாம் ஆதென்ஸ் தனது சொந்த நலனுக்கே பயன் படுத்திக்கொள்வதாகவும், பொது நன்மைக்கு ஒன்றும் செல வழிப்பதில்லை என்றும் பரவலான அதிருப்தியானது உறுப்பு நாடுகளிடையே காணப்பட்டது.

வழக்குகளில் தீர்ப்புப்பெற வெகு தூரத்திலிருந்து ஆதென் ஸுக்கு வரவேண்டியிருப்பதை ஒருசில நகர அரசுகள் வெறுத் தன. முக்கியமாகத் தொலிவிலிருந்த தீவுகள் இம் முறையில் அதிருப்தியடைந்தன.

கிளீயஸ்தனீஸ் காலத்திலிருந்து நேச நாடுகளில் அத்தீ னியக் கிளெருக்கிகள் (Cleruches) என்றழைக்கப்பட்ட குடியேற் றங்களை ஏற்படுத்துவது ஆதென்ஸின் வழக்கமாயிருந்தது. அவ்வாறு ஆதென்ஸ் குடியேற்றங்களை அமைத்து அங்கே அத்தீ னிய ஆட்சியை ஏற்படுத்தும் முறையைப் பல உறுப்புநாடுகள் கண்டித்தன. அத்தகைய அத்தீனியச் செல்வாக்கு மண்டலங் களைத் தங்களது சுயேச்சை வாழ்வுக்கு விரோதமானது என எண்ணிப் பல கிரேக்கர் அதிருப்தியடைந்தனர்.

கி. மு. 450-இல் பெரிக்ளீஸ் ஏற்படுத்திய சட்டம் ஒன்றின் விளைவாக அந்நியர் அனைவருக்கும் குடியுரிமை மறுக்கப்பட்டது. இதனால் பேரரசின் உறுப்பு நாடுகளில் பிறந்தோர் அனைவரும் ஆதென்ஸின் குடியுரிமையைப் பெற இயலாமற் போயிற்று. ஆதென்ஸ் மக்களுக்கு இங்ஙனம் தனிச் சலுகைகளை வழங்கி ஏனையோர்க்கு அவைகளை மறுத்தது பலருக்குப் பிடிக்கவில்லை. ஒவ்வொரு நகரத்திலும் ஜனநாயகத்தையும் பணநாயகத்தையும் ஆதரித்த இரு கட்சிகள் இருந்தன. அவற்றில் ஜனநாயகக் கட்சிக்கு மட்டுமே ஆதென்ஸின் ஆதரவு கிடைத்தது. எனவே பணநாயகக் கட்சியினர் ஆதென்ஸுக்கு விரோதமாக ஏதாவது சதி செய்தவண்ணமிருந்தனர்.

இறுதியாக, தனது தலைமையில் அமைந்திருந்த பெலப் பொனீஷியக் கூட்டமைப்புக்கு விரோதமாக டீலிய இணைக் கூட்டரசையும், பின்னர் பேரரசையும் தோற்றுவித்த ஆதென்ஸ் மீது ஸ்பார்ட்டாவுக்குக் காழ்ப்பும் பொறுமையும் அதிகரித்தன. இதன் விளைவாக இரு நகர அரசுகளிடையே ஓர் உள்நாட்டுப் போர் தோன்றலாயிற்று. இதனால் இரு நகர அரசுகளுமே சிறப்பிலும் சீரிலும் பெரிதும் குறைந்தன. பேரரசு தோன்றிய

அரைநூற்றாண்டுக்குள்—அதாவது கி. மு. 404 - இலேயே அது நிலை குலைந்து போயிற்று.

(5) கைமன் என்பாரின் வாழ்வும் சாதனைகளும்

பாரசீகப் போரில் புகழ்பெற்ற தளகர்த்தர்களுள் கைமன் என்பார் ஒருவராவார். அவர் கி. மு. 504-இல் மில்டியாடிஸ் என்னும் படைத்தலைவரின் மகனுகப் பிறந்தார். அரிஸ்டிடிஸ் என்ற தலைவரது ஆதரவின்கீழ் அவர் பொது வாழ்வில் புகுந்தார். கி. மு. 480–479-ஆம் ஆண்டில் நடைபெற்ற மயிர்க்கூச்செறியும் சம்பவங்களில் அவரும கலந்துகொண்டார். அவர் நல்ல தாராள குணமும் உற்சாகமும் கொண்ட திறமை மிக்க படைத்தலைவராவார். மக்களிடம் அவருக்கு நல்ல ஆதரவிருந்தது. ஆனால் அவருடைய குறுகிய நோக்கத்தாலும் கட்சிப் பூசல்களினுலும் நாளடைவில் தம் செல்வாக்கை இழந்தார். அவர் ஜனநாயகக் கொள்கையின் நண்பரல்லர். ஸ்பார்ட்டாவையும், அங்கே விளங்கிய செல்வச் சிறுகுழு ஆட்சியையும்(Oligarchy)அவர் பெரிதும் போற்றினர். ஸ்பார்ட்டாவுடன் நட்பைப் பெருக்க வேண்டுமென்ற ஆவல் கொண்டவர். அதே சமயம் பாரசீகத்தோடு போராடி அதை ஒடுக்க வேண்டுமென்ற விருப்பமும் கொண்டார். ஆதென்ஸ் கடற்பேரரசை நிறுவுவதிலும், ஸ்பார்ட்டா நிலப்பேரரசை நிறுவுவதிலும் கவனம் செலுத்த வேண்டுமென்பதே அவரது தெள்ளிய கருத்தாகும். இத்தகைய கொள்கையினுல் ஸ்பார்ட்டாவுக்கும் ஆதென்ஸுக்கும் இயல்பாகவே இருந்துவந்த போட்டியும் பொருமையும் ஓரளவு குறைந்தது. எனினும் ஸ்பார்ட்டாவுடன் உறவு கொண்டாட நினைக்கும் அவரது கொள்கையைப் பலர் வெறுத்தனர். ஜனநாயகத்திற்கு விரோதமாக அவர் கொண்டிருந்த கொள்கையும் பலருக்குப் பிடிக்கவில்லை.

பாரசீகப் போர்களில் அவர் அடைந்த வெற்றிகளைப் பற்றி நாம் முன்பு கண்டோம். டீலிய இணைக்கூட்டரசுக்கு அவர் செய்த சேவைகள் பல. இயான் (Eion), ஸ்கைரஸ் (Scyrus), காரிஸ்டஸ் (Corystus) போன்ற இடங்களைக் கைப்பற்றியும், யூரிமீடன் (Eurymedon) போர்க்களத்தில் பாரசீகருக்கு எதிராகப் பெருவெற்றி பெற்றும் அவர் சிறந்த புகழ் எய்தினர். நாக்ஸாஸ், தேசாஸ் போன்ற நகரங்களைக் கைப்பற்றி அத்தீனியப் பேரரசில் அவற்றை இணைத்ததன் மூலம் அவர் ஆதென்ஸின் ஆதிக்கத்தை அக்கரை நாடுகளில் வளர்த்தார். தெமிஸ்டாக்ளிஸ் (Themistocles), அரிஸ்டிடிஸ் Aristides) போன்ற தளகர்த்தர்களுக்கு இணையாக அவர் அத்தீனியப்

பேரரசுக்குச் சேவை செய்தார். தற்காலிகமாகத் தெமிஸ்டாக்ளிஸ் நாடு கடத்தப்பட்ட பின்னும், அரிஸ்டிடிஸ் இறந்துவிட்ட பின்னும் கைமனே ஆதென்ஸின் ஒப்புயர்வற்ற தலைவராகத் திகழ்ந்தார். அச் சமயத்தில் ஸ்பார்ட்டாவுக்குச் சாதகமாக ஒரு சில செயல்களில் ஈடுபட்டுத் தமது செல்வாக்கை இழந்தார்.

கி. மு. 464-இல் ஸ்பார்ட்டாவில் ஒரு பயங்கரமான பூகம்பம் ஏற்பட்டது. அதனால் ஸ்பார்ட்டா நகரம் முழுமையும் ஏறக்குறைய அழிவுற்றது. இந்த இக்கட்டான நிலையைப் பயன்படுத்திக்கொண்டு ஸ்பார்ட்டாவுக்கு உட்பட்டிருந்த மெசனிய நாட்டு ஹெலெட் மக்கள் கலகத்தில் இறங்கினர். இதோமி (Ithome) என்ற கோட்டையை அவர்கள் வசப்படுத்திக் கொண்டனர். அதை மீட்க முயன்ற ஸ்பார்ட்டர்கள் மன முறிந்து இறுதியில் ஆதென்ஸின் உதவியை நாடினர். நான் காயிரம் போர்வீரர்கள் அடங்கிய படையுடன் கைமன் ஸ்பார்ட் டாவின் உதவிக்குச் சென்றார் (கி. மு. 462) எனினும் இதோமி கோட்டையைக் கைப்பற்ற அத்தீனிய வீரர்களால் முடியவில்லை. இதைக் கண்ட ஸ்பார்ட்டா ஆதென்ஸின் படைகளைத் திரும்பிப் போகும்படி உத்தரவிட்டது. ஸ்பார்ட்டாவின் உதவிக்கு வந்த ஏனைய நேசநாடுகளின் படைகள் அங்ஙனம் திருப்பி அனுப்பப் படவில்லை. எனவே அத்தீனியர்கள் ஸ்பார்ட்டாவின் செய் கையால் தங்களுக்குப் பெருத்ததோர் அவமானம் ஏற்பட்டு விட்டதாக எண்ணினர். அத்தகைய அவமானத்திற்குக் காரணமான கைமன் மீது அத்தீனியர் அனைவருக்கும் கோபம் ஏற்பட்டது. மற்றும் கைமன் ஆதென்ஸில் இல்லாத வேளையில் அவரது சக அதிகாரிகளான பெரிக்ளீஸும் (Pericles) ஈஃபியால்டிஸும் (Ephialtes) பல ஜனநாயக சீர்திருத்தங்களை ஏற்படுத்தி மக்களிடம் நல் ஆதரவு பெற்றனர். அச் சீர்திருத்தங் களையெல்லாம் எதிர்த்து வந்தவர் கைமன். எனவே கைமன் பொதுமக்களின் ஆதரவை இழந்தார். கி.மு. 461-இல் அவரை ஆதென்ஸ் பொதுமக்கள் சபை தற்காலிகமாக நாடு கடத்தியது. கி. மு. 457-இல் ஸ்பார்ட்டாவுக்கு எதிராக நடைபெற்ற தனக்ரா (Tanagra) போர்க்களத்தில் கலந்து கொள்ள முன்வந்தபோது ஆதென்ஸ் அவரை அனுமதிக்கவில்லை. அப்போர் முடிந்த பின்னரே ஆதென்ஸ் அவரைத் திரும்பி வர அனுமதித்தது (கி. மு. 457). கி.மு. 450-இல் அவருடைய முயற்சியால் ஆதென் ஸுக்கும், ஸ்பார்ட்டாவுக்கும் சமாதானம் ஏற்பட்டது. அதற் கடுத்த ஆண்டு (கி. மு. 449) பெரிக்ளீஸ் என்பார், சைப்ரஸ் (Cyprus) தீவைப் பராசீகர்களிடமிருந்து கைப்பற்றும்படி அவரை அனுப்பிவைத்தார். அங்கே அவர் ஒரு பெருவெற்றி யைப் பெற்ற பின்னர் போர்க்களத்திலேயே மாண்டார்.

மதிப்பீடு

கைமன் நன்கு படிக்காதவர். எனினும் நாட்டுப்பற்றும் நேர்மையும் நாணயமும் கொண்ட ஒரு பெருவீரர். ஸ்பார்ட்டாவின் பழக்க வழக்கங்களை அவர் போற்றினரெனினும், தமது தாய் நகரமான ஆதென்ஸ் மீதும் ஆழ்ந்த பற்று வைத்திருந்தார். அதன் நன்மைக்காகவே தம் வாழ்நாளை அர்ப்பணம் செய்தார். ஸ்பார்ட்டாவுடன் ஏற்பட இருந்த போரை ஒரு சிறிதுகாலம் தள்ளிப்போட்ட பெருமை அவருக்கு உரியதாகும். ஆனால் நெடுநாளைக்கு அத்தகைய ஒரு நெருக்கடியைத் தவிர்க்க முடியாதென்பதை அவரே நாளடைவில் கண்டுகொண்டார். அவருடைய ஸ்பார்ட்ட உறவுக் கொள்கையும், ஜனநாயக விரோதக் கொள்கையும் அவருடைய வீழ்ச்சியை ஏற்படுத்தின என்றாலும், அவர் இறுதிவரை தமது தாய்நகரின் பெருமைக்காகவே பாடுபட்டார். ஆதென்ஸ்நகர மதிற்சுவரை அவர் வலுப்படுத்தினர். நகரை அழகுறச் செய்ய அவர் பெரிதும் பாடுபட்டார். ஓவியம், சிற்பம் ஆகிய கலைகளை வளர்த்துப் பின்னால் வந்த பெரிக்ளீஸுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார். ஆதென்ஸின் பெரும் கடல் தளபதிகளிலே அவர் ஒருவர். ஆதென்ஸின் கடல் வன்மையை இருபத்திரண்டாண்டு காலம் கட்டிக் காத்தவர் அவரே. இறுதியில் தாய்நாட்டிற்காக நடை பெற்ற கடல் போரிலேயே அவர் உயிர்நீத்து அழியாப் புகழ் பெற்றார்.

12. பெரிக்ளீஸின் காலம்

"பெரிக்ளீஸின் பிறப்புக்கும் அரிஸ்டாடிலின் இறப்புக்கும் இடையே உள்ள காலமானது உண்மையிலேயே உலக வரலாற்றில் மறக்கவொண்ணாத மிக முக்கியமானதோர் காலமாகும்" என்று ஷெல்லி (Shelley) என்ற ஆங்கிலக் கவிஞர் குறிப்பிடுகின்றார். உட்ஹவுஸ் (Wood honse) என்னும் ஆசிரியர் பெரிக்ளீஸின் காலத்தைக் கிரீஸின் பொற்காலம் என்று அழைக்கின்றார். ஏனெனில் அவரது காலத்தில்தான் ஆதென்ஸ் நகர அரசானது கல்வியிலும் கலையிலும் அறிவியலிலும் நாகரிகத்திலும் மற்றும் பல்வேறு துறைகளிலும் ஒரு முழுமையைப் பெற்றது. பெரிக்ளீஸ் என்பாரே கூறியபடி ஹெல்லாஸின் கல்விக் கூடமாக (The school of Hellas) ஆதென்ஸ் அப்போது திகழ்ந்தது.

வாழ்க்கை (கி. மு. 493-429)

அக உலகிலும் புற உலகிலும் ஆதென்ஸ் ஒப்புயர்வற்ற முறையில் வளர்ச்சியடைந்திருந்த ஒரு காலத்தே அதன் தனித் தலைவராய்த் திகழ்ந்த பெரிக்ளீஸ், மாரதான் போர் நடைபெறுவதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன் இந் நிலவுலகில் தோன்றினார் (கி. மு. 493). அவருடைய தந்தை, சலாமிஸ் என்னுமிடத்தில் நடைபெற்ற கடற்போரிலும், மைகலி (Mycale) என்னுமிடத்தில் நடைபெற்ற கடற்போரிலும் தலைமை தாங்கி வகை சூடிய ஸாந்திபஸ் எனும் தளகர்த்தராவார். அவருடைய தாயாரான அகாரிஸ்தி (Agariste) என்பார், புகழ்வாய்ந்த சீர்திருத்த வாதியான கிளாயஸ்தனீஸ் என்பவருடைய பெயர்த்தி ஆவார். பெரிக்ளீஸைக் கருவுயிர்ப்பதற்குச் சின்னாட்களுக்கு முன்னர், அரிமா ஒன்றைக் கூடியதுபோல அவ்வம்மையார் கனவு கண்டதாகப் புளூடார்க் என்னும் வரலாற்று ஆசிரியர் கூறுகின்றார். வருங்காலத்தே தமது புதல்வன் அடையப் போகும் பெரும் புகழுக்கு அது ஒரு அடையாளமென்பதை

அவர் அப்போதே உணர்ந்து கொண்டார். எனவே இளம் வயதில் அவருக்குப் பலவகையான துறைகளிலும் நல்ல பயிற்சியை அவர் நல்கினர். புகழ்பெற்ற ஆசிரியர்கள் பலர் அவருக்குக் கல்வி புகட்ட அமர்த்தப்பட்டனர். இசைக்கலையில் பெரிதும் வல்லுநராய்த் திகழ்ந்த டாமன் (Damon) என்பாரும், தத்துவ மேதையான அனெக்ஸகோரஸ்(Anazagoras)என்பாரும் அவரது ஆசிரியர்களில் மிகச் சிறந்தவர்களாவர். வெகு விரைவிலேயே அத்தீனிய நாகரிகத்தின் முக்கியச் சிறப்பியல்புகளெல்லாம் அவரிடம் படிந்தன. பொருளாதாரம், இராணுவம், இலக்கியம், கலை, தத்துவம் ஆகிய பல துறைகளிலும் அவர் நல்ல தேர்ச்சி பெற்றார். கிரீஸ் தோற்றுவித்த முற்றிலும் முழுமையான மனிதனாக அவர் விளங்கினர் என வில்டூரான்ட் (Willdurant) எனும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

மிக இளவயதிலிருந்தே பெரிக்ளீஸ் அரசியலில் ஈடுபட்டார். பொதுமக்கள் கட்சியை அவர் தொடக்கத்திலிருந்தே ஆதரித்தார். தமது பேச்சிலும், நடத்தையிலும் மிகவும் விழிப்பாக அவர் நடந்து கொண்டார். தாம் பேசுகின்ற ஒவ்வொரு சொல்லையும் அவர் அளந்தே பேசினர். எனினும் ஆதென்ஸிலேயே அவர் ஒப்பற்ற பேச்சாளராகத் திகழ்ந்தார். "கேட்டார் பிணிக்கும் தகையவாய்" அவரது சொற்பொழிவுகள் விளங்கின. "சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இகல்வெல்லல் யார்க்கும் அரிது" என்ற குறளுக்கு இலக்கணமாக அவர் முப்பதாண்டுகள் திகழ்ந்தார் (கி. மு. 467-428). அவர் ஆதென்ஸை ஆண்ட ஸ்ட்ரேட்டகி (Strategoi) எனும் பதின்மரடங்கிய தலைவர்களில் ஒருவராக ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு, ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்டுவந்தார். நிர்வாக அதிகாரிகள் பத்துப் பேர் இருந்தபோதிலும் அவரே அந் நிர்வாகக் குழுவின் தலைவராக விளங்கினர். நிர்வாகக் குழுவைத் தற்கால 'காபினெட்'டுக்கு ஒப்பிடுவோமானால் பெரிக்ளீஸை அதன் பிரதமருக்கு ஒப்பிடலாம். ஆனால் கொள்கையளவில் அவர்கள் பதின்மரும் சமமான அதிகாரம் உள்ளவர்களே. தம்முடைய திறமை ஒன்றினாலேயே அவர் ஏனைய அதிகாரங்களைத் தமக்கு ஒத்துப்போகும்படிச் செய்தார். தமது சொல்வன்மையினால். தாம் செய்யும் காரியங்கள் யாவற்றுக்கும் பொதுமக்கள் மன்றத்தின் ஆதரவையும் பெற்றார். கி. மு. 462-இல் அவரும் ஈஃபியால்டிஸும் (Ephialtes) சேர்ந்து பல ஜனநாயகச் சீர்திருத்தங்களைக் கொணர்ந்தனர். ஈஃபியால்டிஸின் தூண்டுதலின் பேரில் அரியோபகஸ் (Areopagus) என்னும் பிரபுக்கள் சபையின் நீதி

வழங்தும் அதிகாரத்தை அவர் குறைத்தார். கையூட்டு ஊழலுக் காகப் பல பிரபுக்கள் தண்டிக்கப்பட்டனர். இவற்றையெல்லாம் கண்ட செல்வந்தர்கள் ஈஃபியால்டிஸைக் கொன்றுவிட்டனர். பெரிக்ளீஸை எதிர்த்தவரான கைமன் (Cimon), என்பாரும் தூசிடைடிஸ் (Thucydides) என்பாரும் தற்காலிகமாக நாடுகடத் தப்பட்டனர் கி. மு. 442). அதன்பின் பெரிக்ளீஸை எதிர்ப்பார். ஒருவரும் இலராயினர் மக்களாட்சி-பிரபுக்களாட்சி வாதிகள் ஆகிய இரு சாராரும் நம்பத்தக்க முறையில் அவர் நடந்துகொண்டார், அவர் ஒரு சர்வாதிகாரி போல் ஆட்சி புரிந்துவந்தார். எனினும் மக்களைத் தம்முடன் அணைத்துச் செல்வதில் வல்லவராயிருந் தார். முதலில் அவர் தமது உறவினள் ஒருத்தியை மணந்து கொண்டார். ஆனால் அவர்களுக்குள் ஒற்றுமையில்லை. வேறொரு வனைக் காதலித்து அவள் பெரிக்ளீஸைப் புறக்கணித்தாள். எனவே பெரிக்ளீஸ் தமது மனதுக்குகந்த அஸ்பாஸியா (Aspasia) எனும் பொதுமகள் ஒருத்தியை மணந்துகொண்டு முதல் மனைவியை விவாகரத்து செய்துவிட்டார். அஸ்பாஸியா சகல கலை களிலும் வல்ல ஒரு மங்கை. எனவே அவளது ஆதரவின் கீழ் ஆதென்ஸின் கலைகள் தம் உச்ச நிலையை அடைந்தன. முதல் பெலப்பொனீஷியப் போரின் முதல் ஆண்டில் அவர் செய்த புகழ்பெற்ற சொற்பொழிவு அஸ்பாஸியா வினால்தான் தயாரிக்கப்பெற்றது எனக் கருதப்படுகிறது. அச் சொற்பொழிவில்தான் ஆதென்ஸ் கிரேக்க உலகமான ஹெல்லாஸின் கல்விக் கூடமென வருணிக்கப்படுகிறது. (கி. மு. 431). ஸ்பார்ட்டாவோடு அவர் நடத்திய போர்கள் அத்தீனியர் களைப் பல துன்பங்களுக்கு ஆளாக்கின. நாளடைவில் அவர்கள் அவர் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்தனர். ஊதாரித் தனமாகச் செல்வத்தை வாரி இறைப்பதாக அவர்மீது குற்றம் சாட்டப்பட்டது. எனவே கி. மு. 430–இல் அவரை நிர்வாகத் தலைவர் பதவியில் இருந்து பொதுமக்கள் மன்றம் அகற்றியது. அவருடைய உற்ற நண்பர்களான ஃபீடியாஸ் (Pheidias) என்ற சிற்பியும், அனெக்ஸகோரஸ் (Anaxagoras) என்ற தத்துவ ஞானியும் பெருங்குற்றம் சாட்டப்பட்டு நாட்டை விட்டுத் துரத்தப்பட்டனர். இறுதியில் அவர் தமது உயிரையே வைத்திருந்த அஸ்பாஸியா மீதும் நாத்திகக் குற்றம் சாற்றப்பட் டது. நாட்டின் நலிவுகளுக்கெல்லாம் அவளே காரணமென மக்கள் அவள் மீது வசைமாரி பொழிந்தனர். மக்கள் நீதிமன்றத் தின் முன் அவள் விசாரிக்கப்பட்டபொழுது பெரிக்ளீஸ் தம் சொல் வன்மை அனைத்தையும் பயன்படுத்தி - ஏன், தம் கண்ணீரையும் பயன்படுத்தித் தமது காதலியை விடுவிக்க முயன்றார். இறுதியில் வழக்கு தள்ளப்பட்டது. ஆனால் அதிலிருந்து அவர் பெரிதும்

மனமொடிந்துபோனார். உடலிலும் உள்ளத்திலும் சோர் வடைந்தவராய் நடைப்பிணம் போல் வாழ்ந்து கி. மு. 429-இல் அவர் மாண்டுபோனார்.

(2) குணச் சிறப்பும் கொள்கைகளும்

பெரிக்ளீஸ் அறிவாற்றல்களில் சிறந்தவர்; பண்பட்ட இதயம் கொண்டவர்; எப்போதும் சிந்தனையில் ஆழ்ந்திருப்பார்; சாதாரணமாகப் பண்டிகைகளிலும், விளையாட்டுகளிலும் கலந்து கொள்ள விரும்பமாட்டார்; தனிமையையே அவர் பெரிதும் நாடினார்; இசையில் பெரிதும் நாட்டமுடையவர்; உடற்பயிற்சி யிலும் வல்லவர்; ஆடம்பரங்களை வெறுத்தவர்; உறுதியான உள்ளம் படைத்தவர்; கொண்ட கொள்கையை விடாமுயற்சி யோடு நடைமுறையில் கொண்டு செலுத்தும் திறமையுடையவர்; சுருங்கக் கூறின் ஒரு தலைவருக்கு இருக்க வேண்டிய பண்புகள் யாவும் அவரிடம் குடிகொண்டிருந்தன. தமது சொல்வன்மையால் ஆதென்ஸ் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்து தம் பிரியப்படி யெல்லாம் அவர்களை ஆட்டி வைத்தவர். எல்லா அதிகாரங் களும் அவர் கைகளில் இருந்தபோதிலும் அவர் சர்வாதிகாரியாக ஆட்சி புரிய எத்தனிக்காத ஜனநாயகவாதி; தம்முடைய தாராள நோக்கத்தாலும், மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்கிற உண்மையான விருப்பத்தாலும் நாட்டு மக்களைக் கவர்ந்தவர்; கையூட்டு வழங்கி யாகிலும் தம்முடைய காரியங்களைச் சாதித்துக் கொள்ள முயலுவார். ஆனால் அவர் தமக்கென்று எப்போதும் கையூட்டு வாங்கியதில்லை. எதிர்பாராது ஏற்பட்ட பெலப்பொனீ ஷியப் போரினாலும், பிளேக் என்ற கொள்ளை நோயாலும்தான் அவருக்கு ஆதரவு குறைந்ததேயன்றி வேறெதனாலும் அன்று.

குறிக்கோள்கள்

பெரிக்ளீஸ், இரண்டு முக்கியக் குறிக்கோள்களைக் கொண்டி ருந்தார். ஒன்று, ஆதென்ஸ்நகரைக் கிரேக்கத்தின் பேரரசி யாக மாற்றவேண்டுமென்பது. மற்றொன்று கிரேக்கப் பண்பாடு பரவியிருந்த நாடுகளையெல்லாம் ஒருங்கிணைத்து ஆதென்ஸின் தலைமையில் அவைகளை ஓர் பேரரசாக அமைக்க வேண்டு மென்பது. முதலாவது குறிக்கோளில் அவர் பெரிதும் வெற்றி யடைந்தார். அறிவுத்துறையிலும், உலகியல் துறையிலும் ஹெல்லனிய நாடுகளின் தலைமையை ஆதென்ஸ் பெற்றது. ஏனைய கிரேக்க நாடுகளுக்கு ஆதென்ஸ் ஒரு முன் மாதிரியாகத் திகழ்ந்தது. அங்கிருந்த கல்விமுறையே நாடெங்கும் பரவியது.

உடற்பயிற்சி செய்தல், உள்ளத்தில் விரிந்த நோக்கை வளர்த்தல், நாட்டின் சமயம், அரசியல், பொருளாதாரம் ஆகிய வைகளில் நல்ல புலமை பெறுதல், கிரேக்கச் சான்ரோரின் வாழ்க்கையைப் படித்தல், படித்த கல்வியின் பயனுய் நன்னெறி நிற்றல் இவைகளே கல்வியின் குறிக்கோள்களாக இருந்தன. இரண்டாவது குறிக்கோளில் பெரிக்ளீஸ் வெற்றி பெறவில்லை. காரணம் ஸ்பார்ட்டாவின் பொருமையே ஆகும். கி. மு. 448-இல் அவர் கிரேக்க நாடுகள் அனைத்திலும் இருந்த பிரதி நிதிகளை அழைத்து ஒரு மாநாடு கூட்டினர். பாரசீகர்களால் அழிக்கப்பட்ட கோயில்களைப் பழுது பார்க்கவும், கடற்கொள்ளைக் காரர்களிடமிருந்து வணிகர்களைக் காப்பாற்றவும் அவசியமான வழிமுறைகளை ஆராயவே அந்த மாநாட்டைக் கூட்டினர். ஆனல் ஸ்பார்ட்டா அவரது மாநாட்டுக் கொள்கையைக் கேலி செய்தது. எனவே அது நடைபெறவில்லை. பெரிக்ளீஸ் கடைப்பிடித்த இன்னபிற அயல்நாட்டுக் கொள்கைகளும் தோல்வியிலேயே முடிந்தன.

(3) பெரிக்ளீஸின் அயல் நாட்டுக் கொள்கை

ஸ்பார்ட்டாவும் ஆதென்ஸும் ஒற்றுமையுடன் வாழ இயலாது என்பதை அறிந்த பெரிக்ளீஸ் அதற்கு விரோதமான கொள்கையையே கடைப்பிடித்தார். ஸ்பார்ட்டாவுக்கு விரோதி நாடுகளான ஆர்காஸ் (Argos) தெஸலி (Thessaly) ஆகிய இரு நாடுகளோடும் அவர் நட்புறவை ஏற்படுத்திக் கொண்டார். ஸ்பார்ட்டர்களை வெறுத்த மெசானிய நாட்டு ஹெலட்டுகள், கொரிந்திய குடாவுக்கருகே குடியேற அவர் சம்மதித்தார். ஸ்பார்ட்டாவின் தலைமையில் விளங்கிய பெலப்பொனீஷியக் கூட்டுறவில் சேர்ந்திருந்த மிகாரா (Megara) எனும் நாட்டை அக் கூட்டுறவினின்றும் பிரித்துத் தம்மோடு சேர்த்துக் கொண்டார். மிகாராவையும், நிசியாவையும் (Nisaea) இணைத்து இரண்டு நீளமான மதிற்சுவர்களைக் கட்டி மிகாராவின் அனுமதியோடு அங்குப் போர்வீரர்களையும் வைத்தார். பியோஷியாவில் (Boeotia) பிரபுக்களுக்கும் பொதுமக்களுக்கும் ஏற்பட்ட பூசலில் அவர் பொதுமக்களை ஆதரித்தார். இத்தகைய செயல்களால் ஆதென்ஸுக்கும் பெலப்பொனீஷியக் கூட்டுறவு நாடுகளுக்கும் போர் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விட்டது. இதை உணர்ந்து கொண்ட பெரிக்ளீஸ் கி. மு. 448-இல் பாரசீகத்தோடு ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார். கிரேக்க நாடுகளோடும், பாரசீகத்தோடும் ஒரே சமயத்தில் போரிட முடியாததே இவ்வுடன்பாட்டிற்குக் காரணமாகும்.

நில ஏகாதிபத்தியம்

பெரிக்ளீஸ் முதலில் கொரிந்திய வளைகுடாவிலும் சரோனிக் (Saronic) வளைகுடாவைச் சுற்றியும் ஆதென்ஸின் ஆதிக்கத்தை நிறுவி, அதன் மூலம் கொரிந்தியரின் செல்வாக்கைக் குறைக்க எண்ணினார். இந்த எண்ணத்தின் அடிப்படையில் கொரிந்துக்கு விரோதமாக மிகாராவிற்கு உதவி புரிந்தார். அவ்விரு நாடுகளுக்கும் ஏற்பட்ட போரின் போது அவர் மிரோனிடஸ் (Myronides) என்பாரது தலைமையில் ஓர் உதவிப் படையை மிகாராவிற்கு அனுப்பி வைத்தார். அப்படை கொரிந்தியரை இரண்டு போர்க்களங்களில் தோற்கடித்தது. ஈஜினுவுக்கும் (Aegina), ஆர்கோனிஸுக்கும் (Argonis) இடையில் ஒரு கடல்வெற்றியையும் அத்தீனியப் படை பெற்றது. கி. மு. 458-இல் ஆதென்ஸுக்கு விரோதமாகக் கலகம் செய்த ஈஜினு நாடும் அத்தீனியர்களால் ஒடுக்கப்பட்டது. இவற்றையெல்லாம் கண்ட ஸ்பார்ட்டா, தீப்ஸ் (Thebes) நாட்டை ஆதென்ஸுக்கு விரோதமாகத் தூண்டிவிட்டது. பியோஷிய நிலப்பகுதியைக் கைப்பற்ற தீப்ஸ் நாட்டுக்கு அது ஒரு படையினை வழங்கியது. அதைக் கொண்டு தீப்ஸ், பியோஷியாவைக் கைப்பற்றியது. அங்கிருந்து திரும்பி வரும்போது அத்தீனியப் படைகள் அவற்றை எதிர்த்தன. தனக்ரா (Tanagra) என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் (கி. மு. 457) ஸ்பார்ட்டப் படைகள் பெரு வெற்றி பெற்றன. அதன்பின் ஆதென்ஸ் படைகள் பியோஷியா மீது பாய்ந்தன. மிரோனிடஸ் என்னும் அத்தீனியத் தளகர்த்தர், ஈனேஃபீட்டா (Oenophita) என்னும் போர்க்களத்தில் பியோஷியர்களைத் தோற்கடித்தார். அதன் விளைவாகத் தீப்ஸ் நாட்டைத் தவிர ஏனைய பியோஷியப் பகுதியனைத்தும் ஆதென்ஸுக்கு உட்பட்டன. போசிஸ், லோக்ரிஸ் (Phocis, Locris) ஆகிய இரு நகரங்களும் அத்தீனியக் கூட்டுறவில் சேர்ந்தன. இங்ஙனம் அத்தீனியப் பேரரசில் ஈஜினு, மிகாரா, பியோஷியா, ஃபோசிஸ், லோக்ரிஸ் ஆகிய நாடுகள் சேர்ந்தன. அதோடு அக்கீய நகரங்களும், ஆர்காஸும், ட்ரோஜனும் (Troezen) நாஃபாக்டஸும் (Naupactus) அப்பேரரசில் சேர்ந்திருத்தன. இதன் பின் கைமனின் தலையீட்டால் ஸ்பார்ட்டாவுக்கும் ஆதென்ஸுக்கும் ஓர் ஐந்தாண்டுப் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது (கி. மு. 450). இதன் மூலம் ஆதென்ஸ் தனது புகழின் உச்ச நிலையை எய்தியது.

இங்ஙனம் விரைவாக வளர்ந்த அத்தீனியப் பேரரசு விரைவிலேயே சடசடவெனச் சரியலாயிற்று. பியோஷியாவில்

ஆதென்ஸ் நியமித்த நிர்வாக அதிகாரிகள் ஜனநாயகத்தை அங்குப் புகுத்தியதை அங்கிருந்த செல்வந்தர்கள் வெறுத்தனர். அவர்களின் தலைமையின்கீழ் ஒரு கலகம் அங்கு எழுந்தது (கி. மு. 447). அக் கலகத்தை அடக்கச் சென்ற அத்தீனியப் படைகள் கொரோனியா (Coronea) என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டன. இதன்மூலம் பியோஷியா, போசிஸ், லாக்ரிஸ் ஆகிய இடங்களை ஆதென்ஸ் இழந்தது. அதன் நிலப் பேரரசு சிதைந்தது. பியோஷியாவின் உள்நாட்டு விவகாரங்களில் கலந்துகொள்வதில்லையென்று ஆதென்ஸ் வாக்களித்தது. கி. மு. 445-இல் யூபியாவும் மிகாராவும் ஆதென்ஸுக்கு விரோதமாகக் கலகத்தில் இறங்கின. பெரிக்ளீஸ் நேரில் சென்று யூபியக் கலகத்தை அடக்கினர். ஆனால் ஸ்பார்ட்டாவின் உதவியைப் பெற்ற மிகாரா அத்தீனியப் படைகளைத் தோற்கடித்தது. இதன்பின் பெரிக்ளீஸ், ஸ்பார்ட்டாவோடு கி மு. 446-இல் மீண்டும் ஒரு போர் நிறுத்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார். முப்பதாண்டுகள் வரையில் இருநாடுகளும் ஒன்றுக்கொன்று போரிடக்கூடாதென ஒப்புக் கொண்டன. டலியக்கூட்டுறவை ஸ்பார்ட்டாவும், பெலப்பொனீஷியக் கூட்டுறவை ஆதென்ஸும் ஒப்புக் கொண்டன. ஒன்றிலிருந்து பிரித்து இனனொன்றுக்கு உறுப்பினர்களைச் சேர்ப்பதில்லை என்று இருநாடுகளும் ஒப்புக் கொண்டன. இதன்மூலம் ஆதென்ஸின் நிலப்பேரரசுக் கொள்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

கடல் ஏகாதிபத்தியம்

நிலப்பேரரசை இழந்த பெரிக்ளீஸ் கடற்பேரரசைக் காப்பதில் தம் முழுக் கவனத்தையும் செலுத்தினர். தமக்கு உட்பட்ட நாடுகளிலிருந்து கிடைத்த கப்பற் பணத்தைக்கொண்டு வலிமை வாய்ந்த கப்பற்படை ஒன்றைக் கட்டினர். அக் கப்பற் படையின் உதவிகொண்டு யூபியாவில் நடைபெற்ற கலகத்தை அடக்கினர். தெற்கு இதாலியில் கி. மு. 443-இல் அவர் ஒரு குடியேற்றத்தை உண்டாக்கினர். அங்கு ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தி அத்தீனிய அரசியற் சின்னங்கள் பொறித்த நாணயங்களை வெளியிட்டார். வரலாற்றின் தந்தை எனப் பேசப்படுகின்ற ஹெராடோடஸ் (Herodotus) என்பார் வாழ்ந்த இடம் அதுவேயாகும். கி. மு. 440–இல் ஆதென்ஸுக்கு விரோதமாய்க் கலகம் செய்த சாமாஸ்தீவை அவர் அடக்கி அங்கும் தமது ஆதிக்கத்தை நிறுவினர். ஜனநாயக ஆட்சிமுறை அங்குப் புகுத்தப்பட்டது. ஒரு சிறு படையும் அதன் பாதுகாப்பிற்காக அங்கு வைக்கப்பட்டது. ஆனால் தீவை விட்டு வெளியேறிய

பிரபுக்கள் திரும்பி வந்து அப் படையைக் கைப்பற்றிப் பாரசீக ஆளுநரிடம் (Governor) கொடுத்து விட்டனர். ஆனால் பெரிக்ளீஸ் 200 கப்பல்களுடன் சென்று 9 மாதங்கள் முற்றுகையிட்டுச் சாமாஸை மீண்டும் கைப்பற்றினர். அதன்பின் அவர் பைஸான்ஷியம் நகருக்குச் சென்று அங்கு எழுந்த ஒரு கலகத்தையும் அடக்கினர். ஆதென்ஸுக்கும், கருங்கடலுக்குமிடையே இருந்த பாண்டஸ் (Pontus) பிரதேசத்தில் அவர் பல கிரேக்கக் குடியேற்றங்களை நிறுவினர். கருங்கடல் பிரதேசத்திற்கும் அவரது கப்பற்படை சென்று சினேப் (Sinope) போன்ற துறை முகங்களைக் கைப்பற்றியது. திரேஸ் நாட்டில் ஒன்பது வழிகள் கூடுகின்ற ஓர் இடத்தில் அம்பிபொலிஸ் (Amphipolis) என்ற ஒரு முக்கியமான வாணிக நகரை உருவாக்கினர். ஆனால் அந் நகர் பிற்காலத்தில் ஆதென்ஸுக்குப் பலவிதத் தொல்லைகளைக் கொடுத்தது. ஆதென்ஸின் செல்வாக்கு சிசிலித் தீவிலும் பரவியது. ஆதென்ஸின் சட்டங்களையும், அரசியல் அமைப்பையும் சிசிலிய மக்கள் அவ்வாறே கடைப்பிடித்தனர். லிடிய நாட்டு இளவல் இனரோஸ் (Inoros) என்பவர் பாரசீகருக்கு விரோதமாக அத்தீனியக் கடற்படையின் உதவியை நாடினர். அதை ஏற்றுப் பெரிக்ளீஸ் கி.மு. 454-இல் ஒரு படையை எகிப்திற்கு அனுப்பினர். மெம்ஃபிஸ் (Memphis) நகரத்தை அது முதலில் கைப்பற்றியது. ஆனால் விரைவிலேயே பாரசீகத் தளபதி ஒருவர் ஆதென்ஸின் கப்பற் படையைத் தோற்கடித்துத் துரத்தி விட்டார். இந்தத் தோல்வியை ஒரு காரணமாகக் காட்டி டீலாஸ் தீவிலிருந்த அத்தீனிய இணைக் கூட்டரசின் கருவூலத்தை ஆதென்ஸுக்குப் பெரிக்ளீஸ் மாற்றினர்.

பொதுவாகப் பெரிக்ளீஸின் அயல் நாட்டுக் கொள்கை தோல்வியையே கண்டது. அவருடைய நிலப் பேரரசு சிதைந்த தோடல்லாமல் கடற்பேரரசும் அவர் இறந்த சிறிது காலத்திற்குள்ளாகவே மறைந்தது. அவரது ஏகாதிபத்தியக் கொள்கை ஏன்னவோ மிகவும் சிறந்ததுதான். ஆனால் அதை நிறைவேற்ற அவர் கடைப்பிடித்த வழிகள் அவ்வளவு சரியானவை அல்ல. அவரது உண்மையான பெருமை, அவர் கடைப்பிடித்த உள் நாட்டுக் கொள்கையின் அடிப்படையிலேயே அமைந்ததென்பதே முற்றிலும் பொருந்தும்.

(4) பெரிக்ளீஸ் காலத்திய ஜனநாயகம்

பெரிக்ளீஸ் முழுமையான மக்களாட்சியை ஆதென்ஸில் நிறுவ விரும்பினர். அதன் மூலமும், ஆதென்ஸில் வளர்க்கப்

படுகின்ற கலைகளின் முலமும் அவர் ஆதென்ஸைக் கிரேக்க நாடுகளுக்கே ஒரு வழிகாட்டும் ஒளிவிளக்காக ஆக்க விரும்பினர். அவ் விருப்பத்தின் அடிப்படையில் அவர் முதன் முதலில் அரியோபகஸ் என்ற பிரபுக்கள் சபையின் ஆதிக்கத்தைக் குறைப்பதில் முனைந்தார். தாம் முன்னரே கண்டபடி கி. மு. 462-இல் அச் சபையின் அதிகாரங்கள் பலவும் பறிக்கப்பட்டன. தனிப்பட்ட நபர்களின் வாழ்வில் தலையிடும் உரிமை அதற்கு முற்றிலும் மறுக்கப்பட்டது. அரசாங்க அதிகாரிகளைத் தண்டிக்கின்ற உரிமையையும், சட்டங்களையும் நிர்வாக நிறுவனங்களையும் கட்டுப்படுத்துகின்ற உரிமையையும் அது இழந்தது. சமய சம்பந்தமான ஒரு சில அதிகாரங்கள் மட்டுமே அதனிடத்தில் விட்டுவைக்கப்பட்டன. ஏனைய அதிகாரங்கள் அனைத்தும் ஐந்நூற்றுவர் சபைக்கும், ஹெலியா என்ற நீதி மன்றத்திற்கும் மாற்றப்பட்டன.

எக்லீஷியா (Ecclesia) என்ற பொது மக்கள் மன்றத்தின் அதிகாரங்கள் பெருக்கப்பட்டன. நாட்டிலிருந்த பல்வேறு நிர்வாக அதிகாரிகளும் ஆலோசனை சபைகளும் எக்லீஷியாவின் கைப்பாவைகளாக மாறின. போரை ஆரம்பிக்கவும், அதை முடித்துச் சமாதானத்தை ஏற்படுத்தவும், மக்கள் மீது வரி விதிக்கவும் அது பூரண அதிகாரத்தைப் பெற்றது. எந்த நிர்வாக அதிகாரியையும் குற்றஞ்சாட்டி விசாரிக்கும் உரிமையும் அதற்குத் தரப்பட்டது. சட்டங்களை ஆக்கவும், முடிவான நீதிமன்றமாக விளங்கவும் அது அதிகாரத்தைப் பெற்றது. இங்ஙனம் கிரீஸில் வேறெங்கும் காணக்கூடாத அதிகாரங்கள் எக்லீஷிய மன்றத்திற்கு வழங்கப்பட்டன. ஹெலியா என்ற பொதுமக்கள் நீதி மன்றமும் இவரது காலத்தே மிகவும் முக்கியத்துவம் அடைந்தது. கொலைக் குற்றம் போன்ற கடுங் குற்றங்களை விசாரிக்கும் தனி உரிமையை அது அடைந்தது. அம் மன்றத்தில் குடியுரிமை பெற்ற அனைவரும் உறுப்பினராய் இருந்தனர்.

ஐந்நூற்றுவர் சபை என்ற மற்றொரு பொதுமக்கள் மன்றத்தின் அதிகாரங்களையும் அவர் பெருக்கினர். அதில் யார் வேண்டுமானாலும் உறுப்பினராவதற்குரிய வழிமுறைகளை அவர் வகுத்தார். அவர் காலத்திற்கு முன்பெல்லாம் யார்யார் அச் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதி படைத்தவர்கள் என்பது பற்றிய ஒரு பட்டியலை நாட்டிலுள்ள வெவ்வேறு குலங்கள் முதலில் தயாரித்து அனுப்பும். அப் பட்டியலிலிருந்து பொது மக்கள் ஐந்நூறு பேரைச் சீட்டுக்குலுக்கல் முறை மூலமாகத் தேர்ந்தெடுப்பர். இதே போன்று நாட்டை ஆளுகின்ற உயர்தர நிர்வாக அதிகாரிகளும் முதலில் குலங்களால் தேர்ந்தெடுக்கப்

பட்டு அதன் பின்னரே சீட்டுக் குலுக்கல் முறையால் பொறுக்கப் பட்டு வந்தனர். இங்ஙனம் கடைப்பிடிக்கப்பட்ட இரு தேர்தல் முறையினைப் பெரிக்ளீஸ் ஒழித்து ஒரே முறையைக் கொண்டு வந்தார். சீட்டுக் குலுக்கல் முறைப்படி மட்டுமே ஐந்நூற்றுவர் சபை உறுப்பினர்களும், ஆர்க்கன்கள் என்னும் நிர்வாக அதிகாரி களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமெனத் திட்டம் செய்தார். ஆண்டுக்கொரு முறை இத் தேர்வு நடைபெற்றது. எந்த ஒரு சாதாரணக் குடிமகனும் மேற்கண்ட பதவிகளுக்குப் போட்டியிடச் சம உரிமை அளிக்கப் பட்டான். முன்பு நாட்டிலுள்ள குலங்கள் தமக்குள் செல்வமும் செல்வாக்கும் உடையவர்களையே அப் பதவிகளுக்குத் தேர்ந்தெடுத்து வந்தன. இப் பொழுதோவெனில் மிகச் சாதாரணக் குடிமக்களும் மிக உயர்ந்த பதவிகளைப் பெறு கின்ற வாய்ப்பினைப் பெற்றனர்.

இங்ஙனம் சாதாரண மக்களும் பெரும் பதவிகளைப் பெற வாய்ப்பிருந்ததால் அத்தகைய பதவிகளுக்கெல்லாம் ஊதியம் வழங்கவேண்டிய ஒரு கட்டாய நிலை ஏற்பட்டது. ஏனெனில் நாட்டின் நன்மைக்காகக் கூலியின்றி உழைக்க எந்த ஏழையும் முன்வரமாட்டான். இதையறிந்த பெரிக்ளீஸ் ஒவ்வொரு அதிகாரிக்கும், மன்ற உறுப்பினர்களுக்கும் மாதா மாதம் ஒரு சிறு தொகையைச் சம்பளமாக வழங்கினர். நீதிமன்ற உறுப்பி னர்களுக்கும் சம்பளம் அளிக்கப்பட்டது. இங்ஙனம் சீட்டுக் குலுக்கல் முறையால் அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப் பட்டதாலும், அவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டதாலும் பெரிக்ளீஸ் மக்க ளாட்சியை நாட்டில் நன்கு மலருமாறு செய்தார்.

குடிமக்கள் அனைவரும் ஆட்சிப் பொறுப்பில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்பதே பெரிக்ளீஸின் குறிக்கோளாகும். பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஆண்மக்கள் அனைவரும் எக்ளீஷியா என்ற பொதுமக்கள் மன்றத்தின் உறுப்பினராவர். மன்ற நடவடிக்கைகளில் ஒவ்வொருவரும் கலந்து கொள்ள வேண்டுவது ஒவ்வொரு குடிமகனுக்குமுள்ள கட்டாயக் கடமை யாகும். கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் வெளியே அலைந்து கொண்டிருப்பவர்களைச் சிவப்பு மஞ்சனத்தில் தோய்த்த சவுக்கால் ஸ்கிதிய அடிமைகள் அடித்து, மன்றத்துக்குள் துரத்துவார்கள். சிவப்புநிற அடையாளம் காணப்பட்ட உடைகளை அணிந்த வர்கள் எல்லோருக்கும் அபராதம் விதிக்கப்பட்டது. அனேக மாகத் திறந்தவெளி அரங்கில்தான் கூட்டம் நடைபெறும்.

இறைவணக்கத்திற்குப் பின் கரியநிறப் பன்றி ஒன்று பலி யிடப்படும். சிறிய மழைத்தூறலோ, பூகம்ப அதிர்ச்சியோ, சூரிய

சந்திரக்கிரஹணங்களோ ஏற்படின் கூட்டம் ஒத்திப்போடப்படும். மன்றத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்படும். மன்றத்தில் பேச விரும்பியவர்கள் பாறையினாலான நிக்ஸ் (Pnyx) என்ற ஒரு மேடையின் மீதேறித் தங்கள் சொல்வன்மையெல்லாம் பயன் படுத்திச் சொற்பொழிவாற்றுவர். தாங்கள் முன்மொழிந்த மசோதாக்களை நிறைவேற்ற உறுப்பினர்கள் பலவிதமான சேட்டைகள் செய்வது வழக்கம். கிளியான் (Cleon) என்ற பேச்சாளர் பேசும்போது கைகளை வீசியும், தொடைகளைத் தட்டியும், சவால் விடுத்தும் பலவகைகளில் தமது கருத்தை வலியுறுத்த முயல்வாராம். தாம் தளபதியாயிருந்தால், ஸ்ஃபெக்டீரியா (Sphacteria) என்ற தீவில் ஒதுக்கப்பட்டிருந்த ஸ்பார்ட்டர்களை எல்லாம் சிறை செய்தோ கொன்றோ ஒழித்து விடக்கூடும் என அவர் ஒருசமயம் மன்றத்தில் கூறினார். மன்றம் உடனே அவரைத் தளகர்த்தராக நியமித்தது. வாக்கு உறுதியைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது. மசோதாக்களைக் கொண்டு வருகின்ற உறுப்பினர்கள் அது தொன்று தொட்டு நாட்டிலிருக்கின்ற சட்டங்களுக்கு முரணானதாவென்பதையும் ஆராயவேண்டும். இல்லாவிடில் மசோதா நிறைவேறின ஒரு ஆண்டுக்குள்ளாக அவருக்கு அபராதம் அல்லது மரணதண்டனை விதிக்கப்படும். அம் மசோதா சட்டத்திற்கு உட்பட்டதாக இல்லையானால் அதைக் கொண்டு வந்தவர் மீது கிராஃபி பேரனோமன் (Graphe paranomon) என்ற வழக்கு தொடரப்பெறலாம். அவசரத்தில் மசோதாக்கள் கொண்டுவருவதைத் தடுக்கவே இம் முறைகள் கையாளப்பட்டன. அதைப் போல நீதி மன்றங்களுக்கு முன் ஒரு மசோதாவை அனுப்பி அதைப் பரிசீலிக்கும்படிக் கோரவும் உறுப்பினர்களுக்கு அதிகாரமுண்டு. மற்றும் இம் மன்றத்தில் மசோதா முன்மொழியப்படு முன் ஐந்நூற்றுவர் சபை அதை நன்கு ஆராயும். தற்காலத்தே ஒரு மசோதா சட்டமன்றத்தில் விவாதிக்கப்படும் முன் கமிட்டி அல்லது குழு ஒன்றினால் அது ஆராயப்படுவதை இம் முறை ஒக்கும். சில சமயங்களில் எக்லீஷியாவும் ஐந்நூற்றுவர் சபையும் தங்கள் முன் கொண்டுவரப்பட்ட மசோதாக்களை நோமோதெடீ (Nomothetae) என்ற ஒரு மன்றத்திற்குப் பரிசீலனைக்காக அனுப்புவதுமுண்டு. ஹெலியா என்ற மக்கள் நீதி மன்றத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 500 அல்லது 1000 நீதிபதிகள் அக் குழுவில் அமர்ந்து ஆண்டுக்கொருமுறை இப் பணியைப் புரிவர்.

மன்றத்தின் தலைவர் தம்முன் வைக்கப்பட்ட மசோதா ஒன்றை விவாதத்திற்கு அனுமதித்த பின்பே பலரும் அதுபற்றிப்

பேசலாம். வயதுக்கு ஏற்பவே அவர்கள் பேசுகின்ற முறை கணிக்கப்படும். பேசுகின்றவர் நிலச் சொந்தக்காரர் இல்லை யென்றோ, சட்டப்படி திருமணம் செய்துகொள்ளாதவர் என்றோ, பெற்றோருக்குச் செய்யவேண்டிய கடமைகளை ஆற்றுதவர் என்றோ, அரசாங்கத்திற்குரிய கடமைகளைச் செய்யாதவர் என்றோ, போரில் புறங்காட்டியவர் என்றோ, நிரூபிக்கப்பட்டால் அவரை மேற்கொண்டு பேசாமல் தடுத்து நிறுத்த மன்றத்தின் நிர்வாகக் குழுவிற்கு உரிமையுண்டு. நன்கு பயிற்சி பெற்ற பேச்சாளர்களே மன்றத்தில் வெற்றிகரமாகப் பேசமுடியும். ஏனை யோரைக் கூச்சல் போட்டும் கைதட்டியும் கூட்டத்தினர் உட்காரவைத்துவிடுவர். ஒரு குறிப்பிட்ட அளவு நேரத்திற்கு மட்டுமே ஒருவர் பேசமுடியும். நீர்க்கடிகாரம் ஒன்றுல் நேரம் அளக்கப்பட்டது. மசோதாவானது மன்றத்தினர் செய்யும் ஆரவார ஒலிக்கேற்பவே நிறைவேற்றப்பட்டது. அல்லது நிராகரிக்கப்பட்டது. மன்றத்தின் முடிவே இறுதியானது இதுநிறைவேறிய பின் மசோதாக்கள் நேரடியாகச் செயல் படுத்தப்படலாம்.

பொதுமக்கள்மன்றத்தின் உறுப்பினர்கள் நிர்வாக அதி காரிகளாகவும் தேர்ந்தெடுக்கப்படலாம். அல்லது ஐந்நூற்று வரவைக்கும் அவர் தேர்ந்தெடுக்கப்படலாம். இம் மன்றத்திற்குச் சற்றே மதிப்பில் உயர்ந்ததும் ஆனல் அதிகாரத்தில் குறைந்தது மான 'மேல் மன்றம்' ஒன்றுண்டு. அதன் பெயர் பௌலி (Boule) அல்லது ப்யூல் (Bule) எனப்படும். அதன் உறுப்பினர் களும் சீட்டுக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒவ்வொரு குலத்திற்கும் 50 பேராக, பத்துக் குலங்களிலிருந்து 500 பேர் இதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒருவர் ஓராண் டிற்கு மட்டுமே இம் மன்றத்தில் பணிபுரிவர். எனவே அனேக மாக எல்லாக் குடிமக்களும் இதில் இடம்பெற வாய்ப்பிருந்தது. நிர்வாகம் பற்றியும் சட்டம் பற்றியும் எடுத்துரைக்க அதற்குப் பல, உரிமைகள் உண்டு. எக்லீஷியாவின் முன் வைக்கப்படுகின்ற மசோதாக்களைப் பரிசீலிப்பதும், நிர்வாக அதிகாரிகளையும் சமய நிறுவனத்தில் பணிபுரிந்த அதிகாரிகளையும் கண்காணித்து விசாரிப்பதும், பொதுக் கணக்குகளை ஆராய்வதும், பொதுக் கட்டிடங்கள் பொதுத் தொழில்கள் ஆகியவற்றைக் கண்காணிப் பதும் அதனுடைய முக்கிய அதிகாரங்களாகும். எக்லீஷியக் கூட்டம் நடைபெறும்போது இதுவே நிர்வாக ஆணைகளை வெளி யிடக்கூடும். அயல் நாட்டு விவகாரங்களையும் இம் மன்றம் கவனித்து வந்தது. இத்தகைய பல்வேறு பணிகளைச் செய்ய

இம் மன்றம் பத்துக் குழுக்களாக- அதாவது பிரிடெனிகளாகப் (Prytines) பிரிக்கப்பட்டது.

ஹெலியா என்ற பொதுமக்கள் நீதி மன்றம் திறந்த வெளியிலேயே கூடியது. குடிமக்கள் அனைவரும் அதில் கலந்து கொள்ளும் உரிமையிருந்தாலும் பலர் வருவதில்லை. வழக்குகளில் தீர்ப்பு வழங்க 200 பேர்கள்முதல் 400 பேர்கள் வரை அடங்கிய 'ஜூரி'யொன்று தேர்ந்தடுக்கப்படும். ஜூரிகளுக்கு ஊதியம் வழங்கப்பட்டது. நீதிபதியொருவர் அதற்குத் தலைமை தாங்கினர். இம் மன்றத்தின் முன் வழக்குத் தொடுப்பவர்கள் தாங்களேதான் தங்கள் வழக்குகளை வாதாடவேண்டும். வழக்கறிஞர்கள் அக் காலத்தில் இல்லை. எனவே சொல்வன்மை மிக்க குற்றவாளிகள் பலசமயம் தப்பித்துக்கொள்வதுண்டு. ஒரு சிலர் அழுது புலம்பி அதன்மூலம் மன்றத்தின் தீர்ப்பைத் தங்களுக்குச் சாதகமாக ஆக்கிக்கொள்வதுமுண்டு. சிலர் சொல்வன்மை இன்மையால் நிரபராதிகளாயிருந்தும் தண்டிக்கப்படுவது உண்டு. கிரிமினல், சிவில் வழக்குகள் வெவ்வேறு முறையில் விசாரிக்கப்பட்டன. ஜூரிகளின் பெரும்பான்மை வாக்குப்படியே தீர்ப்புகள் வழங்கப் பட்டன. குற்றவாளிகளுக்குச் சிலசமயம் அபராதங்களும், வேறு சமயங்களில் சிறைவாசங்களும், அல்லது கொலைத்தண்டனையும் வழங்கப்படும். அரசாங்க அதிகாரிகளும் இம் மன்றத்தின் முன்னர் விசாரிக்கப்படுவர். ஆதென்ஸிற்கும் அதற்குக் கப்பம் கட்டிவந்த இன்னபிற நாடுகளுக்கும் ஏற்பட்ட வழக்குகளையும் இம் மன்றமே தீர்மானித்தது.

உண்மையில் மேற்கண்ட முறைகளால் மக்களாட்சி நன்கு மலர்ச்சியுற்றதென்பதில் ஐயமில்லை. கிளையஸ்தனீஸ், எஃபியால்டீஸ் போன்றவர்களால் தோற்றுவிக்கப்பட்ட ஜனநாயக இயக்கம் பெரிக்ளீஸ் காலத்தில் முற்றுப்பெற்றதெனலாம். உயர்தர நிர்வாக அதிகாரிகள் பகுதிகளுக்கு மூன்றாவது வகுப்பினரான ஜியூஜிதியின் (Zeugitae) உறுப்பினர்களும் போட்டி போடப் பெரிக்ளீஸ் உரிமை தந்தார். நான்காம் வகுப்பினரான தீடி ஸர்களும் (Thetes) இவ்வுரிமையை நடைமுறையில் பெற முடிந்தது. ஏனெனில் பாரசீகர்கள் ஜியூஜிதிவகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். நிர்வாக அதிகாரிகளும் ஐந்நூற்றுவர் சபை உறுப்பினரும் சீட்டுக்குலுக்கல் முறைப்படித் தேர்ந்தெடுக் கப்பட்டதால் சாதாரணக் குடிமகன் ஒவ்வொருவனும் அப் பதவி களைப் பெற வாய்ப்பேற்பட்டது. ஆண்டுக்கொருமுறை தேர்வு நடந்ததால், ஒவ்வொரு குடிமகனுக்கும், அப் பதவிகளில் ஒரு முறையாவது சென்று அமரக்கூடிய வாய்ப்பு கண்டிப்பாகக்

கிடைக்க வழியிருந்தது. பதவிகளை இம் முறையில் பெறுகின்ற ஏழைகள் கவுரவத்தோடு அவற்றை நடாத்த ஊதியம் வழங்கப் பட்டது. பெரிக்ளீஸின் சீர்திருத்தங்களில் இது சிந்திக்கத்தக்க முக்கியமான சீர்திருத்தமாகும். ஏழைகளுக்கு இங்ஙனம் ஊதியம் வழங்கச் செல்வர்கள் மீது வரி விதிக்கப்பட்ட செயல் அத்தீனிய ஜனநாயகத்தின் மற்றொரு சிறப்பியல்பாகும்.

அத்தீனிய ஜனநாயகத்தில் குடிமக்கள் நாட்டை ஆளவும், ஆளப்படவும் தெரிந்துகொண்டனர். மக்கள் வாழ்வதற்காக நகர அரசு தோன்றியதென்றும், அது நல்வாழ்வாக மலர்வதற்காகவே அவ் வரசு தொடர்ந்து நீடிக்கிற தென்றும் கூறிய அரிஸ்டாடிலின் கூற்று ஆதென்ஸில் மெய்யாயிற்று. ஆதென்ஸில் வாழ்ந்த ஒவ்வொருவரும், அரசியலைத் தங்களது முக்கியக் கடமையாகக் கருதினர்; நகரத்தின் நாகரிகத்தைப் பேணி வளர்த்தனர். ஆனால் இவ்வித ஆட்சிமுறையில் குறைபாடுகளிருந்தன. நகரத்தி லிருந்த பெரும்பான்மையான மக்கள் குடியுரிமையற்றவர்கள். ஆதென்ஸ்நாட்டில் குடியுரிமை பெற்றவர்கள் ஒரு லட்சம் பேர் என்ருல், அஃதில்லாத அடிமைகள் நான்கு லட்சம்பேராக இருந் தனர். மற்றும் 45,000 வெளிநாட்டவர்கள் (Aliens) குடியுரிமை மறுக்கப்பட்டனர். பெரிக்ளீஸ் கொண்டுவந்த சட்டத்தின்படி அந்நிய மாதர்களுக்குப் பிறந்த கிளையஸ்தனிஸ், தெமிஸ்டாக்ளீஸ் ஆகியோரும்கூடக் குடியுரிமைக்கு அருகதையற்றவர். இச் சட்டத்தால் பெரிக்ளீஸே பாதிக்கப்பட்டார். அவரது, ஆசை நாயகியாகிய அஸ்பாஸியா என்பவளுடைய மக்களுக்குக் குடி யுரிமையை அளிக்க முடியாமல் அவர் வருந்தவேண்டிய நிலை நேர்ந்தது.

மற்றும், பெரிக்ளீஸின் ஜனநாயகத்தில் சட்ட ஞானமற்ற சாதாரண மக்கள், நீதி வழங்கும்பெரும்பணியில் ஈடுபடுத்தப்பட் டார்கள். வழக்காடுபவர்கள் அதற்கெனப் பயிற்சிபெற்ற பேச் சாளிகளிடம் தங்கள் உரைகளை எழுதிவாங்கி மன்றத்தின்முன் வாசித்து எளிதில் தங்களுக்குச் சாதகமான தீர்ப்புகளைப் பெற் றனர். மற்றும் நல்ல திறமையில்லாதவர்கள் எல்லாம் நிர்வாக அதிகாரிகள் பதவிக்கு வந்ததால், அவர்கள் அத்தீனியப் பேரரசைக் கட்டிக்காக்க முடியவில்லை. பெரிக்ளீஸ் இறந்த பிறகு பெலப்பொனீஷியப் போரை அவர்கள் சரிவர நடத்த முடியவில்லை. இங்ஙனம் அத்தீனிய ஜனநாயகமானது இறுதி யில் அத்தீனியர்களின் வீழ்ச்சிக்கே காரணமாயிற்று.

பெரிக்ளீஸ் காலத்திய சமுதாய நிலை

பெரிக்ளீஸின் காலத்தில் அழகிய வீடுகளை மக்கள் கட்டிக் கொண்டனர். மைசீனிய முறையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி அறைகள் அவ் வீடுகளில் இருந்தன. நல்ல சுகாதார முறையில் வடிநீர்க் கால்வாய்கள் அமைக்கப்பட்டன. சாதாரண ஏழைகள்கூட இரண்டடுக்குமாடிகள் அமைந்த கட்டிடங்களில் வாழ்ந்தனர். வீட்டின் நடுவில் ஒரு முற்றமும், சுற்றியும் தாழ்வாரமும், அறைகளும் இருந்தன. கட்டிடங்களில் பலகணிகள் காணப்படவில்லை. மக்கள் பெரும்பாலும் திறந்தவெளிகளிலேயே வாழ்ந்தனர்.

மல்யுத்தங்கள், விளையாட்டுகள் முதலிய கேளிக்கைகள் திறந்த மைதானங்களிலேயே நடைபெற்றன. இவ்வித விளையாட்டுகளில் மக்கள் ஆடையின்றி அம்மணமாகவே ஈடுபட்டனர். நாற்சந்திகளில் நின்று மணிக்கணக்கில் பேசுவது அவர்களது பொழுதுபோக்காகும். மக்கள் பொதுவாக நல்ல உணவு உண்டு வந்தனர். பார்லி போன்ற தானியங்களும், மீன் முட்டை இறைச்சி போன்றவைகளும் தாராளமாக உண்ணப்பட்டன. இறைச்சி (மாமிசம்) மிக அரிதாகவே உண்ணப்பட்டு வந்தது. செல்வர்கள் மது அருந்துதலை வழக்கமாகக் கொண்டிருந்தனர். பெரு விருந்துகளுக்குப் பின் ஆடல் பாடல்களும், சொக்கட்டான் விளையாட்டுகளும் நடைபெறுவது முண்டு. பெண்கள் ஏறக்குறைய அடிமைகள் நிலையிலேயே யிருந்தனர். கணவனுக்குப் பணிபுரிவதும், குடும்பத்தைக் கவனித்துக் கொள்வதும் எல்லோருக்கும், எதிர்பேசாது கீழ்ப்படிதலுமே பெண்ணின் கடமையாகக் கருதப்பட்டது. சமுதாயத்தில் ஏராளமான அடிமைகள் இருந்தனர். பரம்பரையாக அடிமைகளாயிருந்தவர்கள், போரில் சிறை பிடிக்கப்பட்ட பின்பு அடிமைகளாயிருந்தவர்கள் என அடிமைகளில் இரு வகையினர் இருந்தனர். டீலாஸ் நகரத்து அடிமைச் சந்தையில் நாளொன்றுக்கு 10,000 அடிமைகள் விற்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஒவ்வொரு குடிமகனும் தகுதிக்கேற்ப இரண்டு முதல் 1000 அடிமைகள் வரை வைத்திருந்தான். அடிமைகளைத் துன்புறுத்தலாமே யொழிய கொல்லுவதற்கு யாருக்குமே உரிமையில்லை. சில சமயம் அடிமைகளுக்குக் கூலியும் வழங்கப்பட்டது. சமயத் துறையில் மக்கள் பல்வேறு கடவுளர்களை வணங்கினர். தெய்வ வணக்கம் சிறிது சிறிதாகவே ஏற்பட்டது. அபோலோ, ஜ்யூஸ், போசிடன், அத்தீனா போன்ற கடவுளரை அவர் வணங்கினர். பலியிடும் வழக்கமும் இருந்தது.

தெய்வம் மனிதர் மூலமாகப் பேசும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருந்தது. வேறு பல மூடக் கொள்கைகளும் மக்களிடை வளர்ந்தன. ஆனல் பொதுவாக மக்கள் மதத்துக்கும் மதக் குருக்களுக்கும் அதிகமாகக் கட்டுப்படவில்லை.

(6) பொருளாதார நிலை

பெரிக்ளீஸின் காலத்தில் வாணிகம் பெரிதும் வளர்ந்தது. அட்டிகாவில் மட்டும் இரண்டு லட்சம் பேர் வாணிகத்தில் ஈடுபட்டதாகத் தெரிகிறது. பெரிக்ளீஸ் விவசாயத்தையும் வளர்த்தார். எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் விளைபொருட்களை விதைக்கும்படி அவர் ஆணையிட்டார். ஒலிவ மரங்கள் பெரிதும் பயிரிடப்பட்டன. ஆடு மாடு மேய்க்கும் தொழிலும் நன்கு வளர்ந்தது. சுரங்கத் தொழிலும், பானை வனையும் தொழிலும் பெரிதும் பேணி வளர்க்கப்பட்டன. சிறு கைத் தொழில்களும் நன்கு வளர்ந்தன. கடல் வாணிகத்தில் ஈடுபட்டுச் செல்வம் சேர்த்தோர் பலர். பொன்னலும் வெள்ளியாலுமான நாணயங்கள் வியாபாரத்தில் பயன்படுத்தப்பட்டன. போக்குவரத்து வசதிகள் அவ்வளவாக இல்லை. அடிமைகளே பெரும்பாலும் சுமைகள் தூக்க அமர்த்தப்பட்டனர். கட்டிடங்கள் நிறையக் கட்டப்பட்டமையால் அது சம்பந்தமான பல தொழிலாளிகள் நல்ல வருவாயைப் பெற்றனர். ஆசிரியர்கள், மருத்துவர்கள் போன்ற, மக்களுக்குப் பயனுள்ள தொழிலைச் செய்து வருபவர்கள் ஏராளமாய் ஆதென்ஸில் இருந்தனர். வியக்கத் தக்க பொருளாதார-சமுதாய சமத்துவம் ஆதென்ஸில் காணப்பட்டது. கூலிகள் ஏறக்குறைய எல்லா வேலைகளுக்கும் சமமாகவே இருந்தன. ஆடை, அணிகலன்கள், உணவு ஆகிய வைகளும் அநேகமாய் எல்லோருக்கும் ஒரே மாதிரியாகவே இருந்தன. பணக்காரர் ஒரு சிலரே இருந்தனர். அவர்களும் கப்பல் கட்டல், நாடக அரங்கு அமைத்தல் போன்றவைகளுக்கு உதவிப் பணம் வழங்குமாறு வற்புறுத்தப்பட்டதால் செல்வம் ஓரிடத்தே செறிதல் இயலாததாயிற்று. மக்களின் சராசரி வாழ்க்கைத் தரம் சற்றுத் தாழ்வானதென்றே கூறத்தகும்.

(7) பெரிக்ளீஸின் கலைத்தொண்டு

பெரிக்ளீஸ் நன்கு பண்பட்ட ஒரு கலைஞர். எனவே பலவகைக் கலைகளும் அவர் காலத்தே நன்கு போற்றி வளர்க்கப் பட்டன. இலக்கியம் பெரிதும் செழித்தோங்கியது. துன்பியல் நாடகங்கள் முழுமையான வளர்ச்சி பெற்றது, இவரது காலத்தில்தான். ஈஸ்கிலஸ் (Aeschyles) என்ற நாடக ஆசிரியர்

துன்யியல் நாடகத்தின் தந்தை எனக் கருதப்படுகின்ருர். மாரத்தான், சலாமிஸ் போன்ற போர்க்களங்களில் அவர் கலந்து கொண்டவர். சலாமிஸ் போரைப் பற்றி அவர் ஒரு நாடகம் எழுதியுள்ளார். அவர் எழுதிய 70 நாடகங்களுள் 7 தான் இப்போது கிடைக்கின்றன. சோபோக்ளீஸ் (Sophocles) எனும் துன்பியல் நாடக மேதை, ஒரு முழுவளர்ச்சி பெற்ற நாடகக் கவிஞராவார். அவரது நாடகங்களில் பருத்தறிவும், நடைமுறைக்கொத்த கொள்கைகளும் மணம் வீசுகின்றன. கிரேக்கர்களின் சமயத்தையும், அடிமை முறையையும், பெண்களின் அடிமை நிலையையும் அவர் கண்டித்தார். அரிஸ்டோபேனஸ் (448–385 கி. மு.) என்ற நாடகக் காவலர், பெருந் தலைவர்களை மறைமுகமாகக் கேலி செய்வதில் வல்லவர். (Satirist)கிளியான், சாக்ரடீஸ் போன்றவர்களையும் சோபிஸ்டுகள் எனும் தத்துவ வாதிகளையும் அவர் பெரிதும் கேலிசெய்துள்ளார்.

பெரிக்ளீஸின் காலத்தே வரலாறு நன்கு வளர்ச்சியடைந்தது. வரலாற்றின் தந்தையெனப் பேசப்படும் ஹெராடோடஸ் (Herodotus) (484-425 கி. மு.) பாரசீகப் போர்களின் வரலாற்றைத் திறம்பட வரைந்துள்ளார். எகிப்து பாபிலோனியா, பாரசீகம், இத்தாலி, சிசிலி, கருங்கடல் பிரதேசம் முதலிய இடங்களுக்குச் சென்று அரிதின் முயன்று பல வரலாற்றுக் கருவூலங்களைச் சேகரித்து, அவர்தம் வரலாற்றை எழுதியுள்ளார். கி. மு. 478–இல் செஸ்டாஸ் (Sestos) கைப்பற்றப்படும் வரை மட்டுமே அவர் பாரசீகப் போரின் வரலாற்றை எழுதியுள்ளார். அவரது நூல்கள் படிப்பதற்கு இனிமையான வரலாற்றுக் காவியங்கள் எனலாம். ஆனல் அறிவுக்கு ஒவ்வாததும் நம்பத்தகாததுமான பல செய்திகள் அவற்றில் காணப்படுகின்றன. தூஸிடைடிஸ் (Thucydides 481-401 கி. மு.) எனும் புகழ்பெற்ற மற்ருெரு வரலாற்று ஆசிரியர் பெலப்பொனீஷியப் போரைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார். தாஸோஸ், இயோன் (Thasos, Eion) போன்ற இடங்களில் அவர் நேரில் போர் புரிந்தவர். பேரில் தமது கடமைகளைச் சரிவரச் செய்யாததற்காக இருபதாண்டுகள் நாடு கடத்தப் பெற்று வெளியேயிருந்தவர். ஒருதலைச் சார்பின்றி நேர்மை வழி சென்றுநின்று வரலாற்றை எழுதிய முதல் ஆசிரியர் அவரே யாவார். உள்ளதை உள்ளபடியே உரைப்பதில் அவருக்கு நிகர் அவரே எனலாம்.

பெரிக்ளீஸின் காலம், தத்துவங்கள் தகைமையுடன் தடையின்றி வளர்ந்த காலம். எதையும் ஆராய்ந்து நம்பவேண்டு

மென்ற பகுத்தறிவு இயக்கம் அவர்காலத்தே நன்கு வளர்ந்து காணப்பட்டது. சொற்பொழிவாற்றுவதை ஒரு தனிக் கலையாக ஒம்பி வளர்த்தவர்கள் அன்று வாழ்ந்தனர். சொல்லாட்சியோடு கருத்தாழமிக்க சொற்பொழிவுகளை நிகழ்த்தும் கலையைச் செல்வில்க்கொடுக்க சோஃபிஸ்டுகள் எனும் (Sophists) பல ஆசிரியர்கள் இருந்தனர். அவர்கள் ஊதியம் வாங்கிக்கொண்டு இக் கலையைப் பலருக்கும் சொல்லித் தந்தனர். அவர்கள் அரசியலிலும் பல புதுமைக் கருத்துகளைத் தெரிவித்தனர். வேறு பல துறைகளிலும் அவர்கள் மேதைகளாகத் திகழ்ந்தனர். அவர்களுள் தலைசிறந்தவர் புரோதாகோரஸ் (Protagorus) எனும் அறிஞராவார். கிரேக்க இலக்கணத்தின் தந்தை என இவர் கருதப்படுகின்றார். சாக்ரடீஸ் என்னும் பெரியார் அக்காலத்து ஆசிரியப் பெருமக்களிலேயே தலைசிறந்தவர். கிரீஸிலேயே ஒப்பற்ற மூதறிஞர் என டெல்ஃபி குறி சொல்லும் தெய்வமே அறிவித்தது. கேள்விகளைக் கேட்பதன் மூலமே அவர், தம் மாணவர்களுக்கு அறிவினைப் புகட்டினார். ''உன்னையே நீ அறிவாயாக'' (''Know thyself'') என்பது அவரது கோட்பாடாகும். ஆண்களும் பெண்களும் தத்தம் நடத்தையில் மேம்பட வேண்டுமென்பதே அவரது போதனையாகும். அவர் ஒன்றும் எழுதவில்லையாயினும் அவரது சொற்களைப் பருகிய அவரது சீடரான பிளேடோ என்பார் தமது நூல்களில் அவற்றை எழுதிவைத்திருக்கிறார். சாக்ரடீஸ் பார்வைக்கு மிகவும் அழகற்ற தோற்றத்தினர். ஆனால் பழகுவதற்கு இனியவர்; உரமுள்ள உடல் படைத்தவர்; பல போர்களில் கலந்துகொண்டவர்; பெரிய கண்களும், பருத்த உதடும், தட்டையான மூக்கும், அம்மை வார்த்த சொள்ளை முகமும் கொண்ட அவரைப் பலர் எள்ளி நகையாடுதல் வழக்கம் ஆனால் அவரிடம் பேச்சுக்கொடுத்தவர்கள் ''உருவு கண்டு எள்ளாமை வேண்டும், உருள் பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து'' என்ற குறளுக்கு அவர் இலக்கணமானவர் என்பதை எளிதில் அறிந்துகொள்வர். அவரைச் சுற்றி எப்போதும் வாலிபர் குழாம் ஒன்று இருந்துகொண்டேயிருக்கும். வாலிபர்களின்உள்ளங்களைக் கெடுப்பபவர் என்றும், நாத்திகத்தை வளர்ப்பவர்என்றும், பழைய கடவுளரை ஒழித்துப் புதிய தெய்வங்களை உண்டாக்க முனைபவரென்றும் பொதுமக்கள்மன்றம் அவர்மீது குறறம் சாட்டியது. ஐந்நூற்றுவர் நீதிமன்றமானது அவருக்கு மரண தண்டனை விதித்தது. ஹெம்லக் (Hemlock) எனும் நஞ்சினை அவர் தாமே வாங்கி அருந்தி உயிரை விடுத்தார் (கி.மு. 399). இங்ஙனம் உண்மைக்காக உயிரைத் தியாகம் செய்த செம்மலாகச் சாக்ரடீஸ் விளங்குகிறார். ''முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்'' என்ற பொன்

மொழிக்கு ஓர் எடுத்துக்காட்டாய் அவர்தம் வாழ்க்கை அமைந்தது.

பெரிக்ளீஸின் காலத்தில் கவின்கலைகள் பலவும் நன்கு மலர்ந்தன. சிறப்பாகக் கட்டிடக் கலையை அவர் பேணி வளர்த்தார். ஃபீடியாஸ் (Pheidias 490-432) எனும் ஒப்புவமையற்ற சிற்பி அவரால் பெரிதும் ஆதரிக்கப் பெற்றவர். ஆதென்ஸில் நகர்காப்புத் தேவதைக்காகச் சமைக்கப்பெற்ற புதிய கோயிலின் கருவறையில் அத்தீனு தெய்வத்தின் உருவச் சிலையைப் பெரிய அளவில் கண்கவர் வனப்புடன் அமைத்தவர் அவரேயாவர். அவரே, அதன் உடலில் பல பகுதிகளை தந்தத்தாலும் வெள்ளியாலும் தங்கத்தாலும் போர்த்து அலங்கரித்தார். அத் தேவதையின் கையில், வெற்றிச் சின்னம் கம்பீரமாக அமைக்கப்பட்டுள்ளது. கோயிலைச் சுற்றியுள்ள மண்டபம் பார்த்தனன் (Partaienon) என அழைக்கப்படுகிறது. இக் கிரேக்கச் சொல்லுக்குக் கன்னிமாடம் (Virgin Chamber) என்பது பொருள். இப் பெயர், பின்னர் கோயில்களைத்தையும் குறித்தது. கோயிலின் சுற்றுச் சுவர்களில ஃபீடியாஸின் அழகிய சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. உடைபட்ட நிலையில் இன்றைக்குக் காணப்படுகின்ற அச் சிற்பங்கள் உலகத்தின் கலைக் கருவூலங்களிலேயே விலைமதிக்க வொண்ணுதவை எனக் கிராண்ட் என்னும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். போசிடன் (Poseidon) எனும் வீர தெய்வத்திற்கும் ஒரு கோயிலை அவர் கட்டி முடித்தார். அது சலவைக் கற்களால் ஆனதோர்க் கட்டிடமாகும். தீசியஸ் (Theseus) என்ற தெய்வத்திற்கும் அவர் ஒரு கோயிலை எடுப்பித்தார். ஒலிம்பியாவில் அமைந்துள்ள ஜ்யூஸ் (Zeus) தெய்வத்தின் சிலை உலக அதிசயங்கள் ஏழினில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இக்டினஸ் (Ictinus), காலிக்ராட்டிஸ்(Callicrates) என்றகட்டிடக் கலைஞர்கள் பார்த்தனன்கோயிலைக் கட்டியவர்கள். இப்போடாமஸ் எனும் சிற்பி பல கலைச் செல்வங்களை ஆதென்ஸிற்கு அளித்துள்ளார். விலையுயர்ந்த கற்களில் பல சிறு உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மண்கலங்களில் கண்கவர் ஓவியங்கள் காணப்படுகின்றன. இசையை வளர்க்க—இசைப் போட்டிகளை நடத்த ஓடியன் (Odeon) என்ற இசை மண்டபத்தை அவர் கட்டினார். இங்ஙனம் பல கலைப் பொக்கிஷங்களைக்கொண்ட ஆதென்ஸ் எதிரிகளால் அழிக்கப்படாமல் இருப்பதற்காகப் பெரிக்ளீஸ், அந் நகரைச் சுற்றியும் நீண்டதொரு மதிற்சுவரை எழுப்பினார். அம் மதிற்சுவர் பைரியஸ் (Piraeus) என்ற துறைமுகப் பட்டினத்தையும் இணைத்தது. முன்பிருந்த மதிற்சுவர்களுக்குச் சமாந்திரமாகக் கட்டப்பட்ட இச் சுவரானது ஆதென்ஸிற்கு இரட்டைப்

பாதுகாப்பாய் அமைந்தது. மற்றும் ஆதென்ஸின் வாணிகத்தை வளர்க்கப் பைரியஸ் நகரத்தில் பல கிடங்குகளையும் கப்பல் தளங்களையும் அவர் கட்டி முடித்தார். நாற் சதுர வடிவத்தில் ஒரு புதிய நகரையே அவர், பைரியஸ் துறைமுகத்தில் அமைத்தார். இங்ஙனம் கட்டிடம், சிற்பம், ஓவியம், இசை, நாடகம், இலக்கியம், தத்துவம், அறிவியல், அரசியல், பொருளியல் ஆகிய இன்னபிற பல்வேறு துறைகளிலும் ஆதென்ஸானது பெரிக்ளீஸின் காலத்தில் சிறந்து விளங்கியதாலேயே அவரது காலம் பொற்காலமென வரலாற்று அறிஞர்களால் வருணிக்கப்படுகின்றது.

13. பெலப்பொனீஷியப் போர் (கி. மு. 431-404)

பெரிக்ளீஸின் காலத்தில் முன்னேற்றப் பாதையில் பீடு நடைபோட்ட ஆதென்ஸ் நகர அரசு, விரைவிலேயே தனது நிலையினின்று இழிய ஆரம்பித்தது. அதற்குக் காரணம் ஆதென்ஸுக்கும், ஸ்பார்ட்டாவுக்கும் ஏற்பட்ட போரேயாகும். பெலப்பொனீஷியப் போர் என இது வரலாற்றில் பேசப்படுகிறது. பரஸ்பரப் போட்டியாலும், பொருமையாலும் ஏற்பட்ட இப் போர், உண்மையில் கிரேக்க நாகரித்தின் தற்கொலை என்றே கருதத் தக்கதாகும். ஏனெனில் இவ்வுள் நாட்டுப் போருக்குப்பின் கிரேக்க நாகரிகம் வரவர நலிந்துகொண்டே வந்ததன்றி வளரவில்லை. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்ற பழமொழியின்படிக் கிரேக்க நாடுகளிடை ஏற்பட்ட பிளவின் காரணமாகக் கிரீஸ் முதலில் மாசிடோனியர்களாலும் பின்னர் ரோமானியர்களாலும் வெல்லப்பட்டுத் தனது பழம்பெருமையையும் சுயேச்சையையும் ஒருங்கே இழந்தது.

(1) காரணங்கள்

பொதுவான காரணங்கள்

அத்தீனியப் பேரரசானது வளர்பிறைபோல் நாளும் வளர்ந்துகொண்டே சென்றதைக்கண்டு ஸ்பார்ட்டாவும் அதனைச் சேர்ந்த நாடுகளும் ஒருபுறம் அச்சமும், மற்றொருபுறம் பொருமையும் கொண்டதே இப் போருக்கு அடிப்படையான காரணமாகும். ஏனைய நாடுகள் போல் தானும் ஆதென்ஸின் முன் கைகட்டி நிற்கவேண்டிவந்துவிட்டால் என்செய்வது என்று அஞ்சிய ஸ்பார்ட்டா, எப்படியாகிலும் ஆதென்ஸின் வளர்ச்சியைத் தடை செய்யவேண்டுமென விரும்பியது. அதன் விளைவாய்க் கி. மு. 478-இலிருந்து கி. மு. 446 வரை இரு நகர அரசுகளிடையே

எங்ஙனம் பல பூசல்கள் விளைந்தன என்பதை நாம் சென்ற அத்தியாயத்தில் கண்டோம். கி. மு. 446-இல் தற்காலிகப் போர் நிறுத்த உடன்பாடு இவ்விரு நகர அரசுகளிடையே ஏற்பட்டதெனினும் நிரந்தர அமைதி ஏற்படுவதற்கான அறிகுறி ஒன்றுமே தென்படவில்லை. ஆதென்ஸ் கடலிலும், ஸ்பார்ட்டா நிலத்திலும் இறைமை பெற்று விளங்கியதால் கிரீஸில் எது தலை சிறந்த நாடு என்று அறுதியிட்டுக் கூற வொண்ணாத நிலைமையே இன்னும் நீடித்தது. இரண்டிலொன்று கிரீஸின் தனித் தலைமையைப் பெறும்வரை அவற்றினிடையே போர் ஏற்படுவதைத் தடுப்பதென்பது முடியாத காரியம் என்பதை அனைவரும் உணர்ந்தனர். கி. மு. 440-இல் சாமாஸ் தீவில் கலகம் நேர்ந்த போதே ஸ்பார்ட்டா, ஆதென்ஸ் மீது போர் தொடுக்க விரும்பியது. ஆனால் கொரிந்து ஆதென்ஸ் மீது படையெடுக்க விரும்பாத காரணத்தால் அது வாளாவிருந்துவிட்டது. தன்னைச் சுற்றிக் கிழக்கிலும், மேற்கிலும் வாணிகக் கிடங்குகளை ஏற்படுத்திக்கொண்டதைக் கண்ட கொரிந்து, ஆதென்ஸ் மீது பொறுமை கொண்டது. பல காலமாக வாணிகத்தில் தலைசிறந்து விளங்கிய கொரிந்து, தனக்குப் போட்டியாக முளைத்த ஆதென்ஸை வெறுத்ததில் வியப்பொன்றுமில்லை. மிகாராவுக்கும், ஆதென்ஸுக்கும் வாணிகத் துறையில் பல சச்சரவுகள் இருந்தன. பிளாடியாவை (plateea) பியோஷியக் கூட்டுறவினின்றும் கி. மு. 510-இல் பிரித்துத் தன்னுடன் சேர்த்துக் கொண்டதையும், பியோஷியாவைத் தனது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்ததையும், தீப்ஸ் நாடு (Thebes) பெரிதும் வெறுத்தது. எனவே ஆதென்ஸுடன் போர் செய்ய இந்த நாடுகளெல்லாம் தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தன

இவ்விரு நகர அரசுகளும் பரஸ்பர வேற்றுமையில் இரு துருவங்கள் போல் விளங்கியதால் இவற்றிடையே போர் ஏற்படுவது தவிர்க்க முடியாததொன்றுகிவிட்டது. ஸ்பார்ட்டா, ஆலிகார்க்கி எனும் செல்வந்தர், ஒருசிலரின் ஆட்சியை ஆதரித்து வந்த வேளையில் ஆதென்ஸ், டெமாக்ரஸி என்னும் மக்களாட்சியைப் பெரிதும் போற்றியது. ஸ்பார்ட்டா, பெலப் பொனீஷியக் கூட்டுறவு ஒன்றுக்கு நிலத்தில் தலைமை வகித்த வேளையில், டீலியக் கூட்டுறவு ஒன்றுக்கு ஆதென்ஸ் தலைமை பெற்றுத் திகழ்ந்தது. வளர்ந்துவரும் ஆதென்ஸின் பேரரசு ஸ்பார்ட்டாவின் கண்களை உறுத்திற்று. ஆதென்ஸின் வாணிகப் பெருக்கம் அதற்குப் பொறுமைத்தீயை மூட்டியது. ஸ்பார்ட்டர்கள் பழமை விரும்பிகள்; குறுகிய மனப்பான்மை கொண்டவர்கள். கிரீஸுக்கு அப்பாற்பட்டு அவர்களது

எண்ணங்கள் சொல்லா. ஆனால் ஆதென்ஸோவெனின் அக்கரை நாடுகளில் அக்கறை மிகக் கொண்டிருந்தது. பரந்த நோக்கமும், தாராள மனப்பான்மையும், சுயநலமற்ற தன்மையும் அதன் மக்களிடத்தே இயல்பாகக் குடிகொண்டிருந்தன. ஆதென்ஸ் வாழ் மக்கள் அயோனிய வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஸ்பார்ட்டவாசிகள் டோரிய வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

நவீன வரலாற்றில் வல்லமைச் சமநிலை (Balanee of Power) எனப் பேசப்படுகின்ற ஒரு நிலைமையானது கிரீஸில் அப்போது இல்லாததே போருக்கு முக்கிய காரணம். ஸ்பார்ட்டாவை ஆண்டிருந்த நாடுகள் குறைந்துகொண்டும், ஆதென்ஸைச் சார்ந்து நின்ற நாடுகள் அதிகமாகிக்கொண்டும் வந்தன. ஆதிக்கத்திலும் செல்வத்திலும் ஆதென்ஸ் ஏனைய கிரேக்க நாடுகள் அனைத்தையும் விடச் சிறந்து விளங்கியதால் அதனை எவ்வாறேனும் தாழ்த்தி வல்லமையில் ஒரு சமநிலையை உண்டாக்க ஏனைய நாடுகள் விரும்பின. அத்தகைய நாடுகளுக்குத் தலைமை வகிக்க ஸ்பார்ட்டா முன்வந்தது.

சுயேச்சையை இயல்பாகவே விரும்பும் கிகேக்க நகர அரசுகள், அத்தகைய கொள்கைக்கு விரோதமான முறையில் தனது ஆதிக்கத்தைப் பிறநாடுகளில் பரப்பிவந்த ஆதென்ஸைக் கட்டுப்படுத்த விரும்பின. அங்ஙனம் கட்டுப்படுத்தாவிடில் ஆதென்ஸால் தங்களுடைய சுயேச்சைக்கும் பங்கம் வரக்கூடும் என அவை அஞ்சின.

அத்தீனியப் பேரரசில் உட்பட்டிருந்த நாடுகளிடையே இரு கட்சிகள் இருந்தன. செல்வச் சிறு குழு ஆட்சியை ஆதரித்த கட்சி மட்டுமே ஆதென்ஸை ஆதரித்தது. முன்னைய கட்சியானது வெளிக்கு ஆதென்ஸுக்குப் பணிவதுபோல் காட்டிக் கொண்டாலும் உள்ளூற அதன் ஆட்சியை எவ்வாறு கவிழ்க்கலாம் எனக் கருவிக்கொண்டே இருந்தது. ஸ்பார்ட்டாவுக்கும் ஆதென்ஸுக்கும் ஏற்பட்ட போர், உண்மையில் செல்வச்சிறு குழு ஆட்சிக்கும், மக்களாட்சிக்கும் ஏற்பட்ட போரேயன்றி வேறன்று. ஆதென்ஸுக்கு உட்பட்டிருந்த நாடுகள் பல அதன் ஆதிக்கத்தை வெறுத்தன. தமது செல்வத்தை எடுத்து ஆதென்ஸ் தன் சுயநலனுக்காகச் செலவழிப்பதாக அவை கருதின. சமயம் வாய்த்தால் அத்தீனியப் பேரரசிலிருந்து விடுதலை பெறவே அவை விரும்பின. ஈஜினா (Aegenia) என்ற நகர அரசு ஒரு காலத்தே ஆதென்ஸுக்கு இணையாக வாணிகத்தில் சிறந்தது. ஆனால் பின்னர் ஆதென்ஸின் பேரரசில் அது

பலவந்தமாக இணைக்கப்பட்டது. எனினும் அந்நாடு ஆதென்ஸ் மீது போர் தொடுக்கும்படி ஸ்பார்ட்டாவை மறைமுகமாகத் தூண்டிக்கொண்டிருந்தது. இங்ஙனம் அத்தீனியப் பேரரசுக்கு உள்ளும் புறமும் அதற்கு எதிரான சக்திகள் பல கிளம்பி அதை ஒழிக்கச் சதித்திட்டம் தீட்டிய வண்ணமிருந்தன.

உடனடியான காரணங்கள்

எபிடாம்னஸ் (Epidamnus) என்ற சிறு நகர அரசில் மக்களாட்சி வாதிகளும், செல்வச் சிறு குழு ஆட்சி வாதிகளும் ஒருவர்க்கொருவர் சச்சரவிட்டுக் கொண்டனர். மக்களாட்சி வாதிகள், எபிடாம்னஸின் தாய்நகரமான கார்கிராவிடம் முறையிட்டுக் கொண்டு அதன் உதவியை நாடினர். ஆனால் கார்கிரா சினங்கொண்டு எபிடாம்னஸைத் தாக்கிக் கைப்பற்றியது. இதையறிந்த கொரிந்து, கார்கிராவைத் தாக்க எண்ணியது. அதற்காக ஆதென்ஸின் உதவியை அது கோரியது. அதே சமயம் கார்கிராவும் ஆதென்ஸின் உதவியை நாடியது. ஆதென்ஸ் கார்கிராவுடன் ஒரு நட்புடன்பாட்டைச் செய்து கொண்டது. இது ஸ்பார்ட்டாவுடன் அது செய்து கொண்ட முப்பதாண்டுப் போர் நிறுத்த உடன்பாட்டிற்கு விரோதமான தாகும். ஸ்பார்ட்டாவுடன் அதனால் போர் ஏற்படக்கூடும் என்பதைப் பெரிக்ளீஸ் அறிந்திருந்தார். எனினும் என்றைக்கிருந்தாலும் ஒரு நாளைக்கு ஏற்படப் போகிற அப் போர் சற்று முன்பாகவே ஏற்படுவதால் தவறொன்றுமில்லை என்று அவர் கருதினர். கி. மு. 433-இல் நடைபெற்ற ஸிபோடா (Sybota) போரில் கொரிந்துக்கு விரோதமாகக் கார்கிராவுக்கு ஆதென்ஸ் உதவி செய்தது. எனவே முப்பதாண்டுப் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு விரோதமாக நடந்து கொண்டதாக ஆதென்ஸ் மீது கொரிந்து குற்றம் சாட்டியது (கி. மு. 432).

கால்கிடைஸிலிருந்த (Chalcidice) போடிடியா (Potidaea) என்னும் நகரம் ஆதென்ஸுக்கு உட்பட்டிருந்தாலும் தனது பழைய தாய்நகரமான கொரிந்திடமிருந்தே தனது நிர்வாக அதிகாரிகளை வரவழைத்துக் கொண்டு வந்தது. இதை ஆதென்ஸ் விரும்பவில்லை. கொரிந்திய அதிகாரிகளை இறக்குமதி செய்வதை உடனே நிறுத்தும்படி ஆதென்ஸ், போடிடியாவுக்கு ஆணை பிறப்பித்தது. ஆனால் போடிடியா அவ்வாணைக்குக் கீழ்ப்படியாததோடு ஆதென்ஸுக்கு விரோதமாகக் கலகத்திலுமிறங்கியது. கொரிந்தும் ஸ்பார்ட்டாவும் அக் கலகத்தை மறைமுகமாகத் தூண்டிவிட்டன. ஆதென்ஸ் ஒரு படையுடன் சென்று

போடிடியாவை முற்றுகை செய்தது. கொரிந்தியர்கள் போடிடியாவுக்கு உதவி செய்ய முன்வந்தனர். அத்தீனியர்கள் அவர்களைத் தோற்கடித்தனர் (432 கி. மு.).

மிகாரா நாட்டின் மீது ஆதென்ஸ் பல கட்டுதிட்டங்களை ஏற்படுத்தியது. அத்தீனியப் பேரரசுக்கு உட்பட்ட நாடுகளோடு மிகாரா வியாபாரம் செய்யக் கூடாதென அது தடை விதித்தது. இதனால் மிகாராவின் பொருளாதாரமே வறண்டு விடக்கூடிய நிலைமை ஏற்பட்டது. பெரிக்ளீஸ் இதை உணர்ந்திருந்தும், ஸிபோடாபோரில் தமக்கெதிராகக் கொரிந்துக்கு உதவி செய்த மிகாராவைத் தண்டிக்கும் முகத்தான் வேண்டுமென்றே அத்தகைய தடைகளை ஏற்படுத்தினர். எனவே வேறு வழியின்றி மிகாரா ஸ்பார்ட்டாவிடம் தன்னைக் காக்கும்படி முறையிட்டுக் கொண்டது. ஸ்பார்ட்டா, பெலப்பொனீஷியக் கூட்டுறவு நாடுகளின் மாநாடு ஒன்றைக் கூட்டி (432 கி. மு.) அதன் அனுமதியின் பேரில் ஆதென்ஸுக்கு ஓர் இறுதி எச்சரிக்கையை விடுத்தது. மிகாரா மீது விதித்த தடைகளை நீக்குமாறும், தன்னைச் சார்ந்த நாடுகளுக்குச் சுயேச்சை வழங்குமாறும் அது ஆதென்ஸுக்கு ஆணையிட்டது. பெரிக்ளீஸ் அதை நிராகரித்தார். எக்லீஷியா மன்றம் அவரது சொற்பொழிவில் மயங்கி அவரது முடிவை ஆதரித்தது. எனவே ஸ்பார்ட்டாவும் அதனைச் சார்ந்த நாடுகளும் ஆதென்ஸ் மீது போர் தொடுத்திருப்பதாக அறிவித்தன (432 கி. மு.). இத் தீர்மானத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஒருசில சிறிய நகர அரசுகள் தங்களது சொந்த விவகாரங்களைத் தீர்த்துக் கொள்ள முயன்றன. தீப்ஸ் நாடு ஆதென்ஸ் நகர அரசின் நட்பு நகரமான பிளாடியா மீது படையெடுத்தது.

முந்நூறு தீபர்கள் (Thebars) சேர்ந்துகொண்டு பிளாடியா நகரைக் கைப்பற்ற முயன்றனர் (கி. பி. 431). ஆனால் பிளாடியாவாசிகள் அவர்களை வென்று 180 பேர்களைச் சிறைப் படுத்தினர். அவர்கள் உயிரைக் காப்பதாக முதலில் வாக்களித்த பின் அவர்கள் அத்துணைக் கைதிகளையும் கொன்றுவிட்டனர். பிளாடியா வாசிகளைத் தீபர்களிடமிருந்து காக்க ஆதென்ஸ் ஒரு சிறு படையை அனுப்பிவைத்தது.

மேற் கூறப்பட்ட நிகழ்ச்சிகள் யாவும் ஆதென்ஸ் மீது பெலப்பொனீஷியக் கூட்டுறவு நாடுகள் கொண்டிருந்த வெறுப்பை மேலும் அதிகரித்தன. ஆதென்ஸை ஒடுக்க வேண்டும் என்ற எண்ணம் அவைகளிடை தலைதூக்கலாயிற்று

மீண்டும் முப்பதாண்டுப் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஆதென்ஸ் மீறிவிட்டதாகவும், போடிடியாவிலிருந்து ஆதென்ஸ் தனது கப்பற்படையை உடனே திருப்பி அழைத்துக் கொள்ள வேண்டுமெனவும் ஸ்பார்ட்டா ஆதென்ஸிடம் வற்புறுத்தியது. ஆனால் ஆதென்ஸ் அதைச் சற்றும் பொருட்படுத்தவில்லை. எனவே பெலப்பொனீஸிய நாடுகள் அனைத்தும் சேர்ந்து ஆதென்ஸ் மீது போர் தொடுக்கும்படி ஸ்பார்ட்டாவுக்கு அனுமதியை வழங்கின. ஸ்பார்ட்டாவும் போரில் இறங்கியது.


(2) இருதரப்பாரின் வலிமை

பெலப்பொனீஷியக் கூட்டுறவு நாடுகள் அனைத்தும் ஸ்பார்ட்டாவுக்கு உதவி செய்ய முழு மனத்தோடு முன்வந்தன. ஆர்காஸ் (Argos), அக்கீயா (Achaea) ஆகிய இரு பிரதேசங்களைத் தவிர ஏனைய பெலப்பொனீஷியப் பகுதிகள் யாவும் ஸ்பார்ட்டாவின் பக்கம் சேர்ந்தன. மிகாரா, பியோஷியா, ஃபோஷிஸ், லாக்ரிஸ் ஆகிய நாடுகளும், அகர்னேனியக் கடற்கரையிலிருந்த கொரிந்தியக் குடியேற்ற நாடுகளும், கால்கிடைஸ் (Chalcidice) தீபகற்பத்தின் நடுப்பகுதியும் ஸ்பார்ட்டாவுக்கு நேச நாடுகளாயிருந்தன. எனவே பெலப்பொனீஷியக் கூட்டுறவுக்கு நிறையப் படைபலம் இருந்தது. எண்ணிக்கையிலும் திறமையிலும் கட்டுப்பாட்டிலும் அதன் படைகள் தலைசிறந்து விளங்கின. ஆதென்ஸ் அரசின் கொடுங்கோன்மையினின்றும் விடுவித்துக் கொள்ளவே பெலப்பொனீஷியா போரிடுவதாக எண்ணிய கிரேக்க மக்கள் பொதுவாக அதை ஆதரித்தனர். ஆனால் அதனிடம் நீண்ட நாள் போராட்டத்துக்கான பொருள் வசதியும் வலிமை வாய்ந்த கடற்படையுமில்லை.

அத்தீனியர்களின் சார்பில் கார்கிரா, ஸாந்திபஸ், நாபாக்டஸ் (Naupactus), தெசலி, பிளாடியா (Plateau) எனும் நாடுகள் இருந்தன, ஆதென்ஸிடம் வலிமை மிக்க கடற்படையும் வீரமிக்க காலாட்படையும் இருந்தன. லெஸ்போஸ், கியாஸ் (Chios) ஆகிய இடங்களிலிருந்து கப்பல்கள் மேலும் கொண்டு வரக்கூடிய வசதியும் இருந்தது. பன்னெடுங்காலமாகச் சேர்த்து வைக்கப்பட்ட நிதிக்குவையோடு, ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் தாலந்துகள் அதற்கு வருமானமாய்க் கிடைத்துக் கொண்டிருந்தது. ஆனால் அத்தீனியப் பேரரசில் உட்பகை அதிகம் காணப்பட்டது. ஸ்பார்ட்டாவை ஆதரித்த பலர் ஆதென்ஸின் குடியேற்ற நாடுகளிலும், பேரரசு நாடுகளிலும் வசித்து வந்தனர்.

(3) போரின் இயல்பு

பெலப்பொனீஷியப் போரானது, முப்பது ஆண்டுப் போர் நிறுத்த உடன்பாட்டின்படித் தற்காலிகமாக நின்றிருந்த



படம் 8

ஸ்பார்ட்ட ஆதென்ஸ் போரின் தொடர்ச்சியேயன்றி வேறன்று. கிரீஸின் தலைமைப் பீடத்தை அலங்கரிப்பதற்குரிய தகுதி

இந்த இரு நகர அரசுகளில் எதற்கு இருக்கிறது என்பதைத் தீர்மானிக்கவே இப்போர் நடைபெற்றது. ஸ்பார்ட்டா தரைப்படையில் வன்மையையும், ஆதென்ஸ் கடற்படையில் தலைமையையும் பெற்றிருந்த காரணத்தால் ஸ்பார்ட்டாவுக்கு உட்பட்டிருந்த நிலப் பகுதிகளிலும், ஆதென்ஸுக்கு உட்பட்டிருந்த கடற்பகுதிகளிலும் போர்கள் நடைபெறவில்லை. முக்கியப் போர்கள் யாவும் திரேஸ் (Thrace), அட்டிகா (Attica), மேற்குக் கிரீஸை ஒட்டிய கடற்பிரதேசம் ஆகிய இடங்களிலேயே நடைபெற்றன.

போரின் ஆரம்பக் காலத்தில் பெரிக்ளீஸின் ஆலோசனையின்படி, முழுமையான போர்கள் எதிலும் ஈடுபடாமல் அத்தீனியச் சேனை, நாள் கடத்திவந்தது. இங்கொன்றும் அங்கொன்றுமாகவே போர்கள் நடைபெற்றன. அவையும் தொடர்ச்சியாக நடைபெறவில்லை. வேண்டுமென்றே ஆதென்ஸ் இங்ஙனம் நாள் கடத்தியது. பொருள் வசதி குறைந்த ஸ்பார்ட்டா, அதிக நாள் போர் நீடித்தால் செலவுக்குப் பணம் போதாமல் பணிந்துவிடும் என்பதே பெரிக்ளீஸின் திட்டமாகும். நிலப் போர்களைக் குறைத்துக் கடற்போரிலேயே தன் முழுக் கவனத்தையும் ஆதென்ஸ் செலுத்த வேண்டுமென்பதும், கூடிய வரையில் தாமே வலியப் போர்களிலிறங்காது தற்காப்புக்காக மட்டுமே போரிட வேண்டுமென்பதுமே அவரது கருத்தாகும். இக் கொள்கைகளை ஆதென்ஸ் கடைப்பிடித்த வரையில் அதற்கு வெற்றியே கிடைத்தது. அத் திட்டம் கைவிடப்பட்ட பின்னர் அதற்குத் தோல்விகள் பல ஏற்பட்டன. கிரேக்க வரலாற்றிலேயே இது மிக நீண்ட போராட்டமாகும் (27 ஆண்டுகள், கி. மு. 431–404). இதனுடைய போக்கைப் பரிசீலனை செய்யும்போது போரை நடத்தும் திறமை எக்லீஷியா (Ecclesia) என்ற பொது மக்கள் மன்றத்துக்கு அவ்வளவாக இல்லை என்பது நன்கு புலனாகிறது.

(4) போரின் போக்கு

முதற்கட்டம் : ஆர்க்கிடாமியன் போர் (கி. மு. 431 - 421)

கி. மு. 431–முதல் 421 வரை நடைபெற்ற பெலப்பொனீஷியப் போரை ஆர்க்கிடாமியன் போர் எனச் சாதாரணமாகக் குறிப்பிடுவது வழக்கம். ஏனெனில் இந்தக் குறிப்பிட்ட காலத்தே ஸ்பார்ட்டாவின் மன்னரான ஆர்க்கிடாமஸ் (Archidamus) என்பார் ஏற்குறைய ஆண்டுக்கொரு முறையாகிலும் அட்டிகா மீது (Attica) படையெடுத்து வந்தார். பெரும்பாலும் அட்டிகாவிலும்,

திரேஸிலும் (Thrace) மேற்குக் கிரீஸின் கடற்கரையிலுமே போர்கள் யாவும் நடைபெற்றன.

ஆர்க்கிடாமஸின் முதற் படையெடுப்பு கி. மு. 431-இல் நடைபெற்றது. அட்டிகாவில் அவரது படைகள் புகுந்து ஏராளமான அத்தீனிய வீரர்களைக் கொன்றுகுவித்தன. இங்ஙனம் வீர சுவர்க்கம் எய்திய யாவரையும் ஒரே இடத்தில் நல்ல முறையில் புதைக்குமாறு பெரிக்ளீஸ் ஆணையிட்டார். அதன்பின் அவர் அங்குக் குழுமியிருந்த எஞ்சிய வீரர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். அமெரிக்க உள்நாட்டுப் போரின் போது ஆப்ரஹாம்லிங்கன், இறந்த போர் வீரர்களின் கல்லறைகள் மீது நின்றுகொண்டு கெட்டிஸ்பர்க் (Gettysburg) என்னுமிடத்தில் ஆற்றிய புகழ் பெற்ற சொற்பொழிவோடு இதை ஒப்பிடலாம். வலிமை மிக்க கிரேக்கத்தின் கல்விக் கூடமென ஆதென்ஸை வருணித்து, அதை உளமார நேசிக்குமாறும், அதன் பெருமையைக் காக்க முழு மூச்சோடு பாடுபடுமாறும் அவர் குடிமக்களை இறைஞ்சினர். அட்டிகாவிலிருந்த எல்லாக் குடிமக்களையும் ஆதென்ஸின் கோட்டைக்குள் வந்து குடியேறுமாறு அவர் பணித்தார்.

கி. மு. 431-இல் நடைபெற்ற கடற்போரில் அத்தீனியர்கள் வெற்றி பெற்றார்கள். அத்தீனியக் கடற்படையானது வடக்கேயிருந்த செஃபேலானியா (Cephallania) என்ற நிலப் பகுதியையும், அகர்னேனியக் கடற்கரையிலிருந்த ஒருசில பட்டினங்களையும் கைப்பற்றியது. சாரோனிக் வளைகுடாவில் தனது ஆதிக்கத்தை வலுப்படுத்த வேண்டி ஆதென்ஸ், ஈஜினவைத் (Aeginae) தனது நாட்டோடு சேர்த்துக் கொண்டது. ஈஜினவில் டோரியர்கள் குடியிருந்ததால், அவர்கள் சமயத்தில் தங்கள் இனத்தவர்களான ஸ்பார்ட்டர்களோடு சேர்ந்து கொள்ளக் கூடும் என அஞ்சிய ஆதென்ஸ் அங்கிருந்த டோரியர்களை எல்லாம் விரட்டிவிட்டு அத்தீனியர்களைக் குடியேற்றியது. வெளியேறிய டோரியர்கள் ஸ்பார்ட்டாவின் உதவியை நாடினர். அவர்களும் ஈஜினியர்களை வரவேற்று வட லெகோனியாவிலிருந்த (Laconia), தைரியாடிஸ் (Thyreates) நிலப் பகுதியில் அவர்களைக் குடியேற்றினர். ஸ்பார்ட்டாவின் இச் செய்கையானது தன்னை எதிர்த்த மெஸானியர்களை வரவேற்று ஆதென்ஸைச் சார்ந்த நாபாக்டஸ் (Naupactus) எனுமிடத்தில் அத்தீனியர்கள் அவர்களைக் குடியேற்றிய செயலுக்கு ஒரு மாற்றமாக அமைந்தது.

கி. மு. 430-இல் ஆர்க்கிடாமஸ் இரண்டாம் முறையாக அட்டிகா மீது படையெடுத்தார். அச் சமயத்தில் ஆதென்ஸில் கூட்டம் அளவுக்கு மீறியது. நெரிசல் காரணமாகச் சுகாதார வசதி குறைந்தது. அதனால் ஏற்பட்ட பிளேக் என்னும் கடுங் கொள்ளை நோய்க்கு 30,000 குடிமக்கள் இரையாயினர். ஐந்து ஆண்டுகளுக்கு நீடித்த இந் நோயால் ஆதென்ஸ்மக்கள் தன்னம்பிக்கையை இழந்து சோர்வுற்றனர். பெரிக்ளீஸை அவர்கள் தூற்றலாயினர். 1501 பேர் கொண்ட நீதிமன்ற மொன்று அவரைப் பதவியினின்றும் அகற்றியது. ஆனால் விரைவிலேயே அவர் மீண்டும் ஸ்ட்ராடகாஸாகத் (Strategos) தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் அவரது நண்பர்கள் மீது அவரது எதிரிகள் பாய்ந்தனர். பொதுப் பணத்தைக் கையாடல் செய்ததாக ஃபீடியாஸ் (Phidias) எனும் சிற்பியின் மீது குற்றம் சாட்டப்பட்டது. அனெக்ஸாகோரஸ் (Anaxagoras) எனும் அவரது ஆசிரியர்மீதும், ஆஸ்பாஸியா (Aspasia) எனும் அவரது ஆசை நாயகி மீதும் நாத்திகக் குற்றம் சாட்டப்பட்டது. அவரது இரு புதல்வர்கள் பிளேக் நோயால் மாண்டனர். இதனாலெல் லாம் மனம் நொந்த பெரிக்ளீஸ் கி. மு. 429-இல் இறந்தார். ஒரு நல்ல தலைவரை—ஊக்கமிழந்த வீரர்களைத் தட்டியெழுப்பும் திறமை வாய்ந்த ஒரு ஆவேசப் பேச்சாளரை ஆதென்ஸ் இழந்தது. இதற்குள் திரேஸிலிருந்த போடிடியா (Potidea) எனும் நகரமும் ஸ்பார்ட்டர்களின் கைகளில் வீழ்ந்தது (430 கி. மு.). 2,000 தாலந்துகளைச் செலவிட்டும் அக் கோட்டையை மீட்க ஆதென்ஸால் முடியவில்லை.

கி. மு. 429-இல் ஸ்பார்ட்டாவின் மூன்றும் படையெடுப்பு நிகழ்ந்தது. பியோஷியாவைக் (Boetia) கைப்பற்ற நினைத்த ஆர்க்கிடாமஸ் முதலில் அதற்குப் போகும் வழியில் தமக்குத் தடையாக இருந்த பிளாடியாவைப் (Plataea) பிடித்துக் கொள்ள விரும்பிக் கி. மு. 429-இல் அதன் மீது படையெடுத்தார். ஆதென்ஸின் நட்புநகரமான பிளாடியா உடனே ஆதென்ஸின் உதவியை நாடியது. உதவி செய்வதாக ஆதென்ஸ் வாக்குறுதி யளித்ததே யொழிய ஒருவிதமான உதவியையும் அது செய்ய வில்லை. எனவே ஓராண்டு வரை மிகத் தீவிரமாகப் போர் புரிந்த பின் பிளாடியாவாசிகள் ஸ்பார்ட்டாவுக்குப் பணிந்தனர் (கி மு. 427). நகர் தரைமட்டமாக்கப்பட்டது. வீடுகள் எரிக்கப்பட்டு மக்கள் வரைமுறையின்றிக் கொல்லப்பட்டனர். நிலப் போரில் அதிகம் ஈடுபடாமல் கடற்போர்களில் மட்டுமே கவனத்தைச் செலுத்த வேண்டுமென்ற பெரிக்ளீஸின் கொள்கை யாலேயே பிளாடியாவுக்கு ஆதென்ஸ் உதவி அனுப்பவில்லை.

இதனல் மிகாராவிலிருந்து தீப்ஸ் வரை சென்ற பாதையைப் பெலப்பொனீஷியர்கள் கைவசப்படுத்திக் கொண்டனர்.

ஆனல் இதே ஆண்டில் அத்தீனியக் கடற்படையானது அகர்னேனியக் கடற்கரைப் பகுதியில் இரு பெரும் வெற்றிகளைப் பெற்றது. கொரிந்திய வளைகுடாவின் உட்புறத்தில் முதலில் ஸ்பார்ட்டக் கடற்படையைத் தோற்கடித்த ஃபார்மியன் (Pharmion) என்ற அத்தீனியத் தளகர்த்தர் மீண்டுமொருமுறை வளைகுடாவுக்கு வெளியே எதிரிகளின் கப்பல்களை முறியடித்தார்.

கி. மு. 428–இல் ஆர்க்கிடாமஸ் அட்டிகா மீது தொடர்ந்து போர் செய்து வந்தார்; பிளாடியா பிரதேசத்தைப் பலவகையிலும் சூறையாடினர். இச் சமயத்தேதான் அத்தீனியப் பேரரசுக்குப் பேரிடி ஒன்று அதன் நட்பு நாடான லெஸ்பாஸில் (Lesbos) காத்திருந்தது. அத்தீனியப் பேரரசின் இரும்புப் பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த லெஸ்பாஸ் நகரங்கள் யாவும் [மெதிம்ன (Methymna) வைத் தவிர] ஆதென்ஸுக்கு விரோதமாகக் கலகத்திலிறங்கின. மிடிலெனி (Mytilene) என்ற நகரமே அக் கலகத்திற்குத் தலைமை வகித்தது. இதனையறிந்த ஆதென்ஸ் பெரிதும் வெகுண்டது. ஏறக்குறையச் சம அந்தஸ்து வழங்கப்பட்டு எல்லா வகையிலும் கௌரவமாக நடத்தப்பட்ட ஒரு நாடு இங்ஙனம் விசுவாசமின்றி நடந்து கொண்டதை ஆதென்ஸால் மன்னிக்க முடியவில்லை. ஆனல், நல்வாழ்வு என்பது சுதந்திர வாழ்க்கைக்கு ஈடாகாது என்பதை லெஸ்பாஸ் மக்கள் உணர்ந்ததாலேயே ஆதென்ஸின் பேரரசிலிருந்து விடுபட விரும்பினர். ஸ்பார்ட்டாவின் உதவியை அவர்கள் நாடினர். ஆனல் அவ்வுதவி கிடைக்கவில்லை. அத்தீனியக் கடற்படை ஒன்றும், தரைப்படை யொன்றும் சென்று மிடிலெனியைக் (Mytilene) கைப்பற்றின. கி.மு. 427-இல் அதன் வீரர்கள் ஆதென்ஸிடம் சரணடைந்தனர். எனினும் கோபம் தணியாத ஆதென்ஸின் எக்லீஷியப் பெருமன்றம், கிளியான் (Cleon) என்ற பேச்சாளர் கூறியபடி அந் நகரிலிருந்த வயதுவந்த எல்லா ஆண்மக்களையும் கொன்றுவிடுமாறும், பெண்டிரையும் குழந்தைகளையும் கைது செய்யுமாறும் ஆணையிட்டது. ஆனல் அடுத்த நாள் டயோடோடஸ் (Diodotus) என்பாரது சொற்பொழிவின் விளைவால் சினந் தணிந்த எக்லீஷியா அவ்வாணையை ரத்து செய்தது. மிடிலெனிய மக்கள் கடைசி நேரத்தில் காப்பாற்றப்பட்டனர். எனினும் அந் நகரின் கோட்டைச் சுவர்கள் இடிக்கப்பட்டன. அதன் கடற்படையை ஆதென்ஸ் கைப்பற்றிக்கொண்டது. சதி செய்வதற்குக்

காரணமாயிருந்த தலைவர்கள் யாவரும் தூக்கிலிடப்பட்டனர். நகருக்குச் சொந்தமான நிலங்கள் யாவும் அத்தீனியக் குடியேறிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

கி. மு. 427-இல் ஆர்க்கிடாமஸ் நான்காம் முறையாக அட்டிகாமீது படையெடுத்தார். பிளாடியா முடிவாகக் கைப்பற்றப்பட்டது. இச் சமயத்தில் கார்கிராவில் செல்வந்தர் கட்சிக்கும் ஜனநாயக வாதிகளுக்கும் பூசல் ஏற்பட்டு ஓர் உள்நாட்டுப் போர் விளைந்தது. ஜனநாயகவாதிகள் ஆதென்ஸின் உதவியை நாடினர். ஆதென்ஸும் உதவிப்படை ஒன்றை அனுப்பி வைத்தது. யூரிமீடன் (Eurymedon), சோஃபோக்ளீஸ் (Sophocles) ஆகிய தளகர்த்தர்களின் உதவியால், போரில் செல்வந்தர் கட்சி தோற்கடிக்கப்பட்டது. செல்வர்கள் பலர் கொல்லப் பட்டனர். இங்ஙனம் ஜனநாயகம் வென்றதெனினும் ஆதென்ஸ் மனம் சளைத்தது. கட்சிப் பூசல்கள் எவ்வளவு தூரம் செல்லக் கூடுமென்பதை அது உணர்ந்துகொண்டது.

போரின் ஆரும் ஆண்டான கி. மு. 426–இல் அத்தீனியர் களிடையே டெமாஸ்தனிஸ் (Demosthenes) எனும் பேச்சாளரும் பெருவீரருமான தலைவர் தோன்றினர். அவர் ஆதென்ஸ் வெறும் தற்காப்பு கொள்கையை மட்டும் கடைப்பிடித்தால் போதாதென்றும், முனைந்து சென்று எதிரிகளின் நாடுகளைத் தாக்க வேண்டுமென்றும் கூறினர். அவரது கூற்றை மக்கள்மன்றம் ஏற்றது. அதன் அனுமதியுடன் டெமாஸ்தனிஸ் ஈடோனியாவின் மீது (Aetolia) படையெடுத்தார். ஆனால் தக்க பின்உதவி யின்மையால் அவரது படை தோற்றது. இத் தோல்வியை ஈடு செய்ய அவர் நாபாக்டஸ் நகரை ஸ்பார்ட்டாவிடமிருந்து காப் பாற்றினர். அம்பிரேஸியன் குடாவில் (Ambracian gulf) இரு பெரும் வெற்றிகளை அவர் ஸ்பாட்டாவுக்கு எதிராகப் பெற்றார்.

போரின் ஏழாம் ஆண்டான கி. மு. 425-இல் அத்தீனியக் கப்பற்படையொன்று சோபாக்லிஸ், யூரிமீடான் ஆகியோர் தலைமையில் சிசிலியைத் தாக்கப் புறப்பட்டது. அதனுடன் டெமாஸ்தனிஸ் எனும் வீரரும் சென்றார். வழியில் பைலாஸ் (Pylos) எனும் குன்றடர்ந்த தீபகற்பத்தில் ஒருசில வீரருடனும் ஐந்து கப்பல்களுடனும் டெமாஸ்தனிஸ் இறங்கிக்கொண்டார். பைலாஸைத் தளமாகக் கொண்டு பியோஷியாவைத் தாக்க வேண்டுமென்பது அவரது திட்டம். ஏனைய தலைவர்களும் அவரது திட்டத்தை ஏற்றனர். பைலாஸில், கடலை எதிர்நோக்கி யிருந்த பகுதியில் ஒரு கோட்டையை டெமாஸ்தனிஸ் கட்ட

ஆரம்பித்தார். இதையறிந்த ஸ்பார்ட்டர்கள் அதை திறுத்த வேண்டி ஒரு படையை அனுப்பினர். அப்படை பைலாஸுக்கு அருகிலிருந்த ஸ்பாக்டீரியா (Sphacteria) எனும் தீவில் இறங்கிக் கூடாரமடித்தது. அத்தீனியக் கப்பற்படை திரும்பிவந்து ஸ்பார்ட்டர்களை முறியடித்தது. ஸ்பார்ட்ட வீரர்கள் தீவினில் அடைபட்டனர். வெளியே செல்ல இயலாதவாறு அத்தீனியக் கப்பற்படை அதை முற்றுகையிட்டது. இதையடுந்த ஸ்பார்ட்டர்கள் ஆதென்லோடு சமாதனம் செய்துகொள்ள முன்வந்தனர். தாங்கள் பிடித்த இடங்களை எல்லாம் திருப்பிக்கொடுத்து விடுவதென்றும், ஆதென்ஸ் மீது படையெடுப்பதில்லை என்றும், தீவில் சிறைப்பட்ட ஸ்பார்ட்ட வீரர்க்கு ஈடாகத் தமது கப்பற் படை ஆதென்ஸுக்கு அளிக்கப்படும் என்றும் ஸ்பார்ட்டர்கள் கூறினர். ஆனல் கிளியான் (Cleon) எனும் ஆவேசப் பேச்சாளரின் உரையில் மயங்கிய எக்லீஷியப் பெருமன்றம் அச்சமாதானக் கோரிக்கைகளை நிராகரித்தது. கிளியானை ஸ்ஃபாக்டீரியா தீவுக்கு அது அனுப்பிவைத்தது. டெமாஸ்தனிஸும், கிளியானும் சேர்ந்து அட்டிகாவை முற்றுகையிட்டு அதில் அடைபட்டிருந்த ஸ்பார்ட்ட வீரர்கள் அனைவரையும் கைது செய்து ஆதென்ஸுக்குக் கொண்டுவந்தனர். ஸ்பார்ட்டப் படை ஆதென்ஸில் மீண்டும் காலெடுத்து வைத்தால் கைதான ஸ்பார்ட்ட வீரர்கள் கொல்லப்படுவார்களென ஆதென்ஸ் அரசு எச்சரித்தது. எனவே ஆண்டுக்கொருமுறை நிகழ்ந்துவந்த ஸ்பார்ட்டர்களின் படையெடுப்பு நின்றது. ஆதென்ஸில் கடல்வலிமையும், தலைமையும் நன்கு மெய்ப்பிக்கப்பட்டன. கிளியானின் மதிப்பு ஆதென்ஸில் வளர்ந்தது.

மேற்கண்ட வெற்றியைத் தொடர்ந்து அத்தீனியப்படைகள் வேறு சில நகரங்களையும் முற்றுகையிட்டு வெற்றி பெற்றன. கி. மு. 424-இல் நிகியாஸ் (Nicias) என்ற அத்தீனியத் தளகர்த்தர், மெசானியக் கடற்கரையிலிருந்து மிதோன் (Methone) எனும் கோட்டையைக் கைப்பற்றினர். அடுத்த ஆண்டில் சிதெரா (Cythera) என்ற தீவையும் அவர் கைப்பற்றினர். இவ் வெற்றிகளால் குதூகலமடைந்த அத்தீனிய வீரர்கள் பியோஷியா முழுவதையும் கைப்பற்றிப் பழைய அத்தீனியப் பேரரசை மீண்டும் நிலைநாட்டிவிட வேண்டுமென நினைத்தனர். நிலப் போர்களில் அதிகம் ஈடுபடக்கூடாதென்ற பெரிக்ளீஸின் கொள்கையை அத்தீனியர்கள் காற்றில் பறக்கவிட்டனர். வெற்றிப் போதையில் மயங்கிய டெமாஸ்தனிஸ் போன்ற அத்தீனியத் தளகர்த்தர்கள் தங்கள் தகுதிக்கு மீறி ஆசைப்பட்டனர். விரலுக்கேற்ற வீக்கம் என்பதை மறந்து அவர்கள்

பியோஷியா மீது மூன்று திக்குகளிலிருந்து படையெடுக்க ஒரு திட்டம் தீட்டினர். இத் திட்டத்தை ஃபோகியான் (Phocian) நாட்டைச் சார்ந்த ஒருவன் ஸ்பார்ட்டாவுக்கு அறிவித்துவிட்டான். விழிப்படைந்த ஸ்பார்ட்டர்கள் தங்களது படைகளை அனுப்பிப் பியோஷியாவை வளைத்துக் கொண்டு அத்தீனியர்கள் உள்ளே புகாமற்படிக் காத்தனர். அத்தீனியப் படைத் தலைவர் ஹிப்போகிராடஸை (Hippocrates) எதிர்க்கப் பியோஷியர்கள் மீது ஒரு வரியை ஸ்பார்ட்டர்கள் விதித்தனர். இதைக் கண்ட டெமாஸ்தனிஸ் பின் வாங்கினர். ஹிப்போகிராடஸ், டீலியம் (Delium) எனுமிடத்தில் நடைபெற்ற போரில் கேவலமாகத் தோற்கடிக்கப்பட்டார். இதனால் அத்தீனியர்களின் புகழ் மங்கியது. பெரிக்ளீஸின் கொள்கையைப் புறக்கணித்ததின் பயனை ஆதென்ஸ் அனுபவித்தது.

டீலியம் வெற்றியினால் உற்சாகமடைந்த ஸ்பார்ட்டர்கள் ஆதென்ஸின் பேரரசைத் தாக்குவதில் முற்பட்டனர். பிராசிடாஸ் (Prasidas) எனும் ஒப்பற்ற தளகர்த்தர் ஒருவர் ஸ்பார்ட்டப்படைகளை வழி நடத்த முன்வந்தார். அவர் ஸ்பார்ட்டர்களிடையே தப்பிப் பிறந்தவர். ஸ்பார்ட்டர்களிடம் இல்லாத பல குணச்சிறப்புகள் அவர்பால் மிளிர்ந்தன. அவர் ஒரு இராணுவ வீரராக மட்டுமில்லாமல் அத்தீனியர்களைப் போலவே சொல்வன்மையும், சமயத்திற்கேற்றாற் போல் நடந்துகொள்ளுகின்ற மனப்பான்மையும், யாவரிடமும் இனிமையாகப் பழகும் இயல்பும் உடையவர். எனவே அவர் அத்தீனியப் பேரரசின் ஒரு பகுதியான கால்கிடைஸையும் (Chalcidice), திரேஸையும் கைப்பற்றுவதற்கான ஒரு திட்டத்தை வகுத்தார். அத்தீனியப் பேரரசிலேயே எளிதிற் கைப்பற்றக்கூடிய இடங்கள் அவைகள்தான். எனவே 700 ஹெலட்டுகளும், 1000 பெலப்பொனீஷிய வீரர்களும் கொண்ட ஒரு படையுடன் பிரேசிடாஸ், கால்கிடைஸை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார். தம்முடைய நாவன்மையைப் பயன்படுத்தி அவர் அருகிலிருந்த நகரங்களையெல்லாம் ஆதென்ஸுக்கு விரோதமாகக் கலகத்தில் இறங்கும்படித் தூண்டினர். அகாந்தஸ் (Achanthus) நகரத்திற்குச் சென்றபோது அவர் வெளிப்படையாக ஆதென்ஸிற்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்யும்படி அங்கிருந்த மக்களைத் தூண்டினர். ஆதென்ஸோடு எவ்விதப் பகையுமே இல்லாமலிருந்தும், எவ்விதக் குறைபாடும் இல்லாமலிருந்தும், பிரேசிடாஸின் கவர்ச்சிகரமான பேச்சில் மயங்கிய அகந்தஸ்மக்கள், கிளர்ந்தெழுந்து அத்தீனியர்களையெல்லாம் நகரினின்றும் துரத்திவிட்டுத் தங்களது சுயேச்சையை அறிவித்தனர். இது ஆதென்ஸ் பேரரசிற்கு ஏற்பட்ட பெருத்த

அவமானமாகும். பேரரசை முதன்முதல் எதிர்த்த நகரமும் அதுவே. இதையொட்டி அம்பிபொலிஸ்(Amphipolis),தோரோன் (Torone) போன்ற ஏனைய நகரங்களினின்றும் அத்தீனியருக்கு விரோதமாகக் கலகங்கள் கிளம்பின. தூசிடைடிஸ் என்ற படைவீரர், தாசோஸ் (Thasos) நகரில் ஒரு சிறு படையுடன் தங்கியிருந்தார். அவரால் ஸ்பார்ட்டப் படைகளைத் தடுக்க முடியவில்லை. பிராசிடாஸ் ஒருவித எதிர்ப்புமின்றி அம்பி பொலிஸ் என்ற மிகச்சிறந்த அத்தீனியக் குடியேற்ற நகருள் நுழைந்தார். வேறு பல நகரங்களும் ஸ்பார்ட்டர்களின் வசப் பட்டன. இவற்றிற்கெல்லாம் தூசிடைடிஸின் திறமையின் மையே காரணமென நினைத்த ஆதென்ஸ் அவரை நாடு கடத் தியது. அங்ஙனம் நாடு கடத்தியதும் ஒரு வகையில் நன்மை யாகப் போயிற்று. தூசிடைடிஸ் வெளிநாடுகளில் ஏராளமாகப் பயணம் செய்து அந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு பெலப்பொனீஷியப் போரைப்பற்றி, விரிவான வரலாற்று நூல் ஒன்றை எழுதினர். ஆம்பிபொலிஸ் நகரையும், ஏனைய கால்கிடிய நகரங்களையும் ஸ்பார்ட்டர்களிடமிருந்து மீட்க, கிளியான் எனும் தளகர்த்தரை ஆதென்ஸ் அனுப்பியது. 1,200 வீரர்களைக் கொண்ட படையுடன் அவர் புறப்பட்டுச் சென்று முதலில் தோரோன் (Torone) நகரைக் கைப்பற்றி, அதன் பின்னர் அம்பிபொலிஸ்நகரை நோக்கி விரைந்தார். ஆனால் பிராசிடாஸ், தமது படைகளைக் குன்றுகளிடையே ஒரு பாது காப்பான இடத்தில் பதுக்கிவைத்திருந்து, அத்தீனியப் படையைத் திடீரெனத் தாக்கித் தோற்கடித்தார். இப் போரில் கிளியான், பிராசிடாஸ் ஆகிய இரு தளகர்த்தர்களும் மாண்டனர். விழுப்புண் பட்டுப் போர்க்களத்தில் விழுந்த பிராசிடாஸ்,வெற்றிச் செய்தியைச் செவிமடுத்த பின்பே உயிரை விட்டார். ஆதென்ஸ் அம்பிபொலிஸ் நகரத்தை இழந்தது.

5. நிகியாஸின் சமாதானம்

கிளியான் என்ற தளகர்த்தர் மாண்டதால் ஆதென்ஸும், பிராசிடாஸ் என்ற படைத்தலைவர் இறந்ததால் ஸ்பார்ட்டவும் மனம் உடைந்தன. தம்முள் சமாதானம் ஏற்படுத்திக்கொள்ள அவை முன்வந்தன. கி. மு. 423-இல் ஒரு தற்காலிக சமா தானம் இரு அரசுகளிடையேயும் நிகியாஸ் என்பவரின் தூண்டுதலால் ஏற்பட்டது. இவ்வொப்பந்தத்தின்படி கைப் பற்றிய நகரங்களையெல்லாம் அவரவர்க்கே திருப்பிக் கொடுக்க அவை ஒப்புக் கொண்டன. அம்பிபொலிஸ்நகரத்தை ஸ்பார்ட்டா ஆதென்ஸிற்குக் கொடுக்க ஒப்புக்கொண்டது.

பைலாஸ் (Pylos), மெதோன், சிதெரா (Cythera) ஆகிய நகரங்களை ஆதென்ஸ், ஸ்பார்ட்டாவிற்குத் திருப்பிக் கொடுக்க ஒப்புக் கொண்டது. போரில் சிறைபிடிக்கப்பட்ட வீரர்களும், அந்தந்த நாடுகளுக்கே திருப்பித்தரப்படவேண்டுமென்பது ஒப்புக் கொள்ளப்பட்டது. ஐம்பது ஆண்டுகளுக்கு இரு நகர அரசுகளும் தம்முள் போரிடுவதில்லை என ஒப்புக் கொண்டன.

ஆனால் இந்தச் சமாதான ஒப்பந்தத்தை ஸ்பார்ட்டாவின் நேசநாடுகளான கொரிந்து, மிகாரா, பியோஷியா ஆகிய நாடுகள் வன்மையாகக் கண்டித்தன. சமாதானம் நெடு நாளைக்கு நீடிக்காதென்பதும் இதனால் தெளிவாயிற்று சமாதான ஒப்பந்தத்தில் கண்டபடி இருநகர அரசுகளும் நடந்து கொள்ளவில்லை. எனவே ஆதென்ஸ் ஒப்பந்தத்தின் ஏனைய நிபந்தனைகளை நிறைவேற்ற மறுத்தது. மீண்டும் இருநகரங்களிடையே போர் மூண்டது. பெலப்பொனீஷியக் கூட்டுறவிலிருந்து கொரிந்து, மாண்டினியா (Mantinea) ஈலிஸ் (Elis) ஆகிய நாடுகள் பிரிந்து ஆர்காஸ் நாட்டுடன் சேர்ந்து கொண்டன. அத்தீனியப் பேரரசில் அம்பிபொலிஸ் நகரைத் தவிர வேறு இடங்களெல்லாம் அப்படியேயிருந்தன.

கொரிந்து, ஆர்காஸ் நாட்டுடன் நட்புறவு ஏற்படுத்திக் கொண்டதையொட்டி ஸ்பார்ட்டாவானது பியோஷியாவோடு ஒரு நட்புடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டது. இதைக் கண்ட ஆதென்ஸ், ஆர்காஸ், மாண்டினியா, ஈலிஸ் ஆகிய நாடுகளோடு நட்புடன்பாட்டைச் செய்துகொண்டது. இச் சமயத்தே ஆதென்ஸ்மக்களுக்குத் தலைமை தாங்கி வழிநடத்தி வந்தவர் ஆல்கிபியாடிஸ் (Alcibiades), என்ற புதிய தளகர்த்தர் ஆவர். அவர் பெரிக்ளீஸின் உறவினர்; சாக்ரடீஸின் நண்பர்; நல்ல அறிவுத் திறம்படைத்தவர்; ஆனால் ஒழுக்கமும் கொள்கை உறுதிப்பாடும் இல்லாதவர். அவர் பெலப்பொனீஷிய நாடுகளையெல்லாம் ஒன்று திரட்டி ஸ்பார்ட்டாவிற்கு விரோதமாக அவற்றைப் போரிடச் செய்ய வேண்டுமென முயன்றார். அம் முயற்சியின் அடிப்படையிலேயே மேற்சொன்ன ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்பின் ஆல்கிபியாடிஸ், ஆர்காஸ் நாட்டின் உதவிப்படையுடன் பெலப்பொனீஷியாவிற்குள் நுழைந்தார். எபிடாம்னஸ் (Epidamnus) என்ற நகரத்தை இருநாட்டுப் படைகளும் முற்றுகையிட்டன. அந் நகரை மீட்க ஸ்பார்ட்டாவால் அனுப்பப்பட்ட படையானது மாண்டினியா (Mantinea) எனுமிடத்தில் ஆர்காஸ், ஆதென்ஸ் ஆகிய இருநாட்டுப் படைகளையும் தோற்கடித்தது (கி. மு. 418). இதனால் ஆதென்ஸின் புகழ் மீண்டும் மங்கியது.

ஆர்காஸில் ஒரு உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டதால் அங்குள்ள செல்வந்தர்கள் ஆட்சியைக் கைப்பற்றினர்கள். அவர்கள் ஸ்பார்ட்டாவுடன் நட்புறவை ஏற்படுத்திக்கொண்டார்கள். அதே போன்று மாண்டினியா, ஈலிஸ் ஆகிய நகரங்களும் ஸ்பார்ட்டாவுடன் சேர்ந்தன. இதைக் கண்ட ஆதென்ஸ் ஸ்பார்ட்டாவுடன் மீண்டும் போரிடுவதைத் தவிர வேறு வழியில்லையென எண்ணிற்று. சமாதானவாதியான நிகியாஸ் என்பவரும், ஆல்கிபியாடிஸ் என்பவரோடு சேர்ந்து போர்முழக்கம் செய்தார். ஆல்கிபியாடிஸை நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை மக்கள்மன்றத்தில் கொண்டுவந்த ஹைப்பர்போலஸ் (Hyperbolus) என்பார் முடிவில் நாடுகடத்தப்பட்டார். மாண்டினியாவில் பெற்ற தோல்வியை ஈடுகட்ட அத்தீனியர்கள் மேலாஸ் (Melos) என்னும் தீவினைக் கைப்பற்றிட எண்ணினர். டோரியர்கள் நிறைந்த அத்தீவு அத்தீனியப் பேரரசில் தனித்திருந்தது. கி. மு. 416-இல் அத்தீவை ஆல்கிபியாடிஸ் என்ற தளபதி கைப்பற்றினர். அங்கு வாழ்ந்த வயது வந்த ஆண் மக்கள் யாவரும் கொல்லப்பட்டனர். அதன்பின் அத்தீனியர்கள் அங்குச் சென்று குடியேறினர். ஒரு குற்றமும் செய்யாத மேலாஸ்தீவுமக்களை அத்தீனியர்கள் நடத்திய முறையைக் கண்டு பல கிரேக்க நாடுகள் அத்தீனியரையும் அவர்களது பேரரசையும் தங்களது சுயேச்சைக்கோர் பேராபத்தாக எண்ணி உள்ளூற வெறுக்கலாயினர். தங்களது சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டுமானால், அத்தீனியப் பேரரசு குலைய வேண்டுமென அவர்கள் எண்ணமிட்டனர்.

(6) அத்தீனியப் பேரரசு வீழ்ச்சியுறல்


முதற்கட்டம்

சிராக்யூஸ் படையெடுப்பு கி. மு. 415-413

பொதுக் காரணங்கள்

பெலப்பொனீஷியப் போரில் ஆரம்பத்தில் ஒரு சில வெற்றிகளைப் பெற்ற ஆதென்ஸ் இறுதியில் பல தோல்விகளை அடைந்த காரணத்தால், தன்மானத்தையும் கௌரவத்தையும் காப்பாற்ற வேறு திசைகளில்லாகிலும் சில வெற்றிகளைப் பெற அது விரும்பியது. முன்னரே ஏற்பட்டுவிட்ட தோல்விகளால் விளைந்த கெட்ட பெயரை இனி ஏற்படப் போகும் வெற்றிகளினால் மூடி மறைத்துவிடலாமென ஆதென்ஸ் கனவுகண்டது. மற்றும் சிசிலியோடு நடைபெற்று வந்த தானிய வியாபாரத்தைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர ஆதென்ஸ் எத்தனித்தது.

ஏனெனில் ஸ்பார்ட்டாவானது அத்தகைய வியாபாரத்தில் சிறிது சிறிதாக ஈடுபட்டு வந்தது. அதை மேலும் வளரச்செய்யாமல் தடுக்க வேண்டுமென ஆதென்ஸ் விரும்பியது. மற்றும் சிசிலியில் வாழ்ந்த அயோனியர்களுக்கும், டோரியர்களுக்கும் ஏற்பட்ட சச்சரவில் ஆதென்ஸ் அயோனிர்களுக்கு உதவிசெய்ய



படம் 9.

முன்வந்தது. ஏனெனில் ஆதென்ஸின் மக்களும் அயோனிய இனத்தைச் சேர்ந்தவர்களே. மேலும் கீழைத் திசையில் ஒரு பேரரசை அமைத்திருந்த ஆதென்ஸ், மேலைத் திசையிலும் அதே போன்று ஒரு பேரரசை அமைக்க விரும்பியது. சிசிலியில் அப்போது தலைசிறந்து விளங்கிய நகரம் சிராக்யூஸ் என்பதாகும். கிரேக்க நாட்டு விவகாரங்களில் அதன் தலையீட்டைத் தவிர்க்க வேண்டுமெனவும் ஆதென்ஸ் திட்டமிட்டது.

உடனடியான காரணம்

கி. மு. 416-இல் செஜஸ்டா (Segesta), லியோந்தினி (Leontini) ஆகிய இரு சிசிலிய நகரங்கள், தங்களது விரோதி நகரங்களான செலினஸ் (Selinus), சிராக்யூஸ் ஆகிய நகரங்களுக்கு எதிராக ஆதென்ஸிடம் உதவியைக் கோரின. லியோந்தினியில் வாழ்ந்தவர்கள் ஆயோனிய இனத்தைச் சார்ந்தவர்கள்

செலினஸ், சிராக்யூஸ் நகர்களில் வாழ்ந்தவர்கள் டோரிய இனத்தைச் சார்ந்தவர்கள். எனவே ஆதென்ஸ், செஜஸ்டாவிற்கும் லியோந்தினிக்கும் உதவியளிக்கத் தீர்மானித்தது. தூதுவர்களை முதலில் அனுப்பிச் சிசிலிய நகரங்களின் செல்வச் செழிப்பை அறிந்துகொண்ட பின்னரே ஆதென்ஸ் மேற்கண்ட தீர்மானத்திற்கு வந்தது. சிராக்யூஸை வென்று சிசிலியில் மேலைப் பேரரசு ஒன்றைத் தோற்றுவிக்க ஆதென்ஸ் திட்டமிட்டது. அதன்படியே நிகியாஸ், ஆல்கிபியாடிஸ், லாமாக்கஸ் (Lamachus) ஆகிய தளகர்த்தர்கள் தலைமையில் ஒரு பெரும்படை திரட்டப்பட்டது. அப்படை புறப்படுவதற்கு முன்னர் அபசகுணம் போல் ஆதென்ஸ்நகரில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. கோயில்களுக்கு முன்னும், வீடுகளுக்கு முன்னும் வைக்கப்பட்டிருந்த ஹெர்மீ (Hermae) என்ற தூய்மையான சிலைகள் யாவும் ஒரே இரவில் யாராலேயோ உடைக்கப்பட்டுக் கிடந்தன. ஆல்கிபியாடிஸ்தான் அத்தகைய காரியத்தைச் செய்திருக்க வேண்டுமென அவரது எதிரிகள் கூறினர். ஏனெனில் அவர் மதத்தில் நம்பிக்கையில்லாதவர் என்பது யாவருக்கும் தெரியும். இதைப் பற்றி உடனே விசாரிக்க வேண்டுமென ஆல்கிபியாடிஸ் கூறினர். ஆனால் விசாரணை ஒத்திப்போடப்பட்டது. சிராக்யூஸ் படை உடனே புறப்படுவதற்கான ஆணையை மக்கள்மன்றம் பிறப்பித்தது. முப்பதினாயிரம வீரர்களையும், மூன்றடுக்கு மாடிகளையும் கொண்ட ட்ரிரீம்ஸ் (Triremes)என்ற நூறு கப்பல்களையும் கொண்ட மகத்தான படையொன்று கி. மு. 415-இல் பைரியஸ் (Piraeus) துறைமுகத்தினின்றும் புறப்பட்டது. இத்தாலியை அடைந்தவுடன் ரீஜியம் (Rhegium) என்னுமிடத்தில் ஒரு போர் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடனடியாகச் சிராக்யூஸை முற்றுகையிடவேண்டுமென லாமாக்கஸ் எனும் (Lamachus) பெருவீரர் யோசனை தெரிவித்தார். ஒருசில சிசிலிய நகரங்களை முதலில் உறவாக்கிக்கொண்டு அதன்பின் படையெடுப்பைத் தொடங்குவதே உசிதமானது என ஆல்கிபியாடிஸ் என்பார் ஆலோசனை கூறினர். சிசிலியர்க்கு முன் தமது வீரத்தைக் காட்டிவிட்டு வாளா திரும்பிவிடுதலே நல்லது என நிகியாஸ் எனும் தளகர்த்தர் கூறினர். இறுதியில் ஆல்கிபியாடிஸ் கூறிய ஆலோசனையே ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படி நாக்ஸாஸ் (Naxos), கேடானி (Catane) ஆகிய நகரங்களோடு நேச ஒப்பந்தத்தை அத்தீனியர்கள் செய்துகொண்டார்கள். இந்தச் சமயத்தில்தான் ஆதென்ஸ் அரசானது ஒரு மாபெரும் தவற்றைச் செய்தது. ஆல்கிபியாடிஸை, அவர்மீது சாட்டப்பட்ட குற்றங்கள் விசாரிக்கப்படுவதற்காக ஆதென்ஸிற்கு உடனே திரும்பி வரும்படி அது கட்டளையிட்டது. ஆதென்

ஸிற்குச் சென்ரூல் தலேதப்புவது கடினமென அஞ்சிய ஆல்கி பியாடிஸ் இரவோடிரவாக ஸ்பார்ட்டாவிற்குத் தப்பியோடிவிட் டார். எனவே நிகியாஸ் என்பவரே சிராக்யூஸை முற்றுகை யிட்டார். ஆரம்பத்தில் ஒரு வெற்றியைப் பெற்றபின் மாரிக் காலத்தை முன்னிட்டுப் போரை அவர் நிறுத்திவிட்டார். இந்த இடைவெளியைப் பயன்படுத்திக்கொண்டு சிராக்யூஸ் தன்னை வலுப்படுத்திக்கொண்டது. ஸ்பார்ட்டா, கொரிந்து ஆகிய நகரங் களின் உதவியை வேண்டி அஃது பெற்றுக்கொண்டது. ஸ்பார்ட்டாவிற்கு ஓடிப்போன ஆல்கிபியாடிஸ் அட்டிகாவிலிருந்த டாகிலியா (Decilia) என்ற அத்தீனியக் கோட்டைக்கு ஒரு படையை அனுப்பி அதை உடனே கைப்பற்றுமாறு ஸ்பார்ட்டர் களுக்கு ஆலோசனை கூறினார். அவரது ஆலோனையின்பேரில் ஸ்பார்ட்டர்கள், ஜிலிப்பஸ் (Gyllipus) என்ற தளகர்த்தரின் தலைமையில் சிராக்யூஸிற்கு ஒரு உதவிப் படையை அனுப் பினர்.

மாரிக்காலம் முடிந்தபின் நிகியாஸ், சிராக்யூஸ் முற்றுகையைத் தொடர்ந்தார். துறைமுகத்தில் கடற்படையைத் தங்கவைத்து விட்டுத் தரைப்படையுடன் வடக்கேயிருந்த எப்பிபோலே (Epipolae) எனும் நகரத்தை அவர் தாக்கிக் கைப்பற்றிக்கொண் டார். பீடபூமியின் நடுவில் ஒரு வட்டமான கோட்டையைக் கட்டுமாறு அவர் ஆணையிட்டார். வெளியேயிருந்து விரோதிகள் உள்ளே வராவண்ணம் தடுக்க ஒரு பெரிய மதில்சுவரையும் அவர் நகருக்கு வடக்கேயும் தெற்கேயும் கட்டுமாறு கட்டளையிட் டார். சிராக்யூஸின் படைகள் சுவர் எழுப்பப்படுவதைத் தடுத்து நிறுத்த முயன்றன. இரு படைகளுக்கும் நடைபெற்ற போரில் லாமாக்கஸ் எனும் கிரேக்க வீரன் மடிந்தான். எனினும் அத்தீனி யர்கள் மனம் தளராது மதில்சுவரின் தெற்குப் பாகத்தைக் கட்டி முடித்தனர். வடக்கு மதில்சுவரையும் நிகியாஸ் கட்ட ஆரம்பித் தார். ஆனல் அதை முடிக்காமல் விட்டுவிட்டார். அஃது இல் லாமலே தான் வெற்றிபெற முடியுமென அவர் நம்பிக்கை கொண்டார். ஆனல் அது தவறு என்பதைப் பின்னர் உணர்ந்து கொண்டார்.

ஸ்பார்ட்டா தளபதியான ஜிலிப்பஸ் என்பார் சிசிலியின் வடக்குக் கடற்கரையில் வந்திறங்கிச் சிராக்யூஸை அடைந்தார். சிராக்யூஸின் படைகளையும் தம்முடன் சேர்த்துக்கொண்டு அவர் எப்பிபோலேவை நோக்கிப் புறப்பட்டார். முடிவுபெருமல் விடப் பட்டிருந்த வடக்குமதில்சுவரில் இருந்த ஒரு பிளவின் வழியாக அப் படைகள் நகருக்குள் நுழைந்தன. இதைக் கண்ட அத்தீனி

யர்கள் வடக்கு மதிற்சுவரைக் கட்டுவதில் மும்முரமாக ஈடுபட லாயினர். அதைத் தடுக்கும் முகத்தான் அச் சுவருக்குக் குறுக்கே ஸ்பார்ட்டர்கள் இன்னொரு மதில் சுவரை எழுப்பினர். எனவே எப்பிபோலேவுக்கு அழைத்துச் சென்ற வழியை அத்தீனியர்களால் அடைக்க முடியவில்லை. கடுமையான போருக் குப் பின்னர் நிகியாஸ் எப்பிபோலேவையிழந்தார். தமக்கு உடல் நலமில்லாததால் தம்மை உடனே திருப்பியழைத்துக் கொள்ளும்படி அவர் ஆதென்ஸைக் கேட்டுக்கொண்டார். ஆனால் நிகியாஸிடம் அபாரமான நம்பிக்கையை வைத்திருந்த அத்தீனியர்கள் அவரைத் திரும்ப அழைத்துக்கொள்ள மறுத் தனர். அதற்குப் பதிலாக எழுபத்து மூன்று போர்க் கப்பல்களை யும், ஒரு பெரிய தரைப் படையையும் யூரிமீடன் (Eurymedon), டெமாஸ்தனிஸ் (Demosthenes) என்ற இரு தளபதிகளின் தலைமையில் அவருக்கு உதவியாக ஆதென்ஸ் அனுப்பி வைத்தது. டெமாஸ்தனிஸ், சிராக்யூஸின் கோட்டைச் சுவரைக் கைப்பற்ற முயன்றார். ஆனால் முடியவில்லை. அதற்குள் மாரிக் காலமும் வந்தது. சிராக்யூஸின் படைகள் ஆதென்ஸின் கப்பற் படை தங்கியிருந்த துறைமுகத்தை முற்றுகையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. முற்றுகை தொடங்குமுன் துறைமுகத் தினின்றும் அத்தீனியக் கப்பல்கள் வெளியே சென்று விட வேண்டுமென டெமாஸ்தனிஸ் அறிவுரை வழங்கினர். ஆனால் அங்ஙனம் பின்வாங்கினால் தாய்நாட்டில் தம்மை அனைவரும் பழிப்பாரென அஞ்சிய நிகியாஸ் சற்றுத் தயங்கினர். அதற்குள் கொரிந்தியக் கடற்படையொன்று சிராக்யூஸின் உதவிக்கு வந்து கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டு நிகியாஸ் தமது கப்பற்படை களைத் துறைமுகத்தினின்றும் பின்வாங்கும்படிக் கட்டளையிட் டார். ஆனால் பின் வாங்குவதற்கெனக் குறிப்பிட்டிருந்த இரவில் திடீரெனச் சந்திரக் கிரஹணம் ஏற்பட்ட காரணத்தால் அது அபசகுணமென நினைத்த நிகியாஸ், படைகளின் புறப் பாட்டை நிறுத்தி அதை ஒரு மாதம் ஒத்திப்போட் டார். அதற்குள் சிராக்யூஸின் கப்பற்படை அத்தீனியக் கப்பற்படையை வளைத்துக் கொண்டது. துறைமுகத்தின் வாயிலில் வரிசையாகக் கப்பல்களை நிற்க வைத்துச் சிராக்யூஸ் அதை அடைத்துவிட்டது. இங்ஙனம் அத்தீனியக் கப்பல்கள் வெளியே செல்ல முடியாதபடி அடைபட்டன. எனவே வேறு வழியின்றி அத்தீனியர்கள் போரைத் தொடங்கினர். நடைபெற்ற போரில் அத்தீனியர்கள் தோற்றனர். யூரிமீடன் என்ற தளகர்த்தர் மாண்டார். கப்பல்கள் வெளியே போக வழியில்லாத காரணத்தால் அத்தீனியப் போர்வீரர்கள் கப்பல்களை விட்டு விட்டு நீந்திக் கரைசேரலாயினர். ஆனால் அவர்கள் சென்ற

பாதைகளிலெல்லாம் சிராக்யூஸின் படைகள் குறுக்கே நின்று கொண்டிருந்தன. ஈவிரக்கமின்றி அவைகள் அத்தீனியர்களைக் கொன்று குவித்தன. நிகியாஸ் இறுதியில் கிளிப்பஸ் என்னும் ஸ்பார்ட்டத்தளகர்த்தரிடம் சரணடைந்தார். சிராக்யூஸியர்கள், நிகியாஸையும் டெமாஸ்தனிஸையும் கொன்றுவிட்டனர். ஏழாயிரம் போர்வீரர்கள் பட்டினியாலும் குளிராலும் வாடிச் சாகும்படி விடப்பட்டனர். இவ்வாறு சிராக்யூஸ் முற்றுகை யானது படுதோல்வியில் முடிந்தது.

தோல்விக்குக் காரணங்கள்

சிசிலியப் படையெடுப்பானது அத்தீனியர்கள் செய்த மாபெரும் தவறுகளிலொன்றாகும். பெரிக்ளீஸின் அறிவு சான்ற கொள்கையைக் கடைப்பிடிக்காததாலேயே அத் தவறு நிகழ்ந்தது. மாண்டீனியா தோல்விக்குப் பின் அவர்கள் இத்தகைய பெரும் முயற்சியில் ஈடுபட்டது, சிறிதும் அறிவுக்கொவ்வாததென்பதில் ஐயமில்லை. "எண்ணித் துணிக கருமம், துணிந்தபின் எண்ணுவ மென்பது இழுக்கு" என்ற குறளுக்கு ஏற்ப அவர்கள் நடந்து கொள்ளவில்லை. சிராக்யூஸ் முற்றுகையைப் பற்றி எந்தத் தளகர்த்தரும் தெளிவான திட்டம் எதுவும் வைத்திருக்கவில்லை. என்ன செய்யப் போகிறோம் என்று தெரியாமலேயே அத்தீனியப் படைகள் சிராக்யூஸை நோக்கிப் புறப்பட்டன. வழியில் இத்தாலியை அடைந்த பின்பே போர்த் திட்டம் விவாதிக்கப் பட்டது. துணிந்தபின் எண்ணுகின்ற தவற்றை அத்தீனியத் தளகர்த்தர்கள் செய்தார்கள். அவர்களில் ஒருவராவது சிறந்த போர்வீரர் அல்லர். மிகச் சாதாரணமான—இரண்டாந்தரமான படைத்தலைவர்களே இப் படையெடுப்புக்குத் தலைமை தாங்கும்படிச் செய்தது ஆதென்ஸின் மற்றொரு பெருந்தவறாகும். லாமாக்கஸ் என்பார் சிந்தனைத் திறமற்ற ஒரு சாதாரணப் போர்வீரர். நிகியாஸ் என்பார் படை எடுப்பே கூடாது என எண்ணியவர். எண்ணியதை எண்ணியாங்கு உடனே செய்து முடிக்கும் வினைத் திட்பமில்லாதவர். அதற்குக் காரணம் அவரது மனத் திட்பம் இல்லாமையேயாகும். ஆல்கிபியாடிஸ் என்பாரும் கொள்கைப் பிடிப்பு இல்லாதவர்; சாதாரணப் போர்வீரர். பெரும் படை யெடுப்புக்குச் சற்றும் தகுதியற்றவர். இத்தகைய படையெடுப் புக்குத் தகுதி வாய்ந்த ஒரே தளகர்த்தராக அச் சமயத்தே விளங்கிய டெமாஸ்தனிஸ் என்பவரை ஆதென்ஸ் ஆரம்பத்தி லேயே படைத்தலைவராக நியமிக்காதது மற்றொரு தவறாகும். நியமிக்கப்பட்ட ஆல்கிபியாடிஸையும் ஆதென்ஸ் இடையில் திரும்ப அழைத்தது சற்றும் தகாத செயலாகும். இதன்

விளைவாக ஆல்கிபியாடிஸ் எதிரி நாட்டுக்கு ஓட்டம் பிடிக்க நேர்ந்தது. மேலும் அட்டிகாவில் புகுந்து மிகவும் எளிதில் கைப்பற்றக்கூடிய இடம் எது என்பது பற்றி அவர் ஸ்பார்ட்டர்களுக்கு உளவு கூறும் நிலையை உண்டாக்கியதும் ஆதென்ஸின் தவறே என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

சிராக்யூஸில் இறுதிவரை எஞ்சி நின்ற நிகியாஸ் எனும் தளகர்த்தர் தவற்றுக்குமேல் தவறு செய்துகொண்டே இருந்தார். சஞ்சல மனம் படைத்த அவர், தொடங்கிய காரியத்தை முடிக்கும் உறுதியில்லாதவராயிருந்தார். எப்பிபோலேநகரின் வடக்கு மதிற்சுவரைக் கட்டி முடிக்காதது அவரது முதற்பெருந் தவருகும். அதன் பின் மூட நம்பிக்கைக்கு இரையாகித் தமது கப்பற்படைகளைத் தக்க சமயத்தில் துறைமுகத்தினின்றும் வெளியேறவிடாமல் செய்தது அவரது இரண்டாவது பெருந் தவருகும். இத்தகைய காலம் தாழ்த்தும் கொள்கையாலேயே சிராக்யூஸ்படையினர் விழிப்படையவும், ஸ்பார்ட்டா போன்ற பிறநாட்டு உதவிகளைப் பெறவும், துறைமுகத்தை முற்றுகையிட்டு அத்தீனியக் கப்பற் படையை அழிக்கவும் வசதி ஏற்பட்டது. டெமாஸ்தனிஸ் என்ற திறமைமிக்க தளகர்த்தரை ஆதென்ஸ் போரின் இறுதிக் கட்டத்திலேயே அனுப்பி வைத்தது. அதற்குள் நிகியாஸ் தலைமையில் பல தவறுகள் நிகழ்ந்துவிட்டன. தக்க சமயத்தில் பின்வாங்கும்படி டெமாஸ்தனிஸ் கூறிய யோசனையை நிகியாஸ் ஏற்கத் தயங்கினர். ஏற்ற பின்னும் சந்திரகிரஹணம் காரணமாக அதை நிறைவேற்றுமல் ஒத்திப் போட்டார். ஒரு மாதம் வீணே கழிந்தது. சிராக்யூஸின் படைத் தலைவரான ஜிலிப்பஸ் அத்தீனியத் தலைவர்களை விடப் பன்மடங்கு திறமைமிக்கவராயிருந்தார். அவரது திட்டங்களால் அத்தீனியர்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ள நேர்ந்தது. சிசிலிய நகரங்கள் பலவற்றின் உதவியும், ஸ்பார்ட்டா, கொரிந்து போன்ற நகரங்களின் உதவியும் தக்க சமயத்தில் வந்ததும் சிராக்யூஸின் வெற்றிக்கு முக்கிய காரணமாயமைந்தது

விளைவுகள்

சிராக்யூஸ் படையெடுப்பின் விளைவாக ஆதென்ஸ் தனது தரைப் படையிலும், கடற் படையிலும் ஒரு கணிசமான பகுதியை இழந்தது. அத்தீனிய வீரர்களின் தன்னம்பிக்கை தளர்ந்தது. மற்றும் ஆல்கிபியாடிஸின் ஆலோசனைப்படி ஸ்பார்ட்டர்கள் டாகிலியா (Deceleia) கோட்டையைப் பிடித்துக் கொண்டதால்

ஆதென்ஸுக்குப் பல இன்னல்கள் விளைந்தன. வெளிநாட்டிலிருந்து ஆதென்ஸுக்கு உணவுப்பொருள்கள் வரவொட்டாமல், அங்கிருந்த ஸ்பார்ட்டர்கள் தடைசெய்தனர். அட்டிகாவின் விவசாயத்தையும், லாரியத்தின் சுரங்கத் தொழிலையும் அன்னர் தடுத்து நிறுத்தி விட்டனர். எனவே உணவுப் பஞ்சம் அட்டிகாவில் தலைகாட்ட ஆரம்பித்தது. அதனால் மக்கள் ஆதென்ஸின் ஜனநாயக அரசின் மீது வெறுப்படைந்து செல்வந்தராட்சியை ஆதரிக்க ஆரம்பித்தனர். நாட்டின் விவகாரங்களை மேற்கொள்ளப் பத்துபேரடங்கிய ஆட்சிக் குழு ஒன்று ஆதென்ஸில் அமைக்கப்பட்டது. அரசியலமைப்பில் புதிய பல மாற்றங்கள் ஏற்படுத்தவேண்டிய கட்டாயம் அங்கு நேர்ந்தது. ஆதென்ஸ் பேரரசில் அடங்கியிருந்த நாடுகள், ஆதென்ஸுக்குக் கப்பம் கட்டுவதற்குப் பதிலாக ஏற்றுமதி—இறக்குமதி வரி ஒன்றைச் செலுத்த அனுமதிக்கப்பட்டன. மற்றும் கடலரசி என்ற பட்டத்துடன் கடல்வன்மையில் ஈடும் எடுப்பு மற்றுத் திகழ்ந்துவந்த ஆதென்ஸின் புகழ் மங்கியது. கடற் போரிலேயே அதன் படைகளைத் தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கை ஸ்பார்ட்டாவுக்கு ஏற்படலாயிற்று. அதன் விளைவாக ஆதென்ஸ் தனியுரிமையுடன் உலவி வந்த ஆசியாமைனர்ப் பகுதிகளிலும், கருங்கடற் பிரதேசங்களிலும், ஸ்பார்ட்டா துணிகரமாக நுழைந்து அதன் கப்பற் படையை எதிர்க்கலாயிற்று. ஆதென்ஸின் தோல்விகளாலேயே போர்முனைகள் மேற்கிலிருந்து கிழக்கே மாறின. ஈஜியன் கடலிலும் ஹெல்லஸ்பாண்டிலும், மத்தியத்தரைக் கடலிலும் பல போர்கள் ஸ்பார்ட்டாவுக்கும் ஆதென்ஸுக்கும் இடையே நடைபெறலாயின. அத்தீனியப் பேரரசில் விரிசல் கண்டது. அதில் அடங்கியிருந்த உறுப்பு நாடுகள் பல ஆதென்ஸுக்கு எதிராகத் துணிந்து கலகத்திலிறங்கின. இத்தகைய உள்நாட்டுக் குழப்பங்களின் விளைவாகப் பாரசீகர்கள் மீண்டும் கிரேக்க விவகாரங்களில் தலையிடத் துணிவு பெற்றனர். சிசிலியில் சிராக்யூஸின் பெருமை வளர்ந்தது. அங்கிருந்த நகரங்கள் பலவும் சிராக்யூஸின் தலைமையை ஏற்றுக்கொண்டன. கார்த்தஜீனியர்களின் படையெடுப்புகளினின்றும் சிசிலியைப் பாதுகாக்கும் பொறுப்பைச் சிராக்யூஸ் ஏற்றுக்கொண்டது. சிராக்யூஸ், ஸ்பார்ட்டா ஆகிய நகரங்கள் எவ்வளவுக்கெவ்வளவு மேம்பாடடைந்தனவோ, அவ்வளவுக்கவ்வளவு ஆதென்ஸ் தாழ்வுற்றது. அதன் பேரரசு தனது அழிவுப் பாதையில் முதலடி எடுத்து வைத்தது, சிராக்யூஸின் படை எடுப்பின் காலத்திலிருந்தே எனலாம்.

(7) அத்தீனியப் பேரரசு வீழ்ச்சியின் இரண்டாம் கட்டம் (413-404 கி. மு.) டாகிலியப் போர்

சிராக்யூஸில் ஆதென்ஸ் அடைந்த தோல்வியின் விளைவாக அத்தீனியப் பேரரசின் நேச நாடுகளில் சில, ஆதென்ஸுக்கு எதிராகத் தாம் கலகம் செய்வதற்குத் தயாராக இருப்பதாகவும், அதற்கு ஆதரவாக ஸ்பார்ட்டாவின் கப்பற் படையானது ஆசியாமைனரின் கடற்கரையில் தோன்றினால் போதுமென்றும் அறிவித்தன. ஸ்பார்ட்டாவும் அவ் வேண்டு கோளை ஏற்றுக் கொண்டு அதற்கேற்றபடி ஒரு கடற்படையை உருவாக்குவதில் முனைந்தது. அதோடு அட்டிகாவிலிருந்த டாகிலியா கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டு ஆதென்ஸ் நகர அரசுக்குப் பல வகையிலும் தொந்திரவு கொடுத்து வந்தது. ஆதென்ஸின் தோல்வியைப் பற்றிக் கேள்வியுற்ற ஒரு சில பாரசீக ஆளுநர்களும் ஆசியாமைனரில் மீண்டும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட எண்ணினர். அதற்காக ஆதென்ஸின் பகைநாடான ஸ்பார்ட்டாவோடு கி. மு. 412-இல் அவர்கள் மைலிடஸ் (Miletus) என்னுமிடத்தில் ஒரு நட்பு உடன்படிக்கையைச் செய்து கொண்டார்கள். அதன்படி ஆசியா மைனரிலிருந்த கிரேக்கக் குடியேற்றங்கள் மீது பாரசீகர்கள் ஆதிக்கத்தை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ள ஸ்பார்ட்டா அனுமதிக்க வேண்டும். அதற்கு ஈடாக ஸ்பார்ட்டாவினுடைய ஆசியா மைனர்ப்படையெடுப்புக்கு ஆகும் செலவைப் பாரசீகம் ஏற்றுக் கொள்ளவேண்டும். இங்ஙனம் ஆசியக் கிரேக்கரின் சுதந்திரத்தைப் பாரசீகர்கட்கு விற்றுத் தம்முடைய ஆதிக்கத்தை வளர்த்துக் கொள்ளும் முயற்சியில் ஸ்பார்ட்டா இறங்கலாயிற்று.

(8) ஆல்கிபியாடிஸ் என்பாரின் ஆதிக்க வளர்ச்சி

சிராக்யூஸ் முற்றுகையின் இடையில் ஸ்பார்ட்டாவுக்கு ஓடிப்போன ஆல்கிபியாடிஸ் விரைவிலேயே ஸ்பார்ட்டர்களோடு சச்சரவிட்டுக் கொண்டு மீண்டும் ஆதென்ஸுக்குத் திரும்ப விழைந்தார். தம்மை மீண்டும் திருப்பி அழைத்துக் கொண்டால் ஆதென்ஸுக்கும், பாரசீகத்திற்கும் ஒரு நட்பு உடன்பாட்டைத் தாம் ஏற்படுத்தித் தருவதாக அவர் அறிவித்தார். கி. மு. 412-இல் அவர் பாரசீகத் தலைநகரான சார்டிஸுக்குச் சென்று அதன் ஆளுநரான டிஸ்ஸாஃபர்னஸ் (Tissapharnas) என்பவரோடு பேச்சு வார்த்தை நடத்தி ஆதென்ஸுக்கும் பாரசீகத்திற்கும் நட்புறவை ஏற்படுத்த முயன்றார். ஆனால் பாரசீகர்கள் ஏற்கெனவே ஆதென்ஸின் எதிரியான ஸ்பார்ட்டாவுடன் நட்பு உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு விட்டதால்,

ஆதென்ஸோடு நட்பு கொள்வதைப் பற்றி அவர்கள் அக்கறை யெடுத்துக் கொள்ளவில்லை. எனவே ஆல்கிபியாடிஸின் முயற்கள் தோல்வியில் முடிந்தன.

தன் தாய்நகருக்குத் திரும்பிவர விரும்பிய ஆல்கிபியாடிஸ் அங்குத் தீவிர ஜனநாயகவாதிகள் இருக்கும்வரை தம்மை அவர்கள் நகருக்குள் அனுமதிக்கமாட்டார்கள் என அறிந்து அங்குள்ள செல்வந்தர்களைத் தமக்குச் சாதகமாகத் தூண்டிவிட் டார். சிசிலியப் படையெடுப்பின் தோல்விக்கு ஜனநாயகவாதி களே காரணம் என்பதைச் செல்வந்தர்கள் சுட்டிக் காட்டி அரசியலமைப்பில் பெரியதோர் மாற்றம் செய்ய வேண்டுமெனக் கோரினர். கி. மு. 413-இல் ஐந்நூற்றுவர் சபைக்குப் பதிலாகப் பத்து அதிகாரிகள் அடங்கிய புரோப்யூலி (Probuly) என்ற ஆட்சிக்குழுவானது அமைக்கப்பட்டது. அதற்கு உதவியாக முப்பதுபேர்கள் அடங்கிய குழு ஒன்று அரசியலமைப்பைச் சீர்திருத்தி அமைப்பதற்காக நிறுவப்பட்டது. பத்து புரோப்யூலிகளையும் உட்கொண்ட அக் குழுவானது புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்கியது. அதன்படி ஐந்நூற் றுவர் சபை கலைக்கப்பட்டது. அரசாங்க அதிகாரிகளுக்குச் சம்பளம் வழங்கப்படும் முறையும் ஒழிக்கப்பட்டது. நானூறு பேர்கள் அடங்கிய புதிய சபை ஒன்று தோற்றுவிக்கப்பட்ட பின் நாட்டை ஆள்கின்ற புதிய பொறுப்பு அதன் கைகளில் ஒப்படைக்கப் பட்டது. எக்லீஷியா என்னும் பொதுமக்கள்மன்றத்தில் பேச்சுரிமையும் வாக்குரிமையும் குறிப்பிட்ட 5,000 உறுப்பினர் கட்கு மட்டுமே வழங்கப்பட்டன. எக்லீஷியா மன்றத்தின் தலைவர், ஆர்க்கன்கள் என்ற நிர்வாக அதிகாரிகள், படைவீரர்கள் ஆகியோரைத் தவிர ஏனைய அரசாங்க அதிகாரிகள் அனை வருக்கும் ஊதியம் மறுக்கப்பட்டது. இந்தச் சீர்திருத்தங்கள் யாவும் எல்லாருக்கும் திருப்தியை அளிக்கவில்லை. நானூற்று வர் சபையில் பைஸாண்டர் (Peisander) என்பாரும், அவரைச் சார்ந்த ஒரு சிலரும் மட்டுமே உண்மையான அதிகாரமுள்ளவர் களாக விளங்கினர். நானூற்றுவர் சபையின் அனுமதியின் பேரிலேயே எக்லீஷியாமன்றம் கூட்டப்படலாம். என இவ்வரசி யலமைப்பு கூறியதால், புதிய எக்லீஷியாமன்றம் தன் பழைய பெருமையை இழந்தது. எனவே அதன் உறுப்பினர்கள் அதிருப்தியுற்றனர். ஆகவே புதிய அரசியலமைப்பு நான்கு மாதங்கட்கு மட்டுமே நடைமுறையிலிருந்தது. அதன் பின்னர் ஜனநாயகவாதிகள் மீண்டும் ஆதிக்கத்திற்கு வந்தனர். சாமோஸ் (Samos) தீவில் திராசிலஸ் (Thrasyllus), திராசி பியூலஸ் (Thrasybulus) ஆகியோரின் தலைமையில் ஜனநாயக

வாதிகள் ஒன்று கூடி ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்கினர். அதன்படி பழைய செல்வந்தர்களால் நியமிக்கப்பட்ட தளகர்த்தர்கள் பதவியினின்றும் நீக்கப்பட்டார்கள். அதற்குப் பதிலாக ஆல்கிபியாடிஸ் போன்ற புதிய தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆல்கிபியாடிஸ் மன்னிக்கப்பட்டார். அவர் ஆதென்ஸுக்குத் திரும்பி வர மக்கள்மன்றம் அனுமதியளித்தது. நானூற்றுவர் சபையும் இச் சீர்திருத்தத்தை வரவேற்றது. செல்வந்தர் கட்சியைச் சேர்ந்த தெராமீனஸ் (Theramenes) என்ற தலைவரும் புதிய அரசியலமைப்பை வரவேற்றார். அதன்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய தளகர்த்தர்களான ஆல்கிபியாடிஸ், திராசிபியூலஸ், தெராமீனஸ் ஆகியோரது தலைமையில் கி. மு. 410-இல் படை ஒன்று ஸ்பார்ட்டாவை நோக்கிச்சென்றது.மின்டாரஸ்(Mindarus)என்ற ஸ்பார்ட்டத் தளகர்த்தரைக் கிஸிகஸ் (Cyzicus) போர்க்களத்தில்அவர்கள்வென்றனர். அப் போர்க்களத்தில் கடலிலும் கரையிலும் ஒரே சமயத்தில் அத்தீனியர்கள் வெற்றி பெற்றார்கள். ஸ்பார்ட்டாவின் தரப்பில் 60 கப்பல்கள் அழிந்தன. மின்டாரஸ் எனும் தளகர்த்தர் போரில் மாண்டார். எனவே ஸ்பார்ட்டா சமாதானத்தை நாடியது. ஆனால் ஆதென்ஸ் அதை மறுத்தது. மேலும் போரைத் தொடர்ந்தது. கிளியோஃபான் (Cleophon) என்ற ஆவேசப் பேச்சாளரே ஸ்பார்ட்டாவுடன் சமாதானம் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்தியவர். இப் பெருவெற்றிக்குப் பின்னர் ஆல்கிபியாடிஸ் ஆதென்ஸுக்குத் திரும்பிவந்தார். அவருக்கு அமோகமான வரவேற்புக் காத்திருந்தது. அவர்மீது இருந்த வழக்குகள் யாவும் கைவிடப்பட்டன. ஸ்ட்ரேட்டகாஸ் பதவிக்கு அவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். போரை நடத்தும் முழுப் பொறுப்பும் அவரது கைகளில் தரப்பட்டது. ஆதென்ஸின் அரசியலமைப்பு மேலும் ஜனநாயகத் தன்மையுடையதாக மாற்றப்பட்டது. ஏழைகளுக்கு நிவாரணமளிக்கும் முறையும் ஆதென்ஸில் கொண்டுவரப்பட்டது. கிளியோஃபான் என்பவரே ஆதென்ஸில் முழுமையான ஜனநாயகம் ஏற்படக் காரணமாயிருந்தார்.

கி. மு. 409-இல் ஆல்கிபியாடிஸ், கால்கிடன் (Chalcedon)' பைசான்ஷியம் ஆகிய இரு நகரங்களையும் பாரசீகர்களிடமிருந்து மீட்டார். ஆனால் பைலாஸ் (Pylos), நிஸியா (Nisaea) ஆகிய நகரங்களை அவர் இழந்தார். அதன் பின்னரே (கி. மு. 407-இல்) அவர் ஆதென்ஸுக்கு வரவழைக்கப்பட்டுப் படைகளின் தனித்தலைவராக நியமிக்கப்பட்டார். ஆனால் இச் சமயத்தில் அத்தீனியர்கள் பெற்ற ஒரு சில தோல்விகளால் ஆல்கிபி

யாடிஸின் செல்வாக்குக் குறைந்தது. அவரது துணைத்தள கர்த்தர் ஒருவரால் நடத்தப்பெற்ற கப்பற்படை ஒன்று ஆசியா மைனரின் கடற்கரைக்கு அருகே நோஷியம் (Notium) என்னு மிடத்தில் ஸ்பார்ட்டாவின் தளகர்த்தரான லைஸாண்டர் என்ப வரால் தோற்கடிக்கப்பட்டது (கி. மு. 407). அப் போரில் ஆல்கிபியாடிஸ் நேரிடையாகப் பங்கெடுத்துக் கொள்ளாவிட் டாலும் அதில் ஏற்பட்ட தோல்விக்கு அவரே காரணமென எக்லீஷிய மன்றம் தீர்ப்பளித்து அவரைப் பதவியினின்றும் அகற்றியது. அவரது பதவியில் கோனன் (Conon) என்பார் நிய மிக்கப்பட்டார். ஆல்கிபியாடிஸ் ஹெல்லஸ்பாண்ட் பிரதேசத்திற் குச் சென்றுவிட்டார். கோனன் என்பாரின் தலைமையில் அமைந்த ஒரு கப்பற்படையை ஸ்பார்ட்டக் கப்பற்படை யொன்று சூழ்ந்துகொண்டு மிடிலினி (Mytylene) என்னுமிடத் தில் தோற்கடித்தது. அத்தீனியர்களிடம் 40 கப்பல்களும் ஸ்பார்ட்டர்களிடம் 170 கப்பல்களும் இருந்ததாலேயே அத்தீனி யர்கள் தோற்றனர். எனவே அவர்கள் தங்கள் கோயில்களி லிருந்த பொன், வெள்ளி ஆபரணங்களை எல்லாம் எடுத்து உருக்கி விற்று அதனால் கிடைத்த பொருள்களைக் கொண்டு ஒரே மாதத்திற்குள் 110 கப்பல்களைக் கட்டினர். மேலும் 40 கப்பல் களை அதன் கூட்டாளிகள் கொடுத்து உதவினர். அதன் பின்னர் அத்தீனியக் கப்பற்படையானது, லெஸ்பாஸுக்குத் தெற்கே அமைந்திருந்த ஆர்ஜினுஸி (Arginusae) எனும் தீவுக் கூட்டத்தினருகில் ஸ்பார்ட்டக் கப்பற்படையை எதிர்த்து ஒரு பெரு வெற்றியைப் பெற்றது (கி. மு. 406). ஸ்பார்ட்டர்களின் கப்பல்களில் எழுபதை அத்தீனியர்கள் கைப்பற்றினர்கள். ஸ்பார்ட்டத் தளகர்த்தரான காலிக்கிராடிடாஸ் (Callicradides) என்பவர் இப் போரில் மாண்டார். அத்தீனியக் கப்பற்படையில் 25 கப்பல்கள் உடைந்தன. அவைகளிலிருந்த அத்தீனிய வீரர்கள் யாவரும் இறந்தனர். போர்த்தலைவர்களின் கவலை யீனத்தினாலேயே அவர்கள் காப்பாற்றப்படவில்லை எனக் கருதிய அத்தீனிய மக்கள்மன்றம் 6 தளகர்த்தர்களைச் சிரச்சேதம் செய்யுமாறு ஆணையிட்டது. அவர்களுள் திராசிலஸ் என்பாரும் பெரிக்ளீஸ் என்பாரும் (பெரிக்ளீஸுக்கும் ஆஸ்பாஸியாவுக் கும் பிறந்தவர்) முக்கியமானவர்கள் ஆவார்கள். இத் தோல்வி யின் பின் ஸ்பார்ட்டா மீண்டும் சமாதானம் கோரியது. ஆனால் குடிபோதையுடன் மன்றத்துக்கு வந்த கிளியோஃபான் என்ற ஆவேசப் பேச்சாளரின் தூண்டுதலின் காரணமாக ஆதென்ஸ் அச் சமாதானக் கோரிக்கையை நிராகரித்தது. ஸ்பார்ட்டாவோடு கௌரவமான முறையில் சமாதானம் செய்துகொள்ளக் கிடைத்த ஒரு பொன்னான சந்தர்ப்பத்தை ஆதென்ஸ் இழந்தது.

ஸ்பார்ட்டக் கப்பற்படையின் தளகர்த்தரான லூஸாண்டர் (Lysander), ஹெல்லஸ்பாண்ட் பிரதேசத்தையடைந்து லம்பாஸ்கஸ் (Lampascus) என்னும் நகரத்தைக் கைப்பற்றினார். அவரைப் பின் தொடர்ந்து கோனன் என்பாரது தலைமையில் 180 அத்தீனியக் கப்பல்கள் சென்றன. இக் கப்பல்கள் யாவும் செஸ்டாஸ் துறைமுகத்திற்கு அருகே ஈகாஸ்பாடமி (Aegos potami) எனுமிடத்தில் கடற்கரை ஓரத்தில் தங்கியிருந்தன. அதற்கு எதிர்புறத்தில் ஸ்பார்ட்டர்களின் கடற்படையானது லப்பாஸ்கஸ் எனும் துறைமுகத்தில் அணிவகுத்து நின்றது. ஆதென்ஸ் கப்பற்படையானது நீரிணைப்பைக் கடந்து, ஸ்பார்ட்டக் கப்பற்படையைத் துறைமுகத்துக்கு வெளியே ஈர்த்துப் போரிட முயன்றது. ஆனால் ஸ்பாட்டக் கப்பற் படையோ வெனின் துறைமுகத்தை விட்டு வெளியேவர மறுத் தது. நான்கு நாட்கள்வரை ஒவ்வொருநாளும் அத்தீனியக் கப்பற்படையானது இவ்விதம் முயன்றது; அம் முயற்சியில் தோல்வியடைந்து ஒவ்வொரு நாளும் தன் இருப்பிடத்திற்கே திரும்பியது. அங்ஙனம் திரும்பியவுடன் அத்தீனிய வீரர்கள் அனைவரும் கப்பல்களை விட்டுவிட்டு உணவருந்துவதற்காகக் கரைக்குப் போய்விடுவதை ஸ்பார்ட்டத் தளகர்த்தரான லூஸாண்டர் கவனித்துக்கொண்டேயிருந்தார். ஐந்தாம் நாள் கிரேக்கக் கப்பற்படை தனது இருப்பிடத்திற்குத் திரும்பிய வுடனே வீரர்கள் உணவருந்தச் சென்ற வேளை பார்த்து லூஸாண்டர் தம் கப்பல்களுடன் புறப்பட்டுச் சென்று வெகு விரைவினில் நீரிணைப்பைக் கடந்து அத்தீனியக் கப்பற்படையின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டு திரும்பினர். கோனன் என்ற தளகர்த்தர் மட்டும் ஒருசில கப்பல்களுடன் சைப்ரஸ் தீவுக்குத் தப்பி ஓடிவிட்டார். இங்ஙனம் போர் செய்யாமலே ஆதென்ஸ் தன் கப்பற்படையை இழந்தது. புதிய கப்பற் படையை உருவாக்க அதனிடம் போதிய பொருள் வசதியில்லை. ஸ்பாட்டத் தளகர்த்தர், தாம் பெற்ற எதிர்பாராத வெற்றியால் உந்தப்பட்டு ஆதென்ஸ் நகரையே கைப்பற்றத் திட்டமிட்டார். அதன்படி ஆதென்ஸ் நகரமும், பைரியஸ் துறைமுகமும் ஸ்பார்ட்டக் கப்பல்களால் முற்றுகையிடப்பட்டன. ஸ்பார்ட் டாவின் மன்னர்களான ஏஜிஸ் (Agis) என்பாரும், பாசேனியஸ் (Pausanius) என்பாரும் ஆதென்ஸை நிலத்தின் வழியாகச் சென்று முற்றுகையிட்டனர். இங்ஙனம் நிலத்திலும் நீரிலும் ஒரே சமயத்தில் முற்றுகையிடப்பட்ட காரணத்தால் ஆதென்ஸ் வீரர்கள் மனமுறிந்தனர். ஆதென்ஸ் நகருக்குள் உணவுப் பொருள்கள் செல்லாதவாறு எதிரிக் கப்பல்கள் தடைசெய்தன. பஞ்சமும் பட்டினியும் ஆதென்ஸில் தாண்டவமாடின. ஒருசில

மாதங்கள் எதிர்த்துப் பார்த்த பின்னர் அத்தீனியர்கள் பணிந்தனர். இங்ஙனம் பணிந்த அத்தீனியர்கள் அனைவரையும் கொன்று தீர்த்துவிடவேண்டுமெனக் கொரிந்தியர்கள் போன்றவர்கள் கூறினர்கள். ஆனால் ஸ்பார்ட்டா அதற்கு ஒப்பவில்லை. ஆதென்ஸுடன் சமாதானம் செய்துகொள்ள அது முன்வந்தது. கி. மு. 404-இல் இரு நாடுகளும் ஒரு சமாதான உடன்படிக்கையைச் செய்துகொண்டன.

அதன்படி ஆதென்ஸ், பைரியஸ் நகர்களின் மதிற்சுவர்களையெல்லாம் இடித்துத் தள்ளிவிடவேண்டும்; சலாமிஸ் என்ற தீவைத் தவிர ஏனைய அக்கரை நாடுகள் எல்லாவற்றையும் ஆதென்ஸ் ஸ்பார்ட்டாவுக்குக் கொடுத்துவிடவேண்டும். 12 கப்பல்களைத் தவிர வேறு கப்பற்படை எதையும் அது வைத்துக் கொள்ளக்கூடாது. ஸ்பார்ட்டாவின் தலைமையை அது ஏற்றுக் கொண்டு அரசியல் விவகாரங்களில் அதன் கூட்டாளியாகநின்று பாடுபடவேண்டும். இவையே அந்த உடன்படிக்கை நிபந்தனைகள். வேறு வழியின்றி ஆதென்ஸ் இந் நிபந்தனைகளை ஒப்புக்கொண்டது. லைசாண்டரின் மேற்பார்வையில் பைரியஸ் நகரத்து மதிற்சுவர்கள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. அத்தீனியப் பேரரசு மாய்ந்தது. ஸ்பார்ட்டாவின் தலைமை ஓங்கியது.

(9) அத்தீனியப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணங்கள்

அத்தீனியப் பேரரசின் வீழ்ச்சிக்கு முக்கியமான காரணம், அப் பேரரசுக்குள்ளேயே ஏற்பட்டுவிட்ட உட்பகையாகும். நாம் முன்னரே கண்டபடி பேரரசு, ஆதிக்கம் போன்ற கொள்கைகள் கிரேக்கரின் இயல்பான சுயேச்சை மனப்பான்மைக்கு விரோதமானவை. தொன்றுதொட்டுக் கிரேக்கர்கள் கடைப்பிடித்து வந்த அரசியல் கொள்கைகளுக்கும் அது முரணானது. எனவே பேரரசில் நல்ல நிலையிலிருந்த உறுப்புநாடுகள் கூட ஆதென்ஸை உள்ளூற வெறுத்துவந்தன. அதற்கேற்றாற்போல் ஆதென்ஸும் தனது பேரரசிற்குட்பட்ட நாடுகளை நன்கு நடத்தவில்லை. பல சமயங்களில் அது சுயநலத்தோடும், குறுகிய நோக்கத்தோடும் நடந்துவந்தது. அந் நாடுகளுக்குக் கொஞ்சம்கூடச் சம்பந்தம் இல்லாத போர்களில் அவற்றை ஈடுபடுத்தி அவைகளினின்றும் பலவந்தமாகக் கப்பப் பணத்தையும் அது கறந்தது. ஒரு சில சமயங்களில் பேரரசு நாடுகளிடம் கொடூரமாகவும் நடந்து வந்தது. சான்றாக மேலாஸ் (Melos) என்ற தீவு மக்களை ஆதென்ஸ் கொடுமைப் படுத்தியதைக்

கூறலாம். தங்களிடமிருந்து வசூலித்த பணத்தை வைத்துக் கொண்டு ஆதென்ஸை அழகுபடுத்துவதிலும், இன்னும் வேறு பல வகைகளிலும் வீணுக்குவதாகப் பல பேரரசு நாடுகள் கருதின. எனவே அவைகள் பேரரசினின்றும் பிரிந்து சுதந்திர மாக வாழவேண்டும் என்று விரும்பின. அவற்றின் சுதந்திர தாகத்தைத் தீர்த்து வைப்பதாக ஸ்பார்ட்டா உறுதி கூறியதால் அதனோடு சேர்ந்துகொண்டு ஆதென்ஸை எதிர்க்க அவை துணிந்தன. இங்ஙனம் அத்தீனியப் பேரரசில் தோன்றிய கலகங்கள் அதன் சிதைவுக்கு முக்கிய காரணமாய் அமைந்தன. அத்தீனியர்கள் வலிமையுள்ள கப்பற்படையைக் கொண்டிருந் தார்களே ஒழிய அவர்களிடையே டெமாஸ்தனிஸ் போன்ற ஓரிருவர்களைத் தவிர வேறு நல்ல திறமைமிக்க தரைப்படைத் தளகர்த்தர்களில்லை. பெரிக்ளீஸ் என்ற தலைவரின் மறைவுக்குப் பின் அவருடைய இடத்தை நிரப்புவதற்குத் தகுதியான வேறொரு பெருந் தலைவர் தோன்றவேயில்லை. மிக இன்றி யமையாத நேரத்தில் பெரிக்ளீஸ் மரணமடைந்தது, அத்தீனியப் பேரரசின் அழிவுக்கு ஒரு முக்கிய காரணமாய் அமைந்தது. ஆனால் அதே சமயத்தில் ஸ்பார்ட்டர்களிடையே பிராசிடாஸ், லைசாண்டர் போன்ற அருமையான தளகர்த்தர்கள் தோன்றி னார்கள். அவர்கள் வீரத்தோடு தந்திரமும் ஒருங்கே கொண்ட வர்களாக இருந்தார்கள்.

ஸ்பார்ட்ட வீரர்கள் டாகிலியா கோட்டையைப் பிடித்துக் கொண்டதன் விளைவாக ஆதென்ஸின் விவசாயம் நசிந்தது. அதே சமயம் வெளியிலிருந்து உணவுப் பொருள்களும் ஆதென் ஸுக்குள் வரமுடியவில்லை. பஞ்சமும் பட்டினியும் இறுதியில் ஆதென்ஸைப்பணியவைத்தன. இதோடுபிளேக் என்றகொள்ளை நோயும் சேர்ந்துகொண்டது. சிசிலியப் படையெடுப்புக்கு முன்னர் ஏற்பட்ட பிளேக் நோயினால் ஏராளமானபேர் செத்து மடிந்தனர். அட்டிகா மீது ஸ்பார்ட்டர்கள் படையெடுத்தபோது ஆதென்ஸில் வந்து குவிந்த மக்கட் கூட்டத்தால் விளைந்த பிளேக் நோயினால் பல்லாயிரம்பேர் மாண்டனர். அத்தீனிய மக்களுடைய மனப்பான்மையையே மாற்றுகின்ற அளவுக்கும், தன்னம்பிக்கையையே அறவே மாய்க்கும் அளவுக்கும் இக் கடுங் கொள்ளை நோய் கொடுமை செய்தது. மற்றும் பெலப்பொனீஷியர் களோடு நீண்டதொரு போராட்டம் ஏற்பட நேர்ந்ததால் ஆதென்ஸின் பொருளாதாரம் வறண்டது. சிசிலியப் படை யெடுப்பு அவ் வறட்சியை அதிகரிக்கச் செய்தது.

அத்தீனியர்களின் சிசிலியப் படையெடுப்பு அவர்கள் செய்த மாபெரும் தவறுகளில் ஒன்றாகும். அவர்கள் வழக்கமாய்க்

கடைப்பிடித்துவந்த கொள்கைக்கு அது முரணானது. முக்கிய மாகப் பெரிக்ளீஸ் என்பார் அத்தீனியர்கட்கு அறிவுறுத்திய கொள்கைக்கு அது விரோதமானதாகும். வலுத்தாக்கலில் இறங்காமல் வெறுந் தற்காப்புப் போரோடு நிறுத்திக்கொள்ள வேண்டுமென்பது அவரது கொள்கையாகும். ஆனால் அதை மறந்து அத்தீனியர்கள் சிராக்யூஸ் முற்றுகையை ஆரம்பித்து, அகலக் கால்வைத்த குற்றத்திற்கு ஆளானார்கள். அதோடு அம் முற்றுகையை நடத்திய தளகர்த்தராகிய நிகியாஸ், மூடக் கொள்கை காரணமாகப் பல தவறுகளைச் செய்தார். அதனால் இறுதியில் அது தோல்வியில் முடிந்தது. அத்தீனியப் பேரரசின் பலத்தைப் பெரிதும் குறைத்தது.

ஆல்கிபியாடிஸ் போன்ற நாட்டுத் துரோகிகள் அத்தீனியப் பேரரசின் அழிவுக்குப் பலவகையிலும் உதவி செய்தார்கள் எனலாம். அவருடைய ஆலோசனையின் காரணமாகத்தான் ஸ்பார்ட்டா, டாகிலியக் கோட்டையைப் பிடித்து ஆதென்ஸை அவதிக்குள்ளாக்கியது. மற்றும் செல்வந்தர் கட்சியைச் சேர்ந்த பல தலைவர்கள் அத்தீனிய மக்களாட்சிக்கு விரோதமாகச் சதி செய்துகொண்டேயிருந்தார்கள். ஸ்பார்ட்டா அத்தகைய ஐந்தாம் படையினரை நன்கு பயன்படுத்திக்கொண்டது. ஆதென்ஸின் ஆட்சி முறையில் பெரிதும் பலம் பெற்று விளங்கிய எக்லீஷியா மன்றம் பல தவறுகளைச் செய்தது. ஆவேசப் பேச்சாளர்களின் வார்த்தைகளை அது ஆராயாமல் நம்பிப் பல நல்ல தலைவர்களைக் கொன்றது. சிராக்யூஸ் முற்றுகையின் இடையில் ஆல்கி பியாடிஸைத் திருப்பி அழைத்தது. அதன் விளைவாகவே அவர் ஸ்பார்ட்டாவுக்குத் தப்பியோடி ஆதென்ஸுக்கு விரோதமான சதித் திட்டங்களில் இறங்கலானார். போரை நடத்துவதற்கு எவ் வகையிலும் தகுதியற்றது என்பதையே எக்லீஷியாமன்றம் தனது செய்கைகளால் மெய்ப்பித்தது.

இறுதியாகப் பாரசீகர்களின் தலையீடு அத்தீனியப்பேரரசின் அழிவை விரைவாக்கியது. ஸ்பார்ட்டாவும் பாரசீகமும் ஒன்று சேர்ந்து, ஆதென்ஸை எதிர்த்ததாலேயே இறுதியில் பேரரசு வீழ்ந்தது. ஸ்பார்ட்டத் தளகர்த்தர் லைசாண்டரின் போர்த் திறமையும், இராஜ தந்திரமும், கைரஸ் என்பாரின் படை வலிமையும் சேர்ந்து அத்தீனியப் பேரரசை நிலைகுலையச் செய்தன.

(10) பெலப்பொனீஷியப் போரின் விளைவுகள்

பெலப்பொனீஷியப் போரின் விளைவாகப் பாரசீகர்களுக்குக் கிரேக்க விவகாரங்களில் தலையிடுவதற்கு ஒரு நல்ல வாய்ப்புக்

கிடைத்தது. ஆதென்ஸ், ஸ்பார்ட்டா ஆகிய இரு நகரங்களும் பாரசீகத்தின் உதவியை நாடின. பாரசீகர்கள் ஆதென்ஸுக்கு விரோதமாக ஸ்பார்ட்டாவுக்கு உதவி செய்தனர். லூஸாண்டர் ஸ்பார்ட்டத் தளகர்த்தருக்கும், கைரஸ் (Cyrus) என்ற பாரசீக இளவலுக்கும் நட்பு ஏற்பட்டது. இந்த நட்பின் விளைவாகப் பாரசீக விவகாரங்களில் தலையிடுவதற்குக் கிரேக்கருக்கும் ஒரு வாய்ப்புக் கிடைத்தது. பாரசீக இளவரசர்கள் தங்கட்குள் சண்டையிட்டுக்கொண்டு கிரேக்கரின் உதவியை நாடினர். அவர்களுக்கு உதவி செய்ய 10,000 வீரர் கொண்ட கிரேக்கப் படையொன்று பாரசீகத்திற்குப் புறப்பட்டுச் சென்றது.

பாரசீகம் தனக்கு அளித்த உதவிக்குக் கைம்மாறாக, ஆசியா மைனர் பகுதியிலிருந்த கிரேக்க நகரங்கள் மீது பாரசீகர்கள் தனியாதிக்கம் ஏற்படுத்திக்கொள்வதற்கு ஸ்பார்ட்டா அனுமதியளித்தது. ஆனால் போர் முடிந்த பின் கிரேக்க நகரங்கள் பாரசீகத்தை எதிர்த்துக் கலகம் செய்தன. அதோடு ஸ்பார்ட்டாவின் உதவியையும் அவை நாடின. அதனால் ஸ்பார்ட்டர்கள் பாரசீகத்தின் மீது படையெடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியது.

இப் போரின் விளைவாகக் கிரீஸில் அத்தீனியர்களின் தலைமையானது மாய்ந்து, ஸ்பார்ட்டர்களின் இறைமையானது தலையெடுக்க ஆரம்பித்தது. ஸ்பார்ட்டா, செல்வச் சிறுகுழு ஆட்சியை ஆதரித்த காரணத்தினால் கிரீஸ் எங்கும் அத்தகைய ஆட்சி முறை வளரலாயிற்று. எனினும் ஸ்பார்ட்டா விரைவிலேயே தன்னுடைய செல்வாக்கை மக்களிடையே இழந்தது. கிரேக்க மக்களுக்குத் தலைமை வகிக்கும் தகுதி தனக்கில்லை என்பதை அது வெகு விரைவிலேயே தனது அடாத கொடுங்கோன்மைச் செயல்களால் மெய்ப்பித்துவிட்டது.

இப் போரின் விளைவாக ஆதென்ஸில் பல முக்கிய அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. போரில் தோல்வியேற்பட்டதற்குக் காரணம் ஜனநாயகவாதிகளே என நினைத்த அத்தீனிய மக்கள் செல்வந்தர்கள் கட்சியை ஆதரிக்க ஆரம்பித்தனர். அதற்கு ஆதரவாக ஸ்பார்ட்டாவும் இருந்தது. லூஸாண்டர் என்ற தளகர்த்தரின் விருப்பப்படி ஆதென்ஸின் பொதுமக்கள்மன்றம் முப்பது பேர்களடங்கிய ஒரு குழுவை அமைத்துப் புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கித் தருமாறு அதற்குக் கட்டளையிட்டது. கிரிட்டியாஸ் (Critias), தெராமீனஸ் ஆகியோர் அதன் முக்கிய உறுப்பினர்களாயிருந்தனர். தெராமீனஸ் என்பார் செல்வச் சிறுகுழுஆட்சிக்கும்,

மக்களாட்சிக்கும் இடைப்பட்ட ஒரு ஜனநாயக அரசியலமைப்பை ஏற்படுத்தவேண்டுமென்று கோரினர். ஆனால் கிரிட்டியாஸ் என்பவரோ செல்வச்சிறு குழு ஆட்சியை ஏற்படுத்த வேண்டுமென விரும்பினர். இத்தகைய வேறுபாடுகளின் விளைவாகப் புதிய அரசியலமைப்பை வெளியிடுவதில் தாமதமேற்பட்டது. ஆதென்ஸை அம் முப்பதுபேரும் சேர்ந்துகொண்டு தம் பிரியம் போல் ஆட்சிபுரியலாயினர். ஆதென்ஸில் அப்பட்டமான கொடுங்கோன்மை நிலவலாயிற்று. ஆதென்ஸின் விரோதிகள் எனக் கூறி ஏராளமான ஜனநாயகவாதிகளைக் கிரிட்டியாஸ் கொன்றுகுவித்தார்; பின்னர் தமக்கு எதிரிகளாய் இருந்த செல்வந்தர் அனைவரையும் ஒழித்துக்கட்டுவதில் முனைந்தார். எனவே அவருக்கு நாற்புறமும் எதிர்ப்புகள் கிளம்பின. தெராமீனஸ் என்பார் அவரது அத்துமீறிய செயல்களை மக்கள்மன்றத்திலேயே வெளிப்படையாகக் கண்டித்தார். அதைக் கண்ட கிரிட்டியாஸின் கையாட்கள் அவரைச் சிறைசெய்து பின்னர் சிரச்சேதம் செய்தனர். இவற்றையெல்லாம் கண்ட வெளி நாட்டிலிருந்த கிரேக்க ஜனநாயகவாதிகள் மனம் நொந்தனர். தாய்நாட்டில் மீண்டும் ஜனநாயகத்தை ஏற்படுத்த அவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டனர். திரேசிபியூலஸ் என்பவரது தலைமையில் அவர்கள் ஒரு படையைத் திரட்டிக்கொண்டு பியோஷியாவிற்குச் சென்று அங்கிருந்து அட்டிகா மீது திடீரென்று படையெடுத்தனர். பைரியஸ் துறைமுகப் பட்டினத்தை அவர்கள் விரைவிலேயே கைப்பற்றிக்கொண்டனர். துறைமுகத்திற்கு அருகே இருந்த முனீச்சியா (Munychia) எனும் குன்றினருகே நடைபெற்ற கடுமையான போரில் செல்வந்தர் கட்சியினர் தோற்றனர். அவர்கள் தலைவரான கிரிட்டியாஸ் (Critias) என்பவர் போரில் மாண்டார் (கி. மு. 403). ஸ்பார்ட்டாவின் மன்னர்கள் செல்வந்தர் கட்சிக்கு உதவிசெய்ய மறுத்துவிடவே அவர்கள் அட்டிகாவை விட்டு ஓடிப்போயினர். பாசேனியஸ் என்ற ஸ்பார்ட்ட மன்னரின் ஆதரவின் கீழ் பெரிக்ளீஸ் காலத்திய பழைய ஜனநாயகம், மீண்டும் ஆதென்ஸில் கொண்டுவரப்பட்டது (கி. மு. 404-403).

(11) ஆல்கிபியாடிஸ் என்பாரின் வாழ்வும் சாதனையும் ஒரு மதிப்பீடு.

பெலப்பொனீஷியப் போரால் ஆதென்ஸ் நகர அரசு அலைக் கழிக்கப்பட்ட காலத்தே அதைக் காப்றுவதற்கு முன்வந்த ஒரு சில தளகர்த்தருள் ஆல்கிபியாடிஸ் என்பார் தலைசிறந்தவராவார்.

அவர் ஆல்கிமியோனிடி (Alcmaeonidae) என்ற ஒரு பெரும் செல்வமிக்க குடியில் பிறந்தவர். அவருடைய தந்தை கிளீனியாஸ் (Cleineas) என்ற கனவானுவார். அவருடைய தாயார் கிளாயஸ் தனீஸ் என்ற சீர்திருத்தவாதியின் பெயர்த்தியாகிய தெய்னோமாகி (Deinomache) என்பவராவார். பெரிக்ளீஸ் என்ற பெருந் தலைவருக்கும் அவர் ஒரு வகையில் உறவினராவார். பெரிக்ளீஸின் மூலமாகத்தான் அவர் அரசியலில் இறங்கினர். அதே சமயத்தில் பார்வைக்கு இனிய தோற்றத்தையுடையவராயிருந்தார். நலல செல்வக் குடியில் பிறந்ததனால் அவர் எப்போதும் ஆடம்பரமாகவும், அழகாகவும் இருந்துவந்தார். அவரது வயதிற் கொத்த வாலிபர்களுக்கு அவர் ஒரு தலைவராக விளங்கினர். இதனால் அவருடைய வாழ்க்கையில் கட்டுப்பாடென்பது மருந்துக்குமில்லாமலிருந்தது. அவரது கெட்ட நடத்தையையும் மதப்பற்றின்மையையும் கண்ட அத்தீனிய மக்கள் அனைவரும் அருவறுப்புற்றனர். சாக்ரடீஸ் என்ற பெரியார் அவரது நடத்தையைத் திருத்த எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. அகந்தையும் படாடோபமும் ஒழுக்கமின்மையும் அவரிடத்தே ஒருங்கே காணப்பட்டன. எனினும் சாக்ரடீஸ் அவரைப் பெரிதும் நேசித்தார். கி. மு. 432-இல் பாடிடியா (Potidaea) போர்க்களத்தில் அவர் ஆல்கிபியாடிஸின் உயிரைக் காப்பாற்றினர். அதேபோன்று கி. மு. 424-இல் நடைபெற்ற டீலியன் போர்க்களத்தில் சாக்ரடீஸின் உயிரை ஆல்கிபியாடிஸ் காப்பாற்றினர். வாழ்க்கை முறையிலும், ஒழுக்கத்திலும் இரு துருவங்களைப் போல் விளங்கிய இவர்களிடையே அளாதியான ஒரு நட்பு நிலவியது. ஆனால் வீரம், அறிவாற்றல் இவைகளில் இருவரிடமும் ஒப்புமை காணப்பட்டது. சாக்ரடீஸ் அரசியலைப் பற்றி விவாதிப்பதில் வல்லவர். எனவே அவருடைய நட்பின் வீலாவாக ஆல்கிபியாடிஸிற்கு அரசியல் விவாதங்களில் ஈடும் எடுப்பும் அற்ற முறையில் ஈடுபடுவதற்குரிய பயிற்சி கிடைத்தது. ஆனால் ஓர் அரசியல் வித்தகனுக்கு இருக்கவேண்டிய விடாமுயற்சியும் தன்னடக்கமும் சமயோசித புத்தியும் அவரிடமில்லை. திறமை மிக்க அரசியல்வாதியாக அவரிருந்தபோதிலும் ஒரு ராஜ தந்திரிக்கு இருக்கவேண்டிய உள்ளச் சமநிலை அவர்பாலில்லை. அதோடு எதிலும் ஒரு உறுதியான நம்பிக்கையும் அவரிடமில்லை. கொள்கையில் அழுத்தமில்லாத காரணத்தால்தான் பலவிதச் சிறந்த குணச்சிறப்பைப் பெற்றிருந்தும் அவர் அரசியல் துறையில் பெருந் தோல்வியையே காண நேர்ந்தது.

புகழேணியில் உச்சத்தையடைந்த ஆல்கிபியாடிஸ் ஆதென்ஸிற்காகப் பலபோர்களிலும் கலந்துகொள்ள விரும்பினர்.

அதன் விளைவாகவே அவர் டீலியன் போர்க்களத்தில் கி. மு. 424-இல் கலந்துகொண்டு தமது வீரமிக்க செயல்களின் மூலம் யாவருடைய நன்மதிப்பையும் பெற்றார். கி. மு. 422-இல் கிளியான் என்ற தலைவர் இறந்த பின் அவரே ஜனநாயகவாதிகளின் தலைவரானார். கி. மு. 420-இல் ஸ்ட்ராட்டகி என்ற நிர்வாக அதிகாரியாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அத்தீனியப் பொதுமக்கள்மன்றம் ஆர்க்காஸ் நகரத்தோடும் அதன் நேச நகரங்களோடும் ஒரு நட்புடன்பாட்டைச் செய்துகொண்டது, அவரது தூண்டுதலாலேயாகும். அவ்வுடன்பாட்டின் விளைவாகவே எப்பிடாஸிற்கு விரோதமாக ஓர் அத்தீனியக் கூட்டுப் படையெடுப்பு நிகழ்ந்தது. இதைக் கண்டு அஞ்சிய ஸ்பார்ட்டா ஆர்காஸிற்கு விரோதமாகப் படை ஒன்றை அனுப்ப நேர்ந்தது. பின்னர் நடைபெற்ற போரில் ஸ்பார்ட்டர்கள் வெற்றிபெற்றார்களெனினும் இறுதியில் அவர்களிடையே ஒரு தற்காலிக சமாதானம் ஏற்பட்டது. கடைசி நேரத்தில் ஆல்கிபியாடிஸ் ஆதென்ஸின் கூட்டுறவு நாடுகளைத் தூண்டிப் போரை மீண்டும் நடத்துமாறு செய்தார். ஆனால் இறுதியில் ஸ்பார்ட்டர்களே வெற்றி பெற்றனர். ஆர்க்காஸ் நகரில் மக்களாட்சிக்குப் பதிலாகச் செல்வந்தர் ஆட்சி ஏற்பட்டது. ஆர்க்காஸும் அதனுடைய கூட்டாளிகளான ஈலிஸ், மாண்டினியா நகரங்களும் ஸ்பார்ட்டாவுடன் சேர்ந்துகொண்டன. ஆதென்ஸில் இதனால் மாண்டினியப் போர்க்களத்தில் கலந்துகொண்டவர்கள்மீது வெறுப்பு ஏற்பட்டது. நிகியாஸை நகரை விட்டுத் துரத்த அங்கு முயற்சிகள் நடந்தன. நிகியாஸ் நாடு கடத்தப்பட்டார். அடுத்து, தமக்கும் அதே கதி நேரும் என்பதை உணர்ந்த ஆல்கிபியாடிஸ், நிகியாஸுடன் சேர்ந்துகொண்டு அவரது கொள்கைகளை ஆதரிக்கலானார். இவ்விரண்டுபேருடைய ஆதரவாளர்களும் ஒன்றுகச் சேர்ந்ததனால் நிகியாஸை நாடு கடத்தும் முயற்சி தோல்வியுற்றது. ஆனால் அங்ஙனம் அவரை நாடுகடத்துதற்காகத் தீர்மானம் கொணர்ந்த கைப்பர்போலஸ் என்பார், இறுதியில் நாட்டைவிட்டு அப்புறப்படுத்தப்பட்டார். இதன்பின் ஆல்கிபியாடிஸின் செல்வாக்கு மீண்டும் வளர்ந்தது. அவருடைய தூண்டுதலின் பேரிலேயே மேலாஸ் என்னும் தீவு கைப்பற்றப்பட்டு அத்தீனியப் பேரரசோடு சேர்க்கப்பட்டது.

சிராக்யூஸ் படையெடுப்பில் கலந்துகொண்ட மூன்று முக்கிய தலைவர்களில் ஆல்கிபியாடிஸும் ஒருவர். சிராக்யூஸின் போர்த் திட்டத்தை உருவாக்கியவர் அவரே. அவர் திட்டப்படி யாவும் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் திடீரென்று ஆதென்ஸ் அவரைத் திரும்பி வரும்படி அழைத்தது. இதன் விளைவாக அவர்

ஆதென்ஸை எங்ஙனம் காட்டிக்கொடுத்தார் என்பதையும் நாம் ஏற்கெனவே கண்டோம். ஸ்பார்ட்டாவில் அவர் மூன்றாண்டுகளே தங்கியிருந்தார். பின்னர் தாயகத்திற்குத் திரும்ப விழைந்தார். அதற்காக ஆதென்ஸிற்கும் பாரசீகர்களுக்கும் நட்புறவை ஏற்படுத்த முயன்று அவர் தோல்வியடைந்ததையும், அதன் பின்னர் அபைடாஸ், கிசிக்கஸ் ஆகிய போர்க்களங்களில் வெற்றிபெற்றதையும், கால்கிடன், பைசான்டைன் போன்ற ஆசியப் பகுதிகளைக் கைப்பற்றியதையும், நோஷியம் போர்க்களத்தில் அவரது துணைத்தலைவர் செய்த தவற்றின் காரணமாக அவர் தளபதிப் பதவியை இழந்ததையும் நாம் முன்னரே கண்டோம். பதவியிலிருந்து நீக்கப்பட்டதும் ஆல்கிபியாடிஸ் பாரசீகரின் அரண்மனைக்குச் செல்ல விரும்பினார். அவரது எதிரிகள் அவரது வீட்டைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டனர். அதன்பின் அவர் ஹெல்லஸ்பாண்டிலிருந்த மாளிகை ஒன்றிற்குச் சென்று அங்கே வதிந்துவந்தார். கோனான் என்ற கடல் தளகர்த்தர் தமது கப்பற்படையுடன் ஈகாஸ் பெடாமிக் கடற்கரையில் பாதுகாப்பெதுவுமின்றித் தங்கியிருந்ததை அவர் கண்டித்தார்; அபாயம் வரக்கூடும் என்பதைக் கூறி எச்சரித்தார். ஆனால் அவரது எச்சரிக்கையைக் கோனான் செவிமடுக்கவில்லை. அதன் விளைவால் அத்தீனியர்கள் எங்ஙனம் படுதோல்வியுற்றனர் என்பதை நாம் மேலே பார்த்தோம். இதன் பின் ஆதென்ஸைக் கண்ட 30 கொடுங்கோலர்கள் தங்களுடைய எதிரிகளில் ஒருவராக ஆல்கிபியாடிஸை அறிவித்ததால், அவர் பயந்து, ஃபிரிஜிய நாட்டு (Phrygea) ஆளுநர் (பாரசீகர்) அரசவைக்கு ஓடிவிட்டார். அதன் ஆளுநரான ப்ராஞபாஸஸ் (Phranaphauscs) எனும் பாரசீகர், லிசாண்டர் என்ற ஸ்பார்ட்டத் தளகர்த்தரின் நண்பர். எனவே லிசாண்டரின் விருப்பப்படி அவர் ஆல்கிபியாடிஸைக் கொன்றுவிட்டார்.

ஆல்கிபியாடிஸ் அறிவொளிமிக்கவர். எனினும் நாட்டுக்கு உண்மையிலேயே பயன்படாதவர். மக்களாட்சி என்பது, மக்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒருவகை முட்டாள்தனம் என்பது அவர்தம் கருத்து. ஆனால் அதை அவர் வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாமல் சமயத்துக்கேற்றபடி நடந்துவந்தார். தெமிஸ்டாக்ளீஸ் என்பாரை ஒத்து அவர் விளங்கினர் எனினும் அவரைப் போன்று ஒரு பெருங் குறிக்கோளுக்காக அவர் பாடுபடவில்லை. பெரிக்ளீஸ் இருந்த இடத்தைப் பிடித்துக்கொள்ள அவர் விரும்பினர் எனினும் ஆதென்ஸிற்கு விரோதமாகப் பல காரியங்களை அவர் வேண்டுமென்றே செய்து அதன் இழிவிற்கே வழிவகுத்துவிட்டார். கொள்கையில் உறுதியின்மையாலும்,


ஒழுக்கமின்மையாலும், நாட்டுப்பற்றின்மையாலும் அவர் தமது புகழுக்கு மாறுத இழுக்கைத் தேடிக்கொண்டார். குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டதைப் போல, பேரும் புகழும் பெறுதற்கென்றே அரசியலிலிறங்கிய ஆல்கிபியாடிஸ் அதற்கு மாறுகக் கெட்டவர், நாட்டுத் துரோகி என்ற பட்டத்துடன் தாய்நாட்டைவிட்டே துரத்தப்பட்டார் என்பது அறிந்து இரங்கற் பாலதொன்றேயாமென்க.

14. ஸ்பார்ட்டாவின் மேலாண்மை

1. பத்தாயிரம் வீரரின் படைச்செலவு

கிரேக்கர்களின் வீரத்துக்கும் வீரியத்திற்கும் உரைகல் எனவிளங்கும் வரலாற்று நிகழ்ச்சிகளுள் தலைசிறந்ததெனக் கருதப்படுவது "பத்தாயிரம் வீரரின் படைச்செலவு" எனும் நிகழ்ச்சியாகும். பாரசீக மன்னர்களிடையே ஏற்பட்ட வாரிசு ரிமைப் போரில் கலந்து கொள்வதற்காகப் பத்தாயிரம் கிரேக்க வீரர்கள், துணிவோடு புறப்பட்டு வழியின் பல்வேறு இக்கட்டு களையும் இடர்ப்பாடுகளையும் மேற்கொண்டு பாரசீகம் சென்று பல தீரச் செயல்களைப் புரிந்து தாயகத்திற்கு மீண்டும் திரும்பி வந்த செய்தியையே மேற்சொன்ன நிகழ்ச்சியானது குறிப்பிடு கின்றது. பெருமைப்படத்தக்க பெரிய வெற்றி எதையும் இப் போரில் கிரேக்கர்கள் பெறவில்லையாயினும், பின்னால் ஏற்படப்போகும் கிரேக்க வெற்றிகளுக்கு இது ஒரு முன்னோடி யாயும் வழிகாட்டியாயும் திகழ்ந்தது. அதனாற்றான் இதைக் கற்றோரும் மற்றோரும் போற்றிப் புகழ்கின்றனர்.

ஸெனோஃபான் (Xenophon) என்ற கிரேக்க வரலாற்று சிரியர், "முன்னேற்றம்" (Up-going) என்று பொருள்படுகின்ற அனபாஸிஸ்(Anabasis)என்ற நூலில்எழுதிவைத்துள்ள வரலாற் றுக் குறிப்புகளிலிருந்தே மேற்கண்ட நிகழ்ச்சியைப் பற்றிய விரி வான செய்திகளை நாம் அறிகின்றோம். அவ்வாசிரியர் பாரசீகப் போரில் பங்கெடுத்துக் கொண்டவர்களிலே ஒருவர். எனவே நேரில் கண்டதையும் கேட்டதையும் வைத்துக் கொண்டே அவர் தமது வரலாற்று நூலை எழுதியுள்ளார். ஆகையால் அவரது கூற்றுகள் பெரும்பாலும் நம்பத்தக்கனவேயாகும். அவரது வரலாற்று நூல், கிரேக்க வரலாற்றுக்கு இன்றியமை யாத மூலக் கருவூலங்களில் ஒன்று என்பதில் எத்துணையும் ஐயமில்லை.


புத்தாயிரம் ஸீரரின்
மலைச்சரிவு
கருங் கடல்
ஹெராக்ளியா
காவ்கிடன்
சார்டிஸ்
ஹெலஸ்பான்ட்
ஸைஸிகஸ்
ஆர்டாக்ஸெர்க்ஸிஸ்
ஆர்டாக்ஸெர்க்ஸிஸ்
ஆர்டாக்ஸெர்க்ஸி

போருக்குரிய காரணங்கள்

பாரசீக இளவல் கைரஸ் என்பாரது பேராசையே இப் போருக்கு மிக முக்கியமான காரணமாகும். பாரசீகப் பேரரசர் இரண்டாம் தரியஸ் கி. மு. 405-ஆம் ஆண்டில் இறந்தபின் அவரது மூத்த புதல்வராகிய ஆர்ட்டாஸெர்க்ஸஸ் (Artaxerxes) என்பார் பட்டமெய்தினர். அவரது இளைய புதல் வராகிய கைரஸ் ஆசியாமைனர்ப் பிரதேசத்தின் ஆளுநராக நிய மிக்கப்பட்டார். ஆனால் தமது தமயனைத் துரத்திவிட்டுத் தாமே பாரசீக அரியணையில் அமரவேண்டுமென்று கைரஸ் பேராவல் கொண்டிருந்தார். அவரது தாயாகிய பாரிசாடிஸ் (Parysatis) இளையவனான கைரஸையே அதிகமாக நேசித்தாள். எனவே கைரஸின் ஆவலுக்கு அவள் தூபம் போட்டு வந்தாள். ஆனால் ஆர்ட்டாஸெர்க்ஸஸுக்கு டிஸ்ஸாஃபெர்னஸ்(Tissaphernes)என்ற பெருந்தளகர்த்தருடைய ஆதரவு இருந்ததால் கைரஸ் தமது ஆவலை வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை. எனினும் அவர் மீது ஐயப்பாடு கொண்ட ஆர்ட்டாஸெர்க்ஸஸ் அவருடைய நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்கும்படி டிஸ்ஸாஃபெர்ன ஸுக்கு ஆணையிட்டார். இங்ஙனம் தம்மை ஐயப்படுகிறார்கள் என்று அறிந்த கைரஸ் உண்மையிலேயே தமது தமையனுக்கு எதிராகச் சதிசெய்ய ஆரம்பித்தார். இரகசியமாக அவர் படை யொன்றைத் திரட்டுவதில் முனைந்தார். வேலையின்றி அலைந்து கொண்டிருந்த 10,000 கிரேக்க வீரர்களைக் கிளியார்க்கஸ் (Clearchus) என்ற ஸ்பார்ட்டத் தளகர்த்தரின் கீழ் ஒரு படை யாக அவர் அமைத்தார். கிளியார்க்கஸ் என்பார் பைஸாந்திய நகரில் கொடுங்கோன்மை செலுத்தியதற்காக ஸ்பார்ட்ட அர சாங்கத்தால் நாடுகடத்தப்பட்டவர். எனினும் ஸ்பார்ட்டா வுக்குக் கைரஸ் நண்பராதலாலும், ஸ்பார்ட்டா அவருக்குப் பெரிதும் கடமைப்பட்டிருந்ததாலும் கிளியார்க்கஸைப் பயன் படுத்திக் கொள்வது பற்றி ஸ்பார்ட்டா ஒன்றும் கண்டுகொள்ள வில்லை. அதற்கு மாறாக மேலும் 700 ஈட்டிவீரர்களை அது கைரஸின் உதவிக்காக அனுப்பிவைத்தது. இங்ஙனம் கைரஸால் திரட்டப்பட்ட படையில் ஒரு லட்சம் கீழைநாட்டுப் போர்வீரர் களும், பதின்மூன்றாயிரம் கிரேக்கப் போர்வீரர்களும் இருந்தனர். அவர்களில் 10,600 வீரர்கள், ஹாப்லீட்டுகள் (Hoplites) எனப் படும் கனமான ஆயுதங்கள் தாங்கிய ஈட்டிவீரர்களாவர். போரின் நோக்கம் என்ன என்பது பற்றிக் கைரஸ், போர் வீரர்கள் யாருக்குமே சொல்லவில்லை. கிளியார்க்கஸ் என்ற ஸ்பார்ட்டத் தளபதி ஒருவரிடம் மட்டுமே அவர் தமது உண்மை யான நோக்கத்தைத் தெரிவித்திருந்தார். மற்ற அனைவருக்கும்

பிசிடியா (Pisidia) நாட்டு மலைச்சாதியினரை அடக்குவதற்காகவே படையெடுப்பு மேற்கொள்ளப்படுகிறது என்றே அவர் அறிவித்திருந்தார். கைரஸின் படையில் சேர்ந்தவர்கட்கெல்லாம் நல்ல ஊதியம் அளிக்கப்பட்டதால் பலரும் விரும்பி அதில் சேர்ந்தனர். அவர்களுள் ஸெனோஃபான் (Xenophon) என்ற அத்தீனியப் போர் வீரரும் ஒருவர். அதனாற்றான் அவர் தமது வரலாற்று நூலை அவ்வளவு தெளிவாகவும், இனிமையாகவும் எழுதியிருக்கின்றார். அவரது வரலாற்றைப் படிக்கும்போது நாமே நேரில் பல புதிய இடங்களைப் பார்ப்பது போலவும், படை நிகழ்ச்சிகளில் நேரில் கலந்து கொள்வது போலவும் உணர்கின்றோம்.

படைச் செலவு

கைரஸின் படைகள் கி. மு. 401-இல் சார்டிஸ் நகரத்தினின்று புறப்பட்டன. பிரிஜியன்கொலோஸி (Phrygian colossae) எனும் நகரை நோக்கி அவைகள் தென்கிழக்குத் திசையில் நடந்தன. கொலோஸியில், தெசாலியத் தளபதியான மேனேன் (Menon) என்பார் தம்முடைய வீரர்களுடன் கைரஸின் படைகளோடு சேர்ந்தார். அதன்பின் அப் படைகள் செலானி (Celaenae) எனும் நகரைச் சென்றடைந்தன. அங்குதான் கிளியார்க்கஸ் தமது படைகளுடன் வந்து கைரஸுடன் சேர்ந்தார். அதுவரை பிசிடியாவுக்குச் செல்வதாகக் கூறி வந்த கைரஸ், இப்போது அதற்கு எதிரான திசையில் படைகளை நடத்திச் செல்லலானார். வடக்கேயுள்ள பெல்தி (Paltae), காரமான், அகோரா (Caramon, Agora) ஆகிய இடங்களுக்குச் சென்று, பின்னர் கிழக்கே திரும்பிக் கேய்ஸ்ட்டர் பிளெயின் (Cayster plain), இப்ஸஸ் (Ipsus), திம்பிரியான் (Thymbrion) ஆகிய இடங்களை அடைந்தார். இங்ஙனம் கேய்ஸ்ட்டர் பிளெயினை அடைந்ததும் கிரேக்கர்கள் தங்களுடைய ஊதியங்களை வழங்கும்படிக் கைரஸைக் கேட்டார்கள். ஆனால் கைரஸிடம் அப்போது போதிய பொருள் வசதியில்லை. நல்ல வேளையாக சைலீஷியா (Cilicia) நாட்டு இராணியாகிய எபியாக்ஸா (Epyaxa) என்பார் தக்க சமயத்தில் வேண்டிய அளவு பொருள் கொடுத்து உதவினார். இங்ஙனம் கிரேக்கக் கூலிப்படையினரின் பண ஆசையைத் தீர்த்தபின் கைரஸ் ஐகோனியம் (Iconium) என்ற இடத்தை நோக்கி விரைந்தார். அதன்பின் அவர் தியானு (Tiyana) என்னும் நகரத்தை அடைந்தார். அந் நகர் அமைந்திருந்த லைக்கோனியா (Lyconia) நாட்டைக் கொள்ளையடிப்பதற்குக் கிரேக்கர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். சைலீஷியா

நாட்டு மன்னர் சையன்னிசிஸ் (Syennesis) என்பார் பாரசீகப் பேரரசிற்குட்பட்டவர். எனவே முறைப்படி அவர் கைரஸுக்கு உதவி செய்யக்கூடாதவர். ஆனால் வருங்காலத்தே பாரசீகப் பேரரசராக வரக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்த கைரஸையும் அவர் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. எனவே அவர் கைரஸோடு இரகசியமாகப் பேசி ஒரு திட்டத்தைத் தயாரித்தார். அதன்படிக் கைரஸின் படைகள் சைலீஷியாவைத் தாக்குவது போல் பாசாங்கு செய்யவேண்டும். அதே சமயம் அவைகளை எதிர்ப்பது போல் சைலீஷியப் படைகளும் நடிக்க வேண்டும். அதன்பின் சைலீஷியப் படைகள் தோல்வியை ஏற்றுக் கொள்வதுபோல் நடித்துக் கைரஸின் படைகளுக்குத் தங்களது நாட்டினூடே வழிவிட வேண்டும். இத் திட்டம் இருதரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. இதன்படி மேனேனின் தலைமையிலிருந்த படையானது ஏனைய படைகளினின்றும் பிரிந்து குறுக்கு வழியில் சைலீஷியாவை வந்தடைந்தது. மன்னர் சையன்னிசிஸ், சைலீஷிய நகரைக் காக்க விரைந்தார். நகருக்கு அழைத்துச் சென்ற கணவாயில் தமது படைகளை நிறுத்தி வைத்தார். முன்பே எச்சரிக்கையாக அனுப்பப்பட்ட மேனேனின் படைகள் கணவாயில் தெற்குப்புறமாக வந்து சையன்னிசிஸின் படைகளை வளைத்துக்கொண்டன. கைரஸின் படைகள் வடக்குப்புறப் சென்று அவற்றை வளைத்துக்கொண்டது. இங்ஙனம் முன்னும் பின்னும் வளைத்துக்கொள்ளப்பட்ட சையன்னிசிஸின் படைகள் கணவாயை விட்டகன்று வேறு பாதுகாப்பான இடத்திற்குச் சென்றுவிட்டன. இதன் பின் தடையேதுமின்றிக் கைரஸின் படைகள் கணவாயின் மூலம் முன்னேறிச் சென்று டார்சஸ் (Tarsus) என்னுமிடத்தை அடைந்தன. சைலீஷிய நாட்டு மன்னருடைய நகரும், அரண்மனையும் கொள்ளையடிக்கப்பட்டன. ஆனால் உண்மையில் அது நடிப்பேயாகும். அதன் மூலமாகச் சையன்னிசிஸ் கைரஸுக்குப் பொன்னும் பொருளும் படை உதவியும் மறைமுகமாகக் கொடுத்தார் என்பதே உண்மையாகும். டார்சஸ் நகரிலிருந்தபோது கிரேக்கர்கள் முணுமுணுக்க ஆரம்பித்தனர். தங்களைக் கைரஸ் ஏமாற்றி எங்கேயோ அழைத்துப் போவதாகக் குறைகூறி மேலும் முன்னேற முடியாதென அவர்கள் மறுத்து விட்டனர். கிளியார்க்கஸ் பெரிதும் வெகுண்டார். கலகக் காரர்களைக் கடுமையாகக் கண்டிக்க வேண்டுமென முதலில் நினைத்தார். ஆனால் அதிருப்தியானது பரவலாக எல்லாப் போர்வீரர்களிடமும் காணப்பட்டதால் அடக்குமுறையைக் கைவிட்டு நயமுறையை அவர் கைப்பற்றலானார். அழாத குறையாக அவர்களிடம் மன்றாடி, நடந்தது நடந்துவிட்டதென்றும்,

இனி நடக்கப் போவதை வெற்றியுடன் நடத்துவதே கிரேக்கர் கட்கு அழகென்றும் அவர் பேசி வீரர்களின் மனத்தை மாற் றினர். மேலும் அதிகமாக ஊதியம் வழங்குவதாயும் அவர் வாக்களித்தார். கைரஸும் அதை ஒப்புக் கொண்டார். அதன் பின் படைகள் கிழக்கு நோக்கிச் சென்று ஐஸஸ் (Issus) கடற் கரையை அடந்தன. அங்கே பாரசீகக் கப்பற்படையொன்று காத்திருந்தது. அதன் மூலம் ஸ்பார்ட்டா 700 ஹாப்லீட் வீரர்களை அனுப்பியிருந்தது. அவைகளோடு கூடப் பாரசீகப் படைகளிலிருந்து பிரிந்து ஓடிவந்துவிட்ட 400 கிரேக்க வீரர் களும் கைரஸின் படையில் சேர்ந்தனர். இதன்பின் ஸிரிய வாசல் (Syrian Gate) என்றழைக்கப்படும் கணவாயை அவரது படைகள் அடைந்தன. அதைக் காத்துவந்த அப்ரகோமாஸ் (Abraconas) என்பார் கோழைத்தனமாகக் கணவாயை விட்டு ஓடிப்போனார். எனவே கைரஸின் படைகள் எளிதில் அதைக் கடந்து மிரியாண்ட்ரஸ் (Myriandrus) எனும் நகரை அடைந்தன. அங்கிருந்து படைகள் உள்நாட்டுக்குள் புகுந்தன. கிரேக்கர்கள் கடலுக்கு வணக்கம் செலுத்திவிட்டுத் திரும்பினர். கடலை மீண்டும் என்று காண்போம் என்ற ஏக்கம் அவர்களிடையே குடிகொண்டிருந்தது. சிரியா மூலமாக நடந்து சென்று கைரஸின் படைகள் தாப்ஸாகஸ் (Thopsacus) நாட்டை அடைந்தன. அங்கே அவர்கள் யூப்ரடிஸ்நதியைக் கண்டார்கள். இங்குதான் கைரஸ் தம்முடைய உண்மையான நோக் கத்தை வெளியிட்டார். பாபிலோனியாமீது படையெடுப்பது தான் தம்முடைய உண்மையான குறிக்கோள் என்றும், பாரசீகப் பேரரசரை எதிர்ப்பதற்காகவேதான் படை திரட்டியுள்ள தாகவும் அவர் தெரிவித்தார். அதைக் கேட்ட கிரேக்கத் துருப் புகள் பலமாக முணுமுணுத்தன. யூப்ரடிஸ் நதியைக் கடக்க அவை மறுத்தன. அதன்பின் ஒவ்வொரு வீரனுக்கும் ஒரு சிறிய தொகையைப் போர் முடிவுக்குப் பின் பரிசாக வழங்கு வதாகக் கைரஸ் அறிவித்தார். அதன் இடப்புறக் கரையோரமாகவே அவைகள் சென்று அரேபியப் பாலைவனத்தை அடைந்தன. பாலைவனத்தில் 13 நாட்கள் நடந்தபின் அவர்கள் பைலி (Pylae) என்னும் நகரத்தை அடைந்தார்கள். பாபிலோனிய நாட்டின் கோடியில் அமைந்திருந்த அந் நகரைத் தாண்டி மேலும் முன்னேறிச் செல்லும் வழியில் எதிரேயுள்ள நாடுகளை யழித்துக் கொண்டு பாரசீகப் பேரரசரின் படை, முன்னேறிச் சென்று கொண்டிருப்பதைக் கண்டார்கள். குனக்ஸா (Cunaxa) என்ற கிராமத்தைக் கைரஸின் படைகள் கி. மு. 401-இல் சென்ற டைந்தபோது, அவற்றை எதிர்த்துப் பாரசீகப் பேரரசரின் படைகளும் அங்கு வந்து சேர்ந்தன.

குனக்ஸா போர்க்களம் கி. மு. 401

அரச பரம்பரையைச் சேர்ந்த பாரசீகச் சகோதரர்கள் இருவரும் இப் போர்க்களத்தில் நேருக்கு நேர் நின்று போர் புரிந்தார்கள். பாரசீகப் படையின் இடப்புற அணியை டிஸ்ஸா ஃபெர்னஸ் என்ற தளகர்த்தர் நடத்திவந்தார். அவருடைய படையில் குதிரைவீரரும், விற்போர்வல்லுநரும், எகிப்தியக் காலாட்படையினரும், சித்தியத் தேர்ப் படையினருமிருந்தனர். பேரரசர்படைகளின் மத்தியில் வலிமையுள்ள ஒரு மெய்க் காப்பாளர், குதிரைப் படை சூழ நின்று கொண்டிருந்தார். கைரஸின் படைகளில் இடப்புற அணியை அரியேயஸ் (Ariaeus) என்பார் தலைமை தாங்கி நடத்தினர். கைரஸ், சேனையின் மத்திய பாகத்திற்குத் தலைமை தாங்கினர். வலப்புறப் பகுதியில் யூப்ரடிஸ்நதியருகே கிரேக்கப் போர் வீரர்கள் நிறுத்திவைக்கப் பட்டிருந்தனர். கைரஸ் கீழை நாடுகளின் போர்முறைப் பண்புகளை நன்கு அறிந்தவர். போர்க்களத்தில் மன்னர் இறந்துவிட்டால் மேய்ப்பனற்ற ஆடுகள்போல் படைவீரர்கள் ஓடிவிடுவர் என்பது அவருக்குத் தெரியும். எனவே அவர் பேரரசர் இருந்த பகுதியில் முதலில் தாக்கி அவரைக் கொல்ல முயல வேண்டுமென ஒரு திட்டம் வகுத்தார். ஆனால் அத் திட்டத்தைக் கிளியார்க்கஸ் ஏற்றுக் கொள்ளவில்லை. கிரேக்கர் களுக்குப் பழக்கமான போர்முறையைப் பின்பற்ற வேண்டு மென்று அவர் வற்புறுத்தினர். எனவே கைரஸ் தமது திட்டத்தை வற்புறுத்தாமல் கிரேக்கரின் பிரியப்படியே போர் நடக்கட்டுமென்று விட்டுவிட்டார். பாரசீகர்களின் வலப்புறப் படை, கைரஸின் இடப்புறப் படையைத் தாக்கிற்று; அரியே யஸைப் பின்புறத்தினின்று தாக்க முனைந்தது. ஆனால் கிரேக்கர்கள், மிகக் கடுமையாக ஆர்ட்டாஸெர்க்ஸஸின் படைகளைத் தாக்கித் தோற்கடித்தனர். போரின் விளைவு பற்றி வரலாற்று ஆசிரியர்கள் பல்வேறு விதமாகக் கூறுகின்றனர். பியூரி (Bury) என்பார் 'கைரஸ் போர்க்களத்தில் தோற்றார்' என்று கூறுகின்றார். உட்ஹவுஸ் (Wood House) எனும் ஆசிரியரும் 'போர்க்களத்தில் கைரஸ் கொல்லப்பட்டார்' என்றே கூறுகின்றார். கேம்பிரிட்ஜ் பண்டைய வரலாறு, இவர்களின் கருத்தை ஏற்றுக்கொள்ள வில்லை. உண்மையில் கிரேக்கர்கள் வீரத்துடன் போர்புரிந்து கைரஸுக்கு வெற்றியைத் தேடித் தந்தனர் என்றே தெரிகிறது. வெற்றியைப் பெற்றுவிட்ட மமதையாலும், தம்முடைய சகோதர னைத் தம் கையாலேயே கொல்ல வேண்டுமென்ற ஆசையாலும், போர்க்களத்தினின்று பின்வாங்கி ஓடிக் கொண்டிருந்த ஆர்ட்டா ஸெர்க்ஸஸைக் கைரஸ் துரத்திக் கொண்டே வெகுதூரம்

சென்றார். முன்னெச்சரிக்கையின்றி ஒருசில வீரர்களுடன் மட்டுமே அவர் தமது சகோதரரைப் பின் தொடர்ந்தார். தமது விருப்பப்படியே ஆர்ட்டாஸெர்க்ஸஸின் உடம்பில் ஒரு காயத்தை அவர் உண்டுபண்ணினார். அச் சமயத்தே ஏற்பட்ட குழப்பத்தில் ஆர்ட்டாஸெர்க்ஸஸின் மெய்க்காப்பாளர் ஒருவர் கைரஸின் கண்களை ஈட்டியால் குத்திவிட்டார். கைரஸ் அக்கணமே கீழே விழுந்து மாண்டார். தலைவரை இழந்த கிரேக்கப் படைகள் உற்சாகமிழந்தன. ஆனால் பாரசீகப் பேரரசருக்கு அவை பணிய மறுத்துவிட்டன. எப்படியாகிலும் தாய்நாடு திரும்பிவிட வேண்டுமென்று கிரேக்க வீரர்கள் அனைவரும் விரும்பினர். ஆனால் அவர்கட்கு வழிகாட்டத் தக்க ஆட்களில்லை. வழியில் உயிர் வாழ்வதற்குப் போதிய உணவுப் பொருட்களுமில்லை. இச் சமயத்தில் டிஸ்ஸாஃபெர்னஸ் என்னும் பாரசீகத் தளகர்த்தர் அவர்கட்குக் குறுக்கு வழி ஒன்றைக் காட்டித் தருவதாக வாக்களித்தார். அவரது பேச்சைக் கிரேக்கரும் நம்பினர். அவரது கூற்றின்படியே கிரேக்க வீரர்கள் டைக்ரிஸ் நதியின் கீழ்ப்படுகையைக் கடந்து அதன் இடப்புறக் கரையோரமாகச் சென்று, நதியின் மேற்படுகையை அடைந்தார்கள். அவ்வமயம் கிரேக்கர்கட்கும், பாரசீகர்கட்கும் பூசல் ஏற்பட்டது. இப் பூசலைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்வதற்காகக் கிரேக்கத் தளபதிகளைத் தம்மிடம் அனுப்புமாறு டிஸ்ஸாஃபெர்னஸ் அறிவித்தார். அதன்படியே நான்கு பெரும் தளகர்த்தர்கள் அனுப்பப்பட்டனர். அவ்விதம் அனுப்பப்பட்டவர்களில் ஒருசிலரை டிஸ்ஸாஃபெர்னஸ் நயவஞ்சகமாகக் கொன்றார். எஞ்சியோரைச் சூசா நகரத்திற்கு அனுப்பி, அங்கே கொலை செய்யப்படும்படி ஏவினர். இதன் பின்னும் கிரேக்கர்கள் பாரசீகருக்குப் பணிய மறுத்தனர். தலைவர்கள் இல்லையெனினும் அவர்கள் மனம் தளரவில்லை. ஸெனோபன் என்ற சாதாரணப் படைவீரர் ஒருவர் அவர்களைத் தலைமை தாங்கி நடத்திச் செல்வதற்கு முன்வந்தார். தமது சொல்வன்மையினால் அவர் துவண்டுபோயிருந்த வீரர்கட்கு உற்சாகமூட்டினார். உடனே அவர்கள் அவரைத் தங்களது தளகர்த்தராகத் தேர்ந்தெடுத்தார்கள். அவரது வழியைப் பின்பற்றிக் கிரேக்க வீரர்கள் நாடு திரும்பலாயினர்.

கிரேக்கரின் பின்வாங்கல்

தோல்வியடைந்த கிரேக்க வீரர்கள் தங்கள் தாய்நாடு திரும்பிய வரலாறு உண்மையிலேயே வீரம் செறிந்ததோர் நிகழ்ச்சியாகும். கிரேக்கர்களுடைய கட்டுப்பாட்டிற்கும், ஒழுங்

கிற்கும் அஃதோர் மாபெரும் எடுத்துக்காட்டாக அமைந்தது. வழி தெரியாத ஆர்மீனிய மலைகளிடையில், கொடூரமான காட்டு மிராண்டிகள் வாழ்ந்த இடங்களூடேயும் அவர்கள் பயமின்றிச் சென்றதானது வியந்து பாராட்டுதற்குரியது. குளிராலும் பட்டினியாலும் வாடிய அவ் வீரர்கள் மனந்தளராது முன்னேறிச் சென்றனர். பல இடையூறுகளைக் கடந்து அவர்கள் திராபிசஸ் (Trapezus) மலையை அடைந்தார்கள். மலைமீது ஏறிய ஒருசில வீரர்கள் திடீரென்று ஒரே ஆரவாரம் செய்தனர். வானில் இடியிடித்தாற் போன்று அவர்களிடமிருந்து பேரரவம் ஒன்று பிறந்தது. மலையினடிவாரத்தேயிருந்த ஸெனோஃபன், தம்முடைய வீரர்களுக்கு எதிரிகளால் ஏதோ ஆபத்து வந்துவிட்டதாக அஞ்சி மலையுச்சிக்கு ஓடினார். அங்கு அவர் கண்ட காட்சி அவரது உள்ளத்தை உருக்கியது. "கண்டோம் கடலை" என்று அனைவரும் உரக்கக் கத்தினார்கள். ஆம்! உண்மையில் அவர்களுக்கு முன்னர் கருங்கடல் விரிந்து கிடந்தது. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற்போல் திசை தெரியாமல் சென்று கொண்டிருந்த கிரேக்கர்களுக்கு இக் காட்சியானது புதிய தெம்பையும் ஊக்கத்தையும் தந்தது. திராபிஸஸ் நகரிலிருந்து கடலிலும் தரையிலுமாகப் பலவித இன்னல்களை அனுபவித்த பின் சார்லிஸ்டென் நகரத்தை அவ் வீரர்கள் அடைந்தனர். அப்போது படையில் 6,000 பேர்களே எஞ்சியிருந்தனர். தாய்நாட்டையடைந்ததும் உணர்ச்சியரல் உந்தப்பட்டு ஒவ்வொருவரும் அவரவர்களின் சொந்த நகரை நோக்கி ஓடவில்லை. ஏதாவது ஓரளவு சம்பாதித்துக் கொண்டு அதன் பின்னரே வீட்டுக்குப் போக அனைவரும் விரும்பினர்கள். அதற்காக அவர்களது சேவையை வேண்டிய ஸ்பார்ட்டாவின் படையில் சேர்ந்து பாரசீகத்திற்கு விரோதமாகப் போர் புரிந்தார்கள். அதனால் பெற்ற பொருளை எடுத்துக்கொண்ட பின்பே தத்தம் மனைவி மக்களுக்காக அவர்கள் வீடு திரும்பினர்கள். அப்படித் திரும்பியவர்களில் ஒருவர்தான் ஸெனோஃபன். ஆனால் எதிரிநாடான ஸ்பார்ட்டாவின் படையில் சேர்ந்து பணியாற்றிய அவரை ஆதென்ஸ் ஏற்க மறுத்து, நாடு கடத்தியது. எனவே அவர் ஈலிஸ் (Elis) நகரத்தில் ஸ்பார்ட்டாவில் அழிக்கப்பட்ட ஒரு பண்ணையில் சென்று குடியேறினர். அங்கு அவருக்கு நல்ல ஓய்வு கிடைத்தது. ஓய்வு நேரத்தில் தம்முடைய அனுபவங்களை அவர் வரலாறாக வரைந்தார். கிரேக்கரைப் பற்றியே யன்றிப் பாரசீகரைப் பற்றியும் அவர் மெச்சத்தக்க முறையில் வருணித்துள்ளார். அதற்குக் காரணம் பாரசீகர்களைப் பற்றி லெடீசியாஸ் (Letesias) என்ற கிரேக்கர் எழுதிய நூலைப்படிக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்ததாலேயாம்.

லெடீசியாஸ், ஆர்ட்டாஸெர்க்ஸஸின் அரண்மனை மருத்துவர்; அவருடைய மார்பில் கைரஸ் ஏற்படுத்திய புண்ணை ஆற்றியவர். அவர் எழுதிய நூல் மறைந்துவிட்டது. ஆனால் அதைப் படித்துத் தம்முடைய அனுபவங்களையும் சேர்த்து ஸெனோஃபன் என்பார் எழுதிய நூல் இன்றும் பொன்னுப் புகழுடன் நின்று நிலவுகிறது. ஆதென்ஸ் அவரது அந்திக் காலத்தே அவர் மீது சுமத்திய குற்றங்களை மன்னித்துத் தண்டனையை ரத்து செய்தது. ஆனால் அவர் கொரிந்து (Corinth) நகருக்குச் சென்று அங்கேயே தம் இறுதி நாட்களைக் கழித்தார். கி. மு. 354-இல் அவர் மாண்டார். அவரது அனபாசிஸ் என்ற வரலாற்று நூலானது 10,000 கிரேக்க வீரர்களின் படைச் செலவை மட்டும் வருணிப்பதொன்றன்று. கைரஸ் என்ற பாரசீக வீரரைப் பற்றியும், அஃது விதந்து ஓதுகிறது. தூசிடைடிஸ் என்பார் எழுதிய கிரேக்க வரலாற்றின் தொடர்ச்சியை அது கூறுகிறது. சாக்ரடீஸ் என்பார் மீது சுமத்தப்பட்ட பழிகள் யாவும் தவறு என்று வாதிக்கின்ற நூல் அது ஒன்றே யாம். எனவே சாக்ரடீஸ் பற்றிய சரியான மதிப்பீட்டை அறிதற்கும் இந் நூல் பெரிதும் துணைபுரியா நிற்கிறது.

விளைவுகள்

பத்தாயிரம் கிரேக்க வீரர்களின் துணிகரமான இப் போர்ப் பயணமானது, கிரேக்கர்களின் கட்டுப்பாடு மிகுந்த படையானது எத்தகைய வியக்கத்தக்க வினைகளைச் செய்யக்கூடுமென்பதைத் தெள்ளிதின் எடுத்துக்காட்டிவிட்டது. குனக்ஸாவிலும் லாரிஸாவிலும் இரண்டுமுறை தங்கள் தளபதிகளை அவர்களிழந் தார்கள். இருப்பினும் அவர்கள் கலைந்துபோகாமல் ஒன்றுக நின்று மிகுந்த கட்டுப்பாட்டுடன் நடந்துகொண்ட முறை இன்றும் வியக்கதக்கதொன்றுகும். ஒரு சிறிய நகரம் போல் அவர்கள் இருந்து தங்களைத்தாங்களே ஆண்டுகொண்டார்கள்; இன்னல்களைப் பொறுத்துக்கொண்டார்கள்; இறுதியில் நினைத்த காரியத்தில் வெற்றியும் பெற்றார்கள்.

ஸெர்க்ஸஸ் என்ற மன்னரின் படையெடுப்புக்கு இஃதோர் நல்ல பதிலடியாக அமைந்தது. ஸெர்க்ஸஸ் எங்ஙனம் வலிய வந்து கிரேக்க மக்களின்மீது படையெடுத்தாரோ அதேபோல இச் சமயம் கிரேக்கர்களும் வலியச் சென்று பாரசீகத்திற்கு எதிராகப் போரிட்டார்கள். அவர்களுடைய துணிவுமிக்க செய்கையினால் பாரசீகப் பேரரசின் பலவீனமானது நன்கு வெளிப்படுத்தப்பட்டது. இதற்கு முன்பெல்லாம் கிரேக்கர்கள்

பேரரசின் பரப்பைக் கண்டு பயந்தனர், ஆனால் கட்டுப்பாட்டோடு கூடிய ஒருசில கிரேக்க வீரர்கள் ஒன்றுசேர்ந்தால் பாரசீகப் பெரும்படையைக்கூடத் தோற்கடித்துவிடலாமென்பதை அவர்கள் நன்கு கண்டுகொண்டனர். பாலங்க்ஸ் (Phalanx) என்ற அவர்களது அணிவகுப்புப் படையானது, பயிற்சியற்ற பாரசீகப் படைகளைவிடப் பன்மடங்கு சிறந்ததென்பதை அவர்கள் தம் கண்களாலேயே கண்டுகொண்டனர். இங்ஙனம் பாரசீகரின் பலவீனத்தைக் கண்டு அறிந்துகொண்டதாலேயே அஜிஸிலாஸ் (Agesilaus) என்ற ஸ்பார்ட்ட மன்னர் பாரசீகப் பேரரசை வெல்லுவதற்குப் பிற்காலத்தே முயன்றார். தெஸ்ஸாலியைச் சேர்ந்த ஜேலன் என்பாரும் இத்தகைய முயற்சியிலீடுபடுவதற்கும் காரணம் மேற்கூறிய கிரேக்கரின் படையெடுப்பேயாகும் என்பதில் ஐயமில்லை.

பியூரி என்ற ஆசிரியர் குறிப்பிடுவதுபோலப் பத்தாயிரவரின் இப் படையெடுப்புப் பயணமானது, ஸெர்க்ஸஸ் என்பாரின் படையெடுப்பு நாடகத்திற்கு முடிவுரையாகவும், அலெக்ஸாந்தரது படையெடுப்பு என்னும் நாடகத்திற்கு முகவுரையாகவும் கருதப்படத் தக்கதாகும்.

(2) ஸ்பார்ட்டாவின் ஆதிக்க வளர்ச்சி (கி. மு. 405–371)

கி. மு. 405-இல் ஏற்பட்ட ஈகாஸ்பாடமிப் போருக்கும் (Hegospotami) கி. மு. 371-இல் விளைந்த லியூக்ட்ரா (Leuctra) போருக்குமிடையே இருந்த 34 ஆண்டுக் காலத்தில் ஸ்பார்ட்டாவின் மேலாண்மையானது கிரீஸில் செழித்து வளர்ந்தது. லிசாண்டர் என்ற தளகர்த்தரின் தலைமையில் ஸ்பார்ட்டா ஒரு பேரரசை அமைத்துக் கிரீஸின் பற்பல நாடுகளையும் தனது ஆதிக்கத்தின் கீழ்க் கொணர்ந்தது. ஆசிய நாட்டுக் கிரேக்கர்களின் சுயேச்சையை அது பாரசீகர்க்கு அடகு வைத்துத் தனது வலிமையைப் பெருக்கிக் கொண்டது. ஆதென்ஸின் பிடியிலிருந்து விடுபடுவதற்காகவே கிரேக்க நாடுகள் அனைத்தும் ஸ்பார்ட்டாவின் உதவியை நாடின. ஸ்பார்ட்டாவும் அவற்றின் விடுதலை இயக்கத்திற்குத் தலைமை தாங்கி வெற்றியைத் தேடித் தந்தது. அதோடு அது நிறுத்திக் கொண்டிருந்திருக்குமேயானால் அதன் புகழ் மங்காமல் நிலைத்திருந்திருக்கக் கூடும். ஆனால் வெற்றிப் போதையில் மயங்கிய ஸ்பார்ட்டா, கிரேக்க நாடுகளின் மீது தனியாதிக்கம் செலுத்தவும், பேரரசை நிறுவவும் முயன்றது. இயல்பாகவே சுதந்திர தாகம் கொண்ட கிரேக்க மக்கள் ஸ்பார்ட்டப் பேரரசை வெறுத்தனர். அதனால் அப் பேரரசானது

அதிக நாள் நீடித்திருக்க முடியவில்லை. விரைவிலேயே அதற்குட் பட்டிருந்த நாடுகள் கலகத்தில் இறங்கின. அதைப் பயன் படுத்திக்கொண்டு ஆதென்ஸ் தனது இரண்டாவது – அத்தீனிய இணைக்கூட்டரசை (Second Athenian Confedracy) நிறுவியது. தீப்ஸ் நாட்டு மக்கள் கிளர்ந்தெழுந்து கி. மு. 371-இல் தங்களது தலைமையை நிலைநாட்டிக் கொண்டார்கள். இங்ஙனம் ஸ்பார்ட்டர் களின் குறுகியகால மேலாண்மையானது முடிவுற்றது.

ஸ்பார்ட்டர்களின் ஆதிக்கச் சிறப்பியல்புகள்

தனது ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகளிலெல்லாம், ஸ்பார்ட்டர் பணநாயகச் சிறு குழு ஆட்சி முறையினையே (Oligarchy) ஆதரித்துவந்தது. ஆங்காங்கே இருந்த ஒருசில புதுப் பணக் காரர்களைத் தனது கையாட்களாக வைத்துக்கொண்டு அஃது ஆட்சி செலுத்தியது. ஆதென்ஸ், ஆர்காஸ், கொரிந்து, தீப்ஸ், போன்ற நகரங்களில் கூடச் சுயநலப் பணக்காரர்களின் ஆட்சி யையே அஃது நிறுவியது. ஒவ்வொரு நகரத்திலும் அத்தகைய பத்து நபர்கள் அடங்கிய டெகார்க்கி (Decarchy) என்ற நிர்வாகக் குழு ஒன்றை அது அமைத்தது. நகரத்தின் அமைதியைப் பாதுகாக்க ஹார்மோஸ்ட் (Harmost) என்ற ஸ்பார்ட்டத் தளபதி ஒருவரும் நியமிக்கப்பட்டார். ஹார்மோஸ்டின் துணைகொண்டு டெகார்க்கிக் குழுவானது வரையறையின்றிக் கொடுங்கோன் மையைப் புரிந்துவந்தது. இங்ஙனம் டெகார்க்கிக் குழுவினர், ஹார்மோஸ்டுகள் ஆகிய இரு சாரரது கொடுங்கோன்மைக்கு ஒவ்வொரு நகரமும் உட்பட்டு வாடியது. ஹார்மோஸ்டுகளுக்கு ஸ்பார்ட்டாவானது கட்டற்ற அதிகாரங்களை வழங்கியிருந்தது. எனவே அவர்கள் அதிகார மமதையுடன் ஆட்சி புரிந்தனர். டெகார்க்கியிலிருந்த செல்வந்தர்கள் போட்டியும் பொறுமையும் கொண்டு ஒருவரையொருவர் ஒழிப்பதிலேயே கண்ணுங்கருத்து மாயிருந்தனரேயன்றிக் குடிமக்களின் நலனைப் பற்றி ஒரு சிறிதும் கவலைப்படவில்லை. லைசாண்டர் என்ற ஸ்பார்ட்டத் தளபதி ஏறக்குறைய ஒரு சர்வாதிகாரி போல் நடந்து கொண்டு தம்மால் விடுவிக்கப்பட்ட நகரங்களின் மீது அடக்குமுறைகளைக் கையாண்டுவந்தார். ஒவ்வொரு நகரத்திலும் ஒருசிறு படை யொன்றையும் அவர் வைத்திருந்தார். கப்பப் பணம் கட்டும்படி அவர் நகரங்களைப் பலவந்தப்படுத்தினர். அடிமைகளை ஆள்வதில் மட்டுமே பழக்கப்பட்டிருந்த ஸ்பார்ட்டர்கள் புதிதாகத் தமது ஆளுகைக்குட்பட்டிருந்த சுதந்திரக் குடிமக்களைச் சரிவர நடத்தத் தெரியாமல் பல தவறுகளைச் செய்தனர். ஆதென்ஸ் முன்பு அமைத்திருந்த பேரரசில் கொடுங்கோன்மையும்

சுரண்டலும் இல்லை. ஓரளவு நீதிக்குப் பயந்து ஆதென்ஸ் நடந்தது. ஆனால் ஸ்பார்ட்டர்கள் சட்டத்திற்குப் புறம்பாகவும், நீதிக்கு மாறுகவும் பலகாரியங்களைச் செய்து, மக்களுடைய வெறுப்பைத் தேடிக்கொண்டனர்.

லிசாண்டரின் வீழ்ச்சி

ஆசியாமைனரில், லிசாண்டரின் ஆதிக்கம், நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே போவதை ஸ்பார்ட்டா பொருமைக் கண்ணுடன் நோக்க ஆரம்பித்தது. எனவே ஸ்பார்ட்ட அரசாங்கம் அவரைத் தாய்நகரத்திற்குத் திரும்பி வரும்படி கட்டளையிட்டது. ஆசியாமைனர்ப் பகுதிகளில் ஒரு கொடுங் கோலரைப் போல் நடந்து கொண்டதாக அஃது அவர் மீது குற்றம் சாட்டியது. தான் அப்படி நடந்து கொள்ளவில்லை என்று லிசாண்டர் கூறியதோடு மட்டுமின்றி அக்கூற்றிக்கு ஆதரவாகப் பாரசீக ஆளுநர் ஃபார்ணபாஸஸ் (Pharnabazus) என்பாரிடமிருந்து தான் பெற்றுவந்த ஒரு கடிதத்தையும் அவர் ஸ்பார்ட்ட அரசாங்கத்திடம் கொடுத்தார். ஆனால், அது பிரித்துப் பார்க்கப்பட்டபோது, அவர் மீது வசைமாரி பொழியப் பட்டிருப்பதை ஸ்பார்ட்டர்கள் கண்டனர். எனவே இறை வனுக்கு வேண்டுதல் ஒன்றைச் செலுத்தும் சாக்கில் லிடியப் பாலைவனத்திலுள்ள ஜியூஸ் கோவிலுக்குத் தப்பித்து ஓட அவருக்கு அனுமதியளிக்கப்பட்டது. இங்ஙனம் அவர் அதிகாரத் தினின்று வீழ்ச்சியுற்றார் எனினும் அவர் செய்த காரியங்களின் பலன்களை ஸ்பார்ட்டா அனுமதித்தது. தான் பதவியிலிருந்த போது, அவர் ஸ்பார்ட்டாவிற்குட்பட்ட நகரங்களிலிருந்து ஏராளமான பொன்னையும் பொருளையும் வாங்கி அதன் கருவூலத்தில் குவித்துவைத்திருந்தார். இங்ஙனம் வெளி நாட்டிலிருந்து வந்த பணத்தால் ஸ்பார்ட்டச் சமூதாயத்தில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது. லைக்கர்கஸ் என்பாரது கட்டுத் திட்டங்களெல்லாம் காற்றில் பறந்தன. ஸ்பார்ட்டியேட்டுகள் என்ற தூயடோரியப் பிரபுக்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது. அதற்குப் பதிலாக வாணிகத்தின் மூலம், செல்வமடைந்த பெரியீசி என்ற புதிய பிரபுக்களின் எண்ணிக் கையும் ஹெலட்டுகள் என்ற அடிமைகளின் எண்ணிக்கையும் அதிகமாகிக்கொண்டே சென்றன. அஜிசிலாஸ் (Agesilaus) என்ற மன்னர் ஸ்பார்ட்டாவில் ஆட்சிக்கு வந்தபோது, இப்புதிய பிரபுவர்க்கமானது, பழைய குடிவழிப் பிரபுக்களிடை ஒரு பெரும் சதியை உருவாக்கியது. ஆனால் அது தக்க

சமயத்தில் கண்டுபிடிக்கப்பட்டு வன்மையாக ஒடுக்கப்பட்டது. சதித்திட்டத்துக்குக் காரணமான சினுடன் (Cinadan) என்பார் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார்.

பாரசீகத்துடன் போர்

பெலப்பொனீஷியப் போர் நடைபெற்று வந்த போது ஆசியாமைனர்ப் பகுதியிலிருந்த கிரேக்க நகர அரசுகள் யாவும் பாரசீகத்தின் ஆதிக்கத்துக்கு உட்பட்டன. ஸ்பார்ட்டா அதை ஒப்புக் கொண்டது. அபைடாஸ் (Abydos) என்ற கேந்திரமான ஓர் இடத்தை மட்டும் வைத்துக்கொண்டு ஏனைய இடங்களனைத் தையும் அது பாரசீகத்திற்குத் தானம் செய்துவிட்டது. பாரசீகப் பேரரசின் சகோதரனான கைரஸ் இந்தக் கிரேக்க நகரங்களையெல்லாம் தூண்டிப் பாரசீகத்திற்கெதிராகக் கலகத்தில் இறங்கும்படிச் செய்தார். ஆனால் குனக்ஸாப் போரில் கைரஸ் தோற்கடிக்கப்பட்ட பின் பாரசீக ஆளுநரான டிஸ்ஸாஃபர்னஸ் (Tissphernes) என்பார் மீண்டும் கிரேக்க நகரங்களைத் தம் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தார். உடனே கிரேக்க நகரங்கள் யாவும், பாரசீகத்திற்கு எதிராகத் தங்களுக்கு உதவி செய்யும்படி ஸ்பார்ட்டாவிற்கு வேண்டுகோள் விடுத்தன. ஸ்பார்ட்டாவும் அவ் வேண்டுகோளை ஏற்றது.

கிரேக்க நகரங்களுக்கு விடுதலை வாங்கித் தருவதோடு பாரசீகப் பேரரசைக் கொள்ளையடித்துப் பொருள் திரட்ட வேண்டுமென்பது ஸ்பார்ட்டாவின் உள் நோக்கமாகும். ஏற்கெனவேயே கைரஸிற்கு உதவி செய்ததன் மூலம் ஸ்பார்ட்டா பாரசீகத்தின் பகைமையைத் தேடிக் கொண்டது. கைரஸின் உதவிக்காகச் சென்ற பத்தாயிரம் போர்வீரர்களும் பாரசீகப் பேரரசின் உளுத்துப் போன நிலைமையைக் கண்டுவந்தனர். அப் பேரரசின் மீது கொண்டிருந்த பயமும் மதிப்பும் மாறி அதன் மீது ஸ்பார்ட்டர்களுக்கு ஓர் அலட்சியம் ஏற்படலாயிற்று. இத்தகைய பல காரணங்களின் விளைவாகவே ஸ்பார்ட்டா ஒரு பெரும் படையை ஆசியாமைனர்ப் பகுதிக்கு அனுப்பி வைத்தது. திப்ரான் (Thibron) என்ற தளபதி முதலில் ஸ்பார்ட்டப் படைகளை நடத்திச் சென்றார். ஆனால், துருப்பு களிடையே கட்டுப்பாட்டை நிலைநாட்ட அவரால் முடியாத காரணத்தால் டெர்சிலிடாஸ் (Dercylidas) என்ற இன்னொரு தளகர்த்தர் படைத் தளபதியாக்கப்பட்டார். இரண்டாண்டு களாக அவர் அங்குமிங்கும் ஒருசில வெற்றிகளைப் பெற்றார். எனினும் குறிப்பிடத்தக்க வெற்றி எதையும் பெறவில்லை.

எனவே கி. மு. 396-இல் ஸ்பார்ட்டாவின் மன்னரான அஜிசிலாஸ் (Agesilaus) என்பாரே போர்த் தளபதியாகப் பணி புரிய முன்வந்தார்.

அஜிசிலாஸ் என்பாரின் ஆசியாமைனர்ப் படையெடுப்புகள்

அஜிசிலாஸ் பேராசை மிக்க ஒரு மன்னர். பண்டைய புராண அரசராகிய அகமெம்னன் (Agememnan) என்பாரைப் போல, ஆசியாமைனரில் வெற்றிவாகை சூடவேண்டும் என அவர் விரும்பினர். நியோடெமொட்டுகள் (Neodemodes) என்ற புதிய இரண்டாயிரம் படைவீரர்களைச் சேர்த்துக்கொண்டு ஆசியாமைனர் மீது அவர் படையெடுத்தார். அதற்கு முன் அவர் தீப்ஸ் நாட்டிலிருந்த ஆர்டிமிஸ் (Artemis) என்ற தேவதையின் கோயிலுக்குச் சென்று பலி கொடுத்தார். ஆனால் அதற்குரிய அனுமதியை அவர் தீபர்களிடமிருந்து பெறவில்லை. எனவே ஒருசில குதிரை வீரர்கள் வந்து பலியிடுதல் சடங்கைக் கலைத்துவிட்டனர். இங்ஙனம் தமக்கு ஏற்பட்ட அவமானத்தை அஜிசிலாஸ் மறக்கவுமில்லை; மன்னிக்கவுமில்லை.

ஆசியாமைனர்ப் படையெடுப்புகளில் தம்மையே தளபதியாக ஸ்பார்ட்ட மன்னர் நியமிப்பாரென்று லைசாண்டர் நினைத்திருந்தார். ஆனால் அஜிசிலாஸ் தானே தலைமையை மேற்கொண்டு லைசாண்டரை ஹெல்லஸ்பாண்டிற்கு அனுப்பிவிட்டார். கி. மு. 395-இல் அவர் டிசாபர்னஸ் என்ற பாரசீக ஆளுநரை சார்டிஸ் நகரத்துக்கருகில் வென்றார். இதையறிந்த பாரசீக மன்னர் அந்த ஆளுநரைச் சிரச்சேதம் செய்யும்படிச் சொன்னர். அவருக்குப் பின் வந்த ஆளுநர் ஸ்பார்ட்டர்களோடு சமாதானம் செய்துகொண்டார்.

கொரிந்தியப் போர்

அடுத்தபடியாக அஜிசிலாஸ், ஃபிரிஜியா நாட்டின் மீது படையெடுத்தார். அதன் பாரசீக ஆளுநரான ப்ராஞ்பாஸஸ் ஸ்பார்ட்டாவின் எதிரிகளையெல்லாம் ஒன்று கூட்டிப் போர் புரிந்தார். இதற்கிடையில் அஜிசிலாஸ், ஸ்பார்ட்டக் கப்பற் படைத் தளகர்த்தராகவும் நியமிக்கப்பட்டார். எனவே மூன்றடுக்கு மாடிகளைக் கொண்ட ட்ரிரீம்ஸ் (Triremes) என்ற கப்பல்கள் நூற்றிருபதைத் தயார் செய்வதில் அவர் ஈடுபட்டார். அதன்பின் அப்படைக்கு அனுபவம் ஒரு சிறிதும் அற்ற பைசாண்டர் (Peisandar) என்பவரைத் தளகர்த்தராக்கினர். ஸ்பார்ட்டாவின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுச் சுயேச்சையடைய விரும்பிய

கிரேக்க நகர அரசுகள் யாவும் ஒரு கூட்டரசாக இணைந்தன. ஆர்காஸ், ஆதென்ஸ், கொரிந்து, தீப்ஸ் ஆகிய நாடுகள் ஸ்பார்ட்டாவிற்கெதிராகப் படை திரட்டிக்கொண்டு ஸ்பார்ட்டாவை எதிர்த்தன. லிசாண்டரின் தலைமையில் ஸ்பார்ட்டா ஒரு படையை அனுப்பி, தீப்ஸ் நாட்டைத் தாக்கும்படி ஆணையிட்டது. தீப்ஸ் நாடும், ஆதென்ஸும் தமக்குள் ஒரு நட்புடன்பாட்டைச் செய்துகொண்டு லிசாண்டரை எதிர்த்தன. ஹேலியார்ட்டஸ் (Haliartes) என்னுமிடத்தில் நடைபெற்ற பெரும்போரில், லிசாண்டர் மாண்டார். இதைக் கேட்ட இதர நகர அரசுகளும் உற்சாகமடைந்து ஆதென்ஸோடும் தீப்ஸோடும் நேச உடன்படிக்கைகளைச் செய்துகொண்டு, ஸ்பார்ட்டர்களை முறியடிப்பதென முடிவு செய்தன. கொரிந்துநகரத்தை அவர்கள் தலைமைப் பீடமாகக் கருதினர். இங்ஙனம் ஸ்பார்ட்டாவிற்கெதிராக நடைபெற்ற இயக்கத்தை ஒடுக்குவதற்காக ஸ்பார்ட்ட அரசாங்கம் அஜிசிலாஸ் என்பாரை உடனே தலைநகருக்குத் திரும்பும்படி ஆணையிட்டது. ஆசியாமைனர்ப் பகுதிகளில் பாரசீகருக்கு எதிராகப் பெரும் வெற்றியைப் பெற விரும்பிய அஜிசிலாஸ் தமது எண்ணம் ஈடேறுதைக் கண்டு மனம் வருந்தினர். தாய் நகரைக் காக்கக் கி. மு. 394-இல் அவர் திரும்பினர். ஸ்பார்ட்டாவுக்கெதிராக அமைக்கப்பட்ட கூட்டுப் படையினை அவர் கொரிந்துப் போர்க்களத்தில் தோற்கடித்தார். அதன்பின் அவர் பியோஷியாவின் மீது படையெடுத்தார். தீபர்கள், ஆர்கையர்கள், கொரிந்தியர்கள் அனைவருமாகச் சேர்ந்து கிரோனியா (Chaeronea) என்னுமிடத்தில் அஜிசிலாஸைத் தோற்கடித்தனர் (கி. மு. 394). அதே ஆண்டில், ஸ்பார்ட்டர்களின் கடலாதிக்கம் மாய்ந்தது. பாரசீகக் கடற்படையொன்று கோனன் (Conon) என்ற அத்தீனியத் தளகர்த்தர் வசம் ஒப்படைக்கப்பட்டது. அதைக்கொண்டு அவர், ஸ்பார்ட்டக் கப்பற்படையை நீடஸ் (Cnidus) போர்க்களத்தில் தோற்கடித்தார். இங்ஙனம் கோனன் ஈகாஸ்பொடாமி என்னுமிடத்தில் தம்மை நயவஞ்சமாகத் தோற்கடித்த ஸ்பார்ட்டர்கள் மீது பழிதீர்த்துக் கொண்டார். ஐம்பது ஸ்பார்ட்டக் கப்பல்களை அவர் கைப்பற்றினர். ஈஜியன் கடலில் செலுத்தி வந்த மேலாண்மையை ஸ்பார்ட்டா இதோடு இழந்தது.

ப்ராஞ்பைராஸ் என்ற பாரசீக ஆளுநரும், கோனன் என்ற அத்தீனியத் தளகர்த்தரும் சேர்ந்துகொண்டு ஸ்பார்ட்டர்களின் கொடுங்கோன்மையினின்றும் பல நகரங்களை விடுவித்தனர். ஸ்பார்ட்ட ஹார்மோஸ்டுகள் எனும் போர்த்தலைவர்கள் ஈஜிய நகரங்களினின்று விரட்டியடிக்கப்பட்டனர். அந்த நகரங்கள்

யாவும், ஆதென்ஸ் அரசோடு நட்புடன்பாடுகளைச் செய்து கொண்டன. இழந்து போன பெருமையை ஆதென்ஸ் மீண்டும் கொஞ்சம் கொஞ்சமாகப் பெறலாயிற்று. கோனன், ஆதென்ஸ் நகரத்திற்குத் திரும்பி வந்து பாரசீகர்களின் பொருளுதவியைக் கொண்டு அதன் கோட்டைச் சுவர்களை மீண்டும் கட்டிப் பைரியஸ் (Piraeus) துறைமுகப் பட்டினத்தின் மதிற்சுவர்களை மீண்டும் எழுப்பி அவற்றின் பாதுகாப்பை நன்கு பலப்படுத்தினர். இத்தகைய சேவைகளின் காரணமாக இவரை இரண்டாம் தெமிஸ்டாக்ளீஸ் (Thenistocles) என்று நாம் அழைக்கலாம். மீண்டும் ஆதென்ஸ் நகரமானது சுதந்திரத்துடன் தலை நிமிர்ந்து நின்று கடலில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இலர் என்ற நிலையை எய்தியது.

அண்டால்கிடாஸ்—சமாதான ஒப்பந்தம் (கி. மு. 387)

பாரசீகப் பேரரசானது தனக்கெதிராக இருந்ததாலேயே தான் தோல்வியடைய நேர்ந்தது என உணர்ந்து கொண்ட ஸ்பார்ட்டா, பாரசீக நாட்டுடன் ஒரு நட்புடன்படிக்கையைச் செய்து கொள்ள முனைந்தது. எப்படியாவது ஆதென்ஸையும் பாரசீகத்தையும் பிரித்துவிட அது எத்தனித்தது. அதன்படி ஆசியாமைனர்ப்பகுதியின் தளகர்த்தராயிருந்த அண்டால்கிடாஸ் என்பாரை அனுப்பி பாரசீகப் பேரரசரிடம் தூது அனுப்பி வைத்தது. தனக்கும் தன்னுடைய அண்டைய நாடுதளுக்கு மிடையேயிருந்த வழக்கைத் தீர்த்து வைக்குமாறு அது பாரசீகப் பேரரசர் ஆர்ட்டாஸெர்க்ஸஸ் (Artaxerxes) என்பாரை வேண்டியது. ஆதென்ஸிற்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணம், பாரசீகத்திற்கு அவ்வளமாக இல்லை. மீண்டும் ஆதென்ஸ் ஒரு பேரரசாக வளர்ந்துவிடக்கூடாதென்பதே பாரசீகத்தின் உட்கிடக்கையாகும். எனவே ஸ்பார்ட்டர்கள் தம் உதவியை நாடியபோது ஆர்ட்டாஸெர்க்ஸஸ் மனமுவந்து அவ் வேண்டுகோளை ஏற்றார். ஒரு சில நிபந்தனைகளை ஒப்புக் கொண்டால், ஸ்பார்ட்டாவுக்கு உதவி செய்வதாக அவர் ஒப்புக் கொண்டார். அந் நிபந்தனைகளின்படி ஆசியாமைனர்ப் பகுதியிலிருந்த கிரேக்க நகரங்களனைத்தும் பாரசீகப் பேரரசிற்குக் கொடுக்கப்பட வேண்டும்; ஏனைய கிரேக்க நகரங்கள் அனைத்தும் சுதந்திரமாய் வாழவேண்டும்; ஆதென்ஸிற்கு மட்டும் லெம்னஸ் (Lemnes), இப்ராஸ் (Impros), ஸ்கைரஸ் (Scyris) ஆகிய இடங்கள் தரப்பட வேண்டும். இந்த ஏற்பாட்டை ஏதாவது ஒரு நகரம் ஏற்றுக் கொள்ள மறுத்தால், அது பாரசீகத்தின் பகைநாடாகக் கருதப்படும். அதன்மீது பாரசீகம் படையெடுத்து

வன்மையாக ஒறுக்கும்; இத்தகைய நிபந்தனைகளோடு கூடிய இச் சமாதானமானது அரசரது சமாதானம் (Kings peace) என்று வரலாற்றில் பேசப்படுகிறது. கிரேக்க நகரங்களின் சுயேச்சையை மீண்டும் நிறுவிய பெருமை இதற்குண்டு. நகரங்கள் தனிப்பட்ட முறையில் கட்சியை ஏற்படுத்துதல், கூட்டணிகளை நிறுவுதல் போன்ற முயற்சிகள் தற்காலிகமாக நின்றுவிட்டன. தன்னை எதிர்த்து இனி கூட்டணிகள் அமையா என்ற நம்பிக்கை ஸ்பார்ட்டாவுக்கு ஏற்பட்டது. தீப்ஸ்நாட்டின் தலைமையில் உருவாகிக் கொண்டிருந்த பியோஷிய இணைக்கூட்டரசும், ஆர்காஸ், ஆதென்ஸ், கொரிந்து ஆகிய நகரங்களிடையே ஏற்பட்ட ஒரு கூட்டுறவும் கலைந்தன. அதே போன்று ஸ்பார்ட்டாவின் மேலாண்மையும் இயல்பாகவே ஒழிந்தது. பிற்காலத்தே மாசிடோனிய மன்னர் இரண்டாம் பிலிப், கிரேக்க நாட்டின்மீது படையெடுக்கும் வரையில் இந் நகர அமைப்பு முறை கிரீஸில் தொடர்ந்து நீடித்தது. இடையில் அத்தீனிய இணைக்கூட்டரசென்பது ஏற்பட்டதென்னவோ உண்மைதான். ஆனால் அது முதலில் ஏற்பட்ட இணைக்கூட்டரசிற்கு முற்றிலும் மாறுபட்டதாயிருந்தது. பொதுவாக இந்தச் சமாதானமானது, கிரேக்கர்களுக்கு ஏற்பட்ட ஒரு பெரிய அவமானமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

(3) ஸ்பார்ட்ட மேலாண்மையின் இரண்டாம் கட்டம் (கி. மு. 387-371)

பாரசீகப் பேரரசோடு நட்புடன்பாட்டைச் செய்துகொண்ட பின் ஸ்பார்ட்டா தன் முழுக் கவனத்தையும் தன்னைச் சுற்றியுள்ள கிரேக்க நாடுகளின் மீது செலுத்த ஆரம்பித்தது. அவைகளைத் தனித்தனியே பிரித்து ஒவ்வொன்றையும் தனது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வரவேண்டுமென்பது அதன் திட்டம். அத்திட்டத்தின் முதற்கட்டமாகக் கி. மு. 385-இல் அது மாண்டினியா (Mantinea) என்ற நகரின் விவகாரத்தில் தலையிட்டது. அந் நகர மக்கள் மீது இல்லாததும் பொல்லாததுமான பல குறைகள் கூறப்பட்டன. மாண்டினியா அவைகளையெல்லாம் மறுத்தும் பயனில்லை. ஸ்பார்ட்ட மன்னர் அதன் மீது படையெடுத்துச் சென்று அதன் மக்களை மிகவும் கடுமையாகத் தண்டித்தார். நகரமானது 5 சிறு கிராமங்களாகப் பிரிக்கப்பட்டது. இங்ஙனம் அதன் அரசியலமைப்பே சிதைக்கப்பட்ட காரணத்தால் மாண்டினிய மக்கள் மனம் வருந்தினர். ஆனால் வேறு வழியின்றி அவர்கள் ஸ்பார்ட்டாவுக்குப் பணிந்தனர்.

அடுத்தாற்போல் தன் கண்ணெதிரே சீருடனும் சிறப் புடனும் வாழ்ந்துவந்த கால்கிடிய மக்களைப் பணிய வைக்கும் முயற்சியில் ஸ்பார்ட்டா இறங்கியது. கால்கிடிஸ் என்ற தீப கற்பத்தில் மிகவும் வலிமை வாய்ந்த நகரமாய் விளங்கியது ஒலிந்தஸ் என்பதாகும். அதன் தலைமையில், கால்கிடிய நகரங்கள் அனைத்தும், ஒரு கூட்டுறவை அமைத்துக்கொண்டு நன்கு வாழ்ந்துவந்தன. ஆனால் அகாந்தஸ், அப்பலோனியா ஆகிய இருநகரங்கள் மட்டுமே கூட்டுறவில் சேராமல் தனித்து வாழ்ந்துவந்தன. ஏனைய நகரங்கள் யாவும் ஒன்றுசேர்ந்து அவ்விருநகரங்களையும் தம்மோடு சேருமாறு கட்டாயப் படுத்தின. இதைக் கண்டஞ்சிய அவ்விரு நகரங்களும் ஸ்பார்ட் டாவைத் தங்களது உதவிக்கு வரும்படி அழைத்தன. அவ் வழைப்பை ஏற்றுக்கொண்டு, ஃபோபிடாஸ் (Phobides) என் பாரது தலைமையில் ஸ்பார்ட்டா ஒரு படையை அனுப்பியது. அப் படையானது பியோஷியா நாட்டின் ஊடே புகுந்து செல்ல வேண்டியிருந்தது. அங்ஙனம் போகும் வழியில் அது திடீ ரெனத் தீப்ஸ் நாட்டின் கோட்டையான கேட்மியாவைத் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டது. அந் நகரத்திலிருந்த செல் வந்தர்கள் ஸ்பார்ட்டாவுக்கு உடந்தையாயிருந்தனர். இந்த எதிர்பாராத படையெடுப்பைக் கண்ட கிரீஸ் நாடு முழுவதும் ஸ்பார்ட்டாவின் ஆதிக்க மனப்பான்மையைக் கண்டு பேரதிர்ச்சி யுற்றன. அதை உணர்ந்துகொண்ட ஸ்பார்ட்ட மன்னர் அஜிஸிலாஸ் கேட்மியாவைக் கைப் ற்றிய ஃபோபிடாஸ் என்ற தளகர்த்தரை இராணுவ நீதிமன்றத்தின் முன்னிலையில் விசா ரித்து ஒரு சிறு தொகையை அபராதமாக அவர் மீது விதித்தார். இது ஸ்பார்ட்டா தன் நற்பெயரைக் காக்க ஆடிய நாடகமேயன்றி வேறன்று. எப்படியும், ஒலிந்தஸ்நகரமும் அதைச் சார்ந்த நகரங்களும் ஸ்பார்ட்டர்களிடம் சரணடைந்தன. கால்கிடியக் கூட்டுறவானது சிதைந்தது. ஸ்பார்ட்டாவின் தலைமையிலான பெலப்பொனீஷியக் கூட்டுறவில் அவை சேர்ந்தன.

இங்ஙனம் ஸ்பார்ட்டா, தீப்ஸின் கோட்டையைக் கைப் பற்றிய பின் அதை ஒரு தளமாகக் கொண்டு மத்தியக் கிரீஸில் முழுவதும் தனது மேலாண்மையை நிறுவ முயன்றது.

கி. மு. 382-381-இல் அது பிளாடியாநகரத்தை மீண்டும் உருவாக்கியது. ஆனால் ஒரு காலத்தில் அதாவது கி. மு. 421-இல் இதே ஸ்பார்ட்டா, தீப்ஸ்நாட்டைப் பலவீனப் படுத்தவேண்டி இந் நகரத்தை அழித்துவிட்டதென்பது ஈண்டு நினைவு கூறுதற்குரியதாகும். இந் நகரத்தை மீண்டும் உரு

வாக்குவதன் மூலம் பியோஷியாவில் தனது ஆதிக்கத்தை வளர்த்துக்கொள்ள வழியேற்படுமென்றும், ஆதென்ஸிற்கும் தீப்ஸிற்கும் அதனால் பகை ஏற்படுமென்றும் ஸ்பார்ட்டா கருதியது.

அடுத்து ஸ்பார்ட்டா, ஃபிலியஸ் (Philius) என்ற நகரத்தின் விவகாரத்தில் வேண்டுமென்றே தலையிட்டது. அங்கிருந்து வெளியேற்றப்பட்ட பணநாயகச் சிறு குழுவாட்சி வாதிகளை மீண்டும் திருப்பி அழைத்துக் கொள்ள வேண்டுமென்றும், அவர்களுக்குச் சொந்தமாயிருந்த சொத்துகளைத் திருப்பித் தந்துவிட வேண்டுமென்றும் அது அந்த நகரை வற்புறுத்தியது. அதன்படியே செல்வந்தர்கள் திருப்பி அழைக்கப்பட்டனர். ஆனால் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்கள் சரிவரத் திருப்பி யளிக்கப்படவில்லை. எனவே, அப் பணக்காரர்கள், ஸ்பார்ட்டாவிற்கு விண்ணப்பித்துக் கொண்டனர். அவர்களது வேண்டுகோளிற்கிணங்கக் கி.மு.379-இல் ஸ்பார்ட்டா அங்கொரு படையை அனுப்பி, நகரைக் கைப்பற்றி அங்கு நிரந்தரமாக ஒரு படைப் பிரிவையும் வைத்தது. தீப்ஸ் நாட்டில் ஸ்பார்ட்டாவுக்குச் சாதகமான அரசாங்கம் அமைக்கப்பட்டிருந்தும் அங்கு நிரந்தரமான அமைதி ஏற்படவில்லை. அங்கிருந்து வெளியேற்றப்பட்ட ஒருசில பிரபுக்கள் ஆதென்ஸிற்குச் சென்று வாழ்ந்து வந்தனர். அவர்களில் பெலோப்பிடாஸ் (Pelopidas) என்பாரும் ஒருவர். அவரும், இன்னும் ஆறு பேர்களும் சேர்ந்து, தீப்ஸை ஸ்பார்ட்டர்களின் ஆதிக்கத்தினின்றும் விடுவிக்கச் சதித் திட்டம் ஒன்றைத் தீட்டினர். வேட்டுவர்களைப் போல் வேடம் தரித்து அவர்கள் இரகசியமாகத் தீப்ஸுக்குள் நுழைந்தனர். தீப்ஸில் தளகர்த்தராக இருந்த ஃபிலிடாஸ் என்பார் இப் புரட்சியாளர்களின் நண்பர். எனவே அவர், அவர்களுக்காகச் சூழ்ச்சி ஒன்றைச் செய்தார். அங்கு நியமிக்கப்பட்டிருந்த ஸ்பார்ட்டத் தளகர்த்தருக்கென்று அவர் பெரு விருந்தொன்றை ஏற்பாடு செய்தார். அவ் விருந்திற்கு ஒருசில அழகிய பெண்களும் வரவழைக்கப்பட்டனர். உண்மையில் அப் பெண்கள் மாறு வேடம் பூண்ட பெலப்பிடாஸும், அவரைச் சார்ந்த சதிகாரர்களுமேயன்றி வேறல்லர். அவர்கள் விருந்துக்குள் நுழைந்து, சமயம் பார்த்து, குடிபோதையில் இருந்த ஸ்பார்ட்டத் தளகர்த்தர்களைக் கொன்றுவிட்டனர். அதே சமயத்தில் பெலப்பிடாஸின் நண்பரான எப்பமினண்டஸ் (Epaminondas)என்பார் தம்முடைய நண்பர்களான தீபர்கள் பலரை ஒருங்கு சேர்த்துக் கொண்டு கேட்மியாக் கோட்டையை வளைத்துக் கொண்டார். இதைக் கேட்டதும் தீப்ஸ் நாட்டினின்றும் வெளியேற்றப்பட்ட

பிரபுக்கள் அனைவரும் தீப்ஸிற்குள் புகுந்து புரட்சியாளர்களோடு சேர்ந்துகொண்டார்கள். கேட்மியாவில் வைக்கப்பட்டிருந்த 1500 பேர்கள் அடங்கிய சிறு படையானது விரைவிலேயே தோற்கடிக்கப்பட்டது. கேட்மியா மீண்டும் ஜனநாயகவாதிகளின் ஆதிக்கத்திற்குள் வந்தது.

இதற்கிடையில் ஸ்ஃபோட்ரியாஸ் (Sphodrias) என்ற ஸ்பார்ட்டத் தளகர்த்தர் அட்டிகாவின் மீது படையெடுத்து பைரியஸ் துறைமுகத்தை இரவோடிரவாகக் கைப்பற்ற முயன்றார். ஆனால் அது முடியவில்லை. பாதி வழியிலேயே பொழுது விடிந்துவிட்டதால் அவர் திரும்பிவிட்டார். அப்போது வழியில் அவரது துருப்புகளில் பலர் பல அட்டூழியங்களில் ஈடுபட்டனர். இத்தகைய வலுத்தாக்கல், ஆதென்ஸிற்கும் ஸ்பார்ட்டாவிற்கும் ஏற்பட்ட சமாதான ஒப்பந்தத்திற்கு விரோதமானதாகையால் ஆதென்ஸ் ஸ்பார்ட்டாவிடம் அதன் செய்கைக்கு விளக்கம் கேட்டது. ஸ்பார்ட்டர்கள் ஸ்போட்ரியாஸ் செய்தது சரியே என்று கூறிவிட்டனர். எனவே ஆதென்ஸ் கோபமடைந்து, தீப்ஸ் நாட்டோடு நட்புடன்பாட்டைச் செய்து கொண்டது. அஜிசிலாஸ் என்னும் ஸ்பார்ட்ட மன்னர் கி. மு. 378–இல் பியோஷியாவின் மீது படையெடுத்தார். பெலப்பிடாஸும், அவரோடு சேர்ந்த 300 வேல்வீரர்களும், ஸ்பார்ட்டாவின் படையை விட்டு நீங்கி, தீப்ஸ் நாட்டுப் படைகளோடு சேர்ந்துகொண்டனர். ஸ்பார்ட்டாவிற்கும், தீப்ஸிற்கும் தொடர்ந்து எட்டாண்டுகள் போர் நடைபெற்றது. ஸ்பார்ட்டர்கள் பியோஷியாவில் ஒன்றும் வெற்றி பெற இயலவில்லை. கி. மு. 376-இல் அத்தீனியர்கள் காப்ரியாஸ் (Chabrias) என்பாரது தலைமையில் நாக்ஸாஸ் (Naxos) என்னுமிடத்தில் ஸ்பார்ட்டக் கப்பற்படையைத் தோற்கடித்தார்கள். நாக்ஸாஸும், பதினேழு சைக்லேட்டுத்தீவுகளும்அத்தீனிய இணைக்கூட்டரசில் சேர்ந்தன (378-377 கி. மு.). அத்தீனியப் படைவீரர்கள், திரேஸில் பல இடங்களைக் கைப்பற்றி அவற்றை அத்தீனியக் கூட்டமைப்பில் சேர்த்தனர். அதே ஆண்டில் கோனன் என்பவரின் மைந்தராகிய டிமோத்தியூஸ் (Timotheus) என்பார் பெலப்பொனீஷியாவைச் சுற்றிவந்து கார்கிரா, அகர்னேனியா, செப்பலோனியா (Cephallenia) ஆகிய நாடுகளை அத்தீனியக் கூட்டமைப்பில் சேர்த்தார். ஸ்பார்ட்டாவுக்கு விரோதமாகப் போரிட்டு இங்ஙனம் வெற்றி பெற்றுவந்த அத்தீனியர்களுக்குத் தீப்ஸ் எவ்வித உதவியும் செய்யவில்லை. எனவே ஆதென்ஸ், ஸ்பார்ட்டாவோடு தற்காலிகமாகக் கி. மு. 374-இல் ஒரு போர் நிறுத்த உடன்பாட்டைச் செய்து கொண்டது. ஆனால் சின்னட்

களுக்குள் இவ்வுடன்படிக்கைக்கு விரோதமாகக் கார்கிராவுக்கு உதவிப் படையொன்றை அது அனுப்பி வைத்தது. அத்தீனியர்களின் உதவி கொண்டு கார்கிரா தனது சுயேச்சையைக் காப்பாற்றிக் கொண்டது. தீப்ஸ் நாட்டின் வளர்ந்துவரும் செல்வாக்கைக் கண்ட ஆதென்ஸ் பொருமை அடைந்தது. கி. மு. 372-இல் தீப்ஸ் படைகள் பிளாடியாவைக் கைப்பற்றிக்கொண்டன. அதோடு ஆதென்ஸிற்குத் தோழர்களான ஃபியோஷியர் களையும் அவர்கள் தாக்கினர்கள். இவற்றையெல்லாம் கண்ட ஆதென்ஸ் ஸ்பார்ட்டாவோடு ஒரு தனிப்பட்ட உடன்படிக்கையைச் செய்துகொண்டது.

காலியாஸ் சமாதான உடன்பாடு

அத்தீனியத் தூதுவரான காலியாஸ் என்பாரது முயற்சியால் இவ்வுடன்பாடு ஏற்பட்டது. இதன்படிக் கிரேக்க அரசு ஒவ்வொன்றிற்கும் அதன் சுதந்திரமானது மீண்டும் உறுதியளிக்கப்பட்டது. தனிப்பட்ட அரசுகளின் சுதந்திரம் இங்ஙனம் காப்பாற்றப்பட வேண்டி, எல்லாவிதமான இணைக்கூட்டரசுகளும் கலைக்கப்பட வேண்டுமென்பது இவ்வுடன்பாட்டால் வற்புறுத்தப்பட்டது. பேரரசுப் பாதையில் நடைபோடுவதை நிறுத்திக் கொள்வதற்காக ஆதென்ஸும் ஸ்பார்ட்டாவும் அறிவித்தன. அதே போல் பியோஷியக் கூட்டுறவைக் கலைத்துவிடும்படி தீப்ஸ் நாட்டிற்கு அவர்கள் அறிவுரை கூறினர்கள். ஆனால் எப்பமினண்டஸ் என்ற தலைவர் இதை மறுத்தார். அட்டிகாவையும் லெகோனியாவையும் போன்று பியோஷியாவும் ஒரு தனிப்பட்ட அரசு என்றும், தீப்ஸ்மக்கள் பியோஷிய மக்களினின்றும் பிரித்து எண்ணப்படத் தக்கவர்களல்லர் என்றும் அவர் வாதாடினர். ஆனால் இத்தகைய உரிமையைத் தீப்ஸ்மக்களுக்குத் தர ஸ்பார்ட்டாவும் ஆதென்ஸும் மறுத்துவிட்டன. எனவே தீப்ஸ் நாடு இவ்வுடன்பாட்டிலிருந்து விலக்கப்பட்டது. தனிப்பட்ட முறையில் அது வளர்வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. இங்ஙனம் ஆதென்ஸிற்கும் ஸ்பார்ட்டாவிற்குமிடையே வல்லமைச் சமநிலையை (Balance of Power) இவ்வுடன்படிக்கையானது ஓரளவிற்கு ஏற்படுத்தியது. கிரீஸில் இரு நாடுகளும் சேர்ந்து கூட்டாகத் தலைமையை ஏற்படுத்துவதற்கான வழிவகை ஏற்பட்டது. ஆனால் விரைவிலேயே பியோஷியா நாட்டில் தீப்ஸும், தெசலி நாட்டில் ஃபிரேயும் தோன்றி இவ் வல்லமைச் சமநிலையைக் குலைத்துவிட்டன.

(4) லீசாண்டரின் வாழ்க்கைக் குறிப்பு

லீசாண்டர் என்ற ஸ்பார்ட்டத் தளகர்த்தர் தூய டோரிய இனத்தைச் சேர்ந்தவரல்லர். அவர் ஒரு ஸ்பார்ட்டத் தந்தைக்கும் ஹெலட் தாய்க்கும் பிறந்தவர்; மெதோன்கள் (Methones) என்ற கலப்பினத்தைச் சேர்ந்தவர். எனவே ஸ்பார்ட்டாவின் குடியுரிமையை அவரால் பெற முடியவில்லை. ஆனால் தம்முடைய அரிய விடாமுயற்சியாலும், இயல்பான திறமையினாலும் ஸ்பார்ட்டர்களுக்குள்ளேயே முதன்மையான இடத்தை அவர் நாளடைவில் பிடித்துக்கொண்டவர். ஜிலிப்பஸ் என்ற தளகர்த்தரும் இவரைப் போலவே மெதோன்கள் வகுப்பிலிருந்து தோன்றியவரே யாவர். குணத்திலும் செயலிலும் அவர் சாதாரண ஸ்பார்ட்டக் குடிமக்களைப் போல் அல்லாது, தனக்கே உரித்தான சில தனிப் பண்புகளைக் கொண்டவராயிருந்தார். பிராஸிடாஸ் என்பாரைப் போல அவர் பெரும் தளகர்த்தராகவும், திறமை வாய்ந்த ராஜதந்திரியாகவும் விளங்கினர். கடற் படையில் அவர் பணி புரிந்தபோது தமக்குக் கீழ்ப் பணியாற்றிய வர்களையெல்லாம், பெரிதும் நேசித்து அவர்களின் நலன்களுக் காகப் பாடுபட்டார். வாய்மையும் நேர்மையும் ஒருங்கே கொண்ட அவர் பாசேனியஸ் போன்ற ஊழல்மிக்க தலைவர்களுக்கு முன் இரவுக்கு முன் பகல்போல ஒளியுடன் விளங்கினர். கையூட்டு வாங்கும் பழக்கம் அவரிடம் மருந்துக்கும் கிடையாது. அவரது நாணயத்தைக் கண்டு வியந்து பாராட் டியவர்களில் கைரஸ் என்ற பாரசீக இளவலும் ஒருவர். இவ்விரு வரிடையே, நெருங்கிய நட்பு நிலவிற்று. ஆசியாமைனரிலிருந்து பாரசீகத் தலைநகருக்கே செல்லவேண்டியிருந்த போதெல்லாம், தமக்குப் பதிலாக லீசாண்டரையே ஆசியாமைனரின் ஆளுநராக அவர் விட்டுச் செல்வது வழக்கம்.

பெலப்பொனீஷியப் போரில் லீசாண்டர், பல அரிய சேவை களைச் செய்தார். ஏதென்ஸ் நகரத்தை இறுதியாக ஸ்பார்ட் டர்கள் கைப்பற்றுவதற்குத் துணைபுரிந்தவர் அவரே. கி. மு. 407-இல் அவர் ஸ்பார்ட்டக் கப்பற்படையின் தளகர்த்தராய் நியமிக்கப்பட்டார். அவரது திறமையினால்தான் கி.மு. 406-இல் அத்தீனியக் கப்பற்படையானது நோட்டியமென்னுமிடத்தில் தோற்றோடியது. இதன் விளைவாகத்தான் ஆல்கிபியாடிஸ் என்ற தளகர்த்தர், தம் பதவியை இழந்தார். இதன் பின்னர், இவர் பெற்ற பெருமை மிக்க கப்பற்படை வெற்றி, ஈகாஸ்போட்டமியில் நடைபெற்றது. லம்பாஸ்கஸ் என்ற துறைமுகத்திலிருந்து அவரது கப்பற்படையை வெளியே இழுக்க அத்தீனியக் கப்பற்

படை எவ்வளவோ முயன்றும் அது எங்ஙனம் முடியாமற்போயிற் றென்பதையும், கடைசியில் கிரேக்க வீரர்கள் உணவருந்தச் சென்ற வேளையில், அவர் எங்ஙனம் அத்தீனியக் கப்பல்களில் பெரும்பாலானவற்றைக் கைப்பற்றினர் என்பதையும் நாம் ஏற் கெனவே கண்டோம். இந்தப் பெரும் வெற்றிக்குப் பிறகு லிசாண் டரின் புகழ் ஓங்கியது. ஆதென்ஸ் நகரையே அவர் கடலிலிருந்து முற்றுகையிட்டார். ஸ்பார்ட்ட மன்னர்கள், நிலத்திலிருந்து அந் நகரை முற்றுகையிட்டார்கள். இதனால் ஆதென்ஸ் நகரம் பணிந்தது. ஆதென்ஸை வென்ற பெரும் வீரராக லிசாண்டர் திகழ்ந்தார். ஆதென்ஸின் மதிற் சுவர்கள் இடிக்கப்படுவதை நேரே இருந்து கண்காணித்தார்.

ஈகாஸ்போட்டமி வெற்றிக்குப் பின்னர் ஆதென்ஸ் இழந்த பேரரசு ஸ்பார்ட்டாவின் கைகளில் விழுந்தது. பேரரசை அமைப்பதில் லிசாண்டர் பெரிதும் பங்கெடுத்துக் கொண்டார். அவர் பணக்காரச் சிறு குழு ஆட்சியை ஆதரித்தவர். எனவே, பணக்காரர்களின் ஆட்சியை அவர் ஒவ்வொரு நகரிலும் நிறுவினர். ஆனால் இத்தகைய ஆட்சி எங்ஙனம் மக்களிடம் செல்வாக்கையிழந்ததென்பதை நாம் மேலே பார்த்தோம்.

கி. மு. 396-இல் அஜிசிலாஸ் என்பார், ஸ்பார்ட்ட மன்ன ராக வந்தபின் லிசாண்டரின் வீழ்ச்சி தொடங்கிற்று. நொண்டி யாயிருந்த அவர் பட்டத்திற்கு வருவதற்கு லிசாண்டார் தம் முழு உதவியையும் வழங்கினர். அதற்குக் கைம்மாறாக ஆசியா மைனர்ப் படையெடுப்பில் தமக்குப் படைத்தலைவர் பதவி கிடைக்குமென்று எதிர்பார்த்தார். ஆனால் அவர் மீது பொறாமை கொண்டிருந்த அஜிசிலாஸ் தாமே அப் பதவியை ஏற்றுக் கொண்டதுமன்றி, அவரைப் பல வகையிலும் இழிவுபடுத்தவும் ஆரம்பித்தார். ஆனால் அஜிசிலாஸ் ஆசியாமைனரில் போரிட்டுக் கொண்டிருந்த பொழுது ஸ்பார்ட்டப் பேரரசுக்குட்பட்டிருந்த நேச நாடுகள் கலகத்தில் இறங்கின. தீப்ஸ் நாட்டுக் கலகத்தை யடக்க லிசாண்டரை ஸ்பார்ட்ட அரசாங்கம் அனுப்பிவைத்தது. பியோஷியா மீது அவர் படையெடுத்து, தீப்ஸ், ஆதென்ஸ் ஆகிய இரு நாடுகளுடைய கூட்டுப்படைகளை ஹேலியார்ட்டஸ் (Haliartes) என்னுமிடத்தில் எதிர்த்துக் கடுமையாகப் போர் புரிந்த பின், போர்க்களத்திலேயே மாண்டார். இவ்விதம் தம் தாய்நாட்டிற்காகத் தமது உயிரைத் தியாகம் செய்து பூத உடல் நீத்துப் புகழுடம்பு ஏய்தினர். தமமை ஸ்பார்ட்ட மன்னர் இழிவு படுத்தியபோதும், ஆல்கிபியாடிஸ் போன்றோர் நடந்து கொண்டபடி அவர் தம் தாய்நாட்டைக் காட்டிக்கொடுக்கத்

துணியவில்லை. இறுதிவரை நாட்டுப் பற்றிலேயே ஆழ்ந்து, தம்மாலான சேவைகளை அதற்குச் செய்துகொண்டே இருந்தார். அடக்குமுறை ஆட்சியில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தது ஒரு குறையே எனினும், அது ஸ்பார்ட்டர்களின் வாழ்க்கை முறையினால் இயல்பாகவே அவரிடத்தில் தோன்றியதேயன்றி வேறன்று. 'அப்பழுக்கற்ற தூய பொதுவாழ்க்கையை மேற்கொண்டு வாழ்ந்து, நாட்டுக்காகத் தம் உயிரையே தியாகம் செய்த பெருவீரன்' என்ற புகழுக்கு அவர் முற்றும் தகுதியானவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

15. இரண்டாவது அத்தீனிய இணைக்கூட்டரசு

பெலப்பொனீஷியப் போரின் இறுதியில் அத்தீனியப் பேரரசு குலைந்துபோயிற்று. அரசியல் துறையில் ஆதென்ஸின் செல்வாக்கு இங்ஙனம் ஒழிக்கப்பட்டதெனினும் வாணிகத் துறையில் இன்னும் அது சிறப்புற்று விளங்கியது. பல்வேறு நகரங்களோடு—சிறப்பாகக் கருங்கடலையொட்டிய நகரங்களோடு ஆதென்ஸ் இன்னும் வாணிக உறவு கொண்டிருந்தது. இதை அடிப்படையாகக்கொண்டு மீண்டும் ஒரு பேரரசை ஆதென்ஸ் அமைக்க முயன்றது. ஆனால் கி. மு. 387-இல் ஏற்பட்ட அன்டால்கிடாஸ் ஒப்பந்தத்தின்படிக் கிரேக்கர்களால் கைப்பற்றப்பட்ட நாடுகளில் பெரும்பாலானவை தனியே பிரிக்கப்பட்டுச் சுதந்திரம் வழங்கப்பட்டுவிட்டன. லெம்னஸ் (Lemnos), இம்ப்ராஸ் (Imbros), ஸ்கைரஸ் (Scyris) ஆகிய மூன்று இடங்கள் மட்டுமே ஆதென்ஸின் பேரரசில் இருக்க அனுமதிக்கப்பட்டன. இருப்பினும் ஆதென்ஸின் ஒருசில தலைவர்களின் அயரா உழைப்பாலும், அறிவுத் திறத்தாலும் மீண்டும் ஆதென்ஸ் ஓர் இணைக்கூட்டரசை அமைத்தது. இவ்வமைப்பு ஏற்பட உறுதுணையாயிருந்த தலைவர்கள் கோனன் (Conon), இஃபிக்கிராடிஸ் (Iphicratis), திராசிபியூலஸ் (Thrasybulus) ஆகிய மூவருமே யாவர்.

கொரிந்தியப் போரில் அடைந்த தோல்வியை ஈடுகட்டி மீண்டும் ஆதென்ஸ் பழைய நன்னிலைக்குவர உதவி செய்தவர் கோனன் என்ற தளகர்த்தராவர். பாரசீகர்களின் உதவியைப் பெற்று அவர் ஆதென்ஸின் மதிற்சுவர்களைப் புதுப்பித்தார். பைரியஸ் துறைமுகப் பட்டினத்தின் மதிற்சுவர்களையும் அவர் பலப்படுத்தினர். ஈஜியன் கடலில் அத்தீனியக் கப்பற்படைத் தலைமையை நன்கு நிலைநாட்டியவர் அவரே. அவருடைய முயற்சியினாலும் தூண்டுதலினாலேயுமே லெம்னஸ், இம்ராஸ், ஸ்கைரஸ், கியாஸ் ஆகிய நகரங்கள் அத்தீனியக் கூட்டுறவில்

சேர்ந்தன. அத்தீனிய முதல் இணைக்கூட்டரசை நிறுவுவதற்கு அரிஸ்டைடிஸ் எங்ஙனம் காரணமாயிருந்தாரோ அதே போலத் தான் இவரும் இரண்டாவது இணைக்கூட்டரசு நிறுவப்படுவதற்குப் பெரிதும் காரணமாயிருந்தார்.

இஃபிக்ராடிஸ் என்பார் ஆதென்ஸின் இராணுவத்தை நன்கு சீர்திருத்தி அமைத்தவர். ஆதென்ஸினுடைய படையில் பணியாற்றியவர்களெல்லாம் அதன் குடியுரிமையைப் பெற்ற வணிகர்களும், உழவவகளும், மற்றும் முக்கியத் தொழிலாளர்களுமாகவேஇருந்தனர். போர்க்காலத்தே அவர்கள் தங்கள்தொழிலை விட்டுவிட்டுப் போர்க்களத்திற்குச் செல்ல வேண்டி இருந்ததால் நாட்டின்வாணிகமும் வேளாண்மையும் பெரிதும் குன்ற ஆரம்பித்தன. இந்த நிலைமையைத் தடுக்க,ஊதியம்வாங்கிக்கொண்டுபடையில் பணிபுரிய முன்வந்த பலரை அவர் ஆதென்ஸின்தரைப்படையில் சேர்க்கலானார். ஆகையால் அத்தீனியக் குடிமக்கள், போர் நடைபெற்ற காலத்தில் நாட்டின் உற்பத்தியைத் தடையின்றி வளர்த்துவந்தனர். படைச் சேவகம் புரிவதினின்றும், விலக்களிக்கப்படுவதற்காக அக் குடிமக்கள் அரசுக்கு ஒரு வரியைச் செலுத்தினர். மேலும் படைவீரர்கள் இடம்விட்டு இடம் செல்வதற்கு எளிதாக இருப்பதற்காக அவர் படைக்கருவிகளின் பளுவைக் குறைத்தார். புதிய இலேசான பாத அணிகளை அவர் வீரர்களுக்கு ஆக்கிக் கொடுத்தார். அவை இஃபிகிராடிஸின் காலணிகள் எனப் பெயர்பெறலாயின. கி. மு. 391-இல் நடைபெற்ற கொரிந்தியப் போரில் கிரேக்கர்கள் வெற்றிபெற்றதற்கு இவரது இராணுவச் சீர்திருத்தங்களே முக்கிய காரணங்கள் எனலாம்.

திராசிபியூலஸ் எனும் தலைவர், ஆதென்ஸில் ஜனநாயகத்தை மீண்டும் கொணர்ந்தவர் எனப் புகழப்படுகின்றார். சர்வாதிகாரிகள் முப்பதின்மரின் ஆட்சியை ஆதென்ஸில் ஒழித்துக் கட்டியவர் அவரே. பணக்காரர்களின் ஆதிக்கத்தைப் பூண்டோடு ஒழித்தபின் ஜனநாயக நிறுவனங்களை அவர் ஆதென்ஸில் ஏற்படுத்தினர். அதன்பின் ஆதென்ஸுக்கு உண்மையாக இருக்கக்கூடிய நேச நாடுகளைக் கண்டுபிடித்து அவற்றை அத்தீனிய ஆதிக்கத்துள் கொண்டுவரப் பலவகையில் முயன்றார். இங்ஙனம் தாஸோஸ், லெஸ்பாஸ், பைஸான்ஷியம் ஆகிய நகரங்களின் நட்பினை ஆதென்ஸுக்கு அவர் பெற்றுத் தந்தார். லெஸ்பாஸ் நகரத்தில் சர்வாதிகாரம் செய்துவந்த ஸ்பார்ட்டத் தளகர்த்தரை அவர் கொன்றார். பாம்பீலியா (pamphilia)

வரைக்கும் முன்னேறிச் சென்று கி. மு. 359-இல் அவர் பகைவ ரொருவனால் கொல்லப்பட்டார்.

இங்ஙனம் மேற்கூறிய மூன்று பெருந்தலைவர்களின் முயற்சி யால் அத்தீனிய இணைக்கூட்டரசு வேகமாக உருவாகிக்கொண்டு வரும் வேளையில்தான் அன்டால்கிடாஸ் ஒப்பந்தமானது அத னுடைய ஆசையில் மண்ணைப் போட்டது. மூன்று நகரங்களைத் தவிர வேறு நகரங்கள் யாவும் அத்தீனியக் கட்டுப்பாட்டினின்றும் விடுவிக்கப்பட்டன. எனினும் இரகசியமாக அது பல நாடுகளோடு நேச உடன்படிக்கைகளைச் செய்துகொண்டே வந்தது.

அத்தீனிய இணைக்கூட்டரசு அமைக்கப்படுவதற்கு உடனடி யான காரணம், பைரியஸ் (Piraeus) பட்டினத்தின்மீது ஸ்பார்ட்டத் தளகர்த்தரான ஸ்போட்ரியாஸ் (Sphodrias) என்பவர் திடீரென்று தாக்குதல் நடத்தியதேயாகும். மற்றும் காட்மியா (Cadmea) நகரத்தை ஸ்பார்ட்டாவுக்கு விரோதமான தீபன் தலைவர்கள் கைப் பற்றிக்கொண்டதும், தங்களது சுதந்திரத்தை நிலைநாட்டிக் கொண்டதும் இதற்கு முக்கிய காரணங்களாகும். இவ்விரண்டு நிகழ்ச்சிகள் பற்றியும் சென்ற அத்தியாயத்தில் நாம் விரிவாகக் கண்டோம். கி. மு. 377–இல் ஆதென்ஸ் மேற்கண்ட இணைச் கூட்டரசை ஏற்படுத்தியது.

(1) இணைக் கூட்டரசின் நோக்கம்

கிரேக்க நகரங்களை ஸ்பார்ட்டாவின் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டுமென்பதே இவ்விணைக்கூட்டரசின் முக்கிய நோக்க மாகும். பாரசீக வல்லரசை எதிர்க்கவேண்டுமென்பது அத்தீனிய முதல் இணைக்கூட்டரசின் நோக்கமாயிருந்ததுபோல் ஸ்பார்ட்டக் கொடுங்கோன்மையை ஒழிக்கவேண்டுமென்பது இரண்டாவது இணைக்கூட்டரசின் தலையாய குறிக்கோளாய் அமைந்தது.

(2) இணைக்கூட்டரசின் அமைப்பு

கேலிஸ்ட்ராடஸ் (Callistratus) என்ற சொல்வன்மை மிக்க அரசியல் வித்தகரின் தூண்டுதலாலேயே இவ்விணைக்கூட்டரசு நிறுவப்பெற்றது. ஆரம்பத்தில் இவர் ஸ்பார்ட்டாவின் கொள்கைகளை ஆதரித்தவர். ஆனால் ஆதென்ஸில் பெரும் பான்மையோர் ஸ்பார்ட்டாவை எதிர்க்கிறார்கள் என்று தெரிந்த பின் இவர் தம் கொள்கைகளை மாற்றிக்கொண்டார். இவரது தூண்டுதலால் அமைந்த இந் நிறுவனத்தில், உறுப்புநாடுகள் ஒவ்வொன்றுக்கும் சுயேச்சை வழங்கப்பட்டது. முதல் இணைக் கூட்டரசில் இவ்விதம் சுயேச்சை வழங்கப்படாததினால் தான்

அது நாளடைவில் ஒரு பேரரசாக வடிதெடுத்தது எனப் பலரும் குறை கூறியதாலேயே ஆதென்ஸ் இத்தகைய கொள்கையைக் கடைப்பிடித்தது. ஆசியாமைனர்ப் பகுதியிலிருந்த கிரேக்க நகரங்களைப் பொறுத்தவரையில் அவைகள் பாரசீகரது ஆதிக்கத்தின் கீழ் விடப்பட்டன. எஞ்சிய நகர அரசுகளில் ஆதென்ஸ் எவ்வாற்றானும் தலையிடாது என்றும், அந்தந்த நகரத்தின் விருப்பத்திற்கேற்ற அரசாங்கத்தை அவை அமைத்துக் கொள்ளலாமென்றும் நேச நாடுகளின் உட்பகுதிகளில் அத்தீனியக் குடியேற்றமோ, ஆதிக்கமோ எவ் வகையிலும் ஏற்படா என்றும் ஆதென்ஸ் உறுதிமொழி வழங்கியது.

இவ்விணைக்கூட்டரசானது இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டது. ஆதென்ஸ் ஒரு பகுதியாகவும், இணைக்கூட்டரசுகளெல்லாம் சேர்ந்து இன்னொரு பகுதியாகவும் கருதப்பட்டன. ஆதென்ஸுக்கென்று ஒரு தனி மக்கள் மன்றமும், அதன் நேச நாடுகளுக்கென சினட்ரியான் (Synedrion) என்ற இன்னொரு சபையும் அமைக்கப்பட்டன. நேசநாடுகள்சபையில் சிறிய நாடுகளும், பெரிய நாடுகளும் ஒரேமாதிரியாக ஒரு பிரதிநிதியை அனுப்பிவைத்தன. ஆனால் அதில் ஆதென்ஸின் உறுப்பினர்கள் எவருமில்லை. இங்ஙனம் அத்தீனிய மன்றமும், நேசநாடுகளின் பொதுச் சபையும் சமமான அதிகாரங்களுடன் தனித்தனியே அமைந்து ஆதென்ஸில் இருந்து பணியாற்றின. தீர்மானம் ஒவ்வொன்றும் இரண்டு அவைகளிலும் நிறைவேற்றப்படவேண்டும். ஒரு மன்றத்தில் நிறைவேறிய தீர்மானத்தை இன்னொரு மன்றம் நிராகரிக்கலாம். இரண்டு சபைகளும் சேர்ந்து வாக்களித்தாலன்றி எந்த ஒரு காரியத்தையும் நிறைவேற்ற முடியாது. இணைக்கூட்டரசிற்குப் பொதுவான ஒரு கருவூலமிருந்தது. ஆதென்ஸிலேயே அதை அமைத்து அத்தீனியர்களே அதை நிருவகித்து வந்தனர். பொதுக் கருவூலத்திற்கு உறுப்புநாடுகள் வரியெதுவும் செலுத்தவேண்டியதில்லை. ஆனால் தானே மனமுவந்து ஒரு உதவித்தொகையை ஒவ்வொரு நாடும் வழங்கலாம். போர் ஏற்படுகின்ற காலத்தில் ஆதென்ஸே அதன் தலைமையை ஏற்கவேண்டும். ஏனைய நாடுகள் கப்பல்களையும் துருப்புகளையும் இயன்ற அளவுக்கு அளிக்கவேண்டும். இங்ஙனம் இக் கூட்டுறவில் சேர்ந்த நாடுகள் ஏறக்குறைய ஒன்றுக்கொன்று இணையாகத் திகழ வழிவகுக்கப்பட்டது.

(3) உறுப்பு நாடுகள்

இவ்விணைக்கூட்டரசில் எழுபது நாடுகள் சேர்ந்தன. முதன் முதலில் கியோஸ் (Chios), மைதிலின் (Mytiline), மிதிம்னை

(Methymna), பைஸான்ஷியம், ரோட்ஸ் (Rhodes) ஆகிய நகர அரசுகள் இதில் சேர்ந்தன. பிற்காலத்தே யூபியா (Euboea), தீப்ஸ் (Thebes), திரேஸ் (Thrac), கார்கிரா (Corcyra), பெரியா (Bherea), இபைராஸ் (Epirus) ஆகிய நாடுகள் இதில் சேர்ந்தன. ஆரம்பத்திலிருந்த இவ்வினைக்கூட்டரசு, கிரீஸ் நாட்டின் எல்லைக்கு அப்பாற்பட்ட ஹெல்லனீய நாடுகள் அனைத்துக்கும் பொதுவான நிறுவனமாக அமைந்திருந்தது. ஸ்பார்ட்டாவைத் தோற்கடிப்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட இவ்வினைக் கூட்டரசானது அந்த நோக்கம் நிறைவேறிய பின் இயல்பாகவே தனது பலத்தை இழந்தது. அதிக நாள் அதனால் நீடித்திருக்க முடியவில்லை.

கொள்கையளவில் பிற நேச நாடுகளின் தான் தலையிடுவ தில்லை என்று ஆதென்ஸ் ஒப்புக் கொண்டாலும், நடை முறையில் அது அவ்விதம் நடந்துகொள்ளவில்லை. இணைக் கூட்டரசின் நோக்கம் நிறைவேறியவுடன் அஃது தனது ஆதிக் கத்தைப் பிறநாடுகளில் நிலைநாட்ட முயன்றது. இரண்டாம் அதீனியப் பேரரசை அமைக்க அது முயன்றது. நேசநாடு களின் சபையானது வெறும் ஆலோசனை சபையாக மட்டுமே கருதப்பட்டது. ஆதென்ஸ் தனது தீர்மானங்களை வலியுறுத்தி அச் சபைமீது அவ்வப்போது திணிக்கவும் முயன்றது. மேலும் கப்பப் பணத்தையும் அஃது தனது நேசநாடுகளிடம் வசூலிக்க ஆரம்பித்தது. கி. மு. 358 வரையில் இவ்வினைக் கூட்டரசு தொடர்ந்து நீடித்தது. அதன்பின் மாசிடோனியாவைச் சேர்ந்த பிலிப் என்பார் அதைத் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டார்.

4. முதலாம் அத்தீனிய இணைக்கூட்டரசோடு ஒப்பீடு

கி. மு. 478 முதல் 404 வரை கிரீஸில் நிலவிய முதல் அத் தீனிய இணைக்கூட்டரசும், கி. மு. 377 முதல் 357 வரை நிலவிய இரண்டாம் அத்தீனிய இணைக்கூட்டரசும் பல வகை களில் வேறுபட்டனவாகும். முதலாவது கூட்டுறவின் நோக்கம் பாரசீகத்தின் வலுத்தாக்குதலை எதிர்கொள்வதும், அதன்பின் பாரசீகத்திற்குச் சென்று வலுத்தாக்கலில் ஈடுபடுவதுமாகும். அது உண்மையில் மிகவும் கடினமான காரியமென்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனால் இரண்டாவது கூட்டுறவின் நோக்கம் மிகவும் எளிமையானது. ஸ்பார்ட்டாவிடமிருந்து தங்களது சுயேச்சையைக் காப்பாற்றிக் கொள்வதே அதன் முக்கிய நோக்கமாயிருந்தது. முதலாவது கூட்டரசில் பொதுச் சபை, டீலாஸ் (Delos) நகரத்தில் அமைந்திருந்தது. ஆனால்

இரண்டாவது கூட்டரசில் நேசநாடுகளின் பொதுச்சபையும், அத்தீனிய மன்றமும் ஆதென்ஸ் நகரிலேயே அமைந்திருந்தன. முதல் கூட்டரசில், இரண்டாவதில் இருந்ததைப் போல நேச நாடுகளுக்கென்று தனிப்பட்ட சபை எதுவுமில்லை. இரண்டாம் கூட்டரசில் நேசநாடுகள் ஆதென்ஸுக்கு இணையாக அல்லது சமமாக நடத்தப்பட்டன. ஆதென்ஸ் தனது ஆதிக்கத்தைப் பிறநாடுகளின்மீது செலுத்தா வண்ணம் பல பாதுகாப்புகள் அதன் அரசியல் அமைப்பில் காணப்பட்டன. முதற் கூட்டரசில் ஏறக்குறைய 250 நாடுகள் சேர்ந்திருந்தன. ஆனால் இரண்டாவதில் ஏறக்குறைய 70 நாடுகள் மட்டுமே உறுப்புகளாய்ச் சேர்ந்தன. முதலாவதில் கலந்து கொண்ட நாடுகளெல்லாம் கடலாதிக்கத்தில் சிறந்த நாடுகள். ஆனால் இரண்டாவதில் சேர்ந்திருந்த நாடுகளில் சில தரையில் மட்டுமே ஆதிக்கம் பெற்றிருந்தவைகள். பியோஷியா, தெஸாலி, கார்கிரா போன்றவைகளே இதற்குச் சான்றுகளாகக் கூறலாம். முதலாம் கூட்டரசு ஜனநாயகத்தையும், கிரேக்கப் பண்பாட்டையும் பெரிதும் பேணி வளர்த்தது. ஆனால் இரண்டாம் கூட்டரசோ அரசியல் துறையிலும், கலைத்துறையிலும் பெரிய காரியங்கள் எவற்றையும் சாதிக்கவில்லை. முதலாம் கூட்டரசு 75 ஆண்டுகள் நீடித்தது. ஆனால் இரண்டாம் கூட்டரசு இருபத்தைந்தே ஆண்டுகளில் கலைந்தது. இங்ஙனம் நோக்கம், அமைப்பு, சாதனை, வீழ்ச்சி ஆகிய எல்லா வகையிலும் இருகூட்டரசுகளும், இருதுருவங்கள்போல் காட்சியளிக்கின்றன.

5. இணைக்கூட்டரசின் சாதனைகள்

இணைக்கூட்டரசானது ஸ்பார்ட்டாவை எதிர்த்து நிலத்திலும் நீரிலும் பல வெற்றிகளைப் பெற்றது. பெலப்பிடாஸ் என்னும் தீப்ஸ் நாட்டுத் தளகர்த்தர், ஸ்பார்ட்டப் படையொன்றைத் தெஜிரா (Tegyra) எனுமிடத்தில் எங்ஙனம் தோற்கடித்தார் என்பதையும், காப்ரியாஸ் (Chabrias) என்ற அத்தீனியக் கடல் தளபதி, ஸ்பார்ட்டர்களின் கப்பற்படையை நாக்ஸாஸ் எனுமிடத்தில் எங்ஙனம் தோற்கடித்தார் என்பதையும், அதன் விளைவாக ஈஜியத் தீவுகள் பல அத்தீனிய இணைக்கூட்டரசில் எங்ஙனம் சேர்ந்தன என்பதையும், டிமோத்யூஸ் என்ற தளகர்த்தர் பெலப்பொனீஷியத் தீபகற்பத்தை வலம் வந்து கார்கிரா, அகர்னேனியா போன்ற தீவுகளை எங்ஙனம் கூட்டுறவில் சேர்த்தார் என்பதையும் சென்ற அத்தியாயத்தில் கண்டோம்.

6. இணைக்கூட்டரசின் வீழ்ச்சி

தெஜிரா வெற்றிக்குப் பின் தீப்ஸ்நாட்டு மக்கள் வலிமையில் பெரிதும் நம்பிக்கை கொள்ளலாயினர். பியோஷியாவில் ஆதிக்கத்தைத் தனிப்பட்ட முறையில் நிறுவ அவர்கள் முயன்றார்கள். அதை எதிர்த்த பிளெடியா (Plateae), தெஸ்பியே (Thespiae) ஆகிய நகரங்களை அது தாக்கிக் கைப்பற்றிக் கொண்டது. இறுதியில் கிரோனியா (Chaeronia), ஆர்க்கோமினஸ் (Orchcominus) ஆகிய இரு நகரங்களைத் தவிர ஏனைய நகரங்கள் யாவும் தீப்ஸுக்கு உட்பட்டன. ஆதென்ஸின் தலைமையைத் தீப்ஸ் மெல்ல மெல்லப் புறக்கணிக்க ஆரம்பித்தது. ஸ்பார்ட்டாவுடன் ஆதென்ஸ் நிகழ்த்திய கடற்போரில் தீப்ஸ் ஆதென்ஸுக்கு உதவவில்லை. கப்பப் பணத்தையும் ஒழுங்காக அது கட்டத் தவறியது. எனவே கேலிஸ்ட்ராடஸ் (Callisratus) போன்ற பேச்சாளர்கள் தீப்ஸுக்கு விரோதமாக ஸ்பார்ட்டாவுடன் ஒரு நேச ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினர். அதன் விளைவாக ஆதென்ஸ் ஒரு சமாதான மாநாட்டைக் கூட்டியது. அதில் ஆதென்ஸ், ஸ்பார்ட்டா, தீப்ஸ் ஆகிய மூன்று நகரப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டார்கள். அதன் விளைவாக ஏற்பட்டதே காலியாஸ் சமாதானம் ஆகும். (கி. மு. 373) இதனுடைய ஷரத்துகளை நாம் ஏற்கெனவே விவரித்தோம். அம்மாநாட்டில் தனிப்பட்ட நகர அரசு எதுவும் ஏனைய நாடுகள் மீது மேலாண்மை செலுத்தக்கூடாது என்ற கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. லக்கோனியாவின் சார்பில் ஸ்பார்ட்டாவும், அட்டிகாவின் சார்பில் ஆதென்ஸும் சமாதானத்தில் கையெழுத்திட்டமை போன்றே பியோஷிய நாட்டின் சார்பாகத் தீப்ஸ் கையெழுத்திடலாமென எப்பமினண்டஸ் (Epaminondas) என்ற தலைவர் வாதித்தார். ஸ்பார்ட்ட மன்னர் அஜிஸிலாஸ் இவ் விவாதத்தை ஒப்புக்கொள்ள மறுத்தார். எனவே எப்பமினண்டஸ் கோபத்துடன் மாநாட்டைவிட்டு வெளியேறிச் சென்றுவிட்டார். இதைக் கண்ட, நிகர்த்த இரு நகர அரசுகளும் காலியாஸ் சமாதான உடன்பாட்டிலிருந்து தீப்ஸின் பெயரை நீக்கிவிட்டன. விரைவிலேயே தீப்ஸுக்கும் ஸ்பார்ட்டாவுக்கும் போர் மூண்டது. லியூக்ட்ரா (Leuctoa) எனுமிடத்தில் கி.மு. 371–இல் நடைபெற்ற போரில் எப்பமினண்டஸ், ஸ்பார்ட்டர்களை வென்றார். அதோடு அத்தீனிய இணைக்கூட்டரசும் கலைந்தது.


16. சிராக்யூஸின் சர்வாதிகாரிகள்

1. முதலாம் டயோனிஷியஸ்

"ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" என்ற பழமொழியானது கிரீஸுக்கு மட்டுமன்றி அதன் குடியேற்ற நாடுகளுக்கும் பொருந்துவதாயிருந்தது. பெலப் பொனீஷியப் போரின்போது தாய்நாடான கிரீஸில் ஸ்பார்ட்டாவும், ஆதென்ஸும் தமக்குள் ஒன்றுக்கொன்று சச்சரவிட்டுக் கொண்டு எங்ஙனம் அந்நியரான பாரசீகரைத் தங்களுடைய நாட்டுக்குள் வரவழைத்தனவோ அதே போன்று சேய்நாடான சிசிலியிலும் செஜஸ்டா (Segesta), செலினஸ் (Selinius) ஆகிய இருநகர அரசுகள் தம்முள் சச்சரவிட்டுக் கொண்டு கார்த்தஜீனியர்களான அந்நியரைத் தமது நாட்டுக்குள் வரவழைத்தன. தாய்நாட்டில் ஆதென்ஸுக்கு எதிராக ஸ்பார்ட்டா பாரசீகத்தின் உதவியை நாடியது போலவே சேய்நாட்டில் செலினஸுக்கு விரோதமாகச் செஜஸ்டா, கார்த்தஜீனியர்களின் ஆதரவை வேண்டியது. இருநாடுகளிலும் டோரியர்கள், அயோனியர்கள் ஆகிய இரு கிரேக்கக் குலங்களிடையேதான் சச்சரவு ஏற்பட்டது. ஆனால் தாய்நாட்டில் அந்நியர்க்கு அழைப்பு விடுத்தவர்கள் டோரியர்களாயிருக்க, சேய்நாட்டில் அயோனியர்களே அத்தகைய இழி செயலுக்குக் காரணமாயிருந்தனர்.

செஜஸ்டா என்ற அயோனியக் குடியேற்றமும் செலினஸ் என்ற டோரியக் குடியேற்றமும் கி. மு. 418-இல் ஒருமுறை தம்முள் சச்சரவிட்டுக்கொண்டு தாய்நாட்டில் தத்தம் குலத்தவர்களின் உதவியை நாடின. அதற்கேற்ப ஆதென்ஸ் செஜஸ்டாவுக்குச் சாதகமாக ஒரு படையை நிகியாஸ் என்ற தளகர்த்தர் வசம் அனுப்பிவைத்தது. ஸ்பார்ட்டா, கொரிந்து ஆகிய டோரிய நகரங்கள் சிராக்யூஸுக்கு உதவிகளை அனுப்பிவைத்தன. அத்தீனியர்கள் மிகக் கேவலமான முறையில்

தோற்கடிக்கப்பட்டுத் திரும்பினர். எனவே சிராக்யூஸும் அதனைச் சார்ந்த செலினஸும் சிசிலியில் மேன்மையுற்றன.



படம் 11

சிறப்பாக சிராக்யூஸின் புகழும் ஆதிக்கமும் ஓங்க ஆரம்பித்தன. முன்னரே கி மு. 480-இல் ஹிமிரா (Himera) எனுமிடத்தில

நடைபெற்ற பெரும்பாலோரில் சிராக்யூஸின் சர்வாதிகாரியான ஜேலான் (Gelon) என்பார், கார்த்தஜீனியர்களை முற்றிலும் முறியடித்துத் துரத்தியடித்திருந்தார். ஹாமில்கார் என்ற அவர்களின் தலைவரும் அப்போரில் மாண்டார். அதனால் ஏற்பட்ட அவமானத்தைப் போக்கிக் கொள்ள, தக்க தருணத்தைக் கார்த்தஜீனியர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். கி. மு. 410-இல் செலினஸும் செஜஸ்டாவும் மீண்டும் தம்முள் சச்சரவிட்டுக்கொண்டன. செஜஸ்டா நகர அயோனியர்கள் இம் முறை தம் தாய்நகரமான ஆதென்ஸின் உதவியை நாடவில்லை. ஏற்கெனவே கி. மு. 418-இல் அத்தகைய உதவியை நாடிப் பயனிலில்லாமற் போனதால் இப்போது அந் நகர் கார்த்தஜீனியர்களின் உதவியை நாடியது. ஹிமிராவில் அடைந்த அவமானத்தைத் துடைக்க, தக்கதொரு வாய்ப்புக் கிடைத்ததெனக் கருதிய கார்த்தஜீனியர்கள், செஜஸ்டாவின் அழைப்பை மனமுவந்து ஏற்றுக்கொண்டு சிசிலிக்கு ஒரு பெரும்படையை அனுப்பிவைத்தனர். வளர்ந்துவரும் சிராக்யூஸின் ஆதிக்கத்தை ஒழித்துச் சிசிலி முழுவதிலும் தமது செல்வாக்கை நிலை நாட்ட வேண்டுமென்பதே கார்த்தஜீனியர்களின் உண்மையான நோக்கமாகும்.

செஜஸ்டா, கார்த்தேஜ்நாட்டின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டு அதற்குக் கைம்மாறுகச் செலினஸுக்கு எதிராக உதவி கேட்டது. அதை ஒப்புக் கொண்ட கார்த்தஜீனியர்கள் ஹன்னிபால் (Hannibal) என்ற தளகர்த்தரின் தலைமையின் கீழ் ஒரு படையை அனுப்பிவைத்தனர். ஹன்னிபால், செலினஸ் நகரைத் தாக்கி எளிதிலேயே அதைக் கைப்பற்றிக் கொண்டதோடு அதன் மக்களனைவரையும் கொன்று தம் போர்வெறியைத் தீர்த்துக் கொண்டார். அதன்பின் அவர் கைப்பற்றிய தோடு அதன் குடிமக்களனைவரையும் கொன்றுகுவித்தார். அதில் வசித்துவந்தவர்களில் பாதிப்பேரைச் சிராக்யூஸின் கப்பற்படையானது காப்பாற்றி மெஸானு என்னுமிடத்துக்குக் கொண்டு சென்றுவிட்டது. எஞ்சியிருந்த மூவாயிரம் பேர்களையே ஹன்னிபால் தமது வாளுக்கிரையாக்கினர். கி. மு. 480-இல் ஏற்பட்ட தோல்விக்கு இங்ஙனம் அவர் கி. மு. 410–இல் ஈடுகட்டியதோடு தமது பாட்டனாரான ஹாமில்காரைக் கொன்ற சிராக்யூஸர்களை ஆயிரக்கணக்கில் கொன்று வஞ்சம் தீர்த்துக்கொண்டு மனநிறைவெய்தினர். இப் பெரு வெற்றியின் விளைவாக மேற்குச் சிசிலி முழுவதும் கார்த்தஜீனியர்களின் ஆதிக்கத்துக்குள் வந்தது.

கி. மு. 406-இல் கார்த்தஜீனியர்கள் அக்ரகாஸ் (Acragas) எனும் நகரைத் தாக்கினர். சிராக்யூஸுக்கு அடுத்தபடியாகச் சிசிலியிலிருந்த பெரியநகரம்அதுவே. அந்நகரை ஹான்னிபாலும் அவரது சகோதரரான ஹிமில்கோவும் (Himilco) ஒன்றுசேர்ந்து முற்றுகையிட்டனர். நகருக்குள் உணவுப் பொருள்கள் செல்வதை அவர்கள் அறவே தடுத்து நிறுத்திவிட்டனர். பட்டினியால் உடலும் உள்ளமும் சோர்வடைந்த அக்ரகாஸ்வீரர்கள், விரைவிலேயே கார்த்தஜீனியர்க்கு அடிபணிந்தனர் (கி. மு. 406). நகரை முற்றுகையிட்டுக்கொண்டிருந்தபோது ஹான்னிபால் இறந்துபோனர். எனவே ஹிமில்கோ போர்த் தளகர்த்தரானர். அக்ரகாஸ்மக்களிற் பலபேர் ஜேலா நகருக்குத் தப்பியோடிவிட்டனர். அதைக் கண்ட ஜேலாநகர மக்களுக்ககுக் கிலி பிடித்துக்கொண்டது. அக்ரகாஸுக்கு நேர்ந்த கதியே தங்கட்கும் நேரக்கூடுமென அன்னர் அஞ்சினர். அவர்கள் அஞ்சியதற்கேற்ப ஹிமில்கோ ஜேலாவை முற்றுகையிட்டார் (405 கி. மு.). இதைக் கண்ட சிராக்யூஸின் குடிமக்கள் அனைவரும் அஞ்சினர். ஜேலாவைப்பிடித்தபின் அடுத்தபடிக் கார்த்தஜினியர்கள் தங்களையும் தாக்குவர் என்பதை அவர்கள் நன்கு தெரிந்துகொண்டனர். நகரெங்கும் குழப்பமும் கொந்தளிப்பும் காணப்பட்டன. இக்குழப்பமான சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டுதான் டயோனிஷியஸ் என்ற வீரர், சிராக்யூஸில் தமது தனியாட்சியை நிறுவினர்.

டயோனிஷியஸ் சிராக்யூஸின் சர்வாதிகாரியாதல்

டயோனிஷியஸ் என்பார் எளிய குடும்பத்தில் பிறந்தவர். இளமையில் அரசாங்க அலுவலகத்தில் ஒரு எழுத்தாளராகப் பணியாற்றிக்கொண்டிருந்த அவர் அக்ரகாஸ் நகரைக் கார்த்தஜீனியர்கள் தாக்கியபோது, படையில் சேர்ந்து தமது தாய் நகருக்காக வீராவேசமாகப் போர்புரிந்தார். அதிலிருந்து அவரது புகழ் நாளுக்கு நாள் வளரலாயிற்று. சிராக்யூஸ் நாட்டு ஜனநாயகத் தலைவர்களின் பலவீனத்தைக் கண்ட டயோனிஷியஸ் அவர்களைத் துரத்திவிட்டு ஆட்சியைக் கைப்பற்ற எண்ணினர். படிப்படியாக அவர் தமது நோக்கத்தை நிறைவேற்றிக்கொண்டார்.

செலினஸ் நகரின் உதவிக்காகச் சிராக்யூஸால் அனுப்பப்பட்ட ஜனநாயகத் தளகர்த்தர்கள் வெறுங் கையுடன் திரும்பி வந்தபோது, டயோனிஷியஸ் அதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார். செலினஸ், அக்ரகாஸ் போன்ற

இடங்களில் சிராக்யூஸின் படைகள் தோல்வியுற்றதற்கெல்லாம் காரணமாயிருந்தவர்கள் ஜனநாயகத் தளகர்த்தர்களே என்றும், அவர்கள் நாட்டைக் காட்டிக்கொடுத்த நயவஞ்சகர்கள் என்றும் பொதுமக்கள்மன்றத்தில் அவர் காரசாரமாகப்பேசி, அத் தளகர்த்தர்கள் மீது அபாண்டமான பழியைச் சுமத்தினர். ஆபத்துக் காலத்தில் அறிவு வேலை செய்யாது என்பதற்கிணங்க அவரது ஆவேசப் பேச்சைப் பொதுமக்களும் பிரதிநிதிகளும் ஆமோதித்தனர். பழைய தளகர்த்தர்களை எல்லாம் பதவியி லிருந்து நீக்கிவிட்டுப் புதிய தளகர்த்தர்கள் பதின்மரை அம் மன்றம் நியமித்தது. அப் பதின்மரில் டயோனிஷியஸும் ஒருவர். இங்ஙனம் தளகர்த்தர் பதவியைத் தந்திரமாகப் பெற்றபின் அவர் தாமே தனித் தளபதி ஆகும் முயற்சியிலீடுபடலானார். தம் முடைய சக தளபதிகள் யாவரும் நாட்டுத் துரோகிகள் என்றும், அவர்களை நம்பினால் நாட்டை நட்டாற்றில் விட்டுவிட்டு நழுவி விடுவர் என்றும் அவர் தீவிரமாக மக்களிடையே பிரச்சாரம் செய்யலானார். தம்மோடு அவர்கள் ஒத்துழைக்க மறுப்பதாகவும் அவர் குறைகூறினர். இவற்றையெல்லாம் நம்பிய மன்றமானது பதின்மரடங்கிய தளகர்த்தர் குழுவைக் கலைத்துவிட்டு டயோ னிஷியஸையே நாட்டின் தனிப்பெரும் தளபதியாக நியமித்தது. அதன்பின் அவர், ஆதென்ஸில் பைசிஸ்டிராட்டஸ் என்ற தள கர்த்தர் எங்ஙனம் கபட நாடகமாடி ஒரு மெய்க்காப்பாளர் படையைப் பொதுமக்கள்மன்றத்திடமிருந்து பெற்றுக்கொண் டாரோ, அதே போலத் தமது எதிரிகள் தம்மைக் கொலை செய்ய முயல்கிறார்கள் என்ற ஒரு வதந்தியைக் கிளப்பிவிட்டு, 600 வீரரடங்கிய மெய்க்காப்பாளர் படையொன்றைப் பொதுமக்கள் மன்றத்திடம் வேண்டிப் பெற்றுக்கொண்டார் (406 கி. மு.). அதன் பின் அவரைக் கட்டுப்படுத்துவார் நாட்டில் எவரு மிலராயினர். வரம்பற்ற கோனாட்சியை அல்லது சர்வாதிகார ஆட்சியை அவர் தோற்றுவித்தார். கி. மு. 466-இல் ஜனநாயக வாதிகளால் ஒழிக்கப்பட்ட சர்வாதிகாரத்தை அவர் கி. மு. 406-இல் மீண்டும் கொணர்ந்தார். அங்ஙனம் கொண்டு வருவ தற்குச் சூழ்நிலை உதவியாயிருந்தது. சர்வாதிகாரியாகத் தம்மை ஆக்கிகொண்ட பின் அவர் ஜனநாயக நிறுவனங்களை அழிக் காமல் அப்படியே பாதுகாத்து வந்தார்.

ஜேலா நகரைக் கார்த்தஜீனியர்கள் தொடர்ந்து முற்றுகை யிட்டுவந்தனர். எனவே டயோனிஷியஸ் ஒரு படையுடன் அதை விடுவிக்கச் சென்றார். ஆனால் அவரால் ஒன்றும் முடிய வில்லை. எனவே ஜேலா, கெமரினா (Camarina) ஆகிய நகரங் களில் வாழ்ந்த குடிமக்களை எல்லாம் சிராக்யூஸுக்குப் போய்

விடும்படிக் கட்டளையிட்டுவிட்டு அவர் ஊர் திரும்பினர். தமது நிலையைப் பலப்படுத்திக்கொள்ள நினைத்து அவர் கார்த்தஜீனியர்களோடு ஒரு சமாதான ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார். அதன்படி செலினஸ், ஹிமிரா, அக்ரகாஸ் ஆகிய நகரங்களும், மேற்குச் சிசிலி முழுவதும் கார்த்தஜீனியர்களுக்குக் கொடுக்கப்பட்டன. அதற்குக் கைம்மாறாக டயோனிஷியஸை சிராக்யூஸின் மன்னராகக் கார்த்தஜீனியர்கள் ஏற்றுக்கொண்டனர். மத்திய சிசிலியிலிருந்த பண்டைய குடிமக்களுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. கார்த்தஜீனியரின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டு சிராக்யூஸின் நகரங்கள் கப்பம் கட்ட ஒப்புக்கொண்டன. இச் சமாதானம் ஐந்து ஆண்டுகள் நீடித்தது. இவ்விடைவெளிக் காலத்தைத் தமது கரங்களை நன்கு வலுப்படுத்திக்கொள்ள டயோனிஷியஸ் பயன்படுத்திக்கொண்டார்.

டயோனிஷியஸின் உள்நாட்டுக் கொள்கை

கார்த்தஜீனியர்களால் ஏற்படக்கூடிய அபாயத்தினின்றும் இங்ஙனம் தம்மைப் பாதுகாத்துக் கொண்ட டயோனிஷியஸ், தம்து நிலையைச் சிராக்யூஸிலும் சிராக்யூஸின் நிலையைச் சிசிலியிலும் பலப்படுத்திக்கொள்ளப் பல வகையிலும் முயன்றார். அவரது அயரா உழைப்பின் விளைவாகச் சிராக்யூஸ், மேலை நாட்டிலேயே செல்வாக்கிலும் ஆதிக்கத்திலும் ஈடும் எடுப்புமற்ற தோர் நகரமாக மாறியது.

முதலில் அவர் தமக்கென ஒரு வலுவான கோட்டையைக் கட்டிக்கொள்ள ஆரம்பித்தார். ஆர்டிஜியா (Ortygia) எனுமிடத்தில், திண்மையும் வன்மையும் கொண்ட பெரியதோர் கோட்டையை கட்டிக்கொண்டார். எதிரிகளின்மீது சுமார் இரு நூறு மீட்டர்முதல் முந்நூறுமீட்டர்வரையில் கற்குண்டுகளை எறியக்கூடிய பொறிகளை அவர் உண்டாக்கிக் கோட்டை மதிற்சுவர்களின்மீது அமைத்தார். எதிரிகளை நோக்கிச் சாடுதற்கான முற்றுகைத் தேர்களையும் (Siege Towers) அவர் முதன் முதலாகப் படைத்துத் தம் படையினிற் சேர்த்தார். ஏராளமான போர்க் கருவிகளை உற்பத்தி செய்து அவர் கோட்டைக்குள் சேமித்தார். அதோடு முந்நூறு கப்பல்களைக் கொண்ட கடற்படையையும் அவர் உருவாக்கினர். இங்ஙனம் எச் சமயத்திலும் பிற நாட்டுப் படையெடுப்பைச் சமாளிக்கவும், வேண்டுங்கால் பிற நாடுகளின் மீது வலியச் சென்று படையெடுக்கவும் போதுமான ஆயத்தங்களை அவர் செய்துகொண்டார். மற்றும் குடிமக்களின் ஆதரவைப் பெற அவர் சில வழிகளைக் கைக்கொண்டார். தம்மை ஆதரிக்க

முன்வந்த முன்நாள் பகைவர்களுக்கு அவர் நிறையச் சன்மானங்களை வழங்கினர். நண்பர்களுக்கும் நிறையப் பொன்னும் நிலபுலங்களும் வழங்கினர். தமது விரோதிகளிட மிருந்து பிடுங்கப்பட்ட நிலங்களையே அவர் தமது நண்பர்களுக்கு வழங்கினர். ஏராளமான அடிமைகளுக்கு விடுதலையளித்து அவர்களைக் குடிமக்களாக மாற்றி, தம்மை ஆதரிக்கின்ற ஒரு சிறுவகுப்பையே அவர் உருவாக்கிவிட்டார். ஒரு சமயம் அவரது எதிரிகள் ஒரு பெருங் கலகத்தைத் தோற்றுவித்தபோது மேற் கண்ட குடிமக்கள் அவருக்குப் பெரிதும் உதவினர். மற்றும் மெஸானே, ரீஜியம் ஆகிய இடங்களிலிருந்து எண்பது கப்பல்கள் அவருக்குத் துணையாக வந்தன. சிராக்யூஸ் கோட்டைக்குள் அவர் பதுங்கிக்கொண்டார். அவருக்குகந்த ஆதரவைக் கண்ட கலகக்காரர்கள் பின்வாங்கிவிட்டனர் (கி. மு. 430).

அயல்நாட்டுக் கொள்கை

தமது தலைநகரையும் தம்மையும் நன்கு பலப்படுத்திக் கொண்ட பின் டயோனிஷியஸ், கார்த்தஜீனியர்களைப் பார்த்து, சிசிலியிலிருக்கும் கிரேக்க நகரங்களுக்குச் சுதந்திரம் வழங்குமாறு கோரினர். கார்த்தேஜ் அவரது கோரிக்கையை மறுக்கவே பெரும் படையுடன் புறப்பட்டு அவர் கிரேக்க நகரங்களை ஒவ்வொன்றாக விடுவிக்கும் முயற்சியில் இறங்கினர். அதோடு இதாலியில் ஒரு சில இடங்களைக் கைப்பற்றித் தமது பேரரசில் சேர்த்தார். இங்ஙனம் கார்த்தஜீனியர்களைச் சிசிலியிலிருந்து விரட்டல், சிராக்யூஸை ஒரு பேரரசாக மாற்றியமைத்தல் ஆகிய இரண்டுமே அவரது வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படையாயிருந்தன. கார்த்தஜீனியர்களைச்சிசிலியிலிருந்து முற்றிலும் அகற்றிவிடுவது அவரது நோக்கமன்று என்றும், கார்த்தஜீனியரைப் பற்றிய அச்சம் மக்களிடையே இருந்தால்தான், தம்மை அவர்கள் சர்வாதிகாரியாக விட்டுவைப்பரென்று எண்ணிய அவர், வேண்டுமென்றே அவர்களை முழுமையாகத் தோற்கடிக்காமல் விட்டுவிட்டார் என்றும் உட்ஹவுஸ் (Wood house) என்ற ஆசிரியர் குறிப்பிடுகின்றார். ஓரளவுக்கு அவரது கூற்று உண்மை தான். நான்கு முறை கார்த்தஜீனியரைத் தாக்கிய அவர், அவர் களை முழுமையாக ஒரு தடவையாகிலும் வெல்லவில்லை. ஒரு முறை அவர், இத்தாலிமீது படையெடுத்து ஒருசில இடங்களைக் கைப்பற்றினர். வாழ்நாள் முழுவதும் அவர் போர் செய்த வண்ணமாயிருந்தார்.

முதலாம் பியூனிக் போர் (கி. மு. 397)

கி. மு. 397–இல் அவர் முதன் முறையாகக் கார்த்தஜீனி யரின் ஆதிக்கத்திலிருந்த நகரங்களைத் தாக்கினர். மோட்யா

(Motya), எரிக்ஸ் (Eryx) ஆகிய இரு நகரங்களை அவர் கைப் பற்றினர். அப்போது முற்றுகைத் தேர் போன்ற நூதனமான போர்க் கருவிகளை அவர் கையாண்டார். அடுத்து கேடானி (Catane) எனுமிடத்துக்கருகில் சிராக்யூஸின் கடற்படையைக் கார்த்தஜீனியர்கள் வென்றனர். சிராக்யூஸ் முற்றுகையிடப் பெற்றது. டயோனிஷியஸ், நகருக்குள் சிக்கிக்கொண்டு வெளிவர இயலாமல் தவித்தார்.

ஸ்பார்ட்டாவின் உதவியை அவர் கோரினர். அதையொட்டி 32 கப்பல்கள் சிசிலிக்கு வந்தன. திடீரென மலேரியாக் காய்ச்சல் படைகளில் எங்கும் பரவ ஆரம்பித்தது. கார்த்த ஜீனியர் பலர் மாண்டனர். அவர்களது படைகளில் கலவரம் ஏற்பட்டது. இதைப் பயன்படுத்திக்கொண்டு சிராக்யூஸ் படைகள் முன்னேறித் தாக்கி எதிரிகளை முறியடித்தன. இரகசிய உடன்படிக்கை ஒன்றின்படி ஹிமில்கோவும் அவரது கூலிப்படையினரும் உயிரோடு தப்பியோட அனுமதிக்கப்பட்டனர். கார்த்தஜீனியர்கள் சிசிலியின் மேற்குக் கோடிக்குப் போய்விட வேண்டுமென்றும் சிராக்யூஸின் தனித் தலைவராய் டயோனிஷியஸ் ஆளவேண்டுமென்றும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

இரண்டாம் பியூனிக் போர்

கி. மு. 392-இல் தமக்கு உட்பட்டிருந்த ஒரு சில கிரேக்க நகரங்களோடு டயோனிஷியஸ் இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடத்தியதை அறிந்த கார்த்தேஜ், மாகோ (Mago) எனும் தளகர்த்தர் வசம் ஒரு படையை சிராக்யூஸுக்கு அனுப்பியது. அவரை எதிர்க்க டயோனிஷியஸ், சிசிலியின் ஆதிக்குடிகளான சிசல் என்பவர்களின் தலைவரான அகிரிஸ் (Agyris) என்பாரோடு ஒரு நேச ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டார். சிசல் போர் வீரர்கள் மிகவும் வீராவேசத்துடன் போரிட்டனர். இறுதியில் மாகோ சமாதானத்தை நாடினர். டயோனிஷியஸால் வற்புறுத்தப்பட்ட கொள்கைகளை மாகோ ஏற்றுக்கொண்டார். அவற்றின் படி சிசிலியிலிருந்த கிரேக்க நகரங்கள் அனைத்தும் நேர்முக மாகவோ மறைமுகமாகவோ சிராக்யூஸின் ஆதிக்கத்தின் கீழ் வந்தன. கார்த்தஜீனியர்கள் சிசிலியின் மேற்குக் கோடிக்குச் சென்றுவிட்டனர். சிசல் வகுப்பினர் டயோனிஷியஸின் நேரிடையான ஆளுகைக்குட்பட்டனர். டாரோமீனியம் (Tauromenium) என்ற கோட்டையை டயோனிஷியஸ் பெற்றார். உடனே அங்கு வாழ்ந்த சிசல்குடிகளை எல்லாம் துரத்திவிட்டுத்

தமது படைவீரர்களையும், குடிமக்களையும் டயோனிஷியஸ் அங்குக் குடியேற்றினர். இங்ஙனம் சிசிலியின் நடுப்பகுதியும் கிழக்குப் பகுதியும் அவரது ஆட்சியின் கீழ் வந்தன.

இதாலியப் படையெடுப்பு

கிரேக்கச் சிசிலியில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிய பின் டயோனிஷியஸ், இதாலிய நாட்டின்கண் நிறுவப்பெற்றிருந்த கிரேக்கக் குடியேற்றங்களைக் கைப்பற்ற விரும்பினர். ரீஜியம் (Rhegium) என்ற கிரேக்கக் குடியேற்ற நாட்டின்மீது அவர் முதலில் படையெடுத்தார். லூக்கானியர்கள் (Lucanians) என்ற இதாலிய சுதேசிக் குடிகளோடு அவர் கிரேக்கக் குடியேற்ற நாடுகளின் கூட்டுப்படைகளை எல்லிபோரஸ் (Elliporus) என்னுமிடத்தில் தோற்கடித்தார். அதன்பின் அவர் ரீஜியத்தைக் கைப்பற்றிக்கொண்டார் (கி. மு. 387). ஆங்கே கைப்பற்றப்பட்ட ஆயிரம் கைதிகளை விடுவித்து அவர் மக்களிடம் நற்பெயர் வாங்கிக்கொண்டார். அதைத் தளமாகக் கொண்டு மேலும் தமது ஆதிக்கத்தை வளர்த்துக்கொள்ள அவர் திட்டமிட்டார். அதன்படியே கி. மு. 378-இல் அவர் க்ரோடன் (Croton) என்ற இடத்தையும் பிடித்துக்கொண்டார். இங்ஙனம் தென் இத்தாலி முழுவதும் டயோனிஷியஸின் வசமாயிற்று. அதன் பின் ஏட்ரியாடிக் கடற்கரையோரமாகச் சிசிலியின் வாணிகத்தை வளர்க்க விரும்பி அவர் அங்கே பல குடியேற்றங்களை நிறுவினர். வடக்கே ஹெட்ரியா (Hedria) என்னுமிடத்தில் ஃபாரோஸ் தீவுகள் (Iflyriau) போன்ற ஒருசில குடியேற்றங்களையும் அவர் நிறுவினர். மொலாசியா (Molassia) நாட்டு மன்னரோடு ஒரு நட்புடன்பாட்டையும் அவர் செய்துகொண்டார்.

மூன்றும்பியூனிக் போர் கி. மு. 383-378

வடக்கே டயோனிஷியஸ் வெற்றிவாகை சூடிக்கொண்டிருந்தபோது, கார்த்தஜீனியர்கள் மாகோ என்பாரின் தலைமையில் ஒரு படையைச் சிராக்யூஸுக்கு எதிராக அனுப்பினர். டயோனிஷியஸ் விரைவினில் திரும்பி எதிரிப்படைகளோடு கபாலா (Cabala) எனுமிடத்தில் போரிட்டு ஒரு பெருவெற்றியைப் பெற்றார். மாகோ என்பார் அப் போரில் உயிரிழந்தார். ஆனால் சிலநாட்கள் கழிந்தவுடன் கரோனியன் (Cronion) எனுமிடத்தில் நடைபெற்ற போரில் டயோனிஷியஸ் முற்றிலும் தோற்றோடினர். பின்னர் ஏற்பட்ட சமாதானப்படி ஹாலிகஸ் (Halicus) நதிக்கு மேற்கேயிருந்த நாடுகளனைத்தையும் டயோனிஷியஸ் கார்த்தஜீனியருக்கே திருப்பிக் கொடுத்து

விட்டார். செலினஸ்நகரும் மீண்டும் கார்த்தஜீனியருக்குக் கிடைத்தது.

நான்காம் பியூனிக்போர் கி. மு. 368

மூன்றும் பியூனிக் போரில் தாம் இழந்த நாடுகளை மீட்பதற்காக டயோனிஷியஸ் மீண்டும் கார்த்தஜீனியரை எதிர்த்துப் போரிலிறங்கினர். செலினஸ் என்ற கிரேக்கக் குடியேற்றத்தை அவர் கைப்பற்றினர். கம்பேனியின் (Companion), என்டெல்லா (Entella) முதலிய இடங்களையும் வென்றார். எலினியன்எரிஸ் (Elynian Eris) என்ற நகரத்தையும் அதோடு சேர்ந்த ட்ரெபெனன் (Drepanon) என்ற துறைமுகத்தையும் அவர் பிடித்துக் கொண்டார். அடுத்து அவர் கார்த்தஜீனியர்களின் உயிர்நாடியென விளங்கிய லிலிபியம் (Lilybaeum) என்ற நகரைத் தாக்கினர் (கி. மு. 368). ஆனால் அவரது படைகள் வெற்றி எதுவும் பெறவில்லை. மற்றும் ட்ரெபெனன் எனுமிடத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது கப்பற்படையின் பெரும்பகுதியைக் கார்த்தஜீனியர்கள் அழித்துவிட்டனர். எனவே டயோனிஷியஸ் பின்வாங்கினர்.

இங்ஙனம் அவர் ஓயாது போரிலீடுபட்டதன் விளைவாகச் சிராக்யூஸ் ஒரு பேரரசாக மாறியது. அப் பேரரசில் சிசிலியின் பெரும் பகுதியும், இதாலியின் பெருவிரல் எனக் கருதப்படும் தென்கோடிப் பாகமும் அவரது நேரிடையான ஆளுகைக்குட் பட்டிருந்தன. சிசிலியின் மேற்குமுனையில் எரிக்ஸ் (Eryx), மோட்யா (Motya) போன்ற இடங்களை அவர் கைப்பற்றினரெனினும் மீண்டும் கார்த்தஜீனியர்களே அங்கு ஆதிக்கம் செலுத்துவதை ஒப்புக் கொண்டார். எனவே எஞ்சிய சிசிலியில் செலினஸ், அக்ரகாஸ், ஜேலா, கெமரினா, லியோந்தினி, மெசானா, ஹிமிரா ஆகிய முக்கியமான நகரங்கள் அவரை மன்னராக ஏற்றுக் கொண்டன. சிராக்யூஸ், சிசிலியப் பேரரசின் தலைநகராய்த் திகழ்ந்தது. தெற்கு இதாலியில் ரீஜியம், லாக்ரி, க்ரோடன், தூரியை (Thurii) ஆகிய சிறந்த நகரங்கள் அவரது நேரிடை ஆளுகைக்குட்பட்டிருந்தன. இதாலியின் கிழக்குக் கடற்கரையோரமாக அவரால் கைப்பற்றப்பட்ட இடங்கள் அவரது மேலாண்மையை ஏற்றுக் கொண்டு கப்பம் கட்டிவந்தன. இங்ஙனம் சிராக்யூஸைச் சார்ந்து வாழ்ந்து வந்த நாடுகளில் வட இதாலியிலிருந்த ஹாட்ரியஸ் அன்கோனா (Ancona) என்ற நாடுகளும், மத்திய இதாலியிலிருந்த டீயானம் (Teanum) என்ற நாடும், ஆர்ப்பி (Arpi), அயாபிஜியா (Iapygia)

என்ற தென் இதாலிய நாடுகளும் முக்கியமானவைகளாகும். மற்றும் ஏட்ரியாடிக் கடலிலிருந்த ஃபாரோஸ் தீவுகளும், வட கிரீஸிலிருந்த மொலாசியா என்ற நாடுகளும் டயோனிஷியஸின் இறைமையை ஒப்புக் கொண்ட சார்புநாடுகளாகும் (Depenclencias).

டயோனிஷியஸின் சாதனைகள் பற்றிய மதிப்பீடு

கி. மு. 367-இல் டயோனிஷியஸ் அகால மரணமடைந்தார். அவரது மரணத்துக்குக் காரணம், அவரால் அஞ்சப்பட்ட சதிகாரர்களின் கத்தியன்று; அவரது கவிதைகளே அவருக்கு எமனாக வந்தன. நல்ல கவியுள்ளம் படைத்த கல்விமானாகிய அவர் தமது ஓய்வு நேரங்களில் துன்பியல் நாடகங்களையும், கவிதைகளையும் பொழுதுபோக்காக எழுதி அவற்றைத் தேசீய விழாக்களில் படித்துக்காட்டிப் பாராட்டைப் பெறுவது வழக்கம். அத்தகைய விழாக்களில் நடைபெறும் கவிதைப் போட்டியிலும் அவர் கலந்து கொள்வார். கி. மு. 367-இல் ஆதென்ஸில் நடைபெற்ற லெனியா (Lenaea) எனும் அத்தீனிய விழாவொன்றில் அவர் தமது அரிய படைப்பான "ஹெக்டாரின் மீட்பு" [The Ransom of Hector] என்ற துன்பியல் நாடகத்தை அரங்கேற்றினர். அதைப் பாராட்டிய விழா நிர்வாகிகள் அவருக்கு முதற் பரிசை வழங்கினர்கள். அதைக் கேட்ட டயோனிஷியஸ் தமது வாழ்க்கையின் குறிக்கோளை அடைந்துவிட்டது போல் உணர்ந்தார். அவரது உள்ளத்தில் உவகை வெள்ளம் பெருகெடுத்தோடியது. தமது களிப்பைத் தமது நண்பர்களோடு பகிர்ந்துகொள்ள விரும்பிய அவர் பெரிய விருந்தொன்றுக்கு ஏற்பாடு செய்தார். நடைபெற்ற விருந்தில் அவர் அளவுக்கு மீறிக் குடித்துவிட்டார். மகிழ்ச்சி அவரது கண்களை மறைத்து விட்டது. 'அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு' என்ற பழமொழிக்கிணங்க அளவுக்கு மீறிய மது அவருக்குக் காய்ச்சலை உண்டாக்கியது. அக் காய்ச்சலே அவரைக் கொன்றது. சர்வாதிகாரி என்று பெயரெடுத்த டயோனிஷியஸ் வாழ்நாளில் பெற்ற பெருமையை விடப் பேரு முன்னில் பெற்ற புகழே அதிகம். அவரது இளமைக் காலந்தொட்டே கவிதை எழுதுவது அவரது பொழுதுபோக்காயிருந்தது. ஆரம்பத்தில் அவரது பாடல்கள் அவ்வளவு சிறந்தனவாக இலவே எனத் தெரிகிறது. ஃபிலோக்சீனஸ் (Philoxenus) என்ற மெருங் கவிஞரிடம் அவர் ஒரு முறை தமது கவிதைகளைப் படித்துக்காட்டி அவை எப்படியிருக்கின்றன என வினவினர். 'மிக மிக மட்டம்' எனப் பதிலளித்தார், பாவலர் பெருமான். வெகுண்ட மன்னர்

அவரைத் தண்டித்துச் சுரங்கங்களில் வேலை செய்யுமாறு ஆணையிட்டார். அடுத்த நாள் அவர்தம் செய்கைக்காக வருந்திக் கவிஞரை விடுதலை செய்தார். சின்னட்கள் கழித்து டயோனிஷியஸ் மீண்டும் கவிதைகளைப் படித்துக் காட்டி அவரது அபிப்பிராயத்தைக் கேட்டார். கவிஞர் நேரிடையாக அதற்கு மாற்றம் எதுவும் கூறவில்லை. 'என்னை மீண்டும் சுரங்க வேலைக்கே அனுப்பி விடுங்கள்' என்று மட்டுமே அவர் புகன்றார். ''நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே'' என்று அடித்துக் கூறுகின்ற நக்கீரர் பரம்பரை தமிழ் நாட்டிற்கு மட்டுமன்றிப் பண்டைய கிரேக்கருக்கும் பொருந்துமென்பது அறிந்து இன்புறற் பாற்று. ஆரம்பத்தில் இங்ஙனம் கேலி செய்யப்பட்ட டயோனிஷியஸ் பிற்காலத்தில் மெருகிட்ட ஒரு பெருங் கவிஞராய் மாறிப் பரிசுகளையும் பெற்றார் என்பதைப் பார்க்கும்போது ''முயற்சி திருவினையாக்கும்'' என்ற குறள் மொழிக்கு அவர் தக்கதோர் எடுத்துக்காட்டா யிருப்பதையே நாம் காண்கிறோம். இலக்கிய மேதைகள், கவிஞர்கள் ஆகியோரை அவர் பெரிதும் ஆதரித்தார். பிளேடோ (Plato) என்ற தத்துவ மேதையை அவர் தமது அரண்மனையில் சிலகாலம் தங்கவைத்து உபசரித்தார். அவரது சர்வாதிகார ஆட்சி முறையை அத் தத்துவஞானி கண்டித்தார். அதனால் சினமடைந்த அவர், பிளேடோவை அடிமையாக விற்றுவிட்டாரென்றும், ஆனால் வேறொரு செல்வர் அவரைப் பணங் கொடுத்து மீட்டு விட்டாரென்றும் கிரேக்கரிடை ஒரு கதை உலவுகிறது.

கலையரங்கில்மட்டுமன்றி அரசியலரங்கிலும் டயோனிஷியஸ் முதற் பரிசு பெற்றவர் எனலாம். ஏனெனில் அவரது காலத்தே அவருக்கு இணையான ஒரு வல்லரசர் ஐரோப்பாவிலேயே இல்லை. போர் முனையில், அவர் ஈடும் எடுப்பும் அற்ற போர் வீரராய்க் காட்சியளித்தார். எதிரிகளின் மீது பாருங்கற்களை எறியக்கூடிய கல்லெறிகவண் ஒன்றையும், பாதுகாப்புடன் கோட்டைவரை சென்று அதை முற்றுகையிடுவதற்கு வசதியாக அமைக்கப்பட்ட முற்றுகைத் தேர்களையும், புதுமுறையாய்ப் படைத்துப் போர்களில் அவற்றைப் பயனபடுத்திய பெருமை அவர்க்கே உரியதாகும். அவரது தரைப்படையும் கடற்படையும் மிகவும் வன்மையுடையனவாய் விளங்கின. கார்த்தஜீனியர்கள் அவரிடம் தம் கைவரிசையைக் காட்ட இயலவில்லை. வெகுதூரத்தில் இருந்த இதாலிய நாடுகளும் அவரிடம் பரிவு காட்டின. பரந்த பேரரசொன்றை முதன் முதலாகச் சிராக்யூஸுக்குச் சமைத்துத் தந்தவர் அவரே ஆவர். அவரது ஆட்சிக் காலமான 38 ஆண்டுகளும் போர்க்கலையில் ஒரு புதிய சகாப்தம்

எனக் கருதத் தக்கவை. தரைப்படையையும், கடற்படையையும் ஒன்றுக இயக்கி இரண்டையும் ஒன்றைப் போல் போரிடச் செய்யும் கலையில் அவருக்கிணை அவரே எனலாம். அவரது கப்பல்கள் அவரது முந்தையோர் கட்டியவைகளைவிடப் பெரியன வாக இருந்தன. கடற்படையிலிருந்த கல்பல்களின் எண் ணிக்கையும் அவர் காலத்து அதிகரிக்கப்பட்டது. அவரது கோட்டைகள் எதிரிகளைத் திகைக்கச் செய்யும் திண்மையுடை யனவாய் விளங்கின.

வன்முறையின் அடிப்படையில் அவரது ஆட்சிமுறை அமைந்திருந்த போதிலும், அவர் சிராக்யூஸின் பழைய அரசியல் அமைப்பை அப்படியே வைத்துப் பாதுகாத்தார். தமது ஒப்பற்ற திறமையாலும், அரசியல் சாதுரியத்தாலும், அவர் தமது நாட்டில் நிலையான ஒழுங்கையும் அமைதியையும் ஏற்படுத்தினர். ஆனல் மக்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டன. ஒலிம்பிய விழா ஒன்றில் அவரது சர்வாதிகாரத்தைக் கண்டிக்கும்படி லிஸியாஸ் (Lysias) என்ற பேச்சாளர் கிரேக்க அரசுகளை எல்லாம் தூண்டினர். அதன் விளைவாக ஒரு கூட்டம் அவரது கூடாரத்தைத் தாக்கியது. விழாவுக்கு வந்தவர்கள் அவரது கவிதையைச் செவிமடுக்க மறுத்தனர். எனவே கிரேக்கர்களின் இயல்பான மரபுக்கு எதிராக நீந்தியவர் டயோனிஷியஸ் என் பதில் சிறிதும் ஐயமில்லை.

அவரது தாக்குதல்களுக்கு இலக்கான இதாலிய — சிசிலிய நாடுகள் பலவீனமடைந்துவிட்ட காரணத்தாலேயே நாளடை வில் அவை அங்கு வசித்துவந்த சுதேசிகளுக்கும், பின்னர் ரோமானியர்களுக்கும் எளிதில் இரையாக நேர்ந்தன.

டயோனிஷியஸ் உயர்ந்த குறிக்கோள்கள் எவையும் இல்லாதவர். கிரேக்க நாகரிகத்தைப் பிற நாடுகளில் பரப்ப வேண்டும் என்ற இலட்சியங்கள் எவையும் அவரது படை யெடுப்புகளுக்குக் காரணமாயமையவில்லை. சுயநலமொன்றே அவரது போர்களுக்கெல்லாம் காரணமாயிருந்தது. அவர் நினைத்திருந்தால் கார்த்தஜீனியர்களைச் சிசிலியிலிருந்து முழுமை யாக வெளியேற்றியிருக்கலாம். ஆனல் அவர் வேண்டுமென்றே அவர்களைச் சிசிலியின் ஒரு பகுதியில் விட்டுவைத்தார். எதிரிகள் அருகிலிருப்பதை எண்ணியாகிலும் ஏனைய கிரேக்கக் குடியேற்ற நாடுகள் தமது வல்லரசை எதிர்க்காமலிருக்க வேண்டும் என்பது அவரது செய்கைகளின் உட்கிடக்கை எனத் தோன்றுகிறது.

சிசிலியக் கிரேக்கர்களை அவர் மிகவும் கடுமையாக நடத்தினார்; பல கிரேக்க நகரங்களை அழித்தார்; தெற்கு இதாலிய நாடுகளோடு கிரேக்கர்களுக்கு விரோதமாக நட்பு ஒப்பந்தங்களைச் செய்துகொண்டார். எனவே தமது ஆதிக்கத்தை எப்படியாவது பலப்படுத்திக்கொள்ளவேண்டும் என்று அவர் சதா எண்ணமிட்டுக்கொண்டிருந்தாரே ஒழிய, கிரேக்கரின் பொதுவான நாகரிகத்தைப் பரப்புது பற்றி அவ்வளவாகக் கவலைப்படவில்லை என்பது தெள்ளிதின் புலப்படுகின்றது. கார்த்தஜீனியர்களோடு அவர் போரிட்டது கிரேக்க நாகரிகத்தை அந்நியரிடமிருந்து காப்பாற்றுவதற்காகவன்று. தமது நிலையைப் பலப்படுத்திக் கொள்ளவே என்பது, அவர்கள்மீது அவர் எடுத்துக்கொண்ட அரைகுறை நடவடிக்கைகளிலிருந்து நன்கு தெரிகிறது.

"தமது சொந்த ஏகாதிபத்திய ஆசையை நிறைவேற்றிக் கொள்வதொன்றே அவரது செயல்கள் பலவற்றிற்கும் அடிப்படைக் காரணமாயிருந்தது. ஹெல்லனீயத்தின் காவலர் என அவரைச் சிறப்பித்துப் பேசுதல் எல்லாம் ஓரளவு மடமையேயன்றி வேறன்று" என உட்ஹவுஸ் எனும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அரசியல் துறையைப் பொறுத்தவரையில் இக் கூற்று உண்மைதான். கிரேக்க ஜனநாயக மரபுகளுக்கு விரோதமாக அவர் நடந்து கொண்டார். ஆனால் கிரீஸிலேயே பெரியாண்டர் போன்ற சர்வாதிகாரிகள் இருந்திருக்கிறார்கள். கிரேக்கக் கலைகளை அவர்கள் வளர்த்ததுபோல் ஜனநாயக அரசுகள் வளர்த்ததாகத் தெரியவில்லை. அதுபோலவே கலைத்துறையில் டயோனிஷியஸ் ஹெல்லனீயத்தின் காவலராக விளங்கினரென்றே கூறக்கூடும். கிரீஸில் நடைபெற்றுவந்த தேசியப் பந்தய விளையாட்டுகளில் கலந்துகொண்டு பரிசு வாங்கியதொன்றே அதற்கோர் பெருஞ்சான்றாகும். மற்றும் அவர் சிசிலியின் வரலாற்றை எழுதிய பிலிஸ்டஸ் (Philistus) எனும் வரலாற்று ஆசிரியரையும், பிலோக்னஸ் என்ற தத்துவ மேதையையும் ஆதரித்தார். அவரது அமைச்சரான டியோன் (Dion) என்பார் பிளேடோவின் சீடராவார். பிலோக்சீனஸ், பிளேடோ போன்றவர்களை அவர் துன்புறுத்தியதாக வழங்கப்படும் கர்ணபரம்பரைக் கதைகள், அவரது சர்வாதிகார ஆட்சி முறையை வெறுத்த கிரேக்கர்களின் கட்டுக்கதைகளாகவே இருக்கக்கூடும். எனவே ஓரளவு சுயநலமுள்ள ஹெல்லனீயவாதி என அவரை நாம் ஏற்றுக்கொள்ள இடமுண்டு.

அவரது ஆட்சியில் சிராக்யூஸ் சிருஞ் சிறப்பும் உற்றது. வரிகளை நிறைய மக்கள் மீது திணித்தார். என்றாலும் அவை

கூலைக் கொண்டு சிராக்யூஸின் பாதுகாப்பையே அவர் பலப்படுத்தினர். ரீஜியம் என்ற இடத்தில் வாழ்ந்த குடிமக்கூலையும் அஜில்லா (Agylla) என்ற இடத்துக் கோயிலையும் அவர் கொள்ளையடித்தார் என்று கூறப்படுகிறது. தமது நகரைப் பலப்படுத்தவே அவர் இத்தகைய செயல்களிலீடுபட்டதாகத் தெரிகிறது. ரீஜியவாசிகளிடம், அவர்கள் தங்கள் சொத்து கூலை எல்லாம் கொடுத்துவிட்டால் விடுவித்து விடுவதாகக் கூறிப் பின்னர் அவர்கள் தங்களது செல்வங்கூலை எல்லாம் கொடுத்துவிட்ட போது அடிமைகளாக விற்றுவிட்டார் என்ற நிகழ்ச்சியானது,அவரது கொள்கையின்மையையும், நயவஞ்சகத்தையும் புலப்படுத்துகிறது. இங்ஙனம் ஆதிக்கவெறி, சுயநலம், வஞ்சகம் போன்ற ஒரு சில குறைகள் அவரது பொதுவாழ்க்கையில் பளிச்சிடுகின்றன. என்ருலும் தனி வாழ்க்கையில் அவர் தூயவர். பொதுவாழ்க்கையிலும் தமது நாட்டையும் தம்மையும் பலப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற விருப்பத்தாலேயே ஒரு சில தகாத செயல்களில் அவர் ஈடுபட்டதாகத் தெரிகிறது. கி. மு. 367-இல் அவர் இறந்தபோது அவரது கருவூலம் நிறைந்திருந்தது. நிலையான அரசாங்கத்தையும், வெல்லுதற்கரிய படையையும் பெருஞ்செல்வத்தையும், விரிந்த பேரரசையும் அவர் தமது மக்களுக்குச் சொத்தாக விட்டுச் சென்ருர். கிரேக்க இனம் தோற்றுவித்த அறிவு சான்ற வல்லரசர்களில் அவர் தலைசிறந்தவர் எனில் அது சிறிதும் மிகையாகாது.

(2) டயோனிஷியஸின் வழித்தோன்றல்கள் (கி. மு. 367-356)

முதலாம் டயோனிஷியஸின் மரணத்துக்குப் பின் அவரது மூத்த மகனை இரண்டாம் டயோனிஷியஸ் பட்டத்துக்கு வந்தார். அவரது ஆதரவாளராக இருந்து முதன் மந்திரியாகப் பணியாற்றியவர் டியோன் என்னும் அறிஞராவர். ஆட்சிக் கலையில் பிளேடோவின்கீழ்க் கல்வி பயிலுமாறு செய்தார். வயது முதிர்ந்த பிளேடோ முதலில் வரைபட நூலைக் (Geometry) கற்பிக்கத் தொடங்கியபோது அரசருக்குத் தூக்கம்தான் வந்தது. இத்தகைய வெறுக்கத்தக்க கல்வியில் தம்மை ஈடுபடுத்திய அமைச்சரை அரசர் நாடுகடத்தினர். பிளேடோவும் சிராக்யூஸை விட்டு வெளியேறினர். இதைக் கேள்வியுற்ற டியோன் கி. மு. 356-இல் சிராக்யூஸ் திரும்பி வந்து டயோனிஷியஸைத் தோற்கடித்து நாட்டைவிட்டு ஓட்டினர். ஆனல் அவருக்கும் புதிதாய் நியமிக்கப்பட்ட ஹெராக்ளிடெஸ் (Heraclides)

என்பாருக்கும் ஏற்பட்ட பகைமை காரணமாக அவர் மீண்டும் நாடுகடத்தப்பட்டு லியோந்தினிக்குச் (Leontini) சென்றுவிட்டார். ஆனல் டயோனிஷியஸால் அனுப்பப்பட்ட கூலிப்படையினர், நாட்டைத் தாக்கியதால் மீண்டும் சிராக்யூஸ் அவரைத் திரும்ப அழைத்துக்கொண்டது. நாட்டின் தனிப்பெருந் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இச் சமயம் அவர், பிளேடோவின் இலட்சிய ஆட்சி முறையாகிய அறிவு சான்ற மேன்மக்களாட்சி முறையைப் (Aristocracy) பரிசோதனை செய்து பார்த்தார். தாம் அரசராக இருந்துகொண்டு உயர்குடிப் பிரபுக்களின் ஆலோசனைப்படி ஆட்சி நடத்தினர். ஆனல் கொஞ்ச நாட்களில் யாவரையும் துரத்திவிட்டுச் சர்வாதிகாரியைப் போல் தனியாட்சி செலுத்த ஆரம்பித்தார். அதைக் கண்டு பொருத மக்கள் கி. மு. 354-இல் அவரைக் கொலைசெய்துவிட்டனர். அதன்பின் நாட்டில் எங்குப் பார்த்தாலும் ஒரே குழப்பமாயிருந்தது. இறுதியில் பழைய டயோனிஷியஸையே மக்கள் மீண்டும் வந்து ஆட்சி புரியும்படி வேண்டிக்கொண்டனர். வேண்டுகோளை ஏற்று அவர் கி. மு. 346-இல் தம் நாய்நாடு திரும்பி ஆட்சிப் பீடத்திலமர்ந்தார்.

இரண்டாம் டயோனிஷியஸின் சர்வாதிகார ஆட்சி

நாடு கடத்தப்பட்டு வெளியேயிருந்த காலத்தில் டயோனிஷியஸின் குணத்தில் எவ்வித மாறுபாடும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. மீண்டும் அவர் கொடுங்கோலரைப் போலவே ஆட்சி புரிந்தார். நாட்டில் அமைதியை ஏற்படுத்த அவரால் முடியவில்லை. எனவே சிராக்யூஸ் மக்கள் லியோந்தினியை (Leontini) ஆண்ட ஹிக்கெடாஸ் (Hiketas) என்பவரை உதவிக்கழைத்தனர். அவர் கார்த்தஜீனியர்களின் துணைகொண்டு சிசிலியின் மீது படையெடுத்தார். இங்ஙனம் இரு நாடுகள் சேர்ந்து தங்கள் நாட்டில் படையெடுத்ததை விரும்பாத சிராக்யூஸ்மக்கள் கொரிந்து என்ற தங்கள் தாய்நாட்டிடம் முறையிட்டுக் கொண்டனர். உள்நாட்டில் தங்களை வருத்தும் கொடுங்கோலரிடமிருந்தும், வெளிநாட்டிலிருந்து படையெடுத்துவந்த கார்த்தஜீனியர்களிடமிருந்தும் தங்களைக் காப்பாற்றுமாறு சிராக்யூஸ் மக்களேயன்றிச் சிசிலியில் வாழ்ந்த அத்தனைக் கிரேக்க மக்களும் கொரிந்தை வேண்டிக் கொண்டனர். அவ் வேண்டுகோளை ஏற்றுக் கொரிந்து, டைமோலியன் (Timoleon) என்ற தளகர்த்தரை ஒரு படையுடன் சிசிலிக்கு அனுப்பிவைத்தது.

டைமோலியன்

டைமோலியன் என்பார் கொரிந்தில் வாழ்ந்த பிரபுக் குடும்பம் ஒன்றில் தோன்றியவர். அந் நகரில் கொடுங்கோலராயிருந்து வந்த டைமாபர்னஸ் (Timopharnus) என்பாரின் உடன் பிறந்தவர். தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட கூலிப்படையைக் கொண்டு கொரிந்தின் ஆட்சியைக் கைப்பற்றிய தமது சகோதரரை அவர் பெரிதும் கண்டித்தார். ஆனால் அவரது அறிவுரை பயனற்றுப் போனது. அதன்பின் கோபமடைந்த அவர் தம் சகோதரரையே கொன்றுவிட்டார். இப்படிப்பட்ட பண்பு வாய்ந்த அவரைத்தான் கொரிந்திய அரசு சிசிலிக்கு அனுப்பிவைத்தது. சிசிலிக்கு அவர் வந்தபோது ஹிக்கெடாஸ் என்பார் சிராக்யூஸை ஏற்கெனவே கைப்பற்றிக் கொண்டிருந்ததைக் கண்டார். இரண்டாம் டயோனிஷியஸ் ஆர்டீஜியாக் (Ortegia) கோட்டையில் ஒளிந்துகொண்டிருந்தார். சிசிலியக் கிரேக்கர்களின் துணையையும் பயன்படுத்திக்கொண்டு டைமோலியன் சிராக்யூஸைத் தாக்கி ஹிக்கெடாஸையும் அவரது கார்த்தஜீனிய நண்பர்களையும் நகரைவிட்டுத் துரத்திவிட்டார்; ஆர்டீஜியாவைத் தாக்கி டயோனிஷியஸைச் சிறைப்படுத்திக் கொரிந்துக்கு அனுப்பிவிட்டார்; சிராக்யூஸில் மீண்டும் ஜனநாயகத்தை ஏற்படுத்தினர். சர்வாதிகாரத்தின் சின்னமாக விளங்கிய ஆர்டீஜியாக் கோட்டையை அவர் உடைத்தெறிந்தார். ஆங்காங்கே நீதிமன்றங்களை நிறுவினர். குழப்பக் காலத்தில் நாட்டை விட்டு வெளியே சென்ற ஜனநாயக வாதிகளையெல்லாம் அவர் திரும்ப அழைத்துக் கொண்டார்.

கி. மு. 339–இல் கார்த்தனியர்களும் ஹிக்கெடாஸும் சிராக்யூஸ் மீது மீண்டும் படையெடுக்கப் புறப்பட்டனர். இதை யறிந்த டைமோலியன், அவர்கள் வரும்வரைக்கும் காத்திராது, கார்த்தஜீயர்களின் சொந்த நாட்டுக்குள்ளேயே புகுந்து செலினஸ் நகருக்கருகேயுள்ள கிரிமிஸஸ் (Crimicis) ஆற்றங் கரையில் கி. மு. 339–இல் தோற்கடித்தார். ஆற்றில் வந்த பெருவெள்ளமும், திடீரென ஏற்பட்ட புயலும் அவரது வெற்றிக்கு உதவி செய்தன. இதன் பின் கார்த்தேஜ் சமாதானத்தை நாடியது. கிரிமிஸஸ் நதிக்குக் கிழக்கேயிருந்த ஹலிக்கஸ் (Halycus) நதி, கிரேக்கச் சிசிலிக்கும் கார்த்தஜீனியச் சிசிலிக்கும் எல்லையாக ஒப்புக்கொள்ளப்பட்டது. இங்ஙனம் கார்த்தஜீனியர்கள் தோல்வியுற்றதைக் கண்ட லியோந்தினி மக்கள் கிளர்ந்தெழுந்து ஹிக்கெடாஸைச் சிறைபிடித்துக்கொண்டனர். கேட்டனே, மெசானு ஆகிய இடங்களில் ஆண்டு வந்த சர்வாதிகாரிகளுக்கும் இதே கதி நேர்ந்தது. ஏனைய நகரங்

களிலிருந்தும் சர்வாதிகாரிகள் துரத்தியடிக்கப்பட்டனர். கிரேக்கச் சிசிலி மீண்டும் விடுதலையடைந்தது. ஜனநாயக அரசாங்கங்கள், அங்ஙனம் விடுதலையடைந்த நகரங்களிலெல்லாம் ஏற்படுத்தப் பட்டன.

இங்ஙனம் சர்வாதிகாரிகளிடமிருந்தும் கார்த்தஜீனியர்களிட மிருந்தும் சிசிலியை விடுவித்த டைமோலியன் எட்டாண்டுகள் மிக்க புகழுடன் சிராக்யூஸை ஆண்டபின் தாமே பதவியைத் துறந்து சிராக்யூஸ் நகருக்கருகில் மக்களால் அளிக்கப்பட்ட ஒருசிறு நிலத்தில் வீடுகட்டிக்கொண்டு தனிப்பட்ட குடிமகனாக வாழ்ந்து வரலானார். கி. மு. 837-இல் அவர் இறந்தார். மேலைக் கிரேக்கத்தின் ஒப்பற்ற வீரரென்றும், எப்பமினண்டஸ், அலெக் ஸாண்டர் ஆகியவர்களுக்கடுத்தபடியாக வைத்து எண்ணப்படக் கூடிய அரசியல்மேதையென்றும் அவரை ஹோம் (Hoem) என்ற ஆசிரியர் கருதுகின்றார்.

17. தீப்ஸின் கூட்டுத் தலைமை

ஏறக்குறைய நூருண்டுக் காலமாகக் கிரீஸில் மாறி மாறித் தலைமை செலுத்திவந்த ஸ்பார்ட்டாவும் ஆதென்ஸும் காலியாஸ் ஒப்பந்தத்தின் மூலம், இனியும் அந்தக் கூட்டுத் தலைமைக்குப் பாடுபடுவதில்லை என ஒப்புக்கொண்டன. அந்நிய நாடுகளில் வைக்கப்பட்டிருந்த தங்களது துருப்புகளை எல்லாம் திருப்பி வரவழைத்துக்கொள்ள அவை சம்மதித்தன. அதனால் இவ்விரு நகர அரசுகளிடையே ஏறக்குறைய ஒரு வல்லமைச் சமநிலை ஏற்பட்டது. ஆனால் அச் சமநிலை நீடிக்கா வண்ணம் கிரேக்க அரசியல் வானில் இரண்டு விண்மீன்கள் தோன்றின. அவற்றிலொன்று தெசாலி நாட்டிலமைந்திருந்த பெரே (Pherae) நகரம். அந் நகர அரசின் தலைவர் ஜேஸன் (Jason), கிரேக்க நாடுகளனைத்தையும் தமது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர விரும்பினர். ஆனால் அது இயலவில்லை. மற்றொன்று பியோஷிய நாட்டிலமைந்திருந்த தீப்ஸ் நகரம். காலியாஸ் உடன்பாட்டில் கையொப்பமிடாமல், எப்போது எப்மினண்டஸ் (Epaminandas) வெளியேறினாரோ, அப்போ திருந்தே அதன் தலைமைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. பொருமை காரணமாக ஸ்பார்ட்டா பல முட்டுக் கட்டைகளைத் தீப்ஸின் முன்னேற்றப் பாதையில் உருவாக்கிய து. ஆனால் அவைகள் யாவும் தீப்ஸின் வளர்ச்சிக்குத் தூண்டுகோல் களாகவே அமைந்தன. இங்ஙனம் எவ்வளவு வேகமாகத் தீப்ஸ் வளர்ந்ததோ அவ்வளவு வேகமாக அதன் தலைமைப் பதவி கிரீஸில் சரிந்துவிட்டது. அதன் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் காரணமாயிருந்த ஒரே தலைவரான எப்பமினண்டஸின் மரணத் துக்குப் பின் அதன் தலைமையும் கிரீஸில் மாண்டது.

(1) பெரே நகர ஜேஸன்

பியோஷியாவில் உள்ள நகரங்கள் அனைத்தையும் தமது ஆதிக்கத்தின் கீழ் ஒன்றுபடுத்தத் தீப்ஸ நகரம் பாடுபட்டதே

போல் தெஸலி மாவட்டத்திலிருந்த நகர்களனைத்தையும் தமது தலைமையின் கீழ்க் கொண்டுவர பெரே எனும் நகர் முயன்றது. அந் நகரின் தலைவராய்த் தோன்றிய ஜேஸன் இம் முயற்றியில் வெற்றிபெற்றார். அவர் நல்ல போர்வீரர்; விடாமுயற்சியோடு நன்கு உழைக்கக் கூடியவர். அதே சமயம் அறிவாற்றலில் சிறந்த மேதையாகவும் அவர் திகழ்ந்தார். அவரது பேராசை தெஸாலியோடு நிற்கவில்லை. கிரேக்க நாடனைத்தையும் தம் குடைக்கீழ் முதலிற் கொண்டு வரவேண்டுமென்பதும், அதன் பின் பாரசீக நாட்டையும் படையெடுத்துத் தோற்கடிக்கவேண்டு மென்பதும் அவரது குறிக்கோளாகும். தமது குறிக்கோளை நிறைவேற்ற மிகச் சிறந்த குதிரைப்படை ஒன்றையும் ஒருசிறு கப்பற்படையையும் அவர் உருவாக்கினர். ஒப்பற்ற தம் குதிரைப் படையைக் கொண்டு பார்சலஸ் (Pharsalus), இபைரஸ் (Epirus), மாசிடோனியா ஆகிய நகர்கள் மீது தமது மேலாண்மையை ஏற்படுத்தினர். ஒன்றுபட்ட தெஸாலியின் தேகாஸ் (Tagos) அல்லது தளபதியாக அவர் தம்மை ஆக்கிக்கொண்டார். ஸ்பார்ட்டாவைத் தோற்கடித்துக் கிரீஸில் தம் தலைமையை நிறுவ அவர் விரும்பினர். தெர்மாபிலே கணவாயைக் கைப்பற்றிக்கொண்டு ஹெராக்ளியாவிலிருந்து ஸ்பார்ட்டர்களை விரட்ட வேண்டு மென்பது அவர் அவா. எனவே ஸ்பார்ட்டாவுடன் பகைமை பாராட்டிய தீப்ஸோடு அவர் ஒரு நேச ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார். ஸ்பார்ட்டா, காலியாஸ் உடன்பாட்டுக்கு விரோதமாகப் பியோஷியாவின் மீது படையெடுத்தபோது, தீப்ஸுக்கு உதவ ஒரு படையுடன் சென்றார். தக்க சமயத்தில் அவரது படைகள், லியூக்ட்ராப் போர்க்களத்துக்கு வந்து சேர்ந்தன. அதைக் கண்ட ஸ்பார்ட்டர்கள் பின் வாங்கினர். ஜேஸனின் உதவியின்றியே எப்பமினண்டஸ் வெற்றி பெற்றார். ஆனால் ஜேஸனது படைகளின் வருகையாலேயே ஸ்பார்ட்டர்கள் தன்னம்பிக்கையை இழந்தனர். அவரது தூண்டுதலாலேயே போர் நிறுத்தத்துக்குத் தீபர்கள் இணங்கினர் என்பது உண்மை. லியூக்ட்ராவிலிருந்து தமது நாட்டுக்குத் திரும்பி ஜேஸன் விரைவில் தெர்மாபிலே கணவாயைக் கைப்பற்றித் தமது நெடு நாளைய விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொண்டார். அக் கணவாயைப் பாதுகாத்து வந்த ஹெராக்ளியா (Heraclea) எனும் ஸ்பார்ட்டர்களின் கோட்டையை அவர் அழித்தார். பெரேவுக்குத் திரும்பிய பின் புதிய பந்தயத்திலும் திருவிழாவிலும் கலந்துகொண்டு தமது வலிமையை யாவருக்கும் தெரியச் செய்ய வேண்டுமென்றும், அவ் விழாவுக்குத் தலைமை வகித்துத் தமது இன்றியமையாமையைக் கிரேக்க மக்களுக்கு எடுத்து விளம்ப வண்டும் என்றும் அவர் பெரிதும் விரும்பினர். ஆனால் எதிர்

பாராத வகையில் கி. மு. 370-இல் கொலைசெய்யப்பட்டதால் அவரது திட்டமெல்லாம் கனவாகிப் போயின. ஏழு வாலிபர்கள் அவரிடம் ஒரு விண்ணப்பத்தைக் கொடுப்பதற்கு வருவது போல் வந்து திடீரெனத் தாக்கிக் கொன்றுவிட்டனர்.

ஜேஸன், தெஸலியில் தற்காலிகமாக ஒரு ஒற்றுமையை உருவாக்கினர்; அதன் மேன்மையை வளர்த்தார். ஆனால் அவரது மரணத்தோடு அதன் பெருமையும் நிலைகுலைந்தது. உயிரோடு அவர் நெடுநாள் வாழ்ந்திருந்தால் ஹெல்லாஸிலேயே தெஸலியை ஒரு முதன்மையான நாடாக ஆக்கியிருப்பா ரென்பது திண்ணம். ஆனால் அவரது அகால மரணத்தால் தெஸலிக்குப் பதிலாகத் தீப்ஸ் தனது வலிமையில் வளர லாயிற்று. வட கிரீஸின் தலைமையை அது விரைவிலேயே பெற்றது. ஸ்பார்ட்டாவின் வலிமை மிக்க எதிரியாக அது மாறியது.

(2) தீப்ஸ் நகர எப்பமினண்டஸ் வாழ்வும் சாதனைகளும்

தீப்ஸ் நகரின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாய் நின்றவர் எப்பமினண்டஸ் என்ற தனிப்பெரும் தளகர்த்தராவர். கிரீஸின் அரசியல் வானில் தூமகேதுவே போல் அவர் திடீர் எனத் தோன்றி ஒளிவிட்டுப் பிரகாசித்த பின் மறைந்தார். அவரோடு தீப்ஸின் பெருமையும் மறைந்தது, கி. மு. 418-இல் அவர் ஒரு பிரபுக் குடும்பத்தில் தோன்றினர். அவரும் பெலோப் பிடாஸ் (Pelopidas) என்ற தளபதியும் உயிர் நண்பர்கள். ஆனால் அவரைப் போல் பேராசை அற்றவர்; ஒழுக்கத்தில் சிறந்தவர். கி. மு. 379-இல் பெலோப்பிடாஸ், தீப்ஸ்நகரை ஸ்பார்ட்டாவின் ஏகாதிபத்தியத்தினின்றும் விடுவித்து ஏராள மான ஸ்பார்ட்டர்களை நயவஞ்சகமாகக் கொன்றபோது அதில் எப்பமினண்டஸ் கலந்து கொள்ளாமல் தனித்து நின்றார். ஆனால் சதித்திட்டம் வெற்றி பெற்றதெனத் தெரிந்தும் அவர் தமது நகரைக் காக்க முன்வந்தார். அவரது அப்பழுக்கற்ற நாட்டுப் பற்றைக் கண்ட தீப்ஸ் மக்கள் அவரைத் தம் தலைவராக விரை விலேயே ஏற்றுக்கொள்ளலாயினர். பெரிக்ளீஸைப் போன்று அவரும் அதிகம் பேசமாட்டார். ஆனால் பேச ஆரம்பித்தால் கடல்மடை திறந்தாலெனச் சொற்கள் பெருக்கெடுத்தோடும். நல்ல நாவன்மையும் சாதுரியமாகப் பேசும் சாமர்த்தியமும் கொண்டவர். இசைப் பயிற்சியோடு உடற்பயிற்சியிலும் அவர் சிறந்து விளங்கினர். தத்துவங்களிலும் அவருக்கு ஈடுபாடு உண்டு. பொருளாசை என்பது அவரிடம் மருந்துக்குமில்லை.

அதேபோலக் கட்சிப் பூசல்களிலும் அவர் அதிகம் ஈடுபடுவதில்லை. போராசை, அதிகார ஆர்வம் இவைகள் அவரிடம் எள்ளளவும் காணப்படாதனவாகும்.

காலியாஸ் சமாதான மாநாட்டில் (கி. மு 371) எப்பமினண்டஸ் தமது நாட்டிற்காக ஒப்புயர்வற்ற வகையில் வாதாடினர். பியோஷியா முழுவதிற்கும் தீப்ஸ் தலைமை வகிப்பதை விரும்பாத ஸ்பார்ட்ட மன்னர் அஜிசிலாஸ், தீப்ஸின் சார்பில் மட்டுமே எப்பமினண்டஸ் உடன்பாட்டில் கையெழுத்திடலாம் எனக் கூறினர். அட்டிகா முழுமைக்கும் ஆதென்ஸும், லக்கோனியா முழுமைக்கும் ஸ்பார்ட்டாவும் எங்ஙனம் பிரதிநிதிகளாக இருக்க முடியுமோ அங்ஙனமே பியோஷியா நாடுகளனைத்துக்கும் தீப்ஸ் பகராளாக இருக்கமுடியும் என அவர் வாதாடினர். தொன்றுதொட்டு ஆதென்ஸும், ஸ்பார்ட்டாவும் அட்டிகா, லக்கோனியா நாடுகளின் தலைமைப் பீடத்தை அனுபவித்து வந்துள்ளதாயும், தீப்ஸ் அப்படிப்பட்ட தலைமையைப் பியோஷியாவில் பெற்றிருந்ததாக வரலாறு இல்லை என்றும் கூறி அஜிசிலாஸ், எப்பமினண்டஸின் வாயை அடைக்க எண்ணினர். அவ் வாதத்தை ஏற்காமல் எப்பமினண்டஸ் பிடிவாதமாகத் தம் கட்சியையே வற்புறுத்தினர். "பியோஷியாவின் நகரங்கள் ஒவ்வொன்றும் சுதந்திரமாக வாழ நீர் விடமாட்டீரா?" என அஜிசிலாஸ் மன்னர் எப்பமினண்டஸை நோக்கிக் கர்ஜித்தார். "லக்கோனிய நகரங்கள் ஒவ்வொன்றும் சுயேச்சையாக வாழ நீர் விடமாட்டீரா?" என எப்பமினண்டஸ் பதிலுக்கு இரைந்தார். அதன்பின் கோபாவேசமாக அவர் மாநாட்டை விட்டு வெளியேறினர். உடன்பாட்டிலிருந்து தீப்ஸின் பெயர் நீக்கப்பட்டது.

எப்பமினண்டஸின் நடத்தையைக் கண்டு ஸ்பார்ட்டா பெரிதும் வெகுண்டது. அவரது ஆணவத்தை அடக்கியே தீரவேண்டுமென அஃது உறுதிபூண்டது. எனவே காலியாஸ் சமாதானத்தின்படி அது நடந்துகொள்ளவில்லை. ஆதென்ஸ் தான் ஒப்புக்கொண்டபடி பிக்ரேடிஸ் (Phicrates) எனுமிடத்திலிருந்து தமது துருப்புகளைத் திருப்பி அழைத்துக்கொண்டது. அதே போன்று போகிஸ் (Phocis) நாட்டில் போரிட்டுவந்த கிளியாம்புரோட்டஸ் (Cleombrotus) என்ற தமது மன்னரை ஸ்பார்ட்டா திரும்ப அழைத்துக் கொண்டிருக்கவேண்டும். ஆனால் ஸ்பார்ட்டா அங்ஙனம் செய்யவில்லை. அதற்குப் பதிலாகத் தீப்ஸ் நாட்டின் மீது படையெடுக்குமாறும், பியோஷியா நகரங்களைத் தமது பிடியினின்றும் விடுவிக்குமாறு

தீப்ஸைக் கட்டாயப் படுத்துமாறும் ஸ்பார்ட்டா, கிளியாம்புரோட்டஸுக்கு இரகசியமாக ஆணையிட்டது. இந்த நயவஞ்சகச் செயலை ஸ்பார்ட்டாவில் பூத்தூஸ் (Poothoos) என்ற ஒரே ஒருவர்தான் எதிர்த்தார். தீப்ஸ் சமாதான உடன்பாட்டை ஒப்புக்கொள்ளாததால், ஸ்பார்ட்டாவுக்கும் தீப்ஸுக்கும் போர் நீடிப்பதாகவே பொருள்படும் என ஏனைய ஸ்பார்ட்டர்கள் கருதினர்கள். பகையும் பொறுமையும் ஸ்பார்ட்டர்களின் கண்களை மறைத்தன. நியாயம் எது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. எனவே கிளியாம்புரோட்டஸ் தீப்ஸை நோக்கி விரைந்தார். போகிஸ் நாட்டிற்கும் பியோஷியாவுக்குமிடையில் இருந்த கிரோனியா (Chacronea) என்னுமிடத்தில் தங்கியிருந்த அவர் மேற்கேயிருந்து கொரோனியா (Coronea) வழியாகப் பியோஷியாவைத் தாக்கியிருக்கலாம். அப்படிச் செய்வாரென எதிர்பார்த்துத்தான் எப்பமினண்டஸ் தமது படையைக் கோரோனே கணவாய்க்கருகில் நிறுத்திவைத்திருந்தார். ஆனால் கிளியாம்புரோட்டஸ் அவரை ஏமாற்றிவிட்டுத் தெற்குப் புறமாகச் சென்று காருஸிஸ் (Charusis) துறைமுகத்தைக் கைப்பற்றிக் கொண்டார். பன்னிரண்டு தீபன் கப்பல்களும் அவர் கைகளில் சிக்கின. இங்ஙனம் தம்மைப் பின்னாலிருந்து தாக்காவண்ணம் தக்க பாதுகாப்பைச் செய்துகொண்டதோடு பெலப்பொனீஷுடன் தமது தொடர்பு துண்டிக்கப்படாவண்ணமும் அவர் ஏற்பாடு செய்துகொண்டார். அதன்பின் அவர் வடகிழக்காகப் புறப்பட்டுத் தீப்ஸ் நகரை நோக்கி விரைந்தார். இதை அறிந்த எப்பமினண்டஸ் தமது படைகளுடன் அவரை வழிமடக்க எதிர்திசையில் வந்தார். இருபடைகளும் லியூக்ட்ரா (Leuctra) என்னுமிடத்தில் சந்தித்தன (கி. மு. 371). அப் போர்க்களத்தில்தான் எப்பமினண்டஸ் தமது போர்த் தந்திரங்களைக் கையாண்டு பெரும்புகழும் வெற்றியும் எய்தினர். ஸ்பார்ட்டா மன்னரின் படையில் பதினேராயிரம் போர் வீரர்கள் இருந்தனர். ஆனால் தீப்ஸ் நாட்டுப் படையில் சுமார் ஆறுயிரம் போர் வீரர்களே இருந்தனர். இந்த எண்ணிக்கைக் குறைவைப் போக்க எப்பமினண்டஸ் ஒரு தந்திரம் செய்தார். சாதாரணமாக அமைக்கப்படும் எட்டுமுதல் பன்னிரண்டு அணிகளைக் கொண்ட படைப்பிரிவுகளுக்குப் பதிலாக ஐம்பது அணிகளைக்கொண்ட படைப்பிரிவை இடப்புறப்பகுதியில் அவர் அமைத்தார். எதிரியின் தரப்பில் வலப்புறப்பகுதிதான் திறமை வாய்ந்ததென அவருக்குத் தெரியும். எனவே அதை முதலில் தோற்கடித்துவிட்டால், பின்னர் ஏனைய படைப்பிரிவுகளை எளிதில் கலைத்துவிடலாமென எண்ணியே அவர் தமது இடப்புறப் படையை அங்ஙனம் பலப்படுத்தினர்.

தமது வலபுறப்பகுதிப்படையைப் பெலாப்பிடாஸ்(Pelopidas) எனும் தளகர்த்தர் வசம் ஒப்படைத்து எதிரியின் இடப்புறப் படைக்கு எதிரே நிற்கவைத்தார். மேடையைப் போன்று நன்கு சமமாக்கப்பட்ட குன்றின் உச்சிமீது அவர் தம் வலப்புறப் படையை நிறுத்திவைத்தார். தீப்ஸுக்குப் போகும் வழியில் அது இருந்தது. அதற்கு நேர் எதிரிலிருந்த ஒரு குன்றின்மீது எதிரியின் படைகள் நிறுத்தப்பட்டிருந்தன. அவைகள் வழக்கம் போல் நடுப்பகுதிஒன்றும், அதன் பக்கவாட்டில இடப்புற மும், வலப்புறமும்தனித்தனியே இரு அணிவகுப்புகளும் கொண் டனவா அமைக்கப்பட்டிருந்தன. இவை யாவற்றுக்கும் முன்னல் குதிரைப்படை நிறுத்தப்பட்டிருந்தது. போர் தொடங்கியவுடன் தமது படைகளின் வலப்பகுதியையும் நடுமையப் பகுதியையும் நின்ற இடத்திலேயே இருந்து போரிடும்படி எப்பமினண்டஸ் கட்டளையிட்டார். பியோஷியர்களுடைய குதிரைப்படை கிரீஸி லேயே தலைசிறந்த ஒன்று. அது ஸ்பார்ட்டப் படைகளின் நடுப்பகுதியைத் தாக்கிக் குழப்பத்தை உண்டாக்கியது. இதைக் கண்ட ஸ்பார்ட்டர்களின் வலப்புறப்பகுதிப் படையின் தளகர்த் தரானகிளியாம்புரோட்டஸ், தீபர்களின் படைகளைச் சுற்றிவளைத் துக்கொள்ள முயன்றார். ஆனல் பெலொப்பிடாஸ் என்ற தீபன் தளகர்த்தர், அவரை அங்ஙனம் செய்யவொட்டாமல் தடுத்து நிறுத்திவிட்டார். அதே சமயத்தில் எப்பமினண்டஸ், ஸ்பார்ட் டர்களுடைய மிகச் சிறந்த படைப்பகுதியாகிய வலப்புறப்பகுதிப் படையை முழுப்பலத்தோடும் எதிர்த்தார். அவரது படைப் பகுதியானது எதிரியின் படைப்பகுதியைவிடப் பன்மடங்கு நீளமும் திண்மையும் கொண்டதாய் இருந்தமையால், விரைவி லேயே ஸ்பார்ட்டர்களின் வலப்புறப்பகுதிப் படையை அது சிதற டித்தது. ஸ்பார்ட்டர்களின் நடுப்படையும் இடப்புறப்பகுதிப்படை யும் வலப்புறப்பகுதிப்படையின் உதவிக்கு வராவண்ணம் தீப்ஸின் குதிரைப்படை திறமையுடன் தடுத்துவிட்டது. எனவே ஸ்பார்ட் டப்படையின் சிறந்த பகுதி தோற்றோடியது. அதைக் கண்ட ஏனைய பகுதிகளும் நம்பிக்கையிழந்து கலைந்து போயின. கிளியாம்புரோட்டஸ் என்ற ஸ்பார்ட்ட மன்னர் போர்க்களத்தி லேயே உயிர்நீத்தார். எப்பமினண்டஸ், பேலங்க்ஸ், (Phalanx) என்றழைக்கப்படும் கனமான திண்மை வாய்ந்த படைப் பகுதியை அமைத்ததாலேயே இவ்வெற்றி கிட்டியதெனலாம். அவரது படையில் ஏறக்குறைய ஆயிரம் வீரர்களே உயிரிழந் தனர். இந்த வெற்றியைக் கேட்டுக் கிரீஸ் முழுவதுமே வியப்பில் ஆழ்ந்தது. ஸ்பார்ட்டாவிலிருந்து உதவிப்படை ஒன்று ஆர்க்கிடாம்ஸ் என்பாரது தலைமையில் லியூக்ட்ரஸை நோக்கி விரைந்தது. ஆனல் அதற்குள் ஸ்பார்ட்டப் படைகள்

தோற்றுத் திரும்பிவிட்டன். தெஸலி நாட்டுத் தலைவர் ஜேஸன் என்பார், தீப்ஸ் நாட்டுக்கு உதவி செய்ய ஒரு படையுடன் வந்தார். ஆனால் அவர் வந்து சேர்வதற்குள் தீபர்கள் வெற்றி பெற்றுவிட்டனர். ஸ்பார்ட்டர்களை மேலும் கொன்று குவிக்கா வண்ணம் தீபர்களை ஜேஸன் வேண்டிக் கொண்டார். அவரது வேண்டுகோளின்படியே தற்காலிகப் போர்நிறுத்த ஒப்பந் தத்தைத் தீபர்கள் ஏற்றுக் கொண்டு ஸ்பார்ட்டப் போர்வீரர்கள் தாயகம் திரும்ப அனுமதித்தனர். எனவே ஜேஸனது தலை யீட்டால ஸ்பார்ட்டப் படை முற்றிலும் அழிக்கப்பெருமல் தப்பியது.

இப் போரின் விளைவாக ஸ்பார்ட்டாவின் மேலாண்மை ஒழிந்தது. தீப்ஸின் ஆதிக்கம் வளரலாயிற்று. தீப்ஸ் மீது ஸ்பார்ட்டா படையெடுத்துவந்த நிலைமை மாறி, ஸ்பார்ட்டா மீது தீப்ஸ் படையெடுக்கும் காலம் தொடங்கியது. ஸ்பார்ட்டாவின் வரலாற்றில் முதன்முறையாக ஸ்பார்ட்ட வீரர்கள் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டமை இப் போர்க்களத்தில்தான் எனலாம். போர்க்களத்தின் அமைப்பு, படைத்தலைமை, படைகளின் தன்மை ஆகிய பலதுறைகளிலும் ஸ்பார்ட்டாவைவிடத் தீப்ஸ் ஒரு படி சிறந்ததென்பதை இப் போர்க்களம் நிரூபித்தது. இப் பலத்த அடியினின்றும் மீண்டும் ஸ்பார்ட்டா தனது பழைய நிலைமைக்கு வர இயலவில்லை.

தீபர்களின் மிகச் சிறிய படையொன்று ஸ்பார்ட்டர்களின் மிகப் பெரிய படையை வென்ற இச் செய்தியானது பெலப் பொனீஷியாவெங்கும் காட்டுத்தீ போல் பரவி, மக்களிடையே புதியதோர் உற்சாகத்தை ஏற்படுத்தியது. ஸ்பார்ட்டாவிற்கு எதிராய் ஆங்காங்கே கலகங்கள் கிளம்பின. ஸ்பார்ட்டப் பண நாயகத்துக்கு விரோதமாகவும், ஜனநாயகத்திற்கு ஆதரவாகவும் ஒவ்வொரு நகரத்திலும் புரட்சிகள் நடைபெற ஆரம்பித்தன. ஸ்பார்ட்டாவிற்கு உட்படாத ஆர்காஸ் நாட்டிலும், பணக்காரர்கள் கொல்லப்பட்டு ஜனநாயக அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது. மாண்டினிய நகரமானது "மெகலாப் பொலிஸ் (Megalopocis) எனும் பெயருடன் புதிய நகரமாக நிர்மாணிக்கப்பட்டது. புதிய ஆர்க்கேடியக் கூட்டரசிற்கு அது தலைநகராய் அமைந்தது. இங் ஙனம் பெலப்பொனீஷியாவில் எங்குப் பார்த்தாலும் ஜனநாயக இயக்கம் ஸ்பார்ட்டாவின் வீழ்ச்சிக்குப் பின் தழைத்தோங்க லாயிற்று. இதைக் காணும்போது உண்மையிலேயே பெலப் பொனீஷிய மக்கள் விரும்பிவந்தது ஜனநாயகத்தையேயன்றிப் பணநாயகத்தையன்று என்பதை நாம் நன்கு உணர முடிகிறது.

இங்ஙனம் ஜனநாயகத்திற்கு ஏற்பட்ட பேராதரவைக் கண்ட ஆதென்ஸ் மீண்டும் தனது ஆதிக்கத்தைக் கிரீஸில் நிறுவ எத்தனித்தது. காலியாஸ் சமாதானத்தை ஏற்றுக் கொள்ள முன்வந்த கிரேக்க நாடுகளையெல்லாம் அழைத்து அது ஒரு மாநாடு கூட்டியது. அம் மாநாட்டின் தீர்மானப்படி ஆதென்ஸ் மூன்றுவது கூட்டுறவு ஒன்றை உண்டாக்கியது. அதில் உறுப்பினராய்ச் சேர்ந்த ஒவ்வொரு நாடும் சுயேச்சை யாக வேண்டும். ஆபத்துக் காலத்தில் ஒன்றுக்கொன்று உதவ வேண்டும் என்று ஒப்புக்கொண்டன. இத்தகைய கூட்டுற வானது கொள்கையளவில் மிகச் சிறந்ததாக இருந்தபோதிலும் நடைமுறையில் அதனுல் ஒன்றையும் சாதிக்க இயலவில்லை. கிரேக்க நாடுகளின் தலைமையை ஏற்று அவற்றை வழிநடத்தத் தக்க ஆற்றலும் படை பலமும் ஆதென்ஸுக்கில்லை.

தீப்ஸைப் பொறுத்தவரையில் லியூக்ட்ரஸ் வெற்றியானது அதனுடைய தனித்தலைமைக்கு அடிக்கல் நாட்டியதெனலாம். இதன் பின்னர் தீப்ஸ், பெலப்பொனீஷியத் தீபகற்பத்தின்மீது நான்கு முறை படையெடுத்தது. பெலப்பொனீஷியாவில் ஸ்பார்ட்டாவின் தலைமையை ஒழிக்கவேண்டுமென்பதுதான் இப் படையெடுப்புகளின் அடிப்படை நோக்கமாகும். ஸ்பார்ட்ட ஆதிக்கத்தோடு தெசாலிய ஆதிக்கமும் ஒழிக்கப்பட வேண்டு மென்பது அவரது குறிக்கோளாகும்.

எப்பமினண்டஸின் முதல் படையெடுப்பு

லியூக்ட்ரஸ் போர்க்களத்தில் ஸ்பார்ட்டா தோல்வியுற்றதைக் கேட்ட பல, பெலப்பொனீஷிய நகரங்கள் ஸ்பார்ட்டாவிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தன. நாம் மேலே கண்டபடி ஆர்க்கேடியாவில் மாண்டினியா நகரமானது, மெகலாப்பொலிஸ் என்ற புதியதோர் நகரமாக வடிவெடுத்தது. அது ஒரு புதிய அரசியல் அமைப்பின் தலைநகரமாகவும் அமைந்தது. அதாவது சுமார் 40 கிராமங்கள் ஒருங்கிணைந்து, ஆர்க்கேடியக் கூட்டுறவு என்ற ஒரு நிறுவனத்தை ஏற்படுத்திக்கொண்டன. அக் கூட் டுறவை அமைப்பதற்குப் பெரிதும் காரணமாயிருந்தவர் மாண் டினிய நகரத்தைச் சேர்ந்த லைக்கோமிடிஸ் (Lycomedes) என்பவ ராவார். இக் கூட்டுறவைக் கலைத்துவிடவேண்டுமென ஸ்பார்ட்ட மன்னர் அஜிசிலாஸ் என்பார் மாண்டினியாவின்மீது படையெடுத்தார். அங்குதான் புதிய கூட்டுறவின் பொதுச்சபை அமைந்திருந்தது. ஆர்க்கேடியக் குடிமக்கள் அனைவரும் அதில் உறுப்பினராயிருந்தனர். ஒரு கரணமும் இன்றித் தங்கள் மீது

வலுத்தாக்கல் நிகழ்த்திய ஸ்பார்ட்டாவை முறியடிக்க அவர்கள் அனைவரும் திரண்டெழுந்தனர். தங்களுக்கு உதவி செய்யும்படி அவர்கள் முதலில் ஆதென்ஸைக் கேட்டனர். ஆதென்ஸிலிருந்து பதில் ஒன்றும் வராமல் போகவே, அவர்கள் அடுத்து, தீப்ஸ் நாட்டிற்கு வேண்டுகோள் விடுத்தனர். அதை ஏற்று எப்பமினண்டஸ், பெலொப்பிடாஸ் ஆகிய இரு தளகர்த்தார்களின் தலைமையில் ஒரு பெரும் படையைத் தீப்ஸ் ஆர்க்கேடியாவிற்கு அனுப்பிவைத்தது. எப்பமினண்டஸ் வருவதைக் கேள்வியுற்ற அஜிசிலாஸ் சற்று அஞ்சினர். லியூக்ட்ரஸ் போரில் நடைபெற்றது போல் ஏதும் நடந்துவிடக் கூடாதென எண்ணி அவர் பின்வாங்க ஆரம்பித்தார். அதைக் கண்ட எப்பமினண்டஸ், ஸ்பார்ட்டா நகரையே தாக்குவதென்ற முடிவிற்கு வந்தார். முதலில் அவர் ஸ்பார்ட்டாவிற்கு வடக்கேயுள்ள செல்லேஷியா (Sellasia) என்னுமிடத்தை நோக்கி விரைந்தார். ஆனால் அதைத் தாக்காமலேயே திரும்பித் தெற்கே வந்து அமிக்கலி (Amycalae) என்னுமிடத்தை அடைந்தார். அங்கிருந்து அவர் ஸ்பார்ட்டா நகரை நோக்கிப் புறப்பட்டார். ஸ்பார்ட்டாவின் வரலாற்றிலேயே அந்நிய நாட்டான் ஒருவன், ஸ்பார்ட்டாமீது நேரிடையாகத் தாக்க வந்தது அதுவே முதல் தடவையாகும். ஸ்பார்ட்ட மக்கள் அனைவரும்–முக்கியமாக ஸ்பார்ட்ட மகளிர் பலரும் பெரிதும் திகிலுற்றனர். ஸ்பார்ட்டாவே அல்லோலகல்லோலப்பட்டது. அங்கிருந்த ஹெலட்டுகள் புரட்சியில் இறக்கக்கூடுமென அனைவரும் பயந்தனர். ஆனால் நல்ல வேளையாக ஸ்பார்ட்டாவினுடைய நட்பு நாடுகளான கொரிந்து சிசியான், பில்லியாஸ் ஆகிய நகரங்கள் தக்க சமயத்தில் உதவிப்படையொன்றை அனுப்பி வைத்தன. ஸ்பார்ட்ட மன்னர் அஜிசிலாஸ் உடனே எப்பமினண்டஸை எதிர்கொள்ளப் புறப்பட்டார். புதிய படைகள் உதவிக்கு வந்ததைக் கண்ட எப்பமினண்டஸ் பின்வாங்கினர். ஆனால் வரும் வழியில் லக்கோனியாவை அவர் சூறையாடிக் கொண்டே சென்றார்.

அதன்பின் அவர் தம் படைகளை மெஸ்ஸானிய நாட்டிற்கு அழைத்துச் சென்று அந் நகரை ஸ்பார்ட்டர்களின் பிடியினின்றும் விடுவித்தார். அங்கு வாழ்ந்துவந்தவர்கள் அனைவரும் ஸ்பார்ட்டாவிற்கு அடிமைகளாய் இருந்தவர்கள்; ஸ்பார்ட்டாவிலிருந்து நாடுகடத்தப்பட்டு அங்கு வந்து குடியேறியவர்கள். எனவே, அவர்கள் எப்பமினண்டஸைத் தங்களை வாழ்விக்க வந்த தெய்வமென வணங்கிப் போற்றினர். இத்தோமி என்ற குன்றின் சரிவுகளில் மெஸ்ஸானி என்ற புதிய தலைநகரத்தை அவர்கள் எப்பமினண்டஸின் உதவியைகொண்டு

கட்டிக்கொண்டனர். ஸ்பார்ட்டாவிலிருந்து நாடுகடத்தப்பட்டுக் கிரீஸ் முழுவதிலும் அலைந்து திரிந்துகொண்டிருந்த அடிமைகள் அனைவரும், மெஸ்ஸானியாவுக்குத் திரும்பிவந்து உரிமை பெற்ற குடிமக்களாக உலவலாயினர். எப்பமினண்டஸ் ஒரு பெரும் விடுதலை வீரராகக் காட்சியளித்தார். ஸ்பார்ட்டா இதைக் கண்டு மனம் வெதும்பியது. இரண்டரை நூற்றாண்டுகளுக்கு முன்பே கைப்பற்றப்பட்ட மெஸ்ஸானியாவை அது இழந்தது. தன் கண் முன்னாலேயே தன்னால் வெளியேற்றப்பட்ட அடிமைகள் சுதந்திரக் குடிமக்களாய் உலவுகின்ற காட்சியைக் கண்டு அது வாளா சகித்துக்கொண்டிருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. எப்பமினண்டஸின் முதல் படையெடுப்பானது மூன்று வகைகளில் பெரும் சிறப்பைப் பெறுகிறது. முதலாவதாக ஆர்க்கேடியாவில் இருந்து ஸ்பார்ட்டா வெளியேற்றப்பட்டது. இரண்டாவதாக ஸ்பார்ட்டா நகரமே முதன் முதலாகப் படையெடுக்கப்பட்டது. மூன்றாவதாக மெஸ்ஸானியா சுயேச்சையடைந்தது.

இரண்டாவது பெலப்பொனீஷியப் படையெடுப்பு

கி. பி. 361-இல் எப்பமினண்டஸ் இரண்டாம் முறையாகப் பெலப்பொனீஷியா மீது படையெடுத்தார். இதற்குக் காரணம் என்னவென்பது திட்டமாகத் தெரியவில்லை. மெஸ்ஸானியர்கள் தங்கள் புதிய நகரத்தைக் கட்டிக்கொண்டிருக்கையில், ஸ்பார்ட்டர்கள் அதில் தலையிடாதவாறு அதன் கவனத்தை வேறு பக்கம் ஈர்ப்பதற்காகவே அவர் இங்ஙனம் படையெடுத்திருக்கக் கூடுமென ஒரு சிலர் கருதுகின்றனர். பெரும் சூறாவளியைப் போன்று அவர் தம் படைகள் பெலப்பொனீஷியாவை அலைக்கழித்தன. இதற்குள் ஸ்பார்ட்டாவும் ஆதென்ஸும் ஒரு நேசஒப்பந்தத்தைச் செய்துகொண்டன. எனவே வெற்றி எதையும் பெறாமலேயே எப்பமினண்டஸ் திரும்பிவிட்டார். ஸிகியான் என்ற ஒரு நகரத்தை மட்டும் தீப்ஸ்நாட்டோடு நட்புறவு கொள்ளுமாறு தூண்ட முடிந்ததேயன்றி வேறு பெரிய காரியம் எதையும் அவரால் சாதிக்க இயலவில்லை. எனவே தீப்ஸ் மக்கள் அவர் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்தனர். கி. மு. 368-இல் நடைபெற்ற தேர்தலில் மக்கள் அவரைப் பியோடார்க் (Boeotireh) என்னும் தளபதியாகத் தேர்ந்தெடுக்கவில்லை. லியூக்ட்ரஸ்வெற்றியிலிருந்து தொடர்ந்து வகித்துவந்த ஒரு பதவிபை அவர் இங்ஙனம் இழந்தார்.

வடக்கே நடைபெற்ற ஒரு சில நிகழ்ச்சிகள் எப்பமினண்டஸை மீண்டும் தீப்ஸ் நாட்டின் தலைமைப் பதவிக்குக்

கொண்டுவந்தன. பெரே நகரில் ஜேஸனுக்குப் பின் தலைவராக வந்த அலெக்சாண்டர் என்பார் மிகவும் கொடுங் கோலராய் விளங்கினர். பெரும் படையொன்றை வைத்துக் கொண்டு தெஸலிய நகரங்களை அவர் பயமுறுத்தி வந்தார். ஆதென்ஸ் அவருக்கு உதவி செய்துவந்தது. எனவே தெஸலியர்கள் தங்களுக்கு உதவி செய்யுமாறு தீப்ஸ்நாட்டை வேண்டிக்கொண்டனர். அதை ஏற்றுக்கொண்ட தீப்ஸ், பெலொப்பிடாஸ் என்ற தளகர்த்தரைக் கி. மு. 369-இல் தெஸலிக்கு அனுப்பிவைத்தது. அவருடைய ஆதரவின் கீழ் தெஸலிய நகரங்கள் யாவும் ஒரு இணைக் கூட்டரசாக அமைந்தன. அதன் பின் பெலொப்பிடாஸ், அத்தீனியச் செல் வாக்கு மாசிடோனியாவில் பரவுவதைத் தடுக்க விரும்பி அங்குத் தம் படையுடன் புறப்பட்டுச் சென்றார். அங்கு ஆட்சி புரிந்து வந்த பாதுகாப்பாளரைக் கட்டாயப்படுத்திப் பிலிப் என்ற இளவரசரைத் தீப்ஸ்நாட்டின் பிணையாகப் பெற்றுத் தம் தாயகம் திரும்பினர். திரும்புகிற வழியில் பெரே நகருக்கு விரைந்து அலெக்சாண்டரோடு போரிட்டார். அப் போரில் பெலோப்பிடாஸ் அலெக்சாண்டரால் சிறைசெய்யப்பட்டார். அவரை மீட்கத் தீப்ஸ் மேலும் ஒரு படையை பெரே நகருக்கு அனுப்பி வைத்தது. எப்பமினண்டஸ் அதில் ஒரு சாதாரண ஈட்டி தாங்கிய வீரராகப் பணியாற்றினர். தீபர்களுடைய படையை அலெக்சாண்டர் ஆதென்ஸின் உதவி கொண்டு தோற்கடித்து விட்டார். தீபர்களின் படை முழுவதும் அழிக்கப்படாமல் காப்பாற்றிய பெருமை எப்பமினண்டஸிற்கே உரியதாகும். மிக இக்கட்டானதோர் நிலையிலிருந்து அவர்களைப் பின்வாங்கச் செய்து எதிரிகளின் கைகளில் விழாமல் காப்பாற்றியவர் அவரே. உற்றுழி உதவிய அக் குடிமகனை நன்றியுள்ளம் படைத்த தீபர்கள் கி. மு. 367-இல் மீண்டும் தளபதியாகத் தேர்ந்தெடுத் தனர். உடனே அவர் ஒரு படையுடன் புறப்பட்டுச் சென்று, அலெக்சாண்டரைத் தோற்கடித்து, பெலொப்பிடாஸ் என்ற தமது தோழரையும் மீட்டுத் திரும்பினர்.

இங்ஙனம் தீப்ஸ் நகரமானது வடக்கே மாசிடோனியா விலும், பெரே நகரிலும் தனது மேலாண்மையை நிறுவ முயன்றது. மாசிடோனிய இளவரசரைப் பிணையாகக் கொண்டு வந்ததன் மூலம் அந் நாடு தீப்ஸிற்கு விரோதமாக எதிலும் ஈடுபடக் கூடாத நிலையில் வைக்கப்பட்டது. ஆனால் பெரே நகரின் தலைவர் இன்னும் சரிவர அடக்கப்படவில்லை. தெஸலிய நகரங்களை அவர் மீண்டும் தமது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு

வர முயன்றார். எனவே பெலொப்பிடாஸ் எனும் தீப்ஸ்தளகர்த்தர் அவரை எதிர்த்துச் சென்று கி. மு. 364–இல் கைனேசெபாலி எனுமிடத்தில் தோற்கடித்தார். வெற்றிப் போதையில் மயங்கிய அவர், பெரே நகரின் தலைவரைத் தம் கையாலேயே குத்திக் கொல்ல விரைந்து அவரைத் துரத்திக் கொண்டே நெடுந்தூரம் ஓடினார். அங்ஙனம் ஓடுகையில் தகுந்த சமயம் பார்த்து, பெரே நகரத் தலைவரின் மெய்க்காப்பாளர் ஒருவர் அவரைக் கொன்று விட்டார். கைரஸ் என்ற பாரசீக மன்னருக்கு நேர்ந்த கதியே இவருக்கும் நேர்ந்தது. இவர் தாய் நாட்டிற்குச் செய்த பணிகள் பலப்பல. எப்பமினண்டஸ் என்பாரோடிணைந்து அவர் பல போர்களில் வெற்றி கண்டவர். தீப்ஸ் நகரை ஸ்பார்ட்டர்களின் பிடியினின்றும் விடுவித்தவரும் அவரே. லியூக்ட்ரஸ் போர்க்களத்தில் பெரு வெற்றி ஏற்படக் காரணமாயிருந்தவர்களில் அவரும் ஒருவர். மாசிடோனியா வரை சென்று தீப்ஸின் ஆதிக்கத்தை நிலை நாட்டியவர்; நல்ல குதிரைப் படைவீரர்; எல்லாவற்றிற்கும் மேலாகச் சுயநலமற்ற ஒரு தேச பக்தர்.

மூன்றுவது பெலப்பொனீஷியப் படையெடுப்பு 366 கி. மு.

லெக்கோமீடஸ் என்ற ஆர்க்கேடிய நாட்டுத் தலைவர், தமது நாட்டைப் பிற நாட்டவரின் பிடியினின்று முழுவதுமாக விடுவித்துக் கொள்ள விரும்பினர். தம்முடைய விடுதலைக்கு உதவி செய்த தீப்ஸ்நாட்டின் பிடியினின்றும் கூட விடுபட அவர் எண்ணினர். அதைத் தடுக்க எண்ணிய எப்பமினண்டஸ் மூன்றும் முறையாகப் பெலப்பொனீஷியாவை நோக்கிப் படையெடுத்தார். ஆனால் இரண்டாம் படையெடுப்பைப் போலவே இதுவும் தோல்வியில் முடிந்தது. அக்கீயா நகரத்தை அவர் வென்றார் எனினும் விரைவில் அதையும் அவர் இழந்தார். ஆர்க்கேடியா, தீப்ஸிற்கு எதிராக ஆதென்ஸோடு ஒரு நேச ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது. இங்ஙனம் தன்னுடைய விரோதிகளுக்கு உதவி செய்துவந்த ஆதென்ஸை எவ்வாறேனும் ஒடுக்கவேண்டுமென எப்பமினண்டஸ் திட்டமிட்டார். அதற்காக அவர் ஒரு கப்பற்படையை அமைக்க முயன்றார். ஆனால் அம் முயற்சி பலிக்கவில்லை. ஏனெனில் இயற்கையாகவே தீப்ஸ் கடல் வாழ்விற்குத் தகுதியற்றதோர் நாடு. அது எப்பொழுதுமே, கடல் வன்மையில் சிறந்திருக்கவில்லை. ஆதென்ஸிற்கெதிராக அது கடற்படையை வளர்க்க விரும்பியது; புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக் கொண்ட கதையாக முடிந்தது.

நான்காவது பெலப்பொனீஷியப் படையெடுப்பு (கி. மு. 362)

லெக்கோமீடஸ் என்ற பெருந்தலைவரின் மரணத்திற்குப் பின்னர் ஆர்க்கேடியாவில் இரண்டு கட்சிகள் தோன்றின. ஒரு கூட்டத்தவர் மாண்டினியா என்ற நகரத்தைத் தலைமையாக ஏற்றுக் கொண்டனர். மற்றொரு கூட்டத்தவர் டீஜியா (Tegea) என்ற நகரத்தைப் பின்பற்றலாயினர். மாண்டினியா நகர் ஸ்பார்ட்டாவோடு நட்புடன்பாட்டைச் செய்துகொண்டது. ஆனல் டீஜியா நகரோ தீபர்களின் உதவியை நாடி நின்றது. எப்பமினண்டஸ், டீஜியாவிற்கு ஆதரவாகவும், தீப்ஸின் ஆதிக்கத்தை வெறுத்த ஏனைய நகரங்களுக்கு விரோதமாகவும் நான்காம் முறையாகப் பெலப்பொனீஷியா மீது படையெடுத்தார். திடீரெனத் தாக்கி ஸ்பார்ட்டாவைப் பிடித்துக் கொள்ள அவர் முயன்றார். ஆனல் அஜிசிலாஸ் விழிப்பாக நின்று நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்தி எப்பமினண்டஸை நகருள் புகாதபடித் தடுத்துவிட்டார். எனவே அவர் டீஜியாவிற்குத் திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது. அங்கிருந்து கி. மு. 362-இல் அவர் மாண்டினியா நகரத்தை முற்றுகையிட்டார். பின்வாங்குவது போல் பாசாங்கு செய்து திடீரென்று அவர் தாக்குதலை ஆரம்பித்தார். ஸ்பார்ட்டா, ஆதென்ஸ், மாண்டினியா ஆகிய மூன்று நகரங்களின் கூட்டுப் படைகளும் அங்கு ஒருங்கே முகாமிட்டிருந்தன. எப்பமினண்டஸ் பின்வாங்கி விட்டார் என்ற நம்பிக்கையில் அவைகள் அணிவகுப்பினின்றும் கலைந்துவிட்டன. இச் சமயம் பார்த்து எப்பமினண்டஸ் திரும்பிவந்து திடீரென அப் படைகளைத் தாக்கினர். லியூக்ட்ரஸ் போர்க்களத்தில் செய்தது போலவே தமது இடப் புறப் படையை நன்கு பலமாக அமைத்துக் கொண்டு அதை ஸ்பார்ட்டர்களின் வலப் புறப் படையின் மீது ஏவி அது சிதறியோடும்படிச் செய்தார்.

அதன் பின் ஸ்பார்ட்டப் படைகளின் ஏனைய பகுதிகளும் கட்டுப்பாடு குலைந்து பின்வாங்கின. தீபர்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகிய இது இறுதியில் பயனற்றதாய்ப் போயிற்று. வெண்ணெய் திரண்டு வருகின்ற சமயத்தில் தாழி உடைந்தாற் போன்று, பின்வாங்கிய எதிரிகளைத் துரத்திச் சென்ற எப்பமினண்டஸ் எதிரியின் ஈட்டியொன்றிற்கு இரையானர். தலைவரை இழந்த தீபன்மக்கள் மனம் உடைந்து ஸ்பார்ட்டர்களோடு சமாதானம் செய்துகொண்டு வீடு திரும்பினர்.

எப்பமினண்டஸ் பற்றிய ஒரு மதிப்பீடு—குணதிசயங்கள்

எப்பமினண்டஸ் கிரேக்க நாடு ஈன்றெடுத்த தவப்புதல்வர்களிலே ஒருவர்; தனிப்பட்ட வாழ்விலும் பொதுவாழ்விலும் தூய்மையே வடிவானவர்; திருமணமின்றி வாழ்நாள் முழுவதும் தனித்தே வாழ்ந்தவர் எனினும் ஒழுக்கத்தினின்றும் ஒரு சிறிதும் வழுவாதவர்; தனிப்பட்ட முறையில் எந்த விதமான பேராசையுமில்லாதவர்; ஏழையாகவே பிறந்து ஏழ்மையிலேயே மடிந்தவர். தாம் பிறந்த நன்னாட்டுக்குத் தொண்டு புரிய வேண்டுமென்பதுதான் அவரது ஒரே ஆசையாகும். அங்ஙனம் சுயநலம் ஏதுமின்றித் தீப்ஸின் சுயேச்சைக்குப் போராடியதன் விளைவாக மக்களாகவே பார்த்து அவரை உயர்த்தினார்களேயன்றி, அதற்காக அவர் எவ்வித முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. நல்ல போர்வீரர்; ஒப்பற்ற தளபதி; அதே சமயம் இசைப் பயிற்சியிலும், தத்துவ ஞானத்திலும் சிறந்தவர்; பண்புள்ளம் கொண்டவர்; நாவன்மையில் அத்தீனியர்களை நிகர்த்தவர்; பரந்த நோக்கம் கொண்டவர். தாம் பிறந்த நாடான தீப்ஸை அவர் மனதார நேசித்தார் என்றாலும், அவரது நாட்டுப் பற்று குறுகியதாயிராமல் ஹெல்லாஸ் நாடு முழுமையும் விரிந்திருந்தது. விரிந்த மனப்போக்கில் அவர் பெரிக்ளீஸைப் போன்றவர்; கட்சிப் பூசல்களில் என்றுமே கலந்துகொள்ள மாட்டார். கட்சிப் பூசல்களும் கோஷ்டிச் சண்டைகளும் மலிந்திருந்த கிரீஸில் எப்பமினண்டஸ் ஒரு விதிவிலக்காய்த் திகழ்ந்தார். எல்லாவற்றுக்கும் மேலாக அவரிடத்தே எளிமையும் தர்ம சிந்தனையும் ஒருங்கே காணப்பட்டன. மெலியாரை வலியாரினின்றும் காக்க வேண்டுமென்ற தயாள குணமிக்கவர். பண்டைய கிரீஸின் கண்ணிய மிக்க குடிமக்களுள் தலைசிறந்தவர் அவர் என்றால் மிகையாகாது.

கொள்கைகள்

பியோஷியாவைத் தீப்ஸின் தலைமையின்கீழ் ஒன்றுபடுத்த வேண்டுமென்பதே அவரது முக்கிய உள்நாட்டுக் கொள்கையாகும். இக் குறிக்கோளை அடைகின்ற முயற்சியில் குறுக்கிடக் கூடிய ஒவ்வொரு நாட்டையும் அவர் வெறுத்தார். முக்கியமாக ஸ்பார்ட்டாவை அவர் தீப்ஸின் முன்னேற்றத்துக்குப் பெரிய தோர் முட்டுக்கட்டை என எண்ணினார். தமது தாய்நகரின் வளர்ச்சியைத் தடுக்க மறைமுகமாக ஸ்பார்ட்டா பல முயற்சிகளில் ஈடுபட்டதாலேயே அவர் அந் நாட்டின் மீது பல முறை படையெடுத்தார். மற்றபடி நாடு பிடிக்கும் ஆசை அவருக்குச் சிறிதும் கிடையாது. ஸ்பார்ட்டாவின் குறும்பை அடக்குவதற்காகவும் அதன் பலத்தை ஒடுக்குவதற்காகவுமே அவர் ஆர்க்கேடியாவை ஒன்றுபடுத்துவதிலும் மெஸ்ஸானியாவை விடுவிப்பதி

திலும் அவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டார். இங்ஙனம் அவரது வெளிநாட்டுக் கொள்கையின் முதலாவது குறிக்கோள் ஸ்பார்ட்டாவை எவ்வாறேனும் மட்டம்தட்டித் தீப்ஸின் விவகாரங்களில் தலையிடாமல் இருக்கச் செய்வதாக இருந்தது. அவரது இரண்டாது குறிக்கோள் வடக்கே வளர்ந்துவரும் தெஸலி நாட்டின் ஆதிக்கத்தைக் குலைக்க வேண்டுமென்பதாகும். அதனாலேயே அவர் தெஸலி மீது படையெடுத்தார். ஆனால் விரைவிலேயே அவர் தெஸலி ஒரு வெறும் பொம்மை என்பதையும், அதை உண்மையில் ஆட்டுவித்த நாடு ஆதென்ஸ் என்பதையும் உணர்ந்துகொண்டார். எனவே அத்தீனியர்களின் செல்வாக்கு மாசிடோனியா, கால்கிடைஸ், ஹெல்லஸ்பாண்ட் ஆகிய இடங்களில் பரவுவதைத் தடுக்க அவர் எல்லாவித முயற்சிகளையும் எடுத்துக்கொண்டார். பாரசீகத்தைப் பொறுத்தவரையில் அதன் தலைமையை ஏற்றுக்கொண்ட பெலொப்பிடாஸை அவர் ஆதரித்தார்.

எப்பமினண்டஸ் ஒரு சிறந்த தளபதி என்பதை அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். தெமிஸ்டாக்ளீஸுக்குப் பின்னர் அவரே கிரீஸின் ஒப்பற்ற படைத் தலைவராக விளங்கினர். தமது படையின் இடப்புறப் பகுதியை நன்கு பலப்படுத்தி அதைக் கொண்டு எதிரிப்படையின் வலப்புறப் பகுதியை எளிதில் தோற்கடிக்கும் பேலங்ஸ் என்ற புதிய போர்முறையை வகுத்தவர் அவரே! அத்தகைய முறையினாலேயே அவர் லியூக்ட்ரஸிலும் மாண்டினியாவிலும் பெரும் வெற்றிகளைப் பெற்றார். ஆனால் போர்க்களத்தில் அவர் இறந்துவிட்டதால் மாண்டினியாவில் அவர் பெற்ற வெற்றி பயனற்றதாய்ப் போயிற்று. வெற்றி பெறும் இரகசியத்தை அறிந்திருந்த அவர் அவ் வெற்றியைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரியாத குற்றத்துக்கு ஆளானார். போர்க்களத்தில் நிதானத்தை இழக்கக் கூடியவர் என்பதையே அவரது வீர மரணம் மெய்ப்பிக்கின்றது. எனினும் அவரது வீரத்தைப் பற்றியோ, படைகளை நடத்துதலில் அவருக்கிருந்த துணிவையும், திறமையையும் பற்றியோ யாரும் குறை சொல்ல முடியாது. லியூக்ட்ரஸில் அவர் பெற்ற வெற்றியிலிருந்தே தீப்ஸ் நாடு கிரீஸில் மேற்பாட்டைக் காப்பாற்ற அவர் பெலப்பொனீஷியா மீது நான்கு முறையும், தெஸலி மீது ஒரு முறையும் படையெடுத்துப் புகழ் பெற்ற போர்களைச் செய்தார். வேகமாகத் தம் படைகளை இடத்துக்கிடம் நடத்திச் சென்றும், மின்னல் தாக்குதல்களை நிகழ்த்தியும் அவர் எதிரிகளுக்கு வியப்பையும் அச்சத்தையும் ஒருங்கே ஏற்படுத்தினர். வெல்ல இயலாத ஸ்பார்ட்டா எனப் பெயர் பெற்ற ஒரு நகரத்தையே நேரில் தாக்க எத்தனித்த பெருமை அவருக்

குரியது. எதிரிகளுக்கு அவரது படையெடுப்பு ஒரு சிம்ம சொப்பனமாயிருந்ததென்றால் அது சற்றும் மிகையாகாது.

இங்ஙனம் ஒரு சுத்த வீரனுக்குரிய இலக்கணங்கள் யாவற்றையும் பெற்றிருந்த எப்பமினண்டஸ், எதிர்கால நோக்கம் கொண்ட அரசியல் வித்தகராதற்குரிய தகுதிகளைப் பெற்றிருக்க முடியவில்லை. ஏனெனில் தமது நாட்டின் தகுதியையும் தமது நாட்டு மக்களின் ஒற்றுமையையும் நன்கு உணர்ந்துகொண்டு அதற்கேற்றவாறு தமது திட்டங்களைத் தீட்ட அவர் தவறிவிட்டார். நாட்டுப் பற்றின் மிகுதியால் அவசரப்பட்டு அவர் தமது தாய்நாட்டைப் பேரரசாக வளர்க்க எண்ணினாரேயன்றி, நடைமுறையில் அது நடக்கக் கூடிய காரியமா என அவர் சிறிதும் எண்ணிப் பார்க்கவில்லை. ஒரு நாடு பேரரசாக வளர்வதற்கு இன்றியமையாததனவாகிய ஆட்பலமும், பெருள்வளமும், அரசியல் அனுபவமும், பிற நாடுகளில் செல்வாக்கும், கடற்படையும் தமது நாட்டுக்கு இல்லை என்பதை அவர் மறந்துவிட்டார். ஆதென்ஸோடு போட்டிபோட அவர் ஒரு கப்பற்படையை உருவாக்கினர் என்பது உண்மையே. ஆனால் அக் கப்பற்படையை நெடுநாள் கட்டிக்காப்பதற்குத் தேவையான வாணிக வளமும், பெருள்வளமும் தமது நாட்டுக்கு எப்போதுமே இருந்ததில்லை என்பதை அவர் அறியவில்லை. உண்மையில் பியோஷியா என்றைக்குமே கடல் வாணிகத்தில் அவ்வளவு அக்கறை காட்டியதில்லை. சமவெளிகள் நிறைந்த அந் நாட்டு மக்கள் வேளாண்மையில் சிறந்துவிளங்கினர்களேயன்றி வியாபாரத்தில் ஒரு சிறிதும் முன்னேறவில்லை. கடற்படை ஒன்றை அவர்கள் என்றைக்குமே வைத்து நிர்வகித்ததில்லை. அத்தகையோரைப் பிடித்து ஒரு பெரும் பேரரசை நிறுவும் முயற்சியிலும் கடற்படையை அமைக்கும் முயற்சியிலும் அவர் ஈடுபடுத்தியதானது, முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதையாய் முடிந்தது. தனிப்பட்ட மனிதர் ஒருவர், எவ்வளவுதான் பெரியவராயும் திறமைசாலியாயும் இருந்த போதிலும் ஒரு நாட்டை உயர்த்திவிட முடியாதென்பதையே அவரது வரலாறு நமக்குத் தெள்ளத் தெளிய உணர்த்தாநிற்கிறது. அவரைப் பொறுத்தவரையில் பேரரசு ஒன்றை அமைப்பதற்குரிய போர்த் திறமையும், இராஜ தந்திரமும் நிரம்பவும் அவரிடம் காணப்பட்டன என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆர்க்கேடியாவை ஒன்றுபடுத்தியது, மெஸ்ஸானியர்களை ஸ்பார்ட்டாவிடமிருந்து பிரித்துச் சுயேச்சை நாடாக்கியது ஆகிய செயல்கள் அவரது இராஜதந்திரத்துக்கு நல்ல சான்றுகளாய் விளங்குகின்றன. இச் செயல்களால் ஸ்பார்ட்டாவின் பலத்தை ஒடுக்க முடியும் என அவர் நினைத்தது சரியே. அதே போலத் தெஸலியை ஒடுக்க

வேண்டுமானால் அதன் சூத்திரதாரியான ஆதென்ஸை மடக்க வேண்டுமென அவர் நினைத்ததும், மாசிடோனியாவிலும், ஹெல்லஸ்பாண்டிலும் ஆதென்ஸுக்கு எதிராகத் தீப்ஸின் செல்வாக்கை நிறுவ முயன்றதும் மெச்சத்தக்க செயல்களே என் பதில் எட்டுணையும் ஐயமில்லை. தீஸியஸ் என்னும் புராண கால வீரர் மீண்டும் உயிர்பெற்று வந்துவிட்டாரோ எனக் காண்போர் ஐயுறும் வண்ணம் அவர் நூறு கப்பல்களுடன் புரோபாண்டிஸ் பிரதேசத்துக்கு விரைந்து, தீப்ஸின் கடல் வலிமையைப் புலப் படுத்த நினைத்தது உண்மையில் பாராட்டத் தக்கதேயாகும். ஆனால் தனிமரம் தோப்பாகாது என்ற பழமொழியே அவரது வாழ்விலும் மெய்யாகியதென்பதை நாம் காண்கிறோம். பியோஷிய மக்கள் இயல்பாகவே சற்று மந்தபுத்தியுடைய வர்கள். பியோஷியன் என்றால் முட்டாள் பிராணி என்றே ஏனைய கிரேக்கர்கள் பொருள் சொல்வது வழக்கம். கி. மு. 5-ஆம் நூற் றாண்டில் வாழ்ந்த பிண்டார் என்பாரைத் தவிர அறிவிற் சிறந்த மேதை எவரையும் பியோஷியா தோற்றுவித்ததில்லை. பிறநாடு களின் கையாட்களாகவே அவர்கள் இருந்துவந்தனர். ஒற்றுமை என்பது அவர்களிடம் மருந்துக்குமில்லை. பணநாயகவாதிகளும் ஜனநாயகவாதிகளும் அங்குச் சதா போரிட்டுக் கொண்டிருந் தனர். அத்தகைய மக்களை நம்பிப் பேரரசுப் பெருந்திட்டத்தை எப்பமினொண்டஸ் நிறைவேற்ற நினைத்தது மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியதற்கொப்பாகவே அமைந்தது. "தனது மேதாவிலாசம் என்ற இறகுகளில் ஏற்றிக் கொண்டு பறந்து அவர் தமது நாட்டைப் புகழ்வானின் உச்சிக்கே கொண்டு சென்றார். ஆனால் அந் நாடு தானாகவே அவ் வானில் ஊர்ந்து செல்லுவதற்கேற்ற இயல்பூக்கத்தை அவர் அதற்கு ஏற்படுத்தத் தவறிவிட்டார். எனவே தன்னை ஏற்றிச் சென்ற தலைவரது இதயத்தை எதிரிகளின் ஈட்டி துளைத்துவிட்டபோது தீப்ஸ் நகரம் சிறகொடிந்த பறவை போலாயிற்று" எனப் பீயூரி எனும் ஆசிரியர் கூறியுள்ளது முற்றிலும் பொருத்தமானதேயாகும். எப்பமினொண்டஸின் விருப்பம் நல்லதாயிருந்தபோதும் அவ் விருப் பத்தை நிறைவேற்றத்தக்கமுறையில் அவர் தமது நாட்டைத் தயார் செய்யாதது அவரது பெருங்குற்றமாய்ப் போயிற்று. தமக்குப்பின் தமது இடத்தில் இருந்து அதே தமது பணி யைத் தொடர்ந்து ஆற்றத்தக்க தலைவரெவரையும அவர் தோற்றுவிக்கவில்லை. பியோஷியர்களிடையே ஒற்றுமையுணர்ச் சியை உண்டாக்குவதிலும் அவர் வெற்றி பெறவில்லை. அவருக் குப்பின் திறமையுடன் செயல்படக்கூடிய அரசியல் நிறு வனங்களை அமைக்க அவர் தவறினார். மேலும் தமது நாட்டின் சமுதாயத்தையும் அரசியலமைப்பையும் மாற்ற

முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. முன்னேற்றப் பாதையில் விரைந்து நடைபோடுதற்குத் தேவையான பொருள் வசதியையும் அவர் தம் நாட்டில் ஏற்படுத்தி வைக்கவில்லை. மற்றும் அயல்நாட்டு விவகாரங்களை எல்லாம் அவர் ஒருவரே தனித்து நின்று கவனித்து வந்தாரேயன்றித் தமக்குப் பின் செவ்வனே அவைகளை மேற்கொண்டு நடத்தத்தக்க நிறுவனமொன்றை அவர் ஏற்படுத்தவில்லை. எனவேதான் அவரது மரணத்துடன் அவரது நாட்டின் புகழும் பெருமையும் ஒருங்கே மாண்டன. அதனுற்றுன் அடால்ப் ஹாலன் (Adolf Holon) எனும் ஆசிரியர் பேராற்றலையும், பெரும் குறிக்கோளையும் கொண்டிருந்தும் தங்களது நாட்டை நிரந்தரமாக உயர்த்த இயலாத லட்ஜன் (Lutzen), குஸ்தாவஸ் அடால்பஸ் (Gustvas Adolphus) என்ற ஸ்வீடன் மன்னர் ஆகியோரோடு எப்பமினண்டஸை ஒப்பிடுகின்றார். அவர் ஒரு பெரும் போர்வீரர் என்று ப்யூரி என்ற ஆசிரியர் குறிப்பிடுவதும் இக் காரணத்தாற்றுன் எனலாம்.

எப்பமினண்டஸின் கொள்கையால் பெலப்பொனீஷிய இணைக்கூட்டரசு பலவீனமடைந்தது. அதனல் மாசிடோனியர் அங்குப் பிற்காலத்தில் எளிதில் தம் ஆதிக்கத்தை நிலைநாட்ட முடிந்தது. பாரசீகத்தோடு நட்பு பாராட்டி அதன் தலைமையை ஏற்றுக் கொண்டதும் இராஜதந்திரத்துக்கு உகந்த செயலாக இல்லை. சஞ்சல குணம் படைத்த பெலொப்பிடாஸ் அத்தகைய கொள்கைக்குக் காரணமானவர் என்றுல் அதைக் கண்டிக்காமல் விட்டுவிட்ட தவறு எப்பமினண்டஸையே சாரும். இங்ஙனம் அவர் தம்மையறியாமலேயே தமது நாட்டின் பிற்காலச் சிதைவுக்கு வழிகோலிவிட்டார். எனினும் தனிப்பட்ட வாழ்க்கையில் அவர் தூயவர்; தன்னலமற்ற சேவையையே தமது வாழ்வின் மூச்சாகக் கொண்ட தேசபக்தர்; நாட்டுக்காகத் தம் உயிரையே தத்தம் செய்த தியாகச் செம்மல்; ஈடு எடுப்பற்ற போர்த் தளகர்த்தர்; எதிர்கால நோக்குடன் தமது நாட்டுமக்களை ஒன்றுபடுத்தி நல்ல அரசியற் பயிற்சியை அளிக்காதது ஒன்றே அவர் செய்த குற்றம். ஆனல் அதையே நாம் அவரது பெரும் குற்றமாகக் கருத இயலாது. ஏனெனில் பியோஷியர்கள் மட்டுமன்றிக் கிரேக்கர்கள் யாவருமே ஒற்றுமையுணர்ச்சி குன்றியவர்கள். குறுகிய மாநிலப்பற்று அவர்களைக் கவர்ந்தது போல் தேசிய உணர்வு அவர்களை என்றுமே ஆட்கொண்டதில்லை. எப்படிப்பட்ட தலைவனலும் அத்தகைய உணர்வைக் கிரேக்க மக்களிடையே ஏற்படுத்த இயலவில்லை. அங்ஙனமிருக்க எப்பமினண்டஸ் மீது மட்டும் அப் பழியைச் சுமத்துவதென்பது நாய்வாலை நிமிர்த்த முடியாத பழியை ஒருவர்மீது சுமத்துவதையே நிகர்க்கும் என்பது ஒருதலை.

18. மாசிடோனியாவின் மேலாண்மை

(1) மாசிடோனிய மேலாண்மைக்கு முன் கிரீஸின் நிலைமை

கி. மு. 362-இல் நடைபெற்ற மான்டினியப் போருக்குப் பின் தீப்ஸின் கூட்டுத் தலைமை கிரீஸில் மாய்ந்தது. எப்பமினண்டஸ் என்ற பெருந்தலைவரின் மரணத்திற்குப் பின் கிரேக்க நகரங்களை ஒன்று சேர்த்து, வழி நடத்தத் தக்க தலைவர்கள் எவரும் இல்லாதொழிந்தனர். மான்டினியப் போருக்கு முன்னர், ஏதாவது ஒரு நகரத்தின் தலைமையில் ஏனைய நகரங்கள் ஒன்றுசேர்ந்து கூட்டாக இயங்கிவந்தன. ஆனால் அதற்குப் பின் ஒவ்வொரு நகரமும் ஏனைய நகரங்களுக்குச் சமமாகிவிட்டது. வெவ்வேறு நகரங்களும் தமக்கே உரிய தனிப்பண்புடன் தனித்தனியே வளர முற்பட்டன. கிரேக்க நாட்டின் பொதுவான நன்மைக்காக உழைக்க வேண்டுமென்ற அக்கறை எந்த நகர அரசுக்கும் ஏற்படவில்லை.

அஜிசிலாஸ் என்ற மன்னரின் மரணத்துக்குப் பின்னர் (கி. மு. 361) ஸ்பார்ட்டாவின் கூட்டுத் தலைமையும் மாய்ந்தது. ஆர்க்கேடியாவில் தோன்றிய தற்காலிகக் கூட்டுறவும் நாளடைவில் நலிந்தது. ஆதென்ஸ் ஒன்றுதான் ஓரளவு தனது பழைய வலிமையை இழக்காமல் காப்பாற்றிவந்தது. கடல் கடந்து வாணிகத்தில் ஈடுபட்ட காரணத்தால்தான் ஆதென்ஸ் ஓரளவு தனது பழைய செல்வாக்கை இழக்காமல் இருந்து வந்தது. ஆனால் மாசிடோனியாவின் எழுச்சியும் வளர்ச்சியும் ஆதென்ஸின் செல்வாக்கைப் பெரிதும் பாதித்தன. ஈஜியன் கடலிலும் அதற்கு வடக்கேயும் அத்தீனியர்கள் நடத்திவந்த வாணிகத்திற்கு மாசிடோனியக் கப்பற்படை பெரியதோர் முட்டுக் கட்டையாக நின்றது. கரியா (Caria) என்ற மற்றொரு நகரம் அத்தீனிய முன்னேற்றத்திற்கு ஒரு பெருந்தடையாய் வந்து

மூளத்தது. மாசிடோனியா, வெறும் தரையில் மட்டுமே ஆதிக்கம் செலுத்திய ஒரு நாடாகும். ஆனால் கரியாவோ, கடலிலும் நிலத்திலும் ஆதிக்கம் செலுத்திவந்தது. எனவே ஆதென்ஸிற்கு மாசிடோனியாவை விடக் கரியாதான் பெரும் போட்டி நாடாகத் திகழ்ந்தது. நாளடைவில் மாசிடோனியா, ஹெல்லாஸில் தனித் தலைமை எய்தியது.

சமுதாயச் சண்டை (357—354 கி. மு.)

பெலப்பொனீஷியப் போர் எவ்வாறு முதலாவது அத்தீனியக் கூட்டரசு கலைவதற்குக் காரணமாய் இருந்ததோ அதே போன்று சமுதாயச் சண்டை என்ற உள்நாட்டுப் போரும் இரண்டாவது அத்தீனியக் கூட்டுறவு வீழக் காரணமாயிருந்தது. இது ஆதென்ஸுக்கும் அதன் நேச நாடுகளுக்கும் ஏற்பட்ட தோர் போராகும். டிமோத்தியூஸ் (Timotheus) என்ற அத்தீனியத் தலைவர், இரண்டாவது அத்தீனியக்கூட்டுறவைப் பலப்படுத்த தினைத்துப் பல புதிய நாடுகளை அதில் உறுப்புகளாய்ச் சேர்த்தார். ஹெல்லஸ்பாண்ட், மாசிடன், திரேஸ் ஆகிய பிரதேசங்களிலிருந்த கிரேக்கக் குடியேற்றங்கள் மீண்டும் கூட்டுறவில் சேர்ந்தன. தீப்ஸுடன் போர் புரிந்து ஆதென்ஸ் தனது வலிமையை நன்கு நிலைநாட்டிக் கொண்டது. ஆதென்ஸில் கொஞ்சம் கொஞ்சமாக ஏகாதிபத்திய மனப்பான்மையும் வளரலாயிற்று. கூட்டுறவில் சேர்ந்த நாடுகள் மீது, தனியாதிக்கம் செலுத்த அது விரும்பியது. ஆதென்ஸின் வலிமை மிக்க கடற்படை, அத்தகைய எண்ணத்திற்கு ஒரு தூண்டுதலாய் அமைந்தது. எனவே, ஆதென்ஸ் தனது கூட்டாளி நாடுகளின் சிறப்புரிமைகளில் தலையிட ஆரம்பித்தது. இதை நேச நாடுகள் ஏற்றுக்கொள்ள மறுத்தன. ஆதென்ஸின் ஆட்சிக்குக் கீழ்க் குடிமக்களாய் வாழ நேச நாடுகளின் மக்கள் விரும்புவதில்லை. தனது கடற்படைக்கென ஆதென்ஸ் கப்பப் பணத்தை நேச நாடுகளிடம் வசூலிக்க முயன்றபோது அதற்குப் பலத்த எதிர்ப்புகள் ஏற்பட்டன. அதே போன்று கூட்டாளி நாடுகளில் கிளெருக்கிகள் (Cleruchies) என்ற அத்தீனிய ராணுவக் குடியேற்றங்களை நிறுவும் வழக்கத்தையும் யாவரும் எதிர்த்தனர். முக்கியமாகச் சாமாஸ் தீவில் ஏற்படுத்தப்பட்ட கிளெருக்கிகளை அனைவரும் கண்டித்தனர். நேச நாடுகளிடையே அதிருப்தி பரவலாயிற்று. கரியா நாட்டு மன்னர் மாசோலஸ் (Mausolus) என்பார் (கி. மு. 377–353) இத்தகைய அதிருப்திக்குத் தூபம் போட்டார். அவரிடம் ஒரு பெரிய கப்பற்படையிருந்தது. அப்படை ஹாலிக்கார்னஸஸ் (Halicarnasus) எனும் துறைமுகத்தில்

கம்பீரமாகத் தண்டிறக்கப்பட்டிருந்தது. ஆசியாமைனரின் தென் பகுதியில் இருந்த நிடஸ் (Cnidus), மைலிடஸ் (Miletes) முதலிய கிரேக்க நகரங்களும் அவரது ஆட்சிக்குட்பட்டிருந்தன. ஆசியாமைனர்ப் பகுதியில் அத்தீனியர்கள் அனுபவித்துவந்த வாணிகச் செல்வாக்கை ஒழிக்க வேண்டுமென அவர் கங்கணங் கட்டிக்கொண்டிருந்தார். ரோட்ஸ் (Rhodes), காஸ் (Cos), கியாஸ் (Chios) ஆகிய நகரங்களோ ஆதென்ஸிற்கு விரோதமாகக் கலகம் செய்யும்படி அவர் தூண்டிவிட்டார். இந்த நகரங்களிலிருந்து கப்பப் பணம் எதையும் ஆதென்ஸ் கட்டாயப்படுத்தி வசூலிக்காவிட்டாலும், ஏதாவது உதவித் தொகையை அத்தீனியத் தளகர்த்தர்கள் அடிக்கடி கேட்டு நச்சரித்துக்கொண்டேயிருந்தார்கள். இதனால் அந் நகரங்கள் பெரிதும் அதிருப்தியுற்றிருந்தன.

எனவே மாசோலஸ் என்பாரின் பேச்சைக் கேட்டு, கி. மு. 357-இல் அந் நகரங்கள் யாவும் கலகத்தில் இறங்கின. பைசான்ஷியம் என்ற நகரமும் கலகத்தில் சேர்ந்துகொண்டது. இங்ஙனம் ஆதென்ஸிற்கும், அதனுடைய நேச நாடுகளுக்கும் ஏற்பட்ட போரே சமுதாயச் சண்டையெனக் கிரேக்க வரலாற்றில் பேசப்படுகிறது. அத்தீனியத் தளகர்த்தர்களான காரஸ் (Chares), காப்ரியஸ் (Chabries), இப்பிகிராட்டஸ் (Iphecrates), டிமோத்தியூஸ் ஆகிய தலைவர்கள் கலகங்களை அடக்க அரும்பாடுபட்டனர். ஆனால் அவர்களால் ஒன்றும் இயலவில்லை. கி. மு. 355-இல் ஐசோக்கிராட்டிஸ் (Isocrates) என்ற அத்தீனியப் பேச்சாளி, பேரரசைக் கலைத்துவிட ஆதென்ஸிற்கு அறிவுரை வழங்கினர். உண்மையிலேயே பேரரசு கலைந்துபோவதைத் தடுக்கவொண்ணா நிலையிலேயே ஆதென்ஸ் இருந்தது. லெஸ்பாஸ், கார்கிரா ஆகிய நகரங்கள் அத்தீனியக் கூட்டுறவினின்றும் கி. மு. 353-இல் பிரிந்தன. கரியாவின் மன்னர் மாசோலஸ், கலகக்கார நகரங்களுக்குப் படையுதவியும் பொருளுதவியும் செய்தார். பணக்காரப் பிரபுக்களாட்சியை அவர் ஆங்காங்கே தோற்றுவித்தார். அவரது படைகள் கலகம் செய்த ஒவ்வொரு நகரத்திலும் வைக்கப்பட்டிருந்தன. இங்ஙனம் ஒரு கடற் பேரரசை அவர் உருவாக்கினர். கி. மு. 353-இல் அவர் இறந்தார். அவரது மனைவியான ஆர்டிமீசியா (Artemesia) தமக்கும் தம் கணவருக்குமாக ஒரு பெரிய கல்லறையை ஹாலிக்கார்னஸஸ் (Halicarnassus) நகரில் கட்டினர். அதற்கு மாசோலியம் (Mausolium) என்ற பெயர் கொடுக்கப்பட்டது. நினைவுச் சின்னம் என்னும் பொருள்படும் ஆங்கிலச் சொல் இதனடியாகப் பிறந்ததொன்றேயாகும்.

சமுதாயச் சண்டையில் அத்தீனியர்கட்குத் தோல்விக்கு மேல் தோல்வி ஏற்பட்டது. காப்ரியாஸ் என்ற தளகர்த்தர் போரில் கொல்லப்பட்டார். காரஸ் (Chares) என்ற தளகர்த்தர் பிரிஜியாவின் தலைவருக்குப் பாரசீகத்துக்கெதிராக உதவி செய்து அதன் பகையைத் தேடிக் கொண்டார். அவருக்குத் தக்க தண்டனை வழங்கப் பாரசீகம் முடிவு செய்தது. மீண்டும் பாரசீகர்கள் கிரேக்க விவகாரங்களில் தலையிடுவதை விரும்பாத ஆதென்ஸ், கலகம் செய்த நகரங்களோடு ஒரு சமாதானத்தைச் செய்துகொண்டது. அதன்படி கூட்டாளி நாடுகளுக்குப் பூரண சுதந்திரம் வழங்கப்பட்டது. இங்ஙனம் தனது இரண்டாவது பேரரசிற்கு ஆதென்ஸ் தானே ஒரு முற்றுப்புள்ளியை வைத்துக் கொண்டது.

(2) இரண்டாம் பிலிப் மாசிடோனியாவின் எழுச்சி

இரண்டாம் பிலிப்புக்கு முற்பட்ட மாசிடோனியா

பரந்த சமவெளிகளையும் பெரிய நதிகளையும் கொண்டதோர் நாடு மாசிடோனியாவாகும். அதைக் குறிஞ்சி, மருதம் என இருவகையாகப் பிரிக்கலாம். மாசிடோனியாவின் மீது ஆதியில் படையெடுத்த கிரேக்கர்கள் முதலில் மருதநிலப் பகுதியிலேயே குடியேறினர். அங்கு ஏற்கெனவே வாழ்ந்து வந்த பிரிஜியர்களை அவர்கள் ஆசியாமைனர்ப் பகுதிகளுக்குத் துரத்தி விட்டார்கள். அதன் பின்னர் நாளடைவில் குறிஞ்சி நிலப் பகுதிகளில் வாழ்ந்த சுதேசிகளையும் அவர்கள் தங்களது ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தனர். மாசிடோனியர்கள், ஏனைய கிரேக்க மக்களைப் போலல்லாது, பெரிதும் நாகரிகமற்ற நிலையிலேயே வெகுகாலம் வாழ்ந்தனர். குடியாட்சிக்குப் பதில் கோனாட்சியே அங்குத் தழைத்தோங்கியது. சிறுசிறு நகர அரசுகள் அங்கே தோன்றவில்லை. பரந்த சமவெளிகளில் பெரியதோர் நாட்டை யமைத்துக்கொண்டு, எல்லா மக்களையும் மன்னர்கள் நேரிடையாக ஆட்சி புரிந்தனர். மலைகளில் வாழ்ந்த மக்கள், சமவெளியில் ஆட்சி புரிந்துவந்த மன்னர்களின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டனர். கொஞ்சம் கொஞ்சமாகவே ஹெல்லனிய நாகரிகம் மாசிடோனியாவில் பரவியது.

ஸெர்க்ஸஸ் (Xerxes) என்ற பாரசீக மன்னர் கிரீஸின் மீது படையெடுத்த போது மாசிடோனியா எளிதில் பணிந்து பாரசீகத் தலைமையை ஏற்றுக் கொண்டது. பாரசீகப் போர்கள் ஓய்ந்த பின்னர் முதலாம் அலெக்சாண்டர் எனும் மன்னர், மாசிடோனியாவின் சுயேச்சையை நிலைநாட்டினர். ஸ்ட்ரைமான் (Srrymon) நதிக்கரை வரை அவர் தமது ஆதிக்கத்தைப்

பரப்பினர். அவருக்குப் பின்வந்த இரண்டாம் பெர்டிக்காஸ் (Perdiccas II) பெலப்பொனீஷியப் போரின் முதற்கட்டத்தின் போது ஆட்சி புரிந்தார். இலீரியர்களுக்கு விரோதமாகப் பிராசிடாஸ் (Brasidas) என்ற ஸ்பார்ட்டத் தளகர்த்தரின் உதவியை அவர் நாடினர். அவர் மாண்ட பின் பட்டத்திற்கு வந்த ஆர்க்கிலாஸ் என்னும் மன்னர் (413-399) கிரேக்க நாகரிகத்தைப் பெரிதும் போற்றியவர். அவர் தமது தலைநகரை எடஸா (Edessa) எனுமிடத்திலிருந்து பெல்லா (Pella) என்னுமிடத்திற்கு மாற்றினர். புகழ் வாய்ந்த கல்விமான்களும் கலைஞர்களும் இசைவாணர்களும் அந்த நகரைத் தேடிச் சென்றனர். சான்ருக யூரிபைடிஸ் (Eurypides) என்ற துன்பியல் கவிஞரும், செங்சிஸ் (Zenxis) என்ற கலைஞரும், டிமோத்தியூஸ் என்ற இசைவாணரும் இம் மன்னரால் ஆதரிக்கப் பெற்றவர்களே. இவருக்குப் பின் அமிந்தாஸ் (Amynthas) என்ற மன்னர் கி. மு. 370 வரை அரசாண்டார். அவரை யடுத்து அவரது மூத்த மகன் இரண்டாம் அலெக்சாண்டர் பட்டத்திற்கு வந்தார். அவரை அவரது மாமனான தாலமி என்பார் கொலை செய்துவிட்டு, அவரது சகோதரரான மூன்றும் பெர்டிக்காஸ் என்பவரை மன்னராக்கித் தாம் அவரது பாதுகாப் பாளராக அமர்ந்தார். நாளடைவில் அவரே எல்லா வன்மை யான அதிகாரங்களையும் செலுத்த ஆரம்பித்தார். ஆதென் ஸோடு அவரே நட்புடன்பாட்டைச் செய்து கொண்டார். அதன் காரணமாகவே, பெலொப்பிடாஸ் (Pelopidas) என்ற தீபன் தலைவர் மாசிடோனியா மீது படையெடுத்தார். அவர் மாசி டோனியர்களை வென்று மன்னரின் இளவலான பிலிப் என்பாரைத் தமது நாட்டுக்குப் பிணையமாகப் (Hostage) பெற்றுச் சென்றார். பிலிப் என்பார் தீப்ஸ் நாட்டில் தங்கியிருந்தபோது கிரேக்க இலக்கியத்தையும் தத்துவத்தையும் நன்கு பயின்று பயனடைந்தார். எப்பமினண்டஸ் என்ற பெருந் தலைவரிடம் அவர் பயிற்சி பெற்றார் என்றும் பொதுவாக நம்பப்படுகிறது. இங்ஙனம் இராணுவத் தந்திரங்களிலும் ஆட்சிக் கலையிலும் அவர் நல்ல திறமையைப் பெற்றார். இதற்கிடையில் மூன்றும் பெர்டிக் காஸ் இலீரியர்களால் (Illyrians) கொல்லப்பட்டதால், பிலிப் மீண்டும் தாய்நாடு திரும்பினர். மாசிடோனிய மன்னராக்கப் பட்ட அமிந்தாஸ் என்பார் அப்போது மிக இளஞராக இருந்த படியால் பிலிப் அவரது பாதுகாப்பாளராக அமர்ந்தார் (கி. மு. 359).

இரண்டாம் பிலிப் ஆட்சியைக் கைப்பற்றல்

இச் சமயத்தில் மாசிடோனியர்களுக்கு நாற்புறமும் எதிர்ப்பு ஏற்பட்டது. வடமேற்குத் திசையிலிருந்து இலீரி

யர்கள் இந்த நாட்டின் மீது படையெடுக்க முயன்றனர். அரியணையைக் கைப்பற்றப் பல போலிகள் முயன்ற வண்ணமே இருந்தனர். அவர்களில் ஒருவருக்கு ஆதென்ஸ் ஆதரவளித்தது. இவ்விக்கட்டான நிலையைப் பிலிப் மிகவும் சாமார்த்திய மாகச் சமாளித்தார். அவசியமானபோது தமது காரியத்தைச் சாதித்துக் கொள்ள நீதிக்குப் புறம்பான செயல்களில் ஈடுபடவும் அவர் தயங்கவில்லை. கையூட்டு வழங்கல் போன்ற முறைகளை அவர் தாராளமாகக் கையாண்டார். திரேசியர்களையும் பியோனியர்களையும் அவர் இலஞ்சம் கொடுத்துச் சாந்தப்படுத்தினர். வன்முறையைப் பயன்படுத்தியும் அவர் ஒரு சிலரை அடக்கினர். சான்ருக இலீரியர்களைத் தாக்கி அவர்களில் ஏழாயிரம பேர்களைப் போர்க்களத்தில் மாய்த்தார். அதன் பின் அவர் அம்பிபொலிஸ் (Amphipolis), பிட்ஞ (Pydna), பாடிடியா (Potidaea) ஆகிய நகரங்களைக் கைப்பற்றினர். அம்பிபொலிஸ் நகர், ஆதென்ஸின் உதவியை நாடியது. ஆனால் அவ்வுதவி வரவில்லை. அம்பிபொலிஸ் நகரத்தைக் கைப்பற்றியதன் மூலமாக மாசிடோனியா விற்கோர் கடல்வழி கிடைத்தது. அதோடு பாங்கியஸ் (Mr. Pangaeus) மலையிலிருந்த தங்கச் சுரங்கங்களுக்கும் போக்குவரவு வசதி ஏற்பட்டது. அம் மலையின் மீது அவர் (பிலிப்பி எனும்) பெயரில் ஒரு பெருங்கோட்டையை அமைத்தார். இங்ஙனம் அவர் தமது நிலைமையை நன்கு பலப்படுத்திக் கொண்ட பின் தமது சகோதரரின் மைந்தரை அரியணையினின்று அகற்றி, தாமே மாசிடோனியாவின் மன்னராகக் கி. மு. 356–இல் அரியணையேறினர்.

இரண்டாம் பிலிப்பின் சாதனைகள்

மாசிடோனியாவின் அரியணையைப் பலவந்தமாகக் கைப்பற்றிய இரண்டாம் பிலிப், தமது நிலையை நன்கு பலப்படுத்திக் கொள்ளப் பலவகையிலும் முயன்றார். புதிய புதிய வெற்றிகளைப் பெற்றுத் தமது பெருமையை வளர்த்துக்கொள்ள விழைந்தார். தமது நோக்கங்கள் நிறைவேற வேண்டுமானால் தக்கதோர் நிலையான படையொன்று வேண்டுமென்பதை உணர்ந்து கொண்ட பிலிப், கி. மு. 359–இல் மாசிடோனியப் படையைச் சீர்திருத்தி யமைத்தார். அவருக்கு முன்பு மாசிடோனியாவில் கூலிக்குப் போரிடுகின்ற படையொன்று மட்டுமே, மன்னரிடம் இருந்துவந்தது. மாசிடோனியர்களல்லாதார் அதில் இருந்த தால் சமயத்தில் அவர்கள் மன்னருக்குத் துரோகம் செய்தனர். எனவே நாட்டுப்பற்று மிகுந்த தேசியப் படையாக அக் கூலிப் படையை அமைக்க எண்ணினர். போர்க் காலத்தே தத்தம்

வேலைகளை விட்டுவிட்டு, நாட்டுக்குப் போரிட முன்வந்த நாட்டுப் படையையும் (Militia), கூலிக்கு மட்டும் போரிடுகின்ற கூலிப் படையையும் (Mercenary army) இணைத்துத் தேசிய உணர்ச்சி மிக்க நிலைப்படை ஒன்றை அவர் உருவாக்க ஆறு ஆண்டுகள் பிடித்தன. அதற்காக அவர் மாசிடோனியக் குதிரைப் படையில் சேரும்படிப் பிரபுக்களைத் தூண்டினர். கம்பேனியன்ஸ் (Companions) என்ற குதிரைப்படை வீரர்களை அவர் இங்ஙனம் உருவாக்கினர். அதே போன்று காலாட்படை ஒன்றையும் அவர் நிறுவினர். அதில் கனமாகவும், இலேசாகவும் படைதரித்த இரு பிரிவுகளை ஏற்படுத்தினர். இலேசாகப் படைதரித்த படையில் சாதாரண வேல் ஏந்திய படைவீரர் நிறைய இருந்தனர். அத்தகையோர் விரைவாக இடம்விட்டு இடம் பெயர்ந்து எதிரிகளைத் தாக்கக் கூடியவர்கள். எப்பமினண்டஸ் என்பாரைப் போல் பாலங்ஸ் (Phalanx) என்ற அணிவகுப்பையும் தமது படையில் அவர் புகுத்தினர். ஆனால் அவரது படையைப் போன்று பிலிப்பினது அணிவகுப்பு ஐம்பது அணிகள் கொண்ட நீண்ட நெருக்கமான படைப்பகுதியாக இருக்கவில்லை. பதினறு வரிசைகளை மட்டுமே அது கொண்டிருந்தது. அப் படைப்பகுதியிலிருந்த வீரர்களிடம் நாலேகால் மீட்டர் நீளமுள்ள சாரிசா (Sarissa) எனும் பெயர் பெற்ற நீண்ட வேலாயுதம் தரப்பட்டிருந்தது. இவ் வேலாயுதத்தை நன்கு பயன்படுத்த வேண்டி ஒவ்வொரு வீரருக்குமிடையில் அதிக இடைவெளி விடப்பட்டிருந்தது. இங்ஙனம் படை தரித்த காலாட் படைதான் போர்க்களத்தில் முதலில் போரைத் தொடக்கியது. ஆனால் தக்க தருணத்தில் குதிரைப் படையானது எதிரிகளின் மீது ஏவப்பட்டது. அனேகமாக மாசிடோனியர் களின் வெற்றிக்குக் காரணமாயிருந்தது இக் குதிரைப் படையே யாகும். தமது மாசிடோனியாவின் பலத்தைப் பெருக்கப் பிலிப் ஓயாது போரிட்டுவந்தார். கி. மு. 353-இல் அவர் மெத்தோன் (Methone) நகரத்தைக் கைப்பற்றினர். அதே ஆண்டில் அவரது கிரேக்கப் படையெடுப்புகளும் ஆரம்பித்தன. கி. மு. 352-இல் அவர் தெஸலியைக் கைப்பற்றினர். கி. மு. 349–இல் அவர் கால்கிஸ் மேல் படையெடுத்து ஒலிந்தஸ் நகரத்தை வென்று கால்கிடியத் தீபகற்பம் முழுவதிலும் தமது ஆதிக்கத்தை நிறுவினர். கி. மு. 342–341-இல் அவர் திரேஸ் நாட்டின் மேல் படையெடுத்துப் பைசான்ஷியம் நகர் வரை தமது செல் வாக்கைப் பரப்பினர். கி. மு. 338–இல் கிரோனியாவில் (Chaeronea) அவர் பெற்ற வெற்றிக்குப் பின் அவரது கிரேக்கப் படையெடுப்புகள் முடிந்தன. அதன் பின் அவர் கிரீஸ், மாசிடோனியா ஆகிய இரு நாடுகளுக்கும் மன்னரானர்.

பிலிப்பின் கிரேக்கா ப்டையெடுப்புகள்

1. முதற்கட்டம் இரண்டாம் புனிதப்போர் (கி. மு. 352-355)

கிரீஸ் நாடு முழுவதையும் தாமே கைப்பற்றித் தமது தனியாதிக்கத்தின் கீழ்க் கொண்டு வரவேண்டும் என்ற பேராசையால் பிலிப் பீடிக்கப்பட்டார். அதோடு டெல்ஃபி நகரின் கோயிலுக்குத் தலைமை தாங்கவேண்டுமென்றும் அவர் ஆசைப் பட்டார். அதற்குரிய தருணத்தை அவர் எதிர்பார்த்துக் காத் திருந்தார். கி. மு. 355-இல் கிரீஸில் ஏற்பட்ட புனிதப் போர் (Sacred war) எனும் உள்நாட்டுச் சண்டையானது அவருக்கு அந் நல்வாய்ப்பை நல்கியது.

கிரேக்க மக்களிடையே ஒருமைப்பாட்டுணர்ச்சியை வளர்க் கும் கருவிகளில் ஒன்றாக டெல்ஃபி நகரின்கண் அமைந்திருந்த பொது வழிபாட்டொருமைக் கழகமானது (Anphictionic Council) விளங்கி வந்ததென நாம் முன்போர்அத்தியாயத்தில் கண்டோம். பொது வழிபாட்டின் அடிப்படையில் கிரேக்க நகர்களிடை ஒன்றுமையை வளர்க்கவும், இறைமொழி கூறும் குறிமேடையைப் (oracle) பாதுகாக்கவும் ஏற்பட்ட இக் கூட்டுறவுக் கழகமானது அவ்வப்போது புனிதப் போர்களிலும் ஈடுபட்டது. அதாவது நாத்தழும்பேற நாத்திகம் பேசுதல், டெல்ஃபி நகரின் புனிதச் சுற்றுப்புறங்களில் கட்டுப்பாட்டைமீறி நுழைந்து அதன் தூய்மை யைப் போக்க முயலுதல்,அபோலோ எனும் தெய்வத்தை வழிபடு வாரைத் தடுத்தல் போன்ற தெய்வ நிந்தனைக் குற்றத்திலீடு பட்ட தனி மனிதர்களையும், நகர்களையும் தண்டிக்கவே அது அத் தகைய புனிதப் போர்களை நடத்தியது. கி. மு. 590-இல் தான் முதன் முதலாக ஒரு புனிதப் போரை இக் கழகமானது நடத் தியது. (Crisaeans) கிரிஸா என்னும் நாட்டவர் டெல்ஃபி நகருக்கு வந்துசென்ற புனித யாத்திரீகர்கள் மீது வரிவிதித்து அதன் மூலம் டெல்ஃபியைத் தங்களது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவர நினைத்தனர். அச் சமயத்தே கழகத்தின் உறுப்பு நாடுகள் அனைத்தும். சிகியான் (Sicyon) நகரச் சர்வாதிகாரியான கிளீஸ் தனீஸ் என்பாரின் தலைமையில் ஒன்று சேர்ந்து கிரிஸா (Crisa) நகரைக் கைப்பற்றி அதன் மக்களை அடக்கின. அவர்களின் நிலங்கள் யாவும் அழிக்கப்பட்டன. வேளாண்மை செய்தற்குக் கூடத் தகுதியற்ற நிலைமையை அவை அடைந்தன. சமயத்தின் பேரில் நடைபெற்ற இப் போர் உண்மையிலேயே ஒரு புனிதப் போர் என்பதில் ஐயமில்லை. ஆனால் நாளடைவில் இக் கழக மானது தன் சமயச் சார்பை இழந்து தீப்ஸ் போன்ற ஒரு சில நாடுகளின் கைப்பாவையாக மாறியது. புனிதப் போர்கள்

என்ற போர்வையில், அரசியல் காரணங்களுக்காகவும் அது போரிட ஆரம்பித்தது. அங்ஙனம் ஏற்பட்டதே இரண்டாம் புனிதப் போராகும். தீப்ஸ், போகிஸ் (Phocis) ஆகிய நகரங்களிடையே நிலவிவந்த வெறுப்புணர்ச்சியும் காழ்ப்புணர்ச்சியுமே இப் போருக்கு அடிப்படை காரணங்களாகும். லியூக்ட்ரஸ் போருக்குப் பின் தீப்ஸ் நகரோடு போகிஸ்நகர் சேர்ந்துகொண்டதெனினும் மாண்டீனியப் போர் நடைபெற்றபோது தீப்ஸுக்கு அது எவ்வித உதவியும் அனுப்பிவைக்கவில்லை. எனவே தீப்ஸ் சினமடைந்து போகிஸ் மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள ஒரு நல்ல தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தது. இச் சமயத்தில்தான் லாக்ரி (Loeri), போகிஸ் (Phocis) ஆகிய நகரங்கள் தம்மிடையே சச்சரவிட்டுக்கொண்டன. அபோலோ தெய்வத்துக்கு மானியமாக விடப்பட்ட ஒரு சில நிலங்களைப் போகியர்கள் சிலர் உழுது பயிர் செய்துவிட்டதாக லாக்ரியர்கள் குறைகூறினர்கள். புனித நிலங்களில் புகுந்து கறைப்படுத்திய குற்றத்திற்காக அத்தகைய போகியர்கள் மீது பெரும் அபராதமொன்றை, டெல்ஃபி பொது வழிபாட்டொருமைக் கழகத்தின் நிர்வாக சபை (Amphictionic Council) விதித்தது. கழகத்தில் அப்போது செல்வாக்குடன் விளங்கிய தீப்ஸே இத்தகைய அபராதம் விதிக்கப்பட்டதற்கு மூல காரணமாகும். இதையறிந்த போகியர்கள் அபராதத்தைச் செலுத்த மறுத்தனர். அபராதம் செலுத்தப்படாவிட்டால் போகியரின் நிலங்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டு அபோலோ கோயிலுக்கு மானியமாக அளிக்கப்பட்டு விடுமெனக் கழகத்தினர் பயமுறுத்தினர். பயமுறுத்தலுக்கு அஞ்சிய போகியர்கள், தங்களைக் காப்பாற்றும்படித் தங்களது அரசாங்கத்தை வேண்டிக்கொண்டனர். அரசாங்கம் அவர்களுக்குத் தக்க ஆதரவை வழங்குவதாக வாக்களித்தது. அதோடு டெல்ஃபி நகரக் கோயில் தங்களுக்கே சொந்தமென்றும், எனவே அதைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் தங்களுக்குத்தான் உண்டென்றும் போகியர் தலைவர்களான பிலோமிலஸ் (Philomelus) என்பாரும், ஓனோமார்க்கஸ் (Onomarcus) என்பாரும் வாதிக்கலாயினர். பிலோமிலஸ், ஸ்பார்ட்டாவுக்குச் சென்று அதன் உதவியை நாடினர். ஸ்பார்ட்ட அரசரான ஆர்க்கிடாமஸ் (Archidamus) அவருக்கு இரகசியமாக உதவி வழங்குவதாக வாக்குறுதி அளித்துப் படைகளைத் திரட்டுவதற்குப் பதினைந்து தாலந்து களையும் கொடுத்துதவினர். இவ்வுதவியுடன் பிலோமிலஸ், டெல்ஃபியின் மீது படையெடுத்துச் சென்று அதனை எளிதில் கைப்பற்றினர் (கி. மு. 353). டெல்ஃபியின் உதவிக்கு லாக்ரிஸ் (Locris) நகரத்திலிருந்து படையொன்று புறப்பட்டு வந்தது.

ஆனல், பிலோமிலஸ் அதனே முறியடித்துத் துரத்திவிட்டார். இதைக் கேள்வியுற்ற ஆதென்ஸ், ஸ்பார்ட்டா, அக்கீயா ஆகிய நாடுகள் லாக்ரிஸ் நகருக்கு உதவி செய்ய முன்வந்தன. போகியர்களுக்கு எதிராகப் புனிதப் போர் ஒன்று தொடங்கப் பெற்றது. பிலோமிலஸ் டெல்ஃபியில் ஒரு பெருங்கோட்டையைக் கட்டிக்கொண்டார்; அதை முற்றுகையிட்ட லாக்ரியர்களே முறியடித்துத் துரத்தினர். நாளுக்குநாள் அதிகரித்துவந்த போர்ச் செலவை மேற்கொள்ளப் பிலோமிலஸ் டெல்ஃபி கோலியின் நிதியைக் கையாள ஆரம்பித்தார்; கோயில் பணத்தைக்கொண்டு பத்தாயிரம் வீரர்கள் கொண்ட ஒரு படையைத் திரட்டினர். இதைக் கண்ட தீப்ஸ் நாடு, போகியர்களுக்கு விரோதமாகப் பெரும் படையொன்றை அனுப்பியது. பிலோமிலஸ் அதை நியோன் (Neon) என்னுமிடத்தில் சந்தித்தார். பாறையில் உச்சி ஒன்றுக்குத் துரத்தப்பட்டபோது அவர் அங்கிருந்து கீழே குதித்து மரணமடைந்தார். எதிரிகளின் கைகளில் சிக்குவதைவிடச் சாவதே மேல் என்றெண்ணியே அவர் அங்ஙனம் செய்தார்.

அதன்பின் அவர்தம் சக தளபதியான ஓனோமார்க்கஸ் தொடர்ந்து போரை நடத்தினர்; தெஸலி நாட்டைச் சேர்ந்த லாக்ரிஸ், பியோஷியா ஆகிய நகரங்களின்மேல் படையெடுத்தார். இதைக் கண்ட தெஸலியர்கள் ஓனோமார்க்கஸுக்கெதிராக இரண்டாம் பிலிப்பின் உதவியை நாடினர். பிலிப்பும் இத்தகைய தருணத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தார். தெற்கே அவர் முன்னேறத் தடையாயிருந்த மெதோம் (Methome) நகரத்தை அவர் அப்போதுதான் கைப்பற்றியிருந்தார். எனவே அவர் எளிதில் தெஸலிக்குள் புகுந்து ஓனோமார்க்கஸை எதிர்த்தார். ஆனல் இருமுறை அவர் தோற்றுப்போனர். தெஸலி நாட்டைவிட்டு வெளியேறவேண்டிய நிலைமை அவருக்கு ஏற்பட்டது. மேலும் பியோஷியாவில் கரோனியா எனுமிடத்தையும் போகியர்கள் கைப்பற்றிக்கொண்டார்கள். கி. மு. 353-இல் போகியர்களின் புகழ் உச்சநிலை அடைந்தது. ஆனல் அடுத்த ஆண்டு அது திடீரென்று வீழ்ச்சியடைந்தது. பகசீன் (Pagasaen) குடாவிற்கருகில் நடைபெற்ற ஒரு போரில் ஓனோமார்க்கஸ் கொல்லப்பட்டார். தெஸலி முழுவதும் பிலிப்பின் அதிகாரத்தின் கீழ் வந்தது. அவரது குதிரைப் படையின் வன்மையைக் கிரேக்கர்கள் முதன்முதலாகப் புரிந்துகொண்டார்கள். பிலிப் மேலும் முன்னேற விரும்பித் தெர்மாபிலேக்கணவாயை அணுகினர். ஆனல் அத்தீனியர்கள், யூபுலஸ் (Eubules) என்ற தலைவரின் கீழ் ஒரு படையை அனுப்பிக் கணவாயைப் பிலிப் கடக்க முடியாதபடி அதை அடைத்துக்கொண்டனர். எனவே பிலிப், பின்வாங்கி

னர். அதன்பின் ஆருண்டுகள்வரை, தம் படையெடுப்பை அவர் ஒத்திப் போட்டார்.

கி. மு. 351 முதல் கி. மு. 348 வரை அவர் திரேஸ் மாநிலத்தில் புகுந்து பல இடங்களை கைப்பற்றினர். அவைகளுள் முக்கியமானது ஒலிந்தஸ் என்னும் நகரமாகும். கெரோனிஸ் (Cheronesc) எனும் இடத்தை அவர் தாக்கியபோது நோய்வாய்ப் பட்டார். இச் சமயத்தில்தான் டெமாஸ்தனிஸ் எனும் அவேசப் பேச்சாளி, பிலிப்புக்கு எதிராக ஆதென்ஸைத் தூண்டிவிட்டார். பிலிப்பிக்குகள் (Philippics) என்ற தலைப்பில் அவர் பல ஆவேசச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். கி. மு. 349-இல் பிலிப், கால்கிடிய நகரங்களைத் தாக்கினர். ஏனெனில் மாசிடோனிய மகுடத்திற்கு உரிமை கொண்டாடிய அவரது சகோதரர் ஒருவருக்குக் கால்கிடிஸ் புகலிடம் தந்திருந்தது. ஒன்றன்பின் ஒன்றுகக் கால்கிடிய நகரங்கள் பிலிப்பின் கைகளில் வீழ்ந்தன. ஒலிந்தியக் கூட்டுறவு கலைந்தது. இறுதியில் ஒலிந்தஸ் ஆதென்ஸோடு ஒரு நேச ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது. அத்தீனியப் பொதுமக்கள்மன்றத்தில், டெமாஸ்தனிஸ் போன்ற பேச்சாளிகள், பிலிப்பின் மீது போர் தொடுக்கும்படி அவேசமாகப் பேசினர். இரண்டாயிரம் வீரர்கள் அடங்கிய படை ஒன்றை ஆதென்ஸ் ஒலிந்தஸின் உதவிக்கு அனுப்பிவைத்தது. ஆனால் அப் படை வருவதற்கு முன்பே ஒலிந்தஸ், பிலிப்பிடம் சரணடைந்தது. கி. மு. 348-இல் பிலிப்பின் படைகள் ஒலிந்தஸைத் தரைமட்டமாக்கின. அதில் வாழ்ந்திருந்த மக்கள், மாசிடோனியாவில் அடிமைகளாக விற்கப்பட்டனர். ஒலிந்தியக் கூட்டுறவில் சேர்ந்திருந்த ஏனைய நகரங்கள் யாவும் மாசிடோனியாவுடன் இணைக்கப்பட்டன. ஆனால் அங்கு வாழ்ந்த மக்களை அவர் அழிக்கவில்லை. அடுத்து அவர் யூபியா சமவெளியைத் தாக்கினர். போகியன் நகரத்தார் யூபியாவைக் காக்கத் தம்மாலானவரை முன்றனர். ஆனால் அவர்களால் வெற்றி ஏதும் பெற முடியவில்லை. கி. மு. 348-ஆம் ஆண்டளவில் கேரிஸ்டர் (Carystar) என்னுமிடத்தைத் தவிர ஏனைய பகுதிகள் யாவும் பிலிப்புக்குப் பணிந்தன.

புனிதப் போரசின் இரண்டாம் கட்டம்

இதற்கிடையில் இரண்டாம் புனிதப்போர் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வந்தது. ஆனால் பிலிப் ஆதென்ஸோடு சமாதானம் செய்து கொள்ள விரும்பினர். அதோடு பொதுவழிபாட்டொருமைக் கழகத்திலும் அவர் உறுப்பினராகச்

சேர விரும்பினர். இவ்விரு நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்ளத்தக்க வாய்ப்பும் வந்து சேர்ந்தது. போகியர்களை ஒழித்துவிட்டு டெல்ஃபி பொதுவழிபாட்டுரிமைக் கழகப் பதவியை ஏற்கும்படித் தெஸாலியர்கள் பிலிப்பை வேண்டிக் கொண்டனர். இச் சமயத்தில் போகிஸ் நகரில் இருவேறு கட்சிகள் தோன்றின. அவைகள் தம்முள் சச்சரவிட்டுக் கொண்டு அந்நிய நகரங்களின் உதவியைக் கோரின. ஆனல் பெலக்கஸ் (Phalacus) என்ற தளகர்த்தர் மட்டும் தெர்மாபிலேக் கணவாயைக் கைப்பற்றிக் கொண்டு ஸ்பார்ட்டர்களோ, அத்தீனியர்களோ அதன்வழி வராதபடிக் காத்து நின்ருர். கி. மு. 347-இல் ஆதென்ஸ் சமாதானத் தூதுவர்களைப் பிலிப்பிடம் அனுப்பிவைத்தது. பிலிப்பின் அரண்மனையில் அவர்களுக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. விரையில் பிலிப்பின் தூதுவர்கள் ஆதென்ஸுக்குப் புறப்பட்டு வந்தார்கள். இருதரப்பாளரும் கூடிப்பேசித் தமக்குள் ஒருநேச ஒப்பந்தத்தைச் செய்து கொண்டனர். அதன்படி அம்பிபொலிஸ் நகரத்தை ஆதென்ஸ் பெறுவதென்பதும் ஒப்புக் கொள்ளப்பட்டது. கி. மு. 346-இல் நடைபெற்ற இச் சமாதான உடன்படிக்கையானது பிலோக்ரேட்டிஸ் (Philocratas) உடன்பாடு என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் பிலோக்ராட்டிஸ் என்ற அத்தீனியத் தலைவர்தான் இவ்வொப்பந்தத்திற்கு மூலகாரணமாயிருந்ததவர்.

டெமாஸ்தனிஸ் என்ற ஆவேசப் பேச்சாளர், தம் கொள்கையை அடிக்கடி மாற்றிக் கொள்பவர். ஆனல் அத்தீனியர்கள் அவரது பேச்சை முற்றிலும் நம்பி அவர் சொன்னபடியெல்லாம் கேட்டனர். மேற்கண்ட சமாதானத்தின்படி பிலிப், போகிஸ் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் படையுதவியைத் தருமாறு ஆதென்ஸிடம் கேட்டுக் கொண்டார். ஆனல் டெமாஸ்தனிஸ் பேச்சைக் கேட்ட ஆதென்ஸ் அவ் வேண்டுகோளை மறுத்துவிட்டது. அவர்கள் உதவியில்லாமலே பிலிப், போகிஸ் நகரை வென்ருர். பொதுவழிபாட்டொருமைக் கழகத்தின் தலைவராகப் பிலிப் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக் கழகத்திலிருந்து போகியர்கள் அறவே அகற்றப்பட்டனர். பொதுவழிபாட்டொருமைக் கழகத்தின் கூட்டம் ஒன்றை, பிலிப் கூட்டிப் போகியர்களை எங்ஙனம் நடத்துவதென்பது பற்றி ஆலோசனை கேட்டார். கழகத்தினர் கூறிய ஆலோசனையின்படி போகிஸ் நகர அரசிலிருந்த இருபது நகரங்கள் சிறுசிறு கிராமங்களாகப் பிரிக்கப்பட்டன. அவைகள் தவணை முறையில் ஆண்டொன்றுக்கு அறுபது தாலந்துகள் வீதம் டெல்ஃபி கோவில் கருவூலத்திற்குச் செலுத்தி வரல் வேண்டும் என்பதும் ஒப்புக்கொள்ளப்

பட்டது. இங்ஙனம் பிலிப்பின் இரண்டு ஆசைகளும் நிறை வேறிவிட்டன. ஆதென்ஸோடு சமாதானம் செய்துகொண் டதன்பேரில் டெல்ஃபியிலுள்ள அபோலோ கோயிலின் தலைவராக விளங்கும் பெருமையையும் அவர் பெற்றார். கி. மு. 346-இல் நடைபெற்ற பிதியத் திருவிழாவில் பிலிப்பே தலைமை வகித்தார். இத்துடன் இரண்டாம் புனிதப் போர் ஒரு முடிவுக்கு வந்தது.

பிலிப் (கி. மு. 342-341) திரேஸ் நாட்டின் மீது படையெடுத் தார். பைசான்ஷிய நகர்வரை அவர் பலநாடுகளைக் கைப்பற் றினர். ஆனல் பைசான்ஷிய நகரத்தை மட்டும் அவரால் வெல்ல முடியவில்லை. ஏனெனில் ஆதென்ஸிடமிருந்து அந் நகருக்கு உதவிகள் வந்தவண்ணம் இருந்தன. டெமாஸ் தனிஸ் என்பாரின் உணர்ச்சிமிக்க சொற்பொழிவுகளின் விளை வாக ஆதென்ஸ் மாசிடோனியாவிற்கு எதிராகப் பைசான்ஷியத் திற்கு உதவி செய்துவந்தது. இங்ஙனம் பிலோக்ராட்டிஸ் சமாதானத்திற்கு விரோதமாக ஆதென்ஸ் நடந்துகொண்டது.

மூன்றும் புனிதப் போர்

திரேஸில் அவ்வளவாக வெற்றிபெற இயலாத பிலிப்புக்கு வேரூர் இடத்தில் வெற்றித் திருமகள் காத்திருந்தாள். மூன்றும் புனிதப் போரில் வந்து கலந்துகொள்ளும்படி தெசலி யர்கள் அவருக்கு அழைப்பு விடுத்தனர். கி. மு 340-இல் இப் போர் துவங்கிற்று. டெல்ஃபிக் கோயிலின் சட்டதிட்டங்களை மீறியதாக லாக்ரியர்களும் அத்தீனியர்களும் ஒருவரையொருவர் குறைகூறிக் கொண்டதால் விளைந்ததே இப் போராகும். கி. மு. 479–இல் பிளாடியா (Plataea) என்னும் போர்க்களத்தில் பெற்ற வெற்றியின் நினைவுச் சின்னங்களான ஒருசில கேடயங் களை அத்தீனியர்கள் டெல்ஃபியிலிருந்த அபோலோ கோயி லுக்குக் காணிக்கையாகச் செலுத்தினர். அங்ஙனம் செலுத்திய போது வழக்கமாகக் கடைப்பிடிக்கவேண்டிய ஒரு சில சடங்குகள் சரிவரக் கடைப்பிடிக்கப்படவில்லை என்பதை லாக்ரியர் சுட்டிக் காட்டினர். உடனே பொதுவழிபாட்டுரிமைக் கழகமானது அத்தீனியர்கள் மீது ஐம்பது தாலந்துகளை அபாரதமாக விதித்தது. லாக்ரியர்களின் தூண்டுதலாலேயே தங்கள் மீது அபாரதம் விதிக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்த ஆதென்ஸ், டெல்ஃபி கோயிலால் புனிதமற்றது என அறிவிக்கப்பட்டுப் பயிரிடப்படாமல் தரிசாகக் கிடந்த கிரிஸா நகரைச் சேர்ந்த நில

புலங்களைப் பயிர் செய்த குற்றத்தை லாக்ரியர்மீது சுமத்தியது. எனவே அம்பிஸா (Amphissa) எனும் நகரில் வதிந்த லாக்ரியர் மீது டெல்ஃபி பொது வழிபாட்டொருமைக் கழகத்தினர் போர் தொடுத்தனர். தெஸலிதான் இப் போரில் பெரிதும் உற்சாகம் காட்டியது. தீப்ஸும் ஆதென்ஸும் நடுநிலை வகித்தன. தெஸலியும் அம்பிஸாவும் ஒன்றோடொன்று போரிட்டுக் கொண்டன (கி. மு. 340). ஓராண்டுக் காலம்வரை இருநாடுகளும் போரிட்டுக் கொண்ட பின் தெஸலி இரண்டாம் பிலிப் மன்னரின் உதவியை நாடிற்று. உடனே பிலிப் ஒரு படையுடன் புறப்பட்டுவந்து தெர்மாபிலேக் கணவாய்க்குள் நுழைந்தார். இதைக் கேள்வியுற்ற டெமாஸ்தனிஸ், பிலிப்பின் குறிக்கோள் ஆதென்ஸைக் கைப்பற்றுவதேயாகும் என்று மக்களிடம் கூறிப் பிலிப்பிற்கெதிராய் அவர்களை ஒன்று திரட்டினார். மேலும் பிலிப்பிற்கெதிராய்த் தீப்ஸ் நாட்டு உதவியையும் அவர் பெற்றார். அம்பிஸாவைக் கைப்பற்றிய பின் தாய்நாடு திரும்பிக் கொண்டிருந்த பிலிப்பை ஆதென்ஸும் அதன் நேச நாடுகளும் சேர்ந்து கி. மு. 338-இல் பியோஷியாவில் உள்ள கெரோனியாவில் எதிர்த்தன. பிலிப்பின் படையில் 30,000 காலாட்படை வீரர்களும் 2,000 குதிரைப் படை வீரர்களும் இருந்தனர். அவருக்கு எதிர் தரப்பிலும் ஏறக்குறைய அதே அளவு பலமுள்ள படைகள் இருந்தன. நேசநாடுகள் படையில் தீபர்களின் ஈட்டிவீரர்கள் வலப்புறத்திலும், அத்தீனியர்கள் இடப்புறத்திலும் அணிவகுத்து நின்றனர். அத்தீனியப் படைப்பகுதியில் அக்கீயர்கள், கொரிந்தியர்கள், பேகியர்கள் போன்ற சிறிய நாடுகளின் படைகளில் இடப்புறப் பகுதிப்படை பெரிதும் வலுவாக்கப்பட்டது, எப்பமினண்டஸ் என்பார் கடைப்பிடித்த பாலங்ஸ் என்ற அணிவகுப்பு முறை இங்கேயும் கடைப்பிடிக்கப்பட்டது. நன்கு வலுவாக்கப்பட்ட பிலிப்பின் இடப்புறப்பகுதிப்படை தீபர்களின் வலப்புற அணிவகுப்பைத் தாக்கி அதைக் குலைத்துவிட்டது. அச் சமயத்தில் இடப்புறப்படையின் பக்கவாட்டில் வைக்கப்பட்டிருந்த குதிரைப்படையை, பிலிப் எதிரிகளின் மீது ஏவினார். பிலிப்பின் மைந்தரான அலெக்சாந்தர், அக் குதிரைப் படையின் தளகர்த்தராயிருந்து மிகத்திறமையுடன் போராடி எதிரிகளின் அணிகளைக் கலைத்துவிட்டார். தீப்ஸ் நாட்டைச் சேர்ந்த 300 வீரர்கள் கடைசிவரை போராடித் தம் வீரத்தையும் நாட்டுப் பற்றையும் நிலைநாட்டினர். தெர்மாபிலேக் கணவாயில் லியோனிடாஸ் என்ற ஸ்பார்ட்டத் தலைவரும் அவர்தம் 300 வீரர்களும் இறுதிவரை போராடிய அரிய நிகழ்ச்சியை இப் போர் நமக்கு நினைவூட்டுகிறது. இங்ஙனம் தீபர்கள் தோற்கடிக்கப்பட்ட பின் வீரர்கள் அத்தீனியர்களைப் பின்னிருந்தும் பக்கவாட்டி

லிருந்தும் தாக்கித் தோற்கடித்தனர். ஆயிரம் அத்தீனியர்கள் இப் போரில் மாண்டனர். அத்தீனியப் படையில் சேர்ந்து போரிட்டவர்களில் பெரும் பேச்சாளரான டெமாஸ்தனிஸும் ஒருவர்.

பிலிப் ஆதென்ஸின் மீது பெருமதிப்புக் கொண்டவர். ஹெல்லனிய நாகரிகத்தின் சிறந்ததொரு பிரதிநிதி ஆதென்ஸ் ஒன்றுதான் என்பது அவரது எண்ணம். அதனால்தான் அவர் ஆரம்பத்திலிருந்தே ஆதென்ஸின் நட்பைப் பெற முயன்றார். ஆனால் டெமாஸ்தனிஸின் பேச்சுகளால் அத்தகைய நட்பு ஏற்படாதொழிந்தது. எனினும் தமது நாட்டுக்கிருந்ததை விட அதிகமான கப்பல்கள் ஆதென்ஸின் கடற்படையில் இருந்ததால் பிலிப் ஆதென்ஸைப் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. எனவே டெமாடஸ் (Damades) என்ற பேச்சாளரை பிலிப் ஆதென்ஸிற்குச் சமாதானத் தூதுவராக அனுப்பினர். தாம் பிடித்த சிறைக்கைதிகள் அனைவரையும் திருப்பித் தந்துவிடுவதாகவும், மீண்டும் தாம் அட்டிகாவின் மேல் படையெடுப்பதில்லையென்றும் பிலிப் வாக்குறுதி அளித்தார். அதற்கு மாறுக ஆதென்ஸ் தனது இணைக் கூட்டரசைக் கலைத்துவிட்டு, மாசிடோனியாவின் நட்பு நாடாகத் தன்னை அறிவிக்க வேண்டுமென்று பிலிப் கேட்டுக் கொண்டார். இந் நிபந்தனைகளை ஆதென்ஸ் ஏற்றுக் கொண்டது. எனவே டெமாஸ்தனிஸின் கொள்கை முடிவில் தோல்வியுற்றது. பிலிப், தீபர்களின் மீது கடுமையான நடவடிக்கையை எடுத்துக் கொண்டார். பெரும் தொகையை இழப்பீடாகப் பெற்ற பின்னரே அவர் தீப்ஸ் நாட்டுக் கைதிகளை விடுதலை செய்தார். ஏனைய பியோஷிய நகரங்கள் யாவற்றிற்கும் சுதந்திரம் வழங்கப்பட்டது. காட்மியா கோட்டையில் மாசிடோனியப் படையொன்று நிறுத்தி வைக்கப்பட்டது. மாசிடோனியாவிற்குச் சாதகமாயிருந்த தீபர்களைக் கொண்டு அரசாங்கம் ஒன்றும் அங்கே அமைக்கப்பட்டது. அவர்களின் எதிரிகள் எல்லாம் கொல்லப்பட்டனர்; நாடு கடத்தப் பட்டனர். இங்ஙனம் வெற்றிவாகை சூடிய பிலிப், அடுத்து பெலப்பொனீஷியத் தீபகற்பத்திற்குள் நுழைந்தார். ஸ்பார்ட்டாவைத் தவிர ஏனைய நகரங்கள் யாவும் அவருக்கு அடிபணிந்தன. தம்மை மதியாத ஸ்பார்ட்டாவைப் பிலிப் கடுமையாகத் தண்டித்தார். லக்கோனியாவை அவரது படைகள் சூறையாடின. அதன் பின் அவர் கொரிந்து நகரில் அனைத்துக் கிரேக்க நகரங்களின் சம்மேளனம் ஒன்றைக் கூட்டினர். அதற்கு ஒவ்வொரு கிரேக்க நாடும் பிரதிநிதிகளை அனுப்பி வைத்தது. ஆனால் ஸ்பார்ட்டா மட்டும் பிரதிநிதி எவரையும்

அனுப்பவில்லை. இந்தப் பேரவையானது இரண்டாம் பிலிப் பைக் கிரேக்கப் படையின் தளகர்த்தராக நியமித்தது. அவரது தலைமையில் கிரேக்கர்கள் பாரசீகத்தின் மேல் படையெடுக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. அத்தகைய படை யெடுப்புக்காகும் செலவைத் தான் ஏற்றுக்கொள்வதாக மன்றம் வாக்களித்தது. ஆனால் அந்தரங்கத்தில் ஒவ்வொரு கிரேக்கனும் இரண்டாம் பிலிப்பை ஒரு அந்நியன் என்றே எண்ணினான். அவரது வீழ்ச்சியைக் கிரேக்கரனைவரும் ஆவலுடன் எதிர்பார்த் திருந்தார்கள்.

பாரசீகப் படையெடுப்பிற்கான ஆயத்தங்களைச் செய்வதில் இரண்டாம் பிலிப் மும்முரமாக ஈடுபடலானார். தமது படை யெடுப்பிற்கு முன்னோடியாகப் பார்மினியோ (Parmenia) என்பார் தலைமையில் ஹெல்லஸ்பாண்ட் பிரதேசத்திற்கு ஒரு படையை அனுப்பிவைத்தார். ஆனால் பிலிப் அப் படையெடுப் பில் கலந்து கொள்ளு முன்னர் அவரது மனைவியால் ஏவப்பட்ட பாசேனியஸ் என்ற சாதாரணப் போர்வீரனொருவனால் கி. மு. 336–இல் கொல்லப்பட்டு மாண்டுபோனார். அவர் இறக்கும் போது நாற்பத்தாறு வயதே நிரம்பப் பெற்றிருந்தார். அவர், தம் மனைவி ஒலிம்பியாஸிடம் உண்மையாக நடந்து கொள்ள வில்லை. கிளியோபாட்ரா என்ற அழகிய மங்கையை மணம் செய்து கொள்வதற்காக அவர் தம் மனைவி ஒலிம்பியாஸை விவாகரத்து செய்தார். ஒலிம்பியாஸ் மனம் முறிந்து இபைரஸ் என்ற தம் தாய்நாட்டிற்குத் திரும்பிவிட்டார். கிளியோபாட்ரா வுக்கு ஆண் மகவு ஒன்று பிறந்துள்ளது என்பதைக் கேள்வி யுற்றதும் ஒலிம்பியாஸின் உள்ளம் கொதித்தது. அதன் விளைவாகத் தீட்டப்பட்ட சதியின் காரணமாகவே பிலிப் கொலை செய்யப்பட்டார்.

பிலிப்பின் பெருமையும் குணாதிசயங்களும்

அலெக்ஸாந்தரது பெருமை, வரலாற்றில் பரக்கப் பேசு கின்ற அளவிற்குப், பிலிப்பின் பெருமை பேசப்படுவதில்லை. ஆனால் உண்மையில் அலெக்ஸாந்தரது பெருமைக்கு வித்திட் டவர் அல்லது அடித்தளம் அமைத்தவர் பிலிப்பேயாவர். மாசிடோனியாவை ஒரு பெரும் வல்லரசாக்கியவர் அவரே. மாசிடோனியப் படையானது ஐரோப்பாவிலேயே ஈடும் எடுப்புமற்ற முறையில் திறம்பட அமைக்கப்பட்டது, அவர் காலத்தில்தான். தமக்குப் பின் படைகளை நன்முக நடத்தத் தக்க பல தளபதிகளை அவர் உருவாக்கி அவர்களுக்குத் தக்க

பயிற்சிகளையும் அளித்திருந்தார். கிரீஸ் நாட்டை முதன் முதலாக ஒன்றுபடுத்திய பெருமை அவருக்கே உரியது. தென் திசைக் கிரேக்கர்கள் அவரை ஒரு அந்நியர் என்றே கருதி னலும் அவர் தம்மைக் கிரேக்கர் என்றே கருதிக் கொண்டார். ஹெல்லனிய நாகரிகத்தை அவர் நேசித்தது மட்டுமன்றிப் பிற நாடுகளில் அதைப் பரப்பவும் பெரிதும் விரும்பினர். அலெக்ஸாந்தரின் பாரசீகப் படையெடுப்புத் திட்டத்திற்கு வித்திட்டவர், அவரே. கிரீஸில் ஸ்பார்ட்டாவும், ஆதென்ஸும், தீப்ஸும் செய்யத் தவறியதோர் பணியை அவர் செவ்வனே செய்து முடித்தார். சிறுசிறு நகர அரசுகளையெல்லாம் ஒழித்துக் கிரீஸில் ஒரு தேசிய அரசை உருவாக்கிய பெருஞ்சிறப்பு அவருக்கே உரியதாகும். சார்டினிய மன்னர் விக்டர் இமானுவேல் எங்ஙனம் இதாலிய நாடுகளையெல்லாம் வென்று ஒன்று கூட்டி இத்தாலிய ஐக்கியத்தை உருவாக்கினாரோ அதேபோன்று தான் மாசிடோனிய மன்னராகத் தோன்றிய பிலிப், கிரீஸ் நாட்டின் ஐக்கியத்தை ஏற்படுத்தினர். சூழ்நிலை அதற்குச் சாதகமாயிருந்தது. எங்கும் குழப்பமும் கொந்தளிப்பும் கிரீஸில் பரவலாக இருந்துவந்ததாலேயே அவரது எண்ணம் கைகூடிற்று. இருப்பினும் படைப்பாற்றல் மிக்க ஒரு இராணுவ மேதையாகவும், பெரிய அரசியல் விற்பன்னராகவும் (Statesman) அவர் விளங்கினர் என்பதில் ஐயமில்லை. டெமாஸ்தனிஸ் என்ற பேச்சாளரின் சொல்வன்மையாலும், அலெக்ஸாந்தரின் புகழொளியாலும் ஓரளவிற்கு அவரது பெருமை மறைக்கப் பெற்றிருந்தாலும் உண்மையிலேயே அவர் ஒரு தகைசான்ற கிரேக்க வீரர் என்பதை இக்கால வரலாற்றாசிரியர்கள் அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர்.

பிலிப்பின் குணாதிசயங்கள்

தமது இளவயதில் எப்பமினண்டஸ் என்ற தலைவரோடு இருந்து பயிற்சி பெற்ற பிலிப்பிடம் கிரேக்கப் பண்புகள் பல தாமாகவே குடிகொண்டன. இராணுவம் பற்றிய பல உண்மை களை அவர் அப்போதே அறிந்துகொண்டுவிட்டார். நல்ல உரம் பெற்ற உடலோடு திறம் வாய்ந்த உள்ளத்தையும் அவர் பெற்றிருந்தார். நல்ல உடற்பயிற்சியின் விளைவாக அவரது உடலில் வலிவும் வனப்பும் ஒருங்கே காணப்பட்டன. மிருக உணர்ச்சிகளால் பெரிதும் அலைக்கழிக்கப்பட்ட அவர் இடை யிடையே அத்தீனியக் கனவானைப்போல நாகரிகமாக நடந்து கொள்ளவும் முயன்றார். தமது மகனைப் போலவே அவர் கட்டுக்கு அடங்காத சினத்துக்கு அவ்வப்போது ஆளானார். ஆனால் கோபம் உள்ள இடத்தில்தான் குணமும் இருக்கும்

என்ற முதுமொழிக்கிணங்க அவரிடம் உதாரகுணமும், தாராள மனப்பான்மையும் பெரிதும் காணப்பட்டன. தம்மை மகிழ்வித்த ஓர் அடிமையை அவர் ஒரு சமயம் பெரும் பதவியில் அமர்த்தினர். போர் புரிவதில் அவருக்கிருந்த விருப்பம் சொல்லொணாதது. அதே போன்று மது அருந்துவதிலும் சூதாடுவதிலும் அவர் மட்டற்ற இன்பம் கண்டவர். இரவில் அவர் வெகுநேரம் வரை தமது நண்பர்களோடு சூதாடிக் கொண்டிருப்பார். அழகிய இளைஞர்களை அவர் விரும்பி அருகில் வைத்துக்கொள்வார். ஏராளமான மகளிரை அவர் மணம் செய்துகொண்டார். ஒலிம்பியாஸ் என்ற முதல் மனைவி அவர் காதல் வாழ்வுக்கு இடையூருயிருந்ததால் அவளை விவாகரத்து செய்துவிட்டார். ஒலிம்பியாஸின் சதியாலேயே அவர் உயிரியிந்தார் என்பதை நாம் மேலே கண்டோம். போர்க்களத்தில் சலியாது போரிட்டு ஒவ்வொரு வீரனையும் உற்சாகப்படுத்துவார். தம் ஒப்பற்ற வீரத்தால் ஒவ்வொரு போரிலும் அவர் தமது முத்திரையைப் பதித்துவிடுவார். "ஆஹா! என்ன மனிதர்" என்று அவரது எதிரியான டெமாஸ்தனிஸ் வியந்து பாராட்டியுள்ளார். அதிகாரத்தையும் பேரரசையும் பெறவேண்டி அவர் செய்த போர் ஒன்றில் தமது கண்ணை இழந்தார். இன்னொன்றில் அவரது தோள்பட்டை முறிந்தது. ஒரு கையும் ஒரு காலும் உணர்ச்சியற்றுப் போயின. இப்படியெல்லாம் ஆன பின்னும் அவர் ஓயாது போரிட்டுக் கொண்டேயிருந்தார். போரில் வெற்றிபெற அவர் எவ்விதமான தந்திரத்தையும் கையாளுவார்; எதிரிப் படையில் ஒருசிலருக்காவது லஞ்சம் வழங்கிய பின்னரே அவர்கள் மீது போர் தொடுப்பார். வாக்குறுதிகளைக் காப்பாற்றும் வழக்கம் அவரிடம் சற்றுக் குறைவுதான். அம்பிபொலிஸ் நகரத்தைப் பிடித்து அத்தீனியர்களுக்குத் தருவதாகச் சொல்லி ஏமாற்றிவிட்டார். ஏமாற்றுக் கலையில் கைதேர்ந்தவர் என அவரைக் கருதலாம். அவசியமான போது பொய் சொல்லவும் அவர் தயங்கியதில்லை. ஆனால் போரில் தோல்வியடைந்தவர்களிடம் அவர் கருணையோடும் இரக்கத்தோடும் நடந்துகொண்டார். தோற்றுப்போன அத்தீனியர்களை அவர் மிகவும் தாராளச் சிந்தையுடனேயே நடத்தினர். ஆனால் ஸ்பார்ட்டர்களைப் போன்று தம்மை மதியாத பகைவர்களிடம் அவர் சற்றுக் கடுமையாகவே நடந்துகொண்டார். பழகுவதற்கு இனிய பண்பாளர் அவர். அனைவரும் (டெமாஸ்தனிஸைத் தவிர) அவரை விரும்பிப் போற்றினர். வீரத்திலும் வலிமையிலும் நற்குணத்திலும் நற்செய்கைகளிலும் அவருக்கு

ணையாக இருந்த அரசர் அவர் காலத்தே வேறெருவரும் ல்லையென அவரிடம் பழகியவர் அனைவரும் ஒருமுகமாகக் றியுள்ளனர்.

19. மாவீரர் அலெக்ஸாந்தர்

1. வாழ்க்கை (கி. மு. 356–323)

"செயற்கரிய செய்வார் பெரியர்" என்ற குறள்மொழிக் கிணங்க அரும்பெருங் காரியங்களைச் செய்து வரலாற்றில் அழியா இடம்பெற்ற அலெக்ஸாந்தர் கி. மு 356–இல் தோன்றினர். அவருடைய அன்னை ஒலிம்பியாஸின் (Olympias) உள்ளத்திண்மையும், அவரது தந்தை பிலிப்பின் உடல் உரமும் ஒருங்கே அவரிடம் காணப்பட்டன. ஒலிம்பியாஸ் என்ற அவரது அன்னை அவரை அக்கீலஸ் (Achilles) என்ற புராணவீரனின் வழிவந்தவரென்று கூறிக் கொள்வார். கிரேக்கத் தெய்வங்களின் ஆசியாலேயே அலெக்ஸாந்தர் அவதரித்தார் என்ற நம்பிக்கை அவருக்குண்டு. அலெக்ஸாந்தர் தோன்றுவதற்கு முன், அவரது தாயார் கண்ட கனவு அவர்தம் நம்பிக்கையை வலுப்படுத்தியது. அவரது வயிற்றில் இருந்து மரம் ஒன்று உற்பத்தியானது போன்றும், அதன் கிளைகள் பாரெங்கும் பரவி விரிந்தமை போன்றும் அவர் கனவு கண்டார். எனவே, அலெக்ஸாந்தரது அரசியல் கலாச்சார ஆதிக்கம் உலகம் பூராவும் பரவப்போகிறது என அவர் நம்பினர். அந்த நம்பிக்கையை அலெக்ஸாந்தரின் பிஞ்சு உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் அவர் பதியவைத்தார். அலெக்ஸாந்தர், இலியட் (Iliad) என்ற காவியத்தில் (அக்கீலஸ் பற்றிக் கூறுவது) பெரிதும் ஈடுபாடுடையவராய் விளங்கினர். அவர் ஹெல்லஸ்பாண்டைக் கடந்து ஆசியப் படையெடுப்பில் இறங்கியபோது, தமது முன்னோர்கள் நடத்திய ட்ராஸ் நகர முற்றுகையை முடித்துவைப்பதாகவே எண்ணினர். அவர் சென்றவிடங்களில் எல்லாம் அரிஸ்டாட்டிலால் விளக்கவுரை எழுதப்பட்ட இலியட் நூல் ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டே சென்றார். அந்த நூலை அவர் தம் தலையணைக்கு அடியில் வைத்துக்கொண்டு தூங்குவது வழக்கம்.

அலெக்ஸாந்தரது இளமைக்காலத்தே அவருக்கு நல்ல கல்வி புகட்டப்படுவதற்குப் பிலிப் வழி வகைகள் செய்தார்.

தம்மால் அடைய முடியாமல் போன அக் கல்விச்செல்வத்தைத் தம் மகனுக்கு அவர் வாரி வழங்கினர். லியோனிடாஸ் (Leonidas) என்னும் ஆசிரியர் அவருடைய உடல் உரத்திற்குத் தேவையான பயிற்சிகளை அளித்தார். லிசிமாக்கஸ் (Leycymacus) என்பார் எண்ணையும் எழுத்தையும் அவருக்குப் புகட்டினர். அரிஸ்டாட்டில் என்னும் அறிஞர் அவரது அறிவுப் பசியைப் போக்கினர். அலெக்ஸாந்தரிடம் ஹெல்லனீயப் பண்பை வளர்த்தவர் அரிஸ்டாட்டில் என்னும் அறிஞரேயாவார். கிரேக்க நாகரிகத்திலும் அலெக்ஸாந்தர் கொண்டிருந்த அளவற்ற ஆர்வத்திற்கு அரிஸ்டாட்டிலே காரணமென்ருல் அது மிகையாகாது. ஒரு இலட்சிய வீரனுக்குத் தேவையான பயிற்சிகளையெல்லாம் அவர் பெற்ருர். எல்லா விளையாட்டுகளிலும், அவர் வல்லவராய்த் திகழ்ந்தார். குதிரை யேற்றத்தில் அவர் நிகரற்றவரராய்த் திகழ்ந்தார். ஒருவராலும் அடக்க முடியாத புகிபாலஸ் (Bucephaies) என்ற குதிரையை அவர் கணத்தில் அடக்கிவிட்டார். விற்போர், மற்போர், வாட்போர்களில் அவர் வல்லவராக விளங்கினர். வேட்டையாடுவதிலும், சிங்கம் போன்ற கொடிய மிருகங்களுடன் சரிநிகர் சமானமாகப் போரிடுவதிலும் அவர் தனியின்பம் கண்டார். உழைப்பின் உயர்வை உணர்ந்த அவர் எதற்கெடுத்தாலும் வேலைக்காரர்களின் துணையைத் தேடிய தமது நண்பர்களைக் கேலி செய்வது வழக்கம். உணவிலும் உறக்கத்திலும் ஏன் மதுவருந்துவதிலுங்கூட அவர் மிதமாகவே இருந்தார். தமது வாழ்வின் இறுதிக் காலத்திலேயே அளவுக்கு மீறிக் குடிக்கும் கெட்ட பழக்கம் அவருக்கு வந்தது. இத்தகைய மிதமான பழக்கங்களால் அவரது உடல் என்றும் ஆரோக்கியமாகவே காணப்பட்டது. அவரது உடலிலும் உடையிலும் ஒரு நறுமணம் செறிந்துவந்ததாகப் புளூடார்க் என்ற சரித்திரச் சான்ருர் கூறியிருக்கின்ருர். நல்ல அழகிய கம்பீரமான தோற்றத்தை அவர் பெற்றிருந்தார். தமது தாடியை மழித்து முகத்தை எப்போதும் வழவழப்பாகவே வைத்திருக்கும் பழக்கத்தை அவர் மேற்கொண்டிருந்தார். எதிரிகளின் கைகளில் எளிதில் சிக்கக்கூடியது ஒருவனது தாடியானதால், அதை மழித்துவிடுவதே வீரனுக்கு அழகு என்னும் கருத்தையுடையவர் அவர். அவரிடம் இருந்தே இப் பழக்கம் ஐரோப்பாவில் பரவியது என்பர்.

இளமை தொட்டே கல்வியில் அதிக நாட்டம் அவருக்கிருந்தது. பலவிதமான அறிவையும் தேடிப் பெறவேண்டும் என்ற தாகம் அவரை வலுவாகத் தாக்கிவந்தது. நாள் முழுவதும் போர்க்களத்தில் செலவழித்த பின், பாதி இரவை அவர்

படிப்பதிலும், படிப்பாளிகளுடன் சல்லாபிப்பதிலும் கழிப்பது வழக்கம். அறிவியல் வல்லுநர் கூட்டமொன்று அவர் கூடவே தொடர்ந்த வண்ணமிருக்கும். ஆங்காங்கே கிடைக்கும் அறிவு நூல்களையெல்லாம் திரட்டும்படி அவர் ஆணையிடுவார். இங்ஙனம் அறிவுப்பசி நிறைந்திருந்த அலெக்ஸாந்தரிடம் மூட நம்பிக்கைகளும் நிறைந்திருந்தன. குறிசொல்வோரையும், சோதிட நூல் வல்லாரையும் அவர் நம்பினர். சில சமயம் அபசகுணங்கள் ஏற்பட்டதற்காக, ஆரம்பித்த போரை அவர் நிறுத்திவிட்டதுமுண்டு. இது அவரிடமிருந்த குறைகளில் ஒன்றாகும். கட்டுக்கடங்காத சினத்திற்கு ஆளாவது அவரது இன்னொரு குறைபாடாகும். கோபத்தில் அவர் செய்த கொடுமைகள் பல. அதனால் அவர் பின்னர் வருந்தி ஏங்குவார். அவர் அடிக்கடி உணர்ச்சி வயப்பட்டுவிடுவார். கவிதையிலும் இசையிலும் அவர் உள்ளத்தைப் பறிகொடுத்துவிடுவதுமுண்டு. பல மனைவியரை மணந்தார் என்றாலும் அவர் முறைகேடான ஒழுக்கம் உடையவர் அல்லர். ஏற்கெனவே திருமணமான மங்கை ஒருசமயம் அவரைத் தேடிவந்த காலை, அவர் அவளைத் துரத்தி அடித்துவிட்டார். தமது மனைவிமார்கள் மீது அவர் அருங்காதல் கொண்டிருந்தார். தம்முடைய படையில் பணி புரிந்த வீரர்களிடம் அளவு கடந்த இரக்கம் அவருக்குண்டு. அவர்கள் போரில் காயமுற்று அவதியுறுவதைக் காணும் போதெல்லாம், அத்தகைய நிலையைத் தாமே அனுபவிப்பது போல் உணர்வார். குற்றங்களை எண்ணி வருந்துபவர்களை மன்னிக்கும் பெருந்தன்மை அவருக்குண்டு. தம்மை விட்டு ஓடிப்போன ஹார்ப்பாலஸ் (Harpalus) என்ற நிதிகாப்பாளர், திரும்பிவந்து சரணடைந்தகாலை, அவர்மீது கழிவிரக்கங்கொண்ட அலெக்ஸாந்தர் மீண்டும் அப்பதவியிலேயே அவரை அமர்த்தினர். தம்மைச் சுற்றியிருந்தவர்களை அவர் நன்கு நம்பினர். அவருடைய அரண்மனை வைத்தியர், அவருக்கு ஒரு சமயம் கொடுத்த மருந்தில் நஞ்சு கலந்திருப்பதாகக் கடிதம் வந்த பின்னும் அவர் அம் மருந்தை அருந்தினர். அதனால் தீய பலன் ஒன்றும் ஏற்பட வில்லை. போர்க் களங்களில் மிக மிகக் கடுமையாக மக்களைக் கொன்று குவித்தார். சில சமயங்களில் மிகத் தாராள மனப் பான்மையுடன் நடந்துகொண்டார். இந்தியாவின் பேரரசை அவர் தமக்குச் சமமாக மதித்து நடத்தியது இத்தகைய குணத்தினாலேயாம். ஆனால் சூஸா என்ற நகரில் தம்மை எதிர்த்த பெட்டிஸ் என்ற தளகர்த்தரைத் தேர்க்காலில் கட்டி ஊரெல்லாம் வலம்வந்தார். இங்ஙனம் இரு வேறுபட்ட குணங்கள் அவரிடம் ஒருங்கே காணப்பட்டன.

பேராசை என்பது அவரது குணங்களில் எல்லாம் தலையான தொன்றாய் விளங்கியது. நாட்டைப் பரப்பவும், புகழை அடையவும் எத்தகைய காரியத்திலும் துணிந்து இறங்க எப்போதும் அவர் தயாராக இருந்தார். போர் அரவம் கேட்டவுடன் அவர் தம்மையே மறந்து தம்முடைய பாதுகாப்பைப் பற்றியும் கவலைப் படாமல் போரின் மத்தியில் புகுத்து முன்னேறிக்கொண்டே செல்வார். அவருடைய நண்பர்கள்தாம் அவரைச் சூழ நின்று காப்பாற்றுவர். போரிடுவதற்கான ஊக்கத்தையும் உணர்ச்சியையும் அவர் ஊட்டினாரேயழிய, உண்மையான வெற்றியைப் பெற்றுத் தந்தவர்கள் அவரது பயிற்சிமிக்க தளகர்த்தர்களே ஆவர். அவரைப் பொறுத்தவரையில் அவர் ஒரு சாதாரண தளபதியேயாவார். நாட்டை ஆளுங் கலையில் அவர் கைதேர்ந்த வராய் விளங்கினர். கருணையோடும் அதே சமயத்தில் உறுதியோடும் அவர் தமது குடிமக்களை நடத்தினர். தம்முடைய விசுவாசமான அதிகாரிகளுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை அவர் தவறாது நிறைவேற்றினர். ஓயாது போரில் ஈடுபட்டிருந்த போதிலும் தாம் வென்ற நாடுகளையெல்லாம் ஒன்றுபடுத்தி, அவைகளில் ஒரே பண்பாட்டை வளர்க்கவேண்டுமென்ற உயர்ந்த குறிக்கோளை அவர் என்றும் மறந்ததே இல்லை. இத்தகைய உயர் குணச் சிறப்புகளாலேயே அலெக்ஸாந்தர் வரலாற்றில் மாமன்னர் (Alexander the Great) எனப் போற்றப் படுகின்றார்.

(2) அலெக்ஸாந்தரது வெற்றிகள்

அலெக்ஸாந்தர் கி. மு. 336-ஆம் ஆண்டு, தமது 20-ஆம வயதில் அரியணையேறினர். அவரைச் சுற்றி நாற்புறத்திலும் எதிர்ப்புகளும், சூழ்ச்சிகளும் காணப்பட்டன. திரேஸிலும், இலீரியாவிலுமிருந்த மக்கள் இவருக்கெதிராய்க் கலகத்தில் இறங்கினர்கள். ஈடோலியா,போகிஸ்,ஈலிஸ்,ஆர்காலிஸ்,அகர்னேனியா போன்ற கிரேக்க நகரங்கள் மாசிடோனியாவின் மேலாண்மையை ஏற்க மறுத்தன. பிலிப் இறந்தார் என்ற செய்தியைக் கேட்டு டெமாஸ்தனிஸ் மாலையொன்றைக் கழுத்தில் போட்டுக்கொண்டு மகிழ்ச்சியாய்க் கூத்தாடினர். பிலிப்பைக் கொன்ற பாசோனியஸ் (Pausanius) என்பானுக்கு ஒரு நல்ல பரிசு வழங்கவேண்டும் என்று அவர் அறிவித்தார். பாரசீகத்தில் இருந்து இத்தகைய கலகக்காரர்களுக்குப் பொருள் உதவி கிடைத்தது. இங்ஙனம் திரும்பிய திக்கெல்லாம் எதிரிகள் சூழ்ந்திருந்த போதிலும் அலெக்ஸாந்தர் மனம் தளரவில்லை. தமது தந்தையால் உருவாக்கப்பட்ட சிறந்த சேனை இருக்கும் வரையில் தம்மை யாரும் அசைக்க முடியாது என்ற நம்பிக்கை அவரிடம் இருந்தது.

அலெக்ஸாந்தரது வெற்றிகள்
படையெடுப்புப் பாதை
காஸ்பியன் கடல்
ஆரியா
பாக்ட்ரியா
ஜெட்ரோசியா
பாடலா
எகிப்து
செங்கடல்
அரேபியா
மெம்பிஸ்
அலெக்ஸாந்திரியா
கிரீட்
சைப்ரஸ்
பாரசீக வளைகுடா
நைல் நதி

ஒரே ஆண்டில் அலெக்ஸாந்தர் தம்முடைய எதிரிகளையெல்லாம் அடக்கிவிட்டார். முதலில் அவர் தமது உள்நாட்டில் இருந்த சதிகாரர்களைச் சிறைசெய்து கொல்வித்தார்; அதன்பின் கி.மு. 316-இல் தெர்மாபிலேக் கணவாயின் வழியாகக் கிரீஸுக்குள் நுழைந்தார். பின்னல் வேகத்தில் அவர் தீப்ஸ் நாட்டை அடைந்தார். அவரது வேகத்தைக் கண்ட கிரேக்கர்கள் ஓடோடி வந்து அவரைத் தொழுது நின்றனர். தம்மை மன்னிக்கும்படி ஆதென்ஸ் அவரை வேண்டிக் கொண்டதோடன்றி இரண்டு கிரீடங்களையும் அவருக்கு வழங்கியது. பொதுவழிபாட்டொருமைக் கழகமானது அவரைத் தனது தலைவராகத் தேர்ந்தெடுத்தது. கொரிந்து நகரில் கூடிய கிரேக்க நகர அரசுகளின் சம்மேளனமொன்றில் ஸ்பார்ட்டாவைத் தவிர எல்லா அரசுகளும் கலந்து கொண்டு அலெக்ஸாந்தரைத் தங்கள் தானைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தன. வேண்டும்போது அவருக்குப் பொருளும் படையுதவியும் தருவதாக உறுதி அளித்தன. இங்ஙனம் தெற்குக் கிரீஸில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிய பின் அவர் தம் தலைநகருக்குத் திரும்பி அங்கே ஒழுங்கை நிறுவுவதில் முனைந்தார். பல காட்டுமிராண்டி இனங்களை அவர் கடுமையாக ஒடுக்கத்தொடக்கினார். அதன்பின் இலீரியாவில் கலகம் தோன்றிய தெனக் கேள்வியுற்றுச் சேர்பியா மூலமாக 320 கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்து திடீரென்று அவர்களைத் தாக்கித் தோற்கடித்தார். இச் சமயத்தில் அலெக்ஸாந்தர் இறந்துவிட்டார் என்ற புரளியை நம்பித் தீப்ஸ் நாட்டினர் மாசிடோனிய அதிகாரிகளைக் கொன்றுவிட்டுப் புரட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டனர். இதை அறிந்த அலெக்ஸாந்தர் இரண்டே வாரத்தில் தமது பெரும்படையை இலீரியாவில் இருந்து தீப்ஸிற்குக் கொணர்ந்து கலகக்காரர்களைத் தாக்கினார் (335 கி. மு.). நாலாயிரம் தீபர்கள் கொல்லப்பட்டு முப்பதினாயிரம் தீபர்கள் சிறைபிடிக்கப்பட்டனர். தீப்ஸ் நகரம் தரைமட்டம் ஆக்கப்பட்டது. பிண்டார் என்ற கவிஞர் ஒருவரது வீட்டைத் தவிர ஏனைய வீடுகளெல்லாம் இடித்துத் தள்ளப்பட்டன. தீப்ஸுக்கு உதவிப் படை அனுப்பாத காரணத்தால், ஆதென்ஸ் அவரது கோபத்தினின்றும் தப்பியது. மற்றும் அத்தினிய நாகரிகத்தின் மீது அவருக்கு அளாதிப் பற்றும் மரியாதையும் இருந்தன. எனவே தமக்கு விரோதமான டெமாஸ்தனிஸ் போன்ற தலைவர்களைக் கூட அவர் கண்டிக்காது விட்டுவிட்டார்.

ஸ்பார்ட்டாவைத் தவிர ஏனைய கிரேக்க நகர அரசுகள் அனைத்தின் விசுவாசத்தையும் பெற்றபின், அலெக்ஸாந்தர் மாசிடோனியாவிற்குத் திரும்பிவந்து ஆசியப் படையெடுப்புக்கான

ஆயத்தங்களில் இறங்கினர். கருவூலம் வறண்டு கிடந்த தால், எண்ணூயிரம் தாலந்துகளைக் கடன் வாங்கிக்கொண்டு, ஆன்டிபாட்டர் (Antipater) என்ற நம்பிக்கைக்குகந்த அமைச்சர் ஒருவரிடம் தமது நாட்டை ஒப்படைத்துவிட்டு அவர் ஆசியா மைனரை நோக்கிப் புறப்பட்டார். அவரது சேனையில் முப்பதா யிரம் காலாட்படை வீரர்களும், ஐயாயிரம் குதிரைப்படை வீரர் களும் இருந்தனர். கி. மு. 334-இல் அவர் ஹெல்லஸ்பாண்டைக் கடந்தார். ட்ராய் நகரத்தை ஒரு காலத்தே தாக்கச் சென்ற அகமெம்னன் என்ற புராண வீரரைப் போன்று தம்மையும் அவர் கருதிக்கொண்டார். இலியட் என்ற காவியத்திலிருந்த பாடல்களை அவர் ஒப்பித்துக்கொண்டே வழி நடந்தார். பாரசீகப் பேரரசுக்குள் அவரது படைகள் நுழைந்து முன்னேறிச் சென்றன. அன்றைய பாரசீகப் பேரரசு ஹெல்லஸ்பாண்டி லிருந்து சிந்துநதி வரையிலும் பரவியிருந்தது. அதை அப்போது ஆண்டு வந்த மன்னர் தரியஸ் கோடோமான்ஸ் (Daries Codomones) என்பவர். அவருடைய படையில் ஏராள மான வீரர்கள் இருந்தனர். எனினும் ஒழுங்கும் கட்டுப்பாடும் அதில் மருந்துக்குமில்லை. அலெக்ஸாந்தர் ஆசியாமைனரில் புகுந்தபோது பாரசீக ஆளுநர் ஒருவர் அவரைக் கிராணிக்கஸ் (Granicus) என்ற நதிக்கரையில் தடுத்துப் போரிட்டார். அங்கு நடைபெற்ற போரில் அலெக்ஸாந்தர் கொஞ்சமும் அச்சமின்றி எதிரிப் படையின் நடுவில் புகுந்து நேருக்கு நேர் நின்று வீரர்களுடன் போர் புரிந்தார். அவரை ஒரு எதிரி வீரன், கொலை செய்ய முயன்றபோது கிளீட்டாஸ் (Cleitos) என்ற அவரது இளவல் அவரைக் காத்தார். இறுதியில் அலெக்ஸாந்தர் வாகை சூடினர். இதுவே அவர் பெற்ற வாகை களில் முதலாவதாகும். இதற்கப்புறம் பாரசீகப் பேரரசில் அவருக்குப் பெருத்த எதிர்ப்பு வேறெதுவும் ஏற்படவில்லை.

கிராணிக்கஸ் நதியிலிருந்து அலெக்ஸாந்தர் சார்டிஸ் நகரத்தை அடைந்தார். எதிர்ப்பு ஏதுமின்றி அந் நகர் அவருக்குப் பணிந்தது. எபிஸஸ் (Ephesus), மைலிட்டஸ் (Milites), ஹாலிக்கார்னஸஸ் (Halicarnassus) முதலிய நகரங் களை ஒன்றன்பின் ஒன்றாக அவர் கைப்பற்றினர். அதன் பின் அவர் பிரினியாவின் பண்டைத் தலைநகரான கார்டியனை (Gordian) நோக்கிப் புறப்பட்டார். அந் நகரை அடைந்த போது அங்குள்ள மலைமீது நிறுத்தப்பட்டிருந்த தேர் ஒன்றை மக்கள் அவரிடம் காட்டி, அது பண்டைய மன்னரான கார்டியன் என்பாரது தேர் என்றும், அதன் நுகத்தடியில் காணப்பட்ட முடிச்சொன்றை அவிழ்த்தவர் ஆசியா முழுவதை

யும் ஆள்வார் என்பது இறைவாக்கு என்றும் கூறினர். அம் முடிச்சை அவிழ்க்க அலெக்ஸாந்தர் எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. எனவே தமது வாளினால் இரண்டாக அதை வெட்டி வீழ்த்தினர். இங்ஙனம் குறுக்கு வழியில் அவர் தம் காரியத்தைச் சாதித்துக் கொண்டார். மாசிடோனியாவிலிருந்து வந்த உதவிப் படைகள் இவ்விடத்தே அவரோடு இங்கு வந்து சேர்ந்துகொண்டன.

கார்டியன் நகரத்திலிருந்து கப்பீஷியா, கைலிகியா வழியாக அவர் தெற்கு நோக்கிப் புறப்பட்டார். சிரிய ஆளுநர் அவரைக் கண்டதும், எந்தவித எதிர்ப்பும் காட்டாமல் நகரை விட்டே ஓட்டம் பிடித்தார். அதன்பின் அவர் டார்ஸஸ் (Tarsus) நகரத்தையடைந்தார். அங்கே பனி நிறைந்த ஆற்றில் நீராடியதன் விளைவாக அவருக்குக் காய்ச்சல் ஏற்பட்டது. அக் காய்ச்சலைப் போக்க வைத்தியர் கொடுத்த மருந்தில்தான் நஞ்சு கலந்திருப்பதாகக் கடிதம் ஒன்று வந்தது. ஆனால் அவர் அதனை நம்பாமல், மருத்துவர் கொடுத்த மருந்தை அருந்திக் குணமடைந்தார். ஐஸஸ் (Issus) என்ற நகரத்தில்தான் முதன்முதலாகப் பாரசீகர்களிடமிருந்து பலத்த எதிர்ப்பு அவருக்கு வந்தது. மூன்றரும் தரியஸ் என்ற பாரசீக மன்னர் 60,000 வீரர்களைக் கொண்ட படையுடன் அலெக்ஸாந்தரை வழிமறித்தார். தமது ஒப்பற்ற குதிரைப் படையைக் கொண்டு, எதிரிப் படையைப் பக்கவாட்டில் தாக்கியும், காலாட் படையைத் தற்காப்புக்குப் பயன்படுத்தியும் அலெக்ஸாந்தர் இப் போரில் பெரும் வெற்றியைப் பெற்றார். தரியஸ் போர்க்களத்தினின்றும், தப்பியோடிவிட்டார். ஆனால் அவரது மனைவியும், குடும்பத் தினரும் அலெக்ஸாந்தரின் கைகளில் சிக்கினர். யாவரையும் மிகுந்த மரியாதையுடன் அலெக்ஸாந்தர் நடத்தினர் என்பது ஈண்டுக் கருதற்பாற்று. ஐஸஸ் நகர வெற்றியால் ஆசியா மைனர் பூராவும் அலெக்ஸாந்தர் வசம் வந்தது.

அடுத்தாற்போல் அலெக்ஸாந்தர் சிரியா மீது படையெடுத் தார். அதன் தலைநகரான டையர் (Tyre) அவரைப் பலமாக எதிர்த்தது. கடற்கரையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் இருந்த ஒரு தீவில் அந் நகரமானது பாறைகளின் மீது கட்டப் பட்டிருந்தது. திண்மை மிக்க கோட்டை ஒன்றினால் பாது காக்கப்பட்ட அந் நகரம், மிகச் சிறந்த கடற்படைத் தளமாக விளங்கி வந்தது. ஏழு மாதங்கள் கடுமையாக முற்றுகையிடப் பட்ட பின் அந் நகர் வீழ்ச்சியுற்றது (கி. மு. 332). அதே யாண்டில் அவர் காஸா (Gaza) என்ற இடத்திலிருந்த பெருங்

கோட்டையையும் கைப்பற்றினர். அங்கிருந்த மக்கள் யாவரும் கொலை செய்யப்பட்டனர். காஸா நகரப் போரில்தான் அலெக்ஸாந்தரது தோளில் ஒரு காயம் ஏற்பட்டது. டமாஸ்கஸ், சிடோன் போன்ற நகரங்கள் போர் செய்யாமலேயே அலெக்ஸாந்தரிடம் பணிந்தன. காஸாவினின்றும் அலெக்ஸாந்தர் நேரே எகிப்திற்குப் புறப்பட்டார். சினை (Sinai) பாலைவனத்தைக் கடந்து அவர் எகிப்துக்குள் நுழைந்தபோது எகிப்திய மக்கள் அவரை ஆரவாரத்துடன் வரவேற்றனர். அவரை எதிர்த்த பாரசீக ஆளுநர் எளிதில் தோற்கடிக்கப் பட்டார். மெம்பிஸ் (Memphis) என்ற எகிப்தியத் தலைநகரம் அவர் கைகளில் சிக்கியது. அங்குள்ள கோயில்களுக்கெல்லாம் அலெக்ஸாந்தர் சென்று வணக்கம் செலுத்தியதைக் கண்ட எகிப்தியர்கள் அவர் மீது பக்தியும் பாசமும் கொள்ளலாயினர். தமது வெற்றியின் சின்னமாக அவர் அலெக்ஸாந்திரியா என்ற ஒரு புதிய நகரை நைல்நதியின் முகத்துவாரத்தில் கட்டுவித்தார். கிரேக்கர்கள் கீழை நாட்டோடு வாணிகம் புரிவதற்கு இந் நகர் பெரிதும் பயன்பட்டது. மற்றும் இது ஹெல்லனீயப் பண்பிற் கோர் உறைவிடமாய்த் திகழ்ந்தது. இதன் பின் அலெக்ஸாந்தர், சிவா (Siva) எனும் பாலைவனச் சோலையை (Oases) அடைந்து, ஆமோன் (Ammon) என்ற எகிப்தியக் கடவுளை வணங்கினர். அங்கிருந்த பூசாரிகள் அவருக்கு முடிசூட்டி பாரோ (Pharoah) என்ற பட்டத்தை வழங்கினர்.

எகிப்திலிருந்து அலெக்ஸாந்தர், டையர் நகர் திரும்பிவந்த பின்னர், கிழக்கே திரும்பி யூப்ரடீஸ், டைகிரீஸ் நதிகளைக் கடந்தார். அதன்பின் அவரது படைகள் காகமேலா (Gaugamela) எனும் சமவெளியை அடைந்தன. அங்கே தரியஸ், பத்து லட்சம் காலாட்படைகளையும் நாற்பதினாயிரம் குதிரைப்படைகளையும் கொண்ட பெரும் படையுடன் அவரை எதிர்த்தார். அப் படையில் இந்திய நாட்டு யானைப் படையும் இருந்ததென்பர். அலெக்ஸாந்தரிடம் நாற்பதினாயிரம் காலாட்படை வீரர்களும், ஏழாயிரம் குதிரைப்படை வீரர்களும் மட்டுமே இருந்தனர். தரியஸின் படை எண்ணிக்கையைக் கண்டு அலெக்ஸாந்தர் சற்றுப் பின் வாங்கினர். ஆனால் அவரது வீரர்கள் அவருக்கு உற்சாகம் ஊட்டினர். எண்ணிக்கையைக் கண்டு தளர வேண்டா என்றும், பாம்பின் முன் எலிக் கூட்டமென அவை பயந்து ஓடிவிடும் என்றும் அவர்கள் தங்களது தலைவருக்குத் தைரியம் கூறினர்கள். பின்பு நடைபெற்ற போரில் மின்னலெனப் பாய்ந்து முன்னேறிய மாசிடோனியக் குதிரைப்படை, பாரசீகப் படையைக் கலைத்தது. அப் படையின் இடப் பக்கத்தைத்

துணைத்துக்கொண்டு அலெக்ஸாந்தர் முன்னேறினார். தரியஸின் இரத்தத்தைத் குறிவைத்தே அவர் தாக்கினார். கடுமையான போருக்குப் பின் தரியஸ் போர்க்களத்தை விட்டுத் தப்பித்தோம் – பிழைத்தோமென ஓட்டம் பிடித்தார். வலப்புறப் படையை நடத்திய அலெக்ஸாந்தரின் நண்பரான பார்மினியோ (Parmeneo) என்ற தளகர்த்தரும் முடிவில் வெற்றி பெற்றார். பாரசீகப் படை அல்லோலகல்லோலப்பட்டு நாற்புறமும் சிதறியது. தரியஸ் அர்பெல்லா (Arbella) எனும் நகரை யடைந்து, அங்குள்ள மலைகளில் ஒளிந்துகொண்டார். அலெக் ஸாந்தர் அவரை அங்கேயும் பின தொடர்ந்து சென்றபோது தரியஸ் அவரை எதிர்க்கவில்லை. சாவுமணி அடித்துவிட்டது. அலெக்ஸாந்தர் அர்பெல்லாவிலிருந்து பாபிலோனியாவுக்குச் சென்றார். பாபிலோனிய மக்கள், நகரக் கதவுகளைத் திறந்து அலெக்ஸாந்தரை இரு கரங்களாலும் வரவேற்றனர். வெற்றிப் புன்னகையுடன் பாபிலோனியாவுக்குள் நுழைந்த அலெக் ஸாந்தர், அங்குள்ள தெய்வங்களுக்குப் பலி கொடுத்தும், பார சீகர்களால் முன்பு இடிக்கப்பட்ட கோயில்களை மீண்டும் கட்டிக் கொடுத்தும் பாபிலோனிய மக்களின் நன்மதிப்பைப் பெற்றார். ஏராளமான செல்வத்தைப் பாபிலோனிய மக்கள் அவருக்கு வழங்கினர்.

பாபிலோனியாவிலிருந்து அலெக்ஸாந்தர் பாரசீகப் பேரரசு களின் கோடை வாசஸ்தலமான சூஸா நகரை யடைந்தார். அந் நகர மக்கள் அவரைத் தங்கள் விடுதலை வீரனெனப் போற்றி வரவேற்றனர். அங்கிருந்த பெரும் செல்வமும் அவர் கைவசம் கிடைத்தது. அங்குக் காணப்பட்ட ஒருசில கிரேக்கச் சிலைகளை அவர் ஆதென்ஸிற்குத் திருப்பி அனுப்பிவைத்தார். சூஸாவிலிருந்து அலெக்ஸாந்தர், பாரசீகத்தின் தலைநகரான பெர்ஸிபொலிஸை அடைந்தார். அங்கேயும் அவருக்குப் பெருத்த வரவேற்பும் வாழ்த்தும் காத்திருந்தன. வெகு துரிதமாக அவர் அந் நகரையடைந்த காரணத்தால் அரண்மனையிலிருந்த செல்வமனைத்தும் (12,000 தாலந்துகள்) அவர் கைகளில் சிக்கின. அவரது வீரர்கள் வீடுகளைச் சூறையாடினர்; பெண்டிரைக் கற்பழித்தனர்; ஆண்களைக் கொன்று குவித்தனர். குடிபோதையிலிருந்த போது அத்தீனிய நடன மாது ஒருத்தி யால் தூண்டப்பட்டு, அலெக்ஸாந்தர் ஸெர்க்ஸஸின் பெரிய அரண்மனையை எரிக்கும்படிக் கட்டளையிட்டார்.

பெர்ஸிபொலிஸ் நகரில் ஏழு மாதங்கள் தங்கிவிட்டு அலெக் ஸாந்தர் தரியஸைத் தேடி மீடிய நாட்டுத் தலைநகரான எக்பட்

டானு (Ecbatana) நகருக்குச் சென்றார். அவருடைய பெருமையைக் கேட்ட தரியஸ் அங்கிருந்து பாக்டீரியாவிற்கு ஓடிப் போனார். அலெக்ஸாந்தர் அவரைப் பின்தொடர்ந்தார். மூன்று நாட்கள் ஓய்வு ஒழிச்சலின்றி நடந்து பாக்டீரியாவை அடைந்தார். அதற்குள் பாக்டீரியாவின் ஆளுநரான பெஸ்ஸஸ் (Bessus) என்பாரும், ஏனைய தளபதிகளும் தரியஸை மன்னர் பதவியினின்றும் அகற்றியதோடு மட்டுமல்லாமல் அவரைக் குத்திக் கொன்றுவிட்டு ஓடிவிட்டனர். இறுதியில் அலெக்ஸாந்தர் தரியஸின் பிரேதத்தை மட்டுமே பார்க்க முடிந்தது. அதை அவர் பெர்ஸிபொலிஸ் நாட்டுக்கு அனுப்பிவைத்து இராஜ மரியாதைகளுடன் அடக்கம் செய்யுமாறு கட்டளையிட்டார் (கி. மு. 330).

எக்பட்டானுவினின்றும் அலெக்ஸாந்தர் கிழக்கே திரும்பிச் சென்று ஆரியா (Aria) என்ற மாநிலத்தை வென்றார். அங்கே அவர் அலெக்ஸாந்திரியா என்ற புதிய நகர் ஒன்றை நிர்மாணித்தார். ஆரியாவிலிருந்து அவர் டிராங்கியானு (Drangiana) மாநிலத்திற்குச் சென்று அதையும் கைப்பற்றினார். அங்கே அவர் தரியஸின் வழித்தோன்றலெனத் தம்மை வரித்துக் கொண்டதோடு பாரசீக உடைகள் அணிந்து கொண்டு பாரசீகப் பழக்க வழக்கங்களையும் மேற்கொள்ள ஆரம்பித்தார். அரசருக்குக் காலில் வீழ்ந்து வணக்கம் செய்யும் முறையை அவர் முதன்முதலாகத் தமது அரசவையில் புகுத்தினார். இத்தகைய மானுட வணக்கத்தைப் பாபிலோனியர்கள் வெறுத்தனர். பிலோட்டாஸ் (Philotas) என்பவர்தான் அலெக்ஸாந்தரது புதிய பழக்கங்களை எதிர்த்தார். எனவே அவர் அக்கணமே கொல்லப்பட்டார். அதோடு எக்பட்டானுவில் அப்போது தங்கியிருந்த அவரது தந்தையான பார்மினியோவையும் கொலை செய்யுமாறு அவர் ஆணையிட்டார். டிராங்கியானுவிலிருந்து அலெக்ஸாந்தர் கிழக்கே சென்று அர்க்கோஷிய (Arcossia) மாநிலத்தை யடைந்தார். அங்கு அலெக்ஸாந்திரியா நகர் ஒன்றைக் கட்ட அடிக்கல் நாட்டினார். அதுவே இன்றைய நாளில் காந்தஹார் என்று அழைக்கப்படுகிறது, அதன் பின் அலெக்ஸாந்தர் மேலும் வடக்கே சென்று ஹிந்துகுஷ் மலைகளை அடைந்தார். அங்கு இன்று காபூல் என அழைக்குமிடத்தில் மேலும் ஒரு அலெக்ஸாந்திரியா நகரை நிறுவினார் (கி. மு. 329). கி. மு. 328-இல் அலெக்ஸாந்தர், ஹிந்துகுஷ் மலையைக் கடந்து பாக்டீரியாவை யடைந்தார். தரியஸைக் கொன்ற பெஸ்ஸஸ் (Bessus) என்ற பாக்டீரிய ஆளுநர் சாக்டியானுவில் (Sagdiana) இருப்பதாகக் கேள்வியுற்று அலெக்ஸாந்தர் அங்குக் கடிதில்

விரைந்தார். சாக்டியானுவின் ஆளுநர் பெஸ்ஸஸை அலெக்ஸாந்தரிடம் ஒப்படைத்தார். தரியஸைக் கொன்ற குற்றத்திற்காக அவரது மூக்கையும் காதுகளையும் அரிந்த பின் அவரைக் கொன்றுவிடும்படி அலெக்ஸாந்தர் ஆணையிட்டார் (கி. மு. 328). இக் காலங்களிலெல்லாம் அலெக்ஸாந்தர் ஓயாது குடித்துவந்தார். ஒரு நாளிரவில், அவர் தம் நண்பர்களோடு குடித்து மகிழ்ந்திருந்தபோது அவரது உறவினரான கிளீடாஸ் (Cleitos) என்பார் அவரது வெற்றிகளைக் கேலி செய்தார். பிலிப்பை விட அவர் எவ்வாற்றானும் சிறந்தவரல்லர் என்று வாதாடினர். அதைக் கேட்டுச் சினமுற்ற அலெக்ஸாந்தர், தம்மை முன்னால் உயிர்காத்த உத்தமர் என்றும் எண்ணுமல், அவரை வெட்டி வீழ்த்தினர். ஆனால் மயக்கம் தெளிந்த மறுநாள் அவர் தமது செய்கைக்காகப் பெரிதும் வருந்தி மூன்று நாட்கள் ஊணுறக்கமின்றிக் கழித்தார்.

பெஸ்ஸஸ் என்னும் தளகர்த்தரது சரணாகதிக்குப் பின்னும், அலெக்ஸாந்தர் சாக்டியானு மீது படையெடுத்தார். அதைக் காத்த பாரசீகத் தளகர்த்தர்கள் ஓடிப்போய்விட்டனர். ஆனால் நகரில் வாழ்ந்த மக்கள் ஆக்ஸியார்ட்டஸ் (Oxyartes) என்ற ஒரு தலைவரின் கீழ் நின்று அலெக்ஸாந்தரை எதிர்த்தனர். அரிதின் முயன்று அலெக்ஸாந்தரது ஆட்கள் ஆக்ஸியார்ட்டஸின் மலைக் கோட்டையைக் கைப்பற்றினர். ஆக்ஸியார்ட்டஸின் மகளான ரோக்ஸானி (Roxane) என்ற அழகிய வனிதையின் அழகில் உளம் பறிகொடுத்து அலெக்ஸாந்தர் அவளை மணந்து கொண்டார் (கி. மு. 327).

சாக்டியானுவையும் பாக்டிரியாவையும் விடுத்து மீண்டும் அலெக்ஸாந்தர் காபூலுக்கு வந்து, அங்கிருந்து இந்தியாவுக்குச் செல்லும் பாதையில் இறங்கினர். கைபர்க் கணவாய் மூலமாக அவர் இந்தியாவிற்குள் நுழைந்தார். வழியில் சில மலைச்சாதியினரை வென்றபின் அவர் பஞ்சாபிலுள்ள தக்கசீலத்தை அடைந்தார். அதன் மன்னரான அம்பி என்பார் அலெக்ஸாந்தரின் நட்பை நாடியதால், அவரை விடுத்துத் தமக்குப் பணிய மறுத்த போரஸ் என்பாரை நோக்கி அலெக்ஸாந்தர் புறப்பட்டார். ஜீலம், சீனப் ஆகிய நதிகளுக்கிடையிலுள்ள நாட்டை ஆண்டுவந்த போரஸ், 3,000 காலாட்படை வீரர்களுடனும், 4,000 குதிரைப்படை வீரர்களுடனும், 300 இரதங்களுடனும், 200 யானைகளுடனும் அலெக்ஸாந்தரைத் தாக்க ஜீலம் நதிக் கரையில் காத்திருந்தார். போரஸை நேரே எதிர்க்க அலெக்ஸாந்தருக்குத் துணிவு வரவில்லை. பல வாரங்கள் அவர் வளர

யிருந்துவிட்டு நதியின் மேற்புறத்தில் அமைந்திருந்த ஒரு குன்றுக்குப் பின்னல் சென்று மறைவாக இரவில் ஜீலம் நதியைக் கடந்து போரஸின் படைகளைப் பின்னல் இருந்து திடீரெனத் தாக்கினர். யானைகளை முன் நிறுத்திக் காலாட்படையையும் குதிரைப் படையையும் பக்கவாட்டில் அமைத்துப் போரஸ் போரைத் தொடங்கினர். அலெக்ஸாந்தர் முதலில் போரஸின் காலாட் படையை முழுவலியோடும் தாக்கி அதைச் சிதறியோடச் செய்த பின் யானைப் படையைத் தாக்கினர். நெப்தா (Neptha) என்ற திரவத்தில் தோய்க்கப்பட்ட அம்புகளால் துளைக்கப்பட்ட யானைகள் பொறுக்க முடியாத எரிச்சலால் அவதியுற்றுப் போர்க்களத்தினின்றும் திரும்பியோட ஆரம்பித்தன. அங்ஙனம் ஓடும்போது போரஸின் காலாட்படை வீரர்கள் பலர், அவற்றின் கால்களில் சிக்கி மாண்டனர். திறமை மிக்க மாசிடோனியக் குதிரைப்படை முன், போரஸின் படைகள் சிங்கத்தின் முன் நரிக்கூட்டமெனத் தோற்றோடின. ஆனால் போரஸ் மட்டும் தம் நிலையினின்றும் பெயராது இறுதிவரை போராடினர். அவரது தோளில் பலத்த காயம் ஏற்பட்டு, யானையினின்றும் வீழ்ந்த பின், எதிரிகள் அவரைக் கைப்பற்றிக் கொணர்ந்து அலெக்ஸாந்தரின் முன் நிறுத்தினர். அலெக்ஸாந்தர், தாம் அவரை எவ்வாறு நடத்த வேண்டுமெனக் கூறும்படி வினயமாகக் கேட்டார். "அரசரைப் போன்றே என்னை நடத்துதல் முறை" எனப் போரஸ் வலியுறுத்தினர். போரஸினுடைய வீரத்தை மெச்சிய அலெக்ஸாந்தர் அவரை மீண்டும் அவருடைய நாட்டுக்கே அரசராக்கினர். அப்பியையும் போரஸையும் தமது நண்பர்களாக ஏற்றுக் கொண்டார்.

ஜீலம் அல்லது ஹிடேஸ்பஸ் நதிக்கரையில் நடைபெற்ற (கி. மு. 326) இப் போருக்குப் பின் அவர், அதன் கரையில் புகிப்பாலா எனும் நகரத்தைக் கட்டினர். ஏனெனில் அங்குதான் புகிப்பாலஸ் என்ற அவரது குதிரை மாண்டது. அதன் பின் அவர் பீயாஸ் நதிக்கரையை அடைந்தார். அதற்கு மேலும் சென்று கங்கைச் சமவெளியையும் அவர் கைப்பற்ற எண்ணினர். ஆனால் நாட்டையும் வீட்டையும் விட்டு வெளியேறிப் பல நாட்களாகி விட்ட காரணத்தால், அவரது துருப்புகள் மேலே போக மறுத்தன. போரில் வெல்ல இயலாத நந்தர்கள் மகதத்தில் ஆட்சி புரிவதாக அவர்கள் கேள்வியுற்றதும், அவரது மறுப்புக்கோர் காரணமாய் அது அமைந்தது. பீயாஸ் நதிக்கரையில் பன்னிரண்டு தூண்களைத் தமது நினைவுச் சின்னமாக நிறுவிவிட்டு அலெக்ஸாந்தர் நாடு திரும்பினர்.

சிந்துநதி வழியாக அவரது படைகள், தெற்கே புறப்பட்டன. வழியில் மூல்தான் நகரில் அவருக்குப் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. தக்க பாதுகாப்பின்றி அலெக்ஸாந்தர் மூல்தான் கோட்டைக்குள் பகைவர் மத்தியில் பயமின்றிப் போர் செய்த போது, எதிரி ஒருவர் அவரைக் குத்திக் காயப்படுத்திவிட்டார். எதிரிகளால் சிறைபிடிக்கப்படும் தருவாயில், அவரை அவரது வீரர்கள் காப்பாற்றினர். கோட்டையிலிருந்த ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்டனர். அதன் பின் பாட்டாலா (Patala) (இன்றைய ஹைதராபாத்) என்ற இடத்தை அடைந்த பின் தமது படைகளை இரண்டாகப் பிரித்தார். ஒன்றை நியார்கஸ் (Nearchus) என்ற தளபதியிடம் ஒப்படைத்துப் பாரசீகக் குடாவின் வழியாக நாடு திரும்பும்படி ஆணையிட்டார். இன்னொரு பகுதிக்குத் தாமே தலைமை தாங்கித் தரைமார்க்கமாக அழைத்துச் சென்றார். ஜெட்ரோஷியா என்ற பாலைவனத்தினூடே சென்றபோது 15,000 போர் வீரர்கள் மடிந்தனர். அத்துணைக் காலம் நடைபெற்ற போர்களில் மாண்டவர்களை விட அதிக வீரர்களை அவர் இவ்விதம் பாலைவனத்தில் இழந்தார். மிகக் கஷ்டப்பட்டு இறுதியில் அவர் பாபிலோன் நகரை அடைந்தார். அவர் திரும்பி வருவார் என எதிர்பார்க்காத பாபிலோனிய ஆளுநர்களும் அதிகாரிகளும் தான்தோன்றித்தனமாக நடந்துகொண்டு நிறையப் பொருள் சேர்த்தனர். இதை அறிந்த அலெக்ஸாந்தர் அவர்களைக் கடுமையாக வெறுத்துப் பலரைத் தம் வாளுக்கு இரையாக்கினர்.

பாபிலோனியாவில் தங்கியிருந்தபோது அவர், கீழை நாட்டையும் மேலை நாட்டையும் இணைப்பதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டார். கலப்பு மணம் ஒன்றே அதற்குற்ற வழி என எண்ணிய அவர் தரியஸின் மகளைத் தாம் மணந்து கொண்டதோடு, தமது அதிகாரிகளையும் அவ்வாறே பாரசீகப் பெண்களை மணந்து கொள்ளுமாறு வற்புறுத்தினர். தங்களது மனைவியரை விட்டுவந்து வெகுநாட்களாகிவிட்டபடியாலும், பாரசீகப் பெண்கள் அழகாக இருந்தபடியாலும் ஆயிரக் கணக்கான வீரர்கள் கலப்பு மணத்தில் ஈடுபட்டனர். பாரசீகரின் பண்புள்ள நடத்தையைக் கண்ட அலெக்ஸாந்தர் அவர்களுக்குப் பல உயர்ந்த பதவிகளைத் தமது சேனையில் வழங்கினர். இதை யறிந்து மாசிடோனிய வீரர்கள் கலகம் செய்தனர். அக் கலகத்தின் தலைவர்களை அலெக்ஸாந்தர் மிகவும் வன்மையாக ஒறுத்தார். வீரர்கள் அனைவரையும் கூட்டாக வேலையிலிருந்து நீக்கினர். அவர்கள் திரும்பி வந்து அவரிடம் மன்னிப்புக் கேட்டதின் பேரில் அவர்களை மீண்டும் ஏற்றுக் கொண்டார்.

கீழை நாட்டை வென்ற அலெக்ஸாந்தர், மேலை நாட்டையும் வெல்லுதற்கான திட்டங்களையும் தீட்டினர். கடல் மூலமாக நியார்க்கஸையும், தரை மூலமாகத் தாமும் படையெடுத்து, ஹெர்குலஸின் தூண்கள் நிற்குமிடம் வரை ஐரோப்பாவை வெல்ல வேண்டுமென்றும் அவர் திட்டமிட்டார். தமது பேரரசின் ஒப்பற்ற படைத்தளமாகப் பாபிலோனியா விளங்குதல் வேண்டுமென அவர் கனவு கண்டார். ஆனால் அவரது கனவுகள் எல்லாம் நனவாக மலர்வதற்கு வழியில்லாமல் அவரது மரணம் குறுக்கிட்டது. ஓயாது நடைபெற்று வந்த விருந்துகளில் அவர் அளவுக்கு மீறிக் குடித்துவந்தார். அதன் விளைவாக அவரது உடலில் 'வெப்ப நோய்' ஏற்பட்டது. அது முற்றிக் கடைசியில் அது அவரது உயிரைப் பறித்தது (கி. மு. 323). பதின்மூன்றாண்டுகள், ஓய்வு ஒழிச்சலின்றிப் போராடிப் போராடி ஏராளமான வாகைகளைப் பெற்ற அலெக்ஸாந்தர் மிக இளவயதிலேயே (33) அகால மரணமடைந்தார்.

வானத்தில் தோன்றும் தூமகேதுவைப் போலத் திடீரெனத் தோன்றி ஒளிவிட்டுத் துலங்கித் திடீரென அலெக்ஸாந்தர் மறைந்து போனார். அவரோடு அவரது திட்டங்களும், அரிதின் முயன்று உருவாக்கப் பெற்ற பேரரசும் அட்டை வீடு போல் குலைந்தன.

(3) அலெக்ஸாந்தரது சாதனைகள் பற்றிய மதிப்பீடு

வரலாற்றில் மாமன்னர் (Great) என்று பேசப்படும் அலெக்ஸாந்தர், அதற்குரிய தகுதிகள் முற்றும் நிரம்பியவர் என்பதில் ஐயமில்லை. தமது இருபதாவது வயதில் அரியணை ஏறிய அவர், முப்பத்து மூன்றாவது வயதுக்குள்ளாக-அதாவது நம்மில் பலபேர் வாழ்க்கையின் முதற்படியில் காலெடுத்து வைக்க முயன்று கொண்டிருக்கும் அந்த இளவயதிலேயே இரு பெருங்கண்டங்களிலும் பரந்து விரிந்ததொரு பேரரசை நிறுவிய செயல் உண்மையிலேயே செயற்கரிய செயல் என்பதையும், அதைச் செய்து முடித்தவர் உண்மையிலேயே பெரியவர் என்பதையும் எவரும் மறுக்க வொண்ணாது. ஆனால் அத்தகைய பேரரசைக் கட்டிக் காத்தற்குரிய ஏற்பாடுகளை அவர் செய்தாரா, வருங்காலத்திற்கு வழி வகுக்கும் அரசியல் நுண்ணுணர்வு அவர் பால் மிளிர்ந்ததா, அரசியல் விற்பன்னர் என்று கருத்தத் தக்க பண்புகளை அவர் பெற்றிருந்தாரா என்பது பற்றித்தான் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. ஆக்கத் திறனைவிட அழிவுத்திறன்தான் அலெக்ஸாந்தரிடம்

அதிகமாகக் காணப்பட்டதென்றும், அவர் காட்டுமிராண்டித்தனம் நிறைந்த ஒரு மேதையேயன்றி வேறல்லர் என்றும் குரோட் (Grote) எனும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். வீண்புகழ்ச்சியில் நாட்டமும், பைத்தியக்காரத்தனமான பேரரசு முயற்சிகளுமே அவரது வாழ்வில் செறிந்து கிடக்கின்றன என நீபர்க் (Neiburh) எனும் ஆசிரியர் கூறுகின்றார். வெற்றிப் போதையில் அலெக்ஸாந்தர் தம்மையே மறந்துவிட்டார் என்றும், பாரசீகர்களின் உடைகளை அணிந்து கொண்டும், தாம் தெய்வத்தின் வழிவந்தவர் எனக் கூறிக்கொண்டும் அவர் நடித்ததானது அவரது புன்மையையே புலப்படுத்துகிறது என்றும் எச்.ஜி. வெல்ஸ் (H.G, wells) என்னும் வரலாற்றறிஞர் கூறியுள்ளார். ஆனால் பெரும் பாலான ஆசிரியர்கள் அலெக்ஸாந்தரை ஒரு எதிர்கால நோக்குடைய அரசியல் விற்பன்னர் (Statesman) என்றே வருணிக்கின்றனர்.

வெற்றிகளை வெறும் புகழுக்காக மட்டும் பெற்றவரல்லர் அலெக்ஸாந்தர். பேரரசு ஒன்றை நிறுவவேண்டும் என்ற ஆசையின் அடிப்படையிலேயே அவரது சூரவளிப் படையெடுப்புகள் யாவும் நடைபெற்றன. ஆசியர்களும் ஐரோப்பியர்களும் சரிநிகர் சமானமாக வாழ்கின்ற எண்ணம் அவரது நெஞ்சத்தை விட்டு என்றும் அகன்றதேயில்லை.

தம்மால் வெல்லப்பட்ட நாடுகள் யாவும் தம்மை மனமுவந்து ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தாலேயே அவர் ஆங்காங்கே நிலவிய நடையுடை பாவனைகளையும் சமய நம்பிக்கைகளையும் மதித்து நடந்தார். கிரீஸில் அவர் தம்மை ஒரு கிரேக்கராகவே எண்ணி, கிரேக்கப் பொதுவழிபாட்டொருமைக் கழகத்தில் கலந்து கொண்டு அதற்குத் தலைமையும் தாங்கினர்; அத்தீனியர்களின் பண்பாட்டைப் போற்றினர். ஆதென்ஸிலிருந்து பாரசீகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட சிற்பங்களை அவர் தமது படையெடுப்பின்போது தேடிக் கண்டுபிடித்துத் திரும்பவும் ஆதென்ஸுக்கே அனுப்பி வைத்தாரென்றால் அத்தீனிய நாகரிகத்தில் அவர் எவ்வளவு ஆர்வம் கொண்டிருந்தார் என்பது சொல்லாமலே பெறப்படும். தம்மை எதிர்த்த தீப்ஸ் மக்களை வன்மையாக ஒறுத்தார் என்பது உண்மையே. ஆனால் அவர் அதற்காகப் பெரிதும் வருந்தினர். தீப்ஸ் நாட்டுக் குடிமகன் ஒருவன் எதை வேண்டினாலும் அதை உடனே நிறைவேற்றுவது என்ற கொள்கையை அவர் வாழ் நாளெல்லாம் கடைப்பிடித்தார். எனவே பொதுவாக அவர் கிரேக்க நாகரிகத்தை விரும்பிப் போற்றினர்; அதன் காவல

ராக இருக்க விரும்பினர்; அதனோடு இரண்டறக் கலந்தார்; அதனை உலகெங்கும் பரப்பத் திட்டமிட்டார். அதன் விளை வாகத் தோன்றியவைகளே அவரது ஆசியப் படையெடுப்பு களாகும். எகிப்தை வென்றபோது அவர் எகிப்திய நாகரிகத்தைப் போற்றினர். அங்குள்ள ஜியூஸ் அமோன் (Zeus Ammon) கோயிலுக்குச் சென்று வழிபட்டார். பாரோ என்ற பட்டத் தையும் அதன் மதகுருமார்களிடமிருந்து பெற்றுக் கொண்டார். பாரசீகத்தை வென்றபின், பாரசீக மன்னரின் மகளை மணந்தார்; அவர் தம் உடைகளை அணிந்தார்; அவர்களது வழக்கமான காலில் விழுந்து வணங்கும் முறையை ஏற்றுக் கொண்டார்; இங்ஙனம் பாரசீகர்களின் நன்மதிப்பைப் பெற்றார்; தம்மைப் பாரசீகப் பேரரசரின் வழித்தோன்றல் என்று கூறிக்கொண்டார்; இந்தியாவுக்கு வந்தபோது இந்தியப் பண்பாட்டை மதித்தார்; இந்தியத் தத்துவ மேதைகளோடு அளவளாவினர். தமது அழைப்பை ஏற்று அவரிடம் வர மறுத்த யோகி ஒருவரிடம் அவர் தாமே வலியச் சென்றார். தம்மிடம் வராவிட்டால் அவ ரைக் கொன்று விடுவதாக அவர் முதலில் சொல்லி அனுப்பினர். அதைக் கேட்ட அந்த யோகி, கடகடவெனச் சிரித்துவிட்டு "என்னை எவரும் கொல்ல முடியாது. நான் ஆன்மா" என்று மாற்றம் கூறினர். அதைக் கேட்ட அலெக்ஸாந்தர் தாமே வலியச் சென்று அந்த யோகியிடம் அளவளாவினர். தம்மால் வெல்லப்பட்ட போரஸையும் அம்பியையும் தமது ஆளுநர்களாக ஏற்றுக் கொண்டார். இங்ஙனம் அந்தந்த நாட்டின் பழக்க வழக்கங்களை எல்லாம் மதித்துப் போற்றியதிலிருந்து அலெக் ஸாந்தர் எல்லா நாடுகள் மீதும் மேலாண்மை செலுத்த விரும் பினர் என்பதும், பேரரசொன்றை நிறுவ எண்ணினர் என்பதும் தெள்ளிதின் விளங்குகின்றன.

தாம் வென்ற நாடுகளின் பழக்கவழக்கங்களை மதித்ததே போன்று அவைகளின் அரசியல் அமைப்புகளையும் அவர் மதித்து அவற்றை அப்படியே ஏற்றுக் கொண்டார். எகிப்தை வென்ற பின் அதை அங்கு ஏற்கெனவே ஆண்டு வந்த இந மன்னர் களிடமே கொடுத்துவிட்டார். பக்கத்திலிருந்த அரேபியா, லிபியா ஆகிய மாநிலங்களுக்கு மட்டுமே ஆளுநர்களை நியமித் தார். நிதி பற்றிய விவகாரங்களைக் கண்காணிக்க கிளியோ மீனஸ் (Cleomenes) கிரேக்க அமைச்சரை நியமித்தார். அமைதி யைக் காக்க ஆங்காங்கே கிரேக்கப் படைகளை அமைத்தார். இங்ஙனம் சிவில்–இராணுவ- நிதி அதிகாரங்களை அவர் தனித் தனியே பிரித்தார். பாரசீகப் பேரரசில் தம்மையே, தரியஸ் பேரரசின் வழித்தோன்றல் என்று அறிவித்துக் கொண்டு

அங்கு முன்னமே இருந்த ஆளுநர்களையும், ஆட்சிமுறை யையும் அப்படியே ஏற்றுக் கொண்டார். இந்தியாவில் போர ஸையும் அம்பியையும் இருமாநிலங்களின் சாட்ரப்புகள் அல்லது ஆளுநர்களாக நியமித்தார். ஏனைய இடங்களுக்கு மட்டுமே ஒரு கிரேக்க ஆளுநரை நியமித்தார். கிரேக்கத் தளபதிகள் சில ரைச் சிறுபடைகளுடன் அவர் இந்தியாவில் விட்டுச் சென்றார். வெல்லப்பட்ட நாடுகளின் அரசியலமைப்பில் அதிக மாறுதலைச் செய்யாமல், தமது தளபதிகளை மட்டும் ஆங்காங்கே நியமித்த செய்கையிலிருந்து, ஏறக்குறைய சுயேச்சையுடன் விளங்கு கின்ற பல மாநிலங்கள் கொண்டதோர் பேரரசை நிறுவ அவர் எண்ணினர் என்பதும், அவற்றின் மீது மேலாண்மை செலுத்த வதொன்றே போதும் என நினைத்தார் என்பதும் நன்கு தெளி வாகின்றன.

கீழை நாகரிகத்தையும், மேலை நாகரிகத்தையும் ஒன்று படுத்த அலெக்ஸாந்தர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அவர் ஓர் அரசியல் தீர்க்கதரிசி என்பதை நன்கு மெய்ப்பிக்கின்றன. ஆரம்பத்தில் ஏனைய கிரேக்கரைப் போலவே அவரும் கிரேக்க ரல்லாத அனைவரையும் காட்டுமிராண்டிகள் (Barbariaus) என்று கருதினர். ஆனல் நேரில் சென்று பார்த்தபோது மெச்சத்தக்க பண்புகள் பல கீழை நாட்டினரிடம் இருக்கக் கண்டு அவர்களைச் சமமாக நடத்த ஆரம்பித்துவிட்டார். இருநாகரிகங்களிலு மிருந்த சிறப்பியல்புகள் யாவும் நன்கு கலக்கப் பெற்ற ஒரு புதிய சமுதாயம் தமது பேரரசில் வளர வேண்டுமென அவர் கனவு கண்டார். "மாமன்னர் அலெக்ஸாந்தர்" என்ற தமது நூலில், வீலர் (Whealer) என்பவர் கூறுவது போலக் கீழைநாட்டு நாகரி கத்தை எதிர்க்கப் புறப்பட்ட மேலை நாட்டுநாகரிகத்தின் காவலன் என்றஅவரது இளமைக்கால எண்ணம்நாளடைவில்ஆதவனைக் கண்ட பனிபோல் மறைந்தது. பல்வேறு வகையான மனிதர்கள் வாழும் உலகில் அவர்கள் யாவருக்கும் மேலாகவும், அதே சமயம் அவர்களனைவரையும் ஒன்று படுத்தப்படும் ஒரு தனித் தலைவ ராகவும் இருக்கவே அவர் விரும்பினர். பேட்டன் (Betten) என்பவரின் கூற்றுப்படி அவர் கிழக்கிற்கும் மேற்கிற்கும் திரு மணம் நடத்தி அவை ஒவ்வொன்றின் சிறப்பியல்புகளும் ஒன்று கலந்த ஒரு கலப்பு நாகரிகமெனும் குழந்தையை உண்டாக்கத் திட்டமிட்டார். அந் நோக்கத்தை நிறைவேற்றவே அவர் கலப்புத் திருமணங்களைத் தம் நண்பர்களுக்கும் வீரர்களுக்கும் நடத்திவைத்தார். பத்தாயிரம் மாசிடோனியர்கள் ஆசிய மங்கையரை மணந்தனர். ரோக்சானி (Roxana) என்ற சாக் டியானுப் பெண்ணையும், ஸ்டாடிரா (Statira) என்ற பாரசீக

இளவரசியையும் அவர் மணந்துகொண்டு பிறருக்கு வழிகாட்டினர். கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்கு நல்ல பரிசுகளை வழங்கினர்; 30,000 ஆசியப் போர் வீரர்களைத் தம் படையில் சேர்த்துக்கொண்டதோடு, அன்னர்க்குக் கிரேக்க மொழிப் பயிற்சியும், கிரேக்க ராணுவப் பயிற்சியும் அளிக்க ஏற்பாடு செய்தார்; கிரேக்கப் பண்பாட்டையும் பரப்ப ஆங்காங்கே அலெக்ஸாந்திரியாக்கள் என்ற நகரங்களை அமைத்து அவற்றில் ஓய்வு பெற்ற கிரேக்கப் போர் வீரர்களையும், வணிகர்களையும், ஏராளமான சுதேசிகளையும் குடியேற்றி ஒன்றுக வாழுமாறு செய்தார். இராணுவத் தளங்களாயும் அந் நகர்கள் பயன்பட்டன. இங்ஙனம் எழுபது அலெக்ஸாந்திரிய நகரங்களை அவர் ஏற்படுத்தியதாகப் புளூடார்க் எனும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். "கீழை நாகரிகம் வேறு. மேலை நாகரிகம் வேறு. அவை ஒன்றுபடுதல் ஒருநாளுமில்லை" என்று கூறிச் சென்ற ரூட்யார்ட் கிப்ளிங் (Rudyard gipling) என்ற ஏகாதிபத்தியக் கவிஞரின் கூற்றைப் பொய்யாக்க அலெக்ஸாந்தர் இங்ஙனம் பலவகையிலும் முயன்றார்.

அலெக்ஸாந்தரது அகால மரணத்தின் விளைவாக அவரது கனவுகள் நனவாகாமலேயே மறைந்தன. அரசியல் துறையில் அவர் நிறைவேற்றிய சாதனைகள் பல. சிந்து வெளியைத் தவிர ஏனைய இடங்களில் அவரது பேரரசு நிலைத்தது. தமது பேரரசில் சிவில்—இராணுவ—நிதி அதிகாரிகளைத் தனித்தனியே நியமித்ததன் மூலம் சர்வாதிகாரிகள் தோன்றுமல் தடுக்கலாம் என அவர் எண்ணினர். ஆனால் அவரது மரணத்துக்குப் பின் இராணுவ அதிகாரிகள் ஏனைய அதிகாரிகளை அடக்கிவிட்டு ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டனர். அதோடு ஆளுநர்கள் பலர் சுயேச்சையடைந்துவிட்டனர். பேரரசின் வலிமை நாளடைவில் நலிந்தது. கீழை நாகரிகத்துக்கும் மேலை நாகரிகத்துக்கும் அவர் பலவந்தமாக நடத்திவைத்த திருமணமும் நிலைத்த பலன்களை நல்கவில்லை. ஆசிய நாகரிகங்கள் எனும் கடலில் கிரேக்கப் பண்பாடு எனும் நதியும் சேர்ந்து ஒன்றுகிவிட்டது. அது தன் தனித்தன்மையை நிலைநாட்டிக்கொள்ள முடியவில்லை. ஆனால் கிரேக்க இலக்கியம், கலை, தத்துவம், அறிவியல், மருத்துவம் ஆகியவை கீழை நாடுகளில் பரவின. அலெக்ஸாந்தரோடு வந்த பல கிரேக்கக் கலைஞர்களும், அறிவியல் வல்லுநர்களும் கீழை நாட்டுத் தத்துவம், கணிதம், மருத்துவம் போன்றவைகளை மேலைநாட்டுக்கு எடுத்துச் சென்று அவற்றை மொழிபெயர்த்து மக்களிடை பரப்பினர். வாணிகத் துறையில் பல நல்ல பலன்கள் விளைந்தன. கீழை நாடுகளோடும், மத்தியத்

தரைக்கடல் நாடுகளோடும் ஐரோப்பா வியாபாரம் செய்யத் தொடங்கியது. கிரேக்க வீரர்கள் சென்ற பாதைகளை வணிகர்கள் நன்கு பயன்படுத்திக்கொண்டனர். கிரீஸின் வாணிக வளத் தோடு, அவர்தம் அறிவு நலமும் பல நாடுகளிலும் பரவியது. அலெக்ஸாந்தரால் நிறுவப்பெற்ற அலெக்ஸாந்திரிய நகரங்கள் கிரேக்க அறிவுக் கருவூலங்களாகத் திகழ்ந்தன. அங்கிருந்து கிரேக்க நாகரிகமானது பல திசைகளிலும் பரவியது. கிரேக்க நகர் அமைப்பு முறையும், கட்டிடக் கலையும் இந் நகரங்களி லிருந்து ஆசிய நாடுகளிலும், எகிப்து நாடுகளிலும் பரவின. மற்றும் அலெக்ஸாந்தரது படையெடுப்புகளால் அக்காலத்தவரின் புவியியல் அறிவு (Geograplical Knowledge) விரிவடைந்தது. உலகத்தின் பரப்பு பற்றி மக்கள் கொண்டிருத்த மூட நம்பிக் கைகள் மறைந்தன. அலெக்ஸாந்தரது படையெடுப்புகளால் தான் கிரேக்கரைப் பீடித்திருந்த குறுகிய மனப்பான்மை எனும் நோய் அகன்றது. ஒருவரை ஒருவர் அவர்கள் மதிக்கத் தெரிந்துகொண்டதோடு பிற நாட்டவரைக் காட்டுமிராண்டிகள் எனக் கருதுகின்ற எண்ணத்தையும் நாளடைவில் கைவிட்டனர். இங்ஙனம் அரசியல் துறையில் நிலையான பலன்களை அதிகமாக ஏற்படுத்தாவிடினும், கலைத் துறையிலும் நாகரிகத் துறையிலும் பல நல்ல விளைவுகளை அலெக்ஸாந்தரது படையெடுப்புகள் ஏற் படுத்தின எனலாம்.

ஒருவருடைய பெருமையை நாம் எடைபோடும்போது அவர் செய்த சாதனைகளை மட்டும் கருத்திற்கொண்டு பார்த்தால் முறையாகாது. அவர் செய்ய நினைத்த சாதனைகள் என்ன என்பதையும் நினைத்துப் பார்க்க வேண்டும். அங்ஙனம் பார்க்கும் போது அலெக்ஸாந்தர் உண்மையிலேயே பெருமையுடைய வராகக் காட்சியளிக்கின்றார். கீழைநாடுகளும் மேலை நாடுகளும் தம்முள் வேற்றுமையின்றி ஒருங்கே வாழவேண்டும். இரு நாகரிகங்களின் நல்லியல்புகளும் இணைந்ததோர் கூட்டு நாகரிகம் தோன்றவேண்டும். அத்தகைய நாகரிகத்தின் அடிப்படையில் உலகம் ஒரு குடும்பமாய் வாழ்தல் வேண்டும் என்ற அவரது குறிக் கோள் அன்றுமட்டுமின்றி இன்றைக்கும் அறிஞர்களின் உயர்ந்த குறிக்கோளாக விளங்குவதொன்றே அவரது பெருமைக்கு ஒரு பெருஞ்சான்றுமென்க!

(4) பேச்சாளர் டெமாஸ்தனிஸ்

உலகம் போற்றும் சிறந்த பேச்சாளர்கள் பட்டியலில் முதலிடம் பெற்றவரான டெமாஸ்தனிஸ் ஆதென்ஸில் ஒரு

கருமானின் (படைக் கருவிகளைச் செய்து தந்தவர்) புதல்வராகக் கி. மு. 384-இல் தோன்றினர். தமது எட்டாவது வயதிலேயே அவர் தம் தந்தையை இழந்தார். தமது தந்தையால் ஈட்டப் பெற்ற பெருஞ் செல்வத்துக்கு அவர் உரியவரானார். ஆனால் அவர் இளவயதினராயிருந்தமையால், அச் செல்வத்தை அவரது தாயாதிகள் நிர்வாகம் செய்து வந்தனர். இருபது ஆண்டுகள் நிரம்பப் பெற்றபோது அவர் தமது பூர்வீகச் சொத்தின் கணக்கை ஆராய்ந்தார். அப்போதுதான் வேலியே பயிரை மேய்ந்த நிலை அவருக்குத் தெரியவந்தது. தமது தகப்பனார் விட்டுச்சென்ற சொத்துகளை எல்லாம், தமது பாதுகாப்பாளர்கள் மனம் போன படிச் செலவிட்டு விட்டது மன்றி, அதிற் பெரும் பகுதியைத் தங்களுக்கென அபகரித்துக்கொண்டிருப்பதையும் அவர் கண்டார். இழந்த சொத்துகளைத் திரும்பப் பெற அவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அக் காலத்தே வழக்குத் தொடுப்பவர்கள்தான், அது தொடுக்கப்பட்டவர்களின் குற்றத்தை நிரூபித்தாகவேண்டும். நீதிமன்றத்தார் முன் சொல்வன்மையோடு தமது வழக்குகளை எடுத்து வாதாட வல்லவர்களே வெற்றி பெறுவார்கள். எனவே டெமாஸ்தனிஸ் ஐஸீயஸ் (Isaeus) என்ற சிறந்த வழக்குரைஞர் (Lawyer) ஒருவரிடம் பேச்சுக் கலையைப் பயின்றார்; பூர்வீகச் சொத்து பற்றிய சட்டங்களைப் பற்றியும் அவரிடம் பாடம் கேட்டுக்கொண்டார். நோயால் நலிந்து மெலிந்த உடலைக்கொண்டிருந்த அவர் உடற்பயிற்சியில் செலவழிக்க வேண்டிய நேரத்தையெல்லாம் பேச்சுக்கலை பயில்வதில் செலவழித்தார். நீண்ட நாள் வழக்காடலுக்குப் பின் அவர் வெற்றி பெற்றார். அதனால் கிடைத்த சிறு தொகையைக் கொண்டு அத்தீனியக் கப்பற்படைக்கு ட்ரிரீம்ஸ் என்ற கப்பல் ஒன்றைக் கட்டிக்கொடுத்தார். அதன்பின் நீதிமன்றத்தில் வழக்காடுபவர்களுக்குச் சொற்பொழிவுகள் தயாரித்துக் கொடுக்கும் தொழிலை மேற்கொண்டு நிறையப் பொருள் சம்பாதித்தார். சில சமயங்களில் வாதி பிரதிவாதி ஆகிய இருவருக்குமே சொற்பொழிவுகளை எழுதித் தந்து இருவரிடமும் அவர் பணம் வாங்கிக்கொள்வாராம். உடல் நலிவின் காரணமாக அவர், உரையாற்றுதைவிட உரைகளை எழுதித் தருவதிலேயே சிறப்பானவராக விளங்கினர். அத்தீனியப் பொதுமக்கள் மன்றத்தில் அவர் முதன்முதல் ஆற்றிய சொற்பொழிவை எல்லோரும் எள்ளி நகையாடினர். இதனால் உள்ளம் நொந்த டெமாஸ்தனிஸ் எப்படியாவது சிறந்த பேச்சாளராக ஆகிவிடவேண்டுமென்ற திடமான தீர்மானத்துக்கு வந்தார். தினமும் கடற்கரையோரம் நின்றுகொண்டு அவர் இரைந்து பேசுவார். இயல்பிலேயே திக்குவாயினராகிய அவர் அதைப் போக்கிக்கொள்ள வாயில் கூழாங்கற்களைப் போட்டுக்

கொண்டு பேசுவார். கண்ணாடி முன் நின்றுகொண்டு கைகளை ஆட்டிப் பேசிப் பழகுவார்; இப்படியெல்லாம் முயன்று முடிவில் அவர் ஆதென்ஸின் தலைசிறந்த பேச்சாளராஞர். செல்வம் அவரிடம் வந்து குவிந்தது. ஆதென்ஸிலேயே மிகப் பணக்கார பழக்குரைஞராக அவர் விளங்கினர். அவர் தமது உரை நடைக்கு மெருகூட்டத் தூசிடைடிஸின் (Thucydides) வரலாற்று நூலை அடிக்கடி படித்து நெட்டுருப்போட்டு ஒப்பிப்பது பழக்கம்.

தூசிடைடிஸின் நூல்களைப் படித்ததன் விளைவாக டெமாஸ் தனிஸிடம் தன் தாய் நகர்மீது ஓர் அலாதியான பற்று ஏற் பட்டது. பெரிக்ளீஸின் காலத்து ஆதென்ஸின் பெருமை அவர் கண்முன் எப்போதும் நின்றது. அத்தகைய பெருமையைத் தமது தாய்நகரம் மீண்டும் அடையவேண்டும் என்பது அவரது துறிக்கோளாகும். அடைய முடியும் என்பது அவரது உறுதியான நம்பிக்கையாகும். உள்நாட்டுக் குழப்பத்தாலும், வெளிநாட்டுப்போராலும் ஆதென்ஸ் தனது வலிமையை இழந்து விட்டது என்று கூறுபவர்களை அவர் வன்மையாக மறுத்தார். தங்களது பழம்பெருமையையும் வீரத்தையும் அத்தீனியர்கள் மறந்து சோம்பேறிகளாகிவிட்டதாக அவர் தமது நகர மக்களைக் துறைகூறிக் கண்டித்ததுமட்டுமன்றி மீண்டும் பழைய நிலைக்கு உயரும்படி அவர்களுக்கு ஊக்கத்தையும் தெம்பையும் ஊட்டினர். சமய சம்பந்தமான விழாக்களில் கலந்துகொள்பவர்களுக்கு வழங்குவதற்கெனத் திரட்டப்பட்ட நிதிப்பணத்தைப் படை திரட்டுவதற்காகப் பயன்படுத்த வேண்டும் என அவர் வாதாடி னர். ஆதென்ஸ், கிரேக்க நகரங்களுக்குத் தனித்தலைமை வகித்து வந்த காலம் மலையேறிவிட்டதென்றும், தன்னைத்தான் காத்துக்கொள்வதில் மட்டுமே கவனத்தைச் செலுத்துவதே ஆதென்ஸுக்கு நல்லது என்றும் அவரது சகாக்களான போகியன் (Phocion) என்பாரும், யூபுலஸ் (Eubulus) என்பாரும் வாதாடினர். ஆனால் டெமாஸ்தனிஸ் ஆதென்ஸைப் போர்ப் பாதையில் இறங்குமாறு வற்புறுத்தினர். பிலிப்புக்கெதிராக அத்தீனியர்களை ஒன்று திரட்டினர். ஆதென்ஸைக் கைப்பற்றி அத்தீனியர்களின்-ஏன் கிரேக்கர்கள் அனைவரின் சுயேச்சையை யும் பறித்துக்கொள்வதே பிலிப்பின் நோக்கம் என்றும், அவரை எதிர்த்து விரட்டியடிப்பதே விடுதலையில் விருப்பமுள்ள ஒவ் வொரு அத்தீனியனும் செய்யும் கடமையாகும் என்றும் அவர் கர்ஜித்தார். பிலிப்புக்கெதிராக அவர் நிகழ்த்திய மூன்று பெரும் சொற்பொழிவுகள், பிலிப்பிக்குகள் (Philippics) எனற பெயரில் வரலாற்றில் அழியாயிடம் பெற்றுள்ளன. ஆனால் டெமாஸ்தனிஸ்

உண்மையிலேயே பிலிப்பு பற்றித் தப்புக் கணக்குப் போட்டுவிட்டார். ஆதென்ஸின் நாகரிகத்தைப் பெரிதும் மதித்துப் போற்றிய ஒருவரை அவமதித்த குற்றத்திற்கு அவர் ஆளானர். நட்புக் கரம் நீட்டிய பிலிப்பை அவர் அலட்சியமாக ஒதுக்கியுற்றார். வலிய வந்த சீதேவியை ஏமாற்றியது போலாயிற்று, அவர் செய்கை. இதனால் ஆதென்ஸிற்குத்தான் கெடுதல் ஏற்பட்டதேயொழியப் பிலிப்புக்கு ஒன்றும் தீமை ஏற்பட வில்லை.

பிலிப், கி. மு 351-இல் திரேஸ் நாட்டின்மேல் படை யெடுத்தபோதுதான், டெமாஸ்தனிஸ் தமது முதலாம் பிலிப்பிக் உரையை நிகழ்த்தினர். மாசிடோனிய ஏகாதிபத்தியத்தை மூறியடிக்க நீரிலும் நிலத்திலும் திரண்டு வரும்படி அத்தீனிய மக்களிடை அறைகூவினர். ஆனால் பிலிப் ஆதென்ஸுடன் சமாதானம் செய்துகொள்ள விரும்புவதாக அறிவித்த போது அத்தீனியர்கள் அதை ஏற்றுக் கொண்டனர். சமாதானக் குழு ஒன்றைப் பிலிப்பிடம் அவர்கள் அனுப்பிவைத்தனர். அங்ஙனம் அனுப்பப்பட்ட பதின்மரில் டெமாஸ்தனிஸும் ஒருவர். இதன் விளைவாகப் பிலோக்ராடிஸின் சமாதானம் (Philocrates) ஏற்பட்டது. போர்க்காலத்தே ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வதாக இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர். ஆனால் போகிஸ் (Phocis) நகரத்தோடு போரிடுங்காலை பிலிப் ஆதென் ஸின் உதவியை நாடிய போது, அதை அந் நகர் அனுப்பிவைக்க வில்லை. டெமாஸ்தனிஸ்தான் ஆதென்ஸின் அத்தகைய செயலுக்குக் காரணமாயிருந்தார். எனினும் ஆதென்ஸின் உதவியின்றியே பிலிப், போகிஸ் நகரங்களை ஒவ்வொன்றாய்க் கைப்பற்றிவிட்டார். அதன்பின் பிலிப் மீண்டும் ஆதென்ஸிடம் தமது நேசக் கரங்களை நீட்டினர். ஆனால் டெமாஸ்தனிஸ், அவைகளை முத்தமிட மறுத்தார். "பிலிப் பேசுவது சமாதானம். ஆனால் செய்வதோ போர். அவரை நம்பாதீர்கள்" என டெமாஸ்தனிஸ் எக்காளமிட்டுப் பேசினர்.

கி. மு. 344-இல் அவர் தமது இரண்டாம் பிலிப்பிக் உரையை ஆற்றினர். "பிலிப்பின் உண்மையான நோக்கம் ஆதென்ஸை அடிமைப்படுத்துவதாகும்; அதன் நட்பைப் பெறு வதன்று" என அவர் முழங்கினர். கி. மு. 341-இல் பிலிப், பைஸான்ஷியத்தை முற்றுகையிட்டபோது அவர் தமது மூன்றும் பிலிப்பிக் சொற்பொழிவை நிகழ்த்தினர்.

கி. மு. 339-இல் பிலிப் கிரீஸைத் தாக்கிய போது டெமாஸ் தனிஸ் தீப்ஸோடு கூட்டுச் சேர்ந்தார். அதுவே அவரது

ஒப்பந்தச் சாதனையாகும். தீபர்கள், அத்தீனியர்கள், போகியர்கள், அக்கீயர்கள், கொரிந்தியர்கள் யாவரும் பிலிப்பை எதிர்த்துக் கிரோனியப் போர்க்களத்தில் (Chaeronea) படுதோல்வியடைந்தனர். டெமாஸ்தனிஸின் கொள்கைக்கும் அது ஒரு பெருத்த தோல்வியாயமைந்தது. எனினும் அவர் அதிலிருந்து பாடம் எதையும் கற்றுக்கொண்டதாய்த் தெரியவில்லை. பிலிப் ஆதென்ஸிடம் தாராளமாய் நடந்து கொண்டதைக் கூட அவர் சந்தேகக் கண்களுடனேயே நோக்கினர். இறுதியில் பிலிப் ஒரு கொலையாளியின் கத்திக்கு இரையானர் எனக் கேள்வியுற்ற டெமாஸ்தனிஸ் மகிழ்ச்சிக் கூத்தாடினர். பிலிப்பைக் கொன்ற பாசேனியஸுக்கு நல்ல பரிசொன்று வழங்கவேண்டுமென்று கூறினர். கிரீஸின் சுதந்திரம் காப்பாற்றப்பட்டுவிட்டது என அறிவித்தார். ஆனால் விரைவிலேயே அலெக்ஸாந்தர் வந்து கிரேக்கக் கலகக்காரர்களை அடக்கினர். ஆதென்ஸை அவர் தாராள மனப்பான்மையுடன் நடத்தியபோது அதையும் டெமாஸ்தனிஸ் சந்தேகித்தார். அலெக்ஸாந்தர் கிரீஸை விட்டகன்ற போது அவரைப்பற்றித் தப்புப் பிரச்சாரம் செய்வதில் டெமாஸ்தனிஸ் ஈடுபட்டார். ஆனால் அத்தீனியர்கள் அவரது பேச்சை நம்ப மறுத்தனர். போகியன் என்பாரின் சமாதான கொள்கையை அவர்கள் ஆதரிக்கலாயினர். போகியன் ஆதென்ஸிலேயே நாணயத்துக்குப் பேர் போனவர்; பிளேட்டோவிடம் கல்வி பயின்றவர்; பொதுமக்களின் நிலையற்ற தன்மையை நன்கு உணர்ந்தவர்; எனினும் அவர்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற ஆவல் நிரம்பியவர். அவர் மீது அத்தீனியர்களுக்கு மாறுத நம்பிக்கை இருந்தது. நாற்பத்தைந்து முறை அவரை ஸ்ட்ரேடகாஸ் (Strategos) என்னும் நிர்வாக அதிகாரியாக அவர்கள் தேர்ந்தெடுத்தனர். அவரது நண்பர் அஸினஸ் (Aeschines) என்பாரும் ஒரு சமாதானவாதி; ஆசிரியராகவும் நடிகராகவும் இருந்து மெள்ள மெள்ள புகழேணியின் உச்சியை அடைந்தவர்; நல்ல சொல்வன்மையுடையவர்; ஒன்றும் தயார் செய்யாமலேயே மணிக்கணக்கில் பேசக்கூடியவர். பிலிப்பிடம் லஞ்சம் வாங்கிக்கொண்டு அவர் சமாதானம் பேசுவதாக டெமாஸ்தனிஸ் அவர் மீது குற்றம் சாட்டினர். ஆனால் அவரால் மெய்ப்பிக்க முடியவில்லை. அதே போலப் பாரசீகர்களிடம் லஞ்சம் வாங்கிக்கொண்டு டெமாஸ்தனிஸ் போர்ப் பறை கொட்டுவதாக அஸினஸ் குற்றம் சாட்டினர். ஆதென்ஸுக்குச் செய்த தொண்டுக்காகப் பொற் கிரீடம் ஒன்றை அத்தீனிய மன்றம் டெமாஸ்தனிஸுக்கு வழங்கத் தீர்மானித்த போது அது அரசியல் சட்டத்துக்கு விரோதமானது என அஸினஸ் வாதாடினர். அதை எதிர்த்து

டெமாஸ்தனிஸ் பேசிய பேச்சு அவரது அறுபது பேச்சுக்களிலேயே தலைசிறந்ததொன்றாகக் கருதப்படுகிறது. எனினும் அத்தீனிய மக்கள் இறுதியில் அஸினஸ், போகியன் போன்றோரின் வாக்குகளையே நம்பலாயினர். ஆதென்ஸின் இடிந்த கட்டிடங்களைச் சீர் செய்வதிலும், பல பொதுப்பணிகளில் ஈடுபடுவதிலும் அவர்கள் முனைந்தனர். டெமாஸ்தனிஸின் பேச்சு எடுபடவில்லை. போருக்காகப் பணம் செலவிடுவதைத் தவிர்த்து, ஆதென்ஸைப் புனர் நிர்மாணம் செய்வதில் அவர்கள் ஈடுபடலாயினர். டயோனிஷியஸின் நாடகக் கொட்டகையையும் விளையாட்டு அரங்கத்தையும் மீண்டும் அவர்கள் கட்டினர். 400 போர்க் கப்பல்களை உருவாக்கி அவர்கள் கடற்படையில் சேர்த்தனர்.

இங்ஙனம் தன்னைத்தான் காத்துக்கொள்ளும் முயற்சியில் அமைதியாக ஈடுபட்டுவந்த ஆதென்ஸின் நிலையைக் குலைக்க அலெக்ஸாந்தரின் நிதி காப்பாளரான ஹார்பாலஸ் (Harpalus) என்பார் அங்கு வந்து சேர்ந்தார். உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைத்த அப் புன்மையாளர் 5000 தாலந்துகளுடனும், 30 கப்பல்களுடனும், ஒரு சிறு கூலிப்படையுடனும் அலெக்ஸாந்தருக்குத் தெரியாமல் ஆதென்ஸ் வந்து சேர்ந்தார். அலெக்ஸாந்தருக்கெதிராக ஆதென்ஸைக் கிளர்ந்தெழச் செய்ய வேண்டுமென்பதே அவரது நோக்கம். இதையறிந்து கொண்டு ஆதென்ஸ் அவரது படையை நகருக்குள் விட மறுத்தது. எனவே அவர் தமது பொருளில் 700 தாலந்துகளை மட்டும் எடுத்துக்கொண்டு ஆதென்ஸில் தஞ்சம் புகுந்தார். அலெக்ஸாந்தரது தளகர்த்தர்கள் ஹார்பாலஸைத் தங்களிடம் ஒப்படைக்குமாறு கேட்கலாயினர். உடனே அத்தீனிய அரசு டெமாஸ்தனிஸின் யோசனைக்கிணங்க ஹார்பாலஸைச் சிறை செய்துவிட்டு அவரது நிதியை மலையரணில் கொண்டுபோய்ப் பத்திரப் படுத்தியது. ஹார்பாலஸ் சிறையினின்றும் தப்பி ஓடி, அவரது ஆட்களாலேயே கொல்லப்பட்டார். எனவே அவரது நிதியைப் புரக்கும் பணியை அத்தீனிய அரசாங்கம் ஒரு குழுவிடம் ஒப்படைத்தது. அக் குழுவில் டெமாஸ்தனிஸும் ஒருவர். சின்னஞ்சிறுகக் கணக்குப் பார்த்ததில், அந் நிதியில் பாதிப் பணம் காணப்படவில்லை. பொதுப் பணத்தைக் கையாடல் செய்ததாகப் பலர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இருபது தாலந்துகளைக் கையாடியதாக டெமாஸ்தனிஸ் மீது வழக்குத் தொடரப்பட்டது. சமய விழா நிதிக்காகத் தாம் வழங்கிய முன்பணத்தையே தாம் எடுத்துக் கொண்டதாகவும், தாம் எந்தத் திருட்டுக் குற்றத்தையும் செய்ய

வில்லை என்றும் டெமாஸ்தனிஸ் கூறிப்பார்த்தார். அவரது சொல்வன்மை பலிக்கவில்லை. அத்தீனிய மன்றம் அவருக்கு 50 தாலந்துகள் அபராதம் விதித்தது. அதைக் கட்ட இயலாமல் அவர் சிறை செய்யப்பட்டார். ஆனால் அவர் சிறையினின்றும் தப்பி ட்ரோயிசன் (Troezen) எனுமிடத்திற்கு ஓடிப் போய் ஒன்பது மாதங்கள் கழித்தார்.

அலெக்ஸாந்தர் இறந்தார் எனக் கேள்வியுற்ற கிரேக்க நகரங்கள் கலகத்தில் இறங்கின. ஆதென்ஸ் அத்தகைய கலகத்திற்குத் தலைமை வகித்தது. டெமாஸ்தனிஸை மீண்டும் வரவழைத்து, பெலப்பொனீஷுக்குச் சென்று மாசிடோனியருக்கெதிராக நண்பர்களைத் திரட்டும்படி ஆதென்ஸ் கேட்டுக் கொண்டது. அதன்படியே அவர் ஒரு நேசப் படையைத் திரட்டிக் கொண்டு சென்று அலெக்ஸாந்தரின் தளகர்த்தரான ஆண்டிபாட்டர் (Antipater) என்பாரை எதிர்த்தார். ஆனால் எளிதில் நேசப்படை தோற்றது. ஆண்டிபாட்டர், ஆதென்ஸ் மீது கடும் நிபந்தனைகளைச் சுமத்தினர்.

போரில் ஆன செலவை ஈடுகட்டும்படியும், மாசிடோனியப் படையொன்றை ஆதென்ஸில் வைத்துக்கொள்ளும்படியும், ஜனநாயக அரசியலமைப்பைக் கலைத்துவிடும்படியும், டெமாஸ்தனிஸ் போன்ற மாசிடோனிய எதிரிகளைத் தம்மிடம் ஒப்படைக்கும்படியும் அவர் வற்புறுத்தினர். இதைக் கேட்ட டெமாஸ்தனிஸ் கெலூரியாவிற்குத் தப்பியோடி ஒரு கோயிலில் தஞ்சம் புகுந்தார். மாசிடோனியப் படைகள் அவரைப் பின்தொடர்ந்து சென்று அக் கோயிலை முற்றுகையிட்டன. டெமாஸ்தனிஸ் தமது பேனாவில் மறைத்து வைத்திருந்த நஞ்சினை மாந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

இங்ஙனம் டெமாஸ்தனிஸ் வாழ்நாளெல்லாம் போராடிய கொள்கை தோற்றது. அவர் பெரும் பேச்சாளர் என்பதில் எதுவும் ஐயமில்லை. அவரது தாய்நாட்டுப் பற்றை யாரும் குறைகூற இயலாது. ஆனால் தப்பான முறையில் அவர் தமது சொல்வன்மையை யெல்லாம் பயன் படுத்தித் தமது நகரையும் தம்மையும் இறுதியில் அழித்துக் கொண்டார். பியூரி என்னும் ஆசிரியர் கூறுவதுபோல அவரது இலட்சியம் எல்லாம், பெரிக்ளீஸின் காலத்து ஆதென்ஸில் உலவியது. ஆனால் அவர் வாழ்ந்து கொண்டிருந்ததென்னவோ, யூபுலஸின் காலம் (சமாதான விருப்பம் கொண்ட காலம்). அவரது கண்கள்

பின்னல் நோக்கிய அளவுக்கு முன்னல் நோக்கவில்லை. வளர்ந்துவரும் மாசிடோனியாவின் வல்லமையை அவர் குறைத்து மதிப்பிட்டார். பிலிப்பையும் அலெக்ஸாந்தரையும் அனுவசியமாகச் சந்தேகித்து அவர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து தோல்வியே கண்டார். நாட்டுப்பற்று, சொல்வன்மை இவை மட்டும் ஒரு அரசியல்வாதிக்குப் போதாது; வருவ துணர்ந்து அதற்கேற்றபடி வழிகாட்டும் அரசியல் நுண்ணறிவு இல்லாத பேச்சாளரால் நாட்டுக்கு எந்த நன்மையும் செய்ய முடியாது'' என்ற உண்மைக்குத் தக்கதொரு எடுத்துக்காட்டாய் டெமாஸ்தனிஸின் வாழ்க்கை அமைந்துள்ளது எனலாம்.

20. ரோமானியர் வருகை

(1) அலெக்ஸாந்தருக்குப் பின் கிரீஸின் நிலைமை

கிரீஸின் வரலாற்றை அலெக்ஸாந்தரின் காலத்தோடு நிறுத்திக் கொள்வது பொதுவாக வரலாற்றுசிரியர்களின் வழக்க மாயிருந்து வருகிறது. ஏனெனில் அவருக்குப் பின் கிரேக்க வரலாற்றைத் தொடர்ச்சியாகச் சொல்லுதல் என்பது இயலாத காரியமாகிவிடுகிறது. கிரேக்க வரலாற்றின் ஒருமை மறைந்து விடுகிறது. கிரீஸில் மட்டுமன்றிக் கிரேக்கப் பண்பு, நூற்றுக் கணக்கான வெளிநாட்டு நகரங்களில் பரவி விடுகிறது. இத்தாலியிலும் சிசிலியிலும் எகிப்திலும் ஆசியாவிலும் கிரேக்கர்கள் சென்று குடியேறி விடுகின்றனர். அவர்களது பண்பும் பழக்க வழக்கங்களும் இடத்துக்கிடம் மாறுபடுகின்றன.

அலெக்ஸாந்தரது பேரரசில் மொழியொருமையோ, சமய ஒருமையோ பழக்க வழக்கங்களில் ஒற்றுமையோ காணப் படவில்லை. அவருக்குப் பின் அவரது பேரரசைப் பல வல்லமை வாய்ந்த தளகர்த்தர்கள் தமக்குள் பங்கிட்டுக் கொண் டனர். மாசிடோனியா, செலுசியா (Selucia), எகிப்து ஆகிய மூன்று நாடுகளிலும் கோளுட்சி நில்வியது. வேறு பல மாநிலங் களில் மாசிடோனியத் தலைவர்களே வல்லாட்சி செலுத்தினர். ஜனநாயகம், ஒருசில கிரேக்க நகரங்களைத் தவிர வேறிடங்களி லெல்லாம் மாண்டுவிட்டது. இராணுவத்தின் துணை கொண்டு செலுத்தப்பெறும் வல்லாட்சியே (Militarism) எங்கும் பரவ லாகக் காணப்பட்டது.

அலெக்ஸாந்தரது மரணத்திற்குப் பின் அவரது பேரரசு ஐந்து பகுதிகளாகப் பிரிந்தன (கி. மு. 321). அவற்றை டயே டோகி (Diadochi) என்றழைக்கப்பட்ட இராணுவத் தளபதிகள் ஆண்டுவந்தனர். மாசிடோனியாவையும், கிரீஸையும் ஆண்டி பாட்டர் (Antipater) என்பாரும், திரேஸ் நாட்டை லிஸிமாக்கஸ்

(Lysimachus) என்பாரும், ஆசியாமைனர்ப் பிரதேசத்தை ஆண்டிகோனஸ் (Antigonus) என்பாரும், பாபிலோனியாவைச் செல்யூக்கஸ் (Seleucas) என்பாரும் முறையே ஆண்டு வந்தனர். கிரீஸை ஆண்ட ஆண்டிபாட்டர் இறந்தபின் ஆதென்ஸில் கலகம் ஏற்பட்டது. போகியன் (Phocion) என்ற பழம் பெரும் தலைவர் கொல்லப்பட்டார். ஆண்டிபாட்டரின் சார்பில் போகியன் மிக நியாயமான முறையில் ஆதென்ஸை ஆண்டு வந்தார். அவருக்குப் பின் அந் நகரில் ஒரே குழப்பம் ஏற்பட்டது. இறுதியில் கி. மு. 318-இல் ஆண்டிபாட்டரின் புதல்வரான காஸான்டர் (Cossander என்பவர்) ஆதென்ஸை மீண்டும் கைப்பற்றினர். அவர் காலத்தே ஆயிரம் டிராக்மாக்களை (Drachmac) வைத்திருந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. அவருக்குப் பின் டெமிட்ரியஸ் (Demetrius) என்பார் ஆட்சிக்கு வந்தார். அவர் ஒரு தத்துவமேதை; நல்ல கல்விமான்; விவாதங்களிலும் வல்லவர். அவர் ஆட்சி புரிந்த பத்தாண்டுகளும் ஆதென்ஸிற்கு ஒரு அமைதி நிறைந்த—செல்வாக்குமிக்க நற்காலமாகவே திகழ்ந்தது.

இதற்கிடையில் முதலாம் ஆண்டிகோனஸ் என்ற ஆசியமைனரின் ஆளுநர், அலெக்ஸாந்தரது நாடுகளையெல்லாம் ஒன்றுக இணைத்து, ஒரு பேரரசை நிறுவ முயன்றார். ஆனால் கி. மு. 301-இல் ஏனைய ஆளுநர்கள் யாவரும் சேர்ந்து, அவரை இப்சஸ் (Ipsus) எனுமிடத்தில் தோற்கடித்து விட்டனர். ஆசியாமைனர் செல்யூக்கஸ் வசம் சென்றது. ஆண்டிகோனஸின் மைந்தரான டெமிட்ரியஸ் - போலியார்செடஸ் (Poliorcetes) என்பார் கிரீஸை மாசிடோனியாவின் பிடியினின்றும் விடுவித்து, அங்கு ஜனநாயக ஆட்சியை மீண்டும் தோற்றுவித்தார். அத்தீனிய மக்கள் அவரைப் பார்த்தனன் கோயிலில் தங்க வைத்து நன்றியுடன் உபசரித்தனர். அவருடன் ஏராளமான நடன மாதர்களும் தங்கியிருந்தனர். முதலாம் தாலமி என்ற எகிப்திய ஆளுநரை அவர் சைப்ரஸ் (Cyprus) போர்க்களத்தில் தோற்கடித்தார் (கி. மு. 308). ரோட்ஸ் நகரைக் கைப்பற்ற ஆருண்டுகள் முயன்று முடிவில் தோல்வியுற்றார். கி. மு. 294—இல் அவர் தம்மை மாசிடோனிய மன்னர் என்று அறிவித்துக் கொண்டதுமன்றி அத்தீனிய சுயேச்சைக்கும் முற்றுப்புள்ளி வைத்தார். இறுதியில் அவர் செல்யூக்கஸால் கைப்பற்றப்பட்டுச் சிறையில் தள்ளப்பட்டார். அங்கே அவர் அளவுக்கு மீறிக் குடித்து மாண்டார்.

கி. மு. 279-இல் கெல்ட்டுகள் (Celts) என்ற ஒருவகைக் காட்டுமிராண்டி இனத்தவர்கள், ப்ரன்னஸ் (Brennus) என்பாரது

தலைமையில் மாசிடோனியா மீதும் கிரீஸ்மீதும் படையெடுத்து, அங்கிருந்த நகரங்களையும் கோயில்களையும் கொள்ளையடித்தனர். டெல்ஃபிக் கோயிலையும் அவர்கள் கொள்ளையடிக்க எத்தனித்தனர். ஆனால் கிரேக்கர்களின் வீராவேசமான எதிர்ப்பினாலும், தெய்வாதீனமாக ஏற்பட்ட புயலாலும் அவர்கள் பின்வாங்கினர். ப்ரன்னஸ் என்பார், மானமிழந்த பின் வாழாமை இனிதே என நினைத்துத் தற்கொலை செய்து கொண்டார். அவரது கூட்டத்தைச் சேர்ந்தவர்கள், ஆசியாமைனருக்குச் சென்று அங்கேயும் பல அட்டூழியங்கள் செய்தனர். ஆசியக் கிரேக்கர்கள், அவர்களைச் சாந்தப்படுத்தி வடக்கேயுள்ள பிரிஜீயா, திரேஸ் முதலிய நாடுகளில் குடியேறச் செய்தனர். எனினும் அவர்கள் கிரேக்க நகரங்களிலிருந்து ஆண்டுதோறும் கப்பப் பணம் வசூலித்து வந்தனர்.

டெமிட்ரியஸின் மைந்தரான இரண்டாம் ஆண்டிகோனஸ் கெல்ட்டுகளை மாசிடோனியாவினின்றும் துரத்தியடித்தார். அப்பலோடாரஸ் (Apollodorus) என்ற கலகக்காரத் தலைவரையும் அவர் அடக்கி ஒடுக்கினர். மிகத் திறம்பட அவர் நாட்டை 38 ஆண்டுகள் ஆண்டார் (277-239 கி. மு). இலக்கியம், தத்துவம், அறிவியல் முதலியன அவரால் பேணி வளர்க்கப் பட்டன. அராட்டஸ் (Aratus) போன்ற கவிஞர்களும், ஜீனோ (Zeno) போன்ற ஸ்டோயிக் தத்துவ அறிஞர்களும் அவரது அரசவையை அலங்கரித்தனர். பிற்காலத்தே வந்த மார்க்கஸ் அரேலியஸைப் போல அவர் ஒரு ராஜ ரிஷியாய்த் திகழ்ந்தார். அவர் காலத்தில்தான் ஆதென்ஸ் நகரம் தனது விடுதலைக்காக இறுதிப் போராட்டத்தை நடத்தியது. ஜீனோ என்ற தத்துவ மேதையின் சீடரான கிரிமோனிடிஸ் (Chremonides) என்ற இளைஞரது தலைமையில் அத்தீனியர்கள் புரட்சிக் கொடியை உயர்த்தினர். எகிப்தின் உதவியையும் அவர்கள் பெற்று, மாசிடோனிய துருப்புகளை நகரத்திலிருந்து வெளியேற்றி ஆதென்ஸின் சுயேச்சையை அறிவித்தனர். ஆனால் கி. மு. 262-இல் ஆண்டிகோனஸ் மீண்டும் ஆதென்ஸைக் கைப்பற்றிக் கொண்டார். தமக்கு விரோதமாக இனி போர் செய்வதில்லை யென்றும், தம்மை எதிர்க்கப் பிற நாடுகளைக் கூட்டு சேர்ப்பதில்லை என்றும் அவர் ஆதென்ஸிடம் வாக்குறுதி வாங்கிக் கொண்டார். மற்றபடி ஆதென்ஸிற்குப் பூரண சுயேச்சையை அவர் வழங்கினர். மீண்டும் கலகம் ஏற்படா வண்ணம் இருக்கப் பைரியஸ் (Piraeus), சலாமிஸ், சூனியம் (Suniam) ஆகிய துறைமுகங்களில் அவர் சிறு படைகளைத் தங்க வைத்தார்.

ஏனைய கிரேக்க நகரங்கள் யாவும், தங்களது சுயேச்சையையும், அதே சமயத்தில் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டும்

பல்வேறு வகைகளில் முயன்றன. கி. மு. 279–இல் ஈடோலியா (Aetolia) என்ற நகர அரசானது வட கிரீஸில் இருந்த பல குலங்களையும் ஒன்று கூட்டி ஈடோலியக் கூட்டுறவு என்ற (Aetolian League) நிறுவனத்தை ஏற்படுத்தியது. டெல்ஃபி நகரத்துப் பொதுவழிபாட்டொருமைக் கழகத்தில் சேர்ந்திருந்த பல நாடுகள் இக் கூட்டுறவில் சேர்ந்துகொண்டன. இதே சமயத்தில் பெலப்பொனீஷியத் தீபகற்பத்திலிருந்த பல நகரங்களும் ஒன்று சேர்ந்து அக்கீயக் கூட்டுறவு (Achaean League) என்ற ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தினர். ஸ்பார்ட்டா, ஈலிஸ் ஆகிய இரு நகரங்களைத் தவிர ஏனைய நகரங்களெல்லாம் இக் கூட்டுறவில் சேர்ந்தன. இந்த இரண்டு கூட்டுறவு நிறுவனங்களின் அரசியல் அமைப்பு முறையானது ஏறக்குறைய ஒரே மாதிரியாகவே இருந்தது. ஒவ்வொன்றிலும் தனிப்பட்ட உறுப்புநாடுகளுக்குப் பலவகையிலும் சுயேச்சை வழங்கப் பட்டது. உள்நாட்டு விவகாரங்களைப் பொறுத்தவரை அவைகள் பூரண சுயேச்சையை அனுபவிக்கலாம். வெளிநாட்டு விவகாரங்களில் ஒவ்வொரு நகரமும் தனது சுயேச்சையை விட்டுக் கொடுத்து. எல்லா நகரங்களின் பிரதிநிதிகளடங்கிய ஒரு பொதுச் சபையின் கட்டுப்பாட்டுக்கு உட்படுதல் வேண்டும். இப் பொதுச் சபையானது உறுப்புநாடுகள் அனைத்துக்கும் பொதுவான துறைகளில் சட்டங்களை இயற்றும். அதேபோன்று ஒவ்வொரு நகரமும் தனது படைகளைப் பொதுச் சபையிடம் ஒப்படைத்துவிடவேண்டும். அக் கூட்டுப் படைக்குத் தளகர்த்தர் ஒருவரை எல்லா நகரப் பிரதிநிதிகளும் சேர்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும். போர் தொடுத்தல், சமாதானம் செய்து கொள்ளுதல், பெரும் அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்தல் ஆகிய முக்கியமான காரியங்களை எல்லாம், நகரக் குடிமக்கள் அனைவரும் அடங்கிய பொதுமக்கள் சபையே தீர்மானிக்க வேண்டும். நிர்வாகத் தலைமையும், இராணுவ அதிகாரமும் இச் சபையினால் ஆண்டுக்கொரு முறை, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தளகர்த்தரிடம் ஒப்படைக்கப்பட்டன. கூட்டுறவில் சேர்ந்த நாடுகளிடையே பொதுவான அளவைகளும், நிறுவை எடைகளும், நாணயங்களும் புழக்கத்திலிருந்தன. தற்காலத்திய கூட்டரசு (Federation) போன்று இந்த நிறுவனங்கள் அமைய வில்லை யெனினும், இணைக் கூட்டரசு (Confederation) எனக் கருதத்தக்க முறையில் இவை அமைந்திருந்தன. ஏனெனில் மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் பெரிதும் வரையறுக்கப் பட்டிருந்தன. போர் தொடுத்தல், அமைதி ஏற்படுத்தல், நாணயங்கள், எடைகள், அளவைகள் ஆகியவை பற்றிய துறைகளில் மட்டுமே மைய அரசு தன் பிரியப்படி நடந்துகொள்ள

உரிமையளிக்கப்பட்டிருந்தது. பொருள் பலம், படைபலம் ஆகிய இவ்விரண்டுக்கும் மத்திய அரசாங்கமானது, ஏனைய உறுப்புநாடுகளின் அரசாங்கங்களையே நம்பியிருந்தது. பொதுக் காரியங்களுக்காக இங்ஙனம் தாமாகவே முன்வந்து கூட்டுறவு களை அமைத்துக் கொண்ட நிகழ்ச்சி கிரேக்க வரலாற்றில் இப்போதுதான் முதன்முதலில் நடைபெற்றது.

அக்கீயக் கூட்டுறவு நாளடைவில் நல்ல சீரும் சிறப்பும் பெற்று வளர்ந்தது. அதற்குக் காரணமாயிருந்தவர் சிசியோன் (Sicyon) நகரத்தைச் சார்ந்த அராட்டஸ் (Aratus) என்ற இளந் தலைவரே யாவர். இருபதாவது வயதிலேயே அவர் ஒருசில போர் வீரர்களின் உதவியைக் கொண்டு சிசியோனில் ஆட்சி புரிந்துவந்த சர்வாதிகாரியை வீழ்த்தி ஆட்சியைத் தாம் கைப் பற்றிக் கொண்டார். தமது நாவன்மையாலும், சாதுரியமான பேச்சு வார்த்தைகளாலும், ஏறக்குறையப் பெலப்பொனீஷிய நகரங்கள் அனைத்தையும் அவர் இக் கூட்டுறவில் சேர்த்தார். கூட்டுறவு நாடுகள் யாவும் சேர்ந்து அவரை ஆண்டுதோறும் தொடர்ந்து பத்தாண்டுகளுக்குப் படைத் தலைவராகத் தேர்ந் தெடுத்துவந்தன. ஒரு சமயம் அவர் நூற்றுக்கு மேற்பட்ட ஒருசில வீரர்களின் துணைகொண்டு இரகசியமாகக் கொரிந்து நகரம் விரைந்து ஏறுதற்கரிய செங்குத்தான கோட்டைச் சுவர் களில் ஏறி நகருக்குள் புகுந்து மாசிடோனியத் துருப்புகளைத் தோற்கடித்துக் கொரிந்தியர்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தந்தார். பைரியஸ் (Pireaus) நகரத்திற்குச் சென்று அங்கிருந்த மாசிடோனியப் படைவீரர்களுக்குக் கையூட்டு வழங்கித் தமக்குப் பணியும்படிச் செய்து ஆதென்ஸுக்கும் சுயேச்சையைப் பெற்றுத் தந்தார். அப்போதிருந்து ரோமானியர்களின் வருகை வரை ஆதென்ஸ் வியக்கத்தக்க முறையில் சுயாட்சியை அனுப விக்துவந்தது. கிரேக்க உலகத்தின் அறிவுத் தலைநகராய் அது விளங்கிவந்தது. படைபலத்தில் அஃது அவ்வளவு வலிமையுடையதாய் இல்லை எனினும் அதனுடைய கல்விக் கூடங்களும் கலைக் கழகங்களும் அதன் பெருமையை நிலைகுலை யாமல் காத்து வந்தன.

நாளடைவில் மேற்கூறப்பட்ட இரண்டு கூட்டுறவுகளும் ஒன்றோடொன்று போரிட்டுக் கொள்ள ஆரம்பித்தன. கி. மு. 220-இல் ஈடோலியக் கூட்டுறவு நாடுகள் ஸ்பார்ட்டா, ஈலிஸ் நகரங்களோடு சேர்ந்து, அக்கீயக் கூட்டுறவு நாடுகளோடும், மாசிடோனியாவோடும், ஒரு பெரும் போரைத் துவக்கின. இதைச் சமுதாயச்சண்டை என்றும் வரலாற்றுசிரியர் அழைப்பர்.

அராட்டஸ் என்ற தலைவர் மக்களின் சொத்துரிமையைக் காப்பதில் பெரிதும் அக்கறை காண்பித்தார். ஒவ்வொரு நகரத்திலும் இருந்த செல்வர்களின் கட்சியை அக்கியக் கூட்டுறவு ஆதரிக்க ஆரம்பித்தது. எனவே ஏழைக் குடிமக்கள், அரசியலில் தங்களுக்கு ஒருவித ஆதரவுமில்லை என்று குறை கூறலாயினர். வெகு தொலைவிலிருந்த கூட்டுறவுத் தலைநகருக்குச் சென்று வரப் போதிய பொருள் வசதியில்லாத காரணத்தால் நடைமுறையில் அவர்கள் கூட்டுறவு அரசியல் நடவடிக்கைகளில் சிறிதும் பங்கெடுத்துக் கொள்ள முடியாமலேயே போயிற்று. எனவே, அவர்கள் மத்திய ஆட்சி தங்களைச் சுரண்டுவதற்காகச் செல்வந்தர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு நிறுவனம் எனக் கூறத் தலைப்பட்டனர். இத்தகைய அதிருப்தியை ஒருசில ஆவேசப் பேச்சாளிகள் (Demagogues) வேண்டுமென்றே தூபம் போட்டு வளர்த்தனர். செல்வந்தர்களின் நிலங்கள் யாவும் பறிக்கப்பட்டு எல்லா மக்களிடையேயும் சமமாகப் பிரிக்கப்பட வேண்டுமென அப் பேச்சாளிகள் முழங்கியபோது நிலமற்ற ஏழைகள் அவர்களை ஆரவாரத்துடன் வரவேற்றனர். தங்களுடைய அரசாங்கங்களுக்கு விரோதமாக அவர்களைச் சதிசெய்து மாசிடோனியாவை ஆதரிக்கலாயினர்.

மாசிடோனியாவில் மூன்றும் ஆண்டிகோனஸ் என்பார் தமது உறவினரான பிலிப் என்ற இளவலுக்குப் பாதுகாப்பாளராக இருந்து நல்ல முறையில் ஆட்சிபுரிந்து வந்தார். பிலிப் தக்க வயதடைந்தவுடன் அவர் ஆட்சியிலிருந்து விலகிக் கொண்டார். கி. மு. 221-இல் ஐந்தாம் பிலிப் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தார். மெச்சத்தக்க வீரமும் திறமையும் அவரிடம் மருந்துக்குமில்லை. அராட்டஸ் என்ற தலைவரை அவர் நஞ்சிட்டுக் கொன்றார். அராட்டஸின் மருமகளை அவர் கற்பழித்தார். தம்முடைய புதல்வனையே தமக்கு விரோதமான சதி செய்வதாக ஐயுற்றுக் கொலை செய்தார். தமது ஐயப்பாட்டிற் கேதுவான அனைவரையும் அவர் ஒருசமயம் விருந்துக்கழைத்து நஞ்சு கலந்த மதுவினைக் கொடுத்துக் கொன்றார். மாசிடோனியாவின் பரப்பைப் பெருக்கியதோடு அதன் செல்வத்தைப் பெருக்குவதிலும் அவர் பெரிதும் ஊக்கம் காட்டினர். ஆனால் கி. மு. 215-இல் அவர் பெரிய தவறொன்றைச் செய்தார். நாளுக்குநாள் வளர்பிறைபோல் வளர்ந்துவரும் ரோமானியர்களுக்கஞ்சி அவர் கார்த்தேஜ் நகர அரசரான ஹானிபாலோடு ஒரு நட்புடன்பாட்டைச்செய்து கொண்டார். அதன் விளைவாக அடுத்தாண்டிலிருந்தே ரோமானியர்கள் மாசிடோனியா மீது படையெடுக்க ஆரம்பித்தனர். இங்ஙனம் கிரீஸ், ரோமானியர்களின் ஆட்சிக்கு உட்படும் காலம் தொடங்கியது.

ஸ்பார்ட்டாவைப் பொறுத்த வரையில் ஆதென்ஸைப் போலவே அதுவும் சுயேச்சையாய் வாழ்ந்து வந்தது. கி. மு. 272-இல் பிர்ரஸ் (Pyrrhus) என்ற பெரும் தளகர்த் தருடைய படைகளை வென்று விரட்டிய பின் மாசிடோனியர் களின் பிடியிலிருந்து ஸ்பார்ட்டா விடுபட்டது. இங்ஙனம் அது வெளிநாட்டுப் பகைவர்களிடமிருந்து தன்னைக் காத்துக்கொண்ட போதிலும் அதற்குள்ளாகவே தோன்றி வளர்ந்த ஒருசில குறைபாடுகள் அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் தடையாயிருந்தன. நிலங்கள் குடும்பத்திற்கு மட்டுமே உரிமையுடையனவாக இருக்க வேண்டும் என்றும், அதைப் பிரிப்பதோ விற்பதோ கூடாது என்றும் லிக்கர்கஸ் என்பவரால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள் நாளடைவில் கைவிடப்பட்டன. ஸ்பார்ட்டர்கள் பலர் தனிப்பட்ட முறையில் நிலங்களை வாங்க ஆரம்பித்தனர். கி. மு. 244-இல் லக்கோனியாவில் 70,000 ஏக்கர் நிலங்கள் 100 குடும்பங்களுக்கு மட்டுமே சொந்தமாயிருந்தன. 700 பேர் மட்டுமே குடியுரிமையை அனுபவித்துவந்தனர். அவர்களும் கூடப் பொதுப்பந்தியில் உணவருந்தும் பழக்கத்தை விட்டுவிட்டனர். ஆரம்பத்தில் குடியுரிமையைப் பெற்றிருந்த ஏராளமான பேர்கள் ஏழ்மையின் காரணமாக அவ்வுரிமையை இழந்தனர். எனவே அத்தகையோர் தங்களது கடன்கள் யாவும் ஒழிக்கப்பட வேண்டுமெனவும், நிலங்கள் மீண்டும் மக்களிடையே சமமாகப் பிரிக்கப்படவேண்டு மெனவும் கிளர்ச்சி செய்யலாயினர். கி. மு. 242-இல் ஆண்ட நான்காம் அஜிஸ் (Agis iv) எனும் ஸ்பார்ட்ட மன்னர் இக் கிளர்ச்சிகளுக்குச் செவிசாய்த்துக் கடன்களையெல்லாம் ரத்து செய்யவும், நிலங்களை மறுவினியோகம் செய்யவும் முன்வந்தார். தங்கள் நிலங்களை அடகு வைத்திருந்த பிரபுக்கள் கடன்கள் ரத்து செய்யப்படுவதை ஆதரித்தனர். ஆனல் ஏனைய சீர்திருத் தங்களை அவர்கள் வன்மையாக எதிர்த்தனர். லியோனிடாஸ் என்ற இரண்டாவது ஸ்பார்ட்ட மன்னரின் தூண்டுதலால் அஜீஸ் கொல்லப்பட்டார். அவரது நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு மக்களிடையே பிரித்துத் தரப்பட்டன. சிறிது நாள் கழித்து லியோனிடாஸ் விரோதமாய்க் கிளர்ச்சிகள் எழுப்பினதால் அவர் நாடு கடத்தப்பட்டார். கிளியாம்புரோட்டஸ் (Cleombrotes) என்பார் ஆட்சியைக் கைப்பற்றினர். அவர் லியோனிடாஸின் மகளான சிலோனிஸ் (Chilonis) என்பாளின் கணவர். லியோனி டாஸ் நாடு கடத்தப்பட்டபோது சிலோனிஸ் தமது கணவரை விட்டு விட்டுத் தந்தையுடன்போய் வசிக்கலானர். சிறிது காலம் கழித்து லியோனிடாஸ் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிக் கிளியாம்புரோட்டஸை நாடு கடத்தினர். அச் சமயம் சிலோனிஸ் தமது கணவருடன் புறப்பட்டுச் சென்று அவரது துன்பங்களில்

பங்கு கொண்டார். கொல்லப்பட்ட அஜிஸ் என்ற மன்னரின் ஏராளமான சொத்துகளை அடைய வேண்டி அவரது விதவை மனைவியைத் தமது மகன் கிளியோமீனஸ் (Cleomenes) என் பாருக்கு மணமுடித்துவைத்தார். இதன் விளைவாகக் கிளியோ மீனஸ், அஜீஸ் மன்னரின் கொள்கைகளை நேசிக்க ஆரம்பித் தார். லியோனிடாஸுக்குப் பின் அவர் பட்டத்திற்கு வந்த போது, அஜீஸ் செய்த சீர்திருத்தங்களை அவர் மீண்டும் நாட்டில் புகுத்தினர். சுயநலமிக்க செல்வந்தர்களடங்கிய ஈஃபர்கள் குழுவை (Ephorate) அவர் அறவே ஒழித்தார் தம்மை எதிர்த்த 14 பேர்களைக் கொன்றும், 80 பேர்களை நாடுகடத்தியும் அவர், தம் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டார். அவரது ஆணை யின்படிக் கடன்கள் யாவும் ரத்து செய்யப்பட்டன. நிலங்க ளெல்லாம் மீண்டும் சுதந்திரக் குடிமக்களிடையே பிரித்து வழங்கப்பட்டன. லூக்கர்கஸ் காலத்துக் கட்டுப்பாடு மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இத்தகைய சீர்திருத் தங்களைப் பெலப்பொனீஷ் முழுவதிலும் பரப்ப விரும்பிய கிளியோமீனஸ், பெரும்படையுடன் புறப்பட்டுச் சென்று பல நகரங்களை வென்றார். ஆர்காஸ், கொரிந்து போன்ற பெரும் நகரங்கள் கூட அவரைத் தங்களது விடுதலை வீரராக ஏற்றுக் கொண்டன. பியோஷியாவிலும் அவரது சீர்திருத்தக் கருத் துகள் பரவிக் கடன்கள் யாவும் ரத்து செய்யப்பட்டன. ஏழை களுக்கு நிதியுதவி யளிக்கப்பட்டது. மெகலாப் பொலிஸ் நகரத் திலும் ஏழைகளுக்குத் தங்கள் செல்வத்தைப் பிரித்துத் தரும்படிப் பணக்காரர்கள் வற்புறுத்தப்பட்டனர். கிளியோமீனஸ் இறுதியில் அக்கீயாவையும் தாக்கி அராட்டஸ் எனும் தலைவரைத் தோற்கடித் தார். இதைக் கண்ட உயர்குடிப் பிரபுக்கள் யாவரும், தங்கள் சொத்துக்கு ஆபத்து வந்ததை யுணர்ந்து நடுங்கினர். அராட் டஸ் மாசிடோனியாவின் உதவியை நாடினர். மாசிடோனிய மன்னர் ஆண்டிகோனஸ் ஒரு படையுடன் புறப்பட்டு வந்து செல்லாஷியா (Sellasia) என்னுமிடத்தில் கிளியோமீனஸைப் புறங்காட்டி ஓடும்படிச் செய்து பணக்காரர்களின் ஆட்சியை மீண்டும் ஸ்பார்ட்டாவில் நிறுவினர். கிளியோமீனஸ் எகிப்துக்கு ஓடித் தாலமியின் உதவியை வேண்டியும் பலன் இல்லை. எனவே அவர் தற்கொலை செய்துகொண்டு மாண்டு போனர்.

ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் ஏற்பட்ட வகுப்புச் சண்டையானது தொடர்ந்து நடைபெற்றுவந்தது. கிளியோ மீனஸ் இறந்து ஒரு தலைமுறைக்குப் பின்னர் பணநாயக ஆட்சி ஸ்பார்ட்டாவிலிருந்து அகற்றப்பட்டது. ஆனால் அக் கீயக் கூட்டுறவின் தலைவரான பிலோப்போமான் (Philopomen)

என்பார் லக்கோனியா மீது படையெடுத்து மீண்டும் பணக்கார ஆட்சியை ஆங்கு நிறுவினர். ஆனால் கி. மு. 207-இல் ஸ்பார்ட்ட மக்கள் பணக்காரர் ஆட்சியை ஒழித்து நபிஸ் (Nabis) என்ற சர்வாதிகாரியைத் தேர்ந்தெடுத்தனர். செமிட்டிக் இனத்தைச் சேர்ந்த நபிஸ், அடிமைகளான கெட்டவர்களுக்கும் விடுதலையளித்தார். எல்லா மக்களுக்கும் சமமாகக் குடியுரிமை வழங்கினர். தம்மை எதிர்த்த செல்வந்தரின் பொருளை எல்லாம் கைப்பற்றிக் கொண்டு அவர்களையும் கொன்றார். ஏழை மக்களின் காவலன் என்ற அவர்தம் புகழ் கிரீஸெங்கும் பரவியது. ஆர்காஸ், மெஸானியா, ஈலிஸ், ஆர்க்கேடியாவின் ஒரு பகுதி ஆகியவற்றை அவர் எளிதில் கைப்பற்றினர். ஏனெனில் அவர் சென்றவிடமெல்லாம் ஏழைகள் அவருக்குத் துணை செய்ய முன் வந்தனர். அவரும் தாம் கைப்பற்றிய இடங்களிலெல்லாமிருந்த பெரிய பண்ணைகளைத் தேசியமயமாக்கி அவைகளை ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுத்தார். அதோடு ஏழைகளின் கடன்களையும் ரத்து செய்தார். இவற்றையெல்லாம் கண்ட அக்கீயக் கூட்டுறவு அவரை அகற்ற ரோமானியரின் உதவியை நாடியது. ரோமானியரும் அந்த அழைப்பை ஏற்று, பிளேமினினஸ்(Flamininus) எனும் தளகர்த்தரைக் கிரீஸுக்கு அனுப்பிவைத்தனர். அவரை எதிர்த்து நபிஸ் கடுமையாகப் போர் புரிந்து அவரை ஏறக்குறையத் தோற்கடித்துவிட்டார். அவரது வீரத்தைக் கண்ட ரோமானியத் தளகர்த்தர் ஒரு தற்காலிக உடன்பாட்டிற்கிசைந்தார். சிறை செய்யப்பட்ட செல்வந்தர்களை விடுவிக்க நபிஸ் ஒப்புக் கொண்டார். நபிஸின் சுயேச்சையை ரோமானியரும் ஏற்றுக் கொண்டு நாடு திரும்பினர். இச் சமயத்தில் ஈடோலியக் கூட்டுறவினுல் தூண்டப்பெற்ற ஒருவரால் நபிஸ் கொல்லப்பட்டார். நான்காண்டுகள் கழித்து அக்கீயக் கூட்டுறவின் தலைவரான பிலோப்போமான் என்பார் மீண்டும் ஸ்பார்ட்டாவின் மேல் படையெடுத்துப் பணக்காரர்களின் ஆட்சியை நிலைநாட்டினர். லைக்கர்களின் கட்டுப்பாட்டு முறைகள் ஒழிக்கப்பட்டன. நபிஸின் ஆதரவாளர்கள் 3,000 பேர் அடிமைகளாக விற்கப்பட்டனர். இவ்வாறு ஸ்பார்ட்டாவில் ஏற்பட்ட மக்கள்புரட்சி ஒடுக்கப்பட்டது. ஆனால் அதன்பின் கிரேக்க வரலாற்றில் ஸ்பார்ட்டா தன் முக்கியத்துவத்தை இழந்தது.

ஏனைய கிரேக்க நகரங்களிலெல்லாம், ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் வகுப்புப்போர் பரவலாக நடைபெற்று வந்தது. ஒரு வகுப்பார் இன்னொரு வகுப்பாரை வெல்லுவதும், வெல்லப்பட்ட வகுப்பாரை நாடுகடத்துவதும், நாடு கடத்தப்

பட்ட வகுப்பாரின் சொத்துகள் பறிமுதல் செய்யப்படுவதும், சிறிதுகாலம் கழித்து நாடு கடத்தப்பட்டவர்களே மீண்டும் பதவிக்கு வருவதும், அவர்கள் தங்களே நாடுகடத்தியவர்களே வன்மையாகப் பழிதீர்த்துக் கொள்வதும் எல்லாக் கிரேக்க நகரங்களிலும் சாதாரணமாக நடைபெற்றுவந்த நிகழ்ச்சிகளாகும். இந்த வகுப்புக் கலவரங்களால் தொழிலும் வியாபாரமும் நசிந்தன. மக்களில் பலர் தங்கள் நகரங்களேவிட்டு வேறு நாடுகளுக்கு ஓடிப்போய் விட்டனர். இத்தகைய உள்நாட்டுக் கலவரங்களே ரோமானியர்கள் என்ற அந்நியர்களின் வருகைக்குப் பெரிதும் வழிவகுத்தன எனலாம்.

(2) ரோமானியர் வருகை

கிரேக்க நாடு பலவகையிலும் தனது பண்டைய சீரையும் சிறப்பையும் இழந்து நாளடைவில் நலியத் தொடங்கிற்று. ஆங்காங்கே இருந்த அடர்ந்த காடுகள் யாவும் அழிக்கப்பட்ட தன் காரணமாக மழை நீரும் வெள்ளமும் வளம் பொருந்திய மண்ணை அரித்துக் கடலிற் கொண்டுபோய்ச் சேர்த்தன. அதனால் நாட்டில் மண்வளம் குறைந்தது. அதன் விளைவாக விளைபொருள் உற்பத்தியும் குறைந்தது. கிரேக்கக் கிராமங்கள் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டன. கிரேக்க நாட்டுச் சுரங்கங்களும் நாளடைவில் வறண்டுபோயின. திரேஸ் நாட்டுச் சுரங்கங்களை மாசிடோனியர் கைப்பற்றிக் கொண்டனர். எனவே கிரீஸின் உலோக வளமும் சுருங்கிற்று. பஞ்சத்தாலும் பிணியாலும் குடிமக்கள் தொகையும் குறைந்து கொண்டே போயிற்று. ஆனால் அடிமைகளின் தொகை அளவுக்கு மீறி அதிகமாயிற்று. அவரை வைத்துப் பராமரிக்க முடியாத நிலையைக் கிரேக்க அரசுகள் எய்தின. எங்குப் பார்த்தாலும் ஒழுக்கத்தில் பெரிதும் இழுக்கம் காணப்பட்டது. நாட்டுப் பற்றுக் குறைந்தது. நாட்டுப்பற்று மிகுந்த குடிமக்கள் படைகளுக்குப் பதிலாகக் கூலிப் படைகளே எங்குப் பார்த்தாலும் பயன்படுத்தப்பட்டன. வகுப்புக் கலவரத்தால் நாட்டின் ஆற்றல் கரைந்து கொண்டே சென்றது. இங்ஙனம் நாளாவட்டத்தில் கிரீஸ் நலிவடைந்த காரணத்தால்தான் இறுதியில் அது அந்நியர்களான ரோமானியர்களின் கைகளில் சிக்கியது எனலாம். எந்தப் பெரிய நாகரிகத்தையும் மற்றொரு நாகரிகம் தோற்கடிக்க முடியாது. நாகரிகங்கள் புறச்சக்திகளால் தோற்கடிக்கப்படுகின்றன என்பதைவிட அவைகள் தற்கொலைகள் செய்து கொள்கின்றன என்பதே மிகப் பொருத்தமாகும். அதாவது ஒரு நாகரிகம் தன்னகத்தே ஏற்படுகின்ற குறைபாடுகளினால் தன்னைத்தான் பலவீனப்

படுத்திக் கொள்வதால்தான் அந்நிய நாகரிக மொன்றிற்கு அடி பணிகிறதேயொழிய மற்றபடிக் குறைவில்லா நிறைவுடன் கூடிய ஒரு நாகரிகச் சமுதாயத்தை வேரொரு சமுதாயம் வெல்லு தலில்லை என்பது தெள்ளிதின் அறிந்த உண்மை.

மேற்கூறியவாறு கிரேக்க நாடுகளும், அவற்றைச் சார்ந்த குடியேற்ற நாடுகளும் நாளுக்குநாள் நலிவடைந்து கொண்டி ருந்த அதே நேரத்தில் இத்தாலியில் டைபர்நதிக் கரையில் ரோமானியர்கள் எனும் ஒரு முரட்டு வகுப்பினர் சிறிது சிறி தாகத் தங்கள் வலிமையைப் பெருக்கிக் கொண்டே வந்தனர். இத்தாலியின்கண் இருந்த கிரேக்கக் குடியேற்றங்களை அவர்கள் முதலில் கொஞ்சம் கொஞ்சமாகக் கைப்பற்றினர். மேலும் இத்தாலியில் வாழ்ந்து வந்த சுதேசிகள் தெற்கு இத்தாலியைக் கைப்பற்ற முயற்சி செய்தனர். அவர்களைத் தடுக்க அங்கிருந்த கிரேக்கக் குடியேற்ற நகரங்கள் ரோமானியரின் உதவியை நாடின. அங்ஙனம் உதவி பெற்ற நாடுகள் நாளடைவில் ரோமானியர்களின் ஆளுகைக்கு உட்பட்டன. ஆனல் ரோமானி யரின் ஆதிக்கத்தின் கீழ் வரவிரும்பாத ஒரு சில கிரேக்க நகரங்கள் கிரீஸ்லிருந்த தங்கள்தாய்நகரங்களுக்கு விண்ணப்பம் செய்து கொண்டு தங்களை ரோமானியரிடமிருந்து காப்பாற்ற வேண்டிக் கொண்டன.

டாரஸ் (Taras) அல்லது டேரண்டம் (Terentum) என்ற கிரேக்கக் குடியேற்ற நகரம் ரோமானியர்களுக்கெதிராகத் தனக்கு உதவி செய்யும்படி எப்பைரஸ் என்ற நாட்டு மன்ன ருக்கு வேண்டுகோள் விடுத்தது. எப்பைரஸின் தலையாய குலத் தவரான மலாசியர்களின் மன்னராகப் பிர்ரஸ் அரியணை ஏறினர். அவர் தம்மை அக்கீலஸ் (Achilles) என்ற புராண வீரரின் வழி வந்தவர் என்று கூறிக்கொண்டு மக்களிடத்தே மிகவும் செல் வாக்குடன் திகழ்ந்தார். டாரஸ் நகரமக்கள் அவரிடம் முறை யிட்டபோது மேலைத் திசையில் கிரேக்க நாகரிகத்திற்கு எதிராக முளைத்திருக்கும் ரோமானியரை ஒழிக்க ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்ததென எண்ணி அதை ஏற்றார். கி.மு. 281-இல் 25,000 காலாட்படைவீரர்களுடனும், 3,500 குதிரைப் படைவீரர்களு டனும், 20 யானைகளுடனும் புறப்பட்டு அவர் இத்தாலி சென்றார். அங்கே ஹெராக்ளியா (Heracleia) என்னுமிடத்தில் ரோமானியரை வென்றார். ஆனல் ஏராளமான வீரர்களை அவர் அப் போர்க்களத்தில் இழந்துவிட்ட காரணத்தினல்அதை அவர் ஒரு பயன்ற்ற வெற்றி (Pyrrhie victory) எனக் கருதினர். ரோமானியர்கள் அவருடன் ஒரு தற்காலிக உடன்பாடு செய்து

கொண்டனர். அவரவர் கைப்பற்றிய சிறைக் கைதிகளை அவரவர் விடுவிக்க வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் ரோமானியர்களின் மேல்மன்றமான செனட், அப்பையஸ் கிளாடியஸ் (Appius Claudius) என்பவரால் தூண்டப்பட்டுச் சமாதான உடன்பாட்டை ஏற்க மறுத்தது. எனவே மீண்டும் போர் தொடங்கிற்று. ஆஸ்குலம் (Asculum) எனுமிடத்தில் பிர்ரஸ் மற்றொரு வெற்றியை அடைந்தார். ஆனால் அதிலும் அவர் ஏராளமான வீரர்களை இழந்தார். அதன்பின் அவர் மனம் உடைந்து சிசிலித் தீவுக்குச் சென்றார். சிசிலியிலிருந்த கார்த்தஜீனியர்களை விரட்டிவிடவேண்டுமென்பது அவரது நோக்கம். ஆனால் சிசிலியக் கிரேக்கரும் அவருக்குத் தக்கவாறு உதவ முன்வரவில்லை. மூன்றுண்டுகள் அங்குப் போரிட்ட பின் அவர் மனமுடைந்து தன் நாடு திரும்பினர். போகும் வழியில் கி. மு. 275-இல் இத்தாலியிலுள்ள பெனிவெண்டம் (Beneventum) எனுமிடத்தில் அவர் ரோமானியர்களால் தோற் கடிக்கப்பட்டார். ரோமானியர்களின் இலேசான படை அணி வகுப்பு முறையானது கிரேக்கர்களின் கனமான பேலங்ஸ் என்ற அணி வகுப்பு முறையைக் காட்டிலும் சிறந்ததென்பது இப் போர்க்களத்தில் நன்கு நிரூபிக்கப்பட்டது. பிர்ரஸ், எப்பைரஸிற்குத் திரும்பிய பின் கி.மு. 272-இல் மாண்டார். அதே ஆண்டில் டாரஸ் அல்லது டேரண்டம் ரோமானியருக்கு அடி பணிந்தது. அதன்பின் எட்டாண்டுகள் கழித்து ரோமானியர் கார்த்தஜீனியருடன் ஒரு பெரும் போராட்டம் நடத்தினர். அதில் வெற்றி பெற்று, கார்த்தஜீனியர்களிடமிருந்து சார்டீனியா, கார்சிகா, சிசிலியின் ஒரு பகுதி ஆகியவற்றைப் பெற்றனர். கார்த்தஜீனியர்களுக்கு உதவி செய்த சிராக்யூஸின் மீது படையெடுத்து அவர்கள் அதன் செல்வத்தைச் சூறையாடினர். கி. மு. 210-இல் அவர்கள் சிசிலி அனைத்தையும் பிடித்துக் கொண்டனர். ரோமானியர்களின் தானியக் களஞ்சியமாக அது மாற்றியமைக்கப்பட்டது.

ரோமானியர்கள் கிரீஸில் தலையிடுதல்

ரோமானியர்களின் வளர்ச்சிக்கு அவர்களது எதிரிகளின் தவறுகள் உறுதுணையாய் அமைந்தன. கி. மு. 230-இல் இலீரியாவின் தலைநகரான ஸ்கோர்டாவுக்கு (Scorda) இரண்டு ரோமானியத் தூதுவர்கள் வந்தனர். ரோமானியக் கப்பல்களை இலீரிய நாட்டுக் கொள்ளைக்காரர்கள் கொள்ளையடித்ததைக் கண்டித்து அதற்குரிய இழப்பீட்டைப் பெறுவதற்கே அவர்களை ரோமானிய அரசாங்கம் அனுப்பிவைத்தது. இலீரிய நாட்டு ராணியாகிய டியூட்டா (Teuta) என்பவர் கடலில் கொள்ளை

யடிக்கும் தனது குடிமக்களைத் தடுக்கின்ற வழக்கம் தமக்கில்லை யென்று கூறி இழப்பீடெதையும் கொடுக்க மறுத்தார். இதைக் கேட்ட ரோமானியத் தூதுவர் ஒருவர், இலீரியா மீது ரோமானியா படையெடுக்கக்கூடுமென எச்சரித்தார். அங்ஙனம் எச்சரித்த தூதுவரை டியூட்டார் உடனே கொன்றுவிடும்படி ஆணையிட்டார். இதையறிந்த ரோமானியர் வெகுண்டு இலீரிய நாட்டின் மீது கி. மு. 229-இல் படையெடுத்தனர். கார்கிரா, எபிடாம்னஸ் முதலிய கிரேக்கக் குடியேற்றங்களை அவர்கள் முதலில் வசம் செய்துகொண்டனர். இலீரியக் கடற்கொள்ளைக்காரர்களால் அவதியுற்ற ஆதென்ஸ், கொரிந்து போன்ற கிரேக்க நகரங்களும் கூட ரோமானியர்களைத் தங்களை விடுவிக்க வந்த வீரர்கள் எனப் போற்றி வரவேற்றன. இஸ்துமிய விளையாட்டுகள் போன்ற தேசிய விழாக்களில் ரோமானியர்கள் பங்குகொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

கி. மு. 216-இல் ஹானிபால் என்ற கார்த்தஜீனியத் தளகர்த்தர் ரோமானியப் படைகளைக் கன்னி (Cannae) என்னும் போர்க்களத்தில் தோற்கடித்துவிட்டு ரோம்நகரை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தார். இங்ஙனம் ரோம் ஒரு பெரிய ஆபத்தில் சிக்கிக்கொண்டிருந்த போது மாசிடோனிய மன்னர் ஐந்தாம் பிலிப், ஹானிபாலோடு ஒரு நட்புடன்பாட்டைச் செய்து கொண்டு இத்தாலி மீது படையெடுக்க ஏற்பாடுகளைச் செய்தார். (214 கி.மு.) நாபாக்டஸ் எனுமிடத்தில் கிரேக்கர்கள் ஒரு மாநாடு நடத்திப் பிலிப்புக்கு எல்லாக் கிரேக்க நகரங்களும் ஒருமுகமாக உதவி செய்ய வேண்டுமெனத் தீர்மானித்தனர். பொது எதிரியை முறியடிப்பதில் கிரேக்கர்கள் தங்கள் சொந்தப் பூசல்களை மறந்து ஒற்றுமையுடன் நிற்கவேண்டுமென மாநாடு தீர்மானித்தது. ஆனால் பிலிப் மன்னர், ஹானிபாலுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில், கார்த்தஜீனியர்கள் போரில் தாங்கள் வெற்றி பெற்றால் கிரீஸ் முழுவதையும் வென்று அவரது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரப் பிலிப்புக்குத் தாங்கள் உதவி செய்வதாக வாக்களித்திருந்தனர். இதை எவ்வாறோ அறிந்துவிட்ட கிரேக்க நகரங்கள் மாசிடோனியாவுக்கெதிராக ரோமுடன் நேச ஒப்பந்தங்கள் செய்துகொள்ளலாயின. மற்றும் பல வகையிலும் அவைகள் பிலிப்புக்குத் தொந்திரவு கொடுத்ததால் அவரது இத்தாலியப் படையெடுப்பு காலவரையறையின்றி ஒத்திப்போடப் பட்டது. ஹானிபாலை ஒடுக்கவேண்டுமெனக் கங்கணம் கட்டிக் கொண்ட ரோம், கி. மு. 205-இல் பிலிப்போடும் ஒரு நட்புடன் படிக்கையைச் செய்துகொண்டது. மூன்றாண்டுகளுக்குப் பின், சாமா (Zama) போர்க்களத்தில் ஹானிபால் முற்றிலும் தோற்

கடிக்கப்பட்டார். இதைக் கேட்ட எகிப்து, ரோட்ஸ், பெர்காமம் (Pergamum) ஆகிய நாடுகள் மாசிடோனியாவின் பிடியிலிருந்து தங்களை விடுவிக்கும்படி ரோமானியரை வேண்டிக்கொண்டன. ரோமானியரும் அதற்கிசைந்து மாசிடோனியா மீது படையெடுத்தனர். ஒருபுறம் ரோமானியராலும், மறுபுறம் கிரேக்க நகரங்கள் அனைத்தினாலும் எதிர்க்கப்பட்ட பிலிப், வலையில் சிக்கிய மான் போல் பதறி எவ்வாறேனும் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள எண்ணிப் பல வஞ்சகச் செயல்களில் ஈடுபட்டார். இருப்பினும் கி. மு. 197-இல் சைனே செபாலி (Cyno sephalae) என்னுமிடத்தில் டைட்டஸ் குயிங்டியஸ் பிளெமினினஸ் (Titus-Quinctius-Flamininus) என்ற ரோமானியத் தளகர்த்தரால் முற்றிலும் தோற்கடிக்கப்பட்டார். மாசிடோனியாவும்–ஏன், கிரீஸ் அனைத்துமே ரோமானியகர்களுக்கு அடிபணியும் தருணத்தில் இருந்தன. ஆனால் பிளெமினினஸ், ஏராளமான பொருளை இழப்பீடாகப் பெற்றுக்கொண்ட பின், பிலிப்பை மீண்டும் ஆட்சி புரியும்படி விட்டுவிட்டு நாடு திரும்பினர். வடக்கேயிருந்த காட்டுமிராண்டிகளின் படையெடுப்புக்கு ஒரு தடையாக மாசிடோனியா விளங்கவேண்டுமென்ற காரணத்தினாலேயே பிளெமினினஸ் பிலிப்பை மன்னித்தார். அதே சமயம் கொரிந்தில் நடைபெற்ற இஸ்துமியா விழாவிற்கு அவர் சென்று ஏற்கெனவே சுதந்திரமாகயிருந்த கிரேக்க நகரங்கள் அனைத்திற்கும் ரோம் சுதந்திரம் வழங்கியுள்ளதாக அறிவித்தார். அங்குக் குழுமியிருந்த கிரேக்க நகரப் பிரதிநிதிகளுக்குத் தங்கள் காதுகளையே தங்களால் நம்ப முடியவில்லை. மீண்டும் அவ்வறிவிப்பை படிக்கும்படி அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் பிளெமினினஸ், மீண்டும் அவ்வறிவிப்பை உரக்கப் படிக்கச் செய்தார். அதைக் கேட்ட கிரேக்கர்கள் விண்ணே அதிரும்படி ஆரவாரம் செய்தனர். ஆனால் சிலர் மட்டும் ரோமானியத் தளகர்த்தர் வெறும் வாய்ப் பந்தல் போடுகிறார் என்று ஐயுற்றனர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக, பிளெமினினஸ் தமது துருப்புகளை யெல்லாம் மீண்டும் இத்தாலிக்கே திரும்ப அழைத்துச் சென்று விட்டார் (கி. மு. 194). தங்களை வாழ்விக்க வந்த விடுதலை வீரர் என்று கிரீஸ் முழுவதும் பிளெமினினஸை வாயாரப் புகழ்ந்தேத்தியது.

இத்தகைய ஏற்பாடுகளை ஒரு சில கிரேக்கர்கள் வரவேற்க மறுத்தனர். முக்கியமாக ஈடோலியர்கள் இதனால் பெரிதும் மனக் கசப்புற்றனர். ஏனெனில் ரோமானியர்களால் விடுவிக்கப்பட்ட ஒரு சில நகரங்கள் ஈடோலியர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்துவந்தன. அவற்றை மீண்டும் பெற விரும்பிய

ஈடோலியர்கள், ரோமானியருக்கெதிராகத் தங்களுக்கு உதவி செய்யுமாறு மூன்றும் ஆண்டியாக்கஸ் என்ற மன்னரிடம் முறையிட்டுக்கொண்டனர். அதே சமயத்தில் ஆண்டியாக்கஸின் ஆதிக்கத்துக்குஞ்சிய பெர்காமம் (Pergamom), லாம்பஸ்கஸ் (Lampascus) ஆகிய இருநகரங்களும் ஆண்டியாக்கஸுக்கு விரோதமாகத் தங்களுக்கு உதவி செய்யும்படி ரோமானியர்களிடம் முறையிட்டுக்கொண்டன. ரோமானிய செனட், அவர்களது அழைப்பை ஏற்று, பப்ளியஸ் ஸிப்பியோ (Publius Scipio) என்ற தங்களது ஒப்பற்ற தளகர்த்தர் வசம் ஒரு படையை அனுப்பியது. அவர் ஆண்டியாக்கஸின் படைகளை மெக்னீஷியா (Magnesia) எனுமிடத்தில் தோற்கடித்தார். அதன்பின் அவர் வடக்கே சென்று கால் (Gaul) இனத்தவரை வென்றார். மத்தியத் தரைக் கடலைச் சுற்றியும் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்டிவிட்டு ரோமானியர்கள் இத்தாலிக்குத் திரும்பினர். அங்ஙனம் திரும்பும்போது ஏராளமான சொத்துகளையும் பொன்னையும் வெள்ளியையும் அழகிய சிலைகள் போன்ற கலைப் பொருட்களையும் ரோமானியர்கள் கூடவே எடுத்துக்கொண்டு சென்றுவிட்டனர். பிளெமினினஸ், ரோம் நகரையடைந்த போது மூன்று நாட்கள் வரை தாம் கொண்டுவந்த கொள்ளைப் பொருட்களையெல்லாம் ஊர்வலமாக எடுத்துச்சென்று மக்களின் நன்மதிப்பைப் பெற்றார். இங்ஙனம் தங்கள் நாட்டிலிருந்து செல்வத்தையெல்லாம் ரோமானியர்கள் சுரண்டிக்கொண்டு போய்விட்டதை கிரேக்கர்கள் அனைவரும் வெறுத்தனர். சுதந்திரம் வழங்குவதாக அறிவித்துவிட்டு, அதற்குப் பதிலாகத் தங்களை ஏமாற்றித் தங்கள் செல்வத்தையெல்லாம் ரோமானியர்கள் கொள்ளையடித்துச் சென்றதாக அவர்கள் உணர்ந்தனர். விரைவிலேயே கிரேக்கர்கள் தமக்குள் சச்சரவிட ஆரம்பித்தனர். எல்லைத் தகராறுகளைத் தீர்த்துவைக்க அவர்கள் ரோமானிய செனட்டிடம் முறையிட்டனர். ஒவ்வொரு நகரமும் தான் கூறுவதே சரியென செனட்டிடம் வாதிட்டது. ஆனால் யார் கூறுவது சரி எனத் தீர்மானிக்க செனட் மத்தியஸ்தக் குழுவினர் அளித்த தீர்ப்புகள், பல கிரேக்க நகரங்களுக்கு ஏற்புடையனவாயில்லை. ரோமானிய அடிமைத் தளையில் தாங்கள் சிக்கிக்கொண்டதாகக் கிரேக்கர்கள் உணர்ந்தனர். ஆனால் கிரேக்கர்களிடையே ஒரு சிலர் கிரேக்க நகரங்களுக்குக் கொடுக்கப்பட்ட சுதந்திரத்தை மீண்டும் பறித்துக் கொண்டு வரவேண்டுமென ரோமானியரை வேண்டிக்கொண்டனர்.

கி.மு. 179-இல் ஐந்தாம் பிலிப் இறந்த பின், அவரது மூத்த மகனான பெர்ஸியஸ் (Perseus) என்பார் பட்டத்திற்கு வந்தார். மாசிடோனிய இளைஞர்கள் போர் செய்யத் துடித்துக்கொண்

டிருந்தனர். நான்காம் செல்யூக்கஸோடு பெர்ஸியஸ் ஒரு நேச ஒப்பந்தத்தைச் செய்துகொண்டு அவரது மகளையும் திருமணம் செய்துகொண்டார். ரோட்ஸ் நகரம், பெர்ஸியஸோடு ஒரு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது. ரோமானியர்களிடமிருந்து தங்களை விடுவிக்கக் கூடியவர் பெர்ஸியஸ் ஒருவரே எனக் கிரேக்கர்கள் அனைவரும் களிப்புக்கடலில் ஆழ்ந்தனர். பெர்காமம் நகர மன்னர் இரண்டாம் யூமனஸ் (Eumenus) என்பார் தமது சுயேச்சைக்கு மாசிடோனியாவிடமிருந்து ஆபத்து வரக்கூடும் எனப் பயந்து தமக்கு உதவும்படி ரோமிடம் முறையிட்டுக் கொண்டார். ரோமானிய சென‌ட்டைத் தூண்டி மாசிடோனியாவை ஒடுக்குவதற்காக எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும்படி அவர் ஏற்பாடு செய்தார். ரோமிலிருந்து அவர் திரும்பி வந்த போது அவரது எதிரிகள் அவரோடு சச்சரவிட்டுப் படுகாயப்படுத்திவிட்டனர். பெர்ஸியஸ் என்பாருடைய சூழ்ச்சியால்தான் யூமனஸ் தாக்கப்பட்டிருக்கவேண்டுமென ரோமானியர்கள் கருதினர். அதனை ஓர் காரணமாக வைத்து ரோம், மாசிடோனியா மீது மூன்றும் முறையாகப் படையெடுத்தது. எப்பைரஸ், இலீரியா ஆகிய இரு நாடுகள் மட்டுமே பெர்ஸியஸுக்கு உதவ முன்வந்தன. ஏனைய கிரேக்க நாடுகள் எல்லாம் இரகசியமாகத் தங்களது ஆதரவைத் தெரிவித்தனவே ஒழிய பெர்ஸியஸுக்கு உருப்படியான உதவியொன்றையும் செய்யவில்லை. கி. மு. 168-இல் எமிலியஸ் பாலஸ் (Aemilius Palus) என்ற ரோமானியத் தளகர்த்தர் மாசிடோனியப் படையைப் பிட்னை (Pydina) என்னுமிடத்தில் படுதோல்வியடையச்செய்தார். அதன்பின் 70 மாசிடோனிய நகரங்களை அவர் சூறையாடி அங்கு வசித்த உயர்குடி மக்களையெல்லாம் இத்தாலிக்கு நாடு கடத்தினர். மாசிடோனியாவை நான்கு சுயாட்சி பெற்ற குடியரசுகளாகப் பிரித்து அவை ஒன்றோடொன்று வாணிகம் செய்யக்கூடாதெனவும், வேறு எவ்வகையிலும் தொடர்பு கொள்ளக் கூடாதெனவும் தடுத்தார். பெர்ஸியஸ் இத்தாலியில் சிறைவைக்கப்பட்டு இரண்டாண்டுகள் கழித்து இறந்தார். பெர்ஸியஸுக்கு உதவிய எப்பைரஸ் நாடு சூறையாடப்பட்டது. அதன் குடிமக்கள் இலட்சம்பேர் அடிமைகளாக விற்கப்பட்டனர். போரின் போது ரோமுக்கு உதவி செய்யாத ரோட்ஸ்நாடு ஒரு வகையில் தண்டிக்கப்பட்டது. ஆசியக் கடற்கரையில் அதற்குச் சொந்தமாயிருந்த நகரங்கள் வேண்டுமென்றே விடுவிக்கப்பட்டன. ரோட்ஸுக்குப் போட்டியாக டீலாஸ் (Delos) என்ற துறைமுகம் அமைக்கப்பட்டது. பெர்ஸியஸுக்கு நேர்முகமாகவோ மறைமுகமாகவோ உதவியளித்த அத்தனைக் கிரேக்கர்களும் சிறை செய்யப்பட்டனர்; அல்லது நாடு கடத்தப்பட்டனர்.

அங்கே அவர்கள் 16 ஆண்டுகள் வைக்கப்பட்டிருந்த அச் சமயத்தே அவர்களில் ஏறக்குறைய 700 பேர்கள் இறந்து போயினர். இத்தகைய செய்கைகளால் பல தீய பலன்கள் கிரீஸில் விளைந்தன. செல்வந்தர்கள் பலரும் நாடுகடத்தப்பட்டு விட்டதால் சாதாரணக் குடிமக்கள் ஆங்காங்கே ஆட்சித் தலைமையைக் கைப்பற்றிக்கொண்டனர். வகுப்புப் போர் தீவிர மடைந்தது. கொஞ்ச நஞ்சம் எஞ்சியிருந்த செல்வர்களையும், அதோடு ரோமானியர்களையும் நாட்டைவிட்டு விரட்டிவிட வேண்டுமென்ற இயக்கம் நாடெங்கும் வேகமாகப் பரவலாயிற்று. கி. மு. 150-இல் இத்தாலியிலிருந்து திரும்பி வந்த அக்கீய வாசிகள் ரோமானிய ஆதிக்கத்துக்கு விரோதமாகச் சதி செய்வதில் ஈடுபட்டனர். இங்ஙனம் அக்கீயக் கூட்டுறவு தமக்கு எதிராக இருந்ததை அறிந்த ரோமானியர் அதைப் பலவீனப் படுத்த எண்ணினர். அக் காரியத்தைச் செய்ய குழு ஒன்றைக் கிரீஸுக்கு அவர்கள் அனுப்பிவைத்தனர். அக் குழுவானது கொரிந்து, ஆர்கோமினஸ், ஆர்கோஸ் ஆகிய நகரங்கள் அக்கீயக் கூட்டுறவினின்றும் பிரிந்துவிடவேண்டுமென ஆணையிட்டது. அப்படி ஆணையிட்ட குழுஉறுப்பினர்களின் தலைவர்கள் மீது கொரிந்தியப் பெண்கள் கழிவுநீரைக் குடம் குடமாக ஊற்றி இழிவுபடுத்தினர். கி. மு. 146-இல் ரோமானியருக்கு விரோத மாகப் போர் தொடுப்பதாக அக்கீயக் கூட்டுறவு அறிவித்தது. விடுதலைப் போராட்டம் தொடங்கிவிட்டதெனவும், அதற்கு ஒவ்வொரு குடிமகனும் தன்னலனைத் தியாகத்தைச் செய்யவேண்டு மெனவும் அக் கூட்டுறவில் சேர்ந்திருந்த நகரங்களிலெல்லாம், நாட்டுப் பற்றேடு கூடிய ஒரு உற்சாகம் தாண்டவமாடியது. போர்வெறியால் அவர்கள் உந்தப்பட்டுக் கூட்டம் கூட்டமாகப் படைகளில் சேர்க்கப்பட்டனர். கடன்கள் யாவும் தற்காலிகமாக ஒழிக்கப்பட்டன. போருக்குப் பின் ஏழைகளுக்கெல்லாம் நிலம் வழங்கப்படுமென்ற உறுதியளிக்கப்பட்டது. இத்தனை உற்சாகத் தையும் கண்ட செல்வந்தர்களும் தங்கள் அச்சத்தை வெளிப் படையாகக் காட்டிக்கொள்ளாமல், பொன்னையும் பொருளையுங் கொடுத்து நாட்டு விடுதலைக்குப் பாடுபடுபவர் போல் நடித்தனர். ஆதென்ஸும், ஸ்பார்ட்டாவும் இந்த விடுதலைப் போரில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் பியோஷியா, லாக்ரியா, யூபியா ஆகிய நாடுகள் முழு மனத்தோடு போரில் ஈடுபட முன்வந்தன. மாசிடோனியாவில் ரோமானியர்களால் ஏற்படுத்தப்பட்ட நான்கு குடியரசுகளும் ரோமுக்கு விரோதமாகக் கலகம் செய்ய முன் வந்தன.

இவற்றையெல்லாம் கேட்ட ரோமானிய சென‌ட் பெரிதும் சினமடைந்து ஒரு பெரும் சேனையை மூமியஸ் (Mumius) என்பார்

வசம் ஒப்புவித்துக் கிரீஸுக்கு அனுப்பி வைத்தது. அவருக்கு உதவியாக மெட்டலஸ் (Metellus) என்பார் வசம் ஒரு கடற் படையும் அனுப்பப்பட்டது. இவ்விரு படைகளும் சேர்ந்து, அக்கீயக் கூட்டுறவின் தலைநகரமான கொரிந்து கோட்டையைக் கி. மு. 146-இல் கைப்பற்றிக்கொண்டன. ரோமுக்கு விரோத மாகச் சதி செய்தவர்களுக்கு, தக்கதொரு பாடமாக இருக்கவும், ரோமுக்குப் போட்டியாக வியாபாரத் துறையிலிருந்து வந்த ஒரு நகரத்தையழிக்கவும் எண்ணிய ரோமானியர்கள், கொரிந்து நகரைத் தீக்கிரையாக்கினர். அதில் காணப்பட்ட ஆண்களை யெல்லாம் அவர்கள் கொன்றனர். பெண்களும் குழந்தைகளும் அடிமைகளாக விற்கப்பட்டனர். தமது கைக்குக் கிடைத்த பொருளையெல்லாம் சுருட்டிக்கொண்டு மூமியஸ் இத்தாலிக்குத் திரும்பினர். அவரது கொள்ளைப் பொருள்களில் கலையழகு கொழித்த உருவச் சிலைகள் பலவும், வண்ண ஓவியங்கள் சிலவு மிருந்தன. ஆனால் அவற்றையெல்லாம் ரோமானிய வீரர்கள், ரசித்து அனுபவிக்கத் தெரியாதவர்களாயிருந்தனர். உலகப் புகழ்வாய்ந்த ஒருசில ஓவியங்கள் வரையப் பெற்றிருந்த பலகை களைச் சொக்கட்டான் ஆட்டம் ஆட அவ் வீரர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள் என்று பொலிபியஸ் (Polybius) என்ற வரலாற் றாசிரியர் கூறுகிறார். இங்ஙனம் கிரேக்க விடுதலைப் போர் தோல்வியில் முடிந்தது. பியோஷியா, லாக்ரிஸ், கொரிந்து யூபியா ஆகிய கிரேக்க நகரங்கள் ரோமாபுரிக்கு ஆண்டுதோறும் கப்பம் கட்டிவரும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டன. ஆதென்ஸும் ஸ்பார்ட்டாவும் மட்டும் தங்களது பிரியம் போல் வாழ்வதற்கு அனுமதிக்கப்பட்டன. ஏனைய நகரங்களிலெல்லாம், சொத் துரிமை பெற்றவர்களே ரோமானியர்களால் ஆதரிக்கப்பட்டனர். புரட்சி செய்யவும், போர் புரியவும், அரசியலமைப்பில் திருத்தம் செய்யவும் விரும்பியவர்கள் அனைவரும் வன்மையாக ஒறுக்கப் பட்டனர். ரோமானியர்களின் இரும்புக் கரங்களில் சிக்கிய தீவிர வாதிகள் யாவரும் பாம்பின்வாய்ப்பட்ட தேரையென அடங் கினர். புரட்சி ஓய்ந்தது. அமைதி எங்கும் நிலைநாட்டப் பட்டது. ஆனால் கிரேக்கரின் சுதந்திரம் அடியோடு மாய்ந்தது. விடுதலையையே தங்களது பேச்சாகவும் மூச்சாகவும் கொண் டிருந்த கிரேக்க நகரங்கள் தமக்குள் ஒற்றுமையில்லாத காரணத் தால் அந்நியரான ரோமானியருக்குக் கைகட்டி வாய்பொத்திச் சேவகம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது.

21. பண்டைய கிரேக்கரின் நாகரிகம்

(அலெக்ஸாந்தருக்கு முன்)

ஒரு நாட்டின் பெருமையானது அது எத்துணைக் காலம் சுயேச்சையாக வாழ்தது என்பதைப் பொறுத்து ஏற்படுவதொன்றன்று. எத்துணை பெரிய சாதனைகளை அஃது செய்துவிட்டுச் சென்றுள்ளது என்பதைப் பொறுத்தே அதன் சிறப்பு அமையுமென்பது ஒருதலை. கிரேக்கர்கள் சுயேச்சையாகவும், முழுமையாகவும் வாழ்ந்த காலம் என்னவோ மிகச் சிறியதுதான். கி. மு. 490-இல் பாரசீகருக்கெதிராகக் கிரேக்கர்கள் மாரதான் போர்க்களத்தில் பெற்ற பெரு வெற்றிக்கும், கி. மு. 338–இல் மாசிடோனியரிடம் அவர்கள் அடைந்த படுதோல்விக்கும் இடைப்பட்ட ஓர் ஒன்றரை நூற்றாண்டுக் காலமே அவர்கள் சீரோடும் சிறப்போடும் செம்மையுற வாழ்தத காலமாகும். அத்துணைக் குறுகிய காலத்திற்குள் அன்னூர் செய்து முடித்த சாதனைகள் பலப்பல. அரசியலிலும் அறிவியலிலும் கலையிலும் அவர்கள் படைத்துச் சென்றுள்ள புதுமைக் கருத்துகளின் அடிப்படையிலேயே இன்றைய மேலை நாகரிகமெனும் மேதகு கட்டிடமானது கட்டப்பட்டுள்ளது. அரசியல் துறையில் கட்டற்ற சுதந்திரத்தையும், வரலாற்றுத் துறையில் ஆராய்ச்சி மனப்பான்மையையும், அறிவியல் துறையில் கட்டுப்பாடற்ற சிந்தனையையும் முதன்முதல் வற்புறுத்தியவர்கள் அவர்களே யாவர். கணிதம், பௌதிகம், தத்துவம், ஆட்சிக்கலை, பேச்சுக் கலை ஆகியவற்றைக் கண்டுபிடித்து உலகுக்கீந்தவர்கள் அவர்களே. மற்றும் இலக்கியம், சிற்பம், கட்டிடக்கலை ஆகியவற்றிலும் அவர்கள் ஏனைய பண்டைய மக்களினும் சிறந்து விளங்கினர்கள். இங்ஙனம் அவர்கள் செய்து முடித்த செயல்கட்கு மேலாகத் தற்கால உலகம் அடைந்துள்ள முன்னேற்றம் மிகச் சிறிதே என்பது அறிந்து வியத்தற் பாலதொன்றுமென்க.

கிரேக்கக் கலைகள்

கிரேக்கர்களது பண்டைய நாகரிகத்தின் முழுமையான மலர்ச்சியை நாம் அவர்களது கலைச்செல்வங்களில் தான் நன்கு காண்கின்றோம். 'அழகே தெய்வம். தெய்வமே அழகு' என்ற கவிஞரின் வாக்கை மெய்ப்பித்துக் காட்டியவர்கள் கிரேக்கர்கள். அவர்களது வாழ்வே கலையாகவும், கலையே வாழ்வாகவும் அமையப் பெற்றிருந்தன். அத்தகைய கலைவாழ்வின் உயிர் நாடியாய்த் திகழ்ந்தது அவர்தம் அழகுணர்ச்சியாகும். அதனாற்றான் பெரிக்ளீஸ் தமது நாட்டுமக்களைப் பற்றிக் கூறுகின்ற போது "அழகு விரும்பிகள்" (Loxers of beauty) என்று குறிக்கின்றார். "அழகு விரும்பிகள்" என்பதைவிட "அழகின் பித்தர்கள்" என்று கூறுவது இன்னும் பொருத்தமுடையதாயிருக்கும். ஏனெனில் அழகுக்காக அவர்கள் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராயிருந்தார்கள். அழகில்லாத பொருள்களைப் பார்க்கும் போது, ஏதோ ஈட்டியொன்றால் குத்தப்பட்டது போல் அவர்கள் வேதனையடைந்தனர். அழகையும் அறத்தையும் அவர்கள் ஒன்றாகவே கண்டார்கள். அழகும் எழிலும் கட்டுக் கோப்பும் கம்பீரமும் கொண்ட தோற்றப் பொலிவுள்ளவர்களே நல்லவர்களாவும் இருக்கக் கூடுமென்பது அவர்தம் நம்பிக்கையாகும். நல்ல அழகுள்ளவர்களையே அவர்கள் பூசாரிகளாயும், தலைவர்களாயும் தேர்ந்தெடுப்பது வழக்கம். அருவறுப்பான தோற்றமுடையவராயிருந்தும் நல்லவராக விளங்கிய சாக்ரடீஸைக் கண்டு அவர்கள் வியந்தனர். அவரை ஒரு விதிவிலக்காகவும் விசித்திர மனிதராகவும் அன்றோ் கருதினர்களேயன்றித் தங்களது இலட்சிய மனிதராகக் கருத அவர்களால் இயலவில்லை.

இங்ஙனம் அழகுணர்ச்சியால் உந்தப்பட்ட கிரேக்கர்கள், தாம் தொட்டதையெல்லாம் வனப்புடையவைகளாக வடித்தெடுத்தனர். எதிலும் சீராக இருக்கவேண்டும் என்பது அவர்தம் குறிக்கோளாகும். ஓர் உருவத்தில் இயற்கையான அளவுக்கு மீறி ஓர் உறுப்பு இருக்குமானால் அதை அவர்கள் வெறுத்தனர். கிரேக்கச் சிற்பங்களிலும் கோயில்களிலும் இத்தகைய சீர்மையையும் ஓர்மையையும் நாம் நன்கு காணலாம். 'அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு' என்ற பழமொழியை அவர்கள் எல்லாத் துறையிலும்—சிறப்பாகக் கலைத்துறையிலும் கடைப்பிடித்தனர். அடுத்தபடியாக அவர்களின் கலைப்பொருள்களில் நாம் காண்பது தெளிவான அமைப்புமுறையாகும். புரியாத கோதிக் (Cothic) கட்டிடங்களில் காண்பது போன்ற ஐயப்பாட்டிற்கிடமான இயல்புகளை நாம் அவர்களது கட்டிடங்களில் காண்பது

அரிதாகும். இல்லாததை இருப்பதைப் போல் காட்டுவதை வெறுத்த கிரேக்கர்கள், இருப்பதை மறைத்தும் குறைத்தும் காட்டவும் விரும்பினரல்லர். உள்ளதை உள்ளபடியே படம் பிடித்துக் காட்டுவதிலேயே அவர்கள் உவகையுற்றனர். அதே சமயம் இயற்கையில் உள்ளவற்றையெல்லாம் அவர்கள் அப்படியே கலைப்பொருள்களில் வடிக்க எண்ணவில்லை. இயற்கையின் சிறந்த செம்மை சான்ற படைப்புகளை மட்டுமே அவர்கள் தமது கலைப்பொருள்களுக்கு ஒரு முன்மாதிரியாகக் கொண்டனர். அதனுற்றுன் ஒரு சில வகையான உருவங்களே மீண்டும் மீண்டும் செய்யப்பட்டன. தனிப்பட்ட மனிதர்களின் உருவங்களை அப்படியே செதுக்குவதில் அவர்கள் அதிகம் அக்கறை காட்டவில்லை. எனவே கிரேக்கக் கலை இயற்கையானது (Naturalistic) என்று கூறுவது பொருந்தாததாகும். ஆனால் அதை மனிதச் சார்புடையது (Humanistic) என்று துணிந்து கூறலாம். ஏனெனில் அவர்தம் கலைப்பொருள்கள் யாவும் இப் பூவுலகில் மனிதனுடைய சிறப்பைத்தான் பெரிதும் பறைசாற்றுகின்றன. அவர்கள் வடித்தெடுத்துள்ள தெய்வங்களின் உருவங்களில்கூட நாம் மனிதர்களின் சாயையையே காண்கின்றோம். மனிதரின் உணர்ச்சிகளான கோபம், தாகம், காமம், பொறுமை போன்ற உணர்ச்சிகள்தாம் அவ்வுருவங்களில் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. அறிவுக்கு அப்பாற்பட்ட உருவங்களையும், உணர்ச்சிகளையும், பரலோக சம்மந்தமான காட்சிகளையும் நாம் அவர்களது சிற்பங்களிலும் ஓவியங்களிலும் காண இயலாது. மனிதரின் நல்வாழ்வே அவர்களின் கலையில் சித்தரிக்கப்படுகின்றது. கலை கலைக்காகவே என்பதன்றிக் கலை மனிதனின் நல்வாழ்வுக்காகவே என்ற கொள்கையையே கிரேக்கர்கள் கடைப்பிடித்தனர். மற்றும் தங்களது தேசிய வாழ்வின் சின்னமாகவும் அவர்கள் கலையைக் கருதினர். தாங்கள் வாழும் நகரத்தைப் பற்றிப் பெருமைப்படவும், அதன் மாண்பினை மற்றவர் உணரவும் விரும்பியே அவர்கள் தங்களது நகரங்களில் வியக்கத்தக்க கட்டிடங்களைக் கட்டினர். ஆதென்ஸில் அவர்களால் கட்டப்பட்ட அத்தீனை தேவதையின் கோயிலானது அன்னரின் கூட்டு வாழ்க்கைச் சிறப்பின் சின்னமாகவும், நகரின் மீது அவர்கள்கொண்டிருக்கும் பற்றுக்கும், நம்பிக்கைக்கும் ஓர் எடுத்துக்காட்டாகவும் திகழ்ந்ததே அன்றி வேறன்று. இங்ஙனம் கிரேக்கக் கலையில் நாம் அழகுணர்ச்சியை மட்டுமன்றி, அரசியல் உணர்வையும், அறமனப்பான்மையையும் ஒருங்கே காண்கின்றோம்.

கிரேக்கர்களின் கலை அபூர்வமானது. அது அவர்களது சுற்றுப் புறங்களால் பெரிதும் தூண்டப்பட்டதெனலாம்.

கிரேக்க நாடே இயற்கை எழில் கொஞ்சும் பூஞ்சோலையாகக் காட்சியளித்தது. குளிரும் வெயிலும் கூட அங்கு அளவுக்கு மீறுமல் சமநிலையில் இருந்துவந்தன. மலைகளும் தீவுகளும் கூட அளவுக்கு மீறிப் பெரியனவாக அங்கு இல்லை. அதே போல் வானிலை கிரீஸ் எங்கும்-சிறப்பாக அட்டிகாவில் தெளிவாக இருக்கும். எனவே பொருள்கள் துல்லியமாகத் தெரியும். அட்டிகாவின் வானிலை தெளிவாகக் காட்சி அளிக்கும் குன்று களின் அமைப்பை ஒத்தே ஆதென்ஸின் பார்த்தனன் கோயிலும் திட்டவட்டமாக அமைக்கப்பட்டுள்ளதெனலாம். மற்றும் கிரீஸின் பல பாகங்கள் கடலுக்கு அருகில் இருப்பது அதன் அழகை இன்னும் அதிகமாக்கிக் காட்டுகிறது. நீலத்திரைக் கடல் ஓரத்திலே தெள்ளிய அலைகள் துள்ளி விளையாட, அடுத்துள்ள மலைச்சரிவுகளில் பச்சைக் கம்பளம் விரித்தாற் போல் புல்வெளிகள் படர்ந்திருப்பது கண்கொள்ளாக் காட்சி யாயிருக்கும். எங்கும் வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும். மரகத மலையில் தங்கம் பூப்பது போல் ஆரஞ்சுகள் பளபளக்கும். இப்படிப்பட்ட இயற்கை அழகோடு விளங்கும் ஒரு நாட்டில் மக் கள் அழகு விரும்பிகளாயிருந்ததில் வியப்பொன்றுமில்லை. அவர்கள் தமது அழகுப் பொருள்களை ஆக்குதற்கேற்ற பளிங்குக் கற்கள் கிரீஸில் ஏராளமாகக் கிடைத்ததானது அவர்களின் கலை யுணர்விற்குப் பெரியதோர் தூண்டு கோலாயமைந்தது.

கிரேக்கர்களின் கலைவரலாற்றில் மூன்று கட்டங்களை நாம் காணலாம். முதற்கட்டத்தில் அது பெரிதும் எகிப்தியக் கலை யையே ஒத்திருந்தது. எகிப்தியச் சிலைகளில் காணப் படுவது போன்று விறைப்பான உடல், சதுரமான தோள்பட்டைகள், சற்று முன் வைக்கப்பட்ட ஒரு கால் இவற்றை நாம் கிரீஸிலும் காண்கின்றோம். பெரிய பாறுங் கற்கள் சரியாகச் செதுக்கப்படாமல் கட்டிடங்களில் முதலில் பயன்படுத்தப்படுவதையும், நாளடைவில் நன்கு செங்கல் போல் செதுக்கப்பட்ட கற்கள் பயன்படுத்தப்படுவதையும் காண்கிறோம். கி. மு. எழாம், ஆறும் நூற்றாண்டில் இத்தகைய முறையைக் கிரேக்கர்கள் கையாண்டனர். மைசீனியாட்டின்ஸ் போன்ற பழங் காலக்கட்டிடங்களும், சிற்பங்களும் இவ் வகையைச் சார்ந்தனவே. இரண்டாவது கட்டத்தில் (கி. மு. 5-ஆம் நூற்றாண்டு) கட்டிடக் கலையும் சிற்பக் கலையும் நன்கு செம்மையடைகின்றன. உயர்ந்த குறிக்கோளை அவை அடிப்படையாய்க் கொண்டுள்ளன. மூன்றாவது கட்டத்தில் (கி. மு. 4-ஆம் நூற்றாண்டு) கலையில் பலமாறுதல்களைத் தனிப்பட்ட மனிதர்கள் புகுத்திவிடுகின்றனர்; கலையும், அரசியல் உணர்வும், கூட்டு முயற்சியும் அருகிவிடு

கின்றன. ஓரளவு இழிநிலையைக் கிரேக்கக்கலை அடைந்து விட்ட காலம் இதுவெனலாம்.

கி. மு. ஆரும் நூற்றாண்டின் இறுதிக்குள் கிரேக்கக் கட்டிடக்கலையில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டது. டோரியம், கொரிந்தியம், அயோனியம் என மூன்று கட்டிட முறைகள் தோன்றின. கட்டிடத் தூண்களின் உச்சியில் காணப்பட்ட வேலைப்பாடுகளுக்கேற்ப இவை வெவ்வேறாகக் கருதப்பட்டன. டோரியக் கட்டிடங்களில் தூண்கள் கனமாகவும், எளிமையாகவும் காணப்பட்டன. அடிப்பகுதி என்று தனியே அவைகளுக்கில்லை. தூணின் தலைப்பகுதி சாதாரணமாகவும் எளிமையானதாகவும் செய்யப்பட்டிருந்தன. ஆனால் அயோனியக் கட்டிடத் தூண்கள் ஒல்லியாகவும் அழகாகவும் செதுக்கப்பட்டிருந்தன. அவற்றின் உச்சிப் பகுதிகளில் இருமருங்கிலும் செம்மறியாட்டுக் கொம்புபோல் சுருள்சுருளான வேலைப்பாடுகளும், நன்கு மெருகிடப்பட்ட மடிப்புகளும் காணப்பட்டன. இம் முறையை அசீரியர்களிடமிருந்து கற்றுக்கொண்ட அயோனியர்கள் இதைத் தம் கட்டிடங்களில் கடைப்பிடித்தனர். கொரிந்தியக் கட்டிடங்களில் இருந்த தூண்களின் உச்சிகள் மணி வடிவத்தில் (Bell shaped) மிகவும் அலங்காரமாகச் செதுக்கப்பட்டிருந்தன. அகாந்தஸ் (Acanthus) செடியின் இலை களைப் போன்ற உருவங்கள் அவற்றில் பொறிக்கப்பட்டிருந்தன. காலிமாக்கஸ் (Callimachus) என்ற சிற்பி, தற்செயலாக அகாந்தஸ் செடிகளிடையே விழுந்துவிட்ட ஒரு கூடையின் அழகைப் பார்த்து இம் முறையைக் கண்டுபிடித்தார் என்பர். அலெக்ஸாந்தரது காலத்தில்தான் இத்தகைய கட்டிடக் கலை முதன்முதல் நடைமுறைக்கு வந்தது.

கிரேக்கரது கோயில்களில்தான் அவர்களது கட்டிடக்கலையின் சிறப்பை நாம் நன்கு காண்கிறோம். கோயில்கள் முதலில் மரத்தாலும், பின்னர் கல்லாலும் கட்டப்பட்டன. தெய்வத்தின் சிலை வைக்கப்படும் கருவறை கோயிலின் முக்கியப் பகுதியாகும். நாற் சதுரவடிவில் அது அமைக்கப்பட்டிருந்தது. கருவறைக்குச் செல்லும் தாழ்வாரம் கட்டிடத்தின் இரண்டாவது பகுதியாகும். இப் பகுதியில்தான் ஏராளமான தூண்கள் அமைக்கப்பட்டிருந்தன. அத் தூண்களின் மீது வாசற்படி உத்திரங்களும், அவற்றின் மீது கூரைகளும் நிறுவப்பெற்றன. கூரைகள் வெளியே பெரிதும் நீட்டிக் கொண்டிருந்தன. அவற்றைத் தாங்கத் தூண்கள் சுற்றிலும் அமைக்கப்பட்டிருந்தன. சாதாரணமாக டோரிக்முறையிலேயே கோயில்கள் கட்டப்பட்டன. ஆதென்ஸில்

கட்டப்பட்ட பார்த்தனன் (Parthenon) என்ற கோயில் இவ் வகையைச் சேர்ந்ததேயாகும். அதன் தூண்கள் வெண்மையான பளிங்குக் கற்களால் ஆனவை. இக்காலத்து அழிந்துபோன நிலையில் இருக்கும் இத் தூண்களும் கட்டிடமும் இன்றும் கண் கவர் வனப்புடன் விளங்குகின்றன. பார்வைக்கு நேராகத் தோன்றும் தூண்களின் வரிசையில் உற்றுப் பார்த்தால் ஒரு சில நுட்பமான வளைவுகளும் காணப்படுகின்றன. சிமென்ட் போன்ற பொருள் எதையும் பயன்படுத்தாமல் ஒரு கல் இன் னொரு கல்லோடு பொருத்தப்பட்டுள்ள நேர்த்தி விந்தையானது. ஓர் ஊசியைக் கூட அவற்றின் இடைவெளியில் புகுத்த முடி யாதபடி அவ்வளவு நெருக்கமாக அவை இணைக்கப்பட்டுள்ளன. எபிசஸ் (Ephesus) நகரில் கி. மு. ஆரும நூற்றாண்டில் ஆர்ட் டிமிஸ் (Artemis) எனும் தெய்வத்துக்குக் கட்டப்பட்ட பிரமாண்ட மான கோயில் அயோனிய முறையில் கட்டப்பட்ட அரிய கட்டிட மாகும். உலகின் ஏழு அதிசயங்களில் அது ஒன்றாகக் கருதப் பட்டது. குறுக்கு வழியில் புகழ்பெற விரும்பிய கயவன் ஒருவன் அதை ஒரு சமயம் கொளுத்திவிட்டான். ஆனால் மீண்டும் அது புதுப்பிக்கப்பட்டது. அலெக்ஸாந்தர் கூட அதை மேலும் சிறப்பிக்க விரும்பினர். ஆனால் அவரது பெயரை அங்குப் பொறிக்க மக்கள் ஒப்புக் கொள்ளாததால் அவர் வாளாயிருந்துவிட்டார். கிரீஸின் பல பகுதிகளிலுமிருந்து பரிசுப் பொருள்களும், உபயங்களும் இக் கோயிலுக்கு வந்து குவிந்தன. சிற்பிகளும் அதில் தங்கள் கைவண்ணத்தை இனமாகக் காட்டினர். தேசியக் கலைக்கூடமாகத் திகழ்ந்த அதனை ரோமானியர்களும், காத்துகளும் பிற்காலத்தில் சூறை யாடினர். எபிசஸில் டயானை எனும் தெய்வத்திற்கு எடுக்கப்பட்ட கோயில் 126 மீட்டர் நீளமும் 66 மீட்டர் அகலமும் கொண்டது. டெல்ஃபியில் அபோலோ தெய்வத்துக்குக் கட்டப்பட்ட கோயிலும் சிறப்பு வாய்ந்தது. இது டோரிய முறையில் கட்டப்பட்டது. வருங்காலத்தை அறிந்துகொள்ளக் குறி கேட்க வந்த அரசர் களும் மக்களும் அங்கு நிறையச் சொத்தைச் சேர்த்தனர். நீரோ, கான்ஸ்டான்டைன் போன்ற ரோமானிய மன்னர்கள் நூற்றுக்கணக்கான சிலைகளையும், பொன்னையும், பொருளையும் இதிலிருந்து கவர்ந்து சென்றனர். ஒலிம்பஸ் மலையடிவாரத்தில் ஜியூஸ் கடவுளுக்காக டோரியமுறையில்எடுக்கப்பட்ட கோயில்கள் பல. அவையாவும் இரண்டாம் தியோடோஸியஸ் (Theodosius II) எனும் கிறித்துவ மன்னரது ஆணையால் இடிக்கப்பட்டன. அவற்றின் அழிபாடுகளில் இருந்துதான் சிப்செலஸ் (Cypselus) என்பாருக்குச் சொந்தமான அழகிய சித்திர வேலைப்பாட்டுடன் கூடிய பெட்டியும், பிராக்சைடிலிஸ் (Praxiteles) என்பாரின்

உருவச் சிலையும் கிடைத்துள்ளன. கரியாவின் (Caria) மன்னரான மாசோலஸ் (Mausolus) என்பார் இறந்தபோது (கி. மு. 352) அவரது நினைவுச் சின்னமாக ஆர்ட்டிமீஸியா (Artemisia) எனும் அவரது இராணியால் ஹாலிகார்னஸஸ் நகரில் (Halicarnessus) கட்டப்பட்ட மாசோலியம் (Mausoleum) எனும் கட்டிடம் கிரேக்கரின் மற்றொரு அழகுப் படைப்பாகும். ஹுமாயூனின் நினைவுச் சின்னமாக அவரது இராணி ஹமீதா பானு பீஹம் கட்டிய கல்லறை போல் மாசோலியம் எனும் கல்லறையும் புகழ் வாய்ந்தது. உலக அதிசயங்கள் ஏழனுள் ஒன்றாக அது கருதப்பெற்றது. அழகு கொழிக்கும் சிலைகள் அங்கு நிறைந்திருந்தன. பளிங்குக் கல்லாலான இரதத்தில் இருந்த மாசோலஸின் சிலை, ஏனைய சிலைகட்கு முத்தாய்ப்பு வைத்தாற்போல் இருந்தது. இக் கட்டிடத்தின் அழகு காரணமாகவே மாசோலியம் என்ற பெயர் சிறந்த நினைவுச் சின்னங்களைக் குறிக்கும் பொதுப் பெயராக உலகில் இன்று கையாளப்படுகின்றது. சாமோஸ் தீவிலுள்ள ஜீனோ தெய்வத்தின் கோயில் 105 மீட்டர் நீளமும் 57 மீட்டர் அகலமும் கொண்ட அரிய கலைக் கட்டிடமாகும்.

கிரேக்கரின் நாடக அரங்குகளும் அவர் தம் கட்டிடக் கலையின் மாண்பை நன்கு புலப்படுத்துவனவாகும். அரை நிலா வடிவத்தில் அமைக்கப்பட்ட இருக்கைகள் நாடகத்தைப் பார்ப்பவர்களுக்காக அமைக்கப்பட்டிருந்தன. அவற்றின் இறுதியில் இருந்த இருக்கைகளுக்கிடையில் பக்க வாத்தியக்காரர்களுக்கு ஒரு மேடையும், நடிப்பவர்களுக்கு ஒரு மேடையும் அமைக்கப்பட்டிருந்தன. ஆதென்ஸில் அகழ்ந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ள டயோனிஷியஸின் நாடக மேடையில் நூறு வரிசை இருக்கைகள் இருந்தன. கடைப்பகுதி வரிசையில் மட்டும் அறுபத்தேழு பளிங்குநாற்காலிகள் இருந்தன. ஏறக்குறைய முப்பதாயிரம் பேர், ஒரே சமயத்தில் அமர்ந்து நாடகம் பார்க்கத் தக்க வகையில் அரங்கம அமைக்கப்பட்டது. முன்னிலிருப்பவர்கள் பின்னிலிருப்பவர்களை மறைக்காமல் இருக்கவேண்டி இருக்கைகள் யாவும் மலைச்சரிவு போன்று படிப்படியாய் அமைக்கபபட்டிருந்தன.

கட்டிடக் கலையைப் போலவே அவர்களின் சிற்பக்கலையும் ஆரம்பத்தில் சமயச்சார்பு கொண்டதாகவே திகழ்ந்தது. நாளடைவில் மனிதச் சிலைகளும் வடிக்கப்பட்டன. ஆனால் நாம் முன்னமே குறிப்பிட்டது போன்ற தெய்வச் சிலைகளில் கூட மனிதச் சாயையே தென்படுகிறது. முதலில் மரத்தாலும் பின்னர் வெண்கலம், பளிங்குக்கல் ஆகியவைகளாலும் சிலைகள்

வடிக்கப்பட்டன. தெய்வச் சிலைகள் பெரும்பாலும் ஒரு சில மரபுகட்குக் கட்டுப்பட்டே செய்யப்பட்டன. ஆனால் ஒலிம்பிக் விளையாட்டுகளில் வெற்றி பெற்றோரின் நினைவாக மனிதச் சிலைகள் நாளடைவில் செய்யப்படும் வழக்கம் ஏற்பட்ட பின் கட்டுப்பாடற்ற முறையிலும், இயற்கையோடியைந்த முறையிலும் சிலைகள் வடிக்கப்பட்டன. நன்கு உருண்டு திரண்டு முழுவளர்ச்சி பெற்றுள்ள உறுப்புகளைக் கொண்ட ஆணழகர்கள் அத்தகைய சிலைகளில் சித்தரிக்கப்பட்டனர். அவற்றில் அழகும், நெளிவு சுளுவும் பெரிதும் நடம் புரிந்தன. உடல் பயிற்சியால் நன்கு பண்பட்ட உடல் உருவங்கள், விளையாட்டுப் பந்தயங்களில் ஈடுபடும் நிலையில் எப்படி இருக்குமோ, அப்படியே, அவற்றைக் கண்டு ரசித்த சிற்பிகள் அவைகளை ஆக்கித் தந்துள்ளனர்.

கி. மு. 5–ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கிரேக்கச் சிற்பம் தனது உச்சநிலையை அடைந்தது. மிரான் (Myron) என்ற சிற்பி, வெண்கலத்தாலாய அழகுச் சிலைகள் பலவற்றைச் செய்தார். கேடயம் எறியும் ஒரு பந்தய ஆட்டக்காரரின் சிலை அவரது படைப்புகளில் தலைசிறந்தது. நன்கு பக்குவப்பட்ட ஓர் உடலின் தசைகளும், நரம்புகளும் சுறுசுறுப்பாகச் செயல் படும்போது உண்டாகும் அழகை அவர் தமது சிலைகளில் வடித்து வைத்துள்ளார். சிற்பிகளில் சிங்கம் எனத்தக்க பீடியாஸ் (Phedios), பெரிக்ளீஸின் காலத்தில் வாழ்ந்தவர்; அவரது ஆதரவின் கீழ் அத்தீனு தெய்வத்துக்குக் கோயிலெடுத்தவர். அவர் செய்த அத்தீனுவின் சிலை 12 மீட்டர் உயரமுடையது. அதன் தலைமுடி, உடைகள், படைக்கலன்கள் யாவும் தங்கத்தால் ஆனவை. மற்ற பாகங்கள் தந்தத்தாலானவை. ஒரு கையில் அழகியவேலைப்பாடு நிறைந்த கேடயத்தையும், மற்றொரு கையில் வெற்றியின் உருவகமான எழில்மிக்க பளிங்குச் சிலையையும் அத் தெய்வம் ஏந்திநின்றது. "ஒலம்பியாவில்பீடியாஸால் எடுக்கப்பட்ட ஜியூஸ் தெய்வத்தின் சிலை 18 மீட்டர் உயரமுடையது; தங்கத் தாலும் தந்தத்தாலும் ஆக்கப்பட்டது. அதன் கண்களில் ஒளி மிக்க கற்கள் பதிக்கப் பெற்றிருந்தன. விலையுயர்ந்த கற்கள் அதன் அரியணையில் அமைக்கப்பட்டிருந்தன. தயையும் கருணையும் தெய்வத்தின் முகத்தில் வழிந்தன" என அதைப் பார்த்தவர்கள் கூறியுள்ளனர். கி. பி. 5–ஆம் நூற்றாண்டில் கான்ஸ்டன்டைன் மன்னர் அதை எடுத்துச் சென்று தீக்கிரை யாக்கிவிட்டார். வெண்கலத்திலும், பளிங்குக் கல்லிலும் பல சிலைகளை உருவாக்கினர், பீடியாஸ். ஆனால் தம்மிடம் ஒப்படைக் கப்பட்ட கோயில் சொத்தைக் கையாடல் செய்ததாக அவரது

எதிரிகள் அவர் மீது குற்றம் சாட்டிச் சிறையிலடைத்தனர். சிறையிலேயே அவர் உயிர் துறந்தார் (கி. மு. 432). ஆர்காஸ் நகரில் வாழ்ந்த பாலிக்லீட்டஸ் (Polycleitus) என்பார், பந்தய ஆட்டக்காரர் பலரது அழகிய உருவச் சிலைகளை வெண்கலத்தில் செய்துள்ளார். அவர் செய்த ஓர் ஈட்டியெறியும் பயில்வானது சிலை உலகப் புகழ் வாய்ந்தது. ஆர்காஸ் நகரத் தெய்வமான ஹீராவின் (Hera) சிலை அவரது மிகச் சிறந்த படைப்பாகும். பெயோனியஸ் (Paeonius) என்பாரால் உருவாக்கப்பெற்றுள்ள நைக் (Nike) எனும் வெற்றித் தெய்வத்தின் சிலையானது அழகு வடியும் தன்மையது.

பெலப்போனீஷியப் போரில் ஸ்பார்ட்டர்கள் ஒரு சமயம் தோல்வியுற்றபோது மெஸ்ஸனீயர்கள் எனும் அவர்களது எதிரிகள் இச் சிலையை வைத்தார்கள் என்பர். ஹாலிகார்னசஸ் நகரத்து மாசோலியத்தில் காணப்படும் அருமையான சிலைகளைச் செய்தவர் ஸ்கோப்ஸ் (Scopas) (395-350 கி. மு.) எனும் சிற்பியாவார். டீஜியா நகரின் அத்தீனை சிலையை உருவாக்கியவரும் அவரே. பிராக்ஸிடிலெஸ் (Praxitelus) 360-340 கி. மு. என்ற சிற்பிகள் திலகம், நீடஸ் (Cnidus) நகரில் உள்ள காமதேவதையான அப்ரோடைட்டின் (Aphrodite) சிலையைச் செய்தவர். அழகு தேவதையின் முழு உருவமாக அதைக் கிரேக்கர் எண்ணிப் போற்றினர். அழகில் ஈடு இணையற்ற அச் சிலையைக் காண நெடுந் தொலைவிலிருந்தெல்லாம் மக்கள் யாத்திரைக்கு அங்கு வந்தனர். ஒலிம்பியாவில் உள்ள ஹெர்மிஸ் (Hermes) சிலை அவரது அற்புதப் படைப்புகளில் ஒன்றாகும். ஹெர்மிஸ், தமது கையில் டயோனிஷியஸ் (Dionysus) என்ற குழந்தையை வைத்துக்கொண்டுள்ளது போல் சித்தரிக்கப்பட்டுள்ளது, அதன் சிறப்பை மேம்படுத்துகிறது. ஒரு சிறந்த ஆணழகனுடைய திட்டமான ஒல்லியான ஒயில் நிறைந்த உருவத்தையும் அமைதி நிறைந்த முகத்தையும் அவர் தமது கடவுள்சிலைகளில் அமைத்துள்ளார். சிகியான் (Sicyon) நகரைச் சேர்ந்த லிசிப்பஸ் (Lysippus) என்பார், வெண்கலத்தால் தத்ரூபமான சிலைகளைச் செய்வதில் வல்லவராயிருந்தார். 1500 சிலைகளை அவர் செய்து நாடெங்கும் அனுப்பினர் எனக் கிரேக்கர்கள் கூறுவர். அலெக்ஸாந்தர் தமது உருவச்சிலைகளை இவரைக் கொண்டே செதுக்கச் செய்தார். ஆசியாமைனரிலிருந்த பெர்காமஸ் (Pergamus) தீவில் சிற்பக்கலை நன்கு பேணி வளர்க்கப்பட்டது. ஜியூஸுக்காகக் கட்டப்பட்ட வெற்றி மேடையில் பல உன்னதச் சிற்பங்கள் காணப்பட்டன. ரோட்ஸ் தீவின்கண் வாழ்ந்த காரஸ் (Chares) என்ற சிற்பியே உலக அதிசயங்களுள் ஒன்றான கலாசஸ்

(Colrssus)சிலையைச் செய்தவர்(280 கி.மு.). டலாகூன் (Laocoon) என்ற அவரது சிலைத் தொகுதியில் வலியால் வதங்கும் மாந்தரின் முகபாவங்கள் தத்ரூபமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

சிற்பத்தில் காட்டிய அளவுக்கு ஓவியக்கலையில் கிரேக்கர் தங்கள் திறமையைப் புலப்படுத்தவில்லை. ஏனெனில் சிற்பங்களைப் போல் ஓவியங்கள் அவர்களால் வணங்கப்படவில்லை. வண்ணந்தீட்டப்பட்ட ஒரு சில மட்பாண்டத் துண்டுகள், சிலைகள், சிதைந்துபோன சில சுவரோவியங்கள் இவற்றைக் கொண்டே நாம் கிரேக்க ஓவியத்தைப் பற்றி அறிய முடிகிறது. ஏனையவை எல்லாம் அழிந்து போய்விட்டன. ஆனால் ஓவியர்களைப் பற்றி இலக்கியங்களில் வரும் வருணனைகளில் இருந்து அக்கால ஓவியச் சிறப்பை நாம் நன்கு அறிய முடிகிறது. பாலினேட்டஸ் (Polygnotus) என்ற சிறந்த ஓவியர்தான் (கி. மு. 475–455) முதலில் அகத்தே நிகழ்ந்த உணர்ச்சிகளை முகத்தே வெளிப்படுத்தியவர். ட்ராய் நகர இளவரசியான பாலிக்சீனுவின் (Polyxena) படத்தில் அவர் தேக்கி வைத்துள்ள அழகும், துன்ப உணர்வும் ட்ரோஜன் போரை அப்படியே விளக்குவனவாயமைந்துள்ளன என்பர், கலாரசிகர்கள். ஆதென்ஸ் நகரப் பொதுக் கட்டிடங்களில் உலகம் காணுதற்கரிய சுவரோவியங்களைத் தீட்டியவர் அவரே. மாரத்தான் போர்க்கள நிகழ்ச்சிகளையும் அவர் அங்கே வரைந்தார். டெல்ஃபி கோயிற் சுவர்களில், ஒடிஸியஸ் (Odysseus) நகரத்திலிறங்கும் காட்சியை அவர் சித்தரித்துள்ளார். கி. மு. 5-ஆம் நூற்றாண்டில் ஸீக்ஸிஸ் (Zeuxis), பர்ராசியஸ் (Parrahasius) எனற இரு ஒப்பற்ற ஓவியர்கள் வாழ்ந்தனர். அவர்களிருவரில் யார் சிறந்தவரென்பது பற்றிய கதையொன்றைக் கிரேக்கர்கள் கூறுவர். அதன்படி இவ்விருவரும் தம்முள் போட்டி போட்டுக்கொண்டு இரு ஓவியங்களை வரைந்தனர். ஸீக்ஸிஸ், திராட்சைப்பழக் கொத்து ஒன்றை வரைந்து அதை வெளியே வைத்தபோது அவற்றை உண்மைப் பழங்கள் என எண்ணிப் பறவைகள் வந்து கொத்திற்றும். அத்தனை தத்ரூபமாக ஓவியத்தை வரைந்த தாமே சிறந்தவர் என ஸீக்ஸிஸ் அறிவித்துவிட்டுப் பர்ராசியஸின் ஓவியத்தைக் காட்டுமாறு கேட்டாராம். "அதோ அங்கு தெரியும் திரைச்சீலையை நீக்கிவிட்டுப் பார். உள்ளே இருக்கிறது" என்று பர்ராசியஸ் கூறினாராம். அதன்படி ஸீக்ஸிஸ் சென்று திரையை நீக்க முயன்றார். அப்போது தான் 'அது உண்மைத் திரையன்று. ஓவியத் திரை' என உணர்ந்தார். தமது தோல்வியை ஒப்புக்கொண்ட அவர் "நான் எனது ஓவியத்தால் பறவைகளைத்தான் ஏமாற்றினேன். ஆனால் நீயோ அனுபவம்

வாய்ந்த இன்னொரு ஓவியனையே நின் ஓவியத்தால் ஏமாற்றி விட்டாய்" எனப் புகன்றாராம். அலெக்ஸாந்தரின் அரண்மனை ஓவியரான அபெல்லஸ் (Apelles) என்பார் பண்டைக் கால ராப்பேல் (Raphael) என அழைக்கப்படுபவர். கடலின் அலைகளிலிருந்து எழுவதே போல் அப்ரோடைட் (Aphrodite) எனும் தெய்வத்தை அவர் வரைந்துள்ள ஓவியம் ஒப்பற்ற வனப்பு வாய்ந்தது. அவரது கேசத்திலிருந்து உதிரும் தண்ணீர்த் திவலைகளால் சற்றே மறைந்தாற்போற் காணப்படும் அக் காம தேவதையின் அங்க அழகுகள் உள்ளத்தை ஈர்க்கும் தன்மையினவாய் அமைந்துள்ளன. அவரால் வரையப்பட்ட குதிரைகளைக் கண்டு உண்மைக் குதிரைகள் கனைத்தன என்றோர் கதை உண்டு. அவர் வரைந்த ஓர் உருவத்தில் காணப்பட்ட செருப்பின் அமைப்பு சரியில்லை என ஒரு மிதியடி செய்யும் தொழிலாளி கூறிய போது அவர் அவன் சொற்படிச் சரி செய்தார் என்றும், ஆனால், அதே தொழிலாளி தாம் வரைந்த உருவத்தின் காலமைப்பைப் பற்றிக் குறை கூறிய போது 'அப்பனே! செருப்போடு உன் பேச்சை நிறுத்திக்கொள்" என்று சொல்லித் துரத்திவிட்டார் என்றும் இன்னொரு கதையும் உண்டு. அப்பெல்லாஸின் கைகளில் கிரேக்க ஓவியம் தனது உச்ச நிலையை எய்தியது. கிரேக்கர்கள் தங்கள் வீட்டுச் சுவர்களிலும் மரத்தாலும், பளிங்காலும் கண்கவர் ஓவியங்களை வரைந்து இன்பம் நுகர்ந்தனர். ஆடைகளிலும் அணிகலன்களிலும் நேர்த்தியான சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்டன.

பண்டைய கிரேக்கர்கள் இசையிலும் வல்லுநராயிருந்தனர். யாழ் போன்ற நரம்புக் கருவியையும், ஒற்றைக் குழல், இரட்டைக் குழல் போன்ற துளைக் கருவிகளையும் அவர்கள் பயன்படுத்தினர். தேசியத் திருவிழாக்களில் இசைப் போட்டியையும் அவர்கள் நடத்திப் பரிசு வழங்கினர். ஈலியட், ஒடிசி போன்ற இதிகாசங்களையும் பாட்டாகவே பாடி மக்களை மகிழ்விப்போர் பலர் இருந்தனர். நாளடைவில் இங்ஙனம் பாடியோர் முகமூடி அணிந்து கொண்டு நடித்துக்காட்டவும் ஆரம்பித்தனர். பலபேர் சேர்ந்து ஒரு சிலர் பாட, ஒரு சிலர் நடிக்க ஆரம்பித்தனர். அனேகமாக ஒரு அரண்மனை அல்லது கோயிலைச் சித்தரிக்கும் திரைச் சீலையின் பின்னணியிலேயே நாடகங்கள் நடத்தப்பட்டன. திறந்தவெளியிலேயே நாடகங்கள் நடந்தன. நடிகர்கள் நீண்ட பேச்சுகளை மனப்பாடம் செய்துகொண்டு பேசினர். இடையில் பின்னணிப் பாடல்களும் பாடப்பெற்றன. முகமூடி அணிந்து கொண்டதால் நடிகர்கள் உணர்ச்சிகளை வெளிக்காட்ட முடியவில்லை. சொற்கள் மூலமாகவே உணர்ச்சிகளை அன்னர் வெளிப்

படுத்தினர். மலைச்சரிவுகளில் அமைக்கப்பட்ட இருக்கைகளி லிருந்து நாடகத்தை மக்கள் பார்த்தனர். இன்பியல் நாடகங்களை விடத் துன்பியல் நாடகங்களையே அவர்கள் பெரிதும் ரசித்தனர். பிடிக்காத நடிகர்களை அவர்கள் கல்லெறிந்தும் கூச்சலிட்டும் மேடையைவிட்டுத் துரத்தினர்.

நூல்கள் எழுதுவதையும் கிரேக்கர்கள் ஒரு கலையாகக் கொண்டனர். பேப்பிரஸ் (Papyrus) என்ற எகிப்தியச் செடியி னின்றும் செய்யப்பட்ட தாள்களில் எழுதி அவற்றை நீட்டு வாக்கில் ஒட்டி அதை ஒரு கழியில் சுருட்டி வைத்துக்கொள்வர். அந் நூலின் பெயர் ஒரு சீட்டில் எழுதிக் கழி முனையில் தொங்க விடப்படும். மரப்பட்டைகளில் எழுதி அவற்றை அடுக்கி வைத்துக்கொள்வதும் உண்டு. கூர் சீவப்பட்ட குச்சியைக் கொண்டு சிவப்பு, கறுப்பு மைகளில் தோய்த்து அவர்கள் எழுதி னர். அரசாங்க அறிக்கைகள் மெழுகு பூசப்பட்ட பலகைகளில் எழுத்தாணிகளால் எழுதப்பட்டன. பெரிய நகரங்களில் எல்லாம் பல்லாயிரம் நூல்களைக் கொண்ட நூல்நிலையங்கள் இருந்தன.

இலக்கியம்

ஒரு நாட்டின் நாகரிகத்தை உள்ளபடியே படம்பிடித்துக் காட்டுபவை அங்குக் காணப்படும் இலக்கியங்களே அன்றி வேறல்ல. இலக்கியத் துறையில் கிரேக்கர்கள் சிறந்த முன் னேற்றம் எய்தியிருந்தனர். பண்டைய கிரேக்க இலக்கியங் களின் அருமை பெருமைகள் இன்றும் உலகோரால் பாராட்டப் படுகின்றன. தாங்கள் படைத்த கோயில்களிலும், சிலைகளிலும் அழகினைப் பெய்து வைத்திருப்பது போன்றே இலக்கியத்திலும் அவர்கள் அழகை ஊட்டிவைத்துள்ளனர். அவர்களது புராணங் களிலும், இதிகாசங்களிலும், அரசியல் பேருரைகளிலும், நாடகங் களிலும், வரலாறுகளிலும் ஒருவிதச் சீர்மையும் ஓர்மையும் தெளிவும் திட்டமும் ஏனைய கலைகளில் காணப்படுவது போன்றே வெளிப்படுகின்றன. அவர்களது தத்துவங்கள், சரித்திரங்கள் கூட இலக்கியங்கள் போலவே காட்சியளிக்கின்றன. கிரேக்க இலக்கியங்களைக் கி. மு. 475–க்கு முற்பட்ட கால இலக்கியம், பொற்கால இலக்கியம் (475-300 கி. மு.), அலெக்சாந்தரின் கால இலக்கியம் (300-146 கி. மு.) என மூன்று பாகமாகப் பிரிக்கலாம். முதற்பகுதியில் இதிகாச இலக்கியமும், பாட்டுடைச் செய்யுளும் (Lynic poetry) வளர்ந்தன. பொற்காலத்தே வரலாறு, பேச்சுக் கலை, நாடகம் முதலியவை வளர்ந்தன. கடைக்காலத்தில் இலக் கியம் சற்றே நலிவடைவதைக் காண்கிறோம். புதுமை எதுவுமின் றிப் பழையவற்றையே திருப்பி விளக்கமான முறையில் எழுது வதையே மக்கள் இக்காலத்துத் தொழிலாகக் கொண்டனர்.

நாம் ஏற்கெனவே பார்த்தபடி ஈலியட், ஒடிசி என்ற ஹோமரது இதிகாச காவியங்களே கிரேக்கரின் மிகப் பழைய இலக்கியங்களாகும். அக்கீலஸ், ஒடிஸியஸ் ஆகிய வீரர்களின் கதையை விளக்கும் அக் காவியங்கள் இலக்கிய நயம் செறிந்தவை. நன்கு ஒன்றோடொன்று பின்னப்பட்ட கதா நிகழ்ச்சிகளும் (Plots) இசையோடு கூடிய செய்யுட்களும், சிந்தைக்கினிய கற்பனைகளும், பலவிதமான உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளும் நிறைந்த இவ்விதிகாசங்கள், பிற்கால இலக்கியங்களுக்கு வழி காட்டும் ஒளிவிளக்குகளாய்த் துலங்கின. கி. மு. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஹெஸியாட் (Hesiod) எனும் கவிஞர் ஹோமரைப் போல் தெய்வீக மனிதர்களைப் பற்றியல்லாது சாதாரண மக்களைப் பற்றியும் பாடினார். 'வேலையும் காலமும்' (Works and Days) என்ற தமது நூலில் அவர் ஒரு விவசாயி எந்தெந்த எண்ணத்தில் என்னென்ன செய்யவேண்டுமென்பதை விவரிக்கிறார். தியாஜனி (Theogeny) என்ற நூலில் அவர் கிரேக்கக் கடவுளர்களின் வம்சாவளியை விவரிக்கின்றார். ஹோமர் காலத்தை அடுத்த நூற்றாண்டுகளில் மக்கள் வியாபாரம், குடியேற்றம் ஆகியவைகளில் சிறந்து விளங்கினர். தனி மனிதர்கள் தம் உணர்ச்சிகளை வெளிப்படுத்திக் கையறு நிலைப் பாடல்களை (Elegy) உருக்கமாகப் பாடலாயினர். காதல், வீரம், வாழ்க்கையில் ஏற்படும் ஏமாற்றம், இகழ்ச்சி இவைபற்றிப் பல இரங்கற்பாக்கள் புனையப்பட்டன. மிம்னர்மஸ் (Mimnermus) தியோக்னிஸ் (Thegnis) போன்றோர் இத்தகைய கவிதைகளில் சிறந்தவராவர். கி. மு. 6-ஆம் நூற்றாண்டில் இறங்கற் பாடல்களுக்குப் பதிலாக உணர்ச்சி மிக்க உருக்கப் பாடல்கள் (Lyric poetry) நிறையப் பாடப்பெற்றன. லூர் என்ற யாழின் இசையோடு கூடிய இப் பாடல்களில் காமம், பொறுமை போன்ற பேருணர்ச்சிகள் வெளிப்படுத்தப்பட்டன. ஆல்கியஸ் (Alcaeus) என்ற ஆண்பாற் புலவரும், சாப்போ (Sappho) என்ற பெண் பாற் புலவரும் காதலின் அழகையும், வசந்த காலத்தின் இன்பத்தையும், கோடைக்கால இரவின் வனப்பையும் வருணித்து உணர்ச்சிப் பாடல்களைப் பாடினர். தனிமனிதரின் உணர்ச்சியையே அன்றிச் சமுதாயத்தின் உணர்ச்சிகளையும் ஒரு சிலர் விவரித்தனர். தீப்ஸ் நகரத்துப் பிண்டார் (Pindar) என்பார் இந்த வகையைச் சேர்ந்தவர். தேசியத் திருவிழாக்களில் நடைபெற்ற போட்டிப் பந்தயங்களைப் பற்றி அவர் பெரிதும் பாடியுள்ளார். நல்லவர்கட்கு இன்பத்தையும், தீயவர்களுக்குத் துன்பத்தையும் ஜியூஸ் என்ற தெய்வம் தருவதாக அவர் நம்பினர்.

பொற்கால மெனப்படும் இடைக்காலத்தில்தான் முதன் முதலில் துன்பியல் நாடகங்கள் தோன்றின. மதுக்கடவுளான டயோனிஷியஸ் என்பாரின் பொருட்டு எடுக்கப்பட்ட விழாக் களில் நடைபெற்ற ஆடல் பாடல்களே நாளடைவில் நாடகங் களாக மாறின. புராணக் கதைகளே நாடகங்களாக நடிக்கப் பட்டன. "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்ற உண்மையை (Nemesis) அடிப்படையாகக் கொண்டே துன்பியல் நாடகங்கள் எழுதப்பட்டன. அத்தகைய நாடகங் களை முதன்முதலில் எழுதியவர் ஈஸ்கிலஸ் (Aeschylus) என்பவ ராவார் (525-456 கி. மு.). அவர் எழுதிய 80 நாடகங்களில் ஏழு மட்டுமே தற்போது கிடைத்துள்ளன. பார சீகர்கள் (Persians), தீப்ஸுக்கு எதிராக எழுவர் (Seven against Thebes), புரோமோதியூஸ் பவுண்ட் (Promotheus Bound), அரஸ்டியா போன்ற நாடகங்கள் அவர் எழுதியவைகளுள் சிறந் தவை. ஸோபோக்ளீஸ் (Sophocles) (496-406 கி. மு.) என்ற நாடகாசிரியர் நூற்றுக்கணக்கான நாடகங்களை எழுதியவர். 18 நாடகங்களில் முதற் பரிசு பெபறவர். "எதிலும் அளவுக்கு மீறுதே" என்ற கொள்கையையே இவரது நாடகங்கள் அடிப் படையாகக் கொண்டுள்ளன. ஈடிப்பஸ் (Oedipus), ரெக்ஸ் (Rex), ஆன்டிகோன் (Antigone), எலெக்ட்ரா (Electra) ஆகியவை அவரது சிறந்த நாடகங்களாகும். யூரிபைடிஸ் (Euripides) என்ற நாடகாசிரியர் மனிதாபிமானி (Humanist). அவரது நாடகங்களில் செல்வந்தரைத் தாழ்த்தி ஏழைகளை உயர்த்தி யுள்ளார். சாதாரண மக்களைப் பற்றியும், அடிமைகளைப் பற்றியும் எழுதியுள்ளார். சமுதாயத்தின் ஊழல்களைச் சாடியும், மூட நம்பிக்கைகளைப் பழித்தும் அவர் எழுதியுள்ளார். அல்ஸெஸ்டிஸ் (Alcestis), மெடியா (Medea), ட்ரோஜன் பெண்கள் என்பவை அவரது தலைசிறந்த நாடகங்களாகும். இன்பியல் நாடகங்கள் துன்பியல் நாடகங்கள் போல் அவ்வளவு சிறப்பாயில்லை. அரிஸ்டோ பேனஸ் (Aristo phanes) என்பார்தாம் இன்பியல் நாடகாசிரியர்களிற் சிறந்தவர். மேகங்கள், வீரர்கள், பறவைகள், குழவிகள் என நான்குவகை நாடகங்களை எழுதியுள்ளார். அவற்றில் அவர் சோப்பிஸ்டுகள் (Sophists) எனும் தத்துவ அறிஞர்களையும், ஆவேசப் பேச்சாளிகளையும், அரசியல்வாதி களையும், நீதிபதிகளையும் கிண்டல் செய்கிறார்.

வரலாற்றின் தந்தை எனப் பேசப்படும் ஹெராடோடஸ் (Herodotus) என்பாரும், தூசிடைடிஸ், ஸெனோபன் என்ற வரலாற்றாசிரியரும் இக்காலத்தே தோன்றினர். இவர்களைப்

பற்றி எல்லாம் விரிவாக நாம் பெரிக்ளீஸின் காலம் என்ற அத்தியாயத்தில் கண்டோம்.

பேச்சுக்கலையும் இக்காலத்தே பேணி வளர்க்கப்பட்டது. நீதிமன்றத்தில் ஒருவன் தனது வழக்குகளைத் தானே வாதாட வேண்டியிருந்ததாலும், பொது மக்கள் மன்றங்களில் நன்கு ஆணித்தரமாகப் பேச வல்லாரே தலைவர்களாக மதிக்கப்பட்டதாலும் பேச்சுக்கலையை ஒவ்வொருவரும் பயின்றனர். ஆண்டிபான் (Antiphon), லிசியாஸ் (Lysias), ஐசோக்ராடிஸ் (Isocrates), இசியூஸ் (Isaeus), டெமாஸ்தனிஸ் (Demosthenes) போன்றவர்கள் கிரேக்கப் பேச்சாளிகளில் தலைசிறந்தவர்களாவர். டெமாஸ்தனிஸ் எங்ஙனம் சொல்வன்மையைப் பெருக்கிக் கொண்டார் என்பதை நாம் முன்பே கண்டோம்.

கடைக்காலத்தே எகிப்திலிருந்த அலெக்ஸாந்திரிய நகரமே கிரேக்க இலக்கியத்தின் மையமாயிருந்தது. புதுமைப் படைப்பு ஒன்றும் இக் காலத்தே ஏற்படவில்லை. இருக்கிற இலக்கியங்களுக்கு இலக்கணங்களும் விரிவுரைகளும் மொழி பெயர்ப்புகளுமே இக்காலத்து எழுதப்பட்டன. பழைய ஏற்பாடு எனும் விவிலிய நூல், ஹீப்ரு மொழியினின்று கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது, இக்காலத்திலேயேயாம். டாலமி, மெனதோ (Menetho) என்பாரது எகிப்திய வரலாறும், தியோக்ரிடஸ் (Theocritus) என்ற கவிஞரின் நாட்டுப்புற வருணனைகளும் (Idyls) இக்காலத்தே தோன்றியவைகளுள் சிறந்தவைகளாகும். இக்காலத்தே இலக்கியத்தைவிட அறிவியலே பெரிதும் அலெக்ஸாந்திரியாவில் பேணி வளர்க்கப்பட்டது.

தத்துவம்

கிரேக்கர் இயல்பாகவே எதையும் துருவித் துருவி ஆராயும் மனப்பான்மை கொண்டவர்கள். எனவே வாழ்க்கையின் நோக்கம், இப் புவனத்தின் இயல்பு, இன்ப துன்பத்தின் இலக்கணம் ஆகிய பிரச்சினைகளைப் பற்றி அவர்கள் ஓயாது சிந்தித்தனர். சிந்தித்தவற்றை அவர்கள் செய்யுள் வடிவத்திலேயே முதலில் எழுதினர். கி. மு. ஆறும் நூற்றாண்டில் "ஏழு சான்றோர்" (Seven Sages) என்றழைக்கப்படும் அறிவுலகத் தலைவர்கள் மக்களிடம் ஒழுக்க நெறிகளைப் போதித்தனர். தேலஸ் (Thales), சோலன் (Solon), பெரியாண்டர் (Pariander), கிளியோபூலஸ் (Cleobulus), சிலோ (Chilo), பியாஸ் (Bias), பிட்டாகஸ் (Pithacus) என்போரே அச் சான்றோராவர். 'எதிலும் அளவுக்கு

மீருதே" என்பது போன்ற பழமொழிகளையும், பொன்மொழி களையும் கொணர்ந்தவர்கள் அவர்களே ஆவர்.

ஆசியாமைனர்பிரதேசத்திலிருந்த மைலிடஸ் (Miletus) என்ற நகரத்திலேயே கிரீஸின் தத்துவம் முதலில் அரும்பியது. அங்கிருந்த அறிஞர்கள் பலர் உலகின் தோற்றத்தையும் தன்மையையும் ஆராய்வதில் ஈடுபட்டனர். உலகிலுள்ள பருப் பொருள் யாவும் உயிருடையன என்று அவர்கள் நம்பினர். ஆன்மா வேறு, உடல் வேறு என்று அவர்கள் கருதவில்லை. எல்லா நிலையிலும் ஆன்மாவுக்கு உடல் உண்டு என்றே அவர்கள் எண்ணினர். உலகம் அனைத்தும் நீர், நிலம், காற்று, நெருப்பு ஆகிய நான்கு மூலப்பொருள்களாலானவை என்பது அவர்தம் வாதம். இவற்றுள் எது முதற்பொருள் என்பதில் தான் ஒவ்வொரு அறிஞரும் வேறுபட்டனர். தேலஸ் (Thales) என்பார் நீரையும், அனக்ஸிமீனஸ் (Anexamenes) என்பார் காற் றையும், ஹெராக்லிடஸ் (Heraclitus) என்பார் நெருப்பையும் ஆதிமுதற் பொருளாகக் கருதினர். அவற்றிலிருந்து ஏனைய பொருள்கள் புறப்படவும், அகப்படவும் செய்கின்றன என்றும் அன்னர் கருதினர். உலக உற்பத்தி பற்றிக் கூறப்பட்டு வந்த புராண காரணங்கள் ஒழிந்து, அறிவியல் பூர்வமான ஆராய்ச்சிக்கு இவர்களின் வாதம் வித்திட்டது.

கி. மு. ஆறும் நூற்றாண்டில் சாமோஸ் தீவில் தோன்றிய பிதாகோரஸ் (Pythagores) (கி. மு. 580-500) என்பார் ஓர் அற நெறிக் கழகத்தை இதாலியிலிருந்த குரோடானில் (Croton) ஏற் படுத்தினர். எகிப்து போன்ற நாடுகளுக்குச் சென்று பெற்று வந்த அறிவை அவர் மக்களிடம் பரப்பினர். அவரது சீடர் களும், அவரும் சேர்ந்து ஒரு தத்துவ மார்க்கத்தைப் போதித் தனர். அதில் ஆன்மாவின் மறுபிறப்பு ஒப்புக் கொள்ளப் பட்டது. பூமி தன்னைத்தானும் சூரியனையும் சுற்றுகிறதென்றும் அவர்கள் கூறினர். விண்ணில் உலவும் உடுக்கள் யாவும் ஒரு வித ரீங்காரத்தை விளைவிக்கின்றன என்றும், அவ்விசை யொலியை மக்கள் கேட்க இயலாதென்றும் அவர்கள் அறிவித் தனர். சமுதாய அரசியல் சீர்திருத்தங்களை அன்னர் போதித் தனர்.

சுமார் கி. மு. 490–430-இல் வாழ்ந்த எம்பிடாக்லிஸ் (Empedocles) என்பார் தற்காலப் படித்தர வளர்ச்சிக் கொள் கையை (Evolution theory) அனுமானித்தவர். மூலப்பொருள்கள் அன்புணர்ச்சியால் ஒன்று சேர்கின்றன என்றும், பகை யுணர்ச்சி

யால் பிரிகின்றன என்றும், இங்ஙனம் பிரிந்தும் கூடியும் செயல் படுவதாலேயே செடிகளும், பின் மிருகங்களும் மக்களும் தோன்றும் நிலை உண்டாயிற்று என்றும், வாழத் தகுதி யுடையன வாழ்ந்து தகுதியற்றவை மாய்வதிலேயே வளர்ச்சி இருக்கிறதென்றும் அவர் கூறினர். அதே போல டெமாக்ரிடஸ் (Democritus) என்பார் தற்கால அணுக்கொள்கையை(Atomic theory) அனுமானித்தார். ஆன்மா முதற்கொண்டு எல்லாப் பொருள்களும் அணுக்களின் வெவ்வேறு வகையான கலப்பினால் உண்டாகின்றன என்பது அவரது கூற்றாகும். இறவாத தன்மை பெற்ற ஆன்மாவில் அவருக்கு நம்பிக்கை இல்லை. பெரிக்ளீஸின் காலத்து வாழ்ந்த அனெக்ஸகோரஸ் (Anexagores) உள்ளம் வேறு, உடல் வேறு என்றும் வற்புறுத்தி, மனம் என்பது பகுபொருளே மாற்றிவிடக் கூடியது என்றும் போதித்தார். சந்திரனும் சூரியனும் கடவுள் களல்ல. பூமியை ஒத்தவைகளே என்று துணிந்து அவர் கூறினர். அதனால் நாடு கடத்தப்பட்டார்.

கி. மு. 5-ஆம் நூற்றாண்டின் இடையில் கிரீஸில் சோப்பிஸ்டுகள் (Sophists) எனும் ஒரு புதுவகைத் தத்துவ ஞானிகள் தோன்றினர். அவர்கள் உலகு, ஆன்மா, கடவுள் இவை பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. மனிதன் எவ்வகையில் நல்வாழ்வு வாழலாம் என்பது பற்றியே அவர்கள் கவலைப் பட்டனர். அரசியலில் பங்குபெற்ற ஒருவன் முழுக்குடிமகனாக வாழ அவர்கள் மக்களுக்குக் கற்றுக்கொடுத்தனர். பேச்சுக் கலைப் பயிற்சியை வழங்க அவர்கள் பணம் பெற்றுக் கொண்டனர். மற்றும் வேறுபல கலைகளையும் அவர்கள் போதித்தனர். நடமாடும் பல்கலைக் கழகங்களாயும், ஊர்சுற்றும் ஆசிரியர் களாயும் அவர்கள் விளங்கினர். புரோதகோரஸ் (Protagoras) என்ற சோப்பிஸ்ட் மிகப் புகழ் பெற்றவர். அவர் "மனிதனே எல்லாவற்றுக்கும் அளவுகோல்" என்று போதித்தார். "மனி தனுக்கு நன்மை பயப்பதெதுவோ அதுவே நல்லது. மற்றவை எல்லாம் கெட்டவையே" என்பது அவரது வாதமாகும். உலகில் நல்லது கெட்டது என்பவை எல்லாம் நிலையானவை அல்ல என்றும், இடத்துக்கிடம், மனிதனுக்கு மனிதன் எனும் வகையில் அவை மாறக்கூடியன என்றும் கூறினர். அவனவனே அவனவனுக்கு எது நன்மை, தீமை என்பதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறினர். ஜார்ஜியாஸ் (Gorgias) எனும் மற்றொரு சோப்பிஸ்ட், உலகம் என்பது தனியே இல்லை என்றும், எல்லாம் மனத்தின் ஒரு தோற்றமே அன்றி வேறல்ல என்றும் கூறினர். பொதுவாக சோப்பிஸ்டுகள் மனிதாபிமானி

களாயிருந்தனர். போர்செய்தல், அடிமைமுறை முதலியவை களைக் கண்டித்துச் சுதந்திரம், சமத்துவம் போன்ற கொள்கை களை அன்னர் வற்புறுத்தினர்.

சோப்பிஸ்டுகளின் தனிமனித வாதக் கொள்கையையும் (Individualism), சமயோசித ஒழுக்கக் கொள்கையையும் (Expediency) சாக்ரடீஸ், பிளேடோ, அரிஸ்டாடில் போன்றோர் பெரிதும் கண்டித்தனர். கேள்விபதில் முறையால் சாக்ரடீஸ் உண்மை காண முயன்றார். தூய அற ஒழுக்கத்தை அவர் போதித்தார். ஆன்மா, கடவுள் எல்லாம் என்றென்றும் உள் ளவை என்றும், தன்னையே அறிந்தால் கடவுளையும் அறியலாம் என்றும் அவர் போதித்தார். ஆனால் கோயில் குளங்களையும், சில்லறைத் தேவதைகளையும் அவர் பழித்ததால் தெய்வ நிந்தனைக் குற்றம் சுமத்தப்பட்டுக் கொல்லப்பட்டார் என்பதை விரிவாக ஏற்கெனவே கண்டோம். அவரது சீடரான பிளேடோ (427-347 கி. மு.) குடியரசு, (Republic), சட்டங்கள் (Laws) ஆகிய நூல்களில் அவர் தமது இலட்சிய அரசைப் பற்றிக் கூறுகிறார். தத்துவ ஞானிகளே நாட்டை ஆளவேண்டுமென் றும், அவர்கள் பொதுவுடைமையைக் கைக்கொள்ள வேண்டு மென்றும் அவர் கூறுகிறார். உயர்குடிப் பெருமக்களாட்சியே (Aristoeracy) உயர்ந்த ஆட்சி எனப் போதித்தார். பிளேடோ, மறுபிறவியில் நம்பிக்கை கொண்டிருந்தார். மனிதன் கடவுளைப் போல் மாறவேண்டும் எனப் போதித்தார். அவரின் சீடரான அரிஸ்டாடில் கிரேக்க அறிஞர்களிலேயே தலைசிறந்தவர். அவர் ஆய்ந்து பாராத பாடமே இல்லை எனக் கூறலாம். அரசியலைப் பற்றித் தனி நூலை எழுதியுள்ளார். புரட்சிகள் ஏற்படக் காரணத்தை ஆராய்ந்து அவைகளைத் தடுக்கும் வழிகளையும் கூறுகிறார். அரசியலமைப்புகளை அழகாக வகைப்படுத்துகிறார். கலப்பு அரசியலமைப்பின் பெருமையை விளக்குகிறார். பாலிடி என்ற நடுத்தரமக்கள் ஆட்சியே நல்லாட்சி என்கிறார். உடல்நூல், தாவரநூல், பௌதிகம், வானநூல், மருத் துவம், அளவை நூல், அற நூல் என்ற பலவகைத் துறையிலும் ஆராய்ந்து அவர் நூல்கள் எழுதியுள்ளார். 'எதிலும் மிதமா யிருக்க வேண்டும்' என்பது அவரது மிக முக்கியமான போதனை யாகும்.

அறிவியல்

பொதுவாக நம்பப்படுதல் போன்று கிரேக்கர்கள் அறிவி யலில் மெச்சத்தக்க முன்னேற்றம் காணவில்லை. பெரிக்ளீஸின்

காலத்தும், அவருக்குப்பின் ஒரு நூற்றாண்டு வரையிலும் கிரேக்கர்கள் கலைகளில் காட்டிய ஆர்வத்தை அறிவியலில் காட்டவில்லை. இயற்கையை வென்று சுகபோக வாழ்க்கையில் திளைக்க அவர்கள் அவ்வளவாக முயலவில்லை. எனவே கணிதம், உயிரியல் (Biology), மருத்துவம் போன்ற ஒரு சில துறைகளில் மட்டுமே இக் காலத்தில் கிரேக்கர் மேம்பாடுற்றனர்.

கிரேக்கக் கணிதத்தின் தந்தை எனக் கருதப்பெறுபவர் மைலிடஸ் நகரைச் சேர்ந்த தேலஸ் (Thales) என்பவராவர். வரைபடக் கணிதத்தில் (Geomatry) அவர் முதன்முதலில் ஒரு சில தேற்றங்களை (Thearems) உண்டாக்கினர். பின்னால் வந்த யூக்லிட் (Euclid) அவற்றை மேலும் விரிவாக்கினர். ஒரு வட்டமானது அதன் விட்டத்தால் இரண்டு சமபாகமாகப் பகுக்கப்படுகிறது. "இரு சம பக்க முக்கோணத்தின் (Isooceler jriungle) அடிப்பக்கக் கோணங்கள் சமம்; இரண்டு நேர்க் கோடுகள் ஒன்றை ஒன்று வெட்டும் போது, செங்குத்தான எதிர் புறக் கோணங்கள் சமம்" என்பனபோன்ற தேற்றங்கள் இவரால் கண்டுபிடிக்கப்பட்டனையாகும். பித்தாகோரஸின் சீடர்கள் ஒற்றைப்படை, இரட்டைப்படை எண்களைப் பற்றிப் பல உண்மைகளை வெளியிட்டனர். ஒரு முக்கோணத்தின் மூன்று கோணங்களின் கூடுதல் (180) இரண்டு செங்கோணங்களுக்குச் சமம் என்ற தேற்றமும், ஒருசெங்கோண முக்கோணத்தின் கர்ணத்தின் மீது வரையப்பட்ட சதுரத்தின் பரப்பளவு மற்ற இரண்டு பக்கங்களின் மேலும் வரையப்பட்ட சதுரங்களின் மொத்தப் பரப்பளவுக்குச் சமம் என்ற பித்தாகோரஸின் சித்தாந்தமும் இக்காலத்துத்தோன்றிய கணித உண்மைகளாகும். கியாஸ் (Chios) நகரைச் சேர்ந்த ஹிப்போகிராட்டஸ் (Hippocrates) என்பாரே வரைபடக் கணிதத்தை முதன் முதலில் வளர்த்தவர்.

அனக்ஸிமேண்டர் (Anaximander) என்ற தத்துவ மேதை, உயிர்ப்பொருள்களின் படித்தர வளர்ச்சிக் கொள்கையின் (Organic Evolution) சில மூக்கியக் கூறுபாடுகளை வெளியிட்டார். உலகில் ஆதியில் உயிர்ப்பொருள்கள், உலகெங்கும் நிறைந்திருந்த கடலிலேயே தோன்றினவென்றும், தண்ணீர் வற்ற வற்ற அவை நிலத்தில் வசிக்கத் தொடங்கி, மாறுபட்ட சூழ்நிலைக்கேற்பத் தம்மை மாற்றிக் கொண்டு நிலப்பிராணிகளாக மாறின என்றும், இத்தகைய முறையில் இறுதியில் தோன்றியவனே மனிதன் என்றும் அவர் கூறிச்சென்றார். உயிர்நூல் பற்றிய அரிய பல உண்மைகளைக் கண்டுபிடித்தவர் அரிஸ்டாடில் எனும் அறிஞராவார். பூச்சிகள் எப்படிப் புழுவிலிருந்து

படிப்படியாக உருமாற்றம் அடைகின்றன என்பதையும், விலாங்கு மீன் (Eel), சுருமீன் (Dog-Fish) போன்ற பிராணிகளில் கரு வளாச்சி எவ்வாறு ஏற்படுகின்றதென்பதையும், இன்னும் பல் வேறு உண்மைகளையும் ஆராய்ச்சி செய்து அவர் கண்டு வெளி யிட்டார். ஆனல் ஒரு சில மூடக்கொள்கைகளையும் அவர் நம் பியதாகத் தெரிகிறது. சான்றாக ஆடுகள் காதுகள் மூலமாகச் சுவாசிக்கின்றன என்றும், தாவரங்களில் பால்பாகுபாடு (Sexvality) இல்லை என்றும் அவர் நம்பினர்.

மருத்துவத் துறையில் ஒருசில உண்மைகளைக் கண்டறிந் தவர்களும் தத்துவ மேதைகளே யாவர். எம்பிடாக்லிஸ் (Empedocles) எனும் அறிஞர், இரத்தமானது இருதயத்துக்குச் சென்று திரும்புவதையும், தோல் எப்படிச் சுவாச இந்திரியங் களின் பணியை ஓரளவு செய்கிறதென்பதையும் கண்டுபிடித் தார். ஆல்க்மியான் (Alcmeon) எனும் அறிஞர் பிராணிகளின் உடலைப் பகுத்து உண்மை அறியும் முறையைக் கொணர்ந்தார். கண், நரம்பு பற்றியும் அவர் பல உண்மைகளைக் கண்டு வெளி யிட்டார். காஸ் (Cos) நகரைச் சேர்ந்த ஹிப்போகிராட்டஸ் 'நோய் உண்டாவதற்குக் காரணம் இயற்கையில் ஏற்படும் கோளறேயன்றி மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்திகள் அல்ல' என்று அறுதியிட்டுக் கூறினர். "நோய் நாடி, நோய்முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்" ஒன்றே நோய் நீக்கும் வழி என்றும், மந்திரந்தாலும் தந்திரத்தாலும் ஒன்றும் முடியாது என்றும் அவர் வற்புறுத்தினர். நோயின் அறிகுறி களை அவர் ஆராய்ந்தார். நெருக்கடியான கட்டங்களில் அறு வைச் சிகிச்சையின் அவசியத்தைப் பற்றியும் அவர் எடுத்துக் கூறினர். பல மருந்துகள் பற்றி அவர் அறிந்திருந்தார். ஆனல் உணவுக் கட்டுப்பாட்டையே நோய் நீக்கத்துக்கு அவர் பெரிதும் சிபாரிசு செய்தார். ஆனல் வெண்பித்த நீரும், மஞ்சள் பித்த நீரும், இரத்தமும், சளியும் உடலில் அதிகமாகி விடுவாதாலேயே நோய்கள் விளைகின்றன என்ற மூடக் கொள்கையை அவர் நம்பினர். ஆகையாற்றான் நோயாளி களின் உடலைக் கீறி இரத்தத்தை வெளிப்படுத்தும் முறை கிரீஸில் பரவலாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

இங்ஙனம் பண்டைய கிரேக்கர்கள் பௌதிகம் போன்ற அறிவியல் ஆராய்ச்சியில் அதிகம் ஈடுபடவில்லையெனினும் அறிவியல் மனப்பான்மை அன்னாரிடம் பெரிதும் காணப் பட்டது. எதையும் நன்கு சிந்தித்துச் சிந்தித்து ஆராய்ந்த பின்பே அவர்கள் நம்பினர். சமயத் துறையில் ஒருசில மூட

நம்பிக்கைகளைக் கொண்டிருந்த போதிலும் ஏனைய துறைகளில் பகுத்தறிவை அவர்கள் பெரிதும் பயன்படுத்தினர். செய்திகளைச் சேகரித்தல், சேகரித்த செய்திகளைத் தொகுத்தும் வகுத்தும் உண்மைகாணல் இவைகளால் அவர்கள் அறிவியல் முறைகளையே எல்லாத் துறைகளிலும் கடைப்பிடித்தனர். சமயமோ அல்லது சமயக்குரவர்களோ அன்னரின் சிந்தனைக்கு அணைபோட இயலவில்லை. "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்ற குறளுக்கிணங்க அவர்கள் எதையும் சொந்தமாகச் சிந்தித்தே ஒரு முடிவுக்கு வந்தனர்.

பொருளாதார வாழ்க்கை

கிரேக்க மக்களின் பொருளாதார வாழ்வு மிக எளிமையான தாயிருந்தது. வேளாண்மை, வியாபாரம் இவ்விரண்டே அவர் தம் முக்கியத் தொழில்களாய் இருந்துவந்தன. பெரும்பாலான மக்கள் நாட்டுப்புறங்களிலேயே வாழ்ந்தனர். ஆலிவ் மரங்கள் வளர்த்தல், திராட்சை பயிரிடுதல், ஆடுமாடு வளர்த்தல் ஆகிய இவைஅன்னரின் தொழில்களாகும்.தொழில்கள் பெரிய அளவில் ஒன்றும் நடைபெறவில்லை. பானை வனைதல், நெசவு, படைக் கலன்கள் செய்தல் இவைகளே முக்கியத் தொழில்களாயிருந் தன. ஆதென்ஸில் இருந்த மிகப்பெரிய தொழிற்சாலை யில் கேடயங்கள் செய்யப்பட்டுவந்தன. அதில் 120 அடிமை களே பணிபுரிந்தனர். சிறுசிறு கடைகளிலேயே ஏனைய தொழில்கள் நடைபெற்றன. பொதுமராமத்துப் பணிகளில் பல பேர் வேலை பார்த்தனர். நீதிமன்றங்களிலும், சட்டமன்றங் களிலும் பணியாற்றி அதில் வரும் வருவாயைக் கொண்டே வாழ்ந்தோர் பலராவர். அரசியலையே ஒரு தொழிலாகக் கொண் டவர் பலர் இருந்தனர். சொற்பொழிவு எழுதித் தந்து அதன் மூலம் பொருளீட்டிச் செல்வந்தர்களானோர் பலர். டெமாஸ் தனிஸ் என்பார் அதற்கொரு பெருஞ்சான்றுவர். பேச்சுக்கலை யையையும் ஏனைய கலைகளையும் கற்பித்து அவற்றின் மூலம் சோப்பிஸ்டுகள் போன்றோர் பிழைத்தனர். குறி சொல்லியும், ஜோஸியம் கூறியும் பலர் வயிறு வளர்த்தனர். மருத்துவர்கள், ஆசிரியர்கள், கட்டிடக் கலைஞர்கள், பொற்கொல்லர்கள், கருமான்கள், சிற்பிகள், ஓவியர்கள் போன்ற தொழிலாளி வகுப் பினர் பலர் இருந்தனர். சராசரி அவர்களுக்குக் கூலி நாளொன் றுக்கு ஒரு டிராக்மா (Drachma) எனும் கிரேக்க நாணயமாகும். கூலியில் அதிக வேற்றுமை இல்லாத காரணத்தினால் மக்களி டையே பொருளாதார சமத்துவம் ஓரளவு காணப்பட்டது.

அடிமையும் ஆண்டானும், குடிமகனும் அன்னியனும் ஏறக் குறைய ஒரே மாதிரி உடை உடுத்தி உணவருந்தி வந்தனர். கேளிக்கைகளிலும் அவர்கள் யாவரும் சமமாகவே பங்குகொண் டனர். பொதுவாகக் கிரேக்கர்கள் ஏழ்மை நிலையிலேயே இருந் தனர். அவர்தம் உடையும் மிக எளிமையானவை, அதிக மாகச் சம்பாதித்து மீத்துவைக்கும் மனப்பான்மை அவர்களிட மில்லை. நாள் முழுவதும் வறிதே உழைப்பில் கழிக்கக் கிரேக் கர்கள் விரும்பவில்லை. ஏதோ ஓரளவிற்குச் சம்பாதித்துப் பின் எஞ்சிய ஓய்வு நேரத்தில் அவர்கள் அரசியலிலும், சந்தைக் கடைப் பேச்சிலும், அறிவுக்கும் உணர்ச்சிக்கும் உணவூட்டும் பணிகளிலும் ஈடுபட விரும்பினர். ஆனால் பலர் திரை கட லோடி நிறையப் பொருளீட்டினர். சுரங்கத் தொழில் போன்ற வைகளை அவர்கள் கேவலமாக எண்ணிய போதிலும் கையால் வேலை செய்வதை அன்னர் கண்ணியமாகவே கருதினர். பண்ணைகளிலும் கடைகளிலும் சுதந்திரமாகவும், சில சமயம் கூலிக்காகவும் உழைக்க அவர்கள் தயங்கியதே இல்லை. பொதுப் பராமரிப்புப் பணிகளில் அவர்கள் அடிமைகளோடு அடிமைகளாய் வேலை செய்து அதே கூலியை வாங்கிக் கொண் டனர். உடற்பசியைப் போக்க ஓய்வையும் பல கிரேக்கர்கள் ஒருங்கே தேடினர்.

சமுதாய வாழ்க்கை

பண்டைய கிரேக்கரின் சமுதாய வாழ்க்கைக்குச் சிறந்த தோர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது ஆதென்ஸ் நகர மக்களின் வாழ்வேயாகும். பெரிக்ளீஸின் காலத்து அத்தீனியச் சமுதா யத்தின் சிறப்பியல்புகளை நாம் முன்னரே விரிவாகக் கண்டோம். பெரிக்ளீஸின் காலத்துக்குப் பின்னும், அலெக்ஸாந்தர் படை யெடுப்புக்கு முன்னும் இருந்த கிரேக்கச் சமுதாயத்தில் பெருத்த மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை. அரசியலுரிமை பெற்ற குடிமக்கள் அவ்வுரிமையைப் பெறுத மெடிக்ஸ் (Metics) எனும் அன்னியர்கள், அடிமைகள் ஆகியோரே சமுதாயத்தின் முக்கியப் பிரிவினராயிருந்துவந்தனர். பினீஷியர்கள், யூதர்கள் போன்ற வர்கள் நிலம் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படாவிடினும் ஏனைய எல்லாத் துறைகளிலும் சுதந்திரமாகவே வாழ்ந்தனர். பிரியப்பட்ட தொழில்களில் அவர்கள் ஈடுபட்டனர். சமுதாயத் தின் கூட்டு வாழ்விலும் அன்னர் கலந்துகொண்டனர். அடிமைகள், பொதுவாக மிருகங்களைப் போல நடத்தப்பட்டார்கள் எனினும் ஒருசில அடிமைகள் கூலிக்கு வேலை செய்யவும், சொத்து வைத்துக் கொள்ளவும், சிறிய அரசாங்கப் பதவிகளை

வகிக்கவும், வங்கிகளை நடத்துதல் போன்ற பொறுப்பான பணிகளில் ஈடுபடவும் அனுமதிக்கப்பட்டனர். ஆதென்ஸில் அவர்கள் நிலை சற்று உயர்வாகவே இருந்தது. வீதிகளிலும் சந்தைகளிலும் அவர்கள் ஏனைய குடிமக்களோடு தோளோடு தோள் சேர்த்துச் சமமாகவே உலவினர். உடையிலும் அவர்களுக்கும் பிறர்க்கும் வேறுபாடு காணப்படவில்லை. நல்ல விசுவாசமுள்ள அடிமைகள் சிலர் விடுதலையும் வழங்கப்பட்டனர்.

பெண்டிரின் நிலையிலும் பெருத்த மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை. "ஆண்களிடையே அதிகம் பேசாத பெண்களே உயர்ந்தவர்கள்" என்ற பழமொழியிலிருந்து அவர்களது நிலையை நாம் நன்குணரலாம். "ஒரு பெண் ஒரு ஆணுக்கு இரண்டு நாட்களில்தான் மகிழ்ச்சியுண்டாக்குகிறாள். ஒன்று அவளை அவன் திருமணம் செய்துகொள்கிற போது. இன்னொன்று இறந்த பின் அவளைப் புதைக்கும் போது" என்று ஹிப்போனேக்ஸ் (Hipponax) என்ற கவிஞன் கூறுகிறான். பிளேடோ கூடப் பெண்களை இழிவாகவே பேசுகிறார். வீட்டில் அடைபட்டுக் கிடப்பதே பெண்களின் கடமையாகக் கருதப்பட்டது. அங்கு அவர்கள் நூற்றல், நெய்தல், சமையல் செய்தல் முதலிய பணிகளிலீடுபட்டனர். பொது இடங்களுக்குப் போகவோ, கணவனைத் தவிர ஏனைய ஆண்களோடு பழகவோ அவளுக்கு உரிமையில்லை. விருந்துகளிலும், பொது கேளிக்கைகளிலும் அவர்கள் கலந்து கொள்ள இயலாது. தன் கணவனைத் தானே தேர்ந்தெடுக்கும் உரிமையும் ஒரு பெண்ணுக்குமில்லை. பெற்றோர் பார்த்துக் கட்டிவைக்கிற கணவனைக் கட்டிக்கொண்டு, அவனைத் தெய்வமாகப் போற்றித் தொண்டு செய்து வருவதே அவளது தலையாய கடமையாகும். ஸ்பார்ட்டாவிலும் பொதுவாக டோரிய வகுப்பினரிடையிலும் பெண்கள் சற்றுச் சுதந்திரமாகவே வாழ்ந்தனர். ஏனைய வகுப்பினரில் பெண் ஏறக்குறைய ஓர் அடிமை போலவே நடத்தப்பட்டாள். அதனால் கிரேக்க ஆண்களுக்கு அவர்களிடம் மதிப்பும் கவர்ச்சியும் ஏற்படாதொழிந்தது. ஏதோ ஒரு பிள்ளை பெறும் இயந்திரமாகவே பெண் அவர்களுக்குத் தோன்றினாள். அவர்களோடு சரிநிகர் சமானமாகப் பழகி இன்பம் கொடுக்கக் கூடியவர்கள் பொதுவாகக் கிரேக்கர் அல்லாத அன்னியப் பெண்களாகவே இருந்தனர். எனவே ஹெடாரி (Hetaerae) என்ற அத்தகைய பெண்களின் நிலை சமுதாயத்தில் உயர்ந்தது. ஆஸ்பாஸியா (Aspasia) என்ற பொதுமகளிடம் பெரிக்ளீஸ் என்ற அரசியல் தலைவரும், வேறுபல தத்துவ மேதைகளும் கூட உள்ளத்தைப் பறிகொடுத்தனர் என்றால் அதற்குக்

காரணம் கிரேக்கப் பெண்கள் சமுதாயத்தில் நன்கு மதிக்கப் படாததே யாகும்.

இளைஞர்கள் பொதுவாகச் சமுதாயத்தில் நன்கு மதிக்கப் பட்டனர். ஸ்பார்ட்டாவில் அவர்களுக்கு வெறும் உடற்பயிற்சிக் கல்வி மட்டுமே அளிக்கப்பட்டதெனினும் ஆதென்ஸிலும், இதர நகர்களிலும் அவர்களுக்கு பல்வேறு பாடங்கள் கற்பிக்கப்பட்டன. தனிப்பட்டவர்கள் நடத்திய சிறு பள்ளிகளிலே இளைஞர்கள் பாடங் கற்றனர். பிளேடோ, அரிஸ்டாடில் போன்றவர்கள் பெருங் கல்விக்கூடங்களை நடத்தி ஏராளமான மாணவர்களுக்கு இலக்கியம், கணிதம், அளவைநூல் போன்ற பல துறைகளில் பயிற்சியளித்தனர். இலக்கணம், இசை, உடற்பயிற்சி இவை மூன்றும் எல்லா மாணவர்க்கும் கட்டாயப் பாடங்களாகும். உடற் பயிற்சியால் உடலும், இலக்கணம், அளவைநூல் போன்ற பாடங்களால் உள்ளமும், இசையால் ஆன்மாவும் வளர்ச்சி யடையும் என்றும், இம் மூன்றையும் சீராக வளரச் செய்வதே கல்வியின் நோக்கம் என்றும் கிரேக்கர்கள் கருதினர்.

மக்களின் அன்றாடப் பழக்கவழக்கங்கள் நாட்டின் கால நிலையால் பெரிதும் உருவாக்கப்பட்டன. வெப்பமும் வறட்சியும் பொருந்திய கால நிலையே கிரீஸில் பொதுவாகக் காணப்பட்டது. மழை ஒரோவழிதான் பெய்யும். மற்ற சமயங்களில் வானம் மேகமெதுவுமின்றித் தெளிவாகவே இருக்கும். எனவே மக்கள் திறந்த வெளி வாழ்க்கையையே அதிகம் நாடினர். உடற் பயிற்சி அரங்குகளிலும், மற்போர் மைதானங்களிலும் அவர்கள் பல மணி நேரங்களைக் கழித்தனர். நாற்சந்திகளிலும், சந்தைக் கடைகளிலும் நின்று கொண்டே பேசுவதில் பெருவிருப்பம கொண்டிருந்தனர். சந்தைக் கூடம் கிரேக்கரின் சிறந்த பொழுது போக்கிடமாகத் திகழ்ந்தது. அன்றாடத் தேவைக்கு வேண்டிய பார்லி, மீன், காய்கறி போன்ற பொருள்கள் அங்குக் கிடைத்ததோடு அறிவுப் பசியைத் தணிக்கும் சொற்பொழிவு களும் அங்கு நடைபெற்றன. ஆங்கே மரநிழலில் அமர்ந்து கொண்டு தத்துவாசிரியர்கள் பாடம் சொல்வர். ஈலியட், ஒடிசி போன்ற காவியங்களிலிருந்து படித்துக் கதா காலட்சேபம் நிகழ்த்துவர். இன்னும் சிலர் யாழ் போன்ற கருவிகளை மீட்டிக் கொண்டே நாடோடிப் பாடல்களைப் பாடிய வண்ணமிருப்பர். மற்றும் சிலர் தாங்கள் வேற்று நாடுகளில் கண்டதையும் கேட்ட தையும் படம் போட்டு விவரித்துக் கொண்டிருப்பர். ஒலிம்பிக் விழாப் போட்டிக்காகத் தயாரிக்கப்பட்ட காவியத்தையும், உரை களையும், வரலாறுகளையும் ஒரு சிலர் படித்துக் காட்டி ஒத்திகை

பார்ப்பர். இன்னும் சிலர் தாம் வரைந்த ஓவியத்தைப் பலருக்கும் காட்டி விளக்குவர்; இங்ஙனம் ஐம்பொறிகளுக்கும், இன்பமூட்டும் பல பொருட்கள், சந்தைக் கூடத்தில் காணப்பட்ட தால்தான் மக்கள் அங்கு தினம் ஒரு முறையாவது சென்று வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். நாவிதர்களின் கடை, கிரேக்கர்கள் தினமும் விரும்பிச் செல்லும் இடங்களி லொன்றாகும். இக்காலத்துப் போலவே அக்காலத்தும் நாவிதர் களின் கடையில் பலரும் கூடி அரசியல் பேசுவது வழக்கம். சிசிலியில் அத்தீனியர்கள் அடைந்த தோல்வியைப் பற்றிய செய்தி முதலில் நாவிதன் கடையில்தான் வெளியிடப்பட்ட தென்பர். அலெக்ஸாந்தர் காலத்துக்கு முன், முகத்தை மழிக்கும் வழக்கம் கிரேக்கர்களிடம் இல்லை. ஆனால் தாடியையும் சிகையையும் அவர்கள் நறுக்காக வெட்டிவிட்டுக் கொள்ளவும், அலங்காரம் செய்து கொள்ளவும் நாவிதர் கடையை நாள் தோறும் நாடினர். சிகையலங்காரம் முடிந்த பின்பே கிரேக்கர்கள் சந்தைக்குச் சென்று சாமான்கள் வாங்குவர். வாங்கி அடிமைகள் வசம் அவற்றை வீட்டுக்கு அனுப்புவர். வங்கிக்குச் செல்லுதல் போன்ற பல காரியங்களை முடித்துக் கொண்டு நண்பகலுக்கு வீடு சென்று உணவருந்துவர். உண்டிக்குப் பின் ஒரு சிறிது கண்ணயர்வது அவர்தம் வழக்கம். இங்ஙனம் வீரர்கள் சிறு துயில் கொண்ட போது எதிரிகள் நகரங்களையே கைப்பற்றிய தாகக் கதை உண்டு. மாலையில் ஒவ்வொருவரும் உடற்பயிற்சி செய்வர். நடு வயதானவர்கள் கூட ஆடைகளைக் களைந்து விட்டுப் பயிற்சியிலிறங்குவர். உடல் அமைப்பு சீராயில்லாவிடில் அருகிலுள்ளோர் அதைச் சுட்டிக்காட்ட வேண்டுமென்பதற்காக அவர்கள் ஆடைகளைக் களைவது வழக்கம். பயிற்சி முடிந்தவுடன் வெந்நீரிலோ தண்ணீரிலோ குளிப்பர். குளிக்குமுன் உடம் பெல்லாம் எண்ணெய் தேய்த்துக்கொள்வர். அடிமைகள் எண்ணெய் தேத்ந்து உடம்பைப் பிடித்து விடுவர். குளித்த பின் உணவுக்குச் செல்வர். இரவில்தான் அவர்கள் முழுமையாக உண்பது வழக்கம். உணவருந்தும் போது விருந்தாளிகள் இருந்தால் மகளிர் அதில் கலந்து கொள்ளார். இல்லெனில் கலந்து கொள்வர். உணவு எளிமையாகவே இருக்கும். உணவு கொள்ளுமுன் காலிலிருந்து மிதியடிகளைக் கழற்றிவிடுவர். கோதுமை, பார்லி இவைகளாலான களி அல்லது கஞ்சியோடு மீன் இறைச்சி இவைகளையே சாதாரண மாக உண்டனர். பன்றியிறைச்சி, மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி யையும் ஒரோவழிப் பயன்படுத்தினர். ஆலிவ் எண்ணெயா லேயே சமையல் செய்யப்பட்டது. இனிப்புக்குத் தேன் பயன் படுத்தப்பட்டது. பழங்களும் கொட்டைகளும் விருந்துகளில்

பரிமாறப்படும். விருந்து நடைபெறும் போது அரசாங்க தடவடிக்கையிலிருந்து அன்றுட விலேவாசி விவரம் வரை பல பிரச்சனேகளும் விவாதிக்கப்படும். இசை நிகழ்ச்சிகளும் ஆடல் பாடல்களும் பின்னர் நடைபெறும். மது அருந்துதல் விருந்தின் முக்கியமான நிகழ்ச்சியாகும். தேட்கடுப் பன்ன நாட்படு தேறலே'க் குடிப்பவர்களேக் கண்காணிக்கவும், மதுவில் எவ்வளவு தண்ணீர் கலக்க வேண்டுமென்பதைத் தீர்மானிக்கவும் சிம்பாஸியார்ச் என்ற ஒருவர் விருந்தினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் படுவார். குடித்து முடித்த பின் சிலர், லீர் (Lyr) எனும் யாழ் வாசித்துக் காட்டுவர். சிலர் பாட்டுப் பாடிப் பலரையும் மகிழ் விப்பர். விடுகவி விடுத்தல் போன்ற சில்லறை விளேயாட்டு களும் நடைபெறும். அத்தீனியர்கள் இத்தகைய விருந்து களிலும் அளவோடேயே குடித்தனர்.

கால நிலேயின் வறட்சி காரணமாகக் கிரேக்கரின் ஆடையும் குறைவாகவே இருந்தது. இரு துணிகளே அவர்கள் உடுக்கப் பயன்படுத்தினர். நாற்சதுரமான உள் துணியொன்றை முதலில் அவர்கள் அணிந்தனர். அதன் மீது மேலாடை ஒன்றை அணிவர். ஆண்களின் உடை சற்றுக் குட்டையாயும், பெண்களின் உடை சற்று நீளமாயும் இருக்கும். மேலே போர்த்தப்பட்ட துணி விழாமலிருக்கத் தோள்பட்டைகளுக் கருகே ஊசிகளேக் குத்திக் கொள்வார்கள். வலக் கை நன்கு அசைவதற்கேற்றாற் போல் அதை விடுத்து, துணி தோள்களேச் சுற்றிப் போடப்பட்டிருக்கும். ஆடைகளில் பூவேலேப்பாடு செறிந்திருக்கும். சரிகையும், பல நிறக் கற்களும் அவற்றில் தைக்கப்படுதலுமுண்டு. பெண்கள் தலேமயிரைப் பலவிதமாகப் பின்னி முடிபோட்டுக் கொள்வார்கள். ஆண்கள் தலேமயிரைக் குறுகலாகக் கத்தரித்துக் கொள்வார்கள்; ஆனல் நீண்ட தாடி வைத்துக் கொள்வார்கள். மலர் மாலேகளேப் பெண்கள் கழுத் திலும் கொண்டையிலும் அணிந்துகொள்வார்கள். ஆண் பெண் இருபாலரும் பலவகை மிதியடிகளே அணிந்தனர். குளிர், மழை இவற்றைத் தடுக்கக் கையுறைகளேயும் குடைகளேயும் பயன்படுத்தினர். பெண்கள் பல்வேறு அணிகலன்களேப் பூண்டனர். கொண்டை ஊசி, தலேயணி, குஞ்சம், தோடு, கடயம், காப்பு, சங்கிலி, மோதிரம், காற் சதங்கை முதலியவை பொதுவாக அணியப்பட்டன. மீன், பாம்பு முதலிய பிராணி களின் தலேகளேப் போன்று செய்யப்பட்ட பல அணிகளே அணிந்தனர்.

வெப்பம் நிறைந்த கால நிலையின் காரணமாக வீடுகளும், பரவலாயும் காற்ரோட்டமாயும் கட்டப்பட்டன. ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி அறைகள் ஒவ்வொரு வீட்டிலு மிருந்தன. வீட்டின் நடுவே முற்றமொன்று இருக்கும். அதைச் சுற்றி ஒரு தாழ்வாரமும் அறைகளும் இருக்கும். வீடுகளில் ஜன்னல்கள் காணப்படவில்லை. பெண்கள் பகுதியில் நூல் நூற்கவும், சமையல் செய்யவும் தனித்தனி சிறு மண்டபங்கள் இருந்தன. ஆண்களும் பெண்களும் தங்குமறைகளில் கணப்புச் சட்டிகள் இருக்கும். அவற்றுக்கருகே கடவுள் உருவம் அல்லது ஆதி முன்னோரது உருவம் வைக்கப்பட்டிருக்கும். வீட்டிற்குப் புதிதாக வரும் மணமகள் முதன்முதல் அக் கடவுளைச் சேவித்து விட்டுத்தான் மறுவேலை பார்க்க வேண்டும். வீடுகளில் சௌகரிய மாக அமர்வதற்கேற்ப நாற்காலிகளும் சோபாக்களும் இருந்தன. சாப்பிடுவதற்கேற்ற மேசைகளையும் சிலர் பயன் படுத்தினர். கண்ணுடிச் சாமான்களை அவர்கள் அறியவில்லை. மரத்தாலும், மண்ணுலும் உலோகத்தாலும் செய்யப்பட்ட பாத் திரங்களையே அவர்கள் பயன்படுத்தினர். பளபளப்பாக்கப்பட்ட வெண்கலத்தையே கண்ணுடியாகப் பயன்படுத்தினர். எண்ணெய் விட்டு எரிய வைக்கும் விளக்குகளையும் அன்னர் நிறையப் பயன் படுத்தினர்.

சமய வாழ்க்கையைப் பொறுத்தவரையில் இந்துக்களைப் போலவே கிரேக்கர்களும் ஏராளமான தெய்வங்களை வணங்கி னர். ஜியூஸ் (Zeus) என்ற கடவுள்தான் மற்றெல்லாக் கடவுளர்க்கும் தலைவர். நல்லோரைக் காத்துத் தீயோரைத் தண்டிப்பது அவரது வேலை. வலக் கையில் இடியையும் இடக் கையில் செங்கோலையும் கொண்டுள்ளவர். போஸிடன் (Posedon) எனும் தெய்வம் ஜியூஸின் உடன் பிறந்தவர்; கடலைக் கட்டுப் படுத்துபவர்; பூகம்பத்தை ஏற்படுத்துபவர். அபோலோ (Apollo) என்பார் ஜியூஸின் பிள்ளை. சூரிய பகவானுக இவர் வழிபடப்பட்டார். இசை, பாடல், கவிதை, மருத்துவம், அழகு ஆகியவற்றுக் கெல்லாம் மூல்மாயிருப்பவர் அபோலோ என்றே கிரேக்கர் நம்பினர். ஏரீஸ் என்பார் ஜியூஸின் மற்ரோர் பிள்ளை. போருக்குத் தலைவர். போரில் வெற்றி பெற கிரேக்கர் இவரது துணையையே நாடினர். ஹெபீஸ்டஸ் (Hephaestes) என்னும் அக்கினிபகவானும் ஜியூஸின் மைந்தர்களில் ஒருவராவர். தெருப் பைப் பயன்படுத்தும் எல்லாக் கலைகளுக்கும் தொழில்களுக்கும் இவரே தலைவர். ஹெர்மிஸ் (Hermes) என்ற ஜியூஸின் இன் னெரு மைந்தர் வாணிகக் கடவுள் ஆவார்; தந்திரமும் திற மையும் கொண்டவர். ஹீரா அல்லது ஜீனே Zeno), ஜியூஸின்

மனவி. அத்தீனு எனும் தேவதை, ஜியூஸின் மகள்; வீரம் அறிவு இரண்டுகளும் தலைவி. அர்ட்டமிஸ் (Artemis) அல்லது டயானு எனும் கடவுள் நிலாக்கடவுளாவார். மிக்க அழகும், வீரமும் கொண்டவராக இவர் சித்தரிக்கப்பட்டுள்ளார். அப்ரோடிஸ் அல்லது வீனஸ் காதற் கடவுளாவார். ஹெஸ்தியா (Hestia) எனும் கடவுள் குடும்பத்தைக் காக்கும் கடவுளாகக் கருதப்பட்டார். டெமிட்டர் (Demeter) என்ற தேவதை பழங்களுக்கும் பயிர்களுக்கும் தலைவியாவார். இத்தகைய கடவுளரோடு உலகம் கடல், வானம் போன்ற இயற்கைப் பொருள்களையும் கிரேக்கர் கடவுள்களாகக் கருதினர். தூக்கம், கனவு போன்றவைகளையும் அன்னர் வணங்கினர். மனிதன் இறந்தபின் நரகம் போன்ற ஹேட்ஸ் (Hades) எனும் இடத்திற்குச் சென்று, தான் செய்த பாவ புண்ணியத்துக்கேற்ப இன்ப துன்பங்களை அனுபவிப்பதாக அன்னர் நம்பினர். புளூட்டோ (Pluto) எனும் மரணதெய்வம் இவ்வுலகைக் காத்து வருவதாக அவர்கள் கூறினர். ஹெர்குலீஸ் (Hercules) போன்ற வீரமிக்க கடவுளரையும் அவர்கள் வணங்கினர். கடவுளிடம் குறி கேட்டல் கிரேக்கரின் வழக்கமாகும். டெல்ஃபி நகரக் குறிமேடையைப் பற்றி முன்னரே படித்துள்ளோம். சமயச் சார்பாக எடுக்கப்பட்ட ஒலிம்பிக்போன்ற விளையாட்டுகள் கிரேக்கரின் வீரம் வெளிப்படவும், ஒற்றுமை வளரவும் எப்படிக் காரணமாயிருந்தனவென நாம் முன்பே கண்டோம்.

கிரேக்கர் இறந்தவர்களைப் புதைத்தனர். உடல் புதைக்கப்படும் வரையில், இறந்தவரின் ஆன்மா வானுலகில் ஊசலாடிக் கொண்டிருக்குமென அவர்கள் எண்ணினர். புதைக்கப்பட்ட பின் இருட்டாறு, அழுகையாறு போன்ற ஆறுவித நதிகளைக் கடந்து ஆன்மா ஹேட்ஸ் நாட்டை அடையும். அந்த ஆறுகளைக் கடக்கும் போது அங்குள்ள ஓடக்காரனுக்குக் கொடுக்க வேண்டி இறந்தவர்களின் வாயில் ஒரு பணத்தை வைப்பர். புண்ணியம் செய்தவர் எலீஸியம் (Elysium) என்ற சுவர்க்கத்துக்கும், பாவம் செய்தவர் ஹேட்ஸ் என்ற நரகத்துக்கும் செல்வரென அவர்கள் நம்பினர். இறந்தவர்க்காகக் கூலி வாங்கிக் கொண்டு மாரடிப்பவர்களும் ஒப்பாரி வைப்பவர்களுமிருந்தனர். சில சமயங்களில் சடலங்கள் எரிக்கப்பட்டு, அவற்றில் எஞ்சிய எலும்புகள் ஒரு ஜாடியில் போடப்பட்டுப் புதைக்கப்பட்டன. மூன்றரை வழிபடுவதும், அன்னர்க்கு உடையும் உண்டியும் வைத்துப் படைப்பதும் கிரேக்கரின் வழக்கங்களாகும்.

இங்ஙனம் சமயத் துறையில் கிரேக்கர்கள் பல மூடக்கொள்கைகளைக் கொண்டிருந்தும், சமயம் அவர்களது சிந்தனையைக்

கட்டுப்படுத்தவில்லை. சமய குருக்கள் கிரேக்கச் சமுதாயத்தில் இரண்டாந்தர இடத்தையே வகித்தனர். அவர்கள் சொன்னபடி அரசு ஆடவில்லை. சமய நம்பிக்கைகள் கிரேக்கரின் மனத்தில் ஆழப் பதியவில்லை. மேம்போக்காகவே அவர்கள் சமயச் சடங்குகளிலீடுபட்டனர். சமயத் தலைவர்கள் அரசியலில் தலையிடாதவாறு பார்த்துக் கொண்டனர். இங்ஙனம் சமயத்தையும், அரசியலையும் பிரித்ததாலேயே கிரேக்கர்கள் சிந்தனையின் சிகரத்தை எட்ட முடிந்ததெனலாம்.

அரசியல் வாழ்க்கை

அரசியல் துறையில் கிரேக்கர்கள் செய்து பார்க்காத பரிசோதனைகளே இல்லை எனலாம். அரிஸ்டாடில் அரசியலமைப்பு வகைகளை ஆறுகப் பிரித்தது இன்றும் செல்லுபடியாகிறது. நேர்முக ஜனநாயகத்தை (Direet Democracy) அவர்கள் நடை முறையில் நடத்திக் காட்டினர்; கோஞட்சி, பிரபுக்களாட்சி, மக்களாட்சி ஆகிய மூன்றையும் ஒருங்கே செயல் படுத்த இயலுமென்பதை ஸ்பார்ட்டாவில் காட்டினர். அரசியல் உணர்வு (Ciyic Sence) அவர்களிடம் அளவுக்கு மீறி அமைந்தது. ஒவ்வொரு குடிமகனும் போர்க்களத்திலும், பொதுப் பேரவையிலும், நீதிமன்றத்திலும் பங்கெடுத்துக் கொள்ள வசதி இருந்தது. ஜனநாயகம் ஒத்துவராத போது சர்வாதிகாரத்தைத் தற்காலிகமாக அவர்கள் ஏற்றுக் கொண்டனர். பொதுக் காரியங்களுக்காகப் பலநாடுகள் ஒன்று கூடிக் கூட்டரசு அமைப்பதில் அவர்கள் முன்னோடியாய் விளங்கினர். தனி மனிதனின் முழு ஆளுமையையும் அரசு எங்ஙனம் வெளிக்கொணரமுடியும் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டியவர்கள் அவர்களே யாவர்.

இத்துணைச் சிறப்புப் பொருந்திய கிரேக்க அரசியல் வாழ்வில் ஒரு சில குறைபாடுகள் தோன்றி அதை அழிவுப் பாதையில் இறக்கிவிட்டன. குடியுரிமையைத் தூய்மையான கிரேக்கர்களுக்கு மட்டுமே கொடுத்த பெருந்தவற்றை அவர்கள் செய்தனர். குடியுரிமை பெற்றவர்களின் எண்ணிக்கை குறைந்து விட்ட போது அக் குறையை நிறை செய்ய ஏனையோரால் முடியாமற் போயிற்று. நீந்தத் தெரிந்த ஒருவனை நீந்தத் தெரியாத பலர் சேர்ந்து நீரில் அமிழ்த்திவிட்டது போன்று, அரசியலுரிமை பெறுத மக்கள், உரிமை பெற்றவரையும் சேர்த்து அடிமைப்படுத்திவிட்டனர். அன்னியரோடு எளிதில் அவர்கள் சேர்ந்து கொண்டனர். நாட்டையே காட்டிக் கொடுக்கும் குப்பலிக் கிரேக்கர்கள் வளர்த்துவிட்டது பெருங்குற்றமாய் முடிந்து

விட்டது. மற்றும் கிரேக்கர் அனைவரும்கூட ஒன்றுபட்டு வாழ முடியவில்லை. அயோனியக் கிரேக்கன், அன்னியப் பாரசீகனை வெறுத்தது போன்றே டோரியக் கிரேக்கனை வெறுத்தான். சுயேச்சையைப் பேணி வளர்த்த கிரேக்கர்கள், அதே சமயம் கட்டுப்பாட்டையும் ஒற்றுமையையும் வளர்க்கத் தவறிவிட்டார்கள். பெலப்பொனீஷியக் கூட்டுறவு, அத்தீனியப் பேரரசு போன்ற கூட்டமைப்பு நிறுவனங்கள் தோன்றின. ஆனால் அவை நிரந்தரமாக நிலைக்கவில்லை. சுதந்திரத்தையும் கட்டுப்பாட்டையும் (Liberty and order) இணைக்கத் தெரியாத குற்றத்தாலேயே கிரேக்கர்கள் அன்னியருக்கடிமையாயினர். ஓரளவு தத்தம் இறைமையை விட்டுக் கொடுத்து நகர அரசுகள் ஒரு மைய அரசை அமைத்திருந்தால் அது தன் சுயேச்சையைக் காப்பாற்றிக் கொண்டு நானிலத்துக்கும் அறிவொளியைப் பல காலம் பரப்பி வந்திருக்கக்கூடும். அதற்கு மாறுகக் கிரேக்க நகர அரசுகள் கட்டுப்போட முடியாத வெள்ளரிப் பழமாய் இறுதிவரை இருந்துவிட்ட காரணத்தினால் தங்களையே தாங்கள் அழித்துக் கொண்டு விட்டனர். பல்வேறு துறைகளில் என்ன தான் சிறப்பெய்தியிருந்தாலும், அரசியல் துறையில் ஒற்றுமையும் கட்டுப்பாடுமில்லையெனில் அவை யாவும் ஆற்றிற்கரைத்த பெருங் காயமாகவே அமையும் என்பதற்குக் கிரேக்கர்களின் வரலாறு தக்கதொரு எடுத்துக் காட்டாயும், ஏனைய நாடுகளுக்கோர் பாடமாயும் திகழ்கின்றது.

22. ஹெல்லனீய நாகரிகம்

(அலெக்ஸாந்தருக்குப் பின்)

அலெக்ஸாந்தரது காலத்துக்குப் பின், கிரேக்கர்கள் எங்ஙனமோ தாய்நாட்டை விட்டுப் பல்வேறு இடங்களுக்குச் சென்று, பல்வேறு மக்களோடு தொடர்புகொண்டு வாழ்ந்தனர் என்பதை நாம் கண்டோம். அதன் விளைவாகக் கிரேக்கர்களின் பழைய பண்பாட்டின் மெருகு குறைந்தது. கீழை நாட்டு நாகரிகத்தின் பண்புகள் பல கிரேக்கப் பண்போடு கலக்க ஆரம்பித்தன. அதனால் சற்றே தரத்தில் குறைந்த ஒரு புதிய கலப்பு நாகரிகமானது கிரேக்கர்களிடையே உருவாயிற்று. அக் கலப்பு நாகரிகமே ஹெல்லனீய (Hellenistic) நாகரிகமென வரலாற்றில் பேசப்படுகிறது. ஹெல்லனீய நாகரிகம் (Hellenic) என்பது கிரேக்கரின் பண்டைய தூய கலப்பற்ற நாகரிகமாகும். அலெக்ஸாந்தரின் படையெடுப்பால் அது மாய்ந்தது. கி.மு. 323-இல் அலெக்ஸாந்தர் இறந்ததிலிருந்து கிரேக்க நாகரிகத்தில் ஒரு புதிய கட்டம் தோன்றுகிறது. அது கி. மு. முதல் நூற்றாண்டு வரை நீடிக்கிறது. அவ்விடைவெளிக்காலத்தே கிரேக்கரிடையே மலர்ந்த நாகரிகத்தை ஹெல்லனீயரின் நாகரிகம் என்பதைவிட ஹெல்லனீயத் தன்மை பொருந்திய புதியதோர் ஹெல்லனீய நாகரிகமென அழைத்தலே சாலப் பொருந்தும்.

கிரேக்கர்களின் பொற்கால நாகரிகத்திற்கும், ஹெல்லனீய நாகரிகத்திற்கும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. பொற்காலத்தில் கிரேக்கர்கள் ஜனநாயகத்தைப் போற்றி வளர்த்தனர். ஆனால் அலெக்ஸாந்தருக்குப் பின் வல்லரசே (Despotism) எங்கும் கடைப்பிடிக்கப்பட்டது. அலெக்ஸாந்தரின் வழித்தோன்றல்கள், எகிப்தியப் பாரசீகப் பேரரசர்கள் போன்று தன்னிச்சையாக ஆளத் தலைப்பட்டனர். பொற்காலத்து அத்தீனியர்கள், சிறிய அளவில் உற்பத்தி செய்வதையே விரும்பினர்கள்.

ஆனால் அலெக்ஸாந்தருக்குப் பின் பெருமளவு வாணிகமும் போட்டியும் ஏற்பட்டன. உற்பத்தி ஓரளவு பெரிய அளவில் நடைபெற்றது. பொற்காலக் கிரேக்கர்கள் அறிவொளி மிக்கவர்கள்; எதையும் ஆராயாது நம்பமாட்டார்கள். ஆனால் ஹெல்லனீய நாகரிகக் காலத்தில் மக்கள் பகுத்தறிவை விடுத்துச் சமயத்திலும், மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்திகளிலும் அதிக நம்பிக்கை வைக்கலாயினர். தன்னம்பிக்கை வறட்சியடைந்தது. எல்லாம் தலைவிதி என்று வாளா இருக்கும் சுய தோல்வி மனப்பான்மையும், சுயமுயற்சியின்மையும் மக்களிடம் பரவலாகக் காணப்பட்டன.

அரசியல் துறையில் மாற்றம்

இக்காலத்தே மக்களை ஆண்டுவந்த கிரேக்கத் தளகர்த்தர்கள் தங்களை மன்னர்களென்று அழைத்துக்கொண்டதோடு தெய்வீகத் தன்மை பொருந்தியவர்களென்றும், கடவுளின் சாயையை உடையவர்களென்றும் தங்களைப் பற்றித் தாங்களே தம்பட்டமடித்துக் கொண்டனர். மேற்கு ஆசியாவை ஆண்ட தாலமி வம்சத்தாரும் தங்களைத் தெய்வாம்சம் கொண்டவர்களென மக்களை நம்பும்படிச் செய்வதற்குப் பற்பல முறைகளைக் கடைப்பிடிக்கலாயினர். செல்யூக்கஸ்வம்சத்தைச் சேர்ந்த நான்காம் ஆண்டியாகஸ் (Antiochus IV) என்பார் "இறைவனின் அவதாரம்" என்று பொருள்படக்கூடிய எப்பிபானஸ் (Epiphanes) என்ற பட்டத்தைத் தமக்குச் சூடிக்கொண்டார். தாலமிவம்சத்தைச் சேர்ந்த மன்னர்களிற் பலர், அரசாங்க ஆணைப் பத்திரங்களில் தங்களது பெயரை "இறைவன்" எனப் பொருள்படும் தியோஸ் (Theos) என்றே எழுதிக் கையொப்பமிட்டனர். பண்டைய எகிப்திய பாரோக்கள் எங்ஙனம் தங்களது தெய்வீக இனத்தின் தூய்மையைக் காக்க வேண்டிச் சொந்தத் தங்கையர்களையே மணந்துகொண்டனரோ அங்ஙனமே தாலமிகளும் தங்களது இனத் தூய்மை கெடாமலிருக்கத் தம் குடும்பத்துள்ளேயே பெண்கொள்ளும் வழக்கத்தைக் கைக்கொள்ளலாயினர். மாசிடோனிய நாட்டில் மட்டுமே இத்தகைய புன்மை தலைவிரித்தாடவில்லை. அங்கு ஆட்சி புரிந்த வல்லரசர்கள் குடிமக்களின் சுயேச்சையை ஓரளவு மதித்து நடந்துகொண்டனர். பெலப்பொனீஷியாவிலிருந்து கிரேக்க நாடுகள் தங்களது சுயேச்சையைக் காத்துக்கொள்ளவேண்டி அக்கீயக் கூட்டுறவு (Achaean League) எனும் இணைக் கூட்டரசு ஒன்றை ஏற்படுத்தினர். அதே போல மத்தியக் கிரீஸில் ஈடோலியக் கூட்டுறவு (Aetolian)(League) என்னும் ஓர் இணைக்கூட்டரசு ஏற்பட்டது. இவற்றின் அமைப்புமுறைகளை நாம் சென்ற அத்தியாயத்திற்

பரக்கக் கண்டோம். அலெக்ஸாந்தரது படையெடுப்பால் விளைந்த நல்ல பலன்களில் இதுவும் ஒன்றாகும். எனினும் ஆதென்ஸ், ஸ்பார்ட்டா போன்ற முக்கிய நகர அரசுகள் இக் கூட்டுறவில் சேராததால் இவைகள் நாளடைவில் பயனற்ற சேர்க்கைகளாய் மாறின. பகராண்மைக் கொள்கை (Representativeprinciple), இணைக் கூட்டரசுக் கொள்கை (Confederation) இவற்றின் வித்துகள் இவ்வமைப்புகளில் காணப்பட்டன என்ப தொன்றே இவற்றின் சிறப்பாகும்.

பொருளாதாரச் சமுதாய மாற்றங்கள்

ஹெல்லனீய நாகரிகக் காலத்தே பொருளாதாரத் துறையில் பெரியதோர் புரட்சி ஏற்பட்டது. நவீன காலத் தொழிற் புரட்சி, வாணிகப் புரட்சிகளோடு ஒப்பிடத் தக்க அளவுக்கு அப் புரட்சி சிறப்பு வாய்ந்தது. அத்தகைய பெருமாற்றங்கள் பொருளாதாரத் துறையில் ஏற்படக் காரணமாயிருந்த சூழ்நிலைகள் பல. அலெக்ஸாந்தரது பெரு வெற்றிகளின் விளைவாகச் சிந்துநதி முதல் நைல்நதி வரை இருந்த பரந்த பிரதேசம் கிரேக்கரின் வியாபாரத்துக்குரிய இடமாய் மாறியது. அண்டையி லிருந்த நாடுகளோடு மட்டும் சிறிய அளவில் வாணிகம் புரிந்து வந்த கிரேக்கர்கள் இப்போது பெரிய அளவில் வாணிகத்தி லீடுபட்டுப் பெரும் பொருள் ஈட்ட வசதி ஏற்பட்டது. மற்றும் பாரசீகப் பேரரசிலிருந்து கைப்பற்றப்பட்ட ஏராளமான பொன்னும் வெள்ளியும் மக்களிடையே புழக்கத்திற்கு வந்ததால் மூலதனம் பெருகியது. ஊகவாணிக முயற்சிகள் (Speculation) அதிகமாயின. தொழிலிலும் வாணிகத்திலும் பெரிய அளவில் முதலீடு செய்து இலாபமடையப் பலர் முன்வந்தனர். தம்து வருவாயைப் பெருக்குதற்கு நினைத்த பல நாடுகள், வியாபாரத்தையும் தொழிலையும் வலிய ஆதரித்து வளர்க்கலாயின. வரிகளால் வரும் பணத்தைவிடப் பொருளாதார முன்னேற்றத்தால் அதிகப் பணம் படைப்பதை அறிந்தே அந்த நாடுகள் அத்தகைய வழிகளைக் கடைப்பிடித்தன. இங்ஙனம் தனிப்பட்டவர்களும் அரசாங்கமும் சேர்ந்து முயன்றதால் எங்குப் பார்த்தாலும் மிகப் பெரிய அளவில் உற்பத்தி செய்யப்பெறலாயின. தொழிலும் வியாபாரமும் போட்டி போட்டுக்கொண்டு வளரலாயின.

வேளாண்மைத் துறையிலும் வியத்தகு மாற்றங்கள் பல நிகழ்ந்தன. அலெக்ஸாந்தரின் வழித்தோன்றல்கள் யாவரும் நிலப்பிரபுக்களின் நிலங்களனைத்தையும் பறிமுதல் செய்து அவற்றைத் தம் சொந்த உடைமைகளாக ஆக்கிக்கொண்டனர். அதன் பின் தங்களது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும்

பெரும் பண்ணைகளாக அவற்றைப் பிரித்து வழங்கினர். இங்ஙனம் நாட்டின் நிலங்கள் யாவும் ஒரு சிலரிடத்தே செறிய லாயின. அவ்வொரு சிலர் நிலங்களைப் பல விவசாயிகளிடம் குத்தகைக்கு விட்டனர். யார் அதிகக் குத்தகை கொடுத்தார் களோ அவர்களுக்கே நிலங்கள் வழங்கப்பட்டன. நிலங்களைக் குத்தகைக்கு எடுத்தோர், அதிக இலாபம் பெற வேண்டி உழவுத் தொழிலாளிகளை நசுக்கிப் பிழிந்து வேலை வாங்கினர். நில அடிமைகளின் எண்ணிக்கை நாட்டில் அதிகரித்தது. பெரும் நிலப் பிரபுக்களோடு போட்டி போட முடியாத சிறிய விவசாயிகள் தங்கள் நிலங்களை விற்றுவிட்டுக் குத்தகையாளராக மாறினர். நிலத்தில் அறுவடை முடியும்வரை குத்தகைக் காரர்கள் நிலத்தைவிட்டுப் போகாதவாறு தடுக்கப்பட்டனர். விளைச்சலில் தமக்குச் சேரவேண்டிய பகுதியை மன்னர் தமக்குப் பிரியமான விலைக்கு விற்றுப் பணந்திரட்டிக்கொண்ட பின்பே குத்தகைக்காரர்கள் தங்களுக்குக் கிடைத்த தானியத்தை விற்க அனுமதிக்கப்பட்டனர். நிலத்தைவிட்டு ஓடவோ அல்லது வேலை நிறுத்தம் செய்யவோ முயன்ற குத்தகைக்கார உழவர்கள் நிலத்தைவிட்டுத் தனியே பிரிக்க முடியாத அடிமைகளாக மாற்றப்பட்டனர். சுதந்திரமாக வேளாண்மை செய்து வந்த பல சிறு குடியானவர்கள் பிரபுக்களிடம் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க இயலாமல் அவர்களுக்கே தங்களை அடிமைகளாக்கிக் கொண்டனர்.

தன்து வருவாயைப் பெருக்க வேண்டி அரசாங்கமே ஒரு சில தொழில் முயற்சிகளிலிறங்கியது. எகிப்தை ஆண்ட தாலமிகள் பெரும்தொழிற்சாலைகளையும் கடைகளையும்சொந்தமாக நடத்தினர். தனிப்பட்டவர்களால் நடத்தப்பெற்ற தொழில் களின் மீதும் அவர்கள் பலவிதமான கட்டுப்பாடுகளை ஏற்படுத் தினர். தனிப்பட்ட முதலாளிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் விலைகளை மன்னரே நிர்ணயம் செய்தார். தமக்குச் சொந்தமான தொழிற்சாலைகளில் உண்டாக்கப்பட்ட பொருள்களின் விற்கும் விலையைவிடக் குறைவாக ஏனையோர் விற்காதவாறு மன்னர் பார்த்துக்கொண்டார். வாணி கத்தில் தனிப்பட்டவர்களே தனியுரிமை பெற்றிருந்தனர். இருப்பினும் அரசர் அவர்கள் மீது ஏராளமான வரிகளை விதித்து அவர்களது இலாபத்தில் பெரும் பகுதியைத் தாமே பிடுங்கிக் கொண்டார். எனினும் புதிய வாணிக முயற்சிகளுக்கு மன்னர்கள் பெரிதும் ஊக்கமூட்டினர். துறைமுகங்கள் நன்கு பழுதுபார்க்கப்பட்டுப் பல வசதிகளும் கொண்டனவாகத் திருத்திக் கட்டப்பட்டன. கடற்கொள்ளைக்காரர்களை ஒழிக்க

வலிய கடற்படை ஒன்றை மன்னர் உருவாக்கினர். பாதைகளும் நீர்வழிகளும் பல புதியனவாக அமைக்கப்பட்டதோடு பழையனவும் பழுதுபார்க்கப்பட்டன. மற்றும் தாலமிகள், பல புவியியல்-வல்லுநர்களைப் பணம் கொடுத்து அனுப்பிப் புதிய கடல் வழிகளைக் கண்டுபிடிக்குமாறு ஊக்குவித்தனர். எனவே அலெக்ஸாந்திரியர் துறைமுகத்தில் வெளிநாட்டுப் பொருள்கள் ஏராளமாக வந்து குவிந்தன. அரேபியாவிலிருந்து வாசனைத் திரவியங்களும், சைப்ரஸிலிருந்து செம்பும், இந்தியாவிலிருந்து பொன்னும், பிரிட்டனிலிருந்து தகரமும், நூபியாவிலிருந்து தந்தமும், ஸ்பெயினிலிருந்து வெள்ளியும், ஆசியாமைனரிலிருந்து வீலையுயர்ந்த கம்பளங்களும், சீனாவிலிருந்து பட்டும் அங்கு வந்து ஏராளமாக இறக்குமதியாயின. அங்ஙனம் இறக்குமதியான பொருள்களிலிருந்து அரசாங்கத்துக்கும் தனிப்பட்ட வியாபாரிகளுக்கும் 20 மூதல் 30 சதவிகிதம் இலாபம் கிடைத்தது.

பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட இன்னொரு புரட்சிகரமான மாறுதல், பல்வேறு நாடுகளிடையே ஏற்பட்ட நாணயச் செலாவணி முறையாகும். பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப்பட்ட நாணயங்கள் ஒரே எடையும் மதிப்பும் உடையனவாகச் செய்யப்பட்டன. அவற்றில் மன்னரது தலையின் வடிவும், சில சமயம் முழு உடலின் உருவமும் பொறிக்கப்பட்டிருந்தன. உபரி மூலதனத்தைப் பல வணிகர்கள் வங்கியில் போட்டு வைத்தனர். வங்கிகள் (Banks) அரசாங்கமே நடத்தி வந்தது. கடல் கடந்த வாணிகத்திலீடுபட்டு வியாபாரிகள் வங்கிகளிலிருந்து வட்டிக்குக் கடன் வாங்கினர். மூலதனம் நிறைய இருந்ததால் வட்டி குறைவாகவே வாங்கப்பட்டது. இரண்டாம் நூற்றாண்டில் 12 சத விகிதமும் மூன்றும் நூற்றாண்டில் 7 சத விகிதமும் வட்டிகள் வசூலிக்கப்பட்டன ஊக வாணிகம், பரஸ்பரப் போட்டி பெருந் தொழில் வளர்ச்சி—இவற்றில் மக்கள் உற்சாகத்துடன் நுழைந்தனர்.

வாணிகத்தில் நிறையப் பொருளீட்டியவர்களில் வணிகரும் உயர்குடி மக்களுமான ஒரு சிலரே இருந்தனர். ஏனைய பெரும் பான்மையோரான குடியானவர்களும் நகரத் தொழிலாளிகளும் மிகவும் சாதாரண நிலையிலேயே இருந்தனர். ஆதென்ஸில் பெரிக்ளீஸ் காலத்தில் வழங்கப்பட்ட கூலியில் பாதியளவே கி. மு. மூன்றும் நூற்றாண்டில் வாழ்ந்த தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்பட்டது. கூலி குறைந்ததே ஒழிய வாழ்க்கைத் தரம் முன்னைய நிலையைவிட மிகவும் கூடுதலாகவே இருந்தது. பொருள்களின் விலை பன்மடங்கு உயர்ந்துவிட்டது. எனவே

ஏழைத் தொழிலாளிகள் வயிற்றுக்குப் போதிய கஞ்சி கூட இல்லாமல் வாடினர். பல தொழிலாளிகள் வேலை எதுவுமின்றி வீட்டில் வீண்காலம் கழிக்க நேர்ந்தது. அத்தகையோர்க்கு அரசாங்கம் இனாமாகத் தானியங்களை வழங்கிவந்தது. அடிமைகளை வைத்துக்கொள்ளும் வழக்கமும் குறைந்தது. ஏனெனில் மிகக் குறைவான கூலிக்கு வேலை செய்ய ஏராளமான ஆட்கள் போட்டி போட்டுக்கொண்டு வந்தனர். அடிமைகளை வீட்டோடு வைத்துப் பராமரிப்பதற்கு அதைவிட அதிகம் செலவானதால் அடிமைகளைக் காட்டிலும் நாள் கூலிக்காரருக்கே கிராக்கி அதிகம் ஏற்பட்டது.

சமுதாயப் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மற்றொரு புரட்சிகரமான மாறுதல், பெரு நகரங்களின் வளர்ச்சியாகும். நகர மாந்தரின் ஆடம்பர வாழ்க்கையையும், சுகபோகங்களையும் கண்ட நாட்டுப்புற மக்கள், கிராம வாழ்க்கையில் சலிப்படைந்து நகர்களை நோக்கித் திரள்திரளாகப் புறப்பட்டனர். "கெட்டும் பட்டணம் சேர்" என்ற மூடக் கொள்கை, கிராம மக்களிடையே எப்படியோ பரவிவிட்டது. எனவே நகரங்களில் மக்கள்தொகை அளக்கு மீறி அதிகரிக்கலாயிற்று. சிரியாவிலிருந்த ஆண்டியாக் (Antioch) நகரில் ஒரே நூற்றாண்டில் மக்கள் தொகை இருபடங்காகிவிட்டது. டைக்ரிஸ்நதிக் கரையின் மீது அமைந்திருந்த செல்யூஸி (Seleucia) எனும் சிறிய நகரம் இரண்டே நூற்றாண்டில் பல்லாயிரக் கணக்கான மக்கள் வாழும் பெரு நகரமாக மாறிவிட்டது. எகிப்திலிருந்த அலெக்ஸாந்திரிய நகரம், ஏறக்குறைய ஒரு மிலியன் மக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கியது. நன்கு பாவப்பெற்ற அகன்ற வீதிகளும், மாட மாளிகைகளும், கூடகோபுரங்களும் நிறைந்து, அந்த நகர் கண்டார் வியக்கும் வண்ணம் அமைந்திருந்தது. உடற் பசியைப் போக்கத் தக்க வாழ்க்கை வசதிகள் பலவும் நிரம்பப் பெற்ற அந்த நகரில் அறிவுப் பசியைப் போக்குதற்கான நூல் நிலையம் ஒன்றும், கலைப்பொருட் கண்காட்சி ஒன்றும் அமைந்திருந்தன. நூல்நிலையத்தில் 7,50,000 நூல்கள் இருந்தன. அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் அந்த நகரில் ஏராளமாக இருந்தனர். புதுமைகள் பலவற்றை அவர்கள் படைத்தவர்கள் மேட்டுக்குடி மக்களேயாவர். சாதாரண ஏழை எளிய மக்கள் மற்றவர்களுக்காக உழைத்து உழைத்து உளுத்துப் போனர்களேயன்றி வாழ்க்கையின் இன்பங்களை நுகர அவர்களுக்கு வாய்ப்புக் கிட்டவில்லை.

தத்துவம்

கிரேக்க நாகரிகத்தில் பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டு கம்பீரமாகத் தலை நிமிர்ந்து நின்ற தத்துவ ஞானம், அலெக்ஸாந்தரது காலத்துக்குப் பின், நிலையினின்றும் பெரிதும் இழிந்தது. அறிவும் அனுபவமும் காற்றில் பறந்தன. அறிவுக்குப் பொருத்தமில்லாத மூடு மந்திரங்களும் ஆன்மானுபவங்களும் (Mysticisms) நிறைந்து தத்துவமானது மக்களைக் கண்மூடி வழக்கங்களில் ஆழ்த்தலாயிற்று. வாழ்க்கை துன்பமயமானதென்று கூறி, அத் துன்பத்தினின்றும் விடுதலை பெறுவதற்கான பல பூடகமான வழிகளைக் கூறுவதே இக்காலத் தத்துவாசிரியர்களின் வேலையாயிருந்தது.

எபிக்யூரியனிஸம் (Epicureanism), ஸ்டாயிஸிஸம்(Stoicism) ஆகிய இரு வகைப்பட்ட தத்துவ முறைகளே இக்காலத்துத் தலைதூக்கி நின்றன. இவையிரண்டும் ஏறக்குறைய ஒரே மாதிரியான குறிக்கோள்களையே கொண்டிருந்தன. சமுதாயத்தைப் பற்றியும் அதன் நலனைப் பற்றியும் அவை கவலைப்படவில்லை. தனிமனிதனது நலமே அவைகளின் குறிக்கோளாயிருந்தது. இவ்விரண்டும் உலோகாயதத்தையே (Materialism) அடிப்படையாய்க் கொண்டிருந்தன. இப் பெரு உலகைப் பற்றியே அவைகள் பேசினவேயன்றி, நுண்ணுலகம், ஆன்மா, தெய்வம் இவற்றை அவைகள் நம்பவில்லை. இவ்விரண்டு தத்துவங்களும் மாற்ற இயலாத ஒருவகையான ஊழில் நம்பிக்கை கொண்டிருந்தன. "ஊழிற் பெருவலி யாவுள; மற்றொன்று சூழினும் தான் முந்துறும்" என்ற குறளுண்மையை அவர்கள் அப்படியே நம்பினர். ஆனால் குறள் வற்புறுத்துவது போல மனித முயற்சியின் மேன்மையை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஊழ் என்பது மனித முயற்சியால் வெல்ல முடியாத ஒன்று என்பதே அவர்தம் நம்பிக்கையாகும். இவ்விரு சாராருமே ஐம்பொறிகளினால் அறியப் பெறுபவைகளை மட்டுமே அறிவாகக் கருதினர். அதற்கப்பாற்பட்ட அறிவென்பது வெறும் கற்பனை என்பது அவர்தம் கருத்தாகும்.

அடிப்படையில் ஒன்றுக இருந்தாலும் நடைமுறையில் இவ் விரு தத்துவவாதிகளும் எதிர்திசைகளிலேயே போய்க் கொண்டிருந்தனர். எபிக்யூரியர்களை ஒருவகைப் போகிகளென்றும், ஸ்டாயிக்குகளை ஒருவகை யோகிகளென்றும் கருதலாம். எபிக்யூரியர்கள் இன்பமே (Pleasure) வாழ்க்கையின் குறிக்கோள் எனக் கருதினர். ஐம்பொறிகளால் அனுபவிக்கக் கூடிய இன்பங்

கனை எல்லாம் நன்கு துய்க்காதவன், பிறந்ததன் பயனை அடையாதவன் என்றே அவர்கள் நினைத்தனர். ஆனால் இன்பமனுபவிப்பதில் அளவுக்கு மீறக் கூடாது என்பதையும் அவாகள் வற்புறுத்தினர். அளவுக்கு மீறிய விபசாரத்தில் ஈடுபடும் ஒருவன், எவ்வளவு இன்பத்தை அடைகிறானே அவ்வளவு துன்பத்தையும் அடைய வேண்டுமாதலால் அத்தகைய இன்பங்கள் தவிர்க்கப்பட வேண்டுமெனவும், அளவோடு மிதமாக உடற் பசியைத் தணித்துக் கொள்வதே உடலுக்கும் உள்ளத்துக்கும் நலம்பயப்பதெனவும்அவர்கள் போதித்தனர். உடலின்பத்தைவிட மனத்தளவில் அனுபவிக்கப்படும் அறிவின்பம் உயர்ந்தது என அவர்கள் கருதினர். முன்பு அனுபவித்த இன்பங்களை எண்ணி எண்ணி மனத்தில் அசைபோடுவதும், கொள்ள வேண்டியது எது? தள்ளவேண்டியது எது? சிலவற்றை ஏன் மறுக்க வேண்டும்? என்பவற்றை எல்லாம் சிந்தித்து, அவற்றைப் பற்றியே தியானம் செய்வதால் ஏற்படும் இன்பம் மகத்தானது என அன்னார் கூறினர். ஆனால் இவை யாவற்றினும் சிறந்த இன்பம் ஒன்றைப் பற்றியும் அவர்கள் பெரிதும் வற்புறுத்தினர். அது உடல்துன்பம், மனத்துன்பம் இரண்டும் தோன்றுத ஒரு ஆன்ம நிலையில் உண்டாகும் இன்பமாகும். சலனமற்ற உள்ளத்தே தோன்றும் சாந்தியே(Serenity) அத்தகைய இன்பத்தைத் தர வல்லது என அவர்கள் கருதினர். சாந்தியை ஒருவன் அடைய வேண்டுமானால் அதற்குத் தடையான பயம் போக வேண்டும். பயமே துன்பத்துக்கெல்லாம் காரணம். ஆனால் உண்மையில் மனிதன் எதற்கும் பயப்படவேண்டியதில்லை. ஆன்மா என்பது உடலோடு ஒட்டியது. உடல் மாண்ட பின் ஆன்மா தனித்திருக்க இயலாது. அவ்வான்மாவைத் தண்டிக்கவும் அல்லது போற்றவும் தெய்வங்கள் முன்வருவதில்லை. கடவுளர்கள் மனித விவகாரங்களில் தலையிடுவதில்லை. எனவே அவர்களுக்குப் பயப்படவேண்டிய அவசியமில்லை. இங்ஙனம் எண்ணி ஒருவர் மனச்சாந்தியைப் பெறுதல் வேண்டும் என்பதே எபிக்யூரியர்களின் முக்கிய போதனையாகும். அறவாழ்க்கையையும் ஒழுக்கத்தையும் விட்டுவிட வேண்டுமென அவர்கள் கூறவில்லை. இன்பத்தை அடைவதற்காக அற வாழ்க்கை வாழ வேண்டும் என்பது அவர்களின் குறிக்கோள். ஆனால் பிற்கால ரோமானியர்கள் இக் கொள்கையைத் தப்பர்த்தம் செய்து "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" என வாழ்வதே எபிக்யூரியனிஸம் என்று கருதலாயினர்.

ஜீனே (Zeno) என்பாரின் சீடர்களான ஸ்டாயிக்குகளும் ஆன்ம சாந்தியையே குறிக்கோளாகக் கொண்டிருந்தனர்.

ஆனால் அறவாழ்க்கையை அவர்கள் பெரிதும் வற்புறுத்தினர். எபிக்யூரியர்களைப் போன்று இன்பத்தை அடைதற்குரிய ஒரு மார்க்கமாக அற வாழ்க்கையை எண்ணுமல் அதையே வாழ்வின் குறிக்கோளாக அன்னர் கருதினர். எனவே அவர்கள் மிக விழிப்பாக நடந்துகொண்டனர். இன்பத்தால் தம்மை மறந்து எக்காளமிடாமலும், துன்பத்தால் மனமுடைந்து அழுது புலம்பாமலும் சமநிலையில் அன்னர் வாழ்ந்தனர். வாழ்க்கை நிலையாமையை அவர்கள் என்றும் நினைவில் கொண்டு அறநெறியில் அணுவளவும் பிசகாது நடந்து கொண்டனர். உலக நியதி என்று ஒன்று இருக்கிறதென்றும், அதற்கேற்பவே ஒருவனுக்கு இன்ப துன்பங்கள் ஏற்படுகின்றன என்றும், அதை ஒருவன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அனுபவிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றும், எல்லாம் விதிப்படி நடக்கும். அது அறிவுக்குப் பொருத்தமானதாகவும், பொது நன்மைக்கு உகந்ததாகமேயிருக்கும் என்ற நம்பிக்கையோடு ஒருவன் அமைதியாக வாழ்வதே நலம் என்றும் அவர்கள் போதித்தனர். துன்பத்தை வரவேற்க வேண்டுமென்பதும், இடியே விழினும் மனம் கலங்கக் கூடாதென்பதும் அவர்களின் கருத்தாகும். இவர்களிலேயே தீவிரவாதிகள் சிலர் இருந்தனர். அவர்கள் ஸ்கெப்டிக்குகள் (Skeptics) அல்லது நம்பிக்கை இல்லாதவர்கள் எனப்பட்டனர். டயோஜினஸ் (Diogenes) என்பார் ஒரு புகழ்வாய்ந்த ஸ்கெப்டிக்காவார். அவர் ஒரு பட்டித்தொட்டியில் வாழ்ந்து வந்தார். ஆதென்ஸின் தெருக்களில் ஒரு விளக்கைப் பிடித்துக்கொண்டே திரிவாராம். யாராவது 'ஏன் பகலில் விளக்குப் பிடிக்கிறீர்கள்?' எனக் கேட்டால் 'இந்த நகரில் உண்மையான மனிதன் ஒருவன் இருக்கிறானா என்று பார்ப்பதற்கு" என்று பதில் சொல்வாராம். ஏறக்குறைய நம்நாட்டுச் சமணர்களைப் போன்றே ஸ்டாயிக்குகள் நடந்து கொண்டனர்; உடலை வருத்திக் கொண்டனர். ஆனால் உலகத்தாரை அவர்கள் வருத்தவில்லை. மறத்தல், மன்னித்தல், பிறர் கருத்துகளுக்கு மதிப்பளிக்கும் கண்ணியம் இவற்றை அவர்கள் வற்புறுத்தினர்; இனவெறுப்பைக் கண்டித்து மக்கள் யாவரும் சமம் எனப் போதித்தனர்; அடிமை முறையையும் போரையும் கண்டித்தனர். சினிக்குகள் (Cynics) என்ற ஒருவகைத் தத்துவவாதிகள் கூறியது போன்று சமுதாயத்தை விட்டுத் தனிமைக்கு ஓடும்படி அவர்கள் கூறவில்லை. சமுதாயத்தினிடையே வாழ்ந்து அதன் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு அதற்குத் தொண்டு செய்ய வேண்டுமெனவே அவர்கள் நினைத்தனர். "கடமையைச் செய். பலனைப் பற்றிக் கவலைப் படாதே" என்ற கீதையின் வாக்கை அவர்கள் அப்படியே ஏற்றுக் கொண்டனர்.

எபிக்யூரியர்கள் ஓரளவு ஊழில் நம்பிக்கை கொண்டிருந்தார்களெனினும் மனிதனுல் அதை மாற்ற முடியுமென எண்ணினர். எல்லாப் பொருள்களும் சிறிய அணுக்களால் ஆக்கப்பட்டுள்ளன. என்று அவர்கள் கூறினரென்ருலும் மனவலிமையால் அவ்வணுக்களின் இயக்கத்தை மாற்ற முடியுமென்று அவர்கள் கருதினர்கள். அந்த அளவுக்கு அவர்கள் பண்டைய கிரேக்கர்களை ஒத்து இருந்தனர்; ஆனுல் ஸ்டாயிக்குகளைவிட அதிக சுயநலமுடையோராயிருந்தனர். அரசியல் சமுதாய வாழ்க்கை பற்றி அவர்கள் அதிகம் அக்கறை கொள்ளவில்லை. சட்டங்கள், அரசியல் நிறுவனங்கள் யாவுமே மனிதரின் இன்ப நுகர்ச்சிகளுக்கு உதவத்தக்க வகையில் அமைக்கப்படவேண்டும். மனிதரின் இன்பத்துக்காகத்தான் அரசு, சட்டம் எல்லாம் இருக்கின்றனவேயன்றி அவைகளுக்காக மனிதன் வாழவில்லை என அவர்கள் கருதினர். ஞானி ஒருவன் அரசியலில் கலந்து கொள்ளாமலிருப்பதே மேல் எனவும், உலகைத் திருத்த முயல்வது நாய்வாலை நிமிர்த்தி வைக்கும் முயற்சிக்குச் சமம் என்பதை உணர்ந்து தானுண்டு, தன் வாழ்க்கையுண்டு என்று வாழ்பவனே முழுமையான அறிவுடையவன் எனவும் அவர்கள் போதித்தனர்.

பிர்ரோ (Pyrrho) என்பவரால் தோற்றுவிக்கப்பட்டுக் கார்னியாடிஸ் (Carneades) என்பவரால் வளர்க்கப்பட்ட ஸ்கெப்டிஸிஸம் (Skeptcism) என்ற கொள்கையைக் கொண்டவர்கள், ஸ்டாயிக்குகளைவிட ஒருபடி முன்னே சென்றவர்கள். ஐம்பொறிகளால் அறியப்படுவதே அறிவு என்று சோப்பிஸ்டுகள் சொன்னதை வைத்துக் கொண்டு அவர்கள் இவ்வுலகில் எதுவும் நிலையான நன்மையுடையதன்று என்றும், எதையும் நிரூபித்தல் என்பது இயலாதென்றும், இப்படித் தோன்றுகிறது என்று சொல்லலாமே தவிர இப்படித்தான் இருக்கிறது என்று யாரும் அறுதியிட்டுச் சொல்ல இயலாது என்றும் அவர்கள் வாதித்தனர். இதுதான் உண்மை, இதுதான் நியாயம் என்று எதையும் சொல்ல இயலாதென்றும், சமயத்துக்கேற்றுற்போல் அவை மாறத் தக்கன என்றும் அன்னர் போதித்தனர். ஏறக்குறைய நம்நாட்டு மாயாவாதத்தைப் போன்றிருந்தது அவர்களது தத்துவம்.

கி. மு. முதலாம் நூற்ருண்டளவில் தத்துவங்கள் ஏறக்குறைய கீழைய சமயங்களின் நிலையை அடைந்தன. பிலோ (Philo) என்ற யூதர், பிளேடோவின் தத்துவத்தையும், கீழை நாட்டுச் சமயத்தையும் ஒன்று கலந்து நியோ பிளேடோனிஸம்

(Neoplatonism) என்ற தத்துவத்தை உருவாக்கினர். பருப் பொருள் நிலையாதது. ஆன்மா ஒன்றே நிலையானது. எனவே பருப்பொருளான உலகை ஒருவன் துறக்க வேண்டும். இறை வனைத் தியானித்து அதன் மூலமாகவே ஞானத்தைப் பெற முடியும். அறிவைக் கொண்டு ஒளியைப் பெற முடியாது என அவர்கள் போதித்தனர். தியானம் செய்து இறைவனோடு இரண்டறக் கலப்பதே வாழ்க்கையின் குறிக்கோள் என அன்னர் நம்பினர்.

கலையும் இலக்கியமும்

இக்காலத்தே தோன்றிய இலக்கியங்கள் யாவும் பண்டைய இலக்கியங்களை ஒட்டி எழுதப்பட்டனவேயன்றிச் சொந்தமாகச் சிந்தித்து எழுதப்பட்டவை அல்ல. கருத்தாழமும் அவற்றில் அதிகமாகக் காணப்படவில்லை. எனினும் ஏராளமான நூல்கள் காளான்களைப் போல் தோன்றிக் கொண்டேயிருந்தன. ஆயிரத் துக்கும் மேற்பட்ட இக்கால ஆசிரியர்களின் நூல்கள் பல்வேறு இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றில் ஒன்றுவது, பண்டைய கிரேக்க இலக்கியங்களின் தரத்தை எட்டிப் பிடிக்கவில்லை.

ஹெல்லனீயச் செய்யுள்கள் பெரும்பாலும் நாடக வடிவி லேயே அமைந்திருந்தன. நாடகங்கள் யாவும் மகிழ்ச்சியான நிகழ்ச்சிகளையும் கொண்ட இன்பியல் நாடகங்களாகவே விளங் கின. ஆனால் அரிஸ்டோபேனஸ் (Aristophanes) என்பாரது இன்பியல் நாடகங்களில் காணப்பட்ட கருத்தாழமும், சமுதாய ஊழல்களை மறைமுகமாகச் சாடுகின்ற திறமையும் இக்கால நாட கங்களில் காணப்படவில்லை. உள்ளதை உள்ளபடியே அவைகள் சித்தரித்தன. வாழ்க்கையில் உள்ள இருண்ட பகுதிகளை விடுத்து, ஒளிமயமான நல்ல பகுதிகளை மட்டுமே அவை வெளிப் படுத்தின. அறிவு சம்பந்தப்பட்டதும் அரசியல் தன்மை பொருந்தியதுமான நாடகங்கள் மிக மிகக் குறைவாகவே வெளிவந்தன. காதல் வாழ்க்கையையும் அதன் கரடுமுரடான பாதையையும் அடிப்படையாகக் கொண்டே நாடகங்கள் பல எழுந்தன. பல இடுக்கண்களுக்குப் பின் காதலனும் காதலியும் திருமணம் செய்து கொண்டு இன்பமாக வாழ்வதாகவே பற்பல நாடகங்களின் முடிவுகளும் அமைந்திருந்தன. கி. மு. மூன்றும் நூற்றாண்டில் வாழ்ந்த தியாக்ரிடஸ் (Theocritus) என்பார் பல ஆயர்கவிகள் (Pastoralpoems) எழுதினர். அவைகளுள் கிராம மக்களின் சூதுவாதற்ற வாழ்வும், இயற்கையின் எழிலும்,

கிராமியச் சூழ்நிலைகளின் கவர்ச்சியும் நன்கு படம் பிடித்துக் காட்டப்படுகின்றன. மீம் (Mime) என்ற ஒருவகை நாடகங்கள் நகர்ப் புறக் கனவான்களின் சச்சரவுகள், பேராசைகள் முதலிய பல்வேறு நடவடிக்கைகளைச் சுவையான உரையாடல்கள் மூலம் வெளிப்படுத்தின.

உரைநடை இலக்கியங்கள் அதிகமாக இக் காலத்தே தோன்றவில்லை. வரலாறுகள்தான் உண்மையில் இக்கால உரைநடை இலக்கியங்களாய்த் திகழ்ந்தன. சுயசரிதங்கள் எழுதியவர்களும், கற்பனை உலகங்களைப் பற்றி வரைந்தவர்களும் ஒரு சிலர் இருந்தனர். மெகலாப்பொலிஸ் (Megalopols) நகரச் சேர்ந்த போலிபியஸ் (Polybius) என்பார் இக்கால வரலாற்றுசிரியர்களுள் மிகச் சிறந்தவர். உண்மையைக் காண வேண்டுமென்ற துடிப்பிலும், அறிவியல் பூர்வமான ஆராய்ச்சிக் கண்கொண்டு எதையும் நோக்குவதிலும் அவர் தூசிடைடிஸ் என்ற பண்டைய வரலாற்றுசிரியரை ஒத்து விளங்கினர். சுயசரிதைகளே மக்களால் பெரிதும் விரும்பிப் படிக்கப் பெற்ற இலக்கியங்களாகும். எதிர்காலத்தில் நாடு இப்படித்தான் இருக்க வேண்டும் என எண்ணிய ஒரு சிலர் அதை ஒரு கற்பனை உலகமாகத் தங்களது நூல்களில் படைத்து மகிழ்ந்தனர். அத்தகைய கற்பனை உலகில் நிலங்கள், சொத்துகள் முதலியன பொதுவுடைமைகளாக இருந்தன. வாணிகமும் இன்றிப் பணப்புழக்காட்டமும் இல்லை. பேராசை இல்லாமல், ஒருவரை ஒருவர் சுரண்டாமல் பொருளாதாரத் துறையிலும், சமுதாயத் துறையிலும் சமத்துவத்தோடு வாழ்கிற மக்கட் சமுதாயத்தை அவர்கள் அத்தகைய நூல்களில் விவரித்தனர். ஊழல் நிறைந்த ஒரு சமுதாயத்தைச் சீர்திருத்த வேண்டுமென்ற ஆர்வத்தை அவை மறைமுகமாகப் புலப்படுத்தின.

கலைத்துறையிலும் பண்டைய மாண்பு குறைந்தது. பொற்காலக் கிரேக்கக் கலையில் காணப்பட்ட மனிதாபிமானம் (Humanish), அடக்கம், அமைதி, சமநிலை போன்ற உயர் பண்புகள் மறைந்து அதற்குப் பதிலாகக் கோபம், தாபம், புலன்வழி நுகரப்படும் சிற்றின்பம் இவைகளே அவற்றுல் வெளிப்படுத்தப்பட்டன. கட்டிடங்களில் எளிமையும் கண்ணியமும் மறைந்து, ஆடம்பரமும் பகட்டும் குடிபுகுந்தன. மாளிகைகளும் அரண்மனைகளும் ஏராளமான செலவில் கட்டப்பட்டன. சான்றாக அலெக்ஸாந்திரியா நகரத்துக் கலங்கரை விளக்கக் கோபுரமானது பல கிலோமீட்டர் உயரம் கொண்ட

மூன்று மாடிக் கட்டிடமாக விளங்கியது. உச்சியிலிருந்து ஒளிவிளக்கைத் தாங்க எட்டுப் பெருந்தூண்கள் அமைக்கப் பட்டிருந்தன. சிற்பங்களிலும் பழைய பண்புகள் மறைந்து விட்டன. அளவில் மிகப் பெரியனவாயும், பார்வைக்கு மிக விகாரமாயும் அவை காணப்பட்டன. மனிதனின் மிருக உணர்ச்சிகளே அவற்றில் பெரிதும் சித்தரிக்கப்பெற்றன. லாகூன் (Laocoon) என்ற சிற்பத்தில் உடல் துன்பம் எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளதென்பதை ஏற்கெனவே நாம் கண்டோம். பெர்காமம் (Pergamum) என்னுமிடத்தில் காத்துகள் (Goshs) என்ற முரட்டு வகுப்பினருக்கும் கிரேக்கருக்குமிடையே நடை பெற்ற போரின் நினைவுச்சின்னமாக எடுக்கப்பட்ட மேடையில் பல அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டன. மரணமடையும் தருவாயிலிருக்குங்கால் வீரனொருவனின் சிற்பத்தில் உடல் துன்பங்கள் தத்ரூபமாக வெளிக் காட்டப்பட்டுள்ளன. மேலாஸ் நகர ரதிதேவதையின் (Venus) சிலை, சமோதிரேஸ் நகரைச் சேர்ந்த வெற்றி தேவதையின் சிலை ஆகிய இரண்டும் இக்காலச் சிற்பங்களுள் தலைசிறந்தனவாகும்.

சமயம்

சமயத்துறையில் புத்தம் புதிய கருத்துகள் கிரேக்கரிடையே இக்காலத்துப் பரவ ஆரம்பித்தன. உணர்ச்சிக்கு உணவூட்டும் பல அம்சங்கள் சமயத்தில் சேர்க்கப்பட்டன. மறைவாகச் செய்ய வேண்டிய சடங்குகள் நிறைந்த ஆர்ப்பிக் சமயம்(Orphic), எலியூஸினியச் சமயம்(Eleusinian)முதலியன மக்களால் பெரிதும் விரும்பிக் கடைப்பிடிக்கப்பட்டன. எகிப்தியர்களின் தேவதை யான ஐஸிஸ் (Isis) எனும் தெய்வ வழிபாட்டைப் பலர் பின் பற்றினர். விண்வெளியில் காணப்படும் கோள்களும் உடுக் களும் வணங்கப்பட்டன. அதனால் ஜோஸியக் கலையில் மக்க ளுக்கு அபாரமான நம்பிக்கை ஏற்படலாயிற்று. ஜொராஸ்டிரியச் சமயத்தின் கிளைகளான நாஸ்டிஸிஸம் (Gnosticism), மித்ரேயிஸம் (Mithraism) போன்ற சமயங்களின் செல்வாக்கு அதிகரித்தது. பாவிகளை இரட்சிக்கக் கடவுளின் குமாரர் ஒருவர் வருவார் என்ற நம்பிக்கையை இம் மதங்கள் பரப்பின. உலகம் துன்ப மயமானது. எனவே மறு உலக வாழ்வுக்காக ஒவ்வொரு வரும் பாடுபடவேண்டுமென அவை போதித்தன. ஏழைகளே யன்றிப் பணக்காரர்களும் இம்மையில் வெறுப்பும் மறுமையில் ஆசையும் கொண்டனர். பாலஸ்தீனத்தை அலெக்ஸாந்தரும், அதன்பின் ரோமானியரும் படையெடுத்து வென்றதன் விளை வாக அங்கிருந்த யூதர்கள் மத்தியத் தரைக்கடற் பிரதேசங்களி

லெல்லாம் பரவி, கிரேக்க மொழியைக் கற்றுக் கிரேக்கப் பண்பைக் கடைப்பிடித்தனர். அதேசமயம் பாரசீகரிடம் தாங்கள் கற்ற சமயக் கொள்கைகளையும் அவர்கள் கிரேக்கச் சமயத்தோடு கலந்துவிட்டனர். ஆன்ம அனுபவம், இறைவனோடு தியானத்தின் மூலம் இரண்டறக் கலத்தல் ஆகியவற்றைப்பற்றிய நம்பிக்கையை அவர்கள் கிரேக்கரிடையே புகுத்திவிட்டனர்.

அறிவியல்

மற்றெல்லாத் துறைகளையும்விட அறிவியல் துறையில்தான் ஹெல்லனீய நாகரிகம், பண்டைய கிரேக்க நாகரிகத்தை விடப் பெரிதும் வேறுபட்டுக் காணப்பட்டது. மெச்சத்தக்க முன்னேற்றங்கள் பல அறிவியலில் இக் காலத்தே ஏற்பட்டன. கணிதம் வான இயல், புவியியல், மருத்துவம், பௌதிகம் ஆகிய பாடங்களே நல்ல வளர்ச்சி பெற்றன. வேதியல் (Chemistry) உயிரியல் (Biology) என்ற பாடங்கள் அவ்வளவாகப் படிக்கப் பெறவில்லை.

சாமோஸ் நகரைச் சேர்ந்த அரிஸ்டார்க்கஸ் (Aristarchus) என்பார் இக்காலத்து வான இயல் அறிஞர்களுள் சிறந்தவர். கிரேக்கக் கோபர்னிகஸ் என அழைக்கப்படும் அவர், சூரியனைப் பூமி சுற்றுகிறதென்றும், தன்னைத்தானேயும் சுற்றிக்கொள்கிறதென்றும் அறிவித்தார். ஆனால் அவர் கருத்தை எவருமே நம்பமறுத்தனர். இப் புவனத்தின் பெரும் பரப்பைப் பற்றி முதலில் பல உண்மைகளை வெளியிட்டவர் அவரே. வானில் காணப்படும் விண்மீன்கள் பூமியிலிருந்து வெகு தூரத்திலிருப்பதாலேயே அசையாமல் ஓரிடத்திலேயே இருப்பது போல் தோன்றுகின்றன என்றும், மற்றபடி அவைகளும் வானத்தே வேகமாகப் போய்க்கொண்டிருக்கின்றன என்றும் அவர் கூறினர். ஹிப்பார்க்கஸ் (Hipparchus) என்ற இன்னொரு அறிஞர் (கி. மு. 2-ம் நூற்றாண்டு) அறிவியல் பூர்வமான வான சாத்திரத்தை உருவாக்கினர். கிரகணங்களை அவர் துல்லியமாகக் கணித்தார். ஆஸ்ட்ரலாப் (Astralob) என்ற வானியல் கருவியைக் கண்டுபிடித்தவரும், விண்வெளியில் விண்மீன்கள் இருக்குமிடங்களைக் காட்டக்கூடிய அட்டவணை ஒன்றை உண்டாக்கித் தந்தவரும் அவரே. சந்திரனின் விட்டத்தை ஏறக்குறையச் சரியாகக் கணித்ததுமன்றிப் பூமிக்கும் அதற்கு மிடையேயுள்ள தூரத்தையும் ஓரளவு துல்லியமாக அவர் கணக்கிட்டார். எராடோஸ்தனிஸ் (Eratosthenes) (கி. மு. 276 எனும் வான நூலறிஞர், எகிப்தின் வடகோடியிலும் தென்கோடியிலும் நண்பகலில் கதிரவன் உண்டாக்கும் நிழல்களின் அளவைக்

கொண்டு பூமியின் சுற்றளவைக் கணக்கிட்டார். அலெக்ஸாந்திரியாவைச் சேர்ந்த தாலமி என்பவரே இக்கால வானநூலறிஞர்களிற் கடைசியானவர். அவர் தாமே புதிதாகக் கண்டுபிடித்தவை அதிகமில்லை எனினும், ஏனையோரால் வானவியல் பற்றி எழுதப் பெற்றவைகளை எல்லாம் ஒருங்கே தொகுத்து வைத்தார். அவர் எழுதிய அல்மாஜெஸ்ட் (Almagest) என்ற வானநூல்தான் இடைக்கால ஐரோப்பியர் விரும்பிப் படித்த நூலாகும். அதில் அவர் பூமியைச் சூரியன் சுற்றுவதாகவே எழுதிவைத்தார்.

அலெக்ஸாந்திரிய நகர் அக்காலத்தே கணித மேதைகள் பலரது உறைவிடமாய்த் திகழ்ந்தது. யூக்லீட் (Euclid கி. மு. 328-285) எனும் கணிதப் புலவர், வரைபடநூலின் (Geomentry) அடிப்படை உண்மைகளை வெளியிட்டார். அவை முழுவதும் அவரால் புதிதாகக் கண்டுபிடிக்கப்படவில்லையெனினும், ஏனையோரின் படைப்புகளை எல்லாம் ஒருங்கே திரட்டிய பெருமை அவர்க்குண்டு. எகிப்திய மன்னர் தாலமியே அவரிடம் கணிதம் படித்ததாகத் தெரிகிறது. கி. மு. 3-ஆம் நூற்றாண்டில் சிராக்யூஸில் வாழ்ந்த ஆர்க்கிமிடீஸ் (Archimedes) என்பார் ஒரு பெருங் கணித மேதையாவார். பொருள்களின் அடர்த்தியை (Density) அவை நீரில் மிதக்கும்போது வெளித் தள்ளும் நீரைக்கொண்டு அறியலாம் என்ற உண்மையை அவர் குளித்துக்கொண்டிருக்கும்போது கண்டுபிடித்தார். உடனே நான் கண்டுபிடித்துவிட்டேன் என்று பொருள்படும்படி யுரேகா (Eureka) யுரேகா என்று கூவிக்கொண்டே தெருவில் ஓடினாராம். இவ்வுண்மையைப் பயன்படுத்தி, சிராக்யூஸின் மன்னரான ஹீரோ (Hiero) என்பாரின் கிரீடம் பொன்னாலானதன்று என்ற உண்மையை அவர் கண்டுபிடித்துக் கொடுத்தார். கோளங்கள், உருளைகள் பற்றிய பல உண்மைகளை அவர் கண்டு யெளியிட்டார். புவிஈர்ப்புப் பற்றியும் (Centre of Gravity) அவர் ஆராய்ச்சி செய்துள்ளார். சிராக்யூஸின் எதிரிக் கப்பல்களை விரட்டியடிக்கவும், அழிக்கவும் அவர் ஒரு பொறியைக் கண்டுபிடித்தார் என்றும், ரோமானியரின் கப்பல்கள் மீது சூரிய வெளிச்சத்தைக் கண்ணாடிகள் மூலம் பாய்ச்சி அவற்றைப் பற்ற வைத்தார் என்றும் கூறப்படுகின்றன.

புவியியல் துறையில் மெச்சத்தக்க முன்னேற்றம் இக்காலத்தே ஏற்பட்டது. ஸ்ட்ராபோ (Strabo) என்பவர் உலகின் பல பாகங்களுக்கும் சென்று, தாம் கண்டவைகளைப் பற்றி ஒரு நூல் எழுதி வைத்துச் சென்றுள்ளார். அதே போன்று தாலமி

என்ற அறிஞரும் உலகின் பல்வேறு இடங்களுக்குச் சென்று பார்த்துப் புவியியல் நூல் ஒன்றை வரைந்துள்ளார். அவருடைய உலகப்படம் ஏறக்குறைய தற்காலப் படத்தை ஒட்டியுள்ளது. அலெக்ஸாந்திரியா நகரைச் சேர்ந்த எராடோஸ்தனிஸ் என்பாரும் உலகப் படம் ஒன்றை வரைந்துள்ளார். அதில் அவர் உலகை அட்சரேகை, தீர்க்கரேகைகள் மூலம் பல பகுதி களாகப் பிரித்துள்ளார். எல்லாக் கடல்களும் ஒன்றுக இணைந் திருக்குமுண்மையையும் மேற்கே பயணம் செய்தால் இந்தியாவை அடைய முடியும் என்பதையும் அவர் அப்போதே தெரிவித்தார்.

மருத்துவத் துறையிலும் சிறந்த பல அறிஞர்கள் இக் காலத்தே தோன்றினர். கால்கிடன் நகரைச் சேர்ந்த ஹெரோபிலஸ் (Herophilus) என்பார் கி. மு. மூன்றும் அலெக் ஸாந்திரியாவில் தங்கி உடல் நூல் துறையில் பல ஆய்வுகளை நடத்தினர். மனித உடலை வெட்டி ஆராய்ச்சி செய்யும் முறையை அவரே முதன் முதல் கொணர்ந்தார் எனச் சொல்லப் படுகிறது. மூளையைப் பற்றியும், இரத்தத் துடிப்பு பற்றியும் அதைக் கொண்டு நோயை எங்ஙனம் ஊகித்தறியலாமென்பது பற்றியும் அவர் விதந்து ஓதியுள்ளார். தமனிகளில் (Arteries) சிவப்பு இரத்தம் மட்டுமே இருக்கிறதென்றும் இருதயத்தி லிருந்து இரத்தத்தை உடலெங்கும அது கொண்டு செல்கிற தென்றும் முதலில் அறிவித்தவர் அவரேயாவர். கி. மு. 3-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எராசிஸ்டிராடஸ் (Erasistratus) என்பார் உடற்கூறு நூலை முதன் முதல் ஒரு தனி அறிவியல் நூலாகப் பிரித்து எழுதியவராவார். இறந்துபோன சடலங்களைப் பிளந்து பார்த்து அவர் பல உடற்கூறு உண்மைகளைக் கண்டுபிடித்தார். இதயத்தினுள்ளே கதவுகள் இருப்பதையும் நரம்புகள் வெவ்வேறு பணிகள் செய்வதையும் கண்டுபிடித்தவர் அவரே. இரத்தத்தை உடம்பிலிருந்து வெளியே எடுப்பதால் நோய் நீங்க வழி ஏற் படும் என்ற மூடக்கொள்கையை அவர் அறவே கண்டித்தார்.

பௌதிகத்தை ஒரு தனிப் பாடமாக ஆக்கியவர் சிராக்யூஸைச் சேர்ந்த ஆர்க்கிமிடீஸ் என்பவரேயாவர். நாம் மேலே பார்த்தபடி பொருள்களின் இன எடையைக் கண்டுபிடிக்கும் முறையை அவர் புதிய வகையில் எடுத்துக் கூறினர். மற்றும் கப்பி(Pully), திருகாணி (Serew), நெம்புகோல் (Lever) ஆகியவை பற்றிய உண்மைகளையும் அவர் கண்டு வெளியிட்டார். மற்றும் தண்ணீர் இறைக்கும் பொறியொன்றையும், கப்பல்களை இயக்கும் முன் தள்ளிகளையும் (Propellor), எரிக்கும் குவிஆடியையும் (Burninglens) அவர் கண்டுபிடித்தார். அலெக்ஸாந்திரியாவைச்

சேர்ந்த ஹெரான் (Heron) எனும் விஞ்ஞானி பல பயனுள்ள பொருள்களைக் கண்டுபிடித்ததாகக் கூறப்படுகிறது. நெருப்பணைக்கும் இயந்திரம், சைபன் (Siphon) நீர் இறைக்கும் விசை இயந்திரம் (Force Pump), நீராவி இயந்திரம், கல்லெறியும் பொறி (Catapult) முதலிய பல கருவிகளை அவர் கண்டுபிடித்துப் பயன்படுத்தினர். இவற்றையெல்லாம் அவரே கண்டுபிடித்தாரா, ஏற்கெனவே அவை புழக்கத்தில் இருந்தனவா என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை. அடிமைகளை வேலைக்கு அமர்த்தும் முறை எங்கும் காணப்பட்டதால் இயந்திரத்தைப் பயன்படுத்த வேண்டுமென்ற ஊக்கம் யாருக்கும் ஏற்படவில்லை. எனினும் அக்கால நிலைக்கு அலெக்ஸாந்திரியக் கிரேக்கர்கள் பெரிதும் அறிவியலில் சிறந்து விளங்கினர்கள் என்றே தோன்றுகிறது

இங்ஙனம் பல துறைகளிலும் பண்டைய கிரேக்க நாகரிகத்தினின்றும் வேறுபட்டு விளங்கிய ஹெல்லனீய நாகரிகம் ஓரளவு தற்கால நாகரிகத்தை ஒத்து விளங்கியது. பெருமளவில் வாணிக முயற்சி, புதிய நாடுகளைக் கண்டுபிடிப்பதில் ஆர்வம், புதிய கருவிகளைக் கண்டுபிடித்தல், வியாபாரப் போட்டி, சுகபோகங்களில் ஆர்வம், பெரிய நகரங்களின் தோற்றம், ஏழை பணக்காரர்களிடையே வேற்றுமை முதலியவைகள் ஏறக்குறைய தற்காலத்தில் இருப்பது போன்றே அக்காலத்திலும் இருந்தன. அரசியல் துறையிலும், அறிவியல் துறையிலும், கலைத்துறையிலும் கூடப் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. ஆனால் தற்காலத்தே நாம் காண்பது போன்று அவ்வளவு விரிவான முறையில் தொழிற் புரட்சியோ, அறிவியல் முன்னேற்றமோ அக்காலத்து ஏற்படவில்லை என்பது தேற்றம்.

23. கிரேக்கர்கள் உலகுக்கீந்த உயர்தனிச் செல்வம்

வாழ்ந்த காலம் சிறிதெனினும் வாழ்வாங்கு வாழ்ந்து வையகத்துக்கோர் வழிகாட்டும் ஒளிவிளக்காய்த் திகழ்ந்த பெருமை பண்டைய கிரேக்கர்களுக்குரியதாகும். முன்னுரையில் நாம் கூறியுள்ளபடி இன்றைய ஐரோப்பிய நாகரிகத்துக்கு வித்திட்டவர்கள் கிரேக்கர்களேயாவர். அவ்வித்தினை முளைக்க வைத்து, நீரூற்றி, உரமிட்டு அழகிய ஒரு செடியாக ஆக்கிய வர்கள் ரோமானியர்களாவர். இடைக்காலத்தே அச் செடியைக் காட்டுமிராண்டிகளின் படையெடுப்பு எனும் ஆடு மேய்ந்துவிட்ட காரணத்தால் ஓரளவு வளர்ச்சி குன்றி அஃது அப்படியே நின்று விட்டது. ஆனால் கி. மு. பதினான்கு, பதினைந்தாம் நூற்றாண்டு களில் இத்தாலியர்கள் அதற்கு மீண்டும் எருவிட்டு நீரூற்றி உயிர் கொடுத்து வந்தனர். செடி மரமாகி அதன் நீண்ட கிளைகள் ஐரோப்பாவெங்கும் பரவின. இன்றைக்கு அவை உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவியுள்ளன. அதன் கனிந்த கனியே இன்றைய மேலை நாகரிகம். எனவே சிறப்பாக மேலை நாட்டினரும் பொதுவாக உலக மக்கள் அனைவருமே பண்டைய கிரீஸுக்குப் பல்வேறு துறைகளில் பெரிதும் கடப்பாடுடையவர் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. அரசியல், அறிவியல், அறவியல் (Ethics) மெய்யறிவியல் (Philosophy) ஆகிய பல துறைகளிலும் அன்று கிரீஸ் எனும் ஒரு சிறு அறையில் ஆடிய ஆட்டத்தையே ஐரோப்பியர்கள் இன்று உலகமெனும் அரங்கில் இன்னும் திறமையாக ஆடிவருகின்றனர் என்றால் மிகையாகாது.

அறிவுத்துறையில் கட்டற்ற சிந்தனைக்கு முதலில் ஆக்கம் தந்தவர்கள் கிரேக்கர்களேயாவர். தற்கால ஆசிரியர் ஒருவர் கூறுவது போன்று "சிந்தனை! சிந்தனை! தீர்க்கமான அறிவைத் தேடும் தீராத சிந்தனை! தீரத் தெளிந்த சிந்தனை!" இதுவே கிரேக்கர்களின் மூச்சாயிருந்தது. மதமோ, மதக்குருக்களோ

சடங்குகளோ, சம்பிரதாயங்களோ தங்களது சிந்தனைக்கு விலங்கு கிடுவதை அவர்கள் தவிர்த்தனர். மதம் அவர்களது வாழ்க்கையில் இடம் பெறவில்லை என்று கூறமுடியாது. அவர்கள் கடவுளரை வணங்கினர்கள்; கோயில்களுக்குச் சென்றார்கள்; விழா நடத்தினர்கள். டெல்ஃபிக் குறிமேடைக்குச் சென்று அபோலோ தெய்வத்தின் அருள்வாக்குக்கு மணிக்கணக்கில் காத்துக்கிடந்தார்கள். ஆனால் மதத்தை அவர்கள் கோயிலோடு நிறுத்திக்கொண்டார்கள். கோயிலுக்கு வெளியே அரசியலிலும் கலையிலும் தனிவாழ்க்கையிலும் பொதுவாழ்க்கையிலும் அறிவே தனி நாயகம் செலுத்தியது. அறிவுக்கு முதலிடமும் சமயத்துக்கு இரண்டாமிடமும் கொடுத்ததனாலேயே அறிவியலும் அறவியலும் மெய்யறிவியலும் கலைகளும் வளம்பெற வளர்ந்தன எனலாம். சிந்தனைச் சிற்பி சாக்ரடீஸ்தான் கிரேக்கர்களுக்குச் சிந்திக்கும் கலையைக் கற்றுத் தந்தார். ஏன்? எப்படி? எதற்காக? என்ற கேள்விகளைத் தொடுத்து மெய்யறிவைப் பெறும்படி வற்புறுத்தியவர் அவரே. இத்தகைய ஆராய்ச்சி முறையே அறிவியல் மனப்பான்மை (Scientic out look) எனத் தற்காலத்தே பேசப்படுகிறது. அத்தகைய மனப்பான்மையின் விளைவாகவே இக்காலப் புதுமைப்படைப்புகள் யாவும் (Inventions) தோன்றியுள்ளன. இங்ஙனம் கிரேக்கர்கள் இக்கால அறிவியல் வளர்ச்சிக்கு அடிப்படையை அமைத்துத் தந்தவர்களாகின்றனர்.

கிரேக்கர்கள் இயற்கையாகவே அரசியல் உணர்வு படைத்தவர்கள். "மனிதன் ஓர் அரசியல் பிராணி" (Man is a political-animal) என்பது அரிஸ்டாடிலின் வாதமாகும். காலையிலிருந்து மாலைவரை அரசியல் தவிர வேறு எதிலும் ஈடுபடாத குடிமக்கள் நிறைந்ததே, ஆதென்ஸ் போன்ற நகர அரசுகள். அன்றுடம் மனிதனுக்குத் தேவையான பணிகளைச் செய்ய அடிமைகள் ஏராளமானபேர் இருந்ததால் குடிமக்கள் (Citizeus) எனப்படுவோர் அரசியலில் முழு மனத்தோடு முழு நேரமும் ஈடுபட முடிந்தது. மாஜிஸ்டிரேட் என்ற நிர்வாக அதிகாரிகள் பதவிக்கு ஆண்டுக்கு ஒருமுறை தேர்தல் நடைபெற்றதால் அநேகமாக எல்லாக் குடிமக்களும் நிர்வாகத்தில் பங்குபெற முடிந்தது. சட்ட மன்றத்திலும், நீதி மன்றத்திலும் எல்லாக் குடிமக்களுமே உறுப்பினராயிருந்தார்கள். எனவே மக்கள் தம்மைத்தாமே ஆண்டு கொள்கின்ற நேர்முக ஜனநாயகத்தை (Direct Democracy) உருவாக்கி உலகுக்கு அளித்தவர்கள் அவர்கள். சுவிட்ஸர்லாந்தில் குடிமக்கள் சட்டங்களைத் துவக்கவும் (Initiative), சட்ட மன்றத்தால் கொண்டுவரப்பட்ட மசோதாக்களுக்குக் குடியொப்பம் (Referundum) வழங்கவும் உரிமைபெற்று இருப்பது

கிரேக்க ஜனநாயகத்தைச் சார்ந்ததேயாகும். பகராட்களைக் கொண்டு ஆட்சி நடத்தும் பாங்கையும் கிரேக்கர்கள் சில துறைகளில் கடைப்பிடித்தனர். அதன் வழிவந்தவையே தற்காலத்திய பகராண்மை ஜனநாயகம் (Representative Democracy) ஆகும். தற்கால ஜனநாயகமானது கிரேக்க ஜனநாயகத்தைக் காட்டிலும் பெரிதும் முன்னேறியுள்ளது எனினும், ஆள்கின்றவர்கள், ஆளப்படுவோருக்குப் பொறுப்பு வாய்ந்தவர்கள் (Responsible-government) என்ற ஜனநாயகக் கொள்கை அவர்களால் உருவாக்கப்பட்டதேயாகும். தற்காலத்தே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றிப் பாராளு மன்றங்கள் ஆட்சியாளர்களைப் பதவியிலிருந்து நீக்க உரிமை பெற்றிருப்பது போன்றே அக்காலக் கிரேக்கரும், தமது நம்பிக்கையை இழந்துவிட்ட நிர்வாக அதிகாரிகளைப் பெரும்பான்மை வாக்கெடுப்பின் மூலம் தற்காலிகமாக நாடுகடத்தினர். (Ostracised) பொது மக்களைக் கொண்டு 'தீர்ப்புச்சான்றோர்குழு' (Jury) ஒன்றை அமைத்து, அதன் மூலம் வழக்குகளில் தீர்ப்பு வழங்கும் முறையை முதன் முதலில் கடைப்பிடித்தவர்கள் கிரேக்கர்கள். அம் முறையையே இன்று பிரிட்டனும் இந்தியாவும் அமெரிக்காவும் இன்னும் பல நாடுகளும் பின்பற்றுகின்றன. பெரும்பான்மை வாக்கெடுப்பின் மூலம் தீர்மானங்களை நிறைவேற்றல், சீட்டுக் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுத்தல் (lot System), குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்தல் போன்ற ஜனநாயக முறைகள் கிரேக்கரின் அடிச்சுவட்டை ஒட்டியே நடைபெறுவனவாகும். அரசியலைப் பற்றிப் பொதுமக்கள் முன்னிலையில் ஆவேசமாகப் பேசுதல் (Oratory), அரசியல் சிக்கல்களை விவாதித்தல் முதலியவைகளைத் துவக்கியவர்களும் அவர்களே. அரசியல் சொற்பொழிவாற்றுவதை ஒரு கலையாகவே கிரேக்கர்கள் எங்ஙனம் வளர்த்தார்கள் என்பதை நாம் மேலே கண்டோம். நாம் இன்று அனுபவிக்கும் பேச்சுரிமை, சிந்தனையுரிமை, எழுத்துரிமை, கூட்டங்கூடும் உரிமை, வழிபாட்டுரிமை (Freedom of speecs, thought, urithy, assemblage and worship) போன்ற அமைதிக்கான உரிமைகள் (Civils Rights)யாவும் கிரேக்கர்களால் வற்புறுத்தப்பட்டவைகளேயாகும். பிளேடோவும், அரிஸ்டாடிலும் எழுதிய குடியரசு (Republic), அரசியல் (Politics) போன்ற நூல்கள் இன்றைக்கும் அரசியல் படிக்கும் மாணவர்களின் அரிச்சுவடிகளாய் விளங்குகின்றன. பொதுவுடைமைக் கொள்கையைப் பற்றி (Communism) பிளேடோ வற்புறுத்தியுள்ளார். ஸ்பார்ட்டாவில் காணப்பட்ட பொதுவுடைமைக் கொள்கையே தற்காலப் பொதுவுடைமை வாதத்துக்கு அடிப்படையாகும். கிரேக்க நகரங்களில் ஆட்சி புரிந்த சர்வாதிகாரிகளைப் பின்பற்றியே தற்கால வல்லரசர்

களும் (Despots) சர்வாதிகாரிகளும் (Dictators) நடத்துகொள் கின்றனர். இங்ஙனம் பண்டைய கிரேக்கர்கள் தற்கால அரசியல் வாழ்வுக்குப் பலவகையிலும் அடிகோலியவர்களாகின்றனர்.

கலைத் துறையிலும் கல்வித் துறையிலும் தற்கால உலகம் பண்டைய கிரேக்கர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. சாக்ரடீஸின் கேள்வி பதில் முறையை ஒட்டியே தற்கால விவாத வகுப்புகளும் (Discussion classes) கருத்தரங்குகளும் (Serminars) நடைபெறுகின்றன. பள்ளிகளில் காணப்படும் உடற்பயிற்சிக் கூடங்களும் (Gymnariums) அரங்குகளும் (Stadiums) கிரேக்கர்தம் வழிவந்தனவேயாகும். ஓட்டப் பந்தயம், கேடயம் எறிதல் (Discuss Throw), குண்டு எறிதல் (Shot Put) போன்ற பல விளையாட்டுப் பந்தயங்கள் கிரீஸில் இருந்து வந்தவைகளே. கிரேக்கர்களின் ஒலிம்பிக் விளையாட்டுப் பந்தயங்களை ஒட்டியே இன்றைய ஒலிம்பிக் பந்தயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1869–ஆம் ஆண்டிலிருந்து, நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை, அது உலகின் பல்வேறு தலைநகரங்களில் நடைபெற்று வருவது இன்றும் கண்கொள்ளாக் காட்சியாகும். மற்போர், சொற்போர், கவிதைப் போட்டி முதலிய கிரேக்கப் பந்தயங்கள் இன்றும் மக்களிடையே நடைபெறுவதை நாம் காண்கிறோம். கல்வியைப் பற்றிய பல ஆங்கிலச் சொற்கள் கிரேக்க மொழியிலிருந்து கடன் வாங்கப்பட்டவைகளேயாகும். பௌதிகம் (Physics), எண்கணி தம் (Arithmetic), வரைபடக் கணிதம் (Geometry), அளவை நூல் (Logic), மெய்யறிவு நூல் (Philosophy) ஆகியவற்றைக் குறிக்கும் ஆங்கிலச் சொற்களின் மூலங்கள் கிரேக்க மொழியி லிருந்து வந்துள்ளன. வரைபடக் கணிதத்தில் யூக்லிட் (Euclid) என்ற அறிஞரின் தேற்றங்கள் (Theorems), பித்தா கோரஸ் என்பாரின் தேற்றம் (Pythogorus Theorem) ஆகிய வற்றை இன்றும் கணிதத்தில் மாணவர்கள் படிக்கின்றனர். கிரேக்கர்களே முக்கோணக் கணிதம் (Trigonometry), நுண் கணிதம் (Calculus) ஆகியவற்றின் அடிப்படையை அமைத்துத் தந்தவர்கள். பௌதிகம் படிப்போர் ஆர்க்கிமிடீஸின் மிதவைக் கொள்கையை அறியாமலிருக்க முடியாது. தற்கால அணுச் சேர்க்கைக் கொள்கையின் (Atomic Theory) அடிப்படையை டெமாக்ரிடஸ் என்னும் கிரேக்க அறிஞர் அமைத்துச் சென்றுள் ளார் என்பதை நாம் மறுக்க முடியாது. அதே போன்று கதிரவனை மையமாகக் கொண்டு பூமியும், ஏனைய கோள்களும் வட்டமிடுகின்றன எனும் கொள்கையைக் (Heliocentric hypothesis) கண்டுபிடித்த கோப்பர்னிகஸுக்கு வழிகாட்டியாய் இருந்தவர் அரிஸ்டார்க்கஸ் (Aristarchus) என்னும் கிரேக்க வான

நூலறிஞராவார். ஹிப்பார்க்கஸ் (Hipparchus), கிளாடியஸ், தாலமி (Claudius, Ptolemy) ஆகியோரின் வான நூல் ஆராய்ச்சிகள் தற்கால வான நூலறிவுக்கு அடிப்படையாகும். எராடோஸ் தனிஸ் (Eratosthenes) என்பாரே பூமியை அளக்கவும், அதன் தரைப் படங்களை (Maps) வரையவும் மக்களுக்குக் கற்றுத் தந்தார். விலங்குகளையும் செடிகளையும் வகைப்படுத்தியும் ஆராய்ந்தும் அரிஸ்டாடில், தியோபிராஸ்டஸ் (Theophrastus) என்ற அறிஞர்கள் தற்கால விலங்கியல் (Zoology), தாவர இயல் (Botany), வானிலை ஆராய்ச்சி (Meteorology), கருவாராய்ச்சி (Empryology) முதலிய அறிவியல்அறிவுக்கு அடிகோலினர்கள். மருத்துவ அறிவை மூடக் கொள்கையிலிருந்து விடுவித்து, இயற்கைக் காரணங்களால்தான் நோய்கள் ஏற்படுகின்றன என்பதையும் அவற்றை நீக்க மருந்துகள் தேவை என்பதையும், அறுவை சிகிச்சை முறையையும், உடலைப் பிளந்து உண்மை காணும் முறையையும் (Dissection) ஹிப்போகிராடிஸ், ஹெரோபிலஸ் (Herophilus), எராசிஸ்டிரேடஸ் (Erasistratus) என்ற கிரேக்க அறிஞர்கள்தான் முதன்முதலாக உலகுக்கு எடுத்துக் கூறியவர்கள். இங்ஙனம் தற்கால அறிவியல் பாடங்கள் அத்தனைக்கும் அடிப்படையை வகுத்தளித்த பெருமையைக் கிரேக்கர்கள் பெறுகின்றார்கள்.

கிரேக்க மரபுகளை ஒட்டியே ஐரோப்பிய இலக்கியங்கள் அமைந்துள்ளன. எழுத்துகளைக் குறிக்கும் ஆல்பபெட் (Alphabet) என்ற ஆங்கிலச் சொல், ஆல்பா (Alpha) பீட்டா (Bheeta) என்ற கிரேக்க எழுத்துகளின் அடிப்படையிலிருந்து தோன்றியதேயாகும். பினீஷியர்களிடமிருந்து கற்ற எழுத்துக் கலையைச் செம்மையாக்கிக் கிரேக்கர்கள் ரோமானியர்களுக்கு வழங்கினர். ரோமானியர்கள் அவற்றை இன்னும் செம்மையாக்கி ஐரோப்பியர்களுக்கு வழங்கினர். இந்திய மொழிகளில் தமிழும் வடமொழியும் விரவிக் கிடப்பதைப் போன்று ஐரோப்பிய மொழிகள் அனைத்திலும் கிரேக்கமும் இலத்தீனும் கலந்து கிடக்கின்றன. அறிவியல் பற்றிய உலகப் பொதுச்சொற்கள் பலவும் கிரேக்கச் சொற்களேயாகும். உருக்கமான உணர்ச்சிக் கவிதைகள் (Lyric), நாட்டுப்புற வருணனைக் கவிதைகள் (Idyl), கையறு நிலைக் கவிதைகள் (Elegy), புதினம் (Novel), கட்டுரை, சொற்பொழிவு, தன்வரலாறு (Biography) வரலாறு, நாடகம் ஆகிய இலக்கிய வகைகளைப் படைத்து உலகுக்கு வழங்கியவர்கள் கிரேக்கர்களே. யாப்பு அணி இலக்கணம், புள்ளியிடுதல் (Punctuation) பகுதிகளை அமைத்தல் (Paragraphs) முதலியவற்றை ஐரோப்பியர்களுக்குக் கற்பித்தவர்கள் கிரேக்கர்களே.

சொற்பொழிவுகளைத் தயாரித்தல் மூலம் உரைநடை இலக்கியத் திற்கு (Prose) அவர்கள் வித்திட்டார்கள். துன்பியல் நாடகம், இன்பியல் நாடகம் சைகை நாடகம் (Tragedy, Caomedy, Pantomime) ஆகியவற்றைக் குறிக்கும் ஆங்கிலச் சொற்கள் கிரேக்கச் சொற்களேயன்றி வேறல்ல. மனிதனது துன்பங்களை நாடகமாக்கி அதிலிருந்து மக்களுக்குப் பாடங்களைக் கற்றுக் கொடுக்க முதன்முதல் துணிந்தவர்கள் கிரேக்கர்களே யாவர். கிரேக்க நாடகங்களை ஒட்டியே, பென் ஜான்சன் (Ben Jonson), மோலியர் (Moliere) போன்ற தற்கால நாடக ஆசிரியர்கள் நாடகங்களை எழுதியுள்ளனர். கிரேக்கர்களின் திறந்தவெளி நாடக மேடைகளை ஒட்டியே தற்காலத் திறந்தவெளி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. வரலாற்றை வரன்முறையாக முதலில் வரைந்தவர்கள் கிரேக்கர்களே. முக்கியமாக அரசியல்வரலாற் றிற்கு அரிச்சுவடிகளை ஆக்கித் தந்தவர்கள் ஹெராடோடஸ், தூசிடைடிஸ் போன்ற கிரேக்க வரலாற்றுசிரியர்களே யாவர். கிறித்துவ சமயத்தில் காணப்படும் பல சடங்குகளும், நம்பிக்கை களும் எகிப்திலும், கிரீஸிலும் காணப்படும் ஒஸைரிஸ் (Osiris) ஆர்ப்பிக்(Orphic), எலியூஸினியன் (Eleusinion) கோட்பாடுகளில் இருந்தே பிறந்துள்ளன. மன்பதைக்காகத் தேவகுமாரன் மறித்தல், உயிர்த்தெழுதல், புனிதத்திலிருந்து நரகம், சுவர்க்கம், சாத்தான் உண்டாதல் முதலிய கருத்துகள் அக் கோட்பாடுகளி லிருந்தே தோன்றியுள்ளன. உலகத்தின் படைப்பு, அழிவு பற்றிய கொள்கைகள் ஸ்டாயிக், நியோபிளேடோனிக் நம்பிக்கை களில் இருந்து தோன்றியுள்ளன. கிரேக்கர்களின் மூடக் கொள்கைகளான நாள் பார்த்தல், சகுணம் பார்த்தல், மந்திர வாத மங்கையிருப்பதாக நம்பல் போன்றவைகளும் ஐரோப்பியச் சமுதாயத்திலும் இன்றும் உலவுகின்றன. கிரேக்கப் புராணங் களைப் பற்றிய அறிவின்றி ஆங்கில இலக்கியங்களைச் சுவைத்தல் என்பது முடியாத காரியம். ஐரோப்பியத் தத்துவத்தின் பெரும் பகுதி இன்னும் கிரேக்கர்கள் தோற்றுவித்த அளவிலேயே நிற்கிறது. எதையும் துருவித்துருவி ஆராயும் மனம் படைத்த கிரேக்கர்கள் இயற்கையையும் வாழ்வின் நுட்பங்களையும் ஆராயத் தவறவில்லை. தற்காலத் தத்துவக் கொள்கைகளான காட்சிப் பொருள் கொள்கை (Realism), நிறைநெறிக் கொள்கை (Idealism), மாயாவாதம் (Nominalism), ஒரு தெய்வ வாதம் (Monotheism), அனைத்திறைக் கொள்கை, நாத்திகம் (Pantheism), பெண்மை வாதம் (Feminism), உலோகாயதம் (Materialism) போன்றவைகள் எல்லாம் கிரேக்கத் தத்துவாசிரியர்களின் சிந்தனையிற் கொப்புளித்தவைகளேயன்றி வேறல்ல. கேன்ட் (Kant), ஸ்கோபன் ஹேர் (Schopen haur), நீட்ஸ்கி (Nietzche),

பிராய்ட் (Freud) போன்ற அறிஞர்களின் மனேதத்துவக் கொள்கைகள் கிரேக்கர்தம் அடியொற்றிப் பிறந்தனவேயாகும். கிரேக்கர்கள் தத்துவம் பேசியது மட்டுமன்றி அவற்றின்படி வாழ்ந்தும் காட்டினர்கள். சாக்ரடீஸ், பிளேடோ, டயோனிஷியஸ் போன்ற தத்துவ மேதைகளைப் பின்பற்றியே பிற்கால ரோமானியப் பேரரசர்கள் சிலரும், மறுமலர்ச்சிக் கால சமய விரோதிகளும் (Rererics) கிறித்துவப் பாதிரிமார்களும் தத்துவ வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்ந்தார்கள்.

ஐரோப்பியக் கலைகள் பல, கிரேக்கருக்குப் பலவகையில் கடமைப்பட்டுள்ளன. இன்றைய ஐரோப்பிய இசை, கிரேக்க இசையினின்றும் பெரிதும் வேறுபட்டதாகக் காணப்படுகிறது. எனினும், அதன் அடிப்படை கிரேக்கருடையதுதான் எனலாம். அதுபோல் ஐரோப்பிய நடனக் கலையும் கிரேக்கக் கிராமியங்களின் ஆட்டங்களை அடிப்படையாய்க் கொண்டவையே யாகும். பலபேர் சேர்ந்து பாடும் குழு இசை, மேடை இசை, இவைகளையும் இசையின் கோட்பாடுகளையும் பித்தாகோரஸ், அரிஸ்டோக்ஸீனஸ் (Aristoxenus) போன்ற பல கிரேக்க இசைப் பேரறிஞர்கள் அமைத்துச் சென்றுள்ளார்கள். ஓவியக் கலையைப் பொறுத்த வரையில் சுவரோவியத்தின் (Flescoes) முன்னோடியாகக் கிரேக்கர்கள் விளங்குகின்றனர். கியாட்டோ (Giotto), மைக்கேல், ஏஞ்சலோ (Michael, Angalo) போன்ற மறுமலர்ச்சி ஓவியர்களும் தற்காலச் சுவரோவியர்களும் கிரேக்கர்களின் ஓவியப் பண்பையே பின்பற்றியுள்ளனர். தற்காலச் சிற்பங்கள் பல கிரேக்கர்களின் சிலைகளைப் போன்றே ஆக்கப்படுகின்றன. உடல் அழகு அதில் பெரிதும் வற்புறுத்தப்படுவது கிரேக்க மரபாகும். இந்தியாவில் கனிஷ்கர் காலத்துக் காந்தாரச் சிற்பங்கள், கிரேக்கச் சிற்பக் கலையின் வழிவந்தவையே என்பது கலையறிஞர்களின் முடிவாகும். இன்று வானை முட்டும் மாடமாளிகைகள் எங்குப் பார்த்தாலும் காணப்பட்டினும், பண்டைய கிரேக்கரது கட்டிடங்களின் பாணியில் கட்டப்பட்ட ஒருசில நிறுவனங்கள் பல நாடுகளில் இருக்கத்தான் செய்கின்றன. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் காணப்படும் பல வியாபாரக் கிடங்குகளிலும், வங்கிகளிலும் அமைக்கப்பட்டுள்ள தூண் வரிசைகள் நிறைந்த முகப்புகள், (Facades) கிரேக்கப் பாணியிலேயே கட்டப்பட்டுள்ளன. சிற்பக் கலை, கட்டிடக் கலை இவற்றில் சீர்மை, ஓர்மை (Harmony) இவைகளைக் கிரேக்கர்கள் வற்புறுத்தியதை மனத்திற் கொண்டுதான் தற்காலச் சிலைகளும் கட்டிடங்களும் ஆக்கப்படுகின்றன.

இங்ஙனம் ஐரோப்பியரின் வாழ்க்கையையே உள்நின்று ஆட்டிப் படைக்கும் சக்தியாகக் கிரேக்க நாகரிகமும் அதை யொட்டிய ஹெல்லனீய நாகரிகமும் விளங்குவதை நாம் சற்றே சிந்தித்தால் நன்கு தெளியலாம். இன்று ஐரோப்பிய நாகரிகம் உலகின் பல பாகங்களுக்கும் பரவிவிட்டதால் ஒருவகையில் உலக நாகரிகமே கிரேக்க நாகரிகத்துக்குப் பெரிதும் கடமைப் பட்டுள்ளதாகக் கருதலாம். எனினும் கிரேக்க நாகரிகத்தில் கண்டிக்கத்தக்க பல குறைபாடுகளுமில்லாமிலில்லை. நாம் ஆங்காங்கே பல அத்தியாயங்களிலும் சுட்டிக்காட்டியுள்ளபடிக் கிரேக்கர்கள் ஒற்றுமையின்றிச் சதா போரிட்டுக் கொண்டிருந்தனர். அடுத்தவன் வாழ்வதைக் கண்டு பொருமை கொள்ளும் புன்மையும், அடுத்துக் கெடுக்கும் தன்மையும், வஞ்சகமும் பரவலாக அவர்களிடையே காணப்பட்டன. அடிமைகளையும் பெண்களையும் அவர்கள் கொடுமைப்படுத்தியது போல் யாருமே செய்திருக்க மாட்டார்கள். அடிமைகளைச் சமுதாயத்தில் இணைத்து, ஒன்று சேர்க்காமல் விட்ட காரணத்தாலேயே கிரேக்கச் சமுதாயம் வீழ்ச்சியுற்றது என்பது டாயின்பி (Toynbee) என்ற வரலாற்றுசிரியரின் கருத்தாகும். தனியாள் உரிமைகட்கு (Individualism) அளவுக்கு மீறிய ஆதரவு கொடுத்து அதன் பல தீய விளைவுகளை அனுபவித்தவர்கள் கிரேக்கர்கள். கீழ்த்தரமான சூழ்ச்சியாளர்களையும், சுயநலமிக்க கோழைகளையும், நாட்டைக் காட்டிக் கொடுக்கும் தேசத் துரோகிகளையும், மக்களைக் கொடுமைப்படுத்தும் கொடுங்கோலர்களையும், போர் வெறி கொண்ட அரசக்கர்களையும் நாம் கிரேக்க வரலாற்றில் காண்கிறோம். அதே சமயம் பற்பல நற்குணங்களுக்கும் இருப்பிடமான சான்றோர்களையும், நாட்டுக்கென உயிர் நீத்த ஏராளமான தேசபக்தர்களையும், தூரக் கண்ணோட்டமிக்க அரசியல் தலைவர்களையும், மெய்ஞ்ஞானமடைந்த மேதைகளையும், புகழ்மிக்க தளபதிகளையும், பேச்சாளிகளையும், கலைஞர்களையும், அறிவியல் வல்லுநர்களையும் நாம் ஏராளமாக அவ் வரலாற்றில் சந்திக்கிறோம். கற்போரின் உள்ளங்களுக்கு உவகையூட்டுவதோடு அறிவுக்கு விருந்தளிப்பதாய் உள்ளது, கிரேக்க வரலாறு. உயர்ந்த எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் அது நம்முள்ளே தூண்ட வல்லது. நன்மையும் தீமையும், இரவும் பகலும் போல் கலந்தே எந்த நாட்டு வரலாற்றிலும் வரும். ஆனால்

"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்"

என்ற குறளின் அடிப்படையில் நாம் கிரேக்க வரலாற்றைப் பார்க்கும்போது அதில் குணங்கள் நிறைந்தும், குறைகள்

குறைந்தும் காணப்படுவதால் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் நன்மையும் இன்பமும் ஒருங்கே அளிக்க வல்ல ஒரு கருத்துக் கருவூலமாய் – சிந்தனைச் சுரங்கமாய் அவ் வரலாறு என்றும் நின்று நிலவும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. நீரைப் பிரித்துப் பாலைப் பருகும் அன்னத்தைப் போன்று நாமும் கிரேக்கரின் குறைகளை விலக்கி, குணங்களைக் கொண்டு, அவர்களைப் போன்று எதிலும் மிதமாகவும் சீராகவும் வாழ்ந்து, உடலையும் உள்ளத்தையும் உணர்ச்சியையும் அறிவையும் ஒருங்கே வளர்த்துப் பிறந்ததனாலாய பெரும் பயனைப் பெற்றுய்வோமாக!

மேற்கோள் நூற்பட்டியல்

List of Books Recommended

Bury J. B. : History of Greece to the death of Alexander the great 3rd edn.

Furley M. I. : The Ancient greaks.

Gary M. and Haarhoff J. J. : Life and thought in the greek and Roman world (1953).

Hammond N. G. I. : History of Greece 322 B. C. (1959).

Haywood R. M. : Ancient Greece and the Near East (1964).

Livingstone R. W (Ed) : Legacy of Greece (1962).

Mc. Gregor M. : Story of Greece.

Murray G. : Hellenism and Mcdern World (1953).

Myers P. V. N. : A history of Greece.

Robinson C. E. : History of Greece 9th edn. (1960).

Robinson C. E. : Every day life in Ancient Greece.

Rostortzeff : The Social and Economic History of the Hellenistic world.

Stobart J. C. : The glory that was Greece.

Toynbee A. J. : Hellenism. The History of a civilization (1959).

Will Durant : Classical Heritage.

Wood house W. J. : Tutorial History of Greece.

ஜே. பி. பியூரி : கிரேக்க நாட்டு வரலாறு — தமிழாக்கம் பி. இராமானுஜம் தேவதாஸ், ஐ. எஸ். பாக்கியநாதன்.

சாமிநாத சர்மா : கிரீஸ் வாழ்ந்த வரலாறு.

விஜயபானு A. K. : கிரேக்கப் பெருமக்கள்.

மாண்புமிகு நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் : பண்டைக் கிரேக்கம்.

கலைச்சொற்கள்

Academy	—	கல்விக் கழகம்
Amphictiony	—	பொது வழிபாட்டொருமைக் கழகம்
Apella	—	அபெல்லா – பொது மக்கள் மன்றம்
Areopagus	—	அரியோபகஸ் எனும் முது மக்கள் மன்றம்
Aristocracy	—	(உயர்குடிப்) பெருமக்களாட்சி; பிரபுக்கள் ஆட்சி
Archon	—	ஆர்க்கன் – நிர்வாக அதிகாரி
Bureaucracy	—	அதிகார வர்க்கம்
Citadel	—	மலையரண் – சேம அரண்
City States	—	நகர அரசுகள்
Communism	—	பொது உடைமை வாதம்
Consederacy	—	இணைக் கூட்டரசு
Council of Eldars	—	மூத்தோர் அவை; முதுமக்கள் மன்றம்
Creatsity	—	படைப்பாற்றல்
Crypteia	—	(ஸ்பார்ட்ட) இரகசியக் காவற் படை
Diacri	—	டையாக்ரி – குறிஞ்சி நிலக் கட்சி
Democracy	—	ஜனநாயகம்; மக்களாட்சி
Duarchy	—	இரு மன்னராட்சி முறை
Eeclesia	—	எக்லீஷியா – பொதுமக்கள் மன்றம்
Epicurianism	—	எபிக்யூரியனிஸம் – போகநெறி
Federation	—	கூட்டரசு
Freseoes	—	சுவரோவியங்கள்
Gerusia	—	ஜெரூஷியா – முது மக்கள் மன்றம்

Harmost	—	ஹார்மோஸ்ட் – (ஸ்பார்ட்ட) ஆளுநர்
Hegemony	—	கூட்டுத்தலைமை
Heliaea	—	ஹெலியா – பொதுமக்கள் நீதி மன்றங்
Hoslikes	—	ஈட்டியேந்திய வீரர்கள்; ஹாப் லீட்டுகள்
Idealism	—	நிறைவு நெறிக்கொள்கை; கருத் துக் கொள்கை
Individualism	—	தனியாள் உரிமை நெறி
Lot Systerm	—	சீட்டுக் குலுக்கல் முறை
Monarchy	—	முடியரசு; கோனுட்சி
Materialism	—	உலோகாயதம்
Nominalism	—	பெயருண்மைக் கொள்கை; மாயா வாதம்
Oligarchy	—	(செல்வச்) சிறு குழு ஆட்சி
Oracle	—	(இறை மொழி கூறும்) குறி மேடை
Ostracism	—	(தற்காலிக) நாடு கடத்தல்; வெளியேற்றம்
Pantheism	—	அனைத்திறைக் கொள்கை
Parochialism	—	குறுகிய மாநிலப் பற்று
Pedieis	—	பெடீஸ் – மருத நிலக் கட்சி
Pentathlum	—	ஐந்தாட்டம்; ஐவகையாட்டம்
Periocci	—	பெரியீசி–(ஸ்பார்ட்ட) கலப்பினத் தார்
Polemarch	—	போலிமார்க் – அத் தீ னி ய த் தானைத் தலைவர்
Parali	—	பரலி – நெய்தல் நிலக் கட்சி
Phratra	—	பிராட்ரா அல்லது சகோதரக் கூட்டுறவு
Prytaneis	—	பிரிடெனிகள் அல்லது பாராளு மன்றத் தலைவர்கள்
Satrap	—	(பாரசீக) ஆளுநர்
Stoicism	—	ஸ்டாயிஸிஸம்; யோக நெறி
Supremacy	—	மேலாண்மை
Synoecism	—	ஒன்றிப்பு; ஒன்றியம்
Tuinocracy	—	வாணிகச் செல்வந்தராட்சி
Tyrant	—	சர்வாதிகாரி; வல்லரசர்
Tyranny	—	சர்வாதிகாரம்; வரம்பற்றவல்லரசு

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை

★

பின்வரும் பொருள்களில்

பட்டப்படிப்பிற்குரிய நூல்கள்

விரைவில் வெளிவரும்

கணிதம்		41 நூல்கள்
இயற்பியல்	—	28 ,,
வேதியியல்	—	39 ,,
தாவரவியல்	—	30 ,,
விலங்கியல்	—	40 ,,
பொறியியல்	—	50 ,,
வரலாறு	—	45 ,,
அரசியல்	—	34 ,,
பொருளாதாரம்	—	83 ,,
வாணிகவியல்	—	36 ,,
புள்ளியியல்	—	16 ,,
உளவியல்	—	8 ,,
புவியியல்	—	18 ,,